Mr. SPEAKER : I have received notice of a Privilege Motion from the hon. Member, Sri K. Sattanatha Karayalar regarding incorrect publication of certain news items in a newspaper. Now I shall call upon Mr. Karayalar to move it.

Sri K. SATTANATHA KARAYALAR : Sir, I rise to move the following Privilege Motion . . . .

Sri S. B. ADITYAN : On a point of order, இந்தப் பிரிவிலெஜ் மோஷன்களைக் கொண்டு வருவதற்கு நமக்கு விதிகள் இருக்கின்றன. அதுவும் ஒரு பத்திரிகை மீது பிரிவிலெஜ் மோஷன் கொண்டு வருவதென்றால் அது மிகவும் முக்கியமான விஷயமாகும். நமது அரசியல் சட்டத்தில்கூட குறிப்பிட்ட சுதந்திரங்களை பாதிக்கக்கூடிய காரியம். ஆகையினால், அப்படிப்பட்ட முக்கியமான காரியத்தில் நமது விதிகளையாவது அனுஷ்டிக்க வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன். முதல் விதி 183-வது விதியின் படி . . .

Mr. SPEAKER : எந்த விதி ?

Sri S. B. ADITYAN : 183-வது விதி, இந்த விதியின் படி : அதாவது—

' When a member has with the consent of the Speaker raised a matter of privilege, the Speaker shall read the matter to the House and decide whether a *prima facie* case of breach of privilege has been made out or not therein.'

ஆக, முதலில் சபாநாயகர் அது என்ன விஷயம் என்று சபைக்கு வாசித்து அதற்குப் பிறகு நியாயமான ஒரு பிரச்னை எழுந்திருப்பதாகத் தீர்ப்புச் சொல்லவேண்டும். அப்படிச் சொன்ன பிறகு அதை முதலில் செய்தாக வேண்டும். இரண்டாவது—

' If the Speaker holds that a *prima facie* case exists, he may allow a motion to be made by any member that the alleged breach of privilege be referred to the Committee of Privileges, or in the alternative, that it be dealt with by the House itself.'

இது ரொம்ப முக்கியமான காரியமென்பதினால் என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டுமென்று விதிகளில் குறிப்பிட்டிருக்கிறது. முதலில் ஸ்பீக்கர் வாசிக்கவேண்டும். இரண்டாவது " பிரைம பேஸி " கேஸ்



இருப்பதாகச் சொன்னால் மோஷன் கொண்டுவர அனுமதி கொடுக்க வேண்டும். அனுமதி கொடுத்த பிறகு, மூன்றாவதாக 67-வது விதிகளைப் பார்த்தால் . . .

Mr. SPEAKER : எந்த விதிகள் ?

Sri S. B. ADITYAN : 67-ல் இருந்து 73 வரையில் மோஷன்களுக்குள்ள ஒவ்வொரு விதியையும் கடைப்பிடிக்கவேண்டும்.

Mr. SPEAKER : பொதுவாக மோஷன்களுக்குள்ள விதிகள் தானே ?

Sri S. B. ADITYAN : எந்தப் பத்திரிகை மீது இந்த மோஷன் என்று எனக்குத் தெரியாது. 183-வது விதிப்படி சொல்லியாகவேண்டும். அனுமதி கொடுக்கவேண்டும். முறைப்படி கொண்டு வந்தாக வேண்டும். இந்த மாதிரி மோஷன் வருகிறது என்று சபைக்குத் தெரிவித்து, சபையிலே பேசுவதற்கு இடம் வேண்டும். . .

'After the Speaker has stated or read out the motion, members may speak on it in the order in which they are called by the Speaker.'

மோஷனைத் திடீரென்று இந்த சபையில் நிறைவேற்றி விட முடியாது என்பதை மறுபடியும் நான் தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன். 183-வது விதிப்படி என்ன விஷயம் என்று சொல்லியாக வேண்டும். அனுமதி கொடுக்கவேண்டும். லிஸ்ட் ஆப் பிஸினஸில் வைக்கவேண்டும். லிஸ்ட் ஆப் பிஸினஸில் வைக்காத காரியத்தை விவாதிக்கக்கூடாது என்றிருக்கிறது.

(Sri M. Kalyanasundaram rose.)

Mr. SPEAKER : The ruling must be given by the Chair. If I am in doubt I will call one or two Members to speak.

The hon. Member raised a relevant point of order. I am satisfied that the notice of motion given to me by the hon. Member, Sri Karayalar is in order according to rule 179 of the Assembly Rules. Regarding rule 183, I told the House now that the hon. Member is going to raise a point of privilege regarding the publication of certain news items in a newspaper. As regards rule 184, before I am satisfied that a *prima facie* case has been made out, I must first hear what the hon. Member is going to say on the matter. Therefore it is all right. Once I hear him I might decide whether a *prima facie* case has been made out. Before I come to the conclusion, whether I must get the help or advice of hon. Members, is a matter for me to decide. Now Mr. Karayalar will speak.

Sri K. SATTANATHA KARAYALAR : Sir, I rise to speak on the Privilege Motion.

In the 30th issue of ' The Daily Thanthi ' of Madras edition, we find a banner headline ' Muthuramalinga Thevar Meethu Kolai vazhakku '. In the third line it is printed that the Hon. Sri C. Subramaniam announced it in the House on the 29th.

" முத்துராமலிங்கத் தேவர் மீது கொலை வழக்கு " இப்படி ஒரு ஸ்டேட்மெண்ட் மந்திரி அவர்கள் இந்த சபையிலே செய்யவில்லை. இது உண்மைக்கு மாறானதாக இருக்கிறது. இந்த மாதிரி ஒரு செய்தியைப்

[Sri K. Sattanatha Karayalar] [1st November 1957

பிரசுரிப்பது ஏதோ ஒரு துர் நோக்கத்தோடு செய்ததாகத் தெரிகிறது. இது உண்மைக்குப் புறம்பாக இருப்பதால் இது நம் சபையின் உரிமையை பாதிப்பதாக இருக்கிறது என்று சமர்ப்பிக்கிறேன்.

MR. SPEAKER: The hon. Member, Sri Sattanatha Karayalar, has said that there is a breach of privilege committed by the paper "Dina Thanthi" in having published a statement that a murder charge has been foisted on Sri Muthuramalinga Thevar. I should like to know the view of hon. Members whether they are satisfied that a *prima facie* case has been made out. But I would myself decide whom and how many I should call for the purpose.

SRI M. KALYANASUNDARAM: கனம் சபாநாயகர் அவர்களே, இந்த உரிமைப் பிரச்னையைப் பற்றி எங்களுடைய கருத்துக்களை கொஞ்சம் எடுத்துச்சொல்ல கொஞ்சம் அதிகப்படியான சந்தர்ப்பம் கொடுக்கவேண்டும். இது சாதாரணமான விஷயம் அல்ல. எந்தக் கட்சி சம்பந்தமாக இருந்தாலும் சரி, நீதி நடந்தாலும் சரி, அநீதி நடந்தாலும் சரி அதைப் பற்றி ஒன்றும் இல்லை. ஆனால் இந்த சபையின் நடவடிக்கை சம்பந்தப்பட்டவைகள் மந்திரிகள் அவர்கள் பேசியதாக இருந்தாலும் சரி, அங்கத்தினர்கள் பேசியதாக இருந்தாலும் சரி அவைகள் சரியானபடி பிரசுரிக்கப்படவேண்டியது அவசியமாகும். அப்பொழுதுதான் இந்த சபை நல்ல முறையில் நடைபெறுவதாகக் கருதப்பட முடியும். இப்பொழுதுள்ள பிரச்னை சம்பந்தமாக பேசும்போது கனம் மந்திரி அவர்கள் கனம் முத்து ராமலிங்கத் தேவர் அவர்கள் கொலை வழக்கில் சம்பந்தப்பட்டிருக்கிறார் என்று சொன்னதாக எனக்குத் தெரியவில்லை. நானும் இந்த நடவடிக்கையை சென்ற நான்கு நாட்களாக தொடர்ந்து கேட்டுக்கொண்டுதான் வந்திருக்கிறேன். அப்பொழுது மந்திரி அவர்கள் எப்பொழுதாவது அப்படிச் சொன்னதாக எனக்குத் தெரியவில்லை, என்னுடைய கவனத்திற்கும் கொண்டு வரப்படவில்லை. ஆனால் பத்திரிகையில் பிரசுரித்திருப்பதைப் பார்த்தால் பெரும் பரபரப்பை உண்டு பண்ணக்கூடியதாக இருக்கிறது. இதைப் போலவே அநேகம் சந்தர்ப்பங்களில் ஜனங்களிடையே குழப்பம் உண்டாக்கும் அடிப்படையில் சில பத்திரிகைகள் பிரசுரம் செய்துவருகிறது. இது முதல் தடவை அல்ல. இதற்கு முன்பு நாலைந்து தடவைகளில் இம்மாதிரியான புகார்கள் வந்திருக்கின்றன.

MR. SPEAKER: May I ask the hcn. Member to confine himself to this issue? Let him give his reasons for deciding thore is a *prima facie* case.

SRI M. KALYANASUNDARAM: I am prepared to obey your ruling for which I have utmost respect. But . . .

MR. SPEAKER: Let him not proceed further on thoso lines.

SRI M. KALYANASUNDARAM: இம்மாதிரி ஒரு பத்திரிகை செய்து வருகிறது. சபையின் நடவடிக்கைகளை இப்படி பிரசுரம் செய்வதனால் நல்ல வருமானத்தை உத்தேசித்து அப்படி செய்து வருகிறதோ அல்லது நல்ல பிரசுரம் ஆக வேண்டும் என்று அப்படிச் செய்கிறதோ அதைப் பற்றி அக்கரையில்லை. அந்தப் பத்திரிகை எதை வேண்டுமானாலும் செய்துகொள்ளட்டும், அது அவர்களுடைய பண்பாடாக இருக்கட்டும். ஆனால் அந்தப் பத்திரிகை சட்டசபையின் நடவடிக்கைகளை பிரசுரிக்கும்போது நடவடிக்கைகளை நல்ல முறையில் பிரசுரிக்கவேண்டும். அது எந்தப் பத்திரிகையாக இருந்தாலும் சரி இந்த சபையின் நடவடிக்கை சம்பந்தப்பட்ட மட்டில் ஒழுங்காக பிரசுரிக்க வேண்டியது அந்தப் பத்திரிகையின் கடமை. அப்படிப் பிரசுரித்து இந்த சட்டசபையின் கவுரவத்தைக் காப்பாற்ற வேண்டும்.



1st November 1957] [Sri M. Kalyanasundaram]

மற்றும் ஒன்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்த சபையின் கவுரவத்தைக் காப்பாற்ற வேண்டியது நம்முடைய கடமை. இந்த உரிமைப் பிரச்னை சம்பந்தப்பட்ட நடவடிக்கை நடக்கும்போது அந்தப் பத்திரிகையின் சொந்தக்காரரோ அல்லது அந்தப் பத்திரிகையில் ஏதாவது அக்கரையுள்ளவரோ அந்தப் பத்திரிகைக்கு முதல் போட்டவராக இருந்தாலோ அல்லது அதன் நிர்வாகத்தில் பொறுப்புள்ளவராக இருந்தாலோ, அவர் இந்த நடவடிக்கையில் கலந்துக்கொள்ளக்கூடாது. அவர் இந்த விவாதத்தில் கலந்து கொள்ளவும் கூடாது என்ற ஒரு ரூலிங்கையும் கனம் சபாநாயகர் அவர்கள் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM: Let it not be said he is prejudiced.

SRI M. KALYANASUNDARAM: Yes, Sir. I also raise a point of order. My information is that the hon. Member, Sri S. B. Adityan, has something to do with this paper. He has a personal interest in it and, therefore, he should not be allowed to participate in the discussion on this issue.

MR. SPEAKER: I am perfectly satisfied that when Sri Adityan raised his point of order, he did not know which was the paper that was concerned with this issue.

SRI M. KALYANASUNDARAM: He should not participate in the discussion.

MR. SPEAKER: How do you know he will participate? I will not allow him to participate in the discussion. But at the time he did, he did not know that his paper was connected with this matter. He did not know that his paper was the defaulting paper.

SRI M. KALYANASUNDARAM: With due deference to you, Sir, although the House was not aware of the fact, you knew when the motion came to your hands which paper committed the breach.

MR. SPEAKER: I knew that the *Dina Thanthi* was involved. But I did not know that Sri Adityan had anything to do with it. (Laughter.) But now that the fact has been brought to my notice, I will bear it in mind.

THE HON. SRI C. SUBRAMANIAM: Sir, particularly, with reference to the proceedings of this House, there should be correct reporting because whatever we might say, we are privileged to say. And even with reference to those utterances, unless a correct version is given to the public, they are likely to be misunderstood. I generally do not go through this paper *Dina Thanthi*. Just now I had the advantage of looking at this news. As I see it, it is a full page eight-column-head-line which runs:

"முத்துராமலிங்க தேவர் மீது கொலை வழக்கு"

"இமானுவல் கொலை பற்றி கோர்ட்டில் வழக்கு"

"மந்திரி சுப்ரமணியம் அறிவிப்பு."

[Sri C. Subramaniam] [1st November 1957

So, it gives an impression that I made an announcement here that a case was going to be filed against Sri Muthuramalinga Thevar in connection with the Emmanuel murder case. Whether a case is going to be filed or not is still a matter under consideration. It depends upon the investigation going on now. I do not think any charge-sheet has yet been filed. In these circumstances, I do not think anybody should speculate as to who would be the accused. And that apart, to publish it as an announcement made by a Minister on the floor of the House makes the position a little bit difficult and embarrassing for the Government also . . . Suppose, it happens that a case is filed against Sri Muthuramalinga Thevar later on, it would look as if something wrong has happened. A publication like this is not only misleading but embarrasing to the Government also. Therefore, I would respectfully submit that this is a matter which will have to be considered by us and a final decision taken.

In this connection, I would like to point out that I made reference yesterday to two other newspapers which published misleading news. I am glad to say that it has been promptly corrected, even though an hon. Member here wanted to substantiate it. I am glad, as I said, the mistake was corrected at the earliest opportunity. It is a case where a word had been left in the report and that made all the difference in context. It altered the whole context. But that is a different matter which is not before us now. In the particular case before us, I think an investigation is necessary to find out whether there has been a breach of privilege. Therefore, my submission is a *prima facie* case has been made out. I do not want to go into the merits of the case now.

MR. SPEAKER : I have heard the hon. Member, Sri Kalyanasundaram and the Hon. the Leader of the House. They have both held that a *prima facie* case exists. But I will consider the matter more deeply and give my decision tomorrow morning. If I decide that a *prima facie* case has been made out, I shall ask, according to rules, Sri Sattanatha Karayalar, to move his motion. Meanwhile, let me think over it a little bit.

THE HON. SRI C. SUBRAMANIAM : Before we take up the next item on the agenda, I would like to say a word about the reports which appeared in the other two papers I referred to. A correction has appeared in to-day's *Indian Express* which says :

" We regret that, due to the inadvertent omission of one word ' never ', there has been an error in our report of the speech of Mr. M. Bhaktavatsalam, Home Minister, made in the Madras Assembly yesterday.

Speaking on the motion of no-confidence against the Ministry, Mr. Bhaktavatsalam, with reference to a point raised by Mr. Sasivarna Thevar, said he had never stated at a meeting that he would, like Sri Krishna, use his Chakrayuda. In our earlier report, the word ' never ' was omitted."



1st November 1957] [Sri C. Subramaniam]

Of course, if it is a mere omission of one word, it is all right. But the paper itself says that the Minister said something more. That is :

" Mr. Bhaktavatsalam stated that whatever certain newspapers may have published, he had never said that Mr. U. Muthuramalinga Thevar should be destroyed as Sisupala had been destroyed by Lord Krishna. ' Such words ', said the Minister, ' can never come out of my mouth '."

When these also were omitted in the earlier report, how could it be a mere omission of the word ' never '? Probably to get over the mistake committed, it is stated that only the omission of the word ' never ' has changed the context. Whatever it is, regret has been expressed and I do not think we need take notice of it now. But I wish to point out that it is not merely the omission of one word.

MR. SPEAKER : Hon. Members have brought to my notice in the last two or three months several instances of incorrect reporting of the proceedings in newspapers. I need not mention the names of those hon. Members who have brought these things to my notice. All the while, I was thinking that the best solution would be to call the persons connected with the concerned papers and to settle the matter. But I find that this leniency on my part has been taken advantage of. Hereafter, I shall not do anything as I thought I would and if anything like the present case recurs, I shall place the matter before the House. In the case before us, however, I shall see what could be done.

## V.—CALLING ATTENTION TO A MATTER OF URGENT PUBLIC IMPORTANCE UNDER RULE 40 (1) OF THE ASSEMBLY RULES *RE* SUSPENSION OF COLLECTION OF LOAN INSTALMENTS FROM AGRICULTURISTS IN CHINGLEPUT DISTRICT TILL MARCH 1958.

MR. SPEAKER : The hon. the Leader of the Opposition has given notice of a motion under rule 40 (1) of the Assembly Rules calling the attention of the Hon. Minister for Revenue to a matter of urgent public importance. The hon. Leader of the Opposition may move his motion.

* SRI V. K. RAMASWAMY MUDALIYAR : Mr. Speaker, Sir, I wish to call the attention of the Hon. Minister for Revenue to a matter of urgent public importance, namely, immediate suspension of collection of all loans granted to agriculturists in Chingleput district till March 1958.

Sir, so far as the Chingleput district is concerned, especially the southern parts of it are concerned, there has been complete failure of monsoon. Almost all the tanks are dry and till this morning the district has had no rains and there is no supply of water. The same is the case with regard to border areas like Tindivanam taluk, North Arcot district and Salem district and other places.

[Sri V. K. Ramaswami Mudaliyar] [1st November 1957

At this juncture I find that there has been complete harassment regarding the collection of loan instalments in respect of all loans granted to the agriculturists, such as takkavi loans, loans granted for the purchase of manure, bullocks and others. Even if the tanks were full, my submission is that this is not the opportune time to collect the loan instalments. This is the time when ryots need money either from the Government or from other money-lenders to raise their crops. I have personally seen during the course of my tours in these areas, Tahsildars going about and persecuting people regarding collection. I represented to the Collector of the district but he said that until orders of Government are received the collection cannot be deferred. Government were good enough to postpone collections on two previous occasions. For this I am thankful to the Hon. Minister for Revenue. My submission now is, I have no objection to the loan instalments being collected immediately after the harvest is over. I would, therefore, request the Hon. Minister for Revenue to send telegraphic instructions to Collectors concerned to stop all these collections till the harvest season.

THE HON. SRI M. A. MANICKAVELU : Mr. Speaker, Sir, in Chingleput district the total amount of loan instalments to be collected for this year is 47·3 lakhs. Out of this a sum of Rs. 22·7 lakhs has been collected up to 18th October 1957 leaving a balance of 24·6 lakhs. The Government have recently instructed Collectors of all districts to speed up the work of collecting all collectable loans instalments.. As a result of this, several representations, not only from the Chingleput district, but also from other districts were received asking for the postponement of collection of loan instalments. These representations were examined but the request for postponement could not be complied with for the following reasons : (1) There were no adverse seasonal conditions in these districts. On the other hand the season was satisfactory last year and the ryots were able to get a satisfactory return from their crops. The season has been favourable mostly this year also. (2) The ways and means position of the Government demanded that all outstandings from loans should be speedily collected.

According to the instructions issued in the matter of collection of loan instalments postponed prior to 8th June 1956 due to adverse seasonal conditions, only one instalment will be collected in this fasli, namely, 1357. The Government have also ordered that in respect of intensive manuring scheme loans, 50 per cent of the total dues recoverable in fasli 1356 in Chingleput district should alone be collected during that fasli and that the remaining 50 per cent to be recovered in fasli 1357. If however any ryot has to pay heavy arrears at a time, it should be only due to his fault in not having paid the instalments in time as and when they fell



1st November 1957] [Sri M. A. Manickavelu]

due and having allowed them to accumulate. Any concession shown in such cases will only tend to encourage more and more default in payment of loan instalments. Moreover, unless these amounts are recovered promptly, it will not be possible for the Government to help other poor ryots who are in need of credit to carry on current agricultural operations.

The season in Chingleput district has not been adverse for the past two years. The north-east monsoon of this year has set in and the prospect seems to be bright. The Government, therefore, see no justification to suspend the collection of loan instalments till March 1958 in Chingleput district.

## VI.—GOVERNMENT BILLS.

### (1) THE MADRAS BHOODAN YAGNA BILL, 1957.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Mr. Speaker, Sir, I beg leave to introduce the Madras Bhoodan Yagna Bill[a], 1957.

This Bill is to facilitate the donation of lands for the Bhoodan Yagna in this State and the transfer and settlement of such lands.

MR. SPEAKER : The question is—

" That leave be granted for the introduction of the Madras Bhoodan Yagna Bill, 1957."

The motion was put and carried.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Mr. Speaker, Sir, I beg to introduce the Bill.

MR. SPEAKER : The Bill is introduced. We are not going to discuss it now. It will be discussed later.

### (2) THE MOTOR VEHICLES (MADRAS AMENDMENT) BILL, 1957.

MR. SPEAKER : I have to inform hon. Members in this connection that under Rule 140 of the Assembly Rules I have received notice of a resolution to be moved by Sri N. K. Palanisami, namely, ' that this House disapproves Madras Ordinance II of 1957 [The Motor Vehicles (Madras Amendment) Ordinance, 1957]. When a resolution of this type and the Bill to repeal the Ordinance are both before the House, it is customary to give precedence to the Bill and after the Bill is passed, the fate of the resolution may be decided. I, therefore, give precedence to the Bill and permit the Hon. Minister to move the Motor Vehicles (Madras Amendment) Bill, 1957.

[a] Published in the *Fort St. George Gazette* Extrodinary, dated 4th November 1957.

[1st November 1957

SRI M. KALYANASUNDARAM : கனம் சபாநாயகர் அவர்களே, ஒரு விஷயத்தை மாத்திரம் கனம் சபாநாயகருடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் சர்க்கார் செய்யக்கூடிய அல்லது செய்யத் தவறுகின்ற உதவிகளைப் பற்றி குறிப்பிடவேண்டிய அவசியம் ஏற்படுகிறது. இவ்வளவு பெரிய சட்டம். மோட்டார் வாகனத் திருத்தச் சட்டம். அதுவும் ராஜ்யச் சட்டம் கூட அல்ல. மத்திய சர்க்கார் சட்டம். 1956-ம் ஆண்டு வேறு விதமான ஒரு திருத்த சட்டம் நிறைவேறியிருக்கிறது. இந்தச் சட்டங்களைப் பற்றி நான் புரிந்து கொள்வதற்கே பல சிரமங்கள் ஏற்படுகின்றன. அதுவும் அல்லாமல் எந்த ஷரத்துக்கள் இங்கு திருத்தப்படுகின்றனவோ அந்த ஷரத்துக்களின் மூல ஷரத்துக்கள் என்ன என்று கொடுக்கவேண்டுமென்ற சம்பிரதாயம் இருந்தது. நான் நேற்றுத்தான் இதில் அதிக கவனம் செலுத்த அவகாசம் ஏற்பட்டது. நான் என்னைத் தயார் செய்து கொள்வதற்குப் பட்டிருக்கக்கூடிய கஷ்டத்தை இங்கே விவரிக்க விரும்பவில்லை. இம்மாதிரி கஷ்டம் என் போன்ற அங்கத்தினருக்கே இருக்கிறதென்றால், புதிய அங்கத்தினர்களுக்கு எவ்வளவு சிரமமாக இருக்கும் என்று நான் சொல்ல வேண்டியதில்லை. இம்மாதிரி இனியாவது ஏற்படாமல் சர்க்கார் பார்த்துக் கொள்ளவேண்டும். அல்லது இதைப் பிரசுரிக்கக்கூடிய வசதிகளையெல்லாம் சட்டசபை காரியாலயத்திற்கே விட்டு விட்டாலும் கூட சங்கடமில்லாமல் இருக்கும். இனி இம்மாதிரி நிலை ஏற்படாமல் பார்த்துக்கொள்ளவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : It is three attached to the Bill.

SRI M. KALYANASUNDARAM : I have not received it.

THE HON. SRI C. SUBRAMANIAM : I do not know how the mistake arose. As a matter of fact (showing a Bill with the annexure) that has been printed and attached to the Bill.

SRI M. KALYANASUNDARAM : இன்று காலை வந்ததாகக் கேள்விப் படுகிறேன். இன்னும் எனக்கு வரவில்லை.

THE HON. SRI R. VENKATARAMAN : The measure was first introduced and passed in the Legislative Council and it has been transmitted by the Council to this House. Therefore I think only the Bill as passed by the Council has been circulated to the Assembly with amendments, if any.

THE HON. SRI C. SUBRAMANIAM : We have directed that when Bills are circulated in the Assembly for being discussed, the same bills with the annexures should be circulated also to the Council after the Bills are passed by the Assembly, so that the Members in the Council might know the changes made by the Assembly. In the same manner Bills passed in the Council and transmitted to the Assembly for consideration should be accompanied by annexures and the changes made by the Council in the Bill so that the hon. Members in the Assembly may be in a position to understand the amendments made by the Council.

SRI M. KALYANASUNDARAM : I am not raising any objections, Sir. I am only making a submission for future action.

MR. SPEAKER : I think, it will be noted.



1st November 1957]

THE HON. SRI V. RAMIAH : Sir, I beg to move—

" That the Motor Vehicles (Madras Amendment) Bill, 1957 (L.C. Bill No. 3 of 1957 [a]) as passed by the Legislative Council be taken into consideration."

Sir, this Bill relates to the constitution of Regional Transport Authority and State Transport Authority and seeks to replace Madras Ordinance No. 2 of 1957.

As hon. Members are aware the State Transport Authority and Regional Transport Authority in this State were originally constituted with officials and non-officials. Government experienced a number of difficulties. Some decisions of these bodies also were challenged in the High Court. It was therefore felt that it would be better to have a single officer in these posts who could approach the cases before them with a judicial frame of mind. The Motor Vehicles Act was accordingly amended and these bodies were constituted with reference to that. This has been working satisfactorily. But the Central Government in their Act No. 100 of 1956 amended the section providing for the constitution of these bodies with more than one member. In view of the past experience, Government decided to continue the existing system. As there was not sufficient time to introduce a Bill to this effect in the last sessions of this House, an ordinance was issued maintaining the existing system. These bodies have since been constituted accordingly.

MR. SPEAKER : Motion moved—

" That the Motor Vehicles (Madras Amendment) Bill, 1957 (L.C. Bill No. 3 of 1957 ) as passed by the Legislative Council be taken into consideration."

There is an amendment given notice of by the hon. Members, Sri Kothandaraman and Sri Sattanatha Karayalar. The amendment may be moved now.

SRI V. K. KOTHANDARAMAN : மோட்டார் வண்டி திருத்த மசோதாவை பொறுக்குக் கமிட்டிக்கு விடவேண்டுமென்ற என்னுடைய பிரேரேபணையை பிரேரேபிக்கிறேன்.

The amendment was duly seconded.

**MR. SPEAKER : The motion is that—**

" That the Motor Vehicle (Madras Amendment) Bill, 1957 (L.C. Bill No. 3 of 1957) as passed by the Legislative Council be referred to a Select Committee."

**The Bill and the amendment are before the House for discussion.**

SRI V. K. KOTHANDARAMAN : இப்பொழுது நமக்கு முன்னால் இருக்கக்கூடிய இந்த மோட்டார் வண்டிகள் திருத்த மசோதாவை எதிர்த்துப் பேச விரும்புகிறேன். அதை பொறுக்குக் கமிட்டிக்கு விட வேண்டுமென்று தெரிவித்துக்கொள்ளுகிறேன். அது விஷயமாக என்னுடைய அபிப்பிராயத்தைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

---

[a] Printed as Appendix on pages 73–76 infra.

சென்ற ஆண்டிலே மத்திய சர்க்காரிலே இயற்றப்பட்ட இந்தச் சட்டம் ஒரு வருஷத்திற்குப் பிறகு இப்போது எந்த ரூபத்தில் எந்த அளவுக்கு கொண்டு வரப்பட்டிருக்கிறது என்பதைப் பார்க்கும்பொழுது, ஆர். டி. ஏ. எஸ். டி. ஏ. என்று ஏற்கெனவே மோட்டார் வாகனுதிகளுக்காக இருந்த போர்டுகளுக்குப் பதிலாக, நம் ராஜ்யத்தில் மட்டும் ஒரு தனிப்பட்ட ஒரே அதிகாரியை வைத்து அந்த அதிகாரியின் மூலமாக இதை நிர்வகிக்க வேண்டுமென்ற அடிப்படையிலே இந்த மசோதா நம் முன்னுலே நிறைவேற்றுவதற்காகக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. மத்திய சர்க்கார் நிறைவேற்றியிருக்கிற சட்டத்தில் ஒரு தனிப்பட்ட அதிகாரியைக் கொண்டு இதை நிர்வகிக்கக்கூடாது, ஒரு போர்டு இருக்கவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஒரு அதிகாரி, அதிகாரப் பற்று அற்றவர்கள் இது போன்று மூன்று பேர்களுக்கு மேற்கொண்ட ஒரு போர்டை நியமித்து இதை நிர்வகிக்க வேண்டுமென்ற தன்மையிலே அவர்கள் இந்தச் சட்டத்தை இயற்றியிருக்கிருர்கள். எல்லா ராஜ்யத்திலும் இதே போன்று ஒரு அதிகாரியைக் கொண்டு இது நிர்வகிக்கப்படவில்லை. அதற்குப் பதிலாக அந்தந்த ஜில்லாவில் இருக்கக்கூடிய கலெக்டர், ஹைவேஸ் என்ஜினீயர், மற்ற எம். எல். ஏ.-க்களாகிய அதிகாரபூர்வமற்றவர்கள் ஆகியவர்கள் கொண்ட ஒரு போர்டை நியமித்து இந்தச் சட்டம் அமுல் நடத்தப்படுகிறது. அப்படி இருக்கும்பொழுது நமது ராஜ்யத்தில் மட்டும் ஒரு அதிகாரியைக் கொண்டு இதை அமுல் நடத்தவேண்டுமென்ற எண்ணத்தோடு இப்பொழுது இந்த மசோதா கொண்டு வந்திருப்பதைப் பார்த்தால், என்ன காரணத்திற்காக வேண்டி இப்படி செய்யப்படுகிறது என்பதைச் சற்று யோசிக்கவேண்டிய நிலைமையில் இருக்கிருேம். இன்றைக்கு இருக்கும் இந்த போர்டுகளில் அதிகாரப்பற்று அற்றவர்கள் இருக்கிருர்கள் என்று சொன்னுல், யாருக்கு ரூட் கொடுக்கவேண்டும், யாருக்கு பெர்மிட் கொடுக்கவேண்டும் என்பதை இன்றைக்கு நல்ல முறையில் யோசிக்கக்கூடிய அளவுக்கு, குறைந்த பட்ச ஜனநாயகத்தை நிலைநாட்டக்கூடிய அளவுக்கு நாம் முன்னுக்கு வந்திருப்பதாகக் கருதலாம். ஆனுல் இன்றைக்கு ஜில்லா கலெக்டர் மூலமாக இதையெல்லாம் நடத்தவேண்டும் என்ற ஒரு மசோதாவை நம் முன் வைத்திருப்பதைப் பார்க்கும்போது, இன்றைக்குச் சர்க்கார் தங்கள் அதிகாரத்தைக் கொண்டு அந்த ஜில்லா கலெக்டர் மூலமாக தங்கள் செல்வாக்கை உபயோகப்படுத்தி தங்களுக்கு வேண்டியவர்களுக்கு ரூட்களையும் பெர்மிட்களையும் வாங்கிக்கொடுப்பதற்கு வேண்டித்தான், அந்த நோக்கத்துடன் தான் இந்த மசோதா கொண்டு வரப்பட்டிருக்கிறது என்று நாம் நினைக்கவேண்டியிருக்கிறது. இன்றைக்கு ஒரு வருஷத்திற்குப் பிறகு கூட இம்மாதிரி ஒரு மசோதா கொண்டு வரப்பட்டிருப்பது மிகவும் வருந்தக்கூடிய விஷயம். அது மட்டும் அல்ல. இந்த ராஜ்யத்தில் மட்டும் ஏன் ஜில்லா கலெக்டர்களைக் கொண்டு இதை அமுல் நடத்தவேண்டுமென்று நினைக்கவேண்டுமென்பதற்குத் தகுந்த விளக்கம் கொடுக்கவேண்வேண்டும். மற்ற ராஜ்யத்தில் இருக்கும் முறையை விட்டு விட்டு இந்த ராஜ்யத்தில் மட்டும் ஏன் ஒரு தனி முறையை கையாளவேண்டுமென்று மத்திய சர்க்கார் கேட்டார்களா ? அப்படிக் கேட்டிருந்தாலும், நமது சர்க்கார் இது போன்று கலெக்டர்களைக் கொண்டே நமது ராஜ்யத்தில் அமுல் நடத்தவேண்டுமென்று அவர்களிடம் வற்புறுத்தி அனுமதி கேட்டார்களா என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் அறிய விரும்புகிறேன்.

இதே போன்று தான், நமது சர்க்காரில் சென்ற ஆண்டில் இந்த ராஜ்யத்திலே ஒவ்வொரு ஜில்லாவிலும் 25 சத விகிதம் பஸ் ரூட்டுகளை அதிகப்படுத்த வேண்டுமென்று ஒரு ஜி.ஓ. பிறப்பிக்கப்பட்டது. ஒரு வருஷத்திற்குப் பிறகு கூட இது வரையில் எந்த ஜில்லாவிலும் பஸ் ரூட்களை அதிகப்படுத்தியதாகத் தெரியவில்லை. அதற்கு என்ன காரணம் என்பதையும் சிந்தித்துப் பார்க்கவேண்டும். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு பணமில்லை என்று சொல்லக்கூடிய சர்க்கார் பஸ் ரூட்களை அதிகப்படுத்துவதன் மூலம் கண்டிப்பாக ஒரு கோடி ரூபாய்க்குமேல் வருமானம் பெற முடியும். ஒவ்வொரு ஜில்லாவிலும் பஸ் ரூட்களை அதிகப்படுத்தாததன் காரணத்தினுல் ஜனங்கள் போக்குவரத்திற்கு போதுமான அளவில் பஸ் இல்லாமல் மிகவும் கஷ்டப்படுகிருர்கள். குறிப்பாக வட ஆற்காடு ஜில்லாவில் போதுமான ரயில்வே போக்குவரத்து வசதியில்லை. அப்பேர்ப்பட்ட ஒரு ஜில்லாவிலே போதுமான பஸ் ரூட்டுகள் கொடுக்கப்படவில்லை. இந்த ஜில்லாவில் இருக்கக்கூடிய நகர சபைகள் இது பற்றி பல வருஷங்களாக தீர்மானங்கள் நிறைவேற்றி அனுப்பியிருக்கின்றன. போக்குவரத்து வசதி சம்பந்தமாக மக்களின் குறைகளை நிக்கவேண்டுமென்று அவர்கள் கேட்டுக்கொண்டிருக்கிருர்கள். அப்படியிருந்தும்கூட இது வரையில் இந்தக் குறைகள் கவனிக்கப்படவில்லை. அதிலும் குறிப்பாக எங்கள் ஜில்லாவிலே பகல் நேரத்திலே ஒன்றிரண்டு ரயில் வண்டிகள் தான் ஓடுகின்றன. மதருஸ், பெங்களூர் போவதற்கு பகல் நேரத்தில் ஓரிரண்டு டிரெயின்கள் தான் இருக்கிறது. மற்ற டிரெயின்களெல்லாம் இரவு நேரத்தில் தான் ஓடுகின்றன. இம்மாதிரியான பிரதேசத்திலே 25 சத விகிதம் மட்டுமல்ல, இன்னும் அதற்கு மேலே கூட அதிகப்படியான பஸ் ரூட்டுகள் கொடுத்தாகவேண்டும். இதை சர்க்கார் உணர்ந்து நடை முறையில் கொண்டு வருவார்களா என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறேன். 25 சத விகிதம் பஸ் ரூட்டுகளை அதிகப்படுத்தவேண்டுமென்று ஒரு வருஷத்திற்கு முன்னுல் சர்க்கார் உத்திரவு பிறப்பித்திருந்தும்கூட இது வரையில் அதை நடைமுறையில் கொண்டு வராததன் காரணம் என்ன ? பஸ் முதலாளிகளின் ஆதிக்கம் தான் இந்த சர்க்காரிலே நடைபெறுகிறதா என்று நினைக்கவேண்டிய நிலைமையிலே இருக்கிருேம். மோட்டார் முதலாளிகளுக்கு விட்டுக்கொடுக்கக்கூடிய நிலைமையில் தான் அவர்களுக்குச் சாதகமாக ஒரு வேளை இப்படிச் செய்து வருகிருர்களோ என்று அறிகிருேம். அது மட்டுமில்லை. பல இடங்களில் ஏகபோகமாக பஸ் ரூட்டுகள் ஒரே முதலாளியிடம் பல காலமாக இருந்துகொண்டிருக்கிறது. இதனுல் அவர்கள் தாங்கள் எப்படி வேண்டுமானுலும் நடந்துகொள்ளலாம் என்கிற மனப்பான்மையில் பல காரியங்களைச் செய்து வருகிருர்கள். பொது ஜனங்களுக்குப் பல தொல்லைகள் உண்டாக்கி வருகிருர்கள். ஆகவே தான் குடியாத்தம் நகர சபை, ஆம்பூர் நகரசபை, இன்னும் அநேக பஞ்சாயத்து போர்டுகள் எல்லாம் ஏகபோகமாக ஒரு பஸ் முதலாளியிடத்தில் பஸ் ரூட் கொடுக்கப்படகூடாது எனத் தீர்மானம் போட்டிருக்கிருர்கள். அப்படியிருந்தும் இன்று வரை மக்கள் பிரச்னை, குறை இவற்றை நீக்கும் வகையில் சர்க்கார் நடவடிக்கை எடுத்துக்கொள்ளவில்லை என்பதைப் பார்க்கிருேம்.

இன்றைய தினம் என்னுடைய அபிப்பிராயம் என்னவென்ருல் உடனடியாக 20 சத விகிதம் பஸ்கள் அதிகப்படுத்தப்பட வேண்டும். மேலும் ஒரு வருஷத்திற்கு முன்னுல் பஸ் ரூட்டுகளை அதிகப்படுத்த வேண்டு மென்று பல அதிகாரிகள், ஆர்.டி.ஓ.-க்கள், கலெக்டொர்கள் இவர்கள் எல்லோருமாகச் சேர்ந்து இருந்த நேரத்தில் முடிவு செய்யப்பட்டிருந்தும் இன்று வரை அதை அமுல் செய்யவில்லை. அதோடு சில தனிப்பட்ட பஸ் முதலாளிகளுக்குச் சாதகமாக ஆர்.டி.ஓ.-க்கள் சில இடங்களில் நடந்துகொள்ளவில்லை என்பதற்காக, பஸ் முதலாளிகளால் தூண்டப்பட்டு, மந்திரிகளிடத்தில் சிலர் அணுகி, அவர்களை அங்கிருந்தே மாற்றியிருக்கிருர்கள் என்பதாகவும் கேள்விப்படுகிறேன். அதையும் விளக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு ஒரு சீட்டுக்கு 30 ரூபாய் டாக்ஸ் வசூல் செய்யப்படுகிறது. 160 மைல்களுக்கு மேல் ஓடுகின்ற பஸ்ஸுக்கும் அது தான் வரி. குறைவாக ஓடுகின்ற பஸ்ஸுக்கும் அதுதான் வரி. ஆனுல் நீண்ட தூரம் போகின்ற பஸ்களுக்கு நல்ல லாபம் கிடைக்கிறது. சிறிய தூரம் போகும் பஸ்களை உடைய மோட்டார் முதலாளிகள் பாதிக்கப்படுகிற அளவுக்கு நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே நம்முடைய சர்க்கார் தங்கள் வருமானத்தை அதிகப்படுத்திக் கொள்ளுகின்ற நிலைமையில் அதிக தூரம் அதாவது 160 மைல்களுக்கு மேல் போகக்கூடிய பஸ்களுக்கு சீட்டுக்கு 30 ரூபாய் டாக்ஸ் என்று இருப்பதை 50 ரூபாயாக உயர்த்தி விடலாம் என்கிற யோசனையைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். காலன் மூன்று ரூபாய்வீதம் முன்பு அவர்கள் பெட்ரோல் வாங்கி இருக்கலாம். இப்போது ஒரு ரூபாய் அளவில் தான் டீசல் ஆயில் பெரும்பாலான

பஸ் முதலாளிகள் உபயோகப்படுத்துகிறார்கள். ஆகவே இந்த நிலைமையில் அவர்களுக்கு லாபமும் அதிகமாக வருகிறது. ஆகவே வரியை நீண்ட தூரம் போகக் கூடிய பஸ்களுக்கு 50 ரூபாயாகச் செய்யலாம் எனத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோன்று குறைந்த பட்சம் 5 அணா வசூல் செய்ய வேண்டுமென்று சட்டத்திலேயே இருக்கிறது. ஆனால் அதிக தூரம் போகக்கூடிய பஸ் முதலாளிகள் இரண்டணா, மூன்றணா என ஜனங்களின் சௌகரியத்தை உத்தேசித்து அவர்களாகவே வாங்கிக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே சர்க்கார் மினிமம் மூன்று மைல்களுக்குக் குறைந்த கட்டணம் இரண்டணாவாக இவர்களே நிர்ணயம் செய்து விடலாம் என்பதாக இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே போன்று பஸ் ஸ்டாண்டுகளில் புக்கிங் ஆபீஸ் இல்லாத ஒரு காரணத்தால் ஜனங்களுக்கு அதிகக் கஷ்டம் உண்டாகிக் கொண்டிருக்கிறது. வட ஆற்காடு ஜில்லா, இன்னும் இதர இடங்களில் பார்க்கிறோம். குறிப்பாக குடியாத்தம், மெட்ராஸ் பஸ் வந்தது என்றால் முதலில் மெட்ராஸ் டிக்கெட்தான் கொடுக்கிறார்கள். இடையில் உல்ல ஊருக்குப் போக வேண்டு மென்றால் செல்வாக்கு உள்ளவர்களுக்கு, அதிகாரம் பெற்றவர்களுக்குத்தான் டிக்கெட் கிடைக்கும், இந்த அளவு நிலைமை மோசமாக இருக்கிறது. ஆகவே ஒவ்வொரு பஸ் ஸ்டாண்டிலும் புக்கிங் ஆபீஸ்களை ஏற்படுத்தி, அவ்வப்போது வருகிற ஜனங்கள் எந்த எந்த ஊருக்குப் போகிறார்களோ அவர்களுக்கு உடனடியாக டிக்கெட் வழங்கும்படியாகச் செய்து விட வேண்டும். இது ஜனங்களுக்கு ரொம்ப வசதியாக இருக்குமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

* Sri V. SANKARAN : How is this relevant to an amending Bill which relates to the constitution of Transport Authorities?

Mr. SPEAKER : Let us hear the hon. Member. He may conclude by saying that all these difficulties can be avoided by constituting the Transport Authorities in such and such a manner.

Sri V. K. KOTHANDARAMAN: அதேபோல டைமிங் லிஸ்டு ஒவ்வொரு பஸ் ஸ்டாண்டிலும் போட வேண்டும். ஏனென்று கேட்டால் எட்டு ட்ரிப் போக வேண்டு மென்று இருந்தால் பல முதலாளிகள் திருட்டுத்தனமாக பத்து ட்ரிப், 12 ட்ரிப் என்று போகக்கூடிய அளவுக்கு நிலைமை இருக்கிறது. ஆகவே டைம் லிஸ்டு போடச் செய்ய வேண்டும்.

அதேமாதிரி முன்பு 30, 35, 40 பேர்கள் பிரயாணம் செய்யக் கூடிய பஸ்கள் தான் அதிகம். அதில் ஒரு கண்டெக்டர் இருப்பார். இப்போது 50, 60, 70 பேர்கள் பிரயாணம் செய்யக்கூடிய பஸ்கள் அதிகமாகப் போகின்றன. இவற்றிலும் ஒரே ஒரு கண்டெக்டர்தான் இருக்கிறார். இதனால் அநேக குழப்பம், தகராறு எல்லாம் ஏற்படுகிறது. டிக்கெட் கொடுப்பதிலும் காலதாமதம். ஆகவே 40 பேர்களுக்கு அதிகமாகப் பிரயாணம் செய்யக்கூடிய பஸ்களுக்கு இரண்டு கண்டெக்டர்களை அவசியம் போடும்படியாக ஏற்பாடு செய்ய வேண்டு மென்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

லாரிகளைப் பற்றி ஒரு விஷயம். தினந்தோறும் விபத்துகளினால் இறந்து போகிறவர்கள் பெரும்பாலும் லாரியினால் தான் கொல்லப்படுகிறார்கள். காரணம் என்னவென்றால் இரவு நேரங்களில் தான் அதிகமான லாரிகள் போகின்றன. அவர்களுடைய பிரயாணத்தைக் கட்டுப்படுத்த முடியவில்லை. நான் அறிந்த வரையில் இதர ராஜ்யங்களில் இரவு ஒரு குறிப்பிட்ட மணிக்கு மேல் லாரிகள் போக்குவரத்து இருக்கக்கூடாது என்பதாகத் தடை செய்திருக்கிறார்கள் என்று அறிகிறேன். அதுபோல் இங்கும் 12 மணிக்கு மேல் லாரிகள் பிரயாணம் செய்வதைத் தடுக்க வேண்டும். மேலும் முக்கியமான நகரங்களின் வழியாகப் போகும்போது அங்கே நின்றுபோக ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



**(Deputy Speaker in the Chair)** இப்படிச் செய்வதால் விபத்துக்களை தவிர்க்கலாம். லாரிகளினால் இறந்து போகிறவர்களைக் காப்பாற்றலாம்.

அடுத்தப்படியாக ஒரு விஷயம். ப்ளாக் டெவலப்மெண்டு ஏரியாக்களில் பஸ் ரூட்டுகளை ஏற்படுத்த வேண்டும். குறிப்பாக குடியாத்தம் கீழ்வைத்தினம்குளத்தில் ப்ளாக் டெவலெப்மெண்டு ஆபீஸ் இருக்கிறது. சுற்று வட்டாரத்தில் ஐந்து மைல், பத்து மைல் தூரத்திலுள்ள கிராமங்களில் இருந்து அங்கே போவது என்றால் சிரமமாக இருக்கிறது. இப்படி ஒவ்வொரு கிராமங்களிலும் இருக்கும். ஒவ்வொரு ஜில்லாவிலும், ஒவ்வொரு தாலுக்காவிலும் இருக்கும். இதை ஒப்புக்கொள்கிறேன். அதிலும் குறிப்பாக ரயில் கட்டணம் இப்போது அதிகமாக்கப்பட்டுவிட்டது. சென்ற செப்டம்பர் மாதம் 11-ந்தேதியில் இருந்து ரயில் கட்டணம் ரூபாய்க்கு $1\frac{1}{2}$ அணா உயர்வான பிறகு பஸ்களுக்கு கூட்டம் அதிகமாகப் போய்விட்டது. ஏராளமான பேர்கள் காத்துக்கொண்டு நிற்கிறார்கள். ஆகவே பஸ்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்த வேண்டும், மினிமம் சார்ஜ் வைக்க வேண்டும். பஸ் ஸ்டாண்டுகளில் புக்கிங் ஆபீஸ், டைமிங் லிஸ்டு இவைகளை ஏற்படுத்த வேண்டும் என்பதான சில கருத்துக்களைச் சொல்லி இவற்றையெல்லாம் சர்க்கார் செய்யாத காரணம் ஒன்று, அதோடு இவற்றையெல்லாம் நிர்வகிக்க ஜனநாயக முறையில் ஏற்பாடு செய்யாது தனிப்பட்ட அதிகாரியிடத்தில் இவ்வதிகாரங்களை ஒப்படைக்க சர்க்கார் திருத்த மசோதா கொண்டுவந்திருப்பதனால் இதை நான் எதிர்க்கின்றேன்.

தனிப்பட்ட அதிகாரிகளிடம் இதை ஒப்படைக்கும்போது அவர்க்ள் செல்வாக்குள்ள மனிதர்களுக்கு, பஸ் முதலாளிகளுக்கு உள்ளாகப்போகும் நிலைமை உண்டாகிவிடும். மற்ற ராஜ்யங்களில் இத்தகைய நிலைமை இல்லை. மத்திய சர்க்காரில் எப்படி முடிவு எடுத்திருக்கிறார்களோ அதே போன்று நம் ராஜ்யத்திலும், ஜில்லா அதிகாரிகள் எம்.எல்.ஏ. போன்றவர்கள், பஸ் முதலாளிகளைச் சேர்ந்தவர்கள், இப்படி பலர் அடங்கிய குழுவை ஏற்படுத்தி ஜனநாயக முறையில் பஸ் போக்குவரத்து நல்ல முறையில் சீராக நடப்பதற்கு வசதி செய்யவேண்டும். அதைச் செய்ய வேண்டும் என்பதற்காக என்னுடைய பிரேரணையை வற்புறுத்தி வார்த்தையை முடித்துக்கொள்கிறேன்.

Sri K. SATTANATHA KARAYALAR : உதவி சபா நாயகர் 10-40
அவர்களே, இந்தத் திருத்த மசோதா சர்க்கார் கொண்டு வருவதற்கு a.m.
குறிப்பிட்டு இருக்கிற காரணங்களில் முக்கியமாக **State Transport Authority** ஒரு ஆபீசராக இருப்பது நல்லது என்றும் அப்படி இருப்பது மிகவும் திருப்திகரமாக இருக்கிறதென்றும் குறிப்பிட்டிருக்கிறது. மத்திய பார்லிமெண்டிலே திருத்தம் கொண்டு வரப்பட்ட அடிப்படையில்தான் இந்த திருத்தம் இந்த **State Transport Authority** கொடுத்த தீர்மானங்களிலே பல வழக்குகள் தொடரப்பட்டன. இந்த வழக்குகளில் **State Transport Officer** எடுத்த முடிவுகள் தவறு என்று கோர்ட்டு முடிவுக்கு வந்தது. ஆதலால் **Judicial Officer** இருக்க வேண்டுமென்று கருதி முக்கியமாக இந்தத் திருத்தம் மத்திய சர்க்கார் கொண்டு வந்தது. 1939-வது வருஷத்தில் செண்ட்ரல் ஆக்டில் 156 ஷரத்தில் திருத்தம் கொண்டு வரப்பட்டது. அதன் அடிப்படையில் நமது சர்க்கார் இந்தத் திருத்தத்தை கொண்டுவந்துள்ளது. மத்திய சர்க்கார் சில அதிகாரிகள் என்று குறிப்பிட்டதை ஒரு அதிகாரி என்று மாற்றியுள்ளது.

இது உண்மையிலே துர் அதிர்ஷடவசமான விஷயம். சாதாரணமாக எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்படும் விஷயம். ஒரு தனி நபர் எடுக்கக் கூடிய தீர்மானத்திற்கும் இரண்டுக்கும் அதிகமான பேர்கள் கூடி எடுக்கும் முடிவுக்கும் வித்தியாசம் இருக்கிறது. இரண்டு மூன்று பேராகக் கூடி ஆராய்ந்து செய்யக்கூடிய முடிவு இந்த விஷயத்தில் அவசியம் தேவையாக இருக்கிறது. அப்படிச் செய்த முடிவு நன்றாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. அப்படி இருக்க இதை ஒரு தனி நபருக்குக் கொடுப்பது அவர்கள் எவ்வளவு நல்ல உத்தியோகஸ்தர்களாக இருப்பினும் அது

[Sri K. Sattanatha Karayalar] [1st November 1957

சரியாக இல்லை என்றுதான் தோன்றுகிறது. அதற்கு பதிலாக ஒரு சில உத்தியோகஸ்தர் அல்லாதவர்களையும் சேர்ந்து நடத்த ஏற்பாடு செய்யலாம். அந்த உத்தியோகஸ்தர்களுக்கு ஆலோசனை கூறக்கூடிய முறையிலே ஒரு ஆலோசனை குழு ஏற்படுத்தலாம். ஏனெனில் சாதாரணமாக ஒரு பஸ் ரூட்டுக்கு பர்மிட் கொடுக்கும்போது பல விஷயங்களைக் குறித்து யோசிக்க வேண்டிவரும். முதலில் அங்குள்ள யதார்த்த நிலைமையைத் தெரிந்துகொள்ளவேண்டியிருக்கிறது. ஒரு முக்கிய பஸ்ரூட் கேட்கும்போது எப்படி பணம் உண்டாக்குவது என்ற நோக்கத்தோடு கேட்கலாம். அதே சமயம் பக்கத்திலே இருக்கக்கூடிய கிராமங்களையும் பஞ்சாயத்துகளையும் பிணைத்து ஒரு பஸ் விடுவதற்கு ரூட் கொடுப்பது பொது மக்களுக்கு நன்மை பயப்பதாகலாம். அதோடு எந்த சர்வீஸுக்கு கொடுத்தால் அவர்கள் நன்றாக நடத்துவார்கள் என்ற முடிவுக்கு வர பஸ் உடமையாளர்களையும் **Transport** வேலை செய்யக் கூடிய தொழிலாளர் பிரதிநிதிகளையும், சட்டசபை பிரதிநிதிகளையும் கொண்ட ஒரு குழு அமைப்பது நன்மையாகும். அந்தக் குழு சட்டத்திற்கு மாண்பட்ட யோசனையைக் கொடுத்தால் அதை சுட்டிக்காட்டிக் உத்தியோகஸ்தர்கள் முடிவு எடுக்கலாம். மற்ற காரியங்களிலே ஆலோசனை குழுவின் சிபார்சை உத்தியோகஸ்தர் ஒத்துக் கொள்ளவேண்டும்.

தமிழ் நாட்டில் பஸ் போக்குவரத்து ஒரு முக்கியமான தொழிலாக இருக்கிறது. பலரும் இந்த தொழிலிலே ஈடுபட்டு இருக்கிறார்கள். சிலர் தொழிலை நல்ல முறையில் நடத்த முடியாமலும் பொது மக்களுக்கு வேண்டிய சௌகரியம் செய்ய முடியாத நிலைமையிலும் இருக்கிறார்கள். வேறு சிலர் பல நூற்றுக்கணக்கான பஸ்களை சொந்தமாக வைத்துக் கொண்டு மிகப் பெரிய **fleet owner** ஆக இருக்கிறார்கள். இது இரண்டும் இல்லாத நிலைமையில் பொதுமக்கள் எல்லோருக்கும் சௌகரியம் செய்யக்கூடிய முறையில் அமைய வேண்டுமானால் தனி உத்தியோகஸ்தரிடம் இந்த அதிகாரத்தைக் கொடுப்பது சரியல்ல. அதற்குப் பதிலாக ஒரு கூட்டாக சேர்ந்து ஆலோசனை செய்யக் கூடிய முறையிலே கமிட்டியாக அமைத்தால் மிகவும் நலமாக இருக்கும். பல பஸ் ரூட்டுகளில் நீண்ட தூரம் போகக்கூடிய பஸ் ரூட்டுகளிலே **public comfort station** இல்லை. ஆங்காங்கே மக்களுக்கு சௌகரியம் செய்யக் கூடிய முறையில்—கக்கூஸ்கள் போன்ற வசதிகள் செய்யவேண்டியது அவசியம். ஆகவே **public comfort station** ஆங்காங்கே வைத்துக் கொடுக்க பஸ் உடமையாளர்களை பொறுப்பிக்க வேண்டும்.

நீண்ட தூரம் பிரயாணம் செய்யக்கூடிய மார்க்கத்தில் **Express** பஸ்கள் மிக அவசியமாக ஏற்படுத்த வேண்டும். உதாரணமாக இப்போது குற்றாலத்திலிருந்து திருநெல்வேலிக்கு ஒரு **Express** பஸ் ஓடுகிறது. அந்தப் பிரயாணத்தை 1 மணி 15 நிமிஷத்தில் முடிகிறது. இது செங்கோட்டை-குற்றாலம் மார்க்கம் போவது இன்னும் நல்லது. திருநெல்வேலியிலிருந்து திருச்செந்தூருக்குப் போவதற்கு 1 மணி 15 நிமிஷ நேரத்தில் போக முடிகிறது. அதே பிரயாணத்தை ரயிலின் மூலமாக செய்தால் திருநெல்வேலியிலிருந்து திருச்செந்தூருக்கு போவதற்கு காலையில் புறப்பட்டு மாலையில் போய் சேரும்படி இருக்கும். ஆகவே 40 மைலுக்கு அதிகமாக உள்ள ஒவ்வொரு பஸ் ரூட்டுக்கும் **Express** பஸ்கள் விடுவதற்கு ஆன ஏற்பாடுகள் செய்ய வேண்டும். **Express** பஸ்களில் பல வசதிகளும் செய்யலாம். அவைகளிலே ரேடியோக்களை பொருத்த வேண்டும். **Cool drink**-குகள் கொடுப்பது போன்ற வசதிகள் செய்து கொடுக்கலாம். கேரளாவில் சில பஸ்களில் இவ்வித வசதிகள் செய்திருக்கிறார்கள். அந்த பஸ்களிலே எல்லா பத்திரிகைகளும் இடவேண்டும். சாதாரணமாக கிராமங்களில் உள்ள மக்களுக்கு பத்திரிகைகள் செல்வதில்லை. இன்னும் சிறிய குக்கிராமமாக இருந்தால் ஒன்றுமே கிடைப்பதில்லை. அங்கு மிகக் குறைந்த எண்ணிக்கை பத்திரிகைகள்தான் தேவைப்படுகிறது. ஒரு ஏஜென்டுக்கு 5 பேபரை வரத்துவது கஷ்டமாக இருக்கிறது. அதனால் பத்திரிகை கிராமங்களுக்கு போவதில்லை. ஆதலால் பார்சல்களில் குறிப்பிட்ட எண்ணிக்கை பத்திரிகைகள் இலவசமாக கொண்டு போவதற்கு பஸ்களிலே



1st November 1957] [Sri K. Sattanatha Karayalar]

அனுமதிக்கப்பட வேண்டும். அப்படிப் போனால் பல கிராமங்களுக்கு பத்திரிகைகள் கிடைக்க முடியும். என் ஊருக்கு வரக்கூடிய பத்திரிகைகள் மறு நாளைக்கு தான் பக்கத்திலுள்ள கிராமத்திற்கு போய் சேருகிறது. இரண்டு மைல்கள்தான் இருக்கின்றன. அதற்கு பார்சல் செலவு ஆவதால் ஒரு அணா பத்திரிக்கைக்கு 2 அணா கொடுத்து வாங்க வேண்டியிருக்கிறது. கிராமங்களில் உள்ள மக்களுக்கு பத்திரிகை கிடைப்பதற்காக இலவசமாகக் கொண்டு போவதற்கு வசதி செய்துகொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதோடு நான் மீண்டும் சொல்லிக் கொள்வது என்னவென்றால், ஒரு தனி உத்தியோகஸ்தருக்கு இந்த டிரான்ஸ்போர்ட் அதாரிட்டியைக் கொடுக்காமல் ஒரு ஆலோசனைக் குழுவை நியமித்து அவர்களுக்கு ஆலோசனை சொல்வதற்காக மக்கள் பிரதிநிதிகள் கொண்ட ஒரு குழுவையும் நியமிக்க வேண்டும் என்ற இந்தத் திருத்தத்தை அங்கீகரித்துக் கொள்வார் என்று நினைத்துக் கொண்டு இதைப் பிரேரேபிக்கிறேன்.

* **Sri T. SAMPATH** : டெப்யூட்டி ஸ்பீக்கர் ஸார், இந்தத் திருத்தப் பிரேரணையை நான்-ஆட்சேபிக்கிறேன். இந்தச் சட்டம் மத்திய சர்க்காரால் கொண்டு வரப்பட்ட சட்டமாகும். அதை அனுசரி இப்பொழுது திருத்தம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. ஏற்கனவே, இந்த ரீஜனல் டிரான்ஸ்போர்ட் அத்தாரிட்டியையும், ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் அத்தாரிட்டியையும் ஒரு அபிஷியல், நான் அபிஷியல் கொண்ட ஒரு குழுவாக அமைக்கப்பட்டு பெர்மிட் போன்ற விஷயங்களை பரிசீலித்து முடிவு செய்து வந்தார்கள். ஆனால் அது பின்னர் மாற்றியமைக்கப்பட்டு கலெக்டரிடம் அது ஒப்புவிக்கப்பட்டது. இப்பொழுது மத்திய சர்க்கார் கொண்டு வந்திருக்கும் திருத்தத்திலே, ஜுடிஷியல் எக்ஸ்பீரியன்ஸ், பின் மற்ற இதர நான்-அபிஷியல்லை உள்ள ஒரு வரைக்க மிட்டித் தலைவராகவும் மற்ற நான்-அபிஷியல்லை அங்கத்தினர்களாகவும் அமைத்தால் தேவலை என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் மாகாணங்கள் அவைகளுக்குத் தகுந்தபடி இந்தக் குழுவை அமைத்துக் கொள்ளலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் அமைச்சர் அவர்கள் அறிக்கையிலே அனுபவ பூர்வமான ரீதியிலே கலெக்டர் இப்பொழுது நல்ல முறையில், இந்த நிர்வாகத்தை நடத்தி வருகிறார்கள் என்று சொன்னார்கள். இந்தத் திருத்தம் வருவதற்கு முன் கலெக்டரிடந்தான் இந்தத் தனிப்பட்ட அதிகாரம் இருந்து வந்தது. நான்-அபிஷியல்ஸ்லைக் கொண்ட அதில் சில சங்கடங்கள் இருக்கின்றன. கனம் மெம்பர் கரையாளர் அவர்கள் சொன்னார்கள், மக்கள் பிரதிநிதிகள் இருந்தால் தான் காரியங்களை அங்கு நல்ல முறையில் எடுத்துச் சொல்ல முடியுமென்று தனிப்பட்ட ஒரு அதிகாரி நிர்வாகம் நடத்துவதுதான் சரி என்றுதான் நான் நினைக்கிறேன். ஏனென்றால், பல மெம்பர்கள் இருந்தால் பல கருத்துக்கள் சொல்லப்படும். அபிப்பிராயபேதங்கள் ஏற்படும். அனுபவபூர்வமாகப் பார்ப்போமானால் ஹைக்கோர்ட்டில் இந்தத் தீர்ப்புகளை எதிர்த்து வரும் ரிட் அப்ளிக்கேஷன்தான் கூடுதல் ஆகிறது. ஆக, தனிப்பட்ட நபர்களிடம் கொடுப்பதுதான் சரி. கலெக்டர்களை எடுத்துக் கொண்டால் அவர்களுக்கு நீதி அனுபவம் இருக்கிறது. இப்பொதுள்ள கலெக்டர்கள் ஐ.ஏ.எஸ். ஆனாலும் சரி, ஐ.ஸி.எஸ். ஆனாலும் சரி, நல்ல நீதி அனுபவமுள்ளவர்கள் ரீஜனல் டிரான்ஸ்போர்ட் அத்தாரிட்டியின் தீர்ப்பு சரியாக இல்லாவிட்டால் அதன் பேரில் ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் அதாரிட்டிக்கு அப்பீல் கொள்ளலாம். அதற்கு இடம் இருக்கிறது. ஆகவே, அவர்கள் அனுபவம் உள்ளவர்களாகத்தான் இருக்கிறார்கள். அதற்கு மேலும் தீர்ப்பு சரியில்லை என்றால் ஹைக்கோர்ட்டில் ரிட் கொடுக்க சட்டத்தில் இடமிருக்கிறது. அந்த முறையில் வேண்டுமானால் ரிட் கொடுக்கலாம். ஆகவே, அமைச்சர் அவர்களே அனுபவ ரீதியாகச் சொல்லியிருக்கிறார்கள். தனிப்பட்ட ஒரு அதிகாரி நல்ல முறையில், சிறந்த முறையில் செயலாற்றி வருகிறார்கள் என்று. ஆகவே அமைச்சர் அவர்கள் கொண்டு வந்த பிரேரணையை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன்.

[1st November 1957

SRIMATHI T. N. ANANDANAYAKI : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்தத் திருத்த மசோதாவை செலக்ட் கமிட்டிக்கு அனுப்ப வேண்டுமென்ற திருத்தப் பிரேரணையை எதிர்ப்பதோடு ஒரு சில காரியங்களை எடுத்துச் சொல்ல விருப்பப்படுகிறேன். நம் மாகாணத்தைப் பொறுத்த மட்டில் இந்த பஸ் போக்கு வரத்தை எடுத்துக்கொள்வோமானால் இந்தியாவிலே வேறு எந்த மாகாணமும் இத்துறையில் நம்மோடு போட்டியிட முடியாத அளவில் மிகச் சிறந்த முறையில் திறம்பட நடத்தி வருகிறோம். அகில இந்திய ரீதியில் பஸ் போக்கு வரத்தை எடுத்துக் கொண்டால், எனக்கு முன் பேசிய கரையாளர் அவர்கள் எக்ஸ்ப்ரஸ் பஸ் சர்வீஸ் கேரளாவில் எப்படி நடக்கிறது என்பதைப் பற்றிச் சொன்னார்கள். கேரள சர்க்கார் நமக்குக் கொடுத்திருக்கும் பஸ்களை கன்னியாகுமரியில் போய்ப் பார்த்தால் தெரியும். நாம் போட்டிருக்கும் பஸ்களும், அவர்கள் அங்கு விட்டிருக்கும் பஸ்களும் பற்றி. நாம் அங்கு போட்டிருக்கும் பஸ்களையும் பார்த்துவிட்டு அவர்கள் போட்டிருக்கும் பஸ்களையும் பார்த்தால், அப்பஸ்கள் எங்கேயோ ஒரு காயலான் கடையிலிருந்து வாங்கிக் கொண்டுவந்த பஸ்களோ என்று சொல்லும்படி இருக்கிறது. அந்த பஸ்கள் நம் பஸ்களின் சக்கரங்களிற்குக் கூட சமமாகாது. இதைப் பார்க்கும்போது அங்கு எப்படி பஸ் போக்கு வரத்து நடந்திருக்கும் என்று பார்த்துக்கொள்ளலாம். எல்லா மாகாணங்களை நோக்கியவர்களும், பாரபட்சமல்லாது பார்க்கக் கூடியவர்களும் சென்னை மாகாணத்தில் நாம் எடுத்து நடத்துகிற பஸ் போக்கு வரத்தை, தேசீய போக்கு வரத்து ஸ்தாபனமாக இருக்கட்டும் அல்லது தனிப்பட்ட நபர்கள் நடத்தி வரும் பஸ்களை எடுத்துக்கொள்ளட்டும். டி. வி. எஸ். பஸ்களை எடுத்துக் கொண்டால் அவர்கள் ஒழுங்காக நடத்தும் திறமையும், ஒழுங்கான ரீதியும் வேறு எந்த மாகாணத்திலும் இருக்க முடியாது. மற்ற மாகாணங்களிலிருந்து இங்கு வந்து சுற்றிப் பார்ப்பவர்களே அதைப் பற்றிச் சொல்லுகிறார்கள். அதை ஒப்புக்கொள்ளவும் செய்கிறார்கள். மைசூரில், பங்களூரில் ஒரு பஸ் கிடைப்பதற்குள் நம் உயிரே போய்விடும். இரண்டு மணி நேரம் காத்திருந்த பிற்பாடும் நமக்குக் கிடைக்கும் பஸ் ஏதோ கழிக்கப்பட்ட மரத்தையும், அலுமினியத்தையும் போட்டுச் செய்த பஸ் மாதிரி இருக்கிறது. கண்ணால் கண்டதைத்தான் சொல்லுகிறேன். கதை கேட்டுச் சொல்லவில்லை. நம் மாகாணத்தில் இவ்விலாகா மிகத் திறமையாக நடத்தப்பட்டு வருகிறது. அதற்குரிய பாராட்டுதல்களைக் கொடுத்துத்தான் தீர வேண்டும். எக்ஸ்பிரஸ் சர்வீஸையும் இம்மாகாணத்தில் புகுத்தித் தான் இருக்கிறோம். குறிப்பாக, சென்னையிலிருந்து செஞ்சி, பங்களூர் போகிற பஸ்களில் வாஷ் பேஸின்கள் கூட இருக்க வேண்டுமென்று உத்தரவு போடும்போது, இத்தனை சீட்டுகள் இருக்க வேண்டும், இன்னின்ன சௌகரியங்கள் இருக்க வேண்டும் என்றெல்லாம் தனி நபர்கள் நடத்தும் சர்வீஸில்கூட வற்புறுத்தப்படுகிறது. சென்னை மாகாணத்தில் ஓடுகிற பஸ்கள் நல்ல முறையில் மிக நேர்மையோடும், திறமையோடும் ஓட்டப்பட்டு வருகிறது என்பதை கேரள சர்க்கார் உட்பட, நியாயத்திற்குப் புறம்பாகப் பேசாத பழக்கம் உடையவர்கள் அதை ஒத்துக்கொண்டுதான் தீரவேண்டும். இல்லை, மறுக்க வேண்டுமென்றால் மறுக்கட்டும். அதற்கு நாம் பதில் சொல்ல முடியாது. ஆகவே இந்த பஸ் போக்கு வரத்தை இன்னும் உயர்த்தவேண்டுமென்ற நோக்கத்தோடுதான் இத்திருத்தச்சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. ஆக்ட் 100 ஆப் 1956, எல்லா மகாணங்களுக்கும் மத்தியில் இருக்கிற வேறுபாடுகளைக் குறைத்துக்கொள்ள வேண்டும். அகில இந்திய ரீதியில் ஒரு ஒழுங்கான சட்டம் கொண்டுவர வேண்டுமென்ற காரணத்தினால் மத்திய அரசாங்கம் 1956-ம் ஆண்டு இதைக் குறித்து ஒரு அமெண்ட்மெண்டு, ஒரு புது பில் கொண்டு வந்திருக்கிறார்கள். அதில், 44-வது செக்ஷனில்,

The State Transport Authority or Regional Transport Authority shall consist of a Chairman who has had judicial experience and such other officials and non-officials not being less than two as the State Government may think fit to appoint.



1st November 1957] [Srimathi T. N. Anandanayaki]

என்று கூறியிருக்கிறார்கள். ரீஜனல் டிரான்ஸ்போர்ட் அத்தாரிட்டி, ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் அத்தாரிட்டி குறைந்த பட்சம் ஒரு சேர்மெனும், இரண்டு அங்கத்தினர்களுக்கும் குறைவில்லாமல் பெற்றுக்கொள்ளலாம் என்று. மற்ற மாகாணங்கள் எல்லாம் அதை ஏற்றுக்கொண்டார்கள். ஆனால் சென்னை மாகாணம் ஒரு நபரை வைத்து, ரீஜனல் டிரான்ஸ்போர்ட் அத்தாரிட்டி, ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் அத்தாரிட்டி, நடத்தி அதில் திருப்தி ஏற்பட்டிருப்பதால் ஒரு மெம்பர் போதும் என்று ஏற்றுக்கொண்டார்கள்.

In the proviso, it is said : Provided further that if the State Government thinks fit, the State Transport Authority or a Regional Transport Authority may consist of a single official only.

அவர்களே சொல்லி இருக்கிறார்கள். ஒரு நபரைக்கொண்டு ரீஜனல் அல்லது ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் அத்தாரிட்டியாகவே வைத்துக் கொள்ளலாம் என்று. அது திருப்தியாய் இருந்தது என்று கடந்த கால அனுபவத்திலிருந்து கண்டு கொண்டதை வைத்துக்கொண்டு போக்கு வரத்து இலாகா அமைச்சர் அவர்கள் ஒரு மெம்பர் கொண்ட ஒரு போர்டை அமைத்துக்கொள்ளலாம், அது சுலபமாக இருக்கும் என்று சொல்கிறார்கள். அதை வரவேற்கிறேன். ஆனால் மத்திய சட்டத்தின் 44-வது ஷரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது, (இ) " **The member have Judicial experience**" என்று. இவ்விதம் தனிப்பட்ட மெம்பர்களும் இருக்கலாம் என்று திட்டவட்டமாகச் சொல்லப்ப்ட்டிருக்கிறது. இவ்விதம் தனிப்பட்ட மெம்பரை நியமிப்பதில் தவறு ஒன்றும் இல்லை என்றாலும் **State Transport Authority** அதிகாரத்தை வைத்துக்கொண்டிருக்கும் எல்லா அதிகாரிகளுக்கும் **Judicial experience** இருக்க வேண்டியது மிகவும் அவசியம். இன்று இதில் நியமிக்கப்படுகிற எல்லா கலெக்டர்களுக்கும் **Judicial experience** இருக்கும் என்று சொல்ல முடியாது. இவ்விதம் **Judicial experience** இருப்பவர்களுக்குக் கொடுத்தால் இந்தத் தகராறுகள் அதிகமாகக் கோர்ட்டுகளில் வராது என்று நம்புகிறேன். அவ்விதம் செய்தால் இந்த விதமாக சட்டங்களில் இருக்கும் ஓட்டைகளை அடைக்க முடியும் என்று நம்புகிறேன். இதைக் கனம் போக்கு வரத்து அமைச்சர் அவர்கள் கவனிப்பார்கள் என்று நம்புகிறேன். அடுத்ததாக **State Transport Anthority** என்று ஒருவரும் **State Transport Appellate Tribunal** என்று இன்னொரு அதிகாரியும் இருந்தது வருகிறார்கள். இதை நாம் ஒன்றாக்க முடியுமா என்பதை ஆலோசித்துப் பார்க்கவேண்டும். அதாவது **Route** கள் கொடுப்பதற்காக **State Transport Authority**-யும் அதற்கு மேல் **Trunk Road**-ல் 100 மைல்களுக்கு அப்பால் **Route**-கள் கொடுப்பதற்கும் அப்பீல் ஏற்றுக்கொள்வதற்கும் இன்னொரு **Appellate Tribunal** யும் நியமிக்கப்பட்டு வருகிறது. இந்த இரண்டு அதிகாரங்களையும் ஒருவருக்கே கொடுத்து சிக்கனத்தைக் கையாளலாம் என்பதுதான் என் யோசனை. இதைக் கனம் அமைச்சர் அவர்கள் ஆலோசித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். இந்தவிதமாக இரண்டு அதிகாரிகள் அவசியமில்லை என்றுதான் நான் கருதுகிறேன். இதனால் ஓரளவுக்கு சிக்கனத்தையும் கையாளலாம் என்று கருதுகிறேன். இதை அமைச்சர் அவர்கள் ஏற்றுக் கொள்வார்கள் என்று நம்புகிறேன். **Transport Authority** யாக இருக்கும் மெம்பருக்கு அவசியமாக **Judicial experience** இருக்க வேண்டுமென்று மத்திய சட்டத்திலும் "**The member must have Judicial experience**" என்று சொல்லப்பட்டிருக்கிறது. அவ்விதம் இந்த மெம்பர்களுக்கு **Judicial experience** இருக்குமானால் இதிலுள்ள பல குறைகள் ஏற்படாது என்று நம்புகிறேன். ஆகவே இதை செலக்ட் **Select Committee**-க்கு விட வேண்டிய அவசியமில்லை என்றுதான் நான் கருதுகிறேன். **Select Committee**-க்கு விடுவதாயிருந்தால் இன்னும் அதிக கால தாமதம்தான் ஆகும். அடுத்தபடியாக 1957 ஆகஸ்டு 1-ம் தேதிக்குப் பின்னும் 1957 செப்டம்பர் 17-க்கு முன்னும் **Delegation of 'A'** to next page **Powers** பிரகாரம் அதிகாரம் செய்யப்பட்டு ஏதாவது நடந்திருந்தால்

அவைகளை ஒத்துக்கொள்வதற்கில்லை என்றுள்ளதை மாற்றியமைக்க இம்மசோதாவை கனம் அமைச்சர் அவர்கள் துரிதமாகக் கொண்டுவந்திருக்கிறார்கள். இந்த **Delegation of Powers** சம்பந்தமாகப் பல **Writ** கேஸ்கள் போடப்பட்டிருக்கின்றன. அங்கேயுள்ள **R.T.O.** க்கள் பஸ் **Route**களை **suspend** செய்வதைப்பற்றிப் பல **Writ**கள் கோர்ட்டில் வந்திருக்கின்றன. இம்மாதிரியான சட்டங்கள் காலாகாலத்தில் வந்திருந்தால், இவ்வளவு தொல்லைகள் ஏற்பட்டிருக்காது. இந்த விதமான சட்டங்கள் காலதாமதமாகி வருவதினால் கேஸ் போடுகிற கட்சிக்காரர்களுக்கு எவ்வளவோ கஷ்டங்கள் ஏற்படுகின்றன. இந்தக் கேஸ் போடும் காரியத்தில் என்னைப் பொறுத்தவரையில் வக்கீல்களுக்கு வருமானம் கிடைக்கிறது என்றிருந்தாலும்கூட பொதுமக்களின் பிரதிநிதி என்ற முறையில் இவைகளை எடுத்துச் சொல்லுவது நம் எல்லோருடைய கடமையாகும். எனவே இம்மாதிரி காரியங்களில் **Law Department** துரிதமாக வேலை செய்திருந்தால் இம்மாதிரியுள்ள காலதாமதங்களை சமாளித்து இருக்கலாம். குறிப்பாக இந்த மசோதாவையே இன்று காலை சபை ஆரம்பமாவதற்கு இரண்டு மணி நேரத்திற்கு முன்னால் தான் கொடுத்தார்கள். இவ்விதம் கொடுத்துவிட்டு இதைப் பற்றி எல்லாம் விரிவாகப் பேச வேண்டுமென்றால் வக்கீல்களுக்குக் கூட கஷ்டமாகத்தான் இருக்கும், இவ்விதம் இருக்குமென்றால் சாதாரண அங்கத்தினர்களுக்கு இதில் விரிவாகப் பேச முடியாது. ஆகவே இதில் சட்ட அமைச்சர் அவர்கள் கவனம் செலுத்தி இதில் சட்ட இலாகாவும் காரியதரிசிகளும் துரிதமாகவும், விழிப்பாகவும் இருக்கவேண்டும் என்று கூற வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அவ்விதம் செய்வதானால் பொது மக்களுடைய கஷ்டங்கள் ஓரளவுக்கு குறையும் என்று சொல்லிக்கொண்டு சட்டங்களிலே இவ்விதமான ஓட்டைகள் இல்லாத முறையில் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இதை **Select Committee**க்கு விட வேண்டிய அவசியமில்லை, அதனால் காலதாமதம்தான் ஆகும் என்று கூறி, இந்த அளவிலே அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் மசோதாவை வரவேற்கிறேன்.

**SRI P. U. SHUNMUGAM :** சட்டமன்றத் துணைத் தலைவர் அவர்களே, மோட்டார் வாகன சட்டத்தின் மீது கொண்டுவந்திருக்கும் திருத்தத்தை ஆதரித்துப் பேசுகிறேன். நண்பர் சட்டநாத கரையாளர் அவர்கள் கொண்டுவந்திருக்கும் திருத்தத்தின் நோக்கம், சென்னை மாகாணத்தைப் பொறுத்த வரையில் இங்குள்ள பஸ்கள் நல்ல முறையில் ஓடவில்லை என்பது மாத்திரம் அல்ல, மற்ற மாகாணங்களில் போக்குவரத்தில் காணப்படும் சிறந்த முறைகள் மாதிரி, இங்கு இன்னும் சிறப்பு அடைய வேண்டுமென்ற நோக்கத்தோடுதான் நண்பர் கரையாளர் அவர்கள் இந்தத் திருத்தத்தைக் கொண்டுவந்திருக்கிறார்கள் என்று நான் கருதுகிறேன். தங்கம் இருந்தால் அதை மெருகு ஊட்டுவதில் குற்றம் இருக்கிறது என்று சொல்ல முடியாது. தனிப்பட்ட அதிகாரிகளின் கையில் அதிகாரத்தை ஒப்படைத்தால் பல கஷ்டங்கள் இருக்கிறது. அதோடு மட்டுமல்ல நீதி மன்றங்களிலும் இம்மாதிரி விஷயங்களில் கஷ்டங்கள் ஏற்படுகின்றன. பொது மக்களுக்கும் இது நல்லது அல்ல என்பதை கனம் அங்கத்தினர் அம்மையார் அவர்கள் நன்றாக விளக்கினார்கள். இவ்வளவு தொல்லைகள் விளைகின்றன என்பதை எல்லோரும் அறிவார்கள். இந்த அதிகாரம் வைத்திருக்கக் கூடியவர்களுக்கு ஜுடிஷியல் அனுபவம்வேண்டும் என்று இந்திய சர்க்காரின் சட்டம் இருந்தும் அது தேவையில்லை என்று சர்க்கார் ஆர்டினன்ஸ்கள் பிறப்பித்திருக்கிறது. இதனால் தனிப்பட்ட அதிகாரிகள் செய்து வருவதைப் பற்றி எல்லாம் நான் பட்ஜெட் கூட்டத்தில் பேசும்போதும் குறிப்பிட்டேன். செங்கல்பட்டு மாவட்டத்தில் ஒரு பஸ் தகுதியில்லை என்று தள்ளப்பட்டு பெர்மிட்டு மறுக்கப்பட்டது, ஆனால் அதே பஸ்ஸுக்கு வட ஆர்க்காடு மாவட்டத்தில் பெர்மிட்டு கொடுக்கப்பட்டது. இதைப் பற்றி நான் பட்ஜெட் கூட்டத்தில் குறிப்பிட்டேன். அவ்விதம் பர்மிட் கொடுத்த கலெக்டர் அவர்களின் நோக்கம் எதுவாயிருந்தாலும் பரவாயில்லை. இவ்விதம் கொடுக்கப்பட்டது என்பதை மாத்திரம் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இதனுடை-





மூல காரணம் என்ன என்பதை நான் வெளிப்படையாகச் சொல்லத் தயாராய் இல்லை. இதைப் பற்றி நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இவரிடமிருந்து அதிகாரத்தை மாற்றிக் கொடுக்கலாம். அவர்களுக்கு ஏற்கனவே வேலை பளுவு அதிகமாக இருக்கிறது. இது தவிர ஒவ்வொரு ஜில்லாவிலும் "டிஸ்டிரிக்ட் டெவலெப்மெண்ட் கௌன்ஸில்" இருந்து வேலை செய்து வருகிறது. புதிய பஸ் ரூட்டுகள் கொடுக்கும் விஷயத்தில் இந்த டிஸ்ட்ரிக்ட் டெவலெப்மெண்ட் கௌன்ஸிலுக்கு இந்த அதிகாரத்தைக் கொடுக்கலாம். அவ்விதம் செய்வார்களானால் மக்களுடைய குறைகளைத் தீர்ப்பதற்கு உதவிகரமாக இருக்கும், பொது மக்களுடைய குறைகளை எடுத்துச் சொல்லுவதற்கு வசதி செய்து கொடுப்பதாக இருக்கும் என்று கூறிக்கொண்டு, இவ்விதம் வசதி செய்து கொடுக்கக் கூடிய ஒரு வாய்ப்பை அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு கரையாளர் அவர்கள் கொண்டுவந்திருக்கும் இந்தத் திருத்தத்தை ஆதரிக்கிறேன்.

* **SRI A. R. SUBBIAH MUDALIAR :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே. கனம் மந்திரி அவர்கள் கொண்டுவந்திருக்கும் மசோதாவை ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். இப்போது ஒவ்வொரு பஸ் பெர்மிட்டுக்கும் மனு கொடுக்கும்போது (மார்க்கிங் ஸிஸ்டம்) **Marking System** போட்டுத்தான். வேறு காதிகளை கவனித்து அதன்பின் தான் அங்கீகாரம் கொடுக்கப்பட்டு வருகிறது. அப்படி இருக்கும்போது அட்வைஸிங் கமிட்டி மூலம் நடத்தும்போதும் பல ஊழல்கள் ஏற்படலாம். இங்கே பஸ் முதலாளிகளை ஆதரிக்கின்ற பல பிரதிநிதிகளாக வந்திருக்கிறார்கள். ஆகையால், அவர்கள் எல்லாம் அதில் அங்கத்தினர்களாக இருக்கும்போது, கலெக்டரோ மற்ற அதிகாரிகளோ, அட்வைசரி கமிட்டியின் வார்த்தையை மீறி நடப்பது கொஞ்சம் கஷ்டமாகிறது. வெறும் அதிகாரிகளை மட்டும் பொறுப்பை வகிக்கும்படிச் செய்து சட்டசபை உறுப்பினர்கள் அதில் தலையிடாதபடி இருந்துவிட்டால் அவர்கள் நீதி வழங்கப் பின்வாங்க மாட்டார்கள். சட்டசபை உறுப்பினர்கள் போன்றவர்கள் இதில் தலையிடுவதால் தான் பல சிக்கல்கள் ஏற்படுகின்றன. ஆகையால் கனம் மந்திரி அவர்கள் கொண்டுவந்துள்ள திருத்தத்தை நான் மனப்பூர்வமாக ஆதரிக்கிறேன்.

மேலும், இருக்கும் சில இடைஞ்சல்களைப்பற்றிக் கூற விரும்புகிறேன். லாரி சர்வீசுக்கு ஜில்லாவாரியாகப் பெர்மிட் கொடுக்கிறார்கள். இதில் கொஞ்சம் கஷ்டம் இருக்கிறது. ராஜ்ய "லெவல்-ல்" கொடுத்தால் சில நன்மைகள் உண்டு. தஞ்சாவூரிலிருந்து மற்றப் பிரதேசங்களுக்கு நெல்லோ அரிசியோ கொண்டுவரும்போது எல்லா லாரிகளும் பெர்மிட் இருந்தால் வாடகை குறைகிறது. இரண்டு, மூன்று, நான்கு ஜில்லாக்களுக்கு பெர்மிட் கொடுக்கப்படுவதால் தஞ்சாவூரிலிருந்து பற்றாக்குறைப் பிரதேசமான திருநெல்வேலிக்கு நெல்லோ அரிசியோ கொண்டுவரும்போது அதற்குக் கூடுதல் வாடகை கேட்கிறார்கள். வாடகை அதிகரித்தால் அரிசியின் விலையும் ஏறுகிறது. ஆகையால், ராஜ்ய "லெவல்"-ல் லாரிகளுக்கு பெர்மிட் கொடுத்தால் அது போக்குவரத்திற்கு சௌகரியமாக இருக்கும். இதன் காரணமாக உணவுப்பொருள்கள், போட்டி இல்லாமல் குறைந்த விலைக்குக் கிடைக்கும் வாய்ப்பும் ஏற்படும். ஆகையால் ஸ்டேட் லெவலில் லாரி சர்விசுக்குப் பெர்மிட் கொடுப்பதற்கு ஒரு "ப்ரொவிஷன்" கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், யாத்திரை ஸ்தலங்களுக்கும் எக்ஸ்பிரஸ் பஸ்கள் விட்டால் நல்லது. ஜில்லாத் தலைநகரிலிருந்து யாத்திரை ஸ்தலத்திற்கு எக்ஸ்பிரஸ் பஸ் விடலாம். உதாரணமாக திருநெல்வேலியிலிருந்து திருச்செந்தூருக்கு எக்ஸ்பிரஸ் பஸ் இருக்கிறது. ஆனால் சங்கரன்கோயிலுக்கும் திருநெல்வேலிக்கும் இடையே எக்ஸ்பிரஸ் பஸ் இல்லை. சங்கரன்கோயில் திருநெல்வேலிக்கு எக்ஸ்பிரஸ் பஸ் விடவேண்டும். ஆகவே இந்த மாதிரியான யாத்திரை ஸ்தலங்களுக்கு எக்ஸ்பிரஸ் பஸ்கள் விடுவதற்கான நடவடிக்கையை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[1st November 1957

* **Sri V. SANKARAN** : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இப்போது சர்க்காரால் கொண்டுவரப்பட்டிருக்கும் இந்தத் திருத்த மசோதாவை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். இந்தத் திருத்த மசோதாவின்படி பெர்மிட்டுகள் கொடுப்பது என்பது ரெவின்யூ அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. பெர்மிட்டுகள் கொடுப்பது சம்பந்தமான விதிகளுக்கு எல்லாம் உட்பட்டு சரியான முறையில் பெர்மிட்டுகளை அதிகாரிகள் கொடுப்பார்களானால், இந்தப் பொறுப்பை யாரிடம் ஒப்படைப்பதிலும் யாருக்கும் ஆட்சேபணை இருக்காது. இதற்காக ஒரே ஒரு அதிகாரி இருந்தால்தான் இந்தக் காரியம் திறமையாக நடத்தப்படும். பல நபர்கள் இருந்தால், அவரவர்கள் தங்களுக்கு வேண்டியவர்களுக்குச் சலுகை கேட்கும் நிலைமை ஏற்படும். ஒரே அதிகாரி இருந்தால் நன்றாக இருக்கும், பல அதிகாரிகள் இருந்தால் அபிப்பிராய பேதங்கள் ஏற்படும் காரியங்கள் நன்றாக நடக்காது. என்ன என்ன சௌகரியங்கள் வேண்டி இருக்கிறது. அதை எப்படி பூர்த்தி செய்துகொடுக்க வேண்டும் என்பதைப் பற்றித்தான் சிக்கல்கள் ஏற்படுகின்றன. ஆதலால் திருத்த மசோதா அப்படியே இருக்கலாம். ஆனால் ஒரே ஒரு யோசனை சொல்ல விரும்புகிறேன். அந்த அந்த அதிகாரிகளுக்கு ஆலோசனைக் குழுக்கள் என்ன சௌகரியங்கள் தேவை என்று எடுத்து சொல்ல அமைக்கவேண்டும். பஸ் பெர்மிட் எடுப்பவர்கள் என்ன என்ன நிபந்தனைகளுக்குட்பட்டு நடக்க வேண்டும் என்று அந்த அந்த அதிகாரிகளுக்கு யோசனைகள் கூறுவதற்கு பொதுமக்கள் ஆலோசனைக் குழுக்கள் ஏற்படுத்தவேண்டும். அதற்கு வகை செய்யவேண்டும். மற்றப்படி இந்தத் திருத்த மசோதாவை அப்படியே ஏற்றுக்கொள்ளலாம்.

இந்த மசோதாவின் மீது பேசிய கனம் அம்மையார் அவர்கள் டி.வி.எஸ். ஸ்தாபனத்தைப்பற்றிச் சொன்னார்கள். அது எங்கள் ஊர் ஸ்தாபனம் என்பது குறித்து நான் பெருமைப்படுகிறேன்.

பஸ் போக்குவரத்து சம்பந்தமாக சில குறைகளைச் சொல்ல விரும்புகிறேன். சமீபத்தில் நான் நெய்வேலிச் சுரங்கப் பிரதேசத்திற்குச் சென்றுவிட்டு, அங்கிருந்து கள்ளக்குரிச்சிக்கு விருத்தாசலம் வழியாகப் போக வேண்டியிருந்தது. சாதாரணமாக "ஹால்ட்" என்றால் 10—15 நிமிஷங்கள் இருக்கும். ஆனால் விருத்தாசலத்தில் ஒன்றேகால் மணி நேரம் காத்திருக்க வேண்டியிருந்தது. அது எனக்கு மிகவும் ஆச்சரியமாக இருந்தது. மதுரையில் அப்படி வழக்கம் இல்லை. மேலும், அங்கே பஸ்ஸில் நிறைய ஆட்களை அடைத்தார்கள். மேலும் அங்கே எங்குமே இல்லாத வழக்கத்தைக் கண்டேன். அங்கே அந்த ஊர் சப்-இன்ஸ்பெக்டரை பஸ்ஸில் ஏற்றிக்கொள்வதற்காக அவர் வீட்டிற்கு பஸ்ஸைக் கொண்டுபோய் 15 நிமிஷங்கள் காத்திருந்தனர். மேலும் அவருக்கு முன் ஸீட்டில் இடம் கொடுக்கவேண்டும் என்று சொன்னார்கள். "கண்டிப்பாக முடியாது" என்று நான் சொன்னேன். என்ன நடக்கிறது என்று பார்க்கலாம் என்று இருந்தேன். பிறகு அதிர்ஷ்டவசமாக விவகாரம் முற்றவில்லை.

மேலும், சில பஸ்கள் மிகவும் மோசமான நிலையில் இருப்பதைப் பார்க்கும்போது, ஏதோ உயிருள்ள ஜீவன்கள் கொடுமைப்படுத்தப்படுவது போல் இருக்கிறது. பல ஒட்டுப்போட்ட பஸ்களும், ஸீட்டுகள் கிழிந்து மோசமான நிலைமையில் உள்ள பஸ்களும் இருக்கின்றன. அவைகளைப் பார்க்கும்போது மிகவும் பரிதாபமாக இருக்கிறது. இம்மாதிரி பஸ் போக்குவரத்து சம்பந்தமாக பல கோளாறுகள் இருக்கும்போது, அவைகளை நீக்குவதற்கும், மற்ற சௌகரியங்களை செய்துகொடுப்பதற்கும், அவ்வப்போது அந்த அந்த வட்டாரப் பிரமுகர்களின் மூலம் அதிகாரிகளுக்கு யோசனைகள் சொல்லுவதற்கு குழுக்கள் அமைக்க வகை செய்யவேண்டும். இதற்கும் மசோதாவில் வகை செய்யலாம். மற்றப்படி, திருத்த மசோதா குறித்து எனக்கு ஆட்சேபணை ஒன்றும் இல்லை என்று சொல்லிக்கொண்டு என்னுடைய வார்த்தையை முடித்துக்கொள்ளுகிறேன்.

**Sri N. R. THIYAGARAJAN** : **On a point of information, Sir,** மத்தியசர்க்காரின் பாவாடையில் ராஜ்ய சர்க்கார் நாடாவாக இருந்தது என்று சிலரால் தெரிவிக்கப்பட்ட கருத்திற்கு மாறாக, நமது ராஜ்ய சர்க்கார்



1st November 1957] [Sri N. R. Thiyagarajan]

மத்திய சர்க்காரின் தீர்மானத்திற்கு எதிராக நமது ராஜ்யத்தில் அவசரச் சட்டம் போட்டு, அந்தச் சட்டத்தை உறுதிப்படுத்தும் வகையில் திருத்த மசோதாவைக் கொண்டுவந்திருப்பதற்காக, இந்த அரசாங்கத்தை எல்லோரும் பாராட்டவேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

**DEPUTY SPEAKER** : **This is an opinion and not a point of information**

* **Sri A. GOVINDASAMY** : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இன்றையதினம் இந்த மசோதாவை ஒரு செலக்ட் கமிட்டிக்கு விடவேண்டும் என்ற கருத்தை ஸ்ரீ. சட்டநாத கரையாளர் வலியுறுத்திப் பேசியதை நானும் மீண்டும் வலியுறுத்தி, சில விஷயங்களைச் சொல்ல விரும்புகிறேன். இந்த இலாகாவைப் பரிபாலிக்கும் கனம் ஸ்ரீ. ராமையா அவர்கள் இந்த இலாகாவின் நிர்வாகத்தை ஏற்றுக்கொண்ட பிறகு பொதுமக்களுக்கு நம்பிக்கையூட்டும் முறையில் இரண்டு காரியங்களைச் செய்திருக்கிறார்கள் என்பதைப் பத்திரிகை வாயிலாகப் படிக்கும்போது சந்தோஷமாக இருந்தது. பஸ் ஸ்டாண்டுகளில் ஏற்படும் நெருக்கடியை நேரில் பார்த்து அதைத் தவிர்ப்பதற்கான வழிகளைக் கண்டுபிடிப்பதற்காக கனம் ஸ்ரீ. ராமையா அவர்கள் மாறுவேடம் பூண்டு பஸ் ஸ்டாண்டுகளுக்குப்போய் அங்கே நின்று நெருக்கடியைப் பார்த்திருக்கிறார்கள். இதைப் பொதுமக்கள் பாராட்டத்தான் செய்கிறார்கள். கனம் நண்பர் ஸ்ரீ. சங்கரன் அவர்களுக்கு ஏற்பட்ட தொல்லை, கனம் மந்திரி அவர்களுக்குக்கூட, மந்திரியாக ஆவதற்கு முன்பு ஏற்பட்டிருக்கக்கூடும். இப்போதும், கனம் அமைச்சர் அவர்கள் மாறுவேடத்தில் தோன்றியபோது பஸ்ஸில் ஏறவேண்டும் என்று நினைத்திருந்தால் அந்தத் தொல்லை ஏற்பட்டிருக்கும். அவர் மந்திரியான பிறகு வேறொரு காரியத்தையும் செய்திருக்கிறார். ஒரு பஸ் டிரைவர் பஸ்ஸை வெகு வேகமாக ஓட்டினார். அப்போது பின்னால் தமது காரில் சென்று கொண்டிருந்த கனம் அமைச்சர் தமது காரை மிக வேகமாக ஓட்டச் சொல்லி, அந்த பஸ்ஸைத் துரத்திச்சென்று, வேகமாக பஸ்ஸை ஓட்டியவரைக் கண்டுபிடித்திருக்கிறார். தமது காரை **Special case**-ஆக—திருடனைப் பிடிக்க முயற்சிக்கும்போது செய்வதுபோல—வெகுவேகமாக ஓட்டச்சொல்லி பஸ்ஸை அளவிற்கு மீறி வேகமாக ஓட்டியவரை கண்டுபிடித்திருக்கிறார். இவர் அப்படி தம் காரில் வேகமாகப் போனபோது ஏதாவது தொல்லை வந்திருந்தால் நமக்கெல்லாம் அது அதிர்ச்சியை உண்டுபண்ணியிருக்கும். "**Over speed**" குற்றத்தைக் கண்டிக்கும் முறையிலும், சட்டவிரோதமாக நடப்பதைக் கண்டிக்கும் முறையிலும், கனம் அமைச்சர் செய்த காரியம் மிகவும் பாராட்டத்தக்கது.

மேலும், எதிர்க் கட்சியிலிருந்து வரும் யோசனை என்பதற்காகத் தட்டிக் கழிக்க மாட்டார்கள் என்ற நம்பிக்கையுடன், கனம் அமைச்சருக்கு சில விஷயங்களை வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன். கனம் அமைச்சர் தாம் சுற்றுப் பிரயாணம் செய்து வரும்போது பஸ் முதலாளிகளைக் கேட்டும் நடவடிக்கைகள் எடுத்துவரும் காரணத்தால் இந்த விஷயங்களைச் சொலலவிரும்புகிறேன்.

இதனால் காலதாமதம் ஆகிறது என்று அம்மையார் குறிப்பிட்டாலும், நீண்ட கால தாமதம் ஆவதற்காகச் சொல்லவில்லை. இந்தச் சட்டசபைக் கூட்டம் முடிவதற்குள்ளேயே முடித்துவிட முடியும் என்ற காரணத்தால் இதைச் சொல்ல விரும்புகிறேன். மாவட்டக் கலெக்டருக்கு அதிகாரம் இருப்பதில் தவறில்லை. மாவட்ட அதிகாரியைச் சந்தேகப்பட்டுச் சொல்லுவதாக நினைக்கக் கூடாது. அவர்களுக்கு அநேக வேலைகள் இருக்கின்றன. ஒரு ஜூடிஷியல் ஆபீஸரையோ, அல்லது ஜில்லா ஜட்ஜையோ இதில் சேர்த்துக்கொள்வதிலே எந்தவிதமான ஆட்சேபணையும் இருக்க முடியாது. அது மாத்திரமல்லாமல் அந்தந்த மாவட்ட எம்.எல்.ஏக்களையும், எம்.பி.க்களையும் ஆலோசனை கேட்டால் நன்மையாக இருக்கும். எந்தெந்த ரூட்டுகள் கொடுக்கலாம். எந்தெந்த பஸ் முதலாளிகளுக்குக் கொடுக்கலாம். இவைகளையெல்லாம் சொல்ல ஆலோசனைக் குழு ஒன்றை ஏற்படுத்தினால் காரியம் கெட்டு விடாது. கலெக்டராயிருந்தாலும், ஜில்லா நீதிபதிகளாயிருந்தாலும் நல்ல காரணங்களிருந்தால் இந்த ஆலோசனைகளை ஏற்றுக்

[Sri A. Govindasamy] [1st November 1957

கொள்ளலாம். இல்லாவிட்டால் தள்ளுபடி செய்வதற்கும் அவர்களுக்கு உரிமையிருக்கிறது. ஒருவராக இருப்பதால் அவருக்குத் தொல்லையாகக் கூடிய சங்கடமும், கஷ்டமும் ஏற்படுகிறது.

நமது தமிழ் நாட்டைப் பொருத்த வரையில் அதிகமான பஸ் ரூட்டுகள் போதுமான அளவு தரப்படவில்லை என்று சொல்லிக்கொள்கிறேன், நகரங்களில் வேண்டுமானால் அதிக பஸ்கள் இருக்கின்றன. கிராமப்புரங்களில் தொடர்பு கொள்ளப் போதிய பஸ் ரூட்டுகள் தரப்படவில்லை. ஆகவே புதிய ரூட்டுகள் தரவேண்டுமென்று சொல்ல விரும்புகிறேன்.

புதுவை இந்திய யூனியனுடன் சேர்ந்தபிறகு எல்லா கிராமங்களுக்கும் பஸ் தொடர்பு இருக்கிறது. பஸ்கள் போகிற நிலைமை இருக்கிறது. ஆனால் சுற்றியுள்ள இந்த ராஜ்யத்தைச் சேர்ந்த பல கிராமங்களுக்கு பஸ் தொடர்பு இல்லாத நிலைமை இருக்கிறது. ஏதோ ஒரு பஸ் போகிற நிலைமை இருக்கிறது. ஆகவே, இதையெல்லாம் விவரமாகப் பார்த்துப் பரிசீலனை செய்வதற்காக ஒரு ஸெலெக்ட் கமிட்டிக்கு விடுவதால் அப்படி ஒன்றும் கால தாமதம் அதிகமில்லாமல் பத்து நாளில் அதை முடித்துவிடலாம். ஆகவே, இதை ஸெலெக்ட் கமிட்டிக்கு விடவேண்டுமென்று வலியுறுத்திச் சொல்லுகிறேன்.

இதிலே முக்கியமான ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். ஒரு ரூட்டுக்கு பத்துபேர்கள் விண்ணப்பம் போட்டிருந்தால், அவர்களில் ஏழு, எட்டு பேர்களுக்கு வாதாடுவதற்காக ஒரே வக்கீல் வருகிறார். ஒருவருக்காகப் பேசும்போது அவர் திறமையானவர். அவருக்கு ரூட் கொடுக்கவேண்டும் என்று சொல்லிவிட்டு மற்றொருவரைப்பற்றிப் பேசும்போது அவருக்கு....

SRIMATHI T. N. ANANDANAYAKI : On a point of order, Sir, What the hon. Member says about the lawyer is very objectionable. If there are applications for five permits, a lawyer is expected to appear either for four or five applicants and not more than that. If there are only five permits to be granted by the Regional Transport Authority, a lawyer cannot appear for more than five parties. This is the etiquette of the legal profession. The hon. Member by saying that a lawyer is appearing for seven applicants, is imputing motives to lawyers, which is very objectionable on the floor of this House.

(Mr. Speaker in the Chair.)

MR. SPEAKER : The hon. Member will please repeat about her point of order. I am sorry I was not here when the point of order was raised.

SRIMATHI T. N. ANANDANAYAKI : The hon. Member mentioned that, if there were ten applicants, a practising lawyer was appearing for seven or eight parties. This is very objectionable . . .

MR. SPEAKER : According to him or according to the hon. Member?

SRIMATHI T. N. ANANDANAYAKI : My submission, Mr. Speaker, is that the very fact mentioned by the hon. Member is wrong and not proper. No lawyer appears for ten or fifteen applicants at a stretch before the Regional Transport Authority. Suppose the Regional Transport Authority informs that he will grant one or two or three permits, a lawyer appears at the most for three parties and not for four. He cannot appear for four



1st November 1957] [Srimathi T. N. Anandanayaki]

parties, because the number of permits to be granted is only three. So, at the most a lawyer can appear either for two or for three. This is the etiquette of the legal profession, and lawyers have been observing this with all their vigilance. When that is the practice among the lawyers, an hon. Member, who is not a lawyer, is saying that a lawyer appears for seven or ten persons and is imputing motives to the legal profession, which is very highly objectionable.

MR. SPEAKER : I shall give my ruling after listening to Sri A. Govindasamy.

SRI A. GOVINDASAMY : சபாநாயகர் அவர்களே, வக்கீல் தொழிலுக்கு மோடிவ் கற்பிக்கவேண்டுமென்ற காரணத்தால் நான் இதைச் சொல்லவில்லை. கனம் அம்மையார் இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்ற காரணத்தாலும் இதைச் சொல்லவில்லை. நான் சொன்னது போல ஒரே ரூட்டுக்கு 7, 8 பேர்கள் விண்ணப்பம் செய்திருந்தால் நான்கு பேர்களுக்கு ஒரே வக்கீல் ஆஜராகிறார்.

SRIMATHI T. N. ANANDANAYAKI : A lawyer can appear for only one applicant if there is only one permit to be granted. If he appears for more than one, the interests which he represents will come into clash. 11 a.m

MR. SPEAKER : It may be all right from the point of view of law. But the hon. Members ardently mean that one lawyer appears for half a dozen clients. But it is a fact that the hon. Member is saying. It is open to lawyers to say that this is objectionable. I do not think the hon. Members is casting any aspersion. He is only mentioning what is according to facts. If, according to ethics, it is not correct, it is the lawyer who committed the mistake and not this House nor the hon. Member.

SRI K. VINAYAKAM : May I know, when there was only one permit to be granted, whether a lawyer appeared for more than one party? I would like to know this from Sri Govindasamy.

SRI S. M. ANNAMALAI : மாநில சட்டமன்றத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் அவருடைய சீட்டிலிருந்து பேசவேண்டுமா அல்லது வேறு இடத்திலிருந்து கேள்விகள் கேட்கலாமா ?

MR. SPEAKER : யார் அப்படிச் செய்தது ?

SRI K. VINAYAKAM : The distance from my seat is only ten inches.

MR. SPEAKER : கனம் அங்கத்தினர்கள் சபையில் வோட்டெடுப்பு நடக்கும்போது அவர்களுடைய இடத்தில்தான் உட்காரவேண்டும். மற்ற சமயங்களில் அவரவர்களுடைய இடத்தில் உட்காரவேண்டுமென்பது சபாநாயகர் அங்கத்தினர்களை சுலபமாக அடையாளம் கண்டுகொள்வதற்கு சௌகரியமாயிருக்குமென்பதற்காகத்தான். சபாநாயகருக்கும் மற்றவர்களுக்கும் நன்றாகத் தெரிந்த அங்கத்தினர்கள் வேறு இடங்களில் உட்கார்ந்து கேள்விகள் கேட்கலாம். அதில் தவறொன்றுமில்லை.

[Mr. Speaker] [1st November 1957

அடுத்தபடியாக அம்மையார் எழுப்பிய பாயிண்ட் ஆப் ஆர்டரைப் பொறுத்தவரையில், கனம் அங்கத்தினர் தன் அனுபவத்தைப் பற்றிச் சொல்லுகிறார். அவரவர்களுடைய அனுபவத்தைப்பற்றிச் சொல்வதில் தவறில்லை. அப்படியில்லையென்று உங்களுக்குத் தெரிந்தால் நீங்கள் பேசும்போது அந்த மாதிரி இல்லையென்று சொல்லுங்கள்.

(Sri Sankaran rose.)

Mr. SPEAKER : No more points of order on this. If there is any new point of order, the hon. Member may raise it.

* Sri V. SANKARAN : Sir, it can be only one of two things, whether it is a matter of fact or a matter of falsehood. This is a matter for any opinion, it is a matter in which there cannot be any opinion. Either lawyers should have been appearing just like this dishonestly for two parties at the same time or not. We should know which lawyer appears like this.

Mr. SPEAKER : It is not the business of the House to ask whether what Sri A. Govindasamy says is true or not. We are not bothered about that. Let us proceed with the argument. It is not advisable.

சாதாரணமாக இம்மாதிரியான கான்டரவர்ஸி இருக்கக்கூடிய அபிப்பிராயத்தை சொல்லவேண்டிய அவசியமில்லை.

Sri T. SAMPATH : It is not professional etiquette either for a lawyer.

Mr. SPEAKER : How do I know?

எதாவது வக்கீல் தவறு செய்து விட்டால் பார் கவுன்ஸிலுக்கு ரிப்போர்ட் செய்தால், பார் கவுன்ஸில் வேண்டிய நடவடிக்கை எடுக்கும். இப்போது அந்தக் கவலை இந்தச் சபைக்கு வேண்டியதில்லை என்று சொல்லுகிறேன்.

Sri S. LAZAR : Sir, this is a matter on which we are bound to make this House understand very clearly this, namely, no lawyer can appear for more than one client in the same case. It is not only a rule but a physical impossibility. No party will bring in a lawyer appearing for more than one client. Every client, for whom a lawyer is supposed to appear, will never brook his lawyer's appearing for another client. Therefore there is this physical impossibility and legal impossibility. Also this is a matter which the authority will not brook. This cannot be a matter for opinion or ever evidence on the part of a member of this House.

Mr. SPEAKER : I am glad lawyers are united on this one matter.

நமது ராஜ்யத்தில் அதிலும் நம்முடைய தமிழ் நாட்டில் இன்னும் அதிகப்படியான பஸ்கள் ஓடவேண்டும், இன்னும் அதிகப்படியான பஸ் ரூட்டுகள் ஆரம்பிக்கப்படவேண்டும் என்ற என்னுடைய கருத்தை வலியுறுத்துவதற்காகத்தான் இந்தப் பிரச்னையின் மீது பேச முன் வந்தேன். அதற்காகவே இந்தப் பிரச்னையை ஒரு செலெக்ட் கமிட்டிக்கு விட்டு பரிசீலனை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டு இத்துடன் முடித்துக்கொள்ளுகிறேன்.



1st November 1957]

* Sri M. P. SUBRAMANIAM : கனம் அவைத்தலைவர் அவர்களே, இப்பொழுது நம் சட்டசபையில் இருக்கக்கூடிய மசோதாவானது ஏற்கெனவே கவர்னர் அவர்களால் ஒரு அவசரச் சட்டமாக பிரசுரிக்கப்பட்டு அதன் பிறகு அதை சட்டமாக்கவேண்டும் என்ற காரணத்தினால் இப்பொழுது இந்த மசோதா சட்டசபையில் முன்னதாக கொண்டுவந்து வைக்கப்பட்டிருக்கிறது. அதன்படி தனிப்பட்ட ஒரு அதிகாரி இந்த ஆர்.டி.ஏ. அதிகாரத்தை எடுத்து நடத்தவேண்டும் என்றும் அதன்படி ஒவ்வொரு ஜில்லாவிலும் அந்தந்த ஜில்லா கலெக்டர்களையே அந்த அதிகாரத்தை பிரயோகம் செய்யவேண்டும் என்றும் இந்த மசோதாவைக் கொண்டுவந்திருக்கிறார்கள். இப்பொழுது அந்தந்த ஜில்லா கலெக்டர்கள் இந்தப்படி பஸ்களுக்கு ரூட்டுகள் வழங்கிக்கொண்டும் பஸ்களுக்கு பர்மிட்டுகள் கொடுத்துக்கொண்டும் வருகிறார்கள். அதை சட்டபூர்வமாக ஆக்கப்படவேண்டும் என்பதற்காகத்தான் இப்பொழுது இந்த மசோதாவைக் கொண்டுவந்திருக்கிறார்கள். அதைப்பற்றி பேசும் இந்த நேரத்தில் அதிலுள்ள சில குறைபாடுகளை எடுத்துச்சொல்ல வேண்டியதாக இருக்கிறது. ஏற்கெனவே ஜில்லா கலெக்டர்களுக்கு நாம் அதிகப்படியான பொறுப்புகளையும் வேலைகளையும் கொடுத்திருக்கிறோம். அவர்கள் தங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கக்கூடிய வேலைகளை ரொம்பவும் திறமையாகவும் நெருக்கடி இல்லாமலும் செய்தாலும் அதிலுள்ள கஷ்டங்களைப்பற்றி ஒரு சிலர் என்னிடத்தில் சில அபிப்பிராயத்தை வெளியிட்டிருக்கிறார்கள். அதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரவேண்டும் என்று ஆசைப்படுகிறேன்.

ஏற்கெனவே கலெக்டர் அவர்களுக்கு குறிப்பாக இரண்டாவது ஐந்து வருஷதிட்டத்தில் நாம் அவர்களுக்கு அதிகப்படியான வேலைகளைக் கொடுத்திருக்கிறோம். அதனால் அவர்களுக்கு அதிகப்படியான பொறுப்பு ஏற்பட்டிருக்கிறது. அந்த வேலைகளை அவர்கள் நல்ல முறையில் செய்யவேண்டியதாக இருக்கிறது. அத்துடன் இந்த வேலையையும் அவர்களுக்குக் கொடுத்தால் அவர்கள் இந்த வேலையைத் திறம்படச் செய்வார்களா என்பதையும் அவர்களால் செய்யமுடியுமா என்பதையும் யோசித்துப் பார்க்கவேண்டும். நான் இதைச் சொல்வதனால் கலெக்டர்களிடத்தில் எனக்கு நம்பிக்கை இல்லை என்று சொல்வதாக நினைக்கக்கூடாது. அவர்களுக்கு இந்த வேலையைக் கொடுக்காமல் மற்றவர்கள் யாருக்காவது இதைக் கொடுத்தால் இது ரொம்பவும் திறமையாக நடைபெறும் என்பது என்னுடைய அபிப்பிராயம். அதற்காக நான் என்ன சொல்லுகிறேன் என்றால் அந்தந்த மாவட்டங்களிலுள்ள நீதிபதிகளிடத்தில் இந்த வேலையை ஏன் ஒப்படைக்கக் கூடாது என்று கேட்கிறேன். ஏற்கெனவே அதிகப்படியான வேலையுள்ள கலெக்டரிடமே இன்னும் அதிகமான வேலையைக் கொடுப்பது சரியல்ல என்று அநேகர் கருதுகிறார்கள். ஆகவே இந்த வேலையை கலெக்டரிடமிருந்து எடுத்துவிட்டு அதை அந்தந்த மாவட்ட நீதிபதிகளிடத்தில் கொடுக்கவேண்டும் என்ற யோசனையை அரசாங்கத்திற்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இரண்டாவதாக பஸ் ரூட்டுகள் கொடுக்கும் விஷயமாக சொல்லவேண்டியதாக இருக்கிறது. அப்பொழுது பஸ் சொந்தக்காரர்கள் தங்களுடைய பஸ்ஸை மற்றொருவருக்கு விற்கும்போது தங்களுடைய பஸ்ஸுடன் தங்கள் பஸ் ரூட்டையும் இருபதாயிரம் அல்லது முப்பதாயிரம் இன்னும் சில சமயங்களில் ஐம்பதாயிரம் ரூபாய்க்குக்கூட விற்றுவிடுகிறார்கள். அரசாங்கம் அவர்களுக்குக் கொடுத்திருக்கும் சலுகையை வைத்துக்கொண்டு அவர்கள் அதை வியாபார முறையில் விற்று பணம் சம்பாதிக்கிறார்கள். அது சரியான முறையல்ல. அதனால் ஒருவர் தன்னுடைய பஸ்ஸை விற்க வேண்டுமென்று கருதினால் ரூட்டை அரசாங்கத்திற்கு மூலமாகத்தான் விற்று விட்டுவிடவேண்டும் என்று விதி செய்யவேண்டும். இப்பொழுது அதற்குத் தக்க விதி இல்லாவிட்டாலும் இருக்கும் விதிகளை திருத்தி அமைத்து இப்பொழுது நடைபெற்றுவரும் முறையைத் தடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அரசாங்கம் யாருக்கு இந்த ரூட்டைக் கொடுக்கவேண்டும் என்று கருதுகிறதோ அவர்களுக்குக் கொடுக்கவேண்டும்

அது மாத்திரம் அல்ல. கூடுமானவரையில் ஒன்றிரண்டு பஸ்கள் வைத்துக் கொண்டிருக்கிறவர்களை நாம் ஆதரிக்கவேண்டும். இப்பொழுது ஒருவர் இவ்வளவு பஸ்கள்தான் வைத்துக்கொள்ளலாம் என்று நிர்ணயம் செய்திருக்கிறார்கள். அதே ரூட்டுகளில் ஒருவர் மூன்று அல்லது நான்கு பஸ்கள் வைத்துக்கொண்டிருந்தால் அவர்களுக்கு இன்னும் அதிகப்படியான பஸ்களை ஓட்டுவதற்கு அனுமதி அளிக்கலாம். ஆகவே குறைவாக பஸ்களை வைத்துக்கொண்டு ஓட்டிக்கொண்டிருக்கிறவர்களுக்கு இன்னும் அதிகப்படியான பஸ்களை ஓட்டுவதற்கு அனுமதி கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். ஆகவே ஏற்கெனவே ரூட்டுகளை வைத்துக்கொண்டிருந்து அதன் மூலம் வியாபாரம் செய்வதை அனுமதிக்கக்கூடாது.

கடந்த யுத்தகாலத்திற்குப் பிறகு எங்கு பார்த்தாலும் மக்கள் பஸ்களில் பிரயாணம் செய்கிற எண்ணிக்கை பலமடங்கு பெருகி வந்திருக்கிறது. ரயில்களில் முன்பு இடவசதி கிடைத்தது போலவும் ரயில் வசதி முன்பு இருந்தது போலவும் இப்பொழுது கிடையாது. முன்பு இருந்ததைவிட இப்பொழுது மிகவும் குறைவாக இருக்கிறது. உதாரணமாக சேலத்திலிருந்து விருத்தாசலத்திற்கு மேல் பக்கமாக ஆறு வண்டிகளும் கீழ் பக்கமாக ஆறு வண்டிகளும் ஓடிக்கொண்டிருந்தன. யுத்தத்திற்குப் பிறகு மேல் பக்கமாக மூன்று வண்டிகளும் கீழ் பக்கமாக மூன்று ரயில் வண்டிகளும் தான் ஓடிக்கொண்டிருக்கின்றன. அதனால் அங்குள்ள பிரயாணிகளுக்கு பிரயாணவசதி குறைவாக இருக்கிறது. அந்த இடத்தைப்போலவே இன்னும் எவ்வளவோ இடங்களில் அப்படி ரயில் வசதி குறைந்து போயிருக்கலாம். இப்படிப்பட்ட இடங்களில் இன்னும் அதிகப்படியான பஸ்கள் ஓடுவதற்கு அனுமதி கொடுக்கலாம். இப்பொழுது கிராமப்புரங்களில் எங்கு பார்த்தாலும் பஸ்ஸுக்கு நின்றுகொண்டிருப்பவர்கள் அதிகமாகிவிட்டது. எப்பொழுது பார்த்தாலும் பஸ்களில் இடம் இல்லை என்றுதான் சொல்லுகிறார்கள். அதனால் மணிக்கணக்காக ரோடுகளில் மக்கள் பஸ்ஸுக்காக காத்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த கஷ்டத்தைப் போக்குவதற்கு இன்னும் அதிகப்படியான பஸ்களை ஓட்டுவதற்கு அனுமதி கொடுக்கலாம். இன்னும் அதிகப்படியான ரூட்டுகளையும் கொடுக்கலாம் என்று தோன்றுகிறது. பஸ் வைத்துக்கொண்டிருக்கக்கூடியவர்கள் தங்களுக்கு லாபம் கிடைக்கவில்லை என்ற காரணத்திற்காக பல புதிய ரூட்டுகளையும் மேலும் அதே ரூட்டில் வேறு பஸ்களையும் கொடுக்கக்கூடாது என்று ஆட்சேபிக்கலாம். அந்த ஆட்சேபணையை எடுத்துக்கொள்ளாமல், சட்டத்தில் ஏதாவது திருத்தம் செய்யவேண்டியதாக இருந்தாலும் அதை திருத்தி அமைத்து, இன்னும் அதிகப்படியான ரூட்டுகளை வழங்குவதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஆகவே ஏராளமாக பஸ்களுக்கு அனுமதி கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். கிராமங்களுச்குச் செல்வதற்கும் புதிதாக ரூட்டுகளுக்கும் அனுமதி கொடுக்க வேண்டும். கேட்கிறவர்களுக்கெல்லாம் தாராளமாக பஸ்கள் வழங்கப் படவேண்டும்.

கடைசியாக ஒன்றை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். தற்போது இரவு நேரங்களில் சென்னைக்கு திருச்சியிலிருந்து ஏராளமாக லாரிகள் வந்துகொண்டிருக்கின்றன. இன்னும் பல பாகங்களிலிருந்தும் சென்னைக்கு லாரிகள் வந்துகொண்டிருக்கின்றன. அதனால் எவ்வளவு விபத்துகள் நேரிடுவதையும் நாம் தினந்தோறும் பார்த்து வருகிறோம். இரவு நேரங்களில் லாரிகளை 40 அல்லது 50 மைல் வேகத்தில் ஓட்டுவதால்தான் அப்படிப்பட்ட விபத்துகள் அடிக்கடி வருகிறது என்று தோன்றுகிறது. அவர்கள் இரவுக்குள் 400 அல்லது 500 மைல்களை கடக்கவேண்டிய்தாக இருப்பதால் அதிக வேகத்தில் லாரிகளை டிரைவர்கள் ஓட்டிக்கொண்டு வர வேண்டிய்தாக இருக்கிறது. இரவு பூராவும் விழித்துக்கொண்டு வந்து "டீ"யைக் குடித்துவிட்டு லாரியை ஓட்டிக்கொண்டு வருகிறார்கள். டீ குடித்த மயக்கத்தினாலோ அல்லது தூக்கத்தாலோ அவர்கள் அதிக வேகமாக வரும்போது விபத்துகளுக்கு உள்ளாகிறார்கள். திருச்சியிலிருந்து சென்னைக்கு இரவுக்குள் வரவேண்டியதாக இருப்பதால் எவ்வளவோ விபத்துக்கள் ஏற்பட்டிருப்பதை நாம் கேட்டிருக்கிறோம். இவைகளுக்





கெல்லாம் காரணம் அவர்கள் இரவிலேயே அதிக வேகத்தில் செல்வதுதான். அதனால் இரவு நேரங்களில் லாரியை இவ்வளவு மைல் வேகத்தில்தான் ஓட்டவேண்டும் என்ற கட்டுப்பாடு விதித்து அதை சரியாக அமுல் செய்ய வேண்டும். பகல் நேரங்களில் **Checking Inspector**கள் தணிக்கை செய்வது போல் இரவிலும் தீவிர தணிக்கை இருக்கவேண்டும். அத்துடன், இதற்கு தனிப்பட்ட அதிகாரிகளை நியமித்து அதை தணிக்கை செய்யவேண்டியது அவசியமாக இருக்கிறது. அப்படி தணிக்கை செய்தால் ஏராளமாக விபத்துகளை நாம் தடுக்கலாம். வேகத்தை தணிக்கை செய்வதுபோல் இவ்வளவு மைல்கள்தான் இரவில் ஓட்டலாம் என்ற விதியையும் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளவேண்டும் என்று மந்திரி அவர்களை கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்ளுகிறேன்.

SRI K. S. G. HAJA SHERIFF : Mr. Speaker, I rise to support the Bill introduced by the Hon. Minister. The Government have said that by experience, they have found that the constitution of single-member Transport Authorities has been working satisfactorily. I am glad that the Government have come to this judgment. I think it was Edmund Burke who said in the Parliament that experience had given judgment, but it was obstinacy that ignored it. So, when the Government say that by experience the system has worked satisfactorily, I do not know why the Opposition should oppose it for mere opposition's sake. Everyone in this House will admit that the transport system should play a vital part in the economy of the country. I am very glad that this system which is being administered by the Government efficiently is working satisfactorily. I should also like to inform the House that this system should be further improved. As at present, a lot of inconvenience is caused and consequent delay is experienced both in the matter of transport of passengers and cargo. We are now embarking on a very gigantic programme of developing our country. Under these circumstances, unless the transport system is perfect, there would be great difficulty and a lot of bottlenecks would be created which would be to the detriment of the various developmental activities and undertakings that we are taking up. The reasons for the present inadequacy of the system may be due to the exorbitant licence fee and other difficulties experienced by the trade. The Government should come forward to give sufficient incentive to the people concerned to put adequate number of buses and lorries on the road. I would very much like the Hon. Minister concerned to make a categorical statement as to what the Government's policy is with regard to these undertakings. There is a lurking fear in the minds of private industrialists or bus owners that at some time or other, the industry will be nationalised by the Government in which case they may be put to lot of inconvenience. If the Government could clear this aspect and if the Hon. Minister could make a statement about this, it would be possible for the bus-owners and lorry-owners to make an effort to improve the situation and thereby remove the bottlenecks and also see that our passengers and goods move freely from one place to another without difficulty. Therefore, I would request the Hon. Minister to make a statement on this matter.

**SRI R. SRINIVASA IYER** : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மசோதாவின் பேரில் எந்தவிதமான விவாதமும் இருக்காது என்றும் இதற்கு எந்தவிதமான திருத்தமும் வராது என்றும் எதிர்ப்பார்த்தேன். 1939-ம் வருஷத்தில் மத்திய சர்க்காரால் நான்காவது ஆக்ட் பாஸ் செய்யப் பட்டது. அந்த ஆக்ட்டில் 44-வது விதியில் சப்-க்ளாஸ் 2-க்கு ஒரு ப்ரோ வைசோ இருக்கிறது. அந்தப் ப்ரோவைசோவுக்கு இப்பொழுது ஒரு திருத் தம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. 1948-ல் இந்த சென்னை சட்டசபையினால் ஆக்ட் 20 ஆப் 1948 என்று ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

அதன் வாசகத்தை ஒருவாறு திருத்தவேண்டுமென்று இப்பொழுது இந்த மசோதா கொண்டுவரப்படுகிறதே தவிர, அதன் அம்சத்தையோ அதன் அர்த்தத்தையோ மாற்றி, ஒரு தனியான அதிகாரத்தை சர்க்கார் எடுத்துக்கொள்ளவேண்டுமென்ற அபிப்பிராயத்தின் பேரில் இந்த மசோதா கொண்டுவரப்படவில்லை.

ஆனால், இந்த மசோதாவை எதிர்க்கிறவர்கள், ஏதோ ஒரு சூழ்ச்சியாக சர்க்கார் ஏதோ தனி அதிகாரத்தை எடுத்துக்கொண்டு அதை துஷ்பிரயோகம் செய்வதற்கான முறையிலே கொண்டுவருகிறார்களோ என்று சந்தேகப்பட்டு அனாவசியமான விவாதத்தைக் கிளப்பி, இந்த விவாதத்திலே இந்த மசோதாவுக்குச் சம்பந்தம் இல்லாத பலவிதமான அம்சங்கள் பற்றி பேசப்பட்டு வருகிறது.

44-வது செக்ஷனை 2-வது சப்-க்ளாசுடன் வாசிக்கும் அளவில்,

'A State Transport Authority or a Regional Transport Authority shall consist of a Chairman who has had judicial experience and such other officials and non-officials, not being less than two, as the State Government may think fit to appoint; '

அதன் முதலாவது பாகம், ' but no person who has any financial interest whether as proprietor, employee or otherwise in any transport undertaking shall be appointed as or continue as a member of a State or Regional Transport Authority, and, if any person being a member of any such authority acquires a financial interest in any transport undertaking, he shall, within four weeks of so doing, give notice in writing to the State Government of the acquisition of such interest and shall vacate office.

இதற்குத்தான் ' ப்ரோவைஸோ ' (2) சேர்க்கப்படுகிறது :

Provided that if the State Government thinks fit, the State Transport Authority or a Regional Transport Authority may consist of a single official :

' Provided further that an official shall not be deemed to have a financial interest as aforesaid merely by reason of the fact that the State Government employing him as such an interest.'

அதைப் படித்த பிறகு, இந்த செக்ஷனுக்கும் இந்தப் ப்ரோவைசோவுக்கும் எந்தவிதமான ஆட்சேபனையும் இருக்கக்கூடியதில்லை என்று சொல்வதோடு,

இந்தத் திருத்தத்திலே :

' Provided that nothing in this sub-section shall be contrued **as debarring an official (other than an official connected directly with the management or operation of a transport undertaking) from being appointed as or continuing as a member of any such Authority merely by reason of the fact that the Government employing the official has, or acquires, any financial interest in a transport undertaking :**



இது முதலாவது திருத்தம். ஏற்கெனவே இந்த பஸ் தொழிலோ லாரி தொழிலோ சர்க்காரால் ஏற்றுக்கொள்ளப்படாத காலத்திலே ஏற்பட்டது. பிறகு, சர்க்காரால் இந்த பஸ் ட்ரான்ஸ்போர்ட் ஏற்றுக்கொண்ட பிறகு சர்க்காருக்கு அதிலே ஒரு பற்றுதல், ஒரு விகிதாசா லாப நஷ்டம் ஈவு ஏற்பட்ட பிறகு சர்க்கார் அதிகாரத்தை அதிகாரி அந்த ட்ரான்ஸ்போர்ட் அதிகாரியாக நியமிக்கப்பட்டால் அதனால் அது பாதிக்கப்படமாட்டாது என்று ஏற்கெனவே உள்ள திருத்தம் நல்ல அழகான வார்த்தைகளில் இப்பொழுது புதிதாக சொல்லப்படுகிறதே தவிர, இதற்கு ஒரு தப்பு அர்த்தம் ஏற்படுத்தி, அதற்கு ஒரு விவாதத்தைக் கிளப்புவது முறை அல்ல என்று நான் சொல்லிக்கொள்ளவிரும்புகிறேன்.

இரண்டாவதாக, ஏற்கெனவே இரண்டு பேர்களுக்குக் குறையாமல் அதிக மெம்பர்கள் இந்த ஸ்டேட் ட்ரான்ஸ்போர்ட் அதிகாரியாக இருந்து, பஸ் பர்மிட்களையும் லாரி பர்மிட்களையும் வழங்கிவரப்பட்டபோது, ஏற்பட்ட இம்சைகள் அந்த மெம்பர்களாக இருந்தபோது ஏற்பட்ட தொல்லைகள், அனேகவிதமான பஸ் சொந்தக்காரர்கள், லாரி சொந்தக்காரர்கள் மனு கொடுத்தவர்கள் அவர்களுக்குக் கொடுத்துவந்த தொல்லைகள் கொஞ்சம் எனக்கும் தெரியும். அவர்களே எப்படியாவது இதை விட்டுத் தப்பித்துக் கொண்டால் தேவலை என்ற முறையில் மீடிங்கிற்குப் போகாமல் இருந்தது உண்டு. "கோரம்" இல்லை என்று "மீடிங்" "அட்ஜர்ன்" ஆனதும் உண்டு. ட்ரான்ஸ்போர்ட் பர்மிட் எளிதில் கொடுக்கப்படமாட்டாது. இதனால் ஏராள மான சிக்கல்கள், ஏராளமான காலதாமதம் ஏற்பட்டு வந்து, நல்ல முறை யிலே ஒரு அதிகாரியாக நியமித்து ட்ரான்ஸ்போர்ட் அதாரிடியை நியமிக்க லாம் என்று 1938-ம் வருஷத்திலே, அனுபவத்தின் காரணமாக, இந்தத் திருத்தம் சர்க்காராலே கொண்டுவரப்பட்டிருக்கிறது. இந்தத் திருத்த மானது 19 வருஷ காலமாக அமுலில் இருந்து வருகிறது. இந்தத் திருத்தம் அனாவசியமாக ஏற்பட்டது என்று இப்பொழுது சொல்லும் எதிர்க் கட்சியினரும் மற்றவர்களும் எங்கே போனார்கள் ? ஏற்கெனவே திருத்தம் இருந்துவந்தாலும், அதை அவ்வப்போது நல்ல முறையிலே, நல்ல வாசகத்திலே, அனுபவத்தையொட்டி திருத்தவேண்டியது அவசியமாக இருக்கிறது என்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக,

' Provided that nothing in this sub-section shall be construed **as debarring an official (other than an official connected directly with the management or operation of a transport undertaking firm being appointed as or continuing as a member of any such Authority merely by reason of the fact that the Government employing the official has, or acquires, any financial interest in a transport undertaking, :**

**' Provided further that if the State Government thinks fit, the State Transport Authority or a Regional Transport Authority may consist of a single official only.'**

இதுவும் அனுபவத்தையொட்டித்தான் திருத்தப்பட்டிருக்கிறது. முதலா வது நான் வாசித்தது 1956-ம் வருஷத்திய 100-வது மத்திய சட்டத்தின் பேரில் ஏற்பட்ட திருத்தம். ' இவ்வளவு சீக்கிரத்திலே திருத்தத்தைக் கொண்டுவருவானேன் ? ' என்று கேட்கலாம். ஆனால், அனுபவம் வர வர, நம்முடைய சட்டங்களை அப்போதைக்கப்போது திருத்திக்கொள்ளாவிட் டால் அனுபவத்தின் பயன் என்ன ஆகும் என்பதை இதைப்பற்றி ஆட்சே பிக்கிறவர்கள் ஆலோசிக்க விரும்புகிறேன். இந்தத் திருத்தமானது ஒரு அதிகாரியைக்கொண்டு ட்ரான்ஸ்போர்ட் அதாரிடியை நடத்தினால் சௌகரிய மாக இருக்கிறது. நல்ல முறையிலே நடத்த முடிகிறது என்ற அனுபவத்தை யொட்டி சொல்லப்படுவதால் இந்த மசோதாவை நான் ஆதரிப்பதுடன், இதை பொறுக்குக் குழுவுக்கு அனுப்பவேண்டிய அவசியம் இல்லை என் பதையும் நான் எடுத்துக்காட்டவிரும்புகிறேன்.

[Sri R. Srinivasa Iyer] [1st November 1957

இந்த சந்தர்ப்பத்தில் என்னைப்போன்ற ஒரு அங்கத்தினர் இந்த மசோதா சம்பந்தம் இல்லாத விஷயத்தைப்பற்றி பேசக்கூடாதென்று அபிப்பிராயப்பட்டபோதிலுங்கூட, சில அங்கத்தினர்கள் இதர விஷயங்களைப்பற்றி சொன்னபடியால் நானும், தவறுதலாக இருந்தாலும், சில வார்த்தைகள் சொல்வதற்காக தங்கள் அனுமதியைக் கோருகின்றேன்.

MR. SPEAKER: The hon. Member may speak without commenting that what others said was wrong. That is where the trouble comes.

SRI R. SRINIVASA IYER: Sir, I stand corrected.

இந்த ட்ரான்ஸ்போர்ட் அதாரிடியின் விசாரணையிலே. . . .

MR. SPEAKER: Is it necessary to take up the matter which has been sufficiently discussed already?

SRI R. SRINIVASA IYER: வக்கீல்கள் ஆஜர் ஆவதைப்பற்றி குற்றம் சாட்டப்பட்டது. சட்டவிரோதமாக, வேண்டுமென்று, முறணுக கட்சிக்காரர்களுக்கு ஆஜராக எந்த வக்கீலும் சம்மதிக்கமாட்டார், சம்மதிக்கப்படவும் மாட்டார். அதை எல்லோரும் அனுசரித்துப் பேசியிருக்கவேண்டுமென்று சொல்லிக்கொண்டு, அதைப்பற்றி ஜாஸ்தியாக விஸ்தரிக்கவில்லை.

பஸ் பர்மிட் கொடுப்பதிலே 'ஹெல்தீ காம்பெடிஷன்' இருக்கவேண்டுமென்ற ஒரு முறை இருக்கிறது. மதுரையில் நடத்திவரும் டி.வி.எஸ். பஸ் முதலாளிகள் உலகத்திலேயே போற்றக்கூடிய முறையிலே நடத்திவருகிறார்கள் என்பது எனக்குத் தெரிந்தபோதிலுங்கூட, தற்கால ஒரு அமைப்பிலே, தொழில் நடத்துவதெல்லாம் எல்லோருக்கும் சரியான, சமமான உரிமை வேண்டும் என்று நாம் சொல்லிக்கொள்ளும் முறையிலே, இந்த பாயிண்டுகள், மார்க்குகள் என்று வைத்துக்கொண்டு, ஜாஸ்தியான எண்ணிக்கை பஸ் வைத்துக்கொண்டிருக்கும் பெரிய முதலாளியாக இருக்கிறவர்களுக்கு மட்டும் இந்த பர்மிட் கொடுக்கவேண்டுமென்ற வழியை வகுத்து, அந்த வழியிலே புதிதாக ஒருவர் தொழிலை ஆரம்பிக்க வேண்டுமானால், அவருக்குப் பர்மிட் கொடுக்க மார்க்கிங் சிஸ்டம் அவருக்கு இல்லை என்று நிராகரிக்கப்பட்டது என்று அனேகர் என்னிடம் தெரிவித்திருக்கிறார்கள். அது ஆட்சேபிக்கக்கூடிய விஷயம். மார்க்கிங் சிஸ்டத்தை அடியோடு எடுத்துவிட்டு, எல்லோருக்கும் சமமான உரிமை கொடுத்து எல்லோரும் நல்ல முறையில் இந்தத் தொழிலை நடத்தவேண்டும். புதிதாக இந்தத் தொழிலை நடத்த முன்வருபவர்களுக்கு வாய்ப்பு தரவேண்டுமென்று சர்க்கார் நோக்கம் கொண்டு, தகுந்த முறையாக ஸ்டேட் ட்ரான்ஸ்போர்ட் அதாரிடிக்கு இன்ஸ்ட்ரக்ஷன் கொடுத்து, பஸ் பர்மிட் வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

லாரிகளைப்பற்றி எனது பக்கத்தில் இருக்கும் கனம் அங்கத்தினர் ஸ்ரீ சுப்பைய்ய முதலியார் அவர்கள் சொன்னார்கள், ஸ்டேட் லெவலில் இந்தப் பர்மிட் கொடுக்கவேண்டுமென்று. ஜாஸ்தியான வரி விகிதத்தை வசூல் செய்தாலுங்கூட ஒரு ஜில்லாவுக்கு முதலில் பர்மிட் கொடுத்து, அதை மறு ஜில்லாவுக்கு அதிகரித்துக் கொள்வதற்கு படும் பாடும், அதற்கு ஏற்படும் அனாவசியமான அக்கிரமமான செலவுகளும் எனக்குத் தெரியும். அனாவசியமாக காலதாமதம் ஏற்படுவதோடுகூட, ஜாஸ்தி செலவும் கெடுதலும் ஏற்படுகிறது. ஏதாவது ஒரு விகிதத்தை—ஜாஸ்தி விகிதத்தைப் போட்டாலுங்கூட—போட்டு ஒரு விதி ஏற்படுத்தி அந்த லாரி சொந்தக்காரர் புதிதாக வாங்கினாலும், வைத்துக்கொண்டாலும் சரி, அவர்களுக்கு ராஜ்யம் பூராவும் போக்குவரத்துக்குள்ள "ரூட்"களை நிர்ணயித்து பர்மிட் கொடுப்பது நியாயமாகும். விவசாயப்பொருள்களை தூரமான மார்க்கெட்டுகளுக்குக் கொண்டுபோய் நல்ல விலையில் எல்லோருக்கும் நியாயமான விலையிலே விநியோகிக்கக்கூடிய வாய்ப்பு தரக்கூடுமென்று கருதுகிறேன். ஆகையால், அதைப்பற்றி மந்திரி அவர்கள் ஆலோசிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1st November 1957] [Sri R. Srinivasa Iyer]

இந்த லாரிகள் இரவிலேதான் போகின்றன. அதுவும் ஜாஸ்தியாக மதராஸ்-திருச்சி வரையில் இரவிலேதான் போகின்றன. நான் ஒன்றிரண்டு சமயங்களில் திருச்சி மதராஸ் ரோடில் பார்த்திருக்கிறேன். கண்ணைப் பறித்துக்கொண்டு போகும் லைட்களை போட்டுக்கொண்டு லாரிகளை ஓட்டிக்கொண்டு போகிறார்கள். பெயர் சொல்லுபவர்களோ, அல்லது நெம்பர் சொல்லுபவர்களோ இல்லை. ஆதலால் இவர்களைப்பற்றி யாருக்கும் ரிபோர்ட் செய்ய முடிவதில்லை. இந்த நிலையிலே ஒரு லாரியின் முன்னாலே ஒரு கட்டைவண்டி போய்க்கொண்டிருந்திருக்கிறது. அந்த கட்டை வண்டியில் லாரி மோதி ஒருவருக்கு கால் ஒடிந்தது, ஒருவர் இறந்தார், மாடுகள் செத்தன, வண்டி தூள்தூளாயிற்று. ஒன்று லாரி டிரைவர் நிதானம் தவறி ஓட்டியிருக்கவேண்டும் அல்லது தூங்கிக்கொண்டே ஓட்டியிருக்கவேண்டும். எதிரே வருகிற வண்டியில்லை. முன்னாலே போகிற வண்டி. 120 அடி அகலம் ரோடு இருக்கிறது. விழுப்புரத்திற்கு நான்காவது மைலில் இந்தப் பக்கத்தில் இம்மாதிரி ஒரு "ஆக்ஸிடெண்ட்" நடந்தது. விடியற்காலையில் $4\frac{1}{2}$ மணிக்கு "ஆக்ஸிடெண்ட்" நடந்தது. காலை 9 மணி வரையில் கேட்பார் யாரும் இல்லை. செத்த பிணம் அப்படியே கிடந்தது. மாடுகள் செத்துக் கிடந்தன. வண்டி தூள்தூளாயிற்று. லாரி புது லாரிபோல் தோன்றியது. அப்பொழுதுதான் லைஸன்ஸ் எடுத்திருப்பதாக தோன்றியது. லாரிக்காரர்கள் மணிக்கு 15 மைல்களுக்கு மேல் ஓட்டக்கூடாது என்ற ஒரு விதியை ஏற்படுத்தவேண்டும். அதிலேயே ஒரு "பிக்ஸ்சர்" விசை ஏற்படுத்தி மணி ஒன்றுக்கு 15 மைல்களுக்குமேல் ஓட்ட முடியாமல் செய்யவேண்டும். அம்மாதிரி செய்தால்தான் இந்த "ஆக்ஸிடெண்டுகள்" ஏற்படாமல் இருக்கும்.

"டூரிஸ்ட் டிராபிக்" ஜாஸ்தியாக ஏற்படவேண்டும், அதனால் நமக்கு ஜாஸ்தியாக வருவாய் கிடைக்கும், தொழிலாளர்கள் நன்மை அடைவார்கள் என்று நினைக்கும் ஒரு முறையிலே டி.வி.எஸ். லக்ஸரி ஸர்விஸைப் போன்று நல்ல பஸ்களை ஏற்படுத்தி, தஞ்சாவூர்–மதராஸ், திருச்சி-மதராஸ் இம்மாதிரி ஜாஸ்தியான தூரத்தில் ரூட்டுகள் கொடுத்து பஸ்கள் ஓட்டுவதற்கு "பெர்மிஷன்" கொடுத்தால் ரயில்வேக்களில் இருக்கும் கூட்டம் கொஞ்சம் குறையும். ஜனங்களுக்கும் கொஞ்சம் வசதியாகவும் சௌகரியமாகவும் இருக்கும் என்பதை தெரிவித்துக்கொள்ளுகிறேன். இந்த மசோதா சம்பந்தப்படாத சில விஷயங்களைப்பற்றி நான் பேசியதற்கு இந்தச் சபை என்னை மன்னிக்கும்படி கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

MR. SPEAKER: We have been having discussion on the Bill for one hour and forty minutes now. With the consent of hon. Members, I shall ask the Hon. Minister to reply at 12-15 p.m. So, I would ask hon. Members who want to speak on the Bill to speak for five minutes each so that the reply may begin at 12-15.

* SRI A. MARIAPPAN: கனம் சபாநாயகர் அவர்களே, கனம் மந்திரி அவர்கள் கொண்டுவந்திருக்கிற மசோதாவை ஆதரித்து ஓரிரண்டு வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். பஸ் ரூட்டுகள் கொடுப்பதில் அநேகமாக எல்லா ஜில்லாக்களிலும் சிறு முதலாளிக்கு ஆதரவு கொடுக்கவேண்டுமென்று சொல்லப்படுகிறது. ஓரளவுக்கு இப்பொழுது அம்மாதிரி சிறு முதலாளிகளுக்கு ஆதரவு கொடுக்கப்படுகிறது. அப்படியிருந்தும் சில இடங்களில் பெரிய முதலாளிகளால், சிறிய முதலாளிகள் பாதிக்கப்படுகிறார்கள். ஆர். டி. ஏ. ஒரு வருஷத்திற்குத்தான் பெர்மிட் கொடுக்கவேண்டுமென்று சம்பிரதாயம் ஏற்படுத்தியிருக்கிறார்கள். அந்த முறையில் ஒரு வருஷத்திற்கு ஒன்று வீதம் ஆர். டி. ஏ. பெர்மிட் கொடுத்தால் அதை ஆட்சேபித்து பெரிய முதலாளிகள் எஸ். டி. ஏ. டிக்கு அப்பீலுக்குப் போகிறார்கள். எஸ். டி. ஏ. டியில் அது அடிபட்டுப்போய்விடுகிறது. ஆர். டி. ஏ. ஏற்படுத்திய சம்பிரதாயம் எஸ். டி. ஏ. டியில் வரும்போது சட்டம் காரணமாகவோ அல்லது வேறு சில காரணங்களினாலோ அடிப்பட்டுப் போய்விடுகிறது. இந்த முறையை சர்க்கார்

மாற்றி அமைக்கவேண்டும். சர்க்காரைப் பொருத்தவரையிலும் 2, 3, ஸ்தாபனங்கள் இருக்கின்றன. இந்த ஸ்தாபனங்கள் ஒரே முறையை பின்பற்றினால்தான் சிறிய முதலாளிகள் தங்களை பெரிய முதலாளிகளிடமிருந்து காப்பாற்றிக்கொள்ள முடியும். ஆகையால் " ஆர்.டி.எ. " " எஸ்.டி.எ.டி " இரண்டிலும் ஒரே மாதிரி சம்பிராதயங்களை ஏற்படுத்த வேண்டுமென்று கனம் மந்திரி அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

கனம் மந்திரி அவர்கள் டிரான்ஸ்போர்ட் பொறுப்பை ஏற்றுக் கொண்டபிறகு நமது மாகாணத்திலே டிரான்ஸ்போர்ட் நல்ல முறையிலே நடந்து வருகிறது. இருந்தபோதிலும் ஆங்காங்கு சில குறைகள் தீர்க்கப்பட வேண்டியிருக்கின்றன. ஐந்து பஸ்களுக்கு மேல் ஒரு முதலாளிக்கு கொடுப்பதில்லை என்ற சம்பிரதாயத்தை கண்டிப்பாக அமுல் நடத்த வேண்டும். அந்த விதி நடைமுறையில் இருந்தபோதிலும் நீண்ட தூரப் பிரயாணம் என்று சொல்லப்பட்டு 35, 40 பஸ்கள் ஒரே முதலாளிக்கு கொடுக்கப்படுகிறது. அது சரி அல்ல. சிறிய முதலாளிகளை விட பெரிய முதலாளிகளுக்கு நிறைய வசதிகள் இருக்கின்றன, அதனால் அவர்களுக்கு கொடுக்கவேண்டுமென்று நினைக்கிறார்கள். பெரிய முதலாளிகளை விட சிறிய முதலாளிகள் இந்தத் தொழிலை நடத்தியே வாழவேண்டிய நிர்ப்பந்தம் இருக்கிறது. ஆதலால் சிறிய முதலாளிகள் சர்க்கார் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு பொது ஜனங்களுக்கு வேண்டிய வசதிக்கேற்ப நடந்து கொள்ளுவார்கள். குறிப்பாக ஆங்காங்கு சிறிய முதலாளிகளுக்கு புதிய ரூட்டுகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவர்கள் நல்ல முறையிலே நல்ல பஸ்களை வைத்துக்கொண்டு தங்கள் கம்பெனிகளை நடத்திக்கொண்டு வருகிறார்கள். நீண்ட தூரத்திற்கு கொடுக்கப்படும் பஸ் ரூட்டுகளும் சிறிய முதலாளிகளுக்கும் கொடுக்கவேண்டுமென்றும், பெரிய முதலாளிகளுக்கே கொடுக்கக்கூடாது என்று அழுத்தம் திருத்தமாக சொல்லிக்கொள்ளுகிறேன்.

எங்கு பார்த்தாலும் இப்பொழுது இட நெருக்கடி இருக்கிறது. ரயில்வேயிலும் அதிகப்படியான வசதி செய்யக்கூடிய நிலைமை இல்லை. அங்கும் இட நெருக்கடி இருக்கிறது. இதனால் பல கிராமங்களிலே இருக்கக்கூடிய ஜனங்கள் தாங்கள் செல்லக்கூடிய இடங்களுக்கு போக முடியாமல் கஷ்டப்படுகிறார்கள். நடுவாந்திர கிராமங்களில் இருக்கக்கூடிய மக்கள் காலையில் ஒரு ஊருக்குப் போகவேண்டுமென்று வந்தால், மாலையில்தான் அவர்களுக்கு பஸ் கிடைக்கிறது. ஆகையினால் சர்க்கார் பஸ் ரூட்டுகளை இன்னும் அதிகமாக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

சிறிய கிராமங்களில் தார் ரோடு போடவேண்டும், ரோடுகள் நன்றாக இல்லை என்று பெரிய முதலாளிகள் காரணம் சொல்லுகிறார்கள். அதை சில அதிகாரிகளும் பின்பற்றுகிறார்கள். அவர்கள் சொல்லும் காரணங்களை மறுத்து புதிய ரோடுகளாயிருந்தாலும் அங்கே பஸ்கள் விடுவதற்கு சர்க்கார் ஏற்பாடு செய்யவேண்டும். அப்படியிருந்தால்தான் கிராம மக்களுக்கு போக்கு வரத்து வசதி ஏற்படும். குறிப்பாக நடுவாந்திர கிராமங்களிலுள்ள ஜனங்களுக்கு தேவையான போக்குவரத்து வசதி செய்து தரவேண்டும். சேலத்திலிருந்து 30 மைல் தூரத்திலுள்ள திருச்செங்கோடு ரூட்டில் வேலத்தம் முதலிய இடங்களுக்கு போக விரும்பும் ஜனங்கள் முழு கட்டணத்தையும் கொடுக்கவேண்டியிருக்கிறது; 10, 12 மைல் பிராயாணம் செய்யவேண்டுமென்றாலும் முழுக் கட்டணத்தையும் கொடுக்கவேண்டியிருக்கிறது. இதை சர்க்கார் உடனே தடுத்து நிறுத்த வேண்டும். அவர்கள் கொண்டுவரக்கூடிய சாமான்களை ஏற்றிக்கொள்ள மறுக்கிறார்கள். மூட்டைகளை ஏற்றிக்கொள்ளக்கூடாது என்ற உத்தரவை பயன்படுத்திக்கொண்டு சிறிய மூட்டைகளையும் ஏற்றிக்கொள்ள மறுக்கிறார்கள். அதிகப்படியான கட்டணம் வசூலிக்கிறார்கள். இதைத் தடை செய்யவேண்டும். குறிப்பாக கைத்தறி நெசவாளர்கள் கிராமங்களிலிருந்து தங்கள் துணிகளை எடுத்துக்கொண்டு நகரங்களுக்குப் போய் வியாபாரம் செய்தாக வேண்டியிருக்கிறது. அம்மாதிரி சிறிய துணி மூட்டைகளை அவர்கள் கொண்டுவந்தால் அவர்கள் அதை ஏற்றிக்கொள்ள சர்க்கார்





ஏற்பாடு செய்யவேண்டும். டிரான்ஸ்போர்ட் நிர்வாகம் நல்ல முறையிலே நடப்பதற்கு கனம் மந்திரி அவர்களை பாராட்டி, இம்மாதிரியான சிறிய குறைகளை நீக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்.

* **Sri S. LAZAR** : கனம் சபாநாயகர் அவர்களே, கனம் அமைச்சர் கொண்டு வந்திருக்கக்கூடிய இந்த மசோதாவை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். இந்த வாதத்தை தொடர்ந்து கவனித்து வந்ததில் குறிப்பாக எழுப்பப்பட்ட ஆட்சேபனை தனிப்பட்ட ஒரு அதிகாரியின் கையில் இந்த நிர்வாகத்தை ஒப்படைப்பது நல்லது அல்ல. மக்கள் பிரதிநிதிகளும் அந்த போர்டில் இருக்கவேண்டுமென்பது தான். இந்த விஷயத்தை கொஞ்சம் நன்றாக ஆலோசித்துப் பார்க்கவேண்டுமென்பதை இந்த சமயத்தில் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். இது ஒரு " அட்மினிஸ்டிரேஷன் வொர்க் ". ஆகவே நடை முறையிலே பார்க்கும்பொழுது, அனுபவம் வாய்ந்த அதிகாரி ஒருவரை இதற்கு நியமிப்பதுதான் சரியே தவிர, ஏதோ வாதத்திற்காகவேண்டுமானால் வேறுவிதம் பேசலாம். அதிலும் குறிப்பாக எந்த காரியத்தை எடுத்துக்கொண்டாலும்கூட மத்திய சர்க்காரை பின்பற்றியே நாம் போய்க்கொண்டிருக்கிறோம் என்ற ஒரு குற்றச்சாட்டு இருக்க்கூடிய இந்த நேரத்திலே நல்ல காரியங்களாக இருந்தால் அதில் சில மாற்றங்கள் கொண்டுவருவோம் என்ற எண்ணத்தோடு ஒரு சில திருத்தங்கள் இந்த சபையிலே வரக்கூடிய நேரத்திலே அவைகளை நாம் மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்ளவேண்டுமே தவிர, அவைகளை எற்றுக்கொள்ளமாட்டோம் என்று சொல்லுவது அவ்வளவு சரியல்ல என்று நினைக்கிறேன். அப்படி இதை நன்றாக ஆராய்ந்து செய்து பார்க்கிறபோது இதிலே மக்களுடைய பிரதிநிதிகள் இருக்கவேண்டிய அவசியம் இல்லை என்பதை நன்றாக உணர முடியும். தொழில் சம்பந்தமான திட்டங்களைப் போடுவது, அபிவிருத்தி சம்பந்தமான திட்டங்களை வகுப்பது என்கிற இடங்களில் பொதுமக்களுடைய ஒத்துழைப்புவேண்டும். அவர்கள் பிரதிநிதிகள் அங்கே இடம் பெறவேண்டும். ஆனால் இது வெறும் அட்மினிஸ்ட்ரேடிவ் ஆபீஸ். இங்கேயும் பொதுமக்களுடைய பிரதிநிதிகள் இருக்கவேண்டுமென்று சொல்லப்படும் வாதம் பொருத்தமானது அல்ல. அடுத்தபடியாக இவர்கள் நீதிபதியாக இருக்கவேண்டுமென்று சொல்கிறதும் அவ்வளவு சரியானது அல்ல. ஏனென்று கேட்டால் நீதிபதியின் நிலை மிகவும் உன்னதமான நிலைமை. அதை அடிக்கடி சின்னச் சின்ன காரியங்களில் எல்லாம் கொண்டுவந்து புகுத்தவேண்டுமென்று நினைப்பது பொருத்தம் அல்ல. அதனால் தான் நான்கு நாட்களாக சபையில் நடந்த விவாதத்தில் ஜூடிஷியல் என்கொயரி போடவேண்டுமென்று சொன்னதை நாங்கள் விரும்பவில்லை. இப்படி அரசாங்க அட்மினிஸ்ட்ரேஷன் சம்பந்தமான காரியங்களுக்கு எல்லாம் நீதிபதியை உபயோகப்படுத்துவது என்பது நாளடைவில் நிர்வாகச் சீரழிவில் கொண்டுபோய்விடும். இதை உணரவேண்டும். ஆகவே தான் இப்போது டிரான்ஸ்போர்ட் நிர்வாகத்திலும் நிர்வாக அதிகாரியைக் கட்டுப் படுத்தினால் அதனால் நிர்வாகம் நல்ல முறையில் நடக்காது. அங்கே பொது மக்களுடைய பிரதிநிதிகள் இருக்கவேண்டும் என்பது சரியல்ல என்று சொல்ல ஆசைப்படுகிறேன். பொதுமக்களுடைய பிரதிநிதிகள் தான் அந்த நிர்வாகத்திற்குப் பல சட்டங்கள் செய்திருக்கிறார்கள். மோட்டார் வெகிகில்ஸ் ஆக்ட், மோட்டார் ரூல்ஸ், ரெகுலேஷன் ஆக்ட் இப்படி பல சட்டங்களையும் விதிகளையும் நாம் போட்டிருக்கிறோம். இந்தச் சட்டங்களின் பிரகாரம் நீதி நிர்வாகத்தை அறிந்த ஒரு அதிகாரியின் மூலம், நன்றாக நிர்வாகத்தை நடத்தலாம். ஜில்லாக் கலெக்டர்களுக்கு சட்டத்திலும் பயிற்சி கொடுக்கப்பட்டிருக்கிறது. நிர்வாகத்திலும் அநுபவம் உண்டு. ஜில்லாக்களில் எங்கெங்கே பஸ் ரூட்டுகள் வேண்டும் என்பது போன்ற விவரங்களும் அவர்களுக்குத் தெரிந்திருக்கும். அத்தகைய வாய்ப்பு அவருக்கு இருக்கிறது. இதை யாரும் மறுக்க முடியாது. ஆகவே அவர் ஒருவரிடமே இந்த நிர்வாகத்தை கொடுப்பதில் தவறு இல்லை. பொது மக்களின் பிரதிநிதிகள் அடங்கிய ஆலோசனை சபை தேவை இல்லை. இதனால் பொதுமக்களுடைய கஷ்டநஷ்டங்களை எடுத்துச்

சொல்ல வாய்ப்பு இல்லாமல் போகிறதே என்று சொல்ல முடியாது. இந்தச் சட்டத்தையும், சட்டத்தில் இருக்கும்படியான ரெகுலேஷன்களையும் நன்றாகத் தெரிந்து கொண்டவர்களுக்கு இது தெரியும். எந்த ஒரு ரூட்டுக்கு பர்மிட் கொடுப்பதாக இருந்தாலும் சரி, நிர்வாக உத்திரவு போடவேண்டியதாக இருந்தாலும் சரி, நோட்டிபிகேஷன் செய்துவிட்டு, பொதுமக்களுடைய பிரதிநிதிகளின் ஆட்சேபணையை வரவழைத்த பின்பு தான் அப்படிச் செய்கிறார்கள். ஆகவே பொதுமக்களுடைய அபிப்பிராயத்தைத் தெரிவிப்பதற்கு ஒரு வாய்ப்பு எப்போதுமே இருக்கிறது. அதை யாரும் மறுக்க முடியாது. அதோடு நிர்வாகத்திலும் அந்த வாய்ப்பு அளிக்கப்பட வேண்டுமென்பது சரியானது அல்ல. அடுத்தபடியாக இன்னொரு முக்கியமான கருத்தைத் தெரிவிக்க ஆசைப்படுகிறேன். புதிதாக ரூட்டுகள் கொடுக்கவேண்டுமென்ற நியதி ஏற்படுகிற நேரத்தில் பொதுமக்களிடம் இருந்து ஏராளமான விண்ணப்பங்கள் வரலாம். அதிகமான பேர்களுக்கு லைசென்சு கொடுப்பதனால் சில பேர்களுடைய லாபம் குறைந்துவிடும் என்று சொல்லலாமே தவிர, பொதுமக்களுக்கு அதிகமான பேர்களுக்கு லைசென்சு வழங்கும்போது தான் அதிக சௌகரியம் ஏற்படுகிறது என்பதை மறுக்க முடியாது. இதுபோன்றே எந்தத் துறையில் லைசென்சு வழங்குவதாக இருந்தாலும் அதிகமான பேர்களுக்கு தாராளமாக வழங்க ஏற்பாடு செய்தால் மக்களுக்கு வசதி பெருகும். அது தான் என் கோரிக்கை. இப்படிப்பட்ட காரணங்களை மனதில் கொண்டு தான் நான் இப்போது அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கிற நகல் மசோதாவை முற்றிலும் ஆதரிக்கின்றேன்.

12-05 p.m. **Sri P. S. CHINNADURAI** : மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, இது ஜனநாயக யுகம். ஜனநாயக ரீதியில் அரசாங்க அலுவல்கள் நடக்க வேண்டுமென்று மக்கள் சிந்திக்கிற காலம். அரசாங்க அலுவல்கள் ஜனநாயக ரீதியில் நடைபெறவேண்டுமானால் அரசாங்க நிர்வாக அமைப்புகள் ஜனநாயக ரீதியில் அமைந்திருக்க வேண்டும் என மக்கள் சிந்தித்துக் கொண்டிருக்கிற நேரம். இந்த நேரத்தில் ஜனநாயக ரீதிக்கு மாறுபட்டதாக, பஸ் போக்குவரத்து நிர்வாக அதிகாரத்தை ஒரு தனிப்பட்ட அதிகாரியிடம் ஒப்படைக்க சர்க்கார் ஒரு திருத்தம் கொண்டுவருகிறது என்றால் இது சரியானதுதானா என்பதைச் சிந்திக்கவேண்டும். இப்போது ஒரு குட்டி சர்வாதிகாரியை சிருஷ்டிக்க இவர்கள் விரும்புவது சரியில்லை. இப்படி ஜனநாயக சம்பிரதாயத்திற்கு விரோதமான முறையில் அதை மறந்து ஒரு திருத்தமோ, சட்டமோ கொண்டுவரும்போது அதை அவர்களுக்கு நினைப்பூட்டுவது இந்தச் சபையின் கடமை என்று நினைக்கிறேன். அதனால் பேச எழுந்திருக்கிறேன். தனி நபரிடத்தில் எத்தகைய அதிகாரங்களை வழங்குவது என்றாலும் அதுவே முடிவில் எவ்வளவு பெரிய கெடுதலாக வளர்ந்துவிடக்கூடும் என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டியவர்களாக இருக்கிறோம். தனி ஒரு நபர் எவ்வளவு தான் சிறந்தவராக இருந்தாலும், சிற்சில சமயங்களில் சூழ்நிலையினால் தவறு இழைத்துவிடக்கூடும். ஆகவே தான் உயரிய அதிகாரங்களை ஒரு தனி நபரிடத்தில் கொடுக்காமல் மூன்று நான்கு பேர்களை அதற்குப் பொறுப்பாக வைப்பது உயர்ந்ததாக இருக்கிறது. இந்தத் திருத்தத்தின் பிரகாரம் போக்கு வரத்து அதிகார சபைகளை ஒரே ஒரு உத்தியோகஸ்தரின் பொறுப்பில்விட்டு நடத்துவதற்கு ஏற்பாடு செய்வது அவ்வளவு முறையானது அல்ல. ஜனநாயக சம்பிரதாயத்திற்கு ஏற்றது அல்ல என்று நான் இங்கே சொல்லவேண்டும்.

இந்த இடத்தில் பேசும்போது தனி நபரிடத்தில் இந்த அதிகாரம் ஒப்படைக்கப்படுவது நிர்வாகம் சம்பந்தப்பட்ட விஷயம் என்று சொல்லப்பட்டது. நிர்வாகம் சம்பந்தப்பட்ட விஷயம் என்று கூறி இது மாதிரி ஒவ்வொரு இலாகாவிலும் அதிகாரிகளையே நம்பி அவர்களிடத்தில் அதிகாரத்தை ஒப்படைத்துவிடுவது முடிவில் ஜன நாயக வளர்ச்சிக்கே குந்தகம் விளைவிக்கும் செயலாகும் என்று சொல்ல ஆசைப்படுகிறேன். ஆகையால் தான் இப்போது கொண்டு வந்திருக்கிற திருத்தத்திற்கு அவசியமில்லை. இந்தத் திருத்தத்தை கனம் அமைச்சர் அவர்கள் கைவிடவேண்டுமென்று





கோருகிறேன். அதோடு இங்கிருந்து சிலர் பேசும்போது சம்பந்தமில்லாத விஷயங்களைக் குறிப்பிடுவதாக அங்கிருந்து பேசிய சில அங்கத்தினர்கள் சொல்லி தாங்கள் பேசும்போது அப்படியே சட்ட திருத்தத்திற்கு சம்பந்தம் இல்லாத விஷயங்களையே குறிப்பிட்டார்கள். நான் அப்படிப் பேச விரும்பவில்லை. ஆனால் ஒன்றைச் சுட்டிக்காட்டுவது என் கடமை என்று கருதுகிறேன்.

உலகத்தில் மிகச் சிறந்த நிர்வாகம் உடையது மதுரை டி.வி.எஸ். பஸ் நிர்வாகம் என மெம்பர் ஒருவர் குறிப்பிட்டார். அவர் சர்க்கார் கட்சியைச் சேர்ந்தவர். சர்க்கார் அந்த அபிப்பிராயத்தை ஏற்றுக்கொள்கிறார்களா என்று கேட்கிறேன். (கனம் ஸ்ரீ ஆர். வெங்கட்டராமன்—உங்கள் அபிப்பிராயத்தைச் சொல்லவேண்டும்.) உலகத்திலே மிகச் சிறந்த முறையில் டி.வி.எஸ். நிர்வாகம் நடைபெறுகிறது என்று ஏற்றுக்கொள்ள இயலாது. நான் நினைக்கிறபடி சர்க்கார் போக்குவரத்து நிர்வாகம் உயரவில்லை என்றாலும், டி.வி.எஸ்.-ஐவிட உயர்வாகவே நடைபெறுகிறது என்று சொல்வேன். ஆகவே இன்றைக்கு இந்தத் திருத்தம் ஜனநாயக முறைக்கு உகந்தது அல்ல. இதைக் கைவிடவேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

**Sri K. RAMACHANDRAN** : கனம் சபாநாயகர் அவர்களே **Ordinance replace** பண்ணுகின்ற முறையிலே ஒரு தனி அதிகாரி ஒருவராக இருக்கலாம். அதிலே அப்படி இருந்து வரும்படி அந்த இரண்டாவது பிரிவும் சொல்லியிருக்கவேண்டும். ஆனால் அப்படி இருக்கும்போது இதை "**effect**" கொடுக்கும் போது ஒருவர் என்று முறை இருக்குமா அவரது தேவைப்பட்ட இடத்திலே அந்த **committee** இருக்குமா என்ற சந்தேகம் ஏற்பட்டிருக்கிறது. ஆதலால் "**in giving effect**" என்பதை அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக **Central Act 100 of 1956** என்ற அடிப்படையின் கீழ் இந்த திருத்தம் கொண்டுவரப்படுகிறது என்று சொல்லப்படுகிறது. நான் அந்த **Act**-ஐ படித்து பார்த்தேன். அதிலே ஒரு தனி அதிகாரியை நியமிப்பதற்கு எந்த விதமான ஆங்கராம் இல்லை. அதிலே சொல்லப்படுகிறது என்னவென்றால் "**A Chairman who has had judicial experience and such officials and non-officials, not less than two as the State Government may think fit to appoint**" இருக்க வேண்டுமென்று தான் சொல்லப்படுகிறதே தவிர ஒரு தனி அதிகாரியை நியமிப்பதைப்பற்றி அதில் ஒன்றும் குறிப்பிடவில்லை. ஏற்கெனவே ஜனநாயக அமைப்பிலே ஒரு **Committee** இருப்பதன் அவசியத்தை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். நமக்கு இருக்கிற அனுபவம் சில **Transport** அதிகாரிகளுக்கு இல்லை. ஆகையால் பொது ஜன பிரதிநிதிகள் அம்மாதிரி அதிகாரிகளுக்கு **advice** கொடுத்தார். **Transport Advisory Committee** இருப்பது மிகவும் அவசியம். அதுவும் ஒரு தனிப்பட்ட அதிகாரியிடம் முழு அதிகாரத்தையும் கொடுத்துவிடுவது நியாயம் இல்லை என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். தவிர, ஒரு **route**-னுடைய **economic condition**-யை பற்றி அங்கு இருக்கக் கூடிய **Local member**-க்குத்தான் தெரியுமோ, அதிகாரிகளுக்கு தெரியாது. ஆதலால் ஒரு அதிகாரியை நியமிப்பது என்ற திருத்தம் தேவை இல்லை என்று சொல்லிக்கொண்டு கனம் ஸ்ரீ கரையாளர் கொண்டுவந்த திருத்தத்தை ஆதரிக்கிறேன்.

**Sri R. KRISHNASWAMY NAIDU** : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த காலம் தாழ்ந்த நேரத்தில் எனக்கு பேசுவதற்கு அனுமதி அளித்தமைக்கு என்னுடைய நன்றியை தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இப்போது போக்குவரத்து அமைச்சர் கொண்டு வந்திருந்த மசோதாவை ஆதரித்து இரண்டொரு வார்த்தைகளை சொல்ல விரும்புகிறேன். ஒரு தனிப்பட்ட அதிகாரிக்குப் பதிலாக உத்தியோகப் பற்றற்ற ஒருவரை போடலாமா என்பதை நாம் இப்போது ஆராய வேண்டியதில்லை. ஆனால் சர்க்கார் தன்னுடைய பொறுப்பை அப்படியே தட்டிகழித்து விட்டது என்பதை நான் சொல்லாமல் இருக்க முடியாது. 12-15 p.m.

[Sri R. Krishnaswamy Naidu] [1st November 1957

ஏற்கெனவே பர்மிட் கொடுக்கும் விஷயங்களில் ஜில்லா நிர்வாகத்திற்கு தவறுகள் ஏற்பட்டால் அதை திருத்துவதற்கு சர்க்கார் அதிகாரத்தை வைத்து இருக்கிறார்கள். ஏதோ எந்த காரணத்தாலோ, அந்த அதிகாரம் வேண்டும் என்று நினைத்து அதை அதிகாரிகளிடமே கொடுத்துவிட இந்த மசோதாவில் வகை செய்யப்பட்டிருக்கிறது. இதிலே வரக்கூடிய நல்ல பெயரோ கெட்ட பெயரோ அதிகாரிகளிடமே போகட்டும். தனக்கு ஒன்றும் வரக்கூடாது என்று நினைத்து தன்னுடைய பொறுப்பை தட்டிக்கழிக்க பார்க்கிறார்கள் என்பதை நான் இந்த சமயத்தில் சொல்லாமல் இருக்க முடியாது. சமீபத்தில் நடந்த ஒரு சிறிய விஷயத்தை சொல்லிவிட்டு நான் என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன். ஒரு ஜில்லாவிலேயே **permit**-ஐ கொடுப்பதற்கு வேண்டிய வழி வகைகளை சர்க்கார் சில நிர்வாக உத்திரவுகளை பிறப்பித்து இருக்கிறார்கள். அந்த உத்தரவுகளை அனுசரிக்காமல் சர்க்காருக்கு ஒரு **permit** விஷயமாக ஒருவர் அப்பீல் செய்தார். சர்க்கார் வேறு விதமாக உத்திரவு போட்டார்கள். இந்த வழக்கு **High Court**-க்கு போயிற்று. **High Court**-ல் என்ன சொன்னார்கள் என்றால் இது **Misconstruction of the Government Order** அதோடு சர்க்கார் உத்தரவுகளை ***Fort St. George Gazette***-லும் பிரசுரிக்கப்படவில்லை. சட்டசபை அங்கத்தினர்கள் முன்னும் அறிவிக்கப்படவில்லை. இது ஒரு முறை அல்ல. நியாயத்தை வழங்குவதற்கு எங்களுக்கு உரிமை இல்லை என்று தீர்ப்பு அளித்துவிட்டார்கள்.

அதோடு இந்த தவறான வழியில் பிறப்பித்த இந்த உத்தரவை மாற்றிக்கொள்ள வேண்டுமானால் சர்க்கார் **executive action** மூலம் செய்வதற்கு அதற்கு அதிகாரம் இருக்கிறது என்று சொல்லி இருக்கிறார்கள். அப்படி இருக்கும்போது சர்க்கார் அதன் பிரகாரம் உத்தரவுகளை மாற்றுவதற்கு பதிலாக அந்த விஷயத்தை தட்டிக்கழித்து விட்டார்கள். சர்க்கார் இந்த விஷயத்தில் தலையிட்டு இதற்கு ஒரு நியாயமான பரிகாரத்தை காண ஒரு விசாரணை செய்து இருக்கவேண்டும். சட்டம் இருந்தும் அதை சரிவர அமுல் நடத்த முடியாமல் இருப்பதால் பல வழக்குகள் இது சம்பந்தமாக **High Court**-களுக்கு போகின்றன. இதனால் எவ்வளவோ பணம் விரயமாகிறது. லாபம் அதிகமாக கிடைக்கக்கூடியவர்கள் இம்மாதிரி வழக்குகளில் ஈடுபட்டிருக்கலாம். ஆனால் சாதாரணமாக மக்கள் எவ்வாறு ஈடுபட முடியும். ஆகையால் சர்க்கார் இந்த சிக்கலான பிரச்னையை தீர்ப்பதற்கு தக்க கவனம் செலுத்தி, அவர்கள் பிறப்பிக்கின்ற உத்தரவை சட்ட பிரகாரமும், நியாயமான அமுலுக்கு கொண்டு வரவேண்டும் என்று அதிகாரிகளுக்கு உத்தரவிட வேண்டும். அப்போதுதான் நாம் இயற்றும் சட்டம் நல்ல வகையில் பயன்படும். இந்த வார்த்தைகளோடு நான் இந்த மசோதாவை ஆதரிக்கிறேன். எனக்கு பேச வாய்ப்பு கொடுத்த கனம் சபாநாயகருக்கு என்னுடைய நன்றியை மறுபடியும் தெரிவித்துக்கொள்கிறேன்.

12-20 p.m. * THE HON. SRI V. RAMAIAH: Sir, before I go into the details of the discussion that has taken place, I must thank you for giving me an opportunity to listen not only to points relevant to this Bill but those relating to the whole transport system in our State. I am really grateful to you and I also felt that you were perhaps so indulgent because, having been Minister for Transport yourself sometime ago, you wanted to know the progress the transport system has made after you left. Sir, all the points raised by hon. Members, will be considered duly. I mean even those which are not immediately connected with the Bill. I am not going to brush them aside saying that these have nothing to do with the Bill.

Coming to the Bill proper, the serious charge of the hon. Mover of the amendment for referring the Bill to a Select Committee is that we are rushing with the Bill because we are



1st November 1957] [Sri V. Ramaiah]

enamoured of single-member Regional and State Transport Authorities. He imputed a motive that the Government do not want a larger body because they feel that they could easily approach the Transport Authority, if it is a single-member body. Well, if the hon. Member has gone through the reports of debates in this House during the course of the last few years, he would have definitely come to the conclusion that the step which we are taking to-day is not a hasty one or one for the sake of obtaining patronage from an authority like the Regional Transport Authority or the State Transport Authority.

I have tried to explain the various stages and experiences we went through before coming to a decision to have a single-member authority. There was a time some years back when the Regional Transport Authority was completely monopolised, or completely consisted of members who were non-officials. There was a stage later when the membership of the Regional Transport Authority was both official and non-official. Later again on account of criticisms and public opinion, we said, we will have a purely official body with more than one member. That again did not meet with the needs. That again was open to criticism. Therefore finally, just at the beginning of last year we decided that we will have a single-man authority and that authority has been functioning in this State for the last 20 months. After my coming in here in the course of the last six months, except on a few occasions or except for a few small incidents and few personal grievances, I was made to understand that this body, this single-man authority has been working effectively and efficiently and whatever decisions they took was cogent and they were going about their work smoothly. I have not found this view merely looking into official papers only. After coming in here I have travelled in every district. I have met large bodies of people interested in transport as such. I have assessed their feelings and reactions to this single-man body. It is all this that made me feel that I should continue the organization or the authority which has been effective, which has not created any public resentment as such, or any adverse criticism. Merely because an opportunity has been given to the Government that they can enlarge the body, they can increase the number of members, they can bring in non-officials, if I took that opportunity and acted upon it, then the Hon. Speaker himself will know. I will have to face bitter criticism, greater criticism than what I had to face for continuing it as a single-member body.

Sir, hon. Members spoke in the name of democracy. Well to speak in the name of democracy and on democratic principles is not only their monopoly. I also believe in democracy and democratic principles. (Interruption.) I definitely practice and follow it. I believe my hon. Friend opposite would have listened to the hon. Member Sri Lazar who spoke before him. He tried to explain the difference between the administrative unit and an

advisory body and where the Regional Transport Authority comes, where the advisory body comes in, whether public opinion is to be considered in a body like the Regional Transport Authority or whether we should strictly adhere to certain principles and whether we should leave the complete decisions to the authority without any pressure from public opinion. After his explanation, I thought the hon. Member who followed him, would have listened to him. If he had listened to him he would not have spoken as he did. Probably he had come with preconcieved mind, to talk in terms of democratic principles and make hon. Members feel that the Government were doing something against democratic principles. I may assure my hon. Friend that we have considered where democracy should be brought in, where non-officials should be brought in and what we have done is for the effective functioning of democracy.

Again, Sir, I feel there is doubt in the minds of hon. Members that they have no say in the matter of improving transport facilities in the districts. That only shows they have not deeply gone into the set-up of the organisation both at the State and the District levels. At the State level we have got a body as the State Transport Advisory Committee. Similarly in the districts also for every district we have a District Transport Advisory Committee. I admit, as these bodies are constituted to-day, they consist of very limited number of Members. I have not got facts and figures with me, but my feeling is that they do not also meet regularly. (Interruption.) They are existing. But as I said, my feeling is that they should be broadbased. More public element should be brought into them and they should be made to meet more often. Recently we had a meeting of the State Transport Advisory Committee and I am thinking in my mind . . .

SRI V. K. RAMASWAMY MUDALIAR: Will the Hon. Minister tell us whether such bodies exist in the districts and if they are functioning whether they will be mere advisory bodies and so on? I would request the Hon. Minister to clarify these points.

THE HON. SRI V. RAMAIAH: Every district has an Advisory Body. It consists of the District Collector, the District Superintendent of Police, the Regional Transport Officer and the President of the District Board. (Interruption.) I am saying what is really in existence. One of the Chairman of the principal Municipality in the district is also a member of the Advisory Board. (Interruption.) I did say that the number of meetings and the way the problems that come before them are solved, could be improved and must be improved. That is engaging my attention. We will without further delay try to have a more broadbased Advisory Committee which meets more often than now. If that were done, I think the purpose of the amendments moved by the hon. Member Sri K. Sattanatha Karayalar would be served.



Sir, the other point was about the judicial officer and judicial experience. The hon. Members tried to create an impression that the Central Act wanted a judicial officer to take up the work. But the Central Act is clear. 'An officer who has judicial experience' is what the Central Act requires. As far as our legal pandits are concerned—we had consulted our legal experts and we have to take their advice—they are of the opinion that the District Collectors can come under that category so far as this particular Act is concerned. So there can be no difficulty in regard to that.

Furthermore, a number of suggestions were put forward that in these days when we have a lot of developmental activities in the various districts, when more and more roads are laid to connect the different villages, we must see that the transport should be improved. For this purpose, I am sure, the District Collector as the authority will be very useful who is given the benefit of the advice of a very effective Advisory Body. If that is done, I am sure, many of these longstanding grievances and difficulties will be over.

These are the two important points raised here with reference to this Bill. Sir, many other suggestions and many other complaints which came out during the general discussion, I think, need not be dealt with in detail now. However, I shall once again assure the hon. Members that all these complaints and suggestions would be taken into consideration and acted upon at the appropriate time.

Sir, with these few words, I commend this Bill for the acceptance of the House. Thank you, Sir.

MR. SPEAKER: Are the hon. Members, Mr. Kothandaraman and Mr. Karayalar withdrawing their amendments?.

SRI K. SATTANATHA KARAYALAR: I am pressing my amendment, Sir.

MR. SPEAKER: The question is—

"That the Motor Vehicles (Madras Amendment) Bill, 1957, be referred to a Select Committee."

The amendment was put and lost.

MR. SPEAKER: The question is—

"That the Motor Vehicles (Madras Amendment) Bill, 1957 (L.C. Bill No. 3 of 1957) as passed by the Legislative Council be taken into consideration."

The motion was put and carried, and the Bill was taken into consideration.

MR. SPEAKER: We shall now proceed with clause by clause consideration of the Bill. We shall take up clause 2. There are three amendments. With regard to amendment No. 2, Mr. Karayalar, I am wondering whether it is in order and whether

[Mr. Speaker] [1st November 1957

it is not violation or negation of the clause itself. I am hesitating whether I should accept it or rule it out. Will the hon. Member explain why I should not rule it out of order? I am asking his opinion and then I shall give my ruling.

SRI K. SATTANATHA KARAYALAR : Sir, you can give your ruling.

MR. SPEAKER : I rule the first amendment to the clause seeking to 'delete the second proviso to the clause' out of order, as in my opinion it is a direct negation of the original clause itself.

Amendments Nos. 4 and 5 may be moved by Sri Karayalar and Sri V. K. Ramaswamy Mudaliyar respectively. All amendments have to be seconded.

*Clause 2.*

SRI K. SATTANATHA KARAYALAR : Sir, I move—

'*Delete* the word 'only' at the end of second proviso and *add* the following :—

"Who is to be advised by an advisory committee consisting of bus operators, representatives of workers engaged in the Transport Service and Members of the Legislative Assembly and Members of Parliament." '

SRI K. RAMACHANDRAN : I second the amendment, Sir.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : Sir, I move—

'*Delete* the word 'only' at the end of second proviso and *add* the following :—

"who should be assisted by a sub-judge."'

SRI M. JAGANNATHAN : I second the amendment, Sir.

MR. SPEAKER : Clause (No. 2) and the amendments are before the House for discussion. Mr. Karayalar can speak.

12-30 p.m. * SRI K. SATTANATHA KARAYALAR : சபாநாயகர் அவர்களே, நான் இந்த திருத்தத்தை கொடுத்திருப்பதின் நோக்கமெல்லாம் இப்படி தனிப்பட்ட அதிகாரியின் கையில் இருக்கும் அதிகாரத்தை வைத்து நடத்தும்பொழுது ஒரு அட்வைஸரி குழுவினிடத்தில் ஆலோசனை கேட்டுகொண்டு நடத்துவது நல்லது. அதற்காக ஏற்பாடு செய்ய வேண்டுமென்பதுதான் என்னுடைய கோரிக்கை. மந்திரி அவர்கள் பேசும் போதுகூட இப்போது இருந்துவரக்கூடிய ஆலோசனை குழு சரியாக செயல்பட்டு வருவதாக குறிப்பிடவில்லை. இதிலிருந்து அந்த ஆலோசனை குழு சரியாக வேலை செய்து வரவில்லை என்று தெரிகிறது. நாங்கள் இப்போது சொல்லுவது என்னவென்றால் அந்த பகுதியில் இருக்கும் அசெம்பிளி அங்கத்தினர்களையும் பாராளுமன்ற அங்கத்தினர்களையும் சேர்த்து ஒரு குழு அமைக்க வேண்டும் என்பதுதான். அப்படி ஒரு ஆலோசனை குழு இருக்குமானால் போக்குவரத்தை பொறுத்த வரையில் அங்கு நடைபெறக்கூடிய போக்குவரத்தில் ஏற்படக்கூடிய குறைகளில் எல்லாம் அவர்களுக்கும் உத்திரவாதம் இருக்கும். இதில் ஏதாவது தவறுகள் செய்தாலும் அந்த



1st November 1957] [Sri K. Sattanatha Karalayar]

தவறுக்கு இவர்களும் பொறுபபாளி ஆவார்கள். ஆகவே இந்த முறையில் ஒரு ஆலோசனை குழு இருக்க வேண்டுமென்றுதான் நான் சொல்லுகிறேன். இந்த குழுவினால் அந்த அதிகாரியுடைய அதிகாரங்களை கட்டுபடுத்தபடவில்லை. சட்ட வரம்புக்குட்பட்டு எந்த காரியத்தை வேண்டுமானாலும் இந்த குழுவினிடத்தில் ஆலோசித்து என்ன வேண்டுமானாலும் செய்யலாம். இந்த குழுவினுடைய முடிவு என்ன என்பதை ஒவ்வொரு காரியத்திலும் அந்தந்த "டிரான்ஸ்போர்ட் அத்தாரிட்டி" தெரிந்து கொண்டு அதன்பின் அதன் மேல் நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்விதம் ஒரு ஆலோசனைக் குழு இருந்தால்தான் மக்களுடைய குறைகள் என்ன வென்று கவனித்து முடிவு எடுக்க முடியும். ஆகவே இம்மாதிரியான ஒரு ஆலோசனை குழு அவசியம் என்பதைதான் என் திருத்தத்தில் கொண்டு வந்திருக்கிறேன்.

SRI S. LAZAR : Sir, I want just an explanation from the hon. Member. He has stated that an Advisory Committee is necessary. I would like to know from him on what matters he seeks the Advisory Committee to advise. Under the Act and rules, there is no subject to be advised upon. Will the hon. Member please explain?

SRI K. SATTANATHA KARAYALAR : இந்த கமிட்டிக்கு அல்லது குழுவுக்கு எந்த அதிகாரங்கள் எல்லாம் இருக்க வேண்டும் என்பதை ரூல்கள் பிரேம் செய்யும்போது சர்க்காரிலிருந்து கொடுக்கலாம். "ஸ்டேட் ட்ரான்ஸ்போர்ட் அத்தாரிட்டி" ஏதாவது ஒரு காரியத்தை பரிசிலனை செய்யும் போது இந்த குழுவினுடைய ஆலோசனைகளை கேட்ட பிறகுதான் ஒரு முடிவுக்கு வரவேண்டும் என்கிற முறையில் அமைய வேண்டும்.

* SRI V. K. RAMASWAMY MUDALIYAR : Sir, in moving my amendment I have to make a few observations. I am aware of Government's difficulties in appointing non-officials. As a matter of fact I was a Member of the Regional Transport Authority for four years and I have experience of it. However, under the democratic set-up so many hon. Members have been suggesting that this Board should consist of non-officials also. So far as I am concerned, I have practically received many reports and many of them are authentic, that in certain districts the Collectors acting in their own totalitarian ways was not above this abuse. That is why I say that he should be assisted by a Subordinate Judge. The Collectors in Headquarters and during their visits discuss the matter with the Subordinate Judge and decide cases. With these few words, I move my amendment, Sir.

SRI M. P. SUBRAMANIAM : தலைவர் அவர்களே, நண்பர் சட்டநாத கரையாளர் அவர்களுடைய திருத்தம் ஒரு ஆலோசனை குழு ஏற்படுத்த வேண்டும் என்பதுதான். இந்த ஆலோசனைக் குழுவுக்கு விசேஷமாக எந்த அதிகாரத்தையும் கொடுக்கப்போவதில்லை. அமைச்சர் அவர்களே கூறினார்கள், இப்போது இருக்கக்கூடிய கமிட்டி சரியாக இயங்கவில்லை என்று. இவ்விதம் ஒரு குழு அமைக்கப்பட்டால் பொதுமக்களுடைய குறைகள் என்ன என்பதை அரசாங்க அதிகாரிகள் உணர்ந்துகொள்ள முடியும். ஆகவே இந்த ஆலோசனை குழுவை ஏற்படுத்துவதற்கு கனம் அமைச்சர் அவர்கள் ஒப்புக்கொள்ள முடியும் என்று நம்புகிறேன். இவ்வாறு ஒரு குழு இருப்பதினால் எந்தவிதமான தடங்கல்களும் ஏற்பட போவதில்லை. இதில் (நான்-அபிஷியலை) **non-official**-லை வைத்துக்கொள்வதிலும் தவறு ஒன்றுமில்லை. ஆகவே இதற்கு ஒத்து கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**SRI M. KALYANASUNDARAM:** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மசோதாவிற்கோ இந்தத் திருத்தத்திற்கோ ஆட்சேபனை இருந்திருக்க முடியாது. ஆனால் இது ஆட்சேபிக்கப்பட வேண்டிய நிர்ப்பந்தம் ஏன் ஏற்படுகிறது என்றால், இந்தத் திருத்தத்தைக் கொண்டு வருவதன் நோக்கம், ஏற்கெனவே எடுத்திருக்கும் ஒரு முடிவிற்காகச் சட்டத்தைத் திருத்த வேண்டும் என்பது ஆகும். "பொதுவாக, மத்திய பார்லிமெண்டில் சட்டம் திருத்தப்பட்டிருக்கும் அடிப்படையில் அதிகாரத்தை எடுத்துக்கொண்டு, அதற்கு மாறுபட்டு சில இடங்களில் ஒரே ஒரு அதிகாரியைக் கொண்ட R.T.A. இருக்க வேண்டிய அவசியமிருப்பதால் விதி விலக்குக் கொடுக்க வேண்டும். சர்க்காருக்கு இதற்குத் தேவையான அதிகாரத்தைக் கொடுக்கவேண்டும்" என்பதற்காக இந்தத் திருத்தம் வந்திருந்தால் இதை நான் ஆட்சேபித்திருக்க மாட்டேன். நம் ராஜ்ய சர்க்கார் சம்பந்தப்பட்டமட்டில், "மத்திய பார்லிமெண்டில் என்ன மாறுதல் செய்தாலும், நம் ராஜ்யத்தில் என்ன சூழ்நிலை இருந்தாலும், அவைகளை யெல்லாம் பொருட்படுத்தாமல் கலெக்டரைக் கொண்ட ஒரு R.T.A. இருக்க வேண்டும்" என்ற முடிவிற்கு சர்க்கார் ஏற்கெனவே வந்தாகிவிட்டது. கடந்த சட்டசபை நடவடிக்கைகளைப் படித்தால், எதிர்க் கட்சியிலிருந்தவர்கள் இந்தக் கொள்கைக்குக் கொடுத்திருக்கும் ஆட்சேபனைகள் தெரியும். ஆனால் ஆட்சேபத்தை சர்க்கார் பொருட்படுத்தாமல் கலெக்டரைக் கொண்டு ஆர்.டி.ஏ.-யை ஏற்படுத்தி வருகிறார்கள். ஆர்.டி.ஏ.-ல் உத்தியோகப் பற்றற்றவர்கள் இருந்தால் ஊழல்கள் இருக்கும் என்ற சர்க்காரின் கருத்தை நான் ஏற்றுக்கொள்ள முடியாது. தமிழ்நாட்டின் பண்பைப்பற்றி நேற்று கனம் நிதி அமைச்சர் அவர்கள் பேசினார்களே; ஆர்.டி.ஏ.-யை சர்க்கார் அமைக்கும் முறையையும் பார்க்கும்போது, "உத்தியோகஸ்தர்கள்தான் ஒழுங்கானவர்கள், மற்றவர்கள் ஒழுங்கானவர்கள் இல்லை" என்று அர்த்தமா? கடந்த காலத்தில் எம்.எல்.ஏ.-க்கள் இருந்தபோது ஊழல்கள் ஏற்பட்டன என்பது உண்மை. ஆனால் கலெக்டர்களை மட்டும் கொண்ட ஆர்.டி.ஏ.-யைப் போட்டால் இந்தக் குறையை நீக்க முடியும் என்பதை நான் ஒத்துக்கொள்ளவில்லை. சில ஜில்லாக்களில் மாத்திரம் கலெக்டரை மட்டுமே கொண்ட ஆர்.டி.ஏ.-யை அமைக்க வேண்டி யிருப்பதால், அதற்கு மட்டும் அதிகாரமளிப்பதற்கு விதி விலக்கு வேண்டும் என்றால், அதை நான் ஒத்துக்கொள்கிறேன்; அதற்கு ஆட்சேபிக்க மாட்டேன். நமது சர்க்காரில் மட்டும்தான் இந்த நிலை இருக்கிறது. மற்றெல்லா ராஜ்யங்களிலும் மத்திய சர்க்காரின் தீர்மானத்தை அமல் நடத்தி யிருக்கிறார்கள். ஏற்கெனவே நமது ராஜ்ய சர்க்கார் கலெக்டர்களை ஆர்.டி.ஏ.-யாக வைத்திருந்தார்கள். அதை நியாயப்படுத்துவதற்காக ஒரு அவசரச் சட்டத்தைப் போட்டு அந்த அவசரச் சட்டத்தை ஒழுங்குபடுத்துவதற்காக இந்த மசோதாவைக் கொண்டுவந்திருக்கிறார்கள். இந்தக் கொள்கை—முறை—தவறு. எங்களுடைய ஆட்சேபத்தை சர்க்கார் கேட்க மாட்டார்கள். தங்கள் கட்சியின் மெஜாரிட்டி பலத்தைக் கொண்டு திருத்தத்தை நிறைவேற்றப் போகிறார்கள். நான் கத்துவது பாலைவனத்தில் கத்துவது போல்தான் ஆகிவிடும். ஆனாலும் ஒன்று சொல்கிறேன். கலெக்டரே ஆர்.டி.ஏ.-யாக இருக்க வேண்டும் என்ற கொள்கையை சர்க்கார் உடும்பு பிடியாக, பிடிவாதமாக, பிடித்துக்கொள்ள வேண்டாம். எங்கெல்லாம் அவசியமோ அங்கெல்லாம் கலெக்டரை வைத்துக்கொள்ளட்டும். ஆனால் மத்திய பார்லிமெண்டு சட்டப்படி ஆர்.டி.ஏ.-யை அமைப்பது எங்கெல்லாம் சாத்தியமோ, அங்கெல்லாம் அவ்வாறு அமைக்கட்டும். ஆர்.டி.ஏ.-ல் மேலும்மேலும் உத்தியோகப் பற்றற்றவர்களுக்குப் பங்கு கொடுக்கும் நிலைமையை ஏற்படுத்த வேண்டும். காரணம், ஜுடிஷியல் அனுபவம் உள்ளவர்கள் ஆர்.டி.ஏ.-யில் இருக்க வேண்டும் என்பதை சர்க்காரே ஒத்துக்கொள்கிறார்கள். 'கலெக்டர் ஜுடிஷியல் அதிகாரியாகக் கருதப்படவில்லை, அவர் எக்ஸிக்யூடிவ் அதிகாரி,' என்பது ஜுடிஷியலையும் எக்ஸிக்யூடிவையும் பிரித்திருப்பதிலிருந்தே தெரிகிறது. மேலும், அவ்வாறு பிரித்ததிலிருந்து, ஜுடிஷியல் பொறுப்பும் எக்ஸிக்யூடிவ் பொறுப்பும் ஒரே ஆட்களிடம் இருக்கக்கூடாது என்ற நோக்கமும் தெரிகிறது. அப்படி யிருக்கும்போது, ஆர்.டி.ஏ.-ல் ஜுடிஷியல் அனுபவம் உள்ளவர்களைப் போடாமல் 'எக்ஸ்க்யூடிவ் ஹெட்' ஆன கலெக்டரிடம் அதை





ஒப்படைப்பதானது, சர்க்காரின் கொள்கைக்கே முரண்பட்டதாக இருக்கிறது என்பதை நான் சொல்லாமல் இருக்க முடியாது. ஜனநாயகக் கோட்பாடுகளில் தமக்கு நம்பிக்கை இருப்பதாக கனம் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படியானால், எங்கெல்லாம் சாத்தியமோ அங்கெல்லாம் ஆர்.டி.ஏ.-யைக் கலெக்டரிடம் ஒப்படைக்காமல் மத்திய சர்க்கார் விதிகளின்படி அமைக்க வேண்டும். குறைந்தபட்சம், ஒரே அதிகாரியைக் கொண்ட ஆர்.டி.ஏ.-யை அமைக்க வேண்டும் என்று சொன்னாலும்கூட, வேறு யாரையாவது கொண்ட, நீதிபதியைக் கொண்ட, ஆர்.டி.ஏ.-யை அமைக்க வேண்டும் என்று சொல்லிக்கொண்டு இந்தத் திருத்தத்தை நான் ஆட்சேபிக்கிறேன்.

**SRI K. ANBAZHAGAN:** கனம் அவைத் தலைவர் அவர்களே, சர்க்காரால் கொண்டுவரப்பட்டிருக்கும் மசோதாவிற்கு இப்பக்கத்திலுள்ள சில கனம் நண்பர்கள் சிலர் சில திருத்தங்களைத் தந்திருக்கிறார்கள். அந்தத் திருத்தங்களைக் குறித்துப் பேசும்போது பல கனம் உறுப்பினர்கள் பலர் முக்கியமான சில பிரச்னைகளை எடுத்துக்காட்டியும், அவைகளை ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் உணரவில்லை என்பதை நான் குறிப்பிட விழைகிறேன். ஜனநாயக முறை வேண்டும் என்பது பொதுமக்கள் எல்லோரும் ஒவ்வொரு துறையிலும் தொடர்புடையவர்களாக ஆக்கப்பட வேண்டும் என்ற காரணத்தால் அல்ல; ஆனால் பொதுமக்களின் தொடர்புடைய சில முக்கியமான பிரச்னைகள் இருக்கின்றன; அப்படிப்பட்ட பிரச்னைகள் எழும் நேரத்தில் மக்களுக்குத் திருப்தி யளிக்கும் விதத்தில் அவை தீர்த்து வைக்கப்பட வேண்டும் என்பதால்தான்; சில வட்டாரங்களில் சில தனிப்பட்ட வழிகளில் சிலரிடம் பஸ் போக்குவரத்து உரிமை அளிக்கப்படும் நேரத்தில் அவைகளை அளிப்பதற்கு முன்பு பொதுமக்களின் தலைவர்களுடைய—பொதுமக்களுடைய—ஆலோசனைகளைப் பெறுவதற்கு வழி செய்ய வேண்டும் என்பதை இப்பக்கத்திலுள்ளவர்கள் வலியுறுத்தியிருக்கிறார்கள். உண்மையாகவே, நிர்வாகத் துறையிலுள்ளவர்கள் எவ்வளவுதான் நேர்மையாக நடப்பதற்குரிய நல்ல பண்புள்ளவர்களாக இருந்தாலும், அவர்களுக்கு வேறு பல சிக்கல்கள் ஏற்பட்டுவிடுதால் அவர்கள் சில தனிப்பட்டவர்களுக்குக் கட்டுப்பட்டு விடுகிறார்கள். அப்படிக் கட்டுப்பட்டுப்போனவர்கள் பாரபட்சமாக நடந்து கொண்டுவிட்டால் பொதுமக்கள் உண்மையை அறிந்து கொள்ளமுடியாத நிலைமை ஏற்பட்டு, அவர்கள் செய்ததுதான் முடிவு என்ற தவறான கருத்தும் ஏற்படுகிறது. அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் பொதுமக்கள் பாதிக்கப்படுகிறார்கள். எனக்குத் தெரிந்த வரையில், சில வட்டாரங்களில் பஸ் போக்குவரத்து வழிகள் பலவும் தனிப்பட்ட முதலாளிகளிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கும் சூழ்நிலையில் பொதுமக்களுக்கு பலப்பல இன்னல்கள் ஏற்படுகின்றன. யார் பஸ் போக்குவரத்தை நன்றாக நடத்துகிறார்கள் என்பதைப்பற்றியும் யார் நன்றாக நடத்தவில்லை என்பதை பற்றியும் பொதுமக்களின் பிரதிநிதிகள் ஆலோசனை சொன்னால்தான் இந்தக் குறைகளை நீக்க முடியும். ஆனால் பொதுமக்கள் பிரதிநிதிகளும் நிர்வாக அதிகாரிகளுடன் கலந்து தீர்மானிப்பதில் சண்டையும் மாறுபடும் குழப்பமும் ஏற்படும் நிலைமை இருக்குமானால், அப்போது நல்ல முடிவிற்கு வர முடியாத நிலைமை ஏற்படுமானால், பஸ் போக்குவரத்து வழிகளுக்கு அனுமதி யளிக்கும்போது, பொதுமக்கள் பிரதிநிதிகள் கருத்தைக் கேட்டு, ஒவ்வொரு கருத்தும் ஒவ்வொரு மாதிரியாக இருந்தால், இன்னாருக்குத்தான் அளிக்க வேண்டுமென்ற கருத்தைத் தக்க காரணங்களுடன் விளக்கி, அதற்குப் பிறகு அனுமதியளித்தால் பொதுமக்களுக்குத் திருப்தியாக இருக்கும். மேலும், இன்னாரைத்தான் அட்வைஸராகப் போட வேண்டும் என்பதை நான் ஏற்றுக்கொள்ள முடியாது. அப்படிச் செய்தால், தங்களுக்குப் பிடித்தவர்களைப் போடுவது, அரசாங்க கட்சியைச் சார்ந்தவர்களைப் போடுவது என்ற நிலைமை ஏற்படும். பஞ்சாயத்து யூனியன் தலைவர்களின் யோசனைகளைப் பெற வேண்டும். பஸ் போக்குவரத்து எந்த எந்த வழிகளில் இருக்கிறதோ அந்த வழிகளுடன் சம்பந்தப்பட்ட பஞ்சாயத்து சபைத் தலைவர்கள் எல்லோருக்கும் பிரதிநிதித்துவம் அளித்து அவர்களுடைய யோசனைகளைக் கேட்டு, அதற்குப் பிறகு பஸ் போக்குவரத்து பெர்மிட் கொடுக்கப்படுமானால், ஆளும் கட்சி லாபமடைகிறது என்ற புகாருக்கு

[Sri K. Anbazhagan] [1st November 1957

இடமிருக்காது. சென்ற தேர்தலின்போது ஆளும் கட்சியினர் பஸ் முதலாளிகளின் சலுகைகளைப் பெற்றனர் என்ற புகார் தவறானது என்று மட்டும் சர்க்கார் எடுத்துக்காட்ட விரும்புவார்களானால்—புகார் தவறானது என்று சர்க்கார் எடுத்துக் காட்ட வேண்டும் என்று நான் விரும்பவில்லை—இந்த ஏற்பாட்டைச் செய்யலாம். எந்த எந்த வட்டாரங்களில் பஸ் போக்குவரத்து வழி இருக்கிறதோ அந்த வட்டாரங்களிலுள்ள பஞ்சாயத்து சபைகள் போன்ற பொதுமக்கள் சபைகளின் தலைவர்களுக்கு இந்த அமைப்பில் இடம் தந்து அவர்களுடைய ஆலோசனை கேட்கப்படுவதற்கு வகை செய்ய வேண்டும்.

இன்னொரு யோசனை சொல்ல விரும்புகிறேன். ஒரு பஸ் முதலாளிக்குச் சொந்தமாக உள்ள பஸ்களின் எண்ணிக்கையையும், ஒரு பஸ் முதலாளிக்குக் கொடுக்கப்படும் ' ரூட் பெர்மிட் '-களின் எண்ணிக்கையையும் கட்டுப்படுத்தினால் பல கஷ்டங்கள் நீங்கும். ஒரு பஸ் முதலாளி 15-க்கு மேற்பட்ட பஸ்களுக்கு சொந்தக்காரராக இருக்கக்கூடாது என்று நிர்ணயித்து அந்த அளவிற்கு மேல் வைத்துக்கொண்டிருக்கும் பஸ்களை தேசீய உடைமையாக்கிவிடலாம். இப்போது பலர் 50—60-க்கு மேற்பட்ட பஸ்களுக்குச் சொந்தக்காரர்களாக இருக்கிறார்கள். அதே மாதிரி ஒரு பஸ் முதலாளிக்கு 2—3 பஸ் ரூட்டுகளுக்கு மேல் பெர்மிட் கொடுக்கக்கூடாது என்று நிர்ணயிக்கலாம். அதற்கு மேற்பட்டவைகளை தேசீய உடைமையாக்கலாம். அப்படிச் செய்தால் பஸ் முதலாளிகளின் ஏகாதிபத்தியம் உருவாவதற்கு இடமில்லாமல் இருக்கும். சில பெரிய பஸ் முதலாளிகள் அதிகாரிகளைக் கூடத் தங்கள் வீட்டு வேலைக்காரர்களைப்போல் நடத்தும் முறை இந்த ஏற்பாட்டினால் ஒழியும். அப்படிப்பட்ட அதிகாரிகள், பஸ் முதலாளிகளைக் கண்டால் அமைச்சர்கள் வந்தால் செய்யும் மரியாதையின் அளவிற்கு மரியாதை செய்கிறார்கள். பொதுமக்கள் அலட்சியப்படுத்தப்படுகிறார்கள். பல பஸ் ரூட் பெர்மிட்டுகளை அதே சில நபர்களுக்கே கொடுப்பதால்தான் பஸ் முதலாளித்துவம் ஏகாதிபத்தியமாக ஆகியிருக்கிறது. இத்தகைய பெரிய முதலாளித்துவத்தை நீக்கி, தனிப்பட்டவர் தொழில் துறையில் சிறிய முதலாளித்துவம் வளர்ச்சி யடையச் செய்வதற்காகவும், அப்படிப்பட்ட ஜனநாயக முறையை உண்டாக்குவதற்காகவும், பொதுமக்கள் நலனைக் கருதி பஸ் தொழிலில் நியாயமான போட்டி (பேர் காம்பெடிஷன்) ஏற்படும்படிச் செய்வதற்காகவும், தகுந்த முறையில் ஆலோசனைக் குழுக்களை ஆங்காங்கே ஏற்படுத்துவதற்கு சர்க்கார் முன்வருவார்களானால், ஜனநாயகப் பண்பு வளரும் என்று சொல்லிக்கொண்டு இப்பக்கத்திலிருந்து பிரேரேபிக்கப்பட்ட திருத்தத்தை நான் ஆதரிக்கின்றேன்.

* SRI S. LAZAR : கனம் சபாநாயகர் அவர்களே, ஒரு விளக்கம்.,
12-50 p.m. இதுவரைக்கும் ரீஜனல் ட்ரான்ஸ்போர்ட் அதாரிட்டி, ஸ்டேட் ட்ரான்ஸ்போர்ட் அதாரிட்டி என்று அமைக்கப்பட்டு அவைகள் மும்முரமாக வேலை செய்து வருகிறது. அதற்கு சட்டத்தின் மூலமாக ஒரு எக்சிகூடிவ் ஹெட் இருக்கிறார். அவர்கள் இருக்கக்கூடிய விதிகளின்படி வேலைகளை நடத்திக்கொண்டு வருகிறார்கள். அவர்கள் அப்படி தங்களுடைய வேலைகளை தாங்கி நடத்திக்கொண்டு வரும்போது எனக்கு முன்னால் பேசிய அங்கத்தினர்கள் ஒரு அட்வைசரி கமிட்டி வேண்டுமென்று சொல்லுகிறார்கள். இப்படிப்பட்ட அட்வைசரி கமிட்டி ஏற்கெனவே இருக்கக்கூடிய ரூல்ஸ் அண்டு ரெகுலேஷன்படிக்கு அட்வைஸ் பண்ணவேண்டுமா அல்லது அதற்கு புறம்பாக அவர்கள் அட்வைஸ் பண்ணவேண்டுமா, ஆலோசனைகள் கொடுக்கவேண்டுமா என்பதை விளக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அதை விளக்கினால் நன்றாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

THE HON. SRI V. RAMAIAH : After my assurance that advisory committees will be constituted on a more broad basis and that they will be made to meet more often to know the transport needs, I do not see the need for this amendment. So I do not accept the amendment moved by the hon. Member Sri Sattanatha Karayalar



1st November 1957] [Sri V. Ramaiah]

As regards the amendment moved by Sri V. K. Ramaswamy Mudaliar that the official should be assisted by a Sub-Judge, there again the Advisory Committee will be more effective in making suggestions. Therefore I do not accept that amendment also.

MR. SPEAKER : Are the hon. Members Sri Sattanatha Karayalar and Sri V. K. Ramaswamy Mudaliar withdrawing their amendments?

SRI K. SATTANATHA KARAYALAR : No, Sir.

SRI V. K. RAMASWAMY MUDALIAR : No, Sir.

THE HON. SRI R. VENKATAFRAMAN : Since the hon. Member Sri V. K. Ramaswamy Mudaliar is not withdrawing his amendment, I wish to bring to your notice that the amendment is *ultra vires* of this House. Article 254 of the Constitution provides that to the extent the law made by the Legislature of a State is repugnant to any provision of a law made by Parliament, the law made by the Legislature of the State shall, to the extent of the repugnancy, be void. The Central Motor Vehicles Act does not provide for the appointment of a Sub-Judge, and the amendment is therefore *ultra vires*.

MR. SPEAKER : Will the Hon. Minister tell us how the amendment is repugnant to the Central Act?

THE HON. SRI R. VENKATARAMAN : Act 100 of 1956 provides that the Regional Transport Authority shall have a Chairman who has had judicial experience and such other officials and non-officials as the State Government may think fit to appoint. To say that the Chairman shall be assisted by a Sub-Judge will be repugnant to this provision and therefore *ultra vires*.

MR. SPEAKER : Has not the State Government the right to make its own law under Article 254 (2) of the Constitution?

THE HON. SRI R. VENKATARAMAN : The amendment moved by my Hon. Colleague Sri Ramaiah has been moved with the consent of the Central Government. Therefore it is *intra vires*. Even if the House accepts the amendment of Sri V. K. Ramaswamy Mudaliar, it will be repugnant to the Central Motor Vehicles Act of 1939 as amended by the Act 100 of 1956.

SRI V. K. RAMASWAMY MUDALIAR : Is not the Sub-Judge an official?

THE HON. SRI R. VENKATARAMAN : The words used are ' The Chairman who has had judicial experience . . .' The clause can be amended only by the amendment moved by my Hon. Colleague with the consent of the Central Government. Any other amendment moved without the consent of the Central Government will be void.

MR. SPEAKER: While I agree to a certain extent with the Hon. Minister, I am not convinced how the appointment of a Sub-Judge will be repugnant to section 44 of the Central Act. That section says that the Chairman shall be one with judicial experience. Does not a Sub-Judge come within the category of one with judicial experience?

THE HON. SRI R. VENKATARAMAN: The first point is that the amendment of Mr. Ramaswamy Mudaliar restricts the right of the Government. Power is given to appoint any official. To the extent to which that right is restricted, the amendment is repugnant.

MR. SPEAKER: The amendment of Mr. Ramaswamy Mudaliar only says that the Chairman shall be assisted by a Sub-Judge. There is nothing in the Central Act which says that he should not be assisted. I therefore rule the objection raised by the Hon. Minister Sri R. Venkataraman out of order.

The question is *delete* the word 'only' at the end of the second proviso and *add* the following:—

"who is to be advised by an advisory committee consisting of bus operators, representatives of workers engaged in the transport service and Members of the Legislative Assembly and Members of Parliament."

The amendment was put and lost.

MR. SPEAKER: The question is—

*Delete* the word 'only' at the end of the second proviso and *add* the following:—

"who should be assisted by a Sub-Judge."

The amendment was put and lost.

Clause 2 was put and carried.

Clauses 3 and 4 were put and carried.

Clause 1 and the preamble were put and carried.

THE HON. SRI V. RAMAIAH: Sir, I move that the Bill be passed.

MR. SPEAKER: The question is—

"That the Motor Vehicles (Madras Amendment) Bill, 1957 (L.C. Bill No. 3 of 1957) as passed by the Legislative Council be passed."

The motion was put and carried and the Bill was passed.



## VII.—GOVERNMENT MOTION:

### MOTION UNDER RULE 21 (3) OF THE ASSEMBLY RULES *re* CHANGE IN THE ORDER OF BUSINESS.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Sir, I move—

"That item 5, the Madras Village Panchayats (Amendment) Bill, 1957, be taken up before item 3, the Madras Registration of Veterinary Practitioners Bill, 1957."

MR. SPEAKER: The question is—

"That item 5, the Madras Village Panchayats (Amendment) Bill, 1957, be taken up before item 3, the Madras Registration of Veterinary Practitioners Bill, 1957."

The motion was put and carried.

## VI—GOVERNMENT BILLS—*cont.*

### * (3) THE MADRAS VILLAGE PANCHAYATS (AMENDMENT) BILL, 1957.

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON: Mr. Speaker, Sir, I beg leave to introduce the Madras Village Panchayats (Amendment) Bill, 1957, and move—

"That the Bill be taken into consideration at once."

The question of Reform and Development of Panchayat Organization has been engaging the attention of this Government for some time past and proposals in that regard have been included in the White Paper on the Reform of Local Administration in Madras State including the Madras City Corporation, which is already before the House. This Bill deals with five specific matters about which Government find it necessary to make statutory changes in advance of the general reform of Panchayat Administration.

The first of these five matters relates to the delimitation of areas for which Panchayats are to be constituted. Prior to the passing of the Madras Village Panchayats Act, 1950, which came into force on 1st April 1951, Panchayats could be constituted for any local area—whether it is a revenue village or part of a revenue village or more than one revenue village. In 1950, an element of rigidity was introduced into this provision. Section 3 read with section 2 (22) of the 1950 Act makes it obligatory to constitute a Panchayat for every revenue village or a hamlet thereof, which was in existence on 1st April 1951 and which is declared by the Inspector of Municipal Councils and Local Boards as a revenue village. As a result, it is obligatory to constitute a Panchayat for a small revenue village with population just exceeding 500, even though it may be administratively convenient and free from local objection to group together two such villages to form a Panchayat village with a population exceeding one thousand. Another difficulty has also been experienced. The law permits the constitution of a panchayat for a hamlet; but there is no express sanction for the separation of a hamlet of a revenue village for

* Published in the *Fort St. George Gazette* Extraordinary, dated 22nd October 1957.

[Srimathi Lourdhammal Simon] [1st November 1957

which a Panchayat has already been constituted with a view to constitute a Panchayat for that hamlet or to group it, with another revenue village for purposes of forming a Panchayat. It is necessary that this element of rigidity first introduced in 1950 should be removed and a flexible provision made as in the present Bill.

The 1950 Act provides for the constitution of Panchayats for every village in the State within a reasonable time. Cases have occasionally arisen (as for instance certain industrial or labour colonies or places of health resort like Courtallam) where the ordinary pattern of Panchayat organization is found to be unsuitable. At the same time, some arrangements have to be made for the civic administration of such areas so as to be adapted to the special conditions and needs of such areas. It is, therefore, proposed to take power for the exclusion of industrial, labour or institutional colonies or health resorts declared as such by the Government from the jurisdiction of Panchayats and for the constitution of Village Committees for such areas on the lines of township committees of Courtallam, Mettur and Bhavanisagar. The provisions made in the Bill will obviate the need for undertaking special legislation every time it is proposed to constitute village committees of a pattern different from the ordinary pattern of Panchayat organizations. In order, however, to ensure that the Legislature retains an opportunity of satisfying itself about the suitability of the special arrangements for civic administration of such areas it is provided in this Bill that a notification constituting a Village Committee in such cases should be authorized by a Resolution of the Legislative Assembly.

The most important of the changes for which provision is made in this Bill relates to the election of Presidents of Village Panchayats. The normal system in all other local authorities is for the members of the governing body to elect the Chairman, or the President, as the case may be. This is so in the case of the Municipalities in the districts, the District Boards, and the Madras City Corporation. This was the case in respect of panchayats also for several decades before 1950. In 1950, it was for the first time provided that the President of a village panchayat should be directly elected by the entire electorate of the village. He became an ex-officio member of the panchayat automatically. Other members of the panchayat elected by different wards of the village were rendered ineligible to become President. Even at that time when this was debated in the Legislature, there was sharp difference of opinion about the wisdom of the proposed change. Experience, during the last six years, has, in the opinion of Government, shown that this was an undesirable change. It is true that numerous instances can be pointed out of directly elected presidents of village panchayats, who have worked the system successfully. This is not because of, but rather, in spite of the system. In such cases, the presidents were usually able and good men, whose leadership was undisputed in the village. Such men would have found place even under the old system. The problem arises only for those villages where there are no leaders at all, or, where there are too many leaders, or, where the leaders cannot be described as able and good men. In such cases, the direct election of the President involving, as it does, the entire adult population, brings about a sharp cleavage within the village. It creates faction where none existed before; or aggravates the pre-existing faction. The village being a small area, where every voter knows everybody else, the ill-feelings thus generated last longer than any larger constituencies. The work of the panchayat suffers in consequence; and, frequently, the members cease to take interest in the affairs of the panchayat.



1st November 1957] [Srimathi Lourdhammal Simon]

While it must be agreed that no system can be perfect, Government take the view that the old system is distinctly preferable to the innovation recently made. That is why they propose to revert to the normal system.

It is this change which Government consider most important and one which must be carried out in advance of the general reform of Panchayat organization and the constitution of Panchayat Unions. This is necessary because there are over 6,000 panchayats whose terms already extended by two years, will be expiring in the next few months. Panchayat elections have to be held in all districts in order to reconstitute them. Government are anxious that they should be reconstituted under the normal system and not under the system which they consider to be defective.

The Bill also seeks to raise the term of office of members and Presidents of Panchayats from three years to five years. One reason is that a five-year term will enable the members to chalk out necessary programmes for the all-round development of the village and see to the fulfilment of the programmes before laying down their office. An even more important reason is the need to avoid the holding of too many elections in quick succession.

Finally, the Bill makes provision also for a routine amendment to section 112 (2) of the Act. A rule-making power provided in the 1950 Act is proposed to be deleted because it is found to be superfluous.

The Government propose to accept the amendment for referring this Bill to a select committee. The names of the members of the select committee will be submitted in the course of the debate.

I, therefore, move that the Madras Village Panchayats (Amendment) Bill, 1957, be taken into consideration at once.

DEPUTY SPEAKER : Motion moved—

"That the Madras Village Panchayats (Amendment) Bill, 1957, be taken into consideration at once."

I think there are some amendments. Is hon. Member Sri Palanisami moving his amendment?

SRI N. K. PALANISAMI : Yes, Sir. I move—

"That the Madras Village Panchayats (Amendment) Bill, 1957, be circulated for eliciting public opinion."

Sri M. KALYANASUNDARAM : I second the amendment, Sir.

I am not moving any amendment. Although I had given notice of an amendment, I do not propose to move it since the Hon. Minister herself propose to refer the Bill to a select committee.

Sri K. SATTANATHA KARAYALAR : Sir, I am not moving my amendment since the Hon. Minister has agreed to refer the Bill to a select committee.

DEPUTY SPEAKER : Motion moved—

"That the Madras Village Panchayats (Amendment) Bill, 1957, be circulated for eliciting public opinion."

Sri M. KALYANASUNDARAM : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்தத் திருத்த மசோதாவை இவ்வளவு அவசரமாகக் கொண்டுவரவேண்டிய அவசியமென்ன என்று என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. இன்னும் சில தினங்களில் ஸ்தல ஸ்தாபன அமைப்பு பூராவையுமே பரிசீலிக்கக்கூடிய முறையில் நாம் ஒரு வெள்ளை அறிக்கையை விவாதிப்பதற்கு இருக்கிறோம். அந்த விவாதம் முடிந்த பிறகு சர்க்காருக்கு சில தெளிவுகள் ஏற்படலாம். அதற்குப் பிறகு இந்த திருத்த மசோதா கொண்டுவரப்பட்டிருந்தால் நலனாக இருக்கும். வரக்கூடிய தேர்தலுக்கு என்ன செய்வது என்று சொல்லலாம். எந்தச் சட்டமும் இல்லையென்பது தற்போதைய நிலைமை இல்லை. நாம் ஒரு 'வாகூமில்' இல்லை. ஏற்கெனவே இருக்கக்கூடிய சட்டத்தின் அடிப்படையிலே தேர்தல் நடத்தினால் எந்தவிதமான ஆபத்தும் ஏற்பட்டுவிடாது. தேர்தல் முடிந்த பிறகு நாம் இந்த திருத்த மசோதாவில் ஏதாவது மாறுதல்கள் செய்யவேண்டுமென்றால் செய்துகொள்ளலாம். இது சாதாரண திருத்த மசோதா அல்ல. தேர்தலை நடத்தவேண்டாம், வேண்டுமென்றால், பதவி காலத்தை நீடிப்பதற்கு ஒரு மசோதாவை கொண்டு வந்திருக்கலாம். ஆனால், இந்த மசோதாவின் மூலம் அடிப்படை மாறுதல்களைச் செய்ய சர்க்கார் முயற்சிக்கிறார்கள். பஞ்சாயத்து சட்டத்தில் உயிர் நாடியாக இருக்கக்கூடிய அம்சத்தையே எடுக்க முயற்சிக்கிறார்கள். 1950-வது வருஷத்திய பஞ்சாயத்து சட்டத்தில் முக்கியமான அம்சம் பஞ்சாயத்து தலைவரை தேர்ந்தெடுக்கும் அதிகாரத்தை அந்தப் பிரதேசத்தில் இருக்கக்கூடிய மக்கள் அனைவருக்கும் கொடுத்திருந்தார்கள். மக்கள் கையில் அதிகாரத்தைக் கொடுத்தால் இரண்டு கட்சிகள் ஏற்படும் என்று மந்திரிகள் பயப்படுகிறார்கள் என்பதுதான் இந்த நான்கு நாள் விவாதத்தில் புலனாயிற்று. ஏன் சட்டசபை அங்கதினர்கள் தேர்தலும் மக்கள் கையில் இருப்பதால் 4, 5 கட்சிகள் வந்துவிடுகின்றன. அதற்காக சட்டசபை அங்கத்தினர் தேர்தல் அதிகாரத்தையே மக்களிடமிருந்து எடுத்துவிடுவதா ? இந்த வாதத்தை ஒத்துக்கொள்ள முடியாது. மந்திரி அவர்களின் நீண்ட பிரசங்கத்தில் இதற்கு எந்த விதமான திருப்தி அளிக்கக்கூடிய சமாதானமும் கொடுக்கவில்லை. தலைவர் தேர்தலின் அதிகாரத்தை ஜனங்களிடமிருந்து எடுத்து ஏன் மக்களால் தேர்ந்தெடுத்த பிரதிநிதிகளிடம் கொடுக்கவேண்டும் என்பதற்கு தகுந்த காரணம் கொடுக்கப்படவில்லை. இந்த நிலைமையில் இந்த மசோதாவை அவசரப்பட்டு கொண்டுவருவதன் காரணம் என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. நல்ல வேளையாக மந்திரி அவர்கள் இந்த மசோதாவை பொறுக்குக் கமிட்டியின் பரிசீலனைக்கு விடுவதற்கு ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். பொறுக்குக் கமிட்டியில் நாங்கள் சொல்லுகிற திருத்தங்களை ஏற்றுக்கொண்டு எல்லோரும் ஒத்துக்கொள்ளக்கூடிய ஒரு மசோதாவை திரும்பி இந்த சபையில் கொண்டு வருவார்கள் என்று நம்புகிறேன். அதற்கு சர்க்கார் கட்சி அங்கத்தினர்களும் கனம் மந்திரி அவர்களும் உதவி செய்யவேண்டுமென்று கேட்டுக்



கொள்ளுகிறேன். என்னுடைய கருத்துக்களை பொறுக்குக் கமிட்டிக்கு முன்னால் வைக்கலாம் என்று அபிப்பிராயப்பட்டு இப்பொழுது அதிகமாக பேசவேண்டாம் என்று நினைத்து என்னுடைய பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்.

* Sri D. S. ADIMOOLAM : டெப்யூடி ஸ்பீக்கர் ஸார், இந்த மசோதாவை பொறுக்குக் கமிட்டிக்கு விடவேண்டுமென்ற திருத்தத்தை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். எனக்கு முன் பேசிய கனம் கல்யாணசுந்தரம் அவர்கள் பஞ்சாயத்து போர்டு பதவி காலத்தை ஐந்து வருஷமாக நீடிப்பதில்கூட ஆட்சேபணையில்லை, பொது ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்படவேண்டிய தலைவரை பழைய படிக்கு பஞ்சாயத்து போர்டு மெம்பர்கள் சேர்ந்து தேர்ந்தெடுக்கவேண்டும், 'டைரக்ட்' எலக்ஷனுக்குப் பதிலாக ஏன் 'இன்டைரக்ட் எலக்ஷன்' மூலம் தலைவரை தேர்ந்தெடுக்கவேண்டுமென்று இப்பொழுது இந்த மசோதாவைக் கொண்டுவந்திருக்கிறார்கள் என்று கேட்டார். அதைத் தான் நானும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். பொதுவாக கிராம ஜனங்களுக்கு ஒவ்வொரு வகையிலும் வோட்டு அளிப்பதற்கு அதிகாரம் கொடுக்கவேண்டுமென்று காங்கிரஸ் சர்க்கார் சொல்லுகிறார்கள். அப்படியிருக்கும்பொழுது இப்பொழுது இருக்கும் ஒரு நல்ல ஏற்பாட்டை அதைவிட நல்லவிதமான முற்போக்குடைய நோக்கத்தோடு மாற்றவேண்டுமே ஒழிய, பிற்போக்கான நோக்கத்தோடு இன்டைரக்ட் எலெக்ஷன் மூலம் தலைவர் தேர்ந்தெடுக்கப்படவேண்டும் என்று மாற்றுவது சரியல்ல. ஒரு உயர்ந்த நோக்கத்தோடு ஒரு புதிய மாறுதலைச் செய்யவேண்டுமென்று இந்த சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்ள பிரியப்படுகிறேன். சாதாரணமாக அந்தக் காலங்களில் ஒரு பஞ்சாயத்து போர்டு தலைவர் எலெக்ஷனுக்கு ஒரு வோட்டுக்கு ரூ. 10 கொடுக்கவேண்டும். கடுமையாகப் போனால் ஒரு வோட்டுக்கு ரூ. 30 கூட கொடுப்பார்கள். ஒரு கிராமத்தில் பஞ்சாயத்து போர்டு தலைவராக வருவதற்கு ரூ. 500 ரொக்க வசதி இருந்தால் போதும். ஜனங்களிடம் நல்ல செல்வாக்கு தேவையில்லை, அந்தக் காலத்தில் பஞ்சாயத்து போர்டு தலைவராக வருவதற்கு. ரொக்கம் தான் தேவை. ஜனநாயகத்தின் பெயரால் இந்த தேசத்தில் உள்ள வயது வந்தவர்களுக்கு வாக்குரிமை கொடுத்து அரசியல் நடத்தும் இந்த யுகத்தில், ஒவ்வொரு கிராமத்திலும் நமது நாடு, நமது உரிமை என்றெல்லாம் ஆக்க உணர்ச்சியை ஊட்ட முன்வந்துள்ள காங்கிரஸ் சர்க்கார், அம்மாதிரி உயர்ந்த லட்சியத்தைக்கொண்ட காங்கிரஸ் சர்க்கார் இம்மாதிரி தவறான முறையில் ஒரு திருத்த மசோதாவைக் கொண்டுவருவது வருந்தத்தக்கது. ஐந்து வருஷம் என்பது போன்ற ஷரத்துகள் பொருத்தமாக இருக்கிறது. "ஆப்ஜெக்ட்ஸ் அண்டு ரீஸன்ஸ்" மற்ற விஷயங்களும் சரியாகத்தான் இருக்கின்றன. ஆனால் பொறுக்குக் கமிட்டியில் இவைகளை இன்னும் தீவிரமாக பரிசீலனை செய்யவேண்டும். இப்பொழுது ஆளும் கட்சியினர் கிராமப் பஞ்சாயத்திலிருந்து பெரிய இந்திய சர்க்கார் வரையிலும் ஒவ்வொரு விஷயத்திலும் கட்சி என்ற முறையிலே சில சலுகைகள் எலெக்ஷன்களிலும் மற்ற வகைகளிலும் தரப்படுவதற்கு சந்தர்ப்பங்கள் ஏற்படுகிறது. எந்த நாட்டிலும் இந்த ஊழல்கள் இருக்கத்தான் செய்கின்றன. அம்மாதிரி நம் நாட்டிலும் துரதிர்ஷ்டவசமாக இந்த நிலைமை இருந்து கொண்டு வருகிறது. அதற்கு ஒரு உதாரணம் கூறுகிறேன். கிராமப் பஞ்சாயத்து ஆக்டின் தொடர்போடு கூடிய ஒரு சமாசாரம்பற்றி நேற்று காலையில் எனக்கு ஒரு தகவல் வந்தது. இப்போது நான்கு நாட்களாக நல்ல மழை பெய்து ஓய்ந்திருக்கிறது. அந்த அடைமழை விடாமல் அடித்ததனால் இப்போது நாம் எல்லாருமே டல் அடித்து உட்கார்ந்து இருக்கிறோம். அந்த சென்ஷார் மோஷன் வந்தது நம் மாகாணத்தில் ஒரு பெரிய விஷயம். நாட்டுக்கே பெரிய விஷயம். அதை விவாதித்து 205 பேர்களும் இப்போது சோர்ந்துபோய் இருக்கிறோம். எங்களுக்கே இப்படி இருக்கிறதென்று சொன்னால் அதில் நேரே சம்பந்தப்பட்ட கனம் கல்யாணசுந்தரம் அவர்களுக்கும், சரிவர்ண தேவர் அவர்களுக்கும், மந்திரிகளுக்கும் எப்படி இருக்குமோ ? இந்த நிலைமையில் நான் எதைப்பற்றியும் பேசவேண்டாம் என்றுதான் இருந்தேன். கடையம் தொகுதியில்

[Sri D. S. Adimoolam] [1st November 1957

கீழாம்பூர் பஞ்சாயத்து தேர்தலை ஒட்டிய செய்தி எனக்கு இன்று வந்ததால் அதை முன்னிட்டு இதில் பேசவேண்டிய நிர்ப்பந்தம் எனக்கு வந்தது.

கீழாம்பூர் கிராமத்தில் பஞ்சாயத்து புதிதாக ஏற்படுத்துவதற்காக எல்லா ஏற்பாடும் செய்யப்பட்டு 1957-ம் வருஷம் அக்டோபர் மீ 19-உயில் தேர்தலை நடத்தவும் நோட்டீஸ் போட்டாகிவிட்டது. கிராமத்து ஜனங்கள் எல்லாம், தொழிலாளர்கள், விவசாயிகள் எல்லாரும் ஒரு நாள் சம்பளம் போனாலும் போகிறது என்று அன்றைக்கு வேலையையும் விட்டு தேர்தலுக்காக பஞ்சாயத்து போர்டு ஆபீசில் வாசலில் வந்து கூடிவிட்டார்கள். நூற்றுக்கணக்கானவர்கள் வந்து அப்படிக் காத்திருந்தார்கள். தேர்தல் நடைபெறவில்லை. என்ன காரணம் என்று கேட்டால் இரண்டு காங்கிரஸ் மெம்பர்கள் சொந்த காரணத்திற்காக ஸ்தல ஸ்தாபன மந்திரியை அணுகி தேர்தலை நடத்த அனுமதிக்கக்கூடாது என்று சொல்ல ஸ்தல ஸ்தாபன மந்திரி அவர்களும் இங்கிருந்தே தேர்தலை நடத்தவேண்டாம் என்று தந்தி கொடுத்துவிட்டார்கள். இது லோகல் போர்டு இன்ஸ்பெக்டர் முதலியவர்களுக்கே தெரியாதாம். இங்கிருந்து தந்தி பறந்திருக்கிறது. அங்கே தேர்தல் நடக்கவில்லை. ஆடு மாடுகளைப்போல, ஜனங்கள் தங்கள் வேலைகளை எல்லாம் விட்டுவிட்டு தேர்தலுக்காக அங்கே வந்து கூடி பின்னர் கலைந்திருக்கிறார்கள். காந்தி கண்ட சுதந்திரம் இது தானா? இது தானா ஜனநாயகம்? ஒவ்வொரு சின்ன சின்ன விஷயங்களிலும், தன் கட்சி, பிரத்தியார் கட்சி என் கிராமம், இன்னொருவன் கிராமம் என இப்படி காங்கிரஸ் ஆட்சியிலே போய்க்கொண்டிருக்கிறது கேவலமாக. இது எல்லாம் ஜஸ்டிஸ் கட்சி காலத்தில் சர்வசாதாரணம். ஜில்லா போர்டையே அவர்கள் கலைத்துவிடுவார்கள். அது மாதிரி அந்தக் காலம் தான் இது என்று இவர்கள் நினைத்துக்கொண்டு இப்போது செய்துவருகிறார்கள் எனத் தோன்றுகிறது. ஆனால் இப்போது சர்க்கார் எது செய்தாலும் அது நியாயமா, சரியா என்று பரிசீலித்துப் பார்க்கக்கூடிய அறிவு கிராமங்களில் அநேகமாகப் பரவிவிட்டது. ஆகவே கட்சிக் கண்ணோட்டத்தோடு எதையும் பார்க்கக்கூடாது. நியாயத்தின் அடிப்படையில் எல்லாக் காரியங்களையும் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அம்பாசமுத்திரம் கீழாம்பூர் பஞ்சாயத்துத் தேர்தலை எந்தக் காரணத்திற்காக் நடத்தவேண்டாமென்று ஸ்தல ஸ்தாபன மந்திரி அவர்கள் தந்தி கொடுத்தார்கள் என்பதையும் இந்தச் சந்தர்ப்பத்தில் விளக்கவேண்டுமென்பதாகக் கேட்டுக்கொள்கிறேன். இந்த மாதிரியாக அவர்கள் செய்வது என்று ஆரம்பித்துவிட்டால் ஜனநாயகம் வளர்வதற்குப் பதிலாக சீரழிவை நோக்கிப் போய்க்கொண்டிருக்கிறது என்று சொல்வேன். இவற்றையெல்லாம் இந்த மசோதாவைப் பொறுக்குக் கமிட்டிக்கு அனுப்ப சர்க்கார் ஒத்துக்கொண்டிருப்பதால், பொறுக்குக் கமிட்டியில் இதை நன்றாகப் பரிசீலனை செய்வார்கள் என்ற நம்பிக்கையுடன் என் பிரசங்கத்தை முடித்துக்கொள்கிறேன்.

SRI T. SAMPATH: Mr. Deputy Speaker, I welcome the amendment proposed to the Madras Village Panchayats Act, 1950. While doing so, I desire to make certain suggestions in view of the fact that the Hon. Minister has agreed to refer the Bill to a select committee.

The object of the Government is to form a larger number of panchayats. Under the existing provisions, there are difficulties in the formation of such panchayats. I am glad that section 3 of the Act has been made more flexible now in order to enable the formation of panchayats in portions of a revenue village also. Moreover, it also enables the formation of village committees which are excluded from the panchayat area. The main provision is that which seeks to amend the section relating to tenure of office. Under the existing provisions, the tenure of office is three



1st November 1957] [Sri T. Sampath]

years. By the proposed amendment, this is sought to be extended to five years. Personally, I feel that it is unnecessary. The Hon. Minister stated that in order to chalk out their various programmes and policies, it is better that the term of office is extended to five years. The panchayat problems do not call for a five-year policy and programme. Because, they are simple in character and a three-year period, I feel, is quite sufficient and reasonable. I would like to advance one more reason. If the term is extended to five years, it will lessen the responsibilities of the members. I also feel that in the case of self-governing institutions of this type, more opportunities must be given to all so that they may get their chances in quick rotation. So, I think five-year period will be too long.

As regards the indirect election of the President, I welcome it, because it is in consonance with the election of Chairmen of the municipalities. I welcome it because the present system has got inherent trouble. As pointed out by the Hon. Minister, if there was direct election, it would lead to cleavage and party factions. So, instead of direct election, it may be indirect election. While making this suggestion, I feel that there should also be provision in the Act for the expression of lack of confidence in the President. I think there is provision to express 'no confidence' in the President in the case of other local bodies, and municipalities. There must be a similar provision in the case of panchayats. With these few words, I support the Bill.

DEPUTY SPEAKER: The Hon. Minister may reply.

(Sri A. Govindasamy and Sri M. Kalyanasundaram rose.)

DEPUTY SPEAKER: I thought that, in view of the fact the Hon. Minister has agreed to refer the Bill to a select committee, hon. Members may not wish to speak now. If, however, they want to speak, I have no objection. Hon. Member Sri Govindaswamy may now speak. If he could not finish his speech by 1-30, he may continue his speech to-morrow.

* SRI A. GOVINDASAMY: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, பஞ்சாயத்துத் தேர்தல் முறையில் கை தூக்கும் முறையை நீக்கி ரகசிய வோட்டு அளிக்கும் முறையைக் கொண்டுவர வேண்டுமென்று கடந்த சில வருஷங்களாக வற்புறுத்தப்பட்டும் இந்தத் திருத்தம் வருகிற நேரத்தில் அதைப்பற்றி ஒரு வார்த்தைகூட இல்லாதது வருத்தத்தை அளிக்கிறது. ரகசிய வோட்டுரிமை வந்தால்தான் ஜனநாயக ரீதியில் சுதந்திரமாக ஒருவரை பயமின்றி தேர்ந்தெடுக்க பிறரால் முடியும். இது இல்லாத காரணமாக என்ன என்ன ஊழல்கள் நடந்துகொண்டிருக்கின்றன என்பதை எனக்கு முன் பேசிய ஸ்ரீ ஆதிமூலம் அவர்கள் சொன்னார்கள். உண்மையான தலைவரைத் தேர்ந்தெடுக்க ரகசிய வோட்டுரிமையைக் கொண்டு வராததனால் இதை நாங்கள் எதிர்க்க வேண்டியிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இப்போது இருக்கிற நிலைமையில் பிரசிடெண்டு தவறு செய்தால் அவரைப் பதவியில் இருந்து நீக்குவதற்குப் போதுமான அதிகாரம் இல்லாமல் இருக்கிறது. அவரை நீக்குவதற்கு நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை கொண்டுவருவதற்கு இந்தத் திருத்தத்தில் வகை இருக்கவேண்டும்.

[Sri A. Govindasamy] [1st November 1957

விக்ரவாண்டியை அடுத்த ஆசூர் கிராம பஞ்சாயத்து தலைவர் 8,000 ரூபாய் கையாண்டு விட்டார்கள். அங்கிருந்த உதவி பஞ்சாயத்து ஆபீசர் இன்ஸ்பெக்டர் ஆப் லோகல் போர்ட்டுக்கு தெரிவித்தார். அதன் பிறகு அந்தத் தலைவர் பதவியிலிருந்து நீக்கப்பட்டுவிட்டார். தன்னை தலைமை பதவியில் இருந்து நீக்கப்பட்டதைக் குறித்து அவர் ஹைகோர்ட்டில் அப்பீல் செய்திருக்கிறார்........

DEPUTY SPEAKER: The hon. Member may continue his speech tomorrow. The House will now adjourn and meet again tomorrow at 9-0 a.m.

The House then adjourned.

## VIII.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

58. *Notification issued with G.O. No. 3574, Revenue, dated 10th September 1957, constituting the Registrar, Court of Small Causes, Madras, as the Rent Tribunal for the Madras District. [Laid on the Table of the House under section* 17 (3) *of the Madras Cultivating Tenants (Payment of Fair Rent) Act,* 1956.]

59. *Notification issued with G.O. Ms. No. 284, Law, dated 30th August 1957, prescribing new forms under rule* 82 *of the Civil Rules of Practice and Circular Orders in Appendix III-B. [Laid on the Table of the House under section* 82 (2) *of the Madras Court Fees and Suits Valuation Act,* 1955.]

60. *The Madras Registration of Veterinary Practitioners Bill* 1957 *(as passed by the Legislative Council (L.C. Bill No.* 2 *of* 1957).



1st November 1957]

## APPENDIX.

[Vide item VI (2) on page 27 supra.]

## L.C. BILL No. 3 OF 1957.

(As passed by the Council.)

*A Bill further to amend the Motor Vehicles Act,* 1939, *in its application to the State of Madras.*

WHEREAS it is expedient further to amend the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939), in its application to the State of Madras, for the purposes hereinafter appearing;

BE it enacted in the Eighth Year of the Republic of India as follows:—

1. *Short title and extent.*—(1) This Act may be called the Motor Vehicles (Madras Amendment) Act, 1957.

(2) It extends to the whole of the State of Madras.

2. *Amendment of section 44, Central Act IV of* 1939.—For the provisos to sub-section (2) of section 44 of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939), the following provisos shall be subsituted, namely:—

"Provided that nothing in this sub-section shall be construed as debarring an official (other than an official connected directly with the management or operation of a transport undertaking) from being appointed as or continuing as a member of any such Authority merely by reason of the fact that the Government employing the official has, or acquires, any financial interest in a transport undertaking:

Provided further that if the State Government thinks fit, the State Transport Authority or a Regional Transport Authority may consist of a single official only."

3. *Repeal of Madras Ordinance II of* 1957.—(1) The Motor Vehicles (Madras Amendment) Ordinance, 1957 (Madras Ordinance II of 1957), is hereby repealed.

(2) Notwithstanding such repeal, anything done or any action taken in the exercise of any power conferred by or under the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939), as amended by the said Ordinance, shall be deemed to have been done or taken in the exercise of the powers conferred by or under the said Act, as if this Act were in force on the day on which such thing was done or action was taken.

4. *Certain things done or orders passed not to be deemed invalid.*—Anything done, or any action taken or any order passed on or after the 1st day of August 1957 and before the 17th day of September 1957 by the State Transport Authority or by a Regional Transport Authority or by an authority or person to whom the powers and functions of the State Transport Authority

or a Regional Transport Authority have been delegated, shall not be deemed to be invalid merely by reason of the fact that the State Transport Authority or the Regional Transport Authority, as the case may be, had not been constituted or had not been validly constituted.

---

## STATEMENT OF OBJECTS AND REASONS.

It has been found in actual experience that the constitution of Transport Authorities with a single official has been working satisfactorily. The Government have therefore decided to take powers to continue this system by amending suitably the provisions of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939), as amended by the Motor Vehicles (Amendment) Act, 1956 (Central Act 100 of 1956). This decision has been given effect to by the promulgation of the Motor Vehicles (Madras Amendment) Ordinance, 1957 (Madras Ordinance II of 1957). The present Bill seeks to replace that Ordinance with necessary validating provisions.

V. RAMAIAH,
*Minister-in-charge of Electricity.*



## ANNEXURE TO THE MOTOR VEHICLES (MADRAS AMENDMENT) BILL, 1957.

| *Existing section.* | *Section embodying amendment.* |
|---|---|
| 44. *Transport Authorities*— | |
| (1) | No change. |
| (2) A State Transport Authority or a Regional Transport Authority shall consist of a Chairman who has had judicial experience and such other officials and non-officials, not being less than two, as the State Government may think fit to appoint; but no person who has any financial interest whether as proprietor, employee or otherwise in any transport undertaking shall be appointed as or continue as a member of a State or Regional Transport Authority, and, if any person being a member of any such authority acquires a financial interest in any transport undertaking, he shall, within four weeks of so doing, give notice in writing to the State Government of the acquisition of such interest and shall vacate office : | No change. |
| * [Provided that if the State Government thinks fit, the State Transport Authority or a Regional Transport Authority may consist of single offical : Provided further that an official shall not be deemed to have a financial interest as aforesaid merely by reason of the fact that the State Government employing him has such an interest.] | *Provided that nothing in this sub-section shall be construed as debarring an official (other than an official connected directly with the management or operation of a transport undertaking) from being appointed as or continuing as a member of any such Authority merely by reason of the fact that the Government employing the official has, or acquires, any financial interest in a transport undertaking :* |

*Existing section.*

† [Provided that nothing in this sub-section shall be construed as debarring an official (other than an official connected directly with the management or operation of a transport undertaking) from being appointed as or continuing as a member of any such Authority merely by reason of the fact that the Government employing the official has, or acquires, any financial interest in a transport undertaking.]

*Section embodying amendment.*

*Provided further that if the State Government thinks fit, the State Transport Authority or a Regional Transport Authority may consist of a single official only.*

* Added by the Motor Vehicles (Madras Amendment) Act, 1948 (Madras Act XX of 1948).

† Added by the Motor Vehicles (Amendment) Act, 1956 (Central Act 100 of 1956).

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY.

**Saturday, 2nd November 1957.**

The House met in the Assembly Chamber, Fort St. George, at nine of the clock, Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

## I.—QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS.

*Ex-Travancore-Cochin State employees and Malayalees in Service in this State*

*61 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR: Will the Hon. the Chief Minister be pleased to state the number of ex-Travancore-Cochin State employees and the number of Malayalees now in the Madras State Service who desire to go back to the Kerala State?

THE HON. SRI C. SUBRAMANIAM: The Government consider that the collection of the particulars required by the Hon. Member will involve a good deal of time and labour which will not be commensurate with the purpose served.

SRI K. SATTANATHA KARAYALAR: *யாராவது குறிப்பிட்ட உத்தியோகஸ்தர்கள் கேரள சர்க்காருக்குப் போகவேண்டுமென்று மனுச் செய்து கொண்டிருக்கிறார்களா ?*

THE HON. SRI C. SUBRAMANIAM: *சிலர் மனுச் செய்து கொண்டிருக்கிறார்கள்.*

SRI K. SATTANATHA KARAYALAR: *என்ன காரணங்களுக்காக அவர்கள் இங்கிருந்து போகவேண்டுமென்று கேட்கிறார்கள் ?*

THE HON. SRI C. SUBRAMANIAM: *தங்கள் குடும்பத்தில் சில அசௌகரியங்கள் இருப்பதற்காக போகவேண்டுமென்று சிலர் கேட்டார்கள். சிலருடைய மனைவிமார்கள் அங்கு இருந்து இங்கு கணவன்மார்கள் தனிப்பட்டு இருப்பதில் கஷ்டமாக இருக்கிறது என்ற அடிப்படையிலும், வேறு சில காரணங்களுக்காகவும் கேரளாவுக்கு போகவேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள்.*

SRI T. T. DANIEL: May I know whether it is a fact that the Kerala Government are prepared to take back these officers and our Government are rather reluctant to send them back? May I also know whether it is the policy of this Government to give permission to these officers to go back to the Kerala State?

THE HON. SRI C. SUBRAMANIAM: Sir, we do not want to stand in the way of anybody going back to the Kerala State. But

[2nd November 1957

as hon. Members may be aware, the Kerala Government have laid down certain conditions for the consideration of requests for re-transfer of officers. They are—

(1) If the husband and wife, who are both Government servants, are living in the two States (Madras and Kerala).

(2) If the Government servant concerned is the only son/daughter to the aged parents and the sole support of the family, subject to due enquiries being made through appropriate authorities.

(3) The Kerala Government requiring the service of an officer belonging to a particular cadre to utilize his/her special or technical skill.

(4) Government servants who apply for inter-State transfers on a mutual basis.

If any Officer, who wants to go back to that State satisfies those conditions, certainly we will not stand in the way.

SRI K. SATTANATHA KARAYALAR : அதே போல அங்கு இருந்து இங்கு வர விரும்புவர்களின் கணவனோ அல்லது மனைவியோ இங்கு வேலையில் இருந்தால், அவர்களை இங்கு வேலைக்கு எடுத்துக் கொள்ளுவதற்கு சர்க்கார் உத்தரவாதம் கொடுப்பார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இதேமாதிரி தான் அங்கு இருந்து ஏதாவது விண்ணப்பங்கள் வந்தால் பரிசீலனை செய்யப்பட்டு ஒவ்வொரு கேஸுக்கும் உகந்த முறையில் உத்தரவு போடப்படுகிறது.

SRI T. T. DANIEL : May I know whether any time-limit has been fixed for these employees to go back to the Kerala State?

THE HON. SRI C. SUBRAMANIAM : No particular time-limit has been fixed.

*Artificial rain-making*

* 62 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) with reference to the answers given to Question No. 412 and the supplementaries thereunder on 24th December 1956, how far the experiments conducted in artificial rain-making have been successful; and

(*b*) the action taken on the scheme sent by the Centre in this regard?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) There is no change in the position. Final conclusions regarding the efficiency of Artificial Rain-making have not been arrived at. It may be said that Artificial Rain-Making is successful under certain favourable conditions.

(*b*) No scheme has been sent by the Government of India in this regard. They stated in January 1956 that the Council of Scientific and Industrial Research had started a Rain and Cloud Physics Research Unit located in the National Physical Laboratory,



2nd November 1957]

New Delhi, for studies in the microphysics of clouds and precipitation growth, with a view ultimately to examine the potentialities of artificial rain-making in this country.

SRI N. K. PALANISAMI : ஏற்கனவே 4 வருஷங்களாக இதுபற்றிய பரீக்ஷை நடைபெற்றுவருகிறது. அப்பொழுதே இது ' சக்ஸெஸ் ' என்று சொல்லப்பட்டது. ஆனால், இதுவரையில் அதை நடைமுறையில் கொண்டு வருவதற்கு சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இப்பொழுது எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிற நடவடிக்கைகளெல்லாம் இதை நடைமுறையில் கொண்டு வருவதற்குத்தான் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன. இந்தியாவிலே மட்டுமல்லாமல் உலகம் எங்கும் பல நாடுகளில் இந்த பரீக்ஷை நடைபெற்றுவருகிறது. ஆனால் இந்தப் பரீக்ஷை எங்கும் பூர்த்தியானதாகத் தெரியவில்லை.

SRI A. A. RASHEED : Is the Hon. Minister aware of the inexpensive method of rain-making discovered by a Bombay scientist recently?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I am not aware of it, Sir.

SRI A. GOVINDASAMI : தமிழ் நாட்டில் அடிக்கடி மழை பெய்யாத காரணத்தினால் பல இடையூறுகள் ஏற்படுகின்றன. குறிப்பாக சங்கரன் கோயில் பகுதியில் 10, 12, ஆண்டுகளாக மழை பெய்யவில்லை என்று அங்கே நான் சுற்றுப்பிரயாணம் செய்யும்பொழுது சொன்னார்கள். மழை பெய்யாத இடங்களில் இம்மாதிரி திட்டத்தை அரசாங்கம் துரிதப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்குமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : மழை பெய்யாத இடங்களில் மழை பெய்விக்கவேண்டுமென்பதற்காகத்தான் பரீக்ஷை நடைபெறுகிறது. ஆனால் இம்மாதிரி ஆராய்ச்சிகளெல்லாம் அவசரப்படுவதில் பயனில்லை.

SRI M. C. MUTHUKUMARASWAMY: மழை பெய்யாமல் இருக்கும் இடங்களில் மழை பெய்யவைக்க ஆராய்ச்சி நடத்துவதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். ஆனால், மழை திடீர் என்று பெய்து, அதனால் வெள்ளம் ஏற்பட்டு ஆடுமாடுகளுக்கும் மற்ற பயிர்களுக்கும் கோடிக்கணக்கான ரூபாய் அளவில் நஷ்டம் ஏற்படுகிறது. அதைத் தடுத்து நிறுத்துவதற்கு சர்க்கார் ஏதாவது ஆராய்ச்சி செய்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : நம் ராஜ்யத்தைப் பொறுத்தமட்டில் அம்மாதிரி அதிக மழை பெய்து நாசம் ஏற்படுவது அபூர்வம். முதலிலே இப்பொழுது மழை பெய்விடபதற்கு பரீக்ஷைகள் நடத்துகிறோம்.

SRI M. P. SUBRAMANIAM : தற்பொழுது மழை பெய்விக்கும் ஆராய்ச்சிக்கு நம்முடைய மாநில அரசாங்கம் செலவு செய்கிறதா? அல்லது பொதுவான விஷயத்தைப்பற்றி ஆராய்ச்சி நடைபெறுவதால் மத்திய அரசாங்கம் செலவு செய்கிறதா? எங்கு ஆராய்ச்சி நடைப்பெறுகிறது.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : மத்திய சர்க்காரில் "செண்டிரல் கவுன்சில் ஆப் ஸயின்டிபிக் ரிஸெர்ச்" என்ற ஸ்தாபனத்தின் மூலம் சில ஆராய்ச்சிகள் செய்கிறார்கள். இந்த அரசாங்கம் இதுவரையிலே சொற்ப தொகை ரூ. 6.500 செலவு செய்திருக்கிறது. கோயம்புத்தூர் பகுதியிலே இதுவரையில் நடந்த ஆராய்ச்சியின் விளைவாக மேலும் தொடர்ந்து

[2nd November 1957

ஆராய்ச்சி நடத்துவதற்கு இப்பொழுது அரசாங்கம் அனுமதி தந்திருக்கிறது. ஏதோ சில ஆயிரம் ரூபாய்களும் செலவுக்காக அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

SRI M. R. KANDASWAMY MUDALIAR : இந்த முறையினால் குறிப்பிட்ட ஒரு இடத்தில்தான் மழை பெய்விக்க முடியுமா? அல்லது ராஜ்யம் பூராவும் அதை உபயோகப்படுத்த முடியுமா? அப்படி உபயோகப்படுத்தும் காலங்களில் அதனால் வரக்கூடிய செலவு அதனால் கிடைக்கக்கூடிய வருமானத்தைவிட அதிகமாக இருக்குமா என்பதை அறியவிரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : எந்த ஆராய்ச்சியின் விளைவில் செலவைக் காட்டிலும் வருமானம் அதிகமாக இருந்தால்தான் அது ஏற்றுக்கொள்ளப்படும். இல்லையென்றால் ஆராய்ச்சியினால் நல்ல விளைவு ஏற்படவில்லை என்று தான் அர்த்தம். இப்பொழுது ஒரு பிராந்தியத்திலே பரீக்ஷை செய்து முடிவு ஏற்பட்டால், அதை எங்கு வேண்டுமோ அந்த பிராந்தியத்தில் அனுசரிக்கலாம்.

SRI S. B. ADITYAN : தண்ணீர் குழாயிலே கொதிக்க வைத்து அந்தக் குழாயை மேகத்திற்கு நேராகத் திருப்பி அதிகமாக மழை பெய்விக்கலாம் என்று பம்பாயில் ஒருவர் செய்துகாட்டியதாகத் தெரிகிறது. இம்மாதிரியான ஒரு சலபமான செலவு இல்லாத ஒரு பரீக்ஷயை அரசாங்கம் செய்துபார்க்கக்கூடாதா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இப்பொழுது அரசாங்கத்தின் சார்பிலே ஆராய்ச்சி செய்கின்ற விஞ்ஞானிகள் இம்மாதிரி வெளியாகின்ற பரிசீலனை எல்லாவற்றையும் வைத்துக்கொண்டு நம்முடைய பிராந்தியத்திலே இந்த ஆராய்ச்சியை அபிவிருத்தி செய்யக்கூடுமா என்று பரீக்ஷை செய்துகொண்டு வருகிறார்கள்.

SRI P. G. MANICKAM : கொதிக்கும் தண்ணீரிலிருந்து வெளிப்படும் நீராவியை மேகத்திற்குள் செலுத்தி அதன் மூலமாக மழையை பெய்விக்கலாம் என்ற முறையை விசாகபட்டிணத்திலும், பம்பாயிலும் என். ஆர். ஸஹூர் அவர்கள் செய்துகாட்டியதாக கேள்விப்படுகிறோம். அந்த முறையில் சென்னை அரசாங்கம் ஆராய்ச்சி செய்து பார்ப்பதற்கு நடவடிக்கை எடுக்குமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : நான் முன்பு குறிப்பிட்டது போல் நம் அரசாங்கத்தின் சார்பாக ஆராய்ச்சி செய்கின்ற விஞ்ஞானிகள் நல்ல ஆற்றல் படைத்தவர்கள். மற்ற இடங்களில் செய்யும் பரீக்ஷகளைப் பார்த்து இவர்கள் இங்கே மேலும் அதை பரீக்ஷ செய்கிறார்கள்.

8-30 a.m. SRI S. M. ANNAMALAI : சட்டமன்றத் தலைவர் அவர்களே, செயற்கை மழையை வரவழைப்பதற்கு நான்கு ரூபாய்தான் செலவாகுமென்று பத்திரிகையில் பார்த்தேன். அந்த விஷயம் இம்மாநில அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : நான் அதைப்பற்றி பத்திரிகையில் பார்க்கவில்லை.

SRI R. KRISHNASAMI NAIDU : நீலகிரிப் பகுதியில் மேகங்கள் மீது நீராவிப் புகையைச் செலுத்தி மழையைப் பெய்விக்க நம் அதிகாரிகள் கையாண்ட முயற்சிகளின் பயன் என்ன என்று தெரிவிப்பார்களா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அந்தப் பகுதியில் நம் ஆராய்ச்சியின் விளைவாகத்தான் இன்னும் தைரியம் ஏற்பட்டு மேலும் ஆராய்ச்சிசெய்ய முற்பட்டிருக்கிறார்கள்.

MR. SPEAKER : கேள்வி 63, 64 இரண்டுக்கும் சேர்த்து பதில் அளிக்கப்படும்.



2nd November 1957]

*Second Language Test*

*63 Q.—SRI K. R. VISWANATHAN : Will the Hon. the Minister for Finance be pleased to state with reference to the answer to Question No. 54, dated 3rd July 1957, whether the Government have taken a decision in regard to the Second Language Test?

THE HON. SRI C. SUBRAMANIAM : No decision has yet been arrived at.

*64 Q.—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Finance be pleased to state whether any decision has since been reached in regard to the proposal to abolish language test for the Non-Gazetted Officers in view of the States Reorganization?

THE HON. SRI C. SUBRAMANIAM : No decision has yet been reached.

SRI N. K. PALANISAMI : ஸ்டேட்ஸ் ரீ ஆர்கனைசிங்கிற்குப் பிறகு இந்தமாதிரி டெஸ்டுக்கு அவசியம் இல்லை. இனிமேலாவது சேர்க்கப்படக்கூடிய என். ஜி. ஒ.க்களுக்கு பாஷை டெஸ்டு அவசியம் இல்லை என்று செய்வார்களா?

THE HON. SRI C. SUBRAMANIAM : அதைப்பற்றி ஆலோசனை நடந்துகொண்டிருக்கிறது. இன்னும் சில பாஷைகள் தெரிந்திருப்பதில் சில உபயோகங்கள் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

SRI M. KALYANASUNDARAM : நமது பக்கத்தில் இருக்கக்கூடிய ராஜ்ய மொழியைத் தெரிந்து கொள்வது அவசியம் தான். இப்போது தமிழ் தெரியாதவர்கள் நிச்சயமாக தமிழ் பரீட்சை எழுதவேண்டியது அவசியமாக இருக்கிறது என்பதை ஒத்துக் கொள்கிறேன். பாக்கிப் பேர்களுக்கு பரீட்சை வேண்டுமா வேண்டாமா என்பதைப்பற்றி முடிவு செய்யும் வரையிலாவது இந்தப் பரீட்சையை நிர்ப்பந்தப்படுத்தாது ஒத்திப்போடுவார்களா என்று கேட்கிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : இதுபற்றிய முடிவு சீக்கிரமே எடுக்கப்படும். ஒத்திப்போடும் யோசனைக்கு அவசியமே இருக்காது.

SRI K. R. VISWANATHAN : இரண்டாவது மொழியில் தேர்ச்சி பெற வேண்டுமென்பதற்காக வயது வந்த, உத்தியோகத்தில் உயர்வு பெறக்கூடிய நிலைமையில் உள்ளவர்களுடைய திறமை கவனிக்கப்படாமல் இருக்கிறது. இம்மாதிரி இருக்கக்கூடியவர்களுக்காவது மொழிப் பரீட்சை தேர்ச்சியடையாவிட்டாலும் உயர்வு கொடுக்க விதிவிலக்கு அளிப்பார்களா முடிவு எடுப்பதற்கு முன் ?

THE HON. SRI C. SUBRAMANIAM : முடிவு எடுப்பதற்கு முன்னால் உடனடியாகச் செய்ய வேண்டிய அவசியம் இல்லை. சீக்கிரமே ஒரு முடிவு எடுக்க முயற்சிக்கிறோம். பிற்பாடு இதன் மூலம் யாருக்காவது கஷ்டம் ஏற்பட்டால் விதி விலக்கு அளிப்பதன் மூலம் அவர்களுடைய கஷ்டத்தை நிவர்த்திக்க ஏற்பாடு செய்யலாம்.

SRI A. VEDARATHNAM PILLAI : இவர்களுக்கு தேசிய மொழி ஆகிய இந்தி டெஸ்டு உண்டா ? இல்லையானால் அதைச் சேர்க்க அரசாங்கம் யோசிக்குமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இது ஒரு தனிப்பட்ட பிரச்சனை. இப்போது கேட்டிருக்கக்கூடிய கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. இந்தியைப் பற்றி தனியாகக் கேள்வி கேட்டால் பதில் சொல்லுகிறேன்,

[2nd November 1957

*Government Bus Transport*

* 65 *Q.*—SRI S. PAKKIRISWAMI PILLAI: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether any workers' representatives are included in the Advisory Committee constituted for the efficient working of the Government Bus Transport System in the City of Madras; and

(*b*) if so, the number of such representatives?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

SRI S. PAKKIRISWAMI PILLAI : தொழிலாளர்களுக்கும் நிர்வாகத்தில் பங்கு கொள்ள வசதி செய்யவேண்டுமென்று வெவ்வேறு இடங்களில் அமைச்சர் அவர்கள் பிரசாரம் செய்துகொண்டு வருகிறார்கள். முதலிலே பரீட்சார்த்தமாக சர்க்கார் டிரான்ஸ்போர்ட்டில் இதை அமுலுக்குக் கொண்டு வரப்போகிறோம் என்று சொன்னார். அதை எப்போது கொண்டுவரப்போகிறார் ?

THE HON. SRI R. VENKATARAMAN : தொழிலாளர் நிர்வாகத்தில் பங்கு கொள்ளும் திட்டம் சர்க்கார் பஸ் போக்குவரத்து வொர்க்ஷாப்பில் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. நிர்வாகத்தில் தொழிலாளர்களுடைய பிரதிநிதிகள் மூன்று பேர்களும், அதிகாரிகளில் மூன்று பேர்களும் சேர்ந்த ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது.

SRI S. PAKKIRISWAMI PILLAI : இந்த நிர்வாகக் குழு வொர்க்ஸ் கமிட்டி என்ற ரீதியில் அமைக்கப்பட்டிருக்கிறதா? அல்லது அதிகாரிகளுக்கு இருக்கும்படியான அதிகாரங்கள் முழுவதும் இதற்குக் கொடுக்கப்பட்டிருக்கிறதா?

THE HON. SRI R. VENKATARAMAN : கவுன்சில் ஆப் மினிஸ்டிரி என்ன என்ன காரியங்க்ள் இவர்களால் செய்யப்படவேண்டுமென்று வகுத்துக் கொடுத்திருக்கிறார்களோ அதன்படி வரவுசெலவுக்குக் கணக்கு முதற்கொண்டு இவர்களுடைய அதிகாரத்தின் கீழ் விடப்பட்டிருக்கிறது. பாக்டரி வேலைகளை திருத்தி அமைக்க இந்த நிர்வாகக் குழுவுக்கு அதிகாரம் உண்டு.

SRI K. RAMACHANDRAN : நிர்வாகத்திலே தொழிலாளர்கள் பிரதிநிதிகள் இருப்பது என்ற முறை வந்துவிட்ட பிறகு அட்வைசரி கமிட்டியிலும் தொழிலாளர்களைப் சேர்ப்பதில் என்ன ஆட்சேபனை இருக்கிறது?

THE HON. SRI R. VENKATARAMAN : ஆட்சேபனை இல்லை. ஒரு ஸ்தானம் ஒதுக்கப்பட்டிருக்கிறது, கூடிய சீக்கிரம் அதற்கும் பிரதிநிதியை ஒதுக்குவார்கள். ஆனால் வேறு ஒரு தொழிலில் ஈடுபட்டிருப்பவரின் பிரதிநிதியாக இருக்கலாம்.

SRI A. A. RASHEED : What is the number of non-officials in the Advisory Committee and what is the duration of its term?

THE HON. SRI R. VENKATARAMAN : Except three officers, the other 14 persons are non-official members.

SRI T. T. DANIEL : May I know from the Hon. Minister whether there is such an Advisory Committee for the effective working of the Transport Bus system in the Kanyakumari district and if there is no such Advisory Committee, will the Government be pleased to constitute it there very soon?



2nd November 1957]

THE HON. SRI R. VENKATARAMAN : We are undertaking an experiment one in the public sector and another in the private sector. The first experiment in the public sector is introduced in the Government Wordshop at Chromepet. On the successful working of this experiment, its extension will be considered.

*Harijan school at Singanoor village*

* 66 *Q.*—SRI M. JAGANNATHAN : Will the Hon. the Minister for Public works be pleased to state—

(*a*) whether the Government have received a petition, dated 11th August 1957, from the Harijans of Singanoor village, Tindivanam taluk, South Arcot district, regarding the appointment of an additional teacher in the Harijan Welfare Elementary School in that village; and

(*b*) if so, the action taken thereon?

THE HON. SRI P. KAKKAN : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

SRI M. JAGANNATHAN : தலைவர் அவர்களே, சிங்கானூர் என்ற கிராமத்திலுள்ள ஹரிஜனங்களும், இன்னும் சுற்றுபுறங்களில் வசிக்கின்ற ஹரிஜனங்களும் சேர்ந்து கனம் அமைச்சர் அவர்களுக்கு 1957-ம் வருஷம் ஆகஸ்டு மாதம் 11-ம் தேதி ஒரு விண்ணப்பத்தை ரிஜிஸ்டர் தபால் மூலம் அனுப்பியிருக்கிறார்கள். சிங்கானூர் பள்ளிக்கூடத்தில் இப்போது வாசிக்கின்ற மாணவர்களுக்குப் போதிய அளவு உபாத்தியாயர்கள் இல்லாததால் இன்னும் அதிக ஆசிரியர்களைப் போடவேண்டும் என்று விண்ணப்பித்துக் கொண்டிருக்கிறார்கள். அது வரவில்லை என்று கனம் அமைச்சர் அவர்கள் சொல்வது விந்தையாக இருக்கிறது. எது உண்மை என்று புரிந்து கொள்வது?

THE HON. SRI P. KAKKAN : கனம் சபாநாயகர் அவர்களே, பாடசாலைக்கு அதிகப்படியான ஆசிரியர்களைப் போடவேண்டுமென்றால் ஜில்லா ஹரிஜன் வெல்பேர் ஆபீசர் மூலமாக, கலெக்டர் மூலமாகத்தான் அரசாங்கத்திற்கு விண்ணப்பம் செய்து கொள்ளவேண்டும். எனக்கு வந்த தபாலில் இவர் சொன்னது போல எதுவும் வரவில்லை என்கிற தகவல் கிடைக்கிறது. ரிஜிஸ்டர் தபால் மூலம் அனுப்பியிருப்பதாக இவர் சொல்வதால் மீண்டும் இதைப்பற்றி ஆபீசில் விசாரிக்கிறேன்.

SRI A. GOVINDASAMY : சிங்கானூர் பாடசாலையில் கிட்டத்தட்ட 165 மாணவர்கள் இருப்பதாகக் கேள்விப்படுகிறேன். அங்கே மூன்று ஆசிரியர்கள்தான் இருக்கிறார்களாம். 165 மாணவர்களுக்கு மூன்று ஆசிரியர்கள் போதாததால் நான்கு ஆசிரியர்களாவது போடுவதற்கு ஏற்பாடு செய்வார்களா ?

THE HON. SRI P. KAKKAN : இது சம்பந்தமாக ஜில்லா ஹரிஜன் வெல்பேர் ஆபீசருக்கு எழுதி விசாரித்து ஏற்பாடு செய்கிறேன்.

MR. SPEAKER : கேள்வி 67, 68 இரண்டுக்கும் சேர்ந்து பதில் அளிக்கப்படும்.

*Payment of T.A. to the election personnel*

* 67 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Finance be pleased to state whether the Government have

[2nd November 1957

fixed any time-limit for the payment of all allowances due to teachers and other officers who were employed on election duty in the General Elections?

THE HON. SRI C. SUBRAMANIAM : Yes, Sir. 1st September 1957, was fixed as the time limit by which the election travelling allowance claims relating to the General Elections, 1957, should be finally settled.

* 68 *Q*.—SRI A. VEDARATHNAM PILLAI : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether it is a fact that the officers who were employed on election work in the Tanjore district have not yet been paid their travelling allowance; and

(*b*) if so, the reasons therefor?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) & (*b*) Out of 14,290 claims received, payment has been made in respect of 14,284 claims. The remaining 6 claims are also ready for payment.

SRI N. K. PALANISAMI : தேர்தல் நடந்து ஆறு மாதம் ஆகியும் இன்னும் கொடுக்கப்படாமல் இருப்பதற்குக் காரணம் என்ன ? அரசாங்கத்திற்கு இருக்கக்கூடிய பணக் கஷ்டமா ? அல்லது வேறு காரணமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இன்னும் அந்த நிலைமைக்கு சர்க்கார் வரவில்லை. உண்மையில் அந்த நிலைமைக்கு சர்க்கார் வரவேண்டுமென்று கனம் அங்கத்தினர் விரும்புகிறார்களோ என்னவோ தெரியாது.

SRI A. A. RASHEED : What is the total amount of deposit that has been forfeited to the Government during the election?

THE HON. SRI C. SUBRAMANIAM : The original question refers to the disbursement of Travelling Allowance. A separate question may be put.

SRI A. VEDARATHNAM PILLAI : பெரிய நன்மைகள் பல அரசாங்கம் மக்களுக்கு புரிந்திருந்தும், காலாகாலத்தில் இந்தப் பணம் கொடுக்க முடியாததின் காரணம் என்ன? இந்தக் காலதாமதத்தைத் தடுக்க அரசாங்கத்தார் என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டார்கள்.

THE HON. SRI C. SUBRAMANIAM : கனம் அங்கத்தினர் அவர்கள் சென்ற சட்டசபையில் இல்லாத காரணத்தால் இதைத் தெரிந்துகொள்ளவில்லை. இரண்டு மூன்று வருஷங்களாக முயற்சி எடுத்துக்கொண்டுதான் வருகிறோம், அப்படி இருந்தும்கூட இந்த விஷயத்தில் காலதாமதம் ஏற்பட்டுவிட்டது. இன்னும் ஆறு பேர்களுக்கு கொடுக்கவேண்டிய பாக்கி தயாராயிருக்கிறது. யாராவது வந்தால் கொடுக்கத் தயாராய் இருக்கிறார்கள்.

SRI K. ANBAZHAGAN : சாதாரணமாக அரசாங்கம் பணம் தரவேண்டி இருந்தால் அதற்கு அரசாங்கம் அதிக காலம் எடுத்துக் கொள்ளுகிறது என்று பொதுவாக கூறப்படுகிறது. இந்த காலதாமதம் ஏற்படாவண்ணம், இனியாகிலும் துரிதமாகப் பணம் கொடுப்பதற்கு முயற்சி எடுப்பார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இதில் இருக்கக்கூடிய முக்கிய கஷ்டம் என்னவென்றால், அதை நல்லமுறையிலே பரிசீலனை செய்து கொடுக்க வேண்டியவர்களுக்கு கொடுக்கப்படவேண்டிய பணத்தை கொடுக்கவேண்டியிருக்கிறது. இவ்வளவு கட்டுப்பாடு வைத்தும்கூட அரசாங்கத்தை ஏமாற்றி பணம் வாங்கிக்கொண்டு போய்விடுகிறார்கள். இதே அசெம்பளியில் அரசாங்த்தை ஏமாற்றி பணம் வாங்கிக் கொண்டு போய்விடுகிறார்கள் என்று கூறுகிறார்கள். ஆகவே பரிசீலனை செய்துகொடுக்கவேண்டியதால் தாமதம் ஏற்படுகிறது.



2nd November 1957]

SRI K. R. NALLASIVAM : அதாவது இந்தத் தேர்தல் வேலைக்குப் போகக்கூடிய ஆசிரியர்கள் சர்க்கார் முன் பணம் கொடுக்காததின் காரணமாக தாங்கள் கடன் வாங்கிப் போகிறார்கள். அதற்காக அவர்கள் வட்டி கொடுக்க வேண்டி இருக்கிறது. சர்க்கார் கொடுக்கக்கூடிய தொகையை வட்டியுடன் சேர்த்துக்கொடுக்க சர்க்கார் ஏற்றுக்கொள்ளுவார்களா ? அதோடு சர்க்கார் முன் பணம் கொடுக்க ஏற்பாடு செய்வார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : சில இடங்களில் முன் பணம் கொடுக்கப்பட்டிருக்கிறது. எங்கு முன்பணம் கொடுக்க முடிகிறதோ அங்கு கொடுக்கப்பட்டுவருகிறது என்று தெரிகிறது. வட்டி விஷயத்தைப் பற்றி இதுவரை ஒருவரும் கேட்கவில்லை. கனம் அங்கத்தினர் சொன்ன பிறகு கிளர்ச்சி ஏற்படுமோ என்னமோ? ஜீவாதார உரிமைகளைப் பறிக்கிறார்கள் என்று அங்கத்தினர் இன்னொரு போராட்டம் ஆரம்பிப்பார்களோ என்னவோ தெரியவில்லை.

SRI M. SOMASUNDARAM : கடந்த பொது தேர்தலிலே அரசாங்க அலுவலகத்திலே வேலைப்பார்க்கும் சிப்பந்திகளைக்காட்டிலும், ஜில்லா போர்டு சிப்பந்திகளுக்கு குறைவாக டிராவலிங் அலவன்ஸ் கொடுத்திருப்பதால் அதை அவர்கள் வாங்க மறுத்திருப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா, அப்படியிருந்தால் எல்லோருக்கும் ஒரே மாதிரியாக கொடுப்பதற்கு அரசாங்கம் உத்திரவு போடுவார்களா?

THE HON. SRI C. SUBRAMANIAM : அந்த புகார் என் காதுக்கு இதுவரை வரவில்லை.

SRI S. RAMALINGA PADAYACHI : 1952லே நடந்த தேர்தலிலே யார் யாருக்கு இன்னும் சம்பள பட்டுவாடா செய்யப்படவில்லை என்று அறிய விரும்புகிறேன்.

MR. SPEAKER : கேள்வி புரியவில்லை இன்னொரு முறை சொல்லுங்கள்.

SRI RAMALINGA PADAYACHI : 1952ம் ஆண்டு நடந்த தேர்தலிலே பிரயாணப்படி கொடுக்கப்படாத ஆசிரியர் எத்தனைபேர் என்று மந்திரி அவர்கள் சொல்லுவார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : 1952 நடந்த தேர்தலில் எனக்கு தெரிந்த வரையில் பாக்கி இருக்கிறது என்று சொல்வதற்கு விவரம் வேண்டும். அதைப்பார்த்துதான் சொல்லமுடியும்.

SRI A. GOVINDASWAMY : தேர்தல் கடமைகளில் ஈடுபடுத்த அரசாங்கம் உத்தியோகத்தில் இல்லாத பிர ஊழியர்கள், அவர்கள் தேர்தல் அலுவலில் ஈடுபடுவதற்கு மனம் இல்லாதவர்களாக இருந்தாலும்கூட அவர்களை வரவேண்டும் என்று கட்டாயப்படுத்தி இருப்பதாகத் தெரிகிறது. இதனால் அவர்களின் உரிமை பாதிக்கப்பட்டதா? இந்தத் தொல்லை போக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : நம் நாட்டில் தேர்தல் நடத்த வேண்டும் என்பது நம் தேசத்திற்கே ஏற்படுத்தப்பட்ட ஒரு உரிமையாகும். கடமையை நிறைவேற்றினால்தான் அந்த உரிமையைப் பெறமுடியும். ஆகையால்தான் வேலை செய்யவேண்டுமென்று கட்டாயப்படுத்தவேண்டியிருக்கிறது.

SRI A. GOVINDASWAMY : தஞ்சை மாவட்டத்தில் இன்னும் ஆறு பேருக்குத்தான் இந்தப்படி வழங்கவில்லை என்று சொன்னார்கள். மற்ற மாவட்டங்களில் நிலைமை என்ன என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : எல்லா ஜில்லாக்களிலும் அனேகமாக முடிந்துவிட்டது மற்ற ஜில்லாக்களில் முழுவிவரம் வரவில்லை. 100க்கு 95 முடிந்து விட்டது. இதைப்போல சில கேஸ்கள்தான் பாக்கி இருக்கின்றன.

*Gobichettipalayam Water-supply Scheme*

* 69 *Q*.—SRI K. R. VISWANATHAN : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether the Government have received any representation from the Gobichettipalayam Municipality recently for treating the Government loan granted for the protected water-supply scheme, as subsidy; and

(*b*) the action taken thereon?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) The Municipal Council, Gobichettipalayam recently requested that the Water-supply scheme for which a loan alone had been offered might be sanctioned on a half-grant basis.

(*b*) The Government did not find sufficient ground to comply with the request.

SRI K. R. VISWANATHAN : நகராண்மைக் கழகத்தின் நிதி நிலைமையை அரசாங்கம் பரிசீலித்துப் பார்த்துத்தான் இந்த பதில் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதுவரையில் வாங்கிய கடனை திருப்பி கொடுக்க முடியாத நிலைமையில் இருப்பதால் மானியமாக பாவிக்கவேண்டும் என்று கேட்டுக கொண்டிருப்பது அரசாங்கத்திற்கு தெரியுமா ? இதற்கு சாதகமான நடவடிக்கையை எடுக்க அரசாங்கம் முன் வருமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : எல்லா பதில்களையும் இங்கு பரிசீலனை செய்துதான் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த திட்டம் சுமார் 14, 15 லட்சம் என்று தெரிகிறது. 10 லட்சம் ஏற்கனவே கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த வருஷம் $3\frac{1}{2}$ லட்சம் கொடுக்கப்போகிறோம். அதற்கு முன் விடாப்பிடியாய் சப்சிடி மூலமாக பெறமுடியுமா என்று கேட்டார்கள். அது முடியாது என்று சொல்லப்பட்டது. அடுத்த முனிசிபாலிட்டி தாராபுரத்திலே கடன் மூலமாக கொடுக்கமுடியுமா என்று கேட்கிறார்கள். இப்படி இருக்கும் போது இதை ஒத்துக்கொள்ளமுடியாது.

SRI P. G. KARUTHIRUMAN : இந்த கோபி முனிசிபாலிடி கடன் விஷயமாக அது சாத்தியம் இல்லை என்று அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். அதே நேரத்தில் ரூரல் வாட்டர் சப்ளை ஸ்கீமில் 40 ஆயிரம், 50 ஆயிரம் போடும் திட்டமாக முக்கால் பங்கு சப்சிடி கொடுக்கபடுகிறது. இந்த கோபியின் நிலைமையைப் பார்க்குபோது அது ஒரு உயர்ந்த டவுன் அல்ல. கிராமம் மாதிரி இருக்கும் நிலைமையை உத்தேசித்து அமைச்சர் அவர்கள் கொஞ்சம் கருணை வைத்து கொடுத்திருக்கலாம். அதை மட்டும் கொடுக்க ஏற்பாடு செய்வார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இந்த மாதிரி கிராமாந்திரங்களில் போடப்படும் திட்டத்திற்கும், நகர திட்டத்திற்கும் வித்தியாசம் இருக்கிறது. இது நகர திட்டம் என்பதனால்தான் வித்தியாசம் இருக்கிறது. ஏதாவது கருணை வைக்கவேண்டும் என்று நிர்பந்தம் வந்தால், திருப்பத்தூருக்குத்தான் என் கருணை போகும், கோபிக்கு போகாது. (சிரிப்பு)



*Plantation workers*

* 70 *Q*.—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Government have made any arrangements to defend the award of the Special Tribunal constituted for the Plantation workers of the State in the Supreme Court ; and

(*b*) if so, the amount spent for the same?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

SRI N. K. PALANISAMI : 1952–56 வரை ஒரு டிரிபுனல் ஏற்படுத்தி 4 வருஷ காலம் பரிசீலனை செய்து முடிவிற்கு வந்தார்கள். சர்கார் அமுல் செய்ய நடவடிக்கை எடுக்கவில்லை. இன்டரிம் அட்வான்ஸ் கொடுக்க மாநாடு கூட்டி எதுவும் ஏற்க முடியவில்லை.

MR. SPEAKER . The hon. Member cannot make a statement He must ask a question directly.

SRI N. K. PALANISAMI : சர்க்கார் ஒரு தீர்ப்பு கொடுத்து நடைமுறைக்கு கொண்டுவர என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறது ?

THE HON. SRI R. VENKATARAMAN : இந்த ஸ்பெஷல் டிரிபுனல் தோட்டத் தொழிலாளர்களைப் பொறுத்தவரை கொடுத்த தீர்ப்பு அமுலுக்கு வருவதற்கு முன்னமே சுப்ரீம் கோர்ட்டில் ஸ்டே ஆர்டர் வாங்கிவிட்டார்கள். அதனால் நடவடிக்கை எடுக்கமுடியாமல், சுப்ரீம் கோர்ட்டுக்கு ஒரு கேஸ் போட்டுவிட்டதென்றால் அதன்மீது தீர்ப்பாவதற்கு இரண்டு மூன்று வருஷம் ஆகிற காரணத்தினாலும் தொழிலாளர்களுக்கு இதுவரை எந்தவிதமான நன்மையும் ஏற்படாது என்ற காரணத்தினாலும் அதை அமுல் நடத்துவதைப்பற்றி சமரசமான ஒரு திட்டத்தை இருதரத்தாரும் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். சமரசம் செய்துகொள்வதற்கு வசதி செய்து கொடுத்தார்களே தவிர இதை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று சர்க்கார் சொல்லவில்லை.

SRI M. KALYANASUNDARAM : இருதரத்தாரும் என்று மந்திரியவர்கள் சொன்னதில் இருந்து, தோட்ட முதலாளிகளையும் தோட்டத் தொழிற் சங்கப் பிரதிநிதிகளையும்தான் அவர்கள் குறிப்பிடுகிறார்கள் என்று நம்புகிறேன். அப்படியானால் நம்முடைய ராஜ்யத்தில் இருக்கக் கூடிய எல்லாப் பகுதிகளிலும் உள்ள, கோயம்புத்தூர், திருநெல்வேலி, சேலம் போன்ற எல்லா ஜில்லாக்களிலும் இருக்கக்கூடிய தொழிற் சங்கப் பிரதிநிதிகள் எல்லோரும் அழைக்கப்பட்டு அவர்கள் அதில் கையெழுத்திட்டிருக்கிறார்களா ? ஏதாவது தொழிற்சங்கப் பிரதிநிதிகள் அதில் கையெழுத்திட மறுத்திருக்கிறார்களா ? அவர்களின் நிலை என்னவாவது ?

THE HON. SRI R. VENKATARAMAN : நீலகிரி, சேலம், திருநெல்வேலி போன்ற ஜில்லாக்களில் இருக்கிற தொழிற் சங்கப் பிரதிநிதிகள் அதை ஏற்றுக்கொண்டுவிட்டார்கள். வால்பாறையில் இருக்கிற தொழிற் சங்கப் பிரதிநிதி, அகில இந்திய தொழிற் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் இதை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டார்கள். அவர்கள் இப்பொழுது இந்த ஒப்பந்தத்திற்கு கட்டுப்படவில்லை.

SRI J. MATHA GOWDER : அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே சொன்னது மாதிரி இந்த ட்ரிப்யூனல் ஏற்படுத்திய பிறகு முதலாளிகள் சுப்ரீம் கோர்ட்டிற்குப் போனதால் தொழிலாளர்களே அமைச்சர் அவர்களிடம் நிர்ப்பந்தமாக அவர்கள் இதில் தலையிட்டு ஒரு தீர்ப்புச் சொல்ல

[2nd November 1957

வேண்டுமென்று கேட்டுக்கொண்டதால்தான் இவ்விதமாகத் தலையிட்டு ஒரு தீர்ப்புக் கொடுக்கப்பட்டது. இதில் இந்திய தேசீய தொழிற் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் கையெழுத்திட்டிருக்கிறார்கள், கம்யூனிஸ்ட் சங்கத்தை தவிர.

MR. SPEAKER : நீங்கள் இன்பர்மேஷன் கொடுக்கிறீர்கள். கேள்வி தான் கேட்கலாம்.

SRI J. MATHA GOWDER : ஆகவே சர்க்கார் இதில் தலையிட்டுச் செய்ததில் எந்தவிதமான அநியாயமும் இல்லை என்பதை மந்திரி அவர்கள் விளக்குவார்களா ?

THE HON. SRI R. VENKATARAMAN : கனம் அங்கத்தினர் சொன்னது ஓரளவு உண்மையே. தொழிலாளர்கள் நீண்ட காலம் தாமதித்திருக்க முடியாது என்ற காரணத்தால் சர்க்காரை அணுகி இதைத் தீர்த்து வைக்கும்படிக் கேட்டுக்கொண்டார்கள். இன்னும் ஒன்றுகூடச் சொல்லலாம் என்று நினைக்கிறேன். அந்த சமயத்தில் நான் மந்திரியாக இல்லை. தொழிற் சங்கத்தலைவராய் இருந்தேன். நானே இதைத் தீர்க்கவேண்டுமென்று சர்க்காரை வற்புறுத்தியிருக்கிறேன்.

SRI M. KALYANASUNDARAM : மந்திரியவர்கள், தொழிற் சங்கத் தலைவர் என்ற முறையில் வற்புறுத்தினதாகச் சொன்னார்கள். தொழிலாளர்களுக்கும், தோட்ட முதலாளிகளுக்கும் இடையே ஏற்பட்டிருக்கக் கூடிய ஒப்பந்தம் திருப்திகரமானது, நியாயமானது என்று கருதுகிறார்களா ? வால்பாறை தொழிலாளர்களைச் சம்பந்தப்பட்ட மட்டில் அது ஏற்றுக்கொள்ளப்படவில்லை. அவர்களுக்கு இதுவரையிலும் ஒரு பரிகாரமும் கிடைக்கவில்லை. கேரள ராஜ்யப் பகுதியில் இருக்கிற தோட்டங்கள் சம்பந்தப்பட்ட மட்டில் வேறு வித அடிப்படையில் ஒப்பந்தம் செய்துகொண்டிருக்கிறார்கள். அப்படி இருக்கும்போது, வால்பாறையில் விசேஷ நிலை ஏற்பட்டிருப்பதால் அங்கு வேறு வித அடிப்படையில் நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்படுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : அங்கத்தினர் அவர்களே அறிவார்கள். சர்க்கார் நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டிருக்கிறது. ஓரளவு ஒப்பந்தம் நீலகிரி ஜில்லாவில் ஏற்பட்ட பிறகு வால்பாறையில் இருக்கிற தொழிற் சங்கங்கள் அதை ஏற்றுக்கொள்ளாததால் மீண்டும் அங்குள்ள தொழிற் சங்கங்களும், உபாசி பிரதிநிதிகளும் சேர்ந்து விவாதிக்க சர்க்கார் ஏற்பாடு செய்து அதற்காக லேபர் கமிஷனரை அங்கு அனுப்பி வைத்தது. அங்கு ஒப்பந்தம் ஏற்படாததால் தொழிற் சங்கங்கள் சுப்ரீம் கோர்ட்டில் கிடைக்கிற உரிமைகளைப் பெற்றுக்கொள்ளவேண்டும், அல்லது சமரசத்திற்கு வர ஏற்பாடு செய்யவேண்டும்.

SRI P. G. MANICKAM : கங்காணி ஆட்சி முறையானது, இந்தத் தோட்டங்களில் வேலைசெய்யும் மேஸ்திரிகளுக்குப் பொருந்தாது என்பதை கழிந்த சட்டசபையில் தெரிவித்துவிட்டு அதை மந்திரியவர்கள் ஒத்துக்கொண்டார்கள். ஆகவே அப்பொழுது தோட்டத் தொழிலாளர்களுக்காக அமைக்கப்பட்ட இந்த சபையின் (ட்ரீப்யூனல்) தீர்ப்பில் இது மாதிரி தெரிவிக்கப்பட்டிருக்கிறதால் தொழிலாளர்களுக்குள்ள நன்மைகளாவது இவர்களுக்கு கிடைக்குமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : கங்காணிகளைப் பொறுத்தளவில் தனியாக பேச்சு வார்த்தைகள் நடந்துகொண்டிருக்கிறது. அதைப்பற்றி எந்தவிதமான முடிவிற்கும் இதுவரை வரவில்லை.

SRI M. KALYANASUNDARAM : வால்பாறைப் பிரதேசத்தில் இருக்கக்கூடிய தொழிலாளர்கள் சம்பந்தப்பட்ட வரையில் சுப்ரீம் கோர்ட் முடிவு வரை காத்திருக்க வேண்டுமென்று சொன்னதை நானும் ஒப்புக்கொள்கிறேன். அப்பொழுது சர்க்கார் நீலகிரி பிரதேசத்தில் ஏற்பட்ட ஒப்பந்தம், ஒரு ஸ்பெஷல் ட்ரிப்யூனலின் தீர்ப்பாய் இருப்பதால் அட்வகேட் ஜெனரலை வைத்து, அட்டார்னி ஜெனரலை வைத்து சுப்ரீம் கோர்ட்டில் இந்தத் தீர்ப்பை ஆதரித்து வாதாட சர்க்கார் நடவடிக்கைகள் எடுப்பார்களா ?



2nd November 1957]

THE HON. SRI R. VENKATARAMAN : சாதாரணமாக சட்டங்கள் செல்லுபடியாகாது என்று எழுப்புகிற கேஸ்களில்தான் சர்க்கார் வக்கீல் வைத்து வாதாடுவது. சட்டத்திற்கு உட்பட்டு இருப்பதில் ஒரு தீர்ப்பு கொடுத்திருந்தால், ஒருவர் உரிமையையும், மற்றொருவரின் உரிமையையும் பாதிக்கக் கூடியதாயிருந்தால் அதில் சர்க்கார் வக்கீல் வைத்து கீழ் கோர்ட்டின் தீர்ப்பு சரி என்று வாதாடுவதில்லை. சென்னை ஹைகோர்ட்டைப் பொறுத்த வரையில் இன்டஸ்ட்ரியல் ட்ரிப்யூனலின் தீர்ப்பு சரி என்று சர்க்கார் வாதாடக் கூடாதென்று தீர்மானித்திருக்கிறார்கள்.

SRI M. R. KANDASWAMY MUDALIAR : சங்கத்தில் உள்ளவர்கள் இந்த விவகாரத்தை முடித்துக்கொள்ள சம்மதிக்காததால் நீண்டு போகிறதா அல்லது சங்கத் தலைவர்களின் இஷ்டத்திற்கு ட்ரிப்யூனல் ஒத்துக்கொள்ளவில்லை என்ற காரணத்திற்காக அந்த சமாதானம் உடைபட்டுப்போகிறதா ?

THE HON. SRI R. VENKATARAMAN: இதைப்பற்றிச சர்க்காருக்குத் தகவல் இல்லை.

SRI N. K. PALANISAMI : மதராஸ் ட்ராம்வே கம்பெனியை எதிர்த்து வாதாடுவதற்கு சர்க்கார் ஸ்டாம்பிற்குண்டான செலவைக் கொடுத்தார்கள். அதே மாதிரி இதற்கும் ஸ்டாம்பிற்காகவாவது ஏதாவது கொடுக்க சர்க்கார் முன் வருமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : இதைப்பற்றி தனியாக கேள்வி போடும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

MR. SPEAKER. Questions are over.

[*Note.*—**An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.**]

## II.—MOTION UNDER RULE 184 OF THE ASSEMBLY RULES.

MR. SPEAKER : Yesterday, when the hon. Member Sri Sattanatha Karayalar raised a point of privilege, I promised to give my finding on it today. I did that in the hope that the paper concerned would publish a correction and offer an apology to the House. There appeared in today's paper a certain correction. But I do not find any apology therein.

THE HON. SRI C. SUBRAMANIAM : It is not inserted as a correction.

MR. SPEAKER : I do not find any correction so far as I am aware. Anyway I am satisfied that a *prima facie* case has been made out. Therefore, I shall permit any hon. Member to make a motion under Rule 184 of the Assembly Rules that the alleged breach of privilege be referred to the Committee of Privileges or in the alternative that it may be dealt with by the House itself. In allowing this motion I hope that the paper concerned will write to the Committee of Privileges its explanation and offer whatever regrets to that Committee. That Committee before making a recommendation to this House will take all that into consideration.

I now therefore allow any hon. Member to move the motion under Rule 184.

[2nd November 1957

SRI K. SATTANATHA KARAYALAR : Mr. Speaker, Sir, I move—

" That the alleged breach of privilege be referred to the Committee of Privileges ".

SRI M. KALYANASUNDARAM : I second it, Sir.

Mr. Sattanatha Karayalar rose.

MR. SPEAKER : The hon. Member need not make a speech now.

The question is—

" That the alleged breach of privilege be refered to the Committee of Privileges ".

The motion was put and carried.

MR. SPEAKER : The motion is now referred to the Committee of Privileges. I shall, in this connexion, read the provision contained in Rule 185 of the Assembly Rules. It says : ' If the matter is referred to the Committee of Privileges, the Committee shall follow, as far as possible, the same procedure as a Select Committee of the Assembly and make a report to the House '.

### III.—CALLING ATTENTION TO A MATTER OF URGENT PUBLIC IMPORTANCE UNDER RULE 40 (1) OF THE ASSEMBLY RULES *RE* CLOSING OF FAIR PRICE SHOPS IN FAMINE AND DROUGET AFFECTED AREAS OF TIRUNELVELI DISTRICT.

*SRI A. R. SUBBIAH MUDALIAR : தலைவர் அவர்களே திருநெல்வேலி ஜில்லாவி நியாய விலைக்கடைகளை பாதியாக குறைக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது. மத்திய சர்க்காருடைய திட்டப்படி பாதியாக குறைக்கப்பட்டதாக கலெக்டர் அவர்கள் பிளானிங் கமிட்டி மீட்டிங்கில் தெரியப்படுத்தினார்கள். திருநெல்வேலியில் சங்கரன்கோவில், நாங்குனேரி தாலூகா, தென்காசியில் ஒரு பகுதி இவைகள் அதிக பஞ்சத்தில் இருந்துகொண்டிருக்கின்றன. அந்தப் பஞ்சப் பிரதேசங்களில் நியாய விலைக் கடைகள் அடைக்கப்பட்டிருக்கிறது. பிளானிங் கமிட்டியில் இதைப்பற்றி விவாதித்து பஞ்சப் பிரதேசத்திலாவது அடைத்த கடைகளை திறக்கவேண்டுமென்று தெரியப்படுத்தி, அது அவசியம் என்று ஏகமனதாக கமிட்டியில் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. அது சர்க்காருக்கும் தெரியப்படுத்தப்பட்டதாகத் தெரியவருகிறது.

இந்த் பஞ்சப் பிரதேசங்களில் இப்போது வைத்திருக்கக்கூடிய கடைகள் காணாத நிலைமையில் இருக்கும்போது, இப்போது இருக்கக்கூடியதை பாதியாக குறைப்பது என்பது அங்குள்ள ஜனங்களை கூடுதலாக கஷ்டப்படுத்துவதாகும். ஆகவே சங்கரன்கோவில் தாலூகா, நாங்குனேரி தாலூகா தென்
9-41 a.m. காசி தாலூகாவில் ஒரு பகுதி ஆகிய இந்த மூன்று இடங்களிலாவது கண்டிப்பாக இப்போது இருக்கக்கூடிய கடைகளை குறைக்கவேண்டாம் என்று கேட்டுக்கொண்டு இதை . வற்புறுத்தத்தான் இதை கொண்டுவந்திருக்கிறேன். அத்துடன் சங்கரன்கோவில் அர்பன் ஏரியா, நான்குனேரி அர்பன் ஏரியா போன்ற இடங்களில் இப்போது இருப்பதைவிட கூடுதலாக கடைகளை திறந்தால் நல்லது என்பதை தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Mr. Speaker, Sir, I am making this statement with reference to the motion of the hon. Member.



2nd November 1957] [Sri M. Bhaktavatsalam]

With a view to bring down and stabilize the prices of rice and paddy, this Government in consultation with the Government of India, introduced in May 1956, a scheme of selling Central Government rice to the public at controlled rates through fair price shops opened by co-operative societies and private dealers selected for the purpose.

In pursuance of this and taking into account the seasonal conditions in certain parts of Tirunelveli district, a large number of fair price shops, viz., were opened in that district and they were catering to the needs of the people of the district. These 109 fair price shops were functioning till 30th September 1957.

In September 1957, the Government of India decided to discontinue supplies of rice to the fair price shops in this State with effect from 1st October 1957, owing to curtailment of overseas imports, due to difficulties of foreign exchange and the consequent difficult stock position of rice with them and in view of the impending harvest (Kuruvai) in this State. However, at the special request of this Government, the Government of India have agreed to supply a limited quota of 4,000 tons of rice a month, for a period of three months (viz., October, November and December 1957) on a loan basis, as against the previous monthly quota of about 8,000 tons. Consequent on the above cut in the rice supply to the fair price shops, it became necessary for this Government to reduce the number of fair price shops in this State by 50 per cent from 1st October 1957. There are at present only 477 fair price shops functioning in this State as against about 950 shops at the end of September 1957.

The Collector of Tirunelveli was accordingly requested to reduce the number of fair price shops in the district, after examining the case of each shop and to decide about the need for its retention with reference to location, offtake, etc., and also taking into consideration the fact that the short-term paddy crop would be harvested shortly in the district. The Collector took action with reference to the above instructions and closed down 55 fair price shops with effect from 1st October 1957 out of the 109 shops that were functioning at the end of September 1957. There are thus 54 fair price shops functioning in Tirunelveli district at present.

It may be mentioned that the following areas have been declared as drought-affected areas is Tirunelveli district :—

1. Nanguneri taluk—(entire taluk).
2. Tirunelveli taluk—Madavakurichi and Gangaikondan firkas.
3. Sankarankoil taluk—Sankarankoil, Vasudevanallur and Neelidanallur firkas.
4. Tiruchendur taluk—Udangudi and Sattankulam firkas and four villages of Alwarthirunagari firkas.

[Sri M. Bhaktavatsalam] [2nd November 1957

Forty-nine shops were in the drought affected areas mentioned. Out of these 49 shops, only 15 were closed with effect from 1st October 1957 consequent on the general reduction in the number of Fair Price shops in the district. There are 34 Fair Price shops functioning in the drought-affected areas as against the total number of 54 shops in the whole district. Of these 34 Fair Price shops, 14 are in Nanguneri taluk, 8 in Tiruchendur, 9 in Sankarankoil taluk and 3 in Tirunelveli taluk.

It will be seen from the above, that out of the 54 Fair Price shops in the whole of Tirunelveli district, 34 shops or about 63 per cent of the total number, are located in drought and famine affected areas of the district. The Collector has therefore taken into due consideration the needs of these areas and has retained a large number of shops there.

It may be stated in this connection that compared to the number of Fair Price shops retained in the other deficit districts of the State since 1st October 1957, the existing number of 54 shops in Tirunelveli district, are sufficiently large and such a large number of shops have been retained only because of the adverse seasonal conditions in certain areas of the district already referred to.

Considering the fact that the total monthly quota of rice for the whole State is only about 4,000 tons, which has to be distributed among 477 fair price shops in the State, it may not be possible generally speaking to increase the existing number of shops in any district unless the Central Government allot a larger quota of rice.

It is observed from the prevailing open market prices of rice in various taluks of Tirunelveli district in the current month (October), that the prices range between Re. 0–12–0 and Re. 0–14–0 per Madras measure for *boiled rice II sort* and between Re. 0–12–9 and Re. 1 for *raw rice II sort*. The above prices cannot be said to be too high when compared to the prices prevailing in the other districts. It is further observed from the latest reports that on account of the recent rains, seasonal conditions have improved in the district and there is no room for anxiety. The Government will be prepared to consider the opening temporarily of one or two more shops in any particular locality where it is keenly fit.

## IV.—GOVERNMENT BILLS.

### (1) THE MADRAS VILLAGE PANCHAYATS (AMENDMENT) BILL, 1957—*cont.*

MR. SPEAKER : Yesterday we were considering the Village Panchayats Bill. The Hon. Minister had moved that the Bill be referred to a Select Committee. The hon. Member Mr. Palanisami had moved an amendment that the Bill be circulated for eliciting public opinion. The position therefore today is that the amendment of Sri Palanisami has to be put first to the vote of



2nd November 1957] [Mr. Speaker]

the House. (Sri Sattanatha Karalayar : He is not pressing his amendment). Well, I am not supposed to know what he is going to do. I am stating the position as I see it. If he does not insist, it is all right. But if Mr. Palanisami insists that his amendment should be put to vote, then it will be put to vote first and then the Minister's amendment to refer the Bill to a Select Committee will be put. In that case I would like the Hon. Minister to give me a list of members of the Select Committee. We shall now proceed.

The hon. Member Sri Govindasami was halfway through his speech yesterday.

I would like to know how many members would like to take part in this discussion. Shall we go on till 10–30? And shall we say that each hon. Member will take 5 minutes? In that case, about 15 members at 5 minutes each could speak. I believe that is agreeable?

* SRI A. GOVINDASAMY : சபைதலைவர் அவர்களே, நேற்றைய தினம் நான் பேசுகின்ற நேரத்தில் குறிப்பிட்டதுபோல், விக்கிரவாண்டியை அடுத்த ஆசூர் பஞ்சாயத்து போர்டு தலைவர் 8 ஆயிரம் ரூபாய் வரை கையாளப்பட்டிருந்தும் கூட இன்னும் அந்த பஞ்சாயத் தலைவரை நீக்க முடியாத நிலைமையில் இருந்து வருகிறது. அங்குள்ள மற்ற 6 அங்கத்தினர்களும் இதைப்பற்றி ஜில்லா பஞ்சாயத்து ஆபிஸருக்கு தெரிவித்தார்கள். அதன் பிறகு ஐ.எல்.பி. வரைக்கும் இதை தெரிவித்து அதன் பின்னால் இது சம்பந்தமாக ஒன்றும் வகுப்பு மாஜிஸ்ட்ரேட் கோர்டில் கேஸ் நடத்தி அதில் பஞ்சாயத் போர்டு அதிகாரத்தை உதவி தலைவரிடம் கொடுக்கவேண்டும் என்று முடிவு செய்தும், அதற்கு பஞ்சாயத் தலைவர் இணங்காமல் ஐ.எல்.பி. செய்த முடிவு தவறு என்று ஹைக்கோர்ட்டுக்கு போயிருக்கிறார். இந்த நிலைமை என் ஏற்படுகிறது என்றால், இந்த சட்டங்களில் பணம் கையாண்டாலும் உடனே நீக்க முடியாது என்ற நிலைமை இருக்கின்ற காரணத்தினால்தான், அதை ஒரு சாக்காக வைத்துக் கொண்டு ஹைக்கோர்ட்டுக்குப் போகிறார்கள். தலைவர் தவறு செய்தாலும் அல்லது மற்ற அங்கத்தினர்களின் நம்பிக்கையை இழந்தாலும் அந்த நேரத்தில் அந்த தலைவரை நீக்குவதற்கான வேண்டிய சட்டங்கள் இதில் இருக்கவேண்டும். மேலும் தேர்தல் நடக்கின்ற முறையில் ஒரே விதமான கொள்கையை அனுசரிப்பதில்லை. சட்டசபை தேர்தலுக்கும் பாராளுமன்ற தேர்தலுக்கும் சின்னம் தீட்டிய பெட்டிகள் தனித்தனியே வைத்து நடத்தப்படுகிறது. அதே நேரத்தில் ஜில்லா போர்ட், முனிசிபல் தேர்தல், மேஜர் பஞ்சாயத் தேர்தல்களில் ஒரே பெட்டியில் சின்னங்களில் கோடு போடக்கூடிய முறையை அனுசரிக்கப்பட்டு வருகிறது. மைனர் பஞ்சாயத்துகளில் கை தூக்குகிற முறை இருந்து வருகிறது. இதனால் பொதுமக்களுக்கு குழப்பம் ஏற்படுகிறது. சட்டசபை மக்கள் சபை தேர்தல்களில்கூட, ஜில்லா போர்டு, முனிசிபாலிட்டி, மேஜர் பஞ்சாயத்து போன்ற தேர்தல்களில் சின்னங்களில் கோடுபோட்டு பழகிய பொதுமக்கள் இதிலும் கோடுபோட்டு பல வோட்டுகளும் செல்லாமல் போய்விடுகிறது. ஆகவே எல்லா தேர்தல்களிலும், சட்டசபை தேர்தலாயிருந்தாலும் சரி, ஜில்லா போர்ட்டு அல்லது முனிசிபாலிட்டி அல்லது பஞ்சாயத்து தேர்தல் எல்லாவற்றிக்கும் ஒரே தேர்தல் முறையை கையாளவேண்டும் என்கின்ற காரணத்தினால்தான் இதை நான் வற்புறுத்தி சொல்ல விரும்புகிறேன். முன்பு பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட காலத்தில் பல குழப்பங்களும் கட்சிப் பூசல்களும் ஏற்பட்டன என்ற காரணத்தால் அங்கத்தினர்களால் தேர்ந்தெடுக்கப்படலாம் என்ற முறையை இப்போது அரசாங்கம் கொண்டுவருகிறது. கட்சிப் பூசல்கள் எப்போதும் இருக்கத்தான் செய்யும். எந்த ஊரிலும், கட்சி பிரதிகட்சி இல்லாமல் ஏகமனதாக யாருமே தேர்ந்தெடுக்கப்படவில்லை. காங்கிரஸ் கட்சியில் அனுதாபம் உள்ளவர்களும்

காங்கிரஸ் கட்சியிலுள்ளவர்களும் அவர்களுடைய கட்சி உறுப்பினர்களை தங்கள் அபேட்சகராக நிறுத்துகிறார்கள். அதேபோலத்தான், மற்ற கட்சிக்காரர்களும் அங்கே தங்களுக்கு செல்வாக்கு இருந்தால் தங்கள் கட்சிப் பெயரால் நிறுத்தாவிட்டாலும் தங்கள் கட்சி ரூபத்தில் தங்களுடைய அபேட்சகரை நிறுத்துகிறார்கள். அவர்கள், "அபிஷியல் காண்டிடேட்" போடாவிட்டாலும் தங்கள் கட்சிரூபமாக நிறுத்துகிறார்கள். ஆகையால் பஞ்சாயத்து போர்டு தலைவர் பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்படும்போது குழப்பம் வருகிறது என்றும், அங்கத்தினர்களால் தேர்ந்தெடுக்கப்படும்போது குழப்பம் வராது என்றும் சொல்வது தவறு. பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டால் பொதுமக்களுடைய நம்பிக்கையைப் பெற்ற நல்ல பிரதிநிதி வரமுடியும். ஆனால் அங்கத்தினர்களால் தேர்ந்தெடுக்கப்படும்போது பணமுள்ளவர்கள்தான் வரமுடியும் என்பது நான் சொல்லாமலேயே ஆட்சிபீடத்தில் இருப்பவர்களுக்குத் தெரியும். 500—1,000 ரூபாய் செலவழிப்பவர் சுலபமாகப் பஞ்சாயத்துபோர்டு தலைவராக வர முடியும். இதன் காரணமாக பொதுமக்களுடன் தொடர்பு கொண்டு பொதுஜன சேவை செய்பவர்கள் வரமுடியாத நிலைமை ஏற்படுகிறது. ஆகவே பொது ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்படும்போது கட்சிப் பூசல்கள் இருக்கும் என்று அரசாங்கம் கருதக்கூடாது என்று சொல்லிக் கொள்கிறேன்.

மேலும், ரகசிய வோட்டு முறையை வற்புறுத்துகிறேன். காரணம், இந்த முறையில் பணத்திற்காக ஏழை வோட்டுப் போடமாட்டான்; ஜாதி ஹிந்து-ஆதித்திராவிடன் போட்டி ஏற்படாது; மெஜாரிட்டி வரும்போது சண்டையும் பூசலும் ஏற்படும் நிலைமை இருக்காது. ஆகவே ரகசிய வோட்டு முறையைக் கொண்டுவரவேண்டும் என்று மீண்டும் வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

**Sri M. R. KANDASWAMI MUDALIAR**: கனம் சபாநாயகர் அவர்களே! இப்போது கொண்டுவந்துள்ள பஞ்சாயத்து மசோதாவை ஆதரித்து சில வார்த்தைகள் பேச முன்வந்துள்ளேன். இந்த மசோதாவைப் பொறுக்குக் கமிட்டிக்கு விட்டிருப்பதால், பஞ்சாயத்துத் தலைவர்களை பஞ்சாயத்து சபை அங்கத்தினர்களால் தேர்ந்தெடுப்பதா அல்லது பொது மக்களால் தேர்ந்தெடுப்பதா என்பதை அங்கே பார்த்துக்கொள்வார்கள் என்ற காரணத்தால் அதைப்பற்றி நான் இப்போது எதையும் சொல்ல விரும்பவில்லை. பஞ்சாயத்துகளில் சில குறைகள் இருக்கின்றன. அவைகளை நீக்குவதற்கு வகை செய்யவேண்டுமென்பதற்காக அவைகளை சர்க்காரின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். கிராமப் பஞ்சாயத்துப் பிரதேசங்கள் சுகாதார வசதிகளுடன் இருக்கவேண்டியது மிகவும் முக்கியம். எல்லா கிராமங்களும் சுகாதார வசதிகளுடன் இருக்கவேண்டும் என்பதற்காக ஒவ்வொரு கிராமத்திலும் கிராமப் பஞ்சாயத்து சபை ஏற்படுத்தப்பட்டது. போதிய வருவாய் உள்ள பல பஞ்சாயத்துக்களில் தெருக்களை பெருக்கி சுத்தம் செய்யப்படுவதில்லை. இது விஷயமாக, "அரசாங்கம் சட்டம் அப்படி இருக்கிறது. நாங்கள் தெருக்கள் பெறுக்கப்படுவதற்கு ஏற்பாடு செய்வதற்கு சட்டத்தில் விதி இல்லை" என்று பஞ்சாயத்து போர்டு தலைவர்கள் சொல்கிறார்கள். அந்த கிராமங்களில் பொது இடத்தில் ரேடியோ வசதி செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த வசதிக்கு வகைசெய்யும் சட்டமானது சுகாதார வசதிக்கு வகை செய்யவேண்டும். ஆகவே இந்தக் குறையை நிவர்த்திப்பதற்கு இந்த மசோதாவில் வழிவகைகள் செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு, இன்னும் சில விஷயங்களிலும் பஞ்சாயத்து போர்டு தலைவர்களிடம் அதிகாரம் இல்லை என்று சொல்கிறார்கள். அதுபற்றி ஆபீசர்களிடம் சொன்னால் அவர்களும் அதிகாரம் இல்லை என்று சொல்கிறார்கள். கலெக்டரிடம் கேட்டால் சுகாதார இலாகாவையோ ஜில்லா பஞ்சாயத்து போர்டு ஆபீசரையோ கேட்கவேண்டும் என்று அவர் சொல்கிறார். ஒரு விஷயத்தைக் குறிப்பாகத் தெரிவிக்க விரும்புகிறேன். உதாரணமாக, என் தொகுதியில் ஆட்டையாம்பட்டி கிராமத்தில், ஒரு ஆள் அளவிற்குத் தண்ணீர் தேங்கியிருக்கும் சாக்காடை 7–8 ஆண்டுகளாக இருக்கிறது.





அந்தச் சாக்கடைக்குப் பக்கத்தில் பள்ளிக்கூடங்களும் இருக்கின்றன. அதிலிருந்து சுகாதாரக்கேடான முறையில் துர் நாற்றம் வருகிறது. பள்ளிக்கூட மாணவர் மன்றத்தில்கூட இந்தக் குறையை நீக்கவேண்டும் என்று தீர்மானம் போட்டிருக்கிறார்கள். அந்த இடத்தில் புறம்போக்கு நிலத்தைத் தனக்குச் சேர்த்துக்கொள்ள ஆசைப்படுவதால், பஞ்சாயத்து போர்டு தலைவர் அங்கே நல்ல சாக்காடையைக் கட்டுவதற்கு மறுத்துக் கொண்டிருக்கிறார். ஜில்லா பஞ்சாயத்து போர்டு ஆபீஸரிடம் சொன்னால், "பஞ்சாயத்து போர்டு தலைவரை அதிகமாக நிர்பந்தித்து நடவடிக்கை எடுப்பதற்கு எனக்கு அதிகாரம் இல்லை என்று அவர் சொல்லுகிறார். சுகாதார இலாகாவில் சொன்னால் நாங்கள் நல்ல உத்திரவு போடலாமே தவிர, அதை நிறைவேற்றவில்லையானால் நடவடிக்கை எடுப்பதற்கு எங்களுக்கு அதிகாரம் இல்லை என்று சொல்லுகிறார்கள். பிளானிங் போர்ட் கமிட்டி மீட்டிங்கின்போதுகூட இதைப்பற்றிச் சொன்னேன். ஆனால், நாளதுவரையில் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. சாக்காடை தேங்கும் இடத்தில் குடி தண்ணீர் கி[illegible]று இருக்கிறது. அந்தக் கிணற்றுத் தண்ணீர் சாக்காடைத் தண்ணீரால் பாதிக்கப்பட்டு அங்குள்ளவர்களுக்குப் பல வியாதிகள் வருகின்றன. சமீபத்தில் அங்கே இதன் காரணமாக 40—50 பேர்கள் வைசூரி நோயினால் பீடிக்கப்பட்டு இறந்திருக்கிறார்கள். இந்தக் குறையை நிவர்த்திப்பதற்கான நடவடிக்கை எடுப்பதற்கு தங்களுக்கு அதிகாரம் இல்லை என்று பஞ்சாயத்து போர்டு ஆபீசரும் பஞ்சாயத்து போர்டு தலைவரும் சொல்வதால் அங்கே சுகாதாரக்கேடான நிலைமை இருக்கிறது. அதற்கான அதிகாரங்களை ஜில்லா பஞ்சாயத்து ஆபீசர்களுக்கும், சுகாதார இலாகாவிற்கும், பஞ்சாயத்து போர்டாருக்கும் சட்டரீதியாக கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், இப்போது பஞ்சாயத்து போர்டு தலைவரைப் பொது மக்களால் தேர்ந்தெடுக்கவேண்டும் என்ற கருத்து பெரும்பான்மையானவர்களுக்கு இருப்பதால், இந்த மசோதா பொறுக்குக் கமிட்டிக்கு விடப்படும் என்று கனம் அமைச்சர் அவர்கள் சொன்னதை மனதிற்கொண்டு, இந்த மசோதாவை நான் ஆதரிக்கிறேன்.

***Sri S. SADASIVAM**: கனம் சபாநாயகர் அவர்களே, இன்று கனம் அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கும் இந்த மசோதாவை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். முதலில், கிராமப் பஞ்சாயத்துக்களின் காலம் 5 ஆண்டுகளாக நீடிக்கப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது என்று சொல்லிக்கொள்கிறேன். நமது நாட்டிலுள்ள கிராமங்கள் மிகப் பிற்போக்கான நிலைமையில் இருக்கின்றன. அவைகளை நல்ல முறையில் வளர்ச்சியடையும்படி செய்வதற்காக அரசாங்கம் நல்ல திட்டங்கள் மூலம் நல்ல முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறது. இப்போது அரசாங்கம் சமுதாய நலத் திட்டத்தின் மூலமாகவும் தேசிய விஸ்தரிப்புத் திட்டங்களின் மூலமாகவும் பல அபிவிருத்தி வேலைகள் செய்யவிருக்கிறது. அவைகளுடன் இணைந்து கிராமப் பஞ்சாயத்துக்களின் மூலம் போடப்படும் திட்டங்களை மூன்று வருட காலத்திற்குள் நிறைவேற்றுவது கஷ்டமாக இருந்தது; இந்த நிலையில் பஞ்சாயத்து போர்டுகளின் காலத்தை 5 வருடங்களாக நீடித்திருப்பது மிகவும் வரவேற்கத்தக்கது.

அங்கத்தினர்களின் மூலமாக பஞ்சாயத்து போர்ட்டு தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவது மிகவும் வரவேற்கத்தக்கது. நான் ஒரு பஞ்சாயத்து போர்ட்டு தலைவன் என்ற முறையில் இதை வற்புறுத்த விரும்புகிறேன். ஒரு பஞ்சாயத்து போர்டு தலைவர் ஒரு கட்சியைச் சேர்ந்தவராகவும் அந்த சபையின் பெரும்பான்மையான அங்கத்தினர்கள் வேறு கட்சியைச் சார்ந்தவராகவும் இருந்தால், அப்போது பெரும்பான்மையான அங்கத்தினர்களின் மனப்போக்கிற்கும் தலைவரின் மனப்போக்கிற்கும் இடையே முரண்பாடு இருக்கும் காரணத்தால் நல்ல காரியங்களை செய்ய முடியாமல் போகிறது. இதுபோல் வருமா என்று கேட்கலாம், நிச்சயமாக வரலாம். பல இடங்களில் இப்படி நடந்திருக்கிறது. "மக்களே தேர்ந்

[Sri S. Sadasivam] [2nd November 1957

தெடுத்தால்தான் நல்ல முறையில் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். அங்கத்தினர்கள் மூலமாகத் தேர்ந்தெடுத்தால் பணம் கொடுத்து வோட்டு வாங்கப்பட்டு தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுவிடுவார்கள்" என்று சொல்லுகிறார்கள்.

ஆனால், அவர்கள் நேரடியாகத் தேர்ந்தெடுக்கும்போது அங்கத்தினர்களுக்குக் கொடுப்பதை விட அதிகமான தொகை அங்குள்ள மக்களுக்குக் கொடுத்து பிரஸிடெண்டாக வருவதற்கு முயன்று அந்த மாதிரியான சம்பவங்கள் ஏற்படும் என்ற காரணத்தை ஏனோ அவர்கள் புரியவில்லை. நேரடியாக அங்கத்தினர்களே தலைவரைத் தேர்ந்தெடுப்பது நல்லதென்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். பஞ்சாயத்து கோர்ட்டுகள் என்ற முறையிலே சில தேர்தல்கள் நடக்கின்றன. இந்தக் கோர்ட்களுக்குத் தேர்தல் சட்ட விதிகள் வேறுவிதமாக இருக்கின்றன. அதிலே இன்னார்தான் வோட்டுப் போடுவதென்பது கிடையாது. அந்தப் பகுதியிலிருந்தும் மக்கள் வந்து கைதூக்கி வோட்டுப்போடலாம். அதனால் அதற்கு சமீபத்திலிருந்து எல்லா மக்களும் வந்து கூடுகிற காரணத்தால் தேர்தல் நிம்மதியாக நடைபெற முடியாமல் இருக்கிறது. அந்த மாதிரித் தகராறில் என் பகுதில் உள்ள கரூரில் ஒரு தேர்தல் நடைபெறாமல் இருக்கும் ஒரு சம்பவத்தைச் சொல்ல விரும்புகிறேன். தேர்தலுக்கு ஒரு தேதி நிர்ணயிக்கப்பட்டது. இரு கட்சியினரும் ஏராளமாகக் கூட்டி ஒரே திரளாக வந்து தொல்லையாகிப் போய் விட்டது, ஏராளமாகக் கூடினார்கள். ஒன்றும் செய்ய முடியாமல் இன்னொரு தேதி நிர்ணயித்து ஒரு பெரிய மைதானத்தில் தேர்தல் நடத்துவதற்காக ஒத்திப் போடப்பட்டது. அன்றும், இன்னார்தான் வரவேண்டுமென்று நடைமுறைகள் இல்லாததால் பக்கத்து கிராம மக்களும் வந்து ஒன்றாகத் திரண்டார்கள். அதன் மூலமாகப் பெரும் குழப்பம் ஏற்பட்டு தேர்தலே நடக்க முடியாத அளவுக்குப் போய்விட்டது. எப்போது இந்தத் தேர்தலை எந்த விதத்திலே நடத்தி ஒரு இறுதி முடிவைக் காண்பது என்று தெரியாமல் இருக்கிறது. இந்த விதத்தில் இருப்பதால், நல்ல முறையிலே பஞ்சாயத்துத் தேர்தல்கள் நடக்க, ரகசியவாக்கெடுப்பு மூலமாக தேர்தல் நடத்தலாம், அதனால் அரசாங்கத்திற்கு அதிக செலவாகும் என்பது உண்மை, இவைகளை நன்றாக கவனித்து ஒரு முடிவு காணவேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த மசோதாவை ஆதரித்து என் வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

*SRI K. RAMACHANDRAN : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த பஞ்சாயத்து சட்டம் மிகவும் முக்கியமான ஒரு சட்டம். இந்த சட்டத்தைப் பொருத்த வரையில் சமீபத்தில் இந்தச் சபையின் முன் வரவிருக்கின்ற வெள்ளை அறிக்கையிலும் இதைப் பற்றிக் குறிப்புகள் இருக்கின்றன. இந்த சட்டத்தின் முக்கியமான ஷரத்துகள், மெம்பர்களின் பதவிக் காலம், பிரஸிடெண்ட் எலெக்ஷன், இந்த இரண்டும்தான் முக்கியமான பிரச்னைகள். இந்த இரண்டையும் பொருத்த வரையில் வெள்ளை அறிக்கையில் மெம்பர்களின் காலத்தை 3 வருஷத்திலிருந்து 5 வருஷமாக்கியும், பிரஸிடெண்ட்டை மெம்பர்கள தேர்ந்தெடுப்பார்கள் என்றும் விவரங்கள் கொடுக்கப்படுகின்றன. சீக்கிரத்திலே இந்த வெள்ளை அறிக்கை இந்தச் சபையின்முன் விவாதத்திற்கு வரவிருக்கிறது. அப்படி விவாதிக்கும்போது இந்தச் சட்டத்தைப் பற்றி விவாதித்து நல்ல முறையிலே முடிவு காணலாம். ஆகையால் இப்போது அவசரமாகக் கொண்டு வரவேண்டியது அவசியமா என்று சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

இதற்குச் சொல்லும் ஒரு காரணம் சமீபத்தில் வருகிற எலெக்ஷனைத் தள்ளிப் போடக் கூடாது என்று சொல்லப்படுகிறது. எலெக்ஷனைத் தள்ளிப் போட்டால் ஒன்றுமில்லை. வரப்போகிற வெள்ளை அறிக்கை மீதான விவாதத்தில் நல்ல விதத்தில், நல்ல முறையில், ஒரு நல்ல ஸ்தாபனமாகச் செய்வதற்கு ஆர அமர யோசித்துப் பார்த்துச் செய்யலாம் என்று சொல்லிக்கொள்கிறேன்.

முதலாவது பிரச்னையைப் பொருத்தவரையில் மெம்பர்களின் காலத்தை 3 வருஷத்திலிருந்து 5 வருஷமாக அதிகப் படுத்தப்போகிறது ? என்றால் எதற்கு 5 வருஷமாக அதிகப் படுத்துவது என்பது தெரியவில்லை



2nd November 1957] [Sri K. Ramachandran]

ஐந்து வருஷமாக ஆக்கினால், திட்டங்களை சீக்கிரமாகவும் உற்சாகத்துடனும் நிறைவேற்றுவதற்கு பதிலாகச் சோம்பேரித்தனமாக இருக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன். மூன்று வருஷமாக இருந்தால் எல்லா போர்ட் மெம்பர்களும் மூன்று வருஷத்திற்குள் எந்த விதமான நன்மைகள் செய்யலாம் என்று ஆத்திரத்துடனும், அக்கரையுடனும் முயற்சியுடனும் செய்யக்கூடிய நன்மைகள் ஏற்படும். மற்றவர்களும் சீக்கிரமாக வரக்கூடிய ஒரு சந்தர்ப்பம் ஏற்படும். அப்போதைக்கப்போது பரிசீலனை செய்ய ஒரு சந்தர்ப்பம் கிடைக்கும். இப்போதிருப்பதுபோல் மூன்று வருஷமேயிருப்பது நல்லது. ஐந்து வருஷமாக்குவது அவசியமில்லையென்று சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக எலெக்ஷனைப் பொருத்தவரையில் 1950-ம் வருஷ பஞ்சாயத்துச் சட்டத்திற்கு முன்னால், அங்கத்தினர்களால் தெர்ந்தெடுக்கப்பட்ட பிரஸிடெண்டே இருந்தார். அதற்குப்பின்னால் மக்களே நேரடியாக பிரஸிடெண்டைத் தேர்ந்தெடுத்துவிடுவது நல்லது என்று 1950-ல் வருஷத்தில் சட்டம் வந்தது. 1950-ம் வருஷத்துச் சட்டத்தை மாற்றி பிரஸிடெண்டை அங்கத்தினர்களே தேர்ந்தெடுக்கவேண்டுமென்று சொல்ல அதில் என்ன வசதியிருக்கிறதென்று தெரியவில்லை. காரணம் என்ன சொல்லுகிறார்கள் என்றால் கிராமங்களில் சண்டை சச்சரவுகள் ஏற்படுகின்றன என்று. பத்து, 15 அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்கும் போதும் கட்சி சண்டைகள், கட்சிப் பூசல்கள் முதலியன வந்துவிடும். எந்தக் கட்சிகளிலும் சம்பந்தப்படாத மக்கள், மக்களுக்குச் சேவை செய்ய வேண்டுமென்ற எண்ணமுள்ள நல்ல மனிதர்கள் இருக்கிறார்கள் என்று ஒவ்வொரு இடங்களில் நாம் அனுபவபூர்வமாகப் பார்க்கிறோம். அவர்கள் பொது மக்களுடைய ஆதரவைப் பெற்றிருக்கிறார்கள். ஆனால் குறிப்பிட்ட கட்சியின் ஆதரவைப் பெற்றிருக்கமாட்டார்கள். ஜனங்கள் நேரடியாகத் தேர்ந்தெடுப்பதென்ற முறை இருக்குமானால் இந்த போர்டிலே அப்படிப் பட்டவர்கள் பிரஸிடெண்டாக வர ஒரு வாய்ப்பு இருக்கும். பஞ்சாயத்துக்களில் இருந்து சேவை செய்யக்கூடிய சந்தர்ப்பம் ஏற்படும். ஜனநாயக முறையில் ஜனநாயகத்தை எந்தெந்த ஸ்தாபனங்களுக்கெல்லாம் விரிவாக்கவேண்டுமென்று நாம் முயற்சி செய்கின்ற நேரத்தில், ஜனநாயகம் இருக்கும் ஸ்தாபனத்தை, மக்கள் தேர்ந்தெடுக்ககக்கூடிய ஒரு போஸ்டை 10 மெம்பர்கள் தேர்ந்தெடுத்துவிடலாம் என்று சொல்லுவது பொருத்தமாகத் தெரியவில்லை. அதைவிட 10 மெம்பர்களுக்குள் ஒரு பிரஸிடெண்டை நாமினேட் செய்யலாம். அந்த மெம்பர்களுக்குள் ஒருவரை சர்க்காரே நியமித்துவிடலாம். இன்னும் கொஞ்சம் போனால் அந்தப் பத்து மெம்பர்களையும் சர்க்காரே நாமினேட் செய்துவிடலாம் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஜனநாயகத்தை அனுசரித்தவரையில் அந்தப் பிரஸிடெண்ட் மக்களுக்குத் தேவையாக இருக்கக்கூடியவராயிருக்கவேண்டுமென்பதை ஒப்புக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுவும் போக இந்தப் பணம் கொடுக்கும் விஷயம் எல்லோருக்கும் தெரியும். எலெக்ஷன் என்றால் பணம் இருக்கும். எலெக்ஷனும் பணமும் ஒன்று சேர்ந்தவைகள். எல்லோரும் பணம் கொடுத்து வோட்டுப் பெறுகிறார்கள். நம்மில் ஒப்புக்கொள்ளாதவர்கள்கூட இந்த முறையை கையாளவேண்டிய அவசியம் ஏற்படுகிறதென்பதை ஒப்புக்கொள்ளவேண்டியிருக்கிறது. அப்படி இருக்கும்போது, அதிகமான பேர் தேர்ந்தெடுப்பதாயிருந்தால், பணம் அதிகமாகக் கொடுக்கக் கூடிய நிர்பந்தம் ஏற்படுமானால் அதிகம் பேர் பணம் கொடுக்க முன் வரமாட்டார்கள். பத்து மெம்பர்கள்தான் தேர்ந்தெடுப்பதென்றிருந்தால் அந்தப் பத்து பேர்களுக்கும் நிறைய பணம் கொடுத்து தேர்ந்தெடுக்கப்பட முயற்சிப்பார்கள். 10,000 பேருக்குப் பணம் கொடுத்து பிரசிடெண்ட் ஆவது எல்லோருக்கும் சாத்தியமல்ல. ஒரு சிலருக்கு வேண்டுமானால் அது சாத்தியமாகலாம். அதுவும் போகப் போக முடியாமல் இருக்கும்.

ஆகவே இந்தக் காரணங்களைக்கொண்டு மக்களே பிரஸிடெண்டைத் தேர்ந்தெடுக்கவேண்டுமென்று சொல்லிக்கொண்டு, இந்த ஷரத்துக்களைப் பற்றி வெள்ளை அறிக்கையை விவாதிக்கும்போது நல்லவிதமாக முடிவுக்கு வரலாம், இந்த மசோதாவுக்கு இப்போது தேவையில்லை, அதைத் தள்ளிப் போட்டுக்கொள்ளலாம் என்று சொல்லிக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

[2nd November 1957

**SRI K. S. SUBRAMANIA GOUNDER** : சபாநாயகர் அவர்களே, இந்தப் பஞ்சாயத்து சட்டத் திருத்த மசோதாவை ஆதரிக்கும் முறையில் இரண்டொரு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். இப்போது மந்திரியார் அவர்களுடைய தீர்மானமே இதை ஒரு ஸெலெக்ட் கமிட்டிக்கு விட வேண்டுமென்றுதான். அதற்குள்ளாக அவசரப்பட்டுச் செய்கிறார்கள் என்று சொல்லவேண்டியது அவசியமில்லை. இப்போது பஞ்சாயத்தின் பதவிக் காலம், மூன்று வருஷ காலம் இருக்கவேண்டுமா, அல்லது ஐந்து வருஷம் இருக்கவேண்டுமா என்றால், எல்லோரும் ஐந்து வருஷ காலமாக இருப்பது நல்லது என்ற முறையில் பெரும்பாலான எதிர்க்கட்சியில் உள்ளவர்கள் கூட ஒப்புக்கொள்கிறார்கள். சாதாரணமாக சட்ட சபை அங்கத்தினர்களின் காலம் ஐந்து வருஷகாலமாக இருக்கும்போது ஏன் பஞ்சாயத்து போர்ட் மெம்பர்களின் பதவிக்காலம் ஐந்து வருஷமாக இருக்கக்கூடாது என்று கேட்கிறேன். ஐந்து வருஷமாக இருப்பதென்பதுதான் நல்ல முறையிலே யிருக்கும். சதாரணமாக எந்தக் காரியத்தைச் செய்வதாயிருந்தாலும், அதற்குத் திட்டம் வகுத்து நடத்துவதற்கு சாதாரணமாக ஐந்து வருஷங்கள் அவசியம்.

மற்றொன்று இதிலே கண்டிருப்பது பஞ்சாயத்துக்கள் இல்லாத இடங்களில் கமிட்டி நியமித்து நடத்தவேண்டும் என்பது. அதை நான் வரவேற்கிறேன். பஞ்சாயத்து இல்லாத கிராமங்களில், கிராமத்தின் வசதிகளையும், கிராமத்தின் நலன்களையும் கவனிக்க யாராவது இருக்கிறார்களா என்று பார்த்தால் இல்லையென்று சொல்லலாம். ஆகையால்தான் பஞ்சாயத்துக்கள் இல்லாத கிராமங்களில் இந்தக் கமிட்டியை நியமிப்பது முக்கியமான காரியம்.

மூன்றாவதாக இப்பொழுது இருக்கக்கூடிய முக்கியமான பிரச்னை பஞ்சாயத்துத் தலைவர்களை நேரடியாகத் தேர்ந்தெடுப்பதா அல்லது அங்கத்தினர்கள் மூலமாக தேர்ந்தெடுப்பதா என்பதைத்தான் சர்ச்சை செய்யக்கூடியதாக இருக்கிறது. ஏற்கெனவே அங்கத்தினர்களைக்கொண்டுதான் பஞ்சாயத்துத் தலைவர்களைத் தேர்ந்தெடுத்துக்கொண்டு வந்தார்கள். பிறகு அது சரியல்ல என்ற முறையில் மெம்பர்களே தேர்ந்தெடுக்காது நேரடியாக தேர்ந்தெடுக்ககூடிய முறையில் சட்டத்தைத் திருத்தினார்கள். மறுபடியும் அங்கத்தினர்களே தேர்ந்தெடுக்க வேண்டுமென்று ஒரு திருத்தத்தை அரசாங்கம் கொண்டு வந்திருக்கிறார்கள். அப்படிக் கொண்டுவந்திருக்கிறார்கள் என்றால் அதில் அவசியம் இல்லாமல் அரசாங்கம் செய்து விட்டார்கள் என்று யாரும் நினைக்க வேண்டியதில்லை. கிராமங்களில் பஞ்சாயத்துக்களெல்லாம் முன்பு இருந்ததுபோல் இல்லை. இப்பொழுது பஞ்சாயத்துகளுக்கு எல்லாம் அதிகப்படியான அதிகாரம் கொடுத்து அதிகப்படியான காரியங்களைச் செய்யவேண்டும் என்று அரசாங்கம் கருதுகிறார்கள். இதற்கு என்று ஒரு வெள்ளை அறிக்கையையும் தயாரித்து சமிர்ப்பித்திருக்கிறார்கள். கிராம பஞ்சாயத்துக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருப்பது என்பது பஞ்சாயத்து தலைவருக்கு அல்ல என்பதை சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். பஞ்சாயத்துக்கு பூரண அதிகாரம் இருக்கவேண்டும், பஞ்சாயத்து நல்ல வேலை செய்யக்கூடிய முறையில் ஏற்படவேண்டும் என்பதற்காக அப்படி அமைத்திருக்கிறார்கள். பஞ்சாயத்து போர்டு மெம்பர்களுக்கும் பஞ்சாயத்து தலைவருக்கும் தொடர்பு இல்லாத நிலையிலும் அதே சமயத்தில் தலைவருக்கும் மெம்பர்களுக்கும் அதிகப்படியாக தொடர்பு இல்லாத வகையில் இருந்து வருகிறது. ஆகவே இந்த நிலை மாறவேண்டுமென்றால் பஞ்சாயத்துக்களுக்கு பூரண அதிகாரம் இருக்கிற காரணத்தால் பஞ்சாயத்து மெம்பர்களே தங்களுடைய தலைவர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டியது அவசியம் இருக்கிறது. அப்பொழுதுதான் பஞ்சாயத்து நல்ல காரியங்களைச் செய்யமுடியும் என்று கருதுகிறார்கள். பஞ்சாயத்து தலைவர்களை மெம்பர்கள் தேர்ந்தெடுக்காமல் ஜனங்களே தேர்ந்தெடுக்கக்கூடிய முறையில் இருந்தால் மெம்பர்சளுக்கும் தலைவருக்கும் தொடர்பு இல்லாமல் போய்விடுகிறது. மெம்பர்களே தலைவர்களைத் தேர்ந்தெடுத்தால் பஞ்சாயத்து கிராமங்களுக்கு நல்ல காரியங்களைச் செய்ய முடியும் என்பதற்காக இந்த முறையைக்கொண்டு வந்திருக்கிறார்கள்.



2nd November 1957] [Sri K. S. Subramania Gounder]

மற்றொரு விஷயத்தையும் குறிப்பிட விரும்புகிறேன். இப்பொழுது ஒவ்வொரு பஞ்சாயத்துக்கும் ஒவ்வொரு எக்சிகியூட்டிவ் ஆபீசரைப் போட்டிருக்கிறார்கள். அவர்கள் பஞ்சாயத்தின் கீழ் வேலை செய்யக்கூடிய அளவில் இருக்கவேண்டும். அந்த ஆபீசர்களுடைய கான்பிடென்ஷியல் ரிப்போர்ட்டை பஞ்சாயத்துத் தலைவர்களே எழுதும் அளவில் அவர்களுக்கு அதிகாரம் கொடுக்கப்படவேண்டும். அப்பொழுதுதான் அந்த ஆபீசர்கள் பஞ்சாயத்து தலைவர்களின் கீழ் நல்ல முறையில் வேலை செய்வதற்கு சௌகர்யமாக இருக்கும் என்பதை சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

* **SRI R. KRISHNASAMI NAIDU** : கனம் சபாநாயகர் அவர்களே, பஞ்சாயத்துபோர்டு, முனிசிபாலிட்டி, ஜில்லா போர்டு முதலிய ஸ்தல-ஸ்தாபன நிர்வாகங்களைச் சீர்திருத்தி அமைப்பதற்காக நமக்கு முன்னால் அரசாங்கத்தார் ஒரு வெள்ளை அறிக்கையை சமர்ப்பித்திருக்கிறார்கள். இதைப்பற்றி இரண்டு தினங்களாக இந்த சபையில் ஆலோசனை செய்யப்பட்டு வருகிறது. அதன் பிறகு அது சட்டமாக்கப்படவேண்டும் என்பதற்காகவும் அதற்கு முன்னால் இதைப்பற்றி விவாதிக்கவும் சட்டமாக்குவதற்கு முன்னதாக அதன் நிர்வாகத்தில் சீர்திருத்தம் செய்வதற்கு இப்படிப்பட்ட ஒரு பிரேரணை இப்பொழுது நம் முன்னால் வைக்கப்பட்டிருக்கிறது. அதைப்பற்றி பல அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள். அதில் தலைவரைத் தேர்ந்தெடுக்கும்போது மீண்டும் அங்கத்தினர்களே தேர்ந்தெடுக்கவேண்டும் என்ற திருத்தத்தைக் கொண்டுவந்திருக்கிறார்கள். அதை நான் வெகுவாக ஆதரிக்கிறேன். இதற்கு முன்பு இருந்த விதிகள் கவர்ச்சிகரமாக இருந்தாலும் பொதுமக்கள் தங்களுடைய பஞ்சாயத்துத் தலைவர்களை தாங்களே தேர்ந்தெடுக்கவேண்டும் என்ற நிலையை அனுபவத்துடன் பார்க்கும்போது அது இப்பொழுதுள்ள பஞ்சாயத்து முறைக்கு உகந்தது இல்லை என்று கருதப்பட்டது. அப்படி பொது மக்களால் தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட அவர்கள் எல்லோரும் என்ன நினைக்கிறார்கள் என்றால் தங்களுக்கு சர்வாதிகாரம் வந்துவிட்டது என்று நினைத்து மெம்பர்களுடன் ஒத்துழைக்காமலிருக்கிறார்கள். மெம்பர்களுடன் ஒத்துழைக்கவேண்டிய அவசியம் இல்லை என்று நினைக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலைமையை உண்டு பண்ணிவிட்டால் அங்கே தலைவர் சரிவர வேலை செய்ய முடிவது இல்லை. ஒற்றுமை இல்லாமல் போய் விடுகிறது. காரியங்களும் சரிவர நடைபெறுவது இல்லை. ஆகவே அங்கத்தினர்களே தலைவர்களைத் தேர்ந்தெடுப்பது சிறந்த முறை என்பதை நானும் தெரிவித்துகொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக வெள்ளை அறிக்கையின் அடிப்படையிலேயே பின்னால் நாம் சட்டம் கொண்டுவரப்போகிறோம். அந்த சந்தர்ப்பத்தில் இந்த தேர்தல் முறையை இன்னும் கொஞ்சம் விரிவாக ஆலோசிக்க வேண்டியதாக இருக்கும். அதற்கு இப்பொழுதுள்ள மந்திரி சபையும் சகோதர அங்கத்தினர்களும் ஒத்துழைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். வினோபாஜி அவர்கள் சில வருஷங்களாக கிராமங்களில் சுற்றுப்பிரயாணம் செய்யும்போது கிராமங்களில் எப்படி தேர்தல் நடைபெறவேண்டும் என்பதைப்பற்றி சொல்லிக்கொண்டு வருவது எல்லோருக்கும் தெரியும். அதைப்பற்றியே அவர் போகும் இடங்களிலெல்லாம் சொல்லிக்கொண்டே வருகிறார். கிராமங்களை சிறு சிறு பகுதிகளாக அமைத்து அந்தந்தப் பகுதிகளில் பஞ்சாயத்துக்களை அமைத்து தேர்தலில் அம்முறைகளை அனுஷ்டித்து வேலைசெய்யவேண்டும். அந்த முறை எப்படி வேலை செய்கிறது என்று பார்த்து அனுபவித்து அதன் பிறகு அங்கெல்லாம் சட்டம் செய்யவேண்டும். எந்த அளவுக்கு அங்கேயெல்லாம் வேலை செய்கிறது என்று பரீட்சார்த்தமாகப் பார்க்கவேண்டும். வெள்ளை அறிக்கையின்மீது பிற்பட்டு சட்டம் செய்யும்போது இதையும் கவனத்தில் எடுத்துக்கொண்டு அதன்படி இப்பொழுது முதற்கொண்டே அந்த அடிப்படையில் சட்டத்தை திருத்தி அமைத்துக் கொள்ள நடவடிக்கைகள் எடுத்துகொள்ளவேண்டும். சட்டமாகக் கொண்டு வருவதற்கு முன்னால் கூட அங்கேயெல்லாம் இந்த தேர்தல் முறையை அனுஷ்டித்து அது எப்படி வேலை செய்கிறது என்று பார்த்து அதன்படி திருத்தம் கொண்டு வரவேண்டும். அதற்கு என்று சில கிராமங்களை

[Sri R. Krishnasami Naidu] [2nd November 1957

பரீட்சார்த்தமாக எடுத்துக்கொண்டு வேலை செய்யவேண்டும். அந்த இடங்களில் எல்லோருக்கும் ஒத்துழைக்கும் மனப்பான்மை இருக்கவேண்டும். இதை இந்த மந்திரி சபை கவனத்தில் எடுத்துக்கொண்டு அதற்கு ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இன்றைக்கு பஞ்சாயத்துக்களில் தணிக்கை செய்வதற்கு அதிகப்படியான கால தாமதம் ஏற்படுகிறது. எந்த தலைவர்மீதாவது கையாடல் சம்பந்தமாக நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டுமானால் அந்த தலைவர் தன்னுடைய பதவிக் காலம் முடிந்து பல வருஷங்களானாலும் அவர் மீது நடவடிக்கை எடுப்பதாகத் தெரியவில்லை. நடவடிக்கை எடுக்க முடியாமலும் போய் விடுகிறது. அதற்கு எந்த விதமான ஒரு சரியான பரிகாரமும் காணமுடியாமல் போய்விடுகிறது. இதைப்பற்றி பல அங்கத்தினர்கள் காரணம் காட்டினார்கள், அதையே நானும் வரவேற்கிறேன். அரசாங்கமும் இதைப் பற்றி கொஞ்சம் நன்றாக கவனிக்கவேண்டும். பல தலைவர்கள் கையாடல் செய்தாலும் அவருடைய பதவி காலத்தில் அவர் மீது நடவடிக்கை எடுக்க முடியாவிட்டாலும் நிர்வாகத்தில் இல்லாத காலங்களில் போலீசார் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்ற நிலைமை ஏற்படுகிறது. அவர்மீது நடவடிக்கை உடனடியாக எடுக்க முடியாமல் போய்விடுகிறது. அவருடைய காலத்திலேயே நடவடிக்கை எடுக்க போலீஸ்காரர்களுக்கு ஆதாரம் கிடைக்காமல் போய்விடுகிறது. மற்றும் தணிக்கைமுறை செய்வதற்கு கால தாமதம் ஏற்படுவதால் அப்படி காலதாமதம் ஏற்படுகிறது. ஆகவே தணிக்கை முறையை எவ்வளவு சீக்கிரத்தில் செய்யவேண்டுமோ அவ்வளவு சீக்கிரத்தில் செய்வதற்கு ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். பஞ்சாயத்து கணக்கு வரவு செலவுகளின் தணிக்கை துரிதமாகச் செய்து தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இதற்கு காலதாமதம் ஏற்படுவதால் வரும்போது பார்த்துக் கொள்ளலாம் என்ற மனப்பான்மையில் தலைவர்கள் தங்கள் இஷ்டம் போல் நடந்துகொள்கிறார்கள். அசட்டு தைரியமாக இருந்து விடுகிறார்கள். வரும்போது பதில் சொல்லிக்கொள்ளலாம் என்று நினைத்துக்கொள்ளுகிறார்கள். ஆகவே தணிக்கையை எவ்வளவு துரிதமாகச் செய்யவேண்டுமோ அவ்வளவு துரிதமாகச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்வதற்கு ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இப்பொழுது வெள்ளை அறிக்கையின்மீது சட்டங்கள் செய்யப்போகிறோம். அப்படி சட்டங்களைக்கொண்டு வருவதற்கு முன்னால் ஒரு விஷயத்தைப் பற்றி யோசிக்கவேண்டியதாக இருக்கிறது. முனிசிபாலிட்டி, ஸ்தல-ஸ்தாபன நிர்வாகங்கள் பரந்த அளவில் நடைபெற்று வருகின்றன. அந்த நிர்வாகம் பெரிய சமுத்திரம் போல் இருக்கிறது. நிர்வாகத்தில் தலைவருக்கு அது சமுத்திரம்போல் இருக்கிறது. ஆகவே இவைகளை முதல் தரம், இரண்டாம் தரம் மூன்றாம் தரம் என்று பிரித்து அதற்காக அதிகாரிகளை நியமித்து அந்த அந்த இலாகாவை அந்தந்த அதிகாரிகளிடத்தில் ஒப்படைத்து நிர்வாகத்தைச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்ளுகின்றேன்.

**Sri M. SELVARAJ :** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த பஞ்சாயத்து திருத்த மசோதாவை செலெக்ட் கமிட்டிக்கு அனுப்பவேண்டும் என்று கொண்டு வந்த திருத்தத்தை ஆதரித்து சில வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன். இப்பொழுது பஞ்சாயத்துத் தலைவர்களை மக்கள் வாக்காளர்கள் மூலமாக அதாவது நேர்முகமாக தேர்ந்தெடுக்கிறார்கள். அப்படி இல்லாமல் பஞ்சாயத்து போர்டு அங்கத்தினர்கள் மூலமாக தேர்ந்தெடுக்கவேண்டுமென்று திருத்தம் கொண்டுவரப்பட்ட நோக்கத்தோடு பார்க்கும்போது சர்வாதிகார மனப்பான்மையில் இருப்பதாகத் தெரிகிறது. அந்த நிலைமையை ஏற்படுத்தினால் பணக்காரர்களும் செல்வந்தர்களும்தான் தலைவராக வரமுடியும். சாதாரணமாக ஏழைகள் தலைவராக வருவதற்கு இடம் இல்லாமல் போய்விடும். மற்றும் ஏழைத் தொழிலாளர்களோ இதில் வருவதற்கு இடம் இல்லை. ஆனால் மற்றவர்கள் பேசுவதைப் பார்த்தால் நேர்முகமாக தலைவர்களைத்



V 211, 31 N.57
N58-631

2nd November 1957] [Sri M. Selvaraj]

தேர்ந்தெடுத்தால் அவர்கள் பஞ்சாயத்துபோர்டு மெம்பர்களுடைய ஒரு நம்பிக்கையையும் இழக்கவேண்டிய நிலைமை ஏற்படுகிறது என்று சொல்லுகிறார்கள். அதனால் தான் அங்கத்தினர்கள் மூலமாக தலைவர்களைத் தேர்ந்தெடுக்கும்படியான நிலைமையை உண்டுபண்ணப்போகிறோம் என்று சொல்லுகிறார்கள். அப்படி மெம்பர்களுடைய நம்பிக்கையை இழந்திருக்கக்கூடிய பஞ்சாயத்து ஒரு சிலவாக இருந்தாலும், 100-க்கு 90 பஞ்சாயத்துக்கள் அப்படி இல்லை. நல்ல முறையில்தான் நடந்துகொண்டு வருகின்றன. சில இடங்களில் குறைகள் ஏற்பட்டிருக்கலாம். ஒரு சில தலைவர்கள் பணத்தைக் கையாளுகிறார்கள் என்றும் சொல்லுகிறார்கள். அநேகம் இடங்களில் அப்படி கையாளுகிறார்கள் என்று தெரியவில்லை. மெம்பர்களுடைய நம்பிக்கையை இழந்து போர்டு தீர்மானம் செய்தால், அவரை உடனே பதவியிலிருந்து விலக்குவதற்கு தகுந்த முறையில் சட்டத்தை திருத்த நாம் முன்வரலாம். இதற்காக இந்தத் தேர்தலை இந்த முறையிலே நடத்துவது என்பது அவ்வளவு நல்லதல்ல என்று நான் அபிப்பிராயப்படுகிறேன்.

எந்தெந்த பகுதியில் பஞ்சாயத்து ஏற்படவில்லையோ அந்தப் பகுதியில் எல்லாம் கிராமக் கமிட்டி அமைக்கவேண்டுமென்று கொண்டுவருகிறார்கள். 'A person elected' என்பதற்குப் பதிலாக 'a person nominated' என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. கிராமக் கமிட்டியாரையும் அந்தக் கிராமத்தில் உள்ளவர்களே தேர்தல் மூலமாகத் தேர்ந்தெடுத்து, கிராமக் கமிட்டியை அமைத்தால் நல்ல முறையில் நடைபெறும் என்று கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

61214

பஞ்சாயத்து நிர்வாகம் நடந்துவந்த எந்தப் பகுதியிலாவது ஊழல் காரணமாக பஞ்சாயத்து போர்டு கலைக்கப்பட்டு, அத[illegible] அந்த நிர்வாகத்தைப் பார்ப்பதற்கு ஏதோ ஒரு ஆள் என்ற முறையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ரெவினியூ இன்ஸ்பெக்டர் தகுதிக்குக் குறையாத [illegible] அதிகாரியை அம்மாதிரி பஞ்சாயத்து போர்டு கலைக்கப்பட்ட பகுதியில் நியமித்து நிர்வாகத்தை நடத்தும்படியான ஏற்பாட்டைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

மசோதாவில் 8-வது ஷரத்தில் (5) வது உட்பிரிவில் கண்டிருப்பதாவது :

"During the interval, if any, between the dissolution and the reconstitution of a panchayat or during the period of its supersession, as the case may be, the Inspector may appoint a person . . ."

மேற்படி ஷரத்தில a **person** என்ற பதங்களுக்குப் பதிலாக '**an officer not below the rank of a Revenue Inspector**' என்று மாற்றவேண்டும். இந்த மசோதா செலக்ட் கமிட்டிக்குப் போகும்போது என்னுடைய யோசனையையும் செலக்ட் கமிட்டி அங்கத்தினர்கள் மனதில் கொண்டு, மசோதாவை நல்ல நோக்கத்தோடு திருத்தவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய வார்த்தையை முடித்துக்கொள்ளுகின்றேன்.

* **Sri A. R. MARIMUTHU :** கனம் சபாநாயகர் அவர்களே, இன்றைய தினம் நாட்டில் எங்கு பார்த்தாலும் ஓர் இடத்தில் குவிக்கப்பட்டிருக்கிற அதிகாரம் கிராம அடிப்படையில் பிரித்துக் கொடுக்கப்படவேண்டுமென்று எந்தக் கட்சி பேதம் இன்றியும் யோசிக்கக் கூடிய வேளையிலே இன்னும் இரண்டு தினங்களில் லோகல் அட்மினிஸ்ட்ரேஷன் சம்பந்தமாக வெள்ளை அறிக்கையின்பேரில் நாம் விவாதிப்பதாக இருக்கிறோம். இதற்கு முன்னால் இந்தச் சட்டம் கொண்டுவர வேண்டியது அவசியம்தானா என்பதை நாம் யோசிக்க வேண்டிய நிலையில் இருக்கிறோம். எதுவாக இருந்தாலும் இன்றைக்கு அதிகாரங்கள் கீழே இருக்கக்கூடிய கிராமங்களுக்குப் பிரித்துக் கொடுக்கப்படவேண்டுமென்பதை நாம் எல்லோரும் ஒத்துக்கொண்டுதான் இருக்கிறோம்.

அனேக வருஷங்களாக பஞ்சாயத்து முறை நமது நாட்டிலே நிலவி வருகின்றது. அரசாங்கத்தினுடைய பொறுப்பிலே பல ஆண்டுகளாக பஞ்சாயத்து போர்டுகள் எல்லா கிராமங்களிலும் ஆரம்பிக்கப்பட்டு நடந்து

வருகின்றன. 1950-ம் வருஷத்திற்கு முன் இருந்த பஞ்சாயத்து தேர்தல் முறை சரியல்ல என்பதை உணர்ந்து மக்களுடைய நேரடி பொறுப்பு உள்ளவர்களாக கிராமப் பஞ்சாயத்துத் தலைவர் இருக்க வேண்டுமென்பதற்காகத் தான், கிராம மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவராகத்தான் பஞ்சாயத்து போர்டு தலைவர் இருக்க வேண்டுமென்று 1950-ம் வருஷத்திலே சட்டம் திருத்தப்பட்டது. ஆனால், இன்றைக்கு பஞ்சாயத்துத் தலைவரை மக்களே தேர்ந்தெடுக்க வேண்டியதில்லை, அங்குள்ள பஞ்சாயத்து மெம்பர்கள் தேர்ந்தெடுத்தால் போதும் என்று கொண்டுவரும் மாற்றம் அவ்வளவு உசிதமாகாது என்று கருதுகிறேன்.

இன்றைக்கு ஜனநாயக வளர்ச்சிக் கட்டத்திலே நாம் இருக்கிறோம். ஜனநாயக முறை பற்றி மக்கள் ஆர்வம் கொள்ளக்கூடியதாக இருக்கிறது, இந்தத் தேர்தல் முறை, தேர்தல் காலத்தில் தான் ஜனநாயகத்தைப் பற்றி மக்கள் தெளிவாகத் தெரிந்து கொள்ள வேண்டிய நிலையில் இருக்கிறார்கள். ஜில்லா போர்டுகளைக் கலைத்துவிட வேண்டுமென்ற நிலையில் இருக்கும்போது ஐந்து வருஷங்களுக்கு ஒரு முறை சட்டசபை தேர்தலின்போது தான் மக்களிடத்திலே நாம் போகவேண்டிய நிலைமை ஏற்படுகிறது. அதற்கிடையிலே ஜனநாயகத்தைப்பற்றி, வோட்டுரிமையைப்பற்றித் தெளிவாக அவர்கள் புரிந்து கொள்ள வேண்டிய சந்தர்ப்பம் இருக்குமானால் அது பஞ்சாயத்து போர்டு தேர்தல் முறையாகத்தான் இருக்க முடியும்.

முனிசிபாலிடிகளிலும், மேஜர் பஞ்சாயத்துகளிலும் எப்படி ரகசிய வோட்டு முறை இருக்கிறதோ அதே வோட்டு முறை கிராமப் பஞ்சாயத்துக்களுக்கும் கொண்டுவருவதில் எந்த விதமான தயக்கமும் சர்க்கார் காட்டக் கூடாதென்று கேட்டுக் கொள்கிறேன். பகிரங்க வோட்டு முறை சரியல்ல. ஏனென்றால், கிராமங்களிலே பல வழக்குகளுக்கும் சண்டைகளுக்கும் பகிரங்க வோட்டு முறை அடிப்படையாக அமைந்துவிடும். ஆகவே, ரகசிய வோட்டு முறை கொண்டுவருவது மிக மிக அவசியம். பகிரங்க வோட்டு முறை எப்படியிருக்க வேண்டுமென்பதைப்பற்றி வெள்ளை அறிக்கை சபை முன் விவாதத்திற்கு வரும்போது குறிப்பிடலாம் என்று நான் கருதுகிறேன். கிராமப் பஞ்சாயத்தாக இருந்தாலும், அங்கே ரகசிய வோட்டு முறையைக் கொண்டுவரவேண்டியது மிக அவசியம். அப்பொழுதுதான் ஜனநாயகத்தின் பண்பு, வோட்டுரிமையின் முக்கியத்துவம் ஆகியவைகளை ஜனங்கள் அறிந்துகொள்வதற்கு வாய்ப்பு ஏற்படுமென்று நான் தெரிவித்து கொள்ளுகின்றேன்.

பஞ்சாயத்தின் ஆயுட்காலம் மூன்று வருஷங்களாக இருப்பதை ஐந்து வருஷங்களாக உயர்த்த வேண்டுமென்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதை நாம் சிந்திக்கவேண்டும். மக்களிடத்தில் ஒருவர் நல்ல முறையில் நடந்துக் கொண்டிருந்து தலைவராகவோ அங்கத்தினராகவோ தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர் ஐந்து வருஷங்களுக்கு தன்னுடைய காலத்தில் நிச்சயமாக எது வேண்டுமானாலும் செய்யலாம் என்ற எண்ணம் ஏற்பட்டு விடுமானால், அவரை விலக்குவதற்கு ஐந்து வருஷ காலம் கிராமப் பஞ்சாயத்திலே காத்திருக்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது, இந்த சட்டத்தினால். மூன்று வருஷ காலம் இருப்பது ரொம்ப உசிதம். அதற்குள்ளே அவர்கள் நல்ல முறையிலே நடந்து, மக்களுடைய ஆதரவைப் பெற்றால், மீண்டும் அவர்களையே பஞ்சாயத்து போர்டு தலைவராகவோ அங்கத்தினராகவோ தேர்ந்தெடுக்கக் கூடிய வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, மூன்று வருஷத்தை ஐந்து வருஷமாக மாற்ற வேண்டியது அவசியம் இல்லை. செலக்ட் கமிட்டி அதைப்பற்றி ஆலோசிக்குமாறு நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

ஒரு ரெவின்யூ கிராமமாக இருப்பதை பல துண்டுகளாகப் பிரித்து, அதாவது 500 ஜனத்தொகை உள்ள பகுதியாகப் பிரிக்கக்கூடிய அதிகாரம் இந்தச் சட்டத்தின் மூலம் வழங்கப்படுகிறது. அது தேவைதானா என்பதை சர்க்கார் யோசித்துப் பார்க்கவேண்டும். ஆயிரக்கணக்கான ஜனத்தொகையையுடைய கிராமங்களை அங்கு இருக்கக்கூடிய விருப்பு வெறுப்பு காரணமாக பல துண்டுகளாகப் பிரிக்க வேண்டிய கோரிக்கை எழுப்பப்படலாம்,



கிராமங்களைப் பல துண்டுகளாகப் பிரிக்கவேண்டிய நிலைமை ஏற்படலாம், ஒரு ரெவினியூ கிராமமாக இருப்பதைத் துண்டுகளாகப் பிரிக்கவேண்டிய அவசியம் இல்லை. பல கிராமங்கள் சேர்ந்து பஞ்சாயத்து யூனியன் ஏற்பட்டிருந்தால் 500 ஜனத்தொகையுள்ள பகுதிகளாகப் பிரிக்கலாம், பிரிந்து போகவேண்டுமென்று விரும்பும் காலத்தில், அப்படிப் பிரிப்பதற்கு வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்குமாறு கேட்டுக் கொள்ளுகிறேன். ஒரே யூனிட்டாக இருக்கக்கூடிய ஒரு கிராமத்தைப் பல துண்டுகளாகப் பிரிக்க வேண்டிய அவசியம் இல்லை.

பஞ்சாயத்துக்களுக்குப் போதிய வருவாய் கிடையாது. அதற்கு அத்தகைய வருவாய் வாய்ப்பு தேடிக் கொடுக்கவேண்டிய நிலையில் இருக்கிறோம். அப்படி யிருக்கும்போது ஒரு பஞ்சாயத்து எல்லையில் இருக்கும் தொழிற்சாலைப் பகுதிகளை யெல்லாம் பஞ்சாயத்திலிருந்து விலக்கி, சர்க்கார் அதிகாரம் எடுத்துக் கொள்வது தவறானது. அது ஜனநாயகத்திற்குப் புறம்பானது, கிராமப் பஞ்சாயத்து அமைப்பு எண்ணத்திற்கே முரணானது என்று நான் கருதுகிறேன். ஒரு தொழிற்சாலைப் பகுதியை பஞ்சாயத்து எல்லையிலிருந்து ஏன் விலக்க வேண்டுமென்று என்றால் புரிந்துகொள்ள முடியவில்லை. தொழிற்சாலைப் பகுதியாக இருந்தாலும் சரி, எந்தப் பகுதியாக இருந்தாலும் சரி, பஞ்சாயத்தின் அதிகார எல்லைக்கு உட்பட்டு இருக்கவேண்டுமே தவிர தனியாகப் பிரிக்கக் கூடாது. அப்படிப் பிரிப்பது ஜனநாயக லட்சியத்தையும், கிராம அமைப்பின் அடிப்படை லட்சியத்தையும் குலைப்பதாக இருக்கும். அந்த எண்ணத்தைச் சர்க்கார் கைவிட வேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொண்டு, பேசுவதற்கு அனுமதி தந்த தலைவருக்கு நன்றியைத் தெரிவித்து என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகின்றேன்.

MR. SPEAKER : Several more hon. Members have expressed a desire to speak—at least a dozen members have told me so. To them I must say that this is not the end of the discussion on the Bill. The Bill is being referred to a Select Committee. The discussion today is to indicate the lines on which the members of the Select Committee can proceed. To that end, the Deputy Speaker and I have called representatives from the various parties to take part in the debate. I, therefore, feel that those who have not been given a chance to speak today will not take it as final and will not get angry with me, but will allow me to ask the Hon. Minister to reply. When the report of the Select Committee comes up for consideration we shall have enough time to discuss the Bill.

The Hon. Minister will now reply.

Sri N. K. Palanisami rose.

MR. SPEAKER : The hon. Member spoke yesterday.

SRI N. K. PALANISAMI : No, Sir.

MR. SPEAKER : I shall see the list of speakers and tell you. You are the mover of the amendment that the Bill be circulated for eliciting public opinion. I see from the list that the following members have spoken—

Sri N. K. Palanisami.
,, M. Kalyanasundaram.
,, D. S. Audimoolam.
,, T. Sampath.
,, A. Govindasamy.

The Hon. Minister will now reply.

[2nd November 1957

* THE HON. SRIMATHI LOURDAMMAL SIMON : நேற்றும், இன்றும் நடந்த விவாதத்தில் கனம் அங்கத்தினர்கள் ஸ்தல ஸ்தாபனங்களைப் பொறுத்த அளவில் பல விஷயங்களைப்பற்றி குறிப்பிட்டார்கள். ஸ்தலஸ்தாபன வெள்ளை அறிக்கையின் பேரில் விவாதம் நடந்து நல்ல முடிவு காணும் வரை ஏன் இதை தள்ளிவைக்கக் கூடாது என்று அபிப்பிராயம் தெரிவித்தார்கள். இந்த மசோதாவை இந்தச் சபையில் கொண்டு வரும்போதே இதற்கான காரணங்களைக் குறிப்பிட்டேன். அடுத்த சில மாதங்களுக்குள் ஏறக்குறைய 6,000 பஞ்சாயத்து தேர்தல்கள் நடைபெற இருக்கின்றன. தலைவர் தேர்தல் பொறுத்தவரையில் 1950-வது வருஷத்திற்கு முன்பு இருந்த நடைமுறையை திரும்பவும் அமுலுக்குக் கொண்டு வருவது நலம் என்று கருதி கடந்த ஆண்டுகளில் ஏற்பட்ட அனுபவத்தின் பேரில் இந்தத் திருத்தத்தைக் கொண்டுவர முன்வந்துள்ளது அரசாங்கம். இப்பொழுது சில பஞ்சாயத்துக்களின் ஆயுட்காலம் இரண்டு வருஷங்களுக்கு நீடிக்கப்பட்டுவிட்டது. இன்னும் சிலர் பேசும் பொழுது மூன்று வருஷமே கூடுதலாகிவிட்டது என்று குறிப்பிட்டார்கள். அப்படியிருக்கும்பொழுது இந்தப் பஞ்சாயத்துக்களின் பதவிக் காலத்தை ஏன் இன்னும் நீடிக்க விரும்புகிறார்கள் என்று கேட்கிறேன். ஸ்ரீ ஆதிமூலம் அவர்கள் பேசும் பொழுது பஞ்சாயத்து தேர்தலில் ஆளும் கட்சியினருக்கு சௌகரியமான முறையில் கையாளப்படுகிறது என்று சொன்னார்கள். இந்தத் தேர்தல்கள் ஆளும் கட்சியினருக்கு மாத்திரமல்ல, இரு கட்சியினருக்கும் நடைபெறுகின்றன. ஆளும் கட்சியினருக்கு மாத்திரம் விசேஷ முறை ஒரு இடத்திலும் கையாளப்படவில்லை என்று குறிப்பிட விரும்புகிறேன்.

இன்னும் சில மதிப்பிற்குரிய அங்கத்தினர்கள் கீழாம்பூர் பஞ்சாயத்து எலெக்ஷனை நிறுத்திவைத்ததைப்பற்றி குறிப்பிட்டார்கள். ஒருவரும் என்னை வந்து தடுத்து நிறுத்திவைக்கும்படி கூறவில்லை. அந்த இடததில் நடந்த குழப்பங்கள் காரணமாகத்தான் இந்தத் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டது. அங்கு பல காரணங்களினால் குழப்பம் ஏற்பட்டதாக கூறப்படுகிறது. கழிந்த 2, 3, நாட்களாக அதுபற்றி விவாதம் நடத்தினோம். ஸ்தல ஸ்தாபன தேர்தல் வைத்து அதனால் வேறு குழப்பம் வந்தது என்று அந்தப் பெயர் எடுப்பதற்கு எனக்கு விருப்பம் இல்லை. குழப்பத்தைத் தடுப்பதற்கும், இன்னும் மேலாக குழப்பம் உண்டாகக்கூடாது என்ற ஒரே கருத்தினால்தான் அந்தத் தேர்தலை ஒத்திவைக்கவேண்டுமென்று உத்தரவிட்டேன். அதற்காக அந்த ஆர்டரை நான் சரியான முறையிலே பரிசீலித்து கேஸ்களையும் சம்பந்தப்பட்ட நபர்களையும் விசாரித்து அதன் பின்னர் அந்த இடத்தில் தேர்தல் வைக்கக்கூடாது என்று தள்ளி வைத்தேன். அல்லாமல் அங்கு இருக்கும் கிராமத்திலே ஜனங்கள் ஆடு மாடுகள் போல் காத்திருக்கவேண்டுமென்று நான் ஒரு போதும் விரும்பவில்லை. அதை நான் கேட்பதற்கு மிகவும் வருத்தப்படுகிறேன். தேர்தலை ஒரு நல்ல முறையில் நடத்தவேண்டுமென்ற விருப்பத்தில் " ஸ்டே ஆர்டர் " கொடுத்தேனே தவிர, ஜனங்களுக்கு சௌகரியக் குறைவு விளைவிக்கவேண்டுமென்று நான் விரும்பவில்லை. நான் அவர்களுக்கு சௌகரியம் செய்து தரவேண்டுமென்றுதான் மனப்பூர்வமாக ஆசிக்கிறேன்.

கனம் கோவிந்தசாமி அவர்களும் வேறு சிலரும் பேசும்பொழுது பஞ்சாயத்து தேர்தலில் கை தூக்கும் முறையை மாற்றி இரகசிய முறையை கையாளக்கூடாதா என்று கேட்டார்கள். தற்பொழுது கூட முதல் வகுப்பு பஞ்சாயத்துக்களுக்கும் ஸ்தல ஸ்தாபன இன்ஸ்பெக்டர் அவர்களால் குறிப்பிடப்படும் சிற்சில இரண்டாம வகுப்பு பஞ்சாயத்துக்களுக்கும் இரகசிய முறையில்தான் தேர்தல்கள் நடைபெறுகின்றன. ஏனைய பஞ்சாயத்துத் தேர்தல்களுக்கு கையைத் தூக்கிக் காட்டி வோட் செய்யும் முறை இதுவரை கையாளப்பட்டு வந்தது. ஆனால் இந்த முறையிலுள்ள பல குறைபாடுகளை நிவர்த்திக்கும் பொருட்டு, ஒரு புதிய முறையைக் கையாளுவதற்காகச் சர்க்கார் முயற்சி செய்து வருகிறார்கள். இதனுடைய விவரங்கள் வெள்ளை அறிக்கையில் மதுரை பஞ்சாயத்து யூனியன் மெமோராண்டத்தில் காணலாம்.



2nd November 1957] [Srimathi Lourdammal Simon]

பஞ்சாயத்துக்களின் ஆயுள் காலத்தை நீடிக்க வேண்டிய அவசியமில்லை என்று சில அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள். நம் நாட்டினுடைய பொருளாதார, சமூக அபிவிருத்திக்காக தொடர்ந்து பல ஐந்து ஆண்டு திட்டங்களை சர்க்கார் நிறைவேற்றிவருகின்றனர். பஞ்சாயத்துக்களின் அபிவிருத்திக்கான திட்டங்களும் ஐந்து ஆண்டு திட்டங்களை ஒட்டி வரைந்தால்தான் நாடு ஒருமுகமாக முன்னேற வகை செய்ய முடியும். அங்கத்தினர்களும் நல்ல பல திட்டங்களைக் கொண்டுவந்து அவற்றை நிறைவேற்றி வைத்து பெருமிதம் கொள்ளலாம். அடிக்கடி தேர்தல் நடைபெறுவதில் தேர்தல் நடத்துகிறவர்களுக்கும் பொது மக்களுக்கும் அநேக கஷ்டங்கள் ஏற்படுகின்றன. ஒவ்வொரு ஆண்டிலும் ஏதாவதொரு ஸ்தல ஸ்தாபனத்திற்கோ அல்லது சட்ட சபைக்கோ தேர்தல் நடத்திக் கொண்டே இருக்க வேண்டிய நிர்ப்பந்தம் சர்க்காருக்கு ஏற்பட்டுள்ளது. ஸ்தல ஸ்தாபனங்களின் பதவிக் காலத்தை ஐந்தாண்டுகளாக ஆக்கினால், அவைகளின் தேர்தல்கள், சட்ட சபைக்கான பொதுத் தேர்தல்கள் இரண்டிற்கும் மத்தியில் நடைபெறுமாறு ஏற்பாடு செய்ய முடியும். தேர்தல் செலவும் குறையும். இந்த கருத்தில்தான் சென்னை நகரசபை, மற்றுமுள்ள நகரசபைகளின் பதவிக் காலத்தையும் ஐந்து ஆண்டுகளாக உயர்த்தலாம் என்று சர்க்கார் உத்தேசித்துள்ளார்கள்.

பொது மக்கள்தான் தலைவரைத் தேர்ந்தெடுக்கவேண்டும், பொது மக்கள் தேர்ந்தெடுக்கும் அங்கத்தினர்கள் தலைவரை தேர்ந்தெடுப்பது சரியல்ல என்று ஒரு சில கனம் அங்கத்தினர்கள் கூறினார்கள். எல்லா அங்கத்தினர்களும் பொது மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறவர்கள்தான். அதனால் அவர்களும் மதிப்பிற்கும் நல்ல எண்ணத்திற்கும் தகுதியானவர்கள் என்று கருதுகிறேன். அங்கத்தினர்களிலிருந்து ஒரு தலைவரை தேர்ந்தெடுத்தால்தான் அந்தத் தலைவருக்கும் அங்கத்தினர்களுக்கும் கூடுதலான சௌகரியம் ஏற்படும். அவர்களும் நல்ல முறையில் இந்த பஞ்சாயத்து நிர்வாகத்தை நடத்த முடியும் என்ற ஒரு கருத்தைக்கொண்டுதான் தலைவர் அங்கத்தினர்களால் தேர்ந்தெடுக்கப்படவேண்டும் என்ற ஒரு முறை கொண்டுவரப்பட்டிருக்கிறது. இன்னும் சில அங்கத்தினர்கள் வேறு சில சீர்திருத்தங்களை கொண்டுவரவேண்டுமென்று குறிப்பிட்டார்கள். பஞ்சாயத்து நிர்வாகத்தில் சுகாதார வசதியை கவனிக்குமாறும் கேட்டிருக்கிறார்கள். இது விஷயமாக ஏதாவது குழப்பம் ஏற்பட்டால், கலெக்டர், இன்ஸ்பெக்டர்களிடம் அறிவித்தால் அவர்களால் அது நேரடியாக கவனிக்கப்படும். அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கிறது. அதுவுமன்றி பஞ்சாயத்து நிர்வாகத்தில் சுகாதாரம் மற்றும் பல சௌகரியங்களை செய்வதற்காக உள்ள ஏற்பாடு இருக்கிறது. அதைச்செய்ய தவறினால் அது அரசாங்கத்தின் குற்றமல்ல. அந்த இடங்களிலுள்ள அங்கத்தினர்களும் அதற்காக முயற்சி எடுத்தால் நிச்சயமாக இந்த ஸ்தல ஸதாபன நிர்வாகம் நடைமுறையில் நன்றாக நடக்கும் என்பதில் சந்தேகமில்லை.

கனம் அங்கத்தினர் ராமச்சந்திரன் அவர்கள் ஐந்தாண்டு காலவரை கொடுத்தால் அங்கத்தினர் சோம்பேரிகளாகிவிடுவார்கள் என்று கூறினார்கள். இந்தச் சபையில் இருக்கும் ஒருவருமே அதை ஆதரிக்கமாட்டார்கள் என்று நான் நினைக்கிறேன். ஏனென்றால் ஐந்து ஆண்டுகளில் இதைவிட கூடுதலாக சௌகரியங்கள் செய்ய முடியும். ஐந்து ஆண்டுகளில் சோம்பேரிகள் ஆகமாட்டார்கள். அதனால் அங்கத்தினர்களுக்கு சேவை செய்ய ஒரு நல்ல சந்தர்ப்பம் கிடைக்கும் என்று நான் கருதுகிறேன்.

இந்த மசோதாவைப் பற்றி இதுவரையிலும் கனம் அங்கத்தினர்கள் பலர் நல்ல ஆலோசனைகளையும், கொண்டுவர வேண்டிய நல்ல திருத்தங்களையும் பற்றி பேசினார்கள். இந்த மசோதாவை இப்பொழுது செலக்ட் கமிட்டியின் ஆலோசனைக்கு விடப்போகிறோம். அப்பொழுது நல்ல முறையில் இந்த மசோதா ஆலோசிக்கப்பட்டு சரியான முறைகள் கையாளப்படும் என்று நான் கருதுகிறேன். அதுவுமன்றி இவ்வளவு நல்ல ஆலோசனைகளைக் கூறினவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

[2nd November 1957

THE HON. SRI C. SUBRAMANIAM : Mr. Speaker, I move the following amendment to the motion moved by my hon. Colleague :—

"That after the words 'be referred to a Select Committee', add the words 'with instructions to report before 8th November 1957'."

The motion was put and carried.

MR. SPEAKER : Hon. Member Sri N. K. Palanisamy has moved an amendment to the effect, 'that the Bill be circulated for eliciting public opinion.' I would like to know from the hon. Member whether he is withdrawing it.

SRI N. K. PALANISAMI : Sir, I would like to speak a few words.

MR. SPEAKER : The hon. Member has spoken yesterday and he cannot make a second speech. I am sure the hon. Member himself knows it. Let him say whether he is withdrawing or not. If he is not withdrawing, I shall put his amendment to the vote of the House. That is all my duty.

SRI N. K. PALANISAMI : Sir, in view of the fact that the Government have agreed to refer the Bill to a Select Committee, I am withdrawing my amendment.

The amendment was, by leave, withdrawn.

MR. SPEAKER : The question is :

"That the Madras Village Panchayat (Amendment) Bill, 1957, be referred to a Select Committee with instructions to report before 8th November 1957."

The motion as amended was put and carried.

* THE HON. SRIMATHI LOURDAMMAL SIMON : I shall now read the names of the Members of the Select Committee. The Committee shall consist of the following Members :—

1. The Hon. Sri C. Subramaniam.
2. ,, Srimathi Lourdammal Simon.
3. Sri P. G. Karuthiruman.
4. ,, M. D. Ramasami.
5. ,, V. A. Muthiah.
6. ,, M. Kalyanasundaram.
7. ,, K. N. Palanisamy Gounder.
8. ,, K. Vasudevan.
9. ,, T. Sivagnanam Pillai.
10. ,, S. M. Annamalai.
11. ,, P. S. Chinnadurai.
12. Srimathi Kamalambuja Ammal.
13. Sri D. S. Audimoolam.
14. ,, T. V. Sannasi.
15. ,, K. Vinayakam,



2nd November 1957]

MR. SPEAKER : The question is—

"That the Madras Village Panchayats (Amendment) Bill, 1957, be referred to a Select Committee consisting of the following members with instructions to report before 8th November 1957 :—

1. The Hon. Sri C. Subramaniam.
2. ,, Srimathi Lourdammal Simon.
3. Sri P. G. Karuthiruman.
4. ,, M. D. Ramasami.
5. ,, V. A. Muthiah.
6. ,, M. Kalyanasundaram.
7. ,, K. N. Palanisamy Gounder.
8. ,, K. Vasudevan.
9. ,, T. Sivagnanam Pillai.
10. ,, S. M. Annamalai.
11. ,, P. S. Chinnadurai.
12. Srimathi Kamalambuja Ammal.
13. Sri D. S. Audimoolam.
14. ,, T. V. Sannasi.
15. ,, K. Vinayakam."

The motion was put and carried.

MR. SPEAKER : Under Rule 98 (1) of the Assembly Rules, I nominate the Hon. Sri C. Subramaniam as the Chairman of the Select Committee.

## (2) THE MADRAS REGISTRATION OF VETERINARY PRACTITIONERS BILL, 1957 (L.C. BILL NO. 2 OF 1957).

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Mr. Speaker, I beg to move—

[a] "That the Madras Registration of Veterinary Practitioners Bill, 1957 (L.C. Bill No. 2 of 1957) as passed by the Legislative Council be taken into consideration at once."

The need for the establishment of a Veterinary Council for the registration of Veterinary practitioners on the lines of similar statutory bodies existing for the allied professions has been repeatedly urged by members of the veterinary profession. At present there is no agency to control and regulate the practice of the profession or to maintain a register of practitioners. The Government therefore considers it necessary to undertake legislation for the purpose. The Bill gives effect to this object.

The Bill provides for the establishment of a State Veterinary Council. The Council shall have power to appoint a Registrar and other officers and servants. Provision has therefore been made for the maintenance of a register of Veterinary Practitioners, for

[a] Printed as Appendix on pages 142–149 infra.

[Sri M. Bhaktavatsalam] [2nd November 1957

the annual publication of a correct list of the names and qualifications of registered practitioners and for the holding of inquiries into alleged cases of misconduct. The Bill also involves certain receipts and expenditure as detailed in the Financial Memorandum attached to the Bill.

According to sub-clauses (1) and (2) of clause 16 of the Bill, the Government have power to make rules for the purpose of carrying out the provisions of the Bill when enacted, and in particular for making provision for the election of members to the Council, the term of office of the elected and nominated members of the Council, etc.

Sub-clause (3) of Clause 16 empowers the Madras Veterinary Council to make regulation with the previous sanction of the Government for convening meetings of the Council, for the conduct of business at such meetings, etc., and sub-clause (5) of Clause 16 empowers the Government to cancel any such regulation. The powers proposed to be delegated are essential for carrying out the purposes of the measure and are normal in character. I hope the Members will welcome this very useful piece of legislation as passed by the Legislative Council.

MR. SPEAKER : Motion moved—

" That the Madras Registration of Veterinary Practitioners Bill, 1957 (L.C. Bill No. 2 of 1957) as passed by the Legislative Council be taken into consideration at once."

As the hon. Member Sri Kalyanasundaram, who has given notice of an amendment to refer the Bill to a Select Committee, is not in his seat, the amendment will be deemed not to have been moved.

* SRI V. SANKARAN : Mr. Speaker, the present Bill moved by the Hon. Minister for the establishment of an agency to register the veterinary practitioners and to regulate their practice is a very good move indeed. It has to be welcomed by all of us. But, I feel that a very slight improvement has to be made in certain portions of the Bill. For instance, according to clause 10, in the case of practitioners who have been already registered under this clause, if they have been convicted of any offence which implies a defect of character disentitling him to be registered or who has been guilty of professional misconduct, the Council may remove him altogether or for a specified period from the register. I want that in the case of those who are registered for the first time, the same indulgence may be shown. That is my first submission. As at present, such persons will be refused permission altogether when they seek admission. This permission should not be refused for all time. That is why I want that the words " altogether or for a specified period " may be added after the words " to permit " occurring in line 24 of sub-clause (3) of clause 9. This will be a wholesome provision and will be in consonance with the spirit of the provisions contained in the other clause. The same indulgence should be given in both cases. Equity and justice call for such a provision which may please be inserted.



2nd November 1957] [Sri V. Sankaran]

My second submission is this. Both in respect of clauses 9 and 10, persons who have been convicted of any offence which implies a defect of character disentitling them to be registered have been given an opportunity to explain themselves in an inquiry. But, I am sorry to observe the same opportunity has not been given in the case of those who have been held by the Council to have been guilty of professional misconduct. Provision for an inquiry and opportunity for these people also to be heard must be made. A person may be able to show that he actually has not committed any offence as professional misconduct. So, he must be heard and he must be given opportunity to explain his case and prove that he is not guilty of the offence. That is why I say that both in regard to clause 9 which deals with registration of persons and clause 10 which deals with the alteration of register, provision should be made for giving opportunities to those who are held to be guilty of professional misconduct to explain their case and prove that they are not guilty of that offence. Again, both in regard to " defect of character disentitling a person to be registered " and " professional misconduct ", the same opportunity to be heard should be given to the person concerned. That is my second submission.

Lastly, clause 14 says, " Every person who falsely pretends to be a registered practitioner, whether any person is actually deceived by such pretence or not, shall, on conviction, be liable to be punished with fine which may extend to one thousand rupees." I submit that such a grievous offence should be given a serious punishment. That is why I want the words " with imprisonment which may extend to six months or " to be added after the words " to be punished " occurring in line 7 of the clause. Such grievous offence should not be left with a simple punishment. In such cases, the punishment should be severe. These are the few improvements which I would like to suggest. I think the measure will prove to be useful not only to society but to the practitioners as well. With these few words, I support the Bill.

SRI M. JAGANNATHAN : Sir, I welcome the Bill moved by the Hon. Minister. Clause 11 of this Bill says, " No act done in the exercise of any power conferred by or under this Act on the Government or the Council or the Registrar shall be questioned in any Civil Court."

Sir, I find that this clause gives complete immunity to the Government or the Veterinary Council or the Registrar for any action that they might take under the rules framed under this Bill. I do not find any reason why they should be given this kind of immunity. After all, in the exercise of the powers conferred by virtue of the rules framed under this Bill, it is quite possible that either the Registrar or the Veterinary Council or the Government might commit some mistakes which might result in great injury being done to the registered practitioners. So, the aggrieved party coming under this clause must be given an opportunity to have recourse to civil courts so that they might get their grievances redressed. Therefore, Sir, I for one feel that this Clause 11 should

[Sri M. Jagannathan] [2nd November 1957

be completely dropped in fairness to the registered practitioners and the interests of the registered practitioners in our State safeguarded. With these few observations, I welcome this Bill.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Mr. Speaker, Sir, I am indeed very glad to say that at least two Members of this House have taken some interest in studying the provisions of this Bill.

Regarding the comments offered by the hon. Member, Sri Sankaran, I would like to point out at the outset that a difference must be made between the case of practitioners who are already in the register and who are likely to be removed from it and the case of practitioners who apply for the first time for registration. The hon. Member has given notice of certain amendments. To sub-clause (3) of clause 9 he suggests that in the case of practitioners who apply for registration, the words " altogether or for a specified period " should be added. But I would like to point out to him that if any practitioner who applies for the first time for registration is not permitted to be registered, he has an opportunity to apply again next year. This has to be renewed year after year. Therefore, it is not like the case of a practitioner who is removed from the rolls, where it has to be provided that he may be removed " altogether or for a specified period ". So in the case of practitioners who apply for registration, it is not necessary to add the words " altogether or for a specified period ".

Regarding the removal of practitioners from the list, an opportunity has to be given but it is not on the same lines as in the case of the practitioners who apply for registration but could not get themselves registered.

The hon. Member has also suggested that punishment provided for in this Bill should be more severe. The punishment provided for in the Bill is a fine not exceeding Rs. 1,000. He has also suggested that there must be a provision for imprisonment which may extend to six months. I rather feel that it is rather too severe and me way leave it as it is for the present.

The hon. Member, Mr. Jagannathan objected to clause 11 of this Bill. This provision relating to the jurisdiction of civil courts is not a new thing. In similar previous legislations, there has been this provision. The idea is not to eliminate the jurisdiction of civil courts but the underlying idea is not to invite litigation on matters of this kind. But I would like to point out to the hon. Member who himself is a budding lawyer that there is still the extraordinary jurisdiction of courts and that is not ruled out. With these few words, I appeal to the House to support this Bill.

SRI V. SANKARAN : Sir, on a point of information, I have given notice of amendments to sub-clause (3) of clause 9 and sub-clause (2) (i) of clause 10 . . .

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I do not think that they are necessary. The meaning is quite clear.



2nd November 1957]

MR. SPEAKER : The hon. Member could raise that point when the Bill is taken up for consideration clause by clause.

SRI K. VINAYAKAM : Sir, can the hon. Member speak on the merits of clauses in the first reading?

MR. SPEAKER : That is why I have already stated that he should speak on the clauses when clause-by-clause discussion takes place.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, there is nothing wrong in referring to particular clauses during general discussion as they form part of the Bill.

MR. SPEAKER : The question is—

" That the Madras Registration of Veterinary Practitioners Bill, 1957 (L.C. Bill No. 2 of 1957) as passed by the Legislative Council be taken into consideration."

The Motion was put and carried and the Bill was taken into consideration.

Clauses 2 to 8 were put and carried.

*Clause* 9.

MR. SPEAKER : The motion is—

" That Clause 9 do stand part of the Bill."

SRI V. SANKARAN : Sir, I move—

" In sub-clause (3) *delete* the words ' after an inquiry at which opportunity has been given to him to be heard in person or by pleader ' occurring in lines 27 to 29 and *add* the same at the end of the said clause after the words ' professional misconduct '."

The amendment was duly seconded.

MR. SPEAKER : Amendment moved—

" In sub-clause (3) *delete* the words ' after an inquiry at which opportunity has been given to him to be heard in person or by pleader occurring in lines 27 to 29 and *add* the same at the end of the said clause after the words ' professional misconduct.' "

SRI V. SANKARAN : Sir, I leave it to the Hon. Minister to accept the amendment or not. The object of my amendment is to give an opportunity to a person alleged to be guilty of professional misconduct to explain his conduct.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I have already explained the position. This amendment is not necessary and I would request the hon. Member to withdraw it.

The amendment was, by leave, withdrawn.

Clause 9 was put and carried.

Clauses 10 to 16 were put and carried.

The Schedules were put and carried.

Clause 1 and the Preamble were put and carried.

[2nd November 1957

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Mr. Speaker, Sir, I move—

"That the Madras Registration of Veterinary Practitioners Bill, 1957 (L.C. Bill No. 2 of 1957) as passed by the Legislative Council, be passed."

MR. SPEAKER : Motion moved—

"That the Madras Registration of Veterinary Practitioners Bill, 1957 (L.C. Bill No. 2 of 1957) as passed by the Legislative Council, be passed."

SRI M. KALYANASUNDARAM : இந்த மசோதா அபிப்பிராய வித்தியாசத்திற்கு இடமில்லாதது. இதைக்கொண்டுவந்ததற்காக நான் பாராட்டிய போதிலும், ஒரு விஷயத்தை மந்திரி அவர்களுக்கும் சர்க்காருக்கும் எடுத்துக் காட்ட விரும்புகிறேன். இந்த மசோதா சட்டமாக இயற்றப்பட்டாலும் கூட, நவீன விஞ்ஞான அடிப்படையில் இருக்கக்கூடிய கல்லூரிகளில் தேறி பயிற்சி பெற்றவர்கள் மட்டுந்தான் இதில் பதிவு செய்துகொள்ள முடியும். நம் சர்க்காரால் நடத்தப்படும் கால்நடை வைத்தியசாலைகளில் சிகிச்சைக்கு அனுப்பப்படும் கால்நடைகள் நம் தேசத்தில் இருக்கும் மொத்த கால்நடைகளும், அவற்றிற்கு ஏற்படும் வியாதிகளையும் ஒப்பிட்டுப் பார்த்தால் ஒரு சிறு பகுதிதான் என்பதை மந்திரியவர்கள் ஒப்புக்கொள்வார்கள். பெரும்பாலும் கிராமப் புறங்களில் புராதனமாக கையாண்டு வந்த பல முறைகள் இருக்கிறது. அவற்றைப் பூராவும் விஞ்ஞான பூர்வமானது அல்ல என்று உதாசீனம் செய்ய முடியாது. அப்படி விஞ்ஞான வைத்திய முறையையும், நம் புராதன முறைகளையும் இணைத்து இண்டக்கிரேட்டட் ஸிஸ்டம் நடத்தும் காரணத்தால் அதற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்று சொல்கிறோம். கிராமப் புறத்தில் இருக்கும் வைத்திய முறைகளை தெரிந்து தான் நான் சொல்கிறேன். பல எருதுகள் சர்க்கார் கால் நடை வைத்தியசாலைக்கு மாதக் கணக்கில் கொண்டுபோயும், குணம் அடையாமல் கிராம வைத்தியர்கள் சில முறைகளைக் கையாண்டு குணப்படுத்தியிருக்கிறார்கள். அந்த முறைகள் என்னென்ன என்பதை நாம் விஞ்ஞான பூர்வமாக ஆராய்ச்சி செய்து அந்த முறையையும் இந்தக் கல்லூரிகளில் பாடமாக சொல்லிக்கொடுக்க சர்க்கார் ஏற்பாடு செய்ய வேண்டும். அதில் அனுபவம் மிகுந்தவர்கள் இருந்தால் அவர்களையும் பதிவு செய்து கொள்ளும் முறையில் சட்டம் இருக்கவேண்டும். அதற்காக வேண்டிய ஏற்பாடுகள் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதை பரிசீலனை செய்ய நிபுணர்கள் அடங்கிய ஒரு கமிட்டியை போட்டு நம் புராதான முறைகள் எவைகளை ஏற்றுக்கொள்ளலாம் என்பதைப்பற்றி எல்லாம் ஆலோசித்து, இந்த ஒரு குழுவை அமைக்க வேண்டுமென்ற ஆலோசனையை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று சொல்லிக்கொண்டு இந்த மசோதாவை ஆதரிக்கிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கனம் சபாநாயகர் அவர்களே, எதிர்கட்சி கனம் அங்கத்தினர் அவர்கள் நல்லதொரு யோசனையோடு இந்த மசோதாவை ஆதரித்ததற்காக நான் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். விஞ்ஞான முறைப்படி பயிற்சி அளித்து அதில் தேறியவர்களைக்கொண்டு கால்நடை சிகிச்சை செய்துவருவது போதாது என்பது உண்மையே. இப்பொழுது நமக்கு வேண்டிய உத்தியோகஸ்தர்களை நியமிப்பதற்கு ரொம்பவும் பற்றுக்குறை இருக்கிறது. அந்த பற்றுக்குறையை சமாளிப்பதற்காகத்தான் குறுகிய கால பயிற்சி, "ஸ்டாக் மென் கோர்ஸ்" நடந்து வருகிறது. எனக்குக்கூட நான் சிறிய வயதில் கவனித்தது நினைவு இருக்கிறது. மனிதர்களானாலும் சரி, அல்லது கால் நடைகளானாலும் சரி, கிராமங்களில் நாட்டு வைத்திய முறை சிறந்த முறையில் இருந்தது. இப்பொழுது, எனக்கு தவறு ஏற்பட்டிருக்கலாம்; அங்கத்தினர் அவர்களுக்கு அதைப்பற்றி கூடுதல் தெரிந்திருக்கலாம், எனக்குத் தெரிந்தவரையில் கிராமங்களில் முன்பு இருந்ததைப் போல்



2nd November 1957] [Sri M. Bhaktavatsalam]

அல்லாது இப்பொழுது கிராமங்களில் கால்நடை வைத்தியம் கிடைப்பது அரிதாயிருக்கிறது. கட்டிடங்கள் கட்டிக் கொடுக்கிறோம், செலவில் பாதியை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம், எங்களுக்கு ஒரு வெட்டரினெரி டிஸ்பென்ஸரி அமைத்துத் தரவேண்டுமென்று கிராமங்களில் இருப்பவர்கள் கேட்கிறார்கள். நாட்டு வைத்திய முறையில், நாட்டு வைத்தியம் செய்பவர்கள் திறமைசாலிகளாக இருக்கிறார்களா என்று பார்க்கவேண்டும். அவர்களிடமிருந்து தெரிந்துகொள்ளவேண்டியது ஏதாவது இருந்தால் அதை தெரிந்து கொள்ளவேண்டியதுதான். வெட்டரினெரி காலேஜில், இன்டக்கிரேட்டட் பயிற்சி இருக்கவேண்டுமென்பதுதான் எனது அவா. அதில் கவனம் செலுத்தப்பட்டுவருகிறது. "ஸ்டாக்மென் கோர்ஸ்"-ஐ கிராமங்களில்தான் வைத்திருக்கிறோம். அவர்களைக் கொண்டு, கிராமங்களில் உள்ள இதில் தேறியவர்களை வைத்துக்கொண்டு அவர்களுடன் கலந்து கொண்டு செய்ய வேண்டுமென்பதுதான் என் விருப்பம். அதை செய்கிறோம். வெட்டரினரி கல்லூரிகளில் படிப்பு இன்டக்கிரேட்டட் படிப்பாகவே இருக்கவேண்டுமென்று சொல்லிக்கொண்டு அதில் மேலும் கவனம் செலுத்தப்படும் என்று சொல்லிக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

MR. SPEAKER : The question is—

"That the Madras Registration of Veterinary Practitioners Bill, 1957 (L.C. Bill No. 2 of 1957) as passed by the Legislative Council, be passed."

The motion was put and carried and the Bill was passed.

## (3) THE MADRAS REPEALING AND AMENDING BILL, 1957.

THE HON. SRI C. SUBRAMANIAM : கனம் சபாநாயகர் அவர்களே, **1957**-ம் வருஷத்திய சென்னை ரத்து திருத்த மசோதாவை இந்த சபை முன்பு சமர்ப்பித்து அந்த மசோதாவை உடனே ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளும்படி நான் கேட்டுக்கொள்கிறேன். இந்த மசோதா நம்முடைய ராஜ்யத்தில் இருக்கக்கூடிய சில சட்டங்களை, இன்று அமுலில் இல்லை என்று சொல்வதற்கும் சில சட்டங்களைத் திருத்துவதற்கும் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இதில் ஏற்பட்டிருக்கக்கூடிய குறைகளையும் ஒரு சில வார்த்தைகளில் விளக்கமாக்க விரும்புகிறேன். பல சட்டங்கள், ஆந்திரப் பகுதி நம்முடன் இருக்கும்போதும், மலயாள ஜில்லா நம்முடன் இருக்கும் போதும், தென் கன்னட ஜில்லா நம்முடன் இருக்கும்போதும் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. அதிலே சில சட்டங்கள் இப்பொழுது நம்முடன் இல்லாத பகுதிகளுக்கு மட்டும் உள்ளதாக அமைந்திருக்கிறது. அவைகளை இப்பொழுது நாம் ரத்து செய்யவோ திருத்தவோ முடியாது. ஏனென்றால், அந்த சட்டங்கள் நம்முடைய ராஜ்யப் பகுதிகளுக்கு உட்பட்டதல்ல. அந்தப் பகுதிகள் மற்ற ராஜ்யத்தோடு போகும்போது அந்தச் சட்டங்களும் அந்த ராஜ்யத்தின் சட்டமாக மாறி விடுகிறது. அப்படி நமக்கு சம்பந்தமில்லாத சட்டங்களைப் பொறுத்த வரையில் முதல் ஷெடியூலிலே பார்க்கலாம். அது மாதிரியுள்ள சட்டங்கள் எல்லாம் நம் ராஜ்யத்திற்கு சேர்ந்தவையல்ல என்று தீர்மானித்திருக்கிறோம். அது முதல் பகுதி. இரண்டாவது பகுதியில் திருத்தங்கள் சில செய்யவேண்டியிருக்கிறது. சில சட்டங்களை பூராவும் ரத்து செய்ய வேண்டியிருக்கிறது. ரத்து செய்ய வேண்டிய சட்டங்கள், இப்பொழுது நமக்கு அவசியமில்லை. உதாரணமாக, இப்பொழுதுதான் பாஸ் பண்ணினோம், ஜில்லா போர்ட் சட்டத்தை, ஒரு வருஷத்திற்கு ஒரு ஸ்பெஷல் ஆபீஸரைப் போட்டு நடத்தவேண்டுமென்று **3, 4** வருஷங்களுக்கு அப்புறம் அந்தச் சட்டம் இருக்கவேண்டிய அவசியமேயில்லை. அதேமாதிரி நிதி ஒதுக்குவதற்காக ஒவ்வொரு வருஷமும் சட்டம் ஒன்றை நாம் இயற்றுகிறோம். ஒவ்வொரு பட்ஜெட்டின் போதும் ஒரு சட்டம் இயற்றுகிறோம். அந்தப் பணத்தை எடுத்து செலவழித்தற்குப் பிறபாடு அந்தச் சட்டத்திற்கு அவசியமேயில்லை. இப்படியுள்ள சட்டங்கள் முழுவதையும் ரத்து செய்யவேண்டியிருக்கிறது, அது மாதிரி சில சட்டங்களின் சில பகுதி

[Sri C. Subramaniam] [2nd November 1957

களை மாத்திரம் ரத்து செய்ய வேண்டியிருக்கிறது. இப்படி இருக்கக் கூடியவைதான் இரண்டாவது பகுதியில் கொடுக்கப்பட்டிருக்கிறது. இவைகளை எல்லாம் இரண்டு வருஷத்திற்கு ஒரு தடவை பரிசீலனை செய்வது முறையாயிருக்கும். அதைச் செய்யாததால்தான் பல வருஷத்திய சட்டங்களை, இப்பொழுதுதான் கவனித்து அதற்கு வேண்டிய திருத்தச் சட்டங்களை இப்பொழுது கொண்டுவருகிறோம். மூன்றாவது பகுதியில், சட்டங்களில் உபயோகப்படுத்தியிருக்கக் கூடிய பதங்களில் சில தவறுகள் இருக்கிறது. நம்மை அறியாமலேயே ஏற்பட்டிருக்கக் கூடியவை. அவைகளைக் கவனித்து அந்தத் தவறுகளைத் திருத்துவதற்காகவும் இந்த மூன்றாவது பகுதியில் இருக்கக் கூடிய சட்டங்கள் கொண்டு வரப்பட்டிருக்கிறது.

இப்படி மூன்று பகுதிகளாக இருக்கக்கூடிய ரத்து திருத்த மசோதாவை நன்றாக பரிசீலித்து இப்போது சபை முன் வைக்கப்பட்டிருக்கிறது. இதிலே கொள்கை அடிப்படையில் பாதிக்கக்கூடியதோ அல்லது நிர்வாகத்தை பாதிக்கக்கூடியதோ எந்த விதமான விஷயமும் இல்லை. ஆனால் அவ்வப்போது நம்முடைய சட்டங்களை தவறு இல்லாமல் இருக்கவும், சில சட்டங்களில் சில தவறான பதங்கள் இருந்தால் அதை சரிசெய்து நல்ல முறையில் கொண்டு வரவும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதிலும் முக்கியமாக ராஜ்ய புனரமைப்புக்கு பிற்பாடு இந்த சட்டம் மிக அவசியமாக வேண்டியிருக்கிறது. இதே மாதிரி இதை இரண்டு வருடத்திற்கு ஒரு தடவை, மூன்று வருடத்திற்கு ஒரு தடவை பரிசீலனை செய்து அப்போது இருக்கக்கூடிய நிலைமைகளையும் ஆராய்ந்து பார்த்து திருத்த வேண்டியது அவசியம். இதற்கு வேண்டிய எல்லா நடவடிக்கைகளையும் சட்ட இலாகா எடுக்கும் என்று நம்புகிறேன். ஆகவே இந்த சட்ட மூலத்தை ஏற்றுக் கொண்டு இதை சட்டமாக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

MR. SPEAKER : The question is—

"That the Madras Repealing and Amending Bill, 1957 be taken into consideration at once."

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clauses 2, 3, 4 and 5 were put and carried.

Schedules 1, 2 and 3 were put and carried.

Clause 1 and the preamble were put and carried.

THE HON SRI C. SUBRAMANIAM : சபாநாயகர் அவர்களே, இந்த மசோதாவை சட்டமாக நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

MR. SPEAKER : The question is—

"That the Madras Repealing and Amending Bill, 1957 be passed."

The motion was put and carried and the Bill was passed.

## (4) THE MADRAS CATERING ESTABLISHMENTS BILL, 1957.

THE HON. SRI R. VENKATARAMAN : Mr. Speaker, Sir, I beg leave to introduce the Madras Catering Establishments Bill, 1957 a and move :

a Published in the *Fort St. George Gazette* Extraordinary, dated 25th October 1957.



2nd November 1957] [Sri R. Venkataraman]

"That the Bill be referred to a Select Committee consisting of the following :—

The Hon. Sri R. Venkataraman
Sri M. William
,, M. P. Sarathy
,, V. Sankaran
,, A. R. Subbiah Mudaliar
Srimathi A. S. Ponnammal
Sri A. E. Chandrasekara Nayagar
,, K. R. Nallasivam
,, B. K. Linga Gowder
,, V. Subbiah
Dr. E. P. Mathuram
Sri M. Mayandi Nadar
,, P. G. Karuthiruman
,, N. K. Palanisamy
,, A. Mariappan

with instructions to report before the last day of the first week of the next session."

* THE HON. SRI R. VENKATARAMAN : சபாநாயகர் அவர்களே, கடை சிப்பந்திகள் சம்பந்தமாக 1948-ம் வருஷத்தில் சென்னை ராஜ்யத்தில் ஒரு சட்டம் நிறைவேற்றப்பட்டது. அதே சமயத்தில் மக்கள் சபையிலும் இந்த மாதிரி பாக்டரி சட்டம் நிறைவேற்றப்பட்டது. அப்போது இந்த சட்டத்தின் விளைவாக ஹோட்டல் முதலாளிகளுக்கும் ஹோட்டல் தொழிலாளர்களுக்கும் இடையே உள்ள நிலைமை சீரடைவதற்குப் பதிலாக இந்த சட்டத்தில் எந்த அம்சங்கள் அமுலாக இருக்கும் என்ற ஒரு பிரச்னை இருந்து கொண்டு வந்தது. இதனால் அவர்கள் ஒரு சட்டத்திற்கும் உட்படாமல் திரிசங்கு சொர்க்கத்தில் இருந்த நிலைமையில் தான் இருந்தார்கள். அதன் பிறகு சென்னை ராஜ்யத்தில் ஹோட்டல் தொழிலுக்கு பாக்டரி சட்டத்தில் இருந்து விதிவிலக்கு அளிக்கப்பட்டாக வேண்டும் என்று சொன்னார்கள். அதன் பிறகு ஷாப் சட்டத்தை அமுல் நடத்தலாமா என்று ஆலோசித்து பார்க்கும்பொழுது பலகாரங்கள் செய்து கொண்டிருக்கிற தொழிலாளிகளுக்கெல்லாம் இந்த ஷாப் சட்டத்தை அமுல் நடத்த முடியாமல் இருந்தது. இப்படியாக அவர்களுக்கு சட்ட பாதுகாப்பு இல்லாத முறை இருந்துகொண்டு வந்தது. ஆகவேதான் இதை பரிசீலனை செய்து தனியாக அவர்களுக்கு என்று அதாவது ஹோட்டல் முதலாளிகளுக்கும் ஹோட்டல் தொழிலாளர்களுக்கும் பொருத்தமாக இருக்கக்கூடிய முறையில் ஒரு சட்டம் ஏற்படுத்த வேண்டுமென்றுள்ள பிரச்னை இருந்து வந்தது. அதன் பயனாகத்தான் இந்த மசோதாவை சென்னை சர்க்கார் இப்போது கொண்டு வந்திருக்கிறது. இந்த மசோதாவை கொண்டுவருவதற்கு முன்னாலே இது சம்பந்தப்பட்ட முதலாளிகளும் தொழிலாளிகளும் அடங்கிய ஆலோசனை போர்டு முன்னால் வைத்து அவர்களின் அபிப்பிராயங்களை யெல்லாம் சர்க்கார் அறிந்திருக்கிறது. இந்த மசோதாவின் சில ஷரத்துக்களை நான் விளக்குகிறேன். இந்த மசோதா சென்னை நகரம், எல்லா முனிசிபல் ஏரியாவில் இருக்கும் ஹோட்டல்களுக்கும், முதல் தர பஞ்சாயத் எல்லைக்குள் இருக்கும் ஹோட்டல்களுக்கும் இந்த சட்டம் அமல் நடத்தப்படும். சாதாரண கிராமங்களில் இருக்கும் ஹோட்டல்களுக்கு இது அமல் நடத்தப்பட மாட்டாது. இதை ஏன் சொல்லுகிறேன் என்றால், யாராவது சிறு கடைகள் அதாவது டீ

[Sri R. Venkataraman] [2nd November 1957

ஸ்டால்களை வைத்துக்கொண்டு இருப்பவர்களையும் இது பாதிக்கிறதே, இந்த சட்டங்களை கடைபிடிக்க முடியுமா என்று சொல்ல வேண்டாம் என்பதற்காகத்தான் இதை நான் முதலாவதாகவே சொல்லிக் கொள்கிறேன். அடுத்தபடியாக இந்த சட்டத்தின்படி ஹோட்டல் தொழில், அதாவது உணவு விடுதிகள் வைப்பதாக இருந்தால் அவைகள் ரெஜிஸ்டர் செய்து கொள்ளவேண்டும். பாக்டரிகள் எவ்விதம் ரிஜிஸ்டர் செய்யப்படுகிறதோ அதே போன்று இவைகளும் ரெஜிஸ்டர் செய்து கொள்ள வேண்டும். இதில் ஒரு சிறு விதிவிலக்கு அளிக்கப்பட்டு இருக்கிறது. அதாவது ஹோட்டல் நடத்தக்கூடியவரும் அவருடைய சொந்த குடும்பமும் மாத்திரம் வேலை செய்வதாக இருந்தால் அந்த ஹோட்டல்களுக்கு இந்த சட்டத்திலிருந்து விதிவிலக்கு அளிக்கப்படுகின்றது. ஏனென்றால் சொந்த துறையில் அங்கு முதலாளி தொழிலாளி உறவு ஏற்படவில்லை என்பதால் இந்த விதி விலக்கு அளிக்கப்பட்டிருக்கின்றது. இதில் வேலை செய்யக்கூடிய தொழிலாளிகளை மூன்று விதமாக பிரிக்கப்பட்டிருக்கிறது. ஒன்று, குழந்தைகள் அதாவது 14 வயதிற்கு உட்பட்டவர்கள், இரண்டு, சிறுவர்கள் அதாவது 14 வயதிற்கு மேல் 18 வயதிற்குட்பட்டு இருக்கக்கூடியவர்கள், மூன்றாவது, வயது வந்தவர்கள் அதாவது 18 வயதிற்கு மேற்பட்டவர்கள். அடுத்ததாக அவர்களுடைய வேலை காரியத்தை எடுத்து சொல்லும் பொழுது 14 வயதிற்கு கீழ்பட்டவர்களை வேலைக்கு அமர்த்தவே கூடாது. பதினான்கு வயதிற்கு மேற்பட்டு 18 வயதிற்குட்பட்டு இருப்பவர்களுக்கு சில விதிகள் அமைக்கப்பட்டிருக்கின்றது. பதினெட்டு வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு எல்லா சட்டங்களும் பொருந்தும். வேலை நேரத்தை பொறுத்த அளவில் வயது வந்தவர்களுக்கு வாரத்திற்கு 48 மணி நேரமும், நாள் ஒன்றுக்கு 9 மணி நேரமும், விதிக்கப்பட்டிருக்கிறது. பாக்டரி சட்டத்தின் நிலைமைதான் இதிலும் இருக்கிறது. இது தவிர அதிகப்படியாக அதாவது ஓவர் டைம் வேலை வாங்கினால் ஒரு வாரத்திற்கு 10 மணிக்கு அதிகப்படாமல் 3 மாதங்களில் 50 மணிக்கு மேற்படாமலும் உபரி வேலை அதாவது ஓவர்டைம் வேலை வாங்க முடியும். ஓவர்டைம் வாங்குவதாயிருந்தால் அவர்களுக்கு அவர்களுடைய சம்பளத்தில் இரட்டிப்பு சம்பளம் கொடுக்கவேண்டும். பதினான்கு முதல் 18 வயது வரையிலுள்ள சிறுவர்களுக்கு 5 மணி நேரத்திற்கு மேல் தொடர்ந்து வேலை செய்யக்கூடாது. எந்த தொழிலாளியையும் 5 மணி நேரத்திற்கு மேல் துடர்ந்து வேலை வாங்கக் கூடாது. அவ்விதம் வேலை வாங்கும் பொழுது அரை மணி நேரம் ஓய்வுக் கொடுத்தாகவேண்டும்.

அடுத்தது, வேலை நேரத்தைப் பற்றியது. வேலை நேரம் நாள் ஒன்றுக்கு தொடர்ந்து, ஓய்வு நேரமும் சேர்ந்து, வேலை முடிகின்ற வரையிலும் 14 மணி நேரமாக இருக்கலாம். இந்த விஷயத்தில் பாக்டரி சட்டத்திலிருந்து சிறிது மாறுதல் செய்யப்பட்டிருக்கிறது. பாக்டரி சட்டத்தில் $10\frac{1}{2}$ மணி நேரம் தான். இந்தத்தொழிலில் 14 மணி நேரம் போட்டதற்குக் காரணம், சாப்பிடுபவர்கள் மாலை நோத்திலும் காலை நேரத்திலும் அதிகமாக வரக்கூடும்; அவர்களுக்கு சேவை செய்யவேண்டியிருப்பதால், அதற்கு உகந்த முறையில் மாற்றியமைக்கப்பட்டிருக்கிறது. இந்தத் தொழிலாளர்களுக்கு வாரம் ஒன்றுக்கு ஒரு நாள் விடுமுறை அளிக்க வேண்டும் என்று இந்தச் சட்டம் விதித்திருக்கிறது.

லீவ் விஷயத்தில், பாக்டரி சட்டத்தில் சொன்னது போல், 240 நாள் வேலை செய்த ஒவ்வொருவருக்கும் 20 நாட்களுக்கு ஒரு நாள் வீதம் லீவ் கொடுக்கவேண்டும் என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது; இந்த லீவ் சம்பளத்துடன் கொடுக்கும் லீவ். அதற்குக் குறைவாக வேலை செய்திருந்து வேலையிலிருந்து நீக்கப்பட்டால். அவர்களுக்கு அவர்கள் எவ்வளவு நாட்களுக்கு வேலை செய்திருக்கிறார்களோ அந்த அளவிற்குத் தகுந்தபடி லீவு அல்லது கூலி கொடுக்கவேண்டும் என்று கண்டிருக்கிறது.

இன்னும், சம்பளப் பட்டுவாடா செய்கின்ற விஷயத்திலும், "பேமெண்ட் ஆப் வேஜஸ் ஆக்ட்" பிரகாரம் சம்பளம் சரிவர கொடுக்கப்படாவிட்டால் "டிலேய்ட் வேஜஸ்" என்று சொல்லி, அதற்கான சட்டம் ஹோட்டல் தொழிலாளர்களுக்கும் செல்லும் என்று விதிக்கப்பட்டிருக்கிறது.



2nd November 1957] [Sri R. Venkataraman]

குழந்தைகளும் பெண்களும் இரவு நேரத்தில் வேலை செய்யக்கூடாது என்று கட்டுப்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதாவது, இரவு 9 மணிக்கு மேலும் காலை 5 மணிக்கு முன்பும், அவர்களை ஹோட்டல் தொழிலில், வேலை செய்யும்படி அமர்த்தக்கூடாது.

இன்னும், ஒரு முக்கியமான பாதுகாப்பு—பாக்டரிச் சட்டத்தில் இல்லாதது, இந்த தொழிலுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அது என்னவென்றால், 6 மாதங்கள் வேலை செய்த தொழிலாளியை தகுந்த காரணம் இல்லாமலும் நோட்டீஸ் கொடுக்காமலும் வேலையிலிருந்து நீக்கக்கூடாது என்பது ஆகும். அவ்வாறு நீக்கினால் சர்க்கார் நியமித்திருக்கும் அதிகாரிகளிடத்தில் அப்பீல் செய்துகொள்ளும் உரிமை தொழிலாளிக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.

அதோடு கூட, இதுவரை இருந்த நடைமுறைகளில் கோர்ட்டுகளின் தீர்ப்புகளின் மூலமாகவோ அல்லது ஒப்பந்தங்களின் மூலமாகவோ மசோதாவில் கண்டிருக்கின்ற சலுகைகளைவிட அதிகமான சலுகைகளைத் தொழிலாளர்கள் பெற்றிருப்பார்களானால், அவைகளும்—சட்டத்தில் அவைகளைவிடக் குறைவான சலுகைகள் இருந்தாலும், கொடுக்கப்படவேண்டும் என்று வரையறுக்கப்பட்டிருக்கிறது.

இந்தச் சட்டத்தை மீறுபவர்களுக்கு, முதல் தடவை மீறினால் ரூ. 250 அபராதமும், இரண்டாவது தடவையோ அதற்கு மேற்பட்டோ மீறினால் ரூ. 500 அபராதமும் தண்டனை என்று விதிக்கப்பட்டிருக்கிறது.

இந்தச் சட்டமானது பெருவாரியான தொழிலில் ஈடுபட்டிருக்கும் ஹோட்டல் முதலாளிகளையும் ஹோட்டல் தொழிலாளர்களையும் ஓரளவு கட்டுப்படுத்தும் காரணத்தினால், இந்த மசோதாவை ஒரு ஆலோசனைக் கமிட்டிக்கு விட வேண்டும் என்று சர்க்கார் தீர்மானித்திருக்கிறது. ஆகவே இந்தப் பிரேரபணையை நான் பிரேரேபிக்கிறேன்.

MR. SPEAKER: Motion moved—

"That the Madras Catering Establishments Bill, 1957 be referred to a Select Committee consisting of—

The Hon. Sri R. Venkataraman
Sri M. William
,, M. P. Sarathy
,, V. Sankaran
,, A. R. Subbiah Mudaliar
Srimathi A. S. Ponnammal
Sri A. E. Chandrasekara Nayagar
,, K. R. Nallasivam
,, B. K. Linga Gowder
,, V. Subbiah
Dr. E. P. Mathuram
Sri M. Mayandi Nadar
,, P. G. Karuthiruman
,, N. K. Palanisamy
,, A. Mariappan.

with instructions to report within the last day of the first week of the next session."

[Mr. Speaker] [2nd November 1957]

The hon. Member Sri N. K. Palanisamy has given notice of an amendment. He can move it now.

SRI N. K. PALANISAMI : Mr. Speaker, Sir, I move—

" *That the Madras Catering Establishments Bill, 1957, be circulated for eliciting public opinion.*"

MR. SPEAKER : Amendment moved—

" That the Madras Catering Establishments Bill, 1957, be circulated for eliciting public opinion ".

The motion as well as the amendment are before the House for discussion.

We shall have the discussion till 1-15 p.m. Will it be alright if I call the Hon. Minister to reply to the debate at 1-15.

THE HON. SRI R. VENKATARAMAN : Yes, Sir.

MR. SPEAKER : After all we are sending the Bill before a Select Committee. Do the hon. Members want the discussion to go on till 1-15? I think if the House has an hour for discussion it will be more than enough. I will leave it to the House to decide. I don't think more than 6 or 8 Members will participate in the discussion. I will allow 10 minutes to each hon. Member. I will now provisionally say that the Hon. Minister would reply to the debate at 12-30 instead of at 1-15 p.m.

* SRI N. K. PALANISAMI : கனம் சபாநாயகர் அவர்களே, ஹோட்டல் தொழிலாளர்களுக்கு விரோதமாக ஹைக்கோர்ட் தீர்ப்புச் செய்ததற்குப் பிறகு, கிட்டத்தட்ட இந்த மூன்று வருஷ காலமாக அவர்கள் பட்ட கஷ்டம் சொல்லத்தரமன்று. அவர்கள் மூன்று வருஷ காலமாக " எங்களுக்கு குறைந்தபட்ச ஊதியத்தை சர்க்கார் நிர்ணயிக்க வேண்டும். வேலை உத்தரவாதம் வேண்டும். ப்ராவிடண்ட் பண்ட் வசதி வேண்டும். எங்களுடைய வேலை நேரம் குறைக்கப்படவேண்டும்." என்ற கோரிக்கைகளுடன் கிளர்ச்சி செய்தது எல்லோருக்கும் ஞாபகம் இருக்கும். சர்க்கார் கொண்டுவந்திருக்கும் மசோதாவில், குறைந்த பட்ச சம்பளம், நிரந்தரமான வேலை முதலிய முக்கியமான விஷயங்களுக்கு உரிய ஷரத்துக்களைச் சேர்க்கவில்லை. வேலை நேரம், லீவ் வசதி ஆகிய இரண்டுக்கும் உரிய ஷரத்துக்களைத்தான் மசோதாவில் போட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு வேலை உத்தரவாதம் அளிப்பது பற்றி மசோதாவில் குறிப்பிடப்படவில்லை. இந்த மசோதாவில் உள்ள முக்கியமான குறைபாடு, சம்பளம் கொடுத்தோ சம்பளம் கொடுக்காமலோ " அப்பரெண்டிஸ் " வைத்துக்கொள்ளலாம் என்று மசோதாவில் அனுமதிக்கப்பட்டிருப்பது ஆகும். இதன் காரணமாக, முதலாளிகள் தொழிலாளிகளை எந்த நிமிஷத்திலும் நீக்கக் கூடிய நிலைமை ஏற்படும்.

தொழிலாளர்களுடைய பிற்கால வாழ்க்கைக்கு வேண்டிய சேமிப்பிற்கு வசதியளிப்பதற்கு மசோதாவில் வகைசெய்யப்படவில்லை. ப்ராவிடண்ட் பண்ட் போன்ற சலுகைகளுக்கு மசோதாவில் வகை செய்யப்படவில்லை.

மேலும், மசோதாவின் 6-வது செக்ஷனை எடுத்துக்கொள்வோம். திடீரென்று ஹோட்டல் போர்டுகளில் உள்ள பெயர் மாறுவது நமக்குத் தெரியும். சாதாரணமாக, ஹோட்டல் முதலாளி தொழிலாளிக்குக் கொடுக்கவேண்டிய பணத்தைக் கொடுக்காமலிருப்பதற்கு வகை செய்வதற்காகத்தான் இப்படி பெயரை மாற்றுகிறார்கள். ஹோட்டலை மூட



2nd November 1957] [Sri N. K. Palanisami]

வேண்டுமென்றால் மூடிய 10 நாட்களுக்குள் முதலாளி அதை அங்கேயுள்ள இன்ஸ்பெக்டருக்குத் தெரிவிக்கவேண்டும் என்று மசோதாவில் சொல்லப்பட்டிருக்கிறது. 10 நாட்களுக்குள் என்றால் அந்த ஹோட்டலில் வேலை செய்யும் தொழிலாளிகளின் நிலைமை என்ன ஆகும் என்று கேட்க விரும்புகிறேன். இதற்கு பதிலாக, ஹோட்டலை மூடுவதாக இருந்தால் ஒரு மாதத்திற்கு முன்பாகவே நோட்டீஸ் கொடுக்க வேண்டும் என்று விதிக்கவேண்டும். மேலும் **Registrar**-யிடம் சென்று **Registration**-ஐ **cancel** பண்ணக்கூடிய முறையில் அதைத் திருத்தியமைத்தால் நன்றாக இருக்கும். மேலும் **Retrench** பண்ணப்பட்ட தொழிலாளர்களுக்கு **Compensation** கொடுக்கப்படுவதற்கு வகை செய்ய வேண்டும். மேலும் மூடப்பட்ட ஹோட்டலை பழைய முதலாளியின் **family**-ஐச் சேர்ந்தவர்கள் மறுபடி திறப்பதாக இருந்தால் அவர்கள் வேறு லைஸென்ஸ் வாங்கவேண்டும் என்று விதிக்க வேண்டுமே தவிர பழைய லைஸென்ஸை அனுமதிக்கும்படி விதிக்கக்கூடாது.

இந்த மசோதாவில் அதிகப்படியாக வேலை செய்தவருக்கு அதற்காக தனிச் சம்பளம் கொடுக்கவேண்டும் என்று விதித்திருப்பது வரவேற்கத் தக்கது. இந்த விதியை மீறுவதற்கும் 23-வது பிரிவில் குறிப்பிட்டுள்ள அபராதத்தை விதிக்க வகை செய்தால் நன்றாக இருக்கும். அதற்காக இந்த விதியைக் கொண்ட பிரிவாகிய 8-வது பிரிவையும் 23-வது பிரிவில் குறிப்பிட்டுள்ள பிரிவுகளுடன் சேர்த்தால் நன்றாக இருக்கும்.

மசோதாவில் குறிப்பிட்டுள்ளபடி, ஒரு ஹோட்டல் தொழிலாளி 5 மணி நேரம் வேலை செய்தால் ½ மணி நேரம்தான் ஓய்வு கிடைக்கும். கனம் அமைச்சர் அவர்கள், தமது பேச்சின் முடிவில், " இதற்குக் காரணம் ஹோட்டல்களில் சாயந்திரத்திலும் காலையிலும் அதிக வேலையும் மற்ற நேரங்களில் குறைந்த வேலையும் இருப்பது ஆகும் " என்று சொன்னார்கள். அநேகமாக எல்லா ஹோட்டல்களிலும் மத்தியானச் சாப்பாடும் இருக்கிறது. ஆகவே இந்தத் தொழிலாளர்கள் மத்தியானச் சாப்பாடு போடும் வேலையையும் மற்ற வேலைகளையும் செய்ய வேண்டும். இந்த நிலையில், இவர்களுக்கு 4 மணி நேரத்திற்கு ஒரு தடவை வீதம் ஓய்வு கொடுக்கப்பட வேண்டும்.

அது மட்டுமல்ல 14 மணி நேரம் வேலை செய்ய வேண்டும் என்பதை திருத்தி அதை மூன்று ஷிப்டுகளாக அமைத்து நாலு மணி நேரங்களாக வேலை செய்யச் சொல்ல வேண்டும். அதாவது நாலு மணிக்கு ஒரு தடவை அவர்களுக்கு ஓய்வு கொடுத்தால் சரியாக இருக்கும். அது மட்டுமல்ல 240 நாட்கள் வேலை செய்தால் 12 நாட்களுக்கு ஸிக் லீவும் 12 நாட்களுக்கு காஷுவல் லீவும் என்று சொல்லப்படுகிறது. அவசியம் ஏற்படும் போது 240 நாட்கள் வேலை செய்த பிறகுதான் கொடுக்கும்படியாகவும் இருக்கிறது. அப்படி இல்லாமல் மூன்று மாதங்களுக்கு ஒரு தரம் ஐந்து நாட்களாகவோ அல்லது நாலு நாட்களாகவோ கொடுத்தால் நலமாக இருக்கும்.

அது மட்டுமல்ல குழந்தைகளாக இருந்தால் அதாவது 14 வயதுள்ளவர்களையோ அல்லது பெண்களையோ வேலை செய்ய அனுமதிக்கப்படவில்லை. அது நன்மைதான். செக்ஷன் 22 இருக்கிறதே அந்த முறையில் சட்டத்தை வைத்துக்கொண்டால் வருத்தப்படும் அளவுக்குத்தான் அது கொண்டுபோய் விடும். மேலும் அபராதம் போடும்போது முதல் தடவையில் 250 ரூபாய் அபராதமும் மறுபடியும் குற்றம் செய்தால் அதைவிட இரண்டு மடங்கு அபராதம் போடப்படும் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. அப்படி இரண்டு மடங்கு அபராதம் போட்டால் ஹோட்டல் முதலாளிகள் பயப்பட மாட்டார்கள். எவ்வளவு பணத்தை அபராதமாகப் போட்டாலும் அவர்கள் கொடுத்து விடுவார்கள். அப்படி இல்லாமல் 20 நாளாவது ஜெயில் தண்டனையாக வைத்தால்தான் இது நடை முறைக்கு வருவதற்கு சௌகரியமாக இருக்கும்.

ஆகவே இப்படிப்பட்ட முறைகளெல்லாம் ஹோட்டல் தொழிலாளர்களை பாதுகாப்பதாக இல்லை. இதையெல்லாம் சுற்றுப் பிரயாணம் செய்து தெரிந்துகொள்ள வேண்டும். சென்னையில் ஹோட்டல் தொழிலாளர்

களுடைய கூட்டத்தைக் கூட்டினதாகச் சொன்னார். அந்தக் கூட்டத்திற்கு போதுமான பிரதிநிதிகள் வரவில்லை என்பது என்னுடைய அபிப்பிராயம். ஆகவே கனம் மந்திரி அவர்கள் மதுரை, சேலம் ஜில்லாக்களுக்குச் சென்று அங்கேயுள்ள சுற்று வட்டாரப் பிரதிநிதிகளை வரச்செய்து அவர்களுடைய ஆலோசனைகளையும் கேட்க வேண்டுமென்ற அடிப்படையில் இந்த திருத்தத்தைக் கொடுத்திருக்கிறோம். ஆகவே இதை ஆதரிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

* SRI K. VINAYAKAM : மிஸ்டர் சேர்மன் ஸர், அரசாங்கம் இப்பொழுது ஹோட்டல் தொழிலாளர்களுடைய பாதுகாப்புக்காக ஒரு சட்டத்தைக் கொண்டு வருவதைக் கண்டு நான் சந்தோஷப்படுகிறேன். வாஸ்தவம். ஹோட்டல் தொழிலாளர்கள் பல இன்னல்களுக்கு உள்ளாகிறார்கள். இது பல வருஷங்களாக நடைபெற்று வருகிறது. இந்தத் தொழிலை நடத்துவது என்றால் பாக்டரி தொழிலைப்போலவோ அல்லது சிறிய கடையை முதலாளிகள் வைத்துக்கொண்டிருப்பதைப் போலவோ அல்லது குமாஸ்தாவை வைத்துக்கொண்டு வியாபாரம் நடத்துவது மாதிரி அல்ல. ஒரு ஹோட்டலை நல்ல முறையில் நடத்த வேண்டுமென்றால் அதிலுள்ள தொழிலாளி காலையில் 4 மணிக்கே ஹோட்டலில் ஆஜராகிவிடவேண்டும். நெருப்பு மூட்டி பாத்திரங்களை சுத்தப்படுத்தி பட்சணங்களை பக்குவமாகச் செய்து முதலில் இட்லி சாம்பார் டேபிளுக்கு வரவேண்டுமென்றால் அதாவது 6 மணிக்கு டேபிளுக்கு வரவேண்டுமென்றால் அதற்காக தொழிலாளி 4 மணிக்கே வந்திருக்கவேண்டும், அடுப்புக்கு.

இப்படிப்பட்ட இன்னல் இருக்கிறது. அந்தத் தொழிலாளி அதே நெருப்பில் எத்தனை மணி வேலை செய்யவேண்டும், எவ்வளவு பாதுகாப்பு அவர்களுக்குத் தரவேண்டும், அவர்களுடைய உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும், அவர்களுக்கு லீவு அலவன்ஸ், ஸிக் அலவன்ஸ் போன்றவைகள் அவர்களுக்குத் தரவேண்டும், இவைகளையெல்லாம் குறிப்பிட்ட இந்த மசோதாவை வரவேற்கக் கூடியதாகத்தான் இருக்கிறது, இவைகளெல்லாம் வரவேற்கக்கூடிய அம்சங்களாகும். இந்த சட்டத்தைப் பொறுத்தவரையில் கொண்டு வந்திருக்கக்கூடிய திட்டமோ அல்லது அம்சமோ அவைகளைக்கொண்டு யாருமே அதிகமாக அபிப்பிராய பேதம் காட்டவோ அல்லது எதிர்க்கவோ மனம் துணிய மாட்டார்கள். அவர்களுக்கும் எல்லா வசதியும் வேண்டும். அவர்கள் ஓய்வு எடுத்துக்கொள்ள தனி இடம் வேண்டும். மற்ற இடங்களில் கொடுக்கப்படும் வசதிகளை விட இவர்களுக்கு அதிகப்படியான வசதிகள் செய்துகொடுக்கப்பட வேண்டும். பாக்டரி தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்படும் வசதிகளைப் போலோ அல்லது மற்றவர்களுக்குக் கொடுக்கப்படும் வசதிகளைப் போலோ இவர்களுக்குக் கொடுக்கப்படவேண்டும் என்பதிலும் அபிப்பிராய பேதம் இருக்க முடியாது. இந்தத் தொழில் ஒரு நூதனமான தொழில். நான் ஏற்கெனவே சொன்னதைப்போல இவர்களுடைய நிலைமையில் தொழிலாளர்களைப் போலவோ அல்லது பாக்டரி தொழிலாளர்களைப் போலவோ இல்லை. இந்தத் தொழிலில் முதலாளியும் தொழிலாளியும் ஒன்று சேர்ந்து ஒருவரை ஒருவர் நம்பி அந்தத் தொழிலை நடத்தினால்தான் அந்தத் தொழில் வெற்றிபெற முடியும். ஒருவருக்கொருவர் நம்பாமல் இருந்தால் இந்தத் தொழில் முன்னேற்றமடையாது. அரசாங்கத்தாரும், மந்திரிகளும் சட்டசபை அங்கத்தினர்களும் சென்னையில் இருக்கக்கூடிய சில பெரிய ஹோட்டல்களாகிய மாடர்ன் கபே, மைசூர் கபே, நேரு கபே, கன்னமாரா ஹோட்டல் முதலிய ஹோட்டல்களைப் பார்த்துவிட்டு, அங்கே முதலாளிகள் சுகமாக பங்காவில் உட்கார்ந்துகொண்டிருக்கிறார்கள், பர்னிச்சர் இருக்கின்றன, சாமான்களைக் கொண்டு வந்து கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள், நல்ல வசதி இருக்கிறது, ராஜாக்களாக இருக்கிறார்கள், நிறைய ஜனங்கள் வருகிறார்கள் போகிறார்கள் என்றெல்லாம் நினைத்துவிடக்கூடாது. இதையெல்லாம் பார்த்து விட்டு ஹோட்டல்காரர்களுக்கு நல்ல லாபம் வருகிறது என்று யாராவது ஒரு முடிவுக்கு வந்தால் அவர்களுக்கு அனுபவம் இல்லை என்றுதான் சொல்ல முடியும். அப்படி நினைப்பது தவறு என்பதுதான் எனக்குப் படுகிறது. எனக்குத் தெரியும் கனம் பழனிசாமி அவர்களுக்கு ஒரு பக்க நிலைமைதான் தெரியும். " There are two sides for



the picture ". ஒரு படத்திற்கு இரண்டு பக்கங்கள் இருக்கின்றன என்பதை அவர் அறிந்து கொள்ள வேண்டும். அவர் என்ன சொல்வார் என்றால் ரஷ்யாவைப் பாருங்கள், சைனாவைப் பாருங்கள் என்றுதான் அவர் சொல்லுவார். அதே மனப்பான்மையில் எல்லா அங்கத்தினர்களும் இருந்தால் அது தவறு. ஹோட்டல் தொழிலாளர்களுக்குத்தான் இப்பொழுது பாதுகாப்பு கோரப்படுகிறது. சலுகைகள் கோரப்படுகிறது. ஹோட்டல் தொழில் நல்ல முறையில் நடைபெற வேண்டுமானால் முதலாளியும் அதில் வேலை செய்யும் தொழிலாளர்களும் நல்ல முறையில் ஒத்துழைத்து வேலை செய்ய வேண்டும். ஹோட்டல் முதலாளிகள் ஹோட்டலில் வரக்கூடிய பணத்தைத்தான் தொழிலாளர்களுக்குத் தர முடியுமேயொழிய வீட்டில் வைத்திருக்கக்கூடிய முதலை அதாவது அவர்களுடைய பெற்றோர்கள் வைத்துவிட்டுப்போன பணத்தை எடுத்து இவர்களுக்குக் கொடுக்க முடியாது. அப்படி தங்களுடைய ஆஸ்தியிலிருந்து யாரும் கொடுத்தது இல்லை, கொடுக்கவும் முடியாது. இதை நான் தாராளமாகச் சொல்லுகிறேன். இதைப்பற்றி நான் சொல்வதால் ஹோட்டல் முதலாளிகளிடத்தில் நான் வக்காலத்து வாங்கிப் பேசுவதாக நினைக்கக்கூடாது. உண்மையிலேயே ஒரு தொழிலாளி முதலாளியுடன் ஒத்துழைக்கக்கூடாது என்று விரும்பினால் சாம்பாரில் ½ படி உப்பு போடுவதற்கு பதிலாக இரண்டு படி உப்பு போட்டு விட்டால் என்னவாகும் என்பதைப் பாருங்கள். சாம்பார் ருசிக்குமா ? அதைச் சாப்பிடுகிறவர்கள் திட்டாமல் போவார்களா ? இந்த நஷ்டம் யாருக்குச் சேரும். ஹோட்டல் தொழிலாளிக்குச் சேருமா அல்லது முதலாளிக்குச் சேருமா என்பதை யோசித்துப் பார்க்க வேண்டும். அந்த சாம்பாரை எடுத்து அப்படியே கொட்ட வேண்டியதுதான். " It beeomes unfit for consumption ". அதை உணவுக்கு எடுத்துக்கொள்வதற்கு முடியாது. இம்மாதிரி பரஸ்பரம் அவர்களிடத்தில் நாணயம் இருந்தால்தான் இந்தத் தொழில் நன்றாக நடைபெறும். அந்தத் தொழில் வளருவதற்கு இடம் ஏற்படும். இப்படிப்பட்ட ஒரு சட்டத்தைக்கொண்டு வருவதனால் அவர்களுடைய உரிமைகளை பாதுகாக்கப்படுவதாகச் சொல்லப்படுகிறது. அவர்களுடைய மனசாட்சிக்கு விரோதமாக நடப்பவைகளுக்கு நாம் இடம் கொடுக்கக்கூடாது. அவர்களுடைய உரிமைகளுக்கு வாதாடுகிறவர்கள் அந்தத் தொழிலாளிகள் இப்படிப்பட்ட காரியங்களைச் செய்தால், அவர்களுடைய கடமையைச் செய்யத் தவறினால் அதைத் தவிர்க்க என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்வது என்பதையும் சொல்லவேண்டும். அந்த அளவில் அவர்கள் மேல் நடவடிக்கை எடுத்துக்கொள்வதற்கு இந்த மசோதாவில் என்ன இடம் இருக்கிறது என்பதை கனம் மந்திரி அவர்கள் கொஞ்சம் சிந்தித்துப் பார்க்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். எனக்குத் தெரியும் சில ஹோட்டல்களுடைய கதி. சென்னையில் சில ஹோட்டல்களுக்கு பிரமாதமாக விளம்பரம் செய்து திறப்பு விழாக்கள் நடைபெறும். அதற்கு 20 ஆயிரம் அல்லது 30 ஆயிரம் ரூபாய் வரையில் செலவு செய்திருப்பார்கள். புதியதாக ஹோட்டல் வந்து மூன்று மாதங்களுக்குள்ளாகவே அது மூடப்பட்டு விடும். ஏனென்றால் அங்கே " லேபர் ப்ராப்ளம் " வரும். ஒருபுறம் " முதலாளிகள் ஒழிக " என்ற கோஷம் கிளம்பும். மற்றும் தொழிலாளிகள் ஒத்துழைப்பு இல்லாமல் அடுப்பில் விறகு கட்டையில் நெருப்பு பற்ற வைப்பதற்கு பலகாரம் செய்ய வாங்கிக் கொடுத்த டால்டாவையோ அல்லது ஓ.கே. வனஸ்பதியையோ அப்படியே டப்பாவோடு அடுப்பில் கொட்டி நெருப்பைப் பற்ற வைத்தால் அதை எப்படிக் கண்டு பிடிப்பது ? அது என்ன ஆகும் ? அதை யாரால் கண்டு பிடிக்க முடியும் ? " What is the process of detection ". இதைப் பற்றி நான் குறிப்பிடும்போது அனுபவப்பட்டுதான் சொல்லுகிறேன். பல ஆண்டுகளுக்கு முன்னதாக நான் ஹோட்டலை நடத்தி இதைத் தெரிந்து கொண்டேன். மவுண்ட் ரோடில் அப்படிப்பட்ட ஒரு ஹோட்டலை நடத்திப் பார்த்தேன். அந்த ஹோட்டல் " Foreign catering with foreign liquor for consumption ". அதை வைத்துப் பார்த்துதான் அதன் நிலைமை என்ன என்று தெரிந்து கொண்டேன். இப்படிப்பட்ட சட்டம் அப்பொழுது கிடையாது. அந்த சட்டம் இல்லாமலேயே தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு கொடுக்கப்பட்டு வந்தது. எங்களுக்குத் தெரியும் அப்பொழுது தொழிலாளர்களுடைய நிலைமை என்ன என்பது,

எந்தத் தொழிலாளிகள் முதலாளிகளுடைய முதலுக்கு நஷ்டம் வராமல் தானும் சுகப்பட்டுக்கொண்டு முதலாளிகளும் சுகப்படவேண்டுமென்ற எண்ணம் கொண்டவர்கள் என்று முதலாளிகளுக்குத் தெரியும்.

**Because, he is the man on the spot; it is not the Government that is watching all these things.**

40 பேர்கள் தொழிலாளிகள் இருந்தால் அவர்களில் 35 பேர் நல்லவர்களாய் இருப்பார்கள். இது என் அனுபவத்தில் தெரியும். முதலாளியும் தொழிலாளிகளின் உரிமைக்குப் பாதுகாப்புக் கொடுக்க வேண்டும். அதேபோல் தொழிலாளியும் முதலாளிகளுக்குச் செய்யவேண்டிய கடமையை மறுக்கக்கூடாது. சுலபமாகவே பெருத்த நஷ்டத்தை உண்டாக்க முடியும் தொழிலாளிகளால். ஒருவர் உள்ளே போய்ச் சாப்பிட விரும்புகிறார். அவருக்கு அவசரமாகப் போகவேண்டும். மேஜையண்டை போய் நாற்காலியில் உட்கார்ந்து " ஒரு இட்லி, ஒரு வடை, சாம்பார் கொண்டு வா " என்று சொல்கிறார். அப்போது அந்த ஸெர்வர் மெதுவாக நடக்கலாம். சீக்கிரமாகக் கொண்டுவர வேண்டுமென்று சட்டமில்லை. **(He can take his own time. The most slovenly method of catering is permitted, because there is no provision or guarantee against such slovenly behaviour)** மெதுவாகப்போய் எடுத்து வந்து அவர் எதிரே விசிறிப் போடலாம். மெதுவாக வைத்துவிட்டு சுருட்டி விடலாம். அப்படி விட்டால் அதற்கு ஒன்றுமில்லை. அப்படி விடக்கூடாது என்று சட்டமில்லை. இப்படி ஒரு தொழிலாளி செய்தால் எல்லாத் தொழிலாளிகளும் செய்யவேண்டியதில்லை; பலர் நல்லவர்களாக இருக்கிறார்கள். நூற்றுக்குத் தொண்ணூற்றைந்து பேர்கள் நல்லவர்கள். இந்தத் தொழிலாளி முதலாளிக்குக் கெட்டபேர் வாங்கித்தர வேண்டுமென்று நினைத்தால் அதை சுலபமாகச் செய்யலாம். சாப்பிட வந்தவர் எதாவது கேட்டால் "இதுதான் இருக்கிறது சாப்பிட்டால் சாப்பிடுங்கள்" என்று சொல்லுவார்கள். " உப்பு கொஞ்சம் அதிகமாயிருக்கிறது, வேறு எதாவது கொண்டு வா " என்று சொன்னால், "வேறு ஒன்றும் கொண்டுவர மாட்டேன், இஷ்டம் இருந்தால் இதைச் சாப்பிடுங்கள், இல்லாவிட்டால் எழுந்து போய்க்கொண்டேயிருங்கள் ஐயா" என்று சொல்லுவார்கள். நான் இதை பயமில்லாமல் சொல்லுகிறேன். பலர் சொல்ல மறுப்பார்கள். நான் சொல்வது நாகரீகமா, அநாகரீகமா என்றுகூட சந்தேகிப்பார்கள். நாமெல்லோரும்தான் ஹோட்டலில் போய்ச் சாப்பிடுபவர்கள். நமக்கு பர்ஸனல் எக்ஸ்பீரியன்ஸ் இருக்கிறது. தொழிலாளிகள் முதலாளிகளுக்குக் குந்தகம் வராமல், தொழிலும் கெடாமல், கெட்டபேர் வாங்கித் தராமல் நடந்துகொள்ளவேண்டும். அதே நேரத்தில் முதலாளிகளும் தொழிலாளிகளுக்கு முறைப்படி எல்லாச் சலுகைகளும் கொடுக்கவேண்டும். இந்தச் சலுகைகளை எப்படிக் கொடுப்பது. முதலாளி தன்னுடைய சொந்த பணத்திலிருந்து கொடுக்க முடியாது. வரக்கூடிய லாபத்திலிருந்துதான் கொடுக்க முடியும். ஆக முதலாளிகளுக்கு லாபம் வரக்கூடிய முறையில் தொழிலாளிகள் நடந்துகொள்ள வேண்டும். இந்த மசோதாவில் முதலாளிகளுக்கு என்ன பாதுகாப்பு இருக்கிறது என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். **There is no provision protecting the rights and privileges of the caterer.** இதைச் சிந்திக்க வேண்டும். இதே மாதிரி சொல்லலாம். ஒரு சாரருக்கு சலுகை தரவேண்டுமென்று மசோதா கொண்டு வந்திருக்கிறோம். இன்னொரு சாராருக்கு பின்னிட்டு சிந்திக்கலாம் என்று சொன்னால், **this cannot be separated so easily.** இவைகளையெல்லாம் ஆலோசிப்பதற்கு ஸெலெக்ட் கமிட்டியிலே விஷயம் தெரிந்தவர்கள் ஒரு சிலர் இருக்கவேண்டும். **I mean no offence to any member put on the Select Committee.** இந்த நுணுக்கம் தெரிந்தவர்கள், விஷயம் தெரிந்தவர்கள் இருக்கவேண்டுமென்று சொல்லுகிறேன். நான் அதில் இருக்கவேண்டுமென்பதற்காகச் சொல்லவில்லை. மந்திரி அவர்கள் விநாயகத்தைப் போட்டுக்கொண்டால் என்ன என்று சொல்லுகிறதாக தோன்றுகிறது. நான் வர விரும்பவில்லை. இதில் விஷயம் தெரிந்தவர்கள் சட்டசபையில் இருந்தால் அவர்களின் யோசனையை எடுத்துக்கொள்ளவேண்டும்.





ஹோட்டல் தொழிலாளிகளுக்கும், முதலாளிகளுக்கும் தகராறுகளேயில்லாமல் உள்ள எத்தனையோ ஹோட்டல் இன்னும் இருக்கின்றன. எத்தனையோ சமயங்களில் தொழிலாளிகள் " ஆல் மெட்ராஸ் ஸ்ட்ரைக் செய்யப்போகிறோம், அதில் சேருங்கள் " என்று கூப்பிடும்போது, அவர்கள் " எங்கள் முதலாளி எங்கள் பக்கம் உள்ளவர்கள், நல்லவர்கள், லீவ் அலவன்ஸ், ஸிக் அலவன்ஸ் எல்லாம் கொடுக்கிறார். தட்சிணைக் காசு எல்லாம் தாராளமாய்க் கொடுக்கிறார். எங்களுடைய வேலை சௌகரியத்தையெல்லாம் பார்க்கிறார் " என்று சொல்லி, நாங்கள் இந்த ஸ்ட்ரைக்கில் சேரத் தயாராயில்லையென்று சொல்லக்கூடிய தொழிலாளிகள் எவ்வளவோ பேர்கள் இருக்கிறார்கள். இந்த தட்சணைக் காசு என்பது ஒன்று. அதாவது ஒவ்வொரு நாள் சாயங்காலத்திலும் கொடுப்பது. அதில் காலணா குறைந்தாலும் மறு நாள் சாப்பாட்டில் உப்பைப் போட்டுவிடுவான். அப்படிக் கொடுக்கும் முதலாளிகள் இருக்கிறார்கள். அப்படிப் பல பேர்கள் இருப்பதால்தான் இன்று இந்தத் தொழில் நன்றாக நடக்கிறது. தொழிலாளிகள் செய்யவேண்டிய கடமையில் தவறிவிட்டால் அதற்கு முதலாளிகளுக்கு என்ன பாதுகாப்பு இருக்கிறது என்று சிந்தித்துப் பார்க்கவேண்டும். அப்படி யாரும் சட்டசபையிலிருந்து குழுவுக்கு வர மறுத்தால் முதலாளிகள் சங்கம் வைத்திருக்கிறார்கள் "ஹோட்டல் ப்ரொப்ரைட்டர்ஸ் அஸோஸியேஷன், ஸ்டேட், சிடி, முதலியன. அப்படி இருக்கின்றவர்களை அழைத்து, சாட்சியம் சொல்லுவதற்கு, கமிட்டிக்கு அவர்களுடைய அபிப்பிராயத்தைச் சொல்லுவதற்கும் வாய்ப்புத் தரவேண்டுமென்று சொல்லி, கிளாஸ் பை கிளாஸ் வரும்போது மற்ற சிக்கல்களைச் சொல்லுவேன் என்று சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

* **Sri P. S. CHINNADURAI** : மதிப்புக்குறிய சபாநாயகர் அவர்களே, ஹோட்டல் தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பளிக்கும் முறையிலே ஒரு மசோதாவை இந்த சபை முன்பு சமர்ப்பித்திருக்கும் தொழிலமைச்சருக்குப் பாராட்டு கூறுகிறேன். இந்த மசோதாவானது, புதிதாகத் தயாரிக்கப்பட்டு, இப்போது முதல் முறையாக சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் போது, இதில் பல உபயோககரமான திருத்தங்கள் செய்யப்படவேண்டுமென்று இங்கு குறிப்பிட விரும்புகிறேன். இந்த மசோதாவானது எங்கு உணவு விநியோகிக்காமல் சாதாரண தங்கும் விடுதிகளாக அமைக்கப்பட்டிருக்கின்றனவோ அந்த விடுதிகளிலுள்ள தொழிலாளர்கள் உதவி செய்வதாக இல்லை. அவைகளும் ஹோட்டல் முறையில் கருதப்பட்டு, ஆனால் அந்த இடத்தில் உணவு, சிற்றுண்டிகள் இல்லை, தங்கும் விடுதிகளாக இருக்கிறது. அவர்களையும் சேர்த்துக்கொண்டு இந்த மசோதாவை அமுல் நடத்தினால் மிகவும் நல்லது. இன்றே இதனைச் செய்யவில்லையானால், பின்னர் இதனைப் பற்றி ஆலோசித்து ஒரு திருத்த மசோதா கொண்டுவரும் அவசியம் ஏற்படலாம். அதுவும் அண்மையிலேயே நேரிடலாம். முன்பே அந்த நல்ல காரியத்தை செய்யவேண்டும், அவர்களும் உதவி பெறுகிற முறையிலே இந்த மசோதா விஸ்தரிக்கப்படவேண்டுமென்று விரும்புகிறேன். **" Residential hotel " means any premises in which the business of providing dwelling accommodation and supply of meals to any member of the public or a class of the public is carried on;** என்று இருக்கிறது. ஸப்ளை ஆப் மீல்ஸ் என்று இல்லாமல் **" providing dwelling accommodation only or dwelling accommodation and supply of meals "** என்று இந்த தங்கும் விடுதிகளையும் சேர்த்துக்கொண்டால் நல்லதாக இருக்கும் என்பது என்னுடைய அபிப்பிராயம். ஆகவே இதை மாற்றியாக வேண்டுமென்று கூறுகிறேன்.

**Mr. SPEAKER** : அதற்குத்தக்க சமயத்தில் அமெண்ட்மெண்ட் கொடுத்தால் நலமாயிருக்குமென்று நினைக்கிறேன்.

* **Sri P. S. CHINNADURAI** : இந்த மசோதாவை ஸெலெக்ட் கமிட்டிக்கு விடுவதற்காக மோஷன் இருக்கிறது. ஸெலெக்ட் கமிட்டியின் ஆலோசனைக்காகத்தான் இவைகளை சமர்ப்பிக்கிறேன்.

மேலும் வாராந்திர லீவ் கொடுப்பதற்கு பேக்டரி ஆக்ட்டில் எந்த மாதிரி அமைப்புகள் இருக்கின்றனவோ அதையெல்லாம் இந்த மசோதாவில் ஒப்புக்கொண்டிருப்பது வரவேற்கத்தக்க அம்சமாகும். பண்டிகை லீவ்

சம்பந்தமாக எதுவும் குறிப்பிடப்படவில்லை. எங்கும் இது சம்பந்தமாகக் கிளர்ச்சிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அநேக தொழிற்சாலைகளில் இதை ஏற்றுக்கொண்டும் வருகிறார்கள். பண்டிகைகள் என்பது எல்லோருக்கும் பொதுவானது. ஹோட்டல் தொழிலாளர்களுக்கு பண்டிகைகள் இல்லையென்பதில்லை. ஆகவே பண்டிகை லீவ் கொடுக்கும் ஏற்பாட்டினை செய்யவேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த மசோதாவிலேயிருந்து குடும்பத்தினர் மட்டும் நடத்துகிற ஹோட்டல்களுக்கு விதிவிலக்கு அளிக்கப்படும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதை நான் வரவேற்கிறேன். ஆனால், அதே நேரத்தில் குடும்பத்தினரும் சில தொழிலாளர்களை வைத்துக்கொண்டு நடத்துகிற ஹோட்டல்களுக்கு என்ன முறையிலே இந்த மசோதாவிலே விதிகள் வகுக்கப்பட்டிருக்கின்றன என்று பார்த்தால் அவர்களுக்கு என்று தனியாக விதிகள் தயாரிக்கப்படவில்லை. குடும்பத்தினர் ஒரு பகுதியும், புருஷன், மனைவி, மகன், மகள் இன்னும் இரண்டு தொழிலாளர்கள் என்று இருந்தால் அத்தகைய ஹோட்டல் எப்படி நடத்தப்படுகிறது, இந்த மசோதா அவர்கள் விஷயத்தில் எவ்வாறு செயல்படப் போகிறது என்று பார்க்கும்போது அவர்கள் விஷயத்திலே விதிவிலக்கானது வராது என்று நிச்சயமாக தோன்றுகிறது. அப்படி இருக்குமானால் அதனால் பல சங்கடங்கள் ஏற்படக்கூடும். பொதுவாக, இப்போதெல்லாம் குடும்பத்தினரே தாமே உழைக்கின்ற ஒரு நிலைமையிலே, குறிப்பாக மேஜர் பஞ்சாயத்துக்களிலே அத்தகைய ஹோட்டல்கள் பல இருக்கின்றன. அவர்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதற்குரிய ஏற்பாடுகளை இதிலே செய்யவேண்டுமென்று நான் வேண்டிக்கொள்ளுகின்றேன்.

ஹோட்டல் தொழிலாளர்களுக்கு செக்ஷன் 19 (2) இன் கீழே சில பாதுகாப்புகள் கொடுக்கப்படுகின்றன. ஆனால், "(2) The employee shall have a right to appeal to such authority and within such time as may be prescribed either on the ground that there was no reasonable cause for dispensing with his services or on the ground that he had not been guilty of misconduct as held by the employer" என்று இருக்கிறது. 19-வது செக்ஷனிலே உப செக்ஷன் 2, 3 இவைகளிலே சொல்லப்படுகிற பாதுகாப்பைப் பொறுத்தவரை அவை வரவேற்கத்தக்கதுதான். ஆனால், அந்த அதிகாரத்தை யாருக்கு அளிக்கப்போகிறார்கள் என்று இந்தச் சபைக்கு அறிவிக்கப்படவில்லை. கனம் மந்திரி அவர்கள் தனது பிரசங்கத்தில் சொல்வார் என்று எதிர்பார்த்தேன். ஆனால் அவர் எதுவும் சொல்லவில்லை. இப்பொழுது இருக்கும் தொழில் கோர்ட்டுக்கே அந்த அதிகாரம் வழங்கப்படுமானால் அது நன்மையாக இருக்கும் என்று இங்கே சொல்லிக்கொள்ளுவேன்.

ஸ்ப்ரெட் ஓவர் டைம் 14 மணி நேரம் வரையில் இந்த மசோதாவில் அனுமதிக்கப்பட்டு இருக்கிறது. இது 14 மணி நேரத்திற்குக் குறைவாக இருந்தால் நல்லது. ஏற்கெனவே உள்ள பாக்டரிகள் சட்டத்தில் 10½ மணி நேரம்தான் நிர்ணயிக்கப்பட்டு இருக்கிறது. வேண்டுமானால் பாக்டரிகளின் சீப் இன்ஸ்பெக்டர் அதைப் பன்னிரண்டு மணி நேரத்திற்கு உயர்த்திக் கொள்ளலாம் என்று இருக்கிறது. பெரும்பாலான இடங்களில் பத்தரை மணி நேரம் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டு அமலில் இருந்து வருகிறது. இதைப் 14 மணிநேரம் என இந்த மசோதாவில் விட்டுவைப்போமானால், அதனைத் தவறாகப் பயன்படுத்த முதலாளிகளுக்கு இடம் ஏற்பட்டுவிடக் கூடும் என நான் அஞ்சுகிறேன். அம்மாதிரி இடம் அளிக்கக்கூடாது. சாதாரணமாக ஒரு தொழிலாளியிடமிருந்து வேலை வாங்கக்கூடிய அளவை விட இந்த நேரம் மிகவும் அதிகமாகும். இதை முதலாளிகள் தவறாக பயன்படுத்தி அதிகவேலை வாங்குவதற்கு இடம் ஏற்படக்கூடும். இந்தப் பிரிவின்படி, தொழிலாளிகள் 75 சதவிகித நேரம் அதிகப்படியாக, தாம் வேலை செய்யவேண்டிய நேரத்தைக்காட்டிலும் அதிகப்படியாக, ஹோட்டலுக்குப் பக்கத்தில் அவர்கள் தங்கியிருக்கவேண்டிய நிலைமை ஏற்படும். இதைத் தவிர்க்க வேண்டும். இது அவசியமான திருத்தம். இதனை யோசிக்கவேண்டுமென்று நான் கனம் அமைச்சர் அவர்களைத் வேண்டிக் கொள்கிறேன்.





ஹோட்டல் தொழிலாளிகள் முதலாளிகள் உறவு சம்பந்தப்பட்டவரை ஹோட்டல் தொழிலாளிகள் மிக மிகப் பொறுமையாக இதுவரை இருந்து வந்திருக்கிறார்கள். வேலை நிலைமை சம்பந்தப்பட்டவரை, இந்த மசோதா அவர்களுக்கு நலன் விளைவிக்குமே அல்லாது, அவர்களுடைய நியாயமான கோரிக்கைகளாகிய சம்பளம் முதலிய பல விஷயங்கள் இருக்கின்றன. அவைகள் சம்பந்தமாக அவர்களுக்கு எந்தவிதமான நிவாரணமும் அளிக்கப்படவில்லை. ஹோட்டல் தொழிலாளிகள் உண்மையிலேயே மாடுபோல் உழைக்கிறார்கள் என்று நான் சொல்வேன். இம்மாதிரியான ஒரு நிலைமையிலே உழைத்து வரும் தொழிலாளிகள் மனம் புண்படக்கூடிய ரீதியிலே இந்தச் சபையிலே அபிப்பிராயம் தெரிவிக்கப்படுமானால் அது ஹோட்டல் தொழிலாளர்களுக்கு நன்றி தெரிவிப்பதாகாது என்பதையும் நான் சொல்லிக்கொண்டு இத்துடன் என்னுடைய வார்த்தையை முடித்துக்கொள்கின்றேன்.

Sri K. SATTANATHA KARAYALAR : கனம் சபாநாயகர் அவர்களே, ஹோட்டல் சிப்பந்திகளுக்குப் பாதுகாப்பு அளிக்கக்கூடிய முறையிலே வந்திருக்கக்கூடிய இந்த மசோதாவைப் பெருமளவில் வரவேற்கிறேன். ஆனால், இதிலே சில அம்சங்களை தொழிலாளர்களுக்குப் பரிபூரணமாக நன்மை கொடுக்கக்கூடிய இன்னும் நல்ல முறையிலே சீர்திருத்தி அமைத்திருக்கலாம் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். பொறுக்குக் கமிட்டி அந்த விஷயங்களையெல்லாம் நல்ல முறையிலே பரிசீலனை செய்யும் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

முதல்தர பஞ்சாயத்து இடங்களுக்கும், முனிசிபல் எல்லைக்குள்ளிருக்கும் பகுதிக்கும், மதராஸ் நகரத்தின் எல்லைக்கும் மாத்திரம்தான் இந்த மசோதா அமுலுக்கு வரும். ஆனால், மேஜர் பஞ்சாயத்துக்கு எல்லைக்குள்ளும், முனிசிபல் நகர எல்லைக்குள்ளும் இன்று பல சிறிய ஹோட்டல்களும் இருக்கின்றன. இரண்டு மூன்று வேலை ஆட்கள் உள்ள மிக மிகச் சிறிய ஹோட்டல்களும், சொந்தக்காரர்கள் மாத்திரம் வைத்து நடத்தக்கூடிய சிறிய ஹோட்டல்களும் இருக்கின்றன. அந்த ஹோட்டல்களுக்கெல்லாம் நல்ல முறையிலே பாதுகாப்பு அளிக்கவேண்டும். அவர்கள் எந்த அளவு இந்தச் சட்டத்தின் உள்ளில் நின்று செயல்படமுடியுமென்று ஐயுறுகின்றேன்.

அடுத்தபடியாக, ஹோட்டல் என்று சொல்லக்கூடிய இனங்களில் தாமதிக்கக்கூடிய லாட்ஜ்களையும் இந்த மசோதா வரம்பில் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்பதை நான் வரவேற்கிறேன். ஏனெனில் சில லாட்ஜ்களில் ஹோட்டல் வேறாகவும் விடுதி தனியாகவும் இருக்கும். வேலை செய்யக் கூடியவர்கள் ஹோட்டலிலே சென்று உணவு கொண்டுவருபவர்களாகவும் குற்றேவல் புரிபவர்களாகவும் இருப்பார்கள். இருபக்கமும் வேலையும் செய்யவும் கூடும். அவர்களுக்கும் பாதுகாப்பு கொடுக்கக்கூடிய முறையில் இது திருத்தி அமைக்கப்படுவது நல்லது.

கோயில் மடப்பள்ளிகள் இருக்கின்றன. அதுவும் சில கோயில்களிலே நாலைந்து பேர்களுக்கு அதிகமாக வேலை செய்யக்கூடியவர்கள் இருக்கிறார்கள். அவர்களைக் கூட அந்தக் கோயில்களிலே செய்யக்கூடிய பலகாரங்களும் சிற்றுண்டிகளும் பெருமளவில் விலைக்குக் கொடுக்கப்படுகின்றன. அதையும் கூட, இந்த சட்டத்தின் வரம்புக்குள்ளே கொண்டுவருவது நல்லதாக இருக்குமென்று நினைக்கிறேன்.

சாதாரணமாக, இந்த ஹோட்டல்களைப் பொறுத்தவரை, எனக்கு முன்பு பேசிய ஒரு அன்பர் சொன்னார், ஹோட்டல் திறப்பு விழா மிக விமரிசையாக நடக்கிறது என்று. ஆனால், சமீபத்தில் நடந்த சில நிகழ்ச்சிகளில் ஹோட்டல் மூடு விழாவும் அதேமாதிரி மிகச் சிறப்பாக நடந்திருக்கின்றன. இன்று நடந்துகொண்டிருக்கும் ஹோட்டல் ஏதாவது ஒரு காரணத்திற்காக மூடப்படும். வருமானவரி போன்ற வரி விதிப்பிலிருந்து தப்பித்துக்கொள்வதற்காகவோ அல்லது தொழிலாளர்களுக்குக் கொடுக்கவேண்டிய போனஸ் போன்ற ஊதியங்கள் கொடுக்காமலிருப்பதற்காகவோ, அவர்கள் திடீரென்று ஹோட்டலை மூடுகிறார்கள். லாபத்தில் நடக்கும் ஹோட்டலையும் மூடிவிட்டு மறுபடியும் அதே ஹோட்டலை வேறொரு பெயரில் திரும்பத் திறக்கிறார்கள். இப்படி இந்தச் சட்டத்தின் வரம்பிலிருந்து தப்பித்துக்

கொள்வதற்காக பெரும் அளவு நடக்கிறது. தன்னுடைய பெயரில் நடக்கும் ஹோட்டலை மனைவியின் பேரிலோ, மைத்துனனின் பேரிலோ மாற்றிவிட்டு, மறுபடியும் அதே ஹோட்டலை, அதே இடத்தில், அதே முதலாளி வேறொரு பெயரில் ஆரம்பிக்கும்போது, அங்குள்ள தொழிலாளிக்கு எந்த விதத்திலும் பாதுகாப்பு இல்லை. அது கிடைக்குமென்பதைப்பற்றி மசோதாவில் திட்ட வட்டமாகச் சொல்லப்படவில்லை. 6-வது விதியிலே இப்படி மூடக்கூடிய ஹோட்டல்களைப்பற்றிச் சொல்லும்போது, அந்தத் தொழிலாளி நீக்கப்படுவதற்கு 30 தினங்களுக்கு முன்பு அவருக்குத் தெரியப்படுத்தவேண்டுமென்று மாத்திரம் சொல்லப்படுகிறது. அதிலே ஒரு நிபந்தனை இருக்கவேண்டும். இப்படி ஹோட்டல்களை மூடிய போதிலும் தொழிலாளிக்கு கொடுக்கவேண்டிய லீவ் வசதி, அதே முறையில் அவர்களுக்குக் கொடுக்கவேண்டிய போனஸ் சகலத்தையும் கொடுக்கவேண்டிய "லையபிலிடி" ஹோட்டல் சொந்தக்காரர்களைச் சாருவதாக இருக்கவேண்டும். தொழிலாளிக்குச் சேரவேண்டியதை வ்சூலித்துக்கொடுப்பதற்கு ரெவினியூ ரிக்கவரி சட்ட முறையை அனுசரித்தால் நல்லதாக இருக்கும். இப்படிச் செய்தால் ஹோட்டலை ஒரு முதலாளி மூடி, அதையே இன்னொரு பெயரில் ஆரம்பிப்பது தவிர்க்கப்படுவதோடு கூட, ஹோட்டல் தொழிலாளிகளுக்குச் சேரவேண்டிய தொகையும் கிடைப்பதற்கு வசதி ஏற்படும். இதையும் செலக்ட் கமிட்டியார் கணக்கில் எடுத்துக்கொள்ளவேண்டும்.

தற்சமயம் ஹோட்டலில் வேலை செய்பவர்கள் குறைந்தபட்சம் 9 மணி நேரம் வேலை செய்யவேண்டுமென்று இருக்கிறது. அதை 8 மணிக்கு குறைப்பது நல்லது.

**THE HON. SRI R. VENKATARAMAN : There is a provision in the Factories Act that 48 hours' work can be done either for six days at eight hours a day or for five days at nine hours per day and three hours on the sixth day.**

SRI K. SATTANATHA KARAYALAR : அடுத்தபடியாக ஹோட்டலில் தொடர்ச்சியாக வேலை செய்யக்கூடிய தொழிலாளி அரைமணி நேர ஓய்வு எடுத்துக் கொள்ளலாம் என்று இருக்கிறது. உண்மையிலேயே அரைமணி நேரம் என்று சொல்லுவது மிகவும் குறைவு. இதை ஒரு மணிக்கு கூடுதலாக நீடிப்பது நல்லது. ஹோட்டலில் வேலை செய்யும் தொழிலாவிகள் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் அந்த இடத்தை விட்டு போகமுடியாது. ஐந்து, பத்து நிமிஷங்கள் கூடுதல் ஆகலாம். ஆதலால் இந்த இடைவேளையை ஒரு மணி நேரமாக நீடிப்பது நன்மை பயப்பதாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

அடுத்தப்டியாக ஒரு தொழிலாளி லீவு எடுக்கவேண்டுமென்றால் 10 நாட்களுக்கு முன்னாலேயே எழுத்துமூலம் ஹோட்டல் சொந்தக்காரருக்கு தெரிவிக்கவேண்டுமென்று விதி இருக்கிறது. திடீர் என்று ஒரு அவசர ஜோலி காரணமாக ஊருக்குப் போகவேண்டுமானால் அவர் எப்படி 10 நாள் நோட்டீஸ் கொடுக்க முடியும் ? எதிர்பாராத ஜோலி இருந்தால் தொழிலாளிகளுக்கு உடனடியாக லீவு கொடுப்பதற்கு வசதி இருக்கவேண்டும். 24 மணிக்கு முன்பாக தொழிலாளி எழுத்து மூலம் லீவு வேண்டுமென்று கேட்டால் லீவு கொடுப்பதற்கு வேண்டிய விதி இருந்தால் நன்மை பயப்பதாக இருக்கும்.

கடைசியாக இந்த மசோதாவில் வரக்கூடிய விதிகளுக்கு ஏதாவது முரணாக முதலாளி நடந்தால் தொழிலாளர்களைப் பொறுத்தமட்டிலோ, அல்லது தொழிற்சங்கங்களைப் பொறுத்தமட்டிலோ அவர்கள் நேரடியாக கோர்ட்டுகளுக்கு போகக்கூடிய உரிமை அவர்களுக்கு இருக்கவேண்டும். இன்ஸ்பெக்டர்கள் மூலம்தான் அவர்கள் அப்பீலுக்குப் போகவேண்டுமென்றிருப்பதை மாற்றி அமைக்கவேண்டும்.

பொதுவாக இந்த விஷயங்களை மனதில் வைத்துக்கொண்டு பொறுக்கு கமிட்டி தொழிலாவிகளின் பிரதிநிதிகளையும் அழைத்து ஆலோசித்து சிறு ஹோட்டல்களுக்கு விதிவிலக்கு அளிக்கக்கூடிய முறையில் திருத்தங்கள் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த மசோதாவை வரவேற்கிறேன்.



SRI V. S. MANICKASUNDARAM : இந்த ' கேடரிங் எஸ்டாபிளிஷ்மெண்ட்ஸ் பில்லைப் ' பொறுத்தமட்டில் சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். இதுவரையில் பேசிய அங்கத்தினர்கள் இதில் சம்பந்தப்பட்ட இரண்டுவித கோஷ்டிகளைப்பற்றியே பேசினார்கள். ஒன்று ' கேடரிங் எடாபிளிஷ்மெண்ட்ஸ் ' நடத்துபவர்கள், இரண்டு அவைகளில் வேலை செய்யும் ஊழியர்கள். இதில் சம்பந்தப்பட்டவர்கள் மூன்றாவது சாரார் ஒருவர் இருக்கிறார் என்பதை எல்லோரும் மறந்துவிட்டார்கள் என்று நான் நினைக்கிறேன். மூன்றாவது சாரார் என்று நான் குறிப்பிட்டது ' கேடரிங் எஸ்டாபிளிஷ்மெண்ட்ஸில்,' போய் தங்கக்கூடியவர்களும், சாப்பிடுகிறவர்களும். அங்கே போய் தங்கக்கூடியவர்களுக்கும் சாப்பிடக்கூடியவர்களுக்கும் ஏற்படக்கூடிய அசௌகரியங்களை நீக்குவதற்கு இந்த 'பில்லிலே' எந்தவிதமான வகையும் செய்யப்பட்டிருப்பதாக நான் நினைக்கவில்லை. முதலாவது உணவுப் பொருள்கள் தரம் குறையாமல் இருக்கவேண்டும், ஆரோக்கியம் குறையாமல் இருக்கவேண்டும். முதலாளிகளும் தொழிலாளிகளும் சேர்ந்து இதற்கு பொறுப்பாளியாகக்கூடிய வகையிலே ஏதாவது வழி செய்யவேண்டியது மிகவும் முக்கியமானது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் தொழிலாளிகள் பரிமாறுகிற சமயத்தில் செய்யக்கூடிய அக்கிரமங்களைப்பற்றி யாரும் குறிப்பிட்டதாகத் தெரியவில்லை. அவர்கள் தொழில் விஷயமாக அல்லது அவர்கள் வேலை நிலைபற்றி அல்லது அவர்களுக்கு விடுமுறை முதலிய வசதிகள் செய்துகொடுப்பதுபற்றி அல்லது அவர்களுடைய சுகாதாரத்தை பாதிக்கக்கூடிய வகையிலே எந்தவிதமான குற்றமும் நான் கூறுகிறேன் என்று தப்பாக எடுத்துக்கொள்ளக்கூடாது. அவர்களுக்கு எல்லா வசதிகளும் நிச்சயம் செய்யவேண்டியதுதான். அதே சமயத்தில் ஹோட்டல் முதலாளிகளுக்கும் பாதுகாப்புகள் அளிக்கப்படவேண்டியது உண்மைதான். ஹோட்டலில் சாப்பிடவருபவர்களுக்கு வேண்டிய வசதிகளை செய்துகொடுக்கவேண்டும். அதற்கு ஏதாவது இந்த மசோதாவில் நிர்ப்பந்தம் இருக்கவேண்டுமென்பது என்னுடைய அபிப்பிராயம். அனுபவத்தில் பார்க்கும்பொழுது ஹோட்டலை நடத்துகிறவர்களும் அதில் வேலை செய்யக்கூடிய ஊழியர்களும் இந்த நிலைமையை கொஞ்சம்கூட மனதில் கொண்டதாகச் சொல்லுவதற்கு இடமில்லை. குறிப்பாக அங்கத்தினர்கள் தங்குவதற்காக ஏற்படுத்திருக்கக்கூடிய விடுதியில் தங்கியிருக்கக்கூடிய அங்கத்தினர்கள் அன்றாடம் அனுபவிக்கக்கூடிய கஷ்டங்களை மனதில் கொண்டு, அதற்கும் இந்த பில்லில் ஏதாவது பரிகாரம் தேடிக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இந்த விஷயத்தை பொறுக்குக் கமிட்டி அங்கத்தினர்கள் கவனிக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்ளுகிறேன்.

SRI V. K. KOTHANDARAMAN : கனம் தலைவர் அவர்களே, இன்றைக்கு நம் முன்னால் வைக்கப்பட்டிருக்கக்கூடிய ஹோட்டல் தொழிலாளர்களுக்கு வேண்டி வந்திருக்கும் மசோதாவை வரவேற்கக்கூடிய அதே நேரத்தில் ஒரு சில திருத்த அபிப்பிராயங்களையும் சொல்லிக்கொள்ள ஆசைபடுகிறேன்.

" ஷாப் ஆக்ட், பாக்டரி ஆக்ட்" இரண்டிற்கும் மத்தியில் திருசங்கு சொர்க்கத்தில் இருந்தபோதிலும், ஹோட்டல் தொழிலாளர்கள் ஷாப் ஆக்டில் இருக்கக்கூடிய 36 நாட்கள் லீவு நாட்களாக பெற்றுக்கொண்டு வந்தார்கள். அப்படியிருக்க, இந்த மசோதாவில் 20 நாட்கள் வேலை செய்தால் ஒரு நாள் லீவு கிடைக்கும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஒரு நாள் நிற்காமல் வேலை செய்தாலும்கூட வருஷத்தில் 14, 15 நாட்கள் தான் லீவு கிடைக்கும். இதுபோன்று " எர்ண்ட் லீவ் " 20 நாட்களுக்கு ஒரு நாள் இருந்தபோதிலும், அதோடுகூட ஸிக் லீவு 12 நாட்கள், காஷுவல் லீவு 12 நாட்கள் இருக்கவேண்டும். இதை ஏன் இவ்வளவு வற்புறுத்தி சொல்லிக்கொள்ளுகிறேன் என்றால், ஹோட்டலில் வேலை செய்யக்கூடிய தொழிலாளிகள் அந்த அளவுக்கு கஷ்டப்படுகிறார்கள் என்ற காரணத்தில்தான். அவர்கள், லீவு தேவையானால் 10 நாட்களுக்கு முன்னதாகவே கேட்கவேண்டுமென்று இந்த மசோதாவில் சொல்லியிருப்பது சரியல்ல. என்னுடைய அனுபவத்திலிருந்து இதைச் சொல்லுகிறேன். வட ஆற்காடு ஜில்லாவில் வேலூரில் ஒரு டிரைவர்

[Sri V. K. Kothandaraman] [2nd November 1957

தன்னுடைய குழந்தை இறந்துவிட்ட நேரத்தில் லீவு கேட்டபோது கொடுக்கப்படவில்லை. மறுநாள் பால் வைப்பதற்கும் லீவு கொடுக்கப்படவில்லை. அதனால் அந்தத் தொழிலாளி வேலையை ராஜிநாமா செய்துவிட்டு போகக்கூடிய நிலைமை ஏற்பட்டது. அப்படி ஒரு சில முதலாளிகள் இருக்கிறார்கள். குடியாத்தம் " ஸில்க் மில்லில் " ஒரு " ஸ்டான்டிங் ஆர்டர் ". . . .

Mr. SPEAKER : தயவுசெய்து அங்கத்தினர் இந்த மசோதாவைப் பற்றி பேசவேண்டும். மற்ற இண்டஸ்டிரிகளைப்பற்றி பேசக்கூடாது.

Sri V. K. KOTHANDARAMAN : திடீரென்று வீட்டில் யாராவது இறந்துவிட்டால், நல்லது கெட்டது ஏற்பட்டால் லீவு கேட்டால், சட்டபடி இப்பொழுது லீவு திடீரென்று கொடுக்க முடியாது என்று முதலாளிகள் சொல்லிவிடுகிறார்கள். ஆகையால் சரியான காரணம் காட்டினால் வேண்டும் பொழுது லீவு கொடுக்கப்படவேண்டும்.

The Hon. Sri R. VENKATARAMAN: கனம் அங்கத்தினர் அவர்கள் இந்த ஷரத்தை சரியாக புரிந்துகொள்ளவில்லை என்று நினைக்கிறேன். " ஏர்ன்டு லீவு " 240 நாட்கள் வேலை செய்தவர்களுக்கு 20 நாட்களுக்கு ஒரு நாள் இருக்கிறது. அதற்குத்தான் நோட்டீஸ் கொடுக்கப்படவேண்டும். சாதாரணமாக ஏற்படும் ஆபத்து சம்பத்துகளுக்கு 10 நாட்கள் நோட்டீஸ் கொடுக்கப்படவேண்டுமென்று சட்டத்தில் சொல்லவில்லை.

Sri V. K. KOTHANDARAMAN : " எர்ண்டு லீவ் ". மூன்று வாரங்களுக்கு எடுத்துக்கொள்ளலாம் என்ற ஒரு நிலைமை இருக்கிறது. அவர்களுக்கு மிகவும் அவசியம் நேரும் சமயத்தில் அவர்கள் அந்த லீவை எடுத்துக்கொள்ளவேண்டுமே ஒழிய 10 நாட்களுக்கு முன்னாலேயே நோட்டீஸ் கொடுக்கவேண்டுமென்பது சரியல்ல. திடீரென்று லீவு தேவையானால் அவர்களுக்கு லீவு கிடைக்காது. தேவையான பொழுது அவர்களுக்கு லீவு கொடுக்கவேண்டுமென்பதற்காகத்தான் இதை வற்புறுத்துகிறேன்.

" அப்ரென்டிஸ் " வைத்துக்கொள்ளலாம் என்ற அளவுக்கு இதில் இடம் இருக்கிறது. 3 மாதங்கள் வேலையில் இருந்தால் அவர்களை " பெர்மனென்ட் " செய்யவேண்டுமென்ற அளவில் ஒரு திருத்தம் கொண்டுவர வேண்டுமென்பதையும் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். பண்டிகை நாள்களில் லீவு—தொழிலாலர் மந்திரி அவர்கள் வந்த பிறகு குடியரசு தினம், சுதந்திர தினம் இரண்டு நாட்கள் உள்பட வருடத்திற்கு ஏழு தினங்கள் பண்டிகை நாள்களோடு சேர்த்து லீவு கொடுக்கவேண்டுமென்று செய்திருக்கிறார்கள். இந்தத் தொழிலாளர்களுக்கு இந்த ஏழு நாட்களும் விடுமுறை தினங்களாகச் செய்வதற்குரிய ஏற்பாடுகளை இதில் செய்ய வேண்டும்.

இன்ஸ்பெக்டர்களுடைய ரெகார்டு பற்றிய விவரம் ஒன்றும் கொடுக்கப்படவில்லை. அதைப்பற்றி கொஞ்சம் விவரமான டீடைல் கொடுத்தால் நல்லதாக இருக்கும். அதே நேரத்தில் ஹோட்டல் முதலாளிகள் அவர்களுக்கு நஷ்டம் ஏற்படுகிற காரணத்தினாலோ அல்லது தொழிலாளர்களுக்குச் சம்பளம் கொடுக்கின்ற காரணத்தினாலோ, சர்க்காருக்கு டாக்ஸை ஏமாற்றுவதற்காகவோ ஹோட்டல்களை மூடக்கூடிய நிலைமை ஏற்படலாம். பணம் இல்லாத காரணத்தினால் ஹோட்டல்கள் மூடப்படுவது தெரிந்த விஷயம்தான். அப்படி மூடுவதாக இருந்தால் மூடின பிறகு 10 தினங்களுக்குள்ளாக சர்க்காருக்கு தெரிவிக்கவேண்டும் என்று இருப்பது சரியில்லை. மூடுவதற்கு முன்பாகவே அதற்குரிய தகுந்த அதிகாரிகளிடத்தில் இன்ன இன்ன காரணங்களுக்காக மூடவேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பதைச் சொல்லவேண்டும். அந்த அதிகாரிகளும் அதைப் பரிசீலனை செய்து மூடுவது நியாயமானதுதான் என்றால், மூடுவதற்கு அதிகாரம் கொடுக்கலாம். அதைவிட்டு மூடின பிறகு பத்து நாட்களுக்குள் தெரியப்படுத்தவேண்டுமென்று சொல்லிப் பயன் இல்லை. முன்கூட்டியே அவ்விஷயத்தைத் தெரிவிக்கவேண்டும் என்பதாக இச்சட்டத்தில் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



2nd November 1957] [Sri V. K. Kothandaraman]

ஓவர் டைம் என்றால் அன்றைய கூலி இருமடங்கு டபுள் கூலி கொடுக்க வேண்டுமென்று இருக்கிறது. இதில் இன்னொரு திருத்தம் வேண்டும். அநேகமாக ஹோட்டல்களில் சாப்பாடு போட்டுத்தான் பத்து ரூபாய், பதினைந்து ரூபாய் என்று பெரும்பாலான தொழிலாளர்களுக்கு கொடுத்து வருகிறார்கள். சாப்பாடு போடவில்லை என்றால்தான் 50 ரூபாய் 60 ரூபாய் என்று கொடுக்கிறார்கள். சாப்பாடு போட்டு சம்பளம் கொடுக்கக் கூடிய தொழிலாளர்களுக்கு கூலி எப்படி இரு மடங்கு என்கிறோமோ அப்படியே சாப்பாடும் இரு மடங்கு கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். அதாவது அவர்கள் எத்தனை ரூபாய்க்குச் சாப்பிடலாம் என்று இருக்கிறதோ அந்தப் பணத்தை இருமடங்கு கொடுக்கவேண்டும். லீவு காலங்களில் சம்பளத்தோடு சாப்பாடு கொடுப்பது போலவேதான் இது.

ரெஸ்டு அரை மணி என்று கொடுத்திருப்பது போதாது. ஒரு மணி கொடுத்தாகவேண்டும்.

ஒழுங்கற்ற முறையில் நடந்துகொள்வதாக தெரிந்தால் தொழிலாளரை வேலையில் இருந்து நீக்கிவிடலாம் என்று இருக்கிறது. இப்படி இருப்பதனால் தனக்கு பிடிக்காத தொழிலாளர்களை அவர்கள் ஒழுங்கற்ற முறையில் நடந்துகொள்வதாகச் சொல்லி முதலாளிகள் வேலையில் இருந்து நீக்கிவிட முடியும். அப்படி ஒழுங்கான முறையில் ஒரு தொழிலாளி நடந்து கொள்ளவில்லை என்று தெரிந்தால் எப்படி எவ்வாறு ஒழுங்கற்ற முறையில் அவன் நடந்துகொள்கிறான் என்பதை இது சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு ஹோட்டல் முதலாளி தெரியப்படுத்தவேண்டுமென்றும், அவர்களுடைய தீர்ப்புப்படி அவனை வேலையைவிட்டு நீக்கவோ, வைத்துக்கொள்ளவோ செய்யவேண்டும் என்று செய்வதுதான் சரியானது. ஒழுங்கற்ற முறையில் நடந்துகொண்டான் என்பதை விசாரணைக்குப்பின் அதிகாரியும் ஊர்ஜிதம் செய்தால் அவனை வேலையைவிட்டு நீக்குவதில் ஆட்சேபணை இல்லை. முதலாளியே அந்தக் காரியத்தைச் செய்துவிடலாம் என்பது சரியாகாது.

மேலும் சில ஹோட்டல்களுக்கு சர்க்காரே நினைத்தால் விதிவிலக்கு கொடுக்கலாம் என்று இருக்கிறது. இதை அதிகாரிகள்தான் உபயோகப்படுத்திக்கொள்ளப்போகிறார்கள். அதிகாரிகளில் நல்லவர்கள் இருக்கிறார்கள், கெட்டவர்களும் இருக்கிறார்கள். எப்படி எப்படியோ இருக்கிறார்கள் என்பது நமக்குத் தெரியும். சர்க்காரே நினைத்தால் விதிவிலக்கு கொடுக்கலாம் என்பதற்கு பதில் சம்பந்தப்பட்ட தொழிற்சங்கங்களைக் கலந்து கொண்டோ அல்லது சட்ட பூர்வமாக இன்ன இன்ன காரணங்களினால் விதிவிலக்கு அளிக்கலாம் என்று நாமோ அதை வரையறுத்துவிடவேண்டும். அதிகாரம் அப்போதுதான் துஷ் பிரயோகம் ஆகாமல் இருக்கும்.

தொழிலாளர்கள் தங்களுடைய பிரச்சனையைத் தீர்த்துக்கொள்வதற்கு கோர்ட்டுக்குப் போகவேண்டுமென்றால் அந்த அதிகாரிகளிடத்தில் அனுமதி பெற்றுக்கொண்டுதான் போகவேண்டுமென்று இருக்கிறது. இது சரியாகாது. அவர்கள் தங்களுக்கு அநியாயம் வழங்கப்படுவதாக நினைத்தால் தங்கள் குறைகளை, தகராறுகளைத் தீர்த்துக்கொள்ள கோர்ட்டுக்குப் போகலாம் என்பதாக சட்டப்படி நாம் அனுமதி அளிக்க வேண்டுமே தவிர ஒரு அதிகாரியினுடைய அனுமதியைப் பெற்றுத்தான் போகவேண்டுமென்று செய்வது சரியில்லை என்பதாகத் தெரிவித்துக் கொண்டு என் பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

Mr. SPEAKER : We shall continue for another ten or fifteen minutes, as there are three or four more speakers. If hon. Members want to speak, they should give their names to me through their Whip. There is no point in their standing in their seats. It is not like the Question Hour. I have to call hon. Members to speak according to their Party affiliations. Therefore if they give me their names through their Party Whip, it will be easier for me to call such hon. Members.

**Sri M. JAGANNATHAN** : Sir, on a point of information. I want to know what is the time allotted for each speaker ?

**Mr. SPEAKER** : There is no time allotted as such. We have to finish by 12-30. We may go up to 12-45 or so.

**Sri P. S. K. LAKSHMIPATHI RAJ** : கனம் சபாநாயகர் அவர்களே, ஹோட்டல் தொழிலாளர் மசோதாவை ஆதரித்து நான் சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். இந்தத் தொழிலின் தன்மை, தொழிலாளர்கள் செய்கின்ற அதிகபட்ச வேலை, அவர்களுக்கு வேண்டிய பாதுகாப்பு, அவர்களுடைய முன்னேற்றத்திற்கான வழிவகைகள் எல்லாவற்றையும் நம் அரசாங்கம் உணர்ந்துதான் இதைக்கொண்டு வந்திருக்கிறது. இந்த மசோதாவை ஆதரித்துப் பேசுகின்றபோது ஒரு சிலர் அவர்களுடைய நலனுக்குப் பல காரியங்களைச் செய்ய விரும்புவதாகவும் அரசாங்கம் அதைத் தடுத்து நிறுத்துவது போலவும் சுதந்திரமாகவும் கருத்துக்களைத் தெரிவித்தார்கள். ஆனால் சர்க்கார்தான் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறது. கடந்த காலத்திலே அவர்கள் கவனிக்கப்படாமல் இருந்த ஒரு காரணத்தினாலே தொழிலாளர்களிடையே நல்லதொரு விழிப்பு ஏற்பட்டிருக்கிறது. அந்த விழிப்பை அனுசரித்து இந்தச் சட்டத்தை சர்க்கார் இப்போது கொண்டு வருகிறார்கள். இதை ஆதரித்து நானும் சில விஷயங்களைக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். மற்ற எல்லாரையும் விட இதில் உரிமையோடு பேச எனக்குப் பாத்தியம் உண்டு. காரணம் எனக்கு வேண்டியவர்கள் என்னுடைய சகோதரர் முதற்கொண்டு இத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார். இந்தத் தொழிலானது மற்ற தொழில்களைப் போன்றது அல்ல. அன்றாடம் உற்பத்தி செய்யப்படுகிற பொருள்களை அன்றாடமே விற்பனை செய்துவருகின்ற லாபத்தின் மூலம் தொழிலாளர்களும், முதலாளியும் பயன்பெறவேண்டியிருக்கிறது. அரசியல் இதற்குள் புகுவதன் காரணமாகப் பல தொழிலாளர்கள் கஷ்டப்படும்படி நேரிடுகிறது.

ஒரு தொழில் நடத்துவதற்கு எல்லோருடைய ஒத்துழைப்பும் அவசியம். முதலாளிகள் பல கஷ்டநஷ்டங்களுக்கிடையே இந்த ஓட்டல் தொழிலை நடத்துகிறார்கள். ஆனால் முதலாளிகள் நல்லமுறையில் தொழிலாளர்களை ஆதரித்தால்தான் அவர்கள் வாழ்வதற்கான வசதிகளைச் செய்துகொடுத்தால்தான் நல்லது. அதே சமயத்தில் தொழிலாளர்களும் தங்கள் கடமைகளை தயங்காது செய்துவந்தால்தான் அந்தத் தொழில் முன்னேறுவதற்கு ஏதுவாக இருக்கும். பொதுமக்களுடைய ஆதரவும் கிடைக்கும்.

சமீபகாலத்தில் பல வெளிநாட்டுக்காரர்கள் சென்னைக்கு வருவதால், நல்ல நாகரீக முறையில் பல வசதிகளுடன் ஓட்டல்களை நடத்துகிறார்கள். இதன் காரணமாக அதிக தொழிலாளர்கள் தேவைப்படுகிறார்கள். இதனால் பல ஓட்டல்கள் திரிவாக நல்லமுறையில் அமைக்கப்பட்டிருக்கின்றன. இந்த முதலாளிகள் பல லட்சக்கணக்கான பணத்தைச் சம்பாதித்திருக்கின்றனர். அதே சமயத்தில் சில ஓட்டல் முதலாளிகள் நல்ல முறையில் நடத்த முடியாமல் நசுங்கி விட்டிருக்கிறார்கள். பலர் இதை தங்கள் குடும்பத் தொழிலாக திறம்பட நடத்திவருகிறார்கள்.

இந்த ஆரியர் திராவிடர் என்ற பிரச்சனையில் எனக்கு நம்பிக்கை இல்லாத போதிலும் இந்த ஆரியர் திராவிடர்களைப்பற்றி அடிக்கடி மேடையின்மீது பேசுகின்ற தலைவர்கள், பிராம்மணர்கள் நடத்தும் ஓட்டலுக்குத்தான் செல்லுகிறார்கள். அவர்கள் அங்கு சென்று முருவல் தோசை சாம்பார் இருக்கிறதா என்று கேட்டு சுவைத்து சாப்பிடுகிறார்கள். யாராவது திராவிடர்கள் இந்த ஓட்டல் முதலாளிகளாய் இருந்தால் அங்கே இவர்கள் போய் ஆதரிப்பதில்லை. இந்த பிராமண முதலாளிகள் நல்ல முறையிலே பார்ப்பதற்கு அழகாகவும், மின்சார விசிறிகள் வைத்தும் ஓட்டல்களை நடத்துகிறார்கள். அதனால் தங்கள் வருமானத்தை அதிகரித்துக்கொண்டு தங்களுடைய தொழிலை உயர்த்திக்கொள்ளுகிறார்கள். ஒரு நண்பர், இந்தத் தொழிலாளர் நலனைப்பற்றி பேசுகிறார்களே, அவர்கள் பொதுமக்கள் ஓட்டலுக்குள் நுழைந்தால் அவர்களுக்கு என்ன வேண்டும் என்றுகூட கவனிப்பதில்லை, என்று சொன்னார். ஆனால் யாரோ சில தொழிலாளிகள் அப்படிச் செய்தால் அந்தத் தொழிலாளர்கள் சமுதாயத்தையே உதாசீனப்படுத்தக்





கூடாது. இந்த விஷயத்தில் தொழிலாளர்களும் முதலாளிகளும் ஒரு பக்கமிருக்க பொதுமக்களும் ஓரளவு ஒத்துழைக்கவேண்டுமென்று சொல்ல விரும்புகிறேன். இந்த ஓட்டல் தொழிலாளர்களுக்கு வேண்டிய இந்தச் சட்டத்தை நான் மனப்பூர்வமாக ஆதரிக்கிறேன். ஓய்வு காலத்தில் அவர்களுக்கு நல்லவிதமாக அறிவு வளர்வதற்காக சர்க்கார் வழிவகை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இன்றையதினம் இருக்கக்கூடிய வரி முறையில் ஓட்டல் முதலாளிகள் கணக்கு புஸ்தகங்கள் வைத்துக்கொள்ளக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அந்த வகையில் நேரான பாதையில் போகாமல் இரண்டு கணக்கு புஸ்தகங்களை வைத்துக்கொள்ளுகிறார்கள். அவர்கள் இந்த சங்கடமான நிலைமையில் கணக்கு பிள்ளைகள் வைக்கவேண்டிய நிலைமையில் இருக்கிறார்கள். அவர்களுக்கு வேண்டிய சம்பளமும் கொடுக்கவேண்டியிருக்கிறது, அரசாங்கத்திற்கு வரி வேறு கட்டவேண்டி இருக்கிறது. தொழிலாளர்களுக்கு வேறு சம்பளம், வாடகை முதலியவை கொடுக்க வேண்டியிருக்கிறது. இந்த வரி விதிப்பின் காரணமாக பொதுவாக பல கஷ்டங்கள் ஏற்பட்டிருக்கிறது. இந்த மசோதாவின் மூலமாக தொழிலாளர்களுக்கு சர்க்கார் கடன் கொடுக்க வசதி செய்துகொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். கனம் ஸ்ரீ வெங்கட்டராமன் அவர்கள் இந்த மசோதாவைக் கொண்டுவந்ததற்காக மனமார பாராட்டுகிறேன். நல்லமுறையில் திருத்தம் செய்யவேண்டுமானால் திருத்தி மேற்கண்ட வசதிகள் அடங்கிய மசோதா ஒன்றை கொண்டுவரவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

***Sri R. KANDASWAMY** : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இப்பொழுது கொண்டுவந்திருக்கும் ஓட்டல் தொழிலாளர்கள் மசோதாவை நான் ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். நகரசுத்தி தொழிலாளர்களாக அநேகமாக ஹரிஜனங்களையே சேர்த்துக் கொள்ளுகிறார்கள். ஆனால் ஹரிஜனங்கள் மாத்திரம் சேர்த்துக் கொள்ளுகிறார்களா என்றால் 100-க்கு 10 சத விகிதம்கூட சேர்த்துக் கொள்வதில்லை. உண்மையிலே ஓட்டல்களிலே ஹரிஜனங்களை மறுக்கக் கூடாது என்று சட்டம் இருந்தபோதிலும், சேர்த்துக்கொள்ளப்படுவதில்லை. நாமக்கல் தாலுகாவில் சில கிராமங்களில் இம்மாதிரி நிலைமைகள் இன்னும் நீடித்துக்கொண்டுதான் இருக்கிறது. மழைவிட்டாலும் தூவானம் விடாததுபோல் சட்டம் இயற்றியும்கூட, ஹரிஜனங்கள் உரிமையோடு வாழ்வதற்கு இடமில்லாமல் இருக்கிறது. ஸ்தல ஸ்தாபனங்களிலும், அரசாங்கத்திலும், சட்டசபையிலும், மற்ற இடங்களிலும் ஹரிஜனங்களுக்கு இடம் அளிக்கப்படுகிறது. ஆனால் இந்த ஓட்டல்களில் யாராவது ஹரிஜன தொழிலாளி இருக்கிறார்களா என்று பாருங்கள். சில ஓட்டல்களில் ஹரிஜனத்தொழிலாளி வேலைக்குப் போய்க்கேட்டால், அவன் பெயரை கந்தன் என்றோ குப்பன் என்றோ கேட்டுவிட்டால், உடனே அவனை ஹரிஜன் என்று தெரிந்துகொண்டு வேண்டாம் என்று சொல்லிவிடுகிறார்கள். ஆகவே ஹரிஜனங்களுக்கும் உரிமை அளித்து நல்ல முறையிலே சட்டத்தை திருத்தி அமைக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். ♣

**Sri K. ANBAZHAGAN** : கனம் அவைத் தலைவர் அவர்களே, இன்றுள்ள அமைச்சர் அவை இந்தச் சட்ட மன்றத்தின் மூலமாக, மிக நீண்ட காலமாக வற்புறுத்தப்பட்டு வந்திருக்கின்ற உணவு நிலையங்களில் பணி புரிந்து வருகிற தொழிலாளர் நலனுக்கான ஒரு சட்டத்தை நிறைவேற்றுகிற கருத்தோடு இங்கு கொண்டுவந்திருப்பதற்கு எனது வரவேற்பைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்று கொண்டு வரப்பட்டுள்ள இந்தச் சட்டமானது இது வரையிலும் இந்தத் துறையிலே ஈடுபட்டுள்ள தொழிலாளிகள் உழைப்பாளிகள் ஒரு மன அமைதி கொள்ளவும், தங்களுடைய கடைமையைச் செவ்வையாகச் செய்வதற்கும், தாங்கள் இது வரை அனுபவித்துவந்த பல குறைகளிலிருந்து விடுதலை பெறுவதற்கும் நல்ல வாய்ப்பாக இருக்கும் என்ற நம்பிக்கையை நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இந்தச் சட்டத்தை இப்போது கொண்டுவரப்படுகிற வடிவிலே சில பல திருத்தங்கள் கொண்டுவர விரும்புகிற காரணத்தால் ஒரு ஆய்வுக் குழுவினிடத்தில் அதாவது செலக்ட் கமிட்டி என்று சொல்லப்படுகிற குழுவினிடத்தில் ஒப்படைத்து, அதற்குப் பின்னால் அடுத்த சட்ட மன்றக் கட்டத்தில் நிறைவேற்றப்படும் என்ற கருத்தையும் கனம் அமைச்சர் தெரிவித்தார்கள். என்னைப் பொறுத்தவரை எவ்வளவு விரைவில் இந்த ஆய்வுக்குழு கடமையை நிறைவேற்றி சட்டம் வருவதற்கு உதவி செய்கிறதோ அந்த அளவிற்கு உணவு விடுதித் தொழிலாளர்கள் மிக நல்ல பலனை பெறுவார்கள் என்ற நம்பிக்கையைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். இன்று அவர்களுக்கென்று ஒரு சட்டம் இல்லாத காரணத்தால் இந்த ஓட்டல் தொழிலாளிகள் பல்வேறு துறைகளில், தொழிலைக் காப்பாற்றிக் கொள்ள பலவிதமான கஷ்டங்களுக்குள்ளாகிறார்கள். ஆகவே சட்டம் கொண்டு வருவதிலே ஒரு விரைவு தேவை. இந்தச் சட்ட மன்றக் கூட்டத் தொடர் முடிவதற்குள்ளாவது அதாவது நவம்பர் 16-ம் தேதிக்குள்ளாவது இது சட்டமாக்கப்படுமா? என்று கனம் அமைச்சர் அவர்களைக் கேட்டேன். இச் சட்டத்தின் பேரில் பல திருத்தங்கள் கொண்டு வர அநேக அங்கத்தினர்கள் விரும்புவார்களாதலால், பலபேர் கூடித் தீர்மானிக்க நாள் ஆகலாம் என்று தெரிவித்தார்கள். பொதுவுடமைக் கட்சியினரும் இந்த மசோதாவிற்குப் பல திருத்தங்கள் கொண்டுவரப்போவதாகச கூறினார்கள்.

அதைச் சட்டமாக நிறைவேற்றி நடைமுறைக்குக் கொண்டுவரும் போதுதான் அதிலுள்ள குறைகள் தெளிவாகும் என்று கூற விரும்புகிறேன். இந்தியத் துணைக் கண்டத்தின் அரசியல் சட்டத்தை, மிகப் பெரிய மேதாவிகள் எல்லாம் கூடி நிறைவேற்றிய பின்னருங்கூட அதில் இருக்கிற பல்வேறு தவறுகளும், குற்றங்களும் இன்றைய தினம் வரை எடுத்துக் காட்டப்பட்டு வருகின்றன என்றால் இப்படிப்பட்ட சட்டங்களுக்கும் அந்த நிலை இயல்பாகவே ஏற்படலாம். அதனால் அதிகம் தாமதம் ஏற்படுத்துவது இன் ற தினம் தொழிலாளர்களின் குறைகளைப் போக்க உடனடியாகத் துணை செய்வதாகாது. இங்கு பேசிய ஆளும் கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள் பேச்சிலிருந்து ஆளும் கட்சியின் நோக்கம் என்ன, அவர்கள் தொழிலாளர்களின் குறைகளை ஆதரிக்கிறார்களா, மறுக்கிறார்களா என்ற சந்தேகம் அவ்வுறுப்பினர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது என்பது புலனாகிறது. ஆளும் கட்சியின் நோக்கம் அவர்களுக்கும் தெரியாமல் இருக்கலாம். தொழிலாளர்களின் நலனில் அக்கரை காட்ட அமைச்சர் சட்டம் கொண்டுவருகிறேன் என்கிறார். சட்ட முதலாளிகளின் பக்கம் போக விரும்புகிறதா அல்லது தொழிலாளர்களின் பக்கம் நிற்க விரும்புகிறதா என்பதை உறுப்பினர்களே தீர்மானிக்க வேண்டியிருக்கிறது. எனக்குத் தெரிந்த வரையிலே முதலாளிகளின் நலத்தை குறித்து எடுத்துச் சொன்ன சிலர் இரண்டு கட்சிகளிலிருந்தும் பழக்கப்பட்டவர்கள். இரண்டு கட்சிகளிலிருந்து பழக்கப்பட்டவர்களுக்கு தொழிலாளர்களின் குறைகளைப் பற்றிப் பேசும் போது முதலாளிகளின் குறைகளும் நினைவிற்கு வருகிறது. எங்களைப்பொறுத்த வரையில்—இந்தச் சட்டத்தின் அவசியத்தைப் பொறுத்த வரையில் எதும் அபிப்பிராய மாறுபாடு கிடையாது. ஆளும் கட்சியினரிலேயே சிலர் ஆரிய உணவுச் சாலைகள் என்றும் திராவிட உணவுச் சாலைகள் என்றும் பாகுபடுத்திப் பேசியதோடு திராவிடர்கள் பலர் ஆரியச் சாலைகளில் தான் உண்டு வருகிறார்கள் என்றும் குறிப்பிட்டார்கள். அதிலிருந்து காங்கிரஸ் வட்டாரத்தில் கூட திராவிடர், ஆரியர் என்ற கருத்து ஆழமாக வேரூன்றி, தங்கள் முதலாளித்துவத்தைக் காப்பாற்றிக் கொள்ள தாங்கள் திராவிடர்கள் என்றும், திராவிடர் எங்கள் ஹோட்டலுக்கு வராமல் வேறு ஹோட்டலுக்கு போகிறார்களே என்றும், இந்நிலையை எப்படி மாற்றலாம் என்றும் எண்ணுகிற ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது என்பது புலனாகும். இந்த விசித்திரமான நிலையை அமைச்சர் அவர்களும் உணர வேண்டும். இன்றைய தினம் இருக்கிற உணவுச் சாலைகளில் யார் வேண்டுமானாலும் சென்று உண்ண இடமிருக்கிறது என்றாலும் அங்குள்ள பெயர்ப் பலகை இன்னும் ஜாதியை குறிப்பிடுவதாயிருக்கிறது. ஒரு திராவிட கட்சித் தலைவர் அதற்காகப் போராடிக் கொண்டிருக்கிறார். இன்னொரு தலைவர் அந்தக் குறையைப் போக்காது வலுக்க விடுவது பெரிய தவறு என்று





சொல்லியிருக்கிறார்கள். உணவுச் சாலைகளை அவர்கள் பதிவு செய்து கொள்ளும்போது "ரெஜீஸ்ட்ரேஷன் ஆப் கேட்டரிங் எஸ்ட்டாப்ளிஷ்மெண்ட்" என்ற தலைப்பில் உள்ள குறிப்பில், அதற்காகத் தரப்படுகிற பெயரில் எந்த ஜாதிக் குறிப்பும் இருக்கக்கூடாது, எந்த வகுப்புக் குறிப்பும் இருக்கக் கூடாது, எந்த மதக் குறிப்பும் இருக்கக்கூடாது என்று வலியுறுத்தப் பட வேண்டும். வேண்டுமானால் இந்த நாட்டைத் தவிர வேறு நாட்டு உணவு வகையில், உதாரணமாக "சைனீஸ் ரெஸ்டாரெண்ட்" போல புழு, பூச்சிகள் உணவாகத் தரப்படுமானால், அவை போன்றவைகளுக்கு அடையாள குறிப்பு இருக்கலாம். அப்படிப்பட்டவைகளுக்கு வேண்டுமானால் அடையாள றிப்புப் பெயர்கள் இருக்கலாமே தவிர வேறு உணவு விடுதிகளில் அவ்வித அடையாளக் குறிப்பு இருக்கக்கூடாது. பிராமணாள் உணவு விடுதிகளில் மட்டும் இருக்கக்கூடாது என்று நான் சொல்லவில்லை அப்படி நான் சொல்வதாக நினைக்க வேண்டாம். அப்படி இருப்பதும் பொருந்தாது. முஸ்லீம்களுக்கு உரிய விடுதிகளாயிருந்தாலும் சரி, விருது நகர் நாடார் ஒருவரே நமது முதலமைச்சராக இருந்தாலும் கூட, விருது நகர் நாடார் உணவு விடுதி என்றோ ஒருவித அடையாளக் குறிப்புகளும் இருக்கக்கூடாது. ஜாதிப் பெயர் இல்லாமல், செந்தில் வேலன் விடுதி என்றோ, முருகன் விடுதி என்றோ, விநாயகர் விடுதி என்றோ, பல பெயரில் சிற்றுண்டி விடுதிகள் இருக்கலாமேயொழிய ஜாதியின் பெயரில் இருக்கக் கூடாது. அந்த அடிப்படையில் இந்தச் சட்டத்தை மாற்றி அமைக்க வேண்டும். சைவாள் உணவு விடுதி என்று பெயரிடுகிறார்கள்.

Sri K. VINAYAKAM: முதலியார் விடுதி என்று வைக்கலாமா ?

Sri K. ANBAZHAGAN: முதலியார் விடுதி என்று வைப்பதும் தவறு. முதலியார்களுக்கு சாப்பிட உரிமை உண்டே தவிர முதலியார் உணவு விடுதி என்ற பெயர் போடுவது தவறு. சைவாள் உணவு விடுதி என்று சொல்வதும் தவறு. சைவர்களில் உணவால் அசைவர்களும் இருக்கிறார்கள். ஆகவே அதுவும் தவறு. மரக்கறி உணவு விடுதி என்று குறிப்பிடலாம். வேறு வகை கறி கிடையாது என்பதற்காக. உணவு வகையால் மரக்கறி, மற்ற கறி உணவு விடுதி என்று குறிப்பிடலாமே தவிர ஜாதியை குறிப்பிடக் கூடாது என்று இச் சட்டத்தைக்கொண்டு வருகிறபோதே சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த அடிப்படை உணர்ச்சி நமக்கு இருக்குமானால்தான் இந்த நாட்டில் இருக்கிற ஜாதி வேற்றுமையை போக்க உணவு விடுதியையும் பயன் படுத்தலாம். எப்படி பள்ளிக்கூடங்களில் ஜாதி வித்தியாசம் குறிக்கும் அடையாளங்கள் இருக்கக்கூடாது என்று நாம் கருதுகிறோமோ அதே அடிப்படையில்தான் இச் சட்டமும் இருப்பதற்கு அமைச்சர் அவர்கள் வழி செய்யவேண்டும். அதனால் நல்ல பயன் ஏற்படும். ஒரு உறுப்பினர் எடுத்துக் காட்டினார், ஆதிதிராவிடர்களை உணவு விடுதிகளில் நல்ல வேலைகளில் வைத்துக்கொள்ளவில்லை என்று நான் சொல்வேன் சில ஆண்டுகட்டு முன்பு, வெள்ளைக்காரன் இந்த நாட்டை ஆண்டகாலத்தில் அந்நியர்களுக்கு நாம் அடிமைப்பட்டோம் என்ற குறை இருந்தாலும் அவர்கள் ஆண்ட காலத்தில் அதிகாரிகள் இல்லங்களிலும் உணவு விடுதிகளிலும் ஆதி திராவிட மக்கள் பட்லர்களாய் இருந்தார்கள். பிராமணர்கள் மட்டுந்தான் உணவு பரிமாறுவார்கள், மற்றவர்கள் ப மாறக்கூடாது; பரிமாற மாட்டார்கள் என்ற நிலை போய் விட்டது. பாரதியார் அவர்கள் கூறியது போல், பார்ப்பான் என்று சொன்னாலும் பறையன் என்று அழைத்தாலும், பிறப்பால் ஒரு வேற்றுமையும் இல்லை என்ற மனப்பான்மையை உண்டாக்க அது ஒரு நல்ல வழியாக இருந்தது. அதே போன்று, ஆதித்திராவிட மக்களை உபயோகித்துக் கொண்டு, அவர்களை நல்ல வேலையில் வைத்துக் கொள்பவர்களுக்கு, ஆதிதிராவிடர்களையே காட்டரிங் (பரிமாறும்) பணியில் வைத்துக் கொள்பவர்களுக்கு தக்கதொரு நன்கொடையோ அல்லது பாராட்டிதழோ அளித்து அவர்களுக்கு ஒரு ஊக்கத்தை இந்த அரசாங்கம் தோற்றுவிக்கவேண்டும், சட்டமாகக் கொண்டுவர முடியுமா என்று கேட்கலாம். அது முடியா விட்டாலும் அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையை உருவாக்க வழிவகைகள் காணவேண்டுமென்று ஒரு யோசனையைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[Sri K. Anbazhagan] [2nd November 1957

அடுத்தபடியாக, இன்றைய தினம் ஹோட்டல் தொழிலாளர்கள், பல பெரிய உணவு விடுதிகளில் வேலை செய்கிறவர்கள், இன்டர்மீடியட் வரை படித்து விட்டு, அல்லது பி. எ. வரை படித்து விட்டு அரசாங்கத்திற்கு ஒரு விண்ணப்பமும், ஹோட்டல் முதலாளிக்கு ஒரு விண்ணப்பமும் போட்டு ஹோட்டல் முதளாளிக்கு போட்ட விண்ணப்பம் எடுத்துக் கொள்ளப் படுவதால், அங்கு போய் வேலைக்கு அமர்ந்தவர்களாக உள்ளார்கள். ஆக, ஹோட்டல்களில் படித்தவர்கள் கூட வேலைக்கு இருக்கிறார்கள். அப்படிப் படித்தவர்கள் இருப்பதால் அதன் தரம் ஓரளவு உயருகிறது. ஆகவே அவர்களின் தரத்திற்கு மதிப்பளிப்பதற்கு அடையாளமாக அவர்களின் வேலை நேரம் எந்தளவு குறைவாக இருக்க முடியுமோ அந்தளவு குறைவாக இருக்கச் செய்யவேண்டும். ஐந்து மணி நேரம் தொடர்ச்சியாக வேலை செய்தால் அரை மணி நேரம் ஓய்வு கொடுக்கவேண்டுமென்று சொல்லப்படுகிறது. அந்த அரை மணி நேரத்தில் ஒரு நல்ல பத்திரிகையைக் கூட புரட்டிப் பார்க்க முடியாது. அந்த அரை மணி நேரத்தில், ஒரு நாள் இதழைக் கூடப் படித்துப் பார்க்க முடியாது. ஆகவே அதைக் குறைந்தது ஒரு மணி நேரம் என்றாவது ஆக்க வேண்டும். அடுத்தபடியாக 14 மணி நேரம், தொடர்ச்சியாக வேலை செய்யத் தேவை இல்லாவிட்டாலும், ஓய்வு நேரத்தையும் சேர்த்து ஒரு நாளைக்கு 14 மணி நேரம் அளவு வேலை வாங்கலாம் என்று கருத்து தெரிவித்திருக்கிறார்கள். தொழிலாளர்களின் நலனில் அக்கரையுள்ளவர்கள் இதை ஏற்றுக்கெள்ள முடியாது. இடையிலுள்ள குறிப்பிட்ட நேரம் அத்தொழிலாளியின் வேறு கடைமையைக் கவனிக்க இடம் தருமா ? காலை 6 மணியிலிருந்து 9 மணி வரை இட்டலி காப்பி கொடுக்க வேண்டிய நேரம். பின்னர், 12 மணி முதல் 2 மணி வரை சாப்பாடு போடவேண்டிய நேரம். பின் மாலை 6 மணி முதல் 8 மணி வரை காப்பி, சாப்பாடு நேரம். அவர்களுக்கு இடையிடையே கிடைக்கும் ஓய்வு நேரத்தில் அவர்கள் தங்கள் வேறு கடைமைகளை எப்படிச் செய்ய முடியும்? இந்த 14 மணி நேரத்திற்குள் 8 மணி வேலை என்பதை 12 மணி கால அளவிற்குள் என்றாவது குறைக்க வேண்டும். காலையில் 6 மணிக்கு வந்தால் மாலை 6 மணிக்கு போகலாம் என்றோ அல்லது காலை 8 மணிக்கு வருபவர்கள் இரவு 8 மணிக்கு போகலாம் என்றோ, காலை 10 மணிக்கு வருபவர்கள் இரவு 10 மணிக்குப் போகலாம் என்றோ வைக்கவேண்டும். அப்படிப்பட்ட ஒரு முறையைக் கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். 14 மணி நேரம் தொடர்ச்சியாக வேலை செய்யவேண்டுமென்றால், முதலாளிகள் நினைத்த நேரத்தில் தொழிலாளர்களின் கையைப் பிடித்து வேலைக்கு இழுப்பார்கள். அவர்களும் வேலை செய்யவேண்டிய நிலை ஏற்படும். அந்நிலையில் அவர்கள் வேறு எந்தத் துறையிலும் தங்கள் அறிவைச் செலுத்த முடியாது போய்விடுகிறது. அதனால் அவர்கள் தங்கள் வேறு கடமைகளையும் செய்ய இடமில்லாமல் போய்விடும். அடுத்தபடியாக, 55, 60 வயது வரை வேலை செய்பவர்கள் வேலையிலிருந்து ஓய்வு பெறும் போது அவர்களுக்கு சேமிப்பு நிதி ஒன்றும் இல்லாவிட்டால் அவர்கள் தங்கள் முதிய வாழ்க்கையில் மிகவும் கஷ்டப்பட நேரிடும். தொழிலாளர்களைப் பொறுத்த வரையில் அவர்கள் வேலையில் இருக்கும் போது அவர்களுக்கு உணவுப் பஞ்சமே கிடையாது. ஆனால், வேலை போய் விட்டால், தெய்வத்திற்கு ஆறு வேளை பூஜை போடுவது போல், வேலையில் இருந்த போது வேளைக்குச் சாப்பிட்டுக் கொண்டிருந்தவர்கள், ஓய்வு பெற்ற பின், தங்களுக்கும் சாப்பாடு இல்லாமல் மனைவி மக்களுக்கும் பட்டினி கிடக்கும் நிலை ஏற்படுகிறது. அவர்களால் அந்தக் கொடுமையை எப்படித் தாங்க முடியும். அவர்களும் ஓரளவு பொது அறிவு பெற்றவர்களாகையால் தங்கள் பிள்ளைகள் எல்லாம் படித்து உயர்ந்த உத்தியோகங்களுக்குப் போக வேண்டுமென்று நினைப்பார்களே தவிர தாங்கள் செய்த தொழிலையே செய்ய வேண்டுமென்று நினைக்க மாட்டார்கள்.

ஆனால் அந்தப் பிள்ளைகளைப் படிக்க வைப்பதற்கோ தங்களுடைய குடும்பத்தை வைத்து நடத்துவதற்கோ வாய்ப்பு இல்லாதவர்களாக இருக்கிறார்கள். ஆகவே அவர்கள் தங்கள் வாழ்க்கை முழுவதையும் இந்தச் சிற்றுண்டி சாலைகளிலே கழித்து விடலாம் என்று அவர்கள் எதிர்பார்ப்பதும் இயலாததாகும். ஆகவே அவர்களுக்கு வயதிற்கு ஏற்ற



2nd November 1957] [Sri K. Anbazhagan]

வாழ்க்கை நிலையை ஏற்படுத்த, அவர்கள் ஓய்வு பெறுகிற நேரத்தில் மிச்ச நிதி, அதாவது "பிராவிடன்ட் பண்ட்" போன்ற ஷேம நல நிதியை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஹோட்டல்களில் கிடைக்கும் லாபத்திலிருந்து தொழிலாளர்களுக்கு ஓரளவுக்கு "கிராட்யூடி" (Gratuity) போன்ற உதவிகள் அளிக்கவேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன். இதை அரசாங்கமும் ஏற்றுக் கொள்ளும் என்று நம்புகிறேன். இவ்விதம் ஏதாவது ஒரு ஏற்பாடு செய்வார்களானால் ஹோட்டல் தொழிலாளர்கள் தங்களுடைய வாழ்நாளை நிம்மதியாக நடத்திச் செல்வதற்கு ஒரு சூழ்நிலை ஏற்படும் என்று கூறி, இதிலே இன்னும் இருக்கிற சிறு சிறு குறைகளை ஆய்வுக் குழுவில் விரிவாகப் பரிசீலிக்கலாம் என்று எண்ணி இதை அமைச்சர் அவர்கள் ஏற்றுக் கொள்ளுவார்கள் என்று எண்ணிக்கொண்டு முடித்துக் கொள்ளுகிறேன்.

**SRI M. R. KANDASWAMI MUDALIAR** : ஸர், பாயின்ட் ஆப் இன்பர்மேஷன். நண்பர் அன்பழகன் அவர்கள் குறிப்பிட்டபோது சைவ விடுதி என்று குறிப்பிட்டதை உணவின் தன்மையை வைத்து சொன்னார்களா அல்லது ஜாதியின் அடிப்படையை வைத்து சொன்னார்களா என்பதை தெரிவிக்க வேண்டுகிறேன்.

* **SRI. K. ANBAZHAGAN** : நண்பர் அவர்கள் கேட்டதற்காக விளக்கம் கூறுகிறேன். நான் ஜாதியை மாத்திரம் அடிப்படையாக வைத்துக் கூறவில்லை. சைவர்கள் என்று குறிப்பிடக் கூடியவர்கள் அல்லாதார் நடத்துகிற உணவு விடுதியாக இருந்தாலும் அதில் "சைவர் உணவு விடுதி" என்ற ஒரு பெயர் போட்டால் அங்கே போகின்றவர்கள் நீங்கள் திருநெல்வேலி சைவர்களா, தென் பாண்டி நாட்டு சைவர்களா என்று கேட்கிறார்கள். ஆகவே இவ்விதம் மத, சாதி வேறுபாடு தோன்றக் காரணமான மனப்பான்மையை மாற்றுகிற வகையில் மரக்கறி உணவு விடுதி என்றிருந்தால்போதும். "சைவ" முதலான மதசாதி பெயர் தேவையில்லை, கூடாது என்று நான் குறிப்பிட்டேன்.

**SRIMATHI KAMALAMBUJAMMAL** : ஸர். பாயின்ட் ஆப் இன்பர்மேஷன், சைவாள் என்று ஒரு ஜாதி தனியாக இருப்பதாகத் தெரியவில்லை. ஹோட்டல்களில் தயாரிக்கப்படும் உணவு சைவ உணவு என்பதை குறிப்பிடுவதற்காகத்தான் சைவர்கள் ஹோட்டல் என்று சொல்லப்பட்டு வருகிறது. அதல்லாமல் சைவர்கள் என்ற ஒரு ஜாதி தனியாக உண்டா என்பதை தெரிவிக்க வேண்டுகிறேன்.

**SRI M. KALYANASUNDARAM**: சபாநாயகர் அவர்களே, இந்த மசோதாவின் நோக்கத்திற்கு புறம்பான விஷயங்களைப்பற்றி பேச விரும்பவில்லை. இந்த மசோதாவின் முக்கியமான நோக்கம் என்னவென்றால் ஹோட்டல் தொழிலாளர்களுக்கு சில உரிமைகள் வழங்க வேண்டுமென்பதுதான். அடுத்தபடியாக எல்லா ஹோட்டல்களையும் பதிவு செய்ய வேண்டுமென்று சொல்லியிருப்பதில் சில ஹோட்டல்களுக்கு விதி விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. பொதுவாக ஹோட்டல் தொழிலாளர்களாக எவ்வளவு பேர்கள் இருக்கிறார்கள் என்பதை கணக்கெடுக்க வேண்டும் என்பதை தெரிந்துதான் எல்லா ஹோட்டல்களும் பதிவு செய்ய வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் மசோதாவை எடுத்து பார்க்கிறபொழுது அந்த மாதிரி அர்த்தம் கொடுக்கவில்லை என்பதை மந்திரி அவர்களின் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன். இதற்கு முன் இவை ஆலோசனை குழுவின் முன் இருந்த சமயத்திலும் இந்த மசோதாவைப் பற்றி விரிவாக பேசுவதற்கு சந்தர்ப்பம் கிடைத்தது. இதைப்பற்றி வேறு பலரும் பல ஆலோசனைகளை சொன்னார்கள். அவ்விதம் இருந்தும் இப்போது இவ்விதம் கொண்டுவந்திருப்பதை பார்த்தால் ஏதோ போதிய அவகாசம் இல்லாத காரணத்தினால்தான் இப்போது இந்த மசோதாவை கொண்டு வந்திருக்கிறார்கள் என்று நம்புகிறேன். இதை செலக்ட் கமிட்டிக்கு விடும்போது இதைப்பற்றி கூடுதலாக பரிசீலனை செய்து வேண்டிய திருத்தங்கள் செய்வார்கள் என்று நம்புகிறேன். இருந்தாலும் சில அம்சங்களை எடுத்துக்காட்ட வேண்டியிருக்கிறது. இன்று நம்முடைய ஹைக் கோர்ட் தீர்ப்புகளை எல்லாம் பார்க்கும் போது இம்மாதிரி சட்டங்களை

கொண்டு வரும்போது மிக கவனமாக பரிசீலனை செய்து நிறைவேற்ற வேண்டியிருக்கிறது. சர்க்கார் சட்டம் இயற்றி இருப்பதின் கொள்கை என்ன என்பதைப்பற்றி நம்முடைய உயர்நீதி மன்றம் கவலைப்படுவதில்லை. சட்டத்தின் ஓட்டைகளை கண்டு பிடிப்பதில் நம்முடைய நீதிபதிகள் கவனம் செலுத்துகிறார்கள். நான் நீதிபதிகளைப்பற்றி குற்றம் சொல்லவில்லை. அல்லது எந்த தனிப்பட்ட நீதிபதியைப்பற்றியும் குறிப்பிட்டு பேசவில்லை. சமீபத்தில் கலக்டர்களுக்குள்ள ஒரு சட்டத்தில் கூட துளை போட்டுவிட்டது என்பதை நாம் பார்த்தோம். ஆகவே நமக்கு சாத்தியப்பட்ட வரையில் இதில் மிகவும் ஜாக்கிரதையாகவே இருந்து கொள்ளவேண்டுமென்று மந்திரி அவர்களிடம் கேட்டுக் கொள்ளுகிறேன். பதிவு செய்வதில் விதி விலக்கு அளிக்கப்பட்டிருப்பதைப்பற்றி ஒரு விஷயத்தை சொல்ல விரும்புகிறேன். அதாவது குடும்பத்தார்கள் நடத்தும் ஹோட்டல்களுக்கு இந்த விதி விலக்கு அவசியமில்லை என்று கருதுகிறேன். பதிவு செய்யும் முறையில் இந்த சட்டம் அமுலுக்கு வந்த ஒரு மாதத்திற்குள் எல்லா ஹோட்டல்களும் பதிவு செய்யப்படவேண்டும் என்றிருக்க வேண்டும். அதிலும் ஒவ்வொரு ஹோட்டல்களையும் பதிவு செய்யும்போது அவருடைய பிள்ளைகள் எத்தனை ? வேறு சொந்தக்காரர்கள் இருக்கிறார்கள் என்றால் அவர்கள் என்ன உறவு முறை என்பதையெல்லாம் இன்ஸ்பெக்டர்கள் முன்னால் பதிவு செய்ய வேண்டும். அவ்விதம் ஒரு ஏற்பாடு இருந்தால் தான் இதிலிருந்து யாரும் தப்பாமல் இருக்க முடியும் என்பது என்னுடைய நம்பிக்கை. இன்னொரு குறை என்னவென்றால் 6 மாதத்திற்கு மேல் சர்வீஸ் இருந்தால் தான், அவர்களை வேலையிலிருந்து நீக்கவோ மற்றபடி ஏதாவது அவர்களுக்கு குறைகள் ஏற்பட்டாலும் இந்த சட்டத்தின் படி பாதுகாப்பு உண்டு என்பது. இவ்விதமிருந்தால் இது இந்த சட்டத்தினுடைய நோக்கத்தை முறியடித்து விடும். நண்பர் அன்பழகன் எடுத்துக் காட்டியதுபோல் ஹோட்டல்களிலே நிரந்திரமாக வேலை செய்ய வேண்டுமென்று யாரும் இருக்க மாட்டார்கள். 5 வருடம், 10 வருடம் தொடர்ந்து ஹோட்டல்களில் வேலைகள் செய்து கொண்டு வருகிறவர்கள் வெகு குறைவானவர்கள்தான் இருப்பார்கள். ஆகவே 6 மாதம் சர்விஸ் வேண்டுமென்றிருந்தால் ஒரு தொழிலாளியை 5 மாதம் 29-ம் நாள் வேலைக்கு வைத்து அப்புறப்படுத்திவிட்டு வேண்டிய பொய் ரிகார்டுகளையும் வைத்துக் கொண்டு இந்த சட்டத்திலிருந்து தப்பித்துவிடுவார்கள். ஆகவே 6 மாதம் சர்விஸ் வேண்டும் என்றிருப்பதை மாற்றி 30 நாட்களோ 40 நாட்களோ வேலையில் இருந்தால் போதும் என்று சட்டம் இருக்க வேண்டும். அப்போது தான் இது தொழிலாளர்களுக்கு ஏதாவது நன்மை ஏற்படக்கூடிய நிலைமையில் இருக்கும். இதல்லாமல் ஹோட்டல் முதலாளிகள் இதை வைத்துக்கொண்டு, தொழிலாளர்களை "காஷ்வல்" லேபர்களை போன்று வேலையில் வைத்துக்கொள்வார்கள். சர்க்கார் ஸ்தாபனங்களில் கூட, ஏன் மத்திய சர்க்காரின் ரயில்வேக்களில் 6 மாதம் வேலைக்கு வைத்து விட்டு அதன் பின்னால் பிரித்து விட்டு திரும்பியும், "காஷ்வல் லேபர்" களாகவே வைத்துக்கொண்டிருக்கிறார்கள். பஸ் டிரான்ஸ்போர்டில், சமீபத்தில் நாங்கள் கிளர்ச்சி செய்கிற வரையிலும் காஷ்வல் தொழிலாளர்களாகவே வைத்திருந்தார்கள். இந்த முறையையே தனிப்பட்டவர்களும் கையாளுவார்கள். இன்னும் இது போன்ற சில குறைகளும் இருக்கின்றன. இவைகளை எல்லாம் செலக்ட் கமிட்டி சரியான விதத்தில் விரிவாக பரிசீலனை செய்யும் என்றும் நம்புகிறேன். செலக்ட் கமிட்டிக்கு கொஞ்சம் சிரமம் ஏற்பட்டாலும் இதை நன்றாக பரிசீலத்து வேண்டிய முடிவுகள் எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மற்ற பகுதிகளில் அதாவது முனிசிபல் நகரங்களிலும் மற்றபடி தொழில் சங்க பிரதிநிதிகளும் இதில் சாட்சியங்கள் கொடுப்பதற்கு சந்தர்ப்பம் அளிக்கவேண்டும். அவைகளை எல்லாம் இந்த செலக்ட் கமிட்டி ஆலோசனை செய்து தக்க முடிவு எடுத்து அதில் தக்க மாறுதல்கள் செய்து அதன் பின் திரும்பவும் இந்த சபை முன் கொண்டு வரவேண்டுமென்று மந்திரி அவர்களை கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

**The Hon. Sri R. VENKATARAMAN :** மிஸ்டர் டெப்யூடி ஸ்பீக்கர், நான் இந்தத் தீர்மானத்தை பிரேரணை செய்தபோது இதற்கென்றுள்ள செலக்ட் கமிட்டியின் 15 அங்கத்தினர்களின் பெயர்களை குறிப்பிட்டேன். இந்த





விவாதம் நடந்து கொண்டிருக்கும்பொழுது அதில் அதிக மெம்பர்கள் அக்கரை காட்டியிருப்பதின் காரணமாக அவர்களுடைய ஆலோசனை நமக்கு அதிக உபயோகமாக இருக்கும் என்று நம்பி இந்த செலக்ட் கமிட்டியின் அங்கத்தினர்கள் 15 என்றிருப்பதை 19 நபர்களாக உயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நான் கூடுதலாக சேர்க்கப்பட்டிருக்கிற நான்கு நபர்களின் பெயரை வாசிக்கிறேன். அதை நீங்கள் ஒப்புக் கொள்ள வேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். ஸ்ரீ. கே. அன்பழகன், ஸ்ரீ. கே. விநாயகம், ஸ்ரீ. டி. ஆர். ராமமிருத தொண்டமான், ஸ்ரீ. கே. சட்டநாத கரையாளர். இவ்விதமாக நான்கு பேர்களையும் சேர்த்து 19 அங்கத்தினர்களாக செலக்ட் கமிட்டியில் இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஹோட்டல்களுக்கு பெயர் வைக்கப்படுவதைப்பற்றி ஒரு பெரிய விவாதம் நடந்தது. என்னைப் பொறுத்தவரையில், ஆரியனோ திராவிடனோ முஸ்லிமோ யார் தொழில் நடத்தினாலும் சரி, நாங்கள் வரையறுக்கும் எல்லா ஷரத்துகளையும் அவர்கள் கட்டாயம் அமுல் நடத்த வேண்டும். அப்படி இல்லாவிட்டால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாத்திரம்தான் நான் சொல்ல முடியும். இப்போது பிரச்னை தொழிலாளர்களுடைய வேலையை வரையறுக்கும் சட்டம் கொண்டு வரவேண்டும் என்பது ஆகும் ; இந்தத் தொழிலில் வேறு பல பிரச்னைகள் தொடர்பு கொண்டிருந்தாலும், அவை இந்தப் பிரச்னையுடன் சேர்ந்தவை அல்ல.

**Sri K. ANBAZHAGAN : On a point of information, Sir.** இந்த நிலையங்கள் எந்தப் பெயர் பெற்றிருந்தாலும் அவை இந்தச் சட்டத்திற்கு உட்பட்டவை என்றும், இதில் வகுப்புப் பிரச்னை இல்லை என்றும் கருத்துப்பட கனம் அமைச்சர் அவர்கள் கூறினார்கள். சில பெயருள்ள உணவு நிலையங்களில் சில வகுப்பைச் சேர்ந்தவர்களைத் தான் தொழிலாளர்களாக வைத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பது பெயரைப் பார்த்தாலே தெரிகிறது. இதை அனுமதிப்பதானது தொழிலாளர்களிடையே வகுப்பு வேற்றுமைகளை ஏற்படுத்துவதாக இருக்கிறது. தொழிலாளர்கள் அத்தனை பேரும் ஒரு பொது வகுப்பினர் என்று கருத வேண்டுமாதலால் அவர்களிடையே ஜாதி மனப்பான்மை கூடாது என்ற நோக்கத்துடன் இயற்றப்போகும் இச்சட்டத்தைப் பயன்படுத்தக்கூடாதா என்று கேட்டறிய விரும்புகிறேன்.

**The Hon. Sri R. VENKATARAMAN :** யார் தொழில் நடத்தினாலும் இந்த சட்டத்தை கண்டிப்பாக அமல் நடத்தவேண்டும். அதே போல யார் எந்த ஹோட்டலில் வேலை செய்தாலும் எல்லா ஹோட்டல் தொழிலாளர்களுக்கும் இந்தச் சட்டம் சமமாகப் பொருந்தும். மற்றப்படி "யாரை வேலைக்கு வைத்துக்கொள்ளவேண்டும் ? ஹோட்டல் பெயர்களில் எப்படிப்பட்டவைகளை நீக்கவேண்டும்?" என்ற விஷயங்களுக்கு இந்தச் சட்டம் பொருந்தாது. அவைகளையும் இந்த மசோதாவில் புகுத்துவதானால், இப்போது செய்ய முயற்சிக்கும் நல்ல காரியத்தைச் செய்வதுகூட கஷ்டமாகி விடும். கனம் அங்கத்தினர் குறிப்பிடும் காரியத்தைச் செய்யவேண்டுமானால்,—அவைகளுக்கு இந்தச் சட்டம் பொருத்தாது—அவைகளுக்காக மட்டும் வேறு சட்டம் இயற்றப்பட வேண்டும்.

கனம் நண்பர் ஸ்ரீ பழனிசாமி தன் பிரேரணையை கட்டாயம் வாபஸ் வாங்கிக்கொள்வார் என்று நம்புகிறேன். காரணம், எவ்வளவு சீக்கிரமாக சட்டம் கொண்டுவரவேண்டுமென்று தொழிலாளர் பிரதிநிதிகள் விரும்புகிறார்களோ, அவ்வளவு சீக்கிரமாகக் கொண்டுவர வேண்டும் என்ற நோக்கத்துடன்தான், மசோதாவை சர்க்கார் சீக்கிரமாகக் கொண்டு வந்திருக்கிறது. ஆகையால்தான் தொழில் ஆலோசனை போர்டால் சில கருத்துக்கள் கூறப்பட்டாலும், அவற்றையெல்லாம் ஆராய்ந்து திருத்தங்கள் செய்த பிறகு மசோதாவைக் கொண்டு வந்தால், அவகாசம் இராது என்ற காரணத்தினால், உடனடியாக இதை சட்டசபைக்குக் கொண்டு வந்து அந்தத் திருத்தங்கள் எல்லாவற்றையும் ஆலோசனைக் கமிட்டியில் தீர்மானம் செய்து கொள்ளலாம் என்று கருதி மசோதா இப்போது கொண்டு வரப்பட்டிருக்கிறது.

[Sri R. Venkataraman] [2nd November 1957

கனம் நண்பர் பழனிசாமி, Apprentice வைத்துக்கொள்வது சம்பந்தமான ஷரத்தைப் பற்றிக் குறிப்பிட்டார். Apprentices-களை வைத்துக் கொண்டாலும், அவர்களையும் சட்டம் கட்டுப்படுத்தும் என்பதற்காக அந்த ஷரத்து சேர்க்கப்பட்டிருக்கிறது. இல்லாவிட்டால் முதலாளிகள் யாரையாவது தொழிலாளியாக வைத்துக்கொண்டு அவர்கள் விஷயத்தில் சட்டப்படி நடந்துகொள்ளாமல் இருப்பார்கள் ; ஏன் சட்டப்படி நடக்கவில்லை என்று கேட்டால் அவர்கள் Apprentices என்று முதலாளிகள் சொல்லிவிடுவார்கள். ஆகவே Apprentices என்று சொல்லப்பட்டாலும், அவர்களுக்கும் இந்தச் சலுகைகள் கொடுக்கப்படவேண்டும் என்பதற்காகத்தான் இந்த ஷரத்து சேர்க்கப்பட்டிருக்கிறது.

மேலும், தொழிலாளர்களுக்கு கூலி நிர்ணயம், பிராவிடண்டு பண்டு, கிராட்யுட்டி போன்றவைகள் எல்லாம் இந்த மசோதாவில் குறிப்பிடப்படவில்லை என்று அவர்கள் சொல்லியிருக்கிறார். இது தொழிலாளர்களின் வேலையை நிர்ணயம் செய்யும் சட்டம். தொழிலாளர்களின் ஊதியம் போன்றவைகளைப் பற்றியெல்லாம், தனியாக, ஏதாவது தகராறுகள் ஏற்படும்போது கோர்ட்டுகளில் தீர்ப்பளிக்கப்படுகிறது. அதே போல் கிராட்யுட்டி கொடுக்கவேண்டும் என்றால், எல்லா ஹோட்டல்களும் கிராட்யுட்டி கொடுக்கவேண்டும் என்று சொல்வதற்கு சர்க்கார் தயாராக இல்லை. சில ஹோட்டல்களால் கொடுக்கமுடியும். சில ஹோட்டல்கல் கொடுக்கமுடியாத நிலைமையில் இருக்கலாம். எந்த இடங்களில் தகராறுகள் ஏற்படுகின்றனவோ, அங்கெல்லாம் அட்ஜுடிகேஷனுக்கு விடுவதன் மூலம் கிராட்யுட்டி, பிராவிடண்டு பண்டு முதலியவைகள் கொடுக்கும்படி செய்வதற்கு சர்க்கார் ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறது.

கனம் நண்பர் ஸ்ரீ விநாயகம் "ஹோட்டல் தொழிலாளர்களுக்குச் சலுகைகள் கொடுக்கவேண்டும். அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் முறையில் சலுகைகள் கொடுக்கவேண்டும்" என்று சொல்பவர்கள் முதலாளிகளின் நிலைமையையும் முதலாளிகளுடைய உரிமைகளையும் பற்றியும் கவனிக்கவேண்டும் என்று சொன்னார்கள். ஹோட்டல் வைப்பதன் மூலமாகவே முதலாளிகளுக்கு உரிமைகள் இருக்கின்றன. அவர்கள் "ஸ்டாண்டிங் ஆர்டர்ஸ்" படி குற்றச்சாட்டுக்களை தொழிலாளர்கள் மீது செய்தால் அத்தொழிலாளர்களை அவர்கள் வேலையிலிருந்து நீக்க முடியும். முதலாளிகள் தொழிலாளர்களை ஸஸ்பெண்டு செய்கிறார்கள். பல முதலாளிகள் வரம்பில்லாமல் செய்கிறார்கள் என்பதால் இவைகளைக் கட்டுப்படுத்துவதற்காக இந்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது. சட்டத்தின் மூலமாக முதலாளிகளுக்குப் புதிதாக எதையும் செய்யத் தேவையில்லை. 'ஸ்டாண்டிங் "ஆர்டர்ஸ்" வைத்துக்கொண்டு தொழிலாளர்களின் வேலையை நல்ல முறையில் வரையறுத்து வைத்துக் கொண்டிருக்கும் முதலாளிகளுக்கு எந்தவிதமான கஷ்டமும் பாதகமும் இந்தச் சட்டத்தினால் ஏற்படாது. என்றாலும், அவர் தானே ஒரு ஹோட்டலை நடத்தியிருப்பதாகச் சொன்னதால், அவர் தொழிலாளர்களின் நிலைமையைக் கவனித்து தொழிற்சங்க அதிகாரிகளிடம் சொல்லவேண்டியதைச் சொல்லி, கஷ்டங்கள் இல்லாமல் நல்ல முறையில் சட்டம் செய்வதற்கு சர்க்காருக்கு உதவியாக இருப்பார் என்று நினைக்கிறேன்.

கனம் நண்பர் ஸ்ரீ சின்னதுரை, இந்த மசோதாவில், லாட்ஜிங் விடுதிகளையும் சேர்த்துக்கொள்ளவேண்டும் என்று சொன்னார். உணவு கொடுக்காத விடுதிகளைச் சேர்ப்பது கஷ்டம். "அன்ரெகுலேடெட் எம்ப்ளாய்மெண்ட்" என்று வரையறுக்கப்படாத வேலைகள் இருக்கின்றன. அவைகளை சேர்த்துக்கொண்டு வந்தால் அது சரியே. தவிர, உணவு விடுதிகளாக இல்லாமல் லாட்ஜிங் விடுதிகளாக இருப்பவைகளை சேர்க்கவேண்டும் என்று சொல்லவேண்டாம் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, கனம் நண்பர் ஸ்ரீ அன்பழகன், வேலை நேரம் தொடர்ந்து, ஓய்வு நேரமும் சேர்ந்து, (ஸ்ப்ரெடாவர்) 12 மணியாக இருக்கவேண்டும் என்று சொன்னார். அதைப்பற்றி செலக்ட் கமிட்டி பரிசீலனை செய்யும் என்று சொல்லிக்கொள்ளுகிறேன். முக்கியமாக, 2–3 ஷிப்டுக்கு அதிகமா வேலை இல்லாமல் இந்த 14 மணி நேரத்திற்குள்ளாவது இருக்கவேண்டும் என்ற என்னுடைய அபிப்பிராயத்தைச் சொல்



2nd November 1957] [Sri R. Venkataraman]

கிறேன். முடிவாகச் சொல்லவில்லை. 15 மணிக்கு 5—6 தடவை இல்லாமல், அதாவது 3 ஷிப்டுக்கு மேல் இல்லாமல் ஏற்பாடு செய்தால் இரு தரப்பாருக்கும் கஷ்டமாக இருக்காது என்று சொல்லிக்கொள்கிறேன்.

இன்னும் ''ஸானிடேஷன்'', சுகாதாரம் ஆகியவற்றைப் பற்றி எல்லாம் மசோதாவில் குறிப்பிடப்படவில்லை என்று சொல்லப்பட்டது. '' பப்ளிக் ஹெல்த் ஆக்ட்''-க்கு இணங்க ஹோட்டல்களை நடத்தவேண்டும். ஹோட்டல்களை நடத்துவது பற்றிய சுகாதார முறைகள் எல்லாம் அந்தச் சட்டத்தில் வந்து விடுகின்றன.

ஓய்வு நேரத்திற்கு, பெரிய ஹோட்டல்களிலாவது, "ரெஸ்ட் ப்ளேஸ்" கொடுக்கவேண்டுமா என்பதை ஆலோசனைக் கமிட்டி கவனிக்கும் என்று சொல்லிக்கொள்ளுகிறேன்.

கனம் அங்கத்தினர் ஸ்ரீ கல்யாணசுந்தரம் சிலர் குடும்பத்தினரை வைத்துக்கொண்டு ஹோட்டல் நடத்துகிறார்கள் என்றும், அவர்கள் பின்னர் தனி ஆட்களைச் சேர்த்துக்கொண்டு விட்டால் என்ன ஆகும் என்றும் கேட்டார்கள். குடும்பத்தினர்கள் மட்டும் நடத்தும் ஹோட்டல்களுக்கு இந்தச் சட்டத்திலிருந்து விதி விலக்குக் கிடைக்கும். ஆனால், பிறகு 2–3 ஆட்களைச் சேர்த்துக்கொண்டால் அவ்வாறு சேர்த்துக்கொண்ட பிறகு அந்த ஹோட்டல் இந்தச் சட்டத்தின் கீழ் வந்து விடும். இப்போதுள்ள மசோதாப்படியே 30 நாட்களுக்குள் ரெஜிஸ்டர் செய்துகொள்ளவேண்டும். இதைத் திருத்தவேண்டுமென்றால் அதைப் பற்றி ஆலோசனைக் கமிட்டி யோசனை செய்யும் என்று சொல்லிக் கொள்ளுகிறேன்.

**SRI K. B. S. MANI** : ஹரிஜனங்களுக்கு என்று ஜாரி செய்யப்படும் மனைக்கட்டுகள் சர்க்காரால் வழங்கப்பட வேண்டும். அப்படி புதியதாக வழங்கப்படும் இடங்களிலெல்லாம் மறுபடியும் சேரி என்ற பெயரே வைக்கப்படுகிறது. அவர்கள் அதன்படி தனியாகவே இருக்கக்கூடியவர் களாக ஆகிறார்கள். அப்படி இல்லாமல் அவர்களை டவுன்களுக்குப் பக்கத் தில் அமைத்து மற்றவர்கள் இருக்கக்கூடிய இடங்களுக்குப் பக்கத்திலேயே மனைக்கட்டுகளை ஜாரி செய்து கொடுத்து அவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுத்து அவர்கள் மற்றவர்களுடன் தொடர்பு கொள்ளும்படியாக இடங் களைக் கொடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.



4th November 1957]

**THE HON. SRI P. KAKKAN** : டவுனிலும் சரி, நகரப்புரங்களிலும் சரி எங்கே சர்க்காருடைய புறம்போக்கு இடங்கள் இருக்கின்றனவோ அங்கே யெல்லாம் ஹரிஜனங்களுக்கு வீட்டு மனைக்கட்டுகள் வழங்கப்பட்டு வருகின்றன. மற்றவர்கள் இருக்கக் கூடிய இடங்களுக்குப் பக்கங்களில் இடம் இருந்தால் அங்கே அவர்களுக்கு வீடு மனைக்கட்டுகள் கொடுக்கப்படும். இல்லாவிட்டால் அவர்களுக்குக் கொடுக்க வேண்டிய அவசியத்தைப் பொறுத்து எந்த இடங்களில் இடங்கள் கிடைக்கின்றனவோ அந்த இடங்களில் கொடுக்கப்பட்டு வருகிறது. அப்படிப்பட்ட இடங்களில்தான் அவர்களுக்கு காலனிகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

**SRI M. C. MUTHUKUMARASWAMY** : தீண்டாமையை ஒழிக்க வேண்டும் என்று கங்கணம் கட்டிக்கொண்டிருக்கும் சர்க்கார் ஹரிஜனங் களுக்கு சேரிகளில் மனைக்கட்டுகளை வழங்குவதைத் தவிர்த்து ஜாதி ஹிந்துக்கள் வசிக்கக்கூடிய புரம்போக்கு இடங்களில் ஹரிஜனங்களுக்கு வீடுகள் கட்டிக் கொள்ளக்கூடிய நடவடிக்கையை எடுக்க இந்த சர்க்கார் முன் வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**THE HON. SRI P. KAKKAN** : ஹரிஜனங்களும் ஜாதி ஹிந்துக்களும் ஒன்றுக வாழ வேண்டும் என்பதற்காகத்தான் எங்கேயெல்லாம் சாதகமாக இடங்கள் அகப்படுகின்றனவோ அங்கேயெல்லாம் ஹரிஜனங்களுக்கு மனைக் கட்டுகள் வாங்கிக் கொடுக்கப்பட்டு வருகிறது. அப்படி 100-க்கு பத்து சத விகிதம் ஒதுக்க வேண்டும் என்றும் திட்டமிட்டிருக்கிறார்கள்.

**SRI C. MUTHIAH PILLAI** : ஜில்லாவுக்கு ஒரு டிஸ்ரிக்ட் ஹரிஜன் வெல்பேர் ஆபீசரும் ஐந்து ரெவினியூ இன்ஸ்பெக்டர்களும் இருக்கிறார்கள். அவர்களுக்கு பல காரியங்கள் இருக்கின்றன. கனம் மந்திரி அவர்கள் சுற்றுப் பிரயாணம் செய்ய வந்தபோது கூட அவரிடம் ஆயிரக்கணக்கான மனுக் களைக் கொடுத்தார்கள். அதைக்கூட பார்வையிட முடியவில்லை என்பதை டிஸ்ட்ரிக்ட் ஹரிஜன வெல்பேர் ஆபீசரே கனம் மந்திரியிடம் சொல்லி இருக்கிறார். அதனுல் பெரிய ஜில்லாக்களை இரண்டாகப் பிரித்து அதற்குத் தக்க ஆபீசர்களை நியமிக்க உடனடியாக நடவடிக்கை எடுப்பார்களா ? அப்படிப் பிரித்துக் கொடுத்து உடனடியாக மனைக்கட்டுகளை வழங்க தக்க ஏற்பாடு செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**THE HON. SRI P. KAKKAN** : பெரிய ஜில்லாவாக இருந்தால் அதை இரண்டாக பிரிக்க வேண்டும் என்று அரசாங்கம் விரும்பவில்லை. இருந் தாலும் இப்பொழுதுள்ள அதிகாரிக்கு பக்கத்துணையாக இன்னும் சில அதிகாரிகளை போடடு அந்த வேலைகளைத் துரிதமாக நடத்த வேண்டும் என்று அரசாங்கம் யோசித்துக் கொண்டிருக்கிறது. அதைப்பற்றி ஹரிஜன வெல் பேர் ஆபீசரிடமிருந்து ரிப்போர்ட்டு வநதால் அதைக் கவனித்து தக்க ஏற்பாடு செய்யப்படும்.

**SRI N. K. PALANISAMI** : அநேக கிராமங்களில் சேரிகளெல்லாம் 9-30
தனிப்பட்டவர்களிடத்தில் இருக்கின்றன. அதன் காரணமாக தனிப்பட்ட a.m
வர்கள் அங்கு இருக்கக்கூடிய ஹரிஜனங்களை துன்புறுத்தி நிர்ப்பந்தம் செய்கிறார்கள். அநேக வருஷங்களாக அதே இடத்தில் இருக்கிறவர்களுக்கு அந்த இடத்தை பட்டா செய்து கொடுப்பதற்கு அரசாங்கம் முன்வருவார் களா ?

**THE HON. SRI P. KAKKAN** : இதே கொள்கையைத் தான் அரசாங்கம் கையாண்டு வருகிறது. தஞ்சை ஜில்லாவில் பல வருஷங்களாக தனிப்பட்ட வர்கள் இடத்தில் இருந்தவர்களுக்கு அந்த இடத்தை ஜாரி செய்வதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்திருக்கிறது.

**SRIMATHI KOLANDAI AMMAL** : ஹரிஜனங்களுக்கு மனைக்கட்டுகளுக்கு இடம் வாங்குவதற்கு சர்க்கார் உத்தரவு ஏகர் ஒன்றுக்கு ரூபாய் 1,000, 2,000 வரை இருக்கவேண்டுமென்பது. ஆனுல் என்னுடைய தொகுதி மில் ஏரியாவிலே ஒரு ஏகர் 10,000 ரூபாய்க்கு ஊற்கும் இடங்களிலே ஹரிஜனங்கள் மனைக்கட்டுகள் வாங்குவதற்கு சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது?

[4th November 1957

THE HON. SRI P. KAKKAN : கனம் அங்கத்தினர் கேட்கின்ற கேள்வியைப் பரிசீலனை செய்து என்ன உதவி அளிக்க முடியுமோ அதை அளிப்பதற்கு ஏற்பாடு செய்யப்படும்.

SRI R. KRISHANASAMY NAIDU : ஹரிஜனங்கள் குடியிருப்பு சுகாதார வசதிக்கு அனுகூலமாக உள்ள இடங்களை தேர்ந்தெடுத்து, சில வருஷங்களுக்கு முன்னாலேயே கொடுக்கப்பட்ட நிலங்கள் சர்க்கார் 1,000 கணக்கான ரூபாய்கள் செலவு செய்தும் இன்னும் அவை குடியிருப்புக்கு உபயோகப்படுத்தப்படாமல் இருக்கின்றன. இந்த இடங்களை வேறு எந்த விதமாக உபயோகப்படுத்துவது என்பது பற்றி அரசாங்கம் யோசனை செய்திருக்கிறதா ?

THE HON. SRI P. KAKKAN : ஹரிஜனங்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கு ஒதுக்கப்பட்ட இடங்களில் காலனிகள் அமைக்கப்பட்டு வருகின்றன. வேறு பல இடங்களில் இன்னும் காலனிகள் அமைக்கப்படவில்லை என்பது எனக்குத் தெரியும். அப்பேர்ப்பட்ட இடங்களில் துரிதமாக வேலை நடப்பதற்கு ஏற்பாடு செய்யப்படும்.

SRI A. R. MARIMUTHU : இப்பொழுது ஹரிஜனங்களுக்கு மனைக் கட்டுகள் ஒதுக்கும் விஷயத்தில் இந்த நிலையில் போய்க் கொண்டிருந்தால் இருபத்தைந்து வருஷங்கள் ஆகும். ஆகவே அவர்களை இப்பொழுது குடியிருக்கும் மனைக்கட்டுகளிலிருந்து அப்புறப்படுத்தக்கூடாது என்று சர்க்கார் சட்டம் செய்வார்களா ?

THE HON. SRI P. KAKKAN : இப்பொழுது சில இடங்களுக்கு உடனடியாக சில பேர்கள் போய் இருந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களை அப்புறப்படுத்தக்கூடாது என்று சட்டம் செய்வதற்கில்லை. ஏற்கெனவே அந்த இடங்களில் இருந்தால், அப்பேர்ப்பட்ட இடங்களை அவர்களுக்கு ஜாரி செய்வதற்கு என்ன ஏற்பாடு செய்ய வேண்டுமோ அதை சர்க்கார் செய்து கொண்டிருக்கிறது.

SRIMATHI P. K. R. LAKSHMIKANTHAM : சட்ட மன்றத் தலைவர் அவர்களே, சர்க்கார் புறம்போக்கு இடங்களில் சர்க்கார் உத்தரவின்றி சென்று இருக்கும் ஹரிஜனங்களுக்கு இடம் ஜாரி செய்து கொடுக்கப்படாது, உத்தரவு பெற்றுக்கொண்டு சென்றவர்களுக்கு மாத்திரம் அந்த இடங்கள் ஜாரி செய்து கொடுக்கப்படும் என்று கனம் அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அதே இடங்களில் அவர்களை வெளியேற்றிவிட்டு மற்றவர்களுக்கு ஜாரி செய்து கொடுப்பதை அரசாங்கம் நிறுத்துமா என்று நான் கேட்க விரும்புகிறேன்.

THE HON. SRI P. KAKKAN : ஹரிஜனங்களுக்கு வீடு கட்டுவதற்கு இடமில்லை என்று அவர்கள் அப்புறப்படுத்தப்பட்டு மற்றவர்களுக்கு அங்கே இடம் கொடுக்கப்பட மாட்டாது என்பதை கனம் அங்கத்தினர்களுக்கு தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

SRI A. V. P. ASAITHAMBI : சர்க்காருடைய புறம்போக்கு நிலங்களை மாத்திரம் ஹரிஜனங்களுக்கு வீடுகள் கட்டிக்கொள்ளுவதற்கு கொடுப்பது என்ற நிலைமையில் இருப்பதால், உடனடியாக சீக்கிரம் எல்லோருக்கும் குடியிருப்பு வசதி செய்து கொடுக்க முடியாத நிலை இருக்கிறது. ஹரிஜனங்கள் என்ற பெயர் இறைவனுடைய பிள்ளைகள் என்பதைக் குறிப்பதால், இறைவனுக்குச் சொந்தமான எட்டு லட்சம் ஏக்ரா நிலங்களில் விவசாயம் நிலம் போகமீதியிருக்கும் நிலங்களை சர்க்கார் கைப்பற்றி அதை வீடு கட்டிக் கொள்ளுவதற்கு இறைவனோடு சம்பந்தப்பட்ட ஹரிஜனங்களுக்கு கொடுக்க முன்வருவார்களா ?

MR. SPEAKER : தனிக்கேள்விதான் கேட்கவேண்டும். இதற்கு எப்படி கனம் மந்திரி பதில் சொல்லுவார் ?

THE HON. SRI P. KAKKAN : ஏற்கனவே அரசாங்கம் ஆலயங்களுக்கு சொந்தமான நிலங்களை ஹரிஜனங்களுக்கு வீடுகட்டிக் கொள்ளுவதற்காகக் கொடுக்க சில இடங்களில் ஏற்பாடு செய்திருக்கிறார்கள்,



4th November 1957]

THE HON. SRI C. SUBRAMANIAM : அங்கத்தினர் அவர்கள் எட்டு லட்சம் ஏக்ரா மட்டும் இறைவனுக்குச் சொந்தமானது என்று சொன்னார்கள். எல்லா நிலங்களும் இறைவனைச் சேர்ந்த நிலங்கள்தான்.

SRIMATHI A. S. PONNAMMAL : இன்று நமது சென்னை மாகாணத்தில் ஹரிஜன மக்களுக்காக வீடுகட்டிக் கொடுப்பதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிற மான்யம் போதாது. அந்தப் பணத்தை வைத்துக்கொண்டு ஒரு தாலுகாவிற்கு 40 வீடுகள்தான் கட்டிக் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதை மாற்றி ஒரு தாலுகாவிற்கு 100 வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கு நமது அரசாங்கம் வழிவகை செய்யுமா ?

THE HON. SRI P. KAKKAN : வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டத்தை நமது அரசாங்கம் மட்டும் பணம் செலவழித்து பூர்த்தி செய்ய முடியாது. மத்திய அரசாங்கத்தின் உதவியைக் கொண்டு, அவர்கள் கொடுக்கும் கிராண்டை வைத்துக் கொண்டு எவ்வளவு தூரம் வீடு கட்டிக் கொடுக்க முடியுமோ அவ்வளவு தூரம் செய்து கொண்டு வருகிறது.

SRI M. KALYANASUNDARAM : ஹரிஜனங்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டத்தின் கீழ் பெருவாரியான வீடுகள் கண்டிராக்டர் மூலம் கட்டிக் கொடுக்கப்படுகின்றன. அந்த வீடுகள் ஒரு வருஷம், இரண்டு வருஷம் கூட தாங்குவது இல்லை. அதுபற்றி சந்தேகமும், அதிருப்தியும் இருப்பதால், இந்தத் திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட தொகையை சம்பந்தப்பட்ட ஹரிஜனங்களுக்கு வீடுகட்டும் சாமான்கள் வாங்கிக் கொடுப்பதற்கு செலவு செய்யும் யோசனையை அரசாங்கம் ஆலோசிக்குமா ?

THE HON. SRI P. KAKKAN : சாமான்கள் இப்பொழுது அதிகப் படியான விலைக்கு விற்கின்றன இப்பொழுது இருக்கும் முறையே சரியாக இருக்கிறது. ஹரிஜன மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள், நல்ல முறையிலே காண்டிராக்ட் எடுக்க முன் வந்தால் அதை அரசாங்கம் கவனிக்கும்.

SRI P. G. MANICKAM : என்னுடைய 751-வது கேள்விக்கு சர்க்கார் அளித்த பதிலிலிருந்து '1956-57-ல் ஹரிஜனங்கள் வீட்டு மனைகளுக்காக ரூபாய் 55,000 ஒதுக்கப்பட்டது. கோயம்பத்தூர் ஜில்லாவிலே ரூ. 31,243 மறுபடி செலவழிக்கப்படாமல் திருப்பி அனுப்பப்பட்டிருக்கிறது. . . '

MR. SPEAKER : தயவுசெய்து கேள்வி நேரத்தின்பொழுது சிறிய பிரசங்கம் செய்யக்கூடாது என்று முன்னமே சொன்னேன். கனம் அங்கத்தினர் சபாநாயகர் கூறுவதை அனுசரித்து நடப்பார் என்று நினைக்கிறேன்.

SRI P. G. MANICKAM : ஒவ்வொரு வருஷமும் கோயம்புத்தூர் ஜில்லாவில் பணம் செலவழிக்கப்படாமல் திருப்பி அனுப்பப்படுகிறது. இந்த வருஷம் ஒதுக்கப்பட்ட பணம் பூராவும் செலவழிக்கப்படும் என்று சர்க்கார் ஒரு உறுதி மொழி கொடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI P. KAKKAN : கோயம்புத்தூர் ஜில்லாவிலே ஏழைகளுக்கு வீடு கட்டிக்கொடுப்பதற்காக ஒதுக்கப்பட்டிருக்கும் தொகையை பூரணமாக செலவழிப்பதற்கு தக்க ஏற்பாடுகள் செய்யப்படும்.

### *The Madras State Sub-Registrars' Association*

*78 *Q.*—SRI M. P. SUBRAMANIAM (on behalf of Sri T. Veluchamy) : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) whether the Government have received any representation from the Madras State Sub-Registrars' Association; and

(*b*) if so, when, and the action taken thereon?

THE HON. SRI V. RAMAIAH : (a) No, Sir.

(b) Does not arise.

*Harijan members in Panchayat Board*

* 79 Q.—SRI P. G. MANICKAM : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) the number of Panchayat Boards in the Coimbatore district;

(b) in how many of them there are Harijan members; and

(c) the percentage of Harijans among the elected members in each Panchayat Board?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : (a) There are thirty-one class I and 444 class II panchayats.

(b) 429.

(c) 14·98 per cent.

SRI P. G. MANICKAM : பஞ்சாயத்து தேர்தலிலே ஜன விகிதாசாரப்படி மெம்பர்கள் தேர்ந்தெடுக்கப்படப்போவதாகத் தெரிகிறது. ஜனவிகிதாசாரத்தின் பிரகாரம் அந்த பஞ்சாயத்து ஏரியாவில் ஹரிஜனங்களுடைய எண்ணிக்கையை எடுத்துக்கொண்டு குறைந்தது 500-க்கு 5 ஸ்தானங்கள் கொடுக்கப்படுவதாக பஞ்சாயத்து ஆக்டில் சொல்லப்பட்டிருக்கிறது. ஜன விகிதாசாரத்தின் பிரகாரம் ஹரிஜனங்களுக்கு மெம்பர் பதவிகள் வழங்குவதற்கு சர்க்கார் முயற்சிக்குமா ?

THE HON. SRIMATHI LOURDAMMAL SIMON : அப்படி ஒரு முறையைக் கையாள்வதற்கு அவசியம் இருந்தால் அதை கவனிக்க வேண்டிய ஏற்பாடு செய்யப்படும்.

MR. SPEAKER : இப்பொழுது ஸ்தல ஸ்தாபன வெள்ளை அறிக்கையைப் பற்றி சபை விவாதிக்கப்போவதால், இது விஷயமாக அந்த விவாதத்தில், பேசலாம்.

*Labour dispute*

* 80 Q.—SRI V. K. KOTHANDARAMAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether there were any conciliation proceedings in the matter of the dispute between the workers and the management of the Standard Motor Products of India Company on 22nd July 1957;

(b) the demands of the workers;

(c) whether any conciliation was effected; and

(d) if not, whether the Government propose to refer the dispute to adjudication?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) Yes, Sir.

(b) The demand was that the apprentice, K. Kesavadas, who was discharged from service on 18th September 1956 should be reinstated.





(c) Conciliation was held by the Assistant Commissioner of Labour. But, no settlement could be brought about.

(d) No, Sir. After examining the conciliation report of the Assistant Commissioner of Labour, the Government have already issued orders that there was no case for referring the dispute for adjudication.

SRI N. K. PALANISAMI : இப்பொழுது சமீபத்தில் மத்திய சர்க்காரில் இண்டஸ்டிரியல் டிஸ்பியூட்டைப் பற்றி ஒரு திருத்தச் சட்டம் கொண்டு வந்திருக்கிறார்கள். இதன் காரணமாக ஏற்கெனவே தொழிலாளர்களுக்கு இருந்த பாதுகாப்பு இல்லாமல் போகிறது. உதாரணமாக முன்பு ஒரு தகராறு ஏற்பட்டால் அதன் பிரகாரம் தொழிலாளியை நீக்க வேண்டுமென்றால் முதலாளிதான் கோர்டுக்கு போகவேண்டும். அந்த டிஸ்பியூட் முடியும் வரையில் அந்தத் தொழிலாளியை வேலையிலிருந்து நீக்க முடியாது. இப்பொழுது இந்தத் திருத்தத்தின் காரணமாக தொழிலாளிகள் கோர்ட்டுக்குப் போக வேண்டியிருக்கிறது. ஆகவே, இம்மாதிரி ஒரு காம்ப்ரெஹன்ஸிவ் லெஜிஸ்லேஷன் கொண்டு வருவதற்கு சர்க்கார் திட்டமிட்டிருக்கிறதா ?

THE HON. SRI R. VENKATARAMAN : " காம்ப்ரஹென்ஸிவ் லெஜிஸ்லேஷன் " கொண்டுவருவது என்பது, ஏழு வருஷ காலமாக மத்திய பார்லிமெண்டில் விவாதம் செய்து முடியாமல் போய்விட்டது. தொழில் சங்க பிரதிநிதிகளுக்கும், முதலாளிகள் பிரதிநிதிகளுக்கும் இடையே எந்தவிதமான மன ஒற்றுமையும் ஏற்படவில்லை. இதனால் " காம்ப்ரெஹன்ஸிவ் லெஜிஸ்லேஷன் " கொண்டுவர இயலாமல் போய்விட்டது.

SRI V. K. KOTHANDARAMAN : கம்பெனியார் தொழில் சங்கத்தை அங்கீகாரம் செய்திருக்கிறார்களா ? அப்படியானால் எந்தத் தொழிற் சங்கத்தை அங்கீகரித்திருக்கிறார்கள்?

THE HON. SRI R. VENKATRAMAN : கம்பெனியா ? அது பற்றி என்னிடமில்லை.

MR. SPEAKER : Questions are over.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

## II.—GOVERNMENT MOTION.

### WHITE PAPER ON THE REFORM OF LOCAL ADMINISTRATION IN THE MADRAS STATE INCLUDING THE MADRAS CITY CORPORATION.

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : Mr. Speaker, Sir, I beg to move—

' That the White Paper on the Reform of Local Administration in Madras State including the Madras City Corporation be taken into consideration '.

The White Paper, as Hon. Members will no doubt have observed, comprises six different documents. The first of these six documents is my own report to the Legislature on the subject. It describes the stage at present reached in the examination by Government of the problems of Local Administration and the conclusions which they have reached. These conclusions are provisional. They are open to reconsideration and modification in the

light of the discussions which I am now initiating. I shall describe presently what these provisional conclusions are. Before doing so, I shall say a few words in explanation of the five other documents which are presented in the White Paper respectively as Appendices I and I-A, and Appendices II, III and IV. Broadly speaking, all these documents are intended to place before the Legislature a record of previous examination of this subject and an explanation as to how Government were led to the conclusions which are now presented to the Legislature. Appendix I relates to the Panchayats; Appendix I-A to Panchayat Unions, the new type of local authority, which the Government propose should take the place of District Boards. Appendices II, III and IV relate respectively to District Boards, Municipalities and the Madras City Corporation.

The memorandum on the village panchayats begins with a brief review of the history of Panchayats in the State with statistical information showing how the organization of Panchayats has grown during the last twenty years. An important stage in its growth was reached in the year 1950 when the present Village Panchayats Act was passed. At about the same time the Constitution was framed and Article 40 of the Constitution enjoined that the State shall take steps to organize village panchayats and endow them with such powers and authority as may be necessary to enable them to function as units of self-Government. The 1950 Act was indeed divised to give effect to this Directive Principle of State Policy. When, however, the experience of five or six years was reviewed by Government, it became clear that there was no material difference between the Panchayats formed after 1950 and those which had been formed before. The further development of the vitality of panchayats was seen to be bound up with the future of the District Boards. It was also observed that so long as a panchayat was limited as a local authority to the boundaries of a village, it could not afford the services of trained personnel—administrative or technical and the scope of the functions which it could perform was correspondingly limited. The attempt to find a way-out of these difficulties and to fulfil the intention of Article 40 of the Constitution led to the formulation of the idea of Panchayat Union. The germ of this idea was, in fact, already contained in Section 39 of the Village Panchayats Act, 1950. This section authorized the Constitution of Statutory Joint Committees of Panchayats of contiguous villages. The Panchayat Union was initially conceived as a Statutory Joint Committee of contiguous panchayats in a relatively small group of villages. A full record of all the relevant discussions of this idea is contained in Appendix I.

Appendix I-A took the matter to a further stage. After the General elections when the subject was examined by the present Government, it came to the conclusion that the basic idea was sound, but that the area for which panchayats should be brought together in a Panchayat Union should be co-terminous with a development block delimited under the National Extension Service



Scheme. Government, at this stage, also reached the conclusion that the future of District Boards should not be left in a state of uncertainty and that the Panchayat Union formed at Block level should, in fact, be the successor to the District Board which should be abolished after the entire district was covered by Panchayat Unions. In order to determine the practical implications of this conception, one Development Block was selected in Madurai taluk of Madurai district. The manner in which a Panchayat Union could be constituted was discussed by the local officials with the representatives of the local people and a scheme was drawn up which is contained in Appendix I-A. Steps were taken actually to constitute a Panchayat Union in accordance with the scheme and the North Madurai Panchayat Union has been recently brought into existence. I would invite the attention of hon. Members who will discuss the merits of the Government's proposals regarding the Panchayat Union to the detailed provisions contained in Appendix I-A. They give a clear picture of the new local authority which Government are proposing in place of the District Board.

Appendices II, III and IV as I have said, refer to District Boards, Municipalities and the Madras City Corporation, respectively. In these cases *ad hoc* committees had been set up at different dates in order to make recommendations regarding the changes considered to be necessary. These changes were examined by Government and the attitude of Government in relation to various recommendations was formulated. The results are shown in these documents.

With this background of prolonged prior examination of the various issues involved, I now turn to the actual proposals which Government have now placed before the Legislature. The general summary of provisional conclusions is set out in paragraph 6 of the First Section in my report to the Legislature. In view of their importance, I would like to read out this summary for the consideration of the House.

General summary of provisional conclusions are:

(i) *Village Panchayats*: A planned progamme of reform and development of village panchayats should be commenced in 1958–59 and completed in 1960–61. When the programme is completed, there should be a panchayat for every village without exception.

A panchayat union should be constituted for every Development Block, and the constitution of the panchayat union should be so devised that it will represent at co-operative association of the panchayats of all villages situated in that block, and provide effective individual representation on it for every panchayat in the block. The panchayat union should be provided with funds and executive staff, technical aid, and administrative guidance. Village Panchayat Organization (as thus reformed and developed) should be enabled satisfactorily to perform all the functions specified in the Madras Village Panchayats Act, 1950, including those (example, elementary education, maternity and child welfare) which are at present performed (almost exclusively) by district boards.

[Srimathi Lourdhammal Simon] [4th November 1957

The general standard of efficiency of panchayat administration should be raised so as to be at least on a par with the general standard of efficiency of municipal administration.

(ii) *District Boards*: The functions of district boards should be vested in Special Officers forthwith. All their functions (with the exception of maintenance of major district roads) should be developed on panchayat unions (constituted at block level) according to a systematic programme during the next three years. Major district roads should be taken over by the Government. The management of District Board High Schools should be vested in panchayat unions, subject to special safeguards including the setting up of statutory managing committees, each consisting of the Chairman of the Panchayat Union Council, the Panchayat Union Commissioner and the Headmaster of the High School concerned.

(iii) *District Development Councils*: Development districts should be delimited. A District Development Council should be formed for each such district, as the permanent machinery for establishing advisory association of elected representatives of the local people with departmental agencies of the State Government.

(iv) *Municipalities*: Existing arrangements are generally satisfactory. Certain improvements are proposed to be made. They are designed to ensure that municipal councils and their Chairmen are vested with powers necessary for securing effective execution of measures, decided upon by councils.

(v) *Madras City Corporation*: The changes contemplated fall under three broad heads, namely—

(*a*) reform of the composition of the Council and the Council Constituencies;

(*b*) reorganization of the Standing Committees and Resettlement of their functions; and

(*c*) reform of the system of appointment to key-posts in the service of the Corporation.

I shall not, at this stage, trouble the House with details. Hon. Members have, no doubt, gone through the various sections in which the details are described. Speaking broadly, it will be seen that the Government take the view that so far as district municipalities are concerned, the present organization is working well and rendering satisfactory service to the people. They have only a few changes to suggest and these are of a minor nature. The changes proposed in respect of the Madras City Corporation are somewhat more important. They reflect the inherent differences between the Madras City and the smaller municipalities. On the one hand, the City of Madras has witnessed an extremely rapid growth of population in recent years; on the other hand, the representative system and the administrative set-up have undergone the least changes over a long series of years.

The most important of the proposals made by Government are those which relate to District Board, Panchayats and Panchayat



4th November 1957] [Srimathi Lourdhammal Simon]

Unions. There are also the proposals which will affect the vast majority of the people of the State. The broad questions which arise on a consideration of these proposals are as follows:—

Firstly, why is it that the District Boards are proposed to be abolished?

Secondly, if District Boards are to be abolished, why is it necessary that any other new organization should take its place? Are not panchayats by themselves sufficient?

Thirdly, in what respects exactly does the Panchayat Union differ constitutionally from District Boards and why are they to be preferred?

A few days ago, speaking on the Bill to amend the District Boards Act, I made it quite clear that the proposal to abolish district boards does not entail a condemnation of the record of work of District Boards in this State. I wish to re-emphasise this fact in order that no room is left for misunderstanding on this question. We propose the abolition of District Boards primarily because we feel satisfied that owing to the growth in the volume of work even in one single instance like elementary schools, the district has become far too large and unwieldy an area for management by a local authority. It is of the essence of local administration that it should reflect the personal interest taken by the representatives of the people—it should not be an impersonal bureaucracy—no less the territorial jurisdiction was substantially reduced, the distinctive characteristics of a representative body cannot be there any longer. This is the main consideration, but it is not the only one. I have already stated that Government's basic approach to the problem has been from the point of view of making village panchayats vital and effective in the fullest sense as visualised by the framers of the Constitution. Government reached the conclusion that this was impossible of achievement unless contiguous village panchayats were brought together in a co-operative association so as to form a union which would be jointly representative of all of them. It was clear, therefore, that there was need for a successor to the district board which would be different not only because it had a smaller area to administer, but also because it would be differently constituted. The new local authority should not be a rival to the panchayats; but it should not be an organization in which each panchayat would be individually represented and which every panchayat would recognise as its own organization.

I have already explained that experience has shown the inherent limitations of a panchayat whose jurisdiction is limited to a village. From this experience, Government are satisfied that if we did not create any new organization at all and yet abolish the district boards, the result will be unsatisfactory. Practically all the functions which are at present being performed by district boards, will have to be performed by the different departments of Government concerned. The idea of developing village panchayats and making it possible for them to render increasingly useful

service to the people in the spirit of Article 40 of the Constitution will have to be given up. That, the Government were not prepared to do.

Given the conclusion that there was need for a new local authority which would have a smaller area to administer and be closer to the village, it still remains a matter of some importance to determine the most suitable basis for delimiting the area for which such a body should be constituted. After careful consideration of possible alternatives, Government came to the conclusion that the Development Block under the National Extension Service Scheme was the most suitable. There were two main reasons underlying this conclusion. Firstly, the N.E.S. scheme has come to stay. Block Development Officers, Village Level Works and different categories of Extension Officers have been recruited and trained and put to work and have acquired experience on the basis of an organization designed for the Block. If the Panchayat Union was constituted at Block level, the services of these ready-made staff can be made available, free of charge, to the new organization in order to render service to it. This cannot be done equally conveniently if the area was either smaller or larger. This is one reason why the Block was accepted as the suitable unit. There was another reason which indicated that any area substantially larger than a Block would be unsuitable. The fact that the Panchayat Union should be so constituted as to include a representative from each panchayat, imposed a definite limitation on the area for which a panchayat union has to be constituted. If this area was to be as large as a taluk, or even larger, the number of panchayat representatives which will have to be brought together will be so large that any workable organization would be impossible.

During the last few weeks Government received a somewhat striking testimony to the correctness of the lines on which they had been thinking. Hon. Members may be aware that the Committee on Plan Projects appointed by the Planning Commission sent round a " Study Team " to visit all States, find out how the National Extension Service Scheme and other development schemes are working and suggest improvements. That Study Team has submitted a report on which it consulted all the State Governments in advance. It has recommended the abolition of District Boards and the Constitution of a new body based on Panchayats at Block level.

Before concluding, I must invite your attention to one other important proposal in the White Paper. This is the proposed constitution of the District Development Councils. We visualise this council as a statutory body charged with the duty of advising the Government and the different departmental agencies of the Government functioning in the district on all matters which fall within the field of the local authorities as well as the various departments of Government rendering service in the economic and cultural fields. It will take the place of the District Planning Board as





well as a large number of other advisory bodies functioning at the district level at present. By its composition, it is designed to be such as to bring together in a common forum periodically the Chairmen of the Panchayat Unions and the Chairmen of the Municipal Councils with the representatives of the people in the Legislature and Parliament as well as the district officers in charge of the different departments of Government. During the next two or three years when Panchayat Unions will be in process of creation, the Members of the District Boards who were in office until 31st October last will, as a transitional arrangement, fill the places, which will be ultimately filled by the Chairmen of the Panchayat Unions. In view of the fact that the districts in the State are so much larger than the average district in India as a whole and as, in consequence, the District Development Councils constituted in this manner will be far too large and unwieldy; Government have proposed that nine districts in the district should be bifurcated, each into two development districts and that the District Development Council should be constituted for each development district as thus delimited. In order further to facilitate the work of these Development Councils, it has been suggested that provision should be made for the setting up of Standing Committees.

With these remarks, I commend the Provisional Conclusions of Government on the Reform of Local Administration including the Madras City Corporation for the consideration of the House.

Mr. SPEAKER : Three and a half hours are available for discussion to-day and three and a half hours are available for discussion to-morrow. I presume the Hon. Minister will take one hour to reply. The Hon. Leader of the House may intervene for half an hour to-morrow. I propose to allot twenty minutes to the Leader of the Opposition and to the Leaders of the other parties who want to take part in the discussion, and ten minutes for each of the other Members. I have already with me a list of nineteen Members. If more Members express their desire to speak, I will have to reduce the time allowed to each Member from ten to five minutes.

Sri K. SATTANATHA KARAYALAR : I suggest that a copy of the statement of the Hon. Minister be circulated to the Members.

Mr. SPEAKER : Whether the Hon. Minister will be able to circulate a copy of her statement before this evening is what one hon. Member wants to know.

The Hon. Srimathi LOURDHAMMAL SIMON : Yes.

Mr. SPEAKER : The Government will try their best to circulate it before this evening.

ஒவ்வொரு கனம் அங்கத்தினரும் பத்து நிமிஷங்களுக்கு மேல் பேசக் கூடாது என்று நான் சொல்கிறேன். சாதாரணமாக ஒரு தீர்மானத்தைப் பிரேரேபனை செய்பவர் 15 முதல் 20 நிமிஷங்கள் வரை பேசலாம். ஆனால் இதில் பிரேரேபனை எதுவும் இல்லாததால், கனம் அங்கத்தினர்

[Mr. Speaker] [4th November 1957

ஸ்ரீ கோதண்டராமன் அவர்கள், முதலில் பேசினாலும், மற்ற கனம் அங்கத்தினர்களுக்குரிய பத்து நிமிஷ நேரம்தான் அவருக்கும் அளிக்கப்படும். ஆகவே, கனம் அங்கத்தினர் ஸ்ரீ கோதண்டராமன் அவர்கள் பத்து நிமிஷங்களுக்கு மேல் பேச வேண்டாமென்று நான் கேட்டுக் கொள்கின்றேன்.

**Sri V. K. KOTHANDARAMAN** : கனம் தலைவர் அவர்களே, ஸ்தல ஸ்தாபன நிர்வாக சீர்திருத்த விஷயமாக நமக்கு முன்னால் வைக்கப்பட்டுள்ள வெள்ளை அறிக்கையை வரவேற்கும் நேரத்தில், அதில் இருக்கும் குறைபாடுகளையும் எடுத்துச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

மகாத்மா காந்திஜி அவர்கள் 40 ஆண்டுகளுக்கு முன்னால், "கிஸான் மஸ்தூர் ராஜ் சாஹியே," என்று சொன்னார். அதாவது விவசாயிகளையும் தொழிலாளர்களையும் கொண்ட ஆட்சி வேண்டும் என்று அவர் 40 ஆண்டுகளுக்கு முன்னால் சொன்னார். இன்றையதினம் கிராமங்களிலே பஞ்சாயத்து ராஜ்யங்கள் வரக்கூடிய அளவுக்கு ஒரு முறை வருகிறதை நான் வரவேற்கிறேன். அந்த அளவுக்கு சந்தர்ப்பம் கொடுக்ககூடிய தன்மையிலே அமைந்திருக்கிறதா என்டதைப் பார்க்கும்போது அதுதான் இல்லை என்பதையும் இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக் காட்ட ஆசைப்படுகிறேன்.

1950-வது ஆண்டுக்கு முன்னால், வோட்டர்களால் தேர்ந்தெடுக்கக்கூடிய மெம்பர்களால் தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். அதற்குப் பிறகு இதுவரை நேரடியாக வோட்டர்களால் தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்து, இப்பொழுது மீண்டும் வோட்டர்களே அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுத்து, அந்த அங்கத்தினர்கள் தங்களுக்குள்ளேயே ஒருவரையோ அல்லது மெம்பர் அல்லாத ஒருவரையோ தலைவராகத் தேர்ந்தெடுக்கலாம் என்ற அளவுக்கு ஒரு நிலைமை இருக்கிறதைப் பார்க்கிறபோது, இது மிகப் பயங்கரமான நிலைமையில் இருக்கிறதென்பதை நாம் நன்றாகச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

ஐந்நூறு பேர்களைக் கொண்ட பஞ்சாயத்துக்களில் 100 பேர்களுக்கு ஒரு மெம்பர் என்றும், அப்படி 500 பேர்களுக்கு மேல் ஜனத்தொகை இருந்தால் 200 பேர்களுக்கு ஒரு மெம்பர் என்றும், அதுவும் 5-க்கு மேல் 10-க்கு உள்ளாக இருக்க வேண்டும் என்றும் சொல்லப்படுகிறது. அப்படிப் பார்க்கும் போது, அநேகமாக 5 முதல் 9 அங்கத்தினர்களைக் கொண்ட பஞ்சாயத்துக்கள்தான் இருக்க முடியும். ஆகவே, இதுபோன்ற நிலைமையிலே கிராமங்களிலே இப்போதே நாம் அதைப் பார்த்து வருகிறோம். நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள் தவறு செய்தாலுங்கூட, அந்தத் தவறுகள் செய்யும் தலைவர்களை நாம் அந்த ஸ்தானத்திலிருந்து அகற்றக்கூடிய அளவுக்கு அதிகாரம் இல்லாததால் பல இடங்களிலே ஊழல் ஏற்பட்டு வருகிறது என்பதைப் பார்க்கின்றோம். இந்தச் சந்தர்ப்பத்தில் மெம்பர்களால் தலைவரைத் தேர்ந்தெடுக்கக்கூடிய ஒரு முறை வரப்போகிறதென்றால், அது மேலும் ஊழலுக்கு இடம் கொடுக்கக்கூடிய அளவுக்குப் போகும். பணம் படைத்தவர்கள்தான், தனக்கு வேண்டிய மெம்பர்கள் போக, மற்றவர்களுக்குப் பணம் கொடுத்து; தலைவராக வரவேண்டும் என்ற அளவுக்கு ஒரு நிலைமையைச் சிருஷ்டிக்கக்கூடிய ஒரு போக்கு இருக்கிறதென்று சொன்னால், இது ரொம்ப அபாயகரமான நிலைமையிலே கொண்டு போய்விடும். மகாத்மா காந்திஜி எதைச் சொன்னாரோ, அதற்கு நேர் விரோதமாக இருக்கக்கூடாது. இதுவரை தொழிலாளர்களும், விவசாயிகளும், பாமர தாழ்த்தப்பட்ட மக்களும் தேர்தலிலே பங்கெடுத்து ஜெயித்து வரக்கூடிய அளவுக்கு இன்றைக்கு ஜனநாயகம் வளர்ந்து வருகின்ற இந்தச் சந்தர்பத்திலே அதை மீண்டும் நாம் அந்த அளவுக்கு விடாமல், இப்படி மறைமுகமாக வசதி படைத்தவர்களுக்கு ஒரு சந்தர்ப்பத்தைக் கொடுக்கக்கூடிய ஒரு நிலைமை ஏற்படுமானால் அது ஜனநாயகத்திற்கு நேர்விரோதமான போக்கு என்பதைத்தான் இந்தச் சந்தர்ப்பத்திலே நான் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.



4th November 1957] [Sri V. K. Kothandaraman]

அது மட்டுமல்ல. பகிரங்கமாக கையை உயர்த்தி, "ஓபன் வோட்டிங்" என்ற முறையிலே தேர்தலை நடத்தக்கூடிய நிலைமையைப் பல கிராமங்களிலே நாம் பார்க்கிறோம். இந்தப் பகிரங்க தேர்தல் முறையினால் கிராமங்களில் இருக்கக்கூடிய தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் உயர்ந்த ஜாதி மக்களுக்கும் பல தகராறுகள் வரக்கூடிய ஒரு நிலைமையிலே இருந்து கொண்டு வருகிறது என்பதையும் நாம் பார்த்திருக்கிறோம். ஆகவே, இதுபோன்ற நிலைமையிலே மேலும் அதை வளரக்கூடிய அளவுக்கு ஒருவேளை நாம் சந்தர்ப்பம் செய்து கொடுக்கப் போகிறோமா என்ற ஒரு பயங்கரமும் அதில் இருக்கிறது என்பதைத்தான் நாம் பார்த்தாக வேண்டிய நிலைமையில் இருககிறோம்.

நாம் விகிதாசார அடிப்படையிலே மெம்பர்களுக்குச் சந்தர்ப்பம் கொடுக்கிறோம், தேர்தலில் நின்று வெற்றி பெறுவதற்கு, என்று சொன்னால் மட்டும் போதாது. அந்த விகிதாசாரங்கள் கூட இன்றைக்கு மைனாரிடிகளா என்றால், எந்த மைனாரிடி, எந்த ஜாதியைச் சேர்ந்தவர்கள், அல்லது கட்சியைச் சேர்ந்தவர்களா என்பதைப் பற்றியும் மிகத் தெளிவாகக் கொண்டு வந்தாக வேண்டும். அப்பொழுதுதான் எல்லோருமே புரிந்து கொள்ளக்கூடிய அளவுக்கு சந்தர்ப்பத்தை ஏற்படுத்தக்கூடிய அளவுக்கு உதவி செய்வது போலாகும்.

நம் தேர்தல் முறை இப்பொழுதிருக்கக்கூடிய ஒரு முறையிலே இருக்குமானாலும் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், அதாவது கிராம அபிவிருத்தித் திட்டங்களை நாம் நிறைவேற்றுவதற்கு, அது அந்த அளவுக்கு உதவிகரமாக இருக்குமா என்பதைப்பற்றித் தான் சந்தேகப்படவேண்டிய நிலைமையில் இருக்கிறோம். அதிலும் குறிப்பாக, இப்போதே தலைவர்கள் பல இடங்களில் பல தவறான பாதைகளிலே போகக்கூடிய நிலைமையில் இருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில் அவர்கள் பேரில் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. அதையும் பஞ்சாயத்து போர்டுகளிலே நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்திருந்தாலும், அல்லது அவர்கள் பேரிலேயே பணத்தைக் கையாண்டிருக்கிறார்கள், என்று அவர்பேரில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற அளவுக்கு சர்க்காருக்கு எழுதியிருந்த போதிலும் நடவடிக்கை எடுக்காத அளவுக்கு இன்றைக்கு நிலைமை இருந்து வருகிறது என்பதையும் பார்க்கிறோம்.

உதாரணமாக, விளாத்திக்குளம் பஞ்சாயத்து கலைக்கப்பட்டு ஒரு வருஷத்திற்குமேல் இருக்கலாம் என்று நான் நினைக்கிறேன். அங்கே பஞ்சாயத்து போர்டு தலைவர் ரூபாய் 1,500 வரை கையாண்டு விட்டார் என்ற காரணத்தைக் காட்டி, அந்தப் பஞ்சாயத்து போர்டிலே இருக்கும் மெம்பர்களும், அங்கே இருக்கும் மக்களும் எழுதியிருக்கிறார்கள் என்று சொன்னால், இது வரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அதனால் அங்கே இருக்கக்கூடிய நான்கு அங்கத்தினர்கள் ராஜினாமா செய்து வெளியேறியிருக்கிறார்கள். மேற்கொண்டு இரண்டு அங்கத்தினர்கள்தான் எஞ்சியிருக்கக்கூடியவர். மக்களுடைய ஆதரவு இல்லாவிட்டால் இன்றைக்கு நாம் எந்தத் திட்டத்தை வெற்றிகரமாக நிறை வேற்ற வேண்டுமென்று நினைக்கிறோமோ அதைப் பரிபூரணமாக நிறைவேற்ற முடியாத அளவுக்கு நிலைமை ஏற்படும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்வதோடு, இதுவரை எப்படி வோட்டர்களால் தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுவந்தார்களோ அதே போன்று நிலைமை நீடித்தால்தான் தலைவர்கள் நியாயமாக, ஜனநாயக அடிப்படையிலே தேர்ந்தெடுக்கபட்டவர்களாவார்கள், மக்களுக்கு உரிமையைக் கொடுத்தது போலாகும் என்று நான் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

ஆகவே இந்த அடிப்படையில் இதுவரையில் எந்த முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்ததோ அதே போன்று தேர்ந்தெடுக்கப்பட்டாக வேண்டும். கையை தூக்கி வோட்டுப் போடக்கூடிய முறையிருந்தால் ஒவ்வொரு கிராமத்திலும் வசதி படைத்தவர்களுக்கு வோட்டு போடாவிட்டால் அவர்கள் ஒரு பெரிய ஆத்திரத்தை உண்டாக்கி விடக்கூடிய நிலைமை ஏற்படுகிறது. இவ்விதம் அவர்களுக்கு எதிராக தாழ்த்தப்பட்டவர்களோ அல்லது ஏழை மக்களோ வோட்டு போட்டார்கள் என்றால் அவர்கள் விவசாயம் செய்பவர்

களாக இருந்தால் அவர்கள் நிலத்திலிருந்து வெளியேற்றப் படுவார்கள், அல்லது பலவிதமாக பொய் கம்ப்ளெய்ன்ட் எழுதி அவர்களை தொந்தரவு படுத்தக்கூடிய நிலைமை ஏற்படுகிறது. ஆகவே மறைமுக வோட்டுகளின் மூலமாக தெரிந்தெடுக்கக்கூடிய முறையை கையாள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அதே போன்று தலைவர்கள் தவறு செய்கிறார்கள் என்றால் அவர்களை அப்புறப்படுத்துவதற்கு அவர்களுக்கு அதிகாரம் இருக்கவேண்டும், அல்லது தலைமை ஸ்தானத்திலிருந்து விலக்குவதற்கோ அதிகாரம் இருக்கவேண்டும். அதற்கு அங்குள்ள மக்களில் 60 சதமானம் பேர்கள் கையெழுத்து போட்டு சர்க்காருக்கு எழுதினார்கள் என்றால் அதை பரிசீலனை செய்து மறுபடியும் வேறு ஒரு தலைவரை தேர்ந்தெடுக்க ஒரு சட்டத்தை கொண்டுவரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதுதான் நியாயமாகவும் ஜனநாயகமாகவும் இருக்க முடியும் என்பதை இந்த சந்தர்ப்பத்தில் கூற ஆசைப்படுகிறேன். இது தவிர முதல் தர (First Class) பஞ்சாயத்து அல்லது மேஜர் பஞ்சாயத்து இவைகளுக்கு 15 அங்கத்தினர்களுக்கு உட்பட்டது என்று இருப்பது சரியாக இருக்க முடியாது. ஏன் இதை குறிப்பிடுகிறேன் என்றால் முதல் தர பஞ்சாயத்துக்கள், முனிஸிபாலிட்டிகள், இவைகள் எல்லாம் பெரிய நகரங்களாக இருக்கின்ற காரணத்தால் இவைகள் 15 அங்கத்தினர்களுக்கு உட்பட்டு இருக்க முடியாது. ஆகவே மேஜர் பஞ்சாதயத்துகளுக்கும் முதல்தர ப்ஞ்சாயத்துகளுக்குப் 15 அங்கத்தினர்களுக்கு மேற்பட்ட அங்கத்தினர்களை தேர்ந்தெடுக்கப்படக்கூடிய ஒரு முறையை கொண்டுவந்தாக வேண்டும். அதுதான் நியாயமாக இருக்கும். அதே போன்றுதான் நிதி நிலைமையையும் அவர்கள் கையில் ஒப்படைத்து விடவேண்டும். குறிப்பாக அவர்களுக்கு எந்தெந்த முறையில் பண வசதி செய்கிறோம் எந்தெந்த முறையில் ஒதுக்கி இருக்கிறோம் என்பதை திட்டவட்டமாக சொல்லவேண்டும். ஆனால் சர்க்கார் இன்றைக்கு விரும்பக்கூடிய எந்த பஞ்சாயத்துக்கும் தேவைப்படுகிறபணத்தை அதற்கு ஒதுக்கலாம் என்று சொல்லுகிறார்கள். இவ்விதம் இல்லாமல் ஒவ்வொரு பஞ்சாயத்துக்கும் இவ்வளவு என்று ஒதுக்க வேண்டும். அங்கே இருக்கக்கூடிய பணத்தில் எவ்வளவு செலவு செய்யப்பட வேண்டும் என்று ஒரு திட்டம் இருக்கவேண்டும். இது தவிர ஒவ்வொரு பஞ்சாயத்துக்கும் தக்க அதிகாரங்கள் கொடுக்கக்கூடிய அளவில் திருத்தம் கொண்டு வரவேண்டும். ரைஸ்மில், சினிமா, டீ ஷாப் இவைகளுக்கு லைஸன்ஸ் கொடுக்கக்கூடிய முறைகளுக்குள்ள அதிகாரம் பஞ்சாயத்துக்கு இருந்தால் நல்லது. வார சந்தைகள் நடக்கின்ற இடத்தில் வார சந்தைகளை அந்த பஞ்சாயத்துக்கு விட்டுவிட வேண்டும். அதற்கான வரிவசூல் செய்வதையும் அந்தந்த பஞ்சாயத்துக்கு விட்டுவிடுவதுதான் நல்லது. இவ்விதம் அவர்களுக்கும் ஓரளவு அதிகாரம் கொடுப்பதின் மூலமாகத்தான் அவர்கள் ஊக்கமும் கவனமும் செலுத்தக்கூடிய அளவிற்கு முன்னுக்கு வருவார்கள் என்பதைதான் நாம் பார்க்கவேண்டும். இந்த மாதிரியான அதிகாரங்களை அவர்களுக்கு கொடுக்கவேண்டும். இது மட்டுமல்ல. 100 ரூபாய்க்கு குறைந்த கடன் வசதி செய்து கொடுக்கக்கூடிய நிலைமை யிருக்கிறது. அதை யெல்லாம் கூட பஞ்சாயத்துக்களுக்கு விட்டுவிடுவது நல்லது. அப்போதுதான் எரு போன்ற வேறு எருக்கள் வாங்குவதற்கும் இந்த மாதிரியான கடன் கொடுக்கக்கூடிய அதிகாரத்தை பஞ்சாயத்துக்கு விட்டுக் கொடுப்பதுதான் நல்லது என்பதை சொல்லிக் கொள்கிறேன். அதே நேரத்தில் இந்த பஞ்சாயத்துகள் ஆர். டி. ஓக்களின் அதிகாரத்தின் கீழ் இருப்பது அவ்வளவு உசிதமில்லை என்றுதான் நான் நினைக்கிறேன். இப்போது இருக்கக்கூடிய அஸிஸ்டண்ட் டெப்யூடி ஆபீஸர்களை அதிகப்படுத்தலாம். இவ்விதம் அவர்களின் அதிகாரத்திற்குள் இந்த பஞ்சாயத்து இருக்க வேண்டும்.

The bell was rung and the hon. Member resumed his seat.

10-15 a.m. **SRI K. R. VISWANATHAN:** தலைவர் அவர்களே, இந்த ஊர் உள் ஆட்சி முறை சீரமைப்பு பற்றிய வெள்ளையறிக்கையின்மேல் சில வார்த்தைகள், சில கருத்துக்கள் சொல்ல ஆசைப்படுகிறேன். முக்கியமாக ஊராண்மை கழக சீரமைப்பு பற்றி பேச விரும்புகிறேன். ஊராட்சி





கழகங்களை மாநிலத்தில் எல்லா கிராமங்களிலும் மூன்று ஆண்டுகளுக்குள் நிறுவப்படவேண்டுமென்று சர்க்கார் திட்டமிட்டிருக்கிறது. இதை நானும் வரவேற்கிறேன். ஏனென்றால் முக்கியமாக சமுதாய முன்னேற்ற பகுதிகளில் இதற்கு முன்னடியாகவே இம்மாதிரி முறை முன்னமேயே நிறுவ வேண்டும் என்று கொண்டுவந்த திட்டத்தை அரசாங்கத்தார் நிறைவேற்றாமல் இருக்கின்றார்கள். அதனால் சமுதாய நல அபிவிருத்தி திட்டத்தின் கீழ் செய்யப்படவேண்டிய வேலைகள் துரிதமாக செய்யப்படவில்லை என்று சொல்லிக்கொள்கிறேன். அங்கு இருக்கின்ற திட்ட அதிகாரிகள் பஞ்சாயத்து போர்டு அலுவல்களில் கலந்துகொள்ளாத காரணத்தால் அங்கு முன்னேற்ற வேலைகள் ஒன்றும் இல்லாத முறையில் இப்போது இருந்துகொண்டிருக்கிறது. ஆகவே அந்தப் பகுதிகளில் பஞ்சாயத்துக் கழகங்களை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக தலைவர் தேர்தல் முறையைப்பற்றி நண்பர் கோதண்டராமன் அவர்கள் சொன்னார்கள். இப்போது தலைவரை தேர்ந்தெடுப்பது மெம்பர்கள் மூலம் தேர்ந்தெடுக்கவேண்டுமென்று திருத்தத்தை கொண்டுவருகிறார்கள். அது அவசியமில்லை என்றுதான் நானும் கருதுகிறேன். இன்றைக்கு பொதுமக்களுக்கு ஏதாவது தவறு இழைத்தால் அவர்களை நீக்குவதற்கு அதிகாரம் இல்லை. இப்போது பொதுமக்கள் மூலம் இல்லாமல் மெம்பர்கள் மூலம் அவர்களை நீக்குவதற்கு இந்த திருத்தம் கொண்டுவரப்படுகிறது என்று நம்புகிறேன். இப்போது பெருவாரியாக ஜனநாயக குடியாட்சியானது நடைமுறையில் பரீட்சார்த்தமாக நடந்துகொண்டிருக்கிறது. அந்த ஜனநாயகத்தில் தேர்தல் நடந்து முடிந்ததும் அதன் பின்னால் மக்களுக்கு எந்தவிதமான அதிகாரமும் இல்லை என்கின்ற முறைதான் இப்போது இருந்துகொண்டிருக்கிறது. தேர்தல் நடந்த பிறகு அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு பின்னால்தான் தங்களுடைய உரிமையை எடுத்துச்சொல்ல மக்களுக்கு உரிமையிருக்கிறது, அதற்கிடையில் ஒன்றுமேயில்லை என்கிற குற்றச்சாட்டு இப்போது இருந்துகொண்டிருக்கிறது. இந்த மாதிரி பொது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் ஏதாவது தவறுகள் செய்தால், அல்லது அவர்களிடம் ஏதாவது குற்றம் கூறப்படுமானால் அவர்களை திருப்பி அழைப்பதற்கு அல்லது நீக்குவதற்கு இந்த பொதுமக்களுக்கு அதிகாரம் இருக்கவேண்டும், அல்லது சர்க்காருக்கு இவ்விதம் குற்றம் இழைத்தவரை நீக்கி உடனடியாக தேர்தல் நடத்தி வேறு ஒருவரை தேர்ந்தெடுக்க சர்க்கார் நடவடிக்கை எடுக்க அதிகாரம் கைக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக ஊராண்மை கழகத்தின் காலம் மூன்று ஆண்டு என்றிருப்பதை ஐந்து ஆண்டு காலம் என்று திருத்துவதை நான் வரவேற்கிறேன். அப்படியிருந்தால்தான் அந்தந்த ஊராண்மை கழக உறுப்பினர்கள் அந்தந்த பகுதிக்கு என்னென்ன நன்மைகள் செய்யவேண்டும் என்று திட்டமிட்டு தமது காலத்திலேயே அதை நிறைவேற்றிக் வைக்கக்கூடிய அவகாசம் கிடைக்கமுடியும். இவ்விதம் இல்லையானால் யார் திட்டமிட்டார்கள், யார் நிறைவேற்றி வைத்தார்கள் என்கின்ற உண்மையை மக்கள் தெரிந்துகொள்ள முடியாத நிலைமை இருக்கிறது.

அடுத்தபடியாக ஆனால் நிர்வாக நிலைமையில் ஐந்து ஆண்டுகள் நீடிக்க தற்கால நிர்வாக நிலைமை எப்படியிருக்கிறது என்று பார்ப்போமானால் பஞ்சாயத்துகளுக்கு உதவி செய்வதற்கு என்று மூன்று முதல் ஏழு பஞ்சாயத்துகளுக்கு சேர்த்து ஒரு குமாஸ்தாவை நியமிக்கிறார்கள். அங்கு ஒரு பஞ்சாயத்திற்கும் இன்னொரு பஞ்சாயத்திற்கும் 10 மைல் தூரம் கூட இருக்கும். இவ்விதம் இருப்பதால் அந்த ஒரு குமாஸ்தா அந்த ஏழு பஞ்சாயத்துகளிலுள்ள ரிக்கார்டுகளையோ நிர்வாகத்தையோ வரி விதிப்பதையோ சரியாக கவனிக்க முடியாத நிலைமை ஏற்படுகிறது. இம்மாதிரி எல்லா வேலைகளையும் ஒரு குமாஸ்தாவால் செய்யவே முடியாது. ஒரு கிராமத்திற்கு வந்துவிட்டு இன்னொரு தடவை அந்த கிராமத்திற்கு வர வேண்டுமென்றால் ஒரு வாரத்திற்கு மேல் ஆகிவிடும். இதனால் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்ட வேலைகளை அவரால் சமாளிக்க முடியாத நிலைமை இருக்கிறது. ஆகையினால் ஒரு குமாஸ்தாவிற்கு இரண்டு கிராமங்களுக்கு

[Sri K. R. Viswanathan] [4th November 1957

மேல் பொறுப்பு கொடுப்பது சரியல்ல. அல்லது குமாஸ்தாவை அமைத்துக்கொள்ளும் இந்த அதிகாரத்தையும் அந்த பஞ்சாயத்தினிடம் ஒப்படைத்துவிடுதல் வேண்டும்.

அதற்கு அடுத்தபடியாக இப்போது உதவி பஞ்சாயத் அதிகாரிகளுடைய பொறுப்பிலே, 50 முதல் 70 வரை பஞ்சாயத்துகள் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன. அவர்கள், ஒவ்வொரு பஞ்சாயத்து கழகங்களுக்கும் சென்று கணக்குகளை சரிபார்க்கவும், ரிகார்டுகளை சரியாக வைத்து இருக்கிறார்களா என்று பார்க்கவும், சரியான நடவடிக்கைகள் எடுத்துவருகிறார்களா என்று பார்க்கவும், புது பஞ்சாயத்துக்களை அமைக்கவும் வேண்டியிருக்கிறது. இவ்வளவு வேலைகளையும் அவர்கள் செய்யவேண்டியிருப்பதால் அவற்றில் தங்கள் முழு கவனத்தையும் செலுத்தமுடியாத ஒரு பெரும் குறை இருந்துகொண்டிருக்கிறது. அந்தந்த பஞ்சாயத்துகளிலே இருக்கக்கூடிய கணக்குகளை சரியாக பார்க்கமுடிவதில்லை. இதனால் பணம் கையாடல் போன்ற பெரும் குறைகள் அங்கு ஏற்படுவதற்கு காரணம் இருக்கிறது. ஆதலால் ஒவ்வொரு உதவி பஞ்சாயத் ஆபீசரின்கீழ் அதிகபட்சம் 25 பஞ்சாயத்துகளே இருக்கவேண்டும்.

அடுத்தபடியாக மாவட்ட பஞ்சாயத்து அதிகாரி ஒருவர் இருக்கிறார். அவர் அந்த மாவட்டத்தில் உள்ள பஞ்சாயத்துகளை மேற்பார்வையிட்டு ஆங்காங்கு வரும் புகார்களை கவனிக்கவேண்டும். புதிதாக பஞ்சாயத்துகளை அமைக்கும் இத்தருணத்திலே இவருடைய வேலை அதிகமாகி அந்த மாவட்டம் முழுவதும் சுற்றிவரவேண்டிய நிலை ஏற்படுகிறது. ஆனால் இவர் ஒரு கெஜட் பதிவில்லாத உத்தியோகஸ்தராகத்தான் இருக்கிறார். நிலைமை இப்படியிருக்க, பஞ்சாயத்துகளை எவ்விதம் நல்ல முறையில் நடத்தமுடியும் என்று நான் கேட்கிறேன். இந்த அதிகாரி மாவட்டம் பூராவும் சுற்றிப்பார்த்து நம்முடைய குடியாட்சியிலே இந்த பஞ்சாயத்துக் கழகங்களின் நிர்வாகம் சரியாக நடைபெறவேண்டுமானால் அவருக்கு தகுந்த வாகன வசதி செய்துகொடுக்கவேண்டும்.

அடுத்தபடியாக ஜில்லா போர்டுகளை நீக்கிவிட்டு அவைகளுக்குப் பதிலாக பஞ்சாயத்து யூனியன்களை அமைக்கவேண்டும் என்று சர்க்கார் யோசனை கூறுகிறார்கள். ஜில்லா போர்டுகள் வேண்டியதில்லை என்று நானும் கூறுகிறேன். ஜில்லா போர்டுகள், ஆரம்பப்பள்ளி மேற்பார்வை, ரோடு வசதி முதலியவைகளைக்கூட தற்போது செய்யமுடியவில்லை. இதற்குக் காரணம் அவர்களுடைய எல்லை மிகவும் அதிகமாயிருப்பதே.

இப்போதிருக்கும் சமுதாயநல திட்டப்பகுதியிலேயே இந்த பஞ்சாயத் யூனியன்களை ஏற்படுத்த திட்டமிடப்பட்டு, அங்குள்ள மக்களின் பிரதிநிதிகள் அப்பஞ்சாயத்து யூனியன்களை நிர்வகிப்பதை நான் வரவேற்கிறேன். அங்குள்ள சமுதாய நல அதிகாரிகளும் மக்கள் பிரதிநிதிகளுடன் ஒத்துழைத்து பஞ்சாயத்து யூனியன் நல்ல முறையிலே நடைபெறுவதற்கு வேண்டிய சூழ்நிலை ஏற்படுவதை நான் வரவேற்கிறேன்.

இந்த பஞ்சாயத்து யூனியன் நிர்வாகம் சம்மந்தமான சில கருத்துக்களை சொல்ல விரும்புகிறேன். இப்பொழுது ஏற்படும் மாறுதலால் பஞ்சாயத் நிர்வாகத்தில் திறமைக்குறைவு ஏற்பட்டால் அதனால் கால தாமதமும் ஏற்படும். இது ஏற்படாமல் பார்த்துக்கொள்ளவேண்டும். பஞ்சாயத்துக்களுக்கு, சர்க்கார் கொடுக்கக்கூடிய Special Grants, Block Grants போன்ற எல்லா மானியங்களையும் பஞ்சாயத்து யூனியன் மூலம் கொடுக்கவேண்டும் என்ற நியதியை சர்க்கார் சொல்லிக்கொண்டு வருகிறார்கள். இந்த யோசனையை ஏற்க நான் மறுக்கிறேன். இந்த மானியங்களை பஞ்சாயத்துக்களுக்கு நேரடியாகக் கொடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

* Sri A. NESAMONY : Mr. Speaker, Sir, this white paper that has been presented to us for discussion is to implement the directive of the State Government contained in Article 40 of the Constitution I believe that in the preparation of this white paper, there



4th November 1957] [Sri A. Nesamony]

seems to be a lot of misunderstanding over the significance of the words panchayat and village. The Government probably think that by the retention of the two words, ' villages and panchayats' they are fulfilling the avowed policy as enunicated in that Article, forgetting at the same time that they have to be units of self-Government. The emphasis there is on ' units of self-government '. But what is now attempted is to perpetuate the system as it is, and impose over it two other tiers of administration, namely, a panchayat as it was with a population of 500 odd, over that another administration called the panchayat circle, and over that another administration called the panchayat union. This has now resulted in not imparting the spirit of autonomy and self-government in local units but has subjected it to several grades of officialdom so that this small element of local self-government that was in the area has now been extinguished. On page 37 of the white paper, it is stated in paragraph 10 as follows :—

" More than six years have elapsed after the inception of the Madras Village Panchayats Act, 1950, and the record of achievements and performances of panchayats during this period has been disappointing. Though the Act contains impressive lists of functions—mandatory as well as discretionary—fit to make panchayats play the role of ' spearheads of change and reconstruction' in rural parts, very few of them have actually performed such functions."

In the next paragraph it is stated as follows :—

' A scheme was drawn up for the formation of groups of small panchayats to enable them to perform functions which they were unable to perform satisfactorily in their individual capacity '.

So by a misuse of the word Co-operation or misapplication of the word Co-operation by the formation of circles and unions, a new life is sought to be put into the inactive and inefficient panchayats. To me it appears that this present panchayat system must go. There is no magic about the use of the word 'village' or 'panchayat', for even in the Act, as it is, a place is declared to be a village, and a panchayat for it is constituted under the Act. So the village as declared in the panchayat Act is not co-terminous with the existing village nor is the panchayat village co-terminous with a group of villages, but a body constituted under the Act. If the definition of the village is given up, and if only the definition of panchayat remains, then it will be a body constituted under this Act. In this connection I wish to bring to the notice of hon. Members the definition that obtains in the Travancore-Cochin Act. We have got no Village Panchayats Act but only a Panchayat Act. The word 'village' is significantly omitted, because the village there is co-terminous with a revenue village.

So Panchayat area is the area in which the Panchayat is situated and the Panchayat constituted under the Act. It is by a statutory enactment that we create a village, that we create a Panchayat, so

[Sri A. Nesamony] [4th November 1957

that if this definition of village is taken away and instead of the word 'village' we substitute the word 'Panchayat' as the area to be declared by the statute, then it becomes a larger area.

Now, Sir, it is contemplated that there will be three tiers of administration. From the little experience that I have of the working of the panchayats, I can say, it is time that we scrap panchayats as they are at the present moment, these small inefficient units and do away with the two other tiers also, namely, the circle panchayats and the union panchayats and make the panchayat co-terminous with the National Extension Service block area because the functions of a National Extension Service block development committee are also the same as the panchayats as they are constituted, such as, health services, sanitation, supply of drinking water, provisions of roads, irrigation facilities and such other amenities. We have given the panchayats the additional functions of taxation and finance. These could very well be vested with the block development committees which shall be constituted as a panchayat. That and that alone would be a working proposition and act as the unit of local self-government instead of a panchayat consisting of only 500 people.

In this connection I wish to point out the ineffectiveness of the panchayats in various places. Absolutely young people with little or no experience of administration and probably no knowledge of law and rules are made panchayat officers. They are at the beck and call of the District Panchayat officers. These District Panchayat officers seem to think they are very big officers. Naturally these local Panchayat officers think that their only business is to garland the District Panchayat Officers whenever they make up their minds to present themselves before the Panchayat officers. These local Panchayat officers owe more allegience to their superior officers than to the Panchayat council. They do not care for the development of the local areas. They care only to maintain their positions as officers. So the relationship between the local panchayat officers and the panchayat is estranged. There are many panchayats, many municipalities in my district whose budgets have not yet been sanctioned.

Sir, if any autonomy is to be granted, if they are to function as units of local self-government, it must be done at the block level. It must be autonomous. It must not be subject to official oppression. It must be an institution parallel to the Municipalities, with its own budget which should be subject only to scrutiny and not sanction by any superior body and that too should stop at the district level. As it is in this vast ocean of official set up nobody knows what their functions are and how urgent it is that certain matters are to be attended to. Then Sir, two important subjects must not be entrusted to the Panchayats. One is education and the other is law and order. It shall not be the policy of the Government that education and law and order should be entrusted to these panchayats.

Thank you, Sir.



4th November 1957]

**Sri K. R. NALLASIVAM:** கனம் சபாநாயகர் அவர்களே, இன்றையதினம் சபையின் முன்னால் வைக்கப்பட்டிருக்கும் ஸ்தல-ஸ்தாபன நிர்வாக அறிக்கை சம்பந்தமாக சோஷலிஸ்ட் கட்சியின் கருத்துக்களை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

இதுவரையில் கிராமங்களில் பஞ்சாயத்து போர்டுகள் இருந்தன. அந்த போர்டுகளுக்கு எந்த அளவிற்கு அதிகாரம் கொடுக்கப்பட்டதாகச் சொல்லப்பட்டதோ அந்த அளவிற்கு வருமானம் கிடையாது. காந்திஜி இருந்த வரையில் கிராம ராஜ்யத்தை வற்புறுத்திக்கொண்டிருந்தார்கள். அதற்குப்பிறகு காங்கிரஸ் ராஜ்யத்தில், கிராம ராஜ்யம் என்று சொன்னால், ஏதோ, இவர்களுடைய நிர்வாக நடவடிக்கைகளுக்காக கிராம ராஜ்யம் என்ற பதத்தை உபயோகித்துக் கொண்டிருக்கிறார்கள் என்று சொல்ல விரும்புகிறேன். உண்மையிலேயே கிராம ராஜ்யம் வேண்டுமென்று சொன்னால், கிராமப் பஞ்சாயத்துகளுக்கு அதிகாரங்களை நியாயமான முறையில் பிரித்துக்கொடுக்கவேண்டும். இன்றைக்கு அப்படி இல்லை. ஏதோ, நில வருமானத்தில் ஒரு பகுதியும் பதிவு கட்டண வகையில் ஒரு பகுதியும் கிராமப் பஞ்சாயத்துக்களுக்கு இருக்கின்றன. அதை கூட, சர்க்கார் நில வரியிலிருந்து கொடுக்கக்கூடியது ரூபாய்க்கு இரண்டு அணுக்கள் என்றால், அதையும் சரியாகக் கொடுப்பதில்லை: ஏதோ, எழுத்தில்தான் கொடுப்பதாகச் சொல்லிக்கொண்டிருக்கிறார்களே தவிர, அதுவும் சில பஞ்சாயத்துக்களில் கொடுக்கப்படுவதில்லை. பஞ்சாயத்துக்கள் வரிபோடும் ஸ்தாபனங்களாகத்தான் இருந்தனவே தவிர, வருமானம் பெறுபவைகளாக இருக்கவில்லை. இன்றைக்கு சர்க்கார் தெளிவான நடவடிக்கையை எடுக்கவில்லை. கிராமப் பஞ்சாயத்து முறையில் இன்னும் அதிகமான அதிகாரங்கள் கொடுக்கப்படவேண்டும். கிராமப் பஞ்சாயத்துக்களில் உண்மையில் நம்பிக்கை உண்டானால் அவைகளுக்கு சர்க்கார் அதிக அதிகாரங்களைக் கொடுக்க வேண்டும். ராஜ்ய சர்க்காருடைய வருமானத்திலிருந்தும், மத்திய சர்க்காருடைய வருமானத்திலிருந்தும் அவைகளுக்கு அதிகமான பங்கைக் கொடுக்கவேண்டும். மத்திய சர்க்காரின் வருமானம் வருடத்திற்கு ரூ. 400 கோடி. அதில் ரூ. 200 கோடியை அவர்கள் ராணுவத்திற்குச் செலவழிக்கிறார்கள். மீதியுள்ளதில் கொஞ்சத்தை ராஜ்ய சர்க்கார் பிச்சை கேட்பது போலக் கேட்டு வாங்குகிறது. கடைசியில் கிராமப் பஞ்சாயத்துக்களுக்கு போதிய அளவு வருமானம் கிடைப்பதே இல்லை. ராஜ்ய சர்க்காரை எடுத்துக்கொண்டாலும், இவர்கள் கிராமப் பஞ்சாயத்துக்களை எந்த அளவு மதிக்கிறார்கள் என்றால், உண்மையிலேயே அவைகளிடம் இப்போதிருக்கும் அதிகாரத்தையும் சர்க்கார் எடுத்துக்கொள்ளும் முறையில்தான் வெள்ளை அறிக்கை இருக்கிறது. எந்த நோக்கத்துடன் பாடுபடுகிறோமோ அந்த நோக்கத்தை இது பூர்த்தி செய்வதாக இல்லை.

ஜனநாயகம் நன்றாகச் செயல்படுவதற்கு நான்கு பிரிவுகள் வேண்டும். கிராமப் பஞ்சாயத்துக்கள், ஜில்லாக் கவுன்சில்கள், ராஜ்ய சர்க்கார், மத்திய சர்க்கார் என்ற நான்கு பிரிவுகள் வேண்டும். கிராமப் பஞ்சாயத்துக்களுக்கு அதிக அதிகாரம் கொடுக்கப்படவேண்டும். உண்மையிலேயே, அந்த அந்தப் பகுதி சட்டசபை உறுப்பினர்களையும் மற்றப் பிரதிநிதிகளையும் கொண்டு ஜில்லாக் கவுன்சில்கள் அமைக்கப்படவேண்டும். முதலில், கிராமப் பஞ்சாயத்துக்கள், அவைகளுக்கு அடுத்தபடியாக ஜில்லாக் கவுன்சில்கள், அவைகளுச்கு அடுத்தபடியாக ராஜ்ய சர்க்கார்கள், அவைகளுக்கு அடுத்தபடியாக மத்திய சர்க்கார் என்று தெளிவாக்கப்படவேண்டும். முன்பு ஜில்லா போர்டுகளின் அதிகாரத்தை சர்க்கார் பரித்துக்கொண்டு ஜில்லா போர்டுகளைக் கெடுத்தது போல, கிராமப் பஞ்சாயத்துக்களின் அதிகாரங்களை பஞ்சாயத்து யூனியன் கையில் கொடுத்து அதன் கையை பலஹீனப்படுத்தக்கூடிய ஏற்பாடுதான் இந்த வெள்ளை அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது என்று நான் சொல்லுவேன். சர்க்கார் தெளிவான திட்டத்தை வகுத்து கிராமப் பஞ்சாயத்துக்களுக்கு அதிக அதிகாரம் கொடுக்க வேண்டும். அப்படிச் செய்யாவிட்டால், கிராம ராஜ்யம் என்று சொல்வது வெறும் கதையாகத்தான் இருக்கும்.

இப்போது பஞ்சாயத்து போர்டு தலைவர்களின் தேர்தல்கள் கிராமங்களில் நேரடியாக நடத்தப்படுகிறது. அதுதான் சரி. எல்லா மக்களும் நேரடியாகத் தேர்ந்தெடுக்கும் முறையானது, சிறப்பாக வேலைசெய்யும். எந்த வாலிபரும் பஞ்சாயத்துபோர்டு தலைவராக வருவதற்கு ஏதுவான சூழ்நிலையை உண்டுபண்ணுகிறது. பஞ்சாயத்துபோர்டு அங்கத்தினர்களால் தலைவர் தேர்ந்தெடுக்கும் முறையானது பலவித ஊழல்களுக்கு இடமளிக்கும் என்பது நிச்சயம். என்ன காரணத்தினாலோ இப்போதைய முறை வெள்ளை அறிக்கையில் மாற்றப்பட்டிருக்கிறது. அதற்கடுத்தபடியாக, தேர்தல் முறையைப்பற்றிக் கூற விரும்புகிறேன். ஹரிஜனங்களைப்பற்றி சர்க்கார் நீளநெடுகப் பேசுகிறது. நான் ஒன்றை அழுத்தந்திருத்தமாகக் கூறுவேன். கிராமங்களில் ரகசியமான தேர்தல் முறை இருந்தால்தான் ஹரிஜனங்களுடைய நலன்கள் பாதுகாக்கப்படும். பகிரங்கமுறையில் கிராமங்களிலுள்ள ஹரிஜனங்கள் படும் கஷ்டத்தை நேரில் பார்த்தவர்களுக்குத்தான் அதில் உள்ள கஷ்டம் தெரியும். பகிரங்க முறை இருந்தால், யாருக்கு வோட்டுப்போடுவது என்று தெரியாமல் ஹரிஜனங்கள் கஷ்டப்படுவார்கள். ஒரு பக்கத்து அபேட்சகருக்கும் எதிர் தரப்பு அபேட்சகருக்கும், ஆக இரண்டு பேருக்கும், ஹரிஜனங்கள் கையைத் தூக்குவார்கள். அவர்களுக்கு வோட்டுரிமை இருந்தாலும், பகிரங்க முறையில், அதை அவர்கள் பயன்படுத்திக்கொள்ளக்கூடிய நிலைமை இல்லை. காரணம், கிராமங்களில் அப்படிப்பட்ட நிலைமை நிலவுகிறது. ஹரிஜனங்களைக் காப்பாற்றவும், ஜனநாயகத்தைச் செயல்படுத்தவும் ரகசியத் தேர்தல் முறை வேண்டும். தேர்தலில் பஞ்சாயத்தில் பல சங்கடங்கள் இருக்கின்றன. அவைகளுக்கெல்லாம் முக்கியமான காரணம் பகிரங்கத்தேர்தல் முறைதான். கட்சி பிரதி கட்சிகளின் பூசல்களை உண்டாக்குவதற்கு முக்கியமான காரணம் பகிரங்கத் தேர்தல் முறைதான். நிச்சயமாக பகிரங்கத் தேர்தல் முறையை ஒழித்துவிட்டு ரகசியத் தேர்தல் முறையைக் கொண்டுவர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இதற்கு அடுத்தபடியாக, பஞ்சாயத்துக்களின் காலத்தை மூன்று வருஷங்களுக்கு பதிலாக ஐந்து வருஷங்களாக்குவதாகக் குறிப்பிடப்படுகிறது. ஐந்து வருஷங்களுக்கு பதில் மூன்று வருஷங்களாயிருந்தால் ஒன்றும் கெட்டுவிடாது. அதற்கு பதிலாக மூன்று வருஷங்களென்றிருந்தால் அதிகப்படியான பேர் நிர்வாகத்திலே பயிற்சி பெறுவதற்கு சந்தர்ப்பம் கிடைக்கும். ஐந்து வருஷங்களாக்கினால் என்னவாகும்? நகர கார்ப்பொரேஷன் பகுதியிலே, ஐயனாவரம் பகுதியைப் பார்வையிட ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது. மூன்று வருஷங்களுக்கு பதிலாக ஐந்து வருஷங்களாக்கினால் ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் நிர்வாகத்திற்கு வந்த பிறகு, அவர்களுக்குத் திருப்தியில்லாமலிருந்தாலும் ஒன்றும் செய்ய முடியாதவர்களாயிருக்கவேண்டும். அப்படியில்லாமலிருந்தால், மூன்று வருஷங்களுக்குப் பின்னால் தேர்தல் வந்தால் தேர்தலில் மாற்றிக்கொள்ள முடியும். ஐந்து வருஷ காலம் நீண்டகாலமாக இருக்கிறது. இதில் இரண்டு வருஷங்களுக்கு முன்பாகவே மாற்றிக்கொள்ள முடியும். நான் ஐயனாவரத்திற்குப் போயிருந்தேன். அது கிராமத்தைவிட மிக மோசமாக இருக்கிறது. என்னிடம் ஏதோ சொல்ல வந்தார்கள். உங்கள் கவுன்ஸிலரிடத்தில் ஏன் சொல்லவில்லை, என்னிடம் சொல்லுகிறீர்களே என்று கேட்டேன். அதற்கு அவர்கள் "நாங்கள் ஏதோ வேகத்திலே அப்போது தேர்ந்தெடுத்துவிட்டோம்; இன்றைக்கு ஒன்றும் செய்யமுடியாதவர்களாக இருக்கிறோம்" என்று சொன்னார்கள். இப்படி. . . .

**Mr. SPEAKER** : அதைப்பற்றி இந்த சபையில் பேசுவது சரியல்ல. கார்ப்பொரேஷன் அங்கத்தினரைப் பற்றி இங்கு கூறுவது கூடாது. வெள்ளை அறிக்கையைப் பற்றிப் பேசுங்கள்.

**Sri K. R. NALLASIVAM** : அந்த அடிப்படையில் பார்க்கும்போது மூன்று வருஷங்களுக்கு ஒரு முறை ஸ்தல-ஸ்தாபனங்களுக்குத் தேர்தல் நடத்துவது நல்லது. ஆகவே அதையும் சர்க்கார் நல்ல முறையிலே ஆலோசித்து முடிவு செய்யவேண்டும்.





. தேசீய விஸ்தரிப்புத் திட்டங்கள், சமுதாய நலத் திட்டங்கள் இவைகளுக்கான அடிப்படையாக இந்த பஞ்சாயத்து யூனியன்கள் முக்கியமாகக் கருதப்படுகிறது. தேசீய அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் வராமல் இருக்கும் பகுதியிலுள்ளவர்கள் ஆசையோடிருக்கலாம். முன்னால் எங்கள் பகுதி சமுதாய நலத்திட்டத்திலிருந்து இப்போது தேசீய விஸ்தரிப்புத் திட்டத்தின் கீழ் வந்திருக்கிறது. ஒழுங்காக வேண்டிய தொகை கிடைக்கிறதாவென்று பார்த்தால் இப்போது தேசீய விஸ்தரிப்புத் திட்டத்தின் கீழ் முன்பு கிடைத்த தொகையில் மூன்றில் ஒரு பங்குதான் கொடுக்கப்படுகிறது. ஒவ்வொரு தேசீய அபிவிருத்திப் பகுதிக்கும் சுமார் 20,000 ரூபாய் கொடுக்கப்படுகிறது. முனிஸிபாலிடிகளில் சமுதாய நலத்திட்டத்தின் நிலை வேறு. இப்போது கொடுக்கும் தொகையில் கிராமங்களில் சரியான முறையில், ஒழுங்காகச் செய்யமுடியாது. இதை நல்ல முறையிலே யோசிக்க வேண்டும். மொத்த வருமானத்தில் நான்கில் ஒரு பங்கு கொடுக்கவேண்டும். இந்த கிராமப் பஞ்சாயத்துக்களை நம்பிக் கொடுத்து, உண்மையிலேயே கிராம ராஜ்ய ஏற்படுவதற்கு வழி செய்யவேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

**Sri R. KRISHNASAMY NAYUDU** : சபாநாயகர் அவர்களே, நம்முடைய மாகாணத்திலே ஸ்தல-ஸ்தாபனங்களை சீர்திருத்தி அமைக்கும் முயற்சியிலே பல யோசனைகள் அரசாங்கத்தின் கவனத்திலிருப்பவையெல்லாம் ஒரு வெள்ளை அறிக்கை மூலம் கொடுத்ததைப்பற்றிப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். கடந்த காலத்தில் ஸ்தல-ஸ்தாபனங்கள் எவ்வாறு வேலை செய்திருக்கிறதென்று வெள்ளை அறிக்கையில் சொல்ல முயற்சிக்கப்பட்டிருக்கிறது. வெள்ளை அறிக்கை 184 பக்கங்களைப் பார்த்தவுடனே என் போன்ற அங்கத்தினர்கள் பயந்திருக்கக்கூடுமென்று நினைக்கிறேன். சென்னை கார்ப்பொரேஷன் சம்பந்தப்பட்ட மட்டில் தெரிவித்திருப்பது கடந்த கால சரித்திர வரலாறு உட்பட 76 பக்கங்கள். இதர முனிஸிபாலிடிகள், இவைகளைப் பற்றி 36 பக்கங்கள். ஜில்லா போர்டுகள் சம்பந்தமாக 22 பக்கங்கள். 184 பக்கங்களில் இவைகள் போக பாக்கிப் பக்கங்கள் கார்ப்பொரேஷன், ஜில்லா போர்டு, பஞ்சாயத்துக்கள். இவைகள் சம்பந்தமாக யோசனைகளைப்பற்றி கூறப்பட்டிருக்கும் கருத்துக்களைச் சேர்த்து மொத்தம் 184 பக்கங்கள். ஆகவே இவ்வளவு பெரிய அறிக்கையென்று அறிக்கையைப் பார்த்து பயப்படவேண்டியதில்லை. ஜில்லா போர்டுகளை இப்போது தொலைத்து விடுவதாயிருந்தாலும், இப்போது ஜில்லா போர்டுகள் செய்து வந்த காரியங்களை யார் தலைமீது சுமத்துவது என்று அதிகமாகப் பரிசீலிக்கப்பட்டுள்ளதாக கருதுகிறேன். ஆக, அடுத்தபடியாக இவர்கள் யோசித்துள்ள விஷயங்கள், பஞ்சாயத்து யூனியன்கள், பஞ்சாயத்து ஸர்க்கிள்கள் இவற்றிற்குத்தான் ஏற்கெனவே அமைந்துள்ள பஞ்சாயத்துப் பொறுப்புகளை பகிர்ந்து கொடுப்பதைப்பற்றி இந்த யோசனையில் அதிக கவனம் செலுத்தப்பட்டிருக்கிறது. ஜில்லா போர்டுகளை ஒழித்துவிட்டு அந்த அதிகாரங்களை அந்தப் பிரதேசத்தில் இந்த ஸ்தாபனம் ஏற்பதாயிருக்கிறது என்று நான் கருதுகிறேன். ஆக மொத்தத்தில் பரிசீலனை செய்யும்போது 1950-ம் வருஷத்திற்கு முன்னர் பஞ்சாயத்து சட்டப்படி பஞ்சாயத்துகள் செய்யவேண்டிய வேலை, 1950 வருஷச் சட்டத்தின் பிரகாரம் பஞ்சாயத்துகள் நிறைவேற்ற வேண்டிய வேலைகள் என்று இரண்டு பகுதிகளாகப் பிரித்து, ஒன்றாவது பகுதியில் சொல்லப்பட்ட வேலைகளை பஞ்சாயத்துகள் சரியாக செய்து வந்ததென்றும், 1950-ம் வருஷச் சட்டப் பிரகாரம் பஞ்சாயத்துகளால் நிறைவேற்றப்படவில்லை என்றும் ஒரு பழி கூறப்பட்டிருக்கிறது. வாஸ்தவமாகக் கூட இருக்கலாம். ஏன் பஞ்சாயத்துகள் சரியில்லையென்று பரிசீலனை செய்து பார்க்கவேண்டும். 1950-ம் வருஷ சட்டப் பிரகாரம் பஞ்சாயத்துகள் அமுல் நடத்தவேண்டிய வருமானத்திற்கான வழி வகைகளை பெறுவதற்கான சூழ்நிலைகளை ஏற்படுத்தினோமா என்று முதலில் ஆராயவேண்டும். அம்மாதிரியான சூழ்நிலை இருந்ததா என்பதை ஆராய்ந்து இந்த அறிக்கையில் கூறியிருந்தால் அந்தப் பஞ்சாயத்து அதிகாரிகளுக்கு மிகவும் கௌரவமாக இருக்குமென்று கருதுகிறேன். அப்படிப்பட்ட நிலையில் செயல்படத்தக்க சூழ்நிலையிருந்ததா? கடந்த

காலத்தில் மொத்தத்தில் அம்மாதிரியான ஒரு நல்ல சூழ்நிலையில்லை. அதை நான் இந்த சந்தர்ப்பத்தில் ஞாபகப்படுத்திக்கொண்டு பேசுகிறேன். பஞ்சாயத்து அதிகாரிகளை கௌரவமாகக் கருதுவதில்லை. இதுமாதிரி நடந்து வந்திருக்கிறது. பஞ்சாயத்தில் ஒரு வண்டிக்கு அல்லது ஒரு சைக்கிளுக்கு வரி விதிக்கப்பட்டால், அதே வண்டி பக்கத்து முனிஸிபாலிடிக்குள் வந்தால், பஞ்சாயத்து வரிக்கும், முனிஸிபாலிடி வரிக்குமுள்ள வித்தியாசத் தொகையை செலுத்தியாகவேண்டுமென்று வற்புறுத்துகிறார்கள். அதைக்கூட அடுத்து வரும் ஸ்தல ஸ்தாபன சட்டத்தை திருத்தும் சந்தர்ப்பத்திலே ஆலோசிக்கவேண்டும். இப்படி பஞ்சாயத்துகளைப் பற்றிக் குறைவாக மதிப்பிடப்பட்டு வந்தது என்று சொல்லாமல் இருக்கமுடியாது. இந்தியா முழுவதையும் மனதில் வைத்துக்கொண்டு, தேசிய அபிவிருத்தித் திட்டங்களை நிறைவேற்றுவதில் நல்ல முறையில் கிராமங்களில் ஸ்தாபனங்கள் அமையவேண்டுமென்று உத்தேசித்துப் பரிசீலனை செய்யப்பட்டிருக்கிறது. மத்திய சர்க்காரின் கவனமும், ஸ்ரீ பல்வந்த்ராய் கமிட்டி ரிப்போர்ட்டிலும் இதுதான் சொல்லப்பட்டிருக்கிறது. கிராமப் பகுதிகளில் பலம் பொருந்திய நல்லதொரு ஸ்தாபனம் செயல்படவேண்டும் என்ற கருத்தை நான் ஒப்புக்கொள்கிறேன். வெள்ளை அறிக்கையில் இவர்கள் யோசனையில் இருப்பதை கவனிக்கும்போது, அதாவது முழு பிளாக் லெவல் தேசிய அபிவிருத்தித் திட்டம், சமுதாய நலத் திட்டம் அங்கு செய்யும் வேலைகளை அந்த பிளாக் லெவலிலே பஞ்சாயத்து யூனியன்கள் ஏற்றுக்கொண்டு செய்யமுடியாது. பஞ்சாயத்து ஸர்க்கிள்கள் ஏற்படுத்துகிறார்கள். இதற்கு கிராம சேவக்குகள் நியமிக்கப்படுகிறார்கள். அவர்களுக்கு 18 மாதம் பயிற்சியளித்து பஞ்சாயத்து கிராம நிர்வாகம் தவிர விவசாயம் முதலியவற்றை கவனித்துக்கொள்ள ஏற்பாடு செய்யப்படுகிறது. இந்த பிளாக் டெவலப்மெண்ட் ஆபீஸர்கள், பஞ்சாயத்து யூனியன்களுக்கு, முனிஸிபல் கமிஷனர் மாதிரி அமைந்து விடுகிறார். அதையும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். முனிஸிபாலிடியில் கவுன்ஸிலர், சேர்மன், கமிஷனர் இவர்களுடைய தொடர்பு அவ்வளவு நல்ல சூழ்நிலையில் இல்லை என்று அறிவோம்.

அதைப்போலவே இந்த ப்ளாக் லெவலில் ஏற்படக்கூடிய பஞ்சாயத்துகளுக்கு இருக்கக்கூடிய அதிகாரங்களை ஒவ்வொரு நிர்வாக அதிகாரிகளுக்கும் தரப்படும் என்பதை அந்த சட்டம் நிறைவேற்றும் சமயத்தில் நன்கு கவனத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். அநேகம் பஞ்சாயத்து யூனியன்களுக்கு ப்ளாக் டெவலப்மெண்ட் ஆபீசர்கள் கமிஷனராக மாறிவிடுகிறார்கள். விஸ்தரிப்பு அதிகாரி கூட்டுறவு ஆபீசர் என்று பல துறைகளில் வேலை செய்யக்கூடியவர்கள் இருக்கிறார்கள். ஆகவே ப்ளாக் லெவலில் இருப்பவர்களும் சமுதாய அபிவிருத்தி லெவ்லில் இருப்பவர்களும் ஒவ்வொருவரும் வேலை செய்து வருகிறார்கள். மற்ற விஸ்தரிப்பு அதிகாரிகள் யாருடைய தலைமையின் கீழ் வேலைகளைச் செய்வார்கள் என்பதைப் பற்றிய விவரங்கள் நமக்குக் கிடைக்கவில்லை. 1950-ம் வருஷத்திய சட்டத்தில் இருக்கக்கூடிய பல நல்ல அம்சங்கள், அதிகாரங்கள் இந்தச் சட்டத்தில் செய்யப்படவேண்டும். இப்பொழுது யூனியன் மூலமாக அதிகாரங்களை எடுத்துக்கொள்வதாக ஏற்படுகிறது. பஞ்சாயத்துக்கு வரக்கூடிய நேரடியான வருமானம் பஞ்சாயத்து யூனியன் மூலமாக பிரித்துக்கொடுக்க வேண்டும் என்று யோசனை சொல்லப்படுகிறது. அதையே பல அங்கத்தினர்களும் குறிப்பிட்டார்கள். அது எல்லோராலும் மறுக்கத்தக்க காரியமாகும். குறிப்பாக ஆரம்பப்பள்ளிகள், லைப்ரரி, புத்தகசாலை, வாசகசாலை, இப்படிப்பட்ட அநேக காரியங்கள், கிராமங்கள் சம்பந்தப்பட்டமட்டில், இவைகள் பஞ்சாயத்துக்குக் கொடுக்கப்பட வேண்டும். மற்றும் சில காரியங்களைச் செய்துகொள்வதற்கும் அவர்களுக்கு வசதி செய்துகொடுக்கப்படவேண்டும். இன்னும் ரேடியோ வைத்துக்கொள்வது, வண்டிப்பேட்டை வைத்துக்கொள்வது, இவைகள் போன்ற அதிகாரங்களை அறிவார்கள். இவைகளையெல்லாம் பஞ்சாயத்துக்குக்கொடுப்பது என்பது 1950-ம் வருஷ சட்டத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இவைகளையெல்லாம் பஞ்சாயத்து யூனியன் கீழ் கொண்டு வரவேண்டும் என்று சொல்வது





முற்றிலும் மாறுபட்டது. பஞ்சாயத்து அங்கத்தினர்களும் தலைவர்களும் சேர்ந்து தங்கள் பகுதிகளில் தங்களுடைய ஆலோசனையின்படி வேலைகளைச் செய்ய அவர்களுக்கு சந்தர்ப்பம் அளிக்கப்படவில்லை. அதைப்பற்றி இன்றைக்கு பலருக்குத் தெரியும். அப்படிப்பட்ட வசதி இல்லாவிட்டால் பஞ்சாயத்து சரிவர நடைபெறாது.

அங்கே அமைக்கக்கூடிய பஞ்சாயத்து சர்க்கிள் அவசியம் என்பது தோன்றவில்லை. ப்ளாக் லெவலிலிருந்து யூனியன் பஞ்சாயத்துக்குச் செல்லக்கூடிய பிரதிநிதிகள் பஞ்சாயத்து தலைவரோ அல்லது இன்னொருவர் இருக்கலாம் என்று யோசனை கூறப்பட்டிருக்கிறது. இது சற்றும் பொருத்தமற்ற யோசனையாகும். பஞ்சாயத்து ஆட்சியில் கவனம் செலுத்தமுடியுமா ? தலைவர் அங்கத்தினர்களுடைய ஆலோசனையைக்கேட்டு அவர்கள் காரியங்களை செய்யக்கூடிய ஒரு பொறுப்பாளியாவார். அங்கே இருக்கக்கூடிய தலைவர் அங்கத்தினர்களுடைய யோசனைகளைக் கேட்டுக்கொண்டு காரியங்களை நடத்துவதாக இருந்தால் அது பொருத்தமாக இருக்கும். பஞ்சாயத்து பிரசிடெண்டு வேறு பிரதிநிதி வேறாக இருந்தால் தலைவர் வெறும் பொம்மையாகத்தான் இருக்க முடியும். இப்படி ஏற்படும் பஞ்சாயத்துகளுக்கு அந்தப் பிரதேசத்தில் எவ்விதமான மதிப்பும் பொதுஜனங்களிடத்தில் ஏற்படக்கூடிய நிலைமை ஏற்படாது. அதைப்பற்றி கொஞ்சம் கவனித்து காரியங்களைக் கவனிக்கவேண்டும்.

1950-ம் வருஷத்திய சட்டத்தின்படி பஞ்சாயத்தின் வருமானத்தை அவர்களே செலவு செய்ய வேண்டும் என்று இருந்தது. அந்த நிலைமையில் அதன் நிதி சரிவர செலவு செய்யப்படவில்லை என்றும் அது துஷ்பிரயோகம் செய்யப்படுகிறது என்றும் சொல்லப்படுகிறது. அதன் மேல் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்க வேண்டும். குற்றம் செய்தவர்களைத்தான் தண்டிக்க வேண்டும். அப்படி நடவடிக்கை எடுத்துக் கொள்ளாமல் இருந்தது அங்குள்ள அதிகாரிகளின் மீதுள்ள குற்றமா என்பதையும் கவனிக்க வேண்டும். அந்த வகையில் அதிகாரிகள் நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டிருக்கிறார்களா என்பதை முதலில் பரிசீலனை செய்ய வேண்டும். அதற்கு பஞ்சாயத்துகள் பொறுப்பா ? குற்றங் குறைகள் ஏற்பட்டால் அது ஏற்படுவதற்கு வேண்டிய சூழ்நிலை என்ன என்பதை கவனிக்க வேண்டும். அவ்வப்போது இவைகளை கவனித்து வந்து நடவடிக்கைகளை எடுத்து வந்திருந்தால் பஞ்சாயத்தின் பணம் துஷ்ப்பிரயோகம் ஆகி இருக்காது. அப்படி நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளாத காரணத்தால்தான் இந்நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பதை நன்றாக யோசித்துப் பார்க்கவேண்டும்.

**Dr. (Srimathi) T. S. SOUNDARAM RAMACHANDRAN :** கனம் சபாநாயகர் அவர்களே, இந்தக் கிராமப் பஞ்சாயத்தைப்பற்றி எனக்கு நேரடியாகத் தெரியாமல் போனாலும் நான் மெம்பராகவோ அல்லது தலைவராகவோ இருந்து அனுபவம் பெறாமல் போனாலும் நான் அங்கே வேலைகளைச் செய்யக் கூடிய காலங்களில் போய்க்கொண்டிருந்த காரணத்தினால் எனக்குத் தெரிந்த சில வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன். நமக்கு அரசியல் சுதந்தரம் வரப்போகிறது என்று சொன்னபோது ராம ராஜ்யம், பஞ்சாயத்து ராஜ்யம் வரப்போகிறது என்று நாம் மகிழ்ச்சி அடைந்தோம். எல்லோருக்கும் மகிழ்ச்சியும் உண்டாயிற்று. இந்த சமுதாயத் திட்டம், அபிவிருத்தித் திட்டம் முதலிய வேலைகளில் சென்ற நான்கு வருஷங்களாக நான் ஈடுபட்டு வருவதாலும் அப்பொழுது பஞ்சாயத்து மெம்பர்களுடன் நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது. மைனர் பஞ்சாயத்து, மேஜர் பஞ்சாயத்து முதலியவைகளுடன் கொஞ்சம் தொடர்பு ஏற்பட்டது. என்னுடைய சமுதாய அபிவிருத்தி கிராமங்களில் அதாவது பெரியாறு சமுதாய வட்டாரத்தில் இதற்கு முன் 20 சத விகித கிராமங்கள்தான் பஞ்சாயத்தாக இருந்தன. அவைகளில் 11 பஞ்சாயத்துக்கள் தான் நல்ல முறையில் செயல்பட்டது. பஞ்சாயத்துக்கள் ஏற்பட்டிருந்த கிராமங்களில் நல்ல வேலைகள் நடைபெற்று வந்தது. ஆனால் பக்க கிராமங்களில் வேலை செய்வது கஷ்டமாக இருந்தது, அதனால் கிராம பஞ்சாயத்துக்கள் ரொம்பவும் அவசியம் என்று அங்குள்ளவர்கள் உணர்ந்தார்கள். பிறகு 1952

[4th November 1957
[(Dr. Srimathi) T. S. Soundaram Ramachandran]

1953, 1954-ல் புதிய பஞ்சாயத்துக்கள் ஏற்பட்டது. 1956-ம் வருஷம் வரையில் எந்த விதமான நிதி வசதியும் இல்லாமல் அவைகள் இயங்க முடியவில்லை. இருக்கக்கூடிய நிதியை வைத்துக்கொண்டு எந்த விதமான கிராமங்களுக்கு வேண்டிய வசதியையும் செய்யக்கூடியதாக இல்லை. எந்த விதமான ஒரு வசதியிலும் செயல்படக்கூடிய பஞ்சாயத்துகள் வரவில்லை. அப்படி நிலைமை இருக்கும்போது பஞ்சாயத்துக்களின் மேல் குறை சொல்வது அவ்வளவு சரியல்ல என்பதை எனக்கு முன் பேசியவர்களும் சொல்லி விட்டார்கள். ஆகவே நான் ஒன்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். துணிச்சலாக நாம் எவ்வளவோ சட்டங்களை, புரட்சிகரமான சட்டங்களைக் கொண்டுவந்து நிறைவேற்றுகிறோம். அதைப்போலவே பஞ்சாயத்து விஷயமாகவும் துணிச்சலுடன் கிராமங்களுக்கு பஞ்சாயத்து சுதந்தரம் கொடுக்க வேண்டும் என்ற முறையில் ஒரு சட்டத்தைக்கொண்டு வந்து நிறைவேற்ற வேண்டும். அப்படிக் கொண்டு வரும்போது கூடுமான வரையில் உத்யோக மற்றவர்களின் மற்பார்வையில் இயங்கும்படியாக வழிவகை செய்து கொடுப்பதுதான் நம்முடைய அடிப்படையான திட்டமாக இருக்க வேண்டும். அதற்கு வேண்டிய "சேப்கார்டும்" எடுத்துக்கொள்ளவேண்டும்.

தவிர கிராம பஞ்சாயத்துக்களுக்கு ரொம்பக் கட்டுப்பாடுகளைப்போட்டு ரெவன்யு டிபார்டுமெண்டின் ஒரு பாகமாக நாம் பஞ்சாயத்துக்களை செய்துவிடக்கூடாது. அப்படி செய்யப்படும் என்ற ஒரு பயம் ஏற்படக்கூடிய அளவில் இந்த மசோதா அமையக் கூடாது என்பதை நான் முதலில் தெரிவித்துக்கொள்ளுகிறேன். ஜில்லா நிர்வாகம் என்ற முறையில் இல்லா விட்டாலும் கட்டாயமாக மேற்பார்வை அதற்கு அவசியம். உயர் நிலைப் பள்ளிக்கூடங்கள், ஆஸ்பத்திரிகள் போன்ற பரந்த அளவில் செய்யக்கூடிய வேலைகளையெல்லாம் ஜில்லா யூனிட்டினுடைய முக்கியமானதாக இருக்க வேண்டும். ப்ளாக் பஞ்சாயத்தினுடைய பொறுப்பாக இருக்க கூடாது. ஜில்லா போர்டுகள் வேண்டாம். ஆனால் நாம் ஜில்லா அபிவிருத்தி கவுன்சிலை வைத்திருக்கிறோம். உத்தியோகப் பற்றற்றவர்களும் ஜில்லா அதிகாரிகளும் அதில் அங்கம் வகிப்பார்கள். அதனுடைய தலைவர் ஒரு உத்யோக பற்றற்றவராக அதாவது "நான்-அபிஷியலாக" இருந்து செயலாற்றவேண்டும். அவர்கள் ஜில்லா முழுவதற்கும் எந்த மாதிரியான திட்டங்கள் போட வேண்டும், அந்தந்த ப்ளாக் பஞ்சாயத்துக்கு எந்த மாதிரி அபிவிருத்தி கொண்டுவரலாம், இப்படியெல்லாம் விவாதித்து ஒரு முடிவு செய்யப்பட்டு அதன்படி அனுமதிக்க வேண்டும், அப்படியே இம்ப்ளிமெண்ட் செய்யப்பட வேண்டும். அந்த முறையில் தான் உத்யோக பற்றற்றவர்கள் தைரியமாக வேலை செய்வார்கள். அப்பொழுதுதான் அவர்களுடைய வாக்குக்கு மதிப்பு ஏற்படும். இப்பொழுது கிராமங்களிலுள்ள சில முக்கியஸ்தர்களுக்கு பஞ்சாயத்து தலைவர்களும் மதிப்புக்கொடுக்கப்படுவதில்லை என்று சொல்லப்படுகிறது. அதை நானும் அறிவேன். ஆகவே தான் ஜில்லா கவுன்சில் தலைவர் ஒரு உத்யோக பற்றற்ற தலைவராக இருக்கவேண்டும். இப்பொழுது இருக்கும் ஜில்லா பெரியதாக இருந்தாலும் ஜில்லா சீரமைப்பு முறையில் அதற்குத் தகுந்தபடி 12 அல்லது 13 லட்சம் ஜனத் தொகை கொண்ட ஒரு ஜில்லாவாக அமைத்தால்தான் இந்த திட்டங்களை நாம் நன்றாக நிறைவேற்றி வைக்கமுடியும்.

பஞ்சாயத்து சம்பந்தப்பட்ட வரைக்கும் ஸ்ரீ பல்வந்தராய் மேத்தா அவர்களுடைய அறிக்கையின் "அட்வான்ஸ் காபி" மெம்பர்களுக்கெல்லாம் ஏற்கனவே சர்க்காருக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது என்று நினைக்கிறேன். நம்முடைய ராஜ்ய சர்க்காரோடு அவர் கூடி ஆலோசித்திருக்கிறார். அந்த ஆலோசனைகள் எங்களுக்குக் கிடைத்தால் நல்ல விதமாக ஆராய்ந்து இன்னும் எப்படி நம் நாட்டுக்குத் தகுந்த முறையில் பஞ்சாயத்து நிர்வாகத்தை மாற்றியமைக்கலாம் என்று சொல்வதற்கு வாய்ப்பு ஏற்படும்.

ஜில்லா அபிவிருத்திக் கவுன்சில், ப்ளாக் பஞ்சாயத்து இவையெல்லாம் வரட்டும். ஆனால், ப்ளாக டெவலப்மெண்டு ஆபீசரையே அதனுடைய கமிஷனர் போல ஆக்குவது முற்றிலும் பொருத்தமற்றது என்று நான் வற்புறுத்திச் சொல்ல ஆசைப்படுகிறேன். என்னுடன்கூட ப்ளாக் டெவலப்



4th November 1957]
[(Dr. Srimathi) T. S. Soundaram Ramachandran]

மெண்ட் ஆபீசர்கள் வேலை செய்திருக்கிறார்கள். மனப்பூர்வமாக, மனச்சாட்சிக்கு ஒத்த விதத்திலே அவர்கள் உழைத்திருக்கிறார்கள். அவர்களுடைய உழைப்பைத் தெரிந்த எனக்கு என்ன தோன்றுகிறதென்றால் அவர்களிடமிருந்து நாம் அதிகப்படியாக இப்படி உழைப்பைக் கேட்பது, அவர்களிடம் சாத்தியம் இல்லாததை எதிர்ப்பார்க்கிறதாக முடியும். விவசாய முன்னேற்றத்தில் அவர்கள் தீவிரமாக முனைந்து வேலை செய்தாலே அவர்களுக்கு நேரம் போதாது. அதனாலே பஞ்சாயத்தின் நிர்வாகப் பொறுப்பை அவர்கள் கையில் கொடுக்காமல், இப்பொழுது இருக்கிற முறையிலே டெபுடி பஞ்சாயத்து ஆபீசர்கள் இவர்களோடு சேர்ந்து வேலை செய்யலாம். அந்த முறை இன்று நீடிக்கவேண்டும் என்றும் நான் விரும்புகிறேன்.

இந்த ப்ளாக் பஞ்சாயத்துக்கள், கிராமப் பஞ்சாயத்துக்கள் என்று வரும்போது அங்குள்ள எக்ஸிகியூடிவ் ஆபீசர்களுக்கும் மற்றவர்களுக்கும் நன்றாகப் பயிற்சி அளிக்கவேண்டும். ஆனால், ஜில்லா "லெவலிலே" ஜில்லா பஞ்சாயத்து ஆபீசருக்கு உட்பட்டு அந்த எக்ஸிகியூடிவ் ஆபீசர்கள் வேலை செய்தால்தான் அவர்களை மற்ற இடங்களுக்கு மாற்றவோ, தகுந்த இடங்களுக்குச் செல்ல வசதி செய்து கொடுக்கவோ முடியும்.

பஞ்சாயத்துகளிடம் பணவசதி இருந்தால்தான் எதையும் செய்ய முடியும். ஸ்ரீ கே. ஆர். விஸ்வநாதன் அவர்கள் இதைப்பற்றிச் சொன்னார்கள். ஏற்கனவே பணவசதி இருந்த கிராமங்களில் மிக நன்றாக வேலை செய்ய முடிந்தது. சமுதாய அபிவிருத்தித் திட்டத்திலே, என்று நான் சொன்னேன். மற்ற கிராமப் பஞ்சாயத்துக்கள் நன்றாக வேலை செய்ய முடியவில்லை. பணவசதி இன்னும் கிடைக்கவில்லை என்று நான் குறிப்பிட்டுக் காட்டினேன். ஆகவே, ஒவ்வொரு ப்ளாக் பஞ்சாயத்து, ஜில்லா கவுன்சில் ஆகியவைகளுடைய வரவு செலவுத்திட்டத்தை, அதாவது பட்ஜெட்டை கலெக்டரோ அல்லது லோகல் அட்மினிஸ்ட்ரேஷன் இலாகாவினரோ பார்த்து, பரிசீலனை செய்து அனுமதிக்கலாம். ஆனால், பஞ்சாயத்துக்களுக்குப் பணம் நேரடியாகக் கொடுக்கப்படவேண்டும். அவர்களுடைய வரவு செலவு முதலியவைகளைச் சரியாகச் செய்கிறார்களா என்பதைக் கண்காணிக்க அதிகாரம் மற்றவர்களுக்கு இருக்கட்டும். பணத்தை துர்வினியோகம் செய்தால் நிச்சயமாக அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்துக் கொள்ளட்டும். ஆனால் பணமானது பஞ்சாயத்துக்களின் கையில் கொடுக்காமல், இருப்பது நன்றாக இருக்காது. கலெக்டர், ரெவின்யூ டிவிஷனல் ஆபீசர், பஞ்சாயத்து டெவலப்மெண்ட் ஆபீசர் இவர்கள் கீழே கிராமப் பஞ்சாயத்துகள் செயல்படவேண்டுமென்று நினைத்தால் அது பஞ்சாயத்துக்களுக்குச் சரியான மதிப்பு கொடுத்ததாகாது. முன்காலத்தில் எல்லாம் கிராமங்களில் அறிவிலும் செல்வத்திலும் பெரியவர்களாக இருப்பவர்கள் நாட்டாண்மைக்காரர்கள் என்ற முறையில் சொல்லக்கூடியவைகளை மற்றவர்கள் கேட்டு அவற்றுக்குக் கட்டுப்பட்டு வந்தார்கள். இப்பொழுதும் அப்படிப்பட்டவர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். மேலும், இப்பொழுது தகுதியுள்ள இளைஞர்கள் பஞ்சாயத்துத் தலைவராக வருவதற்கோ அங்கத்தினராக வருவதற்கோ அவர்களுக்கு நல்ல வாய்ப்பு கொடுத்து அவர்களை வளர்க்கக்கூடிய நிலைமையை ஏற்படுத்தாமல் கிராமத் தலைமை இன்னும் "டெவலப்" ஆகவில்லையே என்று குற்றம் சொல்வதில் அர்த்தமில்லை.

(இத்தருணத்தில் ஸ்ரீ பி. எஸ். சின்னதுரை தலைமை வகித்தார்).

ஜில்லா அடிப்படை வேண்டுமென்று நான் ஏன் சொன்னேன் என்றால் ப்ளாக் பஞ்சாயத்துக்களாலே நடத்தப்படுவதைவிட, ஆஸ்பத்திரி, உயர்நிலைப் பள்ளி போன்ற பெரிய ஸ்தாபனங்கள் பொறுத்தவரையில், ஜில்லா அளவில் மேற்பார்வையும் பொறுப்பும் இருப்பது நல்லது, என்பது என்னுடைய அபிப்பிராயம். அப்படி இல்லாது போனால், ஓர் உயர்நிலைப்பள்ளி ப்ளாக்கில் ஒன்றைக்கட்டிவிட்டாலும், அதில் உள்ள ஆசிரியர்களுக்கு போதுமான பாதுகாப்போ, உத்தியோக இட மாறுதலோ கொடுக்க முடியாத நிலைமை ஏற்படும். பலதரப்பட்ட ஹைஸ்கூல்—அத்தாவது மல்டி பர்பஸ் ஹைஸ்கூல்—போன்றவைகளை நிர்வகிப்பதில் ஜில்லா தான் முக்கியமான

[4th November 1957

[(Dr. Srimathi) T. S. Soundaram Ramachandran]

ஸ்தானமாக இருக்கவேண்டும். ஜில்லா அளவிலே வசதிகள் கிடைக்க வேண்டும். ஆஸ்பத்திரிகளும் ஹைஸ்கூல்களும் உடனடியாகவே சர்க்கார் மேர்பார்வையில் இயங்குமா அல்லது ஜில்லா மேற்பார்வையில் இயங்குமா என்பது நாம் தீர ஆலோசித்து முடிவுசெய்ய வேண்டிய விஷயம்.

மறைமுகத் தேர்தலைப்பற்றி பலர் சொன்னார்கள். மறைமுகத்தேர்தல் கிராமப் பஞ்சாயத்து அளவிலே மிக அவசியம். நம்முடைய எல்லா தேர்தல்களுக்கும்—ஜில்லா போர்டு தேர்தல் உள்பட—மறைமுகத் தேர்தல் முறையைத் தான் நாம் வைத்திருக்கிறோம். அப்படியிருக்கும்போது, கிராமப் பஞ்சாயத்துத் தேர்தலிலே மட்டும் வெளிப்படையாக கை தூக்குவதன் மூலம் தேர்தலை நடத்துவது என்பது கூடாது. மறைமுகத் தேர்தல் முறையைப் பொறுத்தவரையில் ஜனங்களுக்கு அதில் போதுமான அனுபவம் கிடைத்துவிட்டது என்று தான் நான் நினைக்கிறேன்.

ஆகவே, எந்த ஒரு காரியம் செய்தாலும், அதற்கு பஞ்சாயத்து ஒரு யூனிட்டாக அமைய வழிவகை செய்து கொடுக்க தகுந்த மாறுதல் செய்ய, வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

* **Sri V. SUBBIAH NAICKER**: கனம் தலைவர் அவர்களே, வெள்ளை அறிக்கையில் குறிப்பிட்டுள்ள விஷயங்களில் குறிப்பாக கிராம பஞ்சாயத்து தேர்தல், அதனுடைய நிர்வாகம், அதனுடைய பொருளாதாரம் இவைகளைப்பற்றி பல இடங்களில் பல சந்தேகங்கள் ஏற்படுகின்றன, தெளிவற்ற முறையில் இருப்பதனால், கிராமப் பஞ்சாயத்துத் தேர்தல் விஷயத்தில் பழைய முறையிலிருந்து இன்று மாறுபட்டு, பஞ்சாயத்து போர்டு மெம்பர்களே தலைவரைத் தேர்ந்தெடுக்கக்கூடிய அளவில் இந்த அமைப்பு வருகிறது. அதனால் பல சங்கடங்கள் ஏற்படும். பல ஊழல்களுக்கும் காரணமாக இருக்கும்.

30 ஆண்டுகளுக்கு முன்னால், பிரிட்டிஷ் அரசாங்கத்திலே லோகல் போர்டு இன்ஸ்பெக்டராக இருந்த காலஞ்சென்ற ஸ்ரீ கோபாலசாமி அய்யங்கார் காலத்தில் 30 வீடுகள் உள்ள சின்ன கிராமங்களுக்கும்கூட தனி பஞ்சாயத்துக்கள் ஏற்பட்டன. அவைகள் நல்ல முறையில் நடந்துகொண்டு வருகின்றன. ஆயினும் இப்பொழுது இந்தத்தேர்தல் முறையிலே பல சிக்கலான விஷயங்கள் காணப்படுகின்றன.

ஒரு வார்டிலே 100க்கு மேற்பட்ட வோட்டர்கள் இருந்தால், அவர்கள் இரண்டு பேர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்ற நிலைமை ஏற்படுகிறது என்று வைத்துக்கொண்டால், அதே இடத்திலே 60 வோட்டர்கள் வந்து ஒரு அங்கத்தினருக்கு வோட்டு செய்துவிட்டு, மற்ற வோட்டர்கள் வராமல் நின்றுவிட்டால், அடுத்து அதில் 3 பேர்கள் நாமினேஷன் தாக்கல் செய்திருந்தால் இன்னொரு மெம்பரை எப்படி தேர்ந்தெடுப்பது என்ற நிலைமை ஏற்படுகிறது. இதற்கு ஒரு விளக்கம் கொடுக்கவேண்டும்.

கிராமப் பஞ்சாயத்தாக இருந்து, பஞ்சாயத்து யூனியனாக அமையக்கூடிய இடத்திலே சில கஷ்டங்கள் தோன்றுகின்றன. இன்றிருக்கக்கூடிய ப்ளாக் டெவலப்மெண்ட் அதிகாரியின் கையில், முனிசிபல் கமிஷனர் போன்று அது ஒப்படைக்கப்படுகிறது. ப்ளாக் டெவலப்மெண்ட் அதிகாரிகளுக்கோ சமுதாய நலத்திட்ட அதிகாரிகளுக்கோ கிராமத்திலே எவ்வளவு தொடர்பு இருந்தாலும்கூட, நிர்வாகத்திலே அவர்கள் இன்று சில ப்ளாக்குகளில் ஏதும் செயலாற்ற முடியாத முறையில் இருக்கிறார்கள். அப்படிப்பட்ட அதிகாரிகளிடத்தில் புதிய ஒரு பொறுப்பையும் புதிய ஒரு நிர்வாகத்தையும் ஒப்படைப்பது அவ்வளவு சரியாக இருக்குமா என்று யோசிக்கவேண்டிய நிலையில் இருக்கிறது.

பஞ்சாயத்து யூனியன், க்ரூப் பஞ்சாயத்து என்று நியமிக்கப்பட்டு, அவைகளுக்கு அங்கத்தினர்கள், நிர்வாகஸ்தர்களாக அமைக்கிறார்கள். அந்த நிர்வாகஸ்தர்கள் பல கிராமங்களைப் புறக்கணிக்கலாம். இன்று பஞ்சாயத்துக்களைகூட பார்க்கிறோம். ஹாம்லெட்டுகள் என்று சொல்லப்படும் சிறு



4th November 1957] [Sri V. Subbiah Naicker]

சிறு பகுதிகளில் அபிவிருத்தி வேலைகள் எடுத்துக்கொள்ளப்படாமல் பல வருஷங்களாக புறக்கணிக்கப்பட்டு இருப்பதைப் பார்க்கிறோம். அங்கு இருக்கக்கூடிய பெரிய உயர்த்தரப் பள்ளிகள், ஆஸ்பத்திரி, ரோடுகள் ஆகியவைகளை நிர்வகிப்பதற்கு அந்த ப்ளாக்கிலே ஒரு டிவிஷனல் இன்ஜினீர், ஒரு ஜில்லா சுகாதார அதிகாரிபோன்ற பெரும் அதிகாரிகளை நியமிப்பார்களானால், அதனுடைய பொருளாதார நிலைமை எப்படி இருக்கும்? இவ்வளவு பெரிய பெரிய உத்தியோகஸ்தர்களுக்கும் பணம் கொடுக்கும் அளவிலே ஒரு ப்ளாக் எப்படி செயல்படமுடியும்? ஒரு ப்ளாக்கிலே 40 பஞ்சாயத்துக்கள் தான் அமைய முடியும். 500 ஜனத்தொகை என்று வைத்துக் கொண்டாலும் கூட 40க்கு மேல் போக முடியாத அளவில்தான் போக முடியும். அவ்வளவு குறுகிய யூனிட்டிலே பெரிய பெரிய ஜில்லா அதிகாரிகளை நியமித்தால் அதனுடைய பொருளாதாரத்தை எப்படி நிர்வகிக்க முடியும் என்ற நிலை ஏற்படுகிறது. எதிர்காலத்தில் மத்திய அரசாங்கமோ ராஜ்ய அரசாங்கமோ பஞ்சாயத்துக்களுக்குக் கொடுக்கக்கூடிய மான்யங்களை எதிர்பார்த்து அவைகள் வாழ முடியுமா என்பதையெல்லாம் சிந்திக்கக் கூடிய அளவிலே இன்றைக்கு இருக்கும் வெள்ளை அறிக்கை இருக்கிறது. அவை தகுந்த முறையிலே செயல்படுவதற்கான வழிகளைக் கண்டுபிடித்து ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விளாத்திகுளம் பஞ்சாயத்து போர்டு தலைவர் பண மோசடி செய்திருக்கக்கூடிய வழக்கு பற்றி, பஞ்சாயத்து போர்டு உப தலைவரும் மற்ற மெம்பர்களும் லோகல் போர்டு இன்ஸ்பெக்டருக்கும் ரீஜினல் இன்ஸ்பெக்டருக்கும், அரசாங்கத்திற்கும் தெரிவித்திருந்தும் கூட, பட்ஜெட் கூட்டத்தின் போது நான் அதைப்பற்றி ஒரு கேள்வி ரூபமாக எழுதிக்கொடுத்திருந்தும் கூட, அதைப்பற்றி ஒன்றுமே தெரியவில்லை. கிராமப் பஞ்சாயத்துக்களிலே நடக்கக்கூடிய ஊழல்கள் நிவர்த்திக்கப்பட வேண்டுமானால் நேரடியாக அரசாங்கம் அதில் கவனம் செலுத்தவேண்டியது அவசியமாக இருக்கிறது. பல வருஷங்களாய்விட்டன. அந்தப் பஞ்சாயத்தே வேலைசெய்ய முடியாத நிலையிலே பஞ்சாயத்து மெம்பர்களும், உப தலைவரும் இன்று செயலற்ற நிலைமையில் இருக்கிறார்கள். நான் கேட்ட கேள்விக்கு இதுவரை ஒன்றுமே தெரியவில்லை. பஞ்சாயத்துக்கள் பரவலாக நல்ல முறையிலே எப்படிச் செயல்படும் என்பது பின்னால் தான் நடைமுறையிலே தெரியவேண்டும். இவைகளை கனம் அமைச்சர் அவர்கள் கவனித்து, சந்தேகங்கள் உள்ள இடங்களைத் தெளிவுபடுத்துவார்கள் என்று கேட்டுக்கொண்டு என்னுடைய சிற்றுரையை முடித்துக்கொள்கிறேன்.

* **Sri C. MUTHIAH PILLAI**: கனம் தலைவர் அவர்களே, 11-10 a.m.
1953 டிசம்பர் சட்டசபையிலே ஒரு மெம்பர் கொண்டுவந்த ஒரு யோசனையை 1956-லே அமைச்சர் சபை யோசித்து 1957-லே வெள்ளை அறிக்கையைப் பற்றி விவாதித்து 1958-லே அதை நடைமுறையில் கொண்டு வருவது என்று சொன்னால் நாம் அதை பாராட்டத்தான் வேண்டும். அதுவும் கூட, அஷ்யூரன்ஸ் கமிட்டிக்கு சம்பந்தபடாத விஷயங்களில்கூட, அங்கத்தினர்கள் சொல்லும் ஆலோசனைகளை மந்திரி சபை யோசனை செய்து பார்ப்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டாக விளங்குகிறது. இந்த புதிய மாறுதலை ஓரளவுக்கு வரவேற்க வேண்டியிருக்கிறது. இதற்குக் காரணம் என்னவென்றால், தேசீய விஸ்தரிப்புத் திட்டம், தீவிர சமுதாய நலத் திட்டம் இவைகள் அதிகமாக இருக்கும் இடங்களைப் பார்ப்போமானால், அங்குள்ள வேலைகள் செய்து முடிந்த பிறகு அந்த பிளாக்குகளை ரிவர்ட் செய்துகொண்டிருக்கிறார்கள். அந்த ரிவர்ட் செய்த பிரதேசங்களுக்கு அரசாங்கம் 25 சத விகிதத்திற்குக் கீழ் தான் பணம் கொடுக்கிறார்கள். அந்தப் பிரதேசங்களில் இந்தத் தொகையை வைத்துக்கொண்டு முன்பு செய்யப்படாமல் விட்டுப்போன வேலைகளை எப்படி செய்யமுடியும்? இப்பொழுது அந்த இடங்களில் இந்த புது முறைப்படி பஞ்சாயத்து போர்டுகள், கவுன்சில்கள் ஏற்படுத்தினால் தேசீய விஸ்தரிப்புத் திட்டம், தீவிர சமுதாய நலத் திட்டம் இவைகளின்கீழ் செய்யாமல் விடப்பட்ட வேலைகளெல்லாம் செய்யமுடியும் என்று யோசனை கூறிக் கொள்கிறேன்.

[Sri C. Muthiah Pillai] [4th November 1957

இப்பொழுது இருக்கிற அமைப்பின் ஒரு பெரிய ஜில்லாவை இரண்டு டிவிஷன்களாக பிரித்திருக்கிறார்கள். அதில் ஒவ்வொரு ஜில்லாவிலும் டிஸ்டிரிக்ட் கவுன்சில் 15 லட்சம் பாபுலேஷனுக்கு அதிகமாக வைத்து பிரிக்கிறார்கள். என்னுடைய யோசனை என்னவென்றால், இப்பொழுது இருக்கிற முறையில் 7½ லட்சம் பாபுலேஷனுக்கு அதிகமாக வைத்தால் டிஸ்டிரிக்ட் கவுன்சிலை சரியாக நடத்தமுடியாது என்பது என்னுடைய அபிப்பிராயம். ஒவ்வொரு டிஸ்டிரிக்ட் கவுன்சிலிலும் அங்கம் வகிப்பவர்கள் பஞ்சாயத்து தலைவர்கள், அசெம்பிளி மெம்பர்கள், பார்லிமெண்டு தலைவர்கள் முதலியவர்கள். ஒவ்வொரு ஜில்லாவிலும் ஒவ்வொரு பகுதிக்கும் இவர்களைச் சேர்த்துப் பார்ப்போமானால் 100 அங்கத்தினர்களுக்கு மேல் இருக்கும். 100 அங்கத்தினர்கள் சேர்ந்து ஏதாவது ஒரு விஷயத்தை பேசி நல்ல முடிவுக்கு வரமுடியுமா? அல்லது மக்களுக்கு நன்மையாக, பிரயோஜனகரமாக ஏதாவது செய்யமுடியுமா என்பதை ஆலோசித்துப் பார்க்கவேண்டும். ஒவ்வொரு ஜில்லாவிலும் 7, 8 ரெவினியூ டிவிஷன்கள் இருக்கின்றன. ஒரு டிஸ்டிரிக்ட் கவுன்லிசில் இரண்டு ரெவினியூ டிவிஷன்களுக்கு மேல் இல்லாமல் இருந்தால் மிகவும் நல்லதாக இருக்கும்.

அடுத்தபடியாக ஓட்டு உரிமையைப் பற்றி சொல்ல விரும்புகிறேன். சாதாரணமாக பொதுமக்கள் 4 தடவைகளாவது வோட்டுப் போட்டிருக்கிறார்கள் என்பதை நாம் பார்த்திருக்கிறோம். பஞ்சாயத்து தேர்தலில் ஒரு தடவை, நேரடியாக தலைவர் தேர்தலில் ஒரு தடவை, ஜில்லா போர்டு தேர்தலில் ஒரு தடவை, சட்டசபை தேர்தலில் ஒரு தடவை, ஆக நான்கு தடவை மக்கள் வோட்டு உரிமையை பிரயோகிக்கிறார்கள். மக்களுக்கு அதிக வோட்டுரிமை வழங்கினால்தான் வேலைகள் தீவிரமாக நடக்கும். இல்லாவிட்டால் அரசாங்கத்திற்கும் "பைல்ஸ்" வருவது குறைந்து விடும், மனுக்கள் வருவது குறைந்து விடும். இம்மாதிரி செய்தால் கிராமத்திலே எந்த அளவுக்கு வேலை நடக்கும் என்பதை யோசிக்கவேண்டும். மக்களுடைய உரிமை அதிகமாக அதிகமாகத்தான் அரசாங்கத்திற்கு அதிகமான சீரான வேலை இருக்கும். இந்த நிலையில் போய்க்கொண்டிருந்தால் சட்டசபை மெம்பரை தேர்ந்தெடுக்கக்கூட வோட்டு உரிமை இல்லாமல் போகலாம். நேரடி வோட்டு முறையை எடுத்து விட்டு மறைமுகமான தேர்தல் வைக்கின்ற முறையானது காலப்போக்கில் சரியாக வராது. குறைந்த பட்சம் இரண்டு தடவைகளாவது மக்கள் வாக்குரிமையைப் பிரயோகிப்பதற்கு வாய்ப்பு அளிக்கப்படவேண்டும். எப்படிக் கொடுத்தாலும் சரி, ஜில்லா போர்டாக இருந்தாலும் சரி, பஞ்சாயத்து போர்டாக வந்தாலும் சரி, யூனியன் கவுன்சிலாக வந்தாலும் சரி, சட்டசபை தேர்தலாக இருந்தாலும் சரி, ஐந்தாண்டுக்குள் இரண்டு தடவைகளாவது மக்கள் தங்கள் வாக்குகளைப் பிரயோகிக்கக்கூடிய நிலைமை இருக்கவேண்டும்.

முதல் கிரேடு பஞ்சாயத்துக்களை எல்லாம் முனிசிபாலிட்டிகளாக ஆக்கிவிடவேண்டுமென்று நினைக்கிறேன். ஒவ்வொரு ஜில்லாவிலும் எடுத்துக் கொண்டால் 6, 7 முதல் கிரேடு பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன. இந்தப் புஸ்தகத்திலே இவ்வாறு குறிப்பிடப்பட்டிருக்கிறது. கிட்டதட்ட 1 லட்சத்திற்கு மேல் 1½ லட்சத்திற்குள்ளாக வருமானம் பெருகின்றனவாகவும் கிட்டதட்ட பாபுலேஷன் 15,000-க்கு மேல் 20,000-க்குள்ளாக இருப்பவைகளாகவும் இருக்கின்ற இந்த ஸ்தாபனங்கள் முதல் கிரேடு பஞ்சாயத்துக்களாக இருக்கின்றன. இதன் தலைவர்கள் பொது மக்களால் நேரடியாக தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். இப்பொழுது புது முறைப்படி தலைவர்கள் மெம்பர்களால் தேர்ந்தெடுக்கப் படுவார்கள். ஆதலால், இந்த முதல் கிரேடு பஞ்சாயத்துக்களை முனிசிபாலிடிகளாக மாற்றவேண்டுமென்று யோசனை கூறுகிறேன் நேரடித் தேர்தல் இல்லாத நிலைமையில் இவைகள் ஏன் முதல் கிரேடு பஞ்சாயத்துக்களாக இருக்கவேண்டும். இவைகளை முனிசிபாலிடிகளாக மாற்றிவிடலாம். அரசாங்கத்தின் சட்டப்படி அதற்குள் வருமானால் லட்ச ரூபாய் வருமானம் பெற்று 20,000-க்கு மேல் பாபுலேஷன் இருக்கும் இடங்களெல்லாம் அவ்வாறு மாற்றுவது உசிதம் என்று நினைக்கிறேன்.



4th November 1957] [Sri C. Muthiah Pillai]

இப்பொழுது இருக்கிற பஞ்சாயத்துக்களில் சீர்திருத்தம் செய்துவிட்டு புதிய வேலைகளை நாம் தொடங்கவேண்டும் என்று கருதுகிறேன். இப்பொழுது 3, 4 ரெவினியூ கிராமங்களுக்கு ஒரு பஞ்சாயத்து இருக்கிறது, அதில் 5,000 4,000-க்கு மேல் பாபுலேஷன் இருக்கிறது. அவைகளையெல்லாம் தனித்தனி பஞ்சாயத்தாக பிரிக்கவேண்டும். 500 பாபுலேஷனுக்கு 5 மெம்பர்கள் என்று இருப்பதை அமுலுக்குக் கொண்டு வருவதற்கு தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். அவைகளையெல்லாம் தனித்தனி பஞ்சாயத்துக்களாக பிரிக்கவேண்டும். அப்பொழுது தான் அதிக பஞ்சாயத்து தலைவர்கள் வர முடியும். கவுன்சிலில் அதிகமாக பஞ்சாயத்து தலைவர்கள் இருப்பார்கள். ஒரு தாலூக்காவிலுள்ள இரண்டு பிளாக் தொகுதியில் ஒட்டுமொத்தமாக கிராமங்களைச் சேர்த்து பஞ்சாயத்துக்கள் இருந்தால், 15, 18-க்கு மேல் இல்லை. ஆகையினால் 500 பாபுலேஷனுக்கு 5 மெம்பர்கள் என்ற அடிப்படையில் பஞ்சாயத்துக்களை பிரித்து விட்டால், 25, 30 பேர் அதிகமாக மெம்பர்களாக வருவார்கள். அதிகமாக ஜனநாயகம் வளர்ந்திருக்கிறது என்பதற்கு அது ஒரு அறிகுறி. ஒவ்வொரு ரெவினியூ வட்டாரத்திற்கும் ஒரு பஞ்சாயத்து தனியாக இருக்கவேண்டும்.

இந்த பஞ்சாயத்துக்களில் இருக்கின்ற ஒரு குறை என்னவென்றால், அங்கு இருக்கிற இனாம் கிராமங்களிலே பஞ்சாயத்து மெம்பர்கள் கிடையாது. தலைவர் கிடையாது. அந்த இனாம் கிராமங்களையும் பஞ்சாயத்துக்குள் ஒரு வார்டாக சேர்க்கவேண்டும். அந்த இனாம் கிராமங்களையும் பஞ்சாயத்துக்கு உட்படுத்தி அவைகளை சீரமைக்கவேண்டும்.

இப்பொழுது இருக்கிற புதிய திட்டத்தின்கீழ் ஆர் டி. ஓ-க்கு ஒரு பி.ஏ. போடப்போவதாக சொல்லப்படுகிறது. அது அவசியமில்லை என்று நான் கருதுகிறேன். டெப்யூடி பஞ்சாயத்து ஆபீஸருக்கு 'ஜூரிஸ்டிக்ஷன்' அதிகமாக இருக்கிறது. இப்பொழுது இருக்கிற நிலைமையிலே பி.டி.ஓ-க்கள் நன்றாக வேலை செய்துவருகிறார்கள். 'பிளானிங் போர்டு மீடிங், அட்வைஸரி கவுன்சில் மீடிங்' இவைகளில் நான் பார்த்திருக்கிறேன். அவர்கள் ஒரு வேலையை நிறைவேற்றுவதற்கு 25 சத விகிதம் பணத்திற்கு பஞ்சாயத்து போர்டுக்கு ஓடவேண்டியிருக்கிறது. மற்றொரு 25 சத விகிதத்திற்கு ஜில்லா போர்டில் தீர்மானம் நிறைவேற்றி வாங்கவேண்டியிருக்கிறது. பிறகு பொது மக்களிடமிருந்து 15 சத விகிதம் வசூல் செய்யவேண்டியிருக்கிறது. பிறகு அரசாங்கத்திடமிருந்து தொகையைக் கேட்கவேண்டும். அப்படியில்லாமல் பஞ்சாயத்து யூனியனில் 'பி.டி.ஓ.வையே' காரியதரிசியாக போட்டுவிட்டால், பஞ்சாயத்து தொகை, கவுன்சில் தொகை இரண்டையும் சேர்த்து வாங்கினால் பிளாக்குகளில் எவ்வளவோ வேலை காலத்தில் செய்யமுடியும். 'பி.டி.ஓ.-வுக்கு' எவ்வளவு அதிகாரம் கொடுக்கவேண்டுமென்பதை நிர்ணயிக்கவேண்டும். கமிஷனர் என்ற பழைய பெயரை எடுத்துவிட்டு செக்ரெடரி என்று போட்டால் நன்றாக இருக்கும். ஜில்லா போர்டு தலைவருக்கு பூர்ண அதிகாரம் இருந்தது. எதை வேண்டுமானாலும் சாங்ஷன் செய்யும் நிலைமை இருந்தது. 'பி.டி.ஓ-க்கள்' அதிகாரத்தில் அதிகமாக அக்கரை கொள்ளவில்லை. கிராம மக்களோடு தொடர்பு கொண்டு மக்களுக்கு வேண்டியவைகளை செய்யவேண்டுமென்று கருத்து அவர்களுக்கு இருக்கிறது. அதிகாரத்தை மக்கள் தலைவர் கையில் வைத்து அதை நிறைவேற்றுவதற்கு அரசாங்கம் ஒரு நல்ல காரியதரிசியைப் போட்டு வேலை செய்தால் தான் ஜனநாயகத்திற்கு உகந்ததாக இருக்கும் என்று நான் யோசனை கூறுகிறேன்.

கடைசியாக ஒரு யோசனை சொல்கிறேன். தற்சமயம் 'ஐ.எல்.பி. ஆபீஸ்' யார் செய்த புண்ணியமோ என்னவோ, முதல் லைன் பீச்சில் இருக்கிறது. அதை பழைய அசெம்பிளி கட்டிடத்திற்குக் கொண்டுவந்தால் பஞ்சாயத்து யூனியன்களுக்கு மதிப்பு ஏற்படும். பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் அந்த இடத்திற்குப் போய் பார்த்தால்கூட இடம் நல்ல சுகாதார ரீதியிலே பார்ப்பதற்கு நல்ல வசீகரமான தோற்றமளிக்கும். அப்படிச் செய்தால் வெகு அழகாக இருக்கும். ஆகவே, ஐ.எல்.பி. ஆபீஸை பழைய அசெம்பளிக் கட்டிடத்திற்கு மாற்றவேண்டும் என்று கேட்டுக்கொண்டு என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

[4th November 1957

10-20 a.m. * SRI T. SAMPATH : Mr. Chairman, Sir, I welcome generally the measures proposed in the White Paper. I am glad that the measures suggested are in keeping with the objective of the Government, namely, decentralisation of powers in a gradual manner. The proposal to abolish the district board is logical and cogent. The district board has become more or less a fifth wheel in the administration. There is scope and need for an advisory body and the setting up of an advisory at the block level is to be welcomed. The idea that there should be a panchayat for every village and the setting up of a panchayat union at the block level are also to be welcomed. The question of entrusting the unions with education and medical relief has to be carefully considered. Education and medical relief are great responsibilities and I am of the view that they must be administered directly by the Government. Unless sufficient funds, executive staff and technical aid are provided to the panchayat unions, I am afraid they will suffer from the same difficulties and limitations which have contributed to the abolition of the district boards.

I welcome the formation of the Development Council. As suggested by my Friend Mr. C. Muthiah Pillai, there may be more than one Development Council in each districts. Wider powers will have to be given to these counciles in the matter of giving advice. I should like to emphasize that the Chairman of the Development Council, who is the Collector, should carefully consider those advises and implement them. I am of the view that the Members of the Council should advise the Chairman, in regard to land policy, administration of law and order and other developmental activities. The Collector should accept and implement the suggestions made.

One word about the method of election. The method that is now adopted in Class II panchayats is the open vote system. Many hon. Members who preceded me wanted the system to be changed. I am in entire agreement with them. The present system leads to a lot of bitterness, faction and division after the elections, and sometimes they lead even to serious consequences. I therefore suggest that instead of the open vote system, secret ballot may be introduced.

I come to the municipal reforms proposed in the White Paper. I find that many of the recommendations contained in Mr. Rathnasabapathy Mudaliar's Report have not been considered at all by the Government. I feel that municipalities should be made really autonomous bodies. Greater financial control and greater freedom in enunciating and executing policies and programmes for the general improvement of the town should be given to them. Municipalities must be permitted to chalk out their own policies.

I find in the White Paper a proposal to give concurrent power to chairmen of municipalities. We have been saying that we are going to give larger powers to the chairman. I do welcome the concurrent power. Such a power without the power of control over the officers and staff is, I feel, no power at all and it will serve



4th November 1957] [Sri T. Sampath]

no purpose. It is said, that the object of giving the chairmen wider powers is to enable them to implement the resolutions of the Council. Unless control over the staff is given, it is not at all possible for Chairmen to implement the resolutions of the council. According to section 18-A (2) of the District Municipalities Act, the staff of the municipal council is entirely under the control of the Commissioner. Unless that provision is amended, I am afraid that it will not be possible for the Chairman even after getting concurrent powers, to implement the resolutions of the council. So I suggest that the provision should be amended so as to vest in the chairman more powers of control over the staff.

Under section 75 of the Madras District Municipalities Act, as it exists at present, power is given to the Commissioner to award penalties to the staff. I do not grudge the Commissioner having the power to award minor punishment like censure or a small fine. But in awarding penalties involving heavy infliction, he must be asked to act in consultation with the Chairman. Such an arrangement will be conducive to smooth administration.

In the matter of transfer of teachers and other municipal staff, I plead that the Chairman should have greater powers. The Chairman should be consulted by the Commissioner before the transfers are ordered.

I pass on to the power of appointment. According to the provisions in the existing Act, there is what is called an Appointment Committee consisting of the Chairman of the Council, the Commissioner and one elected councillor. All appointments to posts whose pay exceeds Rs. 50 are placed before that committee. The Commissioners are empowered to make appointments to posts whose pay is below Rs. 30. May I make the suggestion that even this power of making appointment to these posts should be entrusted to the Chairman? If the Government agree to my suggestion, section 73 of the Madras District Municipalities Act will have to be amended.

I also suggest that section 351 of the Madras District Municipalities Act should be amended. Before prosecutions are launched in a Court, generally, the matter is not placed before the Council. I suggest that before the launching prosecutions, the possession of the Council be obtained.

With reference to the suggestion that the tenure of office be increased to five years, I am of a different view. I feel that the present term of three years is just and reasonable. I do admit that there should be efficient administration and that there should be adequate time for policy development. But as the same time I feel that opportunities should be given to others also. In the democratic set-up which we envisage, equal opportunities should be given to younger people.

Because it is the object of the Government. We have also been saying this. As a matter of fact, district boards and municipalities have in the past been training grounds for younger people. So, if

the period is extended to five years, there may not be much scope for all. I welcome the proposal for the constitution of a local authority service. This is a long-felt need, because under the existing conditions, they come under no category. I also welcome the proposal made in the white paper for the constitution of townships. I hope, Sir that my suggestions will be considered by Government. I thank you for the opportunity given to me to speak. speak.

* **Sri C. NATARAJA ODAYAR** : உயர்திரு சட்டமன்ற தாற்காலிகத் தலைவர் அவர்களே, நமது சட்ட மன்றத்திற்கொண்டு வந்திருக்கும் வெள்ளை அறிக்கையின் பேரில் சில கருத்துக்கள் கூற விரும்புகிறேன். இப்பொழுதும் இதற்கு முன்னும் பஞ்சாயத்து போர்டு தேர்தல் நடைபெறுகிறது. **(Mr. Speaker in the Chair.)**. அந்த பஞ்சாயத்து பிரஸிடெண்ட்டை மெம்பர்கள் தேர்ந்தெடுக்கிறார்கள். அந்த முறை நல்ல முறைதான். அதை ஆதரிக்க வேண்டியதுதான். இருந்தாலும், கிராமப் பஞ்சாயத்தில் நடைபெறும் சில முறைகளைப் பற்றி நான் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். பஞ்சாயத்து பிரசிடெண்டு தேர்தல் ஏற்படுகிறது. அந்த பஞ்சாயத்து பிரசிடெண்ட் அவர்களுக்கு குறைந்தது கையெழுத்தாவது போடத் தெரிய வேண்டுமென்று ஒரு நிர்ணயம் இருக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். பிரசிடெண்ட் கைரேகை புரட்டுபவராய் இருந்தால் அந்த பஞ்சாயத்தில் எப்படி வேலைகள் நன்கு நடைபெறும். அதேமாதிரிதான் மெம்பர்களும். அப்படி கை ரேகை புரட்டுபவர்கள் பிரசிடெண்டாய் இருந்தால் அந்தப் பிரசிடெண்ட் பஞ்சாயத்து போர்டில் இருக்கிற கிளார்க்கை நாடித்தான் பஞ்சாயத்தை நடத்த வேண்டியிருக்கிறது. உதாரணமாக, சேவிங்க்ஸ் சர்ட்டிபிக்கேட்டு இருக்கிறது. அதில் பணம் போடுகிறார்கள். இதை புரியாத காரணத்தால் அதில் அதிகமான மோசடி செய்யும் அளவில் அவர்கள் பணம் பெற்று விடுகிறார்கள். நாங்கள் எதிர்க்கட்சிக்காரர்கள் சொல்வதில் உள்ள கருத்துக்களை ஆராய்ந்து குறைகள் இருந்தால் அதை மாற்றிக்கொள்ள வேண்டும். நான் சொல்ல விரும்புவது என்னவென்றால், குறைந்தளவு படிப்பு, எஸ்.எஸ். எல். சி. என்றோ, அல்லது மூன்றாவது பாரம் என்றோ இல்லாவிட்டாலும் ரேகை புரட்டுபவர்கள் பஞ்சாயத்து பிரஸிடெண்டோ மெம்பரோ இருக்கக்கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோன்று, பொதுமக்களால் பிரஸிடெண்டை தேர்ந்தெடுக்கப்பட்டால்தான் பொதுஜனங்களை எப்படி நடத்துவது, என்பது அவருக்கு தெரிவதோடு, அவர்கள் பேரில் அன்பு பாராட்டி அவர்களது உதவியை நாட முடியும். மெம்பர்கள் பிரசிடெண்டை தேர்ந்தெடுக்கும்போது அட்வான்ஸாக பணம் வாங்குகிறார்கள். அந்தப் பணத்தைக் திருப்பிக் கொடுக்க, அது வோட்டாய் அளிக்கப்படுகிறது. ஆகையால் பஞ்சாயத்து போர்டு பிரசிடெண்ட் பொது மக்களால்தான் தேர்ந்து எடுக்கப்படவேண்டும். அரசாங்க அதிகாரிகள் ஊரில் இருக்கிறார்கள். அவர்களை ஐந்தாண்டு, அல்லது மூன்றாண்டிற்கு ஒரு தடவை மாற்றியமைக்கப்படுவதின் காரணம், ஊழல்களைக் குறைப்பதற்காகதான். ஐந்து ஆண்டு என்பது மூன்றாண்டு தான் என்று தான் இருக்கவேண்டும். தேர்தல்கள் மூன்று ஆண்டுகளுக்கு ஒரு தடவை இருப்பது, அதில் இருக்கிற குறைபாடுகளைக் நீக்குவதற்குத்தான். அதை ஐந்தாண்டுகள் என்றாக்கினால் குறைபாடுகளை அது எந்த விதத்திலும் குறைக்காது. அடுத்தபடியாக, ஹரிஜனங்களுக்கு உரிமை அளிக்கப்படவேண்டுமென்று சொல்லப்படுகிறது. இன வாரியாக பல உரிமைகள் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கும்போது, பெண் அமைச்சரே ஸ்தல ஸ்தாபனத்தை நடத்தி வரும் போது, ஆண்களுக்குள்ள உரிமைப்போல், பஞ்சாயத்துக்களில் பெண்களும் இருக்கவேண்டுமென்று ஏன் சட்ட பூர்வமாகக் கொண்டுவரக் கூடாது என்று கேட்கிறேன். பஞ்சாயத்தில் பெண்கள் இருந்தால்தான் பெண்களுக்குள்ள உரிமைகள் சரிவர கிடைக்கும். ஆண்களுக்கு அளிக்கப்படுகிற அங்கத்தினர் உரிமை பெண்ணுக்கும் அளிக்கவேண்டும் என்பதற்





சட்டபூர்வமாக நடவடிக்கைகள் எடுக்கவேண்டும். அடுத்தபடியாக பஞ்சாயத்து மூலம் வரி வசூலிக்கப்படுகிறது. சில பஞ்சாயத்துக்கள் ஆரம்பிக்கப்பட்டு ஆறு வருஷம் ஆகியும்கூட பணம் பாக்கி இருந்து கொண்டிருக்கிறது. ஏன் இந்த நிலை ஏற்படுகிறது? பிரசிடெண்டிற்கு, கொடுக்கப்பட்டுள்ள அதிகாரம் எவ்வளவு, எப்படி பிரயோகிப்பது, எப்படி நிறைவேற்றுவது என்று தெரியாமல் இருப்பதால்தான் இந்த நிலைமை ஏற்படுகிறதே தவிர வேறொன்றும் இல்லை. நான் ஒரு பஞ்சாயத்து பிரசிடெண்டை நேரில் கேட்டேன். ஒருவன் பணம் கொடுக்காவிட்டால் என்ன செய்வீர்கள் என்று கேட்டேன். அதற்கு அவர் சொன்னார், என்னிடம் இருக்கும் கிளார்க்கைக் கேட்டு அதை வசூலிப்பேன் என்று சொன்னார். அதேபோல் வீட்டிற்கு வரி எவ்வளவு போடுவது, எப்படி நிர்ணயிப்பது, எப்படி வசூலிப்பது என்று தெரியாத பிரசிடெண்டுகளும் இருக்கிறார்கள். இதற்குக் காரணம், கல்வி இல்லாத காரணந்தான் குறைந்த அளவு சட்டத்தில் ரேகை புரட்டும் மெம்பர்கள் தேர்தலுக்கு நிற்கக்கூடாது என்றோ, பிரசிடெண்டாய் வரக்கூடாது என்ற திருத்தம் இருக்க வேண்டும். அடுத்தபடியாக, பஞ்சாயத்தில் ஒரு கோர்ட் வைக்கப்பட்டிருக்கிறது. அங்கு பல கேஸ்களுக்கும் நீதி வழங்கப்படுகிறது. சட்ட மன்றத்தில் சட்டங்கள் அமைத்து அவர்களிடம் அதிகாரத்தை ஒப்படைக்கிறோம். கல்வியற்றவர்களிடம், நீதி வழங்குவதற்குள்ள அதிகாரங்கள் ஒப்படைக்கப்பட்டால் அந்த பஞ்சாயத்து மக்களுக்கு எப்படி நீதி கிடைக்க முடியும்? ரிக்கார்டுகளை வைத்துக்கொண்டு, அதாவது பாண்டுகளை வைத்துக்கொண்டு அவர்கள் தீர்ப்பு சொல்ல வேண்டியிருக்கிறது. அந்தத் தீர்ப்புகளில் இருக்கும் குறைபாடுகள் காரணமாக மக்கள் தவிக்கிறார்கள். மிகவும் அல்லல் படுகிறார்கள். நான் பார்த்திருக்கிறேன். பணம் வாங்கிய பார்ட்டிக்கு அறிவிக்கப்படாமல் சூழ்ச்சியின் காரணமாக அது அறிவிக்கப்பட்டதாக எழுதி அறிவிக்க மெஜாரிட்டி மெம்பர்களின் உதவி கொண்டு தீர்ப்பு வழங்கப்படுகிறது. அதற்கு மேல் நீதி கேட்க மேல் கோர்ட்டிற்குத்தான் போகவேண்டியிருக்கிறது. ஆகவே, மேல் கோர்ட் ஆலோசனையின்போது அந்தத் தொகுதி எம்.எல்.ஏ.-யும் இருக்க வேண்டும். அவரது ஆலோசனையும் கேட்கப்படவேண்டும். அப்பொழுது ஒன்றுமில்லாவிட்டாலும் அதின் குறைபாடுகள் வெளியே தெரியுமென்றாவது நினைப்பார்கள். கேஸ் கொடுத்தவர்கள் வந்து ஏதாவது கேட்டால், கிளார்க்கைக் கேட்டால் பிரசிடெண்டைக் கேளுங்கள், பிரசிடெண்டைக் கேட்டால் கிளார்க் எழுதி வைத்தார் நான் கையெழுத்து போட்டேன் என்கிறார். நான் சொல்வது என்னவென்றால், இந்தக் கோர்ட்டை எடுத்து விட்டால் கூட பரவாயில்லை. சட்டத்தைப் படிக்கக்கூட லாயக்கில்லாதவர்கள் எப்படி நல்ல முறையில் நியாயம் வழங்க முடியும். அப்படி நியாயம் வழங்கப்பட வேண்டுமென்றால், தொகுதி எம். எல். ஏ.-க்கும் அவர்களுக்கு தொடர்பு இருக்கவேண்டும். பெண்களுக்கு உரிமைகள் வழங்க வேண்டும் என்பதோடு, இன்னும் எடுத்துக்கொண்டால் ஒரு முறை ஒரு ஆண் பிரஸிடெண்டாய் இருந்தால் அடுத்த தடவை ஒரு பெண்தான் பிரசிடெண்டாக இருக்கவேண்டுமென்கிற முறையில், இச்சட்டத்தை அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

**Sri A. VEDARATNAM PILLAI** : இந்தச் சட்டசபையில் இருக்கிற அங்கத்தினர்கள், கையெழுத்து போடத் தெரியாதவர்கள் இங்கு இருக்கத் தகுதியில்லை என்று ஏதாவது சட்டம் உண்டா ?

**Mr. SPEAKER** : அப்படி ஒன்றும் கிடையாது.

**Sri A. P. C. VEERABAHU** : சட்ட மன்றத் தலைவர் அவர்களே, மக்கள் கையில் அதிகாரம் மாறுவதற்கு விரிந்த முறையில் இந்த வெள்ளை அறிக்கையை சர்க்கார் கொண்டு வந்ததை நான் வரவேற்கிறேன். பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன், அபிவிருத்திக் கௌன்சில், முனிசிபாலிட்டிகள், கார்பொரேஷன் என்ற வகையிலே இதை பல நோக்கோடு ஆராயவேண்டியது அவசியமிருக்கிறது. பஞ்சாயத்தைப் பற்றி பல

[Sri A. P. C. Veerabahu] [4th November 1957

அங்கத்தினர்கள் பலவிதம் கூறியிருக்கிறார்கள். அதில் நேர்முகமாக தலைவர் தேர்தல் இப்பொழுது நடைபெறுகிறது. அதை மாற்றி அமைக்க வேண்டுமென்று ஆலோசனை கூறப்படுகிறது. அதை நான் வரவேற்கிறேன். ஏனென்றால், பஞ்சாயத்தில் இருக்கக்கூடிய இதர அங்கத்தினர்களுக்கு எவ்விதமான வேலையும் இல்லாமல் போய் விடுகிறது. நேர்முகத் தேர்தல் மூலமாக தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவதின் காரணமாக, அவர்கள் ஏதோ தாங்கள்தான் ஜனங்களுக்குப் பொறுப்பாளி, தாங்கள்தான் பொறுப்புள்ளவர்கள் என்று நினைக்கிறார்கள். நேர்முகத் தேர்தல் மூலம் தலைவர் தேர்ந்தெடுக்கப்படவேண்டுமென்று இருந்தால் மற்ற அங்கத்தினர்கள் இல்லாமல் ஒரு தலைவருடைய பஞ்சாயத்தாகவே அமைத்துக்கொள்ளலாம். ஆகவே நேர்முக தேர்தல் இல்லாமல் முனிசிபாலிட்டிகளில், கார்ப்பரேஷன் முதலிய மற்ற ஸ்தாபனங்களில் இருக்கின்ற (இன்டயரக்ட்) **indirect** தேர்தல் போன்ற ஒரு புதிய முறையை கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதற்கு முன்னால் பாலட் பேப்பர் முறையில் புதிய தேர்தல் முறை இருக்க வேண்டும். இவ்விதமான தேர்தல் நடத்துவதற்கு எந்தவிதமான சங்கடங்கள் இருந்தாலும் இதை ஒரு காரணமாக வைத்துக்கொண்டு தனி மனிதனுடைய சுதந்திரத்தை, தனி மனிதனுடைய அபிப்பிராய சுதந்திரத்தை பறிக்கக்கூடிய முறையில் இருக்கிற பகிரங்க தேர்தல் முறையை மாற்றி புதிய தேர்தல் முறையை புகுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்ததாக இந்த பஞ்சாயத்துகளுக்கு 5 வருஷகாலம் ஆயுள்கொடுக்கப்பட்டிருக்கிறது. சர்க்கார் தரப்பில் இன்று இதற்கு காரணம் சொல்லப்படுவது இதனுடைய ஆயுட்காலம் குறைவாக இருந்தால் தேர்தல் மூலம் கிராமங்களில் இருக்கின்ற பல கட்சிகளிடையே மனஸ்தாபங்கள் அதிகமாக ஏற்படுகின்றது. ஆகவே இதற்கு ஒரு பரிகாரம் ஏற்படுத்துவதற்காக இவ்விதமாக காலத்தை நீட்டி வைத்திருப்பதாக சொல்லப்படுகிடது. இவ்விதம் இந்த 5 வருஷகாலம் என்றிருப்பதை தற்காலத்திற்கு வேண்டுமென்றால் வைத்துக்கொள்வதில் ஆட்சேபனை ஒன்றுமில்லை. ஆனால் அதிக காலம் இப்படியே நீண்டுகொண்டு இருக்க முடியாது. குறிப்பிட்ட ஒரு மூன்று வருஷ காலத்தைதான் இதற்கு ஆயுட்காலமாக வைக்க முடியும். அதோடு பஞ்சாயத் கிராம பகுதிகளில் முக்கியமாக இருக்கக்கூடிய விவசாய வேலைகளுக்கு இந்த பஞ்சாயத்து பெரும் பொறுப்பாக இருக்கவேண்டும். விவசாய மராமத்து வேலைகள், புதிய திட்டங்கள் முதலியவற்றை நிறைவேற்றுவதற்கு இந்த பஞ்சாயத்துக்களுக்கு சக்தியிருக்க வேண்டும். அதற்கு நிதி நிலைமை அவசியமாக இருக்க வேண்டியிருக்கிறது. இதற்கு வேண்டுமானால் நமது மாகாணத்திற்கு நில வரியாக கிடைக்கும் 4 கோடி ரூபாயை பஞ்சாயத்துகளுக்கு கொடுக்கலாம் என்றுதான் நான் சொல்வேன். இந்த 4 கோடி ரூபாய் நமது மொத்த வருமானமான 50 கோடியில் ஒரு பெரும்பகுதியாக கருத முடியாது. நில வரம்பு உச்ச பட்ச வரம்பு நிர்ணயிக்கும்போது இந்த நிலைமை எப்படியும் மாறித்தான் ஆகவேண்டும். ஆகவே அந்த பிராந்தியத்திலிருந்து கிடைக்கும் நிலவரியை அந்தந்த பஞ்சாயத்துகளுக்கு கொடுத்துவிடுவதுதான் நல்ல முறையாக இருக்கும். பஞ்சாயத்தின் நிர்வாகம் நல்ல முறையில் நிர்வாகம் இருக்க வேண்டுமானால் இந்த விதத்தில் நிதி உதவி ரொம்பவும் அவசியமாக இருக்கிறது. ஆகவே இதை ஆலோசனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்ததாக பஞ்சாயத் ஜில்லா போர்டு முறையை மாற்றி ஜில்லா அபிவிருத்தி கவுன்ஸிலாக்க வேண்டுமென்று தீர்மானித்து இருக்கிறார்கள். பஞ்சாயத்து யூனியன் என்று இருந்தால் ஜில்லா போர்டு அவசியமில்லை என்றுதான் நானும் கருதுகிறேன். ஆனால் ஜில்லா நிர்வாகம் மாற்றப்பட்டால் சில நிர்வாக காரியங்களுக்கு மதராஸுக்கு வரவேண்டிய நிலைமை ஏற்படும். அதிலும் குறிப்பாக கன்னியாகுமரி நண்பர்களுக்கு இது மிகவும் கஷ்டமாக இருக்கும். ஆகவே இந்த நிர்வாக காரியங்களுக்கு எல்லாம் ஒரு ரீஜனல் யூனிட்டு அவசியமாக வேண்டியிருக்கிறது. அபிவிருத்தி கவுன்ஸிலில் அதிக பங்கு கொள்வதற்கு சட்டசபை அங்கத்தினர்களுக்கும் ஸ்தல ஸ்தாபனங்களுக்கும் பெரும் பங்கு கொடுத்திருப்பது வரவேற்கத்தக்க அம்சமாகும். ஆனால் இந்த முறை எவ்வளவு காலத்திற்கு நிரந்தரமாக இருக்கும் என்பது



4th November 1957] [Sri A. P. C. Veerabahu]

சந்தேகமாக இருக்கிறது. நம்முடைய பிராந்திய தன்மையை பிரித்திருப்பது இங்கிலாந்தின் தன்மையை போல் பிரிந்திருப்பதாக வெள்ளை அறிக்கையிலிருந்து தெரிகிறது. இங்கிலாந்தில் இருக்கின்ற பாரிஷ் பரோ, கௌண்டி கௌன்ஸில் என்ற அடிப்படையில் பஞ்சாயத், பஞ்சாயத் யூனியன், ஜில்லா அபிவிருத்தி கவுன்ஸில் என்ற முறையில் தீர்மானித்திருக்கிறார்கள். ஆனால் நமது நாட்டுக்கும் இங்கிலாந்து தேசத்திற்கும் அடிப்படையான சில வித்தியாசங்கள் இருக்கிறது. இங்கிலாந்து தேசம் குறுகிய தேசம். குறுகிய எல்லை விவகாரம் உள்ள ஒரு தேசம். அந்த தேசத்தில் அனுபவத்தை அப்படியே நாம் ஏற்றுக்கொள்ள வேண்டிய அவசியமில்லை. நம்முடைய பஞ்சாயத்து முறைதான் மற்ற நாடுகளுக்கு போய் இருக்கிறது என்று சொல்லலாம். பஞ்சாயத்து என்று சொல்லப்படுவது ஐந்து பேர் கொண்ட குழு என்று புராதனமாகவே சோழன் காலத்திலிருந்து இருந்து வந்திருக்கிறது. ஆகவே நமக்கே பழைய அனுபவங்கள் இருக்கிறது. ஆகவே நீண்டகாலமாகவே ஜில்லா டெவலெப்மென்ட் கவுன்ஸில் செயல்பட முடியாத நிலைமையில் இருந்திருக்கிறது. இதற்கு இப்போது **1962** என்று ஒரு டார்ஜட் நியதியை தற்காலிகமாக வைத்திருக்கிறார்கள். ஆனால் மதுவிலக்கு ஆலோசனை போர்டு, போன்ற அட்வைஸர் போர்டுகள் நீடித்திருக்கலாம். அட்வைஸரி போர்டில் அதிகாரப் பற்றற்றவர்கள் தலைவர்களாக இருக்கலாம் என்று சொல்லப்பட்டது. அவ்விதம் இருப்பது நல்லது அல்ல. அட்வைஸரி போர்டில் அதிகாரப்பற்றற்றவர்கள் இருப்பதால் பல சங்கடங்களும் ஏற்படுகிறது. ஆகவே ஜில்லா அட்வைஸர் அதிகாரப்பற்றற்றவர்கள் இருப்பது நல்லது அல்ல என்று கூறிக்கொள்கிறேன். அடுத்ததாக பஞ்சாயத்து யூனியன் சிறந்த முறையாகத்தான் இருக்கிறது. அதன் ஆயுட்காலம் பஞ்சாயத்துகளுக்கு நிர்ணயித்திருப்பது போலவே நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் கிராம பஞ்சாயத்து 5 வருஷம் என்று கொடுக்கும்போது பஞ்சாயத் யூனியன்களுக்கும் 5 வருஷம் என்று கொடுப்பது மக்களுக்கு பிரயோஜனமாக இருக்காது. அதற்கு மாற்றமாக இருக்கக்கூடிய அங்கத்தினர்களில் ஐந்தில் ஒரு பாகம் என்றோ அல்லது மூன்றில் ஒரு பாகம் என்றோ ரிட்டயர் ஆக கூடிய விதத்தில் ஆயுட்காலம் அமைக்கப்பட்டால் 5 வருடத்திற்கு ஒரு தடவை அல்லது மூன்று வருடத்திற்கு ஒரு தடவை மாற்றி அமைக்க முடியும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். அடுத்ததாக இதனுடைய நிர்வாகத்தைப்பற்றி மேற்பார்வை செய்வதற்கு ரெவின்யூ அதிகாரிகளுக்கு அதிகாரம் கொடுக்கவேண்டும் என்று நிர்ணயித்திருப்பது நல்லது அல்ல. இந்த அதிகாரத்தை ஸ்தல ஸ்தாபன அதிகாரியிடமே கொடுக்கப்படவேண்டும். ஜனநாயகத்தில் ஸ்தல ஸ்தாபன அதிகாரிகள் ரொம்பவும் முக்கியமானவர்கள். ரெவின்யூ அதிகாரிகள் ஜனநாயக ரீதியில் நிர்வாகத்தை பார்க்க முடியாது. தற்போது வேண்டுமானால் பஞ்சாயத்து நிர்வாக சிக்கல்களுக்காக வேண்டிய இவர்களிடம் தற்காலிகமாக கொடுத்து இருந்தாலும் இதை மாற்றி ஸ்தல ஸ்தாபன அதிகாரிகளிடமே கொடுக்க வேண்டுமென்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இதை தவிர முனிசிபாலிட்டியைப்பற்றி சில முக்கியமான கருத்துக்கள் சொல்ல வேண்டியிருக்கிறது. அவைகளுக்கு 5 வருடம் ஆயுட்காலம் என்று வைத்திருப்பது விரும்பத்தக்கதல்ல. இப்போது இருக்கிற 3 வருடகாலம் என்றிருப்பதை மாற்றி 5 வருடம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதற்கு காரணம் சொல்லப்படுவது அடுத்த தேர்தல் வரும்போது இந்த தேர்தலும் சேர்ந்ததாக இருக்கும் என்று சொல்லப்படுகிறது. அவ்விதமாக சொல்லப்படுகிறது காரணம் அவ்வளவு போதுமான காரணம் அல்ல என்றுதான் நான் சொல்லுவேன். அடுத்த நவம்பரில் முனிசிபாலிட்டிகளின் ஆயுட்காலம் முடிவடைகிறது. **1961**-ம் வருஷத்தில் முனிசிபாலிட்டிகளுக்கு தேர்தல் நடந்து விடும். பொது தேர்தல் **1962**-ல் நடக்கும். ஆகவே இந்த காரணங்கள் சொல்லப்பட்டிருப்பது சரியல்ல. ஆகவே 3 வருஷம் என்றிருப்பது போதுமென்றே நினைக்கிறேன். அதை சர்க்கார் ஒத்துக்கொள்ளும் என்று நம்புகிறேன். சேர்மென்களுக்கு அதிகாரங்கள் கொடுக்கவேண்டும் என்பதில் எந்த அபிப்பிராய வித்தியாசமும் இல்லை. காலத்தினுடைய போக்கை உத்தேசித்து மக்களுடைய பங்கு

[Sri A. P. C. Veerabahu] [4th November 1957

இதில் எவ்விதம் இருக்கிறது என்பதை ஆலோசித்து அதிகாரங்களை கொடுக்கவேண்டும். இப்போதெல்லாம் கீறல் போடுகிறவர்கள் கூட தலைவர்களாக இருந்து வருகிறார்கள் என்று சொல்லப்பட்டது. இவர்கள் பொது ஜனங்களுடைய பிரதிநிதியாக இருப்பதால் சேர்மென்களுக்கு அதிகாரம் கொடுக்கப்படவேண்டியது அவசியம் என்றுதான் நினைக்கிறேன். இப்போது ஹெல்த் ஆபீஸராக இருப்பதை ரீஜனல் ஆபீஸராக இருந்தால் போதும் என்று ஆலோசனை சொல்லப்பட்டிருக்கிறது. இப்போது (பாப்புலேஷன்) ஜனத்தொகை அடிப்படையைக்கொண்டுதான் நிர்ணயிக்கப்பட்டிருப்பதாக தெரிகிறது. ஏரியாவை வைத்து கணக்கிடப்படவில்லை என்று தெரிகிறது. ஒரு டவுனுக்குள் அதாவது ஒரு மைல், இரண்டு மைலுக்குள்ளாக ஏராளமான மக்கள் வசிக்கும் பொழுது இவ்விதம் ரீஜனல் ஹெல்த் ஆபீஸராக வைத்திருப்பது போதாது, தனித்தனியாக ஹெல்த் ஆபீஸர் இருக்கவேண்டியது அவசியம் என்பதை சர்க்கார் உணர வேண்டும். விஸ்தாரமான பிரதேசங்களில் இந்த ரீஜனல் ஆபீஸர் என்றிருப்பது பொருத்தமல்ல என்றுதான் நினைக்கிறேன். ஆகவே நெருக்கமான இடங்களில் அதிகமாக ஹெல்த் ஆபீஸர்கள் இருக்கவேண்டியது மிக அவசியம், ஆகவே இந்த ரீஜனல் ஆபீஸர் என்ற முறையில் வைத்திருப்பதை மாற்றி ஹெல்த் ஆபீஸர்களை கூடுதலாக வைக்கவேண்டும் என்றும் அதற்காக முடிவுகளை சர்க்கார் எடுக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

The bell was rung and the hon. Member resumed his seat.

* **SRI J. MATHA GOWDER :** கனம் சபா நாயகர் அவர்களே, ஸ்தல ஸ்தாபன அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் வெள்ளை அறிக்கையை ஆதரித்து சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். இப்போது பஞ்சாயத்துக்களை ஒன்று சேர்த்து **block level** இல் பஞ்சாயத்து யூனியன்கள் அமைக்க வேண்டும் என்பது வரவேற்கத்தக்கது. அப்படி அமைக்கும் போது அந்த பஞ்சாயத்து யூனியன்கள் எந்த எந்த வேலை செய்ய வேண்டும், கிராம பஞ்சாயத்துகள் என்ன வேலை செய்யவேண்டுமென்றும் விவரங்கள் இந்த அறிக்கையில் தென்படவில்லை.

(Dr. Srimathi T. S. Soundaram Ramachandran in the Chiar.)

பஞ்சாயத்துகளுக்கு சேரவேண்டிய **Surcharge, Stamp duty** போன்ற பெருந்தொகையை பஞ்சாயத்து யூனியனிடம் ஒப்படைக்கவேண்டுமென்றும் பஞ்சாயத்துக்கள் தங்கள் செலவுக்கு வேண்டிய பணத்தை அந்த யூனியன் மூலம்தான் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று ஒரு விதி வெள்ளை அறிக்கையில் இருக்கிறது. பஞ்சாயத்துக்கு அதிக அதிகாரங்கள் கொடுக்க வேண்டுமென்ற இந்த நாளில், பஞ்சாயத்து யூனியனிடமிருந்து பஞ்சாயத்துகள் பணம் பெற்று செலவுசெய்யவேண்டுமென்று சொல்லுவதாவது அவைகளுடைய அதிகாரத்தை நாம் பிடுங்குவதுபோல் ஆகும். பஞ்சாயத்துகளின் அதிகாரத்தை குறைப்பதற்கு பதிலாக அவைகளை கலைத்து விட்டு பஞ்சாயத்து யூனியன்களை மட்டும் வைத்துக்கொண்டால் கூட நல்லது. ஒரு பஞ்சாயத்து தலைவர் அவசரச் செலவுகளுக்கு தன்னிடம் ரூ. 250 வைத்து இருக்கலாம் என்பதை ரூ. 500 ஆக உயர்த்த யோசனை கூறி இருப்பதைத்தவிர, பஞ்சாயத்துக்கு எந்தவிதமான அதிக அதிகாரமும் கொடுக்கப்படவில்லை. பஞ்சாயத்து யூனியனிடம் அவைகள் கையேந்தி நிற்பது தவறு என்று எல்லோரும் அபிப்பிராயப்படுகிறார்கள்.

பஞ்சாயத்து யூனியன் தங்களுடைய **Annual Budget Estimate**-ஐ எப்படி தயார் செய்யப்போகிறார்கள் என்பது தெரியவில்லை. பஞ்சாயத்துகள் மின்சார விளக்கு போடுதல், ரோட்டு வசதி செய்து கொடுத்தல் போன்ற வேலைகளுக்காக பணம் கேட்டால், பஞ்சாயத்து ஆபீஸர் 3 வருஷத்து சராசரி கணக்கை கேட்கிறார். பஞ்சாயத்துகள் 100-க்கு 15 சத விகிதம்தான் இம்மாதிரி விஷயங்களில் செலவு செய்யவேண்டுமென்று வரையறுக்கப்பட்டிருக்கிறது. இதனால் பெரும் தொகை பஞ்சாயத்து யூனியன்களுக்கு போய்விட்டால், மீதி இருக்கக்கூடிய பணத்தை வைத்துக்கொண்டு பஞ்சாயத்துகள் என்ன வேலை செய்யமுடியும். பெருந் தொகைகள் பஞ்சாயத்து



4th November 1957] [Sri J. Matha Gowder]

யூனியனுக்கு போய்விட்டால், மீதி இருக்கக்கூடியவை வீட்டு வரி, தொழில் வரி, சைகில் வரி, போன்றவைதான். இந்த வரிகளை வசூலித்து பஞ்சாயத்துக்கள் தங்களை வேலைகளை நடத்துவது என்பது அசாத்தியமான காரியம். இவ்வரிகளை செலுத்துவோர், அப்பகுதிகளில் 50,100 பேர் இருப்பது கூட அரிது. அதுவும் பெரும் வெறுப்பை சம்பாதித்துதான் இந்த வரிகளை வசூலிக்கவேண்டியிருக்கிறது. இதிலும் ஒரு சிக்கல் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. தற்சமயம் இவ் வரிகளை **Bill-Collector** மூலமாக வசூல் செய்து விடுகிறார்கள். ஆனால் வெள்ளை அறிக்கையில் இந்த வேலையை கிராம அதிகாரிகளிடமே விட்டு விட்டு, அவர்களுக்கு $6\frac{1}{4}$ சத விகிதம் கமிஷன் கொடுத்து விடலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இது சரியல்ல. ஏற்கனவே கிராம அதிகாரிகளுக்கு அதிக வேலை இருக்கிறது. அதனால் சம்பளம் அதிகம் வேண்டுமென்று அவர்கள் கேட்டும் தங்கள் வெறுப்பை தெரிவித்துக்கொண்டிருக்கும் இந்த காலத்தில் அவர்களுக்கு மேற்கொண்டு வேலை கொடுப்பது சரியல்ல. தவிர வேலையில்லா திண்டாட்டத்தை போக்க வேண்மென்று கருதி அதிக பேர்களுக்கு வேலை வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று சொல்லுகின்ற இந்த காலத்தில் இந்த **Bill-Collector** செய்யக்கூடிய வேலையை கிராம அதிகாரிகளுக்கு கொடுப்பதால், அவர்கள் வேலை இழந்துவிடும் நிலைமை ஏற்படும். அவர்கள் தொடர்ந்து வேலையில் வைத்துக்கொள்ளப்படுவார்களா, அல்லது அவர்களுக்கு மாற்று வேலை கொடுக்கப்படுமா என்ற விவரங்கள் அறிக்கையில் இல்லை. அந்தப் பகுதிகளில் கிடைக்கக்கூடிய பெரும் தொகைகளை பஞ்சாயத்து யூனியனிடம் கொடுத்துவிடவேண்டும் என்று சொல்வது சரியல்ல. யூனியனில் ஒரு எக்ஸிக்யூடிவ் ஆபீசர், கமிஷனர் இருக்கிறார்கள். தற்போது கிராம பஞ்சாயத் தலைவர் ஓர் அங்கத்தினர் சொன்னது போல, வெறும் கை ரேகை பிரட்டும் தலைவர் அல்ல. அவர்களில் பலர் படித்தவர்களாகவும், அனுபவசாலிகளாகவும் இருக்கிறார்கள். அவர்கள் கமிஷனரிடமோ, எக்ஸிக்யூடிவ் ஆபீசரிடமோ தங்கள் பஞ்சாயத்துகளுக்குவேண்டிய பணத்திற்காக போய் நிற்கும்படியான நிலை இருக்கக்கூடாது. ஒவ்வொரு பஞ்சாயத்தின் வருமானமும் ஒரே மாதிரியாய் இருப்பதில்லை. வருமானம் அதிகமில்லாத பஞ்சாயத்துகளின் வேலை அப்படியே நின்று விடும். ஆதலால் ஒரு பஞ்சாயத்து பிரதேசத்தில் கிடைக்கக்கூடிய வருமானத்தை அந்த பஞ்சாயத்திற்கே கொடுத்துவிடவேண்டும்.

பஞ்சாயத்துகளுக்கு சுதந்திரம் இருக்கவேண்டும். பஞ்சாயத்து தலைவர்களுக்கு சுதந்திரம் இருக்கவேண்டும். அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு வருபவர்கள். நியமனத்தில் **(Nomination)** வருபவர்கள் அல்ல. கிராம அதிகாரிகள் விஷயத்தில் பஞ்சாயத்து தலைவருக்கு எவ்வித அதிகாரமும் இல்லை. அவர்களுக்கு விதி விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் சில சமயங்களில் கிராம அதிகாரிகள் செய்யத் தவறிய வேலைகளுக்கு பஞ்சாயத்து தலைவர் பொறுப்பு ஏற்கவேண்டிய நிலைமை ஏற்படுகிறது. உதாரணமாக தொழில் வரியை ஆறு மாதம் ஒரு வருடத்திற்குள் வசூல் செய்யவேண்டும். அப்படி செய்யாது போனால் மூன்று வருடத்திற்கு பிற்பாடு பஞ்சாயத்து தலைவர் **write off** செய்ய வேண்டும். அப்படிச் செய்யாவிட்டால் அவர் பேரில் **surcharge** விதிக்கப்படுகிறது. இப்போது கிராமாதிகாரிகளிடம் இந்த வசூல் வேலை விடப்படுவதால் அவர்கள் வசூல் செய்யத் தவறினால் அவர்கள் பேரில் நடவடிக்கை எடுக்க விதி இல்லை. பஞ்சாயத்து தலைவரே அதற்கு பொறுப்பு ஏற்கவேண்டியிருக்கிறது. ஆகையால் பழைய முறைக்கே திருப்பி விடுவது நல்லது.

அடுத்தபடியாக புறம்போக்கு நிலங்கள் விஷயத்தை எடுத்துக் கொண்டால், ரெவின்யூ டிபார்ட்மென்டைக் கேட்டுத்தான் இவைகளை பஞ்சாயத்துக்கு மாற்றவேண்டியிருக்கிறது. இந்த நிலை மாற வேண்டும். பஞ்சாயத்து பிரதேசத்தில் உள்ள புறம்போக்கு நிலங்களை **automatic class II** ஆக அவைகளுக்கு மாற்றிவிடவேண்டும்.

**Class I** பஞ்சாயத்துகளுக்கும் **class II** பஞ்சாயத்துகளுக்கும் எவ்வளவோ வித்தியாசங்கள் இருக்கின்றன. அவைகளில் சில கிராமத்தில் உள்ளவைகளாகவும் சில கிராமத்திற்கும், நகரத்திற்கும் மத்தியில் உள்ளவையாக இருக்கின்றன. கிராமத்தில் உள்ள பஞ்சாயத்துகள் **Rural Water Supply Scheme** கீழ் வருகின்றன. கிராமத்திற்கும் நகரத்திற்கும் மத்தியில் உள்ள பஞ்சாயத்துகள் **Rural Water-Supply Scheme** கீழ் வராமலும் **Municipal Water Supply-Scheme** கீழ் வராமலும் போய்விடுகின்றன. இந்நிலை மாறி அவைகளை **Municipal Scheme** கீழாவது **Rural Water-Supply Scheme** கீழாவது கொண்டுவரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

**Sri S. RAMASWAMI THEVER :** கனம் தலைவர் அவர்களே, கிராமப் பஞ்சாயத்து அமைப்பினால் கிராம மக்கள் சுகமாக வாழலாம் என்ற காரணத்தினால்தான் கிராமப் பஞ்சாயத்து அமைப்பு ஏற்பட்டது. ஆனால் இங்குள்ள முறையில் கிராமப் பஞ்சாயத்துக்களுக்கு இருந்த அதிகாரங்கள் எல்லாம் போய்விடுகின்றன. முக்கியமாக, கைதூக்கும் தேர்தல் முறையின் பலாபலன்களை நாம் அறிவோம். சட்டசபை தேர்தலில் கூட வெற்றி பெற்ற கட்சியினரே பழி வாங்கும் கருத்துடன் இருந்ததாகச் சென்ற வாரத்தில் அறிந்தோம். அப்படியானால் தோல்வி அடைந்தவர்கள் என்ன செய்யக் கூடும் என்பதை நாம் தெரியப்படுத்த வேண்டியதில்லை. அதே போல, கிராமங்களில் கை தூக்கும் தேர்தல் முறை பெரிய பாதகத்தை விளைவிக்கும் என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன். கை தூக்கும் தேர்தல் முறை பழிவாங்கும் மனப்பான்மையை ஏற்படுத்தக் கூடும். ஆகையினால் கை தூக்கும் முறையை விட்டுவிட்டு ரகசிய முறையைத்தான் ஏற்படுத்த வேண்டும் என்பதை நான் சர்க்காரிடம் வலியுறுத்திக் கூறுகிறேன்.

அதோடு பஞ்சாயத்து போர்டு தலைவர்கள், இதுவரையில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்திருக்கிறார்கள். அம்முறையை விட்டுவிட்டு, இனிமேல் பஞ்சாயத்து மெம்பர்களால் பஞ்சாயத்து தலைவர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்ற முறையை நான் வரவேற்கவில்லை. இந்த முறையில் பல குறைபாடுகள் இருக்கின்றன. அங்கத்தினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டால், பலவித ஊழல்களும், சங்கடங்களும் ஏற்படும். மக்களின் நம்பிக்கையைப் பெறுதவர் தலைவராக வருவார். ஆகையால் பஞ்சாயத்துத் தலைவர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டியது அவசியம் என்பதை நான் வற்புறுத்திக் கூறுகிறேன்.

இரண்டாவதாக, பஞ்சாயத்து அங்கத்தினர்களின் பதவிக் காலத்தை 3 வருஷங்களிலிருந்து 5 வருஷங்களாக நீடிப்பதை நான் ஆதரிக்கிறேன். இதன் விளைவாக பஞ்சாயத்தை நிர்வகிக்க அவர்களுக்கு ஓரளவு அனுபவமும் ஆற்றலும் உண்டாகும் என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன். கிராம ராஜ்யம் என்பது, கிராமத்திலுள்ள மக்கள் கிராமத்தின் சுய தேவையைப் பூர்த்தி செய்துகொள்வதற்கு அவர்களாகவே ஆட்சி செலுத்தும் அளவிற்கு பஞ்சாயத்து போர்டைப் பயன்படுத்துவது ஆகும். அப்படி இருந்தும், வெள்ளை அறிக்கையில் கிராமப் பஞ்சாயத்துக்களுக்கு உள்ள அதிகாரங்கள் எல்லாம் ஏற்பட்டிருக்கின்றன. நிதி விஷயங்களை எல்லாம் சர்க்கார் எடுத்துக் கொள்கிறார்கள். இது வரையில் நிதிப் பிரச்னையினால்தான் கிராமப் பஞ்சாயத்துக்களை சரிவர நடத்த முடியவில்லை. இந்த வெள்ளை அறிக்கையில் ' லாண்ட் சர்சார்ஜ் ' ' ஸ்டாம்பு ட்யூடி ' ஆகியவைகள் எல்லாம் பஞ்சாயத்து யூனியன்களுக்குச் செல்லுகின்றன. அப்படிச் செய்தால் கிராம மக்கள் அவர்களுடைய பஞ்சாயத்து போர்டை எவ்விதம் நிர்வகிக்க முடியும் ? அவர்கள் கிராமத்திறகு எவ்விதம் நன்மை செய்ய முடியும் ? பணமில்லாமல் யாதொன்றும் செய்ய முடியாது. ஆகையினால் கிராமங்களுக்கே அதிக நிதியை ஒதுக்க வேண்டும். இன்னும், கிராமப் பஞ்சாயத்தில் வசூலிக்கக் கூடிய நிலவரி கிராமங்களுக்குச் செல்ல வேண்டும். அதில் ஒரு பகுதி கிராமப் பஞ்சாயத்திற்குச் சென்றால்தான் கிராமப் பஞ்சாயத்து செவ்வனே நடக்க முடியும்.





அடுத்தபடியாக, பஞ்சாயத்து யூனியனின் தலைவர், சர்க்காரால் நியமிக்கப்படும் கமிஷனர் போன்ற உத்தியோகஸ்தருக்குக் கீழ்ப்பட்டிருக்க வேண்டிய நிலை மிகவும் வருந்தத்தக்க விஷயம். தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர் உத்தியோகஸ்தருக்குக் கீழ் இருந்து அவருடைய கட்டளைப்படி நடக்க வேண்டிய நிலையை இந்த வெள்ளை அறிக்கை உண்டாக்கி இருப்பது மிகவும் வருந்தத்தக்க விஷயம். கமிஷனர் என்ற முறையில் இல்லாமல் செக்ரடரி என்ற முறையில் அந்தப் பதவி இருக்க வேண்டும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மேலும், பஞ்சாயத்து யூனியன்களில் வருடத்திற்கு ஒரு முறை அல்லது இரண்டு முறைகள்தான் கூட்டங்கள் போடவேண்டும் என்று வெள்ளை அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. இதனால் பல சங்கடங்களும் கெடுதல்களும் ஏற்படும். காரணம், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பஞ்சாயத்து யூனியன் அங்கத்தினர்கள் ஒன்றும் தெரிவிக்க முடியாத நிலைமையில் இருப்பார்கள். வரவு செலவுக் கணக்கை காண்பிப்பதற்கும் செய்ய வேண்டிய காரியங்களைப் பற்றிச் சொல்வதற்கும் ஒரு தடவை கூட்டப்படலாம் என்று குறிப்பிட்டிருக்கிறது. கூட்டம் மாதம் ஒரு முறை நடக்க வேண்டும். அங்கேயுள்ள அட்வைசரி போர்டு அங்கத்தினர்கள் எடுத்துச் சொல்லும் குறைபாடுகளைக் கேட்பதற்கு வகை செய்யும் முறையில் வகுக்கும் விதி இருக்க வேண்டும்.

மற்றபடி, கிராமப் பஞ்சாயத்து போர்டுகளுக்கு அதிக அதிகாரங்களைக் கொடுத்து, மக்கள் ஆட்சி செலுத்தக் கூடிய அளவிற்கு அவைகளைப் பயிற்சிக் கூடங்களாக ஆக்குவதற்கு வேண்டிய வழி வகைகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

**Sri S. NAGARAJA MONIGAR :** கனம் சபைத் தலைவர் அவர்களே, நமது அரசாங்கத்தில் முக்கியமாக இரண்டு இலாகாக்கள் உள்ளன என்றால், ஒன்று தேசீய அபிவிருத்தித் திட்ட இலாகா—நமது கனம் முதலமைச்சர் தலைமையில் இயங்குவது ; மற்றொன்று கிராமப் பஞ்சாயத்துக்கள் சம்பந்தப்பட்ட இலாகா—கனம் ஸ்ரீமதி லூர்து அம்மையார் தலைமையில் இயங்குவது. இவ்விரண்டும்தான் சுயராஜ்யம் வந்த பிறகு தற்போதைய அரசியலுக்கு மிக முக்கியத்துவம் கொடுக்கக் கூடியவை. ஒரு கனம் நண்பர் சொன்னது போல், நமது அரசியலில் அடிப்படை உறுப்புகளாக கிராமங்கள் அமைய வேண்டும் என்று ஒரு ஷரத்து—40வது ஷரத்து—அரசியல் சட்டத்தில் சேர்க்கப்பட்டிருப்பது வாஸ்தவம். நமது சர்க்காரும் அதை உத்தேசித்து, பொருளாதார நிலையிலும் அரசியல் துறையிலும் ஒரு மாறுதலைக் கொண்டுவர வேண்டுமானால் இந்தத் துறையில் அதைக் கொண்டுவர முடியும் என்று எண்ணி, அதற்காக இந்த வெள்ளை அறிக்கையைக் கொண்டு வந்திருப்பது மிகவும் பாராட்டத்தக்க விஷயம்.

நான் ஓரிரு விஷயங்களைச் சொல்ல வேண்டியிருக்கிறது. ஒரு பஞ்சாயத்தை அமைப்பதற்கு குறைந்த அளவு 500 ஜனத் தொகை வேண்டும் என்று வெள்ளை அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறது. இதில் மைனர்கள், குழந்தைகளைக் கழித்தால், 250 ஆகலாம். மேலும் பெண்களைக் கழித்தால், 125 ஆகலாம். ஆகவே ஒரு கிராமத்தில் 125 இல்லங்கள் இருப்பதாக வைத்துக்கொண்டால், இவ்வளவு குறைந்த பேர்களுக்கு பஞ்சாயத்துக்களை அமைத்து, அவர்கள் அரசியல் மற்ற துறைகளில் இயங்க வேண்டும் என்று கூறுவது அவ்வளவு உசிதமாக இருக்காது என்று சொல்லிக்கொள்கிறேன். ஆகவே குறைந்த பட்சம், 1,000 என்றாவது வைத்துக்கொள்ள வேண்டாமா என்று தோன்றுகிறது. இதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, அதிகாரங்களைப் பரவலாக்க வேண்டுமென்ற தற்போதைய கொள்கைப்படி வெள்ளை அறிக்கை கொண்டுவரும் இந்த நேரத்தில், இந்த நாட்டின் முன்னேற்றத்திற்காக நாம் சற்று வேகமாக முன்னேற வேண்டுமென்று நினைக்கும் இந்த நேரத்தில், நாம்

[Sri S. Nagaraja Monigar] [4th November 1957

ஜில்லா போர்டுகளை எல்லாம் எடுத்துவிட்டு கீழே பரவலாக அதிகாரங்களைக் கொடுக்க வேண்டுமென்று நினைத்தாலும்கூட, ஒரேயடியாக, அதிதீவிரமாக ஒரு பிளாக் லெவலில் அந்த அதிகாரங்களைக் கொண்டுபோவது அவ்வளவு உசிதமா என்று நாம் யோசிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

(Mr. Speaker in the Chair.)

ஏனென்றால் முந்திய பஞ்சாயத்துச் சட்டத்தில் நாம் சற்று வேகமாகத்தான் போனோம். நேரடி தேர்தல் முறையில் பஞ்சாயத்து தலைவர்களை எடுக்க முன்வந்தோம். இன்னும் ஐந்து வருஷங்கள் ஆகவில்லை. சற்று பின் செல்லுகிறோம். ஆகையினால் இந்த இடத்தில் கொஞ்சம் யோசிக்க வேண்யதாக இருக்கிறது. முன்புகூட ஒரு அங்கத்தினர் எடுத்துக் காண்பித்தார், ஜனத் தொகையை அடிப்படையாகக் கொண்டு விஸ்தீர்ணத்தைக் கொண்டிருக்கிறார்கள், அது அவ்வளவு உசிதம் அல்ல என்று சொன்னார். உதாரணமாக திருச்செங்கோடை எடுத்துக்கொண்டால் அங்கு ஜனத்தொகை அதிகமாக இருக்கின்ற காரணத்தால் நாலைந்து பிளாக்குகளாக ஏற்படுத்தப்பட்டது. ஹோசூர், தர்மபுரி கவுன்சிலாக ஆக்கக்கூடிய விஸ்தீர்ணம்தான் வரும். அது அவ்வளவு பொருத்தமாக இருக்காது. இதற்கு இரண்டு தாலுகா போர்டாக இருந்தது. அதை எடுத்துவிட்டு ஒரு தாலுகா போர்டு யூனியனாக நிர்வகித்தால் அது சரிவர இருக்குமா என்பது சந்தேகம்தான். ஆனால் அரசாங்கம் அதை ப்ளாக் லெவலில் எடுத்துக்கொள்வதாகத் தோன்றுகிறது. அதையும் ஒரு வேளை பரீக்ஷை செய்து பார்த்துவிடலாம்.

இப்பொழுது கிளாஸ் 1 பஞ்சாயத்தைப் பற்றி இந்தச் சட்டத்தில் அதிகம் கூறப்பட்டுள்ளதாக எனக்குத் தெரியவில்லை. கிளாஸ் 2 பஞ்சாயத்து கிராமங்களில் 50 வீடுகள் அல்லது 100 வீடுகள் இருக்கலாம். கொல்லை மேடுகளில் 10 அல்லது 15 வீடுகள் இருக்கலாம். அப்படி இருப்பது எல்லா அங்கத்தினர்களுக்கும் தெரிந்த விஷயம். மேஜர் பஞ்சாயத்து என்று சொல்லக்கூடிய நகரங்கள் முதலியவைகள் இருக்கக்கூடிய இடங்களில் முனிஸிபாலிடிகள் ஏற்படுத்த வேண்டும் என்று சொல்லுகிறார்கள். அப்படிப்பட்ட இடங்கள் சற்று பிற்போக்காக இருக்கும் காரணத்தால் முனிஸிபாலிடிகளை ஏற்படுத்த வேண்டாம் என்று மேஜர் பஞ்சாயத்துக்கள் எதிர்த்துக்கொண்டும் இருக்கிறார்கள். சேலம், ராசிபுரம் முதலிய இடங்களில் முனிஸிபாலிடி இருக்கின்றன. தர்மபுரி, கிருஷ்ணகிரி முதலிய இடங்களில் முனிஸிபாலிடிகள் கிடையாது. அங்கு முனிஸிபாலிடி வரவேண்டுமென்று சொல்லுகிறார்கள். முனிஸிபாலிடியாக்க வேண்டியதற்கு வேண்டிய ஜனத் தொகை இருக்கிறது. லட்சம் ரூபாய்க்கு மேல் வரவு செலவு செய்துவருகிறார்கள். அங்கே எல்லாம் முனிஸிபாலிடிகளை அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். எக்சிக்யூடிவ் ஆபீசர்கள் வந்தபின் அவர்களைப் பற்றிக் குறைகளைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அதைப் பற்றி எனக்கு நன்றாகத் தெரியும். நானும் பஞ்சாயத்திலும் ஜில்லா போர்டிலும் மெம்பராக இருந்திருக்கிறேன். அங்கே எல்லாம் எக்சிக்யூடிவ் ஆபீசர்கள் இருப்பது ஒரு இழுக்கு என்று சொல்லுகிறார்கள். அவர்களை எல்லாம் நம்ப வேண்டும் என்று சொன்ன காலம் போய்விட்டது. ஆனால் கிளாஸ் 2 பஞ்சாயத்துக்களுக்கு ஒருவாறு இருக்கலாம் என்று சொல்லலாம். அதற்கு நான் ஒப்புக்கொள்ளவில்லை. ஜில்லா போர்டு அதிகாரங்களை எல்லாம் யூனியனுக்குக் கொடுக்கும்போது அவர்கள் ஜில்லா போர்டு காரியதரிசியாக இருக்கலாம். இதையும் சர்க்கார் கொஞ்சம் கவனிக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

மூன்று வருஷங்களை ஐந்து வருஷங்களாக ஆக்க வேண்டும் என்று சொல்லுகிறார்கள். அது ஒருகால் அரசியல் காரணங்களுக்காக இருக்கலாம். மற்ற எந்தக் காரணங்களைக் கொண்டு அரசாங்கம் இதைக் கொண்டு வந்தாலும் இதைப் பரீட்சார்த்தமாக ஏற்றுக்கொள்ளலாம்.



4th November 1957] [Sri S. Nagaraja Monigar]

அதுவும் அவ்வளவாக என் மனதிற்குப் பிடிக்கவில்லை. சில கிராமங்களில் நிர்வாகங்கள் சரிவர நடைபெறவில்லை என்றெல்லாம் சொல்லப்படுகிறது. இப்பொழுதுள்ள ஐந்து வருஷங்களோ இன்னும் ஐந்து வருஷங்களானாலும் அந்த கிராமத்தின் கதி அதோ கதிதான். இப்படிப்பட்ட தலைவர்களை வைத்துக்கொண்டிருந்தால், ஐந்து வருஷங்களுக்கு வரக் கூடியவர் இன்னும் ஐந்து வருஷங்களுக்கு வருவதற்கு சௌகர்யமாக இருக்கும். அப்படி இல்லாமல் மூன்று வருஷங்களுக்கு என்று வைத்தால்தான் இருக்கும் மூன்று வருஷங்களுக்குள் ஏதாவது ஜனங்களுக்கு சௌகர்யம் செய்யலாம். இல்லாவிட்டல் மூன்று வருஷங்களான பிறகு தலைமைப் பதவியிலிருந்து விலக்கி விடுவார்கள் என்ற பயத்தினால் கிராமங்களுக்கு ஏதாவது சௌகர்யம் செய்ய முன்வருவார்கள், மூன்று வருஷங்களுக்கு ஒரு முறை தலைவரை எடுக்க வேண்டும் என்று வைத்தால்தான் அவர்கள் கிராமங்களுக்குப் பாடுபடுவார்கள். ஆகவே இந்தக் காரணங்களினால் சர்க்கார் என்ன செய்யப் போகிறார்கள் என்பது தெரியவில்லை, போக போகத் தெரியும்.

ஜில்லா விஸ்தீர்ணத்தைப் பொறுத்து கவுன்ஸிலை இரண்டாகப் பிரிப்பது என்பது ரொம்பவும் வரவேற்கத் தக்கது. அங்கே கலெக்டர் தலைமையில் கூடி திட்டங்களை வகுப்பதாக இருக்கிறது. இப்படி மீட்டிங் போடுவதால், மாதத்தில் பத்து அல்லது இருபது நாட்களுக்கு மீட்டிங் போடுவதாகி விடும். ஆதலால் கவுன்ஸில் மூலமாக குறைகளை நிவர்த்திக்கப்பட வேண்டும். ரோட் ட்ரான்ஸ்போர்ட் அட்வைசரி கமிட்டி மாத்திரம் இதில் சேர்க்கப்படவில்லை. என் அதை விலக்கியிருக்கிறார்கள் என்பது தெரியவில்லை. இதையும் இதன் கீழ் கட்டாயம் கொண்டுவர வேண்டும். ஆகவே ஜில்லாவை இரண்டாகப் பிரித்திருப்பது வரவேற்கத் தக்கது. எதிர்காலத்தில் ரெவின்யூ ஜில்லாக்களை எவ்விதமாகப் பிரித்தாலும் அவைகள் இப்பொழுதே பிரிக்கப்பட வேண்டுமா என்பதை ஆலோசித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மேலும் கிராமத் தலைவர் பயிற்சி முகாம் தேசீய விஸ்தரிப்புத் திட்டத்தில் வெகு குறுகிய காலத்தில் ஏற்பட்டிருக்கிறது. அப்படி ஏற்படுத்தி கிராமத் தலைவர்களை தயாரிக்கிறோம் என்று சொல்லுகிறார்கள். இப்படிப்பட்ட திட்டங்களை எவ்வளவு அவசர அவசரமாகச் செய்தாலும் கிராமங்கள் முன்னேற்றமடையவில்லை. கிராமங்களில் எல்லாம் பஞ்சாயத்து ஆக்ட் பிரகாரம் அவர்களுக்கு சிவில் கிரிமனல் அதிகாரம் கிடையாது. இப்பொழுது முதற்கொண்டே அவர்களுக்கு அந்த அதிகாரத்தைக் கொடுத்து அவர்களை தயாரிக்காமல் போனால் இன்னும் எந்த காலத்தில்தான் அவர்களை நம் நாட்டிற்குப் பயன்படுத்திக்கொள்ளபோகிறோம் என்பது தெரியவில்லை. ஏற்கனவே கிராமப் பஞ்சாயத்துக்களுக்கு சிவில் கிரிமனல் கேஸ்களில் தீர்ப்புக் கொடுக்கும்படியாக இருந்தது. அது போதாது. இப்பொழுதே என் அவர்களைப் பயன்படுத்திக்கொள்ளக்கூடாது, அவர்களை என் நம்பக் கூடாது என்று கேட்கிறேன். இப்படிப்பட்ட அதிகாரங்களை கிராமத் தலைவர்களுக்குக் கொடுக்காவிட்டால் தலைவர்களைக் கண்டு பயப்பட மாட்டார்கள். அவர்கள்மேல் நமக்கு நம்பிக்கை இருக்க வேண்டும்.

கடைசியாக ஒரே ஒரு வார்த்தையை மட்டும் தெரிவித்துக்கொண்டு முடித்துக்கொள்ளுகிறேன். கிராமங்களில் சண்டை சச்சரவுகள் ஏற்படுகின்றன என்று சொல்லப்படுகிறது. அங்கிருந்து சண்டை கூச்சல் வருவது வாஸ்தவம்தான். அவர்களுக்கு அரசியல் அதிகாரங்களைக் கொடுக்காவிட்டாலும் கிராமங்களில் எவ்வளவோ சண்டை கூச்சல்கள் இருந்துகொண்டுதானிருக்கும். அதனால்தான் கோர்ட்டுகள் பெரும்பாலும் அதிகரித்துக்கொண்டே போகிறது. அவர்களுடைய சண்டைகள் எல்லாம் கிராம அளவுக்குத்தான் இருக்குமே தவிர பெரிய சண்டைகளாக வருவதே இல்லை. பெரிய படித்த அறிவாளிகள் இருக்கக் கூடிய பெரிய ராஜ்யங்களில் வரக்கூடியது போல் உலக யுத்தத்தை உண்டாக்கக் கூடிய அளவிலும் அடாமிக் பாம்ப் போடக் கூடிய அளவிலும் தகராறுகள் வரப் போவதில்லை. கிராமங்களில் எப்படிப்பட்ட சண்டை கூச்சல் இருந்தாலும்

[Sri S. Nagaraja Monigar] [4th November 1957

அவைகள் அவர்கள் பழகக் கூடிய அளவில் போய்விடும். அதனால் அவர்களுக்குக் காரியங்களைச் செய்வதில் பின்தங்கவேண்டாம் என்று சொல்லிக்கொண்டு முடித்துக்கொள்ளுகிறேன்.

**Sri K. S. RAMASWAMY :** சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, இன்று கனம் ஸ்தல ஸ்தாபன மந்திரி அவர்கள் சமர்ப்பித்திருக்கின்ற வெள்ளை அறிக்கையின் மீது சில வார்த்தைகளைக் கூற விரும்புகிறேன். பொதுவாக இந்த லோகல் அட்மினிஸ்ட்ரேஷன் அல்லது ஸ்தல ஸ்தாபன ஆட்சி என்பதை சர்க்கார் 19-வது நூற்றாண்டின் இறுதிக் காலத்தில் மக்களுக்கு ஒரு பொறுப்புணர்ச்சியையும் கடமை உணர்ச்சியையும் உண்டாக்குவதற்கு கொண்டுவந்த ஒரு திட்டம். ஆனால் அன்று முதல் இன்று வரை சட்டத்தில் சில சில மாறுதல்கள் உண்டாகி இந்தச் சட்டம் கடைசியாக 1950-ம் வருஷத்திய பஞ்சாயத்து ஆக்ட் என்ற முறையில் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அந்தச் சட்டம் முதலில் வந்ததற்கும் இன்றைக்கு இருப்பதற்கும் மாறுதல்கள் இருக்கின்றன. நிர்வாகப் பொறுப்பை ஏற்ற சிலர் செய்த சில ஊழல்களாலும் குழப்பத்தாலும் இந்தச் சட்டத்தை சீர்திருத்த வேண்டும் என்று ஏற்பட்டதே ஒழிய ஆரம்பத்தில் ஏற்பட்ட நோக்கத்தில் எவ்விதமான மாறுதலும் செய்வதாகக் காணோம். புதிதாக இப்பொழுது சில மாறுதல்களை அரசியல் அமைப்புக்கு ஏற்ற ஜனநாயக முறையில் பஞ்சாயத்து ஆக்டை மாற்றி இருப்பது ஒன்றை மட்டும் சிறப்பாக இங்கே குறிப்பிட வேண்டும்.

இப்பொழுது வைக்கப்பட்டிருக்கும் வெள்ளை அறிக்கையிலே, குறிப்பாக "பஞ்சாயத்து எல்லை" என்பதை நாம் கவனிக்க வேண்டும். பொதுவாக ரெவின்யூ நிர்வாகத்திற்கேற்ப ரெவின்யூ கிராமங்கள் அமைந்திருக்கின்றன. ஆனால், இப்பொழுது ஏற்படுத்தப்பட்டுள்ள வெள்ளை அறிக்கையில் பார்க்கும்போது, ரெவின்யூ அதிகாரத்திற்கு ஏற்பட்ட கிராம அமைப்பையும், பஞ்சாயத்து நிர்வாகத்திற்கு ஏற்படப்போகும் கிராம அமைப்பையும் வேறு வேறாகப் பிரிக்கும் நோக்கம் இருப்பதாகத் தெரிகிறது. அந்த நோக்கம் இப்பொழுதுள்ள நிலையில், மக்களுடைய மனப்பான்மை இருக்கும்படியான நிலையில் சரியான நோக்கம் அல்ல என்பது என்னுடைய கருத்து.

ஆனால், அடிப்படையாக நோக்கும்போது 500 அல்லது அதற்கு அதிகமாக ஜனத் தொகையுள்ள ஒவ்வொரு பகுதிக்கும் பஞ்சாயத்து ஒன்று ஏற்படுத்த வேண்டும் என்பது ஒரு சிரிய நோக்கம் ஆகும். ஆனால், 500 அல்லது அதற்கு மேற்பட்ட ஜனத் தொகையுள்ள ஒரு பகுதியானது ரெவின்யூ கிராமத்தின் அடிப்படையாகவே இருக்க வேண்டும் என்பது என்னுடைய உறுதியான கருத்து. காரணம் என்னவென்றால், 500-க்கு மேற்பட்ட ஜனத் தொகையுள்ள பல பிரதேசங்களில் வசிக்கும் மக்கள் ஒன்றாகச் சேர்ந்து, ஒரு பஞ்சாயத்து அமைத்துக்கொள்ள வேண்டுமென்று விரும்பினால் அவர்களுக்கு இடம் கொடுப்பதாக இப்பொழுது வெள்ளையறிக்கையில் பார்க்கிறோம். அந்த முறையானது ஜாதி, மதம், என்று பல பிற்போக்குக் கொள்கைகளின் அடிப்படையிலும் பஞ்சாயத்துக்களை அமைப்பதற்கு இடம் கொடுக்கும். அப்பேர்ப்பட்ட அடிப்படைக் கொள்கையை மாற்றி ரெவின்யூ கிராமங்கள் அடிப்படையிலே பஞ்சாயத்துக்கள் அமைக்கப்பட வேண்டும்.

பொதுவாக, மதுரையில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் பஞ்சாயத்து யூனியன் முறையைச் சிறிது பார்க்கும்போது, அங்கே 200, 300 ஜனத் தொகை அடங்கிய ரெவின்யூ கிராமங்கள் இருப்பதாகத் தெரிகிறது. அப்பேர்ப்பட்ட ரெவின்யூ கிராமங்களில் 4 அல்லது 5 கிராமங்களை எடுத்துக்கொண்டு அவைகளை ஒன்றாகச் சேர்த்து பஞ்சாயத்து அமைக்கலாம். கோவை ஜில்லா போன்ற ஜில்லாக்களில் 2 ஆயிரம், 3 ஆயிரம் ஜனத் தொகையுள்ள ரெவின்யூ கிராமங்களும் இருக்கின்றன. அப்பேர்ப்பட்ட கிராமங்களை வசதிக்கேற்ப அவசியமான இடங்களில் பிரித்து பஞ்சாயத்துக்கள் ஏற்படுத்திக் கொள்ளலாம்.



4th November 1957] [Sri K. S. Ramaswamy]

தேர்தல் முறையிலே இப்பொழுது வோட்டுரிமை உள்ள அனைவரும், அதாவது சட்டசபைக்கு வோட்டளிக்கும் உரிமையுள்ள அனைவரும் பஞ்சாயத்து அமைப்பிலே பொறுப்புள்ளவர்களாக இருக்கிறார்கள். 1950-வது வருஷம் ஏற்பட்ட பஞ்சாயத்துக்கள் சட்டப்படி பஞ்சாயத்துத் தலைவர்களை ஜனங்கள் நேரடியாக எடுக்கலாம். அது போலவே ஒவ்வொரு வார்டு அல்லது பிரிவிக்குத் தகுந்த மாதிரி அங்கத்தினர்களை ஜனங்கள் நேரடியாக எடுக்கிறார்கள். இது ஒரே நிர்வாகத்திற்கு இரு வேறு விதமான வோட்டு எடுக்கும் தேர்தல் முறை பொருந்தாது என்று கண்டுதான், இப்பொழுது ஒரு திருத்தம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. அதாவது, முதலிலே வார்டு முறையிலே அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுத்து அவர்கள் பொறுப்புடன் ஒரு தலைவரைத் தேர்ந்தெடுத்து ஆட்சி நடத்தவேண்டுமென்பதை நான் வரவேற்கிறேன். ஆனால் சில அங்கத்தினர்கள் தலைவரை நேரடியாகத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்ற கருத்தைத் தெரிவிக்கின்றார்கள். அந்த கருத்துக்கும் நாம் இங்கே இடம் கொடுக்க ஒரு வாய்ப்பு இருக்கிறது. அதாவது ஒவ்வொரு கிராமத்திலும் பஞ்சாயத்து யூனியனுக்குப் பிரதிநிதி அனுப்ப வேண்டியிருக்கிறது. அப்படி பஞ்சாயத்து யூனியனுக்குக் கிராம மக்கள் மூலமாக எடுத்து இப்பொழுது தலைவரைத் தேர்ந்தெடுப்பது போல் பிரதிநிதிகளை அனுப்ப முடியுமா என்பதை சர்க்கார் யோசனை செய்யும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன். அதாவது தற்சமயம் ஒரு தொகுதியில் சட்டசபை, பார்லிமெண்ட் போன்ற வெவ்வேறு நிர்வாகத்திற்கு ஒரே சமயத்தில் அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுத்து அனுப்புகின்றார்கள். அதுபோல் பஞ்சாயத்து நிர்வாகத்திற்கும் பஞ்சாயத்து யூனியன் நிர்வாகத்திற்கும் பஞ்சாயத்து வார்டுக்கு எப்படி அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுக்கிறார்களோ அது போலவே பஞ்சாயத்து பூராவுக்கும் சேர்ந்து யூனியனுக்கு ஒரு அங்கத்தினரை நேரடியாக எடுத்து அனுப்பலாமா என்ற யோசனையை நான் சமர்ப்பித்துக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, நிர்வாக ஆட்சி காலத்தை ஐந்து ஆண்டுகளுக்கு உயர்த்தப்பட்டிருக்கிறது. இந்த முறையையும் சில மெம்பர்கள் கோரியபடி பரீட்சார்த்தமாக நாம் வைத்துக்கொள்ளலாம்.

அடுத்தபடியாக, அவர்களுக்குக் கொடுத்த அதிகார வரம்பு என்று கூறும்போது கனம் அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள். வீட்டு வரி போன்ற வரிகளை வசூல் செய்து கஜானாவில் டெபாசிட் செய்து, பின் வாங்கி செலவு செய்ய அவர்களுக்கு அதிகாரம் இருக்கிறது என்று கூறினார்கள். ஆனால் இது ஒரு பெரிய அதிகாரம் என்று நான் நம்பவில்லை. காரணம், வரி வசூல் செய்வதும், கஜானாவிலே போடுவதும், பின் அதை வாங்கி செலவு செய்வதும் சட்டங்களுக்கு உட்பட்டு, சட்டங்களுக்கு அடங்கி செய்யும் ஒரு காரியம். இது அந்தத் தலைவரோ அல்லது அங்கத்தினர்களோ பொதுவாக பஞ்சாயத்துக்களோ அவர்களுடைய ஆலோசனைக்குட்பட்டு செய்யும் ஒரு சாதுரியமான அல்லது புத்திசாலித்தனமான காரியம் அல்ல. ஆனால், அந்தப் பஞ்சாயத்திலே அல்லது அந்தப் பிரதேச வட்டத்திலே மக்களுக்கு ஏற்படும் ஒரு குழப்பம் அல்லது முக்கியமான செய்திகளைப்பற்றி அறிந்து அரசாங்கத்திற்கு யோசனை சொல்லவோ, அல்லது அவர்கள் பரிசீலித்து முடிவு செய்யவோ, அப்படிப்பட்ட பொறுப்பு வாய்ந்த சங்கதிகளை அந்தந்த பஞ்சாயத்துக்கு விட்டுவிட வேண்டும். உதாரணமாக, கிராமங்களில் வீட்டுக்கு இடம் தேவையாக இருக்கிறது. அப்பேர்ப்பட்ட விஷயங்களை ரெவின்யூ டிபார்ட்மெண்டார் கவனித்து வருகிறார்கள். அந்த நிர்வாக முறையினால் கிராம மக்களுக்கு மிகவும் இடைஞ்சலாகவும் பணம் செலவு செய்யக்கூடிய முறையிலும் அமைந்திருக்கிறது என்று நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அதுபோலவே, அதிகாரம் என்று பல விஷயங்களைப்பற்றிச் சொல்லலாம். தணிக்கை செய்தலும் மேற்பார்வையும் என்ற விஷயத்தையும் எடுத்துக்கொண்டால் பஞ்சாயத்துக்களுடைய கணக்குகளைப் பரிசீலனை செய்யவேண்டியது இப்பொழுது டெபுடி பஞ்சாயத்து ஆபீசருடைய

பொறுப்பிலே இருப்பதாக இந்த வெள்ளை அறிக்கையில் கண்டிருக்கிறது. பொதுவாக, ஒவ்வொரு கிராம மக்களுடைய நன்மதிப்பைப் பெற்ற தலைவர் என்று ஒருவர் இருந்துகொண்டு, ஒரு பஞ்சாயத்து அமைப்பும் இருந்துகொண்டு, அவர்கள் செய்யும் செலவை டெபுடி பஞ்சாயத்து ஆபீசர் என்று ஒரு சாதாரண உத்தியோகஸ்தர் பரிசீலனை செய்வது அவ்வளவு பொறுத்தமான முறை அல்ல என்பதையும் அந்த முறையை மாற்றி பொதுவாகவே டெபுடி பஞ்சாயத்து ஆபீசர் என்ற உத்தியோகத்தையே நீக்கி, அந்த அதிகாரத்தை நேரடியாக ரீஜனல் இன்ஸ்பெக்டர் அவர்களுக்கே கொடுத்துவிடலாம். அதற்கு சர்க்கார் வேண்டிய ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

பொதுவாகக் கூறுமிடத்து, அதிகமாக நான் இதைப்பற்றிச் சொல்வதைவிட, இந்த நிர்வாக முறையானது ஆரம்பத்திலே எந்த நோக்கத்துடன் ஏற்பட்டதோ அதன்படி அதாவது ஜனங்களுக்குப் பொறுப்புணர்ச்சியும் கடமையுணர்ச்சியும் அதிகமாக வளர்த்து, நாட்டிலுள்ள மக்கள் பெரும்பான்மையாக இந்த உணர்ச்சி ஊற்றிலிருந்து வளர்ந்து வரவேண்டிய ஏற்பாடுகளை இந்தச் சட்டத்தின்மூலம் நாம் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய வார்த்தையை இத்துடன் முடித்துக்கொள்ளுகின்றேன்.

12-27 p.m. **Sri P. S. SANTHANAM :** கனம் சட்டமன்றத் தலைவர் அவர்களே, இப்பொழுது சர்க்கார் கொடுத்திருக்கும் வெள்ளை அறிக்கைமீது சில வார்த்தைகள் சொல்லப் பிரியப்படுகிறேன். பஞ்சாயத்து என்று சொல்லும்போது, சாதாரணமான முறையிலே மக்கள் எல்லோரும் ஒன்றுகூடி தங்களுக்கு எது நியாயம் என்று தோன்றுகிறதோ அதைச் செய்துகொள்ளவேண்டும் என்ற ஒரு அடிப்படையிலே பெரியோர் அந்தக் காலத்திலே நியமனம் செய்திருக்கிறார்கள். அதையொட்டித்தான் சர்க்காரும் லோகல் போர்டு சட்டத்திலே 'பஞ்சாயத்து' என்ற பெயர் கொடுத்து கிராம மக்கள் 'தன் கையே தனக்கு உதவி' என்ற முறையில் தங்களுடைய கிராமத்தில் என்ன குறை இருக்கிறதோ அதை அவர்களே போக்கிக்கொள்ளவேண்டுமென்று அந்தக் காலத்தில் ஆட்சியாளர்கள் மக்களிடத்திலே ஒப்படைத்திருக்கிறார்கள். ஆனால், உண்மையிலேயே சில பஞ்சாயத்துக்கள் நல்ல முறையிலே அந்த நிர்வாகத்தை நடத்தாமல் ஏதோ தனக்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்துகொண்டு, பிற்பட்ட வகுப்பினர்களை உதாசீனம் செய்துவந்ததின்பேரில் அரசாங்கம் ஏதோ இந்த மாறுதலைக் கொண்டுவந்திருக்கிறார்கள். அந்த நிலைமையை மாற்றிவிட்டு இப்பொழுது இருக்கிற அந்தப் பஞ்சாயத்தை நல்லதோர் முறையிலே செய்வதற்குச் சட்ட திட்டங்களைக் கொண்டுவந்தால் நலமாக இருக்கும். ஆனால், தனி அமைச்சர் இருந்தும், தனி இலாகா இருந்தும், தனி அதிகாரி இருந்தும், பஞ்சாயத்து நிர்வாகம் நல்ல முறையிலே நடக்காமல் ஆமை வேகத்தில் போய்க்கொண்டிருந்து மீண்டும் இன்றைக்கு ஒரு அசைவற்ற நிலையில் நடந்துகொண்டிருக்கும் ப்ளாக் டெவலப்மென்ட் ஆபீசரையும், அவர்களுக்குக்கீழ் இருக்கும் கிராம சேவக் என்ற பெயரில் உலவிக்கொண்டு காற்று வாங்குகிறவர்களையும் கொண்டு, அந்தப் பஞ்சாயத்து நிர்வாகம் நடத்துவது கருவாட்டுக் கூடைக்குக் காக்கையைக் காவல் வைப்பது போல் இருக்கும் என்பது என்னுடைய அபிப்பிராயம். ஆகவே, இந்த நிலைமையை மாற்றி, அவர்களுக்கு அந்த நிலையைக் கொடுக்காத முறையிலே பஞ்சாயத்துத் தலைவர் பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்களுக்கு வேண்டிய அதிகாரத்தைக் கொடுத்து, சர்க்கார் பாதுகாப்பு கொடுக்க வேண்டும். உண்மையிலே சில பஞ்சாயத்துக்களை ஒன்று சேர்த்து ஒரு டிவிஷனுக்கு ஒரு பஞ்சாயத்து ஆபீசரை நியமனம் செய்து ஒரு கிராம அதிகாரியை நியமனம் செய்து அவர்களுடைய கண்காணிப்பில் வைத்து நல்ல சட்டத்தை வைத்து, சட்ட ரீதியாக ரோடு பராமரிப்பு, சுகாதார வசதிபோன்ற நல்லதோர் திட்டங்களை சர்க்கார் மூலமாக வகுத்து ஊழல் நடக்காத முறையில் பாதுகாப்புக்குவேண்டிய ஏற்பாடுகளைச் செய்தால் பஞ்சாயத்து முறை நன்றாக நடப்பதற்கு நலமாக இருக்கும்.



இப்பொழுது இருக்கின்ற நிலையை மாற்றினால் பொதுப் பணியிலே கிராம மக்களுடைய ஊக்கம் குறையும். மக்களுக்குச் செய்யவேண்டிய காரியங்கள் மாறிப்போய்விடும். கிராமத்திலுள்ள நிலச்சுவான்தார்களுக்கும் செல்வந்தர்களுக்கும், கிராமத்தின்மீது உள்ள பற்று அற்றுப் போய்விடும். கிராம பஞ்சாயத்திற்கு அதிகாரம் கொடுத்து அதற்கு வேண்டிய ஒரு அதிகாரியை நியமனம் செய்தால்தான், அவர்கள் கிராம மக்களுடன் தொடர்புகொண்டு கிராம மக்களுக்கு நன்மை செய்யவேண்டுமென்ற நோக்கம் கொண்டு நல்ல முறையில் வேலை செய்வார்கள்.

பஞ்சாயத்து நிர்வாகம் நல்ல முறையிலே நடைபெறவில்லை; சில இடங்களில் ஊழல்கள் இருக்கின்றன என்பதற்காகத்தான் அரசாங்கம் இந்த வெள்ளை அறிக்கையை கொண்டுவந்திருக்கிறார்கள். உண்மையிலேயே இந்த நிலைமைக்கு காரணம் யார் என்று உற்று நோக்குங்கால், சர்க்கார்தான் காரணம் என்பது என்னுடைய அபிப்பிராயம். ஏனென்றால் சர்க்காருக்கு சீரான முறையிலே ஆபிஸர்களைப் போட்டு சரியான முறையிலே கீழ்த்தர சிப்பந்திகளைப்போட்டு நிர்வாகத்தை நடத்தவேண்டுமென்ற ஊக்கம் இருந்திருக்குமானால், இந்த நிலைமை ஏற்பட்டிருக்காது. பஞ்சாயத்துகள் இந்த கேவலமான நிலைமைக்கு வந்திருக்காது. நிலைமையை மாற்றி அமைக்கவேண்டுமென்ற நோக்கத்துடன் நமது தேசீய சர்க்கார், சுதந்திர சர்க்கார் இந்த வெள்ளை அறிக்கையை கொண்டு வந்திருந்தபோதிலும், அது பஞ்சாயத்துக்கள் சுயேச்சையாக நல்ல நிலைமையிலே கிராம மக்களுடன் தொடர்புகொண்டு இருக்கவேண்டுமென்ற அடிப்படையிலே இல்லை. சர்க்கார் கொண்டுவந்திருக்கும் திட்டப்படி பி.டி. ஓக்களையும், கிராமசேவக்குகளையும் வைத்துக்கொண்டு நிர்வாகம் நடத்தினால் அது நல்ல முறையில் நடக்காது. கிராமங்களில் பஞ்சாயத்துக்களை ஏற்படுத்தி அவைகளுக்கு அதிக அதிகாரங்களைக் கொடுத்து அதற்கு வேண்டிய பெரிய ஆபிஸர்களை நியமனம் செய்து நல்ல நிலைமையிலே மக்களுக்கு தொண்டு செய்யவேண்டுமென்ற நோக்கத்துடன் திட்டங்களை வகுக்க வேண்டும். பஞ்சாயத்துகளுக்காக தனி இலாகா ஒன்றை நியமிக்க வேண்டும். அதற்கு தனியாக ஒரு ஆபிஸரை ஏற்படுத்தி அதனுடைய வரம்புகளை சட்டதிட்டங்கள் ரீதியாக அமைத்து பஞ்சாயத்து நிர்வாகம் நல்ல முறையில் ஏற்படுமானால், பொதுமக்களுக்கு நல்ல தொண்டு செய்ய முடியும். அதே சமயத்தில் பஞ்சாயத்துகளுக்கு அதிகாரம் கொடுக்கும் தருவாயிலே பாமர மக்களுக்கு, ஏழை மக்களுக்கு சில திட்டங்களை வகுக்க வேண்டும். கிராமங்களிலே சில பஞ்சாயத்துகள் நல்ல முறையிலே நடத்தப்படவில்லை என்று இந்த வெள்ளை அறிக்கையிலே கூறப்பட்டிருக்கிறது. சர்க்கார் கொடுக்கும் சலுகைகள் போல் இந்த பஞ்சாயத்துகளில் ஹரிஜனங்களுக்கு, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஸ்கூல், புஸ்தகம், ஸ்லேட் பலகை இவைகளுக்காகவும், இவர்கள் வாழக்கூடிய இடத்திற்கு ரோடுகள் போடுவதற்காகவும் தனியாக தொகைகள் ஒதுக்க வகை செய்யவேண்டும். ஹரிஜனங்களுக்கு என்று தனியாக பாகுபடுத்தி தொகை ஒதுக்கவேண்டும். இந்த பஞ்சாயத்துகளை பி.டி.ஓக்களையும் கிராமசேவக்குகளையும் போட்டு நடத்துவது அவ்வளவு நல்லது அல்ல. சாதாரணமாக ஒரு தலைவரைப் போட்டுக்கொள்ளுவதில் யாருக்கும் ஆட்சேபனை இருக்க முடியாது. ஆனால் இவர்கள் கையில் அதிகாரம் கொடுப்பது கருவாட்டு கடையில் காகத்தை வைப்பதுபோல்தான் இருக்கும் என்று சொல்லிக்கொண்டு, என்னுடைய பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்.

***Sri K. VASUDEVAN :** கனம் சபாநாயகர் அவர்களே, இப்பொழுது சபையின் முன்னால் இந்த மாகாணத்திலுள்ள சுயஆட்சி ஸ்தாபனங்களான முனிசிபாலிடிகள், ஜில்லா போர்டுகள், பஞ்சாயத்துகள் இவைகளை மாற்றி அமைக்கும் முறையில் சர்க்காரின் நோக்கத்தை வெளியிட்டு இப்பொழுது ஒரு வெள்ளை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. அதற்கு முன்னால் பல தடவைகள் நம் அமைச்சர்கள் பல கருத்துக்களை வெளியிட்டிருக்கிறார்கள். இந்த நாட்டிலுள்ள முனிசிபாலிடிகள் சட்டமானது 1920-ம் ஆண்டிலே

வகுக்கப்பட்டு, வருஷா வருஷம் அதற்கு திருத்தங்கள் கொண்டுவரப்பட்டு அந்த திருத்தங்களுக்கு உட்பட்டு இப்பொழுது முனிசிபல் நிர்வாகம் அமைக்கப்பட்டிருக்கிறது. இந்த அறிக்கையில் மெமோராண்டம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிற இடத்தில் திருத்தங்கள்பற்றி\ விரிவாக கூறப்பட்டிருக்கிறது. 1920-ல் வகுக்கப்பட்ட சட்டமானது அதே முறையில் இப்பொழுது இருக்கிறதா என்பதை நாம் கவனித்துப் பார்க்கவேண்டும். அப்படிப் பார்க்கும்பொழுது இந்தத் திருத்தங்கள் மூலமாக முனிசி பாலிடிகளின் அதிகாரம் குறைக்கப்பட்டிருப்பது நமக்கு மிகவும் வருத்தமாயிருக்கிறது. இந்த நாட்டிலே "லோகல் செல்ப் கவர்ன்மெண்ட்", அதாவது ஸ்தல ஸ்தாபன சுயாட்சி என்பது, இப்பொழுது "செல்ப் கவர்ன்மென்ட்" என்ற வார்த்தைபோய், முனிசிபாலிடிகள் "லோகல் அட்மினிஸ்டிரேஷன்" டிபார்ட்மெண்டின் கீழ் நடந்துவருகிறது. இன்னும் பார்க்கப்போனால் அது நாளடைவில் அந்த ஸ்தல ஸ்தாபனங்களின் அதிகாரமெல்லாம் குறைக்கப்பட்டு "லோகல்" என்ற வார்த்தையும் போய் மதராஸில் உள்ள சர்க்கார் நிர்வாகத்தின்கீழ் வந்துவிடுமோ என்றுதான் நினைக்கவேண்டியிருக்கிறது. இப்பொழுது இவ்வளவு நாட்கள் கழித்து சர்க்கார் முனிசிபல் நிர்வாகத்தை திருத்தி அமைக்கும் முறையில் இந்த வெள்ளை அறிக்கையை சமர்ப்பித்திருப்பது வரவேற்கத்தக்கதுதான் என்று நான் கருதுகிறேன். முக்கியமாக முனிசிபல் நிர்வாகத்தை திருத்தி அமைக்கும் வகையில் சர்க்கார் ஏற்படுத்திய ரத்னசபாபதி முதலியார் அவர்களுடைய அறிக்கை இந்த வெள்ளை அறிக்கையில் இருக்கிறது ரொம்பவும் வரவேற்கத்தக்கது. ஏனென்றால், இப்பொழுது முனிசிபல் நிர்வாகத்தை நன்றாக பரிசீலிக்கும் முறையில் இந்த மாகாணத்தில் "சேம்பர் ஆப் முனிசிபல் சேர்மென்" என்று ஒரு ஸ்தாபனம் நிறுவப்பட்டு, அவர்கள் தங்களுடைய கருத்துகளை அவ்வப்பொழுது சர்க்காருக்கு எடுத்துரைத்து இருக்கிறார்கள். அதன் விளைவாக அவர்களுடைய வற்புறுத்தலானது ஜாஸ்தியாக போனபிறகு, ரத்னசபாபதி முதலியார் அவர்களைத் தலைவராகக் கொண்டு ஒரு கமிட்டி அமைக்கப்பட்டு அந்த கமிட்டி பரிசீலனை செய்து கொடுத்த அறிக்கையும் இந்த வெள்ளை அறிக்கையில் கொடுக்கப்பட்டிருக்கிறது. முக்கியமாக ரத்னசபாபதி முதலியார் கமிட்டியின் சிபார்சு என்னவென்றால் ஸ்தல ஸ்தாபனங்களுக்கு அதிக பொறுப்பு கொடுக்கவேண்டும், ஸ்தல ஸ்தாபனங்களின் அமைப்பு முறையை மாற்றி அமைக்கவேண்டும் என்பதுதான். முக்கியமாக கமிஷனர்களை எடுத்துவிடவேண்டுமென்பது அந்த அறிக்கையின் நோக்கமல்ல. ஆனால் "கமிஷனர் இன் தி பிரெஸண்ட் பாரம்", இப்பொழுது அமைக்கப்பட்டிருக்கும் கமிஷனர் முறையை மாற்ற வேண்டுமென்ற ஒரே நோக்கத்துடன்தான் அவர் அறிக்கையை சமர்ப்பித்திருக்கிறார். எத்தனையோ பெரிய தலைவர்களைக்கொண்ட ஒரு கமிட்டியின் ரிபோர்ட்டை சரியாக பரிசீலனை செய்யாமல் அதை பூராவும் தள்ளுபடி பண்ணுவது நியாயமல்ல என்று நான் சர்க்காரை கேட்டுக்கொள்ளுகிறேன். நான் இந்தக் கமிட்டியின் சிபார்சின் பேரில் சில நல்ல அம்சங்களை எடுத்துக்கூற விரும்புகிறேன். முக்கியமாக சில சமயம் சட்டசபையினால் கொடுக்கப்பட்ட முனிசிபல் நிர்வாகத்தின் அதிகாரத்தையும்கூட ரூல் சம்பந்தப்பட்டவரையில் பிடுங்கிக்கொண்டிருக்கிறார்கள் என்று நான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன். முக்கியமாக 50 ரூபாய்க்குக் குறைந்த சம்பளம் கொண்டவர்கள் நாமாக 73-வது விதியின்கீழ் மாற்றி அமைக்கப்படும் என்று இந்த மெமோராண்டத்தில் கூறப்பட்டிருக்கிறது. அதை டிபார்ட்டுமெண்டு அவர்களும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் கவர்ன்மெண்டு ஒத்துக்கொண்ட மாறுதல்களில் அது காணப்படவில்லை. அதை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன். முக்கியமாக இவர்களுடைய போஸ்டுகளை செலெக்ஷன் போஸ்டாக்குகின்றபடியால் 50 ரூபாய்க்கு மேற்பட்டு சம்பளம் வாங்கும் முறையில் இருக்கிறபடியால் இவர்களை இந்தக் கமிட்டி நியமிக்கவேண்டுமென்று சட்டசபையில் ஏற்படுத்தியிருக்கின்ற விதிகளில் இருக்கிறது. ஆனால் சர்க்கார் அதற்குத் தொடர்ந்து பல விதிகள் செய்யும் வகையில்





தாங்களே இந்த நியமனத்தைச் செய்துவிடலாம் என்று ஒரு விதி இருக்கிறது. அது சட்டத்திற்கு முரணாக இருக்கிறதென்று நான் சொல்ல விரும்புகிறேன்.

அடுத்தபடியாக இந்த பப்ளிக் ஹெல்த் இலாகாவில் உள்ள நியமனங்கள்கூட நடைமுறையில் சீர்திருத்தி, அமைக்கும்போது இவர்களே அதையும் நியமனம் செய்யும்படியாக விடலாம் என்று இருக்கிறது. ஆனால் இப்போது அது ஏன் சாத்தியம் இல்லை என்று காரணம் கூறுகின்றதில், பப்ளிக் ஹெல்த் முக்கியமான இலாகா ஆகையினாலும், அது பொறுப்பற்றவர்களால் நியமனங்கள் செய்யும்படியாக விடக்கூடாது என்கிற முறையில் கூறப்பட்டிருக்கிறது. ஆனால் அதைச் சீர்திருத்தி, ஜில்லா பப்ளிக் ஹெல்த் முறை மாறும் காலத்தில் இதை கவனிக்கலாம் என்று கூறினால், அப்போது இந்த முக்கியமான பொறுப்பை எப்படி மாற்றி அமைக்க முடியும் என்பதைக் கேட்க ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக செக்ஷன் 12 ஸி யானது—கமிஷனர் நியமனம் சம்பந்தமான செக்ஷன் மாற்றி அமைக்கப்பட்டிருக்கிறது. முதன் முதலாக கமிஷனர்கள் நகரசபையின் நம்பிக்கைக்குப் பாத்திரம் இல்லாத வகையில் போய்விட்டால் அவர்களை நகரசபையே மாற்றும் வகையில் நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டுவரலாம் என்று ஏற்கெனவே இருந்த செக்ஷனில் கூறப்பட்டிருக்கிறது. ஆனால் இப்போது அவர்கள் என்ன செய்தாலும் சரி—சார்மனைக்கூட இந்தக் கவுன்ஸில் நம்பிக்கை இல்லாத் தீர்மானம் மூலமாக நீக்கிவிடலாம்—கமிஷனர்களை நீக்குவதற்கு கவுன்சிலுக்கு அதிகாரம் இல்லை என்றால் அது ரொம்பவும் வருந்தத்தக்க விஷயமாகும். முக்கியமாக கமிஷனர்கள் அவரவர்கள் இஷ்டப்படி நடப்பதற்கு இது வசதியாகப்போய்விடும்.

அதோடு ஒரு வருஷத்திற்குள் எப்படியோ அநேக இடங்களில் கமிஷனர்களை மாற்றிவிடுகிறார்கள். ஒரு கமிஷனர் மூன்று வருஷம் ஒரு முனிஸிபாலிட்டியில் இருக்கவேண்டுமென்ற முறை இருந்தபோதிலும்கூட அவர்கள் வெகு சீக்கிரமாக மாற்றப்படுவது முனிசிபல் நிர்வாகத்திற்கு நல்லதாகத் தோன்றவில்லை என்பது என்னுடைய கருத்து. குறிப்பாக ஒரு கவுன்சிலரை நியமித்தால் அந்தக் கவுன்சிலருக்கு அந்த முனிசிபாலிட்டியின் நிர்வாகத்தைப் புரிந்துகொள்வதற்கு ஒரு வருஷமாவது ஆகிறது. அதற்குள் கமிஷனர் மாற்றப்பட்டால் இன்னொருவர் வருகிறார். அவருக்கும் அப்படியே ஆகிறது. அதனால் நிர்வாகத்திலே அநேக தாமதங்கள் உண்டாகிறது. திரும்ப எலெக்ஷன் வந்துவிடுகிறது. ஆகையால் ஒரு கவுன்சிலின் ஆயுள் காலம் குறைந்தது மூன்று வருஷத்திற்குள் மாற்றக்கூடாது என்றிருப்பதை திருத்தி 5 வருஷத்திற்குள் மாற்றக்கூடாது என்று செய்தால் மிகவும் நன்றாக இருக்கும் என்பது என்னுடைய அபிப்பிராயம்.

அதையும் தவிர முனிஸிபாலிட்டிக்கு க்ருமினல் பவர்சும், சிவில் பவர்சும் கொடுத்தால் நல்லது என்பது என்னுடைய கருத்து. இப்போது முனிசிபாலிட்டியில் க்ருமினல் கோர்ட்டும், பஞ்சாயத்து கோர்ட்டும் அமைக்கப்பட்டிருப்பது தெரிந்த விஷயம். அதோடு இந்த அதிகாரத்தையும் கொடுப்பதால் அநேக விஷயங்கள் லகுவாகுமென்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**Sri C. R. RAMASWAMI** : கனம் சபாநாயகர் அவர்களே, ஸ்தல ஸ்தாபனங்களுடைய சீர்திருத்தம் தாங்கி வந்துள்ள ஒயிட் பேப்பர் சம்பந்தப்பட்டவரையில் சென்னை நகரசபை சம்பந்தமான கருத்துக்களை நான் ஆதரிக்கிறேன். சென்னை நகரத்திற்கு அமுல் நடத்தப்பட்டும் வரும் மெட்ராஸ் ஸிடி முனிஸிபல் ஆக்ட் வெகு நாளைக்கு முன்பு ஏற்படுத்தப்பட்டது. சென்னை நகரம் அதிகமாக வளர்ந்து வருகிறது. இப்போது 50 டிவிஷன்கள் இருக்கின்றன. இந்த டிவிஷன்களை அதிகப்படுத்தி அதிக பிரதிநிதித்துவம் கொடுப்பது என்பது சரியான விஷயம். அதிகப் பிரதிநிதித்துவம் கொடுக்கிறோம் என்று சொல்லி தேர்தலை தள்ளி வைக்க

12-47 p.m.

கூடாது என்பது என்னுடைய கோரிக்கை. அடுத்த வருஷம் செப்டம்பர் மாதம் நடக்கவேண்டிய தேர்தல் நடந்தாகவேண்டும். அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைத் துரிதமாகச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்போது இருக்கிற டிவிஷன்களை நூறாகச் செய்யவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். இதைப் பரிசீலனை செய்வதற்கு வேண்டிய டிலிமிடேஷன் கமிட்டியை சீக்கிரம் ஏற்படுத்தவேண்டும். அவர்கள் மனசு வைத்தால் ஒரு மாதம், பதினைந்து நாட்களிலேயே இதை முடிவு செய்து விடலாம். ஆகவே எந்தக் காரணம் கொண்டும் தேர்தலை ஒத்திவைக்கக் கூடாது என்பதுதான் என் கோரிக்கை.

அடுத்தபடியாக ஸ்பெஷல் ரெப்ரசென்டேஷன்—சேம்பர் ஆப் காமர்ஸ் போன்றவைகளுக்குக்—கொடுப்பதை ரத்து செய்துவிடுவது நல்லது என்பது என் நோக்கம். சாதாரணமாக எல்லோரும் பொது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டே வரவேண்டும். இப்போது ஸ்பெஷல் ரெப்ரசென்டேஷன் ஆக வருகிறவர்களைவிட அதிகச் சலுகையோ, உரிமையோ பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு இல்லை. எல்லோருமே நேர்முகமாக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு வரவேண்டும் என்பதே என் கருத்து. இந்த யோசனையை நிச்சயமாக அமுலுக்குக் கொண்டுவர வேண்டும் என்பதாகக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக ஆல்டர்மென்களை ஒழித்துவிடவேண்டுமென்று சிபார்சு இருக்கிறது. பலதுறைகளில் அநுபவம் பெற்றவர்களை ஆல்டர்மென்களாக வைக்கிறோம். முழுக்க ஒழிப்பதைவிட அநுபவம் திறமை வாய்ந்தவர்கள் ஒரு சிலரையாவது வைத்துக்கொண்டால்தான் நன்றாக இருக்கும். அதைப்பற்றி சிந்திக்கவேண்டுமென்பது என்னுடைய விண்ணப்பம்.

அடுத்தபடியாக இப்போது இருக்கும்படியான முனிஸிபல் ஆக்ட் முழுவதையுமே நன்றாகப் பரிசீலனை செய்து பரிபூர்ணமாகத் திருத்தினால் தான் நல்லது. சாதாரணமாக கவுன்ஸிலை மாத்திரம் திருத்தினால் போதாது. இப்போது இருக்கும்படியான பலவித கஷ்டங்களையும், சிக்கல்களையும் நீக்குவதற்கு சட்டம் திருத்தப்படவேண்டும். இந்தச் சிபார்சுகளின் பிரகாரம் ஸ்டாண்டிங் கமிட்டிக்கு உள்ள அதிகாரத்தைக் குறைத்து, சென்டிரல் கமிட்டிக்கு அதிக அதிகாரம் கொடுப்பதாக இருக்கிறது. அமுலுக்கு வரும்போது இதில் பலவித கஷ்டங்கள் வரலாம். சென்னை நகரத்திற்கு ஒரே பட்ஜட் செய்திருக்கிறார்கள். தனித்தனியாக இனி உபகமிட்டிக்கு தயாரிக்க வேண்டியிருக்கும். நடைமுறையில் இதில் என்ன என்ன சிக்கல்கள் எழலாம் என்பதை பரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நான் முன்னால் சொன்னதுபோல் தேர்தலை ஒத்தி வைக்கக் கூடாது. அதற்கு முன் இவைகளை எல்லாம் ஏற்பாடு செய்ய வேண்டும் என்பது என் கருத்து. பத்து டிவிஷன்களைக் கொண்ட ஒரு சர்கில் கமிட்டியாக அமைக்கப் போகிறார்கள். அதற்கு ஒரு பெண் அங்கத்தினர் தேர்ந்தெடுக்கப்படாவிட்டால் பெண் அங்கத்தினர் ஒருவரைச் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்பது என் சிபாரிசு. பெண்களுக்கு தனிப்பட உரிமை கொடுக்க வேண்டியதில்லை. அவர்களுக்கு பிரதிநிதித்வம் கிடைக்க முடியும். அவர்கள் நேரிடையாக தேர்தலில் நின்று வரலாம். ஆகவே பெண்களுக்கு தனிபட்ட முறையில் பிரதிநிதித்துவம் கொடுக்க வேண்டியதில்லை. ஆனால் ஹரிஜனங்களுக்கு பிரதிநிதித்துவம் கொடுக்க வேண்டியது அவசியம். அவர்களுக்கு பிரதிநிதித்துவம் கிடைக்காவிட்டால் அவர்களை கோவாப்ட் செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அது சரியான கருத்து தான். சர்வீஸைப் பற்றி ஒன்று சொல்ல விரும்புகிறேன். முக்கிய உத்தியோகஸ்தர்களை ஸ்டேட் முறையில் இணைக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அது மிகவும் நல்லது. நான் இரண்டு வருஷ காலமாக கார்ப்பரேஷன் கௌன்ஸில் அங்கத்தினராக இருந்து வருகிறேன். இதன் தொல்லைகள் அங்கு அதிகமாக இருக்கிறது. ஒவ்வொரு உத்தியோகஸ்தர்களும் தான் மேல் பதவிக்கு வரவேண்டுமானால் என்னென்ன வேலைகள் செய்கிறார்கள் என்பது எனக்குத் தெரியும். மாகாண ரீதியில இணைக்கப்





பட்டால் நலம். அவர்களுக்கும் நலம். அங்கத்தினர்களுக்கும் நலம். அது தவிர, சர்விஸ் கமிஷன் ஒன்றை வைத்தால் மிகவும் நன்றாயிருக்கும். சாதாரண சிப்பந்திகளை ரிக்ரூட் செய்ய ஒரு சின்ன கமிட்டியை ஏற்படுத்தினால் அதிலுள்ள ஊழல்கள் போகும். ஆகவே இம்மாதிரிப்பட்ட சிபார்சுகள் செய்தால்தான் கார்ப்பரேஷன் கௌன்ஸிலில் உருப்படியான வேலை செய்ய முடியும். எனக்கு அதிக அனுபவம் இருக்கிறது. நல்ல முறையில் இந்த கார்ப்பரேஷன் கௌன்ஸிலை அமைத்தால் ஒழிய நகருக்கு வேண்டிய வேலைகள் நடக்காது என்று திண்ணமாகச் சொல்வேன். அது தவிர கார்ப்பரேஷனுக்கு அதிக சங்கடங்கள் இருக்கிறது. கார்ப்பரேஷனுடைய வருவாய் மிகக்குறைவாயிருக்கிறது. எல்லாவித வருவாயையும் அரசாங்கமே எடுத்துக்கொள்கிறார்கள். டிரான்ஸ்போர்ட் இருக்கிறது, எலெக்ட்ரிஸிட்டி இருக்கிறது. இவைகளை எல்லாம் அரசாங்கமே எடுத்துக் கொண்டு அவைகளின் லாபத்தை எடுக்கிறார்கள். ஆனால் ரோடுகள் நன்றாக இருக்கவேண்டும், அதற்கு வேண்டிய செலவுகளை கார்ப்பரேஷன் செய்யவேண்டுமென்று சொல்லுகிறார்கள். ஆகவே நான் சொல்வது, கார்ப்பரேஷனுக்கு அதிக உதவி கொடுக்கவேண்டும். மோட்டார் வெகிகிள் டாக்ஸில் உள்ள பங்கை அதிகப்படுத்திக் கொடுக்கவேண்டும். அப்படிச் செய்தால் அவர்கள் மக்களுக்கு உதவக்கூடிய முறையில் நன்கு காரியங்களைச் செய்ய முடியும். ஆகவே, இப்படிப்பட்ட பல விஷயங்களை ஆராய்ச்சி செய்ய ஒரு கமிட்டி இருக்க வேண்டும். அப்படி ஒரு கமிட்டியின் மூலம் பரிசீலனை செய்து ஒரு முடிவிற்கு வரவேண்டுமென்பது எனது தாழ்மையான விண்ணப்பம். இப்பொழுது இருக்கக்கூடிய நிலை என்னவென்றால், கார்ப்பரேஷன் கௌன்ஸில் எந்தத் தீர்மானத்தைப் போட்டாலும் அதை அரசாங்கம் அங்கீகரிப்பதே இல்லை என்று சொல்கிறார்கள். ஓரளவிற்கு அது உண்மையாயிருக்கலாம். சில தீர்மானங்கள் சரியல்ல என்று நினைக்கிறார்கள். கார்ப்பரேஷன் கௌன்ஸிலுக்கு அதிக அதிகாரம் கொடுக்கவேண்டுமென்று சொல்லும்போது அவர்கள் தவறாக தீர்மானம் செய்தாலும் சரி, நல்ல முறையில் தீர்மானம் செய்தாலும் சரி, அரசாங்கம் அவர்களுக்கு பரிபூர்ண சுதந்திரம் கொடுக்கவேண்டும். நகராண்மைக் கழகத்திற்கு பரிபூர்ண சுதந்திரம் இருக்கவேண்டும். அதேபோல் மேயருக்கும் அதிக பொறுப்பு கொடுக்கவேண்டும். அங்கு இப்பொழுது சபையின் விவாதம் மிக மோசமாக நடக்கிறது. ஒரு மெம்பரை "குறிப்பிட்டு" வெளியேற்ற மேயருக்கு அதிகாரம் கிடையாது. ஆகவே, ஒரு மெம்பர் சரியாக நடக்கவில்லை என்றால் அவரை "குறிப்பிட்டு" வெளியே அனுப்புவதற்குள்ள அதிகாரம் மேயருக்கு கொடுக்கப்படவேண்டும். மேயரின் பதவி இப்பொழுது ஒரு அலங்காரப் பதவியாய் இருக்கிறதே தவிர அவருக்கு ஒரு காரியமும் செய்ய அதிகாரம் இல்லை. ஆகவே, அவர்களுக்கு கூடுதல் அதிகாரம் கொடுத்து இந்த சபையின் மூலம் ஒரு கமிட்டியை அமைத்து அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை செய்யவேண்டுமென்று சொல்லிக்கொண்டு, எனக்கு இச் சந்தர்ப்பம் அளித்த சபாநாயகர் அவர்களுக்கு எனது வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

* SRI M. JAGANNATHAN : Mr. Speaker, Sir, we all know, if not all of us, at least the majority of us, know that it was Lord Rippon who was largely responsible for introduction of self-government in our State. The great purpose with which Lord Rippon introduced self-government in our State was to educate Indians in the art of self-government. He wanted to train Indian progress in political and popular education. I leave the burden of giving a verdict on this aspect to the historians of the day whether Indians have succeeded in that great aim of Lord Rippon or not. 10 a.m.

Now, Sir, it is said in the White Paper that is placed before us on Local Administration that the big idea behind these proposals is to have democratic decentralization. And to implement that

[Sri M. Jagannathan] [4th November 1957

democratic decantralization various proposals have been put forward and I do not know whether these proposals will really fulfil the purpose of democratic decentralization when they are actually implemented. I cannot say anything with regard to the future because the future is in the laps of God. We have to wait and see whether these proposals which seem very sound and salutary on the White Paper will be really worthwhile when they are implemented. This White Paper contains many proposals which are good and at the same time bad when looked at from different angles. I for my part would like to look at these proposals from the standpoint of Harijans. 'How far these proposals contained in this White Paper are conducive to the welfare of the Harijans in the State'. That is the point of view which I would like to take in discussing this problem. First and foremost, I should like to touch upon the system of elections that is referred to in this White Paper, namely, the open voting system. Sir, this open voting system is very detrimental to the Harijans as a whole. I do not know whether the Government have brought forward this open voting system either deliberately or otherwise. I do not think the politicians behind the Government are so very short-sighted as to bring this open voting system which is very detrimental and harmful to the interests of Harijans, because we all know that the system will make the Harijans vulnerable for open and violent attacks by the caste Hindus. Sir, in this connection, I would like to remind hon. Members of this august House, about the recent occurrences in Ramanathapuram district . . .

MR. SPEAKER : Should the hon. Member refer to this now? We have discussed about it enough.

SRI M. JAGANNATHAN : It is relevant for my argument, Sir.

MR. SPEAKER : I have no objection, but the hon. Member will be losing much valuable time.

SRI M. JAGANNATHAN : Gruesome murders were committed in Ramanathapuram district as a result of animosity engendered during the General Election and the Bye-election, though the system of voting in those elections was by secret ballot. In spite of secret ballot system, Harijans were murdered because the caste Hindus resented Harijans casting votes against them. Therefore, that is the political background to the Ramanathapuram riots. Now according to the open voting system which is being advocated in this White Paper for second-class panchayat elections, the Harijans will be open to violent attacks for, in every village the caste Hindus feel that they are at the top of social hierarchy while the Harijans are at the bottom. Therefore they would not brook Harijans casting their votes at their will and pleasure. Thus, Harijans will be adversely affected and therefore, I say that the Government in advocating this open voting system have done this deliberately. I go to the extent of complaining that they want to play ducks and



4th November 1957] [Sri M. Jagannathan]

drakes with the valuable lives of Harijans all over the State and they want to use them as pawns in the political game of the State, especially by the party in power. That is my accusation. I hope at least now the Government will be pleased to look at this problem from this aspect and effect the necessary changes in their proposals by substituting secret ballot for the open voting system. From another aspect also, I say that the system of indirect election to the office of chairman or president of local boards is most undesirable. It will only make the chairman or president rather undemocratic in outlook, he may not feel himself answerable to the wishes of the people, he may not rise to the occasion and do the necessary improvements for helping the masses in the villages.

I wish to point out another aspect of these proposals which is of far-reaching importance. I say that in the election of chairman or president, the principle of communal rotation should be introduced. I know that this request of mine will be a cry in the wilderness, because the Government may not accept it. Still I make the suggestion for what it is worth. I make the suggestion not because I am communal minded. In the present set-up, we see in every village the prevalence of rank communalism. Our villages are caste-minded and caste-ridden. In this atmosphere, it is necessary to introduce communal rotation. Its introduction will go a long way in giving encouragement to the Harijans and in raising their status before the eyes of the Caste Hindus at least. We have communal rotation for the office of Mayoralty in the Madras City Corporation. Introduction of communal rotation for the office of chairman or president of local bodies will give a chance to the Harijans to be chairmen or presidents and enable them to do a lot of things to uplift the Harijan masses. I think the Government should take necessary steps in this direction.

With regard to the membership of Harijans in the panchayat council, I have got to say a word. It is stated in the White Paper that the statutory order will provide that at least one Harijan should be co-opted to the panchayat council. I should say that that representation is most inadequate. There should be adequate representation of the Harijans on the council so that they may be in a position to voice their grievances effectively and to devise measures to safeguard the interests of Harijans living in the villages, especially in the cheris. You know the pitiable condition prevailing in the cheris. It beggars all description. Though we do not know personally the conditions prevailing in hell, it is no exaggeration to say that the conditions in the cheris are akin to the conditions prevailing in hell. The condition of cheris is so bad that the Harijans there are living a sort of sub-human lives. Their huts are in half ruins looking like pig sties, there is mud and slush around and the cheris are very insanitary. Harijans are living under such harrowing and appalling conditions. Improvement of the condition of cheris is, in my view, very important. The presidents of the

[Sri M. Jagannathan] [4th November 1957

existing panchayats have not taken any steps to improve the cheris and to ameliorate the lot of Harijans. They have not laid any road, they have not provided drinking water facilities and lighting facilities in cheris. Therefore it is necessary that Harijans should be given more and more representation on the panchayat councils which are contemplated in the proposals contained in the White Paper. With these words, I finish my speech.

* **Sri S. RAMALINGA PADAYACHI :** கனம் சபாநாயகர் அவர்களே இங்கு வந்திருக்கும் கிராம பஞ்சாயத்து வெள்ளை அறிக்கையை நான் ஆதரித்து சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். நமது மாநிலத்தில் பாதி கிராமங்களில் இன்னும் கிராம பஞ்சாயத்துக்கள் ஏற்படவில்லை. 1950-ல் கிராம பஞ்சாயத்து மசோதா வந்தும் இதுவரை ஏற்படாமல் இருக்க சில காரணங்கள் உண்டு. 1958–59-ம் ஆண்டிலாவது நமது நாட்டில் நிறைய பஞ்சாயத்துக்கள் அமைக்கவேண்டுமென்று ஆசைப்படுகிறேன். தேர்தல் முறை அதாவது வாக்கு எடுப்பு பற்றி பேசும்போது வெளிப்படையாக தேர்தல் நடத்தக்கூடாது என்று சிலர் கூறினார்கள். என்னுடைய கருத்து வெளிப்படையான தேர்தல்தான் நல்லது என்று கருதுகிறேன். மறைமுக தேர்தல் அவசியமில்லை என்று நம்புகிறேன். மறைமுக தேர்தல் நடப்பது என்றால் தேர்தல் நடப்பதற்கு முன்னமேயே அபேட்சகர்கள் பெயர்களை தாக்கல் செய்யவேண்டும். அதற்குப்பின் அதை அங்கீகரிக்க வேண்டும். பின்னால் சின்னம் என்னவென்று தெரியவேண்டும். தேர்தல் கழிந்த பிறகு வோட்டுகளை எண்ணிப்பார்க்க வேண்டும். மறைமுக தேர்தல் என்று சொன்னால் கல்வி இல்லாத இந்த காலத்தில் எப்படி கல்வி இல்லாதவர்கள் வோட்டு அளிக்க முடியும் என்று கேட்கிறேன். ஒவ்வொரு பிரதிநிதிக்கும் இன்னின்ன சின்னங்கள் என்று தெரிந்திருக்கவேண்டும். இவ்விதம் நடந்தால் சிக்கனமாக நடத்த முடியாது. ஆகவே மறைமுக தேர்தல் நல்லது அல்ல, வெளிப்படையான தேர்தலே நல்லது என்றுதான் நான் நம்புகிறேன். அடுத்ததாக தலைவர்கள் மெம்பர்களால் தேர்ந்தெடுக்கப்படக்கூடாது, மக்களால்தான் தேர்ந்தெடுக்கப்படவேண்டும் என்று சொன்னார்கள். மக்கள் தேர்ந்தெடுக்கப்படவேண்டிய அவசியமில்லை. மெம்பர்களால்தான் தேர்ந்தெடுக்கப்படவேண்டும் என்று நான் நினைக்கிறேன். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டால் அந்த தலைவர் சர்வாதிகாரங்களை நடத்தும்பொழுது ஒன்றும் செய்யமுடியாது ஆகவே மெம்பர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டால்தான் நல்லது என்று நம்புகிறே. ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை தேர்தல் நடப்பது மிகவும் சிறந்த முறை. அடிக்கடி கட்சி பூசல்களை உண்டுபண்ணாமல் கிராமங்களில் கொஞ்சம் சுமுகமான நிலைமையை உண்டு பண்ணுகிறது. ஆகவே ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை தேர்தல் நடப்பதுதான் நல்லது என்று கருதுகிறேன்.

அப்பேர்பட்ட கிராமங்களில் இருந்து வரக்கூடிய சிவில், கிரிமினல் கேஸ்கள் பெரிய துன்பங்களை கொடுக்கின்றன. இது விஷயத்தில் அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும்.

கூடுமான வரையில் பஞ்சாயத்து எழுத்தாளர்களை பஞ்சாயத்து ஆபீசுக்கு பக்கத்திலேயே இருக்கும்படி செய்ய வேண்டும். தற்சமயம் சில இடங்களில் இவர்கள் ஆபீசில் இருந்து நான்கு, ஐந்து மைல் தூரத்தில் வசிப்பதால் இவர்கள் பஞ்சாயத்து காரியங்களை சரிவர செய்ய முடியாமல் மிகவும் தொந்திரவாக இருக்கிறது. பஞ்சாயத்து நிர்வாகம் நல்ல முறையிலே நடக்க வேண்டுமானால் 50 கிராம பஞ்சாயத்துகளுக்கு ஒரு உதவி பஞ்சாயத்து ஆபீசர் இருக்க வேண்டும். அப்படி இல்லாமல் இப்போது இருக்கும் முறையிலேயே இருந்தால் வேலைகள் சரிவர நடைபெறாது. ஆகையால் 50 கிராம பஞ்சாயத்துகளுக்கு ஒரு உதவி பஞ்சாயத்து ஆபீசர் நியமிக்க வேண்டும் என்பது என்னுடைய அவா.



4th November 1957] [Sri S. Ramalinga Padayachi]

மாவட்ட பஞ்சாயத்து அதிகாரிகள் தங்களுடைய அலுவல்களை திறம்பட செய்ய வேண்டுமானால் அவர்களுக்கு தகுந்த வாகன வசதி செய்து கொடுக்க வேண்டும். அவர்களுக்கு வரும் புகார்களை நேரடியாகச் சென்று விசாரிப்பதற்கு அவர்களுக்கு வாகன வசதி இன்றியமையாதது.

வெள்ளை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பஞ்சாயத்து யூனியன் அமைப்பு, தேசிய விஸ்தரிப்புத் திட்டம், சமூகநலத் திட்டம் இவைகளைப் பற்றி சிலவார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். இந்தத் திட்டங்கள் மிக முக்கியமானவை. இவைகளை யெல்லாம் நல்ல முறையிலே நம் மாநிலத்திற்கு நடத்தி வைக்கவேண்டும் என்று அரசாங்கத்தை கேட்டுக் கொண்டு, இந்த வெள்ளை அறிக்கையை ஆதரித்து என் பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

**Sri K. S. SUBRAMANIA GOUNDER :** சட்ட மன்றத் தலைவரவர்களே, இந்த வெள்ளை அறிக்கையை விவாதிக்கும்போது நானும் இரண்டொரு கருத்துக்களை சொல்ல முன் வந்துள்ளேன். பொதுவாக இம்மாதிரி ஒரு பெரிய திருத்தம் செய்யும்போது ஒரு வெள்ளை அறிக்கையை சமர்ப்பித்து, சட்ட சபை அங்கத்தினர்களுடைய அபிப்பிராயத்தை தெரிந்து செய்வதானது உண்மையில் வரவேற்கத் தக்கது. இதிலே முக்கியமான அம்சம் என்னவென்றால் ஜில்லா போர்டுகளை எடுத்துவிட்டு அவைகளுக்கு பதிலாக பஞ்சாயத்து யூனியன்களை அமைப்பது என்பது. ஜில்லா போர்டு இருக்க வேண்டுமா வேண்டாமா என்பதைப்பற்றி இரண்டுவித அபிப்பிராயம் இருக்க முடியாது. பஞ்சாயத்துகளுக்கு பூரண அதிகாரம் கொடுக்கும்போது ஜில்லா போர்டுகள் இருப்பதற்கு காரணமே யில்லை, இருந்த போதிலும் ஜில்லா போர்டிற்கு பதிலாக பஞ்சாயத்து யூனியன்களை அமைத்து அவைகளிடம் ஆஸ்பத்திரி, பள்ளிக்கூட நிர்வாகம் போன்ற வேலைகளை விடுவது சரியா என்றால், சரியில்லை என்று நான் சொல்லுவேன். 1951-ம் வருஷம் நான் சேலம் ஜில்லா போர்டு தலைவனாக இருந்தபோது இது சம்மந்தமாக ஜில்லா போர்டு தேவையில்லை என்ற ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி யிருக்கிறோம் என்று நான் இந்த சமயத்தில் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். ஜில்லா போர்டுகளினாலேயே பல காரியங்கள் செய்ய முடியாமல் இருக்கின்றன. அதற்கு முக்கியமான காரணம் பணக் கஷ்டமே. அப்படி ஒரு ஜில்லா போர்டுக்கே பணக் கஷ்டம் இருக்கும்போது, ஒரு பஞ்சாயத்து யூனியனை அமைத்துவிட்டால் மட்டும் அவர்களுக்கு பணம் எங்கிருந்து வந்துவிடும். அவர்களுக்கு போதிய பண வசதி சர்க்கார் செய்து கொடுக்க முடியுமா என்று அறிய விரும்புகிறேன். குறிப்பாக, சில யூனியன்களுக்கு வருவாய் கம்மியாக இருந்தால் அபிவிருத்தி வேலைகளை அந்த வட்டாரத்தில் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுவிடும். ஆகையால், யூனியன்களை அமைப்பது, நாம் போட்டு இருக்கக்கூடிய திட்டத்தை நல்ல முறையில் அபிவிருத்தி செய்வதற்கு ஒழுங்கானதாக இருக்காது என்று நான் கருதுகிறேன். **High School**-களையும், ஆஸ்பத்திரிகளையும் அரசாங்கம் நேரடியாக எடுத்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால், இவைகளை நிர்வகிக்க பஞ்சாயத்து யூனியன்களுக்கு போதிய பண வசதி இருக்காது. அதே சமயத்தில் ஒவ்வொரு இடத்திலும் போதிய எண்ணிக்கையில் **L.T.** தேர்ச்சி பெற்ற **Science** உபாத்தியாயரும், கணக்கு உபாத்தியாயரும் கிடைப்பது இல்லை என்பது அனைவருக்கும் தெரிந்த விஷயம். பஞ்சாயத்து யூனியன் ஏற்பட்டால் இந்த நிலைமை மாறிவிடும் என்று நினைப்பது தவறு.

இன்னும் **Elementary School**-களை எடுத்துக் கொண்டால் அநேக ஜில்லா போர்டுகளில் **Elementary education fund**-ல் போதிய பண மில்லாத நிலை இருக்கிறது. ஜில்லா போர்டுகளின் நிலைமை இவ்வாறு இருக்கும்போது, பஞ்சாயத்து யூனியன் எந்த அளவிலே அதிகமாக வேலைகளை செய்வதற்கு முடியும் என்பது தெரியவில்லை. பஞ்சாயத்து யூனியனுக்கு அரசாங்கம் போதிய பண வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[Sri K. S. Subramania Gounder] [4th November 1957

**N.E.S. Block**-கள் நல்ல முறையில் வேலை செய்து வருகின்றன. இதுபற்றி இரண்டு வித அபிப்பிராயங்கள் இருப்பதற்கில்லை. இருந்த போதிலும் அப்பகுதியில் செலவாகும் பணத்தை கணக்கில் எடுத்துக் கொண்டால், சிப்பந்திகளுக்கே பெருமளவு செலவு செய்யப்படுகிறது என்பதை கவனிக்க வேண்டும். இவ்வாறு செய்வது ஒரு முறையான காரியமல்ல என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். இப்போது பஞ்சாயத்துகளில் அதிக சிப்பந்தி செலவு இல்லாமல், நிர்வாகம் நடந்து வருகிறது. பஞ்சாயத்து யூனியன்கள் **N.E.S. Block**-ன் கீழ்வரும்போது பெரும்பகுதியான தொகை சிப்பந்திகள் விஷயத்தில் செலவு செய்யப்படுமா என்று அஞ்ச வேண்டியிருக்கிறது. இதை அரசாங்கம் நல்ல முறையில் ஆராய்ந்து சரியான முடிவுக்கு வரவேண்டும். இந்தத் திட்டங்கள் ஜனங்களுக்கு பயன்தரக்கூடிய வகையில் பணம் செலவு செய்யப்பட வேண்டும் என்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, **Panchayat** தேர்தல்கள் **secret ballot** முறையில் இருக்க வேண்டும் என்று நான் வற்புறுத்தி சொல்ல விரும்புகிறேன். எந்த **first-grade** பஞ்சாயத்தும் **Municipality**-ஆவதற்கு ஒப்புக்கொள்வதில்லை. அதற்கு காரணம் என்னவென்ருல், **Municipality**-ஆக ஆகிவிட்டால் அதிக வரி கொடுக்க வேண்டிய நிலை ஏற்படும். இதனுல் பஞ்சாயத்துக்கள் எவ்வித அபிவிருத்தி வேலைகளையும் எடுத்துக்கொள்ளாமல் அப்படியே இருந்துவிடுகின்றன. சாதாரணமாக, **Municipality**-களினுல்தான் நல்ல முறையிலே அபிவிருத்தி வேலைகளை மேற்கொள்ள முடியும் என்பதை மக்கள் உணர்ந்த போதிலும், பஞ்சாயத்து அங்கத்தினர்கள் உணர்ந்த போதிலும், வரிகள் அதிகமாகிவிடும் என்ற ஒரே காரணத்திற்காக அவை **Municipality**-ஆவதை அவர்கள் ஒத்துக்கொள்வதில்லை. ஒரு பஞ்சாயத்தின் ஜனத் தொகை **10,000**-க்கு மேல் இருந்தால் அது உடனடியாக **Municipality**-ஆய்த்தான் தீர வேண்டும் என்று விதியை ஏற்படுத்த வேண்டுமென்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

பஞ்சாயத்துக்கள் சரியாக வேலை செய்வது இல்லை என்று சொல்லப்படுகிறது. இதற்கு காரணம் அவர்களுக்கு போதிய வசதி இல்லாததும் அவர்கள் செய்யும் வேலையை கண்காணிப்பதற்கு சரியான **Supervisor** இல்லாததுமே. அம்மாதிரி **Supervisor**-கள் இருந்தால் அவர்களுடைய வேலையை சுலபமாகச் செய்வதற்கு சௌகரியமாகயிருக்கும். ஆதலால் ஒவ்வொரு பஞ்சாயத்து **group**-க்கும் ஒரு **P.W.D. Supervisor**-ஐ நியமித்து அதனுடைய வேலைகளை கண்காணிக்கும்படி செய்தால் வேலைகள் நல்ல முறையிலே தப்பிதமில்லாமல் நடக்க ஏதுவாகயிருக்கும் என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். பல பஞ்சாயத்து யூனியன்களுக்கு பதிலாக, ரீஜனல் கவுன்சிலை ஏற்படுத்தலாம். ஒவ்வொரு ஜில்லாவையும் பல பாகங்களாகப் பிரித்து அவைகளை இவர்கள் கண்காணிப்பது என்ற முறையை மட்டும் வைத்துக்கொண்டு, ஒவ்வொரு 'ரீஜன்'-க்கும் ஒரு ஜில்லா பஞ்சாயத்து ஆபீசர் கண்காணிப்பும் ஒவ்வொரு 'காம்பாக்ட் ஏரியா'-விற்கும் ஒரு உதவி பஞ்சாயத்து எக்சிக்யூடிவ் ஆபீசர் கண்காணிப்பும் வைத்து, பஞ்சாயத்து தலைவர்களின் கீழ் பஞ்சாயத்து எக்சிக்யூடிவ் ஆபீசர் வேலை செய்வதற்கு ஏற்பாடு செய்தால், பஞ்சாயத்துக்கள் நல்ல முறையில் நடக்கும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஒவ்வொரு பஞ்சாயத்திற்கும் எக்சிக்யூடிவ் ஆபீசர் அவசியம் என்று நான் உணர்கிறேன். அவ்வாறு இருந்தால்தான் முழு நேரமும் பஞ்சாயத்து வேலையை கவனிக்க முடியும். பஞ்சாயத்து போர்டு தலைவரே பூரா வேலையையும் கவனித்துவிடுவார் என்று சொல்ல முடியாது. ஒவ்வொரு பஞ்சாயத்திற்கும் ஒரு எக்சிக்யூடிவ் ஆபீசர் இருக்கத்தான் வேண்டும். பஞ்சாயத்திற்கும் பஞ்சாயத்து போர்டு தலைவருக்கும் பூரண அதிகாரம் இல்லாமல் எக்சிக்யூடிவ் ஆபீசருக்குப் பூரண அதிகாரம் இருப்பதால் வேலைகள் சரிவர நடப்பதில்லை என்று சொல்லிக்கொள்கிறேன். ஆகவே எக்சிக்யூடிவ் ஆபீசர் மீது பஞ்சாயத்துக்களுக்குப் பூரண அதிகாரம் இருக்க வேண்டும் என்று சொல்லிக் கொள்கிறேன். இத்துடன் என் வார்த்தையை முடித்துக் கொள்கிறேன்.



4th November 1957]

**Mr. SPEAKER** : கனம் அங்கத்தினர் ஸ்ரீ மாரிமுத்து பேசலாம். கனம் அங்கத்தினர் தமது பேச்சை **1-30** மணிக்குள் முடித்துவிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

* **Sri A. R. MARIMUTHU** : கனம் தலைவர் அவர்களே, பஞ்சாயத்துக்களில் தேர்தல் ரகசிய முறையில்தான் நடக்க வேண்டும் என்பதை அனேகமாக எல்லா கனம் அங்கத்தினர்களும் வற்புறுத்தியிருக்கிருர்கள். ரகசிய வோட்டு முறை, தேர்தலுக்குப் பிறகு அதிக விவகாரம் இல்லாமல் இருப்பதற்கு ஹேதுவாக இருக்கும். முன்பு பகிரங்கமான தேர்தல் முறை இருந்தபோது கிராமங்களில் சச்சரவுகள் ஏற்பட்டன. பகிரங்கமான தேர்தல் முறை இருக்க வேண்டும் என்று வெள்ளை அறிக்கையில் சொல்லியிருப்பதைப் பார்த்தால், அதிகமாகச் சச்சரவுகள் ஏற்படும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். வெள்ளை அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கும் பகிரங்கத் தேர்தல் முறை முன்பு இருந்ததைவிட அதிக சச்சரவுகளை உண்டு பண்ணும் என்று நினைக்கிறேன். அதாவது, தேர்தல் நடத்தும் அதிகாரிக்கு (ப்ரிஸைடிங் ஆபீசர்) முன்னுல் போய், தான் யாருக்கு வோட்டுப் போட விரும்புகிருர் என்பதை வாக்காளர் பகிரங்கமாகக் கூற வேண்டும் என்று அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. தேர்தல் நடத்தும் அதிகாரிக்குப் பக்கத்தில் அபேட்சகர்களும் அவர்களுடைய ஏஜெண்டுகளும் நின்றுகொண்டிருப்பார்கள். அவர்கள் முன்னிலையில் வாக்காளர் தாம் யாருக்கு வோட்டுப் போட விரும்புகிருர் என்பதைத் தெரிவிக்க வேண்டும் என்ற ஏற்பாடு முந்தைய பகிரங்கத் தேர்தல் முறையை விட அதிக சங்கடங்களையும் சச்சரவுகளையும் ஏற்படுத்தும். ஆகையால் எந்த வகையில் பார்த்தாலும், ரகசிய வோட்டு முறையைக் கொண்டுவர வேண்டும் என்பதை இந்த சமயத்தில் வற்புறுத்திக் கூற விரும்புகிறேன். ரகசிய வோட்டு முறைதான் ஏற்கெனவே இருக்கும் விவகாரத்தை அதிகப்படுத்தாது என்று தாழ்மையுடன் சொல்லிக் கொள்கிறேன். பஞ்சாயத்துக்களில் வீட்டு வரி போன்ற வரிகளைக் கட்டாயமாக விதிக்க வேண்டும் என்று **1950**-வது வருஷ பஞ்சாயத்துச் சட்டத்தில் கூறப்பட்டிருந்தாலும், அனேக கிராமங்களில் அந்த வரிகள் விதிக்கப்படாமல் இருப்பதை நாம் பார்க்கிருேம். ஆகவே அந்த அந்த கிராமப் பஞ்சாயத்து நிர்வாகத்திற்கு வேண்டிய வரியை, தங்கள் இஷ்டப்படி விதித்துக் கொள்வதற்கு பஞ்சாயத்துக்களுக்கு அதிகாரம் கொடுக்க வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன். வண்டிகளுக்கு லைஸென்ஸுகளுக்கான பணத்தை கிராம அதிகாரிகளே வசூலிக்கலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதை வசூலிப்பதற்குப் போதுமான அதிகாரம் யாருக்கு இருக்க வேண்டும் என்று சொல்லப்படவில்லை. யாருக்கு எந்த முறையில் விதிக்க வேண்டும் என்பதற்கு பஞ்சாயத்து போர்டு கொடுக்கும் லிஸ்டை வைத்துக்கொண்டு கிராம அதிகாரிகள் இதை வசூலிக்கலாம் என்று தெளிவாக ஆக்கப்பட வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, வெள்ளை அறிக்கையில் நீதி வழங்கும் அதிகாரமும் பஞ்சாயத்து போர்டிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. இது சரியாக இருக்குமா என்று யோசிக்க வேண்டியிருக்கிறது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர் நீதியை வழங்கும்போது, வேண்டியவர்—வேண்டாதவர் என்று பாகுபாடு காட்டக்கூடிய நிலைமை ஏற்படாதா ? ஆகவே, இதைக் கருத்திற்கொண்டு பஞ்சாயத்து கோர்ட்டை பஞ்சாயத்து போர்டுக்கு அப்பாற்பட்டு தனியாக நடத்துவது நல்லது. ஒவ்வொரு கிராமத்திற்கும் இல்லாவிட்டாலும் 4—5 கிராமங்களுக்கு ஒரு கோர்ட்டு வீதம் கோர்ட்டுகளை அமைத்து நீதி நிர்வாகத்தை நடத்திணுல் நன்ருக இருக்கும் என்று கருதுகிறேன்.

மேலும் மாட்டுப் 'பவுண்டு'-களை வைப்பதன் மூலம் பஞ்சாயத்துக்களுக்கு வருவாயை அதிகப்படுத்தலாம். இப்போது அரசாங்கமே மாட்டுப் பவுண்டுகளை நடத்தி பணத்தை கிராம அதிகாரிகளிடம் குத்தகைக்கு கொடுத்து விடுகிருர்கள். கிராமங்களிலேயே மாட்டுப் பவுண்டுகளை வைத்து அவைகளின் மூலம் வரும் பணத்தை கிராம பஞ்சாயத்துக்கள் எடுத்துக் கொள்ளவேண்டும் என்று ஏற்பாடு செய்தால் நன்ருக இருக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

[Sri A. R. Marimuthu] [4th November 1957

இப்போது கிராமங்களில் சிறிய நீர்ப்பாசனத் தகராறுகள் அதிகமாக ஏற்படுகின்றன. இதன் காரணமாக பல நிலங்கள் தண்ணீர் கிடைக்காமல் பல ஆண்டுகள் தரிசு நிலங்களாகக் கிடக்கின்றன. அம்மாதிரி சந்தர்ப்பங்களில் ரெவின்யூ இலாகாவிடம் சென்று போராடி தண்ணீர் வேண்டும் என்று கேட்டாலும் நிலங்கள் 4—5 வருஷ காலம் தரிசாகக் கிடக்கின்றன. ஆகவே சிறிய நீர்ப்பாசனத் தகராறுகளைத் தீர்ப்பதற்கு பஞ்சாயத்துக்களுக்கு அதிகாரத்தைக் கொடுத்துவிடலாம் என்று கருதுகிறேன்.

மேலும், கிராமங்களிலுள்ள சிறு விவசாயிகளுக்கு கிராம அதிகாரிகளிடமிருந்து ஏதாவது தகவல்கள் வேண்டுமென்றால் அப்போது அந்த விவசாயிகள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அவர்களுக்கு தெளிவான தகவல்கள் கிடைப்பதில்லை. காரணம், அவர்கள் போதிய அளவு படிக்காதவர்கள். ஆகவே கிராமப் பஞ்சாயத்துக்களின் மூலமாகவே விவசாயிகளுக்கு வேண்டிய எல்லாத் தகவல்களையும் கொடுப்பதற்காக, பஞ்சாயத்துக்களுக்கு போதுமான அதிகாரத்தைக் கொடுத்தால் நன்றாக இருக்கும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

மேலும், கிராமப் பஞ்சாயத்துக்களுக்கு உள்ள 'பண்ட்' -கள் பஞ்சாயத்து யூனியனிடம் ஒப்படைக்கப்படும் என்றும், அதனிடமிருந்து பஞ்சாயத்துக்கள் நிதியைப் பெற்றுக் கொள்ளலாம் என்றும் வெள்ளை அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. இது தேவையில்லாத அம்சம் என்று கருதுகிறேன். இது பஞ்சாயத்துக்களின் சுயேச்சை நிலையை பாதிக்கும். கிராமப் பஞ்சாயத்தே அதனுடைய நிதியை நிர்வகிக்க வேண்டும் என்று விதிக்க வேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், பஞ்சாயத்து யூனியன் அமைக்கப்பட வேண்டும் என்று வெள்ளை அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. முன்பு கிராமப் பஞ்சாயத்துக்கள் செய்ய முடியாத வேலைகள் ஜில்லா போர்டிடம் ஒப்படைக்கப்பட்டதுபோல, கிராமப் பஞ்சாயத்துக்களுக்கு அப்பாற்பட்ட வேலைகள் பஞ்சாயத்து யூனியனிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் என்று வெள்ளை அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆரம்பக் கல்வி போன்ற விஷயங்கள் எல்லாம் பஞ்சாயத்து யூனியனிடம் ஒப்படைக்கப்படுகிறது. உபாத்தியாயர்களை மாற்றுவதும் நியமிப்பதும் தான் ஜில்லா போர்டுகளின் அதிகமான வேலை என்று பல கனம் அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள். இதை பஞ்சாயத்து யூனியனிடம் ஒப்படைத்தால் சிறிய பஞ்சாயத்துக்களில் உபாத்தியாயர்கள் கஷ்டப்பட வேண்டி வரும். ஆகவே உபாத்தியாயர்களை மாற்றுவது போன்ற அதிகாரங்களை ஜில்லா டெவலப்மெண்ட் கவுன்சிலிடம் ஒப்படைக்க வேண்டும் என்று சொல்லிக் கொள்கிறேன். அந்த அதிகாரங்களை பஞ்சாயத்து யூனியனிடம் ஒப்படைப்பது நல்லதல்ல என்பது என் கருத்து. மேலும், பஞ்சாயத்து யூனியனிடம் யூனியன் ஹைஸ்கூல்களை ஒப்படைக்காமல் அவைகளை ஜில்லா டெவலப்மெண்ட் கவுன்சிலிடம் ஒப்படைக்கலாம், அல்லது சர்க்காரே எடுத்துக் கொள்ளலாம் ; அந்த ஏற்பாடுதான் நன்றாக இருக்கும் என்பது என்னுடைய அபிப்பிராயம்.

கொண்டுவரப்படும் "சட்டங்கள் இவைகளைக் கருத்திற்கொண்டு நல்ல முறையில் அமைக்கப்படும் என்று கருதுகிறேன். மேலும் ப்ளாக் டெவலப்மெண்ட் ஆபீசர் முனிசிபல் கமிஷனர் மாதிரி செயலாற்றுவார் என்று வெள்ளை அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அந்த மாதிரியான ஏற்பாடு பஞ்சாயத்துக்களின் சுயேச்சையை மிகவும் பாதிக்கும். கனம் நண்பர் ஸ்ரீ முத்தையா அவர்கள் கூறியதுபோல் அவர் காரியதரிசியாக செயலாற்ற வேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**MR. SPEAKER** : இந்த சபை நாளை காலை 9 மணி வரையில் ஒத்தி வைக்கப்படும்.

**The House then adjourned.**



4th November 1957]

## III.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

62. *Notification issued with G.O. No. 3252, Revenue, dated 14th August 1957, amending clause (a) and (b) in the Rules under clause 2 (d) of the Rules framed under the Madras Survey and Boundaries Act,* 1923 [Laid on the Table of the House under section 26 (3) of the Madras Survey and Boundaries Act, 1823.]

63. *Notification issued with G.O. Ms. No. 3021, Food and Agriculture, dated 27th September 1957, delegating to the Personal Assistants under the Madras District Collectors' Powers (Delegation) Act, 1956, certain powers exercised by the Collectors under the Madras Forest Act, 1882 (Madras Act V of 1882), sections 35 (e) and 65 and by the rules made under the Act* [Laid on the Table of the House under section 5 of the Madras District Collector's Powers (Delegation) Act, 1956.]

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

**Tuesday, 5th November 1957.**

The House met in the Assembly Chamber, Fort St. George, at nine of the clock, Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

## I.—QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS.

*Ministers tour in European Countries*

* 81 *Q.*—SRI N. K. PALANISAMI (on behalf of Sri K. Sattanatha Karayalar) : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether any Hon. Minister went on tour to any European countries in his official capacity or otherwise during 1957; and

(*b*) if so, the purpose and the details of the tour?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) & (*b*) Yes. Sri R. Venkataraman, Minister for Industries, visited Geneva, in August 1957, in connexion with the sittings of the United Nations Administrative Tribunal in his personal capacity as an elected member of the Tribunal.

The expenditure incurred in connexion with the above travel was entirely met by the United Nations Organization.

MR. SPEAKER : Questions 82 and 83 may be taken up together.

*Zonal system for food supply*

* 82 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether any arrangements have been made in connexion with the functioning of Zonal system for food supply in Southern States, regulation of movements inside the zone and for maintaining reasonable prices within the zone; and

(*b*) if so, the details of the same?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) & (*b*) The Government of India have taken necessary action for procuring stocks and to control the prices of paddy and rice in the Southern Zone, viz., requisitioning of the stocks with the millers in Andhra Pradesh and the fixation of maximum prices for certain varieties of paddy and rice in the districts of East Godavari, West Godavari and Krishna. The State Government have made the following arrangements in this regard :—

Under the Madras Rice and Paddy Requisitioning Order, 1957, certain officers of this State have been delegated with powers to requisition rice and paddy, to call for any information or statistics regarding stocks of rice and paddy held by a person including

[5th November 1957

the stocks pledged by such person with any person, bank or co-operative society and to direct the production of books, accounts and records relating to such stocks and to furnish such information relating thereto as may be specified in the direction. The officers are also vested with powers to enter, search premises, etc., and seize any such stocks of rice and paddy in respect of which the officer aforesaid had reason to believe that any of the provisions of the Madras Rice and Paddy Requisitioning Order, 1957, has been contravened.

All Police Officers not below the rank of Sub-Inspector of Police have also been delegated with powers to prevent any unauthorized transport of rice of paddy outside the Southern zone.

* 83 *Q.*—Sri N. K. PALANISAMI: Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether any machinery has been set up to review periodically the working of the zonal system for food supply; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) No, Sir.

(*b*) Does not arise.

SRI N. K. PALANISAMI: ஸார், மத்திய சர்க்காருக்கும், ஆந்திர சர்க்காருக்கும் ஸோனில் இருக்கக் கூடிய எல்லோருக்கும் ஒப்பந்தம் ஏற்பட்டிருக்கிறதா ? 40,000 டன் அரிசி கொடுத்தால் 20,000 டன் வெளியில் அனுப்ப அனுமதி கொடுப்பது என்ற முறையில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதா ? ஸோனல் ஸிஸ்டம் ஏற்படுத்தும்போது இந்த ஸோனுக்குள் அரிசி வராமல் பிற மாகாணங்களுக்கு அனுப்புவதைப் பற்றி மத்திய சர்க்காருக்கும் மாகாண சர்க்கார்களுக்கும் ஏதாவது ஒப்பந்தம் ஏற்பட்டதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: ஸோனல் ஏற்பாட்டின் படி அந்த ஸோனுக்குள் இருக்கின்ற ராஜ்யங்களுக்கு வேண்டிய அரிசி இருக்கிறதா என்பதைப் பார்த்துக்கொண்டுதான் வெளி மாகாணங்களுக்கு அனுப்பவேண்டும். அம்மாதிரி வெளியில் அனுப்ப மத்திய சர்க்காருடைய உத்திரவு வேண்டுமென்பதுதான் இந்த ஸோனல் ஸிஸ்டத்தின் ஏற்பாடு.

SRI A. P. C. VEERABAHU: ஆந்திர மாகாணத்திலிருந்து சென்னை மாகாணத்திற்கு அரிசி எவ்வளவு வந்திருக்கிறது ? அப்படி வந்திருந்தால் அவற்றின் சராசரி விலையென்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: ஆந்திர ராஜ்யத்திலிருந்து இந்த ராஜ்யத்திற்கு அரிசி வந்தது ரொம்பக் குறைவு. ஜூலையில் 1,530 டன் தான் ரயில் மூலம் வந்தது. ஆகஸ்ட்டில் இன்னும் குறைவு, அதாவது 850 டன்தான் வந்தது. ஸெப்டம்பரில் 400 டன்தான் வந்தது. விலையைப் பற்றிய விவரங்கள் என்னிடம் இப்போது இல்லை.

SRI S. B. ADITYAN: தமிழ் நாட்டிலிருந்து கேரளத்திற்கு எவ்வளவு அரிசி போகிறதென்பதைப் பற்றி அரசாங்கத்திடம் தகவலிருக்கிறதா ? ரயில், லாரி இவைகள் மூலமாகப் போவதையெல்லாம் சேர்த்து எவ்வளவு போகிறதென்பதைச் சொல்ல முடியுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: தமிழ் நாட்டிலிருந்து கேரளத்திற்கு அரிசி அதிகமாகவே போய்க்கொண்டிருக்கிறது. ஆந்திராவிலிருந்து தமிழ் நாட்டுக்கு அரிசி சில மாதங்களில் வந்ததைப் பற்றி என்னிடம் உள்ள விவரங்களைச் சொன்னேன். அது மாதிரி, சென்ற ஜூலை, ஜூன் என்று சொல்லக்கூடிய மாதம், அதாவது அறுவடையில்லாத மாதம், அந்த மாதத்தில் 27,240 டன் அரிசி ரயில் மூலம் தஞ்சாவூரிலிருந்து கேரளத்திற்குப் போயிருக்கிறது. ஆகஸ்ட் மாதத்தில் 10,240 டன் போயிருக்கிறது. ஸெப்டம்பர் மாதம் 22-ம் தேதி வரையில் 5,500 டன் போயிருக்கிறது. கன்னியாகுமரி ஜில்லாவிலிருந்து கூட அதிகமாக கேரள நாட்டுக்கு அரிசி போய்க்கொண்டிருக்கிறது.



5th November 1957]

SRI R. SRINIVASA IYER: கேரள ராஜ்யத்திற்கு, ஆந்திர ராஜ்யத்திலிருந்தும், மதராஸ் ராஜ்யத்திலிருந்தும் அரிசி போவதற்குத் தடையில்லாமல் இருப்பதால் கேரளத்திற்குத் தேவையில்லாமல் இருந்தும், தஞ்சையிலிருந்து அரிசியையும் நெல்லையும் கொள்முதல் செய்துகொண்டு போய் பிற மாகாணங்களுக்கு smuggle (கள்ளக்கடத்தல்) பண்ணுவதாக தெரிகிறது. கேரளத்திற்குப் போதுமான அளவு மட்டும் கொள்முதல் செய்வதற்கு ஒரு வரையரை விதிக்க முடியுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: கேரள மக்கள் ஸ்மக்கிள் செய்வதாக இந்த அரசாங்கத்திற்குத் தகவல் இல்லை. இந்த ஸோனுக்குள் தாராளமாகப் போக்குவரத்து இருக்கவேண்டுமென்று தான் இந்த ஏற்பாடு. ஆந்திர ராஜ்யத்திலிருந்து கேரள ராஜ்யத்திற்கு அரிசி வரவில்லை. தஞ்சை முதலிய இடங்களிலிருந்து தான் கேரளத்திற்கு அரிசி போய்க்கொண்டிருக்கிறது. எவ்வளவு கேரள நாட்டுக்கு வேண்டுமோ அதில் எவ்வளவு தமிழ் நாட்டிலிருந்து போகலாம் என்பதை வறையறுத்து அதற்கு வேண்டிய ஏற்பாடுகளை செய்வது பற்றி இந்த சர்க்கார் மத்திய சர்க்காருடன் யோசித்துக்கொண்டிருக்கிறது.

SRI N. K. PALANISAMI: தஞ்சையிலிருந்து வாங்கக்கூடிய அரிசி போதவில்லை என்று கேரள சர்க்கார் ஏஜண்டுகளை ஆந்திராவில் வைத்து வாங்கிக்கொண்டு வருகிறார்கள். நம் பிரதேசத்தில்..

**MR. SPEAKER. The hon. Member is giving information regarding agents and others. That is not a question.**

SRI N. K. PALANISAMI: இப்போது ஸோனல் ஸிஸ்டம் ஏற்பட்டதற்குப் பிறகு விலை இறங்கவில்லை..

**MR. SPEAKER: May I again remind the hon. Member that during question time only questions should be asked. No information should be given. If the hon. Member wants he can write to the Hon. Minister and give whatever information he wants to communicate to him. Now he should put it in the form of a question.**

SRI N. K. PALANISAMI: நமது சர்க்கார் கேரள சர்க்கார் செய்வது மாதிரி ஆந்திராவுக்கு ஏஜண்டுகளை அனுப்பி அங்கேயிருந்து கொள்முதல் செய்து நமது ரிலீப் ஷாப்புகளைச் சரிவர நடத்த ஏற்பாடு செய்வார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: கேரள சர்க்கார் ஏஜண்டுகளை அனுப்பியிருக்கிறார்களென்று நான் சொல்ல முடியாது. வியாபாரிகள் இதிலே லாபம் சம்பாதிக்கலாம் என்று ஆந்திராவுக்கு வந்து அரிசியை வாங்கி கேரள நாட்டில் விற்க ஏற்பாடு செய்கிறார்கள். இப்படி அரசாங்கம் வாங்கி நியாய விலைக் கடைகளில் விற்பதென்றால் நியாய விலைக் கடை விலை சரசமாக இருக்கவேண்டும். தமிழ் நாட்டிலே விற்கப்படும் விலை அதிகமாகத்தான் இருக்கிறது.

SRI K. VINAYAKAM: Sir, whereas the object with which the Food Zonal Council was formed to distribute (Hon. Members: Food zones and not zonal councils) the food zones were formed to distribute food to the deficit areas and whereas Madras State is not a surplus area and whereas Andhra . . .

[5th November 1957

MR. SPEAKER: The hon. Member is trying to circumvent my ruling. That is not correct. The hon. Member is going on giving information. May I request the hon. Member to put the question direct. He cannot go on saying 'whereas, whereas' and so on. It is not a Resolution.

SRI K. VINAYAKAM: May I submit humbly, Sir, that even Mr. Churchill put a question in Parliament which consisted of (?) 750 words . . .

MR. SPEAKER: I am afraid, I must tell the hon. Member Mr. Churchill is no guidance for me. So far as the Chair is concerned, I would like the hon. Members to follow the directions and requests made to them by the Chair. I rule that questions must be asked in the form of questions and not preceded by statements like 'whereas the Government is informed . . .' and so on and so forth. Otherwise, the hon. Member is at liberty to ask any questions in this House. But if he wants to ask a question, he must follow the directions of the Speaker.

SRI K. VINAYAKAM: Sir, younger politicians have to draw lessons from . . .

MR. SPEAKER: The hon. Member may resume his seat. The hon. Member Sri Vedaratnam Pillai may put his question.

9-10 a.m. SRI A. VEDARATNAM PILLAI: *தமிழ் நாட்டின் தேவைக்கு உபரியாக இருக்கக்கூடிய அரிசியை வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய வேண்டுமென்ற ஏற்பாடு செய்து வந்தது எல்லோருக்கும் தெரியும். அப்படி வெளிநாடுகளுக்குப் போகிற அரிசியில் கேரளாவிலிருந்து லட்சத் தீவுகளுக்கும் கோவாவுக்கும் கள்ளக் கடத்தல் நடக்கிறது என்று இதற்கு முன் இந்த அசெம்பிளியில் புகார் செய்து அதையும் ஒப்புக்கொள்ளப் பட்டிருக்கிறது. அப்படி ஒப்புக்கொண்டு அதைப்பற்றி மத்திய அரசாங்கத் திற்குத் தகவல் கொடுத்து கவனிப்பதாக கூறினார்கள். அதன் முடிவு என்னவாயிற்று என்பதைக் கேட்க விரும்புகிறேன்.*

THE HON. SRI M. BHAKTAVATSALAM: *தமிழ் நாட்டில் அரிசி உற்பத்தி உபரி இல்லை. தேவைக்கு மேல் மிச்சம் இருந்தால்தான் அதை வேறு மாகாணங்களுக்கு அனுப்ப முடியும். தற்காலத்தில் தமிழ் நாட்டின் பற்றாக்குறை ஒன்றரை லட்சம் டன். இன்னும் மழை இல்லாமல் போனால் மூன்று லட்சம் டன்னுக்கு பற்றாக்குறை இருக்கும். பாக்கி நமக்கு மற்ற மாகாணங்களிலிருந்து வரவேண்டியதாக இருக்கிறது. ஆந்திராவில் சுமார் எட்டு லட்சம் டன் உபரியாக இருக்கிறது. மற்றப்படி மைசூர் கேரளத்திற்கு ஆறு லட்சம் டன் வேண்டியதாக இருக்கிறது. அந்தப் பற்றாக்குறையை சமாளிப்பதற்காகத்தான் ஸோனல் கவுன்சில் என்று ஏற்படுத்தியிருக்கிறார்கள். அதன்படிக்குத்தான் நடவடிக்கைகளைக் எடுத்துக்கொண்டு வருகிறார்கள்.*

SRI T. S. RAMASWAMY PILLAI: *தமிழ் நாட்டிலிருந்து கேரளா விற்கு போகும் அரிசி ரயில் மார்க்கம் அல்லது மற்ற வாகன்கள் மூலமாக போகும் அரிசி எவ்வளவு என்பதைப்பற்றிய கணக்கை எவ்வாறு கணக்கிடு கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.*

THE HON. SRI M. BHAKTAVATSALAM: *அதையும் கூடிய வரையில் தான் கணக்குப் பார்க்கப்படுகிறது. எவ்வளவு போகிறது என் பதை சுமாராகத்தான் சொல்ல முடியும்.*



5th November 1957]

SRI S. LAZAR: *இது போன்ற கட்டுப்பாடு இருப்பதன் காரணமாக விவசாயிகளுக்கு தங்களுடைய விளைபொருள்களுக்குக் கிடைக்கவேண்டிய விலை கிடைப்பது இல்லை என்பதை சர்க்கார் அறியுமா? ஆகவே அவர் களுக்கு நல்ல விலை கிடைக்கும்படி ஏற்பாடு செய்வது இந்த சர்க்காரின் கடமை அல்லவா? ஏனென்றால் பெரும்பாலும் விவசாயிகள் தான் இந்த நாட்டில் இருக்கிறார்கள்.*

THE HON. SRI M. BHAKTAVATSALAM: *இப்பொழுது விவசாயிகள் தங்களுடைய விளைபொருள்களுக்கு விலை குறைவாக இருக்கிறது என்று புகார் சொல்வதற்கு இடம இல்லை.*

SRI A. R. SUBBIAH MUDALIAR: *ஆந்திர நாட்டிலிருந்து தமிழ் நாட்டிற்கு வந்து தான்யங்களைக் வாங்கக் காரணம் என்ன?*

THE HON. SRI M. BHAKTAVATSALAM: *வியாபாரிகளுக்கு எங்கே போய் விற்றால் லாபம் கிடைக்குமோ அங்கே போய் தங்களுடைய தான்யங்களை விற்பது சகஜம். அதையொட்டித்தான் வருகிறார்கள். மற்ற நாடுகளிலிருந்து இங்கே வரக்கூடாது என்பதில்லை.*

*Engineering Colleges*

* 84 *Q.*—SRI K. R. VISWANATHAN: Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) the names of the Members of the Selection Committees for admission to the Government Engineering Colleges this year; and

(*b*) whether any of the Members belong to the Backward Class or Scheduled Castes?

THE HON. SRI C. SUBRAMANIAM: (*a*) Sri G. R. Damodaran, Principal, P.S.G. College of Technology, Coimbatore—Chairman.

V. P. Appadurai, Chief Engineer, Electricity—Member.

Major B. H. Marley, Principal, College of Engineering, Guindy—Member, Governor and Secretary.

(*b*) No, Sir.

* 85 *Q.*—SRI K. R. VISWANATHAN: Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) the total number of candidates admitted to the Government Engineering Colleges in 1957;

(*b*) the number of students belonging to Backward Classes and Scheduled Castes who got admission through the reservation; and

(*c*) the number of Backward Class students who got admission through open competition?

THE HON. SRI C. SUBRAMANIAM : (a) 395.

(b) 140.

(c) 63.

*Assignment of lands to political sufferers*

* 86 Q.—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Revenue be pleased to state whether any lands have been assigned to political sufferers in 1957?

THE HON. SRI M. A. MANICKAVELU : No, Sir. No one has been assigned any lands in 1957 on the ground that he was a political sufferer. The present policy of the Government is to assign lands only to landless poor who are likely to engage in direct cultivation.

*Season tickets to students in Government buses*

* 87 Q.—SRI V. K. KOTHANDARAMAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether the Government are aware that the students in the City have to spend about Rs. 9 or Rs. 12 per month towards transport charges; and

(b) if so, whether there is any proposal to issue season tickets to them at concessional rates?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) The Government have no information.

(b) The answer is in the negative.

SRI T. S. RAMASWAMY PILLAI : May I know, Sir, whether the Government are aware of the fact that season tickets were given to students in Kanyakumari district and if so, why not that facility be extended to the students in Madras City also?

THE HON. SRI R. VENKATARAMAN : Not only are the Government aware, but have extended that concession which was in existence before. Since it was a facility enjoyed by students at that place, Government have thought it fit to continue it for sometime. The question of giving the concessions to students does not arise because in many routes in Madras City we are issuing season tickets, namely, in routes 3, 21, 21-A, 21-C, 7, 7-A and 8. We are issuing season tickets at the rate of Rs. 9 per mensem.

SRI A. GOVINDASAMY : சில பகுதிகளில் ஓடுகின்ற பஸ்களுக்கு மட்டும் சீசன் டிக்கட்டுகள் கொடுக்கப்படுகிறது என்று கனம் மந்திரி அவர்கள் சொன்னார். இந்த முறையை எல்லா ரூட்டுகளுக்கும் விஸ்தரிக்கக்கூடாதா என்று கேட்கிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : That suggestion would be considered. We are experimenting on certain routes.



*Irrigation Conservancy Subordinates and Telephone Gumasthas' Association of Tanjore*

* 88 Q.—SRI V. K. RAMASWAMY MUDALIYAR : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether the Government have received recently any representation from the Madras State Irrigation Conservancy Subordinates and Telephone Gumasthas' Association of Tanjore district requesting the Government to redress their genuine grievances; and

(b) if so, the action taken thereon?

THE HON. SRI P. KAKKAN : (a) Yes, Sir.

(b) The matter is under consideration and orders are likely to be issued shortly.

* 89 Q.—SRI V. K. RAMASWAMY MUDALIYAR : I am not putting the question, Sir.

*Assignment of lands to ex-Servicemen*

* 90 Q.—SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(a) the extent of land set apart for ex-Servicemen after the Second World War; and

(b) the number of acres assigned to each of the ex-Servicemen and the extent of land so assigned?

THE HON. SRI M. A. MANICKAVELU : (a) & (b) The particulars are not readily available. The time and labour involved in getting the particulars will not be commensurate with the object to be served thereby.

SRI N. K. PALANISAMI : ஸார், இம்மாதிரி பட்டாளத்தார்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கக்கூடிய நிலமானது, அவர்களில் பலர் விவசாயிகளாக இல்லாத காரணத்தால் பலர் அதை விற்றுவிடுகிறார்கள், பலர் அதை குத்தகைக்கு விட்டுவிடுகிறார்கள். இம்மாதிரி நிலைமை ஏற்படாமல் யார் உண்மையாக பூமியை உழுகிறார்களோ அவர்களுக்குத்தான் பூமி என்ற அடிப்படையில் பூமியைக் கொடுக்க சர்க்கார் யோசிக்குமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இதைப்பற்றி நான் முன் கேள்வியிலேயே பதில் சொல்லிவிட்டேன், உண்மையாக யார் விவசாயத்தை நடத்துகிறார்களோ அவர்களுக்குத்தான் நிலம் கொடுக்கப்படும் என்று.

SRI S. NAGARAJA MONIGAR : These ex-Servicemen fought the War on behalf of the Bureaucratic Government and when lands are assigned to them, what wrong is there in assigning lands to political sufferers?

MR. SPEAKER : How does this question arise from the main question? I rule the supplementary question out of order.

Questions are over.

[*Note.*—**An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.**]

## II.—ADJOURNMENT MOTION *RE* FLOODS IN MADRAS CITY.

MR. SPEAKER : I have received notice of an adjournment motion from the hon. Member Sri S. M. Annamalai. The motion runs as follows :

" This House resolves to adjourn the business of the House to discuss a definite matter of urgent public importance, namely, the pitiable condition of hundreds of poor people who have been rendered homeless because of the floods in Madras City."

I should like to hear the Hon. the Leader of the House and then I shall decide whether the motion should be admitted or not.

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, I do not think this could form the subject-matter of an adjournment motion. However, I do agree that the hon. Members of the House would be anxious to have some information with regard to the flood situation in the City arising out of the heavy monsoon weather. If possible, I will make a statement tomorrow morning.

MR. SPEAKER : ரூல் 40 படிக்கு கனம் நிதி மந்திரி அவர்கள் நாளைக்கு ஒரு ஸ்டேட்மெண்ட் கொடுக்கிறேன் என்று சொல்லுகிறார். அது சரி என்று தோன்றினால் இந்த அட்ஜோர்ன்மெண்ட் மோஷனை நாளைக்கு எடுத்துக்கொள்ளலாம் என்று தோன்றுகிறது. அதற்கு கனம் அங்கத்தினர் ஒத்துக்கொள்ளுவார் என்றே நினைக்கிறேன்.

I shall admit this under Rule 40 to be answered tomorrow.

## III.—GOVERNMENT MOTION.

### WHITE PAPER ON THE REFORM OF LOCAL ADMINISTRATION IN MADRAS STATE INCLUDING THE MADRAS CITY CORPORATION—*cont.*

MR. SPEAKER : இப்பொழுது வெள்ளை அறிக்கையைப்பற்றிய விவாதம் நடக்கும். இன்றையதினம் நான்கு மணி அவகாசம் இருக்கிறது. விவாதத்திற்கு கனம் மந்திரி அவர்களுக்கு ஒரு மணி நேரம் வேண்டியிருக்குமா என்பதை அறிய விரும்புகிறேன். (The Hon. Srimathi Lourdhammal Simon : முக்கால் மணி நேரம்). சரி. கனம் நிதி மந்திரி அவர்களும் பேசப்போகிறார்களா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

I want to know whether the Hon. Leader of the House is taking part in the debate.

THE HON. SRI C. SUBRAMANIAM : I should like to speak for half an hour, Sir.

MR. SPEAKER : How long does the hon. Leader of the Opposition want?

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : About half an hour.

MR. SPEAKER : Well, other Leaders of Parties will have 20 minutes each. Thus the total time that would be utilised by other hon. Members would come to about one hour and a half. I shall continue in the same way as yesterday. I would request hon. Members wishing to speak to give their names to me. Each hon. Member will speak for 10 minutes.





I should like Party Whips to give me the names of hon. Members belonging to their respective parties who would take part in this discussion. I think as many as nine hon. Members could possibly speak. I would, therefore, like Party Whips to give names of one or more members according to their party strength. I call upon Mr. Karayalar to open the discussion.

SRI K. SATTANATHA KARAYALAR : கனம் சபாநாயகர் அவர்களே, கழிந்த ஐந்தாறு ஆண்டுகளின் அனுபவத்தை வைத்துப் பார்த்தால், பஞ்சாயத்துக்கள் என்ன வேலை செய்யவேண்டும், எப்படி அவைகள் செயல்படவேண்டும் என்று எதிர்பார்த்தோமோ அப்படி அவைகள் செயல்படவில்லை என்று மந்திரி அவர்கள் இந்த வெள்ளை அறிக்கையைச் சபை முன் சமர்ப்பிக்கும்போது பிரசங்கித்தார்கள். அதோடு, ஜனநாயகத்தை விரிவுபடுத்தக்கூடிய, "டெமாக்ரடிக் டீசென்ட்ரலைசேஷன்" என்ற அடிப்படையில் பார்த்தால் அது வெற்றி அடையவில்லை என்ற தொனிப்பு அதிலே இருந்தது. அதற்குக் காரணம் கூறும்போது, பஞ்சாயத்து எல்லை மிகக் குறுகியதாக இருந்ததால் நல்ல முறையில் செயல்படவில்லை என்பதாகக் குறிப்பிட்டார்கள். ஆனால், என்னுடைய தாழ்ந்த கருத்து பஞ்சாயத்து நல்ல முறையிலே செயல்படவில்லை என்பதற்குக் காரணம் அதற்குப் போதிய அதிகாரம் இதுவரையில் வழங்கப்படாதது தான்.

அந்த அடிப்படையை விட்டுவிட்டு, தற்சமயம் கிராமத்தை ஒரு யூனிட்டாக்கி, அதாவது **Panchayat as unit of self-Government** என்ற அடிப்படையிலே வைத்து, ஜில்லாவை ஒரு அச்சாணியாக **pivot** என்று சொல்லக்கூடிய வகையில் அமைக்கவேண்டுமென்று வெள்ளை அறிக்கை கூறுகிறது. உண்மையிலேயே இதை முழுவதும் பார்க்கும்போது, இந்தக் கண்ணோட்டத்தைத்தான் காண்கிறோம்.

வெள்ளை அறிக்கையின் 2-வது பக்கத்திலே

**'The Government take the view that the district is the pivot of the administrative machinery of the State Government; and there is no need for any other administrative authority at that level consisting of elected representatives of the local people. At the same time, Government consider that there is need for permanent machinery at that level for establishing advisory association of elected representatives of the local people with the departmental agencies of the State Government'.**

என்று, காணப்படுகிறது. இந்தக் கண்ணோட்டம் தான் முழுவதும் காணப்படுகிறது. அதாவது, ஒரு ஜில்லாவை அச்சாணியாக வைத்து, அதைச் சுற்றி வரக்கூடிய உறுப்புகளாக பஞ்சாயத்தும், பஞ்சாயத்து யூனியனும், பஞ்சாயத்து சர்க்கிளும் அமைகின்றன. இப்படிப்பட்ட ஒரு அமைப்பிலே, ஒவ்வொரு பஞ்சாயத்தும் எந்த அளவு சுதந்திரமாகச் செயல்படும் என்பதைப்பற்றி மிக்க சந்தேகப்பட வேண்டிய நிலைமை இருக்கிறது. இன்றைக்கு கிராமத்திலே இருக்கக்கூடிய கிராம சேவக் முதல் எக்ஸ்டென்ஷன் ஆபீசர், பிளாக் டெவலப்மெண்ட் ஆபீசர் வரை உள்ள இவர்களையெல்லாம் சர்க்கார் இயந்திரத்தில் எப்படி இணைப்பது என்பதைக் கவனித்திருக்கிறதாகத் தெரிகிறதே தவிர, ஒவ்வொரு பஞ்சாயத்தும், ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனும் தானாகச் செயல்படுவதற்கு என்ன செய்வது என்பதைப் பார்த்து நல்ல முறையில் பரிசீலனை செய்ததாகத் தெரியவில்லை. கிராமத்தில் இன்று பஞ்சாயத்து அதிகாரிக்குள்ள அதிகாரம் கூட வழங்கவில்லை. கிராமங்களுக்கு நேரடியாக அதிகாரம் கொடுத்து அந்த அடிப்படையிலே அவர்கள் செயல்படத் செய்தால்தான் நல்ல முறையிலே அமையும். ஒரு வேளை பல தவறுகள் செய்யக்கூடும். ஊழல் மலிந்திருக்கலாம். ஆனால், ஜனநாயகத்தின் அடிப்படையில் நோக்கும்போது தவறுகள் செய்வதை ஒரு முக்கியமான காரணமாகக் கொள்ளக்கூடாது. அவர்களுக்கு

அதிகாரத்தைக் கொடுத்து, அவர்கள் துர்விநியோகம் செய்யும்போது, தக்க நடவடிக்கை எடுக்கக்கூடிய கண்ணோட்டம் இருக்கவேண்டும். அப்படிப் பொறுப்பான அதிகாரம் கொடுத்து, மதிப்பு தரக்கூடிய நிலைமையை ஆக்கி வைக்கவேண்டும். தவறுகள் செய்யும்போது அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கக்கூடிய முறையும் இருந்தால், இன்றிருக்கும் நிலைமையை மாற்றி கிராமங்கள் நல்ல முறையிலே செயல்பட்டு அவைகள் சுய ஆட்சி அடிப்படையில் மக்கள் ஆட்சி செயல்படக்கூடிய பகுதிகளாக இருக்கக்கூடும்.

கிராமப் பஞ்சாயத்து, கிராம வட்டாரம், பஞ்சாயத்து யூனியன் என்று அமைப்பது அதிகாரத்தை ஒரு கையால் கொடுத்து இன்னொரு கையால் பறிப்பது போல இருக்கிறது.

MR. SPEAKER : இன்னும் பன்னிரெண்டு அங்கத்தினர்களுக்கு மேலே பேசவேண்டுமென்று என்னிடத்தில் கூறியிருப்பதால், இன்றைய தினம் பேசும் அங்கத்தினர்கள் ஒவ்வொருவரும் ஐந்து நிமிஷங்கள்தான் பேசவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஆனால், கட்சித் தலைவர்களுக்கு மாத்திரம் அந்த நிர்ப்பந்தம் கிடையாது. ஒவ்வொரு அங்கத்தினரையும் ஐந்து நிமிஷம் வீதம் பேசுவதற்கு கூப்பிடப் போகிறேன்.

SRI K. VINAYAKAM : On a point of information, Sir. As the White Paper on Local Administration is a very important document and as a large number of Members are willing to contribute to the debate on it, will the Government be pleased to extend the time for discussing it by one more day?

9-20 a.m. MR. SPEAKER : I had a talk with responsible persons. The general feeling is that to-day's discussion will be only by way of giving advice and as a sort of introduction. The Government are going to appoint a committee to advise them on the points to be incorporated in a Bill. A Bill will be drafted and that will come up before the House. I cannot anticipate but I dare say that there will be enough time for the discussion of the Bill. The Bill may be referred to a Select Committee, there will be the first, second and third reading stages. If it is the desire of the House to sit in the afternoon, I shall be the happiest person, I shall not raise any objection and I shall abide by whatever the House decides. I wish to know whether the Hon. Leader of the House will like to make a statement.

THE HON. SRI C. SUBRAMANIAM : The House is just considering the preliminary proposals made by the Government. A committee is being constituted to go into the matter and make recommendations. After the committee submits its report, there will be an opportunity for this House to discuss the matter again. We may consider the recommendations of the committee in greater detail. We may have two or three days for the discussion then. As it is, I am inclined to close the discussion to-day and constitute a committee. That is my respectful submission.

MR. SPEAKER : I said, I was entirely in the hands of the House. To close the discussion to-day seems to be the opinion of the Government and I have no alternative. I will give five minutes for each speaker.





THE HON. SRI C. SUBRAMANIAM : I would request the hon. Members not to repeat the points already raised. If they have any new points, they may place them before the House.

MR. SPEAKER : I agree. All the suggestions made related only to two or three points and Member after Member only stressed those points. I do not think Members have got any new points to raise at this stage.

I request Mr. Sattanatha Karayalar to finish his speech by 9-35.

SRI K. SATTANATHA KARAYALAR : கிராம சுயாட்சியை நிலைநிறுத்தவேண்டுமானால் பஞ்சாயத்துக்கு அதிக அதிகாரம் வழங்க வேண்டுமென்று நான் சொன்னேன். இதிலே குறிப்பாக, நிலத் தீர்வை முழுவதையும் அவர்களே நேரடியாக வசூலிக்கவேண்டும். அப்படி வசூல் செய்ததை அவர்களே உபயோகிக்கக்கூடிய அதிகாரத்தையும் அவர்களுக்கு வழங்கலாம். குளம், பாசி குத்தகை விடுவது, உரம் முதலியவைகள் விநியோகிக்கும் வேலை, விவசாயிகளுக்குக் கடன் கொடுப்பது ஆகியவைகளை பஞ்சாயத்துக்கள் நேரடியாகச் செய்யலாம். விவசாயிகளோடு நெருங்கிய தொடர்பு வைத்துக்கொண்டிருப்பது கிராமப் பஞ்சாயத்துக்களாகத்தான் இருக்கவேண்டும். சாகுபடியாளர் பாதுகாப்புச் சட்டத்தையும் நியாயவாரச் சட்டத்தையும் கூட அவர்கள் கையிலே அமுல் நடத்துவதற்கு விட்டு வைப்பது நன்மை பயக்கும் என்று நான் கருதுகிறேன்.

வெள்ளை அறிக்கையில் முக்கிய அம்சம் காணப்படுவதில், இன்றிருக்கும் பஞ்சாயத்து அதிகாரத்தை, அதுவும் பஞ்சாயத்து யூனியன் செலவிலே இரண்டாந்தர பஞ்சாயத்துக்களையும் ரெவினியூ டிவிஷனல் அதிகாரியின் கீழே அமைப்பதாக இருக்கிறது. இது உண்மையிலேயே, ரெவினியூவைப் பிரிக்கக்கூடிய ஒரு அதிகாரியின்கீழ் இந்த அதிகாரத்தை ஒப்படைப்பது அவ்வளவு சரியாக இருக்கும் என்று தோன்றவில்லை. அதற்குப் பதிலாக நேரடியாக அங்கு ஜில்லா பஞ்சாயத்து அதிகாரியை கெஜட் பதிவுள்ள அதிகாரியாக வைப்பதோடு, அவர் ஜுடிஷியல் அதிகாரியாகவே அமைந்தால் மிக்க நன்மையாக இருக்கும். பஞ்சாயத்து அல்லது பஞ்சாயத்து யூனியன் அல்லது பஞ்சாயத்து சர்க்கிள் இவைகளுடைய பிரச்னைகளையும் அந்த மாவட்டத்தில் இருக்கும் ஜில்லா லெவலிலே உள்ள ஆபீசர்களுடைய பிரச்னைகளையும் பிரிக்கவேண்டும். அது இல்லாத முறையிலே சமமான அடிப்படையிலே இங்கு வந்து தீரக்கூடிய பிரச்னையாக இருந்தால் அது நன்மை பயக்காது. ஆரம்பக் கல்வி, சுகாதாரம், சிசு சம்ரக்ஷணை முதலிய விஷயங்கள் பஞ்சாயத்துகள் கையில் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, இவைகள் நல்ல முறையில் செயல்பட வேண்டுமென்றால் போதிய நிதி வசதி கொடுத்து உதவவேண்டியது அவசியம். பஞ்சாயத்து யூனியனை பொறுத்த மட்டில், அவர்கள் கையிலே பஞ்சாயத்துகளுக்குள் இருக்கும் முக்கியமான ரோடுகள், உயர்நிலைப் பள்ளிகள் ஆகியவைகள் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன. இவைகள் நல்ல முறையில் இயங்கவேண்டுமானால் அதற்கு போதிய பண வசதி இருக்கவேண்டும். இவைகளை அவர்களிடம் ஒப்படைக்கக்கூடாத முறையிலே சர்க்காரே நேரடியாக எடுத்து நடத்துவது பற்றி பரிசீலனை செய்தால் நன்றாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

பஞ்சாயத்து தேர்தலைப்பற்றி எனக்கு முன் பல்வேறு நண்பர்கள் பேசினார்கள். பஞ்சாயத்து தேர்தலில் கைதூக்கு முறையை மாற்றி, ரகசியமான வோட்டு முறையை அமுலுக்குக் கொண்டுவரவேண்டும். இப்பொழுது பஞ்சாயத்துகளில் பல்வேறு சச்சரவுகள் இருப்பதற்குக் காரணம் நேரடியாக கைதூக்கி வோட்டு போடக்கூடிய முறை இருப்பதுதான்.

பஞ்சாயத்து யூனியனுக்கு பஞ்சாயத்துகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்படக்கூடிய நபர்கள் மூன்றில் இரண்டு மெஜாரிடியுடன் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. அப்படியில்லாமல் பஞ்சாயத்து

[Sri K. Sattanatha Karayalar] [5th November 1957

யூனியன்களுக்கும் நேரடித் தேர்தல் நடத்துவது நல்லது. சட்டசபைகளுக்கும் பார்லிமெண்டுக்கும் ஒரே சமயத்தில் பிரதிநிதிகளை நேரடியாக தேர்ந்தெடுப்பதுபோல், பஞ்சாயத்துகளுக்கும் பஞ்சாயத்து யூனியன்களுக்கும் பிரதிநிதிகள் மக்களாலேயே நேரடியாக தேர்ந்தெடுக்கப்படுவது நலமாக இருக்கும். பஞ்சாயத்துகளுக்கு நேரடியாக அதிக அதிகாரம் கொடுக்கக் கூடிய முறையில், நேரடியாக அவர்கள் ஆட்சியை அமுல் நடத்தக்கூடிய ஒரு அடிப்படை கண்ணோட்டத்துடன் இந்த வெள்ளை அறிக்கை திருத்தப்பட வேண்டும். அதிகாரிகளின் மேல்நோக்கோடு இருக்கும் கண்ணோட்டத்தை மாற்றி அமைக்கவேண்டும்.

" டிஸ்டிரிக்ட் அட்வைஸரி கமிட்டி." பொறுத்தமட்டிலே ஓரிரண்டு வார்த்தைகள் சொல்ல அவாஉறுகின்றேன் : இவைகள் " ஸ்டாசூடரி பாடிகளாக " இருந்தபோதிலும், இவைகளுக்கு " அட்வைஸரி " அதிகாரம் மட்டும்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் செய்யக்கூடிய தீர்மானத்தை அவர்களே அமுலாக்கக்கூடிய அதிகாரத்தை அவர்களிடம் நேரடியாக கொடுக்க வேண்டும். ஜில்லா போர்டுகளை எடுத்துவிட்டு அதற்கு பதிலாக அவைகளின் அதிகாரத்தை பல்வேறு ஸ்தாபனங்களுக்கும் பிரித்து கொடுக்கப்படுகிறது. அதே நேரத்தில் அதிகாரிகளை நேடிரயாக வைத்து அவர்கள் கையில் அதிக அதிகாரத்தை கொடுக்கும் கண்ணோட்டத்தை விட்டுவிட்டு, மக்களின் ஆட்சி சுய ஆட்சி நடைபெறவேண்டுமென்ற அடிப்படையில் இந்த ஸ்தாபனங்களுக்கு அதிக நேரடி அதிகாரம் கொடுக்கவேண்டும்.

நகரசபைகள் சம்பந்தமாக நகரவட்டாரங்களில் டவுன் பஸ் ஓட்டுவதற்கு அவர்களுக்கு அதிகாரம் கொடுக்கவேண்டும். மற்றும் சிறு சிறு காரியங்களில் முதலீடு போட்டு அவர்கள் எந்தத் துறையிலும் தொழில்கள் நடத்துவதற்கு அவர்களுக்கு நேரடி அதிகாரம் கொடுக்கவேண்டும். நகரசபைத் தலைவர்களுக்கு அதிக " எக்ஸிக்யூடிவ் பவர் " கொடுத்திருப்பது வரவேற்கக்கூடிய அம்சம்தான். நிர்வாகப் பொறுப்பை பூர்ணமாக ஏன் அவர்கள் கையில் ஒப்படைக்கக்கூடாது என்பது பற்றி பரிசீலனை செய்வது நல்லது.

கடைசியாக கார்பரேஷனைப் பற்றி ஒரு வார்த்தை கூறுகிறேன். கார்பரேஷன் பல வட்டாரமாகப் பிரிக்கப்பட்டு இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை கார்ப்பரேஷன் கவுன்சில் கூட்டம் நடத்தவேண்டுமென்று சிபார்சு செய்யப்பட்டுள்ளது. இரண்டு மாதத்திற்கு ஒரு முறை கூடினால் அவர்கள் மக்களுடன் நல்ல முறையிலே தொடர்பு வைத்துக்கொள்ள முடியாது. ஒவ்வொரு வட்டாரத்திலும் தனியாக இயங்குவார்கள். ஒட்டுமொத்தமான கண்ணோட்டம் இருக்காது. இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை கவுன்சில் கூடுவது என்பதை மாற்றி, மாதம் இரு முறையாவது கூடி அவர்கள் எல்லா பிரச்னைகளையும் சாங்கோபாங்கமாக விவாதிக்கக்கூடிய அதிகாரம் அவர்களுக்கு கொடுக்கவேண்டும்.

மக்களுடைய ஆட்சி நடக்கவேண்டுமென்ற அடிப்படையிலே மக்களுக்கு நேரடி அதிகாரத்தைக் கொடுக்கும் கண்ணோட்டத்தோடு இந்த வெள்ளை அறிக்கையை திருத்தவேண்டுமென்று சொல்லிக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

* Sri A. A. RASHEED : Mr. Speaker, Sir, in the White Paper, it is proposed to rearrange the City divisions into one hundred. The population of the City has increased by leaps and bounds, and there are many divisions in the City which are too big to be represented by one councillor, and this is a measure which has been long overdue. I therefore welcome the delimitation of the City into one hundred divisions. Sir, it is proposed to abolish the system of aldermen and the special constituencies for trade and other interests. On the one hand we want to abolish the system of aldermen and on the other, we want to introduce the system of having seats for women and Scheduled Castes. We must consider the aldermen



5th November 1957] [Sri A. A. Rasheed]

as members of the Upper House, who have got much experience and whose counsel and advice should also be sought after. Suppose in the general elections for the Corporation, if all the members elected are new-comers, what will happen to the Corporation? It will be very difficult to conduct the meetings, since there will not be any experienced men.

The main source of income for the Corporation is the house-tax. The next source of income is from the licences. It is but proper that the representatives of the trade and the Chambers of Commerce should be given a chance to represent their grievances in the Council. I know that institutional councillors have not been regular in their attendance, but in the White Paper, as it is proposed to hold Council meetings only once in two months, I am sure the institutional councillors will not fail to attend at least this meeting.

The second reform proposed in the White Paper is the reorganization of the standing committees and the resettlement of their functions. As a member of the Taxation Appeals Committee, I request the Hon. Minister to increase the committee's powers. On the one hand we reduce the house-tax at one meeting. Immediately the Revenue Officer increases the tax in the second half-year. I think this system must go, and it must be treated as contempt of court if the Revenue Officer or the Commissioner were to increase the tax which has already been reduced by the Appeals Committee.

Instead of the existing committees, namely, committees for taxation and finance, education, health, public works, town-planning and improvement and accounts, the White Paper proposes to have a central committee with several circle committees. I do not know the utility of these committees, because this system has to be worked before its utility can be seen.

I welcome the reform of the system of appointment to key posts in the service of the Corporation of Madras. The officers of the Corporation are a law unto themselves. There is also room for corruption and inefficiency. Neither the Commissioner nor the councillors can do anything about these officers, and it is but proper that these posts should be provincialised.

Nearly 20 per cent of the income is spent by way of establishment charges. I think we can save a lot by provincializing these posts.

The term of the Council has been left vague in the White Paper. I request the Hon. Minister to extend the present term of the Council by another two years in view of the fact that the term of the panchayats and the municipalities has been increased.

Coming to municipalities, I see there is no change. But the recommendation of the committee to abolish the commissioners of the municipalities has not been accepted. I think, if the Government have accepted that recommendation, it would not only have

[Sri A. A. Rasheed] [5th November 1957

been revolutionary but also would be in keeping with the change in times. If the Government are not agreeable to the proposal to abolish the Commissioners, at least they can have one Commissioner for a group of municipalities instead of one Commissioner for each municipality. Their powers may be advisory and supervisory.

As regard's the panchayats, many hon. Members have already spoken about the extension of the period of their existence to five years. It is a welcome measure.

As regards the presidents' office, I do not know why there should be any controversy over the subject, because after all, the presidents of the panchayats, like chairmen of municipalities, Mayor of the Madras Corporation and Speaker of the Legislative Assemblies are elected by elected representatives of the people.

***Sri M. S. SELVARAJAN** : கனம் சபாநாயகர் அவர்களே, ஜில்லா போர்டு நீக்கம் காலத்திற்கும், கருத்துக்கும் ஏற்றது என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன். ஒரே ஜில்லாவின் பகுதிகளில் ஒரு சில பகுதிகளுக்கு ஜில்லா போர்டு ஆட்சி எட்டாமலிருக்கிறது. ராஜ்ய புனரமைப்பு ஏற்பட்டதன் காரணமாகவும், ஜில்லா போர்டுகளின் ஜூரிஸ்டிக்ஷன் விரிந்து போய் விட்டதன் காரணமாகவும், ஜில்லா போர்டுகளின் வருமானமும் பல பஞ்சாயத்துக்கள் அமைப்பு காரணமாக பல பகுதி பிரித்துப் பிரித்துக் கொடுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுவிட்டதன் காரணமாகவும் ஜில்லா போர்டுகளை எல்லாம் நீக்கிவிட்டு, அதன் அதிகாரங்களை குறிப்பாக பஞ்சாயத்துக்கு, ஆங்காங்கே வழங்கப்போவதாகவும் தெரிகிறது. அதிகாரத்தைக் குவியலாக வைத்துக்கொள்ளாது, பரவலாக வினியோகித்து கிராம மக்கள் எல்லோரும் இந்த நிர்வாகத்தில் பங்குகொள்ள வாய்ப்பளிப்பது மிகவும் சரியான ஏற்பாடாகும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். அதற்காகத்தான் சர்க்கார் சட்ட ரீதியாக கிராம பஞ்சாயத்துக்கு அதிகாரம் வழங்க முன் வந்திருப்பதாகத் தெரிகிறது.

கிராம பஞ்சாயத்துக்களுக்கு, இப்போது பஞ்சாயத்து ஏரியாக்களில் கூடும் சந்தைகளினாலும், நீர் நிலைகளில் மீன் பிடிக்க ஏலம் விடுவதனாலும், வருமானம் வருகிறது. ஆனால் சர்க்கார் சமர்ப்பித்திருக்கும் வெள்ளை அறிக்கையில் எந்த எந்த மாதிரியான நீர்நிலைகளில் மீன் பிடிக்க பஞ்சாயத்துகளே ஏலம் போட்டு வருமானத்தை எடுத்துக்கொள்ளலாம், எவை எவை சர்க்காரின் நேரிடையான பொறுப்பில் இருக்கும் என்பது தெளிவாக விளக்கப்படவில்லை என்று அறிகிறேன். எவை எவை பஞ்சாயத்துக்கு உள்பட்டது, எவை எவை சர்க்காருடைய பொறுப்பில் இருக்கும் என்கிற வரையறை செய்யப்படவேண்டுமென்று நினைக்கிறேன்.

அப்படியேதான் கிராம பஞ்சாயத்துகளுக்குள் உள் அடங்கியிருக்கும் பெரிய சந்தைகளினால் வரும் வருமானம் முழுவதும் அந்த கிராம பஞ்சாயத்துக்கே போகும்படி விடக்கூடாது. அநேக கிராம வியாபாரிகளின் பணம் அநேக கிராமங்களுக்கும் பயன்படும் வகையில் ஒரு ஏற்பாடு இருந்தால் நல்லது. அதற்காக ஒரு குழுவைப்போல போட்டு அந்தச் சந்தைகளில் இருந்து வரும் வருமானத்தில் அதிக சதவிகிதம் வேண்டுமானால் அந்த கிராம பஞ்சாயத்துகளுக்குக் கொடுக்க ஏற்பாடு செய்துவிட்டு, பாக்கியை சுற்றுவட்டாரத்திலுள்ள இதர கிராம பஞ்சாயத்துக்களும் பிரித்துக் கொள்ளும்படியாகச் செய்தால் எல்லாவற்றிற்கும் உபயோகமாக இருக்கும் என்கிற யோசனையைச் சொல்ல விரும்புகிறேன்.

அப்படியே பஞ்சாயத்து நிர்வாகம் மூன்று வருஷம் இருந்தால் போதும் என்று நினைக்கக்கூடும். ஆனால் இப்போது நாம் அடிப்படையாக ஐந்து வருஷங்களை எடுத்துக்கொண்டு ஐந்து-வருஷ திட்டங்களின் அடிப்படையில் கல்வி வளர்ச்சி, சுகாதார வளர்ச்சி, முதலியவற்றுக்கான திட்டங்களைப்



5th November 1957] [Sri M. S. Selvarajan]

போட்டு வருகிறோம். இதை கருத்தில் கொண்டு இந்த பஞ்சாயத்துக்களையும் ஐந்து-வருஷ அடிப்படையில் அமைக்க வேண்டும் என்கிற யோசனையை நான் கூற விரும்புகிறேன்.

கிராமத்தில் இருக்கக்கூடிய பஞ்சாயத்து கோர்ட்டுகள் ஏழைகளுக்கு மிகவும் உபயோகமாக இருக்கும். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கு இப்படி நியாயம் வழங்க கொஞ்சம் அதிக அதிகாரம் கொடுத்துவிட்டால் பல சௌகரியங்கள் ஏற்பட முடியும். குறைந்த செலவில் நியாயம் வழங்கப்படுகிறது. ஆகவேதான் கிராம கோர்ட்டுகளை அமைப்பதற்கும் சர்க்கார் யோசிக்க வேண்டுமென்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். இதில் அபிப்பிராய பேதம் இருக்கவேண்டிய அவசியம் இல்லை என்று நினைக்கிறேன். கிராம பஞ்சாயத்து மெம்பர்களும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள்தாம். ஆகவே மெம்பர்களால் தலைவர் தேர்ந்தெடுக்கும் முறை தவறல்ல. மக்களிடத்தில் வைக்கும் நம்பிக்கையை ஏன் அம்மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினரிடம் வைக்கக்கூடாது என்று கருதுகிறேன்.

இந்த நிலையில் ஒரு ஞாபகம் வருகிறது. இலங்கைத் தோட்டத் தொழிலாளர் ஜெனரல்பாடியால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதியாக ஸ்ரீ அஜீஸ் இருக்கிறார். அந்த ஜெனரல்பாடியால் தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக் கமிட்டியில் மிகப் பெரும்பாலோர் பலத்துடன் ஸ்ரீ தொண்டைமான் இருக்கிறார். இவர்கள் இரண்டு பேருக்கும் கருத்துவேறுபாடு வரும்போது ஒரு காரியமும் நடக்கவில்லை. ஏன் தோட்டத் தொழிலாளர்களால் நேரடியாக தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதியாக ஸ்ரீ அஜீஸ் சொல்லுகிற முடிவே சரியானது எனச் செய்யக்கூடாது என்று ஒரு சாராரும், தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக் கமிட்டிக்கு ஏன் தலைவர் கட்டுப்படக்கூடாது என்று ஒரு சாராரும் சொல்லுகிறதால் தொழிலாளர் நலன் பாதிக்கப்படுகிறது என்பது போலவே, இன்றைக்கு கிராம மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பஞ்சாயத்து பிரதிநிதிகளுக்கே தலைவரைத் தேர்ந்தெடுக்கும் இந்த அதிகாரம் ஏன் வழங்கப்படக்கூடாது என்பதை நாம் யோசிக்கவேண்டுமென்றுதான் கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு பஞ்சாயத்து யூனியன்களைவிட்டே உயர்தரப்பாடசாலையின் நிர்வாகத்தை நடத்துவது சரியாக இருக்காதோ என்று அபிப்பிராயப்படுகிறேன். அவர்களிடத்தில் அந்தப் பொறுப்பை ஒப்படைப்பது சரியா என்று கேட்கிறேன். உயர்தரப் பாடசாலைகளில் பலவிதமான பாட திட்டங்கள் இருக்கின்றன. டைவர்ஸிஃபைட் கோர்ஸ் இருக்கிறது. ஆகையால் ஹைஸ்கூல்களில் மாத்திரம் ஜில்லா அளவில் ஜில்லா கல்வி அதிகாரிகளையும், பாடசாலைகளின் சில பிரதிநிதிகளையும் கொண்ட ஒரு குழுவை அமைத்துத் தனியாக நடத்துவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தால் நன்றாக இருக்கும் என்று கருதுகிறேன். ஆசிரியர்களுடைய சம்பளம், இந்தப் பாடசாலைகளிலும் பஞ்சாயத்து யூனியனுக்குட்பட்ட சர்க்கார் பாடசாலைகளிலுமாவது, நேரடியாக ஆசிரியர்களுக்கு அனுப்புவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும்.

அப்படியே ஜில்லாவில் இருக்கக்கூடிய கவுன்சில்களை இரண்டு, மூன்றாகப் பிரித்துஒரே கலெக்டரைத் தலைவராக கொண்டு தனியாக நடத்துவதைக் காட்டிலும் எல்லாவற்றையும் ஒன்றாக வைத்து ஜில்லாவின் தலைநகரிலேயே பரிசீலனை செய்வது நன்றாக இருக்கும். உதாரணமாக தாம்பரபரணி பாசன திட்டத்தை எடுத்துக்கொண்டால் மேலே இருக்கிறவர்கள் தங்கள் உரிமைகளை மாத்திரம் வற்புறுத்துவார்கள். கீழே இருக்கிறவர்கள் தங்கள் கோரிக்கைகளை வற்புறுத்துவார்கள். இவர்கள் இரண்டு பேரும் ஒன்றாக இருந்து ஆலோசனை செய்யும்போதுதான் எது சாத்தியமோ அதை அமுல் நடத்துவதற்கு வேண்டிய முடிவு எடுக்க வசதியாக இருக்கும். எடுக்கப்படும் முடிவு சரியா, தப்பா என்பதை எல்லாம் சேர்ந்து ஆலோசனை செய்வது சாத்தியமாகும். இதனால் பல்வேறு விஷயங்களை சுமுகமாகத் தீர்த்துக்கொள்ள முடியும்...

***Sri P. U. SHUNMUGAM** : சட்ட மன்றத் தலைவர் அவர்களே, மாவட்ட மன்றங்களைக் கலைத்து, ஊராட்சி மன்றங்களுக்கு அதிக அதிகாரத்தை வழங்க சர்க்கார் வந்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. இதுபற்றி எனது கருத்துகள் சிலவற்றைச் சொல்ல விரும்புகிறேன்.

மாவட்ட மன்றங்களைக் கலைத்துவிட்டு ஊராட்சி மன்றங்களை அமைக்கும் போது ப்ளாக் டெவெலப்மெண்டு ஏரியாக்களில் உள்ள ஊராட்சி மன்றங்களின் பிரதிநிதிகள் கொண்ட கவுன்ஸிலை ஏற்படுத்தி அதன்மூலம் ஒட்டு மொத்தமாக எல்லாவற்றுக்கும் பணி செய்ய வேண்டும் என்கிற கருத்தை நான் பாராட்டுகிறேன். ஆனல் அவற்றை ஐந்து சர்கிளாகப் பிரித்து நிர்வாகத்தை நடத்தவேண்டும் என்கிற யோசனை சரியானதாகத் தோன்றவில்லை. ப்ளாக் டெவெலப்மெண்ட் ஏரியா பஞ்சாயத்துக்களை வைத்தே ஒரு கவுன்ஸில் அமைத்தால், சர்க்கிளாக அமைத்து அதில் ஏற்பட்டுவரும் வீணுன குழப்பங்கள் எல்லாம் ஏற்படாது என்பது என் அபிப்பிராயம்.

ஹைஸ்கூல்களைக் கொண்டுவந்து கவுன்ஸில்களிடம் கொடுப்பது பொருத்தமானதுதானு என்று புரியவில்லை. அது உயர்பாடசாலைக் குழு என்று சொல்லப்படுகிறது. ஜில்லா கல்வி அதிகாரியை வைத்து இதை சர்க்காரே நேரிடையான முறையில் நடத்துவது சரியானது என்று தோன்றுகிறது. மாவட்டக் கவுன்ஸிலை ஆலோசனைக் குழுவாக அமைத்திருக்கிருர்கள். அதை என் அதிகாரக் குழுவாக அமைத்திருக்கப்படாது என்பது தான் என் தாழ்மையான அபிப்பிராயம். ஆலோசனைக் குழுவாக அதை அமைப்பதைக்காட்டிலும் அதிகாரக் குழுவாகவே அமைத்து அதனிடம் நிர்வாக அதிகாரங்களையும் பொறுப்புகளையும் கொடுத்தால் நல்லமுறையில் நடக்கும்.

பொதுவாக கலெக்டர்களுக்கு அதிக அதிகாரம் கொடுக்கப்படுவதை நான் எதிர்க்கமாட்டேன். ஆயினும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கு மதிப்பு இல்லாத வகையில் ஒரு உத்தியோகஸ்தரை அமைத்துவிடுவது பொருத்தமானது அல்ல.

அடுத்தபடியாக நகராட்சி மன்ற ஆணையாளரைப் பற்றிய கான்பிடென் ஷியல் ரிப்போர்ட்டை நகரசபைத் தலைவர் எழுதவேண்டுமென்று சொல்லியிருப்பது சரியில்லை. பத்துப் பதினைந்து வருஷ காலமாக ஆணையாளராக இருந்து வரும் ஒருவரைப் பற்றி நேற்று தேர்ந்தெடுக்கப்பட்டு வந்த நகரசபைத் தலைவர் கான்பிடென்ஷியல் ரிப்போர்ட் எழுதவேண்டுமென்று சொன்னல்—எனக்கு நன்ருகத் தெரியும். தன்னுடைய பொறுப்பை உணராமலேயே சில நகரசபைத் தலைவர்கள்—அந்த ஆணையாளர் ஒரு ரௌடி என்று எழுதி வைக்கிருர்கள். இது முற்றிலும் சரியானது அல்ல. இதை மீண்டும் சர்க்கார் பரிசீலனை செய்யவேண்டும்.

நகரசபைத் தலைவர்களுக்கு அதிக அதிகாரம் வேண்டுமென்பது அதிகாரிகளைக் கசக்கிப் பிழிவதற்காக அல்ல. ரெட் டேபிச முறையின்றி சீக்கிரத்தில் நகரசபைக் காரியங்களைத் திறம்படப் புரியவேண்டும் என்பதற்காகத்தான் அதிக அதிகாரங்கள் வழங்கப்படவேண்டும்.

அடுத்தபடியாக நகரசபைத் தலைவர்களுக்கு அதிகாரம் வழங்க சர்க்கார் முன்வரும்போது ஆணையாளர்களையே நீக்கிவிட முன் வராவிட்டாலும் கூட, நகரசபைத் தலைவர்களுடைய நிர்வாகத்தில் ஆணையாளர்களும் அடிக்கடி குறுக்கிடாது இருக்கும்படியாகவும் செய்யவேண்டும். அப்போதுதான் ஊராட்சி மன்றங்கள், நகராட்சி மன்றங்கள் திறமையாகச் செயல்பட முடியும்.

***Sri S. LAZAR** : கனம் சபாநாயகர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் வெள்ளை அறிக்கையை சமர்ப்பிக்கும்போது குறிப்பிட்டு பேசுகையில் ஸ்தல ஸ்தாபனங்கள் எதிர்பார்த்த அளவு வளர்ந்து வந்திருக்கிறது என்று சொன்னர்கள். உலகத்தில் ஒரு பாகத்திலாவது இந்த பிரச்னையை தீர்த்திருக்கின்ருர்களா என்றல் இல்லை என்று சொல்லவேண்டும். மற்ற தேசங்களில், நல்ல நிலைமையில் இந்த ஸ்தல ஸ்தாபனங்கள் அபிவிருத்தி



அடைந்துவருகிறது. இந்தியாவை பொறுத்தவரையில் இந்திய சிற்றரசர்களாலும் முஸ்லீம் அரசர்களாலும் சரி, வெள்ளைக்காரர்கள் ஆண்ட போதிலும் சரி ஸ்தலங்களை நல்ல நிலைமைக்கு மாற்றுவதற்கு மறந்திருக்கிருர்கள். சுமார் 50, 60 ஆண்டுகளுக்கு முன்னல் இந்த ஒரு ஸ்தல அரசாங்கம் முதன் முதலாக கொண்டுவரப்பட்டதன் சரித்திரத்தை ஆராய்ந்து பார்க்கவேண்டும். மற்ற நாடுகளில் நல்ல முறையில் அமைத்து மக்களுக்கு நல்ல அறிவும் அனுபவமும் ஏற்படுகின்ற இந்த முறையில் பார்க்கும்போது அரசியல் துறையிலே பெரிய பெரிய மாறுதல்கள் ஏற்பட்டபோதிலும் ஸ்தல அரசாங்கம் ஏற்பட்டதன் முதற்கொண்டு நல்ல முறையிலே நடைபெறவில்லை.

இந்த சட்டசபையிலே பார்க்கும்போது நமது நாட்டிலேயுள்ள ஸ்தல அரசாங்கங்கள் நல்ல முறையில் நடப்பதற்கு இந்த வெள்ளை அறிக்கை கொண்டு வரப்பட்டிருக்கிறது என்று தெரிகிறது. குறிப்பாக இப்பொழுது வெள்ளை அறிக்கையில் குறிப்பிட்ட சில அதிகாரங்கள் வழங்கப்படவில்லை என்ற காரணத்தால் மக்களிடையே ஆர்வம் குறைந்துவிட்டது. இதே சமயத்தில் முனிஸிபாலிடியும் இங்கு வந்திருக்கிறது என்று சொன்னர்கள். ஆனல். மக்கள் நேரடியாக பார்க்கக்கூடிய நிலைமையில் இந்த நிர்வாகம் நல்ல முறையில் நடக்கிறது. பெரிய அறிஞர்கள் எல்லாம் ஜனநாயக அரசாங்கத்தை காப்பாற்றவேண்டும் என்ற நல்ல முறையில் வளரவேண்டும் என்று ஒரு வருஷத்திற்கு தேர்தல் இல்லாமல் ஒரு ஸ்பெஷல் அதிகாரியைப் போடவேண்டும் என்று சொல்லப்படுகிறது.

ஆனல் அதே சமயத்தில் முனிசிபாலிடிகள் மட்டும் நல்ல முறையில் இயங்க இப்போது நல்ல சூழ்நிலை ஏற்பட்டு இருக்கிறது. ஜனநாயகத்தைக் காப்பாற்றவேண்டும் என்று சொல்லப்படுகிறது. ஜனநாயகம் நல்ல முறையில் வளரவேண்டுமானல் ஸ்தல ஸ்தாபனங்களுக்கு பூரண அதிகாரம் கொடுக்கவேண்டும் என்று அறிக்கையிலே சொல்லி இருக்கிருர். இது முனிஸிபாலிடிகளை பொறுத்த வரையில் நம்முடைய நாட்டில் முற்றும் பொருந்தும். முனிசிபல் தலைவருக்கு பூரண அதிகாரம் கொடுத்தால்தான் முனிசிபாலிடிகள் நடை முறையில் நன்ருக இயங்க முடியும் என்பது என்னுடைய அபிப்பிராயம். அரசாங்கம் ஒரு **Supervisory Control** மட்டும் வைத்துக்கொண்டு அதிகாரம் எல்லாவற்றையும் வழங்குவதுதான் நல்லது என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். ஆனல் ஏதோ நம் நாட்டில் நமது அரசாங்கம் இந்த அதிகாரத்தை பூராவும் ஸ்தல ஸ்தாபனங்களுக்கு அளிக்கவில்லை.

அயல் நாடுகளில் அதுவும் குறிப்பாக **France** தேசத்தில் ஸ்தல ஸ்தாபனங்கள் எவ்வாறு இயங்கிவருகிறது என்றல், **Paris** நகரம்கூட ஸ்தல ஸ்தாபனங்களின் நிர்வாகத்தின் கீழ்தான் இருக்கிறது. அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற தேசங்களில் பெரிய **corporation** கள் இருக்கின்றன. ஆனல் 50, 60 வருஷ காலமாக நடை முறையில் பார்க்கும்போது **central control** அரசாங்கம் வைத்துக்கொள்ள முற்படுகிறது. ஸ்தல ஸ்தாபனங்களின் அதிகாரத்தை குறைத்துக்கொள்ள வருகிறது. ஆகவே இந்த ஏற்பாட்டில் இந்தக் கருத்துக்களை அமைத்து பார்க்கும்போது முனிசிபாலிடி போன்ற சபைகளின் பதவி காலம் குறைந்தது 5 வருடமாவது இருக்கவேண்டியது மிகவும் அவசியம். அதோடு என்னுடைய ஒரு முக்கியமான கருத்து என்னவென்றல் ஸ்தல ஸ்தாபனங்கள் ஏற்பட்டுத்துகின்ற காலத்திலே அனுபவமுள்ளவர்களும், அதிலுள்ள சிக்கல்கள் தெரிந்த ஒரு சிலர் தொடர்ந்து இருக்கவேண்டும் என்பது முனிசிபாலிடியின் ஆயுட்காலம் ஐந்து வருஷகாலமாக இருப்பது அவசியம். மூன்றில் ஒரு பங்கினர் வெளியேறினல் நலமாக இருக்கும். அதாவது இப்போது நமது மேல் சபையில் நடைபெறுகின்ற ஒரு முறையை போல, இங்கும் ஏற்படுத்தினல் ஸ்தல ஸ்தாபனங்களில் தொடர்ந்தாற் போல் அனுபவசாலிகளும், சகலமும் தெரிந்தவர்களும் இருப்பார்கள் என்றும், இதனல் ஸ்தல ஸ்தாபனங்களும் நல்ல முறையில் நடக்க ஏதுவாக யிருக்கும் என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்த ஸ்தல ஸ்தாபனங்கள் நல்ல முறையில் நடப்பதற்கு **Business Committee** ஒன்றை

ஏற்படுத்தி, நல்லபடி நடப்பதற்காக ஒரு முறையை வகுக்கவேண்டும். அதில் அரசியலை புகுத்தாது பொதுவான முறையிலே நடைபெறுவதற்கான வழிவகைகளைச் செய்யவேண்டும்.

10 a.m. SRI T. T. DANIEL : Mr. Speaker, Sir, the village panchayats in ancient days had an important place in the national life of our country. In certain cases, the village panchayats had even powers to undertake legislation for collecting taxes for local purposes. They were more or less self-contained, autonomous units in our national life. But, Sir, with the advent of the British Rule and with the inroads of Western civilization into our economic and social life, the importance or the significance of the village panchayat began to decay. Gradually with the coming into existence of towns, where the social life of the people was different, villager were forced to leave the villages to settle down in towns. So much so, the predominent position of the village and the village unit in our national life began to dwindle in importance. But it must also be stated that even the British rulers did realize the importance of village panchayats in our economic life. The Royal Commission on Decentralization, the Local Boards Act of 1884 and the Local Boards Amendment Act of 1920 were all intended by the Government to develop the village panchayat system. It must be pointed out that with the introduction of schemes for national development, the importance of village panchayats has become all the greater. The Planning Commission has emphasised that the village panchayats should form more or less the agency for the execution of the various development schemes, and that they should form the very foundation of the social and economic structure of our country. It is with this object, I believe, this White Paper has been introduced. In discussing the White Paper, I would like to point out certain facts for the consideration of the Government. It is stated that the lifetime of the presidentship of the panchayats must be extended from three to five years. In view of the fact that there are no provisions for the removal of the village panchayat president from office and in view of the fact that the president is not going to be directly elected, it is not proper to extend the lifetime of the presidentship from three to five years. There must be clear provisions for the removal from office of the president under certain circumstances. When he loses, for instance, the confidence of at least two-thirds of the total number of members of the panchayat, he should quit office.

Sir, in this connection, I would also suggest that the system of secret ballot must be adopted for the purpose of the election of the President. Because, it seems to be the object of the Government to avoid as far as possible, communal hatred and also dissensions and factions among the villagers. If that be the real object and purpose of the Government, I do not think there is any harm in introducing the secret ballot system for the election of the President.

Sir, the formation of the Panchayat Union is an absolute necessity. When we concede that a Village Panchayat Union must be formed, it may not be possible for village panchayats to do





certain types of work which could otherwise be properly taken over by the Panchayat Union. There seems to be a suggestion that the control which the District Board has over the schools must be given to the Panchayat Union. I think it will be better if control is taken over by the Government in such matters. After all, law and order and education should be absolutely in the hands of the Government. There are certain matters which those bodies could undertake. But, for the proper functioning of the Government, it is absolutely necessary that they should have control over certain matters. In such cases, it will be better that the Government directly take over control. If on the other hand, the Panchayat Unions are entrusted with such work which should be taken over by the Government, the Panchayat Unions will not be able to function properly in executing the various developmental works which they will otherwise be able to do.

SRI P. S. ELLAPPAN : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த பஞ்சாயத்துபோர்ட் விஷயமாக மூன்று தினங்களாக விவாதம் நடந்து கொண்டுவருகிறது. அது சம்பந்தமாக ஒவ்வொருவருடைய அபிப்பிராயத்தையும் அதை எந்த விதத்தில் நடத்தினால் கிராமங்களுக்கு சௌகரியம் உண்டாகும் என்ற விஷயமாகவும் பேசினார்கள். எல்லோரும் வெள்ளை அறிக்கை, வெள்ளை அறிக்கை என்று சொல்லுகிறார்கள். ஆனால் அந்த வெள்ளை அறிக்கை என்ற விஷயத்தில் நான் புகுந்து பார்க்க எனக்குத் திறமை கிடையாது. ஆகவே எனது அனுபவத்தை வைத்துக்கொண்டு கிராமங்கள் எப்படி நடக்கிறது. அதற்கு எந்த விதமான உதவி செய்தால் கிராமங்கள், மஹாத்மாஜி அவர்கள் சொன்னபடி. அதை சௌகரியமாக்கி மக்கள் க்ஷேமத்தை அடைவார்கள் என்ற முறையில் என் அனுபவத்தை வைத்துக்கொண்டு இரண்டொரு விஷயத்தை சொல்கிறேன். ஜில்லா போர்ட் ஒழிக்கப்பட்டது, இனி பஞ்சாயத்து ராஜ்யம் என்று நாம் பேசுவதில் பிரயோஜனம் இல்லை. கிராமங்களில் உள்ளவர்கள் தங்களின் விவகாரங்களை தாங்களே தீர்த்துக்கொள்ளும்படியாக பஞ்சாயத்துகளை அமைத்து அதிகாரங்களைக் கொடுக்கவேண்டும். கிராம அதிகாரிகள் பஞ்சாயத்திற்கு அடங்கி நடக்கவேண்டும். நில சாகுபடி, நீர்பாசனங்கள், கிராம சீர்திருத்தம் செய்வது, இவைகளை முக்கியமாக பஞ்சயத்திற்கே விட்டுவிடவேண்டும். அப்பொழுதுதான் உணவு உற்பத்தியை அதிகரிக்க முடியும். ஒரு கிராமத்தில் உற்பத்தியாகும் உணவை அந்த கிராமத்திலேயே உபயோகிக்கவேண்டும். இவைகள்தான் வறுமையைப் போக்கும் வழி. ஜாதிப் பூசல்களை ஒழிப்பதன் வழி உடனடியாக காந்திஜி அவர்கள் கூறியதுபோல் சுயதேவைப் பூர்த்தித் திட்டத்தை அமலுக்குக் கொண்டுவர எல்லாவிதமான அதிகாரங்களும் பஞ்சாயத்திற்கே இருக்கவேண்டும்.

MR. SPEAKER : கனம் அங்கத்தினர் படிக்கக்கூடாது. அதில் இருக்கிறதை அவர்கள் சொன்னால் நன்றாயிருக்கும் என்று சொல்லிக் கொள்ளுகிறேன்.

SRI P. S. ELLAPPAN : இதற்கு முன் எனக்கு இந்த அனுபவம் கிடையாது. இப்பொழுதுதான் வந்திருக்கிறேன். நான் சொல்கிற விஷயத்தை எடுத்துக்கொள்ளுங்கள். இல்லாவிட்டால் விட்டுவிடுகிறேன். ஆகவே, உடனடியாக காந்திஜீயின் சுயதேவை பூர்த்தியை அமலுக்குக் கொண்டுவர எல்லாவிதமான அதிகாரங்களும் பஞ்சாயத்திற்கே இருக்கவேண்டும். இப்பொழுது ஒரு பிரச்னை ஏற்பட்டிருக்கிறது. இன்று சீர்திருத்தம் சரிவர நடைபெறுமா என்ற சந்தேகம் சிலருக்கு உண்டாகலாம். அவ்வாறு சந்தேகிப்பது ஆளும் கட்சியினர் தங்கள் அதிகாரத்தை விட்டுக் கொடுப்பதற்கு மறுப்பதுதான் ஆகும். போலீஸ் ரெவனியூ அதிகாரிகளும் பஞ்சாயத்திற்கு அடங்கி நடந்தால் மக்களுக்கு உள்ள எல்லாவிதமான

பிரச்னைகளையும் சுமுகமாக தீர்த்துக் கொள்ளலாம். மாகாணம் முழுவதும் சுயதேவைப் பூர்த்தியை அமலுக்குக் கொண்டு வர முடியாது. எனது தாலூகாவில் சிக்காம்பூர் பிர்க்கா இருக்கிறது. அது 416 கிராமங்கள் கொண்டது. மதுராந்தகம் தாலுகா பெரிய தாலுகா. ஆகவே அந்த தாலுகாவில் எல்லா இடங்களிலும் இந்த சுயதேவை பூர்த்தியைச் செய்ய முடியவில்லை என்று சொன்னால் ஒரு தாலுகாவில் ஒரு பிர்க்காவை எடுத்துக்கொண்டு, மஹாத்மாஜி அவர்கள் சொன்னபடி 18 விதமான திட்டங்களை கிராமங்களுக்குச் செய்யவேண்டுமென்று சொல்லியிருக்கிறது. இது விஷயமாக வினோபாஜி அவர்களும் மைசூரில் நடந்த ஒரு கூட்டத்தில் சொன்னதை, அந்த சமயத்தில் நேருஜி, நம் மேன்மைதங்கிய ராஜேந்திரப் பிரசாத், அமைச்சர்களும் போய் அதை எப்படி நடத்துவது என்பதைத் தெரிந்துகொண்டு வந்திருக்கிறார்கள். ஆகவே அந்த விதமான ஒரு முறையை நம் கிராமமக்களின் முன்னேற்றத்தைக் கருதி இதைச் செய்வீர்களேயானால் மிகவும் நல்லதாயிருக்கும். ஆகவே, மதுவிலக்கு, ஆரம்பக் கல்வி இன்னும் பலவித நீர்ப்பாசனம், புறம்போக்கு, கிராமங்களில் நடக்கும் சண்டைகள் இவைகளை எல்லாம் தீர்த்து வைப்பதற்கு, இவைகளை அவர்களே செய்வதாயிருந்தால் அவைகள் சுலபமாய் முடியும். இந்த விதமான ஒரு திட்டத்தை அமலுக்குக்கொண்டு வரும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

**Sri A. VEDARATNAM PILLAI** : கனம் சபா நாயகர் அவர்களே, கிராமப் பஞ்சாயத்துகளுக்கு இப்பொழுது விசேஷ உரிமைகள் கொடுத்து அதிகாரத்தை பரவல் முறையிலே அனுஷ்டிக்கப் பட முன் வந்திருப்பதை நான் முழு மனதுடன் வரவேற்கிறேன். ஆனால் இப்பொழுது அதிகாரம் குவிந்து கிடக்கிறது, மத்திய அரசாங்கத்திலும் மாகாண அரசாங்கத்திலும் பரவல் முறை வரவேண்டிய அந்த இடங்களில். ஆனால் அதற்கு நாம் செய்யக்கூடிய விஷயம் ஒன்றுமில்லை. ஆனபோதிலும் அந்தக் கருத்தையாவது நாம் மனதில் வைத்து நம் காரியங்களை நடத்தவேண்டும் என்பது தான் எனது முக்கியமான கோரிக்கை. இங்கு பேசிய ஒவ்வொரு அங்கத்தினர்களும், பஞ்சாயத்திற்கு நிதி போதாது, நிதி போதாது என்பதைத்தான் வற்புறுத்தினார்கள். ஏன் நிதி போதவில்லை என்றால், இப்பொழுது இந்த அரசாங்கமும், மத்திய அரசாங்கமும் அனைவரும் செலவிடும் பணம் அனைத்தும் கிராம வாசிகள் கொடுக்கிற வரிப் பணத்திலிருந்துதான் பெரும்பகுதி நடைபெறுகின்றன. ஆனால் கிராம வாசிகள் கிராமப் பஞ்சாயத்துகளுக்கு பணம் இல்லையென்று சொல்கிறார்கள். அந்த நிதி முழுவதையும் அவர்கள் எடுத்துக்கொண்டு உங்களுக்கு வேண்டிய செலவை நீங்களே வரி போட்டு வசூலித்துக்கொள்ளுங்கள் என்று இப்போது கூறப்படுகிறது. இந்த முறை மாறி கிராம வாசிகள் கொடுக்கும் வரி முழுவதும், அவர்களின் பஞ்சாயத்து செலவுகள் போக எஞ்சிய தொகையைத்தான் மாகாண அரசாங்கமோ அல்லது மத்திய அரசாங்கமோ எடுத்துக்கொள்ள வேண்டுமே அல்லாமல் அவர்களின் பணத்தை எடுத்துக்கொண்டு உங்களுக்குவேண்டிய பணத்திற்கு நீங்கள் வரி போட்டு வசூலித்துக்கொள்ளுங்கள் என்று சொல்வது சரியான முறையாகாது என்பதை நான் வற்புறுத்த விரும்புகிறேன். வரி முழுவதும், கிராமப் பஞ்சாயத்தின் தேவைகளுக்குப்போக மிகுதி மற்ற அரசாங்கங்களுக்குச் செல்லவேண்டும். இந்த பஞ்சாயத்து வெள்ளை அறிக்கையிலே ஒரு முக்கியமான விஷயத்தைக் குறிப்பிடவில்லை. கிராம வாசிகளுடைய பொருளாதார அபிவிருத்திக்கான அம்சம் எவுதும் இதில் அதிகமாகக் காணப்படவில்லை. எனக்கு முன் பேசிய அங்கத்தினர் அவர்கள் கிராம சுயதேவையைப் பற்றிச் சொன்னார், அதைத்தான் நான் மீண்டும் இங்கு வற்புறுத்த விரும்புகிறேன். கிராமம் என்றால் எப்படியிருக்கவேண்டும், பஞ்சாயத்து எப்படியிருக்கவேண்டும் என்பதற்கு உதாரணமாக அமெரிக்கா, பிரான்ஸ் போன்ற நாடுகளை நான் குறிப்பிடவில்லை. குஜராத் மாகாணத்தில் வேடச்சி என்ற இடத்தில் ஒரு கிராமத்தை கிராம சுயதேவைக்காக மாதிரி முறையில் நடத்தியிருக்கிறார்கள். அவர்களின் அறிக்கையும்





பிரசுரமாகியிருக்கிறது. அதையும் மந்திரியவர்கள் ஒரு முறை படித்து இந்த பில்லைத் தயாரிக்கும் காலத்தில் இந்த அடிப்படைக் கருத்தை உள்ளத்தில் வைத்துக்கொண்டு அதைத் தயாரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அந்த கிராமத்தில் தேவை என்ன, அதன் ஜனத்தொகை என்ன, அதன் நிலப்பரப்பு எவ்வளவு என்றெல்லாம் எடுத்துக்கொண்டு என்ன பற்றாக்குறையிருக்கிறதோ அதை உபரியாக்கவும், உபரியாக என்ன இருக்கிறதோ அதைக் குறைத்துக் கொள்ளவும் அங்கு தேவையான பொருள்களை உற்பத்தி செய்ய ஒரு அழகான திட்டத்தை தயாரித்து நிறைவேற்றியிருக்கிறார்கள். அதிகாரமில்லாத நிர்மாண ஊழியர்கள் சேர்ந்து இந்த ஒரு நல்ல காரியத்தை அங்கு சாதிக்க முடிந்தது, சகல அதிகாரத்தையும் பெற்று அமைக்கப்படுகிற கிராம பஞ்சாயத்துகள் இந்த முறையில் எவ்வளவு அதிகமாகச் செய்ய முடியும் என்ற விஷயத்தை மந்திரியவர்களும் இந்த செலக்ட் கமிட்டியிலே அங்கத்தினர்களாக வருகிறவர்களும் தங்கள் மனதிலே இந்தக் கருத்தை வைத்துக்கொண்டு இந்த திட்டத்தை உருவாக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

எங்கே அதிகாரம் குவிந்திருந்தாலும் அல்லது பணம் குவிந்திருந்தாலும் சில குறைபாடுகள் அங்கு வந்து விடுகின்றன. எனவேதான் வினோபாஜி சொன்னது போல் “The State should wither away” ஆட்சி முறை எங்கு குறைவாக இருக்கிறதோ அங்குதான் நல்ல ஆட்சியாக இருக்கும் என்று ஒரு ஆங்கில பழமொழியை குறிப்பிட்டேன். எனவேதான் இந்த அடிப்படையில் ஏற்பாடுகள் செய்வதும் ஆஸ்பத்திரி போன்ற பல திட்டங்களை அமைப்பதும் பஞ்சாயத்தினுடைய வேலை அல்ல. இன்று இதனால் அவர்கள் எல்லா விஷயங்களுக்கும் அரசாங்கத்தினுடைய தயவை எதிர்பார்த்துக்கொண்டு இருப்பதற்கு பதிலாக தங்களுடைய தேவைகளை தாங்களே பூர்த்தி செய்து கொள்ளும்படியான நிலைமையில் இந்த பஞ்சாயத்து அமையுமானால் அரசாங்கத்தை அவர்கள் நிர்பந்தப்படுத்தக்கூடிய நிலைமை குறையும்: அதோடு தாங்களே தங்கள் காரியத்தை பார்த்துக்கொள்ளக்கூடிய நிலைமையை உண்டு பண்ண வேண்டுமென்று மந்திரி அவர்களையும் செலக்ட் கமிட்டி அங்கத்தினர்களையும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

**Srimathi P. K. R. LAKSHMIKANTHAM**: கனம் சட்டமன்றத் தலைவர் அவர்களே, இன்று இரண்டு நாட்களாக இந்த வெள்ளை அறிக்கையின் பேரில் பல விவாதங்கள் நடந்திருக்கின்றன. பல அங்கத்தினர்கள் தமது கருத்துக்களை எடுத்து வெளியிட்டார்கள். உண்மையாக நமது நாட்டில் ராம ராஜ்யம் ஏற்பட்டால்தான் நாடு செழிப்புற வாழ முடியும் என்பதில் யாருக்கும் அபிப்பிராய பேதம் இல்லை. ஆகவே அந்த அடிப்படையின் பேரில்தான் இந்த வெள்ளை அறிக்கை உருவாகியிருக்கிறது என்பதை தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். இருந்தாலும் அதில் இன்னும் சில மாறுதல்களைச் சேர்த்து இந்த வெள்ளை அறிக்கை உருவாகுமானால் இன்னும் நன்றாக இருந்திருக்கும், என்பதுதான் என்னுடைய அபிப்பிராயம். நேற்றும் இன்றும் பேசினவர்கள் சில கருத்துக்களை குறிப்பிட்டார்கள். அதாவது பஞ்சாயத்திலும் மற்ற இடங்களிலும் வோட்டு எடுப்பு முறையானது ரகசியமாகத்தான் இருக்கவேண்டும் என்றும் பகிரங்கமாக இருக்கக்கூடாது என்பதையும் பலர் தெரிவித்தார்கள். அதுதான் உண்மையென்று எனக்கும் புலப்படுகிறது. ஆகவே வோட்டு எடுப்பு முறையானது ரகசியமாக இருக்கவேண்டுமென்றுதான் நானும் கருதுகிறேன். இரண்டாவதாக வோட்டு எடுப்பு முறையானது எல்லா முறைகளும் ஒரே தன்மையாக இருக்கவேண்டும். முனிசிபாலிடி தேர்தலாக இருந்தாலும் சரி, சட்டசபை தேர்தலாக இருந்தாலும் சரி, பஞ்சாயத் தேர்தலாக இருந்தாலும் சரி, எல்லா தேர்தல்களிலும் ஒரே முறையாகத்தான் இருக்கவேண்டும். இரண்டாவது இந்த வெள்ளை அறிக்கையில் பஞ்சாயத்துலிருந்து யூனியன் பஞ்சாயத்துக்கு யார் பிரதிநிதியாக போவார்கள் என்பது நன்றாக, தெளிவாக குறிப்பிடவில்லை. பஞ்சாயத் போர்டு தலைவரோ அல்லது வேறு யாராவது யூனியன் பஞ்சாயத்துக்கு பிரதிநிதியாக போகலாம் என்றிருக்கிறது. அந்த முறை மாற்றவேண்டும் என்று நான் அபிப்பிராயப்படு

[Srimathi P. K. R. Lakshmikantham] [5th November 1957

கிறேன். பஞ்சாயத்து போர்டு தலைவர்தான் பிரதிநிதியாக செல்லவேண்டுமென்பதுதான் என்னுடைய அடிப்படியான கருத்து. மேலும் பஞ்சாயத்தின் கீழ் ஆஸ்பத்திரி முதலியவை இருப்பதைவிட ஜில்லா போர்டின்கீழ்தான் இருக்கவேண்டும் என்பது என்னுடைய அபிப்பிராயம். ஆனால் தாய், சேய் நலவிடுதி, இவைகள் அந்தந்த பிளாக் பஞ்ஞாயத்தின் கீழ்தான் இருக்கவேண்டும். இது தவிர ஆஸ்பத்திரிகள், ஹைஸ்கூல்கள் இவைகள் ஜில்லா போர்டின் கீழ் இருப்பதுதான் நல்லது. மேலும் பஞ்சாயத்துக்களில் பெண்களுக்கு என்று தனி ஸ்தானங்கள் ஒதுக்கவேண்டுமென்பதுதான் என்னுடைய கருத்தாகும். இரண்டாவதாக முனிசிபாலிட்டி சம்பந்தமாக ஒன்றிரண்டு வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். இரண்டு லட்சம் ஜனத்தொகை என்ற விகிதாசாரத்தின் பேரில் 42 அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்கப்படவேண்டும் என்று வெள்ளை அறிக்கையில் கண்டிருக்கிறது. அந்த விகிதாசாரப்படி பார்த்தாலும் மதுரையில் சுமார் 4 லட்சத்திற்கு மேற்பட்டவர்கள் இருக்கிறார்கள். அந்த விகிதாசரப்படி பார்த்ததால் மதுரையில் 50 ஸ்தானங்களுக்கு மேல் இருக்கலாம் என்றும் நான் அபிப்பிராயப்படுகிறேன். மேலும் மதுரை முனிசிபாலிடியானது சென்னைக்கு அடுத்தபடியாக உள்ள ஒரு முனிசிபாலிட்டியாக இருக்கிறது. அதை கார்ப்பரேஷனாக ஆக்கவேண்டுமென்று அங்குள்ள மக்கள் இரண்டு மூன்று வருடங்களாக வற்புறுத்தி வருகிறார்கள். ஆனால் இதுவரையிலும் கார்ப்பரேஷனை அமைப்பதற்கு அனுமதி கொடுக்கப்படவில்லை. ஆகவே கனம் ஸ்தல ஸ்தாபன அமைச்சர் அவர்கள் அன்பு கூர்ந்து மதுரை முனிசிபாலிடியை கார்ப்பரேஷனாக மாற்றவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தேர்தல் ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை என்று வகுக்கப்பட்டிருப்பது அவசியமில்லை, இப்பொது இருப்பது போல், மூன்று வருஷங்களாகவே இருந்தால் போதும் என்றுதான் நான் கருதுகிறேன். ஆகவே இதைப் பற்றி கமிட்டியானது வேண்டிய முடிவு செய்யும் என்பதில் எனக்கு ஐயமில்லை என்று கூறிக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

* **Sri N. R. THIYAGARAJAN** : தலைவர் அவர்களே இரண்டு நாட்களாக நடந்த விவாதத்தின் மீது நான் கூறிக்கொள்வது என்னவென்றால் ஒரு ஆலோசனைக் குழுவுக்கு இந்த மசோதாவை அனுப்பவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**Mr. SPEAKER** : கனம் மெம்பர் அவர்கள் அவருடைய தீர்மானத்தை பிரேரேபிக்க வேண்டுகிறேன்.

**Sri N. R. THIYAGARAJAN**: நான் இந்த தீர்மானத்தை என் கொண்டு வந்தேன் என்றால் தமிழ் நாட்டில் இருக்கின்ற மூன்று கோடி மக்களுடைய வாழ்க்கையை பிரதிபலிக்கக்கூடிய மசோதாவாக இது இருக்கிறது. இந்த மசோதாவை நிறைவேற்றும்போது இதைப்பற்றி ஒவ்வொரு குக்கிராமத்திலும் என்ன அபிப்பிராயம் என்பதை ஆர அமர ஆலோசித்து இதில் சரியான முடிவுக்கு வரவேண்டும். ஆகவே ஒரு ஆலோசனை குழுவுக்கு இந்த மசோதாவை அனுப்பவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய தீர்மானத்தை பிரேரேபித்துக்கொள்கிறேன்.

**Mr. SPEAKER** : கனம் மெம்பர் அவர்கள் அந்த பிரேரேபனையை வாசிக்கும்படி வேண்டுகிறேன்.

**Sri N. R. THIYAGARAJAN** : Sir, I move—

"and on such consideration this Assembly resolves to constitute a Committee consisting of the following Members to assist the Minister for Local Administration in finalizing the Schemes for the Reform of Local Administration in the State of Madras :—

1 Sri B. Bhaktavatsalu Naidu (Deputy Speaker).
2 ,, S. Ramaswami Naidu.
3 Dr. Srimathi T. S. Soundaram Ramachandran.



5th November 1957] [Sri N. R. Thiyagarajan]

4 Sri K. S. Subramania Gounder.
5 ,, C. Muthiah Pillai.
6 ,, A. A. Rasheed.
7 ,, K. Vinayakam.
8 ,, A. Nesamony.
9 ,, K. N. Palaniswamy Gounder.
10 ,, C. R. Ramaswami.
11 ,, V. K. Ramaswamy Mudaliyar.
12 ,, V. K. Kothandaraman.
13 ,, P. U. Shanmugam.
14 ,, K. Sattanatha Karayalar.
15 ,, S. Pakkirisami Pillai.
16 ,, P. S. Chinnadurai."

**Sri A. GOVINDASAMY** : Sir, I second it.

**Mr. SPEAKER** : The Motion is—

"and on such consideration this Assembly Resolves to constitute a Committee consisting of the following Members to assist the Minister for Local Administration in finalizing the Schemes for the Reform of Local Administration in the State of Madras :—

1 Sri B. Bhaktavatsalu Naidu (Deputy Speaker).
2 ,, S. Ramaswami Naidu.
3 Dr. Srimathi T. S. Soundaram Ramachandran.
4 Sri K. S. Subramania Gounder.
5 ,, C. Muthiah Pillai.
6 ,, A. A. Rasheed.
7 ,, K. Vinayakam.
8 ,, A. Nesamony.
9 ,, K. N. Palaniswamy Gounder.
10 ,, C. R. Ramaswami.
11 ,, V. K. Ramaswamy Mudaliyar.
12 ,, V. K. Kothandaraman.
13 ,, P. U. Shanmugam.
14 ,, K. Sattanatha Karayalar.
15 ,, S. Pakkirisami Pillai.
16 ,, P. S. Chinnadurai."

* **Sri S. M. ANNAMALAI** : கனம் தலைவர் அவர்களே, கனம் ஸ்தல ஸ்தாபன அமைச்சர் கொண்டுவந்திருக்கும் வெள்ளை அறிக்கையின் மீது ஒரு சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். அதில் பஞ்சாயத்து போர்டு தலைவரை எந்த முறையில் தேர்ந்தெடுப்பது என்பதுபற்றி சொல்லப்பட்டிருக்கிறது. பஞ்சாயத்து போர்டு தலைவர் தேர்தலானது மக்கள் தேர்ந்தெடுக்கும் தேர்தலாக இருக்கவேண்டுமேயொழிய பஞ்சாயத்து போர்டு உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கும் தேர்தலாக இருக்கக்கூடாது என்பதை நான் சேர்ந்திருக்கும் திராவிட முன்னேற்றக்கழகத்தின் சார்பில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, பஞ்சாயத்து போர்டு, தான் வசூல் செய்யும் பணத்தையெல்லாம் பஞ்சாயத்து யூனியனிடம் கொடுத்துவிட்டு அதன்பிறகு அதனிடமிருந்து வேண்டியபோது பணத்தை வாங்கிக்கொள்ளவேண்டும் என்பது

பஞ்சாயத்து போர்டின் உரிமையைப் பறிப்பதாக இருக்கிறது. ஆகையால் அந்த அந்த பஞ்சாயத்து தான் வசூல் செய்யும் பணத்தை சேவிங்ஸ் பாங்கில் போட்டு அதிலிருந்து வேண்டியபோது எடுத்துக்கொள்ளும் நிலையை உண்டாக்கவேண்டும். வெள்ளை அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கும் ஏற்பாட்டிற்கு முக்கிய காரணம், "பஞ்சாயத்து போர்டு தலைவருக்கு கையெழுத்து போடத் தெரியாது. ஆகவே பஞ்சாயத்து வசூலிக்கும் பணத்தை யூனியனிடம் கொடுத்து வேண்டியபோது வாங்கிக்கொள்ளவேண்டும்" என்று வெள்ளை அறிக்கையில் கண்டிருக்கிறது. ஏறத்தாழ, எல்லா பஞ்சாயத்து போர்டு தலைவர்களும் படித்திருக்கிறார்களே தவிர, . . .

THE HON. SRI C. SUBRAMANIAM : பஞ்சாயத்து போர்டு தலைவருக்குக் கையெழுத்துப் போடத் தெரியாது என்று வெள்ளை அறிக்கையில் எந்த இடத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது ?

SRI S. M. ANNAMALAI : அவர்களுக்குச் சரிவரக் கையெழுத்துப் போட தெரியவில்லை என்று சொல்லப்பட்டிருக்கிறது.

SRI K. VINAYAKAM : அவர் (கனம் அங்கத்தினர்) கறுப்பு அறிக்கையை வைத்துக்கொண்டிருக்கிறார், வெள்ளை அறிக்கையை அல்ல (சிரிப்பு).

MR. SPEAKER : சரி, நீங்கள் பேசுங்கள், பரவாயில்லை.

SRI S. M. ANNAMALAI : நிலத் தகராறுகள் அனைத்தையும் தீர்க்கும் பொறுப்பை பஞ்சாயத்து போர்டிடம் விடுவது நலமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

அடுத்தபடியாக, பஞ்சாயத்து கோர்ட்டுகளை நியமித்து அவைகளிடம் சில குறிப்பிட்ட வழக்குகளை மட்டும் ஒப்படைத்தால் நன்றாக இருக்கும். சில குறிப்பிட்ட சிவில், கிரிமினல் வழக்குகளை அவைகளிடம் ஒப்படைக்கலாம். இப்பொழுது பஞ்சாயத்து போர்டுகள் பஞ்சாயத்து கோர்ட்டுகள் சில வேலைகளைச் செய்துவருகின்றன. 160 முக்காடு கேஸ்களைப்போன்ற வழக்குகளை மட்டும் பஞ்சாயத்து கோர்ட்டிடம் ஒப்படைத்தால் நன்றாக இருக்கும். பஞ்சாயத்து கோர்ட்டை பஞ்சாயத்து போர்டிடமிருந்து பிரித்துவிட்டால் நன்றாக இருக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, முதல் தரப் பஞ்சாயத்துக்கள், இரண்டாம் தரப் பஞ்சாயத்துக்கள் என்று பஞ்சாயத்துக்களைப் பிரித்துவிட்டு, ஜில்லா பஞ்சாயத்து ஆபீசர் இரண்டு வித பஞ்சாயத்துக்களையும் மேற்பார்வை செய்யவேண்டும் என்றும், அவர் முதல் தர பஞ்சாயத்துக்கள் சம்பந்தமான ரிப்போர்ட்டை இன்ஸ்பெக்டர் ஆப் லோக்கல் போர்ட்ஸுக்கு அனுப்பவேண்டுமென்றும், இரண்டாவது தர பஞ்சாயத்துகள் சம்பந்தமான ரிப்போர்ட்டை ரெவின்யூ டிவிஷனல் ஆபீசருக்கு அனுப்பவேண்டுமென்றும், வெள்ளை அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. இரண்டு வித பஞ்சாயத்துகளும் ஒரே அதிகாரியின் கீழ் இருந்தால்தான் நன்றாக இருக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன். இரண்டு விதமான ரிப்போர்டுகளை டி. பி. ஓ. (ஜில்லா பஞ்சாயத்து ஆபீசர்) இரண்டு அதிகாரிகளுக்கு அனுப்புவதென்றால், அது டி. பி. ஓ.-விற்கு மிகவும் கஷ்டமாக இருக்கும். அடுத்த படியாக, முதல் தர பஞ்சாயத்துக்களை ஆடிட் செய்யும் லோகல் பண்டு இலாகா அதிகாரிகளே இரண்டாவது தர பஞ்சாயத்துக்களையும் "ஆடிட்" செய்யவேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கிராம சேவக்குகளை பஞ்சாயத்துக்களின் நிர்வாக அதிகாரிகளாகப் போடுவது உசிதமல்ல. இப்போது கிராம சேவக்குகள் நன்றாக வேலை செய்யவில்லை. கிராமங்களில் அவர்களுக்கு இப்போது கொடுத்திருக்கும் வேலைகளையே அவர்கள் சரிவரச் செய்யமுடியாத நிலையில் இருக்கும்போது அவர்களை பஞ்சாயத்துக்களின் நிர்வாக அதிகாரிகளாகப்





போடுவது அவ்வளவு உசிதமாக இருக்காது. கிராம அதிகாரிகளை வரிகளை வசூலிக்கச் செய்து அவர்களுக்கு $6\frac{1}{4}$ சத விகிதம் கமிஷன் கொடுக்கலாம் என்று அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. கிராம அதிகாரிகளை இந்த வேலைக்கு நியமித்தால் பில் கலெக்டர்களின் நிலை என்ன ஆகும் என்பது விளக்கப்படவில்லை. கிராம அதிகாரிகளுக்குப் பதிலாக பில் கலெக்டர்களையே நியமித்து வரிவசூலித்தால் நன்றாக இருக்கும் என்பது என்னுடைய அபிப்பிராயம்.

பஞ்சாயத்து யூனியன்கள் வருஷத்திற்கு இரு முறைகள் கூட வேண்டும் என்று அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. பட்ஜெட்டை சமர்ப்பிப்பதற்கு ஒரு முறையும் எந்த எந்தத் தொகுதியில் என்ன என்ன வேலைகள் செய்யப்பட்டிருக்கின்றன என்று பரிசீலனை செய்வதற்கு ஒரு முறையும், ஆக இரண்டு முறைகள் கூடலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. பஞ்சாயத்து யூனியன்கள் ஏறத்தாழ இரண்டு மாதங்களுக்கு ஒரு முறையாவது கூட வேண்டும். அப்படி இருந்தால் தான், அந்த வட்டாரத்தில் என்ன என்ன வேலைகள் செய்யப்பட்டிருக்கின்றன, என்ன என்ன வேலைகள் செய்யப்பட வேண்டும் என்பன பற்றி ஆராயமுடியும்.

பஞ்சாயத்து போர்டு தலைவர்கள் மக்களாலேயே தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். காரணம், மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் முறை இருந்தால் தான், பாமர மக்கள் பஞ்சாயத்து போர்டு தலைவர்களாக வர முடியும். பஞ்சாயத்து போர்டு மெம்பர்கள் தேர்ந்தெடுக்கும் முறை இருந்தால் உண்மையாகவே பணக்காரர்கள்தான் தலைவர்களாக வர முடியும், பாமர மக்கள் வர முடியாது. ஆகவே பஞ்சாயத்து போர்டு தலைவர் மக்களாலேயே தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

SRI A. R. SUBBIAH MUDALIAR : கனம் தலைவர் அவர்களே, பஞ்சாய்த்துக்களுக்கு பூரண சுதந்திரம் கொடுக்க வேண்டும் என்ற அடிப்படையில்தான் இந்த வெள்ளை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. அத்துடன், 1957-ம் வருஷம் ஏப்ரல் மாதம் அகில இந்திய டெவலப்மெண்ட் கமிஷனர்கள் மகாநாட்டில் "பஞ்சாயத்து நிர்வாகத்தை ஒரு தனி இலாகாவிடம் ஒப்படைக்க வேண்டும். மற்ற இலாகாவுடன் இதைச் சேர்க்கக்கூடாது" என்பதை அழுத்தமாகத் தெரிவிக்கப்பட்டு இருக்கிறது. மேலும், அரசியல் சட்டத்தில் 40-வது ஷரத்தில் (ஆர்டிகில்) "பஞ்சாயத்து நிர்வாகத்தை ஒரு தனி இலாகாவைக் கொண்டு நடத்தவேண்டும். அதற்கு சர்வ அதிகாரங்களும் இருக்க வேண்டும்." என்று கண்டிருக்கிறது. அது போக, ஸ்ரீ. எஸ். கே. படேல் அவர்களும் பஞ்சாயத்து நிர்வாகம் சுதந்திரமுள்ள த்னி இலாகாவிடம் இருக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால், நமது வெள்ளை அறிக்கையில், பஞ்சாயத்து நிர்வாகம் பூராவும் ரெவின்யூ இலாகாவிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் என்று கண்டு இருக்கிறது. அதாவது, வெள்ளை அறிக்கையில் 5-வது பக்கத்திலுள்ள 12-வது பிரிவில்

**"The Primary responsibility for executing this programme within each revenue division will be vested in the Revenue Divisional Officer concerned"** என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே இது ரெவின்யூ டிவிஷனல் ஆபிசரிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. அதே மாதிரி **XII** "ஏ" பிரிவில் ரீஜனல் இன்ஸ்பெக்டருக்கு இருக்கும் அதிகாரம், இரண்டாவது பஞ்சாயத்துக்களைப் பொறுத்தவரையில், ரெவின்யூ டிவிஷனல் ஆபீசருக்கு மாற்றப்பட்டிருக்கிறது. அதாவது,

**"In order to enable the Revenue Divisional Officers to discharge this responsibility statutory powers in relation to class II Panchayats which are at present exercisable by Regional Inspectors, will be delegated to and vested in the Revenue Divisional Officer. These powers will include the exercise of statutory powers in relation to Panchayat Union Joint Committees also"** என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆகவே சகல அதிகாரங்களும் ரெவின்யூ இலா

காவிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. கலெக்டர், ஜில்லா ரீதியில் **Planning** கமிட்டியின் தலைவராக இருக்கிறார். அவருக்குக் கீழே ரெவின்யூ டிவிஷனல் ஆபீசர் **Panchayat Union** தலைவராக இருக்கிறார். ஆதலால் இப்போது பஞ்சாயத்துக்களுக்கு இருக்கும் அதிகாரம் பூராவையும் ரெவின்யூ இலாகாவிடம் ஒப்படைக்கக்கூடியதாக இந்த வெள்ளை அறிக்கை இருக்கிறது. அரசியல் சட்டத்தின் 40-வது ஷரத்தின் படி இல்லாமல், பஞ்சாயத்துக்களின் அதிகாரம் பூராவையும் ரெவின்யூ இலாகாவிடம் ஒப்படைக்கப்பட்டு இருக்கிறது. இந்த அதிகாரங்களை இன்ஸ்பெக்டர் ஆப் லோகல் போர்டிடம்தான் ஒப்படைக்கவேண்டும். அதை விட்டுவிட்டு எல்லா அதிகாரங்களையும் ரெவின்யூ இலாகாவில் ஒப்படைக்கக் கூடியதாக இருக்கக்கூடாது. அத்துடன் அறிக்கையின் 25-வது பக்கத்தில் **"Amounts due to Village Panchayats shall be paid in cash by the Panchayat Union with reference to the bills presented by them"** என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. பஞ்சாயத்துக்கள் தங்களுடைய எல்லா பில்களையும் பஞ்சாயத்து யூனியனிடம் கொடுத்தால் பணத்தைப் பெற்றுக் கொள்ளும் நிலைமையை வெள்ளை அறிக்கையில் இருக்கிறது. பஞ்சாயத்துகளில் பரவலாக ஏதாவது வேலைகள் நடந்தால், அப்போது செலவுக்கான பில்லை பஞ்சாயத்து யூனியனுக்குக் கொடுத்து அவர்களிடமிருந்து பணத்தைப் பெற வேண்டிய நிலைமை ஏற்பட்டு இருக்கிறது. ஆகவே எல்லாம் " ஸெண்ட்ரலைஸ் " பண்ணப்படுகிறது. இது ரொம்பவும் வருந்தத்தக்க விஷயம். 1950-வது வருஷ பஞ்சாயத்துச் சட்டப்படி பஞ்சாயத்துக்களுக்கு இருக்கும் சுதந்திரத்தை நீக்கி, எல்லா விஷயங்களையும் " ஸென்ட்ரலைஸ் " பண்ணக்கூடியதாக வெள்ளை அறிக்கை இருக்கிறது.

அடுத்தபடியாக, பஞ்சாயத்து யூனியன் குறைந்தது 82 பிரதிநிதிகளைக் கொண்ட ஸ்தாபனமாக இருக்கும். மதுரையில் ஒரு பஞ்சாயத்து யூனியன் ஏற்கெனவே அமைக்கப்பட்டிருக்கிறது. 4-5 ஹரிஜனப் பிரதிநிதிகள், 1 கூட்டுறவு இலாகப் பிரதிநிதி சேர்ந்த அந்த யூனியனில் 86-ஆக இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பஞ்சாயத்து யூனியன் வருஷத்திற்கு இரண்டு தடவைதான் கூட வேண்டும் என்று அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. " அட்மினிஸ்ட்ரேஷன் " பற்றிய விஷயங்களைக் கவனிப்பதற்காக ஒரு தடவையும் " பட்ஜெட் "-க்காக ஒரு தடவையும், ஆக இரண்டு தடவைதான் கூடலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அப்படி செய்வதில் என்ன பிரயோஜனம் இருக்கிறது ?

வெள்ளை அறிக்கையில் பஞ்சாயத்து நிர்வாகம் பூராவும் ப்ளாக் டெவலப்மெண்டு ஆபீசரிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. அன்றாட பஞ்சாயத்து நிர்வாக விஷயங்கள் ப்ளாக் டெவலப்மெண்ட் ஆபீசரிடம் எதிர்பார்க்கக்கூடிய நிலைமையில் வெள்ளை அறிக்கை இருக்கிறது. ப்ளாக் டெவலப்மெண்ட்டில் பஞ்சாயத்து ஆபீசர் போடப்படுகிறார்கள். அவருக்கு ரெவின்யூ டிவிஷனல் ஆபீசர், இன்ஸ்பெக்டர் ஆப் லோகல் போர்ட்ஸ் என்ற இரு மேலதிகாரிகள் இருக்கிறார்கள். இரண்டு அதிகாரிகளின் கீழ் இருந்துகொண்டு பஞ்சாயத்து ஆபீசர் எப்படி பஞ்சாயத்து நிர்வாகத்தை நன்றாக நடத்தமுடியும் ?

**Administrative Control Inspector of Municipal Councils**-க்கு கொடுக்கப்பட்டு இருக்கிறது. **Disciplinary Control, Revenue Divisional Officer**ரிடம் ஒப்படைக்கப்பட்டு இருக்கிறது வெள்ளை அறிக்கை நான்காவது பக்கத்தில் பஞ்சாயத்து யூனியன்கள், பஞ்சாயத்து ஸர்க்கிள்கள் என்று கண்டிருக்கிறது. **For every Panchayat Union a joint committee should be constituted. Every panchayat should be represented on this committee by one member** என்று கண்டிருக்கிறது. அதற்கு அடுத்தார் போல் ஸர்க்கிள்களைப் பற்றியும், அந்தப் பிரதிநிதிகள் எப்படி தேர்ந்தெடுக்கப்படவேண்டுமென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. பஞ்சாயத்து யூனியன்களுக்கு என்ன வேலையென்றும் பஞ்சாயத்து ஸர்க்கிள்களுக்கு என்ன வேலையென்றும் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதில் பலவித முன் பின் முரண்பாடுகள் இருப்பதால், பஞ்சாயத்து யூனியன்களுக்கு என்ன அதிகாரமென்றும், பஞ்சாயத்து





ஸர்க்கிள்களுக்கு என்ன அதிகாரமென்றும் தெளிவாகவில்லை. பஞ்சாயத்து **Control**-ஐ ரெவினியூ ஆபீஸரிடம் கொண்டுபோய்க் கொடுப்பதால், பஞ்சாயத்து சுதந்தரத்தை பாதிக்கக் கூடிய விஷயம். ஆகையால் ரெவினியூ ஆபீஸரிடம் கொடுப்பதை விட்டு ஒரு இன்டிபென்டென்ட் ஆபீசரை வைத்து இந்த நிர்வாகத்தை நடத்த வேண்டுமென்று சொல்லி, அதற்குத் தகுந்தார் போல் சட்டம் கொண்டுவரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

*SRI G. G. GURUMURTHI : கனம் சபாநாயகர் அவர்களே, இந்தச் சபைமுன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் வெள்ளை அறிக்கையிலே, பஞ்சாயத்துக்கள் சரியாகச் செயல்பட வில்லையென்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இப்படிப் பஞ்சாயத்துக்கள் சரியாகச் செயல் படாத காரணம் பஞ்சாயத்துக்களின் நிதி வசதியும், நிர்வாகத்திற்கு வேண்டிய ஆட்கள் இல்லாததாலும், டெக்னிகல் அஸிஸ்டெண்ட் என்று சொல்லக் கூடிய சூபர்வைஸர்கள் இவர்களுடைய உதவி இல்லாததும்தான்.

1950-ம் வருஷத்திய சட்டம் செய்யும்போதுகூட பஞ்சாயத்துக்கள் சரியாகச் செயல்படவில்லை யென்று குற்றம் சாட்டப்பட்டது. பஞ்சாயத்துக்களை எல்லா கிராமங்களிலும் ஏற்படுத்தவும் முடியவில்லை. இதற்கு நிதி நிலைமைதான் முக்கியமான ஒரு காரணம். இப்போது இருக்கிற வெள்ளை அறிக்கையிலே, பஞ்சாயத்து யூனியன்களுக்கு ஏற்கெனவே பஞ்சாயத்துக்களுக்குக் கிடைக்கக்கூடிய சில வரி ஆஸ்பதங்களையும் மாற்றப்பட்டிருக்கிறது. கிராமங்களில் வீட்டு வரி, தொழில் வரி, வாகன வரி இவைகள் குறைவாகதான் கிடைக்கும். அதிகமாக வருவது ஸ்டாம்ப் ஸர்சார்ஜ் டியூடிதான். இந்த முக்கியமான வரி ஆஸ்பதம் பஞ்சாயத்து யூனியனுக்கு மாற்றப்பட்டிருக்கிறது. பஞ்சாயத்துகளுக்கு ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ள கடமைகளைச் சரிவர நடத்த முடியுமா என்று யோசனை செய்யவேண்டும். லாண்ட் ரெவினியு ஸர்சார்ஜ் 1952-ல் பாஸ் செய்யப்பட்டு இந்த வரி இப்போது யூனியனுக்கு மாற்றப்பட்டிக்கிறது. முக்கியமான வரி வினங்களை மாற்றி விடுவதனால் பஞ்சாயத்துக்களுக்குக் கொடுக்கக் கூடிய கடமைகளைச் சரிவர இயங்குமா என்று யோசனை செய்யவேண்டுமென்று சமர்ப்பித்துக் கொள்கிறேன். பஞ்சாயத்துக்களுக்கு தற்போது இருக்கக் கூடிய கிரிமினல், சிவில் வியாஜ்யங்களை விசாரிப்பதற்கான அதிகாரத்தை எடுத்துவிடவேண்டும் என்று வெள்ளை அறிக்கை குறிப்பிடுகிறது. இந்தப் பஞ்சாயத்துக்களுக்கு இந்த அதிகாரங்களைக் கொடுக்காவிட்டாலும் கிராம பஞ்சாயத்து கோர்ட்டுகளை ஏற்படுத்தினால் கிராமவாசிகளுக்குள் ஏற்படக்கூடிய சிறு தாவாக்களை விசாரித்துக் கொள்வதற்கு மிகவும் சௌகரியமாகவிருக்கும்.

மற்றப்படி, இந்த வெள்ளை அறிக்கையிலே அதிகப்படியான அங்கத்தினர்களுக்கு வகை செய்யப்பட்டிருக்கிறது. சுமார் 2,500 ஜனத்தொகை இருக்கக் கூடிய ஒரு கிராமத்திற்கு 15 அங்கத்தினர்கள் இருக்கவேண்டும் என்று கூறப்பட்டிருக்கிறது. இந்த மாதிரி அதிகமான அங்கத்தினர்கள் போடுவதற்கு அவசியம் இருக்கவேண்டும். இவ்வளவு அங்கத்தினர்கள் தேவையா என்று யோசித்துப் பார்க்கவேண்டும். அதிகமான அங்கத்தினர்களை வைத்தால் நல்ல காரியங்கள் செய்ய முற்படும்போது அபிப்பிராய பேதங்கள் ஏற்படுமாதலால் நல்ல காரியங்களை எடுத்துக் கொள்ள முடியாத நிலையேற்படும் என்பதை யோசனை செய்யவேண்டும்.

அடுத்தபடியாக, பஞ்சாயத்து ஆபீஸர்கள், டெபுடி பஞ்சாயத்து ஆபீஸர்கள் இவர்களுடைய வேலைகளைப் பற்றி எனக்கு முன் பேசிய அங்கத்தினர் சொன்னார்கள். ரெவினியு டிபார்ட்மெண்டில் சேர்ப்பதால் வேலைகள் சரிவர நடைபெறாது. தனியாக இயங்கும் சக்தி கொடுக்காவிட்டால் இது சரிந்து விடக்கூடிய நிலையேற்படும். டெபுடி பஞ்சாயத்து ஆபீஸர்கள், டிஸ்ட்ரிக்ட் பஞ்சாயத்து ஆபீஸர்கள், ஒரு பக்கம் கிளாஸ் I பஞ்சாயத்தை மேற்பார்வைபார்க்கும் வகைக்கு லோகல் போர்டு இன்ஸ்பெக்டர் அவர்களிடத்திலும், கிளாஸ் II பஞ்சாயத்தை மேற்பார்வைபார்க்கும் வகைக்கு ஆர். டி. ஓ. இவர்களிடத்திலும் இவர் வேலை செய்யவேண்டி இருக்கிறது. இதனால் பஞ்சாயத்துக்கள் சரியாக வேலை செய்ய முடியுமா

என்பதைப் பற்றி மிகவும் சிக்கலான பிரச்னையாக இருக்கிறது. இவைகளை அனுசரித்து மற்ற ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பஞ்சாயத்து யூனியன்கள் ஜில்லா போர்டுகளின் அதிகாரத்தைப் பெறுவதோடல்லாமல், பஞ்சாயத்து போர்டுகளின் அதிகாரங்களை எடுத்துக் கொள்ளக் காரணமென்ன ? இப்போது இருக்கக் கூடிய அதிகாரங்களை இந்த மாதிரி எடுப்பதால் அதிகமான சிக்கல்கள் உண்டாகக் கூடும். அம்மாதிரி சிக்கல்கள் ஏற்படாமல் நிவர்த்திக்க வேண்டும்.

பஞ்சாயத்து யூனியன் வட்டாரகமிட்டிகளின் பிரஸிடெண்டுகளெல்லாம் இதில் வைஸ் பிரஸிடெண்டுகளாகின்றார்கள். யார் வைஸ் பிரஸிடெண்டாக வருகிறார்களென்பது அவர்களுடைய வயதை சீனியாரிடியாக வைப்பதென்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த ஸர்க்கிள் கமிட்டி வேண்டுமா என்று ஆலோசனை செய்யவேண்டுமென்று கேட்டுக் கொண்டு நான் என் பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

*SRI M. D. RAMASWAMI : சபாநாயகர் அவர்களே, எனக்குக் கொடுக்கப்பட்டுள்ள 5 நிமிஷ நேரத்தில் குறிப்பாக ஒரு விஷயத்தைப் பற்றிச் சொல்ல ஆசைப்படுகிறேன். கிராமப் பஞ்சாயத்துக்களுக்கு 500க்கு மேற்பட்ட ஜனத் தொகை இருக்கவேண்டுமென்று ஒரு விதி இருக்கிறது. 500 இருப்பதால் வசதிக் குறைவு ஏற்படுமென்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். ஒரு கிராமம் என்பதற்கு பதில் குரூப் கிராமம், என்று எடுத்துக் கொண்டால் நிர்வாகத்திற்கு வசதியாக இருக்கும் என்று என்னுடைய அபிப்பிராயம். குரூப் கிராமத்தில் உள்ளவர்கள் ஒன்றாக வாழும் வரையில் ஒரு இடத்தில் இருப்பவர்களுக்கு பாதகமேற்படாதவாறு செயல்படவேண்டும். ஒரே குரூப் கிராமத்தில் 3, 4 கிராம பஞ்சாயத்துக்கள் ஏற்படவேண்டிய அவசியம் ஏற்படலாம். அது மிகவும் குறைந்த பட்ச ஜனத்தொகை. பல வசதிகளைப் பகிர்ந்து கொடுக்கும்போது, வசூல் செய்யும் போது, அப்படி வசூல் செய்யப்பட்டதைப் பங்கிட்டுக் கொடுக்கும் போது கஷ்டம் வருமென்பது என்னுடைய அபிப்பிராயம். வெள்ளை அறிக்கையின் 26-வது பக்கத்தில் வில்லேஜ் பஞ்சாயத்துக்களுக்கு எந்தெந்த வகையிலே வரிப் பணத்தைப் பிரித்துக் கொடுக்கப்படவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. இதிலே, அஸ்ஸைஸ்ட் ரெவினியு என்பதில் 4, 5 ஐடெம்களில் கிராமத்தில் வசூலாகக் கூடிய லாண்ட் ஸெஸ்ஸிலிருந்து பிரித்துக் கொடுக்கவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஒரு தரப்பட்ட கிராமமாயிருந்தால் அதை அப்படியே கொடுத்துவிடலாம். ஆனால் 4, 5 கிராமங்களை நிர்வகிக்கக் கூடிய பஞ்சாயத்துக்கள் இருந்தால் எந்த முறையில் பாகித்துக் கொடுப்பது என்பதைப் பற்றி விவரமாகச் சொல்லப்படவில்லை. ஆனால் பஞ்சாயத்து யூனியன்களுக்குப் பணம் அலாட் செய்யும் போது ஜனத் தொகை விகிதாசாரத்தில், கிராமப் பஞ்சாயத்து யூனியனின் ஜனத்தொகையையும், அந்த கிராமத்தின் ஜனத்தொகையையும் பார்த்து அந்த விகிதாசாரத்தில் பிரித்துக்கொடுக்கப்படும் என்று சொல்லப்படுகின்றது. பஞ்சாயத்து வருமானத்தை ஒதுக்கும் போது ஜனத் தொகை வீதத்தில் பிரித்துக் கொடுக்கப்படுமா அல்லவா என்று தெரியவில்லை. அதைத் தெளிவுபடுத்தவேண்டும் என்று வேண்டிக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பஞ்சாயத்துக்களின் நிதி நிலைமை பற்றி கவனிக்கும் போது அவர்கள் சம்பந்தப்பட்ட நிதி நிலைமையைக் கண்காணிக்க நல்ல முறையிலே ஆடிட் செய்வதற்கு ஏற்பாடு இருக்கவேண்டும். சில அங்கத்தினர்கள் சொன்னார்கள், இந்தக் கண்காணிப்பு மிகவும் அதிகமாக இருக்கவேண்டிய அவசியமில்லை, அவர்களுக்கு சுயேச்சையாகப் பார்த்துக் கொள்ள ஏற்பாடு செய்யவேண்டுமென்று சொன்னார்கள். சர்க்கார், இந்தப் பொதுஸ்தாபனங்களிடம் ஊழல்கள் அதிகமாக இருப்பதால் இதில் தலையிட ஏதுவாக இருக்கிறதென்பதை வருத்தத்தோடு சொல்லிக் கொள்கிறேன். தெரிந்தோ, தெரியாமலோ பண விஷயங்களில் தவறுகள் ஏற்பட்டு வருகிறது. ஆகவே, பஞ்சாயத்துக்களின் நிதி நிலைமைகளை சரியான





முறையிலே, நல்ல முறையிலே ஆடிட் செய்வதற்கும் மேற்பார்வை செய்வதற்கும் ஏற்பாடுகள் செய்யவேண்டுமென்று வற்புறுத்த ஆசைப்படுகிறேன்.

இதைத் தவிர முனிசிபல் சேர்மன்களுக்கு இன்னும் அதிகப்படியான அதிகாரங்கள் கொடுக்கப்படவேண்டும் என்ற விதிகளை இந்த வெள்ளை அறிக்கையில் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அது வரவேற்கத்தக்க விஷயம் தான். சேர்மனுக்குக் கொடுக்கக்கூடிய அதிகாரங்கள் முனிசிபல் கவுன்சிலுக்குக் கீழ்பட்டிருக்கிற அதிகாரி என்ற அடிப்படையில் அவர்களுக்கு அதிகப்படியான அதிகாரங்கள் கொடுக்கப்படவேண்டும். தவறுகள் ஏதாவது நடந்தால் அதன் பேரில் நடவடிக்கை எடுத்துக்கொள்வதற்கு வேண்டிய அதிகாரத்தை முனிசிபல் சேர்மனுக்குக் கொடுக்கப்பட வேண்டும். குற்றங்களை விசாரித்து முடிவு செய்யும்போது அப்படி முடிவு செய்யக் கூடிய அதிகாரம் சேர்மனிடத்தில் இருக்கவேண்டும் என்ற விதியையும் இதில் சேர்க்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். பஞ்சாயத்து யூனியனுக்கு ப்ளாக் டெவலப்மெண்ட் ஆபீசர் கமிஷனராக இருப்பார் என்று சொல்லப்படுகிறது. அப்படி இல்லாமல் அவர் காரியதரிசியாக இருக்க வேண்டும் என்பதுதான் பொறுத்தமாக இருக்கும். அப்பொழுதுதான் அவர் பஞ்சாயத்து யுனியன் ப்ரசிடெண்ட் அதிகாரத்தை நிறைவேற்றி நடத்துவதற்குப் பொறுத்தமாக இருக்கும் என்பது என்னுடைய அபிப்பிராயம் என்பதைச் சொல்லிக்கொண்டு என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்ளுகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த விவாதத்தில் நான் குறுக்கிட்டு பேச முன் வந்திருப்பதற்குக் காரணம் இங்கே நடந்துவரப்படும் விவாதத்தைக் கவனிக்கும்போது சில அடிப்படையான கருத்துக்களில் குழப்பங்கள் இருக்கின்றன என்பதை நான் காண்கிறேன். அப்படிப்பட்ட குழப்பங்கள் இல்லாமல் நாம் ஒரு நல்ல முடிவுக்கு வரவேண்டும் என்பதற்காக எனக்குத் தெரிந்த சில யோசனைகளையும் கருத்துக்களையும் சபையின் முன் சமர்ப்பிக்க நான் முன் வந்திருக்கிறேன்.

இன்றைக்கு நாம் முக்கியமாக மனதில் வைத்துக்கொள்ள வேண்டிய விஷயம் இன்றைக்கு நம்முடைய நாட்டின் நிர்வாகத்தை நடத்துவதற்கு சில லட்சியங்களை நிறைவேற்ற வேண்டும் என்று நாம் முடிவு செய்திருக்கிறோம். அந்த லட்சியங்களை நிறைவேற்றுவதற்காக ஒரு நிர்வாக அமைப்பை நாம் ஏற்படுத்திக்கொண்டால் அந்த லட்சியங்களை விரைவில் நல்ல முறையில் நிறைவேற்றிக்கொள்ளக்கூடிய ஒரு வாய்ப்பு நமக்குக் கிடைக்கும். ஆகவே இன்றைக்கு பல துறைகளிலும் இந்த கிராம ஆட்சி, ஊராட்சி, நகர ஆட்சி, இவைகள் முற்றிலும் மாற்றப்பட்டால் எல்லா விதமான நிர்வாகத் துறையிலும் இன்றைக்கு என்ன மாறுதல்கள் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது என்பதை ஆலோசனை செய்து அதற்கென்று போதிய முடிவுகளைச் செய்யக் கூடிய ஒரு கட்டத்தில் நாம் இப்பொழுது இருக்கிறோம். நாம் ஒழுங்கு, அமைதி இவைகளை மட்டும் நிலை நாட்டக் கூடிய சர்க்கார் அல்ல. நாம் இப்பொழுது ஒரு க்ஷேமநல சர்க்காராக மாறிக்கொண்டிருக்கிறோம். நாட்டில் இருக்கக்கூடிய மக்களின் வாழ்க்கைத் தரம் முழுவதையும் உயர்த்துவதற்கு என்ன காரியங்களைச் செய்ய வேண்டும் என்கிற அடிப்படையில் நாம் திட்டம் வகுத்து அவைகளை நிறைவேற்ற வேண்டுமென்று முயற்சித்துக்கொண்டிருக்கிறோம். அதற்குத் தக்க காரியங்களையும் நாம் கடந்த நாலைந்து வருஷங்களாகச் செய்து கொண்டு வருகிறோம். அந்த திட்டங்களை நிறைவேற்றுவதில் நமக்கு சில அனுபவங்களும் ஏற்பட்டிருக்கின்றன. அந்த திட்டங்களில் எது முக்கியமானது என்றால் இப்பொழுது நடைபெற்று வரும் தேசீய அபிவிருத்தித் திட்டம், சமுதாய நல திட்டம். கிராமப் பகுதிகளில் செய்து வரக்கூடிய திட்டங்களுக்கு முதலிடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அப்படி முதலிடம் பெறக்கூடியவைகளாகவும் இருக்கின்றன. இப்படிப்பட்ட புரட்சிகரமான மாறுதல்களைச் செய்யவேண்டும் என்றும் சொல்லி

[Sri C. Subramaniam] [5th November 1957

யிருக்கிறார்கள். நமது பிரதம மந்திரி அவர்களும் இதைப்பற்றி பல இடங்களில் பேசி வந்திருக்கிறார். அதைப்பற்றி இந்நாட்டிலும் பேசியிருக்கிறார் வெளி நாட்டிலும் பேசியிருக்கிறார். இன்றைக்கு நாம் ஏற்றுக்கொண்டிருக்கும் திட்டங்களில் முதன்மை ஸ்தானம் பெற்றது தேசீய அபிவிருத்தி திட்டங்களும், சமுதாய அபிவிருத்தி திட்டங்களும் தான் என்பதை அவர் பல இடங்களில் எடுத்துச்சொல்லியிருக்கிறார். இதைப்பற்றி அவர் என் குறிப்பிட்டிருக்கிறார் என்றால் இன்றைக்கு நாம் செய்துமுடிக்க வேண்டிய திட்டங்கள் யந்திரசாலைகளை முடிப்பது அல்லாது பெரியகல்வி ஸ்தாபனங்களை அமைப்பது, ரோடு, சாலைகளைப்போடுவது, பாலங்களை கட்டுவது முதலியவைகள் ஒரு புறம் இருக்க இவைகளையெல்லாம் உத்யோகஸ்தர்களையும் நிபுணர்களையும் வைத்துக்கொண்டு செய்து முடித்து விடலாம். இன்னும் அவர்களை வைத்துக்கொண்டு பல ஆலைகளையும் கட்டி முடித்து விடலாம். மக்களுடைய முழு உழைப்பும் இல்லாமலேயே ஏதோநமக்கு இருக்கக் கூடிய நிதியை வைத்துக் கொண்டோ அல்லது யந்தரங்களை வைத்துக்கொண்டோ ஒரு உற்பத்தி சாலையையோ அல்லது பாக்டரியையோ அமைத்து விடலாம். அதே மாதிரி ஒரு பாலம் கட்ட வேண்டுமென்றாலோ அல்லது கட்டடத்தை கட்டவேண்டுமென்றாலும் கட்டிவிடலாம். சாலையை அமைத்து விடலாம். இன்னும் இருக்கக்கூடிய சாதனங்களை வைத்துக் கொண்டு அவைகளின் மூலமாக நாட்டில் இருக்கக் கூடிய ஒவ்வொரு குடும்பமும் ஒவ்வொரு மனிதனும் முன்னேற்றமடையக்கூடிய நிலை ஏற்பட வேண்டும். அந்த நிலை எப்படி இருக்கவேண்டுமென்றால் அவைகள் இப்படிப்பட்ட ஆலைகள் கட்டுவதற்கும் பாலங்கள் கட்டுவதற்கும் ஸ்தாபனங்களை ஏற்படுத்துவதற்கும் இன்னும் பல முன்னேற்றங்களைச் செய்வதற்கும் கருவியாக இருக்க வேண்டும். அப்படிப்பட்ட அவசியம் இப்பொழுது வந்திருக்கிறது. அந்தக் காரணத்தினால் பெரும் திட்டங்களை நிறைவேற்ற வேண்டும் என்று அவைகளை 'ஏற்றுக்கொண்டிருக்கிறோம். அதன் மூலமாக கிராமங்களில் இருக்கக் கூடிய பெரும்பாலான கோடிக்கணக்கான மக்கள் அவர்களுடைய வாழ்க்கைத்தரத்தை உயர்த்த முற்பட்டால் எவ்வளவோ முயற்சி செய்து ஏற்றுக்கொண்டிருக்கக் கூடிய லட்சியத்தை அடைந்து விட முடியும் என்பதை நாம் நன்கு தெரிந்து கொள்ளவேண்டும். ஆகவேதான் இன்றைக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய பெரும் பிரச்சனை நாட்டில் இருக்கக் கூடிய ஒவ்வொருவருடைய வாழ்க்கையையும் உயர்த்துவதற்கு என்ன காரியங்களைச் செய்யவேண்டும் என்கிற அடிப்படையில் இருக்கக் கூடிய திட்டங்களுக்கு மிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையினால்தான் இப்பேற்பட்ட பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட கிராம அபிவிருத்தி திட்டங்களுக்கு நாம் முதலிடம் கொடுத்திருக்கிறோம்.

கிராம அபிவிருத்தி திட்டங்கள் மூலம் நாம் இன்றைக்கு முழு பலனை அடைகிறோமா என்பதை பற்றி யோசித்துப் பார்க்கவேண்டும். இதற்காக கிராமங்களை சிறு சிறு பிரிவுகளாகப் பிரித்து அந்த ஒவ்வொரு பிரிவுகளையும் ஒரு தனிப்பட்ட நிர்வாக பகுதியாக இன்றைக்கு அமைத்து ப்ளாக் என்ற அடிப்படையில் இன்றைக்கு பல அபிவிருத்தி திட்டங்களைச் செய்ய முயற்சி செய்திருக்கிறோம். இந்த ஐந்து வருஷங்களில் நமக்கு ஏற்பட்டிருக்கக் கூடிய அனுபவம் என்ன என்பதை போசித்துப் பார்த்தால் எங்கெங்கே மக்கள் உற்சாகத்துடனும் ஆர்வத்துடனும் விஷயங்களைத் தெரிந்து தங்களுடைய நன்மைக்காக ஏற்படுத்தி இருக்கக்கூடிய திட்டங்களுக்கு உதவி அளிக்கிறார்களோ, எங்கெங்கே அவைகளுக்கு ஒத்துழைப்புக் கொடுத்திருக்கிறார்களோ அங்கேயெல்லாம் திட்டம் வெற்றி அடைந்திருக்கிறது. அவர்களுடைய ஒத்துழைப்பு எவ்வளவுக்கு எவ்வளவு அதிகமாக இருக்கிறதோ அவ்வளவுக்கு அவ்வளவு திட்டம் வெற்றி பெற்றிருக்கிறது. ஒத்துழைப்பு இல்லாத இடங்களில் ஏதோ ஒரு அளவுக்கு சில காரியங்கள் செய்யப்பட்டிருக்கிறது என்று சொல்லலாமேயொழிய மக்களின் ஒத்துழைப்பும் திட்டத்தின் லட்சியத்தை மக்களுடைய ஒத்துழைப்பு இல்லாத இடங்களில் அதிகப்படியான பலன் தரவில்லை. ஆகவே தேசீய அபிவிருத்தி திட்டம் சமுதாய நல திட்டம் இருக்கக் கூடிய பிரதேசங்களில் மக்களுடைய ஒத்துழைப்பும் உற்சாகமும் எவ்வளவுக்கு எவ்வளவு அதிகமாக இருக்



5th November 1957] [Sri C. Subramaniam]

கிறதோ அவ்வளவுக்கவ்வளவு பலன் அதிகமாக அடைந்திருக்கிறது. எவ்வளவுக்கு எவ்வளவு மக்கள் முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறார்களோ அவ்வளவுக்கவ்வளவு அங்கே வெற்றி பெரும் என்பதை நாம் உணருகிறோம். அந்த முறையில் நிர்வாக அமைப்பை மாற்றி அமைக்க வேண்டியதாக இருக்கிறது. அதற்கு அதிகாரிகளும் அவசியம்தான். அப்படிப்பட்ட துறைகளில் நிபுணர்களும் படித்த உத்யோகஸ்தர்களும் அவசியம்தான். அதிகாரிகள் அவசியம் தான். அந்தந்தத் துறைகளிலே நிபுணத்துவம் படைத்த உத்யோகஸ்தர்கள் அவசியம் தான். ஆனால், அவர்கள் மட்டும் எந்தத் திட்டத்தையும் வெற்றிகரமாக நிறைவேற்றிவிட முடியாது. நான் இன்னொரு இடத்தில் சொன்ன உதாரணத்தையே இங்கும் சொல்லவிரும்புகிறேன். அதிகாரிகளையும் இன்னும் இந்த வெவ்வேறு துறைகளிலே இருக்கும் நிபுணர்கள் எல்லோரையும் நம்முடைய உடம்புக்குச் சமானமாகச் சொல்லலாம். வெறும் உடம்பு மட்டும் இருந்தால் போதாது. அந்த உடம்புக்கு உயிர் இல்லையென்றால் செத்தபிணமாக கருதுகிறோம. மனிதனுக்கு இருக்கும் எல்லா உருவங்களும் இருக்கலாம்; அமைப்புகளும் இருக்கலாம். ஆனால், உயிர் இல்லையென்றால் அதை நாம் மனிதனைக் கருதமுடியாது. அதே மாதிரிதான், இன்றைக்கு மற்ற திட்டங்கள், அந்தத் திட்டங்களுக்கு அடிப்படையிலே ஏற்பட்டிருக்கும் அதிகாரிகள் இவைகளெல்லாம் உடம்பைப் போன்றவை. அந்த உடம்பு நல்லமுறையிலே இயங்கவேண்டுமானால், மக்களுடைய ஒத்துழைப்பு, மக்களுடைய ஆர்வம் ஆகிய உயிர் அந்த உடம்பிலே புகுந்தால்தான் உண்மையிலேயே நல்லமுறையில் வேலை செய்யமுடியும். இதை எப்படிச் செய்வது? இதற்காக எப்பேர்ப்பட்ட நிர்வாகத்தை அமைத்துக் கொள்ளவேண்டும் என்றுதான் நாம் இன்றைக்கு யோசித்துப்பார்த்து முடிவுக்கு வரவேண்டிய கட்டத்தில் இருக்கிறோம்.

இதைப்பற்றி ஆலோசிக்கும்போது கருத்து வேற்றுமைகள் இருப்பதிலே ஆச்சரியப்படுவதற்கில்லை. ஒவ்வொருவரும் நினைக்கலாம். தான் நினைக்கிற அளவிலே, தன்கட்சி நினைக்கிற அளவிலே, மாறுதல் செய்தால் நல்ல பலன் கிடைக்கும் என்று உண்மையாகவே அவர்கள் நம்பலாம். ஆனால், இன்றைக்கிருக்கும் நிலைமையிலே கட்சி அடிப்படையிலே, இந்த நிர்வாக அமைப்பு பிரிக்கப்படவேண்டும் என்று நான் விரும்பவில்லை. நிர்வாக அமைப்பைப் பொருத்தவரையிலும், எல்லோரும் ஏகமனதாக ஒப்புக் கொள்ளக்கூடிய அமைப்பாக இருந்தால்தான் அமைப்பும்கூட நல்ல முறையிலே வேலைசெய்வதற்கான ஒரு சூழ்நிலை ஏற்படும் என்பதை உணர்ந்து, அதன் காரணத்தால்தான், இன்றைக்கு இந்த நிர்வாக அமைப்பிலே மாறுதல் ஏற்படும்போது, இங்கிருக்கும் எல்லா அரசியல் கட்சிகளும் ஒன்றாகச் சேர்ந்து விவாதித்து ஒன்றுபட்ட ஒருமனப்பட்டுள்ள நிர்வாக அமைப்பை நாம் நம்நாட்டுக்கு அமைத்துக் கொள்ளவேண்டும் என்ற முயற்சியால்தான் இந்த வெள்ளை அறிக்கை சமர்பிக்கப்பட்டு, இங்கிருக்கும் அங்கத்தினர்கள் கொண்ட ஒரு கமிட்டியும் நியமிக்கப்பட்டு, அவர்கள் செய்யக்கூடிய சிபார்சுகளின் அடிப்படையிலே இந்த நிர்வாக அமைப்பை ஏற்படுத்தவேண்டுமென்று சொல்கிறோம்.

ஆகவே, இன்றைக்குச் சில யோசனைகள் சபை முன்சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறதென்றால், நாம் எல்லோரும் உட்கார்ந்து யோசிப்பதற்கு அடிப்படையாக இருக்கும் ஒரு சிலகருத்துகள் நம்முன்னால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றன. அவைகள் முடிவான கருத்துகள் இல்லை என்பதை பற்றி கனம் அமைச்சர் அவர்கள்கூட அப்பொழுது குறிப்பிட்டார்கள். ஏதோ சில கருத்துகள் அந்த வெள்ளை அறிக்கையில் கண்டிருக்கின்றன, ஆகையால், "சர்க்கார் அந்த முடிவுகளை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள், அதற்கு ஒரு ஆதரவு வாங்குவதற்காகத்தான் இந்தக் கமிட்டி அமைக்கப்படுகிறது" என்று யாராவது நினைப்பார்களானால் அது தவறான கருத்து என்று நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன். சில கருத்துக்களை அடிப்படையாக நம்முன்னால் வைத்துத்தான் அந்தக் கருத்துகள் சரியா இல்லையா, அல்லது வேறு விதத்தில் மாற்றியமைக்கவேண்டுமா என்று நாம்

[Sri C. Subramaniam] [5th November 1957

யோசனை செய்யவேண்டும். அந்த முறையில், யோசிப்பதற்கு ஒரு அடிப்படையாக இருப்பதற்காகத்தான் இந்த வெள்ளை அறிக்கை இந்தச் சபை முன் சமர்ப்பிக்கபட்டிருக்கிறது. ஆகவே, இது சர்க்காருடைய கடைசி வார்த்தை அல்லது முடிவான கருத்துக்கள் என்று யாரேனும் கருதுவார்களானால், இப்போதே அந்தத் தப்பபிப்பிராயத்தை மாற்றிக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதே முறையில், இங்கிருக்கும் மற்றவர்களையும் கேட்டுக்கொள்கிறேன். ஒவ்வொரு மெம்பர் பேசும்போதும் சொன்னார்கள், " நான் இருக்கக்கூடிய திராவிடக் கட்சியின் சார்பில் இந்தக் கருத்தை வலியுறுத்த விரும்புகிறேன்" என்று தயவு செய்து அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கின்றேன். வெள்ளை அறிக்கையின்பேரில் ஏதாவது கருத்துக்கள் இருக்குமானால்-கருத்துக்க்ள் இருக்கவேண்டியது அவசியம். கருத்துக்கள் இல்லாத அரசியல்கட்சி இருக்கமுடியாது. அவைகளைச் சொல்லும்போது "இதுதான் முடிவான கருத்துக்கள், இதை நிறைவேற்றுவதற்காகத்தான் நான் இந்தக் கமிட்டிக்குள் போகின்றேன்" என்று அபிப்பிராயங்களுடன் இந்தக் கமிட்டிக்குள் வந்து பணியாற்ற விரும்புவாரானால், நல்ல முடிவு ஏற்பட முடியாது. ஆகையால், இந்தக் கமிட்டியில் பணியாற்ற வருகின்றவர்கள் என்? இங்கே இருக்கும் அங்கத்தினர்கள் எல்லோருமே- இதுதான் முடிவான கருத்து என்று நினைத்துவிடக் கூடாது, என்று கேட்டுக்கொள்கிறேன். இந்தக் கருத்துக்களை அலசிப் பார்த்து, ஆராய்ச்சி செய்து, நாட்டுக்கு நல்லது எது என்பதைப் பற்றி நாம் ஒரு முடிவுசெய்யக்கூடிய ஒரு பரந்த மனப்பான்மையுடன் நாம் இந்தச் சிக்கலான பிரச்னையைப் பரிசீலனை செய்து பார்ப்போமானால் நல்ல முடிவுக்கு வருவோம் என்பதில் எனக்குச் ச்ந்தேகம் இல்லை.

எனக்கு முன்பே அனுபவம் இருக்கிறது. கல்வித் திட்டத்தைப்பற்றி மாறுபாடான கருத்துக்கள், குழப்பங்கள் எல்லாம் இருந்தன. இருந்தாலும் நாமெல்லோரும் ஒன்றாக இருந்து, நாட்டுக்கு எதுநல்ல கல்வித் திட்டம் என்று முடிவுசெய்தோம். எல்லாக் கட்சிகளும் முடிவு செய்ய ஆரம்பித்தபோது அவரவர்களுக்கு இருக்கக்கூடிய அபிப்பிராய பேதங்களை ஒரு புறம் ஒதுக்கி வைத்துவிட்டு, நாட்டுக்கு எதுநல்லது என்று தீர்மானித்து முடிவுக்கு வரவேண்டும் என்ற நிலைமை ஏற்பட்டதை நான் பார்த்தேன். அதுபோல், நிர்வாக அமைப்பையும் கட்சிக்கொள்கைக்கு உட்பட்டதாக்கி கட்சியினுடைய நலன்களுக்கும் பாதகங்களுக்கும் உட்பட்டதாக நாம் ஆக்கிவிடாமல் நாட்டுக்கு எது நல்லது, நம் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு எதுநல்ல நிர்வாக அமைப்பு என்ற அடிப்படையிலே இந்தப் பிரச்னையைச் சீர்தூக்கிப் பார்த்து நல்லமுடிவு காணவேண்டும். இதன் மூலமாக பிற்கால நிர்வாகம் நல்லமுறையிலே நடந்து நாட்டுமக்கள் எல்லோருக்கும் பயன்படவேண்டும் என்று இதைப் பரிசீலனை செய்து பார்க்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

அப்படி நிர்வாக அமைப்பைப் பார்க்கும்போது, சில அடிப்படையான கருத்துக்களையும் நம் மனத்திலே வைத்து, அதைப் பரிசீலனை செய்து பார்க்கவேண்டியது அவசியம். நான் முன்பு சொன்னதுபோல, எந்தெந்த இடங்களீல் மக்களுடைய ஒத்துழைப்பு கிடைத்ததோ, மக்கள் ஆர்வம் இருந்ததோ, அங்கெல்லாம் நல்லகாரியங்களை, பெரிய காரியங்களைக்கூட சாதிக்க முடிந்தது என்ற அனுபவம் நம் முன்னால் இருக்கிறது. உதாரணமாக எடுத்துக்கொள்ளுங்கள்: ஸ்தல அபிவிருத்தி வேலைகள் பல கிராமங்களிலே நல்ல முறையிலே நடைபெற்று, தலைமுறை தலைமுறையாக இதுவரையிலும் நடைபெறாது விட்டிருந்த காரியங்கள்-சிறு காரியமாக இருக்கலாம்- எவ்வளவு சுலபமாக, நல்ல முறையிலே செய்து முடிக்கப்பட்டிருக்கின்றன என்று நாம் பார்க்கிறோம். மக்கள் அக்கரை எடுத்துக்கொண்டவேலை நன்றாக நடந்திருக்கிறது. மக்கள் அக்கரை எடுத்துக்கொள்ளாமல் நாம் வேண்டுமானால் கால்பங்கு பணம் கொடுத்துவிடலாம். கண்டிராக்டரை வைத்துக்கொண்டு அந்தக் காரியம்



5th November 1957] [Sri C. Subramaniam]

நடக்கட்டும் என்று சொல்லும் இடங்களில் காரியம் எப்படி நடைப்பெற்றிருக்கிறது என்று பார்க்கும்போது, சற்று குறைவாகத்தான் நடந்திருக்கிறது. ஆகவே, மக்களுடைய உற்சாகம், மக்களுடைய ஒத்துழைப்பு அதிகமாக இருந்து, தங்களுடைய வேலை என்று கருதி அவர்களே அதிலே ஈடுபட்டு வேலை செய்த போதுதான் நல்ல முறையில் நடைபெற்றிருக்கின்றன. அப்பேர்பட்ட ஒத்துழைப்பு தர மக்களுடைய ஆர்வத்தைத் தட்டி எழுப்பவேண்டுமானால், எப்பேர்பட்ட நிர்வாகமாக அமைய வேண்டும் என்று நாம் இன்றைக்குப் பார்க்கவேண்டும்.

அப்படி பார்க்கும்போது, கிராமத்திலே நடக்கக்கூடிய வேலைகள் என்ன என்பதைப்பற்றி நாம் முதலிலே கொஞ்சம் முடிவாகத் தெரிந்துகொள்ள வேண்டும். அந்த வேலைகளை நடத்துவதற்கு எப்பேர்பட்ட நிர்வாக அமைப்பு இருக்கவேண்டும் என்பதைப்பற்றி முடிவு செய்யவேண்டும். இன்றைக்கு ஒவ்வொரு கிராமத்திலும் அத்தியாவசியமாக சில வேலைகள் நடைபெற்று, அவைகள் ஸ்திரமாக நடைபெற்று வருவதற்கும் ஒரு ஏற்பாடு செய்யவேண்டியதாக இருக்கிறது. இன்றைக்கு முதன் முதலாக நல்ல குடிதண்ணீர்வசதி ஒவ்வொரு கிராமத்திற்கும் அவசியம். அந்தக் குடிதண்ணீர்வசதியை இன்றைக்கு கிராமத்தில் ஏற்பாடு செய்துவிட்டால், அதைத் தொடர்ந்து நல்லமுறையிலே குடிதண்ணீர் வசதியைப் பெறக்கூடிய அளவுக்கு, அதற்கு வேண்டிய காரியங்களை யெல்லாம் செய்துவரவேண்டியது மிகமுக்கியம். கிணறு வெட்டிவிட்டால் அதிலே எந்தவிதமான குப்பை, செத்தை விழுந்துவிடாமலும், கிணறுக்கான கட்டிடம் கட்டியிருப்பது விழுந்துவிடாமலும் பார்த்துக்கொள்வதற்கு நல்ல கண்காணிப்பு மிக அவசியம். குடிதண்ணீர் வசதிக்காக இன்ஜின், மோட்டார், தொட்டி, குழாய் முதலியவைகளை வைத்திருந்தாலும், அவைகளைத் தொடர்ந்து கவனிக்கவேண்டியது அவசியமாக இருக்கிறது. அந்த முறையிலே ஒரு ஏற்பாட்டைச் செய்துவிட்டால், அந்த ஏற்பார்ட்டை தொடர்ந்து நடத்துவதற்கு கண்காணிப்பு அவசியமாக இருக்கிறது.

அதேமாதிரி வீதிகள் நல்ல முறையில் அமையவேண்டுமென்று நினைக்கின்றோம். அப்படி வீதிகள் அமைத்துவிட்டாலும் அவைகளில் தண்ணீர் தேங்காமல் பார்த்துக்கொள்ளவேண்டும். அதற்காக சாக்கடை கட்டவேண்டும். கட்டிவிட்டாலும், அன்றாடம் கவனித்து வராவிட்டால், அவைகள் சீர்கெட்டு முன் இருந்த நிலைமையைவிட இன்னும் மோசமாக போகக்கூடிய நிலைமைவருகிறது.

பல இடங்களில் சாக்கடை கட்டியிருக்கிறார்கள். ரொம்ப உற்சாகத்துடன் கட்டியிருக்கிறார்கள். ஆனால், அந்த சாக்கடைத் தண்ணீர் வெளியே போய் உலருவதற்கு வழி இல்லாமலிருப்பதையும் பார்க்கமுடிகிறது. முன்பு எப்படியாவது சாக்கடைத் தண்ணீர் தானாக ஓடி உலர்ந்து போய்விடும். ஆனால் இப்பொழுது எல்லாத் தண்ணீரும் ஒரேபக்கமாக ஓடுகிறது. அதைச் சரியான முறையிலே பரிபாலிக்க முடியாத காரணத்தால் கொசு இல்லாத ஊரிலே கொசு உற்பத்தியாகக் காரணமாகிவிடுகிறது. சாக்கடை கட்டினது சரி. ஆனால், அதை நல்ல முறையிலே பரிபாலித்துச் சுத்தமாக வைத்திருப்பதற்கு ஏற்பாடுகளைச் செய்யாமல் விட்டுவிட்டோம், காரியம் செய்துவிட்டால் மட்டும் போதாது. அதைத் தொடர்ந்து நடத்தி வருவதற்குப் பொறுப்பு இருக்கவேண்டும். வீதிகளில் விளக்குகள் அமைத்தால், அவைகளை நல்லமுறையிலே பார்த்துக்கொள்ளவேண்டும்.

ஒவ்வொரு ஊரிலும் பள்ளிக்கூடம் வேண்டுமென்று நினைக்கிறோம். பள்ளிக்கூடங்கள் பல ஊர்களிலே அமைத்திருக்கிறோம். அவைகள் சரிவர நடந்திருக்கின்றனவா என்று கல்வி இலாகாவின் பொறுப்பை வகிக்கும் என்னைக் கேட்டால், எனக்கு இன்னும் திருப்தி ஏற்படவில்லை என்றுதான் சொல்வேன். பல இடங்களில் பள்ளிக்கூடங்கள் பெரியதாகக் கட்டப்பட்டிருக்கின்றனவே தவிர, நாம் எவ்வளவு திறைமையாக அவைகள் நடக்க வேண்டுமென்று நினைக்கிறோமோ அந்த அளவுக்கு நடைபெறவில்லை என்பதை நான் ஒத்துக்கொள்ளத் தயாராயிருக்கிறேன். அதை எப்படி நடத்தமுடியும் ?

A—5

அதேமாதிரி, சுகாதார வசதிகள், வைத்திய வசதிகள், ரோடுவேலைகள் போன்றவைகள் ஸ்தல அபிவிருத்தித் திட்டங்களின்கீழ் நடைபெறுகின்றன. ஸ்தல அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் பல ரோடுகள் அமைத்துக் கொடுத்திருக்கிறோம். அதோடு நின்றுவிட்டன. ஒரு பெரிய மழைபெய்தவுடன் ரோடு அடித்துக்கொண்டுபோய், அங்கே ரோடு போட்டிருக்கிறதா என்று சந்தேகப்படக்கூடிய நிலைமை ஏற்பட்டுவிட்டது. அதற்குக் காரணம், அவைகளைத் தொடர்ந்து பரிபாலித்து வரக்கூடிய ஏற்பாட்டைச் செய்யாமல் விட்டுவிட்டோம். மக்களுக்குப் பொது சுகாதார வசதிகள், பொது கல்வி வசதிகள், மற்ற தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்துவிட்டாலும், அதோடுமட்டும் நின்றுவிட்டால் போதாது. இவைகளையெல்லாம் அந்தந்த ஸ்தல ஸ்தாபனங்கள் கவனித்து வருவதற்கு ஏற்பாடு செய்திருக்கிறோம். பஞ்சாயத்துக்கள் என்றும் ஜில்லா போர்டுகள் என்றும் அமைத்துவிட்டால்மட்டும் கிராமத்தில் முன்னேற்றம் கண்டுவிட முடியாது. மனிதனுடைய வாழ்க்கைத்தரம் உயரவேண்டுமானால் அவர்களுடைய பொருளாதார நிலைமை உயர பாடுபடவேண்டும். பொருளாதார நிலைமையை உயர்த்துவதற்கு என்ன காரியங்களைச் செய்யவேண்டும்? இன்றைக்கு கிராமத்திலே மிகப்பெரிய தொழிலாக விளங்குகின்ற விவசாயம் முன்னேற்றம் அடையவேண்டும். விவசாயத்தை ஒட்டியிருக்கும் கால்நடைகள் நல்ல முறையிலே அபிவிருத்தி அடையவேண்டும். அன்றாடம் செய்யக்கூடிய—கோழி வளர்த்தல், தேனி வளர்த்தல் போன்றவை—பல்வேறு கைத்தொழில்கள் நடைபெறவேண்டும் என்ற முறையிலே இதை எப்படி அபிவிருத்தி செய்வது என்ற அடிப்படையிலே பலதிட்டங்களை நிறைவேற்றுவதற்கு முன்வந்திருக்கிறோம். விவசாயத்திலே முன்னேற்றம் காணுவதற்காக ஆங்காங்கு கிராமங்களிலே இருக்கக்கூடிய வசதிகளை வைத்துக்கொண்டு எப்படி நல்ல உரங்களை தயார் செய்யமுடியும் என்ற ஒரு திட்டத்தை வகுத்திருக்கிறோம். இதேமாதிரி விவசாயத்திற்கு சிறு சிறு நீர்ப்பாசன திட்டங்களை அமைப்பதற்கும் ஏற்பாடுகள் செய்யவேண்டும். இவைகளையெல்லாம் நல்ல முறையிலே செய்து முடிப்பதற்கு ஒரு அமைப்பை ஏற்படுத்தவேண்டும். விவசாயம் மட்டுமல்ல. கிராமங்களில் பல கைத்தொழில்கள் நசிந்துபோய்விட்டன. அந்தக் கைத்தொழில்களுக்கு புத்துயிர் கொடுத்து அவைகள் நவீன முறையிலே இயங்கி மக்களுக்கு தேவையான எல்லாவிதமான பொருள்களையும் அங்கேயே உற்பத்தி செய்யக்கூடிய நிலைமையை ஏற்படுத்தவேண்டும். ஒரு சில மாதங்கள் மட்டும்தான் குடியானவர்கள் வேலைசெய்துவிட்டு மற்ற காலத்தில் வேலையில்லாமல் திண்டாடுகிறார்கள். அவர்கள் வேலையில்லாத நேரங்களில் ஏதாவது வேலைசெய்து சிறு அளவு சம்பாதிப்பதற்காக பல்வேறு குடிசைத்தொழில்களை ஏற்படுத்தி நடத்தவேண்டுமென்று நினைக்கிறோம். இவைகளையெல்லாம் ஒன்றாகச் சேர்த்து செய்வதற்குத்தான் தேசிய அபிவிருத்தித் திட்டத்தை அமுல் செய்ய ஆரம்பித்திருக்கிறோம். விவசாயம் முன்னேறுவதற்கு, தொழில்கள் முன்னேறுவதற்கு, கூட்டுறவு இயக்கம் அவசியம் என்ற முறையிலே ஒவ்வொரு ஊரிலும் கூட்டுறவு ஸ்தாபனங்கள், கூட்டுறவு சங்கங்கள் அமைக்க பல முயற்சிகள் நடைபெற்றுவருகின்றன. நடக்கவேண்டிய வேலைகள் ஏராளமாக இருக்கின்றன. எங்கேயோ ஏதோ இங்கிருந்துகொண்டு தீர்மானங்கள் செய்வதன்மூலமோ, பிரசங்கங்கள் செய்வதன்மூலமோ அல்லது மந்திரிகள் காரியதரிசிகள் உத்தரவு போடுவதன்மூலமோ வேலைகள் நடந்துவிடாது. ஆங்காங்குள்ள மக்கள் எவ்வளவு தூரம் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு ஒத்துழைப்பு அளிக்கிறார்களோ, அந்த அளவுக்குத்தான் முன்னேற்றம் காணமுடியும். இந்த முறையில் செய்யவேண்டிய வேலைகள் அநேகம் இருக்கின்றன. முன்பிருந்த நிர்வாக அமைப்பு இதைச் செய்வதற்கு போதுமானதாக இல்லை. அதை மாற்றியமைக்கவேண்டும் என்றமுறையில், இதுபற்றி யோசிப்பதற்காக இந்த வெள்ளை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது.

ஜில்லாபோர்டு பிரச்னை முதலிலே நம் முன்னால் வந்தது. ஜில்லா போர்டுகள் இதுவரையிலும் சில காரியங்களைச்செய்து வந்திருக்கின்றன. திறமையாகவும் செய்துவந்திருக்கின்றன என்பதையும் நான் ஒப்புக்



கொள்ளத்தயாராக இருக்கிறேன். பல ஜில்லாக்களிலும், அதுவும் சேவை உணர்ச்சியோடு கூடிய தலைவர்கள் அமர்ந்திருக்கக்கூடிய ஜில்லாக்களிலே, நல்லமுறையில் காரியங்களை அலசிப்பார்த்து தீர்மானம் செய்யக்கூடிய ஜில்லாக்களிலே பல முன்னேற்றமான காரியங்கள் நடைபெற்றிருப்பதை நாம் நிதர்சனமாக பார்க்கிறோம். அதற்கு இன்றைக்கு "ஸர்டிபிகேட்" கொடுப்பதற்கு வேறொன்றும் தேவையில்லை. இந்த ஜில்லாக்களில் ஏற்படுத்தப்பட்டிருக்கக்கூடிய கல்வி நிலையங்கள், ரோடுகள், சுகாதார வசதிகள் இவைகளைப் பார்த்தாலேயே நன்றாகத்தெரியும். அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல, இன்றைக்கு ஜில்லாபோர்டுகளை மாற்றி வேறு ஒரு அமைப்பை ஏற்படுத்தவேண்டுமென்று சொன்னால், ஜில்லாபோர்டுகள் நல்ல முறையில் இயங்கிவரவில்லை என்ற காரணத்தினால் அல்ல. இன்றைக்கு நடக்கவேண்டிய வேலைகளுக்கு அந்த அமைப்பு ஒத்ததாக இல்லை என்பதினால்தான். திட்டங்களை இன்னும் அதிக அளவிலே நிறைவேற்றி வேலைகள் நடப்பதென்றால், அவைகளை இப்பொழுது இருக்கும் ஜில்லாபோர்டு அமைப்பு சரிவர செய்யமுடியாது என்கின்ற முறையில், இதை மாற்றி என்ன அமைப்பு ஏற்படுத்த வேண்டுமென்பதுபற்றி முடிவு செய்வதற்காகவே இந்த யோசனைகளை கூறியிருக்கிறோம். ஆகையினால் இதுவரையிலும் ஜில்லாபோர்டு அங்கத்தினர்களாகவோ அல்லது தலைவர்களாகவோ இருந்தவர்கள், ஏதோ இந்த நிர்வாகத்தை நடத்தியவர்கள் மீது குறை சொல்லுவதாக இல்லை என்பதை நன்றாக உணரவேண்டுமென்று இன்றைக்கு வற்புறுத்தி சொல்லிக்கொள்ளுகிறேன். இன்றைக்கு இருக்கக்கூடிய தலைவர்களுக்கு நான் சொல்லவில்லை. இருபத்தைந்து, முப்பது வருஷங்களாக ஜில்லாபோர்டு தலைவர்களாகவும், அங்கத்தினர்களாகவும் இருந்தவர்களைப் பொறுத்தவரையிலும் நான் இதைச் சொல்லிக்கொள்ளுகிறேன். ஆகையினாலேதான் இன்றைக்கு நாம் யோசனை செய்துபார்த்து ஜில்லாபோர்டு அமைப்பு இதற்கு ஏற்றதாக இல்லை, வேறு எந்த அமைப்பில் இதை மாற்றவேண்டும் என்பதை யோசிப்பதற்காக அதற்கான சில ஆலோசனைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

யோசித்துப்பார்ப்போமானால், கிராமத்தைப் பொறுத்தவரையிலும், அதை ஒரு தனி அங்கமாக நடத்தவேண்டியது பற்றி மாறுபட்ட கருத்து யாரிடமும் இருப்பதாக நான் கருதவில்லை. அது ஒரு தனிபகுதியாக அமையவேண்டுமானால் அது எந்தெந்த காரியங்களைச் செய்யமுடியும் என்பது பற்றி ஆலோசனை செய்து முடிவுசெய்யவேண்டும். தனிப்பட்டு எந்தெந்த காரியங்கள் அதனால் செய்யமுடியும், எந்தெந்த காரியங்கள் அதற்கு ஒதுக்கப்படவேண்டுமென்ற விவரங்கள் பற்றி நான் இப்பொழுது கூறவில்லை. யோசித்துப்பார்க்கவேண்டியது என்னவென்றால், கிராம அமைப்பில் எந்தெந்த காரியங்களை அவர்களிடம் ஒப்புவித்தால் அவர்கள் நல்ல முறையிலே தங்களுக்கு வேண்டிய தேவைகளை தாங்களே செய்ய முடியும் என்பதுதான். வீதிகள் அமைத்துக்கொள்ளுவது, சாக்கடைகள் கட்டிக்கொள்ளுவது, விளக்குகள் போட்டுக்கொள்ளுவது, வீதிகளை சுத்தமாக வைத்துக்கொள்ளுவது, குடிதண்ணீர் வசதி செய்துகொள்ளுவது இவைகளையெல்லாம் ஒரு கிராமம் தனியாக இயங்கி கவனித்து செய்துகொள்ளமுடியும் என்பது பற்றி யாருக்கும் அபிப்பிராய பேதம் இருக்க முடியாது. அதேமுறையில் அந்த கிராமத்திலிருந்து பக்கத்து கிராமத்திற்கு போகக்கூடிய சிறுரோடுகளை அவர்களே பார்த்து கவனித்து அமைத்துக்கொள்ளவேண்டும் என்பதையும் எல்லோரும் ஒப்புக்கொள்ளுவார்கள். இதற்குமேல் ஒரு கிராமத்திற்கு மட்டுமல்லாமல் பல கிராமங்களுக்குத் தேவையான வசதிகளை யார் செய்வது, அந்தக் காரியங்களை யார் நடத்துவது என்பதுபற்றியும் யோசனைகள் கூறியிருக்கிறோம். சாதாரணமாக ஆஸ்பத்திரி ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒன்று ஏற்பாடு செய்யமுடியாது. பத்து, பதினைந்து கிராமங்களுக்கு சேர்ந்துதான் ஒரு ஆஸ்பத்திரி ஏற்படுத்த முடியும். அதை யார் நிர்வாகம் செய்வது என்பது பற்றி யோசிக்க வேண்டும். ஆரம்பப் பள்ளிகள் கிராமத்திற்கு ஒன்று வைக்கலாம். ஆரம்பப் பள்ளிகள் தனித்தனி ஸ்தாபனமாக இருந்து நடைபெறுவது நல்லதா, அதை கண்காணித்து நல்லமுறையில் நடத்துவது யார், அதை உள்ளூர்

வாசிகளே அக்கரை எடுத்துக்கொண்டு நல்லமுறையிலே நடத்த ஏற்பாடு செய்யமுடியுமா என்பதை கவனிக்கவேண்டும். அதை ஒரு தனிப்பட்ட ஸ்தாபனமாக வைத்துக்கொண்டு அங்கு இருக்கக்கூடிய உபாத்தியாயர்கள் அங்கிருந்தே வேலை செய்யவேண்டும், வேறு இடங்களுக்கு மாற்றுவதற்கு இடமே இல்லை என்ற முறையில் தனி ஸ்தாபனங்கள் அமைப்பதில் பல கஷ்டங்கள் நேரிட முடியும். நடைமுறையிலே நடப்பதைப் பார்த்தோமானால் கிராமங்களில் ஆரம்பப்பள்ளிகளை தனிப்பட்ட ஸ்தாபனங்களாக நடத்துவதை விட, பலபள்ளிகளை ஒன்றாகச் சேர்த்து, ஒரே யுனிட் முறையிலே நடத்தினால் உபாத்தியாயர்களை அவர்களுடைய சௌகரியங்களுக்கு ஏற்ற பிரகாரம் அங்கு ஏற்படக்கூடிய நிர்பந்தத்தின் பிரகாரம் மாற்றி அமைப்பதற்கு ஒரு சௌகரியம் ஏற்படும். இந்தப் பள்ளிகளும் நல்லமுறையிலே கண்காணிக்கப்பட்டு இயங்கும். இந்த அடிப்படையிலே இதை யார் நடத்துவது என்பதை யோசிக்கவேண்டும். ஆரம்பப் பள்ளிகள் வேண்டுமானால் ஒரு ஊருக்கு ஒன்று ஏற்படுத்தலாம், உயர்தர ஆரம்பப்பள்ளி ஒரு கிராமத்திற்கு ஒன்று ஏற்படுத்த முடியாது. 4, 5 கிராமங்களுக்குச் சேர்ந்து ஒரு பள்ளிதான் அமைக்கமுடியும். அப்படி இருக்கும் நிலையில் அதை யார் பார்த்துக்கொள்வது என்பதை தீர்மானிக்கவேண்டும். உயர்நிலைப் பள்ளிகள் 10, 12 கிராமங்களுக்கு ஒன்று வீதம்கூட ஏற்படுத்த முடியாது. இன்னும் பல கிராமங்களுக்குச் சேர்ந்து ஒன்றாக ஏற்படுத்த முடியும். அதை யார் நடத்தவேண்டியது என்பதும் தீர்மானிக்கப்படவேண்டும்.

இப்படி ஒவ்வொரு துறையிலும் பார்க்கும்பொழுது ஒவ்வொரு கிராமத்திற்கும் தனிப்பட்டதாக சில விஷயங்கள் இருக்கின்றன. 5, 6 கிராமங்களுக்கும் சேர்ந்து செய்யவேண்டிய பல விஷயங்கள் இருக்கின்றன, அதை விட அதிகமான பல கிராமங்களுக்கும் சேர்ந்து செய்யவேண்டிய பல விஷயங்கள் இருக்கின்றன. பிர்கா, தாலுகா ரீதியிலும் செய்யவேண்டிய பல விஷயங்கள் இருக்கின்றன. இம்மாதிரியான படிப்படியாக செய்யவேண்டிய காரியங்கள் பல இருக்கின்றன. இந்த அடிப்படையை வைத்துக்கொண்டு பஞ்சாயத்துகள் ஒரு தனி கிராமம் செய்யக்கூடிய காரியங்களை செய்யவேண்டும், மற்ற கிராமங்கள் பாதிக்கப்படாத காரியங்களை அவர்களே செய்துகொள்ளவேண்டும் என்ற முறையில் கிராம பஞ்சாயத்துகளுக்கு சில விஷயங்களை பிரித்துக்கொடுக்கவேண்டும். பல கிராமங்களையும் பாதிக்கக்கூடிய விஷயங்களை ஒரு கிராமம் கவனிக்க முடியாது. எந்தெந்தக் காரியங்கள் ஒரு கிராமம் தனியாக செய்யக்கூடியவை என்பதைப் பார்த்து அவைகளை பஞ்சாயத்துகளிடம் ஒப்படைப்பது அவசியமாகிறது. அதே மாதிரி பல கிராமங்கள் கூட்டாக சேர்ந்து செய்யவேண்டிய காரியங்களை யார் கவனிக்கவேண்டும், அதற்கு எந்த அமைப்பு இருக்கவேண்டும் என்பதுபற்றியும் யோசிக்கவேண்டும். யோசித்துப் பார்த்து தனிப்பட்டு செய்யவேண்டிய விஷயங்களை பஞ்சாயத்துகளிடம் ஒப்படைக்கலாம் என்று யோசனை சொல்லியிருக்கிறோம். பல கிராமங்களுக்கும் சேர்ந்து செய்யவேண்டிய விஷயங்களை யாரிடம், எந்த ஸ்தாபனத்திடம் ஒப்படைப்பது என்பதை யோசனை செய்து பார்த்ததில்தான் இன்றைக்கு பிளாக் அடிப்படையிலே, அபிவிருத்தி திட்டங்கள் அமுலாகி யிருக்கக்கூடிய பகுதி அடிப்படையிலே ஒரு ஸ்தாபனத்தை அமைத்து அந்த அடிப்படையிலே வேலை செய்வதற்கு வசதி இருக்கிறது என்பதை பார்க்கும்பொழுது அதை முழுவதும் பயன்படுத்திக்கொள்ள முடியும் என்ற முறையிலே ஒரு முடிவுக்கு வந்திருக்கிறோம். இன்றைக்கு ஒவ்வொரு திட்டப் பகுதியிலும் அதற்காக தனி அதிகாரி பிளாக் டெவலப்மெண்டு ஆபீஸர் இருக்கிறார். அதுமட்டுமல்ல, அங்கு கீழ்ப்பகுதியிலே காரியங்களைச் செய்வதற்காக கல்வி அதிகாரிகள், கைத்தொழில் அதிகாரி, கூட்டுறவு அதிகாரி, விவசாய அதிகாரி, அத்துடன் 4, 5 கிராமங்களுக்குச் சேர்ந்து எல்லாத்துறைகளிலும் பயிற்சி பெற்ற "வில்லேஜ் லெவல் வொர்கர்ஸ்" இம்மாதிரி அநேக அதிகாரிகளைப் போட்டிருக்கிறோம்.

இன்றைக்கு இந்த அதிகாரிகளிடம் மட்டும் அபிவிருத்தித் திட்டங்களின் பொறுப்பை ஒப்படைக்கும்போது அவை சரியான முறையில் நடைபெருவதில்லை. அந்தத் திட்டங்கள் வெற்றிபெறுவதில்லை என்பதைப்



பார்க்கிறோம். ஆகையால்தான் இந்த உடம்புக்கு உயிர் கொடுக்க வேண்டியது அவசியமாகிறது. அந்த உயிர் மக்கள் மூலமாகக் கொடுக்க வேண்டும் என்கிற அடிப்படையில்தான் இதைப் பற்றி ஆலோசனை செய்ய வேண்டும்.

ஜில்லா போர்டுகளினால் நிர்வாகிக்கப்பட்டு வந்த கல்வி விஷயம், சுகாதார விஷயம், ரஸ்தா விஷயம் என்பது எல்லாம் ஒருபுறம் இருக்க, அபிவிருத்தித் திட்டங்களையும், விவசாயத் துறையில், தொழில் துறையில், கூட்டுறவுத் துறையில், கல்வித் துறையில், ஒன்றாகச் சேர்த்து எல்லாவற்றையும் அதிகாரிகளைவிட்டே நடத்தும்படியாக விட்டுவிடுவதா அல்லது வேரு ஒரு ஸ்தாபனம்,—மக்களது ஸ்தாபனம்,—வேண்டுமா என்பதை யோசித்துப் பார்த்துத்தான் ஒரு ஸ்தாபனம் வேண்டும் என்கிற முறையில் முடிவுக்கு வந்திருக்கிறோம்.

எல்லாவிதமான அபிவிருத்தித் துறைகளிலும் மக்களுக்குப் பங்கு கொள்ள வாய்ப்பு அளிப்பது மாத்திரம் போதாது. பொருப்பையும் கொடுக்க வேண்டும். பொருப்பு ஏற்படும்போதுதான் உற்சாகத்துடன் அவர்கள் எல்லாக் காரியங்களிலும் பங்கு கொள்ள முன்வரும் மனப்பான்மை அதிகமாக வளரும். இதை உணர்ந்துதான் இப்போது நிர்வாக அமைப்பு எப்படி இருக்கவேண்டும் என்பதற்கான அறிக்கை ஒன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன் என்கிற முறையில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இது இரண்டுக்கும் மத்தியில் சர்க்கிள் கமிட்டி என்று ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. "இது எதற்காக வேண்டும்" எனச் சிலர் சொன்னார்கள். இதுபற்றி குழப்பமான கருத்துக்கள் இருப்பதையும் நான் பார்க்கிறேன்.

இது முடிவான அபிப்பிராயம் இல்லை. இதை நாம் யோசித்துப் பார்க்கவேண்டும். பஞ்சாயத்து யூனியன் என்று சொல்வதில் ஒவ்வொரு பஞ்சாயத்தினுடைய பிரதிநிதிகளும் செல்கிறார்கள். அந்த முறையில் பஞ்சாயத்து யூனியனில் 70-ல் இருந்து 100 பேர்கள் வரையில் வந்து சேருகிறார்கள். மாதத்திற்கு ஒரு முறையோ, பதினைந்து நாட்களுக்கு ஒரு முறையோ இவர்கள் எல்லோரும் சேர்ந்து உட்கார்ந்து எல்லாக் காரியங்களையும், பொதுவான காரியங்கள் எல்லாவற்றையும் ஆலோசனை செய்து முடிவு செய்கிறார்கள். இது கொஞ்சம் கஷ்டமாகத்தான் இருக்கும் என்பது ஒரு புறம் இருக்க இவர்கள் அந்தப் பகுதியில் எல்லாக் காரியங்களையும் செய்யவேண்டுமானால் அந்தப் பகுதி முழுவதும் நன்றாகத் தெரிந்தவர்களாக இருக்கவேண்டும். அப்படி இருந்து இவர்கள் ஒரு முடிவு செய்தால்தான் அது நியாயமானதாகவும் இருக்கும்.

ஜில்லாபோர்டுகளை இப்போது இருக்கும் முறையில் பார்த்தால் அநேகம் புகார்கள் வந்துகொண்டே இருந்தன. குறிப்பாக ஜில்லா போர்டு தலைவர் நல்ல முறையில் நடந்து கொண்டாலும்கூட, "அவர் அவருடைய பகுதியில்தான் நல்ல ரோடுகளைப் போட்டுக்கொண்டார். அவருடைய பகுதியில்தான் உயர்ந்த கல்வி வசதி, ஆஸ்பத்திரி வசதி எல்லாவற்றையும் செய்திருக்கிறார். மற்ற பகுதிகள் கவனிக்கப்படவில்லை. இனி இன்னொரு மூன்று வருஷ காலம் போனபின் புதிதாக இன்னொரு தலைவர் வந்தால்தான் அவர் பகுதி அபிவிருத்தி அடையும்" என்பதாக இப்படி அநேகம் புகார்கள் வந்திருக்கின்றன. இது மனித சுபாவத்திற்கு ஏற்றதுதான் எனச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். காரணம் அந்தத் தலைவர்தான் இருக்கிற பகுதியைப் பற்றி நன்றாக நேரிடையாக அறிந்திருக்க முடியும். அங்குள்ள குறைபாடுகள் என்ன என்ன என்பதை நன்றாக உணர்ந்திருக்க முடியும். ஆகவே அவற்றை நிவர்த்தி செய்ய ஒரு சந்தர்ப்பம் வரும்போது பயன்படுத்திக்கொள்கிறார். உற்சாகமும் வந்துவிடுகிறது. அப்படித்தான் அநேக கிராமங்களை ஒன்றாகச் சேர்த்து பஞ்சாயத்து யூனியன் என்று வைத்துவிட்டால் அதன் தலைவர் தன்னுடைய கிராமத்தை மட்டும் வளப்படுத்திக் கொண்டார், மற்றதை கவனிக்கவில்லை என்கிற புகார் வராமலிருக்க, அந்த கிராமங்களை சிலவற்றை ஒன்றாகச் சேர்த்து, அந்த பஞ்சாயத்து யூனியன் பகுதியைச் சில பகுதிகளாகப் பிரித்து சர்கிள்

[Sri C. Subramaniam] [5th November 1957

கமிட்டி என்று ஏற்பாடு செய்து அபிவிருத்தி வேலைகளை அவற்றினிடத்தில் விட்டுவிட்டால் நன்றாக நடக்கும் என இப்படித் தீர்மானம் செய்திருக்கிறோம். முடிவாகவும் இதைச் செய்துவிடவில்லை. இருக்கக்கூடிய பிரச்சனைகளை நாம் அலசிப்பார்த்து ஒரு முடிவு செய்தாகவேண்டும்.

அடுத்தபடியாக இப்போது நாம் செய்கிறபடி பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன், சர்கிள் கமிட்டி என்று மூன்று வேண்டுமா ? ஒன்று இருந்தால் போதாதா ? இரண்டு இருந்தால் போதாதா என்கிற முறையில் பல யோசனைகள் சொல்லப்பட்டன. ஸ்ரீ நேசமணி அவர்கள் பஞ்சாயத்து எதற்கு, பஞ்சாயத்து யூனியன் என்று இருந்தால்போதும் என்று சொன்னார்கள். ஆனால் இப்படி நாம் எதற்காகச் செய்திருக்கிறோம், இப்படிச் செய்யாது வேறுவகையில் செய்தால் காரியங்கள் எல்லாம் வெற்றிகரமாக நடக்குமா என்பதைப் பார்க்கவேண்டும்.

உயர் நிலைபள்ளிகளைப் பற்றி சொன்னார்கள். அதில் மாறுபட்ட கருத்துக்கள் இருக்கின்றன. எனக்கும்கூட அதில் கருத்துமாறுபாடு இருக்கிறது என்று சொல்ல விரும்புகிறேன். ஆனால் இதைப்பற்றி சரியான முறையில் ஆலோசனை செய்து பார்த்து ஒரு நல்ல முடிவுக்கு வரவேண்டும் என்பதைத்தான் தெரிவித்துக்கொள்கிறேன்.

சிலர் நினைக்கிறார்கள், யூனியனுக்குப் பொறுப்பைக் கொடுத்தால் சரியான முறையில் நடக்குமா? சர்க்கிள் அதிகாரி, ஹெட்மாஸ்டர், ஜில்லா கல்வி அதிகாரி இவர்களைப் போட்டு ஒரு குழுவாக அமைத்து இந்தப் பள்ளிகளை நிர்வகிக்கும்படியாகச் செய்தால் நன்றாக நடைபெறும் என்பதாகச் சிலர் சொன்னார்கள். தனித்தனியாக இது இருப்பது சரியல்ல. ஜில்லா அளவிலேயே இதை நடத்துவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும் என்று சிலர் கருதுகிறார்கள். இதைப்பற்றியெல்லாம் நன்றாக ஆலோசனை செய்து பார்த்து முடிவு செய்வதற்காகத்தான் இவ்விஷயங்கள் எல்லாம் நம் முன்னால் வைக்கப்பட்டிருக்கிறது.

இன்னொன்று நிர்வாக அமைப்பை மாற்றி அமைக்கும்போது நமக்குத் தெரிந்த அளவில் ஒருவருக்கொருவர் முரண்பாடுகள், மோதல்கள், ஏற்படாமல் பார்த்துக் கொள்ளவேண்டும்.

ஒரு என்ஜின் நல்ல முறையில் வேலை செய்து கொண்டிருக்கிறது. அதில் சில கருவிகள் இருக்கின்றன. அந்த என்ஜினைவிட இன்னும் புதுவிதமான முறையில் அதிக சக்தியோடு கூட இன்னொரு என்ஜின் வேலை செய்ய முடியும் என்பதற்காக இன்னொரு என்ஜினை வைக்கிறோம் என்றால், அதில் பழைய என்ஜினில் உள்ள ஒரு கருவியைச் சேர்த்தால் நல்ல முறையில் அதிக சக்தியோடு வேலை செய்யும் என்றாலும், இந்தக் கருவியைக் கொண்டுபோய் பொருத்துகிறபோது இது அந்த என்ஜினின் வேலைக்கு முரண்பாடானதாக இல்லையா என்று பார்க்கவேண்டும். சேராத ஒன்றை அந்த அமைப்பிலே கொண்டுபோய் சேர்க்கப்பார்த்தால் இது முறிந்துவிடும் அல்லது அதன் ஓட்டத்தைக் கட்டுப்படுத்தும்.

அப்படியே இன்றைக்கு நாம் பழைய முறையை மாற்றிவிட்டு, புது நிர்வாக அமைப்பைக் கொண்டுவரும்போது பழைய அமைப்பை புது அமைப்பில் புகுத்தும்போது , ஒன்றுக்கொன்று முரண்பாடு இல்லாமல் இருக்கிறதா என்று பார்க்கவேண்டும். இதில் முக்கியமாக ஒரு காரியத்தைத் தெரிவித்து அது எல்லாவற்றிக்கும் பொருந்தும் என்பதாகச் சொல்லிவிட்டு விடுகிறேன்.

பஞ்சாயத்துத் தலைவரை ஊர் பூராவுமாகச் சேர்ந்து தேர்ந்தெடுக்க வேண்டும் என்று சொன்னார்கள். நம் முன்னால் பஞ்சாயத்துத் தலைவர் அங்கத்தினர்களால் தேர்ந்தெடுக்கப்படவேண்டும் என்று இந்த அறிக்கையில் வைக்கப்பட்டிருக்கிறது. இதை மாற்றி அவரை ஊர் எல்லாம் சேர்ந்துதான் தேர்ந்தெடுக்கவேண்டும் என்கிறார்கள். அந்த முறையில் முடிவு செய்கிறோம் என்று வைத்துக்கொள்ளுங்கள். அங்கத்தினர்களும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு வருகிறார்கள். பஞ்சாயத்து தலைவரும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு நேரிடையாக வருகிறார் என்று வைத்துக்



5th November 1957] [Sri C. Subramaniam]

கொள்ளுங்கள். பஞ்சாயத்து தலைவர் பஞ்சாயத்து சபையின் தலைவராக நன்றாக வேலை செய்யவேண்டுமென்றால் பஞ்சாயத்து அங்கத்தினர்களோடு அவருக்கு சுமுகமான உறவு இருக்கவேண்டும். அங்கத்தினர்களுக்கும், மக்களாலேயே தேர்ந்தெடுக்கப்பட்டு வருகிற தலைவருக்கும் சம்பந்தம் ஒன்று இல்லாமல் இருந்தால் இவர்கள் இரண்டுபேருக்கும் மோதல்கள்தான் உண்டாகும். பஞ்சாயத்து அங்கத்தினர்கள் தலைவரை ஒன்றும் கட்டுப்படுத்த முடியாது. அவர் மக்களால் நேரிடையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவராகிவிடுவார். இவர்கள் இரண்டு பேருக்கும் மோதல் உண்டாகும். தலைவர் கருத்தை அங்கத்தினர்கள் ஏற்கவேண்டுமா ? அங்கத்தினர்கள் கருத்தை தலைவர் ஏற்கவேண்டுமா என்கிற முரண்பாடு உண்டாகிவிடுகிறது.

இம்மாதிரியான சிக்கல் அரசியல் சட்டத்தைத் தயாரிக்கும்போதே நமக்கு உண்டாயிற்று. அதாவது கவர்னர் என்பவர் நேரிடையாக மக்களாலேயே தேர்ந்தெடுக்கப்படவேண்டும் என்று சொன்னார்கள். அப்படியானால் மக்களால் நேரிடையாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட கவர்னரின் அதிகாரம் எவ்வளவு தூரத்திற்கு இருக்கவேண்டும் என்பதை யோசித்துப் பார்க்கும்போது மந்திரி சபை அவர் ஆணைக்கு உட்பட்டு நடக்க வேண்டுமா, மந்திரி சபையின் கருத்துக்கு ஏற்ப கவர்னர் ஒத்துழைக்கவேண்டுமா என்பது தீர்மானம் செய்யவேண்டியிருந்தது. கவர்னர் நேரிடையாக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவராக இருந்தால் அவரை ஒன்றும் கட்டுப்படுத்தமுடியாது. இப்போது யூனைடெட் ஸ்டேட்ஸ் ஆப் அமெரிக்காவை எடுத்துக்கொள்ளுங்கள். தலைவரை எல்லோரும் சேர்ந்து தேர்ந்தெடுக்கிறார்கள். ஆனால் மந்திரிகள் தனியாக தேர்ந்தெடுக்கப்படுவது கிடையாது. அந்த முறையிலே அந்த நாட்டிலே அந்த முறையிலே நிர்வாகம் நடைபெற்று வருகிறது. அதேமாதிரி நாம் பஞ்சாயத்து தலைவர்களை தேர்ந்தெடுப்பதில்லை. பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்படவேண்டுமா அல்லது அங்கத்தினர்களால் தேர்ந்தெடுக்கப்படவேண்டுமா என்று யோசிக்கவேண்டும். ஒரு முக்கியமான விஷயம் அந்த பஞ்சாயத்து நிர்வாகம் சரியாக நடைபெற வேண்டும். பஞ்சாயத்து தலைவராக தேர்ந்தெடுக்கப்படுவோர், மக்களால் தேர்ந்தெடுக்கப்படவேண்டுமா அல்லது அங்கத்தினர்களால் தேர்ந்தெடுக்கப்படவேண்டுமா என்று யோசிக்கவேண்டும். நமது முக்கியமான நோக்கம் அந்த பஞ்சாயத்து நிர்வாகம் நன்றாக நடைபெறவேண்டும். ஒரு புதிய முக்கியத்துவத்தை மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவருக்கு கொடுத்து விட்டு, பெரும்பாலான மக்கள் அவர் செய்கின்ற காரியங்களை ஒத்துக்கொள்ளவில்லை என்றால் முரண்பாடுகள் ஏற்படுகின்றன. அப்பொழுது அந்த தலைவர்தான் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர் என்று சொல்வார்கள். அதேசமயத்தில் அங்கத்தினர் அவர்களும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர் என்று சொல்வார்கள். பஞ்சாயத்து போர்டுகளில் சில இடங்களில் நிர்வாகம் நடைபெறுகிறது. சில இடங்களில் நன்றாக நடைபெறுவது கிடையாது. ஆனால் தலைவருக்கும், அங்கத்தினருக்கும் முரண்பாடு ஏற்பட்டால் அந்த நிலையங்களின் நிர்வாகம் முறிந்து போகும். ஆகவே தலைவரை எவ்வாறு தேர்ந்தெடுக்கவேண்டும் என்பதை முடிவு செய்ய வேண்டும். பஞ்சாயத்து தலைவர் தேர்தல் முறை அவர் ஊரார் தேர்ந்தெடுக்கும் தலைவராக இருக்கலாம். பஞ்சாயத்து தலைவர் நன்றாக வேலை செய்வது மட்டும் அல்ல. பஞ்சாயத்து என்கிற சங்கம் நன்றாக வேலை செய்ய வேண்டும். தலைவர் தனிப்பட்ட முறையிலும் இயங்குவதாக இருந்தால் அது பொருந்தாத் திருமணம்போல் இருக்கும்.

இம்மாதிரி நல்ல முறையில் நடக்க வேண்டும் என்பதுதான் எல்லோருடைய விருப்பமும். ஆனால் சிலர் நிர்வாக இயந்திரம் ஜன நாயக தத்துவ அடிப்படையில் இருக்காது என்று சொல்லுகிறார்கள். ஆனால் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர் தேர்ந்து எடுப்பதாலும் ஜன நாயகம் இருக்கிறது. இதில் ஒன்றுக்கொன்று முரண்பாடு கிடையாது. ஆகையால் இந்த மாதிரி தேர்தல் ஜன நாயக முறையில் இருக்கிறது. மற்றொரு முறை ஜன நாயக அடிப்படையில் இல்லை என்று சொல்வதில் அர்த்தம் இல்லை.

கிராமத்தில் நிர்வாகம் நன்றாக நடைபெறவேண்டும் என்பதே நம்முடைய நோக்கம். அங்கு வேலைகள் சரிவர நடைபெற வேண்டும் என்றால் அங்கே ஒற்றுமை நிலவ வேண்டும். கிராமங்களில் எவ்வளவுக் கெவ்வளவு கட்சி வேறுபாடுகள் இருக்கின்றனவோ அவ்வளவுக்கவ்வளவு நிர்வாகம் சரிவர நடைபெறாது. ஆகவே பஞ்சாயத்துகள் சரிவர இயங்க வேண்டுமென்றால் கட்சி வேறுபாடுகள் இருக்கக்கூடாது. முக்கியமாக இக் கட்சி வேறுபாட்டிற்கு காரணம் தேர்தலிலே போட்டி இடுவதன் விளைவு தான். இம்மாதிரி அரசியல் கருத்துக்களில் வேறுபாடுகள் இருப்பதை நாம் பார்க்கிறோம். அதன் பலனாகத்தான் நிர்வாகம் சரிவர நடைபெறுவது கிடையாது. இம்மாதிரி விஷயத்தில் அரசியல் நோக்கத்தை புகுத்தக் கூடாது என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். இதை எப்படி தவிர்க்க முடியும் என்பதை நாம் சிந்தித்து பார்க்கவேண்டும். இந்த பஞ்சாயத்து தேர்தல்கள் எவ்வளவுக்கெவ்வளவு ஏகமனதாக நடைபெறுகிறதோ அவ்வளவுக்கவ்வளவு நல்லது. ஆகவே இதை எப்படி நடைமுறையிற் கொண்டுவருவது என்பதுதான் பிரச்னை. ஒரு இடத்தில் காங்கிரஸ் கட்சியும், திராவிட முன்னேற்றக் கட்சியும் போட்டியிடுகிறது. அல்லது கம்யூனிஸ்டு கட்சியும், திராவிடக் கட்சியும் போட்டியிடுவதாக வைத்துக் கொள்வோம். அந்த சமயத்தில் அங்கு இருக்கக்கூடிய அரசியல் கட்சிகள் சொந்தக் கட்சிக்காரர்களை பயன்படுத்திக்கொள்ளலாம். அதே மாதிரியாக சொந்தக் கட்சிகள் அரசியல் கட்சிகளை பயன்படுத்திக்கொள்ளலாம். ஆகவே எவ்வளவுக்கு எவ்வளவு போட்டியின்றி ஏகமனதாக தேர்தல் நடைபெறுகிறதோ அவ்வளவுக்கவ்வளவும் நிர்வாகம் நல்ல முறையில் நடைபெறும். ஆகவே இந்த அரசியல் கட்சிகள் இந்த தேர்தல்களில் ஈடுபடாமல் இருந்தால் ஓரளவு போட்டியைத் தவிர்க்க முடியும் என்று நினைக்கிறேன். சாதாரணமாக ஒரு பஞ்சாயத்து தலைவர் ஒரு கட்சியை சேர்ந்தவராக இருக்கலாம். அவர் இருப்பதனால் அவரைச் சேர்ந்த கட்சிக்கு சலுகை காட்டவேண்டிவரும். அதனால் அவர் கட்சிக்கு அதிக பலன் ஏற்பட்டுவிடுகிறது. ஆகவே இந்த பஞ்சாயத்து தேர்தலில் அரசியல் கட்சிகள் புகாமல் இருந்தால் மிகவும் நல்லது. . . .

**Sri V. K. KOTHANDARAMAN** : இப்பொழுது அங்கத்தினர் ஒவ்வொருவருக்கும் 10 நிமிஷம் கொடுத்து தங்கள் அபிப்பிராயத்தை தெரிவிக்கிறார்கள். இன்னும் பல அங்கத்தினர்கள் தங்களுடைய அபிப்பிராயத்தை சொல்வதாக இருக்கிறார்கள். கனம் அமைச்சர் பேசுவதற்கு அவர்களுக்கு அரை மணி நேரம் அளித்தும்கூட, அவர் அதற்கு மேலும் பேசிக்கொண்டே போகிறார். . . .

**Mr. SPEAKER** : அரசாங்க பிரதிநிதிக்கு டைம் லிமிட்டே கிடையாது. அவர்கள் எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் பேசுவதற்கு நேரம் கொடுக்கவேண்டும்.

**Sri K. ANBAZHAGAN** : இப்பொழுது நண்பர் கோதண்டராமனால் கொடுக்கப்பட்ட வேண்டுகோளை கனம் அமைச்சர் அவர்கள் தெரிந்து கொண்டிருப்பார்கள் என்று நினைக்கிறேன். பல அங்கத்தினர்கள் தங்கள் கருத்தை தெளிவுபடுத்துவதற்கு வாய்ப்பு அளிக்கவேண்டும் என்கிறார்கள்.

**The Hon. Sri C. SUBRAMANIAM** : கனம் அங்கத்தினர் கருத்துக்கு ஸ்ரீ அன்பழகன் ஒரு மெருகு கொடுத்தார்.

இப்பொழுது அரசியல் கட்சிகளைப் பற்றி சொன்னேன், இந்த நிலைமையில் இருக்கும்பொழுது நாம் யோசனை செய்து சரியான முடிவுக்கு வரவேண்டும். ஆகவே பஞ்சாயத்து தேர்தலில் அரசியல் கட்சிகள் புகாமல் இருந்தால் நலமாக இருக்கும்.

இன்று, கிராம உத்தியோகஸ்தர்களும், அரசாங்கத்தில் இருக்கக்கூடிய உத்தியோகஸ்தர்களும் இதில் பங்கு எடுத்துக்கொள்ளக்கூடாது என்று விதியிருக்கிறது. அதேமாதிரி பஞ்சாயத்து யூனியன்களுக்குப் போகிறவர்கள், தேர்தலிலிருந்து விலகி நிற்க வேண்டுமென்று ஏதாவது ஒரு ஏற்பாட்டை செய்து கொள்ளுவதாயிருந்தால் கட்சிப் பிளவு ஓரளவு நீங்கும். முதலிலே, இது எல்லோரும் ஒப்புக் கொள்ளக்கூடிய ஒரு அமைப்பாக இருக்கவேண்டும். அது நல்ல முறையில், மக்களுக்குப் பயன் படக்கூடிய முறையில் மக்களின் முழு சக்தியையும், முழு ஒத்துழைப்பையும் கொண்டு அந்த அமைப்பு வேலை செய்ய வேண்டுமென்ற முறையில், அந்த வேலையைச் செய்வதில் தடங்கல் இருந்தால், வேறு முரண்பட்ட சக்தியிருந்தால் அவைகளை நீக்கி இந்த இயந்திரம் நன்கு இயங்கும் முறையில் ஏற்பாடு செய்ய வேண்டும். இந்த அடிப்படையில் இங்கு சொல்லியிருக்கக் கூடிய கருத்தை நன்கு அலசிப் பார்த்து, நன்கு ஆலோசித்து எல்லோரும் ஒப்புக் கொள்ளக் கூடிய முறையில், மக்கள் தங்களுக்கு வேண்டிய எல்லாக் காரியங்களையும் சாதாரணக் காரியங்களை மட்டுமல்ல; தங்கள் அபிவிருத்திக்கான திட்டங்களை ஏற்படுத்திக் கொள்ளும் முறையில் ஓர் அமைப்பு அமைக்கப்பட வேண்டும். பாலட்டைப் பற்றிச் சொன்னார்கள் கை தூக்கி வோட்டு செய்வதற்குப் பதில் ரகசிய வோட்டு முறை வேண்டுமென்று. எல்லோரும் ஒற்றுமையுடன் இருந்து போட்டியில்லாமல் ஏற்படுமானால் இது அவசியமில்லை. அப்படி போட்டி ஏற்படுமானால் வெளிப்படையாக வோட்டுகளைப் போடுவதில் உள்ள குறைகளைப் பற்றிச் சொன்னார்கள். அதைப்பற்றி ஆலோசித்து ஒரு முடிவிற்கு வரப்படும். அடுத்தபடியாக, டெவலப்மென்ட் கௌன்ஸில், அது ஏன் ஒரு ஆலோசனைக் குழுவாயிருக்கவேண்டும். இன்று அதிகாரம் பூராவும் யூனியன் அளவிலே, கிராம அளவிலே பிரித்துக் கொடுக்க முடியுமா, அவைகளை இந்த பஞ்சாயத்துகளுக்கு கொடுக்க வேண்டும். ஆகவே, எந்தளவில் பொருப்பு முழுவதையும் கொடுக்க முடியுமோ அதை பஞ்சாயத்தளவில் கொடுத்து விட்டு இந்த யூனியன்களுக்கு பொதுவாக இருக்கக்கூடிய கோஆர்டினேஷன் வேலை கொடுக்கலாம். இந்த டெவலப்மென்ட் கௌன்ஸில் திட்டம் வகுக்கும்போது அவ்வப்போது ஒவ்வொன்றுக்கும் ஏற்படும் முரண்பாட்டை அனுசரித்து அதை எந்த முறையில் நடத்த வேண்டுமென்று ஆலோசனை சொல்லக் கூடிய ஒரு குழுவாய்த்தான், அந்த ஆலோசனைக்குழு இருக்க முடியும். அதற்கு அதிகாரத்தைக் கொடுக்க வேண்டுமானால் அந்த அதிகாரத்தை பஞ்சாயத்து யூனியன்களுக்கே கொடுத்து விடலாம். ஆகவே, ஜில்லா முழுவதற்கும் சேர்ந்து, அது ஒரு பெரிய ஜில்லாவாக இருந்தால் அதை இரண்டாகப் பிரித்து ஆங்காங்கு இருக்கக்கூடிய இந்த யூனியன்கள் வேலை செய்வதில் திட்டங்களை நிறைவேற்றி வைப்பதில் முரண்பாடு இருந்தால் அவைகளை திருத்தி வைக்கக் கூடிய அளவிற்கு யோசனை சொல்லவே இந்த கௌன்ஸில் இருக்கிறது. அதற்கு அதிகாரம் கொடுப்பது என்றால் யூனியனின் அதிகாரத்தைத்தான் எடுத்துக் கொடுக்க வேண்டி வரும். ஆகவே இது ஒரு ஆலோசனைக் குழுவாய் அமைக்கப் பட்டிருக்கிறது. இன்று ஜனநாயகம் என்று சொல்லும்போது, இங்கு செய்யக் கூடிய திருத்தங்களை மட்டும் ஜனநாயக அளவில் விடாமல் கிராம அளவிலும் பூர்ண ஜனநாயகம் அமல் நடக்கவேண்டுமென்ற முறையில் இந்த அமைப்பைச் செய்ய வேண்டுமென்று கருதுகிறோம். ஆகவே, ஜில்லா போர்ட்டிற்கு பதிலல்ல இந்த யூனியன். ஜில்லா போர்ட் காரியத்தை மாத்திரம் செய்யாது. அபிவிருத்தித் திட்டங்களிலும் வேண்டிய கவனம் செலுத்தி அவைகளையும் செய்யும் முறையில் இந்த அமைப்பு அமைக்கப் படவேண்டும். ஆகவே நல்ல ஒரு முடிவு செய்து நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரம் நல்ல முறையில் உயருவதற்கு நாம் பாடு பட்டு அதற்கு வேண்டிய ஒரு அமைப்பை அமைப்பதற்கு நீங்கள் உதவ வேண்டுமென்று கேட்டுக் கொண்டு நான் கேட்டுக்கொண்ட அளவிவிற்கு மேல் காலத்தை எடுத்துக் கொண்டதற்கு இச்சபையின் மன்னிப்பையும் கேட்டுக் கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

**Mr. SPEAKER** : I would like to bring to the notice of hon. Members that the time available for further discussion has been reduced by 25 minutes. Therefore I think I should appeal to

leaders of parties to allow me to cut the time allotted to them by five minutes. The Hon. Minister for Local Administration will take 25 minutes, the leaders of the Dravida Munnetra Kazhagam and the Communist Party will get 15 minutes each and the leaders of the Socialist Party and the Praja Socialist Party will get 10 minutes each. Let us proceed on these lines. I appeal to all leaders of parties to co-operate with me.

* **DR. E. P. MATHURAM :** சபாநாயகர் அவர்களே, இந்த வெள்ளை அறிக்கை விஷயமாக, பஞ்சாயத்துக்களைப் பற்றியும், கார்ப்பரேஷனைப் பற்றியுந்தான் அதிகமாக இதில் காண்பிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் நகரசபைகளைப் பொறுத்த வரையில் அது திருப்திகரமாக நடந்து வருவதால் அதில் அதிகமாக மாற்றம் வேண்டியதில்லை என்ற கருத்தைத் தெரிவித்து சில மாறுதல்களை மட்டும் அவர்கள் கொடுப்பதாக சொல்லியிருக்கிறார்கள். ஆனால் இச்சந்தர்ப்பத்தில் நான் அவர்களுடைய கவனத்திற்கு கொண்டு வர விரும்புவது என்னவென்றால் காலஞ்சென்ற ரத்தினஸ்வாமி முதலியார் அவர்களுடைய ரிப்போர்ட்டானது, அந்தக் குழுவினர் சமர்பித்த அந்த ரிப்போர்ட் பலராலும் வரவேற்கக் கூடியதாகவும், பலராலும் பல பாகங்களில் இருந்தும், அநேகமாக எல்லா நகரசபைகளாலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட ரிப்போர்ட்டாய் இருந்தது. அது ஒருவேளை நிராகரிக்கப்பட்டோ அல்லது தள்ளி வைக்கப்பட்டோ ஒதுக்கி வைக்கப்பட்டது, அது ஒரு மூலையில் போடப்பட்டது. 1920-ம் வருஷ சட்டத்தின் அடிப்படையில் அப்போதைக்கப்போது உள்ள ஒரு சில அமெண்ட்மெண்டுகள் மட்டும் ஏற்படுத்தி அந்த நிர்வாகம் சரிவர நடக்கிறது என்று சொல்லி வைத்து விட்டார்கள். அது சரியா ? போதுமான சுதந்திரம் கொடுக்கப்பட வேண்டிய காலத்தில் கொடுக்காமல் இருப்பது சரியா ? கடந்த 30 ஆண்டுகளாக இந்த நகரசபை சரிவர நடந்து வந்திருக்கும்போது, அனுபவம் வாய்ந்தவர்களாகி இருக்கும்போது, நகரத்தில் உள்ள மக்களுக்கும் அந்த அனுபவம் இருக்கும்போது அவர்களுக்கு அதிகமாக சுதந்திரம் கொடுக்க வேண்டியது அவசியம் இல்லையா என்பதைப் பற்றி நீங்களே முடிவு கட்டிக் கொள்ளுங்கள். அதிலுள்ள சில குறைபாடுகளைப் பற்றி சொல்ல ஆசைப்படுகிறேன். காலம் போதாது. காரணத்துடன் சொல்வதற்கு சமயமில்லை. ஒரு என்ஜினியரை நியமினம் செய்வதில், ஒரு அஸிஸ்டெண்ட் என்ஜினியர் வேண்டுமென்றால் சட்டத்தில் இடமில்லை. ஆகவே நியமனம் செய்ய முடியாது என்று ஒத்திவைக்கப்பட்டுக்கொண்டே வந்தது. பெரிய பெரிய நகரசபைகளில் ஒரு அஸிஸ்டெண்ட் என்ஜினியரின் சேவை தேவை. அப்படிக் கேட்கும்போது சட்டத்தில் இடமில்லை என்று சொல்லி ஒத்தி வைக்கப்படுகிறது. அப்படி தேவையை பூர்த்தி செய்ய சட்டத்தை திருத்தியமைக்க இதுவரையில் முன் வரவில்லை. ஆகவே, அதற்கு இப்போதாவது முன் வர வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். அடுத்தபடியாக, பப்ளிக் ஹெல்த் டிப்பார்ட்மெண்ட் இருக்கிறது. அது, நகரசபைகளுக்கு, போதுமான அளவு அதில் பங்கு இல்லாததால், அங்கு எல்லோரும் கீழ்த்தரமான வேலையை செய்து கொண்டு அது மக்களிடையே அதிருப்தியை உண்டு பண்ணிக் கொண்டிருக்கிறது. ஆகவே நான் சொல்ல விரும்புவது என்னவென்றால், அது நகரசபைக்கு அடங்கியதாகவும், கமிஷனருககு உட்பட்டதாகவும் அந்த நிர்வாகஸ்தர்கள் இருக்க வேண்டும். அப்படி இல்லாவிட்டால் இந்தவித கோளாறுகள் இருந்துகொண்டேருயிக்கும். நகரங்களில், நல்ல சுகாதாரம் இருக்கவேண்டிய இடங்களில் சுகாதாரக் குறைவு ஏற்பட்டுக்கொண்டே போகிறதல்லாது சுகாதாரம் முன்னுக்கு வந்ததாகத் தெரியவில்லை. ஆகவே இந்த சட்டத்தின் அடிப்படையில் அந்த ஆட்களை மாற்றியமைத்து முனிசிபல் ஆக்ட்டுகுள் அமர்த்தி அவர்களும் இதற்கு அடியில் வேலை செய்ய வேண்டுமென்ற நிலையை ஏற்படுத்த வேண்டும். அதிலும் கீழ்தரச் சிப்பந்திகளை அவர்கள் நியமனம்



செய்வதில் இந்த முனிசிபல் நிர்வாகத்தில் அமைந்துள்ள " அப்பாயின்ட்மெண்ட் கமிட்டி"யிடம் கொடுக்கப்பட்டால் அவர்களே இச்சிப்பந்திகளை நியமித்தால் அதை ஓரளவு பயன்படும்படியான நிலைமையில் அதை அமைக்க முடியும் என்பதுதான் எனது கருத்து.

இதுபோக இன்னும் சில காரியங்கள் சொல்ல வேண்டியிருக்கிறது. அதாவது " பே ஸ்கேல் " உள்ள விதிகளை எடுத்துக்கொண்டால் சர்க்காருடைய விதிகள் வேறு, நகர சபையினுடைய விதிகள் வேறு. இதை மாற்றி சர்க்காருடைய சம்பள விகிதத்தை போல் நகர சபையிலுள்ளவர்களுக்கும் " பே ஸ்கேல் " கொடுப்பார்களானால் போதுமான அளவு நிர்வாகம் நன்றாக நடக்க முடியும், ஒழுங்காகவும் நடக்க முடியும். ஆகவே சர்க்கார் ஊழியர்களுக்கு கொடுக்கப்படும் சம்பள விகிதம் போன்று இவர்களுக்கும் கொடுப்பதற்கு வேண்டிய வேலைகளை செய்யவேண்டும் என்று குறிப்பாக எடுத்துக் காட்ட விரும்புகிறேன். அதுவுமில்லாமல் நகர சபை அலுவலர்களை பொறுத்தவரையில் அங்கிருப்பவர்களை ஐந்து வருஷத்திற்கு ஒரு முறை ஒரு நகர சபையிலிருந்து வேறு ஒரு நகரசபைக்கு மாற்ற வேண்டும். அதற்குரிய வழியில் நாம் சட்டங்களை மாற்றியமைக்கவேண்டும். அவர்கள் நிரந்தரமாக அதாவது அவர்கள் ரிட்டயர் ஆகிற வரையிலும் ஒரே நகரசபையில் இருந்தால் அவர்களுடைய ஊக்கம் குறைந்து விடுகிறது. அவர்களுக்கு வேலையில் திறமையிருந்தாலும் அவர்களுடைய ஊக்கம் குறைந்து விடுகிறது. நாள் செல்ல செல்ல அவர்களிடையில் " பார்டி பாலிட்டிக்ஸ் " புகுந்து கொள்கிறது. இதை ஏன் சொல்லுகிறேன் என்றால் நகரசபையில் யாரெல்லாமோ வருகிறார்கள், போகிறார்கள், முக்கியமான அதிகாரிகள் வருகிறார்கள், போகிறார்கள், நாங்கள் மாத்திரம் ஸ்திரமாக, நிரந்தரமாக இருந்து வருவதால் எங்கள் கையில்தான் அதிகாரங்கள் எல்லாம் இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். " **Men may come and men may go, but I go on for ever** " என்ற மாதிரி இருந்து கொண்டிருக்கிறது. இதை மாற்றி அமைக்க வேறு நகர சபைகளுக்கு மாற்றுவதற்கு விதிகளை மாற்றியமைப்பது முக்கியமான காரியமாகும். அப்போதுதான் நிர்வாகமும் பலப்படும். இதனால் எல்லாருக்கும் நல்ல அனுபவமும் கவனமும் செலுத்தக்கூடிய சந்தர்ப்பமும் ஏற்படும். இதை அமைச்சர் அவர்கள் கவனிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக நகரசபை கட்டிடங்களுக்கு சர்க்காருடைய **Fair Rent Act—Tenant Protection Act**-க்கு விதிவிலக்கு அளிக்கவேண்டும். இந்த நிலைமை ஏற்பட்டால் நகர சபை சுமுகமாக செயல்படுவதற்கு வசதியாக இருக்கும். ஆகவே இதற்கு விதிவிலக்கு அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதுபோக செக்ஷன் **270**-ன் படி ரோடு ஓரங்களிலிருந்து லைஸன்ஸ் கட்டணம் மூலம் வருமானம் வந்துகொண்டிருந்தது. இது இப்போது நிறுத்தப்பட்டிருக்கிறது. நகர சபைக்கு முக்கியமாக வீட்டு வரி, பிரபஷன் டாக்ஸ் முதலிய இனங்களில் வருமானம் கிடைக்கிறது. இதைக்கொண்டுதான் நகர நகரசபையை நடத்த வேண்டியிருக்கிறது. ரோடு ஓரங்களிலிருந்து கிடைக்கக்கூடிய லைஸன்ஸ் வருமானம் நகர சபைக்குக் கிடைக்கவில்லையென்றால் அது நகர சபையின் வருமானத்தை பாதிக்கக்கூடியதாக இருக்கிறது. இப்போது 5 வருஷத்திற்கு ஒரு முறை வரிகளைத் திருத்தி அமைக்கவேண்டியிருக்கிறது. இவ்விதம் வருமானம் குறையும்பொது மக்களின்மீது கூடுதல் வரிச் சுமையை போட வேண்டியிருக்கிறது. இவ்விதம் மக்களும் இதனால் கஷ்டப்பட வேண்டியிருக்கிறது. ஆகவே இந்த மாதிரியான லைஸன்ஸ் இனத்தில் போதுமான அளவு நகசரபைக்குச் சலுகை கொடுத்து ஏதாவது கோர்ட்டு தீர்ப்புகள் வந்தாலும் அதை மாற்றுவதற்கும் ஒரு ஆக்ட் கொண்டுவந்து மாற்றியமைக்க ஒரு வழி முறையைக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். திருச்சிராப்பள்ளி முனிசிபாலிட்டி ரோடு ஓரங்களிலுள்ள அட்வர்டைஸ்மெண்ட் லைசன்ஸ் கட்டணம் முனிசிபாலிட்டிக்கு கிடைக்காமல் நஷ்டமடைகிறது. இதிலுள்ள வரிகளை முனிசிபாலிட்டி வசூல் செய்வதற்கு நகரசபைகளுக்கு அதிகாரம் கொடுக்கவேண்டும். அதற்குரிய சட்டத்தை கொண்டுவந்து நகரசபைக்கு உதவி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் கமிஷனர்களை எடுத்துக்கொள்ளும்போது அவர்களுக்கு கீழ் இருக்கின்ற " பெர்ஸனல் அஸிஸ்டன்ட் " என்ற உத்தியோகஸ்

தருக்குப் பதில் அஸிஸ்டன்ட் கமிஷனர் என்று மாற்றினால் கமிஷனர் இல்லாத காலத்தில் அவருடைய பங்கை எடுத்து வேலை செய்வதற்கு வசதியாக இருக்கும். இதற்கு வேண்டிய சட்டத்தை கொண்டுவரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இது தவிர இன்று பஞ்சாயத்துக்களில் எல்லாம் "டூவல் கண்ட்ரோல்" **(Dual control)** அதிகாரங்கள் இருக்கக்கூடாது என்று சொல்ல விரும்புகிறேன். அவ்விதம் இருந்தால் ஆர். டி. ஒ.-க்களுக்கு கீழே இருக்கக்கூடிய கிராம முனிசீப், கிராம கணக்கு பிள்ளை இவர்கள் எல்லாம் மேலதிகாரிகளாக ஆகிவிடுவார்கள். ஆகவே இதையும் நன்றாக ஆலோசித்து இதற்குத் தக்க ஒரு முடிவு எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இத்துடன் முடிக்கிறேன்—வணக்கம்.

**(The bell was rung and the hon. Member resumed his seat)**

**Sri S. PAKKIRISWAMY PILLAI :** கனம் தலைவர் அவர்களே, இந்த வெள்ளை அறிக்கை பல முன்னேற்றத்திற்குரிய அம்சங்கள் உடையதாக இருக்கிறது. நாம் பல வருஷங்களாக ராம ராஜ்யம் அமைக்க வேண்டும் என்று நினைத்திருந்தோம். அதை அமைக்கும்படியான நிலையில் இருக்கக்கூடிய இந்த வெள்ளை அறிக்கையை பார்க்கும்போது எல்லோருக்கும் மகிழ்ச்சியாக இருக்கிறது. பல அங்கத்தினர்கள் கிராம பஞ்சாயத்து அமைப்பைப்பற்றி விரிவாக எடுத்துப் பேசினார்கள். ஆனால் பலர் இன்றைக்கு கிராமத்தில் இருக்கின்ற மக்களிடையே சிலர் ஜாதி அடிப்படையில் வெறிச் செயல்களை செய்யும்படியான அளவிற்கு சில தேர்தல் முறைகள் தூண்டுகிறது என்று சொன்னார்கள். இவ்விதம் யாராவது கிராமத்தில் ஜாதி வெறி, அல்லது மத வெறி இவைகளைத் தூண்டி விடக்கூடியவர்கள் இருப்பார்களானால், எப்படி குஷ்ட ரோகிகளுக்கு, வரி செலுத்தாதவர்களுக்கு தேர்தலில் நிற்கக்கூடாது என்று சட்டமிருக்கிறதோ அம்மாதிரி இவர்களுக்கும் தேர்தலில் நிற்கக்கூடாது என்று அவர்களை தள்ளிவிடவேண்டும் என்ற முறையில் சட்டம் இருக்கவேண்டும். அதோடுகூட பஞ்சாயத்து தலைவரை எந்தவிதமாக தேர்ந்தெடுப்பது நல்லது என்பதைப்பற்றி நிதி அமைச்சர் அவர்கள் ஆதாரம் காட்டிச் சொன்னார்கள். தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்கள் அவர்கள் மூலமாக தெரிந்தெடுப்பது தான் நல்லது என்கின்ற அர்த்தத்தில் பேசினார்கள். அதிலும் சில கேடுகள் இருக்கின்றன. இவ்விதம் இருந்தால் தலைவராக நிற்கக்கூடியவர் தன்னுடைய பணத்தை விநியோகம் செய்து பஞ்சாயத்து போர்டு மெம்பர்களை தன் வசப்படுத்திக்கொண்டு கட்சிப்பூசலை ஏற்படுத்துவதற்கு வழி செய்வதாக இருக்கும். ஆகவே இந்த முறை சரியல்ல, ஜனநாயகத்தில் பொதுஜனங்களால்தான் தலைவர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்பது என்னுடைய கருத்து.

நிற்க கார்ப்பொரேஷனைப் பொறுத்த வரையில், தமிழ் நாட்டில் ஒரே ஒரு கார்ப்பொரேஷன்தான் இருக்கிறது. அதனுடைய சட்டம் அதாவது ஸிட்டி முனிஸிபாலிட்டி ஆக்ட் 1919-ம் வருடத்தில் இயற்றப்பட்டது. 1936-ல் திருத்தி அமைக்கப்பட்டது. ஆனால் இப்பொழுதும் அதில் பல மாறுதல்கள் நம்முடைய காலத்திற்கேற்ற முறையில் கொண்டுவர வேண்டுமென்று சென்னை கார்ப்பொரேஷன் அதிகாரிகளும் கார்ப்பொரேஷன் கௌன்ஸிலர்களும் கலந்துக்கூடி செய்த திருத்தங்களை அரசாங்கத்தின் ஒப்புதலுக்கு அனுப்பி திருத்தத்தை கொண்டுவர வேண்டுமென்று முடிவு செய்து வைத்தார்கள். இந்த வெள்ளை அறிக்கையை பார்க்கும்போது அதில் கார்ப்பரேஷனிலிருந்து அனுப்பிய திருத்தத்தை ஏற்றுக்கொண்டிருப்பதாகத் தெரியவில்லை. என்ன என்ன திருத்தங்கள் வேண்டுமென்று கூறப்பட்டிருந்ததோ அவைகள் எல்லாம் அடிக்கப்பட்டிருக்கிறது. நூற்றுக்கு 5 சத விகிதம் கூட ஒப்புக்கொண்டிருக்கிறார்களா என்பது சந்தேகமாக இருக்கிறது. இது அதிகாரிகளுடைய வேலையா அல்லது அமைச்சர்களுடைய வேலையா என்று தெரியவில்லை. இது கன்ஸர்வேட்டீவ் மனப்பான்மையைத்தான் காண்பிக்கிறதே தவிர முன்னேற்றத்திற்கான எண்ணத்தை காண்பிக்கிறதாக இல்லை. முன்னேத்திற்கான அம்சங்களைக்





கொண்டுவருவதற்காக திருத்தங்கள் செய்து வைத்திருக்கிறோம். அதை அவர்கள் மிகவும் கேவலமான முறையில் நிராகரித்து இருப்பதைப் பார்க்கும் போது மனதிற்கு கஷ்டமாகத்தான் இருக்கிறது.

இன்னொரு விஷயம் சொல்ல விரும்புகிறேன். கார்ப்பொரேஷன் கமிஷனர் நியமிக்கப்படும் விஷயத்தில், யாரை சர்க்கார் நியமிக்க வேண்டும் என்று நிர்ப்பந்திக்கிறார்களோ அவர்களைத்தான் கார்ப்பொரேஷன் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று ஒரு விதி இருக்கிறது. இந்த முறையை நாம் ஒத்துக்கொள்வதற்குத் தயாராக இருக்கக்கூடாது என்ற அபிப்பிராயம் கார்ப்பொரேஷன் கவுன்சிலர்களிடையே இருக்கிறது. 5—6 பேர்களைக் கொண்ட பட்டியலை **(Panel)** அனுப்பி அதிலிருந்து யாரையாவது தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள் என்று சொன்னாலாவது கவுன்சிலர்களுக்கு அதிகாரம் இருக்கும். அப்படியில்லாமல் தங்களுக்கு வேண்டிய ஆசாமியை சர்க்கார் கமிஷனராக நியமிப்பதால், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்களின் அபிலாஷைகளைப் பிரதிபலிக்கும் மனப்போக்கு அவருக்கு இல்லை; இதன் காரணமாக முன்னேற்றம் தடைபடுகிறது. கமிஷனருக்கு உள்ள பல அதிகாரங்களை மேயருக்குக் கொடுத்தால் முன்னேற்றம் ஏற்படும் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

மேலும், கொஞ்ச காலத்திற்குமுன் வரையில், பணக்காரர்கள்தான் கவுன்சிலர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்தனர். இப்போது மத்தியதர வகுப்பிலிருந்தும், கீழ்த்தர வகுப்பிலிருந்தும் சேவை உணர்ச்சிகொண்ட கவுன்சிலர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு பணவசதி இல்லை. அவர்களுக்கு பிரயாணப்படி (டி.ஏ.)-க்கும் வண்டி வசதிக்கும், வகை செய்ய வேண்டும் என்று கேட்டிருந்தோம். அது இந்த வெள்ளை அறிக்கையில் ஒத்துக்கொள்ளப்படவில்லை. இந்த வசதியைச் செய்துகொடுத்தால் அவர்கள் மக்களுக்கு நன்றாகச் சேவை செய்வார்கள். நடத்தையில் தரம் உயரும். உண்மையாகவே, பிரதிபலனை எதிர் பார்க்காமல் சேவை செய்பவர்கள் அரிது. இந்த வித செலவுக்கு பொதுமக்களே பணம் செலவழித்தாகவேண்டும். ஆகவே அவர்களுக்கு **T.A.**-க்கு வகை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

வெள்ளை அறிக்கைபற்றி கமிட்டியினர் ஆலோசனை செய்து முடிவுகளுக்கு வருவதற்கு முன் கார்ப்பொரேஷன் கவுன்சிலர்களின் அபிப்பிராயத்தை முக்கியமாகக் கேட்டு அவர்களுடைய ஏகோபித்த அபிப்பிராயம் என்ன என்பதையும் தெரிந்துகொள்ள வேண்டும். அதற்கு கனம் அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்,

அடுத்தபடியாக, கார்ப்பொரேஷன் மேயரிடம் போலீஸ் நிர்வாகத்தை ஒப்படைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேல் நாடுகளில் மேயரிடத்தில் போலீஸ் நிர்வாகம் இருப்பதைப் போல் இங்கேயும் மேயரிடம் கொடுத்து, நடைமுறையில் ஏன் அந்த முறையை இங்கே பரீக்ஷித்துப் பார்க்கக்கூடாது ? மேயரிடம் போலீஸ் நிர்வாகம் இருந்தால், குற்றங்கள் குறையும்படி செய்வதற்கு கவுன்சிலர்கள் ஒத்துழைப்பார்கள். அப்படிச் செய்தால் நாட்டு மக்கள் சீர்திருந்தி, குணத்திலும் நடத்தையிலும் உயர்ந்தவர்களாக ஆவார்கள். இந்த யோசனையையும் கவனிக்க வேண்டும் என்று தெரிவித்துக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

***Sri P. S. CHINNADURAI :** கனம் சபாநாயகர் அவர்களே, சபை முன்பு சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் வெள்ளை அறிக்கை இந்த சபையில் விவாதிக்கப்படுவதற்கு முன்பாகவே மதுரை ஜில்லாவில் வட மதுரை பஞ்சாயத்து யூனியன் அமைக்கப்பட்டிருக்கிறது. இது ஜனநாயக சம்பிரதாயத்திற்கு ஏற்றதல்ல. ஆதலால் அந்த ஏற்பாடு அங்கீகரிக்கப்படுவதற்கில்லை என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இத்தகைய முறையில், சட்டசபையின் உரிமைகளை பாதிக்கும் செயல்களில் நம் அரசாங்கம் இயங்குமானால் அது நல்ல சம்பிரதாயத்தை வளர்ப்பதற்கு உதவுவ

தாகாது என்பதை நான் இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன். சபை முன்பு சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் வெள்ளை அறிக்கையானது, ஏற்கெனவேயுள்ள ஸ்தல ஸ்தாபன நிர்வாக அமைப்பில் எத்தகைய சீர்திருத்தங்களைச் செய்ய வேண்டுமென்று சர்க்காரின் கொள்கையைப் பிரகடனம் செய்வதாக இருக்கிறது. இதுவே முடிவானது அல்ல என்று கனம் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். சர்க்கார் கட்சித் தலைவர் அவர்களும் இதனை விரிவாக விளக்கினார்கள். ஏற்கனவே ஒரு ஸ்தல ஸ்தாபன நிர்வாக அமைப்பு இருக்கிறது. "அந்த அமைப்பு நாம் ஏற்றுக்கொண்டிருக்கும் லட்சியத்திற்கு ஏற்றதுதானா? அதனை மாற்றியமைக்க அவசியம் இருக்கிறதா?" என்பது தான் இப்போதுள்ள பிரச்னை. இப்போதுள்ள ஸ்தல ஸ்தாபன நிர்வாக அமைப்பு முறையானது நாம் ஏற்றுக்கொண்டிருக்கும் லட்சியத்திற்கு ஏற்றதல்ல என்று நாம் கருதுவதால்தான் அதில் சீர்திருத்தம் செய்யவேண்டுமென்று நாம் விரும்புகிறோம். ஆகவே சீர்திருத்தம் இன்றியமையாததாக ஆகிறது. சீர்திருத்தம் வரவேண்டியது அவசியம் என்று உணரப்படுகிறது என்பதை நாம் பார்க்க முடிகிறது. ஆனால், ஒரு சீர்திருத்தத்தை செய்வதற்கு முன்பு—எத்தகைய சீர்திருத்தத்தை நாம் செய்யவேண்டும் என்று முடிவு கட்டுவதற்கு முன்பு, —நமது லட்சியம் என்ன என்பது பற்றி நம்மிடையே குழப்பமில்லாமல் இருக்கவேண்டும். நமது லட்சியம் க்ஷேமநல ராஜ்யத்தை அமைப்பதுதானா, அல்லது சமதர்ம சமுதாயத்தை அமைப்பதா? இதனைப்பற்றிய கொள்கைத் தெளிவு இல்லாத நிலையில், நிச்சயமாக ஸ்தல ஸ்தாபன நிர்வாக அமைப்பில் நல்ல சீர்திருத்தத்தைச் செய்யமுடியாது என்பது என்னுடைய அபிப்பிராயம் என்று தெரிவித்துக்கொள்கிறேன். க்ஷேமநல அரசாங்கத்தை முதலாளித்துவ அடிப்படையில்கூட அடைய முடியும் என்பது என் கருத்து. முதலாளித்துவ அமைப்பில்கூட ஜனநாயக வழிகளைக் கடைப்பிடித்து க்ஷேமநல அரசாங்கத்தை ஸ்தாபிக்க முடியும். அதே போல் சமதர்ம சமுதாயத்தை ஜனநாயக ரீதியில் ஸ்தாபிக்க முடியும். ஜனநாயகத்தை அமுல் நடத்துவதில் வித்தியாசம் இருக்கலாம். அப்படிப் பார்க்கும்போது, இங்கே சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் வெள்ளை அறிக்கை, சமதர்ம சமுதாயம் என்ற குறிக்கோளை நோக்கி நம்மைக் கொண்டு போகும் என்று என்னால் நம்ப முடியவில்லை. இந்த சபை அங்கத்தினர் பலர் இதனை மிகத் தெளிவாகக் கூறினார்கள். எதிர்க் கட்சியிலிருந்து பேசினால், எதிர்ப்பிற்காகப் பேசினார்கள் என்று சொல்லியிருப்பார்கள். ஆனால், ஆளும் கட்சி அங்கத்தினர்களே பலர், நாம் முன்னுக்குப் போகிறோமா அல்லது பின்னுக்குப் போகிறோமா என்ற சந்தேகத்தைத் தெரிவித்தார்கள். அந்த அபிப்பிராயங்கள் எல்லாம் கனம் அமைச்சர் அவர்களின் சிந்தனையைத் தூண்டும் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன். ஏற்கனவே, 500 பேர்கள் இருக்கும் இடங்களில் பஞ்சாயத்து போர்டு அமைக்கவேண்டும் என்று 1950-ம் வருஷத்திய பஞ்சாயத்து போர்டு சட்டத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. வெள்ளை அறிக்கையில், பஞ்சாயத்துக்களுக்கு மேலே பஞ்சாயத்து யூனியனை அமைத்து அதற்கு அதிகாரங்கள் வழங்கவேண்டுமென்று ஒவ்வொரு ஜில்லாவிலும் ஜில்லா போர்டுக்குப் பதிலாக ஜில்லா அபிவிருத்திக் கவுன்சில் என்ற முறையை அமலுக்குக் கொண்டுவரவேண்டுமென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இவ்வாறு கொண்டுவருவதில் தேர்தல் முறை மிக முக்கியமாக கவனிக்கப்பட வேண்டும். தேர்தல் முறையைப் பற்றி மிக விரிவாகவே பேசவேண்டுமென்று நினைக்கின்றேன். அதைப்பற்றியெல்லாம் வரவிருக்கும் கமிட்டியில் பேசுவதற்கு அதிக சந்தர்ப்பம் இருக்கும் என்று நான் கருதுவதால், இங்கே சுருக்கமாகக் கூறுகிறேன். தேர்தலானது, ஜனநாயகத்தை இயங்கச் செய்வதற்காக நடத்தப்படுவது ஆகும். அத்தகைய தேர்தல்களை வெறும் கேலிக்கூத்தாக ஆக்கிவிடக்கூடாது.

ஆகவே தேர்தல் மூன்று வருஷங்களுக்கு ஒரு முறையாக இருக்க வேண்டுமே தவிர ஐந்து வருஷங்களுக்கு ஒரு முறையாக இருக்கவேண்டிய அவசியம் இல்லை. அப்படி இருக்க வேண்டியது அவசியம் தானா என்பதையும் யோசித்துப் பார்க்க வேண்டும். மனிதனுடைய சராசரி ஆயுள்





அதிகமாக நிர்ணயிக்கப்பட்டிருக்கக்கூடிய நாடுகளில்கூட நான்கு வருஷங்களுக்கு ஒரு முறைதான் தேர்தலை நடத்துகிறார்கள். நம்முடைய நாட்டில் மனிதனுடைய சராசரி ஆயுள் மிகவும் குறைவாக நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இங்கே ஆயுட்காலம் குறைவாக இருப்பதால் இன்னும் குறைவான வருஷத்தில் தேர்தல்களை என் நடத்தக்கூடாது என்று கேட்கிறேன்.

ஜனங்களுடைய நம்பிக்கையைப் பெறுவதற்கு ஜனநாயகம் இருக்க வேண்டும். அந்த அடிப்படையில் தேர்தல்களை நடத்த வேண்டும். ஒரு தடவை அதிகாரம் கிடைத்தவுடன் அந்த அதிகாரத்தை அதிக காலம் வைத்துக்கொள்ள வேண்டும் என்ற அடிப்படையில் இருக்கக்கூடாது. ஜனநாயகத்தை நிலை நிறுத்துவது ஜனங்கள்தான். எப்பொழுது அவர்களால் நியமிக்கப்படுகிறார்களோ அவர்களுக்குத்தான் முக்கியத்துவம் கொடுக்கப்படவேண்டும். அதுதான் நியாயமானது. அவர்களுடைய இஷ்டப்படிதான் தேர்தல்களை நடத்தவேண்டும். ஒருவர்பேரில் நம்பிக்கை இல்லை என்றால் அவரைப் பதவியிலிருந்து நீக்க அவர்களுக்கு அதிகாரம் வேண்டும். மக்கள்தான் இறுதியான முடிவு செய்யவேண்டும். இப்படிப்பட்ட மனோபாவம் அதிகாரிகளுக்கு இருக்கவேண்டும். அரசாங்கத்தினிடத்தில் சட்டமும் நிர்வாகமும் இருக்கவேண்டும். ஜனங்களுடைய நம்பிக்கையை அவர்களுடைய பிரதிநிதிகள் பெற்றவர்களாக இருக்கவேண்டும். ஆகவே நான் சொல்வது என்னவென்றால் மூன்று வருஷங்களுக்கு ஒரு முறை தேர்தல் வருவதுகூட சரியல்ல என்று சொல்வேன். இது பஞ்சாயத்து, முனிசிபாலிட்டிகளுக்கு மாத்திரம் அல்ல. இந்த சட்ட சபைக்குக்கூட மூன்று வருஷங்களுக்கு ஒரு தடவை தேர்தலை நடத்தினால்கூட நல்லது என்பது என்னுடைய அபிப்பிராயம். அப்படி வைத்தால் அதை நான் முழு மனதுடன் வரவேற்பேன். இது ரொம்பவும் முக்கியமானது என்பதையும் சொல்லிக்கொள்கிறேன்.

**(Deputy Speaker in the Chair.)**

நாம் இப்பொழுது ஜனநாயகம் என்ற முறையில் போய்க்கொண்டிருக்கிறோம். அதை நினைவில் வைத்துக்கொண்டால் இப்பொழுது நாம் செய்யவேண்டியவைகள் எல்லாம் நினைவுக்கு வருகிறது. பஞ்சாயத்து தலைவர் தேர்தல் முறை, பஞ்சாயத்து தேர்தல், யூனியன் சர்க்கிள் அமைப்பு, இதில் நிர்வாக அதிகாரிகளை ஏற்படுத்துகிற முறை, பஞ்சாயத்து யூனியன் சர்க்கிள், கிராம சேவக் நிர்வாகம், அபிவிருத்தி கவுன்சில் ஏற்படுத்துவது, முனிசிபல் சேர்மன் நியமனம், அவர் மீது நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டுவர ஏற்கனவே இருக்கக்கூடிய விதிகளுக்கு பதிலாக புதிய விதிகளைக் கொண்டு வருவது முதலியவைகளைச் செய்யப் போகிறோம். ஐந்து வருஷங்களுக்கு ஒரு முறை தேர்தலை வைப்பது இவைகளையெல்லாம் பார்த்தால் ஜனநாயகம் சர்வாதிகாரம் என்னும் போக்கில் போகிறதோ என்றுதான் தோன்றுகிறது.

ஜனநாயக முறையில் நடக்கும் போது ஜனங்களுக்கு நாம் கொடுத்திருக்கும் உரிமைகள் அவர்களுக்கு இல்லாமல் போகக் கூடாது. ஜனங்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கும் உரிமைகள் அவர்களுக்கே கொடுக்கப்பட வேண்டும். அதை வேறு விதமாக பிரயோகிப்பது என்பது சரியல்ல. ஜனங்களே தங்களுடைய வேலைகளுக்கு முடிவு செய்துகொள்ள வேண்டும். அவர்களே தீர்மானம் செய்து அவர்களே அதை நிறைவேற்றிக்கொள்ளக் கூடிய வகையில் அவர்களுக்கு உரிமைகள் வழங்கப்படவேண்டும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் யாரும் அங்கு குறுக்கிடக்கூடாது. ஜனங்களுக்கு தங்களுடைய பிரதிநிதிகளை தேர்ந்தெடுத்துக்கொள்வதற்கு பலதடவைகள் வசதி செய்து கொடுக்கப்படவேண்டும். இது என்னுடைய கருத்து. முனிசிபாலிட்டிகளாக இருந்தாலும் சரி, மற்றும் பஞ்சாயத்து போர்டாக இருந்தாலும் சரி அங்கே ஏற்படுத்தப் போகிற அதிகாரி ஜனநாயக ஸ்தாபனத்திற்கு மாறான அதிகாரங்களைக் கொண்டவர்களாக இயங்கக்கூடாது. எந்த ஒரு ஸ்தாபனமாக இருந்தாலும் கிராம பஞ்சாயத்தாக இருந்தாலும் முனிசிபாலிட்டியாக இருந்தாலும் ஜில்லா அபிவிருத்தி கவுன்சிலாக இருந்தாலும் அதிகாரம் சம்பந்தப்பட்டவர்கள் எவ்வளவு

[Sri P. S. Chinnadurai] [5th November 1957

தான் நிபுணர்களாக இருந்தாலும் சரி, திறமையாக இருந்தாலும் சரி, அவர்கள் ஜனநாயக ஸ்தாபனத்திற்குக் கட்டுப்பட்டவர்களாக, அதிலும் முற்றிலும் கட்டுப்பட்டவர்களாக இருக்கவேண்டும். அவர்களுடைய அதிகாரமும் திறமையும் பயன்படவேண்டும் என்ற முறையில் இத்தகைய சீர்திருத்தம் அமைந்திருக்கவேண்டும். இதை தீர ஆலோசனை செய்து முடிவு கட்ட வேண்டும் என்று சொல்லிக்கொண்டு நேரம் அதிகம் இல்லாததால் இத்துடன் முடித்துக்கொள்ளுகிறேன்.

**Sri M. KALYANASUNDARAM:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த வெள்ளை அறிக்கையின் மீது நடக்கும் விவாதம் எந்த கட்சி மனோபாவமும் இன்றி நடைபெறவேண்டுமென்பதுதான் என்னுடைய அவா. இதில் எந்தக் கட்சியைச் சேர்ந்தவராக இருந்தாலும் நம்முடைய ஸ்தல சுய ஆட்சி திறமையாக நடைபெறவேண்டும் என்பதில் அபிப்பிராய வித்யாசம் இருக்க முடியாது. நம்முடைய நிதி அமைச்சரவர்கள் தன்னுடைய பிரசங்கத்தை நேற்றே நிகழ்த்தி இருந்திருந்தால் அவருடைய பேச்சு அங்கத்தினர்கள் எல்லோருக்கும் உதவியாக இருந்திருக்கும். அவர் கடைசியாக பேசியதால் சில கருத்துக்கள் ஆட்சேபிக்கப்படாமல் போய்விட்டன என்ற எண்ணம் வேண்டாம். நேரம் இல்லாததால் அவர் குறிப்பிட்ட கருத்துக்களுக்கு பதில் சொல்லாமல் போய்விடலாம். அதன் அர்த்தம் அவர் சொல்லிய கருத்துக்கள் சரியானவை, அப்படியே அவைகளை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற அவசியம் இல்லை. சில கருத்துக்களைத் தெரிவிக்கும்போது அவசியமில்லாத சில கருத்துக்களை அவர் தெரிவித்தார் என்பதை முதலில் நான் குறிப்பிட விரும்புகிறேன். ஸ்தல ஸ்தாபனங்கள், ஜில்லா போர்டுகள், முனிசிபாலிட்டிகள், சென்னை கார்பொரேஷன், பஞ்சாயத்து போர்டு இவற்றில் தீவிரமான மாறுதல்கள் அவசியம் வேண்டும் என்று இந்த வெள்ளை அறிக்கை வலியுறுத்திக் காட்டுகிறது. அதற்கு அப்பால் அதில் கூறியிருக்கிற பரிகாரங்கள் எந்த நோக்கத்தை அடையவேண்டும் என்று கொண்டுவரப்படுகிறதோ அதை அடைவதற்கு உதவி செய்யுமா என்பது சிந்தனைக்கு உட்பட்டதாக இருக்கிறது. வெள்ளை அறிக்கையை அப்படியே கொடுத்து விட்டு அங்கத்தினர்கள் அதைப் படித்துவிட்டு விவாதிக்க வேண்டும் என்றும் தங்களுடைய கருத்துக்களை தெரிவிக்கவேண்டும் என்றும் சொல்லியிருந்திருந்தால் அப்பொழுது நடைபெறும் விவாதம் வேறு விதமாக அமைந்திருக்கும். அப்படி இல்லாமல் நமக்கு அரசாங்கம் சில கருத்துக்களை வகுத்துக் கொடுத்திருக்கிறார்கள். நம்முடைய ராஜ்யத்தின் சூழ்நிலை அமைப்புக்கு ஏற்ற ஒரு அமைப்பு இருக்கவில்லை. மாறான அமைப்பு அங்கே இருக்கிறது. நேரடியாக அதைப் புரிந்துகொள்வதற்கு கஷ்டம் இருக்கலாம். எப்படி இருந்தாலும் இந்த யோசனைக்குப் பொறுப்பானவர்களை நான் குறிப்பிடுகிறேன். ஸ்தல சுய ஆட்சி அதிலும் குறிப்பாக பஞ்சாயத்துக்கு அதிகப்படியான அதிகாரத்தைக் கொடுக்க இது உதவுகின்றனவா அல்லது ஸ்தல சுய ஆட்சி மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கும் அரசாங்க நிர்வாகத்தில் இருந்து அதிகாரத்தை உபயோகிக்கும் அதிகாரிகளுக்கும் திரா க்ரோதத்தை விளைவிக்கக்கூடிய முறையில் இது இருக்கிறதா என்பதையும் யோசிக்க வேண்டியதாக இருக்கிறது.

முதலில் இந்த சீர்திருத்தத்தை ஏற்படுத்துவதற்கு முன்னால் முக்கியமாக சீர்திருத்தப்பட்ட ஜில்லா அமைப்பு ஏற்படவேண்டும். இப்பொழுது ஜில்லாக்களின் பரப்பு, விஸ்தீரணம், ஜனத்தொகை எல்லாம் மிகவும் அதிகமாக இருக்கிறது. நம்முடைய ராஜ்யம் நம்முடன் சேர்ந்திருந்த ராஜ்யங்கள் மற்றும் தேசத்திலுள்ள மற்ற ராஜ்யங்களை எடுத்துப் பார்த்தால் நம்முடைய ஜில்லாக்களின் விஸ்தீரணம் நீங்கலாக மற்ற ராஜ்யங்களை எடுத்துப் பார்த்தால் அந்த ஜில்லாக்களுடைய விஸ்தீரணம் மிகவும் குறைவாக இருக்கிறது. அப்படி நம்முடைய ராஜ்யம் இருப்பதால் இப்பொழுதுள்ள ஜில்லாக்களை இரண்டாகப் பிரித்தால் தான் சீர்திருத்தம் செய்து நிர்வாகத்தை நடத்துவதற்கு சௌகரியமாக இருக்கும். இதை இப்படியே



5th November 1957] [Sri M. Kalyanasundaram]

வைத்துக்கொண்டு மற்ற சீர்திருத்தங்களை எல்லாம் நாம் செய்வதற்கு முற்பட்டால் அது எங்கேயாவது ஒரு முட்டுக்கட்டைக்குக் கொண்டுபோய் விடுகிறது என்பதை வலியுறுத்த விரும்புகிறேன்.

இப்பொழுது கல்வி சம்பந்தப்பட்ட மட்டில் ஜில்லாக்களை இரண்டாக பிரித்துவிட்டார்கள், போலீஸையும் இரண்டாகப்ப பிரித்துவிட்டார்கள். மற்ற இலாகாக்களையும் இரண்டாகப் பிரிக்கக்கூடிய அளவில் சர்க்கார் முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அதைப் போலவே விஸ்தீரண அமைப்பிலும் இரண்டாகப் பிரிப்பதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டியது அவசியமாக இருக்கிறது. அதற்கு முதலாவதாக ஜில்லா போர்டை ஒழிப்பது அவசியம் என்ற முடிவுக்கு வந்துவிட்டார்கள். கனம் மந்திரி அவர்கள் தன்னுடைய பிரசங்கத்தில் ஒன்றைக் குறிப்பிட்டார். அவர் பேசிய காலத்தில் "ஜில்லா போர்டுகள் நல்ல முறையில் இயங்கவில்லை அதனால் ஒழித்துக்கட்டுகிறோம் என்று நினைக்கக்கூடாது" என்று சொன்னார். அப்படி இல்லாவிட்டால் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளோ அல்லது சர்க்கார் நிர்வாகத்திலுள்ள அதிகாரிகளோ ஒரு கமிட்டி அமைத்து இப்படிப்பட்ட சிபாரிசு செய்திருக்கவேண்டும். அப்படி ஏதாவது சிபாரிசு செய்திருக்கிறார்களா என்பதும் தெரியவில்லை. அப்படி சிபாரிசு செய்திருந்தால் அதை கனம் அங்கத்தினர்களுக்குக் கொடுத்திருக்கலாம். அந்த ரிப்போர்ட்டை சபையின் மேஜையின்மீது வைத்திருக்கலாம். அல்லது ஏதாவது தீர்மானம் போட்டு அனுப்பி இருக்கலாம். அப்படிப்பட்ட தீர்மானத்தையாவது சபையின் முன் வைத்திருக்கலாம். அல்லது ப்ளானிங் கமிஷன் இதைப்பற்றி சிபாரிசு செய்திருக்கலாம். அதையாவது மேஜையின் மீது வைத்திருக்கலாம். ஆகவே ஜில்லா போர்டுகளை ஒழிக்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்ததற்கான கருத்துக்களை கொண்ட திட்டவட்டமான எந்த ரிப்போர்ட்டையும், தீர்மானத்தையும் மேஜையின் மீது வைக்கவில்லை. ஒழிக்க வேண்டுமென்பதற்கான சரியான காரணங்களையும் சபையின் முன் வைக்கப்படவில்லை.

ஜில்லா போர்டுகளை எப்படி சீர்திருத்தம் செய்யவேண்டும் என்றும் எப்படி புனரமைப்பு இருக்க வேண்டும் என்று நியமிக்கப்பட்ட கமிட்டி சிபாரிசு செய்திருக்கிறார்கள். அது ஜில்லா போர்டுகளுக்கு அதிக அதிகாரம் கொடுக்கவேண்டும் என்கிற சிபாரிசா என்பதையும் தெரிந்துகொள்ள வேண்டும்.

இதேசமயத்தில் இப்பொழுதிருக்கக்கூடிய அமைப்பில் ஜில்லாக்களின் விஸ்தீரணம் அதிகம். அவைகள் சுலபமாக இயங்கக்கூடிய முறையில் இல்லை. அதற்கு என்ன பரிகாரம் கண்டுபிடிக்கவேண்டும் என்பது முக்கியமே தவிர, ஜில்லா போர்டுகளை ஒழித்தாக வேண்டுமென்பது முக்கியம் அல்ல. இதற்குப் பதிலாக ஏற்படக்கூடிய—சட்டசபையை விட்டால்—ஸ்தல சுயாட்சி அமைப்பு என்ன? சட்டசபையை விட்டால், கடைசியில் பஞ்சாயத்து அமைப்பு இருக்கிறது. இவைகளுக்கிடையில் அதிகாரப் பொறுப்பு இருக்கக் கூடிய ஒரு ஸ்தாபனமும் இல்லாமல் போய்விடுகிறது. ஜில்லா ப்ளானிங் கவுன்சிலை ஏற்படுத்தப் போகிறார்கள். அது சிறந்த யோசனை. வரவேற்கத்தக்கதுதான். இப்பொழுது இருக்கும் பல கமிட்டிகளுக்குப் பதிலாக ஒரே டெவலப்மென்ட் கவுன்சில், அதாவது அபிவிருத்தி கவுன்சில் ஏற்படுத்துவது என்றும், அதற்கு சட்ட பூர்வமாக யோக்யதாம்சம் கொடுக்கப்படுகிறது. சட்டபூர்வமான யோக்கியதாம்சம் இருந்தாலும் சரி, சட்டத்தில் குறிப்பிடாமல் இருந்தாலும் சரி, செய்யக்கூடிய வேலை எப்படி இருக்கப் போகிறது? அதுவும் ஆலோசனைக் குழுவாகத்தான் இயங்குமே தவிர, ஜில்லா போர்டுக்கிருந்த அதிகாரத்தில் ஒரு அம்சம் கூட இருக்கப்போவதில்லை. டெவலப்மென்ட் கவுன்சில் ஒரு ஆலோசனைக் குழுவாகத்தான் இருக்கும். பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் என்று சட்டத்தில் இருந்தாலும், நடைமுறையில் வேலை செய்யும்போது, அதுவும் ஆலோசனைக் குழுவாகத்தான் இருக்கும். பஞ்சாயத்து வட்டக் கமிட்டி வைத்தாலும் சரி, அதற்கும் அதிகாரம் ஒன்றும் இருக்காது. அதுவும் ஆலோசனை சொல்லக்கூடியதாகத்தான் இருக்கும். ஆகவே, கிராமப் பஞ்சாயத்துக்கும்,

[Sri M. Kalyanasundaram] [5th November 1957

சட்டசபைக்கும் இடையிலே நாம் பார்க்கக்கூடிய சமயத்தில், இந்த யோசனைப் படி அமைக்கக்கூடிய குழுக்கள் அத்தனையும் ஆலோசனை சொல்லக் கூடியவையாகத்தான் இருக்கப்போகிறதே தவிர, நிர்வாக அதிகாரம் இருக்கக்கூடிய ஒரு ஸ்தல ஸ்தாபனமாக இருக்கப்போவதில்லை என்று அவர்கள் கொடுத்திருக்கும் யோசனையிலிருந்து நான் எடுத்துக்காட்ட வேண்டியிருக்கிறது.

கிராமப் பஞ்சாயத்தாவது ஒழுங்காக நடக்க என்ன யோசனை கொடுக்கப் பட்டிருக்கிறது என்பதை நான் எடுத்துக் காட்டுகிறேன். 1950-வது வருஷத் திய சட்டத்திற்குப் பிறகு கிராமப் பஞ்சாயத்துக்கள் திறமையாக வேலை செய்யவில்லை என்று சொல்கிறார்கள். இன்றைக்கு இருக்கும் பஞ்சாயத்து போர்டுகள் எல்லாம் ரொம்ப சிறப்பாக, திறமையாக நடப்பதாக நான் சொல்வதாக நினைத்துக்கொள்ள வேண்டாம். 1950-வது வருஷம் பஞ்சா யத்துச் சட்டம் கொண்டுவந்தது அரசியல் சட்டத்தின் 40-வது பிரிவின் நோக்கத்தை நடைமுறைக்குக் கொண்டுவரும் திசையில் ஒரு முக்கியமான சட்டமாகும். அந்தச் சட்டத்தில் பஞ்சாயத்து போர்டுகள் தோற்றத்தை மட்டுமல்ல மாற்றியமைத்தது. அதிகாரத்தையும் மாற்றியமைத்திருக்கிறார் கள். நான் பேசக்கூடிய இச்சமயத்தில் நிதி அமைச்சர் அவர்கள் இல்லை. சென்ற ஆறு வருஷ காலமாக நிதி அமைச்சராகத் தொடர்ந்து இருந்து வந்திருக்கிறார்கள். பஞ்சாயத்துக்கு ஜீவன் கொடுக்க வேண்டிய ஒரு முக்கிய காரியம், முதலில் செய்த காரியம் என்ன. அந்தந்த பிரதேசத் தில் வசூலிக்கப்படும் இரண்டணா நிலவரி சர்சார்ஜை அந்தந்தப் பஞ்சா யத்து போர்டுகளுக்குக் கொடுக்கப்படவேண்டுமென்று அந்த நில வரி சர்சார்ஜ் அந்தப் பஞ்சாயத்துக்குக் கொடுக்கவேண்டியதில்லை என்று செய்து விட்டார். வசூல் செய்யலாம், ஆனால், அவர்களே எடுத்துக்கொள்ளக் கூடாது என்று சொல்லிவிட்டார். முதலில் சொன்னது என்ன ? "வசூல் செய்யுங்கள், அதை உங்களுக்கே கொடுக்கிறேன்" என்று சொல்லி, பிறகு "வசூல் செய்யுங்கள், எடுத்துக்கொள்ளவேண்டாம்" என்று சொல்லிவிட் டார். அப்படி இல்லாமல், நிதியைக் கொடுத்து வேலை செய்யுங்கள் என்று சொன்னால், பஞ்சாயத்துக்கள் நன்றாக வேலை செய்திருக்கமுடியும். அது 1953-ம் வருஷத்தில் என்று நான் நினைக்கிறேன். 1954-ம் வருஷத் திலே, இதே நிதி அமைச்சர்தான் அந்தச் சட்டத்தைக் கொண்டுவந்து, "பஞ்சாயத்து போர்டுக்குக் கொடுப்பதற்குப் பணம் கிடையாது" என்று சொன்னார்கள்.

பணம் கிடையாது என்றால், அந்தப் பஞ்சாயத்துக்கள் என்ன செய்ய முடியும் ? கிராமப் பஞ்சாயத்துக்கு என்ன அதிகாரம் இருக்கிறது ? இரட்டை மாட்டு வண்டிகளுக்கு லைசன்சு கட்டணம் வசூல் செய்யலாம். அடுத்தபடி சைகிள் லைசென்சுக் கட்டணம் பெறலாம். கிராமங்களில் எத் தனை சைக்கிள் இருந்துவிட முடியும் ? ஏதோ பக்கத்தில் நகரங்கள் இருந்தால், அங்கு லைசென்சு கட்டணம் அதிகமாக இருக்கிறதே என்று, கிராமத்திலிருந்து லைசென்சு பெற்றுக்கொண்டு போவார்கள். அம்மாதிரி ஏதாவது தட்டுக்கெட்டு வருமானம் வந்தால் வரும். வீட்டு வரி போடுங்கள் என்று நிர்ப்பந்தம் செய்திருக்கிறார்கள். வீட்டு வரி போட்டுவிட்டால், "இந்தத் தலைவர் வந்தார், வீட்டு வரி போட்டுவிட்டார்" என்று மக்கள் சொல்வார்கள், நாம் வந்ததற்குப் பிறகு வீட்டு வரி போட்டுவிட்டோம் என்று சொல்வார்களே என்று நினைத்து, ஏதோ 70, 80 ரூபாய் வீட்டு வரியின் மூலமாக வசூலித்ததாகக் கணக்குக் காண்பித்து, செலவு எழுதிவிடுவார். வீட்டு வரி எப்படிப் போடமுடியும் ? ஏதோ மேஜர் பஞ்சாயத்திலே வேண்டு மானால் வரி போடலாம். வரியை வசூலிப்பதற்குத்தான் பஞ்சாயத்துக் களே தவிர, அவர்களிடம் பணத்தைக் கொடுத்து செலவு செய்யச் சொல்வ தில்லை. 1950-வது வருஷத்தில் சட்டம் நிறைவேற்றப்பட்ட பிறகு பஞ்சா யத்து போர்டிலே குறை இருந்துவருகிறது. சர்க்கார் இவ்வளவு தவறாக நடந்துவிட்டு, அப்பாவிகளாக உள்ள பஞ்சாயத்துக்களைப் பார்த்து, இம் மாதிரி புகாரை மந்திரி அவர்களுடைய பிரசங்கத்தில் குறிப்பிட்டிருப்பது சரியானது அல்ல என்பது என்னுடைய அபிப்பிராயம். பஞ்சாயத்துக்



5th November 1957] [Sri M. Kalyanasundaram]

களுக்கு அதிக அதிகாரம் கொடுக்கப்படவேண்டும். நாம் ஒரு ஜனநாயகக் குடியரசை ஏற்படுத்தவேண்டுமென்று நினைக்கிறோம், ஜனநாயகக் குடியர சாக இருக்கட்டும், க்ஷேம நலக் குடியரசாக இருக்கட்டும், சோஷலிச சமு தாய அமைப்பு ஏற்படுவதாக இருக்கட்டும், அந்தத் திசையில் போகவேண்டு மானால் கிராமத்தில் இருக்கும் மக்களுடைய தேவைகளை, அவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மூலமாகப் பூர்த்தி செய்துகொள்ளக் கூடிய முறையில் பஞ்சாயத்துக்களை அமைத்துக்கொள்வது அவசியம். அந்த முறையில் பஞ்சாயத்தை அமைததுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கிறார்களா என்றால் இல்லை. ப்ளாக் டெவலப்மெண்ட் ஆபீசரின் கீழே ஒரு கைப்பாவையாக இந்தப் பஞ்சாயத்து போர்டுகளை வைப்பது சரியல்ல. ப்ளாக் டெவலப்மெண்ட் ஆபீசரோ கிராம சேவகர்களோ பஞ்சா யத்துக்களின் தேவைகளை அறிந்து நடப்பார்கள் என்று சொல்ல முடியாது.

நான் ஒரு விஷயத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். அதிகாரிகளுக்கும், ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களுக்கும், இடையே சௌஜன்யமான உறவு இருக்கவேண்டுமென்ற அபிப்பிராயத்தை உடையவன் நான். அப் பொழுதுதான் நாம் சோஷலிச சமுதாயத்தை நோக்கிப் போகமுடியும். ஆனால், மந்திரிமார்கள் சொல்வது சில சமயத்தில் அவர்களுக்கு வசதியாக இருக்கும்போது அதிகாரிகளைக் குறை சொல்கிறார்கள். சில சமயங்களிலே தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் என்றாலே அவர்கள் நம்பத்தகாதவர் கள் என்ற கருத்துக்களை உண்டாக்குகிறார்கள். சர்க்காருடைய பேச்சுக்கள் எல்லாம் பொருத்தமாக இருக்கவேண்டும். அதில் ஒரு "கன்ஸிஸ் டென்ஸி" இருக்கவேண்டும். அது கிடையாது. சௌகரியமாக இருக்கும் போது அதிகாரிகளைப் புகழவேண்டியது. சௌகரியம் இல்லாதபோது கீழே தள்ளவேண்டியது. ஆனால், ஒரு விஷயத்தில் அவர்கள் பொருத்த மாக இருக்கிறார்கள். தாங்கள் மந்திரிகளான பிறகு, தங்களைத் தேர்ந் தெடுத்து அனுப்புவதற்குக் காரணமாய் இருந்தவர்களை உதாசீனம் செய் வதில் மந்திரிகள் பொருத்தமாக இருக்கிறார்கள். உறுதியாக இருக்கிறார் கள். இது தவறான போக்கு. தேர்ந்தெடுப்பவர்கள் எப்போதும் நம்பத் தகாதவர்கள் என்ற மனோபாவம் தேர்ந்தெடுக்கப்பட்ட மந்திரி களுக்கு இருக்கக்கூடாதென்று அவர்களுக்கு நான் எடுத்துக்காட்ட விரும்பு கிறேன். அஸ்திவாரமாக இருக்கக்கூடிய இந்தக் கொள்கையை, இந்தப் போக்கை அவர்கள் கைவிடவேண்டுமென்று நான் மந்திரிசபை பூராவை வையுமே கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

பஞ்சாயத்து தேர்தல் சம்பந்தப்பட்டமட்டில், கிட்டத்தட்ட மந்திரி அவர் கள் 45 நிமிஷம் பேசியும், மெம்பர்கள் மூலமாக ஏன் தலைவர் தேர்ந் தெடுக்கப்படவேண்டும் என்பதற்குத் திருப்திகரமான காரணத்தைச் சொல்ல வில்லை. தலைவரை ஜனங்களே தேர்ந்தெடுக்கவேண்டும். அப்பொழுது தான் கட்சிப் பிரதி கட்சி இன்றி கிராமத்திலிருக்கும் மக்கள் பூராவும் தங்களுடைய பிரதிநிதி என்ற எண்ணத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவன் நடக்க முடியும். இல்லாவிட்டால் என்ன ஆகும் ? எட்டு பிரதிநிதிகளில் ஐந்து பிரதிநிதிகளைக் கையில் போட்டுக்கொண்டால் போதும் என்ற மனப் பான்மை தலைவனுக்கு ஏற்பட்டு விடும். மக்களுடைய அபிலாஷைகளைப் பிரதிபலிக்கக்கூடிய தலைவர் ஏற்படுவது கஷ்டம். மந்திரி அவர்கள் இதே திசையில் இந்த யோசனை வைத்திருப்பது தவறானது. தெரிந்தோ தெரி யாமலோ 1950-வது வருஷச் சட்டத்தில் கொஞ்சம் ஜீவன் இருக்கிறது. அதற்கு கொஞ்சம் உயிர் கொடுத்திருந்தாரே அந்த உயிரை வாங்கிவிட்டு "ஆர்டிபிஷியல் ரெஸ்பரேஷன்" கொடுக்கப் பார்க்கிறார்கள் என்றுதான் சொல்ல வேண்டியிருக்கிறது. பஞ்சாயத்து போர்டுக்கு ஜீவன் இருக்க வேண்டுமென்றால், இப்பொழுது பஞ்சாயத்துத் தலைவரை நேரடியாக மக்கள் தேர்ந்தெடுக்கும் முறை அப்படியே பாதுகாக்கப்படவேண்டும். அதோடுகூட, ரகசிய வோட்டு முறை மூலம், அவர்கள் சட்டபூர்வமாக அங்கத்தினர்களையும் தலைவர்களையும் தேர்ந்தெடுக்கக்கூடிய உரிமை மக் களுக்குப் பாதுகாக்கப்படவேண்டும். அப்பொழுதுதான் பஞ்சாயத்து போர்டு கள் பெரும்பாலான கிராம மக்களின் உரிமைகளையும் அபிலாஷைகளையும் பிரதிபலிக்கக்கூடிய ஸ்தாபனங்களாக இயங்க முடியும். அந்தப் பாதையில்

நாம் நடவடிக்கை எடுக்கவேண்டுமே தவிர, ஏதோ சில பஞ்சாயத்து போர்டுகள் சரியாக இயங்கவில்லையென்றால்—அதற்கும் சர்க்கார்தான் பொறுப்பு என்று சுட்டிக்காட்டுகின்றேன்—அதைக் காண்பித்து கொடுக்க வேண்டிய உரிமையைப் பறிப்பது நியாயமாக இருக்காது.

பஞ்சாயத்து போர்டு அமைப்பில் "ப்ரொபோர்ஷனல் ரெப்ரஸென்டேஷன்" என்ற யோசனையைக் கொடுத்திருக்கிறார்கள். அடிப்படை எப்படிப் போகிறது என்று பின்னால் தான் தெரியும். எப்படி இருந்தாலும் அதை நான் வரவேற்கிறேன். ஹரிஜனங்களுக்கு என்று பஞ்சாயத்து போர்டில் ஒரு ஸ்தானம் என்று மட்டும் இல்லாமல் அந்தந்த கிராமத்தில் ஹரிஜனங்களின் ஜனத்தொகை எவ்வளவு இருக்கிறதோ, அதற்கு ஏற்றாற்போல் ஒரு "ப்ரபோர்ஷன்" ஏற்படுத்தி அவர்களுக்கும் பிரதிநிதித்துவம் கொடுக்கும் முறையிலே பஞ்சாயத்து போர்டை அமைக்கவேண்டுமென்ற கருத்தில் அதை வரவேற்கத் தயாராயிருக்கிறேன்.

பஞ்சாயத்து போர்டிலே குறைந்தபட்சம் ஒரு பெண் பிரதிநிதி இருப்பதற்கும் வழி செய்யவேண்டும். சாதாரணமாக பெண் அங்கத்தினர்கள் வருவதில்லை. இருந்தாலும், இப்பொழுதிருந்தே நாம் இப்படி ஒரு வழக்கத்தை ஆரம்பித்து வைத்தால் 10, 20 வருஷ காலத்தில் நாம் ஜனநாயகப் பண்பாட்டை கிரகித்து வளர்ந்துவிட்ட பிறகு தானாகவே அத்தகைய நிலைமை ஏற்படும். அப்பொழுது பெண்களுக்கு என்று "ப்ரபோர்ஷன்" விதிக்கவேண்டிய அவசியமில்லாமல், பெண்கள் தேவையான எண்ணிக்கையில் முன்வருவார்கள். ஆகவே, பெண்களுக்கும், ஹரிஜனங்களுக்கும், பிரதிநிதித்துவம் அதிகமாகக் கொடுக்கவேண்டும். சில நகரங்களில் முஸ்லிம்கள் அதிகமாக இருந்தால் அவர்களுக்கும் பிரதிநிதித்துவம் கொடுக்க வேண்டும். இதை அவர்களுடைய தனிப்பட்ட பிரச்னையாகக் கருதவேண்டுமேயல்லாது ஏதோ அரசியல் பிரச்னையாகக் கருதக்கூடாது. அப்படிப்பட்டவர்களுடைய நலன்களைப் பாதுகாக்கக்கூடிய முறையில் அவர்களுக்கும் சில பாதுகாப்பு கொடுக்கவேண்டிய அவசியம் இருக்கிறபடியால் அவர்களுக்கு ப்ரபோர்ஷனல் ரெப்ரசென்டேஷன் கொடுக்கவேண்டும். அரசியல் கட்சி ப்ரொபோர்ஷனல் ரெப்ரசென்டேஷன் அல்ல. இந்த அடிப்படையில்தான் இருக்குமென்று நான் நினைக்கிறேன். அப்படியிருந்தால், அந்த அமைப்பை நான் வரவேற்கிறேன் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

பஞ்சாயத்து யூனியன் அமைவது கண்டிப்பாகக் கூடாது என்பது என்னுடைய அபிப்பிராயம்—இப்பொழுது இருக்கும் ரூபத்தில் இப்பொழுது அவர்கள் செய்திருக்கக்கூடிய பஞ்சாயத்து யூனியன் அமைந்தால் பஞ்சாயத்துக்களையும் ஊறுபடுத்தி, ஸ்தல அபிவிருத்தித் திட்டங்களும் ஒழுங்காக நடக்காமல் போய்விடும். இவர்கள் செய்திருக்கும் நோக்கத்தில், ஜில்லா போர்டுகளை அப்படியே வைத்துக்கொள்ளாவிட்டாலும், தாலூகா போர்டு மாதிரியோ இன்னும் அதைவிட சுலபமாக இயங்குகிற மாதிரியோ பல பொறுப்புக்களைப் பிரித்து, நேரடியாக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இருந்து, அவர்களுக்கு என்ன என்ன அதிகாரம் இருக்கவேண்டும் என்பதை வரையறுத்தி, அவர்களுடைய அதிகாரம் வேறாக இருக்கவேண்டும். பஞ்சாயத்து போர்டுக்கு அதிகாரம் வேறாக இருக்கவேண்டும். பஞ்சாயத்து நிதியும் அவர்களுக்கே வழங்கவேண்டும். டெவலெப்மென்ட் கமிஷனர் மூலமாக பஞ்சாயத்துக்கு நிதி ஒதுக்கிவிட்டால், அந்த நிதி ஒழுங்காகப் போய்ச் சேராது. ஏனென்றால், அது அட்வைசரி கௌன்சிலாக இருக்கப் போகிறது. பகைமையை மூட்டி விடுவதில் இந்த பஞ்சாயத்து யூனியன் கொண்டு போய்விடும் என்பது என் அபிப்பிராயம். இரண்டு வேறான ஸ்தாபனங்கள் ஒன்றுக்கொன்று ஒத்துழைக்கக்கூடிய வகையில் வரவேண்டும். பஞ்சாயத்துக்களுக்குப் பொறுப்புக்கள் வேறாக இருக்கவேண்டும். பஞ்சாயத்து யூனியன் என்று சொல்லக்கூடிய ஒரு இடை ஸ்தாபனம் இருக்கிறதே, அந்த ஸ்தாபனத்திற்குப் பொறுப்பு அதிகமாக இருக்க வேண்டும். பிரதிநிதிகள் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படக்கூடிய பிரதிநிதிகளாக இருக்கவேண்டும். அப்பொழுதுதான் கிராமப்புறத்தில் அபிவிருத்தித் திட்டங்களை நல்லமுறையில் நடத்துவதற்கு உபயோகமாக



இருக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொண்டு, இன்னும் பல யோசனைகள் சொல்ல வேண்டியிருப்பதை, பிறகு கமிட்டிகள் மூலமாகவும், கமிட்டியின் பரிசீலனைக்குப் பிறகு சபை முன் வரும்போதும் தெரிவித்துக்கொள்ளலாம் என்று இருக்கின்றேன்.

*SRI C. N. ANNADURAI: சட்டமன்றத் தலைவர் அவர்களே, வெள்ளை அறிக்கையின் பேரிலே நடைபெற்றுவருகின்ற இந்த விவாதம்—முடிந்த முடிவுகளை ஏற்றுக்கொள்வதா இல்லையா என்ற கட்டத்தில் இல்லாமல்—நாம் எடுக்க இருக்கிற முடிவுகள் நாட்டுக்குத் தேவைதானா என்று அலசிப் பார்ப்பதற்குப் பயன்படும் என்று நிதி அமைச்சர் அவர்கள் சொன்னதை நான் மெத்த நம்பிக்கையோடு வரவேற்கிறேன். என் நம்பிக்கையோடு வரவேற்கிறேன் என்று நான் கூறுகிறேன் என்றால், கனம் சின்னதுரை அவர்கள் எடுத்துச் சொன்னபடி, ஏற்கெனவே செய்யப்பட்டுவிட்ட ஒரு முடிவின்பேரில் அப்படி முடிவு எடுக்கப்பட்டதன் காரணமாக, இங்கே ஒப்புக்கு ஒரு விவாதத்தை நடத்துகிறார்களோ என்று ஐயப்படுகிற விதத்தில் மதுரை மாவட்டத்தில் ஒரு இடத்தில், அவர்கள் வெள்ளை அறிக்கையிலே என்ன மாதிரியான நிலைமைகளைக் காண விரும்புகிறார்களோ அவைகளையெல்லாம் அங்கே பரீட்சித்துப் பார்த்தாலும், அவைகள் அப்படியே ஒப்புக்கொள்ள வேண்டிய முடிவுகள் அல்ல என்று எடுத்துச் சொன்னதை அரசியல் பெருந்தன்மையாக நான் கருதவில்லை, சர்க்காருடைய நல்ல நோக்கமாகவே கருதி அதை நான் வரவேற்கிறேன்.

இன்றையதினம் கிராமப் புறங்களிலே உள்ள நிலைமைகளைத் தக்கபடி சீர்திருத்துவதற்காக இந்த முறை கையாளப்படுகிறதா, அல்லது கிராம நல அபிவிருத்தி, சமுதாய நல அபிவிருத்தி என்று போடப்பட்டிருக்கும் திட்டங்கள் வெற்றி பெறுவதற்காக இந்த முறையைக் கையாளுகிறார்களா என்பது உண்மையிலேயே குழப்பமாக இருக்கிறது. நிதி அமைச்சர் குறிப்பிட்ட கருத்துக் குழப்பம், கேட்பவர்களிடையே மட்டுமல்ல, சொல்லுபவர்களிடையேயும் பெரும் அளவுக்கு இருக்கிறது. ஸ்தல ஸ்தாபனங்களை பிரித்து அமைக்கவேண்டுமென்ற கருத்து சமுதாய நலத் திட்டங்களைப் பற்றி எண்ணிப் பார்க்காமல் இருந்த காலத்திலேயே, ரத்தினசபாபதி முதலியார் காலத்திலேயே இந்த யோசனைகள் இந்த நாட்டிலே வலியுறுத்தப் பட்டுக்கொண்டு வந்திருக்கின்றன. இடையிலே ஏற்பட்ட ஒரு புதிய முறை இன்றைக்கு பொறுத்தமாக இருக்கிறதா, இல்லையா என்பதை ஆராய வேண்டுமென்பது மட்டுமல்ல. இருக்கின்ற ஸ்தல ஸ்தாபனங்கள் அமைப்பிலோ, அல்லது புதியதாக ஏற்பட இருக்கின்ற ஸ்தல ஸ்தாபனங்கள் அமைப்பிலோ, சமுதாய நலத் திட்டங்கள் நிறைவேற்றுவதற்காக அவைகள் கருவியாக பயன்படவேண்டுமென்ற முறையில் இந்தப் பிரச்னை அணுகப் படுகிறதோ என்று நான் அஞ்சுகிறேன். நான் அப்படி அஞ்சத்தக்க அளவில் நிதி அமைச்சர் அவர்கள் சமுதாய நலத் திட்டத்தைப் பற்றி தமது உரையிலே 20 நிமிடங்கள் வலியுறுத்தி, அது சரியான முறையில் நடைபெற வேண்டுமானால் கிராம மக்கள் அக்கறை காட்டவேண்டும், கிராம மக்களுக்கு அதில் அக்கறை இருக்கவேண்டும், அவர்களுடைய அமைப்பிலும் அதற்கெல்லாம் வசதிகள் இருக்கவேண்டுமென்று பரிசோதித்தார்.

சாதாரணமாக எங்கள் பக்கத்தில் மாடு வாங்கப் போகும்போது பெண் பார்த்துக்கொண்டு வருவது வாடிக்கை. அதே போல மாடு வாங்கப்போன இடத்தில் மாட்டையும் வாங்கிக்கொண்டு அத்துடன் பெண்ணையும் வாங்கி வருவதுபோல், சமுதாய நலத் திட்டத்தை எப்படி வெற்றிகரமாக நிறைவேற்றலாம் என்ற கருத்தை ஆராய்ந்திருக்கிற இந்த சர்க்கார் அதே நேரத்திலே ஒரு பெண்ணை வாங்கிக்கொண்டு வரலாம் என்பதைப்போல, நீண்ட நாளைய இந்தப் பிரச்னையை அதோடு ஒட்டிவைத்திருக்கிறார்கள். சமுதாய நலத் திட்டம் நல்ல முறையிலே இயங்கவேண்டுமென்று சர்க்கார் எடுத்துக்கொண்டுள்ள அக்கரையை உண்மையிலேயே வரவேற்கக்கூடிய நேரத்தில், எப்படி மத்திய அரசை ஆட்டிப் படைக்கின்ற அளவுக்கு "பிளானிங் கமிஷன்" உருவம் எடுத்து அதன் பலனாக பல நிதி அமைச்சர்கள் தங்களுடைய வாழ்நாளை விரைவிலே முடித்துக்கொள்ளவேண்டிய

தாயிற்றோ, அதே முறையில் இங்கு சமுதாய நலத் திட்டம் என்ற புதிய இயந்திரம் நம்முடைய ஸ்தல ஸ்தாபன இயந்திரங்களை 'அடியோடு ஒழித்துக் கட்டிவிடும் என்று நான் உண்மையிலேயே அஞ்சுகிறேன். உண்மையிலேயே திட்டங்கள் என்பது இன்றைக்கு இருக்கும் ஆட்சியாளரினால் மிகவும் முக்கியமாக கருதப்படலாம். ஆனால் அவைகளின் முக்கியத்துவத்திற்கு எந்த வகையிலும் குறைந்தது அல்ல நிரந்தரமாக நம்மிடத்தில் இருக்கும் சர்க்கார் இயந்திரங்கள். நிரந்தரமாக இருக்கின்ற சர்க்கார் இயந்திரங்களையே புதிதாக அமைக்கப்படுகின்ற திட்ட இயந்திரங்கள் அடியோடு ஒழித்துவிடும், அல்லது இரண்டும் ஒன்றுக்கொன்று முரண்பட்டுவிடும் என்ற வகையிலே இந்த உருவங்கள் இருக்கலாகாது என்ற என்னுடைய கருத்தைத் தெரியப்படுத்துகின்றேன்.

ஒவ்வொரு கட்டத்திலும் பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களை சந்தேகிக்கக்கூடிய அளவுக்கு அவர்கள் பக்கத்திலே அதிகாரிகளை நாம் அமர வைத்திருக்கிறோம். அப்படி அதிகாரிகளை அமரவைப்பதினாலே உண்மையிலேயே நான் அஞ்சுவது என்னவென்றால், நேற்றையதினம் பேசும்போது டாக்டர் சவுந்திரம் அம்மையார் எடுத்துச்சொல்லியபடி, நல்ல தரம் உள்ளவர்கள் இத்தகைய அமைப்புகளில் அமருவதற்கு அஞ்சுவார்கள். நான் கலந்துகொண்ட ஒரு பஞ்சாயத்து மகாநாட்டில் பஞ்சாயத்து தலைவர்களும் உறுப்பினர்களும் தாங்கள் அதிகாரிகளை அணுகினால் அதிகாரிகள் எப்படி அறுவறுக்கத்தக்க முறையிலே நடந்துகொள்ளுகிறார்கள் என்று வெளிப்படையாகப் பேசி, இனியாகிலும் அதிகாரிகள் அம்மாதிரி நடந்துகொள்ளக்கூடாது என்று தீர்மர்னம் நிறைவேற்றினார்கள். அந்தத் தீர்மானம் நிறைவேற்றும் நேரத்தில் அதில் கலந்து உரையாற்றிய ஒரு பஞ்சாயத்து தலைவர் எவ்வளவு உருக்கத்தோடு அதிகாரிகளிடம் தாங்கள் படும் அல்லலை எடுத்துச்சொன்னார் என்பதை நான் சொல்லுவதிலிருந்து அமைச்சர் அவர்கள் உணர முடியாது. நான் நேரிடையாகக் கேட்டதினால் அதை உணர்ந்து இந்த அவையிலே அந்த அல்லலை எடுத்துச் சொல்ல முன்வந்தேன். அதிகாரிகளிடத்திலே ஏற்கெனவே படுகின்ற அல்லல் போதாது என்று மேலும் அவர்கள் ஒவ்வொரு கட்டத்திலும் அதிகாரியிடத்தில் நின்று கையேந்தி நிற்கவேண்டிய நிர்ப்பந்தமான முறையிலே இந்த அறிக்கை இன்றையதினம் இருக்கிறது என்று அஞ்சுகிறேன்.

நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் பஞ்சாயத்துகளைப் பற்றி பேசிய நேரத்தில் சில அடிப்படை தத்துவங்களை இங்கே எடுத்து விளக்கினார்கள். அப்படி அவர்கள் விளக்கியது மற்றவர்களை விளக்கத் தூண்டும் முறையில் இருந்த காரணத்தினாலே, அதுபற்றி ஓரிரண்டு வார்த்தைகள் சொல்ல கடமைப்பட்டிருக்கின்றேன். பஞ்சாயத்துகள் அல்லது ஸ்தல ஸ்தாபன அமைப்புகள் நல்லபடி நிர்வகிக்கப்படவேண்டும் என்பதற்காக அதிகாரிகளை ஆங்காங்கு அமைப்பது என்பது அதிகார வர்க்கத்தை அதிகரிக்குமே தவிர, மக்களின் சுய ஆட்சி நிலைமை உரிமையை நிலைநிறுத்துவதாக இருக்காது.

பத்து ரூபாயை சில்லரை மாற்றி ஆளுக்கு ஒரு ரூபாய் கொடுத்தால் எல்லோருக்கும் ரூபாய் கிடைக்கும். நம்முடைய சர்க்கார் பத்து ரூபாய் நோட்டை பத்து துண்டாகக் கிழித்து ஒவ்வொரு துண்டையும் ஒவ்வொரு இடத்திலும் கொடுக்கிறார்கள். 500-க்கு ஐந்து பேர்கள் என்ற பஞ்சாயத்து அமைப்பில் ஒரு துண்டைத் தருகிறார்கள். மற்றொரு துண்டை எடுத்து பத்து கிராமங்களை ஒன்றாகச் சேர்த்து அவைகள் சில காரியங்களைச் செய்துகொள்ளலாம் என்று பஞ்சாயத்து சர்க்கிளிடம் ஒப்படைக்கிறார்கள். 70, 80 பஞ்சாயத்துகளை ஒன்றாகச் சேர்த்து இப்பொழுது அபிவிருத்தி திட்டங்கள் நடத்தப்படுகின்ற பகுதியின் அடிப்படையில் ஒரு பகுதிக்கு மற்றொரு துண்டை கொடுக்கிறார்கள். இப்படி இருக்கின்ற அதிகாரங்கள் எந்த இடத்திலும் நிர்வகிக்கமுடியாத அளவுக்கு துண்டாடப்பட்டிருக்கின்றன. எந்த ஒரு அமைப்பிற்கும் தன் காரியங்களை செய்வதற்கான முழு வாய்ப்பும் செய்துகொடுக்கப்படவில்லை. ஆங்காங்குள்ள நிர்வாக அதிகாரம் இப்பொழுது இருக்கக்கூடிய "பிளாக் டெவலப்மெண்டு" அதிகாரிகள், கிராம





சேவக்குகள் இவர்களிடம் ஒப்படைக்கப்படுகின்றன. இந்த அதிகாரிகளின் நோக்கம் கிராம நல அபிவிருத்தி திட்டங்களை எப்படி நிறைவேற்றுவது என்பதில் செல்லுமே தவிர பஞ்சாயத்துகளில் சுயஆட்சி உணர்ச்சியை எப்படி வளர்ப்பது என்பதில் அவர்கள் அக்கறை காட்டமாட்டார்கள், அல்லது அக்கறை செலுத்தமாட்டார்கள்.

"ப்ளாக் டெவலப்மெண்ட் ஆபீஸர்களைப்" பற்றியும், சமுதாய நலத் திட்டங்களைப்பற்றியும் நமது இந்திய சர்க்கார் பெருமை அடித்துக்கொள்ளவில்லை. பெருமை அடித்துக்கொள்ளவில்லை என்பது மட்டுமல்ல. தாங்கள் எடுத்துக்கொண்டிருக்கும் காரியம் சரியானபடி நடத்தப்படவில்லை என்பதை அவர்களே வெளியிட்டிருக்கின்ற "இவால்யுவேஷன் கமிட்டியின் ரிபோர்டு" எடுத்துக்காட்டியுள்ளது. '"பிளாக் டெவலப்மெண்டு ஆபீசர்கள் சரியான முறையிலே தங்கள் கடமைகளை நிறைவேற்றவில்லை என்று கனம் டே அவர்களும், பாராளுமன்றத்தில் பலரும் எடுத்துக்காட்டியிருக்கிறார்கள். சந்தேகத்திற்கு இடமானவர்களையும், சரியானபடி காரியங்களை நடத்துகிறார்கள் என்று இன்னமும் தீர்மானிக்கப்படாமல் இருக்கின்ற அதிகாரிகளையும் வைத்துக்கொண்டு நிர்வாகத்தை நடத்தினால் அவர்கள் ஜனநாயகத்தையே உண்மையிலேயே பாழ்படுத்திவிடுவார்கள் என்று நான் மீண்டும் தெரிவித்துக்கொள்ளுகிறேன். ஆகையினால் எல்லா இடங்களிலும் பொது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு நல்ல வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும்.

ஜில்லா போர்டுகள் நிர்வகிக்கும் பரப்பு நிலத்தின் அளவு அந்த ஜில்லா என்பது கட்டுக்கு அடங்காத, உண்மையிலேயே காரியங்களை நிறைவேற்றுவதற்கு முடியாத பெருத்த அளவுக்கு இருக்கிறது என்று சொல்லி, சிறுத்த அளவில் காரியங்களை நடத்தப்போகிறோம் என்று அமைச்சர் அவர்கள் சொல்லும் நேரத்திலே அவர்களுக்கு ஒரு சிறிய யோசனை சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். பகுதிகள் எந்த அளவுக்கு இருக்கவேண்டுமென்பதற்கு வேறு முறைகளைக் கையாள்வதைவிட அரசியலுக்காக பிரிக்கப்பட்டிருக்கும் சட்டசபை தேர்தல் தொகுதிகளை ஏன் ஒரு வகையாக வைத்துக்கொள்ளக்கூடாது ? சாதாரணமாக இப்படிப்பட்ட காரியங்களிலும், வேறு பல காரியங்களிலும் ஆங்கிலத்தில் இரண்டு பதங்களை உபயோகப்படுத்துவார்கள். நல்ல முறையில் நிர்வாகம் நடைபெறுவதற்கு "எகனாமிக் யூனிட்டாக" இருக்கவேண்டுமென்று சொல்லுவார்கள். அதாவது பொருளாதாரத் துறையிலே எல்லாவித வசதிகளையும் செய்துகொள்ள வகை இருக்க வேண்டும். அல்லது "பொலிடிகல் யூனிட்" அரசியலுக்கேற்ற அமைப்பாக இருக்கவேண்டுமென்று சொல்லுவார்கள். இப்பொழுது ஏற்படுத்தப்போகிற பஞ்சாயத்து யூனிட்டுகள், "எகனாமிக் யூனிடாகவுமில்லை", "பொலிடிகல் யூனிடாகவுமில்லை". "பொலிடிகல் யூனிடாக இருக்கவேண்டுமென்றால் ஏற்கெனவே இருக்கின்ற எம்.எல்.ஏக்கள் தொகுதிகளை அந்தத் தொகுதிகளாக வைத்திருக்கலாம். "எகனாமிக் யூனிடாக" இருக்கவேண்டுமென்றால், பொருளாதார நிபுணர்கள் எதை "எகனாமிக் யூனிட்" என்று சொல்லுகிறார்களோ அம்மாதிரி பிரிக்கலாம். இரண்டையும் விட்டுவிட்டு குருடன் கோலை வீசி நொண்டி காலை எடுத்து வைப்பது போல இப்பொழுது இருக்கிற இரண்டு பிளாக்குகளை ஒன்றாகச் சேர்த்து ஒரு வகை யூனிடாக வைத்திருப்பதாக எடுத்துச்சொல்லுவது அவ்வளவு பொருத்தமாக எனக்குத் தெரியவில்லை. கிராமத்தில் இருக்கின்ற மக்களுக்கு யாரிடம் எதற்கு எப்படி அணுகுவது என்பது தெரியவில்லை. பல்வேறு அதிகாரிகளைப் போட்டிருக்கிறார்கள். ரெவின்யூ இலாகா ஒன்று இருக்கிறது. அவர்களும் கிணறு வெட்டுகிறார்கள். லோகல் "டெவலப்மெண்டு" இலாகா ஒன்று இருக்கிறது. அவர்களும் கிணறு வெட்டுகிறார்கள். சமுதாய நலத் திட்டத்தின் கீழும் கிணறுகளை வெட்டுகிறார்கள். என்னுடைய தொகுதியிலே ஒரு இடத்தில் ஒரு கிணறு வெட்டப்பட்டிருக்கிறது. அதற்குக் கைப்பிடிச் சுவர் இல்லை. கைப்பிடிச் சுவர் ஏன் கட்டப்படவில்லை என்று கேட்டால் "அதை நாங்கள் வெட்டவில்லை, சமுதாய நலத் திட்டத்தின் கீழ் வெட்டியிருக்கிறார்கள், அவர்களைக் கேளுங்கள்". என்று ரெவின்யூ இலாகாவினர்

சொல்வதாகவும், ''நாங்கள் வரவில்லை, அவர்களைத்தான் கேட்கவேண்டும்'' என்று இவர்கள் சொல்வதாகவும் அறிகிறேன். இன்றைக்கும் கைப்பிடிச் சுவர் இல்லாமல் கிராம மக்கள் அந்தக் கிணற்றை உபயோகித்து வருகிறார்கள். இப்படித் தாறுமாறாகக் காரியங்கள் நடைபெறுவதற்குக் காரணம் பொதுமக்கள் அந்தக் காரியத்திற்கு ஆதரவு தராததுதான். பொதுமக்கள் ஒத்துழைத்தால்தான் ஆதரவு தந்து பங்கு கொண்டால்தான் சமுதாய அபிவிருத்தித் திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்ற முடியும் என்று நிதி அமைச்சர் அவர்கள் சொன்னதைக்கேட்டு மகிழ்ச்சி அடைகிறேன்.

அதே தத்துவத்தை அவர் இன்னும் கொஞ்சம் ஆராய்ந்து பார்த்திருப்பாரேயானால் பொதுமக்கள் எந்த நேரத்தில் ஆதரவு தருகிறார்கள், எந்த நேரத்தில் ஆதரவு தர மறுக்கிறார்கள் என்பதை அவர் கொஞ்சம் உணர்ந்துகொண்டிருக்க முடியும். எந்த இடத்தில் சமுதாய நலத்திட்டத்தினால் போடப்படுகிற திட்டம் சரியான முறையில் நடைபெறும், நல்ல திட்டம் என்கிற அபிப்பிராயம் பொதுமக்களுக்கு உண்டாகிறதோ அந்த இடத்தில் அவர்கள் ஆதரவு தந்து உற்சாகமாகத் தாங்களும் பங்கு கொண்டிருக்கிறார்கள். எந்த இடத்தில் இவர்கள் போடுகிற திட்டம் நன்றாக நடைபெறாது. இது வெறும் கண் துடைப்பு, மெழுகுப் பூச்சு, என்கிற அபிப்பிராயம் அவர்களுக்கு உண்டாகிவிடுகிறதோ அங்கேயெல்லாம் அவர்கள் ஆதரவு கிடைப்பது இல்லை என்பதை அறிந்துகொள்ளலாம். இதை நான் நடைமுறையில் பார்த்திருக்கிறேன் என்பதற்கு ஒரு நிகழ்ச்சியை இந்த அவையில்—மன்றத் தலைவர் அவர்களே உங்கள் அனுமதியுடன்—சொல்வது பொருத்தமானதாக இருக்கும் என்பதால் சொல்ல ஆசைப்படுகிறேன்.

நிதி அமைச்சர் அவர்களுடைய கோயம்புத்தூர் மாவட்டத்தில் கவுந்தப்பாடி, சவுந்தப்பட்டு கிராமத்தில் சமுதாய நல அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் பழங்குடி மக்களுக்கு 47 வீடுகளுக்கு மேல் கட்டப்பட்டிருக்கிறது. அந்த வீடுகளை நிதி அமைச்சர் அவர்களே திறந்து வைப்பதாக இருந்தார்கள் என்று கேள்விப்பட்டேன். ஆனால் இவர் திறந்து வைக்கச் செல்லவில்லை. அவர் திறந்து வைப்பதற்கு ஏற்ற அளவில் இல்லாமல் அவை கட்டிய சிறிது காலத்திற்குள்ளாகவே அலங்கோலமாகிவிட்டன. 47 வீடுகளில் 26 வீடுகள் கீழே விழுந்து அலங்கோலமாகக் கிடந்தன. அதைக் காண்பதற்கு என்னை அழைத்திருந்தார்கள். நான் பேசும்போதும் குறிப்பிட்டேன். ''இந்த அலங்கோலக் காட்சியைக் காண்பதற்கு நிதி அமைச்சரை அழைக்காமல் என்னை அழைத்திருப்பதே நல்லது'' என்று குறிப்பிட்டேன். நிதி அமைச்சர் அவர்கள் அந்த மாவட்டத்திற்குச் செல்லும் காலத்தில் அவசியம் அந்த இடத்தைப் போய்ப் பார்க்கவேண்டும் என்பதாகக் கேட்டுக்கொள்கிறேன்.

ஆகவே பொதுமக்களுக்கு இது கண் துடைப்பு வேலை இல்லை என்கிற நம்பிக்கை உண்டாகும் வகையில் நல்லமுறையில் இவர்கள் சமுதாய அபிவிருத்தித் திட்டங்களைப் போட்டால்தான் அவர்கள் தங்கள் ஆதரவைத் தர முன்வருவார்கள். இந்தமாதிரியாகச் செய்தால் அவர்களுடைய ஒத்துழைப்பைப் பெற முடியாது என்று தெரிவிக்க விரும்புகிறேன். அவர்களுடைய ஒத்துழைப்பைப் பெறுவதற்குச் செய்யவேண்டிய முறை, கையாளவேண்டிய கொள்கை வேறு. அதைக்கொண்டுபோய் ஸ்தல ஸ்தாபனங்களுடன் பிணைப்பதை என்பதை நான் ஒத்துக்கொள்ளவில்லை.

ஒரு இயந்திரத்தினுடைய கருவியைக் கொண்டுபோய் இன்னொரு இயந்திரத்தோடு சேர்க்கும்போது அது பொருந்துமா என்பதைப் பார்த்து பொருத்தவேண்டும், இல்லாவிட்டால் அது முறிந்துவிடும், அல்லது இந்த இயந்திரத்தின் ஓட்டத்தைத் தடைபடுத்தும் என்பதாக நிதி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதற்கு ஒரு உதாரணம் அவர்கள் ஜில்லாவிலேயே காட்டமுடியும். மாடுகள் இழுக்கும் வண்டிகளுக்கு டையர் சக்கரங்களைப் போடுகிறார்கள். டையர் சக்கரம் போட்ட வண்டி தார் ரோடில்



தான் நன்றாகப் போகுமே தவிர மண் ரோடில் போகும் அந்த வண்டிகளுக்கு டையர் சக்கரங்களைப் பொருத்துவது பொருந்தாத ஒன்றை கொண்டுபோய் பொருத்துவதாகத்தான் இருக்கிறது. அதே முறையில் எல்லா இடத்திலும் அனுசரிக்கவேண்டாமென்று அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

ஸ்தல ஸ்தாபனங்களைத் திருத்தி அமைக்கவேண்டுமென்ற கருத்தையும், சமுதாய நலத் திட்டம் வெற்றி பெறவேண்டுமென்ற கருத்தையும் ஒன்றாகப் பிணைப்பது சரியானது அல்ல. அந்தக் கண்ணோட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிற அறிக்கையில் நான் காணுகின்ற குறைபாடு இந்த அடிப்படையில்தான். சாதாரணமாக வெள்ளை அறிக்கையில் இருக்கிற மற்ற தத்துவங்களைப் பற்றியும் அவநம்பிக்கை இருக்கிறது. இங்கே பேசியவர்கள் எல்லோரும் எல்லாக் கட்சிகளையும் சேர்ந்தவர்கள்—ஸ்ரீ முத்தையா அவர்களைத் தவிர மற்ற யாவரும்— வரவேற்கவில்லை. ஓரளவுதான் வரவேற்கிறேன் என்று ஸ்ரீ முத்தையாவும் குறிப்பிட்டார்கள். அந்த ஓரளவுதான் என்ன என்பதை அவர் இங்கே சொல்லாவிட்டாலும் பொறுக்குக் கமிட்டியிலாவது ஒரு சமயம் சொல்வாரோ என்று நினைக்கிறேன். சிந்தனைக்கு உரியதாகக் காணப்படுகிற விஷயங்களை எல்லாம், போட்டிருக்கிற பொறுக்குக் கமிட்டி நன்றாக அலசி ஆராய்ந்து பார்க்கும் என்று நம்பிக்கொண்டிருக்கிறேன்.

மற்றொன்று பஞ்சாயத்து நடக்கிற தேர்தலைப் பற்றி அரசியல் கட்சிகளுக்கு எல்லாம் சீறிய யோசனை ஒன்றை நிதி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அரசியல் கட்சிகளை எல்லாம் யோசிக்கும்படியாகக் கேட்டுக்கொண்டார்கள். "அங்கே எல்லாம் அரசியல் கட்சி மனப்பான்மை வளருவது நல்லதா ? அரசியல் கட்சியின் சார்பில் பஞ்சாயத்துக்குப் போட்டியிடுவது நல்லதா ?" என்று கேட்டார்கள்.

மன்றத் தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக நிதி அமைச்சர் அவர்களுக்கு ஒன்று சொல்லிக் கொள்வேன். முன்பு நான் சார்ந்திருந்த ஜஸ்டிஸ் கட்சி ஸ்தல ஸ்தாபனங்களுக்கு அரசியல் கட்சியின் சார்பில் போட்டி போடக்கூடாது என்கிற முறையைத்தான் அந்தக் காலத்தில் வகுத்திருந்தார்கள். காங்கிரஸ்காரரர்கள் தான் அந்த முறையைத் தகர்த்தெறிந்தார்கள். கட்சியின் சார்பில் ஸ்தல ஸ்தாபனங்களுக்கும் போட்டியிடும் வழக்கத்தை கொண்டுவந்தார்கள். இன்றைக்கு அரசியல் கட்சியின் சார்பில் போட்டியிடக்கூடாது என்கிற முறையை வகுக்க விரும்பினார்கள் என்றால்—ஆங்கிலத்தில் சொல்வது உண்டு—ஜென்டில்மென்'ஸ் அக்ரிமெண்டு என்பதாக—அப்படி எல்லா அரசியல் கட்சிகளும் ஒன்று கூடி அந்த முடிவுக்கு வருவார்களானால் நான் சார்ந்திருக்கிற கட்சியின் சார்பில் காங்கிரஸ்காரரர்கள் கொண்டுவருகின்ற அப்படிப்பட்ட முடிவுக்கு முழுக்க ஒத்துழைக்கத் தயாராய் இருப்பேன் என்று இன்றையதினம் சொல்லிக் கொள்கிறேன். காங்கிரஸ் கட்சியின் கருத்தாகத்தான் அது இருக்குமென்று நம்பி இதைச் சொல்லிக்கொள்கிறேன். இது நிதி அமைச்சர் அவர்களுடைய சொந்தக் கருத்து என்றால் தனிப்பட்ட முறையில் உயர்ந்த கருத்தைத் தெரிவித்ததற்காக என் மதிப்பு. அதன் பேரில் அவர் எடுத்துக்கொள்கிற நடவடிக்கை எப்படி இருக்குமோ அது எதிர்காலத்தில்தான் தெரியவேண்டும்.

ஆனால் ஒன்று. பஞ்சாயத்துக்கு அரசியல் கட்சியின் சார்பில் தேர்தலுக்கு நின்று சண்டை போட்டுக்கொள்வது நாகரீகச் சண்டையாக இருந்தாலும் இருக்கும். காரணம் பஞ்சாயத்து தேர்தல்கள் ஏதாவது ஒரு கட்சியின் சார்பில்தான் நடைபெறக்கூடியதாக இருக்கும். கிராமங்களுக்குச் சென்று பார்த்தால் தெரியும். வடக்குத் தெரு ஒரு கட்சி. தெற்குத் தெரு ஒரு கட்சி. இரண்டுக்கும் சண்டை. மேட்டுத் தெருவுக்கும், கிழக்குச்குத் தெருவுக்கும் சண்டை ; அல்லது சாதியின் பெயரால் சண்டை ; அல்லது பெரிய வீட்டுக்காரருக்கும், சின்ன வீட்டுக்காரர்களுக்கும் சண்டை ; என்று இப்படித்தான் இருக்கும். ஆனால் இந்தச் சண்டைகளை எல்லாம் விட அரசியல் கட்சிகளுக்குள் ஏற்படுகிற சண்டை ஒருகால் நாகரீகமான சண்டையாகவே இருக்க முடியும். ஆனால் ஜஸ்டிஸ் கட்சி காலத்

தில் அரசியல் கட்சிகளின் சார்பில் ஸ்தல ஸ்தாபனங்களின் தேர்தல் நடைபெறக் கூடாது என்று இருந்த முறையை மாற்றி அமைத்த காங்கிரஸ்காரர்கள்—அரசியல் கட்சியின் சார்பில் போட்டியிடுவது நல்லதா என்பதை யோசித்துப் பார்க்கவேண்டும் என்று சொல்கிற முறைக்கு இறங்கி வந்திருக்கிறார்கள் என்றால் அதற்குக் காரணம் என்ன? தாங்கள் எதிர்பார்த்த நோக்கம் அதனால் பூர்த்தி அடையவில்லை—இல்லாவிட்டால் தாங்கள் எதிர்பார்த்தது போல் இல்லாமல் பல இடங்களில் தங்களுக்கே நஷ்டம் அதிகமாக வந்துவிட்டது என்கிற காரணமாக இருந்தாலும் இருக்கலாம். எப்படி இருந்தாலும் அது நல்ல யோசனை என்பதனால் தான் அந்தக் கருத்து உருவானால் எங்கள் கட்சியின் ஒத்துழைப்பும் அதற்குக் கிடைக்கும். இதைப்பற்றி எல்லாக் கட்சிகளும் ஒன்றுகூடி பேசுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டால் அதை வரவேற்கிறேன் என்று எடுத்துச் சொல்லி, நாம் செய்கின்ற மாறுதல் ஸ்தல ஸ்தாபனங்களுக்கு அதிகாரம் கொடுத்து அவை நல்ல முறையில் செயலாற்றவேண்டும் என்பதாக இருக்கவேண்டுமே தவிர சமுதாய நல அபிவிருத்தித் திட்டங்களை எப்படி வெற்றி பெறச் செய்வது என்கிற காரணத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கக்கூடாது என்பதை வலியுறுத்த விரும்புகிறேன்.

காரணம் சமுதாய நல அபிவிருத்தி திட்டங்கள் என்பன ஐந்து வருஷத் திட்ட அடிப்படையில் போடப்படுவது. நிரந்தரமான திட்டங்கள் இல்லை. முதல் ஐந்து வருஷத் திட்டம் முடிந்தது. இரண்டாவது ஐந்து வருஷத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது. முடிந்தால் மூன்றாவது ஐந்து வருஷத் திட்டத்தையும் இவர்கள் கொண்டுவரலாம். அனுமதித்தால் நான்காவது ஐந்து வருஷத் திட்டத்தையும் கொண்டுவரக்கூடும். இப்படி அவை நிரந்தரமான திட்டங்களாக இல்லாமல் குறிப்பிட்ட வருஷங்களைக் கொண்ட திட்டங்களாகவே அவை அமைவன. ஆனால் ஸ்தல ஸ்தாபனங்கள் என்பது நிரந்தரமான ஒரு திட்டம். நிரந்தரமான ஒரு திட்டத்தோடு நிரந்தரமில்லாத திட்டத்தை பிணைப்பது ஒரு டப்பிக்குள் இன்னொரு சின்ன டப்பியைப் போடுவதாகத்தான் இருக்கும். இது அதோடு பொருந்தாது. உள்ளே இருந்து ஓசையைத்தான் எழுப்ப உதவும். பந்தோபஸ்தாக இருக்காது, என்கிற காரணத்ினால் ஸ்தல ஸ்தாபனங்களின் பிரச்சினை தனி. சமுதாய நல அபிவிருத்தித் திட்டங்களின் பிரச்சினை தனி. இரண்டையும் ஒன்றாகப் பிணைப்பது சரியல்ல என்று கூறி, சட்டசபைக் கமிட்டியில் ஸ்தல ஸ்தாபனங்களை நல்ல முறையில் சீர் அமைப்பது பற்றி ஆலோசிப்பார்கள் என்று நம்பி முடித்துக்கொள்கிறேன்.

* **SRI V. K. RAMASWAMY MUDALIYAR:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நம் முன்னால் வெள்ளை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. அதைப்பற்றி பல அங்கத்தினர்கள் பேசினார்கள். என்னைப் பொறுத்த மட்டில் நான் சமீபத்தில் இவ்விடத்தில் சொன்னேன். வெளியிலும் சொல்லியிருக்கிறேன். ஜில்லா போர்டை ஒழிப்பதுபற்றி நான் அவ்வளவாக சம்பந்தப்படவில்லை என்பதை தெளிவாக நன்றாகச் சொல்லி இருக்கிறேன். ஜில்லா போர்டுகள் அநேக இடங்களில் நன்றாக வேலை செய்திருப்பதாகவும்—இப்போது மாத்திரம் இல்லை பண்டைய காலம் முதற்கொண்டே 25 வருஷங்களாக அதன் தலைவர்களும் அங்கத்தினர்களும் நல்ல முறையில் வேலை செய்திருப்பதாக—நிதி அமைச்சர் அவர்கள் ஒப்புக்கொண்டார்கள். முக்கியமாக ஜில்லா போர்டுகளை "ட்ரெயினிங் கிரௌண்டு" என்று சொல்வது உண்டு. சர்க்கார் நிர்வாகத்தை நடத்த வருவதற்கு முன் பஞ்சாயத்துகள், ஜில்லா போர்டுகளில் இவற்றில் இருந்து நிர்வாகம் செய்திருந்தால் அந்தப் பழக்கத்தில் இங்கு நன்றாகச் செயல்பட முடியும் எனச் சொல்வார்கள். இதற்கு சாதகமாக இருந்துகொண்டுதான் இருக்கிறது.

ஜில்லா போர்டுகளுக்கு சர்க்காரால் உதவி செய்வதற்கு சூழ்நிலை சரிவர இல்லாத காரணத்தால், இப்போது தேசிய அபிவிருத்தி திட்டங்களும் சமுதாய அபிவிருத்தி திட்டங்களும், சரிவர நடப்பதற்கு இல்லாமல் இருக்கிறது என்று கனம் அமைச்சர் அவர்களே குறிப்பிட்டிருக்கிறார். சில



ஜில்லா போர்டுகள் மிகப் பெரியதாக இருப்பதால் அங்கு இது போன்ற திட்டங்களெல்லாம் கொண்டுவரமுடியாத நிலைமையில் இருக்கிறது. அதற்குள்ள அதிகாரங்களும் மிகக் குறைவாக இருக்கின்றன. ஆகவே அவைகளை இரண்டாகவோ மூன்றாகவோ பிரித்து நிர்வாகத்தை நடத்தவேண்டும். அப்படி இல்லாவிட்டாலும் 33 டிவிஷன் ஆபீசாக பிரித்து நடத்த வேண்டும். இப்பொழுது ஜில்லா போர்டை எடுத்து விடுவதாக தீர்மானித்து, கலெக்டருக்கு ஒரு விசேஷ அதிகாரத்தைக் கொடுத்து இந்த ஜில்லா போர்டை ஒப்படைக்க இருக்கிறது. யூனியன் பஞ்சாயத்து வேறு இருக்கிறது. சாதாரணமாக ஜில்லா போர்டுகளில் சரிவர சர்க்காரிடமிருந்து பள்ளிக்கூடங்களுக்கு பணம் கிடைக்காததைப் பார்க்கிறோம். அதனால் அவைகள் நன்றாக நடப்பதில்லை. அப்படி இருக்கும்போது பஞ்சாயத்து போர்டுகளில் மாத்திரம் பள்ளிக்கூடங்கள் எப்படி நன்றாக நடைபெற முடியும். ஜில்லா போர்டுகள் எடுபடப்பட்டால், பஞ்சாயத்து போர்டுகள் மாத்திரம் நன்றாக நடக்கும் என்று சொல்லுகிறார்கள். இப்பொழுது இருக்கும் பஞ்சாயத்து போர்டுகள் சரிவர நடைபெறுவதில்லை. அப்படி இருக்கும்பொழுது இனிமேல் மாத்திரம் எப்படி நல்லமுறையில் நடக்க முடியும் என்று தெரியவில்லை. அனேக இடங்களில் இந்த யூனியன் ஆப் பஞ்சாயத்துக்கள் சரிவர நடப்பதில்லை. இதன் பேரில் எவ்வளவு புகார் இருக்கின்றன. பஞ்சாயத்துக்கள் மாத்திரம் சர்க்காரிடம் இருந்து பண உதவி சீக்கிரத்தில் பெறுகிறதா? ஜில்லா போர்டுகள் வேலைகள் சரிவர நடக்காததற்குக் காரணம் அங்கு போதுமான ஊதியம் சர்க்காரிடமிருந்து கிடைப்பதில்லை. அதனால்தான் நிர்வாகம் நடைபெருவதற்கு பாதகம் ஏற்படுகிறது. சமுதாய நல திட்டத்தின் கீழ் ரோட்டு போடுவதற்கோ மற்ற வசதிகள் செய்து கொள்வதற்கோ சர்க்காரிடமிருந்து பணம் அவ்வப்பொழுது கிடைப்பதில்லை. எப்படி மத்திய அரசாங்கம் மாகாண அரசாங்கத்திற்கு பண உதவி செய்வதற்கு பவர் கொடுக்கப்பட்டிருக்கிறதோ, அதே மாதிரியாக இந்த ஜில்லா போர்டுகளுக்கு பண உதவி செய்வதற்கு மாகாண அரசாங்கத்திற்கு பவர் கொடுக்கப்பட்டிருக்கிறது. வெளிநாட்டு அதிகாரங்கள், உள்நாட்டு அதிகாரங்கள், டிபென்ஸ் முதலியவைகளை மத்ய அரசாங்கம் வைத்துக்கொண்டு மற்றவைகளை மாகாண அரசாங்கத்திற்கு கொடுக்கிறது. ஆதலால் ஒவ்வொன்றிற்கும் மாகாண அரசாங்கம் மத்திய சர்க்காரைக் கேட்கவேண்டிய நிலைமையில் இருக்கிறார்கள். அவர்கள் பணம் அவ்வப்பொழுது கொடுக்காததால், மாகாண சர்க்காருக்கு அந்தந்த திட்டத்தை சரிவர நடத்த முடியவில்லை. அதே மாதிரியாக ஜில்லா போர்டுகளுக்கு மாகாண சர்க்காரும் சரிவர பண உதவி செய்வதில்லை. இதனால் திட்டம் தடைபடுகிறது. இந்த நிலையில் சர்க்கார் ஜில்லா போர்டுகளை எடுத்துவிட்டு பஞ்சாயத்து போர்டுகளை அமைக்கப் போகிறார்கள். இப்பொழுது இருக்கும் அனேக பஞ்சாயத்து யூனியன்கள் சரிவர நடக்கவில்லை. அதற்கு முக்கியமான காரணம் அவைகளுக்கு மாகாண அரசாங்கம் சரிவர பணம் கொடுப்பதில்லை.

இன்னும் தனியாக பஞ்சாயத்து சூபர்வைசர்கள் என்று போட இருக்கிறார்கள். இதையெல்லாம் பரிசீலனை செய்வதற்கு போதுமான டைம் வேறு இல்லை. இதனால் தான் ஜில்லா போர்டுகள் சரிவர நடத்தமுடியாமல் கஷ்டப்பட்டுக்கொணடிருக்கிறது. இந்த வெள்ளை அறிக்கையில் இருப்பது போல் இதை கமிட்டியில் பரிசீலனை செய்யப்போகிறார்கள். இதுவரை ஜில்லா போர்டுகள் அதிகாரங்கள் கொடுக்கவேண்டும் என்று சொல்லிக் கொண்டுவந்திருக்கிறது. இப்போது தீர்மானத்தின்படி பஞ்சாயத்துக்கள், யூனியன் ஆப் பஞ்சாயத்துகள் அங்கத்தினர்கள் இருக்கிறார்கள். இந்த பஞ்சாயத்து இல்லாத இடங்களில், இப்போது இருக்கும் ஜில்லா போர்டு அங்கத்தினர்களைசேர்த்து **Divisional municipality**-யாக நடத்துவதற்கு ஒப்புக்கொள்ளத் தயாராய் இருக்கவில்லை. இப்பொழுது இருக்கும் ஜில்லா போர்டுகளை இன்னும் மூன்று வருஷம் வேண்டுமானாலும் நீடித்துவிட்டு அவர்கள் நடத்துவதற்கு நியாயம் இல்லை. பஞ்சாயத்து யூனியன்கள் முக்கியமாக சட்டசபை அங்கத்தினர்கள், பாராளும் மன்ற அங்கத்தினர்கள் சேர்த்துக்கொண்டு 33 அட்வைசரி போர்டை ஏற்படுத்தி ஏன் நடத்தக்கூடாது என்பதுதான் என் அபிப்பிராயம்.

25-வது பக்கத்தில் வெள்ளை அறிக்கையில் குறிப்பிட்டிருப்பதுபோல் ஒரு கமிட்டியைப் போட்டு சர்க்கார் பஞ்சாயத்து யூனியன்களை நடத்த இருக்கிறார்கள். அவர்கள் பஞ்சாயத்து போர்டுகளுக்கு பணத்தை பிரித்துக்கொடுக்கும் விஷயத்தில் சரிவர கணக்கு வைத்துக்கொள்ள முடியாது. அதற்காக யூனியன் பஞ்சாயத்துக்களை வைத்துக்கொள்ளவேண்டும். இந்த யூனியன் பஞ்சாயத்துக்களில் சில தாலுக்காக்களை வைத்து பணத்தை பங்கிட்டுக் கொடுப்பார்கள். இதற்கு வேண்டிய போகவர செலவுகளையெல்லாம் கொடுக்க வேண்டும்.

தவிர இந்த யூனியன் ஆப் பஞ்சாயத்து கணக்குகளை எல்லாம் யார் பரிசீலிக்கப்போகிறார்கள்? அந்த அதிகாரத்தை "எக்ஸாமினர் ஆப் லோகல் பண்ட் அகௌண்ட்ஸ்" அவர்களிடம் கொடுக்கப் போகிறார்களா என்பதைப் பற்றி யோசிக்க வேண்டும். நல்ல முறையில் ஆடிட் நடத்தாவிட்டால் கணக்குகளை சரிவர வைக்கமாட்டார்கள். அதனால் ஏகப்பட்ட கோளாறுகள் வரும். முக்கியமாக நேற்று 4-ம் தேதி 'ஹிந்து' பத்திரிகையில் படித்தேன், லக்னோவில் செய்யப்பட்டிருக்கும் ஏற்பாட்டைப் பற்றி. அங்கு என்ன ஏற்பாடு செய்திருக்கிறார்கள் என்றால் டிஸ்ட்ரிக்ட் போர்ட் அட்மினிஸ்ட்ரேஷனுக்குப் பதில் என்ன வைக்க வேண்டுமென்று யோசித்து வருகிறார்கள். பிளானிங் கமிஷனின் அதிகாரத்தை ஜில்லா போர்டுக்கு கொடுக்க உத்தேசித்து வருகிறோம். ஜில்லா போர்டிற்குப் பதில் டிஸ்ட்ரிக்ட் கௌன்சில் என்று ஏற்படப்போகும் கௌன்ஸிலுக்கு பஞ்சாயத்து மூலம், இன்டயரக்ட் எலெக்ஷன் மூலம் அங்கத்தினர்களைக் கொண்டுவர உத்தேசித்திருக்கிறோம் என்று சொல்கிறார்கள். அப்படி தாற்காலிகமாக செய்வதைப் பற்றி சர்க்கார் யோசிக்கலாம். ஆனால் எந்த காரணத்தைக்கொண்டும் இப்பொழுதிருக்கும் ஜில்லா போர்ட் அங்கத்தினர்களை அதில் கொண்டுவரக் கூடாதென்பது எனது தாழ்மையான அபிப்பிராயம். யூனியன் ஆப் பஞ்சாயத்தில் ஆறு வைஸ் சேர்மென், அதில் ஐந்து பேர் ஒப்புக்கொண்டால்தான் மீட்டிங் நடக்கும். இல்லாவிட்டால் நடக்காது. தவிர இந்த யூனியன் ஆப் பஞ்சாயத்து கூடுவது வருஷத்திற்கு இரண்டு முறையாகும். இப்படியிருந்தால் எப்படி நிர்வாகம் நன்கு நடைபெறும். மாதந்தோறும் அவர்கள் கூடவேண்டும். பஞ்சாயத்து கோரிக்கைகளை நன்கு ஆலோசித்து அவைகள் நல்ல முறையில் நடக்க வேண்டும் என்பதைப் பற்றித் தான் சொல்ல விரும்புகிறேன். தாற்காலிகமாக ஜில்லா போர்டின் ஆயுளை ஒரு வருடத்திற்கு நீடித்து வைத்திருக்கிறார்கள், சர்க்கார். இந்த யூனியன் ஆப் பஞ்சாயத்து எப்படி வேலை செய்யப்போகிறது? மதுரையில் இப்பொழுது ஆரம்பித்திருக்கிறார்கள். பிளாக் ஏரியாவிலும் ஆரம்பிக்கப் போகிறார்கள். இந்த யூனியன் ஆப் பஞ்சாயத்ஸ் இருக்கும் இடங்களில் அது எப்படி வேலை செய்கிறது, பிளாக் டெவலப்மெண்ட் இல்லாத பிராந்தியங்களில் அது எப்படி வேலை செய்யப் போகிறது என்பதைப் பார்ப்பதற்கு உடனடியாக தேர்தல் நடத்தி ப்ளாக் டெவலப்மெண்ட் இல்லாத ஏரியாவில் அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுத்து ஜில்லா போர்ட்களை பழையபடி ஏற்படுத்தி, இந்த ஜில்லா போர்ட் அந்த பிராந்தியத்தில் எப்படி வேலை செய்கிறது, ப்ளாக் டெவலப்மெண்ட் ஏரியாவில் எப்படி வேலை நடைபெறுகிறது என்பதை ஒப்பிட்டுப் பார்க்கலாம். அந்த யோசனையையும் இப்பொழுது சொல்ல விரும்புகிறேன். தவிர, பஞ்சாயத்து போர்ட்களைப் பற்றி சொல்லும்போது அவைகளுக்கு போதுமான அதிகாரம் கொடுக்க வேண்டும். பவர் கொடுப்பதின் காரணமாக தேர்தலை ஐந்து வருஷத்திற்கு ஒரு தடவை வைப்பதாக சர்க்கார் சொல்கிறார்கள். ஆனால் என்னைப் பொறுத்த வரையில், எலெக்ஷன் மூன்று வருஷத்திற்கு ஒரு முறை இருந்தால் தான் நல்லது என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். அடுத்தபடி, பஞ்சாயத் போர்டு பிரசிடெண்ட் தேர்தலைப்பற்றி பல அங்கத்தினர்கள் பல விதமாகச் சொன்னார்கள். மெம்பர்கள்தான் பிரசிடென்டைத் தேர்ந்தெடுக்கவேண்டுமென்று சொன்னார்கள். ஊரார் சேர்ந்து அவரைத் தேர்ந்தெடுக்கக் கூடாது என்பது அவர்களுடைய அபிப்பிராயம். ஊரார் சேர்ந்து எடுக்க வேண்டும் என்று அநேகம்பேர் சொன்னார்கள். ஜனநாயக முறைப்படி தலைவரைத் தேர்ந்தெடுப்பதின் காரணமாக தலைவர் தேர்ந்தெடுக்கப்பட்டவுடனே அங்கத்தினர்கள் எல்லோரையும் அவர்கள் நிராகரிப்பார்கள். சரிவர ஒவ்வொரு இடங்களையும் போய்ப் பார்ப்பதில்லை. அங்கத்தினர்களின் குறைகளை நிறைவேற்றுவதில்லை என்ற ஒரு புகார் இருக்கிறது. தவிர தலைவர் பேரில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வர முடியாது, என்றெல்லாம் இருக்கிறது. ஆனால் இப்பொழுது எல்லாம் மாற்றப்பட இருக்கிறது. என்னைப் பொறுத்தமட்டில் தலைவர் மெம்பர்களால் தேர்ந்தெடுக்கப்படுவது தான் ஒழுங்கானமுறை. அம்மாதிரி செய்தால் அங்கத்தினர்கள் அவர்களின் குறைகளை தலைவரிடம் சொல்லமுடியும். அதன் காரணமாக தலைவர் அவர்கள் அவர்களுக்குண்டான பொறுப்பை ஏற்றுக்கொண்டு நன்கு பணியாற்ற முடியும். அடுத்தபடியாக, முனிசிபாலிடிகளைப் பொறுத்தமட்டில், மூன்று வருடங்களுக்கு ஒரு முறை கண்டிப்பாக தேர்தல் வைக்க வேண்டும் என்பது எனது தாழ்மையான அபிப்பிராயம். சேர்மனுக்கு "கண்கரண்ட் பவர்ஸ்" கொடுக்கப் போவதாக போட்டிருக்கிறார்கள். அப்படிப் போடுவதால் ஒருவருக்கொருவர் தகராறு வருமா என்பதைப்பற்றி சர்க்கார் யோசிக்க வேண்டும். அப்படி தகராறு வராத முறையில் சேர்மனுக்கு அதிகம் பவர் கொடுக்க வேண்டும். அப்படிக் கொடுப்பதை சர்க்கார் தீர யோசித்து செய்ய வேண்டும். அப்படி வருமானால் ஸ்டாபிற்குள்ள பனிஷ்மெண்ட் போன்ற விவகாரங்களில் கமிஷனருக்கும் சேர்மனுக்கும் இடையே அதிகத் தகராறு வரும் என்பதைப்பற்றி நான் சொல்ல வேண்டிய அவசியமில்லை. தவிர, இந்த 1958-ம் வருடக் கடைசியில் முனிசிபல் தேர்தலை எப்படியும் நடத்தியாக வேண்டும். ஐந்து வருஷம் என்று வைக்கக்கூடாது. அப்படி ஐந்து வருஷம் என்று வைப்பதானாலும் அந்த வருஷக் கடைசியில் தேர்தல் கண்டிப்பாக நடத்த வேண்டும் என்பது எனது தாழ்மையான கோரிக்கை. எந்தக் காரணம் கொண்டும் மூன்று வருஷத்திற்கு மேல் அவைகளை ஒத்தி வைக்கக் கூடாது. சென்னை கார்ப்பரேஷன் பற்றி இப்பொழுது அநேக வித திருத்தங்கள் எல்லாம் வந்திருக்கிறது. ஆல்டர்மென் போன்றவைகள் எல்லாம் எடுத்து விடப்பட்டிருக்கிறது. அதைப்பற்றி எனக்கு ரொம்ப சந்தோஷம். நான் அதை வரவேற்கிறேன். நூறு அங்கத்தினர்களாக போட்டிருக்கிறார்கள். அதையும் நான் வரவேற்கிறேன். அதனால் நிறைய அங்கத்தினர்கள் பங்கெடுத்துக்கொள்ள வசதியிருக்கிறது. ஆனால் இப்பொழுது ஸர்கிள் போர்டாக போட்டு அதற்கு அப்பீல் பவர் கொடுத்திருக்கிறார்கள். அதிலும் கார்ப்பரேஷன் உத்தியோகஸ்தர்களில் பலரை சர்க்கார் பிரொவின்ஷியலைஸ் (Provincialise) பண்ண ஏற்பாடு செய்யவேண்டும். மற்ற ஜில்லாக்களில் இருந்து வரக்கூடியது, இங்கிருந்து போகக்கூடியது என்று இன்டக்ரேஷன் ஆப் ஸர்வீஸ் செய்திருக்கிறார்கள். அதை வரவேற்கிறேன். கார்ப்பரேஷன் கண்டிப்பாக மாதத்திற்கு ஒரு தடவை கூடவேண்டும். இந்த அப்பீல் கமிட்டியில் ஒரு குற்றம் இருக்கிறது. அதாவது, ஒரு கிளார்க் கார்ப்பரேஷன் ஆபீஸில் ஒரு பேப்பரை டிலே செய்வதினால் இன்கிரிமெண்ட் ஸ்டாப்பேஜ் அல்லது ரிப்ரிமாண்ட் செய்தால் அவைகள் அப்பீல் கமிட்டிக்குப் போவதில்லை. ஆனால் டிபால்கேஷன் போன்ற பெரிய குற்றங்கள் நடந்தால் அது கமிட்டிக்குப் போய் தள்ளிவிடப்படுவதாகக் கேள்விப்பட்டேன். அது தவறு. ஆகவே, இப்படிப்பட்ட மாறுதல்களைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த வெள்ளை அறிக்கையின் மீதுள்ள விவாதம் முடிவடையப்போகிறது. இந்த சபை கமிட்டி செய்ய வேண்டிய திருத்தங்களைச் செய்து ஒரு நல்ல மசோதாவை கூடிய சீக்கிரம் சமர்ப்பித்து அதன்மேல் பேசுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, இந்த மட்டில் நான் என்னுடைய அபிப்பிராயங்களைச் சொன்னேன். சர்க்கார் இதை யெல்லாம் ஆலோசித்து வேண்டியது செய்வார்கள் என்று நினைத்துக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.





*THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த சபையின் முன் வந்திருக்கும் வெள்ளை அறிக்கையின் மீது நேற்றும் இன்றும் கனம் அங்கத்தினர்கள் பலரும் தங்களுடைய கருத்துக்களையும் சிலர் விசேஷமாக தங்கள் ஆலோசனைகளையும் எடுத்துக்கூறினதற்காக எனது நன்றியை தெரிவித்துக்

கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். விவாதத்தின்போது சிலர் இந்த
1 p.m. அறிக்கையை ஆதரித்தும் சிலர் எதிர்த்தும் பேசினார்கள். தலைவரை தேர்ந்தெடுக்கக்கூடிய விஷயத்தைப்பற்றி பலர் பலவிதமான கருத்துக்களை கூறினார்கள். கனம் நிதி அமைச்சர் அவர்கள் இதற்கு கூற வேண்டிய கருத்துக்களை நல்ல முறையிலும் தெளிவான முறையிலும் இந்த சபையின் முன்பாக விளக்கமாக எடுத்துக் கூறினதற்காக அவர்களுக்கும் எனது நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். அவ்வாறு அவர்கள் கூறினதால் அதில் எனக்கு பேச வேண்டிய நிர்ப்பந்தம் இல்லாமல் இருக்கிறது என்று நம்புகிறேன். இது தவிர சில விஷயங்களுக்கு சிலர் விளக்கம் கேட்டதற்கு சில விளக்கங்களை கூற விரும்புகிறேன். தலைவரை தேர்ந்தெடுக்கும் விஷயத்தில் சென்னை கிராம பஞ்சாயத்து மசோதாவில் கண்டுள்ளதின்படி தலைவருக்கும் அங்குள்ள அங்கத்தினர்களுக்கும் ஒரு ஒற்றுமை ஏற்படுவதற்கும், அவர்களுக்கு உதவி செய்வதற்கு வசதியாக இருக்கும் என்று கருதிதான் அங்கத்தினர்கள் அவ்வளவு பேரும் சேர்ந்து தேர்ந்தெடுக்க வேண்டும் என்றும், அவ்விதம் தேர்ந்தெடுக்கப்படுவதன் மூலம் ஒரு குறையும் இருக்காது என்று நம்புகிறேன். தலைவருக்கும் அங்கத்தினர்களுக்கும் பரஸ்பரம் ஒற்றுமையோடு நடப்பதற்கு ஏதுவாக இருக்கும் என்றும் தெரிவித்துக்கொள்கிறேன். அடுத்தபடியாக பஞ்சாயத்து தேர்தல்களில் கையை தூக்கி வோட்டு அளிக்கும் முறையைப்பற்றி தெரிவித்தார்கள். அது நல்ல முறை அல்ல என்பதைப்பற்றி பலர் பேசினார்கள். இந்த விஷயத்தைப்பற்றி முக்கியமாக பரிசீலிக்க வேண்டும் என்றும் அவ்விதம் நன்றாக பரிசீலித்து ஒரு முடிவுக்கு வரவேண்டும் என்று இப்போது ஒரு ஏற்பாடு கொண்டுவரப்பட்டிருக்கிறது. ஆகவே, இதைப்பற்றி நன்றாக பரிசீலிக்கப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். இப்போதும் முதல் தர **(Class I)** பஞ்சாயத்துகளில் ரகசிய முறையில்தான் வோட்டுகள் எடுக்கப்பட்டு வருகிறது. இப்போது இரண்டாம்தர **(Class II)** பஞ்சாயத்துகளில்தான் கையை தூக்கி வோட்டு போடக்கூடிய முறை இருந்து வ்ருகிறது. திரும்பவும் ஆலோசித்து இதற்கு ஒரு நல்ல முடிவை எடுக்கலாம் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். இந்த விஷயத்தில் நன்றாக ஆலோசித்து முடிவு செய்ய சட்டசபை கமிட்டி இருப்பதால் அந்த கமிட்டியில் இதை ஆலோசித்து நல்ல முடிவு வரும் என்று நாம் எதிர்பார்க்கலாம். இந்த கமிட்டி இப்போது வந்திருக்கும் சென்னை ராஜ்ய கிராம பஞ்சாயத்து மசோதாவை நன்கு பரிசீலிக்கும் என்பதை உங்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன். இப்போது ஒரு கிராமத்திற்கு மேற்பட்டிருக்கும் கிராமங்களுக்கு கிராம பஞ்சாயத்து முறை ஏற்பட வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இந்த விவாதத்தில் நான் இன்னும் கூற விரும்புவது என்னவென்றால்: இதைப்பற்றி இன்னும் நமக்கு ஆலோசிப்பதற்கு அவகாசம் இருக்கிறது என்பதுதான். சிலர் இதில் விளக்கமாக கூறப்படவில்லை என்று சொன்னார்கள். போதுமான அளவு சில விஷயங்களைப்பற்றி எழுதப்படவில்லை என்று கூறினார்கள். நான் எண்ணுவது கூடிய வரையிலும் இப்போது வெள்ளை அறிக்கையில் விரிவாக எழுதப்பட்டிருக்கிறது. இதில் இன்னும் கூடுதல் விளக்கம் வேண்டுமானால் இந்த மசோதாவை கமிட்டி பரிசீலிக்கும் பொழுது ஒழுங்கான முறைகளை வகுக்கும். அதன் பின்னாலும் இந்த மசோதா உங்கள் அபிப்பிராயங்களுக்காக இந்த சபை முன்வரும். அப்போது இதற்கு ஒரு முடிவை காணலாம் என்று நான் கருதுகிறேன். அடுத்தபடியாக பஞ்சாயத்து ஆபீஸர்களைப்பற்றியும் அவர்களது குறைகளைப் பற்றியும் பலர் கூறினார்கள். அதிலும் நான் சில இடங்களில் வித்தியாசமான முறை இருந்து வருவதை பார்த்தேன். நான் சில இடங்களில் வித்தியாசமான முறையில் கூறினதாக கூறினார்கள். என்னை பொறுத்த வரையில் பஞ்சாயத்து ஆபீஸர்களாக இருந்தாலும் சரி, பஞ்சாயத்து அங்கத்தினர்களாக இருந்தாலும் சரி, ஸ்தல ஸ்தாபனத்தை பொறுத்த வரையில் எல்லோருக்கும் ஒரே விதத்தில் சேவை செய்ய கடமைப்பட்டிருக்கிறேன். நான் இருக்கின்ற நிலைமையைதான் எடுத்து கூறுகிறேன். அதிலும் ஒருவர் **"No officer knows what his duties are"** என்று சொல்வதும், **"The ineffectiveness of Panchayats in various places**





**is owing to young officers there"** என்று சொல்வதும் நான் ஏற்றுக் கொள்ள மறுக்கிறேன். ஆனால் பொதுவாக இளைஞர்களாக இருப்பவர்கள் பஞ்சாயத்து ஆபீஸர்களாக இருப்பதற்கு தகுதியில்லை என்று கூறிவிட முடியாது. சில சந்தர்ப்பங்களில் தகுதியற்ற நிலைமை இருக்கலாம், இல்லை என்று நான் அறவே சொல்லவில்லை. இவ்வாறு வயதானவர்களிலும் சிலர் தகுதியற்றவர்களாக இருக்கலாம். ஆகவே இளைஞர்களாக இருப்பது தகுதியற்றது என்று சொல்வது ஏற்றுக்கொள்ள தக்கது அல்ல, என்றுதான் நான் கூற ஆசைப்படுகிறேன். அடுத்ததாக விளாத்திக்குளம் பஞ்சாயத்து போர்டில் ஏற்பட்ட தகராறு சம்பந்தமாக அந்த பிரஸிடென்டின் பேரில் நடவடிக்கை எடுத்திருக்கிறது. அதற்காக வேண்டிய ஏற்பாடு ஐ.எல்.பி. வழியாகவும் பின்னால் சர்க்காரிலிருந்தும் தகுந்த நடவடிக்கை எடுத்திருப்பதாக எனக்கு தகவல் கிடைத்திருக்கிறது. இப்போது புதிய பஞ்சாயத்து முறையில் "பிளாக் லெவல்" ரீதியில் பஞ்சாயத்து யூனியன் என்ற முறையில் வகுக்கப்பட்டிருக்கிறது. இதனால் அதிகாரங்களும் கூடுதலாக கொடுக்கப்பட்டிருக்கிறது. நன்றாக செயல்படுவதற்கும் ஒழுங்கான முறையில் பஞ்சாயத்துகள் நடப்பதற்கும் இது உதவியாக இருக்கும் என்று நம்புகிறேன். இம்மாதிரியான பஞ்சாயத்து யூனியன் புதிய முறையல்ல. ஏற்கனவே 1950-ம் ஆண்டிலுள்ள பஞ்சாயத்து சட்டத்தில் 39-வது பிரிவில் கண்டுள்ளபடி சில பஞ்சாயத்துகள் சேர்ந்து கூட்டு கமிட்டியாக ஏற்படுத்தலாம் என்றிருக்கிறது. இந்த கமிட்டிகளை யூனியன் என்றே சொல்லலாம். இந்த பிளாக்கில், யூனியனில் 60, 70 மெம்பர்கள் இருக்கவேண்டியிருக்கிறது. இந்த முறையைப்பற்றியும் இந்த கூட்டு கமிட்டிகளைப்பற்றியும், அது சம்பந்தப்பட்ட விஷயங்களைப்பற்றி கனம் நிதி அமைச்சர் அவர்கள் விரிவாக எடுத்துக் கூறினார்கள். இந்த மாதிரி 60, 70 மெம்பர்களை கொண்ட ஒரு யூனியன் அமைப்பதை விட சிறிது சுருக்கமாக இருக்க வேண்டும் என்று நினைத்துத்தான் இப்போது இந்த ஏற்பாடு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. வட்டங்கள் சம்பந்தப்பட்ட ஒன்றுக்கு மேற்பட்ட விவகாரங்களை இந்த பஞ்சாயத்து யூனியன் கவனிக்கும். இதில் கனம் அங்கத்தினர் பலர், இதற்காக இன்னும் பல உத்தியோகஸ்தர்களை இதற்கு நியமிக்க வேண்டியிருக்கும் என்றும், அந்த உத்தியோகஸ்தர்கள் தங்களின் வேலை இன்னது என்று தெரியாமல் பொதுமக்களை கவ்னிக்க மாட்டார்கள் என்றும் குறிப்பிட்டார்கள். இந்த சந்தர்ப்பத்தில் நான் சொல்ல விரும்புவது என்னவென்றால் பஞ்சாயத்து யூனியனுக்கு என்று தனியாக புதிய உத்தியோகஸ்தர்களை நியமிக்கவேண்டும் என்று உத்தேசம் கிடையாது. தற்காலம் தேசீய விஸ்தரிப்பு திட்டத்தின்கீழ் இருக்கும் உத்தியோகஸ்தர்களை கொண்டு இந்த வேலைகளை நடத்துவதாகத்தான் உத்தேசம். அந்த உத்தியோகஸ்தர்களில் யாராய் இருந்தாலும் சரி, எந்த உத்தியோகஸ்தர்கள் சரியாக வேலை செய்யவில்லை என்று தகவல் தெரிவித்தால் அந்த உத்தியோகஸ்தர் பேரில் நடவடிக்கை எடுக்க அரசாங்கம் பின் வாங்காது என்று தெரிவித்துக்கொள்கிறேன். இப்போது கனம் அங்கத்தினர்களை வடக்கு மதுரை பஞ்சாயத்து யூனியன் மெம்மோராண்டம் 41, 43-வது பாராக்களை பார்க்கும்படி கேட்டுக்கொள்கிறேன். சில அதிகாரங்களை அதிகாரிகளுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. பஞ்சாயத்து அபிவிருத்திக்கு இப்போது இருக்கும் பஞ்சாயத்து அங்கத்தினர்களுக்கும் பஞ்சாயத்து பிரதிநிதிகளுக்கும் சில அதிகாரங்கள் கொடுப்பதற்காக கிராம பஞ்சாயத்தின் அதிகாரம் உத்தியோக பற்றற்றவர்களிடம் இருக்கவேண்டும் என்றும் ரெவின்யூ இலாகாவினோடு சேர்க்கப்படக்கூடாது என்று அபிப்பிராயப்பட்டார்கள். அதேபோன்றுதான் ஜில்லா அபிவிருத்தி சங்கங்களில் உத்தியோகப் பற்றற்றவர்கள்தான் தலைமை வகிக்கவேண்டும் என்று சொன்னார்கள். இதைப்பற்றியும் இந்த வெள்ளை அறிக்கையைப்பற்றி பரிசீலனை செய்யும் கமிட்டி இந்த அபிப்பிராயத்தையும் கவனித்து தக்க ஆலோசனை கூறும் என்று நம்புகிறேன்.

பஞ்சாயத்து போர்டு அங்கத்தினர்களின் பதவிக் காலம் மூன்று வருஷங்களாக இருக்கவேண்டும் என்று சில கனம் அங்கத்தினர்களும், ஐந்து வருஷங்களாக இருக்கவேண்டுமென்று சில கனம் அங்கத்தினர்களும் கூறினார்கள். இதுவும் கமிட்டியில் பரிசீலனை செய்யப்படும்.

[Srimathi Lourdhammal Simon] [5th November 1957

சென்னைக் கார்ப்பொரேஷனைப்பற்றி வெள்ளை அறிக்கையில் கண்டுள்ள அம்சங்களை சில கனம் அங்கத்தினர்கள் ஆதரித்து பேசினார்கள். கனம் அங்கத்தினர் ஸ்ரீ சி. ஆர். ராமசாமி அவர்கள், ஸ்தல ஸ்தாபன சீர்திருத்தங்களைச் செய்வதன் காரணமாக 1958-ம் வருஷம் நடக்க விருக்கும் கார்ப்பொரேஷன் தேர்தலை ஒத்திவைக்கக்கூடாது என்று கூறினார்கள். தேர்தலை ஒத்தி வைக்காமலிருப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்கும் என்று கூறிக்கொள்கிறேன்.

ரூபாய் 30-க்கு அதிகமாகச் சம்பளம் பெறும் முனிசிபல் சிப்பந்திகளின் ஸ்தானங்களைப் பூர்த்தி செய்வதற்கான அதிகாரத்தை முனிசிபல் தலைவருக்குக் கொடுக்க வேண்டுமென்று சில கனம் அங்கத்தினர்கள் கூறினார்கள். வெள்ளை அறிக்கையில் IV-வது பிரிவில் (8)-வது item-ல், ஸ்தல ஸ்தாபன சிப்பந்திகளை ஜில்லா ரீதியாகவோ பிராந்திய ரீதியாகவோ ராஜ்ய ரீதியாகவோ நியமிக்கும் பொறுப்பை ஒரு தனிப்பட்ட அதிகாரியிடமோ அல்லது தனிப்பட்ட அதிகாரிகளிடமோ விடுவதற்கு வகைசெய்யும் முறையில் விதிகளைத் திருத்தலாம் என்று சிபாரிசு செய்யப்பட்டிருக்கிறது. இது சம்பந்தமாகவும் இப்போது அமைக்கப்பட்டிருக்கும் கமிட்டி பரிசீலனை செய்து தக்க சிபாரிசைக் கொடுக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

ப்ளாக் டெவலப்மெண்ட் ஆபீசர், ஜில்லா பஞ்சாயத்து ஆபீசராக இருக்கக்கூடாது என்றும், அவர் காரியதரிசியாக இருக்கவேண்டும் என்றும் சில கனம் அங்கத்தினர்கள் கூறினார்கள். பஞ்சாயத்து யூனியன்கள் முனிசிபாலிடிகளைப்போல் இருக்கும். முனிசிபாலிடிகளில் அன்றாட வேலைகளை கவனிப்பதற்கு எஞ்சினியர்களும் மற்ற உத்தியோகஸ்தர்களும் இருக்கிறார்கள். இதே மாதிரி, அன்றாட வேலைகளை கவனிக்கும் பொறுப்பை ப்ளாக் டெவலப்மெண்ட் ஆபீசருக்கும் (ஜில்லா பஞ்சாயத்து ஆபீசருக்கும்) மற்ற உத்தியோகஸ்தர்களுக்கும் கொடுத்து, பஞ்சாயத்து நிர்வாகத்தை நடத்துவது நலம் என்று கருதுகிறேன்.

உயர்தரப் பாடசாலைகளைப்பற்றிப் பேசப்பட்டது. உயர்தரப் பாடசாலைகள் சம்பந்தமாக வேண்டிய கமிட்டிகள்பற்றி நாளை இங்கே விவாதம் நடத்தப்படும். அந்த சமயத்தில் அவைகளைப்பற்றி ஆராய்வது நல்லது என்று நினைக்கிறேன்.

புனரமைக்கும் நிலையில் பஞ்சாயத்துக்களுக்குள் நீர் நிலைகள் சரியாக அமைக்கப்படவேண்டுமென்று சில கனம் அங்கத்தினர்கள் கேட்டுக்கொண்டனர். பஞ்சாயத்து "ஏரியா" வை பற்றி பல கனம் அங்கத்தினர்கள் பேசினார்கள். இது ஒரு முக்கியமான விஷயம். பஞ்சாயத்துக்களை அமைக்கும் முறைக்கும், பஞ்சாயத்துக்களை நிர்ணயிக்கும் பிரதேச அளவிற்கும் தகுந்த முக்யத்துவம் கொடுக்கவேண்டுமென்று நான் நினைக்கிறேன்.

இன்று நான் ஒரு பொதுவான நிலையில் பதிலளித்திருக்கிறேன். காரணம், விஷயங்கள் இன்னும் பரிசீலனை செய்யவேண்டிய நிலையில் இருக்கின்றன. அதுவுமின்றி, வெள்ளை அறிக்கையை இன்னுமொரு முறை சபைக்குக் கொண்டுவந்து கனம் அங்கத்தினர்களின் ஆலோசனைகளையும் திருத்தங்களையும் பெற்றுக்கொள்ளவேண்டியிருக்கிறது. கனம் அங்கத்தினர்கள் சொன்ன யோசனைகளை இப்போது அமைக்கப்பட்டிருக்கும் கமிட்டி நன்கு பரிசீலனை செய்து அரசாங்கத்திற்குத் தக்க சிபாரிசுகளைச் செய்யும் என்று நம்புகிறேன். நல்ல யோசனைகள் கொடுத்ததற்காக கனம் அங்கத்தினர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

DEPUTY SPEAKER : I shall now put the amendment of Sri N. R. Thiagarajan to vote. The question is—

" *Add* the following at the end :—

' and on such consideration this Assembly resolves to constitute a Committee consisting of the following Members to



5th November 1957] [Deputy Speaker]

assist the Minister for Local Administration in finalizing the schemes for the reform of Local Administration in the State of Madras :

1 Sri B. Bhaktavatsalu Naidu, (Deputy Speaker).
2 ,, S. Ramaswami Naidu.
3 Dr. Srimathi T. S. Soundaram Ramachandran.
4 Sri K. S. Subramania Gounder.
5 ,, C. Muthiah Pillai.
6 ,, A. A. Rasheed.
7 ,, K. Vinayakam.
8 ,, A. Nesamony.
9 ,, K. N. Palaniswamy Gounder.
10 ,, C. R. Ramaswami.
11 ,, V. K. Ramaswamy Mudaliyar.
12 ,, V. K. Kothandaraman.
13 ,, P. U. Shanmugam.
14 ,, K. Sattanatha Karayaar.
15 ,, S. Pakkirisami Pillai.
16 ,, P. S. Chinnadurai.' "

The amendment was put and carried.

DEPUTY SPEAKER : I shall now put the motion as amended, to the vote of the House. The question is :—

" that the White Paper on the Reforms of Local Administration in Madras State including the Madras City Corporation be taken into consideration and on such consideration this Assembly resolves to constitute a Committee consisting of the following Members to assist the Minister for Local Adiministration in finalising the Schemes for the Reform of Local Administration in the State of Madras :—

1 Sri B. Bakthakatsalu Naidu (Deputy Speaker).
2 ,, S. Ramaswami Naidu.
3 Dr. Srimathi Soundaram Ramachandran.
4 Sri K. S. Subramania Gounder.
5 ,, C. Muthiah Pillai.
6 ,, A. A. Rasheed.
7 ,, K. Vinayakam.
8 ,, A. Nesamony.
9 ,, K. N. Palaniswamy Gounder.
10 ,, C. R. Ramaswami.

11 Sri V. K. Ramaswamy Mudaliyar.
12 ,, V. K. Kothandaraman.
13 ,, P. U. Shanmugam.
14 ,, K. Sattanatha Karayalar.
15 ,, S. Pakkirisami Pillai.
16 ,, P. S. Chinnadurai."

The motion, as amended, was put and carried.

DEPUTY SPEAKER: I adjourn the House to meet again at 9 a.m. tomorrow.

The House then adjourned to meet at 9 a.m. on Wednesday, the 6th November 1957.

IV.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

A

64. *Notification issued with G.O. No. 1072, Local Administration, dated 12th July 1957, amending rule 30 of the rules relating to assessment and collection of taxes by panchayats framed under the Madras Village Panchayats Act, 1950.*

65. *Notification issued with G.O. Ms. No. 2181, Home, dated 17th August 1957, exempting from payment of the tax-leviable under the Madras Motor Vehicles Taxation Act 1931, the three mobile vans bearing serial numbers, 3A-57-T-109296, 3A-57-T-110082 and 3A-57-T-109601 and imported for the use of the Consulate-General and for activities which are of a purely educational and cultural nature [Laid on the table of the House under section 11 (2) of the Madras Motor Vehicles Taxation Act, 1931 (Madras Act III of 1931)].*

66. *Notification issued with G.O. No. 1128, Local Administration, dated 26th July 1957, amending rule 7 (4) of the rules relating to provision of burial and burning grounds by Panchayats framed under the Madras Village Panchayat Act, 1950.*

67. *Notification issued with G.O. Ms. No. 3566, Revenue, dated 9th September 1957, exempting from the tax payable under the Madras General Sales Tax Act, 1939, for a period of five years from 1st April 1955, the sales by the Pulp Making Units, Vennar Bank, Tanjore, of the handmade paper manufactured by the Unit. [Laid on the table of the House under section 19 (6) of the Madras General Sales Tax Act, 1939.]*

B

18. *A comprehensive note on the progress of work regarding—Reorganization of Secondary Education.*

19. *Speech by the Hon. Minister for Finance and Education—While moving the White Paper on Education in the Assembly on 5th April 1956 and in the Council on 6th April 1956.*

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

## Wednesday, 6th November 1957.

The House met in the Assembly Chamber, Fort St. George, at nine of the clock, Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

### I.—ANNOUNCEMENTS BY THE HON. SPEAKER RE.

(1) SCOPE OF SUPPLEMENTARIES.

MR. SPEAKER: Hon. Members are aware that yesterday there was some discussion on the scope of interpellations and the hon. Member, Sri Vinayakam, differed from my ruling in respect of that matter and quoted Sir Winston Churchill . . .

SRI K. VINAYAKAM: Sir, I accepted your ruling.

MR. SPEAKER: I shall now read from May's Parliamentary Practice which is supposed to be the Bible or the Gita or whatever you may call it, for all Speakers and which is also supposed to be the last word on 'Interpellations'. This is what it says—

'The purpose of a question is to obtain information or press for action, and it should not be in effect a short speech or limited to giving information, or framed so as to suggest its own answer or convey a particular point of view.'

'Besides these general rules, the following types of question are out of order:—

(1) Seeking an expression of opinion or containing arguments, expressions of opinion, inferences, or imputations;

(2) Containing epithets or rhetorical, controversial, ironical or offensive expressions . . .'

Our own rules regarding questions say—

Questions are admissible if they satisfy the following conditions:—

(1) it must be permissible under the Constitution and the rules;

(2) it must not publish any name or statement not strictly necessary to make the question intelligible;

(3) if a question contains a statement, the member asking it must make himself responsible for the accuracy of the statement;

(4) it must not contain extracts from newspapers;

(5) it must not contain arguments, inferences, ironical expressions or defamatory statements;

(6) it must not ask for an expression of opinion or the solution of an abstract legal question or of a hypothetical proposition;

(7) it must not refer to the character or conduct of any person except in his official or public capacity;

[Mr. Speaker] [6th November 1957

(8) it must not relate to a private or purely parochial grievance;

(9) it must not be of excessive length;

(10) it must not anticipate a question of which notice has already been given . . .'

I am only mentioning this rule so that hon. Members may not make the question-hour an opportunity for making a statement or expressing an opinion. There must be questions alone during question-hour. Even in the British Parliament only six supplementary questions are allowed for the main question. Here hon. Members rather want me to allow 25 supplementary questions on each main question. The other day in regard to the question put to the Hon. Minister for Works, even after allowing 20 minutes for that particular question, 20 Members were rising in their seats. Therefore, my only request is that members will not make a statement during question-hour. Also, they should follow certain rules and should not question the Speaker if he makes a suggestion.

MR. SPEAKER: Questions and answers.

SRI K. VINAYAKAM: On a point of personal explanation, Sir. I want to submit very humbly to the Chair that I never meant any offence to the ruling of the Chair. But I believe that it has been brought to the notice of the Hon. Speaker that the book written by one of the experienced clerks of the Parliament, Mr. Henry Howard . . .

MR. SPEAKER: This is not a personal explanation.

SRI K. VINAYAKAM: It is added to it.

MR. SPEAKER: I am sorry, let the hon. Member resume his seat. One of the things that hon. Members should know is that when the Speaker rises to speak, hon. Members should resume their seat. Therefore, when I give my ruling, I do it in good faith and hon. Members should accept it and should not question it. Now I would request the hon. Member Sri Vinayakam not to drag in the name of any Clerk of the Parliament or for that matter any individual however great he may be in the world in this matter.

SRI K. VINAYAKAM: I never meant any disrespect to the Chair. I have not finished my personal explanation. It is written that Sir Winston Churchill put a question . . .

MR. SPEAKER: Let the hon. Member please sit down.

## II.—QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS.

### *Air Service between Madras and Madurai*

* 91 *Q.*—SRI S. B. ADITYAN: Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether there is any proposal to start Air Service between Madras and Madurai; and



6th November 1957]

(*b*) whether the Government have been asked by the Centre to share the cost of running the service?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) No, Sir.

(*b*) Does not arise.

SRI S. B. ADITYAN: Will the Government consider the running of an internal Air Service, either State-owned or private-owned, to places like Madurai and Salem?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Sir, the Government themselves cannot consider the question of running an internal service. It is risky and this Government cannot afford to do it. It is for the Indian Air Lines Corporation to organize it or give help to those who come forward to do it.

SRI A. A. RASHEED: Is the Hon. Minister aware that there is an ærodrome at Vellore which is not used?

MR. SPEAKER: What has this question to do with the main question?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: There are ever so many ærodromes which have not been used.

SRI K. ANBAZHAGAN: தலைவர் அவர்களே, மதுரை நகரம் தமிழ் நாட்டிலே சென்னைக்கு அடுத்தபடி மிக அதிக மக்களைக் கொண்ட நகரமா யிருப்பதால், அந்த நகரத்திற்கு வான ஊர்திமூலம் தொடர்பு ஏற்படுத்துவது மிக அவசியமானது. அப்படி ஏற்படாமல் இருப்பது மிகவும் வருந்தத் தக்கது. தமிழ் நாட்டைச் சேந்த ஒரு பெரிய முதலாளி மதுரை நகரத்திற்கு வான ஊர்திமூலம் தொடர்பு ஏற்படுத்துவதற்காக முன்வந்து மத்திய அரசாங்கத்திற்கு விண்ணப்பித்துக் கொண்டிருந்தும் அவருக்கு அதற்கான அனுமதி அளிக்கப்படவில்லை யென்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: மதுரைக்கு முன்பு ஏர் ஸர்விஸ் இருந்தது. அது கட்டவில்லையென்று நின்றுவிட்டது. மதுரை நகரம் மிகச் சிறந்த நகரம்தான். அதற்கு ஏர் ஸர்விஸ் இல்லாததால் அதன் சிறப்புக் குறையாது. ஒரு நாள் இராத்திரிப் புறப்பட்டு மறு நாள் காலை ரயில் மூலமாக சௌகரியமாகப்போய்விடலாம். தனி முதலாளிகள் யாராவது முன் வந்து சர்க்கார் உதவி வேண்டுமென்று சொல்லியிருப்பது எனக்குத் தெரியாது. அப்படி யாராவது முன் வந்தால் இந்த அரசாங்கம்கூட உதவி அளிப்பதற்குச் சிபாரிசு செய்யும்.

SRI S. NAGARAJA MONIGAR: Are the Government taking steps to run an internal air service by suggesting to the Central Government and if so, may I know the progress in that direction?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: யோசனை செய்வது "டேகிங் ஸ்டெப்ஸ்" அல்ல. மத்திய சர்க்கார், இண்டியன் ஏர் லைன்ஸ் கார்ப்பொரேஷன், ஸிவில் ஏவியேஷன் டிபார்ட்மெண்ட் இவர்கள்தான் இவைகளை கவனிக்கவேண்டும்.

SRI N. K. PALANISAMI: May I know whether this Government has recommended to the Central Government the opening of an air service to any place other than Madurai in this State?

[6th November 1957

THE HON. SRI M. BHAKTAVATSALAM: There has been some correspondence between the Ministry of Civil Aviation and our Chief Minister and in that connection, it has been suggested that the Indian Air Lines Corporation might consider the opening of certain new routes connecting the cities in this State.

SRI M. P. SUBRAMANIAM: ஸார், இந்தியாவிலுள்ள எல்லா ராஜ்யங்களிலுமுள்ள ஜில்லா தலைநகரங்களையும் ஏர் ஸர்விஸ் மூலம் தொடர்பு ஏற்படுத்துவதற்கு இண்டியன் ஏர் லைன்ஸ் ஒரு திட்டம் வகுத்திருப்பது அமைச்சருக்குத் தெரியுமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: அம் மாதிரி என்னிடம் ஒன்றும் தகவல் இல்லை.

*Nationalisation of Educational Institutions*

* 92 Q.—SRI N. K. PALANISAMI: Will the Hon. the Minister for Finance be pleased to state whether there is any proposal to nationalise education in the State?

THE HON. SRI C. SUBRAMANIAM: There is no proposal, Sir.

SRI N. K. PALANISAMI: Sir, the Government are spending . . .

MR. SPEAKER: The hon. Member should put it in the form of a question.

SRI N. K. PALANISAMI: As the Government are spending a lot of money by way of loans and grants to private schools, why not they take steps to nationalise education?

THE HON. SRI C. SUBRAMANIAM: I have already stated that it is not necessary. We are just going to discuss the entire question of education in the course of the day when the hon. Member could put forward his views.

9-10 a.m. SRI K. VINAYAKAM: Sir, Are the Government aware of the fact that private agencies are doing really very good work by conducting private schools, in some cases much better than Government agencies and if so, will the Government restrain any idea of nationalizing educational institutions, if they have any?

MR. SPEAKER: 'Much better than Government agencies' is an insinuation.

THE HON. SRI C. SUBRAMANIAM: I have already stated that there is no proposal for nationalization. If any hon. Member has any point to put forward in this respect, he may do so during the debate to-day.

SRI S. NAGARAJA MONIGAR: If individuals run schools, is it not co-operation with the Government in the development of education and does not the Government welcome such co-operation?



6th November 1957]

THE HON. SRI C. SUBRAMANIAM: All these come under the objections which you raised with regard to the nature of supplementary questions.

*Borewell pumps*

* 93 Q.—MR. SPEAKER: As the hon. Member who gave notice of the question, namely, Sri K. R. Viswanathan is not in his seat, the answer together with the question will be printed in the Official Proceedings?

* 93 Q.—SRI K. R. VISWANATHAN: Will the Hon. the Minister for Revenue be pleased to state the arrangements made for the maintenance of the borewell pumps used for drinking water purposes in panchayat and non-panchayat villages?

THE HON. SRI M. A. MANICKAVELU: The maintenance of Rural Water-supply borewells and pumps has been transferred to the Collectors with effect from 1st May 1957.

MR. SPEAKER: Questions 94 and 95 will be taken up together.

*Sales tax*

* 94 Q.—SRI K. SATTANATHA KARAYALAR: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether the Government have received the report of Dr. Lokanathan on "Sales tax"; and

(b) if so, whether a copy of it will be placed on the table of the House?

THE HON. SRI R. VENKATARAMAN: (a) No, Sir.

(b) Does not arise at present.

* 95 Q.—SRI K. SATTANATHA KARAYALAR: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether the Government have imposed on any article or articles single-point sales tax instead of multi-point sales tax during the past three months; and

(b) if so, what those articles are?

THE HON. SRI R. VENKATARAMAN: (a) No, Sir.

(b) Does not arise.

SRI K. SATTANATHA KARAYALAR: அந்த அறிக்கை எப்பொழுது சமர்ப்பிக்கப்படும் என்பதை சர்க்கார் சொல்ல முடியுமா?

THE HON. SRI R. VENKATARAMAN: டாக்டர் லோகநாதன் அவர்கள் என்றைக்கு அறிக்கையை அனுப்புகிருரோ அன்றிலிருந்து சமர்ப்பிக்கப்பட்டதாகக் கருதப்படும்.

SRI K. SATTANATHA KARAYALAR: அதற்கு எதாவது கால வரம்பு இல்லையா என்பதைக் கேட்கிறேன்.

[6th November 1957

THE HON. SRI R. VENKATARAMAN : காலவரையரை எதுவும் குறிப்பிடப்படவில்லை.

SRI N. K. PALANISAMI : Addressing a public meeting at Tiruchirappalli, Dr. Lokanathan said that he would recommend to the Government to fix the turnover at about Rs. 26,000 to Rs. 30,000 to give relief to small traders. Will the Government implement that recommendation?

THE HON. SRI R. VENKATARAMAN : I said that we had not yet received the report of Dr. Lokanathan. These are matters which will form part of his recommendations, and when his recommendations are received, they will be examined.

SRIMATHI KAMALAMBUJA AMMAL : டாக்டர் லோகநாதன் அவர்கள் தன்னுடைய அறிக்கையை அனுப்பும்போது கருணைக்கிழங்குக்கு விதிவிலக்கு அளித்து தன்னுடைய அறிக்கையை சமர்ப்பிப்பாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : எனக்கு ஜோஸ்யம் தெரியாது. அதில் நம்பிக்கையுமில்லை.

SRI K. ANBAZHAGAN : விற்பனை வரி சட்டத்தினைத் திருத்துவது மூலமாக தனித்தனி பல பொருள்களுக்கு ஒருமுனை விற்பனை வரி விதிக்கப்படவேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கிற நேரத்தில், பிறமாகாணங்களிலிருந்து இறக்குமதியாகி புகையிலை, சிகரெட் போன்ற பல்வேறு பொருள்கள் நம் மாகாணத்திற்கு வந்து விற்பனையாகிறது. அவைகளின் பேரில் சர்க்காருடைய கண்காணிப்பு சரியாக இல்லாமல் இருப்பதால், விற்பனைவரி வசூலாகவில்லை என்று மக்களால் பேசப்பட்டு வருகிறது. அதைக் கண்காணித்து, அவைகளுக்கு விற்பனைவரி விதித்து அதை வசூலிக்க சர்க்கார் ஏதாகிலும் திட்டமிட்டிருக்கிறார்களா ?

THE HON. SRI R. VENKATARAMAN : விற்பனை வரியைக் கொடுக்காமல் ஏமாற்றுவதற்கு பலமுயற்சிகள் நடந்துகொண்டிருக்கின்றன. பிற மாகாணங்களிலிருந்து மட்டும் அல்லாமல் புதுவையிலிருந்தும் பொருள்களைக் கொண்டுவந்து இங்கே விற்கப்படுகின்றன. அவைகளையெல்லாம் சர்க்கார் கவனித்துக்கொண்டுதானிருக்கிறார்கள். வேண்டிய நடவடிக்கைகளையும் இந்த சர்க்கார் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அதையொட்டி மத்திய சர்க்கார் அவர்களும் ஒரு சென்ட்ரல் எக்சைஸ் ட்யூட்டிகூட போடவேண்டும் என்று யோசனை செய்துகொண்டிருக்கிறார்கள். சமீபத்தில் டில்லியில் நடந்த நிதி மந்திரிகளின் மகாநாட்டில்கூட இதைப்பற்றி பரிசீலிக்கப்பட்டது.

SRI K. VINAYAKAM : In the terms of reference given to Dr. Lokanathan, did not the Government set a time limit for the submission of the report ? If not, will they at least now take steps to hasten the issue and request him to submit the report ?

THE HON. SRI R. VENKATARAMAN : The Government did not set any time limit. The Government expect the report to be submitted as early as possible.

SRI M. P. SUBRAMANIAM : டாக்டர் லோகநாதன் அவர்களுடைய அறிக்கை வருவதற்கு முன்னதாகவே அறிக்கையில் என்ன வருகிறது என்றும் எந்தந்த பொருள்களுக்கு விதிவிலக்கு அளிக்கப்படும் என்ற செய்தியும் பத்திரிகைகளில் வந்தது சர்க்காருக்குத் தெரியுமா, அப்படி விதிவிலக்கு அளிக்கப்படும் என்று எப்படி முடிவுக்கு வந்தார்கள் என்பதையும் சர்க்கார் அறியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.



6th November 1957]

THE HON. SRI R. VENKATARAMAN : டாக்டர் லோகநாதன் அவர்கள் பலவிதமான யோசனைகளையெல்லாம் மக்களிடம் சொன்னார். அப்படிச் சொல்வதன் மூலம் மக்களுடைய யோசனைகளைத் தெரிந்து கொள்ளலாம் என்று கேட்டிருக்கலாம். அவைகளைத் தெரிந்துகொண்டு தன்னுடைய சிபாரிசுகளை செய்யலாம் என்று தன்னுடைய அபிப்பிராயத்தைத் தெரிவித்திருக்கலாம். பலவிதமான யோசனைகளை மக்களுக்கு எடுத்துச் சொல்வதன் மூலம் பலவிதமான அபிப்பிராயங்களைத்தெரிந்து கொள்ளலாம் என்று தன்னுடைய யோசனைகளை தெரிவித்திருக்கலாம். அதற்காகத்தான் சொல்லியிருப்பார் என்று நான் நினைக்கிறேன்.

SRI S. NAGARAJA MONIGAR : பிற மாகாணத்திலிருந்து வரும் பொருள்களுக்கு விற்பனைவரி கொடுக்காமல் தவிர்ப்பதற்கு சில விதிகளை சர்க்கார் ஏற்படுத்தப்போவதாகச் சொன்னார்கள். அம்மாதிரி இம் மாகாணத்திலிருந்து வெளிமாகாணங்களுக்குப் போகக்கூடிய பொருள்களுக்கு ஏதாவது ஒரு உத்தரவாதம் இருக்கிறதா ?

THE HON. SRI R. VENKATARAMAN : அவர் கேள்வி எனக்கு புரியவில்லை.

MR. SPEAKER : எனக்கும் புரியவில்லை. மறுபடியும் கேளுங்கள்.

SRI S. NAGARAJA MONIGAR : சற்று முன் கனம் அன்பழகன் கேட்ட கேள்வி மூலம் பிறமாகாணங்களிலிருந்துவரும் புகையிலைபோன்ற பொருள்களுக்கு எல்லாம் விற்பனைவரி கொடுக்காமல் பிறமாகாண வியாபாரிகள் தப்பித்துக்கொள்ளுகிறார்கள் என்றார். அதற்கு அமைச்சர் ஏதோ நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளப்போவதாகச் சொன்னார். அதே போல் நம்மாகாணத்திலிருந்து நமது வியாபாரிகளால் அனுப்பப்படும் பொருள்களுக்கு அப்படிப்பட்ட நடவடிக்கையை எடுத்துக்கொள்வாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : நம்மாகாணத்தில் விற்பனை நடந்தால் அதற்கு விற்பனைவரி விதிக்கப்படுகிறது. அதனால் எந்த விதமான நஷ்டமும் ஏற்படவில்லை. வெளி மாகாணங்களிலிருந்து புதுவைக்குப் போய் அங்கிருந்து சரக்கு வருகிறது. அவைகள் விற்பனை வரியிலிருந்து தப்பித்துக்கொள்ளுகின்றன. அவைகளுக்கு விதிக்கவேண்டிய வரி நமக்கு நஷ்டமாகிறது. அவைகளைத் தடுப்பதற்காகத்தான் முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறோம்.

SRI A. A. RASHEED : Will the Government consider leather as an article for single-point sales tax ?

MR. SPEAKER : The hon. Member is asking a question which does not come within the purview of the main question. If the Hon. Minister is prepared to answer, I have no objection.

THE HON. SRI R. VENKATARAMAN : That is a matter under examination by Dr. Lokanathan.

SRI S. LAZAR : டாக்டர் லோகநாதன் அவர்கள் தன்னுடைய விசாரணையை முடித்துவிட்டார் என்றும் இப்பொழுது தன்னுடைய ரிப்போர்ட்டை தயார் செய்துகொண்டிருக்கிறார் என்று சொல்வதும் உண்மைதானா ?

THE HON. SRI R. VENKATARAMAN : I said that the report of Dr. Lokanathan had not yet been received by the Government. I do not know what he is doing now.

SRI K. ANBAZHAGAN : தலைவர் அவர்களே, இந்த விற்பனைவரி நம்முடைய மாகாணத்தைச் சாராது பிற மாகாணத்தைச் சார்ந்தது, சில குறிப்பிட்ட வடநாட்டு முதலாளிகளால் இரண்டு மூன்று

[6th November 1957

வருஷங்களாக இந்த விற்பனைவரி அரசாங்கத்திற்குத் தரப்படாமல் இருக்கிறது. அதை வசூலிக்க இந்த அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : இது விஷயமாக ஏதாவது தனியான விவரங்கள் இருந்தால் அதை கனம் அங்கத்தினர் எழுதி அனுப்பும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். பொதுவாக யாரோ சிலர் கொடுக்கவில்லை என்ற காரணத்தினால் ஒரு பகுதியைக் குற்றம் சாட்டிச் சொல்வது சரியாக இருக்காது.

SRI A. VEDARATHNAM PILLAI : டாக்டர் லோகநாதன் அவர்களிடமிருந்து ஏதாவது இன்டரிம் ரிப்போர்ட் வந்திருக்கிறதா ?

THE HON. SRI. R. VENKATARAMAN : No report has been received.

*Allegations against the President of the Vilathikulam Panchayat Board*

* 96 Q.—SRI V. SUBBIAH (on behalf of Sri V. K. Kothandaraman) : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) whether some of the Panchayat Board Members of the Vilathikulam Panchayat Board in Kovilpatti taluk, Tirunelveli district, complained against the President of the said panchayat board alleging certain malpractices and misappropriation of panchayat funds during the months of May 1956 and January 1957;

(b) whether four members of the panchayat board have resigned their membership of the panchayat board on 5th July 1957;

(c) if answer to (b) is in the affirmative, the reasons for the same; and

(d) if answer to (a) is in the affirmative what action was taken by Government thereon?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : (a) Yes, Sir.

(b) Yes, Sir. The four members of the panchayat sent their resignations to the Inspector of Municipal Councils and Local Boards.

(c) The members expressed their dissatisfaction with the President of the Panchayat and also that their complaints against him have not received due attention.

(d) The complaints contained in the petition were enquired into by the Regional Inspector of Municipal Councils and Local Boards, Southern Range, and suitable action was taken against the President.

SRI K. VINAYAKAM : May I know what the 'suitable action' taken against the defaulting President is?



6th November 1957]

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : I have not enquired as to what exactly the punishment given is. If the hon. Member is particular about knowing it, let him give notice of a separate question and I will answer it.

SRI V. SUBBIAH : ஒரு வருஷ காலமாக அந்த பஞ்சாயத்து உப தலைவர் அவர்களும் பெரும்பான்மையான மெம்பர்களும் அந்த பஞ்சாயத்து தலைவரின் மீது நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும் என்று சொல்லியும் இது வரையிலும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுத்துக்கொண்டதாக தெரியவில்லை. அந்த முறையில் அங்கே மத்திய காலத்தில் எப்படிபட்ட நிர்வாகம் நடைபெறும் என்பதை யோசித்துப் பார்க்கவேண்டும். அதனால் அங்கே மறு தேர்தலுக்கு ஏற்பாடு செய்திருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRIMATHI LOURDAMMAL SIMON : நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கிறது என்றுதான் கூறினேன். நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொல்லவில்லை. நடவடிக்கை எடுத்துத்தான் இருக்கிறது.

SRI M. S. SELVARAJAN : Are there any allegations against the Members who have resigned?

THE HON. SRIMATHI LOURDAMMAL SIMON : அதைப்பற்றி ஒரு தகவலும் இல்லை.

*Midday meals to poor students*

* 97 Q.—SRI P. G. MANICKAM : Will the Hon. the Minister for Finance be pleased to state the amount allotted for 1957–58 for the supply of midday meals to poor students in the Coimbatore district? 9-20 a.m.

THE HON. SRI C. SUBRAMANIAM : The midday meal scheme is under consideration and orders will issue shortly. The total provision made in the current year for the scheme is Rs. 10 lakhs and this has not been broken into districtwar figures.

SRI P. G. MANICKAM : அந்தத் தொகை பிரிக்கப்படும்போது கோயமுத்தூர் ஜில்லாவிலே எத்தனை பகல் உணவு சென்டர்கள் ஏற்படுத்தப் படும் ? எத்தனை பேர்களுக்குப் பகல் போஜனம் அளிக்கப்படும் ?

THE HON. SRI C. SUBRAMANIAM : ஜில்லா வாரியாக என்னிடத்தில் புள்ளி விவரங்கள் இல்லை.

MR. SPEAKER : ஜில்லா வாரியாகப் புள்ளி விவரங்கள் இல்லை என்று கனம் அமைச்சர் அவர்கள் சொல்கிறார்.

SRI N. K. PALANISAMI : When the amount is allotted for midday meals to children, will the Government see that the fund is not allotted from the budget or I mean from the education fund and will it see to get it from the Central Government?

MR. SPEAKER : கனம் அங்கத்தினருடைய கேள்வி தெளிவாக இல்லை. கேள்வியைத் தமிழிலேயே கேட்டு விடுங்கள்.

SRI N. K. PALANISAMI : ஏழை மாணவர்களுக்குப் பகல் உணவு அளிப்பதற்குப் பணம் ஒதுக்கும் காலத்தில், கல்வி இலாகாவுக்காக நாம் எவ்வளவு செலவு செய்கிறோமோ அதிலிருந்து ஒதுக்காமல், மத்திய அரசாங்கத்திடமிருந்து 'கிராண்ட்' வாங்கிச் செலவிட அரசாங்கம் யோசிக்குமா ?

[6th November 1957

THE HON. SRI C. SUBRAMANIAM : எந்தத் தலைப்பின் கீழ் கொடுக்கப்படுகிறது என்பது முக்கியம் அல்ல. பணம் எங்கிருந்து கண்டுபிடிப்பது தான் முக்கியம். அதற்கு வேண்டிய தொகை பத்து லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. கல்வி இலாகா தலைப்பில் இருந்தாலும், சுகாதார இலாகா தலைப்பில் இருந்தாலும் ஒன்றுதான்.

SRI M. C. MUTHUKUMARASWAMY : பகல் உணவுக்கு ஒதுக்கப்பட்ட பணம் ஹரிஜனங்களுக்கென்று ஒதுக்கப்பட்டிருக்கும் "கிராண்ட்"டிலிருந்து ஏதாவது எடுத்துக்கொள்ளப்படுகிறதா ? அல்லது தனியாக ஒதுக்கப்படுகிறதா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : ஹரிஜனங்களுக்கு உணவு அளிப்பதற்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. இரண்டையும் இணைக்கவேண்டும் என்பது சர்க்காருடைய அபிப்பிராயம்.

SRI M. P. SUBRAMANIAM : கேட்கப்பட்டிருக்கும் கேள்வி கோயமுத்தூர் மாவட்டத்தைப் பொறுத்தது. கனம் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட பத்து லட்ச ரூபாய் கோயமுத்தூர் மாவட்டத்திற்குமட்டுமா ? அல்லது ராஜ்யம் முழுவதற்குமா ? அப்படியென்றால் இந்தப் பத்து லட்ச ரூபாய் போதுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : I said ' the total provision made in the current year for the scheme is Rs. 10 lakhs and this has not been broken into district-war figures.' This itself shows that it is for the entire State.

SRI K. SATTANATHA KARAYALAR : ஒதுக்கப்பட்ட தொகையிலே எவ்வளவு இது வரை உபயோகப்படுத்தப்பட்டுள்ளது என்று கனம் அமைச்சர் அவர்கள் சொல்லமுடியுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM: நவம்பர் 1-ந் தேதியிலிருந்து தான் இந்தத் திட்டம் அமுலுக்கு வந்திருக்கிறது. ஆகவே, இதிலே இன்னும் அதிகமாக செலவழிக்கப்படவில்லை.

SRI P. G. MANICKAM ; ஆரம்பக் கல்வியிலே மிகமிகப் பிற்போக்காக இருப்பது கோயமுத்தூர் ஜில்லாதான். அதிலும் குறிப்பாக பவானி தொகுதியிலே உள்ள தாளவாடி, பவானி பிர்க்காக்கள் மிகவும் பிற்போக்காக இருப்பதால், அங்கே இந்தத் திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவர கவர்ன்மெண்டார் ஏதாவது யோசனை செய்துகொண்டிருக்கிறார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இதற்காக ஒரு ஜில்லாவைப் பிற்போக்காக வைக்கவேண்டிய அவசியம் இல்லை. எல்லாப் பகுதிகளிலும் ஏழை மாணவர்கள் இருக்கிறார்கள். அந்த ஏழை மாணவர்களுக்கு மத்தியான உணவு கொடுக்கவேண்டும் என்பதுதான் திட்டம். அதற்காக இப்பொழுது ஆரம்பம் செய்யப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதைப்பற்றியும் கனம் அங்கத்தினர்கள் இப்பொழுது வரஇருக்கிற விவாதத்திலே விரிவாக அபிப்பிராயம் தெரிவிக்கலாம்.

**XI**-வது தலைப்பு இடைக்காலத் திட்டத்தைப்பற்றியது. இதில் தற்போதைய பாடத்திட்டங்களை மாற்றியமைப்பதற்கு காலவரையறை குறிப்பிடப்பட்டிருக்கிறது. கொடுக்கப்படவேண்டிய காலவரையறையில் ஒரு மாறுதல் ஏற்பட்டிருக்கிறது. அதாவது, **1957–58**-ம் வருஷத்திலேயே இந்தப் பாடத் திட்டத்தை ஆரம்பிக்கவேண்டுமென்று தீர்மானித்திருந்தோம். ஆனால் அதற்கான ஏற்பாடுகளைச் செய்துமுடிக்கவில்லை. ஆகையால் **1958–59**-ம் வருஷத்தில்தான் முதல் மாறுதலை ஆரம்பிக்க முடியும். எந்தவிதமான பாடத்திட்டங்கள் கொண்டுவரப்படவிருக்கின்றன என்பதுபற்றி கல்வி இலாகாத் தலைவர் கொடுத்த அறிக்கையின் பிரதிகள் எல்லா கனம் அங்கத்தினர்களுக்கும் வழங்கப்பட்டிருக்கின்றன. **1957–58**-ம் வருஷத்தில் மாறுதலை ஆரம்பிக்கமுடியாத காரணத்தால், **10**-வது வகுப்பில் கொண்டுவரவேண்டிய மாறுதல் ஒரு வருஷம் தள்ளிப் போகிறது. இன்னும் வேறு சில சிறு மாறுதல்களையும் இந்த விஷயத்தில் செய்யவேண்டியிருந்தது. அவைகளைப்பற்றி பின்னர் குறிப்பிடுகிறேன்.

**XII**-வது தலைப்பின்கீழ் "ரெகுலேஷன் ஆப் ஸ்கூல் ஏஜ்"-ஐப் பற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. எந்த வயதில் பிள்ளைகள் பள்ளிக்கூடத்தில் சேரவேண்டும் என்பதைப்பற்றியும் விவாதிக்க வேண்டியிருந்தது. ஸெகண்டரி எஜுகேஷன் கமிட்டியும் வேறு கமிட்டிகளும் பிள்ளைகள், **6** வயது பூர்த்தியானவுடன் **1**-வது வகுப்பில் சேரவேண்டும் என்று சிபாரிசு செய்திருந்தன. இதைப் பரிசீலனை செய்தோம். பெரும்பாலும், நம் ராஜ்யத்தில் **5** வயது பூர்த்தியானவுடன் பிள்ளைகள் பள்ளிக்கூடத்தில் சேருவதைப் பார்க்கிறோம். ஆகையால் **5**-வயது முடிந்தவுடன் பிள்ளைகள்



6th November 1957] [Sri C. Subramaniam]

பள்ளிக்கூடத்தில் சேரலாம் என்று முடிவுசெய்யப்பட்டிருக்கிறது. 6-வயதில் சேரவேண்டுமென்ற சிபாரிசை ஒத்துக்கொள்ளாமல் இவ்வாறு முடிவு செய்திருக்கிறோம்.

அடுத்த பகுதிக்குப் போவதற்கு முன்பு சில விஷயங்களைச் சொல்ல விரும்புகிறேன். புதிய பாடத் திட்டங்களைக் கொண்டுவருவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. அந்த நடவடிக்கைகள் என்ன என்பதுபற்றி கல்வி இலாகாத் தலைவர் அறிக்கை தந்திருக்கிறார். அந்த அறிக்கை அச்சடிக்கப்பட்டு பிரதிகள் கனம் அங்கத்தினர்கள் எல்லோருக்கும் வழங்கப்பட்டிருக்கின்றன. பாடத் திட்டங்களை மாற்றியமைக்கும் விஷயம் மிகவும் முக்கியமானது. **1**-வது வகுப்பிலிருந்து **11**-வது வகுப்பு வரையில் என்ன என்ன பாடத் திட்டங்கள் இருக்கவேண்டும் என்பதைப்பற்றி நன்றாக ஆலோசித்து முடிவுசெய்யவேண்டும். மற்ற விஷயங்களை அமல் நடத்துவதற்கு முன்பு இதை நல்லமுறையில் முடிவு செய்யவேண்டும். பாடத் திட்டங்களைத் தயாரித்து தக்க காலத்தில் அதை அமலுக்குக் கொண்டுவருவதற்கான எல்லா நடவடிக்கைகளையும் எடுக்கவேண்டுமென்று கல்வி இலாகா தலைவருக்கு உத்தரவிடப்பட்டது. அவர் இதற்காக ஒரு **Steering** கமிட்டியையும் **40** உப கமிட்டிகளையும் அமைத்தார். காலேஜ் ப்ரின்சிபல்கள், உயர்தரப் பள்ளிக்கூடத் தலைமை ஆசிரியர்கள், உயர்தரப் பள்ளிக்கூட ஆசிரியர்கள், ஆரம்பப் பள்ளிக்கூடத் தலைமை ஆசிரியர்கள், ஆரம்பப் பள்ளிக்கூட ஆசிரியர்கள், ஆகியவர்களைக்கொண்டு அமைக்கப்பட்ட **40** உப கமிட்டிகளின் அங்கத்தினர்களின் மொத்த எண்ணிக்கை **266** ஆகும். **40** உப கமிட்டிகளின் தலைவர்களைக்கொண்டு **Steering** கமிட்டியை அமைத்து பாடத்திட்டங்களைத் தயாரிப்பதற்கு ஏற்பாடு செய்திருக்கிறார். **40** உப கமிட்டிகளின் தலைவர்கள் (**Steering Committee**) கூடி வகுத்துக்கொடுத்த பாடத் திட்டங்கள் மக்கள் முன்னிலையில், அவர்களுடைய யோசனைகளையும் ஆட்சேபனைகளையும் பெறுவதற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றன. மக்களிடமிருந்து இது சம்பந்தமாக நிறைய அபிப்பிராயங்கள் வந்திருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். **10** வருஷங்களுக்குள் **10**-வது வகுப்புப் படிப்பை முடிக்கக்கூடிய வகையில் பாடத் திட்டங்கள் அமைந்திருக்கின்றன என்று மற்றவர்களும் அபிப்பிராயப்படுகிறார்கள் என்பதை நான் சந்தோஷத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். கல்வி இலாகாத் தலைவருடைய அறிக்கையில் **11**-வது பாராவில் இது குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆகவே நாம் வகுத்திருக்கும் பாடத் திட்டங்கள் நல்ல திட்டங்கள் என்று எல்லோருக்கும் பூரண நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது. நவம்பர் **20**-ம் தேதிக்குள், ஆலோசனைகளும் ஆட்சேபணைகளும் செய்யவேண்டிய மாறுதல்களும் பரிசீலனை செய்யப்பட்ட பிறகு அந்தத் திட்டங்கள் அங்கீகாரம் செய்யப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். அதற்குப் பின்னர், அவைகளுக்கேற்ற புத்தகங்களைத் தயாரிப்பது அடுத்த கட்டமாக இருக்கும். புத்தகங்கள் தயாரிப்பது வேறொரு திட்டம், அதைப்பற்றி பின்னர் பேசுகிறேன்.

ஆரம்பக் கல்வியை எந்த முறையில் விரிவாக்க வேண்டுமென்பதைப் பற்றி **III**-வது பிரிவில் ஆலோசனைகள் சொல்லப்பட்டிருக்கின்றன. அரசியல் சட்டத்தின் **45**-வது பிரிவில் "பத்து வருஷங்களுக்குள், நம் நாட்டிலுள்ள குழந்தைகள் எல்லோருக்கும் **14** வயது வரையில் கட்டாயமாகவும் இலவசமாகவும் கல்வியளிப்பதற்கான திட்டம் நிறைவேற்றப்படவேண்டும்" என்று கண்டிருக்கிறது. முதன் முதலாக இந்தக் கமிட்டி, அரசியல் சட்டத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் காலவரையறைக்குள் இந்தத் திட்டத்தை நிறைவேற்ற முடியுமா என்பதைப்பற்றி ஆலோசனை செய்யவேண்டியிருந்தது. ஆலோசனை செய்த பிறகு, கமிட்டி, புள்ளி விவரங்களுடன், இது முடியாது என்ற முடிவிற்குத்தான் ஏகமனதாக வந்தது. அப்படியானால் வேறு எந்த விதத்தில் இதை நிறைவேற்ற முடியும் என்று ஆலோசிக்க வேண்டியிருந்தது. அப்படி ஆலோசித்த கமிட்டி, "**10** வருஷங்களுக்குள் எல்லாப் பிள்ளைகளுக்கும் கட்டாய இலவசக் கல்வி அளிக்க முடியாது. ஆகையால், **3**-வது ஐந்தாண்டுத் திட்ட முடிவிற்குள், அதாவது **1965–66**க்குள் முதல் **5** வருஷப் பள்ளிப்

[Sri C. Subramaniam] [6th November 1957

படிப்பையாவது எல்லாப் பிள்ளைகளுக்கும் கொடுக்கமுடியுமானால் அதுவே பெரிய விஷயம், அதற்கும் திட்டம்போட்டுச் செயலாற்றினால் தான் முடியும்" என்ற முடிவுக்கு வந்திருக்கிறது. ஆகவே முதல் ஐந்து வருஷப் பள்ளிப் படிப்பையாவது எல்லாப் பிள்ளைகளுக்கும் கொடுப்பதற்கு திட்டம் வகுத்து நிறைவேற்ற வேண்டுமென்று கமிட்டியினர் சொல்லியிருக்கிறார்கள்.

அதற்குப் பிறகு ஐந்து வருஷத்திலிருந்து பத்து வருஷத்திற்குள் பாக்கி இருக்கக்கூடிய மூன்று வருஷ படிப்பு முதல் ஐந்து வருஷம் போக அடுத்த மூன்று வருஷம் வரைக்கும் முடிவு பண்ண ஏற்பாடு செய்ய வேண்டுமென்ற முறையிலே சிபார்சு செய்திருக்கிறார்கள்.

அத்துடன் இது நம்முடைய ராஜ்யத்திற்குமட்டும் இருக்கும் விஷயம் அல்ல. அகில இந்தியாவுக்கும் இந்த விதி பொருந்தும். ஆகவே மற்ற ராஜ்யங்கள் இதைப்பற்றி என்ன நினைக்கின்றன, மத்திய சர்க்காரும் திட்டக் கமிஷனும் என்ன நினைக்கின்றன என்பதை அறிய நம் திட்டத்தை அவர்களுக்கு அனுப்பி இருந்தோம். கமிட்டியின் சிபாரிசுகள் அவர் களுடைய பரிசீலனைக்கு சென்றது. சமீபத்தில் திட்டக் கமிஷனின் பூர்வாங்க ஆலோசனைக் குழுவிலும், பின்னர் கல்வி மந்திரிகள் மகா நாட்டிலும், நாம் செய்திருக்கக்கூடிய சிபாரிசுகள் பரிசீலனை செய்யப்பட்டு நாம் போட்டு இருக்கக்கூடிய திட்டம் நிறைவேற்றக்கூடிய திட்டம் என்று ஒப்புக்கொள்ளப்பட்டது. முக்கியமாக திட்டம் பெயர் அளவிலே இல்லாமல், அமல் நடத்தக்கூடியதாக இருக்கவேண்டும் என்ற அடிப் படையிலே இந்தக் காலவரையரையை ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே 1965–66க்குள் ஐந்து வருஷப் படிப்பு எல்லோருக்கும் கிடைக்க வேண்டும் என்பதைப்பற்றியும் அதற்கு அடுத்த ஐந்து வருஷத்தில் மூன்று வருஷப் படிப்பை எல்லோருக்கும் இலவசமாகக் கிடைக்க முயற்சி செய்ய வேண்டுமென்ற முறையிலே ஒப்புக்கொண்டிருக்கிறோம். 1970-க்குள் பதினான்கு வருஷப் படிப்பு எல்லோருக்கும் இலவசமாகவும் கட்டாயமாகவும் கிடைக்கும் என்ற முறையிலே ஒப்புக்கொண்டிருக்கிறோம். இந்த அடிப்படையிலே இருக்கும் சிபாரிசுகள் மூன்றாவது பிரிவில் கொடுக் கப்பட்டிருக்கிறது.

நம்முடைய குழந்தைகள் எல்லாம் பள்ளிக்கூடத்தில் வந்து சேர வேண்டும் என்ற நிலைமையை ஏற்படுத்த வேண்டுமானால், ஓரளவு அதைக் கட்டாயப்படுத்தித்தான் செய்தாகவேண்டும். இது, கல்வி பயிலுவது நல்லது, ஆகையால் எல்லா பெற்றோர்களும் தங்களுடைய குழந்தைகளை தாங்களாகவே பள்ளிக்கூடங்களுக்கு அனுப்புவார்கள் என்று விட்டு விட்டால் நம்முடைய திட்டம் நிறைவேறாது, நமது லக்ஷியம் நிறைவேறாது என்பதை உணர்ந்து, எவ்வளவு தூரம் கட்டாயப்படுத்தி குழந்தைகள் எல்லோரையும் பள்ளிக்கூடத்திற்கு கொண்டுவரவேண்டுமென்று ஆலோசனை செய்து சிபாரிசுகள் செய்து இருக்கிறார்கள். இதில் முக்கியமாக கவனிக்கவேண்டியது என்னவென்றால் பல குழந்தைகள் முதல் வருஷத்தில் சேருகிறார்கள். இரண்டாவது வருஷத்தில் ஒரு பகுதி குழந்தைகள் போய்விடுகின்றன. மூன்றாவது வருஷத்தில் இன்னும் கொஞ்சம் குழந்தைகள் போய்விடுகிறார்கள். இப்படியாக நான்கு, ஐந்து வருஷம் கழிந்து 'பார்க்கும்போது ஐந்து குழந்தைகள் முதல் வருஷத்தில் சேர்ந்திருந்தால், இரண்டு குழந்தைகள்தான் ஐந்து வருஷப்படிப்பு பூர்த்தி ஆகக்கூடிய நிலையில் படிக்கிறார்கள். பாக்கி மூன்று குழந்தைகள் மத்தியில் பிரிந்து போய்விடுகிறார்கள். இதனால் அவர்களுக்கு ஒரு பிரயோஜனமும் இல்லாமல் போய்விடுகிறது. குறைந்தது ஐந்து வருஷ மாவது படித்தால்தான் சில புத்தகங்களைப் படிப்பதற்கும், எழுது வதற்கும் அவர்களுக்கு வாய்ப்பு கிடைக்கும். ஆகையால் ஐந்து வருஷப் படிப்பை முடிக்காமல் முதலிலேயே அல்லது மத்தியிலேயே பள்ளிக் கூடத்தைவிட்டு நிற்கும் குழந்தைகளுக்கு படிப்பின் மூலமாக ஒரு பிரயோஜனமும் பலனும் கிடைப்பதில்லை என்பதைப்பற்றி கமிட்டி முடிவு செய்திருக்கிறது. அது மிகவும் சரியான முடிவு. ஆகவே இன்றைக்கு இந்த மூன்று குழந்தைகளுக்கு 1, 2, 3 அல்லது 4 வருஷப் படிப்புக்கு செய்த முயற்சிகள், அதற்கு செலவிட்ட நிதி, இவைகள் எல்லாம்



6th November 1957] [Sri C. Subramaniam]

வீணாகிறது என்பதை நாம் பார்க்கிறோம். அப்படி வீணாகாமல் போவதைத் தடுக்க நாம் முதலில் ஏற்பாடு செய்யவேண்டும். கட்டாயம் என்று சொல்லும்போது, முதலிலேயே, அதாவது குழந்தை முதல் வகுப்பில் சேர்ந்தால் அடுத்த எட்டு வருஷம் கட்டாயமாக படிக்கவேண்டுமென்ற கட்டாயம் ஏற்படுத்தலாம் என்ற முறையிலே சிபாரிசு செய்திருக்கிறார்கள். இது மிக முக்கியம். முதலிலேயே குழந்தை பள்ளிக்கூடத்தில் சேராமல் இருந்தால் பரவாயில்லை. சேர்ந்து மத்தியில் விட்டுவிடுவதால் முயற்சி வீணாகிறது, நிதி விரயமாகிறது. இதனால் நாட்டின் முயற்சியும், நாட்டிலே இருக்கக்கூடிய சக்தியும் வீணாகிறது. அதனால் எந்த விதமான பலனும் ஏற்படாமல் போகிறது. "**Avoidance of wastage**" என்ற தலைப்பின் கீழ் இப்படி வீணாகப்போவதை தடுக்கும் முறையிலே, ஐந்து வருஷமும் படித்து, எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் என்ற நிலைமைக்கு அவர்கள் வரும்படி, இப்போது செலவழிக்கப்படும் செலவிலே, அதிகமான குழந் தைகள் தயார் செய்துவிட முடியும் என்பதை உணரவேண்டும் என்ற முறையிலே சிபாரிசுகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

"**Avoidance of inequality**"

அதே மாதிரி அடுத்தபடியாக, என்று வருகிறது. ஒவ்வொரு ஜில்லாவையும் எடுத்துக்கொண்டு பரிசீலனை செய்து பார்த்தால், சில ஜில்லாக்களிலே திருப்திகரமான அளவிற்கும், மற்ற சில ஜில்லாக்களில் மிகவும் மோசமான நிலைமையிலும், ஆரம்பக் கல்வி அபிவிருத்தி இருந்துவருகிறது. இந்த ஆரம்பக் கல்வி விஷயத்தில் திருநெல்வேலி ஜில்லா முதல் இடம் வகிக்கிறது. கன்யாகுமரி முதல் இடம் இப்போது பெருகிறது என்று நினைக்கிறேன். அது திருவாங்கூர்-கொச்சி ராஜ்யத்தில் இருந்து வந்தது. அதைப்பற்றிய சர்ச்சையில் இப்போது நாம் இறங்கவேண்டியது இல்லை. ஆரம்பக் கல்வி விஷயத்தில் திருநெல்வேலி முதலிடம் பெற்றிருக்கிறது. மற்ற ஜில்லாக்கள் அதற்கு பிறகு படிப்படியாக வருகின்றன. கடைசியில் வருகிறது, கோயம்புத்தூர் ஜில்லா, அதற்குப் பின் வருகிறது சேலம். சேலம்தான் கடைசி என்று நினைக்கிறேன். எல்லாப் பகுதிகளையும் இந்த விஷயத்தில் முன்னுக்குக் கொண்டுவர முயற்சி செய்யவேண்டும். அப்படிச் செய்யும்போது சில ஜில்லாக்களில் அதிகமான நிதி செலவழிக்கவேண்டும். தொழில் அபி விருத்தியில் வெவ்வேறு பிராந்தியங்களுக்கு வெவ்வேறு விதமான கவனம் செலுத்துவது போல் கல்வியிலும் பிற்போக்கான ஜில்லாக்களில், மக்களை முன்னுக்கு கொண்டுவர வேண்டுமானால், அவர்களுக்கு முக்யத்வம் கொடுத்து அந்தப் பிரதேசங்களில் அதிகமாக செலவழித்து, முயற்சி செய்தால்தான் அவர்கள் முன்னுக்கு வரமுடியும் என்பதை நாம் உணர வேண்டும். இந்த அடிப்படையிலேதான் மூன்றாவது தலைப்பின்கீழ் சிபாரிசுகள் செய்யப்பட்டிருக்கின்றன. இதை முடிவு செய்யும்போது நன்றாக மனதில் வைத்துக்கொள்ளவேண்டும். திருநெல்வேலி ஜில்லாவில் அதிக பள்ளிக்கூடங்கள் இருப்பதால், சேலம், அல்லது கோயம் புத்தூர் ஜில்லாக்களுக்கு அதிக நிதி ஒதிக்கினால், நிதி மந்திரி இல்லாத பகுதிகளிலே நிதி அதிகம் ஒதுக்கவில்லை என்ற அடிப்படையிலே இந்த பிரச்னையை அணுகினால், அர்த்தம் இல்லாமல் போகும். "**Avoidance of inequality**" என்று சொல்லும்போது என்ன முடிவு செய்கிறோம் என்பதை தெரிந்து முடிவு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏற்றத் தாழ்வுகளை நிவர்த்திக்க வேண்டுமானால், சில பிற்பட்ட பகுதிகளில் அதிக ஆசிரியர்களைப் போடுவதற்கும், அதிக நிதியை செலவு செய் வதற்கும் ஒப்புக்கொண்டுதான் ஆகவேண்டும். ஆகவே பத்து வருஷத்திற் குள்ளாக அதாவது 1965-ம் வருஷத்திற்குள் இந்த லக்ஷியத்தை அதாவது ஐந்து வருஷப் படிப்பையாவது எல்லாப் பிள்ளைகளுக்கும் கிடைக்கச் செய்ய வேண்டுமென்ற முறையில் சில பகுதிகளில் இந்த தீவிர முயற்சி எடுக்க வேண்டுமென்று வலியுறுத்தும் முறையில் இந்த சிபாரிசுகள் செய்யப் பட்டிருக்கின்றன.

"**Limit of Public expenditure**"

அதற்கடுத்தாற்போல் இப்போது பல திட்டங்கள் வகுக்கிறோம். அவைகளை நிறைவேற்றுவதில் ஆகக்கூடிய செலவு என்ன, அந்த செலவுக்கு ஏற்ற வசதி நம்மிடம் இருக்கிறதா என்பதைப்பற்றி மற்ற துறைகள் ஒரு புறம் இருக்கட்டும்,

[Sri C. Subramaniam] [6th November 1957

கல்வித் துறையில் இதுவரையில் ஆலோசனை செய்து பார்த்து அந்த
அடிப்படையிலே முடிவு செய்ததாக யாரும் சொல்லமுடியாது.
திட்டம் உருவாக்கப்படும்போதுகூட இந்தக் கல்வித் துறையைப்பற்றி
ஏற்பட்ட குழப்பங்கள் அங்கத்தினர்களுக்கு ஓர் அளவு ஞாபகம் இருக்கும்.
முதலிலே கல்வித் துறைக்கு 1,100 கோடி ரூபாய் செலவழிக்க வேண்டும்
என்று மத்திய கல்வி இலாகா ஆலோசனை கூறியது. ஆனால் 1,100
கோடி ரூபாய் அதற்கு செலவழிக்க முடியாது என்று சொன்னார்கள்.
பிறகு 800 கோடியாவது இருக்கவேண்டுமென்று சொன்னார்கள். 800
கோடியும் முடியாது என்ற போது அது 600 ஆக குறைந்து கடைசியில்
350 அல்லது 360 கோடி என்ற நிலைக்கு வந்து முடிந்தது. அப்படி
350 கோடியாகக் குறைந்தாலும், இப்போது அவர்கள் முன்னால் 1,100
கோடி செலவிடவேண்டும் என்ற எண்ணத்துடன் போட்ட திட்டங்களை
எந்த விதத்திலும் மாற்றிக்கொள்ளவில்லை. பணத்தை மாத்திரம்
குறைத்தார்கள். இது எப்படி முடியும் என்று யாரும் யோசித்துப்
பார்த்ததாகத் தெரியவில்லை. ஆகையால்தான் சென்ற கல்வி மந்திரிகள்
மகாநாட்டிலே இந்தப் பிரச்னைகளை எல்லாம் நல்ல முறையிலே ஆலோசனை
செய்து பார்த்தோம். திட்டங்களை காலவரையறை செய்து ஒவ்வொரு
வருஷத்திற்கும் திட்டம் போடுவது பிரயோஜனம் இல்லை, பத்து வருஷத்
திற்காவது திட்டம் போட்டால்தான் இப்போது ஆரம்பமாகும் திட்டம்,
மாணவன் முதல் வகுப்பில் இப்போது ஆரம்பித்தால், அவன் படிப்பு
பத்து வருஷத்தில் முடியும் முறையில் திட்டத்தை அமைக்க
முடியும். ஆகவே "**Prospective Planning in education**" என்ற
முறையில் இந்தக் கல்வித் திட்டம் தொகுக்கப்பட்டது என்ற நமது
ஆலோசனையை திட்டக் கமிஷனுக்கும் மத்திய அரசாங்கத்திற்கும் நமது
அரசாங்கத்திலிருந்து சமர்ப்பித்தோம்.

அதைச் செய்வதற்கு கல்வி மந்திரிகள் கூட்டத்தில் ஆலோசனைக்கு
எடுத்துக்கொண்டு, இது ரொம்பவும் முக்கியமான விஷயம், இதை கவனிக்
காமல் விட்டு விட்டோம், இப்போது கவனிக்க வேண்டும் என்பதற்காக
அதை எடுத்துக்கொண்டு நாங்கள் சமர்ப்பித்திருக்கிற அறிக்கையை பரிசீலனை
செய்ய வேண்டும் என்று அவர்கள் உத்தரவுவிட்டார்கள். அடுத்த ஜனவரி
மாதம் மத்ய அரசாங்கத்தில் அது விவாதத்திற்கு வரப்போகிறது. நம்மைப்
பொருத்தவரையில் அதற்கு எவ்வளவு தூரம் செலவு செய்ய முடியும்
என்பதைப்பற்றி ஆலோசனை செய்துபார்த்து முடிவு செய்ய வேண்டிய
அவ்சியம் இருக்கிறது.

நாலாவது தலைப்பின் கீழ் "**Limit of Public expenditure**"
என்ற தலைப்பின் கீழ் எவ்வளவு செலவு செய்ய முடியும் என்கிற
முறையில் எல்லோருக்கும் படிப்புச் சொல்லிக்கொடுக்க வேண்டியது
அவசியமாகிறது. 14-வது வயது வரையில் இலவச படிப்புச்
சொல்லிக்கொடுப்பதாக இருந்தாலும் சரி பத்தாவது வரையில்
இலவசப் படிப்புச் சொல்லிக்கொடுக்க வேண்டும் என்று சொன்னாலும்
சரி "ஆம்" என்று சொல்வதாகத்தான் இருக்கும். ஆனால் அதில்
கவனிக்க வேண்டியது என்னவென்றால் அதனால் ஏற்படும் செலவு என்ன,
அதற்கு எங்கேயிருந்து நிதி வரும் என்பதைப்பற்றி ஆலோசனை செய்ய
முற்பட்டார்கள். அதில் இருக்கக்கூடிய கஷ்டமெல்லாம் கணக்கைப் பார்த்
தால் புலனாகிறது. இந்த செலவு இனங்களை ஆலோசனை செய்ய புக
வேண்டியதாக இருக்கிறது. இது மிகவும் அவசியம் என்று கமிட்டி
கருதி இதை நல்ல முறையில் பரிசீலனை செய்ய வேண்டும் என்று
சிபாரிசு செய்திருக்கிறது. அதையும் இந்த சபையின் முன் சமர்ப்பித்
திருக்கிறேன்.

முக்கியமாக கவனிக்க வேண்டியது, வெள்ளை அறிக்கையில் சில புள்ளி
விவரங்கள் கொடுக்கப்பட்டிருக்கிறது. அப்படி எந்த அளவில் செல
வாகிறது, இனிமேல் 1965–66-ல் எவ்வளவு ஆரம்பக் கல்விக்குச் செலவாகும்
என்பதை ஆலோசிக்கவேண்டும். அதைப் பார்த்து முதல் ஐந்து வகுப்பு
களுக்கு குழந்தை ஒன்றுக்கு மூன்று ரூபாய் செலவாகும் என்று சொல்லப்
பட்டது. இதைத்தான் சில பத்திரிகைகள் தப்பர்த்தம் செய்துகொண்டு
தலை அங்கம் எல்லாம் எழுதியிருந்தார்கள். குழந்தை ஒன்றுக்கு வருஷம்



6th November 1957] [Sri C. Subramaniam]

ஒன்றுக்கு மூன்று ரூபாயில் ஆரம்பப் படிப்பு கொடுக்க முடியாது.
அதை தலை ஒன்றுக்கு 3 ரூபாய் என்று வைத்துக்கொள்ள
வேண்டும். அதற்கு வேண்டிய நிதி வசதி பூராவும் மக்களிடத்திலிருந்து
வரவேண்டியதாக இருக்கிறது. அந்த பளு எப்படி இருக்கும் என்பதற்கும்
கணக்குப் போட வேண்டியதாக இருக்கிறது. தலை ஒன்றுக்கு மூன்று
ரூபாய் வீதம் ஆரம்பப் படிப்புக்கு கொடுக்க வேண்டியதாக இருக்கிறது.
முதல் ஐந்து வருஷப் படிப்புக்கு மூன்று ரூபாய் **வீதம்** வைத்துக்
கொண்டால், இப்பொழுது மூன்று கோடி மக்கள் இருக்கிறார்கள், ஆரம்பப்
படிப்புக்கு ஒன்பது கோடி ரூபாய் வேண்டியதாக இருக்கிறது. அப்படி
ஒன்பது கோடி ரூபாய் அதற்கு என்று ஒதுக்க வேண்டியதாக இருக்கிறது.
அப்படி ஒதுக்கினால்தான் இந்தத் திட்டத்தை நிறைவேற்ற முடியும்.
இதையும் பரிசீலனை செய்து பார்க்க வேண்டியதாக இருக்கிறது. ஆறு
முதல் பதினொன்றாவது வகுப்பு வரைக்கும் இரண்டு ரூபாய் ஒதுக்க
வேண்டியதாக இருக்கிறது. அப்படி 1965–66-க்கு கணக்குப் பார்த்தால்
இப்பொழுது செலவாகக்கூடியது, இனிமேல் செலவாகக்கூடியது, அப்
பொழுது நம்முடைய வாழ்க்கைத்தரம் உயர்ந்திருக்கிறதா என்பதையும்
பார்க்க வேண்டியதாக இருக்கிறது. அப்பொழுதுள்ள வாழ்க்கைத்தரம்
என்ன என்பதையும் கணக்குப் பார்த்து மொத்தம் எவ்வளவு செல
வாகிறது என்பதைக் கணக்குப் பார்க்கவேண்டியதாக இருக்கிறது. இது
கல்லூரிக் கல்வி, தொழில் கல்வி நீங்கலாக. அப்படி ஆரம்பக் கல்விக்கு
மூன்று ரூபாயும் 6 முதல் 11-வது வகுப்பு வரையிலுள்ள படிப்புக்கு
இரண்டு ரூபாயும் என்று கணக்குப் போட்டு திட்டமிட்டு வேலை செய்தால்
நல்ல பலன் அடைய முடியும் என்று சிபார்சு செய்திருக்கிறார்கள்.
அதற்கு வேண்டிய முழு விவரமும் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த
அடிப்படையில் ஒரு முடிவிற்கு வந்து மத்திய அரசாங்கம் சில புள்ளி
விவரங்களையும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் இதையும் ஒப்
புக்கொண்டு மறுபடியும் பரிசீலனை செய்யவேண்டும் என்றும் கூறி
யிருக்கிறார்கள். ஒரு திட்டத்தை வகுக்கும்போது அந்தத் திட்டத்தை
நிறைவேற்றுவதற்கு வேண்டிய நிதி வசதி இருக்கிறதா என்பதையும்
பார்க்கவேண்டும். அப்படிப் பார்த்து அதற்கு வேண்டிய நிதியையும்
ஒதுக்கவேண்டும். நிதி ஒருபுரம் இருக்கட்டும், திட்டத்தைப்பற்றி பேச
லாம் என்று இருக்கக்கூடாது. அது திட்டத்தை நிறைவேற்றுவதற்கு
பயனுடையதாக இருக்காது. ஒவ்வொருவராலும் எவ்வளவு பணம்
கொடுக்க முடியும் என்பதையும் பார்க்கவேண்டும். ஆகவே இந்த
திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்றிருந்தால் குறிப்பாக வருஷம்
ஒன்றிற்கு ஒன்பது கோடி ரூபாய் ஒதுக்கி வைத்து செலவு செய்வதற்கு
தயாராக இருந்தால்தான் இந்த ராஜ்யத்திலுள்ள எல்லா குழந்தை
களுக்கும் ஐந்தாவது வகுப்பு வரையிலும் இலவசப் படிப்பு, கட்டாயப்
படிப்பு சொல்லிக் கொடுக்க முடியும் என்கிற அடிப்படையில் இந்த
திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது.

அடுத்தபடியாக உபாத்தியாயர்களுடைய சம்பளத்தைப்பற்றி கொஞ்சம்
யோசிக்க வேண்டியதாக இருக்கிறது. அதையும் மனதில் வைத்துக்
கொண்டுதான் மூன்று ரூபாய், இரண்டு ரூபாய் கொடுக்கவேண்டும் என்ற
ஒரு முடிவுக்கு வந்திருக்கிறோம். உபாத்தியாயர்களுடைய சம்பளத்தை
யும் கணக்கிட்டுப் பார்க்கும்போது அவர்களுக்கு பத்து ரூபாயாவது சம்ப
ளத்தை உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்தோம்.
இந்த பத்து ரூபாயையும் ஒரேயடியாகக் கொடுக்காமல் ஐந்து வருஷங்
களில் இதை இரண்டு, இரண்டு ரூபாயாக கொடுக்கப்படவேண்டும் என்ற
முடிவுக்கு வரப்பட்டது. அப்படிக் கொடுத்தால்தான் ஐந்து வருஷங்
களில் பத்து ரூபாயைக் கொடுத்ததாக ஆகும். இப்பொழுது கனம்
அங்கத்தினர்களுடைய கவனத்திற்கு ஒரு விஷயத்தைக் கொண்டுவர
விரும்புகிறேன். இப்பொழுது இருக்கக்கூடிய பொருளாதார நெருக்
கடியை உத்தேசித்தும் விலைவாசி உயர்வை உத்தேசித்தும் சில தினங்
களுக்கு முன்னதாக எல்லா உபாத்தியாயர்களுக்கும் பனிரெண்டு ரூபாய்
சம்பளத்தில் உயர்த்திக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறியவேண்டும்.
திட்டத்தில் குறிப்பிட்டதுபோல் இல்லாமல் முதல் வருஷத்திலேயே

அவர்களுக்கு பத்து ரூபாய்க்கு மேல் அதிகப்படியாக இரண்டு ரூபாய் கொடுக்கப்பட்டாய்விட்டது. ஆகவே அதிகமாகவே இப்பொழுது கொடுத்திருக்கிறோம். அதுவும் அந்தத் திட்டத்தைப் பொறுத்ததாக இருக்கிறது. அதனால் இந்த மூன்று ரூபாய் போதுமா என்பதையும் மனதில் கொள்ள வேண்டும். இதையும் கொஞ்சம் புனராலோசனை செய்யவேண்டியதாக இருக்கிறது.

இவைகள் எல்லாவற்றையும் கணக்கிட்டுப் பார்த்தால் நிதியை எந்த அளவில் உயர்த்துவது அவசியம் என்பதை யோசிக்கவேண்டியதாக இருக்கிறது. சர்க்காரிலிருந்து கிடைப்பது போக பாக்கி வருவாய் பொது மக்களிடத்திலிருந்தும் பொது ஸ்தாபனங்களை நடத்துகிறவர்களிடமிருந்தும் கிடைக்கவேண்டியதாக இருக்கிறது. கனம் பழனிசாமி கூட ஒன்று கேட்டார். இன்று கேள்வி நேரத்தில் அதாவது பொது ஸ்தாபனங்களிலிருந்து எடுத்து நடத்தினால் என்ன அல்லது இதை தேசிய மயமாக்கிவிட்டால் என்ன என்று கேட்டார். அதில் சிக்கல்கள் ஒருபுரம் இருக்க அதில் சிறு பகுதியாவது மக்களிடத்திலிருந்து வரவேண்டியதாக இருக்கிறது. அதை கணக்கிட்டுப் பார்த்தால் தலைக்கு ஒரு ரூபாய் வீதம் பொது மக்களிடத்திலிருந்தும் பொது ஸ்தாபனங்களிலிருந்தும், இன்னொரு ரூபாய் ஸ்தல ஸ்தாபனங்களிலிருந்தும் வரவேண்டியதாக இருக்கிறது. இவைகளை வைத்துக்கொண்டுதான் ஆரம்பக் கல்வியை நடத்தவேண்டியதாக இருக்கிறது.

அடுத்தபடியாக ஐந்தாவது ப்ரொவிஷன்படி "**Provision of School Facilities**" என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதன்படி பள்ளிக்கூடங்களை ஆரம்பித்தால் மட்டும் போதாது. அதற்கு வேண்டிய வசதிகளையும் செய்துகொடுக்கவேண்டும். கட்டிட வசதி செய்துகொடுக்க வேண்டும். ஒவ்வொரு பள்ளிக்கூடத்திற்கும் விளையாட்டு மைதானங்கள் வேண்டும். சுகாதார வசதிகள் செய்து கொடுக்கப்படவேண்டும். அதன் மேல் தோட்ட வசதி, சாமான்கள் வசதி, புத்தக வசதி முதலியவைகள் செய்து கொடுக்கப்பட வேண்டியதாக இருக்கிறது. இவைகளைப்பற்றி ஐந்தாவது தலைப்பின் கீழ் சிபார்சு செய்யப்பட்டிருக்கிறது.

ஆறாவது தலைப்பின் கீழ் என்ன சிபாரிசு செய்யப்பட்டிருக்கிறது என்றால் எல்லோரையும் கட்டாயமாக பள்ளிக்கூடத்திற்குக் கொண்டுவரவேண்டும் என்றால் சிலருக்கு கஷ்டமாக இருக்கும். அதை உணர்ந்து ஒரு முடிவுக்கு வரவேண்டியதாக இருக்கிறது. அதை கமிட்டியின் முடிவுக்கு விட்டுவிடவேண்டும். அந்த அதிகாரத்தை அங்குள்ள பஞ்சாயத்துக்கு விட்டு விடப்பட்டிருக்கிறது. யாரால் பள்ளிக்கூடத்திற்கு வர முடியவில்லையோ அவர்களுக்கு விலக்கு அளிப்பதற்கு பஞ்சாயத்துக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது, இந்த ஆறாவது பிரிவின் கீழ். பள்ளிக்கூடத்திற்கு வருவதற்கு வசதி இல்லாதவர்களுக்கு விலக்குக் கொடுக்கவேண்டும். அப்படிப்பட்ட விலக்கு அவசியமா என்பதை அங்குள்ள பஞ்சாயத்து சிபாரிசு செய்யவேண்டும்.

அடுத்ததாக ஏழாவது தலைப்பு. "**Progressive enforcement of Compulsion**". இந்தப் பிரிவின் கீழ் முதல் வருஷத்தில் என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்றும் பின் வருஷங்களில் என்ன நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்படவேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. 8-வது பிரிவின் மூலம் ஒரு பள்ளிக்கூடத்திற்கு என்ன டார்ஜெட் என்பதைப்பற்றி குறிப்பிடப்பட்டிருக்கிறது. இப்படி வைத்து படிப்படியாக ஐந்து வருஷங்களில் ஆரம்பப் படிப்பை முடித்துவிடவேண்டும் என்று ஒரு புள்ளி விவரத்தை எட்டாவது பிரிவில் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த முறையில் ஐந்து வருஷங்களில் ஆயிரத்துக்கு 110 பிள்ளைகள் பள்ளிக்கூடத்திற்கு வரமுடியும் என்று கணக்கப்பட்டிருக்கிறது. இது "**Targets of enrolment and annual output of literate pupils**" என்பதில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

ஒன்பதாவது "**School meals**". பள்ளிக்கூடங்களில் உணவு கொடுக்க வேண்டும் என்று சிபாரிசு செய்யப்பட்டிருக்கிறது. இது ரொம்பவும் முக்கியமானது. இதைப்பற்றி ரொம்பவும் சுலபம் என்று சபையில்





சொல்லிவிடலாம். இப்பொழுது எல்லாக் குழந்தைகளும் கட்டாயமாக பள்ளிக்கூடம் வரவேண்டும் என்று சொல்லிவிட்டோம். சில குடும்பங்களில் சில குழந்தைகள் குடும்பக் காரியங்களைப் பார்த்துக்கொள்வதால் அவர்களால் பள்ளிக்கூடம் வந்து படிக்க முடிவதில்லை. அவர்களுக்கு பள்ளிக்கூடத்திற்கு வந்து படிக்கவேண்டும் என்ற ஆசை இல்லாமல் இல்லை, அவர்களுடைய தாய் தகப்பனுக்கு தங்களுடைய குழந்தைகளை பள்ளிக்கூடத்திறகு அனுப்பி வைத்து படிக்கச் சொல்லவேண்டும் என்று ஆசை இருந்து அவர்கள் குழந்தைகளை அனுப்பாமல் இல்லை. அவர்களுடைய ஏழ்மைதனத்தால் தங்களுடைய குழந்தைகளை பள்ளிக்கூடம் அனுப்பாமல் இருக்கிறார்கள். அந்தக் குடும்பங்களிலெல்லாம் குழந்தைகளை வெளியில் அனுப்பி வைத்து ஏதாகிலும் சம்பாதித்து வரச் சொல்லுகிறார்கள். அதனால் பள்ளிக்கூடங்களுக்கு அனுப்புவதில்லை. அப்படிப்பட்ட குழந்தைகளை நாம் கட்டாயமாக பள்ளிக்கூடத்திற்கு வரவேண்டும் என்று சொல்லிவிட்டால் அந்தக் குழந்தைகளால் வரக்கூடிய வருமானம் இல்லாமல் போய்விடும். அவர்கள் சம்பாதிக்காமல் இருந்தால் அந்தக் குடும்பம் பட்டினி கிடக்க வேண்டியதாக இருக்கும். நாம் ஒரு பக்கம் நல்லது செய்கிறோம் என்று சொல்லிக்கொண்டு கெடுதலைச் செய்ய முற்படக்கூடாது. ஆகவே அப்படிப்பட்ட குழந்தைகள் பட்டினியோடு பள்ளிக்கூடம் வந்து படிக்கச் சொல்லக்கூடாது. அதனால் அவர்களுக்கு ஏதாவது சாப்பாட்டுக்கு வசதி செய்துகொடுக்க வேண்டியதவசியமாக இருக்கிறது. குழந்தைகள் சாப்பிட்டுவிட்டு பள்ளிக்கூடத்தில் வந்து படித்தால்தான் படிப்பு நன்றாக வரும். அவர்களுக்கு நல்லது செய்வதற்குப் பதிலாக கொடுமையை செய்வதற்கு நாம் முன் வரக்கூடாது.

பட்டினியாக இருந்துகொண்டு குழந்தைகள் படிக்க வேண்டுமென்று சொன்னால் படிப்புதான் மூளையிலே ஏறுமா என்று யோசித்துப் பார்க்க வேண்டும். இன்றிருக்கும் நிலைமையில் ஏழைக் குழந்தைகளும் பள்ளிக்கூடத்திற்கு வந்துதான் ஆகவேண்டுமென்று சொன்னால், ஒரு நேரச் சாப்பாடாவது அவர்களுக்குப் போட்டாகவேண்டும். ஏழைக் குழந்தைகளைப் பள்ளிக்கூடத்திற்குக் கொண்டுவந்து சேர்ப்பது எப்படி என்பதை நாம் நன்றாக உணர்ந்து கொள்ளவேண்டும். அதற்கான சிபார்சுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

கேள்வி நேரத்தில்கூட, அதைப்பற்றி ஒரு கேள்வி கேட்கப்பட்டது. இதுவரை எடுத்துக்கொண்டிருக்கும் முயற்சி முழுவதும் தனிப்பட்டவர்கள் எடுத்துக்கொண்டிருக்கும் முயற்சியாகும். கல்வி இலாகா இதற்காகப் பெரு முயற்சி செய்து, இன்றைக்கு 3,000 பள்ளிகளிலே மத்தியான உணவு கொடுப்பதற்கு ஏற்பாடு செய்திருக்கிறது. 66,000 பிள்ளைகளுக்குப் பகல் உணவு கொடுக்கப்படுகிறது. இவைகளெல்லாம் தனிப்பட்டவர்கள் முன்வந்து செய்திருக்கக்கூடிய உதவி என்பதை நாம் பார்க்கவேண்டும். இதை ஏற்பாடு செய்வதற்கு கல்வி இலாகா எடுத்துக்கொண்ட பெரு முயற்சியை நாம் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். கல்வி இலாகா முயற்சி எடுத்துக்கொண்டதுடன், தனிப்பட்டவர்கள் பல பேர் முன்வந்து இந்தக் காரியம் அவசியம் என்பதை உணர்ந்து, இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு உதவி செய்வதையும் நாம் இன்னும் அதிகமாக பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். பல இடங்களில் செல்வம் படைத்தவர்கள், தாங்களே முழுச் செலவையும் போட முன்வந்து இக் காரியத்தைச் செய்திருக்கிறார்கள், ஒன்றிரண்டு இடங்களிலே. அவர்களையும் நாம் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். ஆனால், இதைவிட வரவேற்கத்தக்கது என்னவென்றால், பல இடங்களில் ஏழையாக இருப்பவர்கள், தொழிலாளர்கள் தாங்களே முன்வந்து இந்தத் திட்டத்திற்கு உதவி செய்வதற்காக தினம் காலணா என்று வசூல் செய்து கொடுத்து, இந்தத் திட்டம் நிறைவேறட்டும் என்று பல இடங்களில் முன்வந்திருக்கிறார்கள். ஏழைகள் மத்தியில் கல்வி பெற வேண்டுமென்ற உணர்ச்சி, கல்வியைப் பெறுவதற்கு மாணவர்களுக்கு உதவவேண்டுமென்ற உணர்ச்சி எவ்வளவு தூரம் பரவியிருக்கிறது என்பதை நாம் பார்க்கவேண்டும். ஆகவே, சமுதாயம் முழுவதும் ஒப்புக்கொள்ளக் கூடிய திட்டமாக இது அமைந்திருக்கிறது என்று குறிப்பிடுவதற்காகத்தான் இதைக் குறிப்பிடுகிறேன். தனிப்பட்டவர்களுடைய

[Sri C. Subramaniam] [6th November 1957

முயற்சி மூலமாகவே 3,000 இடங்களில் 66 ஆயிரம் குழந்தைகளுக்கு இன்றைக்கு உணவு கொடுக்கக்கூடிய திட்டம் நடைபெற்று வருகிறது என்று சொன்னால் நாம் ஓரளவு மகிழ்ச்சியுடன் வரவேற்பதற்கும் பாராட்டுவதற்கும் உரியது என்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஆனால், முழுவதுமே தனிப்பட்டவர்களே இந்தத் திட்டத்தை நிறைவேற்றவேண்டுமென்று சொன்னால், நாம் திட்டம் போட்டிருக்கிற அளவுக்கு இந்தத் திட்டத்தை நிறைவேற்ற முடியாது என்ற காரணத்தால் தான், சென்ற வரவு செலவுத் திட்டத்தின் கீழ், குழந்தைகளுக்கு மத்தியான உணவுத் திட்டம் வகுப்பதற்காக, பத்து லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டது. இதுவரையிலும் அந்தத் தொகையை உபயோகப்படுத்தவில்லை. இதைப் பரிசீலனை செய்துபார்த்து, நவம்பர் 1-ந் தேதியிலிருந்து பாதிச் செலவைச் சர்க்கார் ஏற்றுக்கொள்வதாக, ஒரு குறிப்பிட்ட தொகைக்கு அதிகமாகச் செலவு ஆகக் கூடாதென்று வரையறுத்து, அந்த அளவு ஏற்படக்கூடிய பகுதிக்குள் காரியத்தை முடிப்பதாக இந்தத் திட்டம் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. அதற்காக உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. தனிப்பட்டவர்கள் ஏற்படுத்தியிருக்கக்கூடிய இந்த உணவு நிலையங்களுக்கெல்லாம் கமிட்டிகள் நியமித்து ஒரு திட்ட அடிப்படையிலே இதை நிறைவேற்றவேண்டுமென்பதற்காக முயற்சிகள் எடுக்கப்பட்டிருப்பதையும் நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

என்னுடைய விருப்பம்—ஆசை—இதுவரை 66,000 மாணவர்களுக்கு மத்தியான உணவு அளித்திருப்பதை அதிகரித்து இந்த வருஷத்திற்குள்ளாக குறைந்தது ஒரு லட்ச குழந்தைகளுக்கு அளிக்கவேண்டும், அடுத்த வருஷம் 2 லட்சம் குழந்தைகளுக்காவது உணவு அளிக்கக்கூடிய வகையில் இந்த திட்டம் நம்முடைய ராஜ்யத்தில் நிறைவேற்றப்படவேண்டுமென்று நான் விரும்புகிறேன். இதற்கும் ஹரிஜன மாணவர்களுக்கு உணவு அளிக்கும் திட்டத்திற்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை. ஆனால், நான் விரும்புவது—இதைப் பிரித்துவைத்து, ஹரிஜனங்களுக்கு வேறு உணவு அளிக்கும் திட்டம் மற்ற ஏழை மாணவர்களுக்கு வேறு உணவு அளிக்கும் திட்டம் என்று இல்லாது எங்கெங்கே திட்டம் அமுலில் இருக்கிறதோ அங்கு எல்லோருக்கும் ஒன்றாக இந்தத் திட்டம் அமுல் நடத்தப்படவேண்டுமென்று நான் விரும்புகிறேன். அதன் மூலமாக, ஜாதிப் பிரச்னை—அதாவது, மேல் ஜாதி, கீழ் ஜாதி என்று சொல்லப்படுவர்கள் ஒன்றாக உட்கார்ந்து சாப்பிடலாமா என்ற பிரச்னை ஒழியக்கூடும். சிறு குழந்தைப் பருவத்திலேயே அவர்கள் மனம் மாறக்கூடிய முறையிலே எல்லா வகுப்பினரும், எந்த ஜாதியாக இருந்தாலும் நாமெல்லோரும் ஒரு பள்ளிக்கூடத்தைச் சேர்ந்தவர்கள்—ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்—என்ற முறையிலே எல்லோரும் ஒன்றாக உட்கார்ந்து சாப்பிடக்கூடிய நிலைமையை ஏற்படுத்தவேண்டும். அது இப்பொழுது ஏற்பட்டு வருகிறது—இந்த முறையினால்—என்று நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

சில இடங்களில், தாய் தகப்பன்மார்கள் ஹரிஜன சமூகத்துக் குழந்தைகளுடன் தங்கள் குழந்தைகள் சேர்ந்து உட்கார்ந்து சாப்பிடுவதை விரும்பாமலிருந்தார்கள். ஆனால், அவைகளெல்லாம் ஒரு வாரம், இரண்டு வாரங்கள் வரை இருந்தன. அதற்குப் பிற்பாடு அவர்களே பார்த்து, குழந்தைகளுக்குள்ளேயே மாறுபாடு எதற்கு ? ஜாதி வித்தியாசம் என் என்பதை உணர்ந்து, அவர்களுடைய குழந்தைகள் எல்லோரும் சேர்ந்து உட்கார்ந்து சாப்பிடுவதை அனுமதித்திருக்கிறார்கள். இன்றைக்கு இந்தத் திட்டம் நிறைவேற்றப்படுகிற இடங்களிலே ஜாதி வித்தியாசம் இல்லாமல், எல்லோரும் ஒன்று என்ற நிலைமையிலே—சம நிலையிலே உட்கார்ந்து சாப்பிட்டு—அந்த ஒற்றுமை உணர்ச்சி வளரக்கூடிய ஒரு சூழ்நிலை வளர்ந்து வருகிறது என்பதைப் பார்த்து நாம் எல்லோரும் மகிழ்ச்சியுறவேண்டும். இந்த முறையில் ஜாதிப் பிரச்னை தீர்க்கப்படவேண்டும். பெரியவர்களுக்கு திட்டவட்டமான எண்ணங்கள், திட்டவட்டமான பழக்க வழக்கங்கள், திட்டவட்டமான நம்பிக்கைகள்—மூட நம்பிக்கையாக இருந்தாலும் சரி—வளர்ந்துள்ளன. பெரியவர்களை மாற்றவேண்டுமென்று சொன்னால்,



6th November 1957] [Sri C. Subramaniam]

அது மிகவும் மகத்தான காரியம், கஷ்டமான காரியம். ஆனால், சிறு குழந்தைப் பருவத்திலே எந்தவிதமான மனப்பான்மையை வளர்க்கிறோமோ அதுதான் நீடித்து இருக்கும். ஜாதிப் பிரிவினையைத் தடுப்பதற்கு இது ஒரு நல்ல வழியாக நான் கருதுகிறேன். ஆகையால், எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்து சாப்பிடக்கூடிய நிலைமையை நாம் ஏற்படுத்தவேண்டும். அது மட்டுமல்ல.

இன்றைக்கு நம்முடைய குழந்தைகளுடைய தேக ஆரோக்கிய வளர்ச்சிக்கும் நல்ல உணவாக - ஒரு நேர உணவாவது - கொடுப்பதற்கு ஏற்பாடு செய்தால்தான் உடம்பு வளர்ச்சிக்கு நன்மையாக இருக்குமென்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். வெவ்வேறு கோணங்களிலிருந்து நாம் பார்த்தாலுங்கூட, குழந்தைகளைப் பள்ளிக்கூடத்திற்கு வரச் செய்வதற்கு, ஜாதிப் பிரிவினையை ஒழிப்பதற்கு, ஜாதி ஒற்றுமையை வளர்ப்பதற்கு, ஏழைக் குழந்தைகளுடைய உடம்பு வளர்ச்சியை வலுப்படுத்துவதற்கு இவையெல்லாவற்றுக்கும் ஏற்றதாக இத்திட்டம் அமைந்திருக்கிறது. ஆகையால், இதை நல்ல முறையிலே நிறைவேற்றுவதற்கு எல்லோரும் ஒத்துழைக்கவேண்டும். குறிப்பாக கனம் அங்கத்தினர்கள் எல்லோரும் ஒத்துழைப்பதுடன், தங்களுடைய தொகுதியிலே இது சம்பந்தமாக பெரும் அக்கரை எடுத்துக்கொண்டு, இத்திட்டம் நல்ல முறையிலே நிறைவேறுவதற்கு எல்லோரும் பாடுபடுவார்களானால், அதன் மூலமாக நல்ல பலன் கிடைக்கும். இதிலே கட்சி வேறுபாடுகளுக்கு எந்தவிதமான இடமும் கிடையாது. எல்லோரும் சேர்ந்து செய்யக்கூடிய காரியம். இது நல்ல முறையிலே நடைபெறவேண்டும். அப்படி கட்சி வேறுபாடு இல்லாமல் பல இடங்களில் திட்டம் நிறைவேறியிருக்கிறது என்பதை நான் அறிவேன். கனம் திரு. அண்ணாதுரை அவர்கள் ஊரிலேயே கட்சி வேறுபாடு இல்லாமல், எல்லா கட்சிகளும் ஒன்றாகச் சேர்ந்து திட்டம் நிறைவேற்றப்படுவதையும் நான் அறிவேன். அதை மிகவும் வரவேற்கிறேன். அந்த முறையிலே எல்லோரும் இதற்காக பாடுபடுவதற்குக் கடமைப் பட்டிருக்கிறோம். அதற்காகப் பாடுபடவேண்டுமென்றும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

ஆகையால்தான் செக்ஷன் 3-இல், 9-வது சிபார்சாக பள்ளிக் குழந்தைகளுக்கு உணவுத் திட்டம் என்ற வகையில் இதற்கு முக்கிய இடம் கொடுக்கவேண்டியது அவசியமாக இருக்கிறது என்று வலியுறுத்தி, அதற்காக நாம் சர்க்காரிலிருந்து எவ்வளவு பணம் ஒதுக்க முடியும் என்பதைப்பற்றி கணக்குப் போட்டு மூன்று ரூபாயில் 11 அணா இதற்காக ஒதுக்க முடியும் என்ற ஆலோசனையும் அங்கு கூறியிருக்கிறார்கள்.

அதற்கு அடுத்தாற்போல், மாணவர் - உபாத்தியாயர் " ரேஷியோ " வருகிறது. நாம் இந்த அளவுக்குத்தான் செலவு செய்யமுடியும், எல்லாக் குழந்தைகளுக்கும் படிப்பு சொல்லிக்கொடுக்கவேண்டுமென்று சொன்னால், சில முக்கியமான மாறுதல்களைச் செய்யவேண்டியது அவசியமாக இருக்கிறது. சில பிள்ளைகளைமட்டும் வைத்துக்கொண்டு ஒரு ஆசிரியர் சொல்லிக்கொடுப்பது என்றால் திறமையாகச் சொல்லிக்கொடுக்க முடியும் என்று நான் ஒப்புக்கொள்ளத் தயாராயிருக்கிறேன். 20 பேருக்கு ஒரு உபாத்தியாயர் நல்ல முறையில் பாடம் சொல்லிக்கொடுக்கலாம். 20 பேருக்கு ஒரு உபாத்தியாயர் என்று சொன்னால், இந்தக் கணக்குக்குள் அடங்குவது இல்லை. 9 கோடி ரூபாய் போதாமல், 12 அல்லது 13 கோடி ரூபாய் வேண்டியதாக இருக்கும். நமக்கிருக்கும் பணத்தை வைத்துக்கொண்டு திட்டம் நிறைவேறவேண்டுமென்று சொன்னால், சில முக்கியமான முடிவுகள் நாம் எடுத்துக்கொண்டுதான் ஆகவேண்டும். ஒரு உபாத்தியாயருக்கு எத்தனை மாணவர்கள் என்று ஒதுக்குவதைப்பற்றிய ஒரு கஷ்டமான முடிவை அந்தக் கமிட்டி செய்யவேண்டிய நிலைமை ஏற்பட்டது. அந்தக் கமிட்டி எல்லா விஷயங்களையும் பரிசீலனை செய்து பார்த்தது, ஒரு நேரப் பள்ளிக்கூடத் திட்டத்தையும் ஆலோசனை செய்து பார்த்தது. ஒரு நேரப் பள்ளிக்கூடம் என்று சொன்னதும் மக்களிடத்திலே ஒரு எதிர்ப்பு இருக்கிற காரணத்தால் இப்பொழுது செய்திருக்கும் சிபார்சு தவிர்க்க முடியாதது. ஒரு உபாத்தியாயருக்கு 40 மாணவர்கள் என்ற

விகிதத்தில் இருக்கவேண்டுமென்று நினைத்து, அதற்கு 9 கோடி ரூபாய் செலவில் நிறுத்த முடியும் என்ற அடிப்படையிலே முடிவு செய்தார்கள். மற்ற இடங்களிலும் நடக்கக்கூடியதுதான். இப்பொழுது இருக்கக்கூடிய முறையிலே தனிப்பட்டவர்களுடைய பள்ளிக்கூடத்திற்கு 25 பிள்ளைகளுக்கு ஒரு உபாத்தியாயர் என்று வைத்திருக்கிறோம். ஸ்தல-ஸ்தாபனங்கள் நடத்தும் பள்ளிக்கூடத்திற்கு 35 மாணவர்களுக்கு ஒரு உபாத்தியாயர் என்று வைத்திருக்கிறோம். இதைத் அனுசரித்தாலேபோதும். (கனம் அங்கத்தினர் ஸ்ரீ என். கே. பழனிசாமி எழுந்தார்) நான் இந்தக் கருத்தை பேசி முடித்தவுடன் ஏதாவது கேள்வி கேட்கவேண்டுமென்றால் அப்பொழுது கனம் அங்கத்தினர் கேட்கலாம். ஒரு உபாத்தியாயருக்கு 40 மாணவர்களாவது இருக்கின்ற அடிப்படையிலே கணக்குப்போட்டுப் பார்த்தால்தான் செலவு 9 கோடி ரூபாயிலே அடங்கும். இல்லாவிட்டால் அடங்காது. ஆகையால், இதைப்பற்றி மிகவும் நல்ல முறையிலே பரிசீலனை செய்து, எந்த முடிவு செய்வது என்று ஆலோசனை செய்து, இந்தச் சிபார்சைச் செய்திருக்கிறார்கள். ஆகையால், இதைப்பற்றி ஆலோசனை செய்து, இந்தச் சிபார்சை ஏற்றுக்கொள்வது மூலமாகத்தான் திட்டத்தை நிறைவேற்ற முடியும். இல்லாவிட்டால் நமக்கு இருக்கும் நிதி வசதியில் பெரும் பகுதியுள்ள பிள்ளைகளை பள்ளிக்கூடத்திற்குக் கொண்டு வராமல் விட்டுவிடக்கூடிய நிலைமை ஏற்படும். ஆகையால், இதை நல்ல முறையில் பரிசிலனை செய்துபார்த்து இந்தச் சிபார்சையும் ஏற்றுக்கொள்ள வேண்டியது அவசியம் என்பதை நான் கேட்டுக்கொள்கிறேன்.

Sri N. K. PALANISAMI : உபாத்தியாயர்-மாணவர் ரேஷியோவானது ஒரு ஆசிரியருக்கு 40 மாணவர்கள் என்று இருக்கிறது. ஆனால், இரண்டாவது உபாத்தியாயர் போடவேண்டுமானால், அதற்கு 80 பிள்ளைகள் இருக்கவேண்டுமென்று அதில் கண்டிருக்கிறது. அது ப்ரின்டேஸ் டெவிலா ? அல்லது உண்மையாகவே, சர்க்கார் வேண்டுமென்றே போட்டிருக்கிறார்களா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : குறிப்பான விஷயங்களைப்பற்றி கனம் அங்கத்தினர் விவாதத்தின்போது குறிப்பிட்டால், அப்பொழுது நான் பதில் சொல்கிறேன். இங்கிருக்கும் சிபார்சுகளை நான் சொல்லிக் கொண்டிருக்கிறேன். நடைமுறையில் சில கஷ்டங்கள் ஏற்பட்டால், அதை நாம் தவிர்ப்பதற்குக் கடமைப்பட்டிருக்கிறோம். ஆகையால், இப்பொழுது இருக்கக்கூடிய சிபார்சுகளைமட்டும் நான் சொல்ல விரும்புகிறேன். அமுல் நடத்துவது எப்படி என்பதைப்பற்றி பிறகு ஆலோசனை செய்து முடிவு செய்துகொள்ளலாம். அதற்கு அடுத்தபடியாக உபாத்தியார்களின் சம்பளம் என்று கண்டிருக்கிறது. நான் முன்பு சொன்னதுபோல உபாத்தியார்களுக்கு நாம் விரும்புகின்ற அளவுக்கு, அவர்கள் உண்மையிலேயே வாழ்க்கை நடத்தக்கூடிய அளவுக்கு நல்ல சம்பளம் கொடுக்கவேண்டுமென்று நினைத்தால் அந்தச் செலவு இந்தத் தொகைக்குள் அடங்காது. ஆகையினால் தற்போதைக்கு கொஞ்சம் கஷ்டமாக இருந்தாலும் கூட, நாம் விரும்புகின்ற அளவுக்கு அவர்கள் சம்பளத்தை உயர்த்தக்கூடிய நிலைமையில் இல்லாததால், இந்தக் கஷ்டத்தை கொஞ்சம் அவர்கள் பொறுத்துக் கொள்ளவேண்டும். இப்பொழுதுதான் அவர்களுக்கு ரூ. 12 உயர்த்தப்பட்டிருக்கிறது. இதற்குமேல் சம்பளம் உயர்த்தப்படவேண்டுமென்றால், அதற்காக செலவழிக்கக்கூடிய தொகையை நம்மால் செலவழிக்க முடியுமா, சமுதாயம் அதை ஏற்றுக்கொள்ளமுடியுமா என்பதைப் பார்த்துதான் முடிவு செய்யவேண்டிருக்கிறது. இன்றைக்கு ஏதோ சர்க்கார் பணம் இருக்கிறது. அதை எடுத்து ஒவ்வொரு பக்கத்திலும் கொடுக்கலாம் என்ற அடிப்படையில் இல்லை. சமுதாயம் ஒவ்வொரு துறைக்கும் எவ்வளவு செலவழிக்க முடியும் என்பதை கணக்குப் போட்டுப் பார்த்துதான் திட்டம் போட்டுத்தான் முடிவு செய்யவேண்டிய நிலையில் இருக்கிறோம். சர்க்கார் பொறுப்பு என்ற அடிப்படையிலே முடிவு செய்யமுடியாது. சமுதாயத்திற்கு பளுவாக அமையும் என்ற முறையில் பரிசீலனை செய்து பார்த்து, வாத்தியார், பிள்ளைகள் விகிதம், வாத்தியார்களுக்கு சம்பளம் எவ்வளவு கொடுக்கவேண்டுமென்பது பற்றி முடிவு செய்ய





வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இதை நல்ல முறையில் பரிசீலனை செய்து இருக்கக்கூடிய நிலைமையை அனுசரித்து இந்தக் கமிட்டி இந்தச் சிபார்சு செய்திருக்கிறது என்பதுபற்றி உங்களுக்குச் சொல்லிக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, **Phased ten-year programme of Development of primary education** என்பதை எடுத்துக்கொள்வோம். ஆரம்பப் பள்ளிக்கூடத்தில் எல்லாப் பிள்ளைகளையும் 1965–66-க்குள் சேர்த்துவிடவேண்டுமென்று திட்டம் போட்டு வேலைசெய்தால்தான் முடியுமே தவிர, அவர்கள் கூடுமான அளவுக்கு செய்யட்டும் என்று விட்டுவிட்டால் முடியாது. இன்றைக்கு அபிவிருத்தி செய்வதற்கு பகுதியாக எடுத்துக்கொண்டு வேலை செய்வதுபோல் ஒவ்வொரு வருஷமும் ஒவ்வொரு பகுதியிலும் எல்லாக் குழந்தைகளையும் பள்ளிக்கூடத்திற்குக் கொண்டுவருவதற்கு முயற்சி எடுக்கப்படும் என்ற முறையிலே பகுதிகளாக பிரித்துக்கொண்டு ஐந்து வருஷங்களுக்குள் எல்லாப் பகுதிகளிலும் எல்லாக் குழந்தைகளுக்கும் கட்டாய ஐந்து வருஷப் படிப்பு வரும் முறையிலே திட்டம் வகுக்கவேண்டும். 1965–66-ல் ஐந்து வருஷப் படிப்பை முடித்துவிட்டு வெளிவரும் எல்லாக் குழந்தைகளுக்கும் இந்தத் திட்டம் நிறைவேறியிருக்கிறது என்று சொல்லலாம். முதல் ஐந்து வருஷங்களுக்குள்ளாக முதல் வகுப்பில் எல்லாக் குழந்தைகளும் சேர்ந்துவிட்டால்தான், அந்த ஐந்து வருஷத்திற்குள் எல்லாப் பிள்ளைகளும் பள்ளிக்கூடத்திற்கு வந்து சேர முடியும். அடுத்த ஐந்து வருஷங்களுக்குள்ளாக நமது ராஜ்யத்தை ஐந்து பகுதிகளாகப் பிரித்துக்கொண்டு, ஒவ்வொரு ஜில்லாவையும் ஐந்து பகுதிகளாக பிரித்து ஒவ்வொரு பகுதியிலும் ஒரு வருஷத்தில் இந்தத் திட்டதை அமுல் நடத்துவது என்ற அடிப்படையில்தான் இந்த சிபார்சு செய்யப்பட்டிருக்கிறது. மூன்றாவது பகுதியிலே இதுபற்றி இருக்கக்கூடிய சிபார்சை நல்ல முறையிலே ஆலோசனை செய்து பார்த்து ஐந்து வருஷப் படிப்பை எல்லா குழந்தைகளுக்கும் கொடுக்கும்படியான நிலைமை ஏற்படுத்துவது மிகவும் அவசியம். 1965–70-க்குள்ளாக அடுத்த 3 வருஷப் படிப்பு கொடுக்கமுடியும் என்ற அடிப்படையிலே திட்டம் போட்டு வேலை செய்தால்தான் நம் லட்சியங்களை அடைய முடியும் என்ற முறையிலே பரிசீலனை செய்து இந்தச் சிபார்சை செய்திருக்கிறார்கள். அதை இந்தச் சபை ஏற்றுக் கொள்ளும் என்று நம்புகிறேன்.

அடுத்ததாக இருக்கக்கூடியது இந்த வெள்ளை அறிக்கையிலே காணப்படாத சில விஷயங்கள் பற்றியது. பல்வேறு பிரச்னைகளை கமிட்டி ஆராயும்போது, அதன் கவனத்திற்கு வந்த சில பிரச்னைகளையும் கமிட்டி ஆலோசித்திருக்கிறார்கள். அதாவது 4-வது பிரிவிலே **Expansion and improvement—Relative priorities** என்பது. நாம் முதலில் எதற்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டும் என்பது பற்றி ஒரு முடிவு செய்யவேண்டும். நமக்கு போதுமான வசதிகள் இல்லாமல் இருப்பதால், ஓரளவுக்குத் தான் நிதி வசதி இருப்பதால் எதற்கு முதல் இடம் கொடுக்க வேண்டும், எதற்கு இரண்டாவது இடம் கொடுக்கவேண்டும் என்று முடிவு செய்யாவிட்டால் பிரயோசனமில்லை. எதற்கு முதல் இடம் கொடுக்க வேண்டும், எதற்கு இரண்டாவது இடம் கொடுக்கவேண்டுமென்று பரிசீலனை செய்து பார்த்ததில், எல்லாக் குழந்தைகளுக்கும் ஐந்து வருஷப் படிப்பை கொடுப்பதற்கு முதல் இடம் கொடுக்கவேண்டும், அதுதான் அத்யாவசியமாக இருக்கக்கூடியது என்று குறிப்பிட்டார்கள். 1965–66 வரையில் இதற்கு முதல் இடம் கொடுக்கவேண்டும். இரண்டாவது இடமாக 6-லிருந்து 11-வது வகுப்புகளில் படிப்பின் தரத்தை உயர்த்துவதற்காக என்னென்ன காரியங்கள் செய்யவேண்டும், அதற்கு எவ்வளவு செலவு செய்யலாம் என்கின்ற முறையிலே சிபார்சு செய்திருக்கிறார்கள். இந்த சிபார்சுகள் 4-வது பிரிவில் காணப்படுகின்றன. அவைகள் சரியானது என்று நான் ஒப்புக்கொள்ளுகிறேன். முதல் ஐந்து வருஷப்படிப்பை எல்லாக் குழந்தைகளும் பெறுவதற்கு முதல் இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. 6-லிருந்து 11-வது வகுப்பு வரையில் படிப்பின் தரம் உயர்வதற்கு

[Sri C. Subramaniam] [6th November 1957

இரண்டாவது இடம் கொடுத்து அதற்கு என்னென்ன நடவடிக்கை எடுக்க
வேண்டுமோ அவைகளையெல்லாம் செய்வதற்கு இன்றைக்கு அதில்
ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

அதற்கு அடுத்தபடி **Revision of grant-in-aid Rules.**
ஸ்ரீ பழனிசுவாமி அவர்கள் கேள்விநேரத்தின்பொழுது குறிப்பிட்டது
போல் ஆரம்ப பள்ளிகளுக்கு கிடைக்கும் முழு உதவியும் சர்க்காருடைய
உதவி என்பதை நாம் ஓரளவு தெரிந்துகொண்டிருக்கிறோம். சில பள்ளி
களில் சர்க்கார் கொடுப்பதைவிட அதிகமான சம்பளம் ஆசிரியர்களுக்கு
கொடுக்கப்படலாம். ஆனால் பெருவாரியான பள்ளிகள் நாம் கொடுக்
கின்ற பணத்தை வைத்துக்கொண்டுதான் நடத்தப்படுகின்றன. இம்
மாதிரி உயர்நிலைப் பள்ளிகளுக்கும் நாம் உதவி அளிக்கிறோம். இதற்கான
விதிகளை இப்பொழுது பரிசீலனை செய்து பார்க்கும்பொழுது, இந்த விதிகள்
எவ்வளவு சுருக்கமாகவும் விளக்கமாகவும் இருக்கிறதோ அவ்வளவு
நல்லது என்று தோன்றுகிறது. பல இடங்களில் இந்த உதவி பெறுபவர்
களுக்கு பல கஷ்டங்கள் இருக்கின்றன. கணக்கு வைத்துக்கொள்ளுதல்,
தணிக்கைகள் முதலிய விஷயங்களிலே அதிகாரிகளுக்கும் பள்ளிக்கூடத்தை
நடத்துபவர்களுக்கும் பெருத்த கஷ்டங்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஆகையால்
இந்த விதிகளைப் பரிசீலனை செய்து சரியான முறையில் திருத்து
வதற்கு யோசனைகள் நடந்துகொண்டிருக்கின்றன. இன்னும் முடிய
வில்லை. முடிந்தவுடன் எந்தவிதமாக மாற்றி அமைக்கவேண்டும் என்று
பரிசீலனை செய்வதற்கு இந்த விதிகள் இந்தச் சபை முன்பு வைக்கப்படும்
என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

கன்னியாகுமரியில் இருக்கும் ஒரு திட்டத்தை இந்தச் சபைக்கு தெரியப்
படுத்த விரும்புகிறேன். அதை ஏற்றுக்கொள்ளலாமா என்பதும்
பரிசீலனையில் இருக்கிறது. உயர்நிலைப் பள்ளிகளில் அவர்கள் செய்திருக்கக்
கூடிய ஏற்பாடு என்னவென்றால், அவர்கள் வசூலிக்கும் சம்பளம்
பூராவும் கஜானுவுக்குப் போய்விடும். வாத்தியார்களுக்கு கொடுக்க
வேண்டிய சம்பளம் பூராவையும் சர்க்காரே கொடுத்துவிடுகிறது. பள்ளிக்கூடம்
நடப்பதற்காக மொத்த வசூலில் 15 சதவிகிதம் அவர்களுக்கு கொடுக்கப்
படுகிறது. இப்படிச் செய்தால் இதை அவர்கள் கணக்கு வைத்துக்கொண்டு
இருப்பதையும், ஓரளவுக்கு தரம் குறையாமல் இருப்பதையும் பார்த்துக்
கொண்டு, அவ்வப்பொழுது ஓரளவுக்கு நிர்வாகத்தை கண்காணிப்பதைத்
தவிர வேறு ஒன்றும் செய்யவேண்டிய அவசியம் இல்லை என்ற முறையிலே
ஒரு திட்டம் அங்கு நடைபெறுகிறது. இது ஒரு நல்ல திட்டம். அனுவசிய
மாக சம்பளத்திற்கு கணக்கு வைத்துக்கொள்ளவேண்டியதில்லை. எல்லா
சம்பளமும் கஜானுவுக்குப் போய் சேர்ந்துவிடுகிறது. சர்க்கார் வாத்தியார்
களுக்கு கொடுக்கவேண்டிய சம்பளத்தை நிர்ணயித்து பூராவும் கொடுத்து
விடுகிறது. அதற்கு மேலே பள்ளிக்கூடங்களை பராமரிப்பதற்கும், வேண்டிய
சாமான்கள் வாங்குவதற்கும் ஒரு மொத்த தொகையை கொடுத்து
விடுகிறார்கள். அதற்குமேல் இன்னும் நல்ல முறையிலே நடத்த
வேண்டுமானால், அவர்கள் சொந்த முயற்சியால் நிதி திரட்டி செய்து
கொள்ளுகிறார்கள். இம்மாதிரி அந்த விதிகள் விளக்கமாகவும் இருக்க
மாகவும் இருக்கிறது. அதில் எந்தவிதமான கஷ்டங்களும் இல்லை என்று
சிலர் சொல்லுவதால் அதுபற்றியும் பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது.
பரிசீலனை செய்து பார்த்து எல்லோருக்கும் நன்மை பயக்கக்கூடிய ஒரு
முடிவுக்கு வரவேண்டும்.

அதற்கு அடுத்தபடியதாக இருக்கக்கூடியது **Imporvement of School
Managment.** பெரும்பான்மையான ஆரம்பப் பள்ளிகளையும்
உயர்நிலைப் பள்ளிகளையும் தனிப்பட்டவர்கள் எடுத்து நடத்திவருகிறார்கள்
என்பதை எல்லா அங்கத்தினர்களும் உணர்வார்கள். தனிப்பட்டவர்கள்
தங்கள் இஷ்டம்போல் நிர்வாகத்தை அமைத்துக்கொண்டிருக்கிறார்கள்.
அவரவர்கள் இஷ்டம்போல் நிர்வாகத்தை அமைத்துக்கொண்டு நடத்தும்
காரணத்தினாலே பல்வேறு பிரச்னைகள் அவ்வப்பொழுது எழுகின்றன.
ஆசிரியர்களுக்கு சம்பளம் கொடுப்பது சம்பந்தமான பிரச்னைகள், ஆசிரியர்
களுக்கும் நிர்வாகத்திற்கும் இருக்கக்கூடிய பிரச்னைகள், பள்ளிக்கூடத்தை



6th November 1957] [Sri C. Subramaniam]

நடத்துபவர்கள் நிர்வாகத்தில் எவ்வளவு தூரம் தலையிடமுடியும் என்
பதைப் பற்றியெல்லாம் பிரச்னைகள் எழுகின்றன என்பதை யாரும் ஒப்புக்
கொள்ளுவார்கள். பள்ளிக்கூடத்தில் இருக்கக்கூடிய ஒழுங்கு, கட்டுப்பாடு,
பரீக்ஷையில் தேறுதல், தேருமல் இருப்பது இவைகளையெல்லாம் அங்கு
இருக்கக்கூடிய ஆசிரியர்கள் பொறுப்புக்கே விட்டுவிடவேண்டும். நிர்வாகம்
இந்த விஷயங்களில் தலையிட்டால், அந்தப் பள்ளிக்கூடம் முன்னுக்கு
வரமுடியாது. அதேமாதிரி ஆசிரியர்கள் நிர்வாகத்துடன் ஒத்துழைத்தால்
தான் நிர்வாகம் நல்ல முறையில் நடக்கும். அவரவர்கள் கடமைகளை
அவரவர்கள் நல்ல முறையில் ஆற்றவேண்டும். ஒருவர் உரிமைகளிலும்
கடமைகளிலும் மற்றவர்கள் தலையிடக்கூடாது. மற்றவர்கள் எவ்வளவுக்கு
எவ்வளவு குறுக்கிடாமல் இருக்கிறார்களோ அவ்வளவுக்கு அவ்வளவு நிர்
வாகம் நல்ல முறையில் நடைபெறமுடியும். அதற்காக சில யோசனைகள்
சொல்லியிருக்கிறார்கள். சில கட்டுப்பாட்டுக்கு உட்பட்டு தனிப்பட்டவர்
களிடத்தில் பள்ளிக்கூட நிர்வாகத்தை ஒப்படைக்க முடியுமே தவிர,
தனிப்பட்டவர்கள் தங்கள் இஷ்டம்போல் நிர்வாகத்தை நடத்துவதற்கு
அனுமதிக்க முடியாது என்று சிபார்சு செய்திருக்கிறார்கள். அதையும்
பரிசீலனை செய்து எந்தவிதமான கட்டுப்பாடுகள் இருக்கவேண்டும், எந்த
விதமான நிர்வாக அமைப்பு இருக்கவேண்டுமென்று முடிவு செய்ய
வேண்டும்.

அதற்கு அடுத்தபடியாக நான்காவது தலைப்பின் கீழ் **“Other matters
considered”** இதர விஷயங்களைப்பற்றி ஆலோசனை செய்தவைகள் :—

இதில் முக்கியமாக நாம் கவனிக்கவேண்டியது பாட புஸ்தகங்களைப்
பற்றித்தான். இப்போது இருக்கக்கூடிய பாட புஸ்தகங்கள் எல்லாம்
முன்பு நாம் வகுத்திருக்கும்படியான பாட திட்டங்களை அடிப்படையாகக்
கொண்டு எழுதப்பட்டிருக்கின்றன. இப்போது நாம் பாட திட்டங்களை
எல்லாம் மாற்றி அமைக்கப் போவதால் பாட புஸ்தகங்களும் இவற்றை
அனுசரித்து எழுதப்பட்டாக வேண்டும். புது பாட திட்டங்களுக்கு ஏற்ப
பாட புஸ்தகங்கள் தயாரிக்க வேண்டியது அவசியமாகிறது. இப்போது
தான் நாம் ஒரு விஷயத்தை முடிவு செய்யவேண்டியது அவசியமாகிறது.

அதாவது இதுவரையில் அவரவர்கள் பாட திட்டங்களுக்கு ஏற்ப
தங்கள் தங்கள் இஷ்டம்போல் புஸ்தகங்களை எழுதி வந்தார்கள். சர்க்
காரும் அதற்காக ஒரு கமிட்டியை நியமித்து, “இந்தப் புஸ்தகங்களை
பாட புஸ்தகமாக்கலாம்” என்கிற அனுமதியை அவர்களிடம் இருந்து
பெற்றுவிட்டால் பள்ளிக்கூடங்களில் அவற்றை பாட புஸ்தகமாக வைக்க
லாம் எனச் செய்திருந்தோம். இந்த ஏற்பாட்டின் மூலமாக நல்ல
புஸ்தகங்களைக் கொண்டு வருவதற்கு வழி ஏற்படுகிறது என்று சிலர்
கருதுகிறார்கள். ஆனால் இதன் மூலமாக புஸ்தகங்களைப் பிரசுரிப்பவர்
களுக்கு அதிக லாபம் வருகின்ற காரணத்தினால் அவர்கள் தங்களுடைய
புஸ்தகத்தை பாட புஸ்தகமாக வைப்பதற்காக அநேகவிதமான முயற்சிகளை
எடுத்துக்கொள்கிற காலத்தில் பல தவறுகள் ஏற்பட்டுக்கொண்டிருக்
கின்றன என்பதையும் நாம் நேரிடையாகப் பார்க்கிறோம். அதை யாரும்
மறுக்க முடியாது. அதன் காரணமாக பொதுவாழ்வில் சில தீங்குகள்
ஏற்பட்டிருக்கின்றன. பொது ஸ்தாபனங்களில் சில தீங்குகள் ஏற்பட்டிருக்
கின்றன என்பதைப் பார்க்கிறோம். அந்தத் தீங்குகள் எல்லாம் ஒருபுறம்
இருக்க, இப்போது தனியார் முயற்சியினால் அந்தப் புஸ்தகங்கள் நல்ல
முறையில் வருவதற்கு சாதகமாக இருக்கிறதே, சர்க்காரே பாட புஸ்தகங்
களைப் பிரசுரிப்பது என்று வந்தால் அவற்றின் தரம் குறைந்து விடாதா
எனச் சிலர் அபிப்பிராயப் படலாம். இதையும் நாம் நன்றாக யோசித்து
ஒரு முடிவு செய்தாக வேண்டும். சர்க்காரே நேரிடையாகவோ அல்லது
இதற்காக சர்க்கார் ஏற்படுத்துகின்ற ஒரு கார்ப்பரேஷன் மூலமாகவோ பாட
புஸ்தகங்களைப் பிரசுரிப்பது என்றால் அதனால் நன்மை உண்டா? அனு
கூலம் உண்டா என்பதை ஆலோசிக்க வேண்டும்.

என்னைப் பொறுத்த வரையில்—என் கருத்து தனிப்பட்டவர்களிடம்
பாட புஸ்தகங்களைப் பிரசுரிக்கும்படியாக விடுவதை விட சர்க்காரோ, சர்க்
காரால் ஏற்படுத்தப்பட்ட கார்ப்பரேஷனே பாட புஸ்தகங்களைப் பிரசுரித்து

வெளியிடுவது மிகவும் நல்ல ஏற்பாடாக இருக்கும் என்பதுதான். அதில்
சர்க்காருக்குக் கொஞ்சம் செலவானாலும்கூட நல்ல தரமான புஸ்தகங்களைப்
பிரசுரிக்க முடியும்.

காரணம் ஏன் என்றால் சிலர் நினைக்கிறார்கள் தனிப்பட்டவர்கள்
இப்போது பாட புஸ்தகங்களைத் தயாரிப்பதனால்தான் நல்ல புஸ்தகங்கள்
வருவதற்குச் சாதகமாக இருக்கிறது என்பதாக. ஆனால் இவர்கள் ஒரு
விஷயத்தைக் கவனிக்கவேண்டும். அதாவது பாட புஸ்தகங்களை இன்
றைக்கு எழுதுகின்றவர்கள் வேறு—அந்த புஸ்தகங்களைப் பிரசுரிக்கின்ற
வர்கள் வேறு. பாட புஸ்தகங்களினால் அதிக லாபம் வருகிறது என்று
சொன்னால் அது பாட புஸ்தகங்களை எழுதுகின்ற ஒரு பகுதியினருக்குப்
போய்ச் சேருவது இல்லை. பாட புஸ்தகங்களை—எழுதுகின்றவர்களிடம்
இருந்து வாங்கி—அச்சிட்டுப் பிரசுரிக்கின்றவர்களுக்குத்தான் அதிக லாபம்
போய்க்கொண்டிருக்கிறது. இதில் ஒரு சின்னப் பகுதியைத்தான் இவர்கள்
புஸ்தகம் எழுதுகின்றவர்களுக்குக் கொடுக்கிறார்கள். எழுதுகின்றவர்
களுடைய நிலைமை மிகவும் பரிதாபத்திற்குரியதாகத்தான் இருக்கிறது
என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

சர்க்காரோ அல்லது சர்க்காரால் ஏற்படுத்தப்படும் கார்ப்பரேஷனோ
பாட புஸ்தகங்களைப் பிரசுரிப்பது என்று வந்தால் பிரசுரிக்கின்றவர்களுக்கு
கொஞ்சம் மனத்தாங்கல் இருக்கலாமே தவிர, பாடம் எழுதுகின்றவர்
களுக்கு நல்ல புஸ்தகத்தை எழுதுவதற்கான ஊக்கம், முயற்சி குறைந்து
விடும் எனக் கருதக்கூடாது. உண்மையில் நல்ல புஸ்தகங்களை எழுது
வதற்கு இந்த கார்ப்பரேஷன் அவர்களுக்கு அதிகமான பணம் கொடுக்க
லாம். ஆகவே இப்போது இருக்கும்படியான புஸ்தகங்களின் தரம் சர்க்
காரோ, சர்க்காரால் ஏற்படுத்தப்படும் கார்ப்பரேஷனோ பிரசுரிக்க முன்வரும்
போது அதிகமாகத்தான் ஆகும். குறைந்து விடாது என்பது என் அபிப்
பிராயம். நீங்கள் எல்லாம் இந்தக் கருத்தை ஆதரிப்பீர்கள் என்று
நம்பித்தான்—நீங்கள் அனுமதிப்பீர்கள் என்ற நம்பிக்கையில்தான் முதல்
மூன்று வகுப்புகளுக்கு புதிய பாடத் திட்டத்தின்கீழ் பாட புஸ்தகங்களைச்
சர்க்காரே தயாரித்து வெளியிடுவதற்கு உத்திரவு போடப்பட்டிருக்கிறது.
இதை நீங்கள் எல்லோரும் ஆதரிப்பீர்களானால் மற்ற வகுப்புகளுக்கும்
எந்த முறையில் சர்க்காரே பிரசுரிப்பதற்கு ஏற்பாடு செய்யலாம் என்பதைப்
பற்றியும் நாம் பரிசீலனை செய்யலாம்.

இன்னொன்று சொன்னார்கள். சர்க்கார் இந்தப் பாடப் புஸ்தகங்களைப்
பிரசுரிப்பதானால் இவை எப்படி ஒவ்வொரு பள்ளிக்கூடத்திற்கும் போய்ச்
சேரும் ? அப்போதும் புஸ்தக வியாபாரிகளின் மூலமாகத்தானே விநி
யோகிக்கும்படியாக வரும் என்று ஒரு தடை எழுப்பினார்கள். அதையும்
ஆலோசனை செய்து ஒரு முடிவு செய்யப்பட்டிருக்கிறது. ஆதாவது ஆரம்பப்
பள்ளிக்கூடங்களை எல்லாம் 25 பள்ளிக்கூடங்கள், 30 பள்ளிக்கூடங்கள்
என்று பிரித்து ஒவ்வொரு உயர்நிலைப் பள்ளிக்கூடங்களோடு இணைத்து விட
வேண்டும். அந்த உயர்நிலைப் பள்ளிக்கூடத்தில் கோவாபரேடிவ்
ஸ்டோர்ஸ்—கூட்டுறவு ஸ்டோர்ஸ் ஒன்றை ஏற்படுத்தி அந்த உயர்நிலைப்
பள்ளியோடு இணைக்கப்பட்டிருக்கிற ஆரம்பப் பள்ளிகளுக்கு எல்லாம் விற்
பனை செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இதன் மூலம் அந்த
ஸ்டோருக்கு ஏதாவது சிறிது லாபம் வந்தால் அது அந்தப் பள்ளிக்
கூடத்தைப் போய்ச் சேரும். மாணவர்களுடைய நலனுக்காக—பொது நட
வடிக்கைகளின் செலவுகளுக்காக—அவை உபயோகப்படுத்தப்படும். ஆகை
யால் இந்த ஏற்பாட்டிலும் தனிப்பட்ட புஸ்தக வியாபாரிகளைக் கொண்டு
வந்து மத்தியில் புகுத்த வேண்டிய அவசியம் ஏற்படாது. ஆகவேதான்
ஆங்காங்கே உயர்நிலைப் பள்ளிகளில் கூட்டுறவு ஸ்டோர்களை ஏற்படுத்து
வதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இதைப்பற்றியும்—
இந்த ஏற்பாடு சரியானதுதானா அல்லது ஏதாவது திருத்தம் செய்யப்பட
வேண்டுமா என்கிறதைப்பற்றியும்—உங்களுடைய யோசனைகளைக் கூற
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆலோசனை கூறுவதோடு இந்தச்
சட்ட சபையின் வேலை முடிவு அடையவில்லை.



இந்தச் சபையைப் பொறுத்தவரையில் இந்தக் கல்வித் திட்டத்திற்கு
சில அடிப்படையான கொள்கைகளை வகுத்து அதை ஒரு சட்ட ரூபமாகவே
செய்துவிட வேண்டும் என்பது என் அபிப்பிராயம். ஆரம்பக் கல்வி,
அதற்கு அடுத்தபடியாக இருக்ககூடிய உயர்தரக் கல்வி, உயர்நிலைக்
கல்வி எல்லாவற்றையும் சட்ட அடிப்படையில் வைத்துவிட்டால் சர்க்கார்
மாறி மாறி வரும்போது கல்வி அமைச்சர்கள் தங்கள் இஷ்டம்போல் கல்வித்
திட்டத்தை மாற்ற முடியாது. இதுவரையிலும் அப்படி இல்லாத காரணத்
தினால் பல பல மாறுதல்கள் அவ்வப்போது செய்யப்பட்டு வந்திருக்கிறது,
அதனால் பல குழப்பங்கள் ஏற்படுகின்றன, கிளர்ச்சிகள் ஏற்படுகின்றது.
இது இல்லாமல் நாம் இப்போது ஒரு கல்வித் திட்டத்தை பரவலான சில
கொள்கைகளின் அடிப்படையில் தயாரித்து, அதை ஒரு சட்ட ரூபமாகவே
கொண்டுவந்து விட்டால் அடிக்கடி இஷ்டப் பிரகாரம் மாற்ற முடியாது
போகும். ஏதாவது மாற்றம் அவசியம் எனத் தெரிந்தால் அந்த மாறு
தலையும் அவர்கள் இஷ்டப்படி செய்யாமல் அதை இந்த சபைக்குக்
கொண்டு வந்து, சபையினரின் அனுமதியுடனே செய்யவேண்டியதாக
இருக்கும். ஒரு சட்டத்தை நாம் உருவாக்கிவிட்டால் அதில் மாறுதல்
வேண்டுமானால் பின்னால் இந்தச் சபையே அதைச் செய்யும்படியாக நாம்
செய்யவேண்டும். ஆகவே இப்போது நாம் பொதுவான கொள்கைகளை
எல்லாம் விவாதித்து ஒரு முடிவுக்கு வந்துவிட்டால் இந்தக் கொள்கை
களின் அடிப்படையில் கூடியசீக்கிரமே ஆறுமாத காலத்திற்குள்ளாக ஒரு
சட்டத்தையும் தயாரித்துக் கொண்டுவந்து அதை நிறைவேற்றி விடலாம்
என்று சொல்ல ஆசைப்படுகிறேன். நீங்கள் இன்றைக்கு ரொம்ப நுணுக்க
மான விஷயங்களைப்பற்றி யெல்லாம் ஆராய்ச்சி செய்து முடிவு தெரிவிக்க
வேண்டுமென்று கூட நான் கேட்கவில்லை. பொதுவான கொள்கைகளைப்
பற்றி விவாதித்து, ஆலோசனை செய்து ஒரு முடிவுக்கு வருவதற்கு உதவி
விட்டால், அந்த முடிவின்பேரில் சர்க்கார் ஒரு சட்டத்தையும் தயாரித்து
அதைச் சபை முன்பு வைக்கும். அப்போதும் சிக்கலான பிரச்சனைகளைப்
பற்றி நன்கு விவாதித்து அவசியமானால் சில மாறுதல்களையும் செய்ய
லாம். அதற்கு இடம் இருக்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.
இந்தப் சிபார்சுகளின் பேரில் சர்க்கார் எந்தக் கொள்கையை உருவாக்க
வேண்டும் என்கிற அபிப்பிராயத்தை இன்றைக்கு நீங்கள் தெரிவிக்க
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு நாம் இன்றைக்கு ஆரம்பப் பள்ளிக்கூடத்தைப்பற்றிமட்டும்
விவாதித்து விட்டு நின்றுவிட முடியாது. அதற்குமேல் தொழில் படிப்பு
இருக்கிறது. கல்லூரிப் படிப்பு இருக்கிறது. இவைகள் எல்லாம் ஒன்றோ
டொன்று இணைந்தேயிருக்கிறதென்பதை நாம் கவனிக்கவேண்டும்.
ஆகையால்தான் ஆரம்பக் கல்வி பற்றிய ஆலோசனைக் கூறும்போதே
தொழில் படிப்பு எந்தமாதிரியாக அமையவேண்டும், கல்லூரிப் படிப்பு
எந்தமாதிரியாக அமையவேண்டும் என்றும் யோசனை கூறக் கடமைப்
பட்டிருக்கிறோம். அதுபற்றி முடிவு செய்யவேண்டியது அவசியம் என்றாலும்
அவற்றைப்பற்றியும் இந்தச் சட்டத்தில் அவசியமானால் நாம் சேர்த்துக்
கொண்டே முடிவு செய்யலாம். ஆகவேதான் நான் இதோடு இணைந்
திருக்கும்படியான தொழில் படிப்பு, கல்லூரிப் படிப்பு இவற்றைப்பற்றியும்
கொஞ்சம் சொல்ல விரும்புகிறேன்.

கல்லூரிப் படிப்பில் ஒரு பெரிய மாறுதல் இப்போது செய்யப்பட்டிருக்
கிறது என்பதை எல்லோரும் அறிவார்கள். முன்பு இரண்டு வருஷம்
இண்டர்மீடியட் படித்துவிட்டு, அதற்குப் பிற்பாடு டிகிரி வாங்குவதற்கு
இன்னும் இரண்டு வருஷம் படிக்க வேண்டும் என்று இருந்தது. அதா
வது சர்வகலாசாலைப் பட்டம் படிப்பதற்கு நான்கு வருஷங்கள் படிக்க
வேண்டியதாக இருந்தது. அதைப்பற்றி ஆராய ஒரு கமிஷன் நியமிக்கப்
பட்டது. டாக்டர் ராதாகிருஷ்ணனைத் தலைவராகக் கொண்ட அந்தக் கமிட்டி
யில் டாக்டர் லக்ஷ்மணசுவாமி முதலியாரும் ஒரு மெம்பராக இருந்தார்.
அந்த கமிஷன் தன் அறிக்கையில் தெரிவித்திருக்கும்படியான ஒரு
முக்கியமான அம்சம் என்னவென்றால் இந்த டிகிரிப் படிப்புக்கு மூன்று
வருஷம்போதும் என்பதுதான். ஆனால் அந்த நான்கு வருஷத்தில் ஒரு

வருஷத்தை உயர்நிலைப் பள்ளி பிரதான படிப்போடு சேர்த்துவிட்டு, டிகிரி படிப்புக்கு மூன்று வருஷம் இருந்தால் போதும் என்று செய்தார்கள். அந்த அடிப்படையில்தான் நம் ராஜ்யத்திலும் டிகிரிப் படிப்பை மூன்று வருஷங்களாகச் செய்துவிட்டு, உயர்நிலைப் பள்ளியில் இன்னொரு வருஷம் படிப்பதற்கான படிப்பைத்தான் ப்ரீ யுனிவர்ஸிடி கோர்ஸ் ஆகச் செய்திருக்கிறோம்.

நம்முடைய சர்வகலாசாலையைப் பொறுத்தவரையில், அதை ஒப்புக்கொண்டு சென்ற வருஷத்திலிருந்து அது அமல் நடந்து வருகிறது என்பதை அங்கத்தினர்கள் அறிவார்கள். அதிலுள்ள கஷ்டங்களைப்பற்றியும், அதனால் ஏற்பட்டிருக்கக்கூடிய சில பிரச்னைகளைப்பற்றியும் பத்திரிகைகள் வாயிலாகவும், அவரவர்கள் நேரிலும் தெரிந்து கொண்டிருப்பார்கள். அந்தக் கஷ்டங்களை எல்லாம் நிவர்த்திப்பதற்கு சர்வகலாசாலை நிர்வாகஸ்தர்களுடன் சர்க்கார் ஆலோசனை செய்து நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே அதைப்பற்றி அதிகமாக விவாதிக்க வேண்டிய அவசியமில்லை. பின்னால் வேண்டுமானால், அவசியம் ஏற்படுமானால் அதைப்பற்றி விவாதித்துக் கொள்ளலாம். இந்த பூர்வாங்கப் படிப்பு, அதாவது "ப்ரீ யூனிவேர்ஸிட்டி கிளாஸ்" படித்த பிற்பாடு தொழிற் கல்லூரிகளில் சேருவதில் கஷ்டம் இருக்கின்றது. முன் எல்லாம் இண்டர் பாஸ் பண்ணியவர்கள்தான் தொழிற் கல்லூரியில் சேர முடிந்தது. அங்கு எவ்வளவு இடங்கள் இருந்ததோ அதில், அவ்வளவு இடங்களில் சேர்க்கப்பட்டது. கல்லூரி பூர்வாங்கப் படிப்பைப் போல், தொழிற் கல்லூரிகளிலும் பூர்வாங்கப் படிப்பு அவசியமென்று கருதி ப்ரீ ப்ரபஷனல் கோர்ஸ் ஏற்படுத்தப்பட்டது. அதில் எத்தனை மாணவர்களை தேர்ந்தெடுப்பது ? அவர்களைத் தேர்ந்தெடுத்து இந்த பூர்வாங்கப் படிப்பில் அவர்கள் தவறிவிட்டால் அவர்களின் பிற்கால வாழ்க்கை என்னவது ? இப்படிப்பட்ட சிக்கல்கள் இருக்கின்றன. ஆகவே, பி.எஸ்.சி. முதல் வருஷப் படிப்பையும் இந்த பூர்வாங்கப் படிப்பையும் இணைத்துவிட்டால் இதிலே பாஸ் செய்யக்கூடியவர்கள் தொழிற் கல்லூரியில் சேருவது போக பி.எஸ்.சி. யிலும் தொடர்ந்து படித்துக்கொண்டு போக முடியும். அவர்களின் வாழ்க்கையும் பாதிக்காது ; தொழிற் கல்லூரிக்கும் மாணவர்களைத் தேர்ந்தெடுக்க முடியும். நம் சர்வகலாசாலையோடு மட்டும் இது நின்றுவிடவில்லை. வெளியே இருக்கக்கூடிய தொழிற் கல்லூரிகளில் பெரும் அளவில் தென்னாட்டு மாணவர்கள் போய் சேர்ந்துகொண்டிருந்தார்கள். மாறுதல் ஏற்படாத இடங்களில் இது ஒரு பிரச்னையை கிளப்பியிருக்கிறது. உடனடியாக நம் மாணவர்கள் அங்கே சேரமுடியாமல் இருக்கிறார்கள். அங்கு இண்டர் பாஸ் பண்ணியவர்களைத்தான் நேரடியாக கல்லூரிகளில் எடுத்துக்கொள்கிறார்கள். ஆகவே, பி.எஸ்.ஸி. முதல் வகுப்பை இதனுடன் இணைத்து விட்டால் இதில் பாஸ் செய்தவர்களை இன்டர் பாஸ் செய்தவர்களாக எடுத்துக்கொண்டால் இந்தப் பிரச்னையைத் தீர்த்து விட முடியும். இதுபற்றி இப்பொழுது ஆலோசனை செய்யப்பட்டு வருகிறது. அதனால் இந்தச் சிக்கல்கள் தீர்ந்துவிடும் என்று நினைக்கிறேன். இதை ஒரு வருஷம் ஒத்தி போட்டு மறுபடியும் அமல் நடத்தலாம் என்று நான் சொன்ன யோசனை சரியானது என்பதை இப்பொழுது எல்லோரும் உணர்ந்திருக்கிறார்கள். நான் என்னைப் பெருமைப்படுத்திக்கொள்ளவில்லை. சட்ட சபையின் அபிப்பிராயம் அப்படி இருந்தது என்று சொல்கிறேன். அடுத்தப்படியாக, கல்லூரிகளில் இருக்கக்கூடிய மொழிப் பிரச்னை. இதைப்பற்றி கூடியசீக்கிரத்தில் ஒரு முடிவு செய்ய கடமைப்பட்டிருக்கிறோம். அதில், விஞ்ஞான கல்வி, தொழிற் கல்வி, இவைகளைப் பற்றி எல்லாம் உடனடியாக நாம் நம் பிரதேச மொழியில் சொல்லிக் கொடுக்க முடியுமா என்பதைப் பற்றி ஆலோசனை செய்யவேண்டியிருக்கிறது. இதைப் பொறுத்தவரையில், ஒரு முடிவை மட்டும் இந்த சட்ட சபை கட்டாயம ஏற்றுக்கொள்ளும். அதை, மற்றவர்கள் நன்கு புரிந்துகொள்ளவேண்டுமென்று இதைச் சொல்லிக்கொள்கிறேன். அதாவது இப்பொழுது ஆங்கிலத்தில்தான் பாடங்கள் கல்லூரிகளில் போதிக்கப்பட்டு வருகிறது. ஆங்கிலத்தில் போதிக்கும் காரணத்தால் மாணவர்களின் கஷ்டத்தை அங்கத்தினர்கள் நன்கு உணர்ந்திருப்பார்கள் என நம்புகிறேன்.



ஆகவே, போதனு மொழி மாறுவதற்கு காரணங்கள் இருக்கின்றன என்பதை எல்லோரும் ஒப்புக்கொள்ளவேண்டும். அப்படி வரும்போது எந்த மொழியை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்ற பிரச்னையில் யாருக்கும மாறுபட்ட கருத்து இருப்பதற்கில்லை. இந்த சபையைப் பொறுத்தவரையிலும் நம் ராஜ்யத்தைப் பொறுத்தவரையிலும் அது பிரதேச மொழியாகத்தான் இருக்கவேண்டும். தவிர, வேறு மொழியை போதனு மொழியாகக்கொண்டால் இப்பொழுதுள்ள கஷ்டம் நீடித்துக்கொண்டு போவதுடன், ஹிந்தியோ அல்லது வேறு மொழியையோ போதனு மொழியாக ஏற்றுக்கொள்வதால், ஆங்கிலத்தில் உள்ள பிரயோஜனமும் நமக்கு ஏற்படாமல் வேறு மொழியில் பாடம் கற்றுக்கொள்ளக்கூடிய கஷ்டமும் ஏற்படும் ; ஆக வெறும் கஷ்டப்படக்கூடிய நிலைதான் ஏற்படும். ஆகவே அது பிரதேச மொழியாகத்தான் இருக்க வேண்டும் என்பதை கருத்து வேற்றுமையின்றி தெரிவித்துவிட வேண்டியது அவசியம். இதைப்பற்றி நாம் யோசனை செய்து பார்க்கும்போது, முன்பு எல்லா இடத்திற்கும் பொதுவாக ஒரு மொழி இருக்க வேண்டுமென்று விரும்பியவர்கள்கூட பிரச்னையை அலசிப் பார்த்த பிற்பாடு அந்தந்த பிரதேச மொழிதான் சர்வகலாசாலையில் போதனு மொழியாக அமைவது நல்லது என்ற அபிப்பிராயத்திற்கு வந்திருப்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அதை எப்படி மாற்றியமைப்பது என்று திட்டம் போட்டு அப்படி மாறுவதின் காரணமாக படிப்பின் தரம் குறைந்து விடும் என்று யாரும் சொல்லமாட்டார்கள், யாரும் அப்படி கருதமாட்டார்கள் என்று நினைக்கிறேன். இதை வைத்துக்கொண்டு, இதை முட்டுக்கட்டையாக வைத்துக்கொண்டு இருக்கலாம் என்றால் அதை ஒத்துக்கொள்ள முடியாது. ஆகவே, இதற்கு வேண்டிய முயற்சிகளை, நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள, அதன் மூலம் நம் மொழியின் மூலம், தமிழ் மொழியின் மூலம் பாடங்கள் கற்றுக்கொடுக்க எல்லா விதமான நடவடிக்கைகளும் எடுத்துக்கொள்ள நாம் நம்மை தயார் செய்துகொள்ள வேண்டியது மிக மிக அவசியம். இதைப் பரிசீலனை செய்து பார்த்து இப்பொழுது ஒரு திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது. முதன் முதலாக பாடப் புத்தகங்களை, எல்லா பாடங்களும் தமிழ் மொழியில் வரவேண்டும். அதற்கு ஒரு திட்டம். அதற்காக ஒரு திட்டம் ஆலோசிக்கப்பட்டு அது பரிசீலனையில் இருந்து வருகிறது. பரிசீலனை முடிந்து அடுத்த கூட்டத்தில் அதைப்பற்றி ஒரு அறிக்கை இந்த சபையின் முன் சமர்ப்பிக்க முடியும். என்று நினைக்கிறேன். அடுத்தபடியாக, பரிசீலனையில் இருக்கக்கூடியது, வெறும் புத்தகங்கள் மட்டும் எழுதினால் போதாது. இதற்குள்ள ஆசிரியர்களை, நம் மொழியில் பாடம் சொல்லிக் கொடுப்பதற்கு உள்ள தகுதி அவர்களுக்கு ஏற்பட வேண்டும். பின்னால் வரக்கூடிய ஆசிரியர்களும் இந்தப் பாடங்களைச் சொல்லிக் கொடுக்க தகுதி பெற வேண்டும். அதை எப்படி செய்வது என்பதைப்பற்றி ஆலோசித்து அதற்காகவும் ஒரு திட்டம் இப்பொழுது வகுக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு பாடங்களிலும் நிபுணர்களாக இருக்கக்கூடிய பேராசிரியர்களை பொறுக்கி எடுத்து, அவர்களுக்கு தமிழில் பாண்டித்தியம் இல்லாமல் இருக்கலாம், அவர்களுடன் தமிழ் பாண்டித்தியம் பெற்ற ஆசிரியர்களை அவர்களுடன் இணைத்து இந்த ஆசிரியர், ஒவ்வொரு நாளும் அந்தப் பேராசிரியர் பாடம் சொல்லிக் கொடுக்கும்போது அவர்கள் எந்த விதத்தில் பாடம் சொல்லிக் கொடுக்கிறார்களோ, அதற்கு குறிப்பு எடுத்து இந்த முறையில் அவர்கள் சொன்னார்கள் என்று ஒவ்வொரு நாளும் குறிப்பு எடுத்து, இரண்டு மூன்று வருடமானாலும் சரி, பேராசிரியர் ஆங்கிலத்தில் சொல்லிக் கொடுப்பதை தமிழில் மொழி பெயர்த்து தமிழில் வெளியிட ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஆங்கிலத்தில் சொல்லிக் கொடுக்கும் பாடங்களை தமிழ் படுத்த வேண்டுமென்று இந்த ஏற்பாடு செய்திருக்கிறோம். சிலர் ஆங்கிலத்தில் படிப்பதைதான் விரும்புகிறார்கள் என்று சொல்கிறார்கள். அது, ஓரளவு உண்மையாயிருக்கிறது. அதற்குக் காரணம் இன்று ஆங்கிலம் படித்தவர்களுக்குத்தான் உத்தியோகம் கிடைக்கும் நிலை இருக்கிறது. இப்பொழுது நாம் தமிழ் மொழியை ஆட்சி மொழியாக ஆக்கி, சட்டம் வகுத்து, அது ஆட்சிமொழி ஆகிக் கொண்டும் வருகிறது. கூடிய சீக்கிரத்தில் எல்லா விவகாரங்களும் தமிழ் மொழியிலே இங்கு நடக்க வேண்டுமென்று விரும்புகிறோம். அப்படியிருக்கும்போது ஆங்கிலம்

படித்தவர்கள் இந்த நிர்வாகத்தை எப்படி நடத்த முடியும் ? முடியாது. ஆகவே தமிழ் படித்தவர்களுக்குத்தான், உத்தியோகத்தில் எடுப்பதற்கு அவர்களுக்குத்தான் முதல் இடம் கொடுக்கப் போகிறோம் என்றால் தானாகவே இதற்கு முக்கியத்துவம் வந்து விடும். ஆகவே, தமிழ் போதனா மொழியாக இருக்கும்போது, விஞ்ஞானம், தொழில் படிப்பு போன்றவைகளில் தனியாக ஒரு முடிவு செய்ய வேண்டும். மற்ற படிப்பு எல்லாம் தமிழில் இருக்க வேண்டுமென்று சொல்லும்போது, உத்தியோகத்தில் வரக் கூடியவர்களுக்கு தமிழிலே படித்தவர்களுக்குத்தான் முதல் இடம் என்று சொன்னால் அதற்கு முக்கியத்துவம் ஏற்பட்டு விடும். அப்படி தமிழ் வந்தாலும் ஆங்கிலம் ஓரளவிற்கு நீடித்திருக்க வேண்டும் என்பதை நாம் ஒப்புக் கொள்ளுகிறோம். பிரதம மந்திரியவர்களிடமும் அதைப் பற்றி விண்ணப்பங்கள் கொடுத்திருக்கிறார்கள். ஆங்கிலத்தை நாம் முழுவதும் விட்டுவிட முடியாது. ஆங்கிலத்தில் ஓரளவு பாண்டித்தியம் பெற்றவர்களையும் தயார் செய்ய வேண்டும், இடைக் காலத்திற்காக. விஞ்ஞான, தொழில் படிப்பு ஆங்கிலத்தில் இருக்கும்போது, அந்தளவு ஆங்கிலத்தில் பாண்டித்தியம் பெற்றவர்களும் நம்மிடம் ஓரளவு இருக்க வேண்டும் என்ற முறையில், இப்பொழுது ஏற்பட்டிருக்கிற யோசனையைத்தான் சொல்கிறேன் ; இதை ஒரு முடிவாக எடுத்துக் கொள்ளக் கூடாது. முடிவு ஏற்பட்ட பின் அதை உங்கள் முன் வைத்து ஒரு தீர்மானம் அதன் மேல் எடுக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே போதனா மொழியைப்பற்றி அதிகமாக விவாதிக்க வேண்டிய அவசியமில்லை. இதனால் வீண் குழப்பம் ஏற்படுத்த வேண்டிய அவசியமில்லை. இதில் என்ன நடவடிக்கைகள் எடுத்திருக்கின்றோம், என்னவெல்லாம் முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது என்பதைதான் நான் இப்போது கூறினேன். அதே மாதிரிதான் தொழில் படிப்பு நல்ல முறையில் அமைய வேண்டுமானால் தொழிற் கல்வி முறை விரிவாக அமைய வேண்டியது அவசியம் என்பதை உணர்ந்திருக்கிறோம். இன்றைக்கு இஞ்ஜினியரிங் படிப்பு நாட்டில் மிக முக்கியத்துவமாக இருக்கிறது என்பதை நாம் உணருகின்றோம். புதிய இன்ஜினியரிங் கல்லூரிகள் பல தோன்றியிருக்கின்றன. போன வருஷம் கோயம்புத்தூரில் ஒரு கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது. இந்த வருஷம் மதுரையில் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. இதற்கு முன்பே இரண்டு கல்லூரிகள் சர்க்காரால் நடத்தப்பட்டு வருகிறது. இது தவிர தனிப்பட்டவர்களால் கோயம்புத்தூரிலும், காரைக்குடியிலும், அண்ணாமலையிலும் நடத்தப்பட்டு வருகிறது. அதுவுமல்லாமல் எம்.ஐ.டி. என்று சொல்லப்படுகிற ஒரு ஸ்தாபனம் தனிப்பட்ட முறையில் நடந்து வருகிறது. இது இன்று நல்ல முறையில் நடந்து வருகிறது. இன்று இன்ஜினியரிங் காலேஜிகளில் இடம் அதிகமாக விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது. கிண்டி இன்ஜினியரிங் காலேஜில் 120 என்று இருந்தது, இப்பொழுது ஒரு வருஷத்திற்கு அனுமதிக்கக்கூடிய மாணவர்களின் எண்ணிக்கை 275 ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது. இதே போன்றுதான் கோயம்புத்தூரிலும் இடம் உயர்த்தப்பட்டிருக்கிறது. இன்றைக்கு ஏற்பட்டிருக்கிற விரிவை எடுத்துப் பார்ப்போமானால் முதல் ஐந்தாண்டு திட்டத்திற்கு முன்னால் 537 மாணவர்கள் அனுமதிக்கப்பட்டு வந்தார்கள். முதல் ஐந்தாண்டு திட்டத்தின் கடைசியில் 637 மாணவர்கள் அனுமதிக்கப்பட்டார்கள். இப்போது 1,107 மாணவர்கள் அனுமதிக்கப்படுகின்றனர். அதேபோல்தான் பாலிடெக்னிக் படிப்பிலும் அதற்கு கீழே இருக்கும் படிப்புக்கும் இடம் அதிகரிக்கப்பட்டிருக்கிறது. நமக்கு இன்ஜினியர்கள் அதிக தேவையாக இருக்கிறது. முதல் ஐந்தாண்டு திட்டத்திற்கு முன்னால் 922 பேர்கள் அனுமதிக்கப்பட்டார்கள். அதன் பின் முதல் ஐந்தாண்டு திட்டத்தின் கடைசியில் 1,142 ஆக உயர்ந்து இப்போது 1,612 ஆக உயர்ந்திருக்கிறது. இதுவும்கூட போதாது என்பதுதான் நிபுணர்களுடைய அபிப்பிராயம். இன்னும் கூடுதலாக விரிவுபடுத்துவதற்கு வேண்டிய முயற்சிகள் நடந்து வருகிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். அதிகமாக பாலிடெக்னிக் இன்ஜினியரிங் படிப்பை அதிகப்படுத்துவதற்கு ஒரு கஷ்டம் இருக்கிறது. அதாவது இன்ஜினியரிங் படிப்புக்கு அதற்கென்று படிப்புள்ள ஆசிரியர்கள் வேண்டும். அவர்களுக்கு மேல் படிப்புக்காக வெளிநாடுகளுக்கு போக வேண்டியிருக்கிறது. இப்பேர்ப்பட்ட பேராசிரியர்களை தயாரிப்பதற்காக அதற்கான டிகிரி கோர்ஸ்களை கிண்டி இன்ஜி



னியரிங் காலேஜிலும் கோயம்புத்தூர் காலேஜிலும் ஏற்படுத்துவதற்கு வேண்டிய முயற்சிகள் நடந்து வருகின்றன. பல பிரிவுகளிலும் இம் மாதிரியான போஸ்ட் கிராஜுயட் (Post Graduate) கோர்ஸ் ஆரம்பிக்க திட்டமிடப்பட்டிருக்கிறது. கூடிய சீக்கிரமே இவைகள் ஆரம்பமாகும் என்பதையும் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். அத்துடன் இன்றைக்கு வடபிராந்தியம், தென் பிராந்தியம், கிழக்கு பிராந்தியம், மேற்கு பிராந்தியம் என்று நான்காக பிரித்து ஒவ்வொரு பிராந்தியத்திலும் மேல்தர இன்ஜினியரிங் படிப்பு—ஹையர் டெக்னாலஜிக்கல் இன்ஸ்டிட்யூட் (Higher Technological Institute) ஏற்படவேண்டும் என்று தீர்மானித்து இப்போது கிழக்கு பிராந்தியத்தில் அதற்கான ஏற்பாடுகள் செய்தாகி விட்டது. மேற்கு பிராந்தியத்திலும் அதற்கான முயற்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன. தென் பிராந்தியத்தை பொறுத்தவரையில் இதற்கு திட்டத்தில் இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதற்காக கிண்டி ராஜபவனில் இருக்கும் ஒரு பகுதி நிலத்தையும் அதோடு சேர்ந்திருக்கும் இன்னொரு பகுதி நிலத்தையும் எடுத்துக் கொண்டு இதை ஆரம்பிக்க முடிவு செய்து அதற்கான ஏற்பாடுகள் நடந்து வருகின்றன என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். டெக்னிக்கல் படிப்பு, (Technical Education), என்ஜினியரிங் படிப்பு (Engineering Education) போன்ற தொழிற் கல்வியை பொறுத்தவரையில் (Industrial Schools, Politechnics, Engineering Colleges, Post Graduate Course, Higher Technological Institute) இவ்வாறு கீழிருந்து கடைசிவரையிலும் இருக்கக்கூடிய படிப்பை ஒவ்வொன்றையும் ஒவ்வொரு இலாக்காக்கள் நிர்வகித்து வந்தது. இவ்விதம் தனித்தனியாக ஒவ்வொரு இலாகாவினால் நிர்வகித்து வந்தால் அந்த துறைகள் முன்னேற்றமடையாது என்று கருதி இந்திய சர்க்காரும், இதற்கென்று நியமிக்கப்பட்ட ஒரு ஆலோசனை குழுவும் சேர்ந்து இதற்கென்று ஒரு தனி டைரக்டரேட் (Directorate) ஏற்படுத்த வேண்டுமென்று முடிவு செய்தார்கள். அதை எல்லாம் ஆலோசனை செய்து பரிசீலனை செய்து இப்போது தொழில் கல்விக்கு என்று தனிப்பட்ட இலாகா ஏற்படுத்தி அதற்கென்று தனியாக ஒரு இன்ஜினியரிங் தலைவரை நியமித்து அதன்மூலம் தொழில் அதிகமாக பெருக ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. நமது நாட்டில் விஞ்ஞான ஆராய்ச்சிகள் அதிகமாக பெருகவேண்டியது மிக அவசியம். தனிப்பட்ட முறையிலும் விஞ்ஞான ஆராய்ச்சி பெருகவேண்டும். அதற்காக இன்று ஓரளவு வசதியளிக்கப்பட்டிருக்கிறது. இன்று பிரஸிடன்ஸி காலேஜிலும் யூனிவர்ஸிட்டியிலும் ஓரளவுக்கு இதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இது தவிர மெடிக்கல் காலேஜ், வெட்டர்னறி காலேஜ், அக்ரிகல்சர் காலேஜ் முதலிய காலேஜிகளிலும் இன்னும் கூடுதலாக விரிவு படுத்த வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது. ஆகவே இன்றைக்கு இருக்கக்கூடிய கல்வியை கீழிலிருந்து கடைசிவரை மாற்றி அமைப்பதோடு மட்டுமல்ல, கல்வியினுடைய தரத்தையும் உயர்த்தி, அதன் மூலம் நாட்டின் முன்னேற்றத்திற்கான பல புதிய திட்டங்களை உருவாக்கி, புதிய சமுதாய அமைப்பில் தொழில் நிபுணத்துவம் பெற்றவர்களை கொண்டு அவர்கள் மூலம் பொருளாதார முன்னேற்றத்திற்கும் சமுதாய முன்னேற்றத்திற்கும் பயன்பட வேண்டும் என்கிற அடிப்படையில் அதற்கான இளைஞர்களை தயாரிப்பதில் சர்க்கார் பெரு முயற்சி எடுத்துக் கொண்டு வருகின்றது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். இந்த ஏற்பாடுகள் வரை போதும் என்று சொல்ல நான் தயாராக இல்லை. இன்னும் பல்வேறு அபிவிருத்தி செய்ய வேண்டியிருக்கிறது. பல வேலைகளையும் திட்டமிட்டு வேலை செய்து வருகின்றோம் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். இந்த முறையில் எல்லா நன்மைகளையும் கருதி ஆலோசித்து அதற்கான முறைகளைகொண்டு வந்து உங்கள் முன் சமர்ப்பித்திருக்கின்றேன். இவைகளை எல்லாம் நீங்கள் பரிசீலனை செய்து பார்த்து இதில் உங்களுடைய ஆலோசனையைகூற வேண்டுகிறேன். அதோடு இதில் பள்ளிக்கூட படிப்பில் உங்கள் எல்லோருடைய ஆதரவையும் அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதையெல்லாமே மாற்றக்கூடிய அளவில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளாமல் இந்த விவாதத்தின் மூலம் நாட்டினுடைய முன்னேற்றத்

[Sri C. Subramaniam] [6th November 1957

திற்கு வழி வகுத்து இந்த நாட்டினுடைய பெருமையை காப்பாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொண்டு உங்கள் எல்லோருடைய ஆலோசனை களுக்காக இதை இந்த சபை முன் சமர்ப்பிக்கின்றேன்.

Mr. SPEAKER: Motion moved—

"That the Report of the Legislature Committee on the White Paper on Education be taken into consideration."

Sri V. K. RAMASWAMY MUDALIAR: Sir, I move—

"*Add* the following at the end :—

'and on such consideration this Assembly gives its general concurrence to the recommendations made by the Committee'."

I request that I may be permitted to reserve my speech to a later time.

Sri M. JAGANNATHAN: I second the amendment.

Mr. SPEAKER: Motion moved—

"*Add* the following at the end :—

'and on such consideration this Assembly gives its concurrence to the recommendations made by the Committee'."

**The motion and the amendment are before the House for discussion. I shall allow the Leader of the Opposition to speak later on.** இப்பொழுது இதில் 10 அங்கத்தினர்களுக்கு மேல் பேசவேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். ஆதலால் ஒவ்வொரு அங்கத்தினரும் 10 நிமிஷங்கள் பேசலாம், அதற்கு மேல் பேசக்கூடாது என்று கேட்டுகொள்கிறேன்.

Sri K. VINAYAKAM: On a point of clarification, Sir.

Mr. SPEAKER: I will not allow that. The hon. Member may raise the point in his speech and the Hon. Minister will reply to it. I cannot convert this into a question hour.

Sri K. VINAYAKAM: It will not be possible for every Member to get an opportunity to speak.

Mr. SPEAKER: If the hon. Member puts a question, I shall allow it.

(Deputy Speaker in the Chair.)

11-29 a.m. Sri N. K. PALANISAMI: மிஸ்டர் ஸ்பீக்கர் ஸார், அரசியல் சட்டத்தில் 45-வது பிரிவு பிரகாரம் 14 வயதிற்குட்பட்ட எல்லா மாணவர் களுக்கும் கண்டிப்பாக இலவச கல்வி அளிக்க வேண்டும் என்ற அடிப்படை யின் பேரில் இதை கொண்டு வந்திருக்கின்றார்கள். இன்னும் எலிமெண டரி கல்வி, ஹையர் எலிமெண்டரி கல்வி, மிடில் ஸ்கூல் என்றெல்லாம் பிரிவாக இருந்ததை ஒன்றாக இணைத்துக்கொண்டு வந்திருப்பதை வரவேற்கிறேன். மாணவர்களுக்கு மட்டுமல்லாமல் ஆசிரியர்களுக்கும் மற் றெல்லோருக்கும் சௌகரியமான முறையிலும், திருப்தியளிக்கும் முறை யிலும், இதை மாற்றியமைக்கவேண்டியது அவசியம். இதை ஏற்கனவே சட்டசபை உப கமிட்டி பரிசீலித்திருந்தாலும் இதில் அநேக குறைகள் இருக்கின்றன. இந்த திட்டத்தை சரியான முறையில் வகுத்து நிறை வேற்றுவதற்காக இந்த அறிக்கையை மறுபடியும் ஆலோசனைக் குழுவின் மூலம் பரிசீலித்த பிறகு அமுலுக்குக் கொண்டுவரவேண்டும்; இதை



6th November 1957] [Sri N. K. Palanisami]

இப்படியே அமுலுக்குக் கொண்டுவரக்கூடாது. வெள்ளை அறிக்கையில் 8 வருஷப் படிப்பை 7 வருஷப் படிப்பாக ஆக்கியிருக்கிறார்கள். "இண்டர் மீடியட்"-ல் ஒரு வருஷத்தை "ப்ரீ யூனிவர்ஸிடி"-க்குப் போட்டிருக்கி றார்கள். இண்டர்மீடியட்டிற்குப் பிறகு "பி.ஏ." படிப்பதற்கான காலத்தை 3 வருஷங்களாகப் போட்டிருக்கிறார்கள். 1-வது பாரத்திற்கான பாடங்களை 5-வது வகுப்பு மாணவன் படிக்கவேண்டுமென்று சொன்னால், இப்போது படிக்கும் பாடங்களைக் கவனிக்க வேண்டும். ஆங்கிலம், கணிதம், தமிழ் "இன்டென்ஸிவ்" தமிழ், "ஜெனரல்" தமிழ், சிவிக்ஸ், ட்ராயிங் முதலிய பல பாடங்கள் இருக்கின்றன. ஆகவே பாடங்கள் ஏற் கெனவே இருந்ததைவிட இப்போது மாணவர்களுக்கு அதிக "லோட்" ஆக இருக்கிறது. சொல்லிக் கொடுக்கும் உபாத்தியாயர்களுக்கும் இது மிகவும் கஷ்டமானது. அவர்கள் சொல்லிக் கொடுத்தாலும் மாணவர் களுக்குப் புரிவது கஷ்டம். ஆகவே தகுந்த முறையில் பாடங்கள் திருத்தி யமைக்கப்பட வேண்டும். இப்போது, உதாரணமாக, இ.எஸ்.எல்.ஸி. படிப்பை எடுத்துக்கொண்டால் அந்த மாணவர்கள் பரீக்ஷை எழுதித் தேறுவது மிகவும் கஷ்டம். அவர்களுக்கு ஆங்கிலம் இருக்கிறது. அவர் கள் ஆங்கிலப் பாடத்தை படித்து அதில் "பாஸ்" பண்ணவேண்டும். ஆங்கிலத்தில் பாஸ் பண்ணினால்தான் அவர்கள் ஹைஸ்கூல்களுக்கும் இண்டஸ்ட்ரியல் ஸ்கூல்களுக்கும் போக முடியும். "ப்ரைவேட்" டாகப் படித்து இ.எஸ்.எல்.ஸி. பாஸ் பண்ணினால் ஸர்டிபிகேட்தான் கொடுக்கப் படுகிறதே தவிர மேல் படிப்புக்கு அனுமதிக்கப்படுவதில்லை. மேலும் அவர்களுடைய படிப்பு மிகவும் கஷ்டமாக இருக்கிறது. ஆகவே எல்லா இடங்களிலும் ஒரே மாதிரியான பாடத் திட்டங்களை வைக்கவேண்டும். மேலும், 5+2+4 என்றெல்லாம் இல்லாமல் ஒரேயடியாக 11-வருஷப் படிப்பாக உயர்தரக் கல்வியை வைத்தால் நன்றாக இருக்கும்.

மேலும், செகண்டரிக் கல்வி ஆசிரியர்களாக எம்.ஏ.யைத்தான் போட வேண்டும் என்று சொல்லப்படுகிறது. ஏற்கனவே சாதாரண ஹைஸ்கூல் களுக்கு பி.ஏ., எல்.டி.களே கிடைக்காத நிலையில், எம்.ஏ.-க்களைத் தான் செகண்டரிக் கல்விக்கு ஆசிரியர்களாகப் போட வேண்டுமென்று சொல்வது அவ்வளவு உசிதமல்ல.

அடிப்படைக் கல்வியை எடுத்துக்கொண்டால், மகாத்மாஜீ சொன்னதும் இல்லை, நாம் சொல்வதும் இல்லை. தக்களியை நூற்பதும் பஞ்சுப் பட்டை கள் போடுவதும் அடிப்படைக் கல்வியாக இருக்கிறது. இது எங்கே பிரயோஜனப்படுகிறது? காந்திக்கிராமம், பெரியநாயக்கன்பாளையம் போன்ற "ரெஸிடென்ஷியல் க்வார்ட்டர்ஸ்" உள்ள இடங்களில்தான் இது பிரயோஜனப்படுகிறதேயொழிய மற்ற இடங்களில் இது பிரயோஜனப்படுவ தில்லை. மற்ற இடங்களில் 80 சத விகிதம் "தோல்வி".

"ப்ரீ யுனிவர்ஸிடி" படிப்பை எடுத்துக்கொள்வோம். நகரங்களில் கல்லூரிகளும் ஹைஸ்கூல்களும் இருக்கின்றன. கிராமப் புறங்களில் ஹை ஸ்கூல்கள் இருக்கின்றன. கிராமப் புறங்களிலுள்ள ஹைஸ்கூல்களில் போதனாமொழி தமிழ். நகரப்புறங்களிலுள்ள ஹைஸ்கூல்களில் போதனா மொழி ஆங்கிலம். நகரத்தில் ஆங்கில போதனா மொழியில் படித்த மாணவனுக்கு கல்லூரிப் படிப்பில் கிராமப்புறத்து தமிழ் போதனாமொழி மாணவனைவிட "அட்வான்டேஜஸ்" ஜாஸ்தி. இந்த பிரச்சனையைத் தீர்ப்பதற்கு கல்லூரியிலும் தமிழையே போதனாமொழியாக ஆக்கவேண் டும். ஆங்கிலத்தைப் படிக்கும் பகுதியில் மாணவர்கள் ஆங்கிலத்தை வேண்டுமானாலும் சரி, மற்ற எந்த மொழியை வேண்டுமானாலும் சரி, அதைப் பயில வேண்டும். ஆங்கிலத்தைப் பொறுத்த வரையில், வேண்டு மானால் ஒரு கால கட்டம் வரையில் அதைக் கட்டாய பாடமாக வைக்க லாம்; அதற்குப் பிறகு அதைக் கட்டாய பாடமாக வைக்காமல் ஹிந்தியைப் போல் அதைப் பரீட்சைக்குக் கணக்கில் எடுத்துக்கொள்வதில்லை என்று வைக்கவேண்டும். ஏற்கனவே 3-வது பாரம் வரையில் ஹிந்தி பரீட்சைக்குக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படாது என்று வைக்கப்பட்டிருக்கிறது. இப் போது எஸ்.எஸ்.எல்.ஸி.-ல் ஹிந்தி பாடத்தில் பாஸ் பண்ண வேண்டும். எஸ்.எஸ்.எல்.ஸி. வரை ஹிந்தி இருக்கலாம்; அதில் பாஸ் பண்ண வேண்டிய கட்டாயம் இருக்கக்கூடாது.

[Sri N. K. Palanisami] [6th November 1957

அடுத்தபடியாக, உபாத்தியாயர் மாணவர் விகிதத்தைப்பற்றி சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். 5-வது வகுப்பு வரையில் ஒரு ஆசிரியருக்கு 21 பேர் என்று இருந்த விதியை குறைந்த பட்சம் 40 பேர் என்று கமிட்டியார் நிர்ணயித்திருக்கிறார்கள். ஒருவருக்கு மேற்பட்டு இரண்டாவது உபாத்தியாயர் வேண்டுமென்றால் 78–80 மாணவர்கள் இருக்கவேண்டுமென்று நிர்ணயித்திருக்கிறார்கள். சாதாரணமாக பல ஆரம்ப்ப் பள்ளிக்கூடங்களில் 5-வது வகுப்பு வரைக்கும் ஒரே உபாத்தியாயர் இருக்கிறார். 4–5 வகுப்புகளை ஒரே உபாத்தியாயர் கவனிக்க முடியுமா? சர்க்காரே வெள்ளை அறிக்கையில் "100 ரூபாய் செலவு செய்தால் 40–50 ரூபாய் வீணாகிறது. காரணம் பல மாணவர்கள் பரீட்சையில் தேறுவதில்லை" என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படியானால் செலவழிக்கப்படும் பணம் எவ்வளவு வீணாகப் போகும் என்பதைக் கவனிக்க வேண்டும். ஆசிரியர்களுடைய சம்பளத்தைப் பார்ப்போம். அவர்களுடைய சம்பளத்தை குறைந்தபட்சம் ரூ. 50-ஆக ஆக்கவேண்டும் என்று மத்திய சர்க்காரே சொல்லியிருக்கிறது. சர்க்கார் கொடுக்கும் கணக்குப்படி, எலிமெண்டரி கல்விக்கு 24 ரூபாயும், ஹைஸ்கூல் கல்விக்கு 74 ரூபாயும் செலவாகிறது. இவ்வளவு செலவு செய்தும்கூட ஆசிரியர்களுடைய சம்பளம் 40—85 ஆக இருக்கிறது. மைசூரில் படிப்புக்கு ரூ. 14 தான் செலவு செய்கிறார்கள். அங்கே ஆசிரியர்களுக்கு சம்பளம் ரூ. 50—100 கொடுக்கிறார்கள். இங்கே உபாத்தியாயர்களுக்கு அவ்வளவு செலவு செய்வதில்லை. ஆனால் இங்கே படிப்புக்கு ரூ. 24 செலவு செய்கிறோம். மைசூரில் படிப்பிற்கு ரூ. 11–10–0 செலவாகும்போது ஆசிரியர்களுக்கு இங்கே கொடுப்பதைவிட அதிகமாகச் சம்பளம் கொடுக்கிறார்கள். இங்கே என் அந்தச் சம்பளம் கொடுக்கக் கூடாது? மேலும், சமீபத்தில் ரூ. 11 கொடுக்கப்படும் என்று சொன்னார்கள். அது எப்படி என்றால், 1947-லிருந்து ஆசிரியராக இருப்பவருக்கு, 1947-ல் ரூ. 40 பெற்றிருந்தால் வருஷம் ஒன்றுக்கு ரூ. $1\frac{1}{2}$ வீதம் 1957-ல் ரூ. 55 கிடைக்கும். ஜில்லா போர்டு பள்ளிக்கூடங்களில் உள்ள நிலைமையைப் பார்க்கவேண்டும். சர்க்கார் சம்பள விகிதம் ரூ. 45—3—90. மானேஜ்மெண்டார் சம்பள விகிதம் ரூ. 35—1—53.

மேலும் சர்க்கார் அவர்களுக்கு "யூனிபாரம்" ஆக சம்பளம் என்று சொல்லி கொடுத்தார்கள். நடைமுறையில் பார்த்தால் 1950-ம் வருஷத்தில் உபாத்தியாயர் ஆக அமர்ந்தவருக்கு 1957-ம் வருஷத்தில் ரூ. 52 தான் கிடைக்கும். பழைய விதிப்படியும் வெகுகாலமாக வேலை செய்யும் உபாத்தியாயர்களுக்கும் ரூ. 52 தான் கிடைக்கும். புதிய ஸ்கேல் பிரகாரம் இரண்டே வருஷத்தில் சம்பளத்தில் நான்கு ரூபாய் உயர்வு கிடைக்கும். பழைய ஸ்கேல் பிரகாரம் பத்து வருஷம் வேலை செய்த உபாத்தியாயருக்கு புதிய ஸ்கேல்படி ஒரு ரூபாய் போய்விடுகிறது. 1950-ல் இருந்து வேலை செய்யும் உபாத்தியாயருக்கும், 1956-ல் இருந்து வேலை செய்யும் உபாத்தியாயருக்கும் அநேகமாக ஒரே சம்பளந்தான். ஆகையாலே கல்வி போதிப்பதிலே ஆசிரியர்களுக்கு அக்கரையில்லை. அதனால்தான் படிப்பின் தரம் குறைந்து இருக்கிறது. கல்வியைப் பரப்புவதில் முக்கிய பங்கு உபாத்தியாயர்களைச் சேர்ந்தது. ஜனங்கள் மத்தியில் அதிகம் பழகுபவர்களும் அவர்களே. ஆகையால் கல்விக்குப் பணம் செலவழிக்கும்போது இதை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். உபாத்தியாயர்களுக்கு திருப்தி ஏற்பட்டால்தான் கல்வியின் தரம் உயரும்.

**DEPUTY SPEAKER: The hon. Member's time is over. The hon. Member Sri Krishnamurthy will now speak.**

11-42 a.m. SRI V. K. KRISHNAMURTHY: தலைவர் அவர்களே, கல்வியைப்பற்றிய வெள்ளை அறிக்கை நம் முன் நிற்கிறது. நல்ல முறையிலே இந்த நாட்டிற்கு சிறந்த கல்வி முறையை அமைத்து, நாடு செம்மையாக செழுமையாக வளமாக, அறத்தை அடிப்படையாகக் கொண்டு நன்கு அமையவேண்டுமென்று நல்லவர்களும், வல்லவர்களும், நிபுணர்களும் கட்சிக்கு அப்பாற்பட்டு, நாடு முன்னேற வேண்டுமென்ற தூய அறப்பண்பைக் கொண்ட திட்டம் நம் முன்னால் நிற்கிறது. இந்த நாடு பல அரசர்



6th November 1957] [Sri V. K. Krishnamurthy]

களாட்சிக்கும் மன்னர்களாட்சிக்கும், புறநாகரீகங்களுக்கு இரையானதால் நமது கல்வி முறை பல முறை அவர்களால் மாற்றி அமைக்கப்பட்டது. அதே போல் சென்ற 20 ஆண்டுகளாக கல்வி அமைச்சர்களாக இருந்த ஒவ்வொருவரும் அவர் அவர் கொள்கைகளுக்குத் தக்கவாறு கல்வி முறைகளை மாற்றி அமைத்தார்கள். இந்த மாதிரி கல்வி முறையை அடிக்கடி மாற்றியதால், சிறந்த கல்வி, வாழ்வுக்கு ஒத்த கல்வி, பண்பை, அறிவை, ஒழுக்கத்தை வளர்க்கும் கல்வி குறைந்ததுமட்டும் அல்லாமல் கல்வியின் தரமும் குறைந்தது. இம் மாதிரியான ஒரு கல்வி முறையை மாற்றி அமைக்கவேண்டுமென்று கருத்தோடு கட்சி சார்பற்ற, கொள்கை சார்பற்ற நலம் பல புரியக்கூடிய முறையிலே நல்ல திட்டத்தை அடிப்படையாக கொண்ட கல்வி திட்டத்தை நம்முன் வைத்திருக்கிறார்கள். மனம் ஒத்துப் பேச வேண்டும், நல்ல திட்டத்தை வகுக்க வேண்டும்,. சிறந்த சமுதாயம் ஓங்கவேண்டும் என்ற முறையிலே வகுக்கப்பட்ட திட்டம் நம் முன்னால் நிற்கிறது என்பதை நாம் உணர வேண்டும். குறிப்பாக கூறும்போது கட்சி சார்பற்று, அரசியல் வேறுபாடற்று, கொள்கை கூறுபாடற்று இந்த நாட்டிலே இருக்கும் மக்கள் அனைவரும் ஒரே குலத்தவர்கள், ஒரே நாட்டினர்கள் என்ற மனப்பான்மையோடு கல்வி முறையை நாம் திருத்தவேண்டும் என்று ஒப்புக்கொள்ளவேண்டும்.

அதே நேரத்தில் இப்போது இருக்கக்கூடிய கல்வி முறையைப் பார்த்தால் அது சிறந்த முறையிலே அமைக்கப்படவில்லை என்பதை நாம் எல்லோரும் அறிவோம். இன்றைக்கு இருக்கும் முறையிலே, எலிமெண்டரி, ஹையர் எலிமெண்டரி, ஹைஸ்கூல் என்று மூன்று வகையாகப் பள்ளிக்கூடங்கள் பிரிக்கப்பட்டு பாடங்கள் இணைப்பாக இல்லாததால், படித்துத் தேறின பிறகு உயர் நிலைப் பள்ளிக்குச் செல்ல முடியாமல் தடைபட நேருகிறது. இந்த வேறுபாடுகளை அகற்றி, ஒரே மாதிரியான, ஒரே தரமான முறையிலே கல்வி இருக்கவேண்டும், தொடர்ந்து 11 ஆண்டுகளிலே பள்ளிக்கூடக் கல்வி முடியவேண்டும் என்று திட்டம் இட்டு இருப்பது போற்றத்தக்கது. இந்த முறையை வகுத்தவர்கள், கட்சி சார்பற்றவர்கள் என்பதை உணரவேண்டும். இலவசக் கல்வி கட்டாயமாக அளிக்க வேண்டியத் தேவையை உணர்ந்திருக்கிறார்கள். அதோடுகூட, ஏழைப் பிள்ளைகளுக்கு இலவசமாக உணவு கொடுக்கவேண்டுமென்ற முறை வற்புறுத்தப்பட்டிருக்கிறது. சீத்தலைச் சாத்தனார் வறுமையைப்பற்றி, பசிப்பிணியைப்பற்றி கூறுகிறார்கள் :

"பிடித்த கல்விப் பெரும்புணைவிடூஉம்
பசிப்பிணி என்னும் பாவி : அது தீர்த்தோர்
இசைச் அளவைக்கு என் நா நிமிராது."

மணிமேகலை என்ற ஒப்பற்ற பௌத்த பாத்திரத்தை படைத்து பசியைப் போக்க அச்சய பாத்திரமேந்தி உணவு அளித்ததைப் போல் இன்று அமைச்சரவை சட்டமியற்றி உணவு நல்குவதைப் பாராட்டாமலிருக்க முடியவில்லை. வறுமையும் ஏழ்மையும் அறியாமையும் இருக்கும்போது நாடு உருப்படாது என்று நினைத்து அறிவு ஓம்புவதோடு உடல் ஓம்ப வேண்டுமென்ற நோக்கத்துடன் ஏழை மாணவர்களுக்கு உணவு அளித்து கல்வி புகட்டவேண்டுமென்று வகுக்கப்பட்டிருக்கும் இந்த திட்டத்தை நான் பாராட்டுகிறேன்.

இந்த சந்தர்ப்பத்திலே, கல்வித் தரத்தைப் பார்க்கும்போது, தரம் இப்போது குறைந்து இருக்கிறது. ஆங்கிலம் படித்த ஆசிரியர்கள் எல்லாப் பாடங்களையும் தமிழில் போதிக்கவேண்டியிருப்பதால், தமிழ் அறிவு குறைவின் காரணமாக நல்ல முறையிலே மாணவர்களுக்கு அவர்கள் தமிழில் போதிக்க முடியவில்லை. ஏழாவது வகுப்பு வரையில் படித்தவர்கள் ஆசிரியர்களாக இருக்கிறார்கள். ஆகையால் ஆற்றல் புலமை குறைந்தவர்களாக இருக்கிறார்கள்; அதனால் கல்வியில் நல்ல தரம் இல்லை என்பதை உணருகிறேன். ஆகவே அறிவு புலமை நிறைந்தவர்கள்தான் ஆசிரியர்களாக இருந்து, குழந்தைகளுக்கு கல்வி கற்றுக்கொடுக்க வேண்டும். ஏழாவது வகுப்புவரை படித்தவர்கள், ஒருமை பன்மை வேறுபாடு

[Sri V. K. Krishnamurthy] [6th November 1957

தெரியாதவர்கள், வல்லினம் இடையினம் மாறுபாடு தெரியாதவர்கள் இவர்கள் 1, 2, 3, 4, 5 வகுப்புகளுக்கு ஆசிரியர்களாக இருப்பதால், ஆயிரக்கணக்கான, லக்ஷக்கணக்கான, கோடிக்கணக்கான பணத்தைச் செலவழித்தாலும்கூட மாணவர்கள் தரம் உயராது, நாடு உருப்படாது. திறமை வாய்ந்தவர்களைக் கொண்டு ஆசிரியர்களாக அமைத்தால்தான் திட்டம் நிறைவேறும். குறைந்த அளவு 10 ஆவது படித்தவர்கள்தான் ஆசிரியர்களாக இருக்கவேண்டும் என்று கட்டாயப்படுத்தி அப்பேர்ப்பட்டவர்களை ஆசிரியர்களாக நியமித்தால் மாணவர்களும், நாடும் முன்னேறும். குறிப்பாக, 12 அல்லது 14 வயது உள்ளவர்கள்கூட 7-வது பாஸ் செய்துவிட்டு ஆசிரியர்களாக நுழைந்துவிடுகிறார்கள். இவர்களுக்கு சமமான வயதுடையவர்கள் மாணவர்களாக இருக்கிறார்கள். மேலும் 10 ஆவது வரை படித்தவர்கள் ஆங்கிலத்திலே குறைந்த புலமை பெற்றவர்கள். அவர்கள் பயிற்சி பெறும் டிரெயினிங் ஸ்கூலில் ஆங்கிலத்தில் குறைந்தது ஷேக்ஸ்பியர் படித்தே தீரவேண்டும் என்ற முறை வேண்டும். ஆங்கிலம் வளரவேண்டுமானால், ஓரளவு அதை எடுத்துக்கூறும் முறையும் உயர்ந்ததாக இருக்கவேண்டும். இப்போது பி.எஸ்ஸி. படித்தவர்கள் கூட 10 ஆவது வகுப்புக்கு ஆங்கிலம் சொல்லிக் கொடுக்க புலமை இல்லாது இருக்கிறார்கள். ஷேக்ஸ்பியர், மில்டன் இவர்களுடைய உயர்ந்த இலக்கியத்தை படித்த ஆசிரியர்கள் இல்லாததால் 10 ஆவது வகுப்பில் படிக்கும் மாணவர்களுக்கு ஆங்கிலத்தில் நல்ல புலமையில்லை. இதை அரசாங்கம் உடனடியாக கவனித்து நல்ல ஆங்கிலமும் தமிழும் மாணவர்களுக்கு எடுத்துக் கூறும் முறையிலே திட்டத்தை மாற்றி அமைப்பதோடு நல்ல கண்காணிப்பு இருக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இதே நேரத்தில் உயர்தர பள்ளி பொருத்த வரையில் அவைகள் நல்ல முறையிலே கண்காணிக்கப்பட்டு வருகின்றன. அதற்குக் காரணம் டி.இ.ஓ. தலைமையில் இருப்பதால்தான். இவைகளின் அமைப்பு முறை செம்மையாகவும் செழிப்பாகவும் இருக்கிறது.

கல்வியைப்பற்றிக் கூறும்போது அதில் இலக்கியத்தையும் இலக்கணத்தையும் கொண்டு வருகிறார்கள். மேல் நாட்டுக் கல்வியைப்பற்றி குறிப்பிடும்போது ஹோமரையும், ஷேக்ஸ்பியரையும், டாண்டேவையும் குறிப்பிடுகிறார்கள். அவர்கள் என்ன சொல்லுகிறார்கள் என்றால் பிற மொழிகள் அவர்கள் மொழிகளில் எவ்வளவுக்கு எவ்வளவு அதிகமாக இருக்கிறதோ அவ்வளவுக்கு அவ்வளவு நல்லது என்று சொல்லுகிறார்கள். அப்படியேதான் மற்ற மொழிகளிலுள்ள இலக்கிய நிபுணர்களும் சொல்லுகிறார்கள். அப்பொழுதுதான் அந்த மொழிகள் உயர்ந்த முறையில் இருக்கும் என்று சொல்லுகிறார்கள். ஆனால் தமிழ் மொழி அப்படி இல்லை. தமிழ் மொழிக்கு தனியாக இலக்கிய இலக்கணங்கள் இருக்கின்றன. தமிழ் மொழியில் எவ்வளவுக்கு எவ்வளவு புற மொழி இல்லாமல் இருக்கிறதோ அவ்வளவுக்கு அவ்வளவு அது உயர்ந்திருக்கும் என்பதை தமிழ் பயின்ற எல்லோரும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். தமிழ்ப் படிப்பாளிகளும் பேச்சாளர்களும், பத்திரிகையாளர்களும் எழுத்தாளர்களும் சொல்லியிருக்கிறார்கள். அவ்வளவு சிறப்பாக நம்முடைய தமிழைப்பற்றி கூறப்படுகிறது. ஆகவேதான் தமிழுக்கு சிறந்த இடம் கொடுக்கப்படவேண்டும்.

இங்கே ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். ஆதி காலத்தில் தமிழுக்குத் தனி இடம் கொடுக்கப்பட்டிருந்தது. தமிழ் தனித்து நிற்கும் என்று சொல்லப்பட்டது. அதன் பிறகு சங்க காலத்தில் தமிழ் மொழியில் 1,000-க்கு (ஆயிரத்திற்கு) மூன்று திசைச் சொல் வார்த்தைகள்தான் பிறமொழியின் கலப்பு இருந்தது. அதன் பிறகு தமிழ் நாட்டில் அவலத்தை அடிப்படையாகக் கொண்டு வாழ்வியலை விளக்க வந்த சமயவாதிகள் 100-க்கு (நூற்றுக்கு) 10 பிற மொழிச் சொற்களைக் கலந்தனர்; அதன் பிறகு ஆழ்வார்கள் அடியார்கள் 100-க்கு (நூற்றுக்கு) 20 வார்த்தைகள் பிறமொழிகளிலிருந்து கொண்டுவந்து கலந்தனர். பிறகு மணிப்பிரவாளமானது. அப்படி இருந்த தமிழ் மொழியை . . . .

(மணி அடிக்கப்பட்டு பேச்சு முடிந்தது.)



6th November 1957]

* Sri T. T. DANIEL: Sir, I should like to say a few words on the salient features of the White Paper on Education that has been introduced by the Hon. the Minister for Education. The most important question seems to be what exactly should be the place of the mother-tongue, Hindi and English languages in the system of education. So far as Tamil is concerned, it has been stated in the White Paper that it has passed the experimental stage and that the people have developed a certain amount of proficiency in the mother-tongue and that they had developed a certain amount of mental capacity and clear expression of their thoughts. Incidentally, the question arises as to what should be the medium of instruction in the University studies. While, we have accepted that the medium of instruction must be Tamil in the High School classes, I am of opinion that there is no other alternative for us except to see that the medium of instruction in the Colleges also is Tamil. In deciding this, several other points also arise for our consideration. At present, the medium of instruction in University classes is English. It creates a lot of difficulties for the students to understand what the lecturers and professors speak about the subjects that they teach. They are almost in a state of wilderness. We are to-day deciding the fate of our children who will be the pillars of our country tomorrow. So, we should take certain firm decisions on these matters. There is no room for any oscillating policy either on the part of the Legislature or the Government. If the Government thinks that the medium of instruction in the College should be Tamil, there must be a clear and categorical statement to that effect by the Government. The question arises as to how the policy of the Government is to be implemented. The University is an autonomous body. Is it proper for the Government to interfere with the affairs of the autonomous body? Is it proper for the Legislature to bring certain enactments or certain changes in the Act so as to suit the changed conditions in the country? Another great question also arises. Whenever we formulate the educational policy, should we do so only for our State taking into consideration the conditions existing in our State, or should we follow an educational policy taking into consideration the conditions obtaining in the country as a whole? Both these aspects should be considered. In my opinion, all these facts should be carefully considered before the Government decide these questions one way or the other. I do not underestimate the importance of the English language. Sir, the Prime Minister has stressed on several occasions the importance of the English language. We have to look at the question from a realistic point of view. It is no use if we are carried away by our appreciation, love and affection for our mother-tongue. We should also take into account the changed conditions in the World and also the great part that English is playing in international affairs.

Coming to another important factor, when we say that the medium of instruction must be Tamil, and when we say that even the subjects prescribed for professional courses should be taught in Tamil, what would be the fate of those students who try to get

admission into professional colleges of other Universities especially when the medium of instruction in their University is English? This aspect should engage the serious attention of the Government.

Technical education is given an important place in the White Paper. We all know that our country is turning towards the direction of a social and industrial revolution. There is vast scope for technical personnel, technicians, electricians, mechanics, etc. To-day, the present system of education only produces students who are fit to be employed as clerks. After these people pass their S.S.L.C. examination, it may not be possible for the Government to absorb all those persons and there will be some sort of discontentment and an ill-feeling in the minds of the students who go out of the High Schools after completing their S.S.L.C. course. So, the Government should arrange to have more technical institutions, polytechnics and also increase the strength of the professional colleges.

Coming to the question of Hindi, when we say that the students must study Hindi, it should be the policy of the Government to see that such students who take up the study of Hindi, if they pass in all the subjects except Hindi, they should not be failed. That kind of concession will really encourage the students to take up the study of the language. Then only, they will also have the feeling that Hindi language is not thrusted on them.

As for the conditions of service of teachers, I would say that so far as private secondary schools were concerned, I would recommend the system followed in the Kanyakumari district for the rest of the districts in this State. There, the teachers get their salary directly from the Government and 20 per cent of the fee is given to the management as a sort of compensation for running their institutions. Even there, I would say that the conditions of service of teachers are not satisfactory. A Graduate teacher is given a basic salary of Rs. 55 and an allowance of Rs. 33 while in the other parts of the State they get Rs. 85 as basic pay and Rs. 33 as allowance. I would also like to point out that a private primary school teacher in that district gets only Rs. 35 whereas his counterpart in other districts get a pay of Rs. 45.

In respect of basic trainees, in spite of our representations to the Government, to give Rs. 18 stipend no action seems to have been taken. I submit that there should not be any difference in the scales of pay between those given by the privately-managed schools and the departmental schools especially when the persons do the same work and possess the same qualifications.

As for the Provident Fund Scheme, I think it is not in force in all the schools. It is said that it is enforced in certain schools managed by the district boards and others in the State except Kanyakumari district. I understand that there is some sort of difference in scales of pay of Higher Grade Teachers employed in private schools and those employed in private schools. The Provident Fund Scheme, which has been sanctioned to the higher grade



and secondary school teachers in the Departmental schools should be extended to the private higher secondary school teachers also who are working in the other schools.

On the question of compulsory education, the Hon. Minister said that it would result in huge expenditure. We all know that the Government would have to incur some heavy expenditure. But Article 45 of the Constitution lays down that it is the moral duty of the State to give free compulsory education to all the pupils till they attain the age of 14. In this connection, I suggest that a sort of educational cess can be levied on all rich parents whose annual income is more than Rs. 1,200 per year. The people of our State have realised that free compulsory education is a necessity and they are extending their hearty co-operation to the scheme. I, therefore, suggest that a certain kind of educational cess should be collected from the rich parents, as is done in Western countries.

I would also like to point out that it would not be proper to leave it to the discretion of the pupil, when he is of a very tender age, to decide which course he should take, that is, the academic course or the pre-professional course. It is our experience that the talents of our students are not manifested at the tender age of 10 or 11. It has been generally conceded that 14th age is the correct age when the talents of our boys are manifested fairly. I would therefore like the Hon. Minister to consider whether it would be safe and proper to ask a pupil who has attained 10 or 11 years of age to decide which course he should take, the academic course or the pre-professional course.

SRI M. JAGANNATHAN : மதிப்பிற்குறிய சட்ட மன்றத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சபை முன்னால் வைக்கப்பட்டிருக்கும் கல்வி பற்றிய வெள்ளை அறிக்கை மீது விவாதிக்கும்போது நான் ஒரு சில கருத்துக்களை வழங்க முன் வந்திருக்கின்றேன். 12-03 p.m.

முதலாவது, இந்த வெள்ளை அறிக்கையிலே வரவேற்கத்தக்க சில அம்சங்கள் இருந்தபோதிலும் மற்றும் சில ஆட்சேபனைகளுக்குறிய அம் சங்களும் இருக்கின்றன என்பதை நான் குறிப்பாக சுட்டிக் காட்ட முன் வந்திருக்கிறேன். உதாரணமாக, நடுத்தரக் கல்விப் பாட முறைத் திட் டங்களில் பல விதமான மாறுதல்கள் இந்த வெள்ளை அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. அதே சமயத்தில், நடுத்தர்க் கல்விப் பயிலும் மாணவர்களுக்கு அவர்கள் படிக்கின்ற மொழிகளையெல்லாம் ஒன்றாகச் சேர்த்து, அவற்றை ஒரு பாடமுறைத் திட்டமாகவும் அமைக்கவேண்டு மென்று குறிப்பிடும்போது, பாட முறைத் திட்டத்தை மூன்று பாகங்க ளாகப் பிரித்து, முதல் பாகம் என்றும், இரண்டாம் பாகம் என்றும், மூன்றும் பாகம் என்றும், மூன்று மொழிகளை இந்த மூன்று பாகங்களி லும் புகுத்தியிருக்கிறார்கள்.

நடுத்தரக் கல்வி பயிலும் மாணவர்கள் மூன்று மொழிகளைக் கற்க வேண்டிய ஒரு நிர்ப்பந்தம் அவர்கள் மேல் சுமத்தப்பட்டிருப்பது நியாயம் அல்ல என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நடுத்தரக் கல்வி பயிலும் மாணவர்கள் மிகவும் இள வயதினராக இருக்கின்ற காரணத் தாலும், போதிய மனப் பக்குவம் அடையாத நிலைமையில் இருக்கிற காரணத்தாலும், அவர்களை மூன்று மொழிகளைப் பயிலும்படிக் கட்டாயப் படுத்தி, மூன்று மொழிகளிலும் அவர்கள் கட்டாயமாகப் பரீட்சை எழுதித் தேர்ச்சி பெறவேண்டுமென்று நிர்ப்பந்திப்பதெல்லாம் அவ்வளவு பொருத்தமானதல்ல. அது மாணவர்களுக்கு நன்மை செய்வதற்குப் பதிலாக தீமை செய்யும் என்பதில் சந்தேகம் இல்லை. எதற்காக

நம்முடைய அரசாங்கம் இப்பொழுது உடனடியாக மாணவர்கள் மூன்று மொழிகளைப் படிக்கவேண்டுமென்று இந்த திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை.

மாணவர்கள் ஏதாவது இரண்டு மொழிகள் படித்தால் போதும் என்று மாத்திரம் சர்க்கார் நடவடிக்கை எடுத்துக்கொள்வது மிகவும் நல்லது, அதாவது, பிராந்திய மொழி (ரீஜினல் லாங்க்வேஜ்) ஒன்றும், சர்வதேச மொழியாக இதுவரையில் நம்முடைய இந்தியாவிலே எல்லா மக்களாலும் படித்து பேசப்பட்டு வரும் ஆங்கில மொழி ஒன்றும், ஆக இவ்விரண்டு மொழிகள் மட்டும் இருந்தால் போதுமானது. பிராந்திய மொழியாகிய தமிழையும், சர்வதேச மொழியாக இருக்கிற ஆங்கிலத்தையும் மாத்திரம் மாணவர்கள், குறிப்பாக நடுத்தரக் கல்வி பயிலும் மாணவர்கள், படிப்பது மிகவும் நல்லது என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

கட்டாயக் கல்வியைப்பற்றி பேசும்போது, உண்மையிலேயே நம்முடைய அரசியல் சட்டத்தின் 45-வது பிரிவின் கருத்தை நிறைவேற்றுவதற்காக சர்க்கார் கொண்டுவந்திருக்கிற இந்தச் சிபார்சுகளெல்லாம் ஒரு விதத்தில் வரவேற்கத் தக்கவையே. ஆனால், அதே சமயத்தில் கட்டாயக் கல்வியை அமுலுக்குக் கொண்டுவரும் விஷயத்தில்,ஒரு ஜில்லாவை ஐந்து பாகங்களாகப் பிரித்துக்கொண்டு, ஒவ்வொரு பாகத்திற்கும் படிப்படியாக இந்த கட்டாயக் கல்வியைக் கொண்டுவரவேண்டும் என்றும் இந்த விஷயத்தில் சர்க்கார் கவனம் செலுத்துவார்கள் என்றும் கனம் கல்வி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆனால், இந்தக் கட்டாயக் கல்வியை அமுலுக்குக் கொண்டுவருகிறது உண்மையிலேயே ஏழை மக்களுக்கும், குறிப்பாக ஹரிஜனங்களுக்கும் மிகவும் நன்மை பயக்கக் கூடியதே. ஆனால், அதே சமயத்தில், இந்தக் கட்டாயக் கல்வி முறையை அமுலுக்குக் கொண்டு வரும் விஷயத்தில், மற்றொரு கோணத்திலிருந்து நாம் பார்ப்போமானால், அது ஹரிஜனங்களுக்கும் ஏழை மக்களுக்கும் ஒரு விதத்தில் கஷ்டத்தையும் துன்பத்தையும் கொடுக்கக் கூடியதாக இருக்கும். எப்படியென்றால் குறிப்பாக ஹரிஜனங்கள், பெரும்பாலும் நிலமில்லாத ஏழை விவசாயிகள், கூலி வேலை செய்து தங்களுடைய ஜீவனத்தைப் பெறுகிறவர்கள். அன்றாடம் கூலி வேலை செய்யக்கூடிய ஹரிஜனங்கள் தினந்தோரும் வயலுக்குப் போய் வேலை செய்யும்போது, அவர்கள் குடும்பத்திலிருக்கும் பள்ளிக்குப் போகக்கூடிய வயதுள்ள பையனையும் பெண்ணையும் அவர்கள் தங்களோடு வேலைக்கு அழைத்துக்கொண்டுபோய், அக்குழந்தைகளுடைய உதவியையும் பெற்று, தினந்தோறும் கூலியைச் சம்பாதித்துக்கொண்டு வருகிறார்கள். குடும்ப வருமானத்தைப் பெறுவதற்கு ஹரிஜனக் குழந்தைகளும் ஓரளவு பிரயோஜனப்படுகிற காரணத்தால், குழந்தைகளை வயலுக்கு அழைத்துக் கொண்டுபோக வேண்டிய கட்டத்தில், கட்டாயக் கல்வி முறையின்படி, இக்குழந்தைகள் பள்ளிக்கு வரவேண்டுமென்று நாம் நிர்ப்பந்திப்போமானால், அது உண்மையிலேயே ஏழைக் குடும்பங்களுக்கு கஷ்டத்தைத் தான் கொடுக்கும் என்று நான் வலியுறுத்திச் சொல்கிறேன். ஆகவே, இம்மாதிரியான, தவிர்க்க முடியாத காரணங்களால் ஒரு சில ஹரிஜனக் குடும்பங்களுக்கு விதி விலக்கு அளிப்பது மிக அவசியம். விதி விலக்கு அளிக்கும் விஷயத்தில், ஸ்தல ஸ்தாபனங்கள், குறிப்பாக பஞ்சாயத்து போர்டுகள், இவைகளுக்கெல்லாம் அந்த அதிகாரம் கொடுக்கப்படும் என்றும் அவர்கள் பரிசீலனை செய்து, எந்த எந்தக் குடும்பங்களில் இருக்கிற ஏழைக் குழந்தைகளுக்கு இந்த விதி விலக்கு கொடுக்கலாம், யார் யாருக்குக் கொடுக்கக்கூடாது என்று அவர்கள் சொல்கிற சிபார்சின் பேரிலே விதிவிலக்கு கொடுக்கப்படும் என்று வெள்ளை அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அது ஓரளவு நல்ல முறையிலே செயல்பட்டால்தான் அந்த ஹரிஜனக் குடும்பங்களுக்கு அது நன்மையாக முடியுமே தவிர, இல்லாவிட்டால் அது அவர்களுக்குத் துன்பத்தைக் கொடுக்கக் கூடிய கருவியாகத்தான் மாறிவிடும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அடுத்தபடியாக, ஆரம்ப ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் ஈவுத்தொகை கொடுக்கப்பட்டிருக்கிறது. ஒரு ஆசிரியருக்கு 40 மாணவர்கள் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த முறையானது





ஓரளவுக்கு பள்ளிகளில் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்துவதற்கு உபயோகப்படுமே தவிர, மாணவர்களுடைய கல்வி அபிவிருத்தியை வளர்ச்சி செய்வதற்கு இந்த முறையானது பயன்படாது என்பதை நான் வலியுறுத்திச் சொல்ல ஆசைப்படுகிறேன். ஒரு ஆசிரியருக்கு 40 மாணவர்கள் என்ற விகிதாசாரமானது மாற்றப்பட்டு, ஒரு ஆசிரியருக்கு ஏறக்குறைய 20 மாணவர்கள் இருக்கவேண்டுமென்ற முறையை அமுலுக்குக் கொண்டு வந்தால்தான் ஆசிரியர்கள் தங்களுடைய வகுப்புகளில் இருக்கும் சிறு குழந்தைகளுக்கு தனி கவனம் (Individual attention) செலுத்த முடியும். அப்படிச் செய்தால் மாணவர்களுடைய கல்வித் தரம் உயர முடியும் என்பதை இந்த சந்தர்ப்பத்தில் நான் சொல்லிக்கொள்ளுகிறேன்.

(Mr. Speaker in the Chair.)

அடுத்தபடியாக ஆரம்ப ஆசிரியர்களுடைய ஊதியத்தைப் பற்றி ஒரு வார்த்தை சொல்ல விரும்புகிறேன். ஆரம்ப ஆசிரியர்களுக்கு இப்பொழுது கொடுக்கப்படும் ஊதியம் மிகவும் குறைவானது என்பதை நாம் எல்லோரும் ஒத்துக்கொள்ளவேண்டும். அடிப்படை சம்பளம் ஏறக்குறைய ரூ. 50 கொடுத்தால்தான் அவர்கள் தங்கள் வாழ்க்கையை நடத்த முடியும். கல்வித் துறையிலே நமது நாடு மிகவும் பிற்போக்கான நிலைமையில் இருப்பதின் அடிப்படை காரணம் ஆரம்ப ஆசிரியர்களுக்கு போதிய ஊதியம் கொடுக்காமல் இருப்பது தான். சமீபத்தில் நான் மலேயா, பினாங், சிங்கப்பூர் முதலிய இடங்களில் சுற்றுப் பிரயாணம் செய்துவிட்டு வந்தேன். சிறு தேசமாக இருந்தாலும், அங்கெல்லாம் கல்வி மிகவும் அபிவிருத்தி அடைந்திருக்கிறது. அதற்கு அடிப்படை காரணம் அங்குள்ள ஆரம்ப ஆசிரியர்கள் நல்ல சம்பளம் பெறுகிறார்கள். சாதாரணமாக அங்கே ஒரு ஆரம்ப ஆசிரியர் 300, 400 ரூபாய் சம்பளம் பெறுகிறார் என்றால், நம்முடைய நாட்டில் வாழ்கின்ற ஆரம்ப ஆசிரியர்களின் நிலையை பார்க்கும் பொழுது, உண்மையிலேயே பரிதாபப்படவேண்டிய நிலையில்தான் அவர்கள் இருக்கிறார்கள். நம்மைச் சுற்றியிருக்கும் சிறு நாடுகளில் இருக்கும் நிலைமையை, செல்வம் கொழிக்கும் நம் நாடு என்று சொல்லுகிறோமோ அந்த நம் நாட்டிலும், அதே சூழ் நிலையை, குறிப்பாக ஆரம்ப ஆசிரியர்கள் சம்பள விஷயத்திலாவது நாம் உடனடியாக கொண்டுவர முயற்சி செய்யவேண்டும். அப்படிச் செய்தால் தான் நன்றாகப் படித்தவர்களும் திறமையாக உள்ளவர்களும் "டீசிங் ப்ரொபெஷனுக்கு" கல்வி போதிக்கும் தொழிலுக்கு வருவார்கள். அதனால் நம் நாட்டு குழந்தைகளுக்கு கல்வி நல்ல முறையில் போதிக்க முடியும், நாம் நன்றாக முன்னேற முடியும் என்று சொல்லிக்கொண்டு என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்ளுகிறேன்.

## I.—ANNOUNCEMENTS BY THE HON. SPEAKER—*RE*—*cont.*

### (2) PROGRAMME OF BUSINESS.

MR. SPEAKER: I have to announce to the House the following changes in the Programme of Business as approved by the Business Advisory Committee at its meeting held on the 1st November 1957 which has already been circulated to Members:—

After the non-official business is over in the forenoon on the 7th November 1957, the House will sit in the afternoon also from 3 to 5-30 p.m. and continue the discussion on the Report of the Legislature Committee on the White Paper on Education, if necessary speakers are forthcoming.

On the 9th November 1957, the House will adjourn after considering the Madras Village Panchayats (Amendment) Bill as reported by the Select Committee.

On the 11th November 1957, after the presentation of the Supplementary Statement of Expenditure for the year 1957–58, the Prevention of Insults to National Honour Bill, 1957, will be taken into consideration. The time allotted for this Bill is 2 hours. The general discussion on the Money Lenders' Bill, 1957, will be taken up after this Bill. The House will also sit in the afternoon from 3 to 5 p.m. and complete the general discussion on the Money Lenders' Bill, 1957.

On the 12th November 1957, the clause by clause consideration of the Money Lenders' Bill, 1957, will be taken up.

On the 13th November 1957 after considering the Motion to refer the Madras Bhoodan Yagna Bill, 1957, to the Select Committee, the following Government Bills will be taken up :—

(1) The Cattle Tresspass (Madras Amendment) Bill, 1957.

(2) The Madras (Transferred Territory) Re-enacting Bill, 1957.

(3) The Madras (Transferred Territory) Extension of Laws Bill, 1957.

There is no change in the rest of the programme. I will have this programme circulated to hon. Members by this evening so that they can follow it.

முக்கியமான மாறுதல் என்னவென்றால் இந்தக் கல்வி சம்பந்தமான வெள்ளை அறிக்கையின் மீது விவாதிப்பதற்கு நாளை மத்தியானம் கூட 3-லிருந்து 5–30 வரையில் நேரம் கிடைக்கிறது என்பதை அங்கத்தினர்களுக்கு சொல்லிக்கொள்ளுகிறேன்.

## V—GOVERNMENT MOTIONS—*cont.*

### (2) REPORT OF THE LEGISLATURE COMMITTEE ON THE WHITE PAPER ON EDUCATION.

* **Sri T. P. ELUMALAI** : கனம் சபாநாயகர் அவர்களே, சபை முன்பு வைக்கப்பட்டிருக்கிற கல்வியின் வெள்ளை அறிக்கை பற்றி நமது நிதி அமைச்சர் அவர்கள் பல விளக்கங்கள் கொடுத்து பேசினார்கள். இதை நான் மனப்பூர்வமாக ஆதரிக்கிறேன். அதை ஆதரித்து, மேலும் சில அபிப்பிராயங்களையும் சொல்ல முன்வருகிறேன். பொதுவாக நம்முடைய நாட்டிலே கல்வியின் தரத்திற்காக இந்த சர்க்கார் நிறைய செலவு செய்திருந்தபோதிலும், அந்தக் கல்வியை அடைந்தவர்கள் நாட்டிற்கு எந்த அளவு தங்களுடைய உதவியைச் செய்திருக்கிறார்கள் என்பதே இதனுடைய முக்கியமான குறிக்கோளாக இருக்கிறது. குறிப்பாக இந்த நாட்டின் ஏழை மக்கள் எல்லோரும் கொடுக்கின்ற வரிப்பணத்தை வைத்துக்கொண்டு தான் அத்தனை பேர்களும் படிக்கிறார்கள். படித்து முடித்தபிறகு நாட்டில் இருக்கின்ற அத்தனை ஏழைகளுக்கும் அவர்கள் கருத்து பயன்படும் அளவுக்கு இப்பொழுது போடப்பட்டிருக்கிற கல்வித் திட்டம் இருக்கும் என்று நான் மனப்பூர்வமாக நம்புகிறேன். குறிப்பாக படித்தவர்கள் அத்தனை பேரும் படிக்க வாய்ப்பு இல்லாதவர்கள் இடத்தில் மிகவும் எளிய முறையில், கீழ் அதிகாரிகளாக இருந்தாலும் சரி, மேல் அதிகாரிகளாக இருந்தாலும் சரி, நடந்துகொள்ளும் முறையில் வழிகாட்டுகின்ற ஒரு தன்மை இந்த வெள்ளை அறிக்கையில் இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்ள பிரியப்படுகிறேன்.

குறிப்பாக நம்முடைய நாட்டிலே இப்பொழுது கொண்டுவரப்பட்டிருக்கிற கல்வித் திட்டத்தை பார்க்கும்பொழுது ஒவ்வொரு பிரிவுக்கும் அதில் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. அதாவது இந்த நாட்டில் முக்கியமாகப் பேசப்படுகின்ற மூன்று மொழிக்கு முக்கியத்துவம் கொடுக்கப்





பட்டிருக்கிறது. முதலில் தமிழை அவர்கள் எடுத்துப் படிப்பதற்கு, தமிழிலே
அரசியல் நடத்துகின்ற இந்த நாட்டில் சர்க்காரில் பங்கு கொள்ளும்
அளவிற்கு அவர்கள் பக்குவப்படுவதற்கு, வாய்ப்பு இருக்கிறது. தவிர,
நாட்டு மொழியாகிய ஹிந்தியை படித்து அதன் மூலம் இந்திய நாட்டிலே
மற்ற அரசாங்கத்திலும் பங்கு கொண்டு நல்ல முறையிலே பயன் அடை
வதற்கு ஹிந்தியை அவர்கள் இஷ்ட பாடமாக வைத்திருக்கிறார்கள். ஒரு
சிலர் ஹிந்தி இந்த நாட்டிற்கு உதவாது என்று சொன்னால் அவர்களை
மட்டும் விட்டுவிடலாமே தவிர, விரும்புகிறவர்கள் படிப்பதற்கு ஒரு வாய்ப்பு
கொடுக்கவேண்டும். அப்படி ஹிந்தி வேண்டாம் என்று சொல்லுகிறவர்கள்
தான் ஹிந்தியை முதலிலே படிக்கிறார்கள். மேலும் ஹிந்தி மற்றவர்
களுக்கு வேண்டாம் என்று சொல்லிவிட்டு ஹிந்தியைப் படிக்க
வாய்ப்பு பெற்றவர்கள் படித்துவிட்டு, படிக்க வாய்ப்பு பெறாத ஏழை
மக்களுக்கு வாய்ப்பு மறுக்கின்ற தன்மையை உணர்கின்றோம். இதனால்
சர்க்கார் உத்தியோகஸ்தர்களும், மெம்பர்களும் யாருக்கு என்ன வாய்ப்பு
வேண்டுமென்று பிரியப்படுகின்றார்களோ, அதற்கு தகுந்த முறையில்
நடந்துகொள்ளவேண்டும். அதற்கு எதிர்த்து பிரசாரம் செய்யும் அளவில்
தமிழ் நாட்டில் இருக்கக்கூடாது என்று மிகப் பணிவுடன் கேட்டுக்கொள்ளு
கிறேன். குறிப்பாக தாழ்த்தப்பட்ட வகுப்பில் இருக்கிற என் போன்றவர்
களுக்கு—சேரியில் வசிக்கின்ற என் போன்றவர்களுக்கு—"இந்தியைப் படிக்க
வேண்டாம்" என்று சிலர் சொல்லும்போது படித்தால் அதனால் என்ன
கெடுதி உண்டாகுமோ, என்ன ஆபத்து வருமோ, என அஞ்சி இந்தி
வேண்டாம் என்றே எதிர்க்கின்ற அளவுக்கு அறியாமையில் ஆழ்ந்து
ஏமாறவேண்டியதாக ஆகிறது. அப்படி இல்லாமல் வசதி உள்ளவர்கள்
அதைப் படிப்பதனால் ஏற்படுகின்ற அனுகூலம் எங்கள் சமூகத்தாருக்கும்
இல்லாமல் போகும்படிவிடாது—தப்பான அர்த்தத்தில் போகாத அளவுக்கு
இந்த நாட்டில் ஒரு பிரசாரம் இருக்கவேண்டுமென்று பணிவோடு கேட்டுக்
கொள்கிறேன்.

தவிரவும் இந்த அறிக்கையில் பள்ளிக்கூட கட்டிட விஷயமாகவும்,
சுகாதார விஷயமாகவும் வற்புறுத்தப்பட்டிருக்கிறது. குறிப்பாக பள்ளி
கட்டிடத்திற்கும், சுகாதார நிலைக்கும்தான் இந்தச் சர்க்கார் அதிக முக்
கியத்துவம் கொடுக்கவேண்டும் என்பதும் என் அபிப்பிராயம். நான் பல
பாகங்களில் பார்த்து இருக்கிறேன். அநேக இடங்களில் பள்ளி கட்டிடங்
களுக்கு மேல் கூறை இல்லாமல் இருக்கிறது. சர்க்கார் அதற்கு முக்கியத்
துவம் கொடுத்தாலும் பள்ளிகளை நிர்வகிக்கின்றவர்கள், மேற்பார்வை செய்
கின்றவர்கள், தங்களுக்குள்ள வசதிக் குறைவினால் அப்படி கட்டிடத்தையே
லட்சியம் செய்யாமல் இருக்கிறார்கள். பள்ளிகளுக்கு சரியான கட்டிடங்கள்
இருக்கின்றனவா என்பதையும், அங்கே சுகாதாரக் குறைவு இல்லாமல்
இருக்கின்றதா என்பதையும் சர்க்கார் நல்ல முறையில் கண்காணித்து
கொள்ளவேண்டுமென்பதாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் ஒரு விஷயம். திருவொற்றியூரில் ஒரு ஹைஸ்கூல் இருக்
கிறது. திருவொற்றியூரில் இருக்கும்படியான பஞ்சாயத்தும் நல்ல வரு
மானம் உள்ள பஞ்சாயத்து. அவர்கள் அந்த ஹைஸ்கூலுக்குக் கொஞ்சம்
நிதி உதவி செய்யலாம் என்று நினைத்தால் சட்டம் அதற்குக் குறுக்காக
இருக்கிறதாம். அந்த ஹைஸ்கூலுக்கு வேண்டிய பணத்தைக் கொடுக்க
அவர்கள் தயாராய் இருக்கிறார்கள். ஆனால் சட்டம்தான் இடம் கொடுக்க
வில்லை. ஆகவே ஆங்காங்குள்ள பஞ்சாயத்துகளோ, ஸ்தல ஸ்தாபனங்
களோ நிதி வசதி இருந்து ஆங்காங்குள்ள பள்ளிக்கூடங்களுக்கு கட்டிட
வசதியோ இதர வசதியோ செய்து கொடுக்க முன்வந்தால் அதற்குச் சட்டம்
குறுக்கே நில்லாதபடிக்கு அதைத் திருத்தி அமைக்கவேண்டும் என்பதாக
வும் இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் ஆங்காங்குள்ள பள்ளிக்கூடங்களை முன்னேற்றம் அடையச்
செய்ய நாம் நடவடிக்கைகள் எடுக்கும்போது அந்த அந்தப் பிராந்தியங்
களில் இருக்கக்கூடிய கமிட்டிகள், முக்கியஸ்தர்கள் இவர்களுடைய உதவி
யையும் கோரவேண்டும். அவர்களுக்கும் அதில் பொறுப்பு இருக்கும்படி
யாகச் செய்யவேண்டும். இவர்கள் மேற்பார்வையில் விட்டால் நல்ல முறையில்

[Sri T. P. Elumalai] [6th November 1957

பல அபிவிருத்திகளைச் செய்யமுடியும் என்று நினைக்கிறேன். மத்யான உணவு கொடுக்கும் திட்டத்திற்கு அவர்களிடம் இருந்து வந்திருக்கும்படியான ஆதரவும் உற்சாகமும் அவர்களுக்கும் கல்வி விஷயத்தில் அதிக அக்கறை இருந்துகொண்டிருப்பதைத்தான் காட்டுகிறது. நேரிடையான நல்ல ஒத்துழைப்பு அவர்களிடம் இருந்து நமக்குக் கிடைத்துக் கொண்டிருப்பதனால் இவ்விஷயத்திலும் அவர்களுக்கு ஒரு பொறுப்பை உண்டாக்கி, அவர்கள் உதவியைப் பெறவேண்டும், அவர்களைப் பயன்படுத்திக்கொள்ளவேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் நம்முடைய கம்யூனிஸ்டு கட்சித் தலைவர் கனம் கல்யாணசுந்தரம்—ராமநாதபுரம் ஜில்லா கலவரம் பற்றிய விவாதத்தில் பேசும்போது—சாதி அடிப்படையில் யாருக்கும் ஒரு தனிச் சலுகை காட்டக்கூடாது என்பதாகச் சொன்னார்கள். ஆனால் வெகுகாலமாக தாழ்த்தப்பட்ட நிலையிலேயே இருந்துகொண்டிருந்த ஹரிஜன மக்களுக்கு இந்தச் சர்க்கார் கல்வி விஷயத்தில் இதுவரையில் கொஞ்சம் காட்டி வந்திருக்கும்படியான சலுகைகள்தான் அவர்கள் இவ்வளவு தூரம் முன்னேற்றம் அடைவதற்கு வழி செய்திருக்கிறது என்பதை நாம் மறந்துவிட முடியாது. ஆகவே மேலும் இந்தச் சலுகைகளை பின்தங்கிய சமூகத்தாருக்குச் செய்துதர வேண்டும், அவர்கள் கல்வித் துறையில் முன்னேற்றம் அடைவதற்கான வழிவகைகளை மேலும் மேலும் நல்ல முறையில் இந்தச் சர்க்கார் செய்ய வேண்டுமென்பதாக இந்தச் சந்தர்ப்பத்தில் மிக்க பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் பாட புஸ்தகங்கள் சம்பந்தமாக ஒரு விஷயத்தைச் சொல்ல விரும்புகிறேன். நல்ல படங்கள் எல்லாம் போட்டிருக்கும்படியான சாதாரண புஸ்தகம்—அதைப் பார்த்தவுடனேயே ஐந்து ரூபாய் இருக்கும் என மதிப்பிடக்கூடிய புஸ்தகம்—இன்றைக்கு ஒரு ரூபாய்க்குக் கிடைக்கிறது. ஆனால் பாட புஸ்தகங்கள் 20 பக்கங்கள் இருக்கக்கூடிய புஸ்தகம்கூட ஒரு ரூபாய் என்று விற்கப்படுகிறது. பாட புஸ்தகங்களுக்கு விலை ஏற்றம் தனியாக இருப்பதற்குக் காரணம் தனிப்பட்ட வியாபாரிகளின் லாபம் அடிக்கும் ஆசைதான். இதனாலேயே பள்ளிக்கூடத்தில் சேர்ந்துவிட்ட மாணவர்கள் கூட பாட புஸ்தகங்களுக்கு ஆகும் ஏராளமான பணத்தை உத்தேசித்து பள்ளிக்கூடத்தை விட்டுவிடக்கூடிய நிலைமை ஏற்படுவதைப் பார்க்கிறோம். ஆகவே இப்போது சர்க்கார் செய்திருக்கும்படியான ஏற்பாட்டைப் பாராட்டி மலிவான விலையில் எல்லா மாணவர்களுக்கும் புஸ்தகம் கிடைப்பதற்கு சர்க்காரே அந்த ஏற்பாட்டைச் செய்யவேண்டும் என்பதாகக் கேட்டுக் கொள்கிறேன்.

தொழிற்கல்வியைப் பற்றியும் சொல்லியிருக்கிறார்கள். எல்லோருக்கும் தொழிற்கல்வி அளிக்கப்படவேண்டும் என்பதுதான் அபிப்பிராயம்—பெரிய படித்த குடும்பத்தில் இருக்கும் குழந்தை முதற்கொண்டு—படிக்காத ஏழைவீட்டுக் குழந்தைகள் முதற்கொண்டு—தொழிற்கல்வியை நான் படிக்கவில்லை என்று சொன்னாலும்—அவர்களையும் வற்புறுத்தி எல்லோருக்கும் பள்ளிகளில் தொழிற்கல்வி கொடுத்தால்தான் ஒரு தொழில் செய்யும் சமூகம் மட்டம் என்று நினைக்கிற மனப்பான்மையை அடியோடு ஒழிக்க முடியும். படித்தவர்கள் வீட்டுப் பிள்ளை, படிக்காதவர்கள் வீட்டுப் பிள்ளை என்கிற வேறுபாடு இல்லாமல் தொழில் கல்வி பள்ளிக்கூடங்களில் எல்லா மாணவர்களுக்கும் சொல்லிக்கொடுக்கவேண்டுமென்பதாகக் கேட்டுக்கொண்டு நான் முடித்துக்கொள்கிறேன்.

12·27 p.m. **Sri A. E. CHANDRASEKHARA NAYAGAR** : கனம் சபாநாயகர் அவர்களே, இங்கே சமர்ப்பிக்கப்பட்டிருக்கிற வெள்ளை அறிக்கையின் மேல் நான் இரண்டு முக்கியமான அம்சங்களைப்பற்றி குறிப்பிட விரும்புகிறேன். அரசியல் சட்டப்படி பத்துவருஷ காலத்திற்குள்ளாக எல்லாருக்கும் ஆரம்பக் கல்வி இலவசமாக அளிக்கப்படவேண்டுமென்று கூறியிருக்கிறார்கள். அதில் நாம் ஒரு நிதானப் போக்கை—பண வசதி இல்லை என்ற காரணத்தைக்காட்டி—அனுசரிப்பது சரியில்லை என்பது என் கருத்து. அரசியல் சட்டம் தயாரிக்கப்பட்டபோதே அவர்கள் இதை ரொம்பவும் தீர்க்காலோசனை செய்துகொண்டு வந்திருக்கிறார்கள். இதைத் தீட்டும்



6th November 1957] [Sri A. E. Chandrasekhara Nayagar]

காலத்தில் பொருளாதார நிலை இப்போது இருப்பதைவிட ஏறத்தாழ குறைவாகவேதான் இருந்திருக்கிறது. இருந்தும் இப்படிச் செய்வதற்குரிய சாத்தியக்கூறுகள் இருப்பதை உணர்ந்தே அவர்கள் அப்படிச் செய்திருக்கிறார்கள். ஆகவே இதைத் தீவிரமாகச் சிந்தனை செய்து அரசியல் சட்டத்தில் கண்டபடி அமுல் நடத்துவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பணம் இல்லை என்றால் சில வரிகளைப் போட்டாவது செய்தால்தான் ஜனநாயகம் நல்ல முறையில் வளரும். மக்களது அறிவும் பெருகும்.

பொதுவாக இந்த அறிக்கையில் கல்வி விஷயங்களைப் பற்றி எல்லாம் நல்ல முறையில் பரிசீலனை செய்து அநேகம் சிபார்சுகள் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன என்பது என் கருத்து. எலிமெண்டரி எஜூகேஷன், செகண்டரி எஜூகேஷன், இவை இரண்டுக்கும் பிரதானமான ஒரு அமைப்பு இருக்கவேண்டும். பொதுவாக இந்தக் கல்வித் திட்டம் மூன்று பிரிவுகளாக இருக்கவேண்டுமே அல்லாது இரண்டாக வைத்துவிடக்கூடாது. மூன்றாக இருந்தால்தான் கிராமங்களில் இம்முறை நல்ல பயன்தரும் என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம்.

மேலும், அந்த கல்விக்காக முக்கியமான விஷயங்கள், புத்தகங்கள் மற்றும் உப கருவிகள் தேவையாயிருக்கிறது. புத்தகங்கள் வெளியிடும் ஒரு விஷயத்தைப் பற்றி, வெள்ளை அறிக்கையில் வெளியாருக்கே—வியாபாரிகளுக்கே—விட்டுவிட வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. அது, தவறான கொள்கை என்று நான் கருதுகிறேன். புத்தகங்கள் வெளியிடுவதை சர்க்காரே மேற்கொள்ள வேண்டும். வியாபாரிகளிடம் விட்டால், அவர்கள் அதை ஒரு வியாபார முறையில்தான் கையாண்டு புத்தகங்களை தயார் செய்து வெளியிடுகிறார்கள். நாட்டின் கல்வித்தரம் உயரவேண்டும், கல்வி வளர்ச்சி ஏற்படவேண்டும் என்று அவர்கள் நினைப்பதில்லை. அதை ஒரு வியாபாரமாகவே செய்கிறார்கள். ஆகவே புத்தகங்கள் வெளியிடுவதை சர்க்காரே மேற்கொள்ளவேண்டும். ஆந்திர சர்க்கார் அப்படி தாங்களே புத்தகங்களை வெளியிட முற்பட்டிருக்கிறார்கள். அதே போல் நம் சர்க்காரும் முற்பட வேண்டும். அப்படிச் செய்வதில் மூன்று வருஷத்திற்கு ஒரு முறை புத்தகங்கள் எழுதுபவர்களைக் கொண்டே ஒரு போட்டி அமைத்து அந்தப் போட்டி மூலம் புத்தகங்களை வெளியிடலாம் என்ற என் கருத்தை வெளியிட்டுக்கொள்ள விரும்புகிறேன். இதற்காக, சென்னையிலும், மற்றும் ஒவ்வொரு ஜில்லாவிலும் "கல்வி புத்தக வெளியீடு ஸ்தாபனம்" அமைத்து, ப்ரஸ்களும் அமைத்து, பள்ளிக்கூடங்களுக்கு வேண்டிய சாதனங்களை செய்துகொடுக்க வேண்டும். அதோடு கூட, ஸ்கூல்களுக்கு வேண்டிய பர்ணீச்சர் போன்ற சாமான்களை தயாரிக்க ஒவ்வொரு ஜில்லாவினுடைய சுயதேவையைப் பூர்த்தி செய்யக்கூடிய அளவில் "இன்டஸ்ட்ரியல் ஸ்கூல்" இருக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அம்மாதிரி இருந்தால்தான் நல்லமுறையில் கல்வி வளர்ச்சியை நாம் பெற முடியும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். அடுத்தபடியாக, இங்கு ஹிந்தியைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். இதற்கு முன்னால் நாம் எல்லோரும் படிக்கும்போது ஆங்கிலத்தை நாம் கட்டாய பாடமாகத்தான் படித்தோம். தமிழையும் கட்டாய பாடமாகப் படித்தோம். அதுபோல் ஹிந்தியும் ஒரு பாடமாக இருப்பதால் பாதகம் ஒன்றும் ஏற்பட்டுவிடாது. ஹிந்தியை நாம் விட்டுவிட்டால், பின்னால் நாம் அகில இந்தியாவில் பிற்பட்டுவிடுவோம் என்று நான் எச்சரிக்க விரும்புகிறேன். ஆகவே, நாம் ஜாக்கிரதையுடன் நம் தேசீய பாஷையை வளர்ப்பதில் கவனம் செலுத்தவேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

**Sri M. P. SUBRAMANIAM** : அவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பேசுகின்ற நேரத்திலே, இந்தக் கல்வித் திட்டத்திலே 12-30 p.m.
அடிக்கடி அமைச்சரவையும், சம்பந்தப்பட்ட அமைச்சரும் மாற்றம் செய்வதைத் தடுக்கும்பொருட்டு ஒரு சட்டத்தை கொண்டு வருவது மேல் என்று கூறியதை நான் முழு மனதோடு வரவேற்கிறேன். காலம் வேகமாக மாறிக் கொண்டு வருகிற இந்தக் காலத்தில் கல்வித்திட்டத்தில் மாற்றம் இருக்காது என்பதல்ல. கல்வி என்றால் ஒரு சமுதாயத்தை ஏறக்குறைய ஒரு தலை

[Sri M. P. Subramaniam] [6th November 1957

முறையைப் பாதிக்கக்கூடிய ஒரு பிரச்னையாய் இருப்பதால் ஆளுகிற அமைச்சரவையோ அல்லது சம்பந்தப்பட்ட அமைச்சரோ அடிக்கடி அதை மாற்றியமைத்துக்கொண்டு போவது ஒரு தலைமுறையையே பாதிக்கக்கூடியதாகையால் அதற்கு என ஒரு சட்டம் கொண்டுவருவது மேல். அவசியம் வரும்போது சட்டசபையில் அதைக் கொண்டு வந்து விவாதித்த பிற்பாடு மாற்றம் செய்வதுதான் உசிதம் என்று நானும் கருதுகிறேன். அடிக்கடி கல்வித் திட்டத்தில் மாறுதல்கள் அவசியமில்லை என்றாலும் காலத்திற்கொப்ப சில மாறுதல்கள் செய்ய வேண்டியிருக்கிறது. இப்போழுது சில பிரச்னைகளை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ள முக்கியமான காரணம், சில இன்றியமையாத மாறுதல்களை செய்வதற்குத்தான், அப்படி செய்தும் வருகிறோம், செய்யவும் போகிறோம். இவைகளில் முதன்மையானது, அரசியல் சட்டத்தில் குறிப்பிட்டிருப்பது போல், இந்த 11 வயது வரை எல்லாக் குழந்தைகளுக்கும் இலவச கட்டாயக் கல்வி அளிக்கப்படவேண்டும் என்பதுதான். அதைப் பூர்த்தி செய்யவேண்டும். 1960-ம் ஆண்டிற்குள் அதைப் பூர்த்தி செய்யவேண்டுமென்று விதி இருந்தாலும் 1965-க்கு உள்ளாகவாவது ஐந்தாவது வகுப்பு வரையாவது இலவச கட்டாயக் கல்வி கொடுக்க வேண்டுமென்று அமைச்சர் அவர்கள் தமது விருப்பத்தைத் தெரிவித்திருப்பது பாராட்டத்தக்கதுதான். ஆனால் அந்த நிலையைக்கூட நம்மால் அடைய முடியுமா என்பதைப் பற்றியே பயப்பட வேண்டியிருக்கிறது. அதற்கு காரணம், அரசாங்கம் அதில் அவ்வளவு கவனம், அதற்கு வேண்டிய வகையில் முயற்சி எடுத்துக்கொள்ளவில்லை என்றுதான் நான் கருதுகிறேன். அமைச்சர் அவர்கள் கூறுகிற நேரத்தில் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 1,100 கோடி ரூபாய் கல்விக்காக ஒதுக்கி படிப்படியாக அது குறைந்து 350 கோடியாக குறைக்கப்பட்ட செயலை இங்கு குறிப்பிட்டார்கள். இதைப் பற்றி மாகாண கல்வியமைச்சர் அவர்கள் மட்டுமல்ல, மத்திய அரசாங்க கல்வியமைச்சராயிருக்கும் ஸ்ரீ அபுல் கலாம் ஆசாத் அவர்களும் பலமுறை கண்ணீர் விட்டிருக்கிறார்கள். எத்தனையோ முறை பிரதம மந்திரியவர்களிடமும் பிற மந்திரிகள் அனைவரிடமும் சொல்லியும் அவரது வாதம் ஒப்புக்கொள்ளப்படவில்லை என்று கூறியிருக்கிறார்கள். இதை மனதில் வைத்துக்கொள்ள வேண்டும். நீர்தேக்கங்கள், மின்சாரத் திட்டங்கள், தண்ணீர் திட்டங்கள் போன்றவைகளுக்கு நிறைய பணம் தேவையாயிருக்கும்போது கல்விக்காக கூடுதல் பணம் ஒதுக்க முடியாது என்று சொல்லலாம். ஆனால் ஒன்றை நாம் உணர வேண்டும். மனிதன் ஒருவன் ஏழையாக இருந்தாலும் கூட கல்வி அறிவு உடையவனாய் இருப்பது மேலே தவிர, கல்வி அறிவு இல்லாத மூடனாக இருப்பது நல்லதல்ல. பிச்சை எடுத்தாலும் கற்க வேண்டியது மேல் என்ற முதுமொழியின் அடிப்படையில் வந்தவர்கள், நாம். அதற்காக ஒரு பெரிய பொறுப்பை சமுதாயம் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்ற நிர்ப்பந்தம் ஏற்பட்டால் சமுதாயம் அதை ஏற்றுக்கொள்ளத் தயாராயிருக்கிறது என்று அமைச்சர் அவர்களிடம் சொல்லிக்கொள்கிறேன். ஆகவே, இந்த திட்டத்தை நிறைவேற்றித்தான் தீர வேண்டும். ஜனநாயக முறையில் நாம் நம் அரசியல் முறையை வகுத்துக் கொண்டிருக்கும்போது, எல்லோரும் எல்லாப் பதவிகளையும் வகிக்கலாம் என்று நாம் சொல்லும்போது, எல்லா மக்களுக்கும் கல்வி அறிவைக் கொடுப்பது இன்றியமையாததாகும். அடுத்தபடியாக, கல்வித்தரம் "குறைந்து விட்டது, குறைந்து விட்டது" என்று எங்கு பார்த்தாலும் பேச்சு இருக்கிறது. கல்வித்தரம் குறைந்து விட்டது என்று சிலர் எண்ணுகிறார்கள். முன்பு கல்வி என்பது ஒரு சிலரது ஏகபோக உரிமையாயிருந்தது. இன்று அது பலருக்கும் கிடைத்து விட்டதே என்று--அது மலிவாகி விட்டதே என்று--கூறுவார்கள். உதாரணமாக ஒரு கிராமத்தை நாம் எடுத்துக்கொண்டால், முன்பு ஒருவன் பி.ஏ. படித்திருந்தால் அது அப்பேர்ப்பட்ட படிப்பு, இப்பேர்ப்பட்ட படிப்பு என்றெல்லாம் சொல்வார்கள். ஆனால் ஒரு பத்து பேர்கள் படித்து பாஸ் செய்துவிட்டால், சாதாரண ஏழை பிள்ளைகள்கூட படித்து விட்டார்களே, கல்வியின் தரம் மிகக் குறைந்து விட்டது என்று சொல்வார்கள். ஆங்கிலத்தில் வேண்டுமானால் கல்வித்தரம் குறைந்து விட்டது என்று சொல்லலாம். முன்பு எட்டாவது வகுப்பு முதல் ஆங்கிலம் போதனமொழியாக இருந்தது—இப்பொழுதில்லை. அதனால் ஆங்கிலத்தில்



6th November 1957] [Sri M. P. Subramaniam]

வேண்டுமானால் கல்வித்தரம் குறைந்து விட்டது என்று சொல்லலாம். நாம் அடிக்கடி பத்திரிகைகளில் பார்க்கிறோம், சர்வீஸ் கமிஷன் பரீட்சைகளில் மாணவர்கள் சிரிக்கும் விதத்தில் பதில்கள் கொடுத்திருப்பதைக் காண்கிறோம். ஆனால் மாணவர்களிடையே எதிர்பார்க்கக்கூடிய பொது அறிவு, முன்பு இருந்ததை விட இப்பொழுது கூடுதல் என்றே கூற வேண்டும். இன்று எஸ்.எஸ்.எல்.ஸி. படித்த மாணவனிடம் இருக்கும் பொது அறிவு அந்தக் காலத்தில் பி.ஏ. படித்தவனுக்குக் கூட இருந்திருக்க முடியாது, என்று நான் திட்டவட்டமாகக் கூற முடியும். பொதுத் துறையில் கல்வி அறிவு குறைந்து விட்டது என்று சொல்வது தவறாகும். அடுத்தபடியாக நான் சொல்ல விரும்புவது என்னவென்றால், பள்ளிக்கூடம். பிள்ளைகளை பள்ளிக்கூடத்தில் சேர்க்கும் வயதைப் பற்றி சென்ற சட்டசபைக் கூட்டத்தில் அமைச்சர் அவர்கள் பேசியிருக்கிறார்கள். பல ராஜ்யங்களிலும், ஏழாவது வயது வரைக் கூட பள்ளிகளில் பிள்ளைகளைச் சேர்க்காமல் இருக்கிறார்கள், ஆகவே நாம் ஐந்து வயது என்று வைத்திருப்பதை ஆறாக வைப்பதில் தவறில்லை என்று கூறியிருக்கிறார்கள். அது பொருளற்றதாகும். அது சரியானதுதான் என்ற அவர்களின் அபிப்பிராயத்திற்கு, 17-வது வயதில்தான் கல்லூரியில் சேர வேண்டும். அதற்குப் பிறகுதான் அவன் மனோபக்குவமும், உடல் பக்குவமும் அடைய முடியும் என்கிறார். 11 வருஷம் பள்ளிப் படிப்பு, 17-வது வயதில்தான் கல்லூரியில் சேர பக்குவம் வரும், ஆகவே 17-ல் 11 போனால் ஆறு என்ற கணக்கிற்கு வருகிறார், மேலே இருந்து கணக்கைப் போடுகிறாரே தவிர கீழேயிருந்து கணக்கைப் போடுவதில்லை. அந்த வாதப்படி தாழ்த்தப் பட்ட வகுப்பினர், பின் தங்கிய வகுப்பினர் பாதிக்கப் படுவார்கள் என்று எதிர்க்கட்சிக்காரர்கள் சொல்லும்போது, அதற்காக வேண்டியே இது வேண்டும் என்று கூறினார். தாழ்த்தப் பட்ட சமுதாயத்தில் உள்ளவர்களுடையவும், கிராமங்களில் உள்ள விவசாயிகளின் குழந்தைகளையும் ஆறு, ஏழு வயது வரை பள்ளிக்கூடத்திற்கு அனுப்பாமல் இருந்தால், படிக்க வேண்டுமென்ற எண்ணம் அந்தப் பிள்ளைகளுக்கும் வராது, பெற்றோர்களுக்கும் வராது. 4, 5 வயதிற்குப் பிறகு அப்பிள்ளைகளுக்கு ஆடு, மாடு மேய்க்கவோ, அல்லது வேறு பிள்ளைகளுடன் சேர்ந்து கெட்ட சகவாசம் ஏற்படுமே தவிர ஐந்து வயதிற்குள் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பினால்தான் நல்லது என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அடுத்தபடியாக, நான் சொல்ல விரும்புவது இந்த ஏழு ஆண்டு, நான்காண்டு என்று 11 ஆண்டைப் பிரித்திருக்கிறார்கள். ஏழாவது வகுப்பு வரை படித்து விட்டவர்களுக்கு இ.எஸ்.எல்.சி. சர்டிபிகேட் கொடுக்க, அவர்களுக்கு தனியாக ஒரு வருஷ படிப்பு கொடுப்பதை விட்டு, 7-வது ஆண்டு நிறைவேறியவுடன் ஸர்டிபிக்கட் கொடுப்பதுதான் நல்லது. அடுத்தபடியாக, ஆசிரியர்களின் நிலை பற்றி ஒரு வார்த்தை கூற விரும்புகிறேன். கல்வித்தரம் உயர வேண்டுமென்று எல்லோரும் விரும்புகிறோம். ஆனால் கல்வி இலாகாவில் உள்ள ஆசிரியர்கள் எப்படியிருக்கிறார்கள். வேறு துறைகளில் முயற்சி செய்துவிட்டு, பீ.ஏ., பீ.ஏ. (ஹானர்ஸ்) பாஸ் செய்துவிட்டு, மத்திய அரசாங்கத்திலும், ரெயில்வே இலாகாவிலும், வேலை கிடைக்காவிட்டால், செக்ரட்டேரியேட்டில் அப்பர் டிவிஷன் கிளார்க் கிடைக்குமா என்று பார்த்துவிட்டு இதுவும் கிடைக்காவிட்டால் பி.டி. படிக்க போகிறார்கள். ஆகவே, நல்ல ஆசிரியர்களை முதல் தரத்தில் பாஸ் செய்தவர்கள் இந்த இலாகாவில் வர அரசாங்கம் எந்த விதமான நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை என்று சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அடுத்தபடியாக தமிழ் மொழியைப்பற்றி பேசும்பொழுது தமிழ் மொழியை ஆட்சி மொழியாக ஆக்கப்பட்டிருக்கிறது என்றும் சொல்லப்படுகிறது. ஆனால் தமிழ் மொழியில் பயிற்சி பெற்றவர்கள்தான் தலைமை ஆசிரியர்களாக இருக்க முடியும் என்று ஒரு சட்டம் இதுவரையிலும் கொண்டு வரப்படவில்லை. தமிழ் ஆசிரியர்களுக்கு தலைமை ஆசிரியர் பதவி கொடுக்கப்படாவிட்டாலும் கூட தமிழ் மொழியில் பட்டம் பெற்றவர்களுக்குத்தான் தலைமை ஆசிரியர் பதவி கொடுக்கப்படும் என்று ஒரு சட்டத்தை நிச்சயமாக ஏற்படுத்த வேண்டும். இதை நல்ல நோக்கத்தோடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக "ஸிங்கிள் டீச்சர்ஸ்" (Single teachers)-ஐப்பற்றி சில வார்த்தைகள்

[Sri M. P. Subramaniam] [6th November 1957

குறிப்பிட விரும்புகிறேன். இந்த ஓராசிரியர் பள்ளிக்கூடங்கள் திட்ட கமி
ஷனின் கீழ் கிட்டத்தட்ட 2,000, 3,000 பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்தியிருக்
கிறார்கள். இப்போது அதிலுள்ள ஆசிரியர்கள் எஸ்.எஸ்.எல்.ஸி. படித்
தவர்கள் இரண்டு ஆண்டு காலம் பயிற்சி பெற்று வருகிறார்கள். அவர்கள்
இப்பொழுது 3 ஆண்டுகளுக்கு மேல் வேலை செய்த பிறகும் கல்வி
இலாகாவிலுள்ள ஆசிரியர்களின் தரத்தைவிட இவர்களுடைய தரம்
குறைவு என்று கருதி இப்போது இரண்டு ஆண்டு காலம் பயிற்சி பெற
வேண்டும் என்று கூறியிருக்கிறார்கள். இது சரியல்ல என்பதை தெரி
வித்துக்கொள்கிறேன். அடுத்ததாக 11 ஆண்டு கால படிப்பில் முதல்
பாகத்தில் தமிழ், இரண்டாவது பாகத்தில் ஹிந்தி அல்லது இந்திய மொழி,
மூன்றாவதாக ஆங்கிலம் அல்லது வேறு யாதாவது ஒரு உலக மொழி
படிக்க வேண்டுமென்று வைத்திருக்கிறார்கள். நான் சொல்லுவது என்ன
வென்றால் இரண்டாவது மொழியில் ஹிந்தி அல்லது இந்திய மொழி
என்றிருப்பதற்கு பதிலாக தமிழை கூடுதலாக பாடமாக வைத்தால் தமிழில்
பாண்டித்தியம் பெறுவதற்கு வசதியாக இருக்கும். இதற்கு ஒரு
வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக
ஹிந்தி ஆட்சி மொழியாக வரும் என்று நிச்சயமாக சொல்ல முடியாது.
ஹிந்தி ஆட்சி மொழியாக இருக்கக்கூடாது என்று இன்று பல வட்டாரங்
களிலிருந்தும் எதிர்ப்புகள் கிளம்பியிருக்கிறது. ஆகவே ஹிந்தியைப்பற்றி
நாம் இப்போது கவலைப்படவேண்டியதில்லை. அடுத்ததாக புஸ்தகம்
அச்சிடுவதில் தவறுதல்களும் ஊழல்களும் நடைபெற்று கொண்டிருப்பது
உண்மைதான். இதை தவிர்ப்பதற்கு வழியிருக்கிறது. இவ்விதம் நடந்து
கொண்டிருந்தால் அரசாங்கமே இதை சர்வாதிகாரமாக எடுத்துக்கொள்ளும்.
ஹிட்லரும் அப்படியே செய்தார். ரஷ்யாவிலும் இவ்விதமே செய்
தார்கள். தனிப்பட்டவர்களிடத்தில் புத்தகங்கள் அச்சிடுவதற்கு கொடுத்
தால், கொள்ளை லாபம் அடிப்பார்கள் என்றிருந்தால் இதற்கென்று இருக்கிற
புத்தக கமிட்டி இதனுடைய விலையை இவ்வளவு என்று குறிப்பிட
வேண்டும். இவ்விதம் இல்லாமல் அரசாங்கமே புத்தகங்களை வெளியிடு
வதுசரியல்ல என்பதை கூறிக்கொள்கிறேன்.

(The bell was rung and the hon. Member resumed his seat.)

12-42 p.m. **SRIMATHI T. N. ANANDANAYAKI** : கனம் சபாநாயகர்
அவர்களே, படித்தவர்களுக்கும் படிக்காதவர்களுக்கும் இருக்கும் வேறு
பாட்டை வள்ளுவர் விலங்குகளுக்கும் மக்களுக்கும் இருக்கின்ற வேறுபாடு
மாதிரி என்று கூறியிருப்பதை பார்க்கும்பொழுது படிப்பில் இருக்கின்றமேன்
மையை நாம் புரிந்துகொள்ளலாம். அந்த வகையில் கல்வி என்பது
மக்களுக்கு மிக மிக இன்றியமையாதது என்பதை மனிதனாக பிறந்தவர்
எவரும் புரிந்துகொள்வார்கள். அவ்விதம் இருக்கிற கல்வியை நாட்டில்
இருக்கிற மக்கள் எல்லோருக்கும் கல்வியை எவ்விதம் புகட்ட முடியுமோ
அதற்கேற்ற வழிவகைகளை ஆலோசித்து பார்த்து இங்கு கொண்டுவந்தி
ருக்கக்கூடிய வெள்ளை அறிக்கையைப் பார்த்தால் உண்மையிலேயே போற்
றத்தக்கது தான் என்று நம்புகிறேன். அதுமட்டுமல்லாமல் கனம்
கல்வி அமைச்சர் அவர்கள் சொன்னது மாதிரி, வயது வந்த சிறுவர்
களுக்கு இலகுவில் .கல்வியை புகட்டுவதற்கு பல மாற்றங்களை செய்து
வெகு கூடிய சீக்கிரத்தில் சட்ட பூர்வமாக கொண்டுவருவதற்கான
முறையில் ஒரு கல்வி திட்டம் கொண்டுவரவேண்டுமென்று கூறினார்கள்.
அதை நான் வரவேற்கிறேன். அதுமட்டுமல்ல, ஆட்சி மொழி கொள்கை
அடிப்படையில் கொண்டு வந்தும் அதை எல்லா துறைகளிலும் கொண்டு
வருவதற்கு, சட்டம் கொண்டுவரவேண்டியது மிக அவசியமும் அவசரமு
மான காரியமாகும் என்று சொன்னால் அது மிகையாகாது என்று நினைக்
கிறேன். அந்த வகையில் ஒரு வெள்ளை அறிக்கையாக கொண்டு வந்து
பின் ஒரு சட்டமாக கொண்டுவருவதற்கு இது மிகவும் எளிதாகவும்
சுலபமாகவும் கொண்டுவருவது வரவேற்கத்தக்கது. இதிலுள்ள முக்கிய
நோக்கங்களை எடுத்துக் கூறினார்கள். அதாவது ஒன்றிலிருந்து ஐந்து
வரையிலும் **(Compulsory education)** என்ற முறையில் துரிதமாகவும்
பரவலாகவும் ஏற்படுவதற்காக இதைப் படிப்படியாக கொண்டுவருவதற்கு



6th November 1957] [Srimathi T. N. Anandanayaki]

எல்லாவித முயற்சிகளும் எடுத்துக்கொள்ளவேண்டும்என்று கனம் அமைச்சர்
அவர்கள் தெரிவித்தார்கள். இப்போது இருக்கும் மூன்று முறை
யானது ஒன்றிலிருந்து ஐந்தாவது வரைக்கும், அதன் பின்னால் ஐந்தி
லிருந்து எழாவது வரைக்கும், அதன் பின்னால் எழாவதிலிருந்து பதி
னொன்று வரை இறுதி பாடமாகவும் வகுக்கப்பட்டிருப்பதாக வெள்ளை
அறிக்கையில் அரசாங்கம் தீர்மானித்திருப்பதாக தெரிகிறது. இப்போது
ஆரம்ப கல்வி 1 முதல் 5-வது வரைக்கும் என்றிருப்பதை 1 முதல்
7-வது வரைக்கும் கட்டாயமாக வைத்தால் அது மக்களுக்கு வசதியாக
இருக்கும். நம் நாட்டிலுள்ள பிள்ளைகள். குறைந்தது 7-வது வரைக்கும்
படித்திருப்பது மற்ற தொழில் பார்ப்பதற்கு வசதியாக இருக்கும்.
ஆகவே குறைந்தது 1 முதல் 7-வது வரை கட்டாய பாடமாக வைத்தால்
ரொம்பவும் சிறந்ததாக இருக்கும் என்று நம்புகிறேன். இதை கனம்
அமைச்சர் அவர்கள் நன்கு ஆலோசித்து, கொஞ்சம் பணம்
அதிகமாக செலவானாலும் கட்டாய பாடமாக ஒன்றிலிருந்து 7-வதுவரைக்கும்,
அதன் பின் 7-லிருந்து 11 வரைக்கும் என்று தனித்தனியாக ஒவ்வொரு
ஸ்டேஜாக வைத்திருக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். அரசாங்கம் இவ்வி
தம் கட்டாயம் என்று கொண்டுவரும்பொழுது சில குடும்பங்களில் 5, 6
வயதுள்ள பிள்ளைகள் ஆடு, மாடுகள் மேய்ப்பதிலோ, நகரப்புறங்கள்
என்றால் பீடி சுற்றுவது அல்லது பீடி இலைகள் வெட்டுவது முதலிய
தொழில்களில் ஈடுபட்டிருக்கின்றனர். அந்த பிள்ளைகளின் உதவியைக்
கொண்டு தான் அந்த குடும்பம் வாழவேண்டியிருக்கிறது என்று பலர்
கூறினார்கள். இவ்விதம் இருக்கிற பிள்ளைகளுக்கு விதிவிலக்கு அளிக்க
வேண்டுமென்று அந்த கிராமத்திலிருக்கிற பஞ்சாயத்தார் கூறினால் அவர்
களுக்கு விலக்கு அளிக்கப்படும் என்று சொன்னார்கள். இந்த விதமான
விதிவிலக்கு அவசியம் இல்லை என்று தான் நான் சொல்லுவேன்.
எப்படி இருப்பினும் ஐந்து வயதுள்ள பச்சிளங் குழந்தைகள் ஆடு, மாடு
மேய்த்து தான் இந்த நாட்டிலுள்ள குடும்பங்கள் வாழவேண்டுமென்று
இருப்பது இந்த நாட்டுக்கே அவமானம் என்று தான் சொல்லவேண்டும்.
ஆகவே இந்த விதிவிலக்கை எடுத்துவிடவேண்டும் ஐந்து முதல் 7-வது வரை
படிக்காமல் தற்குறிகளாக இருப்பது இந்த சமூகத்திற்கே அவமானம்
என்பதை மறந்துவிடக்கூடாது. இதனால் எவ்வளவு சங்கடங்கள் ஏற்
பட்டாலும் சரி இந்த சிறு பிள்ளைகளுக்கு கல்வியளிப்பதற்கு கண்டிப்பாக
ஏற்பாடு செய்து தான் தீரவேண்டும். ஒரு குடும்பத்திற்கு பிள்ளையில்லா
விட்டால் என்ன செய்வார்களோ, அம்மாதிரி நினைத்துக்கொள்ளவேண்டும்.
ஆகவே எந்தக் காரணத்தைக்கொண்டும் இதற்கு விதிவிலக்கு அளிக்கக்
கூடாது. கண்டிப்பாக அவர்களை பள்ளிக்கூடத்திற்கு அனுப்பி வைக்க
வேண்டும், இதை மீறுகின்றவர்களுக்கு கடும் தண்டனை கொடுக்கப்பட
வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக ஏழை மாண
வர்களுக்கு மத்தியான உணவு **(Midday meals)** கொடுக்க ஏற்பாடு
செய்யப்பட்டிருக்கிறது. இது பாராட்டுதற்குரியதே. அந்த வகையில்
மத்தியான இலவச உணவு அளிக்கப்படுவது பிள்ளை ஒன்றுக்கு 11 அணா
செலவாகும் என்று சொன்னார்கள். இப்போது கார்ப்பரேஷன் பள்ளிக்
கூடங்களிலும் மத்தியான உணவு போட்டு வருகிறோம். இதில் ஏழை
மாணவர்களுக்கென்று தனியாக பிரிக்கும்போது ஏழை பிள்ளைகள் பணக்
கார பிள்ளைகள் என்ற **(Psychological)** மனோதத்துவ வேறு
பாடு ஏற்படுகிறது. ஒரே பள்ளியில் படிக்கும் பிள்ளைகளில் பணக்கார
பையன் மத்தியான சாப்பாட்டுக்கு வீட்டுக்குப் போகிறான். அதே நேரத்
தில் ஏழை மாணவன் இலவச உணவுக்காக காத்து இருக்க வேண்டி
யிருக்கிறது. இவ்விதமாக **Superiority, Inferiority complex**
ஏற்படுகிறது. இளம் வயதிலேயே இந்த மனப்பான்மை ஏற்பட்டுவிடுகிறது.
ஆகையினால் கனம் அமைச்சர் அவர்கள் இதில் கவனம் செலுத்தி எல்லா
பிள்ளைகளுக்கும் மத்தியான உணவை ஒரே முறையில் கொடுக்க ஏற்பாடு
செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வேண்டுமென்றால் பணக்
கார பிள்ளைகளிடமிருந்து இதற்கென்று பள்ளிக்கூட சம்பளத்தோடு
சேர்த்து வாங்கிக்கொள்ளலாம். இதனால் உணவும் நல்ல உணவாக
இருக்கும். அதோடு இம்மாதிரிப்பட்ட வேறுபாடும் இல்லாமல் போய்
விடும், இந்த சூழ்நிலையை கனம் அமைச்சர் அவர்கள் கொண்டுவர

வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதற்காக கொஞ்சம் கூடுதலாக செலவு ஏற்பட்டாலும் பொதுவாக பிள்ளைகளின் உணவின் ஸ்டாண்டர்டு உயரும். உணவும் மோசமாக இராது. பணக்கார பையனுடைய அப்பா சும்மா இருக்கமாட்டார். பாலன்ஸ்ட் டயட் **(Balanced diet)** வேண்டுமென்று கேட்டு அதற்காக வேலை செய்வார். ஏழை பிள்ளைகள், பணக்கார பிள்ளைகள் என்று பாகுபாடு இல்லாமல் எல்லோருக்கும் ஒரே முறையில் உணவு கொடுக்கக்கூடிய வசதி செய்து கொடுப்பது மிகவும் நல்லது. அதில் சைவ உணவு, அசைவ உணவு என்ற வேறுபாடு இல்லாமல் எல்லா பிள்ளைகளுக்கும் ஒருவேளை சைவ சாப்பாட்டிற்கு வழி செய்வது சிறந்த முறை என்று நினைக்கிறேன். இதனால் எந்த வித வேறுபாடும் இல்லாமல் இருக்கமுடியும்.

மேலும், மத்தியான உணவிற்கு ஆகும் செலவை அரசாங்கம் மட்டும் தாங்கிக்கொண்டிராமல், தர்ம ஸ்தாபனங்களும் தான வள்ளல்களும் பிள்ளைப்பேறில்லா தனவந்தர்களும் தாங்கக்கூடிய சூழ்நிலையை உண்டு பண்ணலாம். இந்த விஷயத்தில், பணத்தை நேரடியாகச் செலவழிப்பதற்கு அவர்கள் தயங்கினால், "மிட்டே மீல்ஸ் பண்ட்" என்று ஒரு நிதி திரட்டுவதற்கு ஏற்பாடு செய்து அதைத் திரட்டுபவர்களுக்கு அவர்கள் பணத்தை அனுப்புவதற்கு வகை செய்யலாம். "கவர்னர்ஸ் ரெலீப் பண்ட்" என்ற நிதியைப்போல "மிட்டே மீல்ஸ் பண்ட்" என்ற நிதியைத் திரட்டுவதை ஆரம்பிக்கலாம். "மிட்டே மீல்ஸ் பண்ட்"-ஐ முதல் அமைச்சர் பேரில் வைத்தால் மக்கள் நம்பிக்கையுடன் பணம் அனுப்புவார்கள். நிதி அமைச்சர் பேரில் வைத்தாலும் அவர்களுடைய நம்பிக்கை குறையாது. (சிரிப்பு.) இந்த யோசனையை சர்க்கார் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, 7-வது வகுப்பிலிருந்து 10-வது வகுப்பு வரை கல்வியின் தரத்தை 'இம்ப்ரூவ்' பண்ணவேண்டுமென்று கனம் அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அது வாஸ்தவம். இன்றைக்கு உலகம் போகும் நிலையில் கல்வியின் தரத்தை உயர்த்தாவிட்டால் நம் மாணவர்கள் பிற்போக்காகவே இருப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை. பழைய முறையில் "ஆர்க்கிமிடீஸ் பிரின்சிபில்", "லா ஆப் மோஷன்", "நியூடன்ஸ் லா ஆப் க்ராவிடேஷன்" என்பனவற்றையே இன்றும் மாணவர்கள் படிக்கவேண்டியிருக்கிறது. ஆனால் அடிப்படையான விஞ்ஞான தத்துவங்களைப்பற்றிப் படிக்கவேண்டியதுதான். அத்துடன் புதியதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ள விஞ்ஞான உண்மைகளைப்பற்றியும் மாணவர்கள் நன்றாகத் தெரிந்துகொள்ளவேண்டும். இந்த அணு யுகத்தில் சந்திர மண்டலத்திற்குச் செல்வதற்காக செயற்கைச் சந்திரன்கள் ஆகாயத்தில் பறக்க விடப்படுகின்றன. இந்த நிலையில், முற்போக்கான விஞ்ஞான விஷயங்களைப் பற்றியும், **modern theories**-ஐப்பற்றியும் மாணவர்களுக்கு நன்றாக போதிக்கவேண்டும். நான் இன்டர்மீடியட் படிக்கும்போது 'பிஸிக்ஸ்'-ல் படித்த பாடங்களே இன்றைக்கும் இன்டர்மீடியட்டில் 'பிஸிக்ஸ்'-ல் இருக்கின்றன. அடிப்படை விஞ்ஞானத்தையே விரிவாக போதிக்காமல், அடிப்படையான விஞ்ஞான தத்துவங்களை போதித்துவிட்டு அதற்கு மேலே இன்று உலகம் விஞ்ஞானத் துறையில் எப்படி முன்னேறிவருகிறது என்பதைப்பற்றியும், நம் அணுசக்தி ஆராய்ச்சி சாலையில் எதை எதை செய்துகொண்டிருக்கிறோம் என்பதைப்பற்றியும்; அணுசக்தி எங்கே எப்படி உற்பத்தி செய்யப்படுகிறது என்பதைப்பற்றியும் போதித்து இந்த 20-ம் நூற்றாண்டிற்கேற்ப பொது விஞ்ஞான அறிவை நாட்டில் வளர்க்கவேண்டும். அதேமாதிரி சரித்திரத்திலும் முற்போக்கான விஷயங்களைச் சொல்லிக்கொடுக்கவேண்டும். ட்யூடர் மன்னர்களும் ஸ்டுவர்ட் மன்னர்களும் இங்கிலாந்தில் ஆட்சி செய்ததைப்பற்றியே சொல்லிக்கொடுத்துக்கொண்டிருக்கக்கூடாது. சரித்திர பாடத் திட்டத்தில் இன்று ஓரளவு மாறுதல் செய்யப்பட்டிருக்கிறது. இன்னும், துரிதமாகப் பல விஷய்ங்களைப் போதிக்கும் அளவிற்கு மாறுதல்களைச் செய்யவேண்டும். நம் நாட்டின் பண்டைய கால சரித்திரத்தைப் போதிப்பதுடன் வெளிநாட்டு சரித்திரங்களைப்பற்றி போதிக்கும்போது வெளிநாடுகளில் ஏற்பட்ட



முக்கிய புரட்சிகளைப்பற்றியும் சமீப காலமாக வெளிநாடுகளில் ஏற்பட்டுள்ள சரித்திர சம்பந்தமான நிகழ்ச்சிகளையும் மாறுதல்களையும் பற்றியும் மாத்திரம் போதித்தால் நன்றாக இருக்கும்.

மேலும், பள்ளிக்கூடப் பாட புத்தகங்களை சர்க்கார் பிரசுரிப்பது குறித்து கனம் அங்கத்தினர்கள் ஒரு பயத்தைத் தெரிவித்தார்கள். அதாவது, சர்வாதிகார முறையில் மாணவர்களிடம்—மக்களிடம்—கருத்துக்களை அரசாங்கம் திணித்துவிடுமோ என்று பயப்பட்டார்கள். பக்கத்திலுள்ள கேரள ராஜ்யத்தில் எல்லாப் பள்ளிக்கூடங்களையும் அரசாங்கமே நடத்துவது என்று முடிவு கட்டியிருக்கிறார்கள். அந்த நிலையில், அங்கே அரசாங்கம் தன் கருத்துக்களைத் திணித்துவிடுமோ என்ற பயம் இருந்துவந்தபோதிலும், அப்படி அரசாங்கம் திணிக்காது என்பது தெரியவந்தது. இப்போதே இன்டர்மீடியட் புத்தகங்களையும் ப்ரீ யூனிவர்ஸிடி வகுப்புப் புத்தகங்களையும் அரசாங்கம் அச்சிட்டு வழங்குகிறார்கள். அவைகளிலே கருத்துக்கள் திணிக்கப்படவில்லை, இனிமேலும் திணிக்கப்படாது. இந்த நிலையில் கனம் அங்கத்தினர்களுக்கு இது சம்பந்தமாக அனாவசியமாக பயப்பட வேண்டியதில்லை. புத்தகங்களை அரசாங்க்ம் எழுதப்போவதில்லை. அரசாங்கத்தார் பாடத் திட்டங்களைத் தயாரிப்பார்கள். அந்தப் பாடத் திட்டங்களுக்கு உட்பட்டு புத்தகங்களை எழுதும்படி எழுத்தாளர்களிடம் அரசாங்கத்தார் சொல்வார்கள். அவர்கள் எழுதிய புத்தகங்களில் நல்ல தரமுள்ள புத்தகத்தைத் தேர்ந்தெடுத்து அதன் பிரதிகளை அரசாங்கத்தார் எல்லோருக்கும் வழங்குவார்கள். இது மிக நல்ல ஏற்பாடு. சாதாரணமாக புஸ்தகம் எழுதுபவர்களுக்கு லாபம் போதிய அளவு கிடைப்பதில்லை. இடையில் உள்ள பிரசுரகர்த்தர்கள்தான் எல்லா லாபத்தையும் அடைகிறார்கள். புஸ்தகம் எழுதுபவர்கள் என்றைக்கும் ஏழ்மை நிலையிலேயே இருக்கிறார்கள். உழைப்பவருக்குப் பலன் கிடையாது என்று நான் திட்டவட்டமாகக் கூறுவேன். அரசாங்கம் பாடப்புத்தகங்களை அச்சிட்டு வழங்கும்போது இந்தப் பிரச்னை தீரும். பாடப்புத்தகங்களை அரசாங்கம் பிரசுரிக்கும்போது அவைகளை நல்ல காகிதத்தில் அச்சிட்டு வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். **Intermediate Class**-க்கான புத்தகங்கள் இப்போது சர்க்கார் கெஜட் அச்சிடப்படும் காகிதங்களைப்போன்ற பழுப்பு நிறமுள்ள பேப்பரில்—தொடுவதற்கே அருவருப்பாக இருக்கும் முரட்டுப் பேப்பரில்—அச்சிடப்பட்டு வழங்கப்பட்டிருக்கின்றன. சிக்கனத்திற்காக அரசாங்கத்தார் இவ்வாறு செய்கிறார்களோ என்னமோ தெரியவில்லை. படிக்கும் பிள்ளைகளுக்கு அவர்களுடைய புத்தகங்கள் அழகாக இருக்கவேண்டும்; புத்தகங்களின் காகிதங்கள் வழவழப்பாக இருக்கவேண்டும். அப்படி இருந்தால்தான் சின்னப் பிள்ளைகளுக்குப் புத்தகத்தின்மீது மோகம் தோன்றி படிக்கத்தோன்றும். சர்க்கார் தங்கள் சிக்கனக் கொள்கையை வேறு விஷயங்களில் கையாளலாம். பாடப்புத்தகங்கள் விஷயத்தில் சிக்கனத்தை ஒதுக்கிவைத்துவிட்டு நல்ல காகிதத்தில் அவைகளைப் பிரசுரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் பாடப்புத்தகங்களைப் பிரசுரித்து மாணவர்களுக்கு வழங்கும்போது தாமதம் ஏற்படுகிறது. இது கூடாது. **Intermediate** பாடப் புத்தகங்கள் அக்டோபர்-நவம்பர் மாதத்தில்தான் கிடைக்கின்றன.

**Sri K. VINAYAKAM**: அதை யுனிவர்சிடி செய்கிறது. அந்தத் தாமதத்திற்கு சர்க்கார் பொறுப்பாளி இல்லை.

**Srimathi T. N. ANANDANAYAKI**: யூனிவர்சிடி செய்வதைத்தான் சீக்கிரம் செய்யவேண்டும். தாமதத்தைத் தவிர்ப்பதற்கு சர்க்கார் முயற்சி எடுக்கவேண்டும். **Tenders**-ஐப் பெறுவதற்கு விளம்பரம் செய்து சீக்கிரம் **Tender**-ஐப் பொறுக்கியெடுத்து தாமதமின்றி புத்தகங்களை வெளியிடவேண்டும். மாணவர்களின் அறிவைப் பெருக்கும் பாடத் திட்டத்தின்படி எழுதப்படும் சிறந்த புத்தகத்தை அரசாங்கம் பிரசுரிப்பது வரவேற்கத்தக்கது. இந்த ஏற்பாடு சமூகத்திலுள்ள பல ஊழல்களை நீக்கும் என்று நம்புகிறேன்.

வெள்ளை அறிக்கையை ஆராய்ந்த கமிட்டி 40 மாணவர்களுக்கு ஒரு உபாத்தியாயர் வேண்டும் என்று சிபாரிசு செய்திருக்கிறது. நாற்பது பேர்களுக்குக் குறைவான மாணவர்களையே ஒரு உபாத்தியாயரிடம் ஒப்படைக்க

[Srimathi T. N. Anandanayaki] [6th November 1957

வேண்டும். ஒரு உபாத்தியாயரிடம் 40 மாணவர்கள் இருந்தால், அவருக்குப் பல மாணவர்களின் பெயரே தெரியாமலிருக்கும்; அவர் எல்லா மாணவர்களிடமும் அக்கறை காட்ட முடியாது. குறைந்த எண்ணிக்கையுள்ள மாணவர்களை நல்ல ஆசிரியர்களிடம் ஒப்படைத்து திறமையாகக் கல்வியை போதிப்பதற்கான திட்டத்தை அரசாங்கத்தார் கொண்டு வருவார்களேயானால், அத்திட்டம் இந்நாட்டு மக்களை நல்ல பாதையில் அழைத்துச் செல்வதற்கு உதவும் என்று சொல்லிக்கொண்டு என்னுடைய வார்த்தையை முடித்துக்கொள்கிறேன்.

12-55 p.m. * SRI M. WILLIAM: Mr. Deputy Speaker, this is the secnnd occasion on which we are discussing a White Paper. We have already discussed the White Paper on Panchayat Administration. That the present White Paper is a most valuable document cannot be gainsaid. Almost all the recommendations made by the Legislature Committee on Education and the Hon. Minister are commendable. Sir, elementary education, higher elementary education and secondary education have all been converted into one integrated system of education and this is one of the good features of the scheme now suggested. Diversified courses in the higher secondary stage are another important feature and it is also welcomed by all because it gives scope for the students to join the pre-professional courses and the polytechnic. The academic course in the higher secondary stage gives scope for the students to take the B.A. and other degree examinations. Therefore, the system as reorganised now is one of the best systems and this fact also cannot be gainsaid.

There is another good feature we see. That is provision of noon-meals for poor children. Of course, as has been pointed out by some hon. Members already, it must be made on a cosmopolitan basis. That is, all the students, irrespective of caste or creed, must be made to take meals in a common mess. The next important feature of the White Paper is the compulsory enrolment of pupils in schools from the age of 6 for five years. In other words, five-year schooling is made compulsory. Of course, Article 45 of the Constitution contemplates free and compulsory education up to the age of 14. Perhaps due to the financial commitment which would be rather heavy, the provision is not being implemented. The Government, for the present, are satisfied with five-year schooling up to the V standard. As has already been suggested in the House, it would be better if this is extended up to the VII standard. Of course, that the Government would not stop with five-year schooling, can be seen from the White Paper itself. If their financial position improves, provision will be made for a seven-year schooling. We know the financial commitments of the Government. I think some education cess should be imposed on the rich as is being done in some western countries. I have another suggestion also to make. In the former Travancore–Cochin State, there was a basis system of tax—2 n.P. per cent of land. Such a system, together with the system of agricultural income-tax, if introduced in our State, would bring in a few crores of rupees which could be utilised for the purpose of education. As I said earlier, an education cess on the rich and



6th November 1957] [Sri M. William]

also on those who derive an income of more than thousand rupees per year can also be imposed and the revenue derived this way could be utilised for the purpose of compulsory education. There must be compulsory elementary education up to the age of 14. But, it cannot be done immediately. It could be achieved only within a reasonable time.

It is said that the people should take up the study of Hindi. It is our national language and must be encouraged. As a matter of fact, it is being compulsorily taught in most of the schools in the Kerala State. That being the case, the study of Hindi could not be given up. It must be compulsorily taught in our schools. Perhaps after a few years that language could become the medium of instruction in all the schools in the country. When we say that the medium of instruction should be Tamil in colleges, of course we can get cheap popularity. But, we have to consider whether it would be feasible. Because, in each State, there would be the regional language. That would lead to narrow provincialism. In Madras, we will have Tamil, in Andhra Pradesh, it will be Telugu, in Mysore it will be some other language and in Hyderabad it would be another language. If each State were to adopt its own language in these matters, there would not only be narrow provincialism but the students of one State will be prevented from joining other Universities. We have therefore to wait for some time till Hindi, the national language, becomes the medium of instruction from the 1st Class to the College courses. We have to wait for that time when Hindi will be the medium of instruction in secondary schools, colleges, etc.

So far as the Kanyakumari district is concerned, as pointed out by the Hon. Minister, there is a different system of payment to the teachers. According to this system, all the fees collected by the management are deposited into the Treasury and the teachers are paid directly by the Government. As a result of great agitation and clamour by the teachers who had no security of service, that system was introduced. As there was no security of service, the teachers did not take interest in their work. So the system was then introduced. It is called Panampalli scheme. That is the system working in Kanyakumari district. That could be followed here also. There, almost all the Primary Schools are run by the State. It will be only safer and better for the educational system that these Primary Schools are run by the Government and not entrusted to the panchayats. Not only the Members of the House, but the entire public are really indebted to the Hon. the Minister for Education for this very valuable document that he has been kind enough to place before us.

* SRI M. P. SARATHI: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, சபைமுன் இருக்கும் வெள்ளை அறிக்கையின் மீது என் கருத்தை சொல்ல விரும்புகிறேன். கனம் கல்வி அமைச்சர் அவர்கள் இங்கு குறிப்பிட்டார்கள், இந்தக் கல்வித் திட்டத்தைப்பற்றி ஒரு லட்சியம், ஒரு கொள்கை, ஒரு திட்டம் ஏற்படுத்திக்கொள்ளவேண்டுமென்று. அதை நான் மிகவும் வரவேற்கிறேன். அம்மாதிரி, லட்சியங்களை ஏற்படுத்தவேண்டுமென்று 1.12 p.m.

[Sri M. P. Sarathi] [6th November 1957

கேட்டுக்கொள்ளுகிறேன். ஆனால் குறிப்பாக ஹிந்தி விஷயத்தில் அவர்கள் ஏதாவது ஒரு லட்சியத்தை ஒரு திட்டத்தை குறிப்பிட்டார்களா என்றால், வழ வழா என்றுதான் திட்டத்தில் குறிப்பிட்டிருக்கிறார்கள் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஹிந்தி இந்த நாட்டிலே கண்டிப்பாக இருக்கவேண்டுமென்றால், அது சிலருக்கு பிடிக்கவில்லை என்ற காரணத்தாலே, மறைமுகமாக புகுத்துகிறாரோ என்று கேட்க விரும்புகிறேன். ஏன் அப்படிச் சொல்கிறேன் என்றால், ஹிந்தியை புகுத்தினால் நாட்டில் எதிர்ப்பு ஏற்படும், மந்திரி சபை ஆட்டம் கொடுக்கும் என்ற காரணத்தால் மறை முகமாக, இரண்டாவது மொழியாக, ஒரு இந்திய மொழியை கண்டிப்பாக படிக்கவேண்டுமென்று சொல்கிறார். அது பஞ்சாபி ஆகவும் இருக்கலாம், பெங்காலியாகவும் இருக்கலாம், ஒரியாவாகவும் இருக்கலாம். இப்படி இந்திய மொழி ஒன்றைப் படிக்கவேண்டுமென்று சொல்வதில் அர்த்தம் என்ன என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

இதே சட்ட சபையில் 1937-ல் முதல் மந்திரியாக இருந்த கனம் இராஜகோபாலாச்சாரியார் ஹிந்தியை கட்டாயப் பாடமாக கொண்டு வந்தார்கள். அவரே இப்போது ஹிந்தி கண்டிப்பாக இருக்கக்கூடாது தமிழ் நாட்டிலே என்று வற்புறுத்தி சொல்வதை கனம் கல்வி மந்திரி அவர்கள் உணர்ந்திருப்பார்கள் என்று நம்புகிறேன். அப்படி இருந்தும், தங்கள் பதவியை காப்பாற்றிக்கொள்வதற்காக ஹிந்தியை மறைமுகமாக ஏன் புகுத்துகிறார்களோ என்று தெரியவில்லை. ஒரு லட்சியத்தை இந்தத் திட்டத்தில் ஏற்படுத்துகிறேன் என்று சொல்லி இரண்டு மணி நேரம் அமைச்சர் பேசியதிலிருந்து வேறு ஒன்றும் புலப்படவில்லை.

வேலூரில் உள்ள வெங்கடேஸ்வரா ஹைஸ்கூலுக்கு ஒரு நாயுடு தலைமை ஆசிரியராக இருக்கிறார். அந்தப் பள்ளிக்கூடம் திருப்பதி தேவஸ்தானத்தால் நடத்தப்படுகிறது. அந்தத் தலைமை ஆசிரியருக்கு தமிழ் என்றால் என்ன என்று கொஞ்சம்கூட தெரியாது. அவர்தான் இரண்டு மூன்று வருஷங்களாக இந்த ஸ்கூலை நடத்திவருகிறார். அங்கே குறைந்தது 1,000-க்கு மேற்பட்ட தமிழ் மாணவர்கள் படிக்கிறார்கள். இருந்தும் தமிழே தெரியாத ஒருவர் ஹெட்மாஸ்டர் ஆக இருக்கிறார். இந்த அரசாங்கம் கவனியாமல் இருக்கிறது. இம்மாதிரி நடப்பது மொழிப்பிரச்னையில் குழப்பம் இருப்பதால்தான் என்று நினைக்கிறேன். சென்னையிலேயே நடக்கும் ஒரு மானேஜ்மெண்ட் ஸ்கூலைப் என் தோழர்களுடன் போய்ப் பார்க்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. குறைந்தது 500 மாணவர்கள் அங்கே படிக்கிறார்கள். ஆனால் இந்தப் பள்ளிக்கூடத்தில் 100 பேர்கள் கூட படிக்க இட வசதியில்லை. இவைகளை எல்லாம் கல்வி அமைச்சர் தகுந்த முறையில் கவனிக்கிறார் என்று தெரியவில்லை.

மேலும் நான் குறிப்பிட்ட வேலூர் பள்ளிக்கூடத்தில், ஆசிரியர்கள் இப்போது அதிகமாக கொடுத்திருக்கும் 12 ரூபாய் உயர்வைக் கேட்டால் எங்களுக்கு அதிகாரம் கிடையாது, ஆந்திரா இராஜ்யத்திலுள்ள தேவஸ்தானத்தை சேர்ந்தது. நாங்கள் அதிகம் கொடுக்கமாட்டோம் என்று கண்டிப்பாக சொல்லுகிறார்கள். இப்படிச் சொல்வதற்கு ஒருவித ஆதாரமும் கிடையாது. ஆசிரியர்கள் எல்லாம் வேதனையோடு தலைமை ஆசிரியரைக் கேட்க பயந்துகொண்டு, காலத்தைப் போக்குகிறார்கள். இந்த விஷயத்தைக் கவனிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வேலூர் நகரசபை ஒரு உயர்தர பாடசாலை ஏற்படுத்தி நடத்தவேண்டுமென்று சென்னை சர்க்காரிடம் உதவிகேட்டபோது, ஏற்கனவே, உதவி கிடையாது என்று சொல்லி, சர்க்கார் விடுத்த ஜி.ஒ.-வை மாற்றவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அப்படி உத்தரவிட்டால்தான் இன்று சர்க்காரால் நடத்தமுடியாமல் இருக்கும் பள்ளிக்கூடங்களை நகர சபையார் எடுத்து நடத்த துணைபுரிய முடியும், துணைபுரிய முன்வருவார்கள். மேலும் மானேஜ்மெண்ட் ஸ்கூலில் வேலைசெய்யும் ஆசிரியர்களுக்கு சர்க்காரே சம்பளம் கொடுப்பது என்று ஏற்பாடு செய்துவிட்டால் மானேஜ்மெண்ட் ஸ்கூல்களும்



6th November 1957] [Sri M. P. Sarathi]

நன்றாக நடைபெறும். கேரளாவில் இம்மாதிரி முறைகளை அனுஷ்டிக்கிறார்கள். இது நல்ல முறை. இதை நம் அரசாங்கம் ஆதரிக்கவேண்டும் என்று கோருகிறேன்.

குறிப்பாக நகரங்களில்தான் அதிகப்படியான பெண்கள் உயர்தர பாடசாலையில் படித்து வருகிறார்கள். மற்ற இடங்களில் அதிகமாக பெண்கள் உயர்தர பாடசாலைகளில் படிப்பது கிடையாது. அதற்குக் காரணம் அவர்கள் ஆண்களுடன் படிக்க இஷ்டப்படாமல் இருப்பதால் மற்ற இடங்களிலெல்லாம் அவர்களுடைய எண்ணிக்கை குறைவாக இருக்கிறது. நகரங்களில்தான் ஆண்களும் பெண்களும் சேர்ந்து படிக்கிறார்கள். மற்ற இடங்களில் அப்படிப் படிக்க முடியவில்லை. அதனால் சர்க்கார் பெண்களுக்கு என்று தனியாக உயர்தர பாடசாலைகளை அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அதற்கு வேண்டிய முயற்சியையும் எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்பொழுது தமிழ் ஆசிரியர்களுடைய நிலைமை ரொம்பவும் மோசமாக இருக்கிறது. ரொம்பவும் கஷ்டப்பட்டுக்கொண்டுவருகிறார்கள். பி.டி., எல்.டி. படித்துவிட்டு பணியாற்றும் பாடசாலைகளிலும் தமிழ் ஆசிரியர்கள் பணியாற்றி வருகிறார்கள். ஆனால் பி.டி., எல்.டி. பட்டதாரிகளுக்குக் கொடுக்கப்படும் மதிப்பு தமிழ் ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்படவில்லை. ஆகவே தமிழ் ஆசிரியர்களுக்கும் பி.டி., எல்.டி. ஆசிரியர்களைப்போல் மதிப்புக் கொடுக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அதை கவனிப்பதற்கும் ஒரு திட்டத்தை தயாரிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என்னுடைய பேச்சை இத்துடன் முடித்துக்கொள்ளுகிறேன்.

* SRI R. SRINIVASA IYER: Deputy Speaker, Sir, while discussing the White Paper on Education, I welcome the suggestion of the Hon. the Minister for Education that a comprehensive legislation with reference to the education up to the secondary stage, that is up to the VI Form, is necessary. Any reform with regard to the pattern of education must be permanent. There should not be frequent changes in the educational pattern. Therefore it is all the more important that along with this comprehensive legislation in the matter, there should be a Permanent Standing Committee similar to the Senate of the Madras University or the Syndicate for the purpose of advising the Government then and there for evolving the necessary changes according to the prevailing circumstances. In this Committee there should be representation not only of the general public but also of the teachers as well. There is already a grievance among the teachers that either in the Assembly or in the Council, teachers below the secondary school stage are not given proper representation. The foundation for compulsory education up to the age of 14 years as provided in Article 45 of the Constitution is the teachers of elementary schools and higher elementary schools. Their teaching experience will be very valuable and either in the Legislature or in the Committe to be constituted under the legislation relating to education, they should be represented as a separate constituency because it will be impossible for anyone of them to compete with others in the General Elections.

The children of the present age and the younger generation are looking forward to this Government and the Legislature for evolving a permanent pattern of education so that it may be there for

[Sri R. Srinivasa Iyer] [6th November 1957

at least two decades without any change. A change in the educational pattern very often will be only playing with their future. In this connection I am glad to note that our Education Minister has been kind enough to recognize that the children of South India are not in any way inferior to the children of other States. I am even prepared to go further and state that the children of this part of the country are far more intelligent than those in any other part of the country. I request, Sir, that we should take note of this fact, namely, that the children of the present day are more intelligent than the children of 20 years ago. If only one moves with them, he will know that even the young boys are to-day talking of the "Russian sattelite" circling round the earth. They are longing for education. We know that in former days children were not going to school. But nowadays children of all classes and families are longing to get education. The search for knowledge is growing, but, at the same time, we find that the standard of education imparted in our schools and colleges has deteriorated. The reports of the Public Services Commission for the last three years will show that the standard of general knowledge of our students has gone very low and even graduates in *viva voce* examination do not answer questions properly.

Now, in this White Paper on Education, I do not find any reference to nursery schools as we have in other countries. The minimum age of admission is stated to be 6 and there is a proposal to cut a *via media* between 5 and 6 and put it at 5½ years. After eleven years of school education up to the secondary standard, the age of admission to the college will be 16½. I respectfully submit that this minimum age, which has been put at 5½, may even be reduced to 5 and that the old rule of having the admission age for colleges at 16 may continue. At the age of 5, our children are fit to be admitted in the first standard. The period of education need not be raised to 12 years. The total period of education from the 1st standard to the 11th standard may be 11 years and the four years of secondary education will be useful to prepare the boys not only for University education but also for professional education. In evolving this reformed pattern of education, we must so evolve it as to enable students who like to take University education and professional education to continue it from the secondary stage. They should also be enabled to join other Universities, I mean, Universities in the other States. Languages should be so modelled that the idea of a student to study other languages and in other Universities should not be stultified.

In so far as primary education is concerned, we have been considering the reform of the Panchayat Administration and fixing the block as the Unit. Primary education is likely to be handed over to that block for purposes of implementation of the scheme that we are evolving. If there is to be compulsory education, then within the period allowed under Article 45 of the Constitution, I am afraid it will not be possible. The block should be the intensified unit for purposes of compulsory primary education up to a particular standard and then it may be developed all-round just



6th November 1957] [Sri R. Srinivasa Iyer]

as we are developing the Key Village Scheme under the Animal Husbandry Department. Not that I want to reduce children to that level, but this is only a suggestion that if a block is taken as the central unit, it can be developed all round.

While evolving a pattern of education with the idea of spreading education to all areas and to all pupils and making the percentage of literacy increase, I desire to make a new suggestion and that is the introduction of the system of examinations without going to schools. This will give an incentive to boys, who are not able to continue their education in schools after a particular standard, to study at home and appear for the examinations. From the eighth standard to the eleventh standard, boys may be enabled to appear for the examination in this manner and a certificate can be given to them. But the standard can be the same as that obtaining in the schools. This will increase literacy in the country.

Now, as I said, the foundations for proper educational system are the teachers. If the Government want to attract the best men for the teaching profession, they must give them a proper living wage. An S.S.L.C. passed candidate entering as an ordinary clerk or a lower division clerk, gets Rs. 45 and some additional allowances are allowed to Government servants. Even this is not an attractive salary, in the case of teachers particularly of elementary teachers. In the present day set-up and cost of living, anything less than a basic pay of Rs. 50 per head would not be an attractive salary for any respectable, intelligent and hardworking teacher. I therefore suggest that the question of finance should not come in the way of increasing the salary of these teachers. The number of hours that they spend in the school and outside to prepare themselves for their classes only show that they should get a living wage to maintain their families. We cannot expect them to get anything more than that under the present rules which restrict private tuition and the like. The basic pay of these teachers should be increased and finance must be found for it. The Hon. the Minister for Finance says that the public must also bear a portion of the cost of education when compulsory education up to the 14th year is introduced. Means must be found out to meet the extra cost by the levy of cess as has been suggested by some hon. Members or a surcharge on income-tax to be collected within the State. The surcharge should be collected by the Centre and handed over to the State. I suggest this on the principle that the rich will have to bear the cost of educating the poor or ameliorating their conditions. People who earn sufficient income to pay income-tax must certainly bear a portion of the expenditure on the imparting of education. Therefore, we must evolve a method by which we could pay the teachers adequately so that there may not be any deterioration in the standard of either the teacher or the pupil for lack of funds.

[Sri R. Srinivasa Iyer] [6th November 1957

About the pupil-teacher ratio, it is true that increasing the number of boys will reduce efficiency. It has been stated that 40 boys will be too much. But in practice if there is a class with two standards, we do not have exactly 80 boys. There is about 70 or 60 boys and one teacher cannot get on with 60 boys. Therefore, I would suggest that the ratio may be fixed at 30 because 20 is very low and 40 is rather too high. The increase in the pupil-teacher ratio has got to be implemented in the interest of the advancement of education though some teachers may grumble about it.

DEPUTY SPEAKER : The hon. Member's time is up.

SRI R. SRINIVASA IYER : As to the language problem, I want to say one word. We have got to think of Hindi being the national language and the incentive to study it will be less unless the students are made to take interest in a language which will prevail throughout India. English also should continue for sufficiently long time so that our international relations may not in any way be jeopardised. I therefore suggest that English may be introduced in the Fourth Class and Hindi in the Seventh Class instead of in the Fifth and Eighth Classes respectively, as now proposed in the White Paper.

DEPUTY SPEAKER : The hon. Member has already exceeded his time-limit. The House will now adjourn and meet again at 9 a.m. to-morrow.

The House then adjourned.

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

**Thursday, 7th November 1957.**

The House met in the Assembly Chamber, Fort St. George, at nine of the clock, Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

## I.—QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS.

*Women Police.*

* 101 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether there is any proposal to appoint Women Police; and

(*b*) if so, the duties of these Women Police?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) & (*b*) The question of appointing women Police is under the consideration of the Government.

* 110-C *Q.*—SRI N. K. PALANISAMI and * 185 *Q.*—SRI A. A. RASHEED : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether any women have been recruited for Police duty in the State;

(*b*) if so, their scales of pay and other allowances;

(*c*) whether there is any proposal to appoint women Police in our State; and

(*d*) if so, when?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) No, Sir.

(*b*) Does not arise, Sir.

(*c*) Yes, Sir.

(*d*) The matter is under the consideration of the Government.

SRI K. SATTANATHA KARAYALAR : பெண் போலீஸ் படையை என்னென்ன வேலைகளில் உபயோகப்படுத்துவதாக அரசாங்கம் உத்தேசித்திருக்கிறது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The types of duties proposed are :—

(1) Patrolling areas where undesirable women may frequent.

(2) Rescue of young girls found homeless and in danger of becoming prostitutes.

(3) Accompanying police on Immoral Traffic Act raids.

(4) Escorting to court and guarding in court female prisoners.

[7th November 1957

(5) Escorting remand and female undertrial prisoners.

(6) Assisting investigation officers and questioning complainants in cases such as assaults on women, rape, etc., and questioning women accused and women and child witnesses.

(7) Patrolling large Railway stations and meeting trains to deal with, control and assist women passengers.

(8) Dealing with stray children.

(9) Bandobust duties at large gatherings where women congregate.

SRI N. K. PALANISAMI : இந்த போலீஸ் படையில் எவ்வளவு பேர்களை உபயோகப்படுத்துவதற்கான திட்டம் இருக்கிறது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : நீண்ட காலமாக இந்த பெண் போலீஸ் படையினரை அமைப்பதற்கான யோசனை அரசாங்கத்தில் இருந்து வருகிறது. கடைசியாக முதலில் பரீட்சார்த்தமாக ஒரு சிறிய அளவில் இந்தப் படையினரை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இப்பொழுது 33 உதவி இன்ஸ்பெக்டர்களும், ஆறு கான்ஸ்டேபில்களும், போட்டு துவக்கியிருக்கிறார்கள்.

SRI A. A. RASHEED : Will the Women Police be appointed only in the City or throughout the State?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : As I have already stated, it would be a very small beginning and that will be confined to certain sections of the City.

SRI A. GOVINDASAMY : இந்த பெண் போலீஸ் படையினரை தேர்ந்தெடுக்கும் காலத்தில் ஆண்களுக்குள்ள தகுதி உயரம், மார்பளவு முதலியவைகள் கவனிப்பது போல், இவர்களுக்கும் கவனிக்கப்படுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அந்தப் பெண் போலீஸ் படையினரை தேர்ந்தெடுக்கும் காலத்தில் கனம் அங்கத்தினர் சொன்னவைகளெல்லாம் கவனிக்கப்படும். அவர்களுக்கு தகுந்த உடையும் அளிக்கப்பட வேண்டும் என்று சொல்லப்படுகிறது.

SRI M. SOMASUNDARAM : கனம் தலைவர் அவர்களே, பெண் போலீஸ் படையினருக்கு தனிப்பட்ட முறையில் பயிற்சி அளிக்கிறார்களா ? அல்லது ஆண்களோடு சேர்த்து பயிற்சி அளிக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : தனியாகத்தான் அந்த பெண் போலீஸ் படையினருக்கு பயிற்சி அளிப்பதற்கு ஏற்பாடு செய்வார்கள்.

SRI K. SATTANATHA KARAYALAR : இந்த பெண் போலீஸ் படையினரை தேர்ந்தெடுப்பதற்கு குறைந்த பட்ச விதிகள் என்ன என்ன இருக்கின்றன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : சாதாரணமாக ஆண் கான்ஸ்டேபில்களை ரெக்ரூட் செய்வதற்கு என்ன என்ன விதிகள் அனுசரிக்கப்படுகிறதோ அவைகளெல்லாம் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது.

SRI A. A. RASHEED : Will the Women Police be given any escorts during the night?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : That is a question that has to be considered. Perhaps, the Women Police may require some protection.



7th November 1957]

SRI N. K. PALANISAMI : பெண் போலீஸ் படையினருக்கு துப்பாக்கிப் பயிற்சி அளிக்கப்படுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ஜான்சி ராணி பிறந்த நாட்டில் பிறந்தவர்கள் அல்லவா அவர்கள். அவர்களுக்குத் துப்பாக்கி பயிற்சிகூட அளிக்கப்படும்.

SRI K. VINAYAKAM : What is the extraneous object of recruiting women to Police Service? Does it mean that the men Police has failed to do the job which the women might do properly?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கனம் அங்கத்தினர் அவர்கள் நான் முதலில் கொடுத்த பதிலை கவனிக்கவில்லை என்று நினைக்கிறேன். படித்த அங்கத்தினராயிருந்தும் கெட்டிக்காரராயிருந்தும் அங்கத்தினர் இதை சரியாக புரிந்துக் கொள்ளவில்லை. நான் பெண்களை கவனிப்பதற்காக பெண்கள் போலீஸ் நியமிக்கப்படுவதைப்பற்றி முன்பே விவரித்துச் சொன்னேன்.

*State Publishing House.*

* 102 Q.—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Finance be pleased to state whether there is any proposal to constitute a State Publishing House for publishing cheap books in Tamil?

THE HON. SRI C. SUBRAMANIAM : No, Sir.

SRI N. K. PALANISAMI : ஏற்கெனவே நமது ராஜ்யத்தில் தமிழில் ஆட்சி நடப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகின்ற இந்த நேரத்திலே, உத்தியோகப்பற்றற்ற ஒரு கமிட்டியைப் போட்டு திருவள்ளுவர் எழுதிய திருக்குறளையும் பாரதியார் எழுதிய புஸ்தகங்களையும் குறைந்த விலையில் வெளியிடுவதற்கு அரசாங்கம் முன்வருமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இந்த விஷயத்தில் தனிப்பட்டவர்கள் பிரசுரிப்பதற்கு முன் வந்திருக்கிறார்கள். ஆகவே அரசாங்கம் இதில் தலையிடவேண்டிய அவசியம் இல்லை.

*Incidence of cholera.*

* 103 Q.—SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Revenue be pleased to state the incidence of cholera in the State and in the City so far?

THE HON. SRI M. A. MANICKAVELU : During this year up to 5th October 1957, there have been 1,487 attacks and 285 deaths due to cholera in the City of Madras and 2,361 attacks and 1,197 deaths in the State excluding the City.

SRI K. SATTANATHA KARAYALAR : சென்ற ஆண்டில் இதே காலத்தில் எவ்வளவு காலரா கேசுகள் வந்தது என்று சொல்ல முடியுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : குறிப்பாக இந்த கேள்வி முன்னமே கேட்கப்படவில்லை. ஆகவே புள்ளிவிவரங்கள் கொடுப்பதற்கு அந்தத் தகவல் என்னிடத்தில் இல்லை.

SRI A. A. RASHEED : Is the Hon. Minister aware of the insanitary conditions prevailing in the Infectious Diseases Hospital, Tondiarpet?

[7th November 1957

THE HON. SRI M. A. MANICKAVELU : If the hon. Member brings to my notice any particular manner of insanitation there, I will look into it.

SRI V. K. KOTHANDARAMAN : இந்த வாந்திபேதி வராமல் பாதுகாப்பு அளிப்பதற்கு வேண்டிய சிப்பந்திகள் இல்லாத காரணத்தால் பலர் இறந்துபோனார்கள் என்பது உண்மையா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : அப்படி போதுமான சிப்பந்திகள் போடவில்லை அதனால் இறந்தார்கள் என்று சொல்ல முடியாது. கனம் அங்கத்தினர் அவர்கள் அந்தக் கோணத்திலிருந்து பார்ப்பதனால் அப்படித் தெரிகிறது.

SRI A. GOVINDASAMY : காலராவினால் பாதிக்கப்பட்டவர்கள் சேர்க்கப்படுகிற ஆஸ்பத்திரி மிகவும் அசுத்தமாக இருப்பதனால் நோயாளிகள் வீடு திரும்ப முடியாத நிலைமையில் ஆகிவிட்டார்களா? ஆகவே இந்த சீர்கேடான நிலைமையை மாற்றுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : As far as possible, the Government are trying their best to keep things clean. But the difficulty is, it flares up all of a sudden and we cannot do the necessary things all of a sudden.

SRIMATHI KAMALAMBUJAMMAL : இந்த காலரா பரவுவதற்கு முக்கிய காரணமாக இருப்பது பெரியவர்கள் தங்கள் குழந்தைகளை தெருவிலே அசுத்தம் செய்ய விட்டுவிடுவதனால்தான் என்று சொல்லுகிறார்கள். ஆகவே இதைத் தடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்துக்கொள்வார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : பொதுவாக காலரா வராமல் தடுப்பதற்கு எல்லாவித் சுகாதார நடவடிக்கைகளும் எடுத்துக்கொண்டு வரப்படுகிறது.

SRI A. VEDARATHNAM PILLAI : காலரா நோய் "வாட்டர் போர்ண் டிசீஸ்" என்று சொல்லுகிறார்கள். இப்பொழுது நோய் கண்ட இடங்களில் தண்ணீர் எடுத்து உபயோகப்படுத்தாமல் இருந்தால் பரவாமல் இருக்கும் என்று சொல்லுகிறார்கள். இதைத் தடுப்பதற்கு என்ன நடவடிக்கை சர்க்கார் எடுத்துக்கொண்டார்கள் ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இப்பொழுது நமது ராஜ்யத்தில் காலரா குறைந்துக்கொண்டு வருகிறது. அதற்குக் காரணம் நல்ல சுகாதார பாதுகாப்புப்படி குடித்தண்ணீர் வசதி முதலியவை கொடுக்கப்பட்டு வருகிறது. நேஷனல் ரூரல் சப்ளை ஸ்கீம் பெரும் அளவிலே ப்ரொடெக்டெட் வாடர் வசதி செய்யப்பட்டிருக்கிறது.

### *Aluminium plant.*

*104 Q.—SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether there is a proposal to set up an Aluminium plant in this State; and

(b) if so, the steps taken to set up this industry?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) Yes, The Government of India have under consideration a proposal to set up an aluminium plant at Mettur in Salem district.



7th November 1957]

(b) Before a firm decision regarding the location of the plant could be taken, an accurate assessment of the quality and quantity of the bauxite deposits available in the Shevaroys has to be made. The Central Government are taking steps in this direction.

SRI K. SATTANATHA KARAYALAR : இரண்டாவது ஐந்தாண்டு திட்டம் உரு குறைக்கும்போது, இந்த திட்டம் கைவிடப்படாமல் இருக்குமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : இது பற்றி இன்னும் எந்த விதமான பரிசீலனையும் ஆரம்பிக்கப்படவில்லை. இதை நடத்த வேண்டுமென்ற விதி இருக்கிறது.

SRI M. P. SUBRAMANIAM : இந்தியாவிலிருந்து அமெரிக்காவிற்கு சென்ற தொழிலதிபர் பிர்லா மத்திய பிரதேசத்தில் உள்ள நாகபூரில் ஒரு தொழிற்சாலை ஏற்படுத்துவதற்கு அமெரிக்காவில் ஒப்பந்தம் செய்துக் கொண்டிருப்பதாக பத்திரிகையில் பார்த்தோம். அப்படியென்றால் சேலத்தில் அலுமினியம் தொழிற்சாலை ஆரம்பிக்க அவசியம் இருக்காது என்ற வதந்தி நிலவுகிறதே அது உண்மையா ?

THE HON. SRI R. VENKATARAMAN : நானும் பத்திரிகையில் புகாரைப் பார்த்தேன். அலுமினியம் தொழிற்சாலையைப்பற்றி மத்திய சர்காருக்கு கடிதம் எழுதினேன். பத்திரிகை தகவலைத் தவிர அதிகமான தகவல் இல்லை என்று எனக்கு பதில் வந்தது. பத்திரிகைத் தகவலை வைத்துக்கொண்டு எதையும் முடிவு செய்யமுடியாது.

SRI A. A. RASHEED : Will the Aluminium Plant be set up under private sector or public sector?

THE HON. SRI R. VENKATARAMAN : It may be in the public sector.

SRI A. GOVINDASAMY : சமீபத்தில் ரஷ்யத் தலைவர்கள் இந்தியாவிற்கு வந்த நேரத்தில் இந்த அலுமினியம் தொழிற்சாலை வைக்கப்பட 10 கோடி ரூபாய் கொடுப்பதாக சொன்னது உண்மையா ?

THE HON. SRI R. VENKATARAMAN : அந்த விதமான தகவல் என்னிடம் இப்பொழுது இல்லை.

### *Pambayar Scheme.*

*105 Q.—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether any investigation has been made to supply water for irrigation in Madurai, Ramanathapuram and Tirunelveli districts by building a dam across the river Pambayar in the Kerala State;

(b) if so, the extent that will be irrigated under the scheme; and

(c) whether the Government have approached the Kerala Government in the matter to get their consent for taking up the scheme?

THE HON. SRI P. KAKKAN : (a) to (c) The question of the utilization for the benefit of both the Kerala and Madras States of the waters of the rivers that waste themselves in the sea is under

[7th November 1957

consideration and the investigation of the Pambayar scheme for the purpose specified, can be made only after a final decision is reached in the matter.

**Sri N. K. PALANISAMI** : இந்த திட்டம் குறித்து ஏன் இதுவரையில் நடவடிக்கைகள் எடுக்கவில்லை. எப்பொழுது நடவடிக்கைகள் எடுப்பதாக சர்க்காருக்கு உத்தேசம். பரம்பிக்குளத்தைப் பற்றி பேசக்கூடிய காலத்தில் இதைப் பற்றியும் சர்க்கார் கேரள அரசாங்கத்துடன் பேசுமா ?

**The Hon. Sri P. KAKKAN** : இதைப் பற்றியும் சர்க்கார் கேரள அரசாங்கத்துடன் பேச விரும்புகிறது.

**Sri A. GOVINDASAMY** : இந்த பரம்பிக்குளம் திட்டம் விஷயமாக நம் மந்திரிகள் கேரள மந்திரிகளோடு சம்பாஷணை நடத்த வேண்டுமென்று பத்திரிகைகளில் பார்த்தேன். அதன் முடிவு என்னவென்று அறிய விரும்புகிறேன்.

**The Hon. Sri C. SUBRAMANIAM** : இன்னும் முடிவு சொல்லக் கூடிய நிலை ஏற்படவில்லை. முடிவு ஏற்படும்போது இச்சபை முன் வேண்டிய தகவல்கள் தெரிவிக்கப்படும்.

**Sri K. SATTANATHA KARAYALAR** : பம்பையார், கீரியார் திட்டங்களைப்பற்றி நம் சர்க்கார் பரிசீலனை செய்துள்ளதா ? அதைப்பற்றி சர்க்காருக்கு கிடைத்துள்ள விவரங்கள் என்ன ? அது வொர்க்கபுள் ஸ்கீமா இல்லையா ? என்பதைப் பற்றிச் சொல்ல முடியுமா ?

**The Hon Sri P. KAKKAN** : தனி கேள்வி போட்டால் சொல்லலாம்.

**Sri N. K. PALANISAMI** : பரம்பிக்குளத் திட்டத்திற்குக் கொடுக்கக் கூடிய முக்கியத்துவம் இதற்கும் கொடுக்கப்படுமா ? இது மூன்று ஜில்லாக்களைப் பொறுத்த விஷயமாக இருப்பதாலும், பரம்பிக்குளம் திட்டம் ஒரு ஜில்லாவைப் பொறுத்த விஷயமாக இருப்பதாலும், அதற்குக் கொடுக்கப்படும் முக்கியத்துவம் இந்தத் திட்டத்திற்கும் கொடுக்கப்படுமா ?

**The Hon. Sri P. KAKKAN** : மக்களுக்குப் பயன்படுகிற ஆறுகள் எல்லாவற்றிற்கும் முக்கியத்துவம் கொடுக்கப்படும்.

**Sri K. VINAYAKAM** : கேரள அமைச்சர் குழு, சென்னைக்கு தண்ணீர் கொடுக்க முடியாது என்று முடிவு செய்த செய்தி நம் அமைச்சர்களுக்குத் தெரியுமா ?

**The Hon. Sri C. SUBRAMANIAM** : இப்படிப்பட்ட செய்திகளுக்கெல்லாம் அதிக முக்கியத்துவம் கொடுக்கவேண்டாமென்று அங்கத்தினர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

**Sri R. SWAMINATHA MERKONDAR** : இந்தத் திட்டத்தின் மூலம் பலன் ஏற்பட்டு ராமநாதபுரம் ஜில்லாவிற்கு வரும்போது பார்டரில் உள்ள புதுக்கோட்டைக்கும் பலன் ஏற்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**The Hon. Sri P. KAKKAN** : இன்னும் திட்டமே முடிவு பெறவில்லை. பின்னால்தான் அதைப் பற்றி யோசிக்க வேண்டும்.

**Mr. SPEAKER** : 106, 107 கேள்விகளை ஒன்று சேர்த்து எடுத்துக் கொள்ளலாம்.

*Transport of crackers by railways.*

* 106 *Q.*—**Sri N. K. PALANISAMI** : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether this Government have represented to the Central Government to lift the ban imposed on the transport of crackers by railways from Sivakasi; and



7th November 1957]

(*b*) whether any steps have been taken by the Government to prohibit the manufacture of "Atom" crackers in the State?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : (*a*) Yes, Sir.

(*b*) No, Sir. The manufacture, possession, and sale of crackers known as "Atom bombs" of a large size has already been prohibited and the Government of India who are the concerned authorities have not considered it necessary to ban the manufacture, possession and sale of this type of crackers completely.

* 107 *Q.*—**Sri K. SATTANATHA KARAYALAR** : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether the Government have received recently any representation from the "Fire Works" manufactures of Sivakasi;

(*b*) if so, the nature of that representation; and

(*c*) the action taken thereon?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : (*a*) Yes, Sir.

(*b*) The request was for taking up the question with the Government of India for the lifting of the ban imposed on the booking and transport of fireworks on the Railways.

(*c*) The Government of India were already addressed by this Government for exclusion of crackers other than amarees and all percussion crackers from the ban imposed on the booking and transport of explosives on railways. As the Railway Board have since lifted the ban imposed on the booking and transport of crackers other than amorces of a dangerous variety, no action was considered necessary on the representations received by the Government from the fire works Trade Associations.

**Sri N. K. PALANISAMI** : இச் சர்க்கார் மத்திய சர்க்காரிடம் சொல்லியும்கூட இன்றையதினம்வரை மத்திய சர்க்காரின் தடை இருந்து வருகிறது. லாரியில்தான் போகவேண்டியிருக்கிறது. 40,000 தொழிலாளர்கள் இந்த வேலையில் இருப்பதால் அவர்களின் வாழ்க்கை கெடாமல் இருக்க தடைசெய்தது போக மற்றவைகளை ரெயிலில் கொண்டு செல்ல அனுமதி கோருவார்களா ?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : நான் முன்பு பதில் கூறியபடி, ஆபத்தான பட்டாசுகள் தவிர மற்றவைகள் ரெயிலில் போவதற்குள்ள தடை நீக்கப்பட்டுவிட்டது.

**Sri A. VEDARATHNAM PILLAI** : மக்கள் தங்கள் பணத்தை வீணாக இதில் கரியாக்காமல் இருக்க இந்தத் தொழிலை ஓரளவு கட்டுப்படுத்த அரசாங்கம் முன் வருமா ?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : பணம் கரியாகப் போவது மட்டுமல்ல. விளையாட்டு வினையாகும் என்ற பழமொழியும் உண்மையாகி வருகிறது. ஆகவே என் யோசனை, ஆபத்தை விளைவிக்கக் கூடியதை தடுக்க வேண்டும். அதற்கு இப்பொழுதிருந்து கவனம் செலுத்த மத்திய சர்க்காருடன் யோசித்து எதெது ஆபத்தை விளைவிக்கக் கூடியதோ, விளையாட்டிலே, அதையெல்லாம் தவிர்ப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளவேண்டும் என்பதைத்தான் நானும் சிந்தித்து வருகிறேன்.

**Sri K. ANBAZHAGAN** : தலைவர் அவர்களே, இந்த வெடி மருந்துகள் கலந்த தயாரிப்பு வெடிகளை ரெயிலில் ஏற்றுமதி செய்யப்படுகிற நிலைமையில் ரெயில்வே வாகன்கள் அல்லது அந்தப் பொருள்களை

ஏற்றிச் செல்கிற வண்டிகள், அதற்காக தனிப்பட்ட பிரத்தியேக முறையில் அமைக்கப்பட்டவை இல்லாத காரணத்தால்தான் பெரிய ஆபத்துகள் ஏற்பட்டது என்பது உண்மையா ? தீபாவளி காலத்தில்தான் இவைகள் அதிகமாக ஏற்றுமதி செய்ய நேருவது, அப்பொழுதுதான் தொல்லை ஏற்படுவதால், தீபாவளி கொண்டாட்ட முறையை மாற்ற அரசாங்கம் முன்வருமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : பட்டாசு சுட்டு தீபாவளி கொண்டாடுவது வேண்டாம் என்பது என் கருத்துமாகும். இப்படிப்பட்ட வெடிகள் இல்லாமல், குழந்தைகள் ஆபத்தில்லாமல் விளையாடி தீபாவளியை கட்டாயம் கொண்டாடவேண்டும். இவைகளை ரெயில்வேயில் அதிகமாக ஏற்றுவதால்தான் இந்த ஆபத்து. " டாய் பிஸ்டல் காப்ஸ் "-ல் மருந்து கொஞ்சம் அதிகமாகச் சேர்க்கப்பட்டிருந்தது, அது சரிவர பரிசீலிக்கப் படவில்லை என்று தோன்றுகிறது. அது அதிகப்படி சேர்த்து, அது ரெயிலில் ஒன்றுக்கொன்று இடிப்பதால்தான் இந்த வெடி ஏற்பட்டது.

SRI A. GOVINDASAMY : தீபாவளிப் பண்டிகையை தடை செய்ய அரசாங்கம் முயற்சி எடுக்காவிட்டாலும் அம்மாதிரி ஆபத்தான வெடிகளை செய்யக்கூடாது என்பதற்கு அரசாங்கம் தகுந்த நடவடிக்கைகள் எடுக்குமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : தீபாவளி பண்டிகை வேண்டாமென்று அங்கத்தினர் அவர்களுக்கு அபிப்பிராயம் இருந்தால் அதை அரசாங்கம் தடை செய்யாது. தீபாவளிக்கு விடுமுறை விடப்பட்டும் வருகிறது. ஆபத்தான விளையாட்டுகளுக்கு அனுமதி கொடுக்கக்கூடாது என்பதுதான் அரசாங்கத்தின் கருத்து.

SRI A. A. RASHEED : Is there any proposal to impose a time-limit for the firing of crackers during the night time?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, rather than prescribing a time-limit, it is my own view that this Government should advise the Government of India to ban the manufacture of all these kinds of atom bombs and all that which produces sound. We had a recent pathetic incident. One of the officers of the Government of India belonging to this State was an in-patient in the hospital at Bangalore and on account of the crack of an atom-bomb, he was thrown out of his bed. He got seriously ill and died.

SRIMATHI KAMALAMBUJAMMAL : ஒன்றேடொன்று உரைவதால் வெடிக்கக்கூடிய வெடி மருந்து வகைகளை தயாரிக்கக்கூடாது என்று அரசாங்கம் தடை விதிக்குமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதை ரெயிலில் டிரான்ஸ் போர்ட் செய்யக்கூடாது என்பதுதான் இப்பொழுது அரசாங்கம் கருதுவது. மற்றபடி ஆபத்தில்லை. ரெயிலில் " டாய் பிஸ்டல் காப்ஸ் "—ஐ டிரான்ஸ் போர்ட் செய்வதில் ஆபத்தில்லை என்பது அரசாங்கத்தின் கருத்து. குழந்தைகள் விளையாடுவதிலும் ஆபத்து ஒன்றுமில்லை. ஆட்டம் பாம்ப் மாதிரி.

SRI V. K. RAMASWAMI MUDALIYAR : Are the Government aware of the fact that on account of the bursting of an atom bomb, a Senior Collector of Central Excise recently died at Bangalore?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : That is exactly what I referred to as an unfortunate incident.





SRI M. P. SARATHY : தலைவர் அவர்களே, ஒவ்வொரு இந்தியனும் தீபாவளியை கொண்டாட வேண்டும் என்று மந்திரி அவர்கள் கூறினார்கள். இந்த தீபாவளி தமிழரை இழிவுபடுத்தக்கூடியது என்பதை அமைச்சர் அவர்கள் உணருவாரா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : எல்லோரும் கொண்டாட வேண்டும் என்று நான் சொல்லவில்லை. இது அவரவர்களுடைய அபிப் பிராயம்.

SRI V. K. KOTHANDARAMAN : எக்ஸ்ப்ளோஸிவிஸ் சட்டப்படி இவ் விதமான பட்டாசுகள் செய்வது ஆபத்து என்று இருக்கிறது. ஆகவே இதுபோன்ற விபத்துக்கள் இதனால் தான் ஏற்படுகிறது என்பது சர்க் காருக்குத் தெரியுமா ? அப்படியானால் அதை தடுப்பதற்கு என்ன நட வடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதைப்பற்றி நான் முன்பே சொன்னேன். இதைப்பற்றி மத்திய அரசாங்கமும் இந்த அரசாங் கமும் பரிசீலித்து ஒரு முடிவுக்கு வரும்.

SRI T. P. ELUMALAI : சபாநாயகர் அவர்களே, மெஜாரிட்டி மக்கள் விரும்பக்கூடிய தீபாவளியை விரல்விட்டு எண்ணக்கூடியவர்கள் தடுக்க வேண்டும் என்று சொல்வதால், இந்த பிரச்சாரத்தை தடுக்க சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : மெஜாரிட்டியாக இருந் தாலும் சரி, மைனாரிட்டியாக இருந்தாலும் சரி ஆபத்தை விளைவிக்கும் என்றிருக்கக்கூடிய காரியங்களில் சர்க்கார் வேண்டிய நடவடிக்கை எடுக் கும். ஆனால் தீபாவளியை கொண்டாடும் விஷயத்தில் சர்க்கார் தலை யிடாது.

SRI A. VEDARATHNAM PILLAI : தீபாவளி தமிழ் நாட்டில் மாத்திரம் அல்ல, ராமர் அயோத்திக்கு திரும்பின நாள் என்றும், புத்தர் நிர்வாணம் அடைந்த நாளென்றும் அது உலகில் இருக்கின்ற எல்லா மக்களாலும் கொண்டாடப்படுகிறது என்பது அமைச்சர் அவர்களுக்கு தெரியுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அகில இந்திய ரீதி யில் கொண்டாடப்படுகிறது என்று நான் சொன்னேன். உலகு எங்கும் கொண்டாடப்படுகிறது என்ற செய்தியை சொன்னதற்காக கனம் அங்கத்தினர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

*Syllabus for elementary and high school classes.*

* 108 Q.—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) whether the Government have sent any circular to the officers of the Education Department asking them to elicit the opinion of teachers regarding the modifications of syllabus for all classes in elementary and high schools; and

(b) the subjects prescribed by the Government for 1st class and 5th class?

THE HON. SRI C. SUBRAMANIAM : (a) & (b) The revised syllabi have been published in the Gazette by the Director of Public Instruction for information and criticism. About 800 copies have been distributed extensively to teachers of all grades through their

[7th November 1957

associations and Inspecting Officers in order to ensure the widest possible discussion and participation. The syllabi have not yet been finalised.

Sri N. K. PALANISAMI : ஸார், சர்க்கார் ஆசிரியர் கமிட்டியானது, அதாவது அவர்கள் சிபாரிசு செய்து இருக்கக்கூடிய பாட விஷயங்கள் ஒன்ருவதிலிருந்து ஐந்தாவது வகுப்பு வரையிலும் அதிக நேரம் கைத்தொழிலில் செலவிடப்பட வேண்டுமென்றிருக்கிறது. இம்மாதிரி இருந்தால் ஐந்து வயதுள்ள பிள்ளைகளுக்கு இதில் அதிக கவனம் செலுத்த முடியாது. ஆகவே ஓரளவுக்கு கைத்தொழில் நேரத்தை குறைக்க சர்க்கார் முடிவு செய்யுமா ?

Mr. SPEAKER : கனம் அங்கத்தினர் அவர்கள் இந்த மாதிரி கேள்வியை எல்லாம் கல்வி மசோதா பற்றி விவாதம் நடத்தும்பொழுது கேட்கலாம் என்று நினைக்கிறேன்.

Sri M. KALYANASUNDARAM : இந்த பாடதிட்டங்களை இப்போது முடிவு செய்திருப்பது இறுதியான முடிவுதானு ? அல்லது இதைப்பற்றி ஆலோசிப்பதற்கு தனிப்பட்ட அதிகாரியோ அல்லது வேறு ஏதாவது குழுவோ ஏற்படுத்த சர்க்கார் உத்தேசித்திருக்கிறதா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : இதற்காக தனி குழு ஒன்றிருக்கிறது. 40 உப கமிட்டிகள் இருக்கிறது. இந்த 40 உப கமிட்டிகளின் தலைவர்களும் ஒன்றுகூடி இதைப்பற்றி கடைசியாக பரிசீலனை செய்வார்கள். இந்த முடிவுக்கு பின்னுல் "செக்கண்டரி போர்ட் ஆப் எடுகேஷன்" இதைப்பற்றி பரிசீலித்து முடிவு எடுக்கும்.

Sri S. LAZAR : இந்த ஸிலபஸில் **"Religious Instruction, Moral Instruction"**—இவைகள் சேர்க்கப் பட்டிருக்கிறதா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : **Moral Instruction** சேர்க்கப்பட்டிருக்கிறது.

Sri K. ANBAZHAGAN : தலைவர் அவர்களே, இப்போது வகுக்கப்பட்டிருக்கும் பாடத்திட்டங்கள் குழந்தைகளுக்கு அதிகமாக இருக்கின்றன என்று ஆசிரியர்களிடையே பொதுவாக ஒரு கருத்து நிலவுகிறது. அதைப் பற்றி சர்க்கார் ஆலோசித்திருக்கிறதா ? இதை பரிசீலிப்பதற்கு என்று இருக்கும் குழுவில் சட்டமன்ற உறுப்பினர்களும் இடம் பெற்றிருக்கின்றனரா?

The Hon. Sri C. SUBRAMANIAM : இந்த குழுவில் ஆசிரியர்கள் இடம் பெற்றிருக்கின்றனர். சட்டமன்ற உறுப்பினர்கள் என்ன காரணத்திற்காக இருக்கவேண்டும். இப்போது வகுக்கப்பட்டிருக்கிற முறைப்படி அதிக பளுவாக இருக்கிறது என்றிருக்குமானுல் அதைப்பற்றி இந்த குழு பரிசீலிக்கும் என்று நம்புகிறேன்.

Sri K. VINAYAKAM : Is the Minister aware of the fact that sufficient number of copies of this new syllabus is not available for teachers, and will the Government take steps to make more copies available so that the teachers may read them and be in a position to express their view on it?

The Hon. Sri C. SUBRAMANIAM : I have already stated that it has been extensively distributed. Whoever wants a fresh copy will be supplied with it.

Mr. SPEAKER : இப்போது கேள்வி நம்பர் 109, 110-எ, 110பி, இந்த மூன்று கேள்விகளும் சேர்ந்தால்போல் எடுத்துக்கொள்ளப்படும்.



7th November 1957]

*Aid for Silk Industry.*

* 109 Q.—Sri V. K. KOTHANDARAMAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) the amount received by the Government by way of financial aid from the Central Silk Board in 1957; and

(b) the amount earmarked to improve the rearing of cocoons for the production of raw silk?

The Hon. Sri R. VENKATARAMAN : (a) Rs. 35,214.

(b) Rs. 3,57,200.

*Silk Industry.*

* 110-A Q.—Sri V. K. KOTHANDARAMAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether the Government have any information as to the quantity of raw silk imported into this State and the quantity consumed; and

(b) the steps taken to improve the silk industry after the Re-organization of States?

The Hon. Sri R. VENKATARAMAN : (a) & (b) A note containing the information* required is placed on the Table of the House.

*Arthur Hope Silk Farm, Hosur.*

* 110-B Q.—Sri V. K. KOTHANDARAMAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) when the Arthur Hope Silk Farm, Hosur, was started; and

(b) the extent of the Farm?

The Hon. Sri R. VENKATARAMAN : (a) In 1944.

(b) 104 acres.

Sri V. K. KOTHANDARAMAN : ராஜ்ய பிரிவினைக்குப்பிறகு இந்த ராஜ்யத்திலிருந்த கொள்ளேகால் ஸில்க் பாக்டரி மைசூருக்கு போய் விட்டது. இப்போது இங்கு உற்பத்தியாகிற ஸில்க் கக்கூன்கள் எல்லாம் அந்த இடங்களுக்கு போய் கொண்டிருக்கிறது. ஆகவே இங்கே மலிவாக கிடைக்கக்கூடிய தன்மையில் பட்டுநூல் தயாரிக்க நமது ராஜ்யத்தில் ஒரு ஸில்க் பாக்டரி ஏற்படுத்த சர்க்கார் ஏதாவது உத்தேசித்திருக்கிறதா ?

The Hon. Sri R. VENKATARAMAN : ஹோசூரில் ஏற்படுத்த வேண்டுமென்று முயற்சிகள் நடந்து வருகிறது.

* Printed as Appendix on pages 455–456 infra.

[7th November 1957

SRI S. LAZAR: In view of the large demand for artificial silk in the form of nylon, etc., is there any proposal before the Government to instal a factory to manufacture such silk?

THE HON. SRI R. VENKATARAMAN: The main question relates to raw silk. A separate question may be put with regard to artificial silk.

SRI M. P. SUBRAMANIAM: "ஸில்க் பவர்லூம்" ஜப்பானிலிருந்து வரவழைப்பதற்கு வேண்டி இந்தியாவுக்கும் ஜப்பானுக்கும் ஒப்பந்தம் ஏற்பட்டிருப்பதாக தெரிகிறது. அதில் சென்னைக்கு எவ்வளவு ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று தெரிவிக்க முடியுமா?

THE HON. SRI R. VENKATARAMAN: I want notice for this question.

SRI P. G. MANICKAM: கோயம்புத்தூரில் தாளவாடி பிர்க்காவில் பட்டுப்புழு உற்பத்தி செய்யப்படுவதாக தெரிகிறது. இதற்கு அரசாங்கத்தார் எவ்வளவு தொகை ஒதுக்கியிருக்கிறார்கள் என்பதை தெரிவிக்க வேண்டுகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN: தாளவாடி பிர்க்காவில் ஸில்க் உற்பத்திக்காக பல நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகிறது. அங்கு இதற்காக "மல்பரி கல்டிவேஷன்" நடந்துகொண்டிருக்கிறது.

SRI N. K. PALANISAMI: இப்போது நம் நாட்டில் பட்டுத் தொழில் மிக மோசமடைந்து வருகிறது. ஏனென்றால் வெளி நாடுகளிலிருந்து பட்டுத்துணி அதிகமாக இறக்குமதியாகி கொண்டிருக்கின்றன. ஆகவே இதை தடை செய்வதற்கு சர்க்கார் ஏதாவது முயற்சி எடுத்திருக்கிறதா?

THE HON. SRI R. VENKATARAMAN: இது அந்நிய நாட்டை பொறுத்த விஷயம். இதை பார்லிமெண்டில்தான் கேட்க வேண்டும்.

SRI K. SATTANATHA KARAYALAR: தென்காசி தாலுகாவில் "ஸெறிகல்ச்சர்" உற்பத்தி எந்த நிலையில் இருக்கிறது?

THE HON SRI R. VENKATARAMAN: இதற்காக அங்கு "மல்பரி கல்டிவேஷன்" நடந்துகொண்டிருக்கிறது.

SRI V. K. KOTHANDARAMAN: அகில இந்திய போர்டிலிருந்து மைசூருக்குத்தான் அதிகமாக ஸில்க் கக்கூன்கள் ஒதுக்கப்பட்டு வருவதாக தெரிகிறது. இது உண்மையா? அப்படியென்றால் இந்த போர்டில் சென்னை ராஜ்யத்திற்கு என்று இருக்கக்கூடிய மெம்பர் யார்?

THE HON. SRI R. VENKATARAMAN: சாதாரணமாக இந்த போர்டில் டயாக்டர் ஆப் இண்டஸ்ட்ரீஸ் அவர்களோ அல்லது அவரது நாமினியோ மெம்பராக இருப்பது வழக்கம். மற்றபடி மைசூருக்கு அதிகமாக கொடுக்கப்படுகின்றது என்கின்ற நிலைமை இருக்குமானால் நம்முடைய ராஜ்ய பிரதிநிதி அங்கு சும்மா இருக்கமாட்டார்.

SRI M. KALYANASUNDARAM: மந்திரி அவர்கள் கொடுத்திருக்கும் தகவலிலிருந்து நம்முடைய ராஜ்யத்திற்கு ஆறு மாதங்களுக்கு 1,000 பவுண்ட் நூல் கிடைத்து வருவதாக தெரிகிறது. இது நம்முடைய நாட்டிற்கு பற்றாமல் இருந்தால் இதை அதிகப்படுத்துவதற்கு அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறதா?



7th November 1957]

THE HON SRI R. VENKATARAMAN: இந்த மூன்று கேள்விகளும் ஸில்க் அதிகமாக உற்பத்தி செய்வதைப்பற்றியது. அதற்கான புள்ளிவிவரங்கள்தான் என்னிடம் இருக்கின்றன. நூல் விஷயமாக பதில் வேண்டுமானால் தனியாக கேள்வி போடவேண்டும்.

SRI V. K. KOTHANDARAMAN: நமது ராஜ்யத்திலேயே இருந்த, பட்டுத் துணிகளை உற்பத்தி செய்யும் மில்லாகிய ஸெத் இண்டியன் ஸில்க் மில்—குடியாத்தத்தில் இருந்தது—1952-ல் மூடப்பட்டது. அதை சர்க்காராவது எடுத்து நடத்துவதற்கு முயற்சி செய்யுமா?

MR. SPEAKER: மூலக் கேள்விக்கும் நீங்கள் போடும் கேள்விக்கும் என்ன சம்பந்தம் இருக்கிறது? நான் இந்தக் கேள்வியை அனுமதிக்கவில்லை. I rule this question out of order.

*Complaint against the Trustee of Sri Vanamamalai Math, Nanguneri.*

* 110 Q.—SRI S. B. ADITYAN: Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) whether any complaints against the trustee of Sri Vanamamalai Math and temple at Nanguneri, in respect of the properties of the Math and temple, were received either by the Hon. the Minister or by the Deputy Commissioner, Hindu Religious and Charitable Endowments, Tanjore;

(b) whether any enquiry was conducted by the Assistant Commissioner, Hindu Religious and Charitable Endowments, Tirunelveli;

(c) whether any report was submitted after such enquiry;

(d) whether the Assistant Commissioner has suggested framing of any scheme for the temple or filing of a suit in respect of the Math; and

(e) the action proposed to be taken in respect of the management of the Math and temple?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) *to* (*e*) Petitions have been received and a report has been called for from the Commissioner, Hindu Religious and Charitable Endowments. His report is awaited.

SRI A. V. P. ASAITHAMBI: இதைப்போல் பல மடங்களில் ஊழல்கள் இருப்பதாக சர்க்காருக்கு ரிப்போர்ட் வந்திருப்பது உண்மையா? அப்படியானால் அவைகளின் பேரில் சர்க்கார் என்ன நடவடிக்கை எடுக்கவிருக்கிறது?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: குறிப்பாக ரிப்போர்ட் எதுவும் வந்ததாகக் கூறமுடியாது. எந்த தர்ம ஸ்தாபனத்திலும், எந்த மடத்திலும், ஊழல்கள் இருந்தாலும், சட்டம் கொடுக்கும் அதிகாரங்களையெல்லாம் பிரயோகித்து வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்; நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

MR. SPEAKER: Questions are over.

[*Note.*—**An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.**]

## II.—ANNOUNCEMENT BY THE HON. SPEAKER.

### MESSAGES FROM THE GOVERNOR

MR. SPEAKER : I have to announce to the House the following two messages, dated 4th November 1957, received from the Governor of Madras :—

(1) In pursuance of Article 207, clause (1), read with Article 199, clause (1), of the Constitution of India I, P. V. Rajamannar, Governor of Madras, hereby give my recommendation to the introduction in the Madras Legislative Assembly of the Madras Payment of Salaries and Removal of Disqualifications (Second Amendment) Bill, 1957.

(2) In pursuance of Article 207, clause (3), of the Constitution of India, I, P. V. Rajamannar, Governor of Madras, hereby recommend to the Madras Legislative Asembly the consideration of the Madras Payment of Salaries and Removal of Disqualifications (Second Amendment) Bill, 1957.

## III.—ADJOURNMENT MOTION *RE* THE ARREST OF E. V. R. PERIYAR.

MR. SPEAKER : I have received notice of an adjournment motion from the hon. Member Sri S. B. Adityan to discuss a matter of urgent public importance, viz., the arrest of Sri E. V. R. Periyar. Under rule 49, sub-rule (viii), the matter to be discussed must involve more than the ordinary administration of the law. I am, however, satisfied that the arrest of E. V. R. Periyar is in the normal course of the maintenance of law and order and, I, therefore, rule the adjournment motion out of order.

## IV.—CALLING ATTENTION TO A MATTER OF URGENT PUBLIC IMPORTANCE UNDER RULE 40 OF THE ASSEMBLY RULES *RE* FAILURE OF THE GOVERNMENT IN NOT TAKING ACTION AGAINST THE MANAGEMENT OF A BEEDI FACTORY.

MR. SPEAKER : I have received notice of a motion under rule 40 from Sri V. K. Kothandaraman, which calls the attention of the Hon. the Minister for Industries to a matter of urgent public importance, viz., the failure of the Government in not taking action against the management of 'Three Horse Beedi' Factory at Pernambut, which has closed down a number of branches.

Sri V. K. Kothandaraman will now speak.

9-32 a. m. SRI V. K. KOTHANDARAMAN : கனம் தலைவர் அவர்களே, வட ஆற்காடு ஜில்லாவிலுள்ள பேரநாம்பட்டி கிராமத்திலிருக்கும் மூன்று குதிரை பீடி பாக்டரியில் 1957-ம் ௵ ஜூலை ௴ 26௳ அன்று கதவடைப்பு செய்யப்பட்டது. இந்தத் தொழிற்சாலையில் சுமார் 400-க்கு மேற்பட்ட தொழிலாளர்கள் வேலை செய்துகொண்டிருந்தார்கள். பாக்டரியில் திடீரென்று கதவடைப்பு செய்யப்பட்டது. மறுபடியும் தொழிற்சாலையைத்



திறந்து தங்களுக்கு வேலைகொடுக்க வேண்டுமென்று தொழிலாளர்கள் சாத்வீகமான முறையில் போராட்டம் நடத்தினார்கள். அப்படிப் போராடிய 200 தொழிலாளர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்களில் பலர் மீது வழக்குத் தொடரப்பட்டது. இப்போதும் 100-க்கு மேற்பட்ட தொழிலாளர்கள் மீது வழக்கு இருந்துவருகிறது. இந்தத் தொழிலாளர்கள் சாத்வீகமான முறையில் போராட்டம் நடத்திக்கொண்டிருந்தபோது இந்தப் பிரச்னை தொழில் தகராறு கோர்ட்டுக்கு விடப்பட்டது. தகராறானது தொழில் தகராறு கோர்ட்டுக்கு விடப்பட்டதால், தொழிலாளர்கள் தங்கள் போராட்டத்தை நிறுத்திக்கொண்டார்கள். ஆனால் இதுவரைக்கும் இவர்களுக்கு மீண்டும் வேலை கொடுக்கப்படவில்லை. தகராறானது தொழில் தகராறு கோர்ட்டில் இருக்கும்போது முதலாளிகள் தொழிற்சாலையைத் திறந்து தொழிலாளர்களுக்கு மீண்டும் வேலை கொடுக்கவேண்டும்; தொழிலாளர்கள் வேலை நிறுத்தமோ போராட்டமோ நடத்தக்கூடாது. அதன்படியே தொழிலாளர்கள் தங்கள் போராட்டத்தை நிறுத்திக்கொண்டார்கள்; ஆனால் முதலாளி இதுவரையிலும் அவர்களுக்கு மீண்டும் வேலை கொடுக்கவில்லை. அவர்களுக்கு வேலை கொடுக்காத முதலாளியின் மீது இதுவரையிலும் எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. வேலை கொடுக்கப்படாததால் தொழிலாளர்கள் மிகமிகக் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். தொழிலாளர்கள் சாத்வீகமான முறையில் போராட்டம் நடத்தினார்கள். தொழிலாளர்கள் சார்பில் போலீசாருக்கு பல "கம்ப்ளெய்ண்ட்ஸ்" கொடுக்கப்பட்டபோது போலீசார் அவைகளை கவனிக்கவே இல்லை. ஆனால் முதலாளியின் சார்பில் கொடுக்கப்பட்ட ஒவ்வொரு புகாரின் பேரிலும் போலீசார் நடவடிக்கை எடுக்கும் நிலைமை அங்கே இருக்கிறது. இப்போது 100-க்கு மேற்பட்ட தொழிலாளர்கள் மீது தொடரப்பட்டிருக்கும் வழக்கை வாபஸ் வாங்குவதற்கு கனம் போலீஸ் அமைச்சரிடம் கனம் தொழில் அமைச்சர் சிபாரிசு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், முதலாளியின் இரண்டு பிள்ளைகள், முதலாளிக்குச் சாதகமாக இருக்கும் 11 பேர்களின் மீது வழக்குப்போட்டதற்குப் பிறகு அந்த வழக்கை வாபஸ் வாங்கியிருப்பதாகவும் தெரிகிறது; அந்தப் 11 பேர்கள் கைதுசெய்யப்பட்டு அவர்கள் மீது வழக்குத் தொடரப்பட்டபிறகு அந்த வழக்கு வாபஸ் வாங்கப்பட்டிருக்கிறது என்று தெரிகிறது; இதற்குக் காரணம் தெரியவில்லை. இந்தப் பிரச்னைபற்றி அரசாங்கம் உடனடியாக விசாரணை செய்து தக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, in August 1957, the North Arcot District Beedi Workers' Union represented to the Labour Department that three factories belonging to the proprietor of the 'Three Horse Beedi Factory', Pernambut, were closed on 26th July 1957, with a view to splitting the factories into several branches and thus evade labour legislation. The Personal Assistant to the Commissioner of Labour conducted conciliation in the dispute. The proprietor contended that he had no connexion with the workers as they were under the employment of three contractors who were the occupiers of the factories concerned, under the Factories Act. The Government after examining the report of the Conciliation Officer (Personal Assistant to the Commissioner of Labour) referred the dispute to the Industrial Tribunal, Madras, for adjudication. Both the proprietor of the factories and the three agents have been impleaded as parties in the dispute. The award of the Industrial Tribunal is awaited. Since the Tribunal is seized of the affair, the question of taking action against the management will have to be considered only after the award is published.

## V.—GOVERNMENT MOTION.

MOTION UNDER RULE 23 OF THE MADRAS ASSEMBLY RULES *re* TRANSACTION OF GOVERNMENT BUSINESS ON A NON-OFFICIAL DAY.

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, I move that rule 23 of the Madras Legislative Assembly Rules be suspended and the House do resolve to transact Government business now.

The motion was put and carried.

## VI.—GOVERNMENT BILL.

THE MADRAS PAYMENT OF SALARIES AND REMOVAL OF DISQUALIFICATIONS (SECOND AMENDMENT) BILL, 1957.

THE HON SRI C. SUBRAMANIAM : Sir, I beg leave to introduce the Madras Payment of Salaries and Removal of Disqualifications (Second Amendment) Bill[a], 1957.

MR. SPEAKER : The question is—

"That leave be granted for the introduction of the Madras Payment of Salaries and Removal of Disqualifications (Second Amendment) Bill, 1957."

The motion was put and carried and the Bill was introduced.

## VII.—NON-OFFICIAL BUSINESS.

### RESOLUTION.

RE-OPENING OF FAIR PRICE SHOPS.

SRI N. K. PALANISAMI : Sir, I beg to move my resolution as revised, namely,—

"This House desires to bring to the notice of the Government the critical food situation in the State and urges them to take steps to ensure—

(a) increase of food production in the State;

(b) stabilization of prices at reasonable levels and for taking preventive measures against speculation; and

(c) continuance of the fair price shops by securing adequate quota from the Centre and by procuring the surplus produce from the rich landlords".

My original resolution was as follows :—

"This House recommends to the Government to reopen all Fair Price Shops in all places including major and minor panchayats".

MR. SPEAKER : I hope the House gives permission to Sri N. K. Palanisami to move his resolution as revised.

HON. MEMBERS : Yes, Sir.

[a] Published in the *Fort St. George Gazette* Extraordinary, dated 7th November 1957.



MR. SPEAKER : Sri N. K. Palanisami has the permission of the House to move his resolution as revised. As the Mover of the Resolution, I hope he will be able to finish his speech within half an hour.

SRI N. K. PALANISAMI : கனம் சபாநாயகர் அவர்களே நான் இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவருவதன் நோக்கம் இன்றைக்கு நமக்கு இருக்கக்கூடிய நெருக்கடியான நிலைமையை விளக்குவதற்காகத் தான். அது மட்டுமல்ல. நம் சர்க்கார், மத்திய சர்க்காரை மேலும் நிர்ப்பந்தம் செய்து இன்னும் ஓரளவு அதிகப்படியான அளவு இறக்குமதி செய்யவேண்டுமென்பதற்கும்தான். இதில் கட்சி பேதம் ஒன்றுமில்லை. எல்லோரும் ஒரே கட்சியைச் சேர்ந்தவர்கள் என்ற முறை யிலே நாம் மேலும் மேலும் மத்திய சர்க்காரிடம் நமக்கு இருக்கக்கூடிய நெருக்கடியான நிலைமையை அறிவித்து போதிய அளவு உணவுப்பொருளை அவர்களிடமிருந்து பெறவேண்டிய முயற்சிகளைச் செய்யவேண்டும். 1953-ல் உணவு மந்திரி சொன்னார்கள், உணவுப் பிரச்னை தீர்ந்துவிட்ட தென்று. இப்போது நாலு வருஷத்திற்குப் பிறகு இந்த உணவுப் பிரச்னை மிக நெருக்கடியான நிலைமையில் இருக்கிறது. 1958-ம் வருஷத் திற்கான ரிஸர்வை எடுக்கக்கூடிய நிலைமை வந்திருக்கிறது. அடுத்த வருஷத்திற்கு என்ன செய்வதென்ற நெருக்கடியான நிலைமை ஏற்பட் டிருக்கிறது. ஒரிஸாவில் பஞ்சம், பீஹாரில் பஞ்சம், மத்தியப் பிர தேசம் போன்ற பகுதிகளில் நெருக்கடியான பஞ்சம். நெருக்கடி ஏன் வருகிறது ? அன்றைக்கு இதற்குப் பல நடவடிக்கைகள் எடுத்திருக் கிறோம். அன்றைய தினம் உணவு மண்டலங்களை ஏற்படுத்தினோம். விவசாயிகளுக்குப் போதுமான கடன் கொடுத்தோம். இன்னும் அவர் களுக்கு உரம் வாங்கப் பணம் கொடுத்தோம். மாடு வாங்கப் பணம் கொடுத்தோம். இவ்வளவு கொடுத்தும் இன்றையதினம் நெருக்கடியான நிலைமை ஏற்படுவதற்கு யார் பொருப்பு ? உணவு மண்டலத்தை ஏற் படுத்தினோம். அப்படி ஏற்படுத்திய பிறகு அரிசி விலை ஏறிவிட்டது, குறையவில்லை. உணவு மண்டலத்தின் அடிப்படை நோக்கமென்ன ? அதன் காரணமாக உணவு விலை குறையும் என்ற முறையில்தான் ஏற் படுத்தினோம். உணவு மண்டலம் ஏற்படுத்தியவுடன் அந்தந்த வியாபாரி கள் பேசாமல் உட்கார்ந்து விட்டார்கள். ஆனால் விஷம்போல விலை ஏறிக்கொண்டு வருகிறது. மீடியமாக இருக்கக்கூடிய அரிசி $13\frac{1}{2}$ அணு வாக இருந்தது இன்றைக்கு ஒரு ரூபாய் விற்கிறது. சாதாரண அரிசி $11\frac{1}{2}$ அணுவாக இருந்தது இன்றைக்கு $12\frac{1}{2}$ அணுவாக விற்கிறது. மீடியம் அரிசி $13\frac{1}{2}$ அணுவிலிருந்து இன்றைக்கு $2\frac{1}{2}$ அணு ஒரு படிக்கு ஏறி இருக்கிறது, உணவு மண்டலம் ஏற்படுத்திய பிறகு. காரணம் என்ன ? தஞ்சாவூரில் குறுவை அறுவடையான பிறகு முன்பெல்லாம் விலை குறைந்துவிடும். ஆனால் இன்றைக்கு ஏறியிருக்கிறது. ஆந்திராவில் கூட விலை ஏறியிருக்கிறது. இந்த உணவு மண்டலத்தால் பிரயோசனம் இருக்கிறது என்ற நிலைமை இல்லையென்றுதான் சொல்லவேண்டும். ஏற் கெனவே உணவு மண்டலம் ஏற்படுத்தக்கூடிய காலத்தில் மத்திய சர்க்கார் அந்தந்த மாகாணத்துக்கு வேண்டிய உணவுப் பொருள்களை அனுப்ப வேண்டும் என்று முடிவு ஏற்படவில்லை. இன்றைய தினம் கேரளாவில் 500 பேருக்கு ஒரு ரேஷன் கடை வைத்திருக்கிறார்கள். அவர்கள் இங்கு ஆட்களை அனுப்பி உண்வுப் பொருள்களை வாங்கிக்கொண்டு போவதாக கனம் மந்திரி அவர்கள் பதில் சொல்லக்கூடிய காலத்தில் சொன்னார்கள். 6,000, 7,000 டன் அரிசியை கேரளாவுக்கு இங்கிருந்து வாங்கிக்கொண்டு போயிருப்பதாகச் சொன்னார்கள். நாம், இங்கு இருக்கக்கூடிய ரேஷன் அதாவது நிவாரண கடைகளை வைத்து ஆந்திராவிலிருந்து வாங்க ஏன் ஏற்பாடு செய்யக்கூடாது? இப்போது ரேஷன் கடைகளை நடத்துவதற்கு நாம் கடன் வாங்கிக்கொண்டிருக்கிறோம். நாம் நேரடியாக வியாபாரிகள் மூலமாக பூரா கடைகளை நடத்துவதற்கு சர்க்கார் ஏன் நடவடிக்கை எடுக்கக் கூடாது ? இப்போது இருக்கக்கூடிய பிரச்னை ஒரு ஸ்டேட்டும் இன்னொரு ஸ்டேட்டும் சண்டை போடுவது என்பது அல்ல. பரம்பிகுளம் திட்டம் இருக்கிறது.. அதனால் சண்டை போடக்கூடாது. கம்யூனிஸ்ட் சர்க்கார் 9-40 a.m.

என்பதற்காகச் சொல்லவில்லை. எந்த சர்க்காராயிருந்தாலும், மாகாண சர்க்கார், மத்திய சர்க்கார் ஆகிய முறையில் போகவேண்டுமேயொழிய, இருக்கக்கூடிய நிலைமையில் வேறு விதமான விதத்தில் கூறுவது பொருத்தமாக இருக்காது என்று கூற விரும்புகிறேன்.

ஆந்திராவிலிருந்து நமக்குக் கிடைப்பதைவிட நம்முடைய பிரதேசத்திலிருந்து கேரளாவுக்குப் போவதாகச் சொன்னார்கள். நேரடியாக ஆந்திர சர்க்கார் (கனம் ஸ்ரீ ஸி. சுப்ரமணியம்: சர்க்கார் அல்ல, வியாபாரிகள்) வியாபாரிகள் கொடுத்து கேரள வியாபாரிகள் வாங்கிப்போகிறார்கள். ஆகவே, இப்போது இருக்கக்கூடிய இப்படிப்பட்ட ஒரு நிலைமைக்கு காரணம், நம் சர்க்கார் அனுஷ்டிக்கும் ஒரு கொள்கை. ஏற்கெனவேயே, எல்லா ராஜ்யங்களிலும் பற்றுக்குறை பட்ஜெட். அது மட்டுமல்ல. கோடிக்கணக்கான ரூபாய் நோட்டு அடித்திருக்கிறோம். அதனால் இன்ப்ளேஷன் என்று சொல்வார்களே அது ஏற்பட்டிருக்கிறது. உணவுப் பொருள்கள், மற்றப் பொருள்கள் எல்லாவற்றிலும் பற்றுக்குறையிருக்கிறது. உணவு உற்பத்தி அதிகமாக இல்லை. ஆகவேதான் நெருக்கடியான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்ல, அன்றைய தினம் மத்திய சர்க்காரும் சொன்னார்கள். பாங்கில் கடன் கொடுப்பதை தடை செய்திருக்கிறோமென்று. ஆனால் முதலில் கொடுத்ததைவிட 87 பங்கு மேற்கொண்டு கொடுத்திருக்கிறார்கள். அது மட்டுமல்ல. 1956-ல் 646 கோடி ரூபாய் முன் பணமாக வியாபாரிகளுக்குக் கொடுத்திருக்கிறார்கள். இந்த ரூல்ஸைப் போட்டும் கூட, ரிசர்வ் பாங்க் உத்திரவை ஷெட்யூல்டு பாங்குகள் கேட்காமல் 1957-ம் வருஷக் கடைசியில் கூட 747 கோடி ரூபாய் கொடுத்திருக்கிறார்கள். எஸென்ஷியல் கமாடிடீஸ் பில் பாஸ் செய்தார்கள். இந்த விலைக்கு மேல் போனால், ஸ்டாக்குகளை ப்ரொக்யூர் செய்து மூன்று மாத சராசரி விலைப் போட்டு எடுத்துக்கொள்வோமென்று சொன்னார்கள். இப்படிச் சொல்லி இவ்வளவு நாட்களாகியும் வியாபாரிகள் மீது எந்த விதமான நடவடிக்கையும் எடுத்திருப்பதாகத் தெரியவில்லை. ஆனால் விலை மட்டும் 13½ அணாவிலிருந்து ஒரு ரூபாயாக ஆகிவிட்டது. இன்னும் ஒரு அணா ஏறினால் நாட்டில் இன்னும் நெருக்கடியான நிலைமை ஏற்படும்.

இப்போது எல்லா இடங்களிலும் நிவாரணக் கடைகளில்லை. இதனால் தான் இன்றைய தினம் இந்தமாதிரி நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. எந்தெந்த இடங்களில் இந்தக் கடைகள் அவசியமோ அந்தந்த இடங்களில் ஏற்படுத்தியாகவேண்டும். திருநெல்வேலி போன்ற பஞ்சப் பிரதேசங்கள் இன்னும் அநேகம் இருக்கின்றன. தேவை அதிகமாக இருக்குமிடங்களில் அவசியமான நிவாரணக் கடைகள் இல்லை. எங்கு பார்த்தாலும் ஒரே கணக்காக, தேவையில்லாத இடங்களில் எடுப்பதற்கு பதிலாக, பொதுவாக குறைத்திருப்பது வருந்தத் தக்கது. இன்றைய தினம் இந்த நிவாரணக் கடைகளில் கொடுக்கக்கூடிய அரிசியை மனிதன் சாப்பிட முடியாது. அவ்வளவு ரொம்ப மோசம். போதுமான கடைகளும் கிடையாது. ஸப்ளை செய்ய என்ன வழி இருக்கிறதென்று தெரியவில்லை. ஆகவே, இம்மாதிரியான பிரச்னை இருக்கிறது. ஏழு, எட்டு வருஷ காலமாக அம்மாதிரியான நிலைமை ஏற்பட்டும், இந்த உணவுப் பிரச்னையைத் தீர்க்க முடியவில்லை என்பது வருந்தத்தக்க விஷயம். உடனடியாக சரியான முறையில் உண்வு உற்பத்தியைப் பெருக்கவேண்டும். மாடு வாங்க்ப் பணம் கொடுத்தோம். உரம் வாங்கப் பணம் கொடுத்தோம். அணைக்கட்டுத் திட்டங்கள் போட்டோம். ஆனால் தேவையான அளவு உற்பத்தி செய்ய முடியவில்லை. நிலச் சீர்திருத்தம் கொண்டுவரவேண்டும். ஏற்கெனவே சட்டம் போட்டோம். நடைமுறைக்கு வரும் காலத்தில் வேறு விதமாகப் போய்விடுகிறது. காங்கிரஸ் என்ன சொல்கிறது ? நாங்கள் என்ன சொல்கிறோம்? நிலப் பிரபுத்வத்தை கட்டுப்படுத்தி ஓரளவுக்கு வரம்பு வைத்து அதிகப்படியான பூமிகளை நிலமில்லாதவர்களுக்குப் பிரித்துக் கொடுக்கவேண்டுமென்று சொல்லுகிறோம். காங்கிரஸ் உழுபவனுக்கும் நிலச் சொந்தக்காரனுக்கும் இடையில் இண்டர்மீடியரிஸ் இவர்கள் பேரில் தான் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்ற முறையில் அவர்கள் கொள்கை வந்திருக்கிறது. அதன் காரணமாக ஜமீந்தாரிகளை ஒழித்தோம். அப்படியிருந்தும், இன்றைய தினம் ஏராளமான பூமி இருக்கிறது.



1953-ம் வருஷத்தில் ஆந்திராவில் ஒரு ஜில்லாவில் “ சீலிங் ”கைக் கொண்டு வந்தார்கள். அதைப் பரீட்சார்த்தமாகக்கொண்டு வந்தார்கள். அங்குள்ள நிலத்தைப் பிரித்துக்கொடுக்க வேண்டும் என்று நினைத்தபோது அங்கே 96 ஆயிரம் எக்கர் நிலம் விவசாயிகளுக்குக் கொடுக்கலாம் என்று கணக்கிடப்பட்டது. ஆனால் பிரித்துக் கொடுக்க நடவடிக்கை எடுத்துக்கொண்டபொழுது சுமார் ஆறு ஆயிரம் எக்கர் தான் இருந்தது. ஆகவே அங்கே சரியான முறையில் பிரித்துக்கொடுக்க முடியவில்லை. ஆகவே இந்தச் சட்டம் ஜனங்களுக்கு எந்த அளவிலும் உபயோகம் இல்லாமல் இருக்கிறது என்பது நமக்குத் தெரியும்.

இப்பொழுது 60—40 சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. அது சரியானபடி அமுல் நடத்தப்பட்டு வருகிறதா என்றால் இல்லை என்றுதான் சொல்லவேண்டும். ஒரு இடத்திலாவது சரியானபடி அமுல் நடத்தப்படவில்லை. மந்திரிகளுக்கு பூமி இருக்கின்ற காரணங்களால் அப்படி சரிவர அமுல் நடத்தப்படாமல் இருக்கிறதோ என்றுகூட நினைக்கும்படியாக இருக்கிறது. சமீபத்தில் ஒன்று நடந்தது. மதுரை துவரிமான் என்ற இடத்தில் ஜானகி அம்மாள் முதலியவர்களை அதாவது 120 பேர்களை கைது செய்திருக்கிறார்கள். நிலத்தை பத்து வருஷங்களாக உழுது ரசீதுகூட வைத்திருந்தார்கள். அப்படி இருந்தும் அவர்களை நிலத்தை விட்டு வெளியேறவேண்டும் என்று சொல்லி இருக்கிறார்கள். அதைப்போலவே உடுமலைப்பேட்டையில் பரம்பரையாக உழுதுகொண்டிருந்தவர்களைக்கூட பூமியை விட்டு வெளியேற்றியிருக்கிறார்கள். அவர்கள் எல்லோரும் ரசீது கூட வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அப்படி இருந்தும் அவர்களை நிலத்தை விட்டு வெளியேற்றியிருக்கிறார்கள். ஒரு சப்-இன்ஸ்பெக்டரை வைத்துக்கொண்டு அப்படிச் செய்திருக்கிறார்கள். இந்த நிலைமையில் இருக்கிறது அதிகாரிகளுடைய நிலைமையும் மனோபாவமும். பெரிய உத்தியோகஸ்தர்கள் அவ்வளவு பேரும் பூமி வைத்துக்கொண்டிருப்பதால் தான் இப்படி அந்தச் சட்டத்தை அமுல் நடத்த முடியாமல் செய்துவருகிறார்கள். பெரிய உத்தியோகங்களில் 14 பேர்களும், பஸ் ட்ரான்ஸ்போர்ட்டில் 11 முதலாளிகளும், மில் முதலாளிகளில் 56 பேரும் ஆயிரக்கணக்கான எக்கர் நிலம் வைத்துக்கொண்டிருப்பதால் இம்மாதிரியான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட நிலைமை அதிகரித்துக்கொண்டிருந்தால் இந்தச் சட்டத்தை அமுல் நடத்துவது என்பது சந்தேகம் தான்.

ஆகவேதான் நாங்கள் சொல்லுகிறோம் நிலச் சீர்திருத்தம் தான் உணவு உற்பத்திக்கு அடிப்படையான காரியம் என்று. இன்றைக்குப் பார்த்தால் இந்த மாட்டு வாரம் ஏர் வாரம் தகராறினால் சுமார் ஆயிரக்கணக்கான எக்கர் நிலம் இப்பொழுது தரிசாகக் கிடக்கின்றன. சமீபத்தில் சர்க்கார் லாண்ட் யூட்டிலைசேஷன் ஆர்டர் என்று ஒரு உத்தரவைக் கொண்டுவந்தார்கள். அதன்படி எல்லா தரிசு நிலங்களையும் நிலம் இல்லாதவர்களுக்குக் கொடுக்கவேண்டும் என்று சொன்னார்கள். ஆனால் அதை இன்னும் அமுலுக்குக் கொண்டுவரவில்லை. அதற்கு வேண்டிய எந்த விதமான நடவடிக்கையையும் இன்னும் எடுத்துக் கொள்ளவில்லை. தரிசு நிலங்களை விவசாயத்திற்கு இன்னும் கொண்டுவரவில்லை.

நாம் ஹரிஜனங்களைப்பற்றி எவ்வளவோ பேசிக்கொண்டுவருகிறோம். ஹரிஜனங்களில் 100-க்கு 99 பேர்கள் விவசாயிகள். நம்மிடம் இப்பொழுது ஏராளமாக புறம்போக்கு நிலம் இருக்கிறது. அவைகளை நிலம் இல்லாத ஹரிஜனங்களுக்குப் பிரித்துக் கொடுக்க இன்னும் சர்க்கார் சட்டம் இயற்ற முன் வரவில்லை. அப்படிப்பட்ட சட்டம் இயற்றுவதற்கு சர்க்காருக்கு அதிகாரம் வேண்டியது இருந்தும் இன்னும் அந்தச் சட்டத்தைக் கொண்டுவராமல் இருக்கிறார்கள். ஆகவே அப்படி புறம்போக்கு நிலங்களை பிரித்து கொடுக்க முன் வருவதோடு நிலத்திற்கு ஒரு “ சீலிங் ”கை வைத்து எல்லோரும் நிலம் அடையக்கூடிய வகையில் நிலங்களைப் பிரித்துக்கொடுக்கவேண்டும். யாரிடம் அதிகப்படியான நிலம் இருக்கிறதோ அவைகளை எடுத்து நிலம் இல்லாதவர்களுக்குப் பிரித்துக் கொடுக்க நடவடிக்கை உடனடியாக எடுத்துக்கொள்ளவேண்டும்.

[Sri N. K. Palanisami] [7th November 1957

அப்படி அவர்களுக்கு நிலத்தைப் பிரித்துக் கொடுப்பதோடு அவர்கள் அதை வைத்துக்கொண்டு வெள்ளாண்மை செய்வதற்கு வேண்டிய வசதிகளையும் செய்துகொடுக்கவேண்டும். விவசாயிகளுக்கு தங்களுக்கு என்று பூமி இருந்தால் தான் அவர்கள் நிலங்களை நன்றாக ஊக்கமாக பயிர் செய்ய முன் வருவார்கள். உணவு உற்பத்தியை பெருக்குவதற்கு அவர்களுக்கு ஊக்கம் ஏற்படும். அதிகமாக பாடுபடுவார்கள். அதிகப்படியான உணவை உற்பத்தி செய்வதற்கும் முன் வருவார்கள். அதன் பிறகு அவர்கள் தங்களுக்கு என்று சைக்கில்கள் முதலியவைகள் வாங்கிக்கொள்வதற்கும் மற்ற வசதிகளை செய்துக்கொள்வதற்கும் வசதி ஏற்படும். அதன் பிறகு தங்களிடம் கொஞ்சம் பணத்தையும் வைத்துக்கொள்ளலாம் என்ற மனப்பான்மையும் ஏற்படும். ஆகவே உணவை அதிகமாக உற்பத்தி செய்யவேண்டும் என்றால் அதற்கு உடனடியாக நிலச் சீர்திருத்தம் கொண்டுவரவேண்டும். இது ரொம்பவும் அவசியமாக கவனிக்கவேண்டிய விஷயம். இதையேதான் திட்டக் கமிஷன் கூட அடிக்கடி சொல்லிக் கொண்டு வருகிறார்கள். இன்னும் நேஷனல் டெவலெப்மெண்ட் கவுன்சில்கூட மாகாண சர்க்கார்கள் சரிவர இந்த நிலச் சீர்திருத்தத்தை அமுலுக்குக் கொண்டுவரவேண்டும் என்று முன்னதாகவே சொல்லியிருக்கிறார்கள். அப்படிச் சொல்லும்போது அதை வெகு வேகமாகக் கொண்டு வரவேண்டும் என்றும் சொன்னார்கள். இதைக் கணக்கில் வைத்துக் கொண்டு போன வருஷமே நம் ராஜ்யத்தில் இம்மாதிரியான நிலச் சீர்திருத்தம் கொண்டுவரவேண்டும் என்று சொன்னதற்கு " சீலிங் " கொண்டு வரவேண்டும் என்பதற்காக டில்லியில் கூட்டம் போட்டு பேசினார்கள். அப்படி பேசிவிட்டு இங்கே வந்து பேசாமல் உட்கார்ந்து விட்டார்கள். அதற்கு என்ன காரணமோ தெரியவில்லை. இது சாதாரண விஷயம் அல்ல. இப்படியே இருந்தால் நாளுக்கு நாள் நெருக்கடி ஜாஸ்தியாகிக்கொண்டேதான் போகும். அதனால் நிலச் சீர்திருத்தம் செய்யவேண்டியது அவசியமாகும். இதற்கு சர்க்கார் வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டு நாட்டில் உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்வார்கள் என்று நினைக்கிறேன்.

இம்மாதிரி நமக்கு இருக்கக்கூடிய நிலைமையை எப்படி சமாளிப்பது என்று ஒரு முடிவுக்கு வந்து அதன் பிறகு மத்திய சர்க்காரை அணுகி அவர்களிடமிருந்து எவ்வளவு உதவி கிடைக்குமோ, எந்த அளவுக்கு உதவி வருமோ அதைப் பெற்றுக்கொண்டு நாம் நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும். இப்பொழுது மறுபடியும் அறுவடை காலம் வருகிறது. இதற்குள் முக்கியமான நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளவேண்டும். விலைவாசிகளை கட்டுப்படுத்தக்கூடிய நிலைமை ஏற்படும். அதற்கு நாம் ஒரு நில வரம்பைக் கொண்டு வந்தாக வேண்டும். நஞ்சையாக இருந்தால் பத்து ஏக்கராவும் புஞ்சையாக இருந்தால் பதினைந்து ஏக்கராவுக்கும் மேல் ஒருவரும் வைத்துக்கொள்ளக்கூடாது என்ற அடிப்படையில் " சீலிங் "கை நாம் நிர்ணயிக்கவேண்டும். ஒருவர் தனக்குள்ள தேவைக்கு போக பாக்கி இருக்கக்கூடிய உணவை சர்க்காருக்குக் விற்றுவிடவேண்டும். அதற்கு சர்க்கார் ஒரு விலையை நிர்ணயம் செய்யவேண்டும். அப்படி விலையை நிர்ணயம் செய்து அதை சர்க்காரே வாங்கி விநியோகம் செய்ய வேண்டும்.

MR. SPEAKER : The hon. Member is speaking about things which are not contained in the resolution moved by him. He is speaking about the increase in prices, stabilization of prices, increase in food production, opening of more fair price shops and so on, things which are quite irrelevant to the subject under discussion.

THE HON. SRI C. SUBRAMANIAM : I think the hon. Member is speaking on all the subjects found in the list of non-official business.

MR. SPEAKER : I do not want to unnecessarily interfere but I think the hon. Member would be well advised to confine his speech to the points relevant to the resolution.



7th November 1957]

SRI N. K. PALANISAMI : For increasing food production I have to refer to all those points.

MR. SPEAKER : I have no objection but I think they are all quite irrelevant to the subject and by doing so the hon. Member is only wasting valuable time.

SRI N. K. PALANISAMI : ஆகவே சர்க்கார் உடனடியாக அதிக பட்ச விலை இவ்வளவு தான் என்று நிர்ணயம் செய்யவேண்டும். ஒரு மிராசுதார் தன்னுடைய தேவைக்கு இவ்வளவுதான் வைத்துக்கொள்ள வேண்டும் என்று நிர்ணயிக்கவேண்டும். பாக்கியை உடனடியாக சர்க்கார் வாங்கிக்கொள்ளவேண்டும். அதற்கு சர்க்கார் உடனடியாக நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும். மற்றும் எங்கேயெல்லாம் நிவாரணக் கடைகள் தேவைப்படுகின்றனவோ அங்கேயெல்லாம் அவைகளை அமைப்பதற்கு நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளவேண்டும். எங்கேயெல்லாம் ஜனங்கள் வைக்கவேண்டும் என்று சொல்லுகிறார்களோ அங்கேயெல்லாம் வைக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும். இப்பொழுது பெரிய பெரிய அணைக்கட்டுகளைக் கட்டுவதற்கும் பெரிய பெரிய திட்டங்களை எடுத்து நடத்துவதற்கும்தான் கவனம் செலுத்திக்கொண்டிருக்கிறோமே தவிர சிறு சிறு திட்டங்களில் கவனம் செலுத்துவதாகவே இல்லை. திருப்பத் திருப்ப பெரிய திட்டங்களைத் தான் நாம் எடுத்து நடத்துகிறோம். அப்படி இல்லாமல் மைனர் இர்ரிகேஷன் போன்ற குறைவான வேலையும் பணம் அதிகம் செலவு செய்யவேண்டியதில்லாமல் இருக்கக்கூடிய திட்டங்களையும் எடுத்து நடத்தினால் நமக்கு பணமும் மிச்சமாக இருக்கும், உணவு உற்பத்தியும் அதிகமாக ஏற்படுவதற்கு வசதியாக இருக்கும். அதிகப்படியான பணத்தை பெரிய பெரிய திட்டங்களுக்குப் போடுவதற்கு பதிலாக சிறு திட்டங்களுக்கு செலவு செய்யலாம். அப்படிப்பட்ட திட்டங்களைப் போட்டு உணவைப் பெருக்குவதற்கு சர்க்கார் நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கனம் அங்கத்தினர் பெரிய அணைக்கட்டுகள் கட்டவேண்டாம் என்று சொல்லுகிறாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

SRI N. K. PALANISAMI : பெரிய அணைக்கட்டுகளை கட்டுவதினால் உடனடிப் பயன் ஒன்றும் இல்லை. இப்படிப்பட்ட யோசனையைத்தான் நான் சொன்னேன். இப்படிப்பட்ட நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளவேண்டும் என்று சொன்னேன். ஆகவே இப்படிப்பட்ட யோசனைகளைச் சொல்லி வேண்டிய நடவடிக்கைகளை சர்க்கார் எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொண்டு இத்துடன் முடித்துக்கொள்ளுகிறேன்.

SRI K. SATTANATHA KARAYALAR : கனம் சபாநாயகர் அவர்களே, நான் இந்த பிரேரணையை ஆதரிக்கிறேன். கனம் பழனிசாமி அவர்கள் கொண்டு வந்திருக்கும் பிரேரணையை ஆதரித்து சில வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன். நமது ராஜ்யம் பொருத்த வரையில் இது ஒரு பற்றுக்குறை ராஜ்யம் என்ற முறையில் அதை நாம் கவனிக்க வேண்டும் என்று சொல்லுகிறேன். அப்படி கவனித்தால்தான் சரியாக இருக்கும் என்று நினைக்கிறேன். அதற்கு வேண்டிய சரியான புள்ளி விவரங்கள் என்னிடத்தில் இல்லையானாலும் நாட்டில் உள்ள நிலையைப் பார்த்து இதை ஒரு உபரி மாகாணமாகக் கருதக்கூடாது, கருதவும் முடியாது. அகில இந்திய நிலையிலும் கூட கடந்த காலத்தில் உணவு சுய தேவையை பூர்த்தி செய்துவிட்டோம் என்ற நம்பிக்கையுடன் இன்று நாம் வாழ முடியாமல் இருக்கிறோம். முதல் ஐந்து வருஷ திட்டத்தின் மூலம் நாம் சுய தேவையில் பூர்த்தி அடைந்து 10-8 a.m.

[Sri K. Sattanatha Karayalar] [7th November 1957

விட்டோம் வெற்றி அடைந்துவிட்டோம் என்று சொல்ல முடியாது. பூர்த்தி அடைந்துவிட்டோம் என்பதில் கருத்து வேற்றுமையுள்ள பல அறிக்கைகள் வெளி வந்தன.

சில சந்தர்ப்பங்களில் உணவு நம் நாட்டிலே உபரியாக இருக்கிறதென்றும் சில சந்தர்ப்பங்களிலே அது நமக்குப் பற்றாக்குறையாக இருக்கிறதென்றும் சொன்னார்கள். ஆனால், இப்பொழுதிருக்கும் நிலைமையைப் பார்த்தால் திட்டவட்டமாக நாம் ஒப்பிட்டு மொத்தமாகப் பார்த்தால் நம் நாட்டிலே உணவுப் பற்றாக்குறை இருப்பதாகவே தெரிகிறது. சில தினங்களுக்கு முன்பு ஐக்கிய நாட்டு உணவு விவசாய மகாநாடு ஒன்றிலே நம் நாட்டு மத்திய சர்க்கார் உணவு மந்திரி அவர்கள் செய்த பிரசங்கத்தைப் பார்க்கும்போது 1958-ம் ஆண்டிலே, நம் நாட்டில் மிகப் பெரிய நெருக்கடி ஏற்படலாமோ என்ற சந்தேகம் கிளம்பியுள்ளது. நம் கையிலிருக்கும் 'ரிசர்வ்' ஐ நாம் உபயோகப்படுத்த வேண்டி வரும் என்று அவர்கள் குறிப்பிட்டார்கள். அந்த நிலைமையிலே இன்று நம் மாகாணத்திலிருக்கும் உணவு நிலைமையைப் பரிசீலிக்க வேண்டும்.

கழிந்த பல மாதங்களாக 5,000 டன் வரை நமக்குக் கிடைத்துக் கொண்டிருந்த அரிசி இப்பொழுது சுமார் நாலாயிரம் டன்னாகக் குறைக்கப்பட்டுள்ளது. சில தினங்களுக்கு முன்பு இந்தச் சட்டசபையிலே குறிப்பிடப்பட்டது—'கடனாக மாத்திரம் தான் அது நமக்குக் கொடுக்கப்படுகிறது' என்று. அதே குறிப்பில், 'தற்சமயம் மலிவுக் கடைகளில் ஒன்றுக்குப் பாதியாக நிறுத்தப்பட்டுள்ளன' என்று குறிப்பிடப்பட்டுள்ளதே இது மிகவும் கவலை தருகிறது.

நாட்டிலே உணவுத் தான்யங்கள் ஓரளவு கிடைக்கின்றன. உணவு தான்யங்களின் விலை படிப்படியாக உயர்ந்துகொண்டே போகிறதேயன்றி அது நிலையான நிலையில் நிற்பதாகவோ இறங்குமுகமாகவோ இல்லை. அறுவடை காலத்திற்குப் பிறகும் மெதுவாக உயர்ந்து கொண்டே போகிறது. இந்த நிலைமையிலே சாரதாண ரக அரிசி படியொன்று ஒரு ரூபாய்க்கு விற்கிறது. கிராமாந்திரங்களில் மிகத் தாராளமாக இருக்க வேண்டிய இந்தக் காலத்தில் இப்பொழுது மிகக் கஷ்டமான நிலை ஏற்பட்டிருக்கிறது. செப்டம்பர்-அக்டோபர் காலத்திலேயே வறட்சி காரணமாக இந்தியாவிலே பல பகுதி பாதிக்கப்பட்டுள்ளது என்று சொல்லப்பட்டது. அதே முறையில் தென் பகுதியிலிருக்கும் திருநெல்வேலி, கன்யாகுமரி மாவட்டங்கள் மிக மிக பாதிக்கப்பட்ட இடங்களாகும். அந்த இடங்களிலே இன்னும் உணவு தான்யங்களுக்கு மிகவும் கஷ்டமாக இருக்கிறது.

சில நாட்களுக்கு முன்பு இந்தச் சட்டசபையிலே இருக்கும் சில அங்கத்தினர்களும் நானும் சங்கரன்கோயில் பகுதியில் சுற்றி வரும்போது அங்கு சில கிராமங்களிலே வெறும் சோளம் வாங்குவதற்கு மாத்திரம் நான்கைந்து மைல்கள் நடந்து போய் வரவேண்டியிருக்கிறது என்று சொன்னார்கள். மலிவு தான்யக் கடை வேண்டுமென்று கூறினார்கள். அதற்குக் காரணம் அவர்கள் சொல்லும்போது, பகலெல்லாம் காடு கரைகளில் வேலை செய்து, விறகு கொண்டுவந்து, ஜீவனம் செய்தவற்கே மிகவும் கஷ்டமாக இருக்கிறதென்றும், அப்படி வேலை செய்து விட்டு மாலை வீடு திரும்பியபின், அரிசிக்கோ, சோளத்திற்கோ பல மைல் தூரம் நடந்து சென்று வாங்கிவரவேண்டியிருக்கிறதென்றும், சொன்னார்கள். அதற்காக, குறிப்பாக அவர்களுடைய வட்டாரத்தில், மலிவுத் தான்யக் கடைகள் வேண்டுமென்று நூற்றுக் கணக்கான கிராம மக்கள் வந்து சொன்னார்கள். அதுவும் அறுவடை காலத்திற்குப் பிறகு இந்த நிலைமை இருக்குமானால் இன்னும் சில நாட்கள் போனபின் எப்படியிருக்கும் என்று சிந்திக்க வேண்டும்.

நெசவாளர்கள் மலிவு தான்யக் கடைகள் இல்லாததால் மிகவும் கஷ்டப்பட்டுள்ளார்கள். பகலும் இரவும் வேலை செய்துகொண்டிருக்கிறவர்கள் வேலையை விட்டு மலிவு தான்யக் கடைக்காக பல மைல் தூரம் நடந்து பக்கத்து கிராமத்திற்குச் சென்று வரவேண்டுமென்றால்



7th November 1957] [Sri K. Sattanatha Karayalar]

உண்மையிலே இது நடக்க முடியாத காரியம். இந்த நிலைமையை மாற்ற வேண்டுமானால் நாம் உடனடியாகச் சில திட்டங்களை வகுத்து, அந்த திட்டங்களின் அடிப்படையிலே மலிவு தானியக் கடைகளை விரிந்த அளவு எங்கும் ஏற்படுத்தவேண்டும்.

மத்திய சர்க்காரிடமிருந்து எவ்வளவு தானியங்கள் வாங்க முடியுமோ அவ்வளவு தானியங்களை வாங்கவேண்டும். அதே நேரத்தில் உள் நாட்டில் இருக்கும் உணவு தானியங்களையும் எந்த முறையிலே பலரையும் துன்புறுத்தாமல் கொள்முதல் செய்யமுடியுமோ அப்படிச் செய்வது நல்லது. சின்னச் சின்ன நிலச்சுவாந்தார்களை விட்டு விடலாம், பத்து பதினைந்து ஏக்கரா நஞ்சை நிலங்களுக்கு அதிகமாக நிலம் வைத்துள்ள மிராசுதார்களிடமிருந்து அறுவடை காலத்திலே சுற்று வட்டாரத்திலே விற்கும் விலையின் அடிப்படையில் விலையை நிர்ணயித்து, சர்க்கார் கணிசமான அளவு நெல் கொள்முதல் செய்வது நன்மை பயப்பதாக இருக்கும். புஞ்சை தானியங்களையும் வாங்கி வைப்பது நல்லதாக இருக்கும். சிறு சிறு விவசாயிகள் கையில் வைத்துக் கொண்டு நீண்ட நாள் தாக்குப் பிடிக்க முடியாததால் மார்க்கெட் விலைக்கு விற்பனை செய்துவிடுகிறார்கள். அதை வாங்கி வைத்துக்கொண்டு, பெரும் வியாபாரிகள் ஒரு (ஸ்பெகுலேஷன்) சூதாட்ட விளையாட்டாக விளையாடுகிறார்கள். விலை ஏறுவதற்கு இது ஒரு முக்கிய காரணமாக இருக்கிறது.

பாங்குகள் பரிபூரணமாக உணவு தான்யங்கள் பேரில் கடன் கொடுப்பதை நிறுத்தியாகவேண்டும். அந்த முறையிலே செயல்பட்டால் ஓரளவு நாம் இன்று இருக்கும் விலையை மேலும் ஏறாமல் தடுக்க முடியும்.

அதோடு, நீண்ட காலத் திட்டத்தை வைத்துக்கொண்டு, உணவு தான்யத்தை உற்பத்தி செய்வதில் சுய தேவைப் பூர்த்தி அடைந்துவிட்டோம் என்ற எண்ணத்தில் இருப்பதைவிட, சுய தேவைப் பூர்த்தியை அடைய வேண்டும் என்ற எண்ணத்தில் மேலும் நடவடிக்கை எடுக்க வேண்டும். சமீப காலத்திலே, கரும்பு சாகுபடிக்குப் பல ஏக்கரா நிலங்கள் மாறிவிட்டன. அந்த முறையிலே அந்த அளவு உணவுத் தான்ய உற்பத்திக்கு தற்சமயம் இருக்கும் தரிசு நிலங்கள் மாறியிருக்கின்றனவா என்பதையும் நாம் கவனிக்க வேண்டும். சில வட்டாரங்களில், குறிப்பாக தென்காசி, செங்கோட்டை, சங்கரன்கோயில், திருநெல்வேலி, கன்யாகுமரி வட்டாரங்களில் சாகுபடிக்குத் தகுந்த நிலங்கள் நூற்றுக் கணக்கான ஏக்கராக்கள் இருக்கின்றன. இவைகளுக்குத் தண்ணீர் தேவை, இதிலும் சர்க்கார் ஊன்றிக் கவனம் செலுத்த வேண்டும்.

மேற்குத் தொடர்ச்சி மலையிலிருந்து மேற்கு நோக்கி ஓடும் நதிகளை இங்கு திருப்புவது பற்றிப் பரிசீலனை செய்வதற்கு நமது நிதியிலே அதற்கு என்று ஒரு தொகை ஒதுக்கப்பட்டுள்ளது. அது எந்த அளவு பரிசீலனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பது பற்றி இதுவரை இந்தச் சபையிலே ஒன்றுமே குறிப்பிடவில்லை. ஏதாவது நடவடிக்கை எடுத்திருந்தால், அது எந்த நிலைமையில் உள்ளது, எந்த அளவு பயன்படுத்திக்கொள்ளலாம் என்று நல்ல முறையிலே பரிசீலனை செய்வது நன்மை பயக்கும்.

இரண்டு சர்க்கார் மத்தியிலும், பொது மக்கள் மத்தியிலும் சுமுகமான நல்ல அபிப்பிராயத்தை உண்டு பண்ணக் கூடிய நோக்கத்தோடு அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்கள், குறிப்பாக காங்கிரஸ், கம்யூனிஸ்ட் கட்சியினர் வேலை செய்யவேண்டும். ஆளும் கட்சியில் இங்கு இருந்தாலும் அங்கு இருந்தாலும் இருவரும் கேரள நாட்டிலும் தமிழ் நாட்டிலும் இருக்கும் மக்களிடையே சுமுகமான மனோ நிலைமையை உண்டுபண்ணுவதற்குத் தக்க நடவடிக்கை எடுக்க முன்வருவார்கள் என்று நான் நினைக்கிறேன். இந்தப் பொறுப்பு இங்கிருக்கும் காங்கிரஸ் நண்பர்களுக்கும், கம்யூனிஸ்டு நண்பர்களுக்கும்—குறிப்பாக உண்டு என்பதையும் நான் சுட்டிக் காட்ட ஆவலுறுகின்றேன். அந்த அடிப்படையில் மக்களிடையே தப்பபிப்பிராயம் ஏற்படாத முறையில் பெருந்தன்மையான மனோ நிலைமையை ஏற்படுத்துவதற்கு இரண்டு பக்கத்திலும் அவர்கள் வேண்டிய முயற்சி எடுத்தால், இதில் ஓரளவு வெற்றி அடைய முடியும் என்று நான் நினைக்கிறேன்.

[Sri K. Sattanatha Karayalar] [7th November 1957

சிறு சிறு பாசனத் திட்டங்கள் இருக்கின்றன. கோதையாறு திட்டத்தை நல்ல முறையிலே உடனடியாக நிறைவேற்றக்கூடும். கோதையாறு திட்டத்தில் நடக்கக் கூடிய ஒரு திட்டமான மாம்பழத்துறை லிப்ட் இர்ரிகேஷனை சமீபத்தில் சென்று பார்த்தேன். கழிந்த பல மாதங்களாக குறிப்பாக ஒரு வருஷ காலமாக பைப் பிட்டிங்ஸ் அங்கு வந்திருந்தும் அங்கு மேல் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அங்கு கட்ட வேண்டிய டாங்குகளோ இறைப்பு செய்ய வேண்டிய இன்ஜினோ வரவில்லை. அதனால் காலதாமதம் விசேஷமாக ஏற்படுகிறது என்று சொன்னார்கள். அதில ஏதோ தகராறு, சிக்கல் இருப்பதாக சொன்னார்கள். காலதாமதத்திற்குக் காரணம் தெரியவில்லை. அதுபோன்ற திட்டங்களைத் துரிதப்படுத்தினால் மிகவும் நன்மை பயப்பதாக இருக்கும் என்று நான் குறிப்பிட விரும்புகிறேன்.

தற்சமயம் விவசாயிகளுக்குத் தேவையான இன்ஜினுக்கு, உரத்திற்கு, சாகுபடிக்கு முன் பணம் கொடுக்கப்படுவதற்கு நல்ல முறையிலே ஒரு திட்டம் இருக்கவேண்டும். அதைக் கூடுமானவரை அங்குள்ள பஞ்சாயத்து நிர்வாகத்திற்கோ, அந்த வட்டாரத்தில் இருக்கக்கூடிய நகரசபைக்கோ கொடுப்பது நன்மை பயக்கும். ஏனெனில் தற்சமயம் கொடுக்கும் கடன்கள் நல்ல முறையிலே கொடுக்கப்பட வில்லை. இதற்கு முன்பு இந்தச் சபையிலே கேட்கப்பட்டபோது, மறவர்களுக்கும் ஹரி ஜனங்களுக்கும் மாடு வாங்குவதற்காக ரூபாய் 250 கொடுக்கப்பட்டது. இந்தக் கடன் வசதிகள் யாருக்குப் போய்ச் சேரவேண்டுமோ அவர்களுக்குப் போய்ச் சேரவில்லை என்று பல்வேறு அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள். அது போன்ற நிலைமை ஏற்படாதபடி நல்ல முறையிலே கடன்கள் கொடுக்கப்படவேண்டும். உடனடியாக விவசாயிகளுக்குத் தேவைப்படும் கடன்களைக் கொடுப்பதற்கு ஒரு திட்டம் வகுக்க வேண்டும். அப்படித் திட்டம் இருந்தால் மாத்திரம் தான் இன்று விவசாயிகள் தங்கள் சொந்த சாகுபடியில் வைத்திருக்கும் நிலத்திலே நல்ல முறையிலே சாகுபடி செய்ய முடியும். அந்த வசதி இல்லாத காரணத்தால் மேலும் மேலும் கடன்பட்டு, அறுவடையான காலத்தில் தானியத்தை மலிவான விலைக்கு விற்றுவிட்டு, பிறகு அதை கூடிய விலைக்கு வாங்க வேண்டிய நிலைமை இருக்கிறது. இது குறிப்பாக அவனுடைய கையிருப்பைக் குறைக்கக் கூடிய முறையிலே வாழ்க்கை அமைவதால் போதிய கடன் வசதி சர்க்காரிலே செய்து கொடுக்கப்பட வேண்டும். திட்டவட்டமான அடிப்படையில் விவசாயிகளை நெருங்கி தொடர்பு ஏற்படுத்திக்கொண்டு சர்க்கார் நல்ல முறையிலே திட்டம் வகுத்தால் மாத்திரம் தான் இன்றிருக்கும் உணவுப் பற்றுக்குறை நிலைமையை நாம் சரிப்படுத்த முடியும் என்று நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

பிறகு, இன்று நியாய வாரச் சட்டம் போன்ற பல்வேறு சட்டங்கள் இருந்தும், அவைகள் சரியானபடி அமுலாக்கப்படவில்லை. இதை நாம் உடனடியாக நல்ல முறையில் அமுல் செய்ய வேண்டும். ஒரு விவசாயி தான் பாடுபடக்கூடிய நிலத்திலிருந்து தன்னுடைய பரிபூரண உழைப்பிலிருந்து தனக்கு பெரும் பங்கு கிடைக்கும் என்ற நம்பிக்கை இருந்தால் தான் உற்சாகத்துடனும், உத்வேகத்துடனும் வேலை செய்வான். அவன் உழைப்பில் பெரும் பங்கு வேறு ஒருவருக்கு கொடுக்க வேண்டுமென்று சொன்னால் அவனுக்கு வேலை செய்வதற்கு ஊக்கம் இருக்காது. எந்த முறையில் அந்த ஊக்கம் கொடுக்க வேண்டுமென்றால் நாம் இயற்றியுள்ள சட்டங்களையெல்லாம் அமுல் நடத்துவதற்கு திட்டவட்டமான நடவடிக்கை எடுக்கவேண்டும்.ஒவ்வொரு ஜில்லா ரீதியாக பார்த்து எந்த ஜில்லாவில் இந்த சட்டங்கள் அமுல் நடக்கவில்லையோ அதை சர்க்கார் கவனித்து அமுல் நடத்தவேண்டும். அதற்கு ஏற்ற ஒரு ‘ மெஷினரி ’ இயற்ற வேண்டும். இந்தச் சட்டங்களை செய்யலாம் குறிப்பாக கன்யாகுமரி ஜில்லாவில் செங்கோட்டை தாலூகாவிற்கு விஸ்தரிப்பது நன்மை பயக்கும். உணவு தான்யத்தில் ஓரளவு உபரியாக இருக்கக்கூடிய பகுதி கன்யாகுமரி பகுதி. அங்கு மேலும் உற்பத்தியை அதிகப்படுத்தக்கூடிய திட்டங்களை நிறைவேற்ற வேண்டும். கன்யாகுமரி வட்டாரத்திலிருந்து நெல் பக்கத்தில் உள்ள கேரள ராஜ்யத்திற்குப் போகிறது என்று ஒரு சில நண்பர்கள் குறிப்பிட்



7th November 1957] [Sri K. Sattanatha Karayalar]

டார்கள். அது உண்மையாக இருக்கலாம். **Flow of trade** என்ற முறையிலே எங்கு ‘ டிமாண்டு ’ இருக்கிறதோ அங்கு போவது சாதாரண ஒரு விதி. நாட்டை ஒட்டு மொத்தமான கண்ணோட்டத்தோடு பார்க்கவேண்டும். கேரள ராஜ்யம் வேறு, பிரிந்து போன ஆந்திர ராஜ்யம் வேறு என்ற கண்ணோட்டம் இல்லாது ஒட்டுமொத்தகமாக அகில இந்திய கண்ணோட்டத்தை வைத்துக் கொண்டு, நம்முடைய வட்டாரத்தில் சுய தேவையை பூர்த்தி செய்துகொண்டு, நமக்கு அவசியப்படுவதை மத்திய சர்க்காரிடமிருந்து எப்படி பெறுவது என்ற கண்ணோட்டத்தோடு இந்த சபையிலே இருக்கக்கூடிய எல்லா அங்கத்தினர்களும் இந்தப் பிரச்னையை அணுகவேண்டுமென்று என்னுடைய தாழ்மையான அபிப்பிராயத்தை தெரிவித்துக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

* **Sri A. VEDARATHNAM PILLAI :** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த பிரச்னையைக் கொண்டுவந்த கனம் பழனிசுவாமி அவர்கள் இதை ஒரு கட்சி பிரச்னையாக வைத்துக்கொள்ளாமல் எல்லோரும் ஒரு கட்சி என்று நினைத்து இதை அணுக வேண்டுமென்று கூறினார்கள். அதை நான் முழுமனதோடு வரவேற்கிறேன். அதே சமயத்தில் தன்னுடைய கட்சி என்ன நினைக்கிறது, எதிர்கட்சி என்ன நினைக்கிறது என்று அவர் நினைக்கிறாரா ? அதெல்லாம் எதிர் கட்சியின் வாதம் என்றெல்லாம் வர்ணித்தார்கள். அவற்றை அவர் சொல்லாமல் இருந்திருந்தால் நல்லதாக இருக்கும்.

(இந்த சமயத்தில் ஸ்ரீ பி. எஸ். சின்னதுரை தலைமை வகித்தார்.) 10·13 a.m.

அதோடு இந்த உணவுப் பிரச்னையை தீர்த்து விட்டதாக அரசாங்கம் நான்கு ஆண்டுகளுக்கு முன் கூறிற்று, இப்பொழுது மறுபடியும் இந்தப் பிரச்னை இருந்து வருகிறது என்பதையும் சுட்டிக் காட்டினார்கள். அவர்களுக்கு நான் ஒன்று கூற விரும்புகிறேன். நான்கு ஆண்டுகளுக்கு முன் அரசாங்கம் கூறியது தவறு அல்ல. பொய்யாக அந்தப் பிரசாரம் அவர்கள் செய்யவில்லை. நமக்குத் தெரியும்; கடந்த முதல் ஐந்தாண்டுத் திட்டம் ஆரம்பிக்கும் முன் அமெரிக்கா முதலிய வெளி நாடுகளிலிருந்து இந்த நாட்டிற்கு 40 லட்சம் டன் உணவுப் பொருள்கள் இறக்குமதியாயிற்று. ஒரு டன் கூட இறக்குமதி செய்யாமல் நம் நாட்டின் தேவை போக முதல் ஐந்தாண்டு இறுதியில் இரண்டு லட்சம் டன் வெளி நாடுகளுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது என்றால், உணவுப் பிரச்னையை தீர்த்து விட்டதாக அவர்கள் அப்பொழுது சொன்னது வெளித் தோற்றத்திற்காக அல்ல என்று அவர்களே ஒத்துக் கொள்ளுவார்கள் என்று நினைக்கிறேன். அப்படியிருந்தும் உணவுப் பிரச்னை தீரவில்லை என்று சொன்னால், அதற்கு முக்கியமான காரணம் இருக்கும் நிலத்தை நாம் அதிகப்படுத்த முடியவில்லை. அதே சமயத்தில் நமது பிரஜா உற்ப்த்தி வருஷம் ஒன்றுக்கு 50 லட்சம் அதிகரித்துக் கொண்டே போகிறது. இந்த நான்கு ஆண்டுகளில் இரண்டு கோடி ஜனத்தொகை அதிகமாக உற்பத்தி செய்திருக்கிறோம். அந்தக் காரணத்தினால்தான் இந்த உணவுத் தட்டு வந்தது என்ற விஷயத்தை அவர்கள் ஏற்றுக்கொண்டுதான் ஆகவேண்டும். எனவே, இது அரசாங்கத்தின் குறை அல்ல என்பதை அவர்கள் ஒத்துக் கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

எப்படி யிருந்த போதிலும் இப்பொழுது இந்தப் பிரச்னையை நாம் தீர்த்துத்தான் ஆகவேண்டும். அதற்கு வழி கண்டு பிடித்தாகவேண்டும். அதற்கு முக்கியமாக இப்பொழுது இருக்கும் நிலத்தை நாம் அதிகப்படுத்த முடியாத போனாலும், நிலத்திலுள்ள விளை பொருள்களை அதிகரிப்பதற்கு எத்தனையோ சிறந்த மார்க்கங்கள் இருக்கின்றன. விளைகின்ற அந்தத் தானியத்தைக் கூட வீண் விரயம் செய்யாமல், அதை அதிக நபர்களுக்கு பயன்படுத்தக்கூடிய முறைகள் இருக்கின்றன. தரிசாக, சாகுபடிக்கு வராத நிலங்களை சாகுபடிக்கு கொண்டு வருவதற்கான மார்க்கங்கள் இருக்கின்றன. இவற்றைக் கொண்டுதான் இந்தப் பிரச்னையை தீர்க்க முடியுமே அல்லாமல், வேறு அதற்கு வழி இருப்பதாகத் தோன்றவில்லை. இன்னும் கிடைக்கின்ற தானியத்தை சரியான முறையில் விநியோகம் செய்வதற்கான வழிகளை கண்டுபிடிக்கவேண்டும். இப்படி

யிருக்கிற இந்த நேரத்தில் விளைப் பொருள்களை அதிகரிப்பதற்கு ஜப்பானிய முறையைப் பற்றி பேசினார்கள். அது ஒரு சிறந்த முறை என்பதில் ஆட்சேபணை இல்லை. நம் நாட்டில் உள்ள எல்லோரும் அதை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். சராசரி ஒரு ஏகராவுக்கு 800 பவுண்டு விளையக் கூடிய நிலத்தில் ஜப்பானிய முறையை கையாண்டால் 8,000 பவுண்டு விளையும். அதை இன்னும் கொஞ்சம் தீவிரமாகப் பிரசாரம் செய்து அந்த முறையை அதிகமாக அமுலுக்குக் கொண்டுவர அரசாங்கம் முன்வரவேண்டும். முன் காந்தி நினைவு நிதியிலிருந்து இதற்காக பயிற்சி பெற்ற ஊழியர்களை ஜில்லாதோறும் அனுப்பி ஆங்காங்கு இது விஷயமாக முயற்சி எடுத்துக் கொண்டார்கள். அந்த ஊழியர்களை இப்பொழுது நிறுத்திவிட்டார்கள். விவசாய இலாகா முன்பு இதில் தீவிர முயற்சி எடுத்து வந்தார்கள். அவர்களும் இப்பொழுது இந்த முயற்சியில் அவ்வளவு சிரத்தை காட்டாத காரணத்தினால் இந்த ஜப்பானிய முறை அவ்வளவாக பரவவில்லை என்ற விஷயத்தை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, இருக்கிற நிலங்களுக்கு அவர்கள் பாசன வசதி அதிகமாக கொடுக்க முன் வருவார்களானால், அதன் மூலமாக இன்னும் விளைபொருள்களை அதிகரிக்க முடியும். சிறப்பாக தஞ்சை ஜில்லாவிலே இன்னும் 60,000 ஏகர் சாகுபடிக்கு லாயக்கான நிலம் தரிசாக கிடக்கின்றது. அதை இந்த உணவுப் பஞ்ச காலத்தில் அப்படியே விட்டு வைத்திருப்பது நியாயமல்ல என்ற விஷயத்தை இங்கே நான் எடுத்துக் காட்ட விரும்புகிறேன். காவேரியில் தண்ணீர் கிடையாது என்று சொல்லுகிறார்கள் என்ஜியனியரிங் இலாகா. இன்னும் சுமார் 20,000, 30,000 ஏகராவுக்கு பாயக்கூடிய தண்ணீர் கடலில் வீணாகப் போய்க் கொண்டிருக்கிறது. எத்தனையோ சிறு சிறு திட்டங்கள் அரசாங்கத்தினிடம் இருக்கின்றன. அவைகள் நிறைவேற்றப்பட்டுக்கொண்டுதான் வருகிறது. பாயவேண்டிய இடம் கொஞ்சம் மேடான பிரதேசமாக இருப்பதினாலே, நவீன கருவிகளைக் கொண்டு அந்த இடங்களுக்கு பாசன வசதி கொடுத்து வருகிறார்கள். துரிதமாக இதை கவனிக்கவேண்டும். மற்ற விஷயங்களில் காட்டுகின்ற அக்கரையை கொஞ்சம் குறைத்துக் கொண்டாலும், உணவுப் பிரச்னையில் முக்கிய கவனம் காட்டி அதில் தீவிர முயற்சி எடுக்கவேண்டும். அப்படிச் செய்தால் தஞ்ஜை ஒரு ஜில்லாவில் மாத்திரம் ஒரு லட்சம் டன் உணவு அதிகரிப்பதற்கு சாத்தியக் கூறுகள் அங்கே இருக்கின்றன என்பதை குறிப்பிட விரும்புகிறேன்.

புறம்போக்காக கிடக்கும் நிலங்களை ஏன் கொடுக்கவில்லை என்று பழனிசுவாமி அவர்கள் கேட்டார்கள். வாய்மேடு என்ற கிராமத்தில் 2,500 ஏகர் நிலம் இருக்கிறது. அதைக் கொடுப்பதற்கு சர்க்கார் உத்தரவிட்டு விட்டார்கள். அங்கே பாசன வசதிக்கு 'பம்பிங் ஸ்கீம்! வேண்டியதில்லை. தானாகவே பாயும் 'ஸ்குரூஷட்டர்' ஒன்று போட்டு தண்ணீரை திருப்பிவிட்டால் போதும். நிலம் இல்லாத ஏழைகளுக்கு இரண்டு ஏகர் வீதம் பிரித்துக் கொடுப்பதற்கு சர்க்கார் உத்திரவிட்டிருக்கிறார்கள். ஆனால் அது இன்னும் அமுலுக்கு வரவில்லை. ஏனென்றால், அது இன்னும் சர்வே செய்யப்படாமல் இருக்கிறது. அதற்கு போதிய சிப்பந்திகள் இல்லை. அது சாகுபடிக்கு லாயக்கான நிலம், பாசன வசதி உள்ள நிலம். அப்படியிருந்தும் அது சும்மாவாக கிடக்கிறது. இதில் அரசாங்கம் உடனடியாக கவனம் செலுத்தவேண்டும்.

அதே போன்று காவேரியின் கிளை ஆறான வளவனாரில் எப்பொழுதும் எட்டடி தண்ணீர் தேங்கி யிருக்கிறது. ஏப்ரல் மாதத்தில் கூட சில மைல் தூரத்திற்கு 8 அடி தண்ணீர் இந்த ஆற்றில் இருக்கிறது. இதை பம்பு வைத்து 'இர்ரிகேஷன்' செய்யவேண்டும். நமது ரெவின்யூ மந்திரி ஸ்ரீ மாணிக்கவேலு அவர்கள் கூட இதை வந்து பார்த்திருக்கிறார்கள். என்ஜினியரிங் இலாகா இதை பரிசீலனை செய்யவேண்டுமென்று மூன்று ஆண்டுகள் கழித்து விட்டார்கள். பரிசீலனை செய்து இந்தத் திட்டத்தை துரிதமாக அமுலுக்குக் கொண்டுவரவேண்டும். காலகரணம் செய்யாமல் உடனடியாக இந்தத் திட்டத்தை நிறைவேற்றினால் இப்பொழுது இருக்கக் கூடிய உணவுப் பஞ்சத்தை தீர்ப்பதற்கு வேண்டிய தான்யத்தை அங்கேயே உற்பத்தி செய்ய முடியும். இந்த விஷயத்தில் அரசாங்கம் உடனே கவனம் செலுத்த வேண்டுமென்று நான் இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக்



கொள்கிறேன். விளைகின்ற தானியத்தை உபயோகப்படுத்துகின்ற முறையில் சில கொள்கைகளைக் கையாளுவதன் மூலம் கொஞ்சம் பற்றாக்குறையைப் போக்க முடியும். உதாரணமாக தானியத்தை மில்லில் அரைத்து பாலிஷ் பண்ணுவதன் மூலமாக 12½ சத விகிதம் சேதம் ஏற்பட்டு வருகிறது. கைக்குத்தல் அரிசியையே உபயோகப்படுத்துவதன் மூலம் இந்த 12½ சத விகிதம் சேதாரத்தைத் தவிர்க்க முடியும். இதன் அருமை பெருமை மக்களுக்குத் தெரியாத காரணத்தினால் அவர்கள் இன்றையதினம் பாலிஷ் அரிசியையே உபயோகிக்கும் மனப்பான்மையில் இருக்கிறார்கள். ஆகவே, சர்க்கார் கைக்குத்தல் அரிசியின் அருமை பெருமையை மக்கள் உணர்ந்து கொள்ளும்படியாகச் செய்தால் இதன் மூலம் குறைந்தது 10 சத விகிதம் தானிய அளவு அதிகப்படும் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

ஏற்றுமதி விஷயமாகவும் ஒரு வார்த்தை. தமிழ் நாட்டில்—சென்னை ராஜ்யத்தில்—ஒன்றரை லட்சம் டன் உணவு பற்றாக்குறை இருக்கும்போது இங்கிருந்து பல லட்சம் டன்கள் மலையாளத்திற்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது என்று சொன்னால் இதை நாம் பார்த்துக்கொண்டிருப்பது முறை அல்ல என்று நினைக்கிறேன். நம் ராஜ்யத்தினுடைய பற்றாக்குறையைப் போக்குவதற்கு ஒன்றரை லட்சம் டன் வெளியில் இருந்து இங்கே கொண்டு வருவதற்கு நம் சர்க்கார் ஏற்பாடு செய்வதோடு நம் நாட்டில் இருந்தும் இனி வெளி ராஜ்யங்களுக்கு உணவு தானியம் ஏற்றுமதி செய்யப்படுவதைத் தடை செய்தாகவேண்டும். இன்றைக்கு ஆந்திர ராஜ்யத்தில் எட்டு லட்சம் டன் உபரியாக இருக்கிறதென்று சொன்னால் ஜோனல் ஸ்கீம்படி நம்முடைய பற்றாக்குறையைப் போக்குவதற்கான தானியத்தையும் அங்கிருந்து வரவழைத்து பாக்கி பற்றாக்குறை ராஜ்யங்களுக்கும் அங்கிருந்து தானியம் ஏற்றுமதியாகும்படியாகச் செய்யவேண்டுமே அல்லது மூன்று ராஜ்யத்தை ஒன்றாக வைத்துவிட்டு இங்கிருந்து மலையாளத்திற்கும் தானியம் போகும்படி செய்வது சரியில்லை. அதே சமயத்தில் மலையாளத்திற்குச் செல்கின்ற அவ்வளவு அரிசியும் அங்கேயே உபயோகப்படுத்துவதற்கு அல்ல. அங்கிருந்து லட்சத் தீவுகளுக்கும், கோவாவுக்கும் கள்ளத்தனமாகக் கடத்தப்படுகிறது. இதைப்பற்றி கேட்டபோது கூட மத்திய சர்க்கார் நடவடிக்கை எடுக்க ஆலோசனை சொல்வதாகத் தெரிவிக்கப்பட்டது. என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்பது தெரியவில்லை. அதை உடனே கவனித்து, இங்கிருந்து ஏற்றுமதி செய்யப்படுவதைத் தடை செய்யவேண்டுமென்பதாகக் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் ஒரு முக்கியமான விஷயம். வாங்குகிற சக்தி ஜனங்களுக்கு அதிகம் இருக்கின்ற காரணத்தினால் விலை அதிகமாக ஏறிக்கொண்டிருக்கிறது என்பதை மறந்துவிடக்கூடாது. அதே சமயத்தில் நெல், அரிசியின் விலை குறைவாக இருப்பதனால் இவற்றினால் வருகின்ற லாபத்தைக் காட்டிலும் வர்த்தகப் பொருள்களுக்கு—புகையிலை, கரும்பு, பருத்தி போன்றவைகளுக்கு—அதிக லாபம் வருகிறது. நெல் பயிரிட்டால் ஒரு ஏக்கருக்கு 100 ரூபாயில் இருந்து 250 ரூபாய் வரையில்தான் வருமானம் கிடைக்கிறது. ஆனால் வர்த்தகப் பொருள்களுக்கு ஆயிரத்திலிருந்து, ஆயிரத்து ஐநூறு ரூபாய் வரையில் ஒரு ஏக்கருக்குக் கிடைத்துவிடுகிறது. அதனால் நெல் விளைகின்ற பூமியாக இருந்தாலும் கூட வர்த்தகப் பொருள்களையே அதிகமாகச் சாகுபடி செய்கிறார்கள். ஆகையினால் உணவுப் பொருள் உற்பத்தி பாதிக்கப்படுகிறது. சர்க்கார் இம்மாதிரி வர்த்தகப் பொருள்களை—லாகிரிப் பொருள் ஆகிய புகையிலை முதலியவற்றின் சாகுபடியை—தடை செய்ய முன்வந்தாலும் சரி, உணவுப் பொருள்களை அதிகம் உற்பத்தி செய்வதற்கான ஊக்கத்தை அளித்தாலும் சரி, உணவுப் பொருள் ஜாஸ்தியாக உற்பத்தியாகும்படி செய்ய முன்வரவேண்டும். நியாயவிலைக் கடைகளில் அரிசியோடு கூட அதிகமாகப் புஞ்சை தானியங்களையும் விநியோகிக்க ஏற்பாடு செய்தாகவேண்டும். குறிப்பாக தஞ்சாவூர் ஜில்லாவில் வீணாகக் கடலில் போய் சேருகின்ற தண்ணீரை விவசாயத்திற்குப் பயன்படுத்துவதற்கான எல்லா ஏற்பாடுகளையும் செய்தாகவேண்டும். கடலில் இந்தத் தண்ணீர் போய் விழாவிட்டால் கடல் நீர் வற்றிவிடுமோ என்று நினைக்கிறார்களோ என்னவோ தெரியவில்லை—இதற்கு ஒரு ஏற்பாடும் செய்யாமல் இருக்கிறார்கள். இதற்கான ஏற்பாட்டை அதனால் விரைவில் கொண்டுவரவேண்டுமென்பதாகக் கேட்டுக்கொள்கிறேன்.

இந்தப் பிரச்சனை நிலத்திற்கு சீலிங் வைத்துவிட்டால் தீர்ந்துவிடும் என்பதாக ஸ்ரீ பழனிசாமி அவர்கள் சொன்னார்கள். அதுவே முற்றிலும் சரியான வழியாக ஆகாது என்பதற்கு ஒரு உதாரணத்தை நான் எடுத்துக் காட்ட விரும்புகிறேன். எங்கள் தஞ்சாவூர் ஜில்லாவில் கர்பநாங்குளம் கிராமத்தில் காலஞ்சென்ற ஸ்ரீ சாமியப்ப முதலியார் அதிகமான நிலத்தை குத்தகைக்கு வாங்கி ஒரு எக்கர் ஒன்றுக்கு முப்பது கலம், நாற்பது கலம் என்று உற்பத்தி செய்து வந்தார்கள். அப்படி ஒருவரிடமே நிலம் கொடுப்பது சரியில்லை என்பதாக அந்த நிலத்தை பத்து வருஷங்களுக்கு முந்தியே நிலம் இல்லாத விவசாயிகளுக்கு, தியாகிகளுக்குப் பங்கிட்டுக் கொடுத்தார்கள். ஆனால் இன்று வரைக்கும் அந்த நிலத்தில் யாரும் ஒரு கலம் கூட வெள்ளாமை செய்யவில்லை. அவை பூராவும் தரிசாகத்தான் கிடக்கின்றன. சாமியப்ப முதலியாரிடம் இருந்தபோது அந்நிலங்களில் குறைந்தது எக்கருக்கு 30 கலம், 40 கலம் என்று கண்டுமுதல் செய்திருக்கிறார்கள் என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொண்டு சீலிங் மூலம் இந்தப் பிரச்னையை தீர்த்துவிட முடியாது என்பதை ஞாபகப்படுத்தி இதற்கான வேறு வழித்துறைகளையும் சர்க்கார் கண்டுபிடித்தாக வேண்டுமென்று சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

10–27 a.m. **Sri P. G. KARUTHIRUMAN** : கனம் சேர்மன் அவர்களே, இப்போது இருக்கும்படியான சென்னை ராஜ்யத்திலே உணவுப் பிரச்னையைப்பற்றி உத்தியோகப் பற்றற்ற தீர்மானத்தை விவாதிக்கிறோம். முதலிலே நாம் என்ன நினைக்கவேண்டுமென்றால் "இப்போது இருக்கும்படியான உற்பத்தி எவ்வளவு ? மக்களுடைய வாங்கும் சக்தி எவ்வளவு ? நமக்கு உணவுப் பற்றாக்குறை எவ்வளவு ? பற்றாக்குறையை நம் நாட்டு உற்பத்தியின் மூலமே சமாளித்துக்கொண்டுவிட முடியுமா ?" என்கிற விஷயங்கள் எல்லாவற்றையும் சேர்த்து இதற்கெல்லாம் அடிப்படையாக இருக்கக்கூடிய பிரச்னையில் கவனம் செலுத்தியாகவேண்டும். பிரத்யட்சமான நிலைமை என்ன என்று தெரிந்தால்தான் நாம் எடுக்கிற காரியங்கள் வெற்றி அளிக்கும்.

ஒரு தேசத்தின் சுபிட்சம் எங்கே இருக்கிறதென்றால்—பல திட்டங்களைப் போட்டாலும் கூட, பெரிய நகரங்களில் ஆடம்பரமான கட்டிடங்களைக் கட்டினாலும்கூட, மண் ரோடை நீக்கி தார் ரோடுகளை அமைத்தாலும் கூட, அவற்றினால் எல்லாம் சுபீட்சம் என்பது தேசத்திற்கு வந்துவிடாது. தேசத்தின் சுபீட்சம்—கிராமங்களிலே—கிராமங்களில் இருக்கும்படியான கழனிகளிலே—கழனிகளில் உயர்ந்திருக்கும்படியான பயிர்களின் கதிர்களிலே—கதிர்களில் இருக்கும்படியான தானியங்களின் உரத்தைப் பொறுத்தேதான் தேசத்தின் சுபீட்சம் இருக்கிறது. இதை இரண்டாவது உலக மகா யுத்தம் நமக்கும் பிரத்யட்சமாகக் காட்டியிருக்கிறது. விவசாயிகள் எங்கே இருக்கிறார்கள் என்பதை கண்ணால் கூட நிமிர்ந்து பார்க்காது இருந்த காலம் முன்பு. உலக யுத்தம் வந்தது. சாமான்கள் விலைகள் ஏறின. உணவுப்பொருள் விலைகள் ஏறின. அவற்றுக்குத் தட்டு வந்தது. உணவுப் பொருள்களின் விலையைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. உணவுத் தட்டு வந்தது. விவசாயிகள் எங்கே எனத் தேட ஆரம்பித்தார்கள். விவசாயிகள் விவசாயம் செய்ய முடியாமல் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்த நிலைமை அப்போதுதான் தெரிந்தது. உணவுத் தட்டுப்பாடு நீங்க, விவசாயம் நன்றாக நடக்கவேண்டும், விவசாயம் செய்கின்ற விவசாய மக்களின் நிலைமை உயர்ந்தாகவேண்டும் என்கிற எண்ணத்தை உலகயுத்தம் நமக்கு உண்டாக்கியது. அந்த விவசாய மக்கள் விவசாயத் துறையில் எவ்வளவு கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்பது நமக்குத் தெரிகிறது. அவர்கள் பொறுமையுடன் இருந்து வருகிறார்கள். ஆகவே இந்த நிலைமையில் இந்தப் பிரச்னையை எந்தக் கண்ணோட்டத்துடன் கவனிக்கவேண்டுமென்று கேட்டால் இரண்டுவிதமாகப் பார்க்கவேண்டும். ஒன்று விவசாய தானிய உணவு உற்பத்தி செய்கின்ற விவசாயிகளுக்கு உரிய விலை கிடைக்கிறதா என்பது ஒன்று, உற்பத்தி செய்கின்ற விவசாயிகளுக்கு வேண்டிய வசதிகள் எல்லாம் செய்யப்பட்டிருக்கிறதா என்பது ஒன்று. விலையேற்றம் வேறு ஒருபுறம் இருக்கிறதென்று சொல்கிறார்கள். விலையேற்றம், விலையேற்றம் என்று சொல்லப்படுகிறது. ஆனால் இப்போது இருக்கும் உற்பத்திச் செலவையும் இப்போது இருக்கும் வாழ்க்கைத்தரத்தையும்





முன்பு இருந்த உற்பத்தி செலவுடனும், வாழ்க்கைத்தரத்துடனும் ஒப்பிட்டுப்பார்த்தால் இப்போது இருக்கும் விலை அக்கிரமமான விலை என்று சொல்ல முடியாது என்று வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன். இரண்டாவது உலக மாகாயுத்தத்திற்கு முன் சாகுபடி செலவு ஒரு எக்கருக்கு ரூ. 40-ல் இருந்து ரூ. 50 வரை இருந்தது. ஆனால் இப்போது சாகுபடி செலவு ஒரு எக்கருக்கு ரூ 150ல் இருந்து ரூ. 200 வரை உயர்ந்திருக்கிறது. அதாவது சாகுபடிச் செலவு முன்பு இருந்ததைவிட இப்போது ஐந்து பங்கு உயர்ந்திருக்கிறது என்பதை அங்கத்தினர்களுக்கு தெரியப்படுத்த விரும்புகிறேன். ஆனால் விளைபொருட்களின் விலை ஐந்து பங்கு உயரவில்லை. விவசாயிகளின் தேவைக்கு வேண்டிய மற்ற பொருள்களின் விலை மிக அதிகமாயிருக்கும் காலத்தில், அவர்கள் உற்பத்தி செய்யும் விளைபொருள்களின் விலை அதற்குத் தகுந்தவாறு உயராமல் இருப்பதால் அவர்களுடைய நிலை மிகவும் பரிதாபமாகயிருக்கிறது. இந்த நவநாகரீக உலகத்தில், எவ்வளவோ வகையில் வேகமாக முன்னேறிக்கொண்டிருக்கும் இந்த உலகத்தில் இந்த ஏழை விவசாயிகள் பலியாக்கப்படுகிறார்கள் என்று சொன்னால் மிகையாகாது.

(இந்த சமயத்தில் சபாநாயகர் தலைமை வகித்தார்.)

அடுத்தபடியாக பருத்தி உற்பத்தியை எடுத்துக்கொண்டால் விவசாயிகள் கொடுக்கக்கூடிய கப்பாஸ் விலை ரூ. 100-ல் இருந்து ரூ. 120 வரை இருக்கிறது. ஆனால் மில்லுக்கு, இந்த கப்பாஸ் போய், அங்கு துணியாக்கப்பட்டு வெளியே வரும்போது அதன் விலை எட்டு மடங்கு அதிகமாகிறது. அல்லும் பகலும் இந்த ஏழை விவசாயிகள் உழைத்து உற்பத்தி செய்யும் பருத்திக்கு போதிய விலை கிடைக்கச் செய்வதற்கு சர்க்கார் தகுந்த நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன். இந்த ஏழை மக்கள் உழைத்து பருத்தியை உற்பத்தி செய்து அந்த மில்களுக்கு கொடுக்காவிட்டால் அந்த மில்கள் ஓடாது. நெல் உற்பத்தி செலவைக் காட்டிலும் பருத்தி உற்பத்தி செலவு அதிகம். நெல் உற்பத்திக்கு, ஒரு எக்கருக்கு 40 பவுண்டு தழையும், 30 பவுண்டு பாஸ்பரிக் உரமும், வேண்டியிருக்கும். ஆனால் பருத்தி உற்பத்திக்கு, 100 பவுண்டு தழை (**nitrogen**)-யும், 50 பவுண்டு பாஸ்பரிக் உரமும் தேவைப்படுகிறது. இதைத் தவிர பருத்தியானது பூ சாரத்தை அதிகமாக இழுத்துக்கொள்கிறது. எனிமா கொடுத்தால் உடல்நிலை எப்படி ஆகிறதோ அதே மாதிரி பருத்தி உற்பத்தி செய்யும் நிலத்தின் நிலையும் ஆகிறது. ஆகவே இந்த ஏழை மக்கள் உற்பத்தி செய்யும் விளைபொருட்களுக்கு போதிய விலை கிடைக்கும்படி செய்யவேண்டியது மிக அவசியம் என்பதை கனம் அங்கத்தினர்கள் உணரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நமக்கு அத்தியாவஸ்யமான ஆடைகள் நெய்வதற்கு வேண்டிய பருத்தியை உற்பத்தி செய்து தரும் இந்த ஏழை மக்களுக்கு உதவி செய்யவேண்டியது மிக முக்கியமானது. தற்போது மில் முதலாளிகள் தங்கள் தொழிலாளிகளுக்கு போனஸ் ஆக பணம் கொடுக்கிறார்கள். அந்த மில்கள் ஓடுவதற்கு வேண்டிய பருத்தியை உற்பத்தி செய்யும் இந்த ஏழை விவசாயிகளுக்கும் ஏதாவது போனஸ் கொடுக்க ஏற்பாடு செய்தால் இவர்களுக்கு நன்மை ஏற்படும். அப்படிச் செய்யாவிட்டால் இந்த ஏழை விவசாயிகள் **strike** செய்யக்கூடிய ஒரு நிலை ஏற்பட்டாலும் ஏற்படும்.

**Sri M. JAGANATHAN** : கனம் சபாநாயகர் அவர்களே, கனம் அங்கத்தினர், உணவு தானியங்களை உற்பத்தி செய்யும் விவசாயிகளின் நிலையை மேலும் அபிவிருத்தி செய்யவேண்டும் என்று சொல்கிறாரா அல்லது **Commercial crops** அதிகமாக பயிரிடுவதை தடைசெய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று சொல்கிறாரா என்பதை அறிய விரும்புகிறேன். 10-30 a.m.

**Sri P. G. KARUTHIRUMAN** : எல்லா விவசாயிகளும் ஒன்றுதான். ஆனால் பருத்தி உற்பத்தி செய்வதற்கு அதிகப்படி செலவு ஆகிறது என்பதை கனம் அங்கத்தினர்கள் உணரவேண்டும். எல்லா விவசாயிகளின் நிலையும் நன்றாக இருந்தால்தான் உற்பத்தியை பெருக்குவதற்கு முடியும். விவசாயம் என்ன என்பதே தெரியாதவர்கள் விவசாயத்தைப் பற்றி பேசும்போது இந்தக் கஷ்டம் ஏற்படுகிறது.

[7th November 1957

SRI N. K. PALANISAMI : கனம் அங்கத்தினர் அவர்கள் தன்னைப் பற்றியே பேசுகிறாரா அல்லது கொள்கையைப்பற்றி பேசுகிறாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

MR. SPEAKER : It is as relevant as the speech of the hon. Member in moving the resolution !

SRI P. G. KARUTHIRUMAN : என்னைப்பற்றி பேசவில்லை. ஆனால் கனம் அங்கத்தினர் தொழிலாளிகளுக்கு அதிக கூலி கொடுக்க வேண்டும் என்று இங்கும் வெளியிலும் சொல்லிக்கொண்டு தன்னிடத்தில் வேலை செய்யும் தொழிலாளிக்கு குறைந்த கூலி கொடுப்பதும், அவர்கள் மிகவும் கஷ்டப்படுவதும் எனக்கு தெரியும்.

உணவு உற்பத்தி செய்யும் விவசாயிகள் நல்ல நிலையில் இருக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய கருத்து. கனம் அங்கத்தினர் ஸ்ரீ. வேதரத்னம் பிள்ளை அவர்கள் பேசும்போது, ஜப்பானிய சாகுபடி முறையைப்பற்றி குறிப்பிட்டார். அம்முறை முன்பு வேகமாக பலன் அளித்ததாகவும், இப்போது அவ்வளவாக பலன் அளிக்கவில்லை என்றும் சொன்னார் ; ஆனால் இந்த முறையின் மூலம் அதிகமான நெல் உற்பத்தி செய்ய முடியும் என்பது என்னுடைய திடமான நம்பிக்கை. P.W.D. கணக்குப்படி ஒரு ஏக்கருக்கு 100 அங்குல அளவு தண்ணீர் தேவை என்று நிர்ணயித்திருக்கிறார்கள். ஆனால் அவ்வளவு தண்ணீர் தேவை இல்லை என்று இப்போது கருதப்படுகிறது. 40 அங்குல அளவு தண்ணீர் இருந்தாலே போதும் என்ற கருத்தும் நிலவுகிறது. ஜப்பானிய முறையின் அடிப்படையில் தண்ணீர் அவ்வளவு அதிகம் தேவையில்லை. திருச்சி, தஞ்சை போன்ற ஜில்லாக்களில் நஞ்சை நிலங்களில் அதிகமான தண்ணீர் விட்டு வைக்கவேண்டுமென்ற ஒரு வழக்கம் இருக்கிறது. இது பழயகாலத்தில் அனுஷ்டிக்கப்பட்ட முறை. இப்போது இருக்கும்படியான நிலையில், ஜப்பானிய முறையை அனுஷ்டிப்பதால், நஞ்சை நிலத்திலும் உற்பத்தியை இரண்டு மடங்கு அதிகரிக்க முடியும் என்பது எனக்கு அனுபவத்தின் மூலம் தெரியும். தகுந்த உரங்களின் முக்கியத்துவத்தை ஆராய்ச்சி செய்து அதன் விளைவுகளை விவசாயிகளுக்கு எடுத்துரைத்து அவர்கள் அதன்படி உபயோகப்படுத்தினாலும் ஜப்பானிய முறையை அனுஷ்டிப்பதினாலும் உற்பத்தி நூற்றுக்கு ஐம்பது சதவிகிதம் அதிகமாகும். தவிர, நல்ல உயர்ந்த வித்துகளை தயார் செய்து, அவைகளை விவசாயிகளுக்கு விநியோகித்தால், அதன் மூலம் நூற்றுக்கு ஐம்பது சதவிகிதம் உற்பத்தியை பெருக்க முடியும். இவ்வாறு செய்தால் நூற்றுக்கு நூறு சத விகிதம் நாம் உற்பத்தியை பெருக்க முடியும் என்று சொல்லிக்கொள்கிறேன். ஜப்பான், இதாலி, ஸ்பெயின் முதலிய நாடுகளில் 3,000, 5,000, 4,000 பவுண்டு ஒரு ஏக்கருக்கு உற்பத்தியாகிறது. ஆனால் இந்தியாவிலே 1,500 பவுண்டு தான் உற்பத்தியாகிறது. ஆகையால் நாமும் பழங்கால முறையை பின்பற்றி வராமல், புதிய முறைகளை அனுஷ்டித்து நமது உற்பத்தியையும் பெருமளவுக்கு அதிகப்படுத்துவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டும். இந்த சமயத்தில் எனக்கு வள்ளுவர் மிக அழகாக கூறிய குறள் வாக்கியம் ஞாபகத்திற்கு வருகிறது:

"ஏரினும் நன்றால் எருவிடுதல் ; கட்டபின்
நீரினும் நன்றதன் காப்பு."

"ஏரினும் நன்றால் எரு விடுதல்" என்றால், ஏரு உழுவதைக் காட்டிலும், எரு அதிகமாக உபயோகப்படுத்த வேண்டும் என்பதுதான். "கட்டபின் நீரினும் நன்றதன் காப்பு" என்றால், நீர் பாசன வசதி செய்து கொடுப்பது மட்டும் போதாது, அதைவிட முக்கியமானது என்னவென்றால், விளைன்ற பயிரை நல்ல முறையில் பாதுகாப்பதுதான்.

"செல்லான் கிழவன் இருப்பின் நிலம்புலந்து இல்லாளி ஊடிவிடும்"

அதாவது நிலத்திற்கு உரியவன் நிலத்தைச் சென்று பார்க்காமல் வாளா இருந்தால் அந்நிலம் அவனுடைய மனைவியைப்போல் வெறுத்து அவனோடு பிணங்கிவிடும் என்பதை திருவள்ளுவர் முன்னமே சொல்லவிட்டார்,



7th November 1957] [Sri P. G. Karuthiruman]

விவசாயிகள் பயிரிடும் விலைபொருள்களுக்கு நியாயமான விலையைக் கொடுத்தால்தான் அவர்கள் அதனுடைய பலனை அடைய முடியும். இதை அரசாங்கம் கொஞ்சம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். இதில் பணக்கார விவசாயிகள், ஏழை விவசாயிகள், என்ற வித்தியாசம் காண்பிக்கக்கூடாது. 100 ஏக்கர், அல்லது 1,000 ஏக்கர் வைத்துக்கொண்டிருப்பவர்களிடமிருந்து நிலத்தை வாங்கி, 2 ஏக்கர், 4 ஏக்கர் என்று நிலமில்லாத மக்களுக்கு பிரித்துக் கொடுத்தால் மட்டும் போதாது. இதனால் நம் விவசாயத்தை அபிவிருத்தி செய்ய முடியாது. இம்மாதிரி நிலத்தைப் பிரித்துக்கொடுத்தால் மட்டும் நாம் உணவு உற்பத்தியைப் போக்கிவிட முடியாது. விவசாயம் செய்வதும், உணவு உற்பத்தியைப் பெருக்குவதும் ஒரு சாதாரண விஷயம் அல்ல. விவசாயிகளுக்கு நல்ல ஊக்கமும், ஆர்வமும், அனுபவமும் தேவை. அம்மாதிரி ஆர்வமும் அனுபவமும் உள்ள மக்களிடம் நிலம் இருந்தால், நாம் விவசாயத்தை அபிவிருத்தி செய்யவும் உணவு உற்பத்தி பெருக்கவும் முடியும். ஆகவே விவசாயிகளின் நிலைமையை ஓரளவு உணர்ந்து அவர்கள்பயிரிடும் விளைபொருள்களுக்கு ஒரு நியாயமான விலை கொடுத்தால்தான், உணவு உற்பத்தியை நாம் பெருக்க முடியும். கனம் அங்கத்தினர்கள் குறிப்பிட்டபடி விவசாயிகள் வெளியேறாமல் தடுப்பதற்கும், அவர்களுக்கு வேண்டிய உரம் கொடுப்பதற்கும், அவர்களுக்கு தேவையான கடன் வசதியைக் கொடுப்பதற்கும் நமது அரசாங்கம் உதவி செய்து உணவு உற்பத்தியை பெருக்குவதில் நமது சென்னை மாகாணம் பின்வாங்காது என்ற நம்பிக்கையுடன் என் பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

* SRI V. K. RAMASWAMY MUDALIYAR : Mr. Speaker, I need not tell you and hon. Members here that we are faced with an acute shortage of foreign exchange and that, therefore, the prospect of our getting foodstuffs from foreign countries is very remote. For this reason, we have to be very careful in the matter of production of food not only in our State but in the country as a whole. First of all, I want to know from the Hon. Minister what the Food policy of the Government is. We must definitely know where our State is and whether it is surplus or deficit. This should be clearly examined as early as possible. If it is deficit, we must find out how much we are going to get from the Centre and whether the Centre will keep its promise. Recently, there was a zonal conference and I understand that at that conference the Andhra Government agreed to give us and also Mysore about five lakh tons of foodgrains. I want to know from the Hon. Minister whether the Andhra Government have kept their promise, and if not, why. What is the action taken by the zonal conference in the matter? If the Government of Andhra have not implemented the recommendations of the zonal conference, it is high time that our Government take the matter up with the Centre and see that the recommendations of the conference are implemented as early as possible. Another submission of mine would be that the recommendations of the zonal conference should be given wide publicity so that we may understand the matter in greater detail. I should say that the zonal conference has failed to do its duties properly in not taking any action against the Andhra Government for not implementing its recommendations. The Andhra Government have failed to discharge their obligations. After all, they are not giving rice free. We pay for it and pay at a higher rate too. We find at regular intervals there is a Food Ministers' Conference held but even the proceedings of that conference are not released to the

10.40 a.m.

[Sri V. K. Ramaswamy Mudaliyar] [7th November 1957

Press. The public would like to know what has transpired at these conferences and the action taken by the Government then and there so that they might also give some concrete suggestions. That is my submission. The general impression that is gaining currency is that our Government are not having as much pull as they should have with the Centre and that, as a result, the South is being neglected so far as the food question is concerned. Here, my submission would be that the proceedings of this House today on the Food problem should be directly communicated to the Prime Minister so that he at least may come to our rescue and take immediate action on our recommendations. Many Members have said that the surplus rice of Tanjore is being taken to Kerala from all directions and that there is no effective control of the situation by our Government. I am sure the Hon. Minister will take early action to see that the movement of foodstuffs by lorry is restricted at all costs. This is a very important and serious matter which should be looked into as early as possible.

Regarding fixation of prices, I may point out that the Government themselves are running so many farms and that they know the working costs of the agricultural farms. Our Ministers are convening regular conferences in important districts in the zonal areas and I am sure they will fix the prices of foodgrains periodically. Of course, the prices should be acceptable both to the consumer and to the producer, especially because of the abnormal increase in the cost of cultivation. Otherwise, so far as agriculturists are concerned, there won't be any incentive to produce and many of them will switch over to commercial crops very soon.

I would like to suggest one or two long-range programmes for the consideration of the Government. With regard to the Food Production Drive, my humble submission is that the drive is neither very effective nor quick. Of course, it is moving at a snail-like pace. I wish the Hon. Minister to take up this thing very seriously and see that this drive is pushed through as expeditiously as possible.

With regard to supply channels and tanks, so many tanks are in a state of disrepair. The improvement or the strengthening of the bunds should be taken up as quickly as possible. Even with regard to supply channels, wherever there is no objection from the foreshore land-owners, the Government should see that these supply channels are improved. Where frivolous objections are raised, the Government must straightaway see that those objections are settled as early as possible and something is done to augment the supply to these tanks. In my own area, in one village, the supply channel question has been hanging fire before the Government for the last two decades and now only the Collectors of North Arcot and Chingleput recently met at a Conference. I do not know what decisions have been taken. What I wish to point out is that in such cases the Government must see that the supply channel question is taken up as early as possible and something is done. Otherwise, even if we have plenty of rain, many tanks will not get adequate supply of water and will be empty.



7th November 1957] [Sri V. K. Ramaswamy Mudaliyar]

The same is the case with regard to desilting. It is also being done, but not to the extent to which it should be done. There also, the work is deplorably slow.

With regard to the supply of pesticides, I must, of course, thank the Minister for having cut red-tape to some extent and District Agricultural Officers have been empowered to supply pesticides. But the general complaint is that the amount allotted for each district is quite inadequate. Take for instance the district of Chingleput. Only a sum of Rs. 5,000 has been allotted. When once there is pest attack, it spreads like wild fire and the amount allotted is quite insufficient. By the time the subordinate officers write and get orders for increased allotment, there will be sweeping devastation. I would, therefore, request the Hon. Minister to see that sufficient money is allotted where there is pest attack. With regard to certain pesticides like 'Endrain', the Government do not give any concessions. I would request the Hon. Minister to consider this aspect also.

The price of manure is going up abnormally. I do not know whether the Government are having any effective control over these manures. Apart from the fact that there has been some enhancement in price in the case of ammonium sulphate probably due to the import policy, even with regard to the manures that are supplied by some Companies like Messrs. Parry & Co., they go on increasing the prices day by day with the result that some of the ryots find it very difficult to go in for these artificial manures especially because of the fact that farm-made manures are not available in large quantities. It would be better if the Government could come to the rescue of the ryots by granting some subsidy for these manures if possible.

I understand that in the Kanyakumari district, even though the Japanese method has become popular, still the complaint is that the authorities are not co-operating with the ryots with the result that there is a sort of feeling in the minds of the ryots that they should revert to the old system. My own personal experience is that the Japanese method is very good and I wish the Government will introduce it in all the districts.

With these few words, I resume my seat.

* **Sri T. KARIA GOUNDER** : சபாநாயகர் அவர்களே, இந்த சந்தர்ப்பத்திலே விவசாயி என்ற முறையிலே நான் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். எனக்கு முன்பு பேசிய நண்பர்கள், கோயம்பத்தூரிலிருந்து இரண்டு பேர்கள் பேசினார்கள் என்று எண்ணுகிறேன். இந்தத் தீர்மானத்தைக்கொண்டு வந்த நண்பர் அவர்களும், அதை ஆதரித்தும் எதிர்த்தும் பேசிய என் நண்பர் கருத்திருமன் அவர்களும் இதைக் குறித்து அழகாக பேசி விட்டார்கள். ஆனால் விவசாயிகளின் நிலை, உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்று சொல்கிற அளவிலே, உற்பத்தியைப் பெருக்குகிற அளவிற்கு, உற்பத்தி செய்யவேண்டியதற்குள்ள செலவு என்ன என்பதைப் பற்றி கொஞ்சம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இந்த நிலைமையில் ஏதோ சர்க்கார் மீது, எதிர்கட்சிக்காரர்களாய் இருந்தாலும் சரி, ஆளும் கட்சியைச் சார்ந்தவராக இருந்தாலும் சரி, அரசாங்கத்தின் மீது குறை கூறுவதில் எதும் அர்த்தம் இருப்பதாக என்னைப் பொறுத்த வரையில் எனக்குத் தோன்றவில்லை. எதிர் கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டார்கள், எருவின் விலை, தினந்தோரும் விலைவாசி உயர்ந்து

10-56 a.m.

கொண்டே போகிறது என்று. இந்த அளவிலே, தொழில் கட்சியில் அக்கரை கொண்ட நண்பர் பழனிசாமி அவர்கள் ஏதோ அரிசி விலை உயர்ந்து விட்டது என்று குறிப்பிட்டார்கள். ஆனால் அரிசி விலை அவ்வளவாக உயர்ந்து விடவில்லை என்பதுதான் என் எண்ணம். யுத்த காலத்திற்குப் பின்னரும் கூட இரண்டு ரூபாய்க்கு ஒரு படி அரிசி விற்று வந்தது எல்லோருக்கும் தெரியும். இரண்டு ரூபாய்க்கு ஒரு படி அரிசி விற்றது. ஆனால் திடீரென்று விலைவாசி குறைந்து ஒரு ரூபாய்க்கு இரண்டு படி அரிசி விற்ற காலம் இரண்டு வருடங்களுக்கு முன்பு இருந்தது. ஆனால் எங்கள் ஜில்லாவைப் பொறுத்தளவில் சொல்ல வேண்டுமானால், வட ஆற்காடு ஜில்லாவைப் பொறுத்த வரையில் எங்களுக்கு விமோசனம் என்பதே கிடையாது. புயலினால் வீடுகள் அழிந்து போய் விட்டன. ஆயிரக்கணக்கான குடிசைகள் போய்விட்டன. மத்திய சர்க்காரிலிருந்து 10, 20 லட்சம் ரூபாய் இதற்கென வந்து இந்த வீடுகளுக்காக வேண்டி அது செலவிடப்படும் என்று சொல்லப்பட்டது. எங்கள் ஜில்லாவில் மழையேயில்லை. அங்கு ஆற்றில் தண்ணீர் இல்லை. சர்க்காரிடம் இதைப் பற்றிச் சொன்னால் அவர்கள் அதற்கு லகுவாக பதில் அளித்து விடுகிறார்கள். மைசூரிலிருந்து, பாலாற்றிலிருந்து ஏதாவது விமோசனம் கிடைக்குமா என்று பார்த்தால் அதற்கு விமோசனம் இல்லையென்று அவர்கள் சொல்லி விட்டார்கள். ஆனால் இப்பொழுது மத்திய சர்க்கார் ஸோனல் கௌன்ஸில் என்று வைத்திருக்கிறார்களே, அதிலிருந்து ஏதாவது விமோசனம் வருமா என்றால், என்னை விட ஸ்ரீ பக்தவத்ஸல முதலியார் அவர்களுக்கு செங்கல்பட்டு ஜில்லாவைப் பொறுத்தவரையில் அதிக அக்கறையிருக்கும் என்று நினைக்கிறேன். பாலாற்றுத் திட்டத்தைப் பற்றிச் சென்னால், வெளியில் பாலாற்றுக்காரர் வந்து விட்டார் என்று கேலி செய்கிறார்கள். எங்கள் ஜில்லாவில் கிணற்றிலும் தண்ணீர் இல்லை. கிருஷ்ணா-பெண்ணாறு திட்டத்தினால் வட ஆற்காடு ஜில்லாவில் ஒரு பகுதிதான் பலன் அடையப் போகிறது. மற்ற பகுதி பலன் அடையப் போவதில்லை என்பது ஏற்கனவே உள்ள திட்டத்திலிருந்து தெரியும். ஆனால் இப்பொழுது கோதாவரி தண்ணீர் சென்னை மாகாணத்திற்கு பகிர்ந்து வரும் சமயத்தில் வட ஆற்காடு ஜில்லாவிலுள்ள மற்ற பகுதிகள் பயன் அடைய முடியுமா என்று கேட்டபோது, அதைப்பற்றி சர்க்கார் பரிசீலனையில் இருக்கிறது என்று சொன்னார்கள். கருத்திருமன் அவர்கள் அந்த வகையில் கோயம்புத்தூர் ஜில்லாவில் அவர்கள் வெற்றி கண்டவர். பாவானித்திட்டத்தின் மூலம் அவர்கள் பலனடைந்தார்கள். அமராவதித் திட்டமும் முடிவடையும் தருவாயில் இருக்கிறது. பரம்பிக்குளம் திட்டம் வந்தாலும் அதனாலும் அவர்களுக்கு பலன் கிடைக்கும். மேட்டூர் அணைத்திட்டமும் இருக்கிறது. அதிலிருந்து அவர்கள் பலன் பெற முடிகிறது. அவர்கள் திருக்குறளைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். தண்ணீர் பஞ்சம் பற்றிச் சொல்லப் பட்டிருப்பதைக் குறிப்பிட்டார்கள். அவர்களுக்கு நான்கைந்து சகோதரர்கள் இருக்கிறார்கள், அவர்கள் நிலங்களை நன்கு கவனித்துக் கொள்கிறார்கள். ஆனால் என்னைப் பொறுத்தவரையில், ஏக்கர் ஒன்றுக்கு 250 ரூபாய் செலவிட வேண்டியிருக்கிறது. அப்படி செலவும் செய்தோம். வட ஆற்காடு ஜில்லாவில், அப்படிச் செலவு செய்தும் பலன் இல்லாமல் போய் விட்டது.

ஆகவே உணவு உற்பத்தி பெருகி இருக்கிறது என்பதில் சந்தேகமில்லை. அதோடு மக்களை உற்பத்தி செய்வதிலும் நாம் குறைவாக இருக்கவில்லை. ஆகவே சர்க்கார் மக்கள் உற்பத்தியை கொஞ்சம் மட்டுபடுத்த ஏதாவது வழி வகை செய்ய வேண்டும். கனம் மெம்பர் வேதரத்தினம் பிள்ளை அவர்கள் கூறினது மாதிரி நாம் லட்சக்கணக்கான மக்களை அதிகப்படுத்தி விட்டோம் என்பது உண்மை. இதற்கு சர்க்கார் ஏதாவது ஒரு வழி வகை செய்தாகவேண்டும். இந்த அளவில் மக்கள் உற்பத்தி அதிகமாக இல்லாமல் இருந்தால் இப்பொழுது இருப்பதை கொண்டே நம் நாடு சரிகட்டிகொள்ளும் என்பதில் சந்தேகமே இல்லை. எங்கள் ஜில்லாவை பொறுத்தவரையில் கோயம்புத்தூரிலுள்ள வியாபாரிகள் அவர்கள் நாட்டுக்கு என்று நெல்லை வாங்கி கேரள நாட்டுக்கு அனுப்பிக் கொண்டிருப்பதாக தெரிகிறது. இது மாத்திரமல்ல. சமீபத்தில் பிளானிங் கமிட்டி கூட்டத்தில் பாகிஸ்தானுக்குகூட இங்கிருந்து போய்க்கொண்டிருக்கிறது என்ற புகார் வந்தது என்பதை சர்க்காரின் கவனத்திற்கு கொண்டுவர



விரும்புகிறேன். இவ்விதமாக அந்நிய நாடுகளான லட்சத்தீவுகளுக்கும் போய்க் கொண்டிருப்பதாக புகார்கள் இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே இதில் சர்க்கார் ஒரு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அது மாத்திரமல்ல. எருக்களின் விலை அதிகமாக உயர்ந்துகொண்டு போவதாக சொன்னார்கள். சென்ற ஆண்டில் 33 ரூபாயாக இருந்தது இன்றைய தினம் 40 ரூபாய் சில்லறையாக உயர்ந்திருக்கிறது. இதிலும் ஏன் விலை கூடுகிறது என்று பார்த்தால் ஆந்திர மாகாணத்திற்கு எங்கள் ஜில்லாவிலிருந்து அதிகமாக போய்க்கொண்டிருக்கிறது. இதை யாரும் மறுக்க முடியாது. பெரிய வியாபாரிகள் எல்லாம் இதைத்தான் செய்கிறார்கள் என்று தெரிகிறது. என்னுடைய நண்பர் ஒருவர் சொன்னார், ஒரு வியாபாரி குறைந்த காலத்தில் 10 ஆயிரம் ரூபாய் வரை சம்பாதித்து விட்டார் என்று சொன்னதை கேட்டேன். இந்த மாதிரி கள்ளமார்க்கட்டில் வியாபாரிகள் ஈடுபட்டிருக்கிறார்கள். இம்மாதிரி எரு போன்ற சாமான்கள் ஒரு மாகாணத்திலிருந்து இன்னொரு மாகாணத்திற்கு போவதை தடுக்கும் வகையில் சர்க்கார் தீவிரமான நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கனம் அமைச்சர் அவர்கள் செங்கல்பட்டு ஜில்லாவை கவனிப்பது போன்று எங்கள் ஜில்லாவிலும் அக்கரை காட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இனி வருகின்ற திட்டத்திலாவது கவனம் செலுத்தி வட ஆர்க்காடு ஜில்லா பகுதிகளை கவனித்து அங்குள்ள விவசாயிகளுக்கு விடுதலையை வாங்கித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். புறம்போக்கு நிலங்களைப் பற்றி தீர்மானம் கொண்டு வந்த நண்பர் அவர்கள் சொன்னார்கள், எங்களுடைய ஜில்லாவிலும் கூட புறம்போக்கு நிலங்களில் சாகுபடி செய்த விவசாயிகளுக்கு அந்த நிலங்களை பட்டா செய்து கொடுக்கப்படாமல் இருப்பதால், அங்குள்ள குடியானவர்கள் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே இதை சர்க்கார் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இவ்விதம் பட்டா செய்து கொடுக்காமல் இருப்பதினால் பல இடையூறுகளும் பல சங்கடங்களும் ஏற்படுகிறது. அதிக உற்பத்தி செய்வதற்காக முதலாவதாக குடியானவர்களுக்கு கொடுத்துவிட்டு பின்னால் வாபஸ் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று சொன்னால் அந்த விவசாயிகள் உழுத நிலங்களிலிருந்து ஒருவிதமான நன்மையும் பெற முடியாத நிலைமையில் இருக்கிறார்கள். ஆகவே அவர்கள் உழுது பயிர் செய்தவர்களுக்கு அந்த நிலங்களை பட்டா செய்து கொடுப்போமானால் அதிக உற்பத்தி ஏற்பட்டு நம் நாட்டில் பற்றாக்குறை ஏற்படாது, இதைக்கொண்டே சரிகட்டிக்கொள்ளும் என்பதை தெரிவித்துக்கொண்டு இந்த சந்தர்ப்பத்தை அளித்த தலைவர் அவர்களுக்கு நன்றியை தெரிவித்துக்கொண்டு என் சிறிய உரையை முடித்துக்கொள்கொள்கிறேன்.

**Sri A. GOVINDASAMY**: கனம் சபா நாயகர் அவர்களே, இன்றையதினம் நண்பர் பழனிசாமி அவர்கள் நம்முடைய நாட்டின் உற்பத்தி பெருக்கத்தைப்பற்றியும், அந்த உற்பத்தி பெருக்கத்தை எந்த அளவு அதிகப்படுத்துவது என்பதைப்பற்றியும், மக்களுக்கு தேவையான உணவை கொடுக்க அரசாங்கம் எவ்வித வழிவகை செய்யவேண்டும் என்பதைப்பற்றியும், வியாபார கண்ணோட்டத்தோடு கொள்ளை லாபம் அடிக்கிறதை கட்டுப்படுத்துகின்ற முறையில் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று ஒரு தீர்மானத்தை கொண்டு வந்தார்கள். இதை பொதுவாக ஏழைகள் வரவேற்பார்கள். ஆனால் பெரிய மிராசுதார்கள் வரவேற்க மாட்டார்கள். இது இந்த சபை விவாதத்தில் கலந்து கொண்டவர்களின் நிலைமையிலிருந்து புரியும். எனக்கு முன்னால் பேசிய கனம் அங்கத்தினர் சர்தார் வேதரத்தினம் பிள்ளை அவர்கள் இந்த பிரச்னையை கட்சி கண்ணோட்டத்தோடு பார்க்காமல் ஏழைகளுடைய பிரச்னையாக கருதி இனித சுமுகமான முறையில் தீர்த்து வைக்க வேண்டும் என்ற முறையில் அவர்கள் பேசினார்கள். அதற்கு பின்னால் பேசிய நண்பர் கருத்திருமன் அவர்களும், கரிய கவுண்டர் அவர்களும், எதிர்கட்சி தலைவர் அவர்களும் பெரும் வியாபாரிகளுக்கு பரிந்து கொண்டு பேசினார்கள். விலை அதிகமாக உயரவில்லை என்ற முறையில் கருத்திருமான் அவர்களும் கரிய கவுண்டர் அவர்களும் பேசினார்கள். அவர்கள் உண்மையில் விவசாயிகள் பக்கம் இருந்து பார்த்திருந்தால் இவ்விதம் பேசியிருக்கமாட்டார்கள். 11-5 a.m.

ஒரு படி அரசி 2 ரூபாய்க்கு விற்றது என்று குறிப்பிட்டார்கள். இந்த விலையை குறைப்பதற்கு அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டியது மிக அவசியம். இதில் கட்சி கண்ணோட்டம் ஒன்றும் கிடையாது. இதில் மிராசுதார், ஏழை என்ற பிரச்னை இல்லை. எதிர் தரப்பில் இருந்தாலும் சரி, ஆளும் கட்சியின் சார்பில் இருந்தாலும் சரி, விலை குறையவேண்டும் என்பது எல்லோருடைய கருத்திலும் இருக்கிறது. இந்த பிரச்னையில் மிராசுதார் ஏழை என்றில்லாமல் எல்லோருக்கும் ஒரே நிலை என்கிற முறையில் பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். " சோழ நாடு சோறு உடைத்து " என்று சொல்லப்பட்ட நாட்டில் இன்று உற்பத்தி குறைந்திருக்கிறது. உற்பத்தி போதும் என்று பலர் சொன்னார்கள். அப்படியென்றால் ஏன் இன்று நாட்டில் பற்றாக்குறை இருக்கிறது என்பதை நாம் பார்க்க வேண்டும். இங்கே விளைகின்ற பொருட்கள் எங்கே பதுக்கப்படுகிறது என்பதை நாம் பார்க்க வேண்டும். இன்றைக்கு விவசாயிகள் குறைந்த விலையில் தன்னுடைய பொருட்களை விற்கிறார்கள். இவைகள் எல்லாம் வியாபாரிகள் கையில் போகும்போது பதுக்கி வைத்து விடுகிறார்கள். சமீபத்தில்கூட மத்திய அரசாங்த்திலிருந்து ஒரு அறிக்கை வெளி வந்தது. மத்திய மந்திரி ஜெயின் அவர்கள் ஒரு அறிக்கையில் குறிப்பிடுகிறார்கள், அடுத்த ஆண்டு உணவு நிலைமையில் மோசமான நிலைமை ஏற்படலாம் என்று. அதைப் பார்த்ததும் வியாபாரிகள் பதுக்கலை ஆரம்பித்து விடுகிறார்கள். இதை தடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்தாகவேண்டும். இந்த நிலையில் அரசாங்கமே அறுவடை காலங்களில் ஏற்கெனவே செய்தது போல் அதிகப்படியாக கவனம் செலுத்தி நெல்லை வாங்கினால், நமக்கு தேவையான நெல் மார்க்கட்டில் வந்துவிடும். எதிர் கட்சி தலைவர் ராமசாமி முதலியார் அவர்கள் சொன்னார்கள், உற்பத்தி பெருகியிருந்தும்கூட மார்க்கட்டுக்கு அதிகமாக வரவில்லை என்று. நியாயமான விலையும் நிர்ணயம் செய்யப்படவில்லை என்று சொன்னார்கள். ஆகவே அதிகமாக உற்பத்தி பொருள் மார்க்கட்டுக்கு வரும்படி செய்வதற்கு அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இன்றைக்கு விவசாயிக்கு அதிக உற்பத்தி செய்வதற்கு அதிகமாக செலவாகிறது. உரத்தின் விலையை குறைப்பதற்கும் இன்னும் " ஆயில் " எண்ணெய் குறைந்த விலையில் கிடைக்க வேண்டும், மின்சாரம் குறைந்த அளவில் கிடைக்க வேண்டும், அதிலும் இரண்டு வேளையிலும் கிடைக்கவேண்டும். அதற்குரிய வழிவகைகளை செய்ய அரசாங்கம் முன்வரவேண்டும். இது தவிர விலை அதிகமாக உயரவில்லை என்று சொல்வது சரியாகாது. ஏழைகள் பக்கத்தில் இருந்து பார்த்தால் விலை எவ்வளவு அதிகமாக உயர்ந்திருக்கிறது என்பது தெரியும். ஆகவே மக்களுக்கு நன்மை செய்ய வேண்டும் என்கிற கண்ணோட்டத்தோடு இதற்கு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

விலை உயர்வைத் தடுப்பதற்கும், ஏழை எளியவர்களாக இருக்கும் தொழிலாளர்களுக்கும் உத்தியோகஸ்தர்களுக்கும் மற்றவர்களுக்கும் நியாய விலைக்கு அரிசி கிடைக்கச்செய்வதற்கும்தான் ஆங்காங்கு நியாய விலைக் கடைகளை சர்க்கார் திறந்தார்கள். ஏற்கெனவே போதுமான அளவு நியாய விலைக் கடைகள் திறக்கப்படவில்லை என்று உணரப்படும்போது, மத்திய அரசாங்கம் நமக்குப் போதிய அளவு அரிசி வழங்காத காரணத்தால் அவைகளின் எண்ணிக்கையை அரசாங்கம் பாதியாகக் குறைத்துள்ளது. தஞ்சாவூர், திருச்சி, திருநெல்வேலி ஆகிய மூன்று மாவட்டங்கள் நீங்கலாக எல்லா மாவட்டங்களும் பற்றாக்குறை மாவட்டங்களாகத்தான் இருக்கின்றன. சேலம், கோயம்பத்தூர், கனம் அமைச்சர் அவர்களின் சொந்த ஜில்லாவாகிய வட ஆர்காடு, ஆகிய மாவட்டங்கள் எல்லாம் பற்றாக்குறைப் பிரதேசங்களாகத்தான் இருக்கின்றன. குறிப்பாக, கைத்தறி நெசவாளர்களும், ஏழை ஆதித்திராவிடர்களும் அரிசியை அதிக விலை கொடுத்து வாங்க முடியவில்லை. அரிசியின் விலை அதிகமாக இருப்பதால் அதிகக் கூலி கொடுக்கவேண்டுமென்று தொழிலாளர்கள் கூறுகிறார்கள். ஆகவே அரிசியின் விலையைக் குறைக்கவேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன். நியாய விலைக் கடைகளில் அரிசியின் விலை சிறிதளவாவது குறைக்கப்படவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையிலும் அங்கே 4 நியாய விலைக் கடைகள் இருந்தன. வளவனூரில் மூன்று நியாய விலைக் கடைகளும் விக்ரவாண்டியில் ஒரு நியாய விலைக் கடையும் இருந்தன. வளவனூரிலிருந்த மூன்று கடைகளையும் சர்க்கார் மூடிவிட்டார்கள். வியாபாரக் கண்ணோட்டத்துடன் இல்லாமல் ஏழை எளியவர்களுக்கு உதவ வேண்டும் என்ற எண்ணத்துடன் நடத்தப்படுமானால் இன்னும் நியாய விலைக் கடைகள் திறக்கப்படும் என்று சொல்லப்பட்டது. வளவனூரிலிருந்த மூன்று நியாய விலைக் கடைகளும் மூடப்பட்டுவிட்டன. (குறுக்கீடு) அங்கே ஒரு கடை இருப்பதாகச் சொல்லப்பட்டது. அதுவும் மூடப்பட்டுத்தான் இருக்கிறது. சமீபத்தில்தான் நான் வளவனூருக்குச் சென்றிருந்தேன். அங்கே நியாய விலைக் கடையைத் திறப்பதற்கு ஸ்ரீ குப்புசாமி செட்டியார் என்பவர் லைசென்ஸுக்கு விண்ணப்பம் போட்டிருக்கிறார். அவருக்கு லைசென்ஸு கொடுக்கவேண்டுமென்று கலெக்டரிடத்திலும் நான் சொல்லியிருக்கிறேன். ஆதித்திராவிடர்கள் அரிசி விலை உயர்வால் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அவர்களில் பலர் விவசாயம் செய்ய முடியாத நிலையில் இருக்கிறார்கள்; அல்லது அவர்கள் விவசாயத் தொழிலில் ஈடு பட்டாலும் போதிய கூலி கிடைப்பதில்லை. ஆகவே ஆதித் திராவிடர்கள் அதிகமாக இருக்கும் இடங்களில் போதிய நியாயவிலைக் கடைகளைத் திறக்கவேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன்.





உணவு நெருக்கடிக்குக் காரணம், மக்கள் அதிகமாக அரிசி சாப்பிடுவது ஆகும் என்று கனம் உணவு மந்திரி அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அரிசியை மட்டுமே சாப்பிடாமல் கோதுமையையும் சாப்பிடவேண்டுமென்று கனம் உணவு மந்திரி அவர்கள் கூறினார்கள். இதைப் பார்க்கும்போது, வடநாட்டில் கட்டப்பட்டுள்ள பெரிய பெரிய நீர்த்தேக்கங்களின் மூலம் உற்பத்திசெய்த உபரி கோதுமைக்கு இங்கே ' மார்க்கெட் ' தேடுவதற்கு நமது அரசாங்கத்தாருக்கு மத்திய அரசாங்கத்தாரிடமிருந்து ரகசிய உத்தரவு வந்திருக்கிறதோ என்ற சந்தேகம் எழுகிறது. நாம் கோதுமை சாப்பிட்டுப் பழக்கமில்லாதவர்கள். வேண்டுமானால், வடநாட்டுக்காரர்கள் கோதுமையையே சாப்பிடட்டும் ; அப்படிச் செய்தால் அங்கே அரிசி போவதைத் தடுக்கலாம்.

நமக்கு போதிய அரிசி நியாய விலைக்குக் கிடைக்கச் செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும். உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு ஆங்காங்கு புதிய நீர்ப்பாசனத் திட்டங்களை நிறைவேற்றவெண்டும். எங்கெல்லாம் புதிய நீர்த் தேக்கங்களைக் கட்ட முடியுமோ அங்கெல்லாம் அவைகளைக் கட்டவேண்டும். அரசாங்கத்தின் கவனத்தில் இருப்பதாகச் சொல்லப்படும் நீர்த்தேக்கத் திட்டங்களையெல்லாம் உடனடியாக அமலுக்குக் கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். நான் சங்கரன்கோவில் பகுதிக்குச் சென்றிருந்தேன். பதினொரு வருஷங்களாக அங்கே மழை பெய்யவில்லை என்பதை அறிந்தேன். அதன் காரணமாக அங்கே ஒரு புல்கூட இல்லாதிருந்ததைப் பார்த்தேன். அந்தப் பகுதியில்கூட நியாய விலைக் கடை இல்லை என்று சொன்னார்கள். கீரியாறு திட்டம், ஆரணியாறு திட்டம் முதலிய திட்டங்களையெல்லாம் உடனடியாக அமுலுக்குக் கொண்டுவருவதற்கு அரசாங்கம் முயற்சிக்கவேண்டும். இப்போது புதிதாக ஆந்திராவுடன் செங்கற்பட்டின் ஒரு பகுதி சேர்க்கப்பட்டது. ஆகவே ஆரணியாறும் நம்மை விட்டுப் போய்விடுமோ என்ற பயம் இருக்கிறது. ஆரணியாற்றுத் திட்டத்தை நாம் மீண்டும் பெறுவதற்கு, கனம் மந்திரி அவர்கள் எந்த விதமான தியாகத்தையும் செய்து நடவடிக்கை எடுப்பார்கள் என்று நம்புகிறேன். (குறுக்கிடு) ஆரணியாறு நம்மை விட்டுப் போகாது என்று கனம் மந்திரி அவர்கள் சொல்கிறார்கள். அப்படியானால் ரொம்ப சந்தோஷம். மேலும் எங்கள் விருத்தாசலம் பகுதியில் ஊற்றுக் கிணறுகள் தோண்டுவதற்கு வசதி இருக்கிறது. அவைகளை அதிகமாகத் தோண்டுவதற்கு சர்க்கார் நடவடிக்கை எடுக்கவேண்டும். மேலும் ' ரிவர் பம்பிங் ஸ்கீம் ' ஐக் கொண்டுவருவதற்கு சில இடங்களில் முயற்சி செய்துவருகிறார்கள். அவைகளையும் அதிகமான இடங்களில் நிறைவேற்றுவதற்கு அரசாங்கம் முயற்சிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பெரிய நீர்த்தேக்கங்களைக் கட்டுவதற்கான பிரமாண்டமான நதிகள் தமிழ்நாட்டில் இல்லாவிட்டாலும், சிறு சிறு நீர்ப்பாசனத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கான வசதிகள் குறித்து தாலுகா வாரியாகப் புள்ளி விவரங்கள் சேகரித்து, சிறு சிறு நீர்த் தேக்கத் திட்டங்களை பல

[Sri A. Govindasamy] [7th November 1957

இடங்களிலும் நிறைவேற்றுவதற்கு அரசாங்கம் முயற்சிக்கவேண்டும். சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களை நிறைவேற்றுவதில் அதிகக் காலதாமதம் ஏற்படுகிறது. என் பகுதியில் வெட்டுக்காடு என்ற கிராமம் இருக்கிறது. அங்கே ஒரு வாய்க்கால் கட்டித்தர வேண்டுமென்று கோரப்பட்டது. அதை நிறைவேற்றுவதற்கு ரூ. 3,000 செலவாகும் என்று சொல்லப்பட்டது. இந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று கனம் மந்திரி அவர்களிடத்திலும் அங்கேயுள்ள எஞ்ஜினியரிடத்திலும் சொல்லப்பட்டது. 1953-ம் வருஷம் அந்த கோரிக்கையை சர்க்கார் ஏற்றுக்கொண்டார்கள்: ஆனால் இன்று வரையிலும் அது சம்பந்தமாக எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. நீர்ப்பாசனத் திட்டங்களை நிறைவேற்றுவதில் பல சிக்கல்கள் இருப்பதாகச் சொல்லப்பட்டது. அந்த சிக்கல்களைத் தீர்த்து நல்ல நீர்ப்பாசனத் திட்டங்களை நிறைவேற்றினால் விவசாய உற்பத்தி பெருகும்.

நிலம் உழுபவனுக்கே சொந்தம் என்ற கொள்கையை அமுலுக்குக் கொண்டுவருவதற்குத் தயாராக இருப்பதாக அரசாங்கத்தார் சொல்லிக் கொண்டிருக்கிறார்களே தவிர, அதற்கான நடவடிக்கையை எடுக்கவில்லை. ஆகவே உடனடியாக நில உடைமைக்கு வரம்பு கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அரசாங்கத்தாரைக் கேட்டுக்கொள்கிறேன். நிலச் சீர்திருத்தச் சட்டம் வருகிறது, வருகிறது என்று அரசாங்கம் சொல்லி வந்தது மிராசுதார்களுக்கு எச்சரிக்கையாக இருந்தது. ஆகவே மிராசுதார்கள் இப்போது முன் எச்சரிக்கையுடன் இருக்கிறார்கள். நிலச் சீர்திருத்தச் சட்டத்தைப் படிப்படியாகக் கொண்டுவரப்போவதாக சர்க்கார் சொல்கிறார்கள். அதை என் ஒரேயடியாக சீக்கிரம் கொண்டுவரக் கூடாது என்று நாங்கள் கேட்கிறோம்.

நிலமில்லாத ஏழை ஆதித்திராவிடர்களுக்கும் பின்தங்கிய வகுப்பினர்களுக்கும் புறம்போக்கு நிலங்களை ஜாரி செய்து கொடுப்பதற்கு அரசாங்கம் துரிதமான நடவடிக்கையை எடுக்கவேண்டும். சேலம் மாவட்டத்தில் ஆத்தூர் பகுதியில் புறம்போக்கு நிலங்களை நிலமில்லாத ஏழைகளுக்கு வழங்கியதுபோல், எல்லா மாவட்டங்களிலுமுள்ள புறம்போக்கு நிலங்களை அந்த அந்த பகுதியிலுள்ள ஏழை விவசாயிகளுக்கு வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

மேலும், கனம் உணவு மந்திரி அவர்களிடமே மத சம்பந்தமான இலாகாவும் இருப்பதால் இன்னொரு யோசனையையும் சொல்ல விரும்புகிறேன். ஆண்டவன் பேரிலும் மடாலயங்கள் பேரிலும் ஆயிரக்கணக்கான நிலங்கள் இருக்கின்றன. ஆண்டவனுக்கு அவ்வளவு நிலம் தேவையில்லை. அவர் ஒரு பருக்கை அரிசி கூடச் சாப்பிடாத நிலையில் அவர் பொங்கல் சாப்பிட்டதாகவும் சுண்டல் சாப்பிட்டதாகவும் கணக்கு எழுதுகிறார்கள். கோவில்களின் பேரிலும் மடாலயங்களின் பேரிலும் உள்ள நிலங்களை ஏழை ஆதித்திராவிட மக்களுக்கும் உழைக்கும் ஏழை விவசாயிகளுக்கும் கொடுத்து, அந்தக் காரியத்தை ஆண்டவன் திருப்பணியாகக் கருதவேண்டும். இந்தக் காரியத்தைச் செய்தால், உணவு தானிய உற்பத்தி பெருகும்; உணவு தானியப் பற்றாக்குறை தீரும். இந்தக் காரியத்தை செய்வதற்கு கனம் மந்திரி அவர்கள் முயற்சிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய வார்த்தையை முடித்துக்கொள்கிறேன்.

**Sri G. GOMATHISANKARA DIKSHITHAR:** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த தீர்மானத்தின் மீது பல கனம் அங்கத்தினர்கள் பேசினார்கள். உணவு தானியங்கள் விஷயத்தில் பற்றாக்குறையாக இருக்கும் நம் ராஜ்யத்தில் பற்றாக்குறையை நீக்குவதற்கு நமது அரசாங்கம் பல காரியங்களைச் செய்திருப்பதை கனம் அங்கத்தினர்கள் நன்றாக அறிவார்கள். முக்கியமாக, முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் உணவுப் பொருள்கள் விஷயத்தில் சுயதேவையைப் பூர்த்தி செய்யக்கூடிய அளவிற்கு உணவுப் பொருள்கள் உற்பத்தியை அதிகமாக்குவதற்காக நமது சென்னை அரசாங்கம் பல லட்சக்கணக்கான ரூபாய்களைச் செலவழித்திருப்பதை நாம் நன்றாக அறிவோம். பல அணைக்கட்டுத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. நீர்ப்பாசன வசதிகள் எல்லாம் செம்மையாக்கப்பட்டிருக்கின்றன. மேலும் விவசாயிகள் அவர்கள் உழைக்கும் அளவிற்குத் தகுந்த பயனை



7th November 1957] [Sri G. Gomathisankara Dikshithar]

அடைய வேண்டுமென்பதற்காக விவசாய சம்பந்தமான சட்டங்களை காங்கிரஸ் அரசாங்கம் இயற்றியிருப்பதை நாம் மறந்துவிடமாட்டோம். நமது அரசாங்கம் விவசாயிகள் பாதுகாப்புச் சட்டத்தையும் நியாய வாரச் சட்டத்தையும் இயற்றியதுடன், விவசாயிகளுக்கு மிகவும் நன்மை பயக்கக்கூடிய வேறு பல சட்டங்களையும் இயற்றுவதற்குத் திட்டமிட்டிருக்கிறார்கள். உணவுப்பொருள் உற்பத்தியை பெருக்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை நமது அரசாங்கம் எடுத்திருந்தபோதிலும் என் நம் ராஜ்யத்தில் உணவுப் பொருள் பற்றாக்குறை இருக்கிறது என்பதை, ஏற்கெனவே கனம் அங்கத்தினர்கள் கூறியதுபோல், கட்சி மனப்பான்மை இல்லாமல் ஆர அமர யோசித்துப்பார்த்தால், பற்றாக்குறையை நீக்குவதற்கு எந்த முறையில் முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும் என்பதை அறிந்தே தீருவோம்.

அடுத்தபடியாக இந்த நியாய வார மசோதாவை எடுத்துக்கொள்வோம். விவசாயிகள் இந்த நியாய வார மசோதாவின் பயனைப்பெற கடமைப்பட்டிருக்கிறார்கள். விவசாய சங்கங்கள், அதாவது கட்சியின் சார்பில் வேலை செய்யக்கூடிய விவசாய சங்கங்கள் நியாய வார மசோதாவை விவசாயிகள் ஏற்றுக்கொள்வதற்கு இடம் கொடுக்காமல் சங்கத்தின் பேரால் விளைச்சலில் கால் கோட்டை அல்லது அரைக்கால் கோட்டை கொடுங்கள் என்று கேட்டு வருகிறார்கள். 60—40 சட்டம் அவர்களுக்கு பயன்படாத முறையில் அவர்கள் இப்படித் தள்ளிக்கொடுங்கள் என்று கேட்டு வருகிறார்கள். இப்படி பிரசாரம் செய்து வந்தால் விவசாயிகள் எப்படி விவசாயத்தில் கவனம் செலுத்தி விவசாயத்தின் மூலம் உணவு உற்பத்தியை பெருக்குவார்கள் என்பதையும் தெரிந்து கொள்ளவேண்டும். விவசாயிகள் விவசாயத்தை நேரடியாக கவனிப்பதற்கு அவர்களுக்கு எல்லா விதமான வசதிகளையும் செய்து கொடுத்திருக்கிறோம். அந்த வசதிகளை அவர்கள் பெறுவதற்கும் அதைப் பெற்று பயனடைவதற்கும் நாம் சேவை செய்ய வேண்டும் என்பதை இந்த சந்தர்ப்பத்தில் நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன். அவர்களுக்கு நாம் இப்பொழுது போதிய அளவு உரம் கொடுக்கிறோம், மாடுகள் வாங்குவதற்கு பணம் கொடுக்கிறோம். ஆனால் அவைகள் எல்லாம் நேரடியாக விவசாயிகளுக்குப் போய்ச் சேறுவது இல்லை. அதில் குறைகள் இருக்கின்றன. அந்தக் குறைகளை நிவர்த்திப்பதற்கு நாம் முயற்சிக்கவேண்டும்.

நியாய வார மசோதாவினுடைய பெரும் பயனை விவசாயிகள் பெற வேண்டுமானால் அவர்கள் விவசாயத்தில் கண்ணும் கருத்துமாக இருந்து உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டும் என்பதையும் அவர்களை சட்டத்தின் பெயரால் விவகாரங்களிலும் வியாஜ்ஜியங்களிலும் இழுக்கப்படுவதை தவிர்ப்பதற்கு அரசாங்கமும் அரசியல் கட்சியாரும் முன் வரவேண்டும் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன். உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு நாம் எவ்வளவோ வசதிகளைச் செய்து கொடுத்திருக்கிறோம், சமாதான சூழ்நிலையில் விவசாயத்தில் ஈடுபடவேண்டும் என்றும் நில வெளியேற்றத்தைத் தடுத்தும், ஜப்பான் முறையைக் கற்றுக்கொடுத்தும் வந்திருக்கிறோம். அவைகளைச் செய்து கொடுத்தும் அவர்கள் அதிகமாக உற்பத்தி செய்து அதன் பலனை நல்ல முறையில் பெற்று மகிழ்வதற்கு நாம் ஆவன செய்யக் கடமைப்பட்டிருக்கிறோம்.

எங்கள் ஜில்லா சம்பந்தப்பட்ட மட்டில் கழிந்த காரில் மழையின்மையால் ஏற்கெனவே உற்பத்தி செய்யக்கூடிய இரண்டு தாலூகாக்கள் உள்பட மிகவும் கஷ்டம் அடைந்துவிட்டன. தாமரபரணி பாசனத்திலுள்ள பல விவசாயிகள் கஷ்டப்படக்கூடிய நிலைமை ஏற்பட்டது. அப்பொழுது நமது மின்சார மந்திரி அவர்களுடைய கருணையால் கொஞ்சம் பாசனம் கிடைத்து கஷ்டப்பட்ட விவசாயிகள் ஒரு முறையில் விவசாயம் செய்வதற்கு உதவியாக இருந்தது. அதற்கு இந்த சந்தர்ப்பத்தில் அரசாங்கத்திற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். அதே சமயத்தில் இன்னொன்றையும் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

நீர்ப்பாசன அதிகாரிகள் காலாகாலத்தில் அங்கங்கே கவனம் செலுத்தி தண்ணீர் வசதி விவசாயிகளுக்குக் கிடைக்கும் அளவில் மிக ஜாக்ருதையுடனே அவரவர்கள் தங்களுடைய கடமையைச் செய்ய முன் வரவேண்டும்.

[Sri G. Gomathisankara Dikshithar] [7th November 1957

இதை நம் அரசாங்கம் கவனிக்க வேண்டும் என்பதையும் இந்த சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்ளுகிறேன். தண்ணீர் இல்லாத காலங்களில் தண்ணீரை ஒழுங்குப்படுத்தி விவசாயத்திற்கு விடவேண்டும். அதற்கு இஞ்சினியரிங் இலாகா தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும். மேலே இருக்கும் பயிர்களுக்கும் நீர்பாசனம் இல்லாமல் பயிர்கள் வாடக்கூடிய நிலைமை ஏற்படும். அதைப்போலவே கீழே இருக்கக்கூடிய பயிர்களும் தண்ணீர் இல்லாமல் வாடக்கூடிய நிலைமை ஏற்படலாம். ஆகவே காலாகாலங்களில் யாவருக்கும் தண்ணீர் தட்டு இல்லாமல் தண்ணீர் விடுவதை ஒழுங்குபடுத்தி, தண்ணீரைக்கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஆகவே நீர்பாசனத்தில் ஒழுங்கீன முறை இருக்கக் கூடாது. ஆகவே இதிலும் கண்ணும் கருத்துமாக இருக்கவேண்டும் என்று கேட்டுக்கொளுகிறேன். அப்படி இருந்தால்தான் உணவு உற்பத்திக்கு வசதி செய்தவர்களாக. ஆவோம் என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

மதிப்பிற்குரிய நண்பர் பழநிசாமி அவர்கள், பெரிய அணைக்கட்டு திட்டங்களுக்கு அதிகப்படியாக பணத்தை செலவு செய்யாமல் நியாய விலைக் கடைகளை அமைக்க வேண்டும் என்று சொன்னார். அணைக்கட்டு திட்டங்களை நிறைவேற்றாமல் போனால் எப்படி விவசாயம் பெருகும்? எப்படி நம்முடைய உணவு பற்றாக்குறையைப் போக்கிக்கொள்ள முடியும்? சமீபத்தில் திருநெல்வேலி ஜில்லாவில் தண்ணீர் இல்லாத காரணத்தால் 20 ஆயிரம் ஏக்கர் நிலம் காரில் தீய்ந்து போய் விட்டது. கடனா நதி அணைக்கட்டு திட்டம் ஒன்று முன்பு ஆராய்ச்சி செய்யப்பட்டது. அதை 85 லட்சம் ரூபாய் செலவில் கட்டலாம் என்று தீர்மானம் செய்யப்பட்டது. அதை உடனடியாக எடுத்து முடிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அந்த அணைக்கட்டு திட்டம் வெற்றி பெற்றால் அந்த கடனா நதி பாசனத்தின் மூலமாக சுமார் 40 ஆயிரம் ஏக்கர் நிலம் பாசனத்திற்கு வரும். அதன் மூலம் உணவை அதிகம் உற்பத்தி செய்யலாம் என்பதை அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அதே மாதிரி சிவசைலம் முதலிய கடனாநதி பாசனத்தில் இருக்கக்கூடிய இடங்களும் விவசாயத்திற்குக் கொண்டுவரலாம். மீசத்தில் அங்குள்ள பயிர்களுக்கு தண்ணீர் இல்லாமல் கதிர்கள் வாடுவதைக் கண்டு அங்குள்ளவர்கள் கண்ணீர் விட்டது ஒரு கதையாக இருக்கும். அதை நான் நேரில் பார்த்தேன் என்பதையும் அரசாங்கத்திற்கு தெரிவித்துக்கொள்ளுகிறேன். அம்மாதிரி இருக்கக்கூடிய நிலையில் சிறு சிறு அணைக்கட்டுகளை ஜரூராக எடுத்து நடத்தினால் நல்ல பலனை அடையலாம். இவைகளை முதன் முதலாக அரசாங்கம் கவனத்தில் எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொளுகிறேன்.

விவசாயிகள் நேரடியாக நிலங்களில் விவசாயம் செய்து அதன் பயனைப் பெருவதற்கு பதிலாக நியாய வாரச் சட்டத்தின் நிழலில் இருந்து கொண்டு, அவர்களுக்கு சொந்தமான நிலம் இருந்தால் அதையும் வைத்துக்கொண்டு நியாய வார சட்டத்தில் வரக்கூடிய நிலங்களையும் வைத்துக்கொண்டு அதன் பயனை அடைந்து வருகிறார்கள். அப்படி இல்லாதபடி நிலம் இல்லாத விவசாயக் கூலிகளுக்கு அதன் பலனை அடைந்து விவசாயம் செய்வதற்கு உதவ முன் வரவேண்டும் அதற்கு வேண்டிய திருத்தத்தையும் செய்யவேண்டும். அதாவது நிலம் இல்லாத விவசாயிகள் நிலம் பெருவதற்கு வேண்டிய திருத்தத்தைக் கொண்டுவரவேண்டும், நியாயவார சட்டத்தில். அத்துடன் இந்த விவசாயிகளைப்போலவே கஷ்டப்படுகிற துன்பப்படுகிற சிறு நிலச்சுவாந்தார்களும் இருக்கிறார்கள். சிறிய அளவில் நிலம் வைத்திக்கிறவர்கள் படுகிற கஷ்டம் எவ்வளவோ இருக்கிறது. விவசாயிகளைப்போலவே சிறு நிலச்சுவாந்தார்களும் ஒவ்வொரு ஊரிலும் இருக்கிறார்கள். சிறு நிலச்சுவாந்தார்களையும் முன்னுக்குக் கொண்டுவரவேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும். எவ்வளவோ சிறு நிலச்சுவாந்தார்கள் சிறிய அளவில் நிலத்தை வைத்துக்கொண்டு தங்களுடைய வாழ்க்கையை நடத்திக் கொண்டு வருகிறார்கள். அம்மாதிரி ஆயிரக்கணக்கான லட்சக்கணக்கான நிலச் சுவாந்தார்கள் இருக்கிறார்கள். அவர்களுடைய நிலைமை ரொம்பவும்



7th November 1957] [Sri G. Gomathisankara Dikshithar]

மோசமாகப் போகக்கூடிய அளவில் அரசாங்கம் விட்டுவிடக்கூடாது. விவசாயிகளை நிலத்தை விட்டு அப்புறப்படுத்தக்கூடாது என்றும் நியாய வாரம் கொடுக்கப்படவேண்டும் என்றும் சட்டம் செய்ததுபோல் சிறு நிலச்சுவாந்தார்களும் நன்மைபெறக்கூடிய அளவில் நியாய வாரச் சட்டத்திற்குத் திருத்தம் கொண்டுவரவேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளுகிறேன். அதைப்போலவே இன்னும் உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு ஜரூராக கண்ணும் கருத்துமாக இருந்து வேலைசெய்ய வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளுகிறேன். அந்த சூழ்நிலையை நாம் விவசாயிகளிடத்தில் பரப்புவதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும். இதில் கட்சிக் கொள்கை, வித்யாசம் இல்லாமல் இருக்கவேண்டும் என்று என்னுடைய நண்பர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். ஏனென்று கேட்டால் நம்முடைய சென்னை ராஜ்யத்திலே உணவு விலை ஏறிக்கொண்டுதான் வருகிறது. விவசாயி, தான் செலவுசெய்து உற்பத்தி ஆக்குகின்ற தான்யத்திற்குப் போதுமான விலை இன்னும் கிடைக்கவில்லை என்று கருதுகிறான். அவ்வளவு செலவழிக்கிறான். இப்பொழுது இருக்கிற சூழ்நிலையிலே நமக்கு அதிகமாக விலை ஏறிக்கொண்டு வருகிறது என்பதை நாம் எண்ணியபோதிலும், நெல் விலை ஏற்றத்திற்கு விவசாயிகளைத் தவிர மற்ற காரணங்களும் இருக்கின்றன என்பதை நாம் உணர்ந்துகொண்டோமானால் அத்தகைய முறையிலே விலை ஏறாமல் தடுப்பதற்கு நம் அரசாங்கம் நடவடிக்கையெடுக்க முன்வரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

ஏற்கெனவே, நம்முடைய தமிழ் நாட்டுக்கு வேண்டிய உணவை நமது அரசாங்கம் ஜரூராக மத்திய அரசாங்கத்திடமிருந்து பெற்று நியாய விலைக் கடைகளை மறுபடியும் நிறுவுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அவர்கள் எடுத்துக்கொண்டுதான் இருக்கிறார்கள். அம்பாசமுத்திரம் தாலூகாவிலும் முக்கியமாக தொழிலாளர்கள் மில் தொழிலாளர்களும், கைத்தறி நெசவாளர்களும், விவசாயத்தில் சம்பந்தம் இல்லாத தொழிலாளர்கள் அந்தத் தொகுதியிலும் ஒவ்வொரு பஞ்சாயத்து ஏரியாக்களிலும் இருக்கிறார்கள். இதைக் கவனித்து அந்தத் தொழிலாளர்கள் நெசவாளர்கள் உணவுத் தானியம் பெறுவதற்கு நியாய விலைக் கடைகள் அரசாங்கம் ஏற்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொண்டு, உணவு உற்பத்தியை பெறுக்குவதற்கு நமது அரசாங்கம் எடுத்துக்கொண்டு வருகின்ற எல்லா நடவடிக்கைகளிலும் நாம் ஒத்துழைத்து, நமது சென்னை ராஜ்யத்தில் இருக்கும் பற்றாக்குறையைப் போக்கி, சுயதேவைப் பூர்த்தி அடையக் கூடிய நிலைமையை ஏற்படுத்துவதற்கு நாம் ஆவன செய்வது கடமையாகும் என்று சொல்லிக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

**Sri K. GOPALA GOUNDER** : கனம் சபாநாயகர் அவர்களே, 11-32
இந்தத் தீர்மானத்தைப்பற்றி நான் சில விஷயங்கள் சொல்ல விரும்புகிறேன். தென்னாற்காடு ஜில்லாவிலே பெரும் பகுதி புஞ்சை தானியம் விளையக்கூடிய பகுதியாகத்தான் இருக்கும். நஞ்சை சாகுபடி செய்யக் கூடிய பகுதிகள் கொஞ்சம். இவ்வாண்டிலே பருவ மழை தவறியதால், எங்கள் ஜில்லாவிலே புஞ்சை தானியங்கள் விளைவு நஷ்டமாகிவிட்டது. அதுமட்டுமல்லாமல் நஞ்சை சாகுபடிக்கு, நாற்றுக்கள் சில இடங்களிலே சாவியாகப் போய்விட்டன. a.m.

தற்சமயம் எங்கள் ஜில்லாவில் திறக்கப்பட்ட நிவாரணக் கடைகளில் பாதி மூடப்பட்டுவிட்டதாகத் தெரிகிறது. அப்படி மூடிய கடைகளையெல்லாம் மறுபடியும் திறக்கவேண்டும். எங்கெங்கே நிவாரணக் கடைகள் வேண்டுமென்று கோரப்படுகிறதோ அங்கெல்லாம் திறக்கப்பட வேண்டுமென்று நான் சர்க்காரைக் கேட்டுக்கொள்ளுகிறேன். எங்கள், தாலூகாவிலே நான்கு நிவாரணக் கடைகள் தான் திறக்கப்பட்டன. ஆனால், இப்பொழுது அவைகளில் இரண்டு மூடப்பட்டுவிட்டதாகத் தெரிகிறது. இன்னும் 10 இடங்களிலாவது கடைகள் திறக்கப்படவேண்டும். எங்கள் தாலூகாவில் நேற்றுவரை மழை இல்லையென்று தபால் வந்தது. நிவாரணக் கடைகள் அங்கே திறக்கப்படவேண்டுமென்று நான் திரும்பவும் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

[Sri K. Gopala Gounder] [7th November 1957

எங்கள் தாலூகாவில், செஞ்சி அருகே வராக நதியின் குறுக்கே
கட்டப்பட்ட ஒரு அணையை விஸ்தரித்து கட்டுவதென்று 1949-ல் ஒரு
திட்டம் வகுக்கப்பட்டு, அதில் நம்முடைய கவர்ன்மென்டார் ஆயிரக்
கணக்கான ரூபாயை செலவு செய்தார்கள். அந்தத் திட்டம் என்ன
ஆயிற்று என்று இதுவரை தெரியவில்லை. அந்தத் திட்டத்தை மீண்டும்
எடுத்துக்கொண்டால் எங்கள் தாலூகாவிலே சுமார் 2,000 ஏக்கரா
நிலங்கள் நல்ல முறையில் பாசனத்திற்கு வந்து, நஞ்சை சாகுபடி
அதிகரிக்கும். திண்டிவனம் தாலூகாவிலும் ஆயிரம் ஏக்கரா
நஞ்சை நிலங்களுக்குப் பாசன வசதி ஏற்படும். ஆகையால், அந்தத்
திட்டத்தை சர்க்கார் உடனடியாக எடுத்துக்கொள்ள வேண்டுமென்று
நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

தற்போது மழையில்லாத காரணத்தால், எங்கள் தாலூகாவில் சில
முக்கியமான இடங்களில் எல்லாம் மின்சாரம் தேவை என்றும் விண்ணப்பம்
கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்தத் கிராமங்களிலெல்லாம் மின்சாரம்
கூடிய சீக்கிரம் விஸ்தரிக்கப்படவேண்டுமென்றும், அப்படி விஸ்தரிக்கும்
போது வேலை துரிதமாகப் பூர்த்தி செய்யப்படவேண்டுமென்றும் சர்க்காரைக்
கேட்டுக்கொண்டு என்னுடைய சிற்றுரையை இத்துடன் முடித்துக்கொள்ளு
கிறேன்.

11-35 a.m. **Sri K. ANBAZHAGAN:** அவைத் தலைவர் அவர்களே, இன்று இந்த
நாட்டிலே ஏற்பட்டுள்ள உணவுப் பற்றுக்குறை நிலைமையை அடிப்படை
யாக வைத்து, எதிர்க் கட்சிகளிலே ஒரு கட்சியைச் சார்ந்த நண்பர் அவர்
கள் இந்த தீர்மானத்தைக் கொண்டுவந்திருக்கிறார்கள். உணவுப் பற்
றுக்குறை ஏற்பட்டிருக்கிற தென்பதை இந்த நாட்டை ஆளுகிற அரசாங்
கத்தைச் சார்ந்தவர்கள் பல தடவை ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். அந்தப்
பற்றுக்குறைக்கான காரணங்களையும் பல்வேறு வகையாக எடுத்துச்சொன்ன
போதிலும், இதுவரை பற்றுக்குறை நீக்கம் செம்மையாக நிறைவேற்றப்
படாத காரணத்தால், இந்த நாட்டு அரசாங்கம் தன்னுடைய கடமையைச்
செம்மையாக நிறைவேற்றுவதற்கு வழிவகை காணாத காரணத்தால்,
இன்றையதினம் பொது மக்கள் மிகுதியாக பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

உணவு சரியான விலையில் கிடைக்காத காரணத்தால், ஏழை மக்கள்
பாதிக்கப்படுவது ஒரு புறம்; உணவுக்கு சரியான விலை கிடைக்காத கார
ணத்தால், உணவைத் தயாரித்தவர்கள், அப்படிப்பட்ட உழவர்களாக
இருக்கும் மக்களே துன்பப்படுவது மற்றொரு புறம். இந்த நிலைமைக்குக்
காரணம் ஒரு நல்ல தராசை சரியான முறையில் தூக்கும்போது தான்,
இரண்டு தட்டுகளின் வேற்றுமையும் தெரிந்து, இந்தப் பக்கம் தாழ்கிறது,
அந்தப் பக்கம் உயருகிறது என்று கண்டு, 'சரிசெய்து கொள்ள முடியும்
சரியாகத் தூக்கும் போது. தவறான வகையில் தூக்கினால் உண்மை நிலைமை
பாதிக்கப்படுவதுபோல, இன்றையதினம் அரசாங்கத்திற்கு மிகச்சாதாரண
உழவர்களிடமிருக்கும் அக்கரையைவிட, மிராசுதார்களிடத்தில் அதிக
அக்கரையும், அதே போல் வியாபாரிகளாக உள்ளவர்களிடையில் செய்கிற
காரியங்களைப் பற்றி, அவர்களால் ஏற்படும் தீமையைப்பற்றி கவனிக்காத
மனப்பான்மையும் இருக்கின்ற காரணத்தால், அவர்கள் கையிலே உள்ள
தராசு சரியாக பிடிக்கப்படாத நிலையில், குற்றம் எங்கே இருக்கிறது
என்றி தெரியாமல், அதனால் ஏற்படும் விளைவு இன்றுள்ள சூழ்நிலை.

உண்மையாகவே உணவுப் பற்றுக்குறை என்று சொன்னால், உணவு
கிடைக்கும் இடங்களையெல்லாம் அரசாங்கம் தங்களுடைய கட்டுப்பாட்டுக்கு
உட்பட்டதாக ஆக்கிக் கொண்டால், உணவு தேவைப்படும் இடங்களில்
அளிக்க முடியும். இன்றையதினம் இருக்கும் அரசாங்கம் வியாபாரிகளு
டைய உரிமையை இதே முறையில் வைத்திருக்கவேண்டும் என்ற காரணத்
தால், பயிரிடுகிறவர்களிடம் நேரடியாகக் கொள்முதல் செய்வதற்குத் திட்டம்
இல்லாத காரணத்தால், அந்தக் கொள்முதல் யார் யார் எவ்வளவு உற்
பத்தி செய்கிறார்களோ அந்த அளவுக்கு ஏற்ற விகிதமாக அமைக்கப்படாத
காரணத்தால், உணவுப் பற்றுக்குறை சிற்சில வட்டாரத்தில் மிகுதியாகவும்,
சிற்சில வட்டாரத்தில் குறைவாகவும், அதனால் விலையிலே பல தடுமாற்றம்
ஏற்படுகிற நிலைமை ஏற்படலாம் என்று உண்மையாகவே நான் குறிப்பிட
விரும்புகிறேன்.



7th November 1957] [Sri K. Anbazhagan]

வட்டார அமைப்பு (சோனல் சிஸ்டம்) உணவுப் பற்றுக்குறையைக்
குறைப்பதற்குப் பயன்படும் என்று எதிர்பார்த்த நேரத்தில், தமிழ் நாட்டைப்
பொறுத்தவரையில் அது வேறு விதமாக ஆக்கிவிட்டதோ என்று சந்
தேகிக்க வேண்டியிருக்கிறது. ஆந்திரா வியாபாரிகள், ஆந்திராவிலிருந்து
தஞ்சை ஜில்லாவுக்கு வருகிறார்கள். கேரளத்திலிருந்தும் வியாபாரிகள் வந்
தார்கள். பல லட்சக்கணக்கான டன் என்று நான் சொல்கிற அளவு
வேண்டுமானால் சற்று வித்தியாசம் இருக்கலாம் - ஆனால், குறிப்பிடத்தக்க
அளவு நெல் அல்லது அரிசி பிற மாகாணங்களுக்குச் செல்கிறது என்றும்
அறிகின்றோம். வட்டார எல்லை அமைத்தது, எந்த ஒரு வட்டாரத்
திற்கும் அந்த வட்டாரத்திலுள்ள பகுதியில் உணவு போதுமான அளவு
உற்பத்தி செய்யப்படாவிட்டால், வேறு வட்டாரங்கள் உதவி செய்வதற்கு
வழி இருக்கவேண்டுமே தவிர, போதுமான அளவு உணவு உற்பத்தி
செய்யப்படாத வரையில் விலைக்கிக் கொடுப்பதற்கு வாய்ப்பு இருக்குமானால்
யார் வேண்டுமானால் வாங்கிக் கொண்டு போகலாம் என்று இருக்கக்
கூடாது. உதவி செய்தவற்கு சோனல் ஸிஸ்டம் பயன்பட வேண்டுமே
தவிர, இடையூறு விளைவிப்பதற்குப் பயன்படக்கூடாது. தமிழ் நாட்டைப்
பொறுத்தவரையில், போதுமான உணவை உற்பத்தி செய்ய முடியாத
நிலைமை இருக்கிற வரையில், தமிழ் நாட்டில் உற்பத்தியாகும் எந்த
உணவுப் பொருளையும், அரசாங்கம் "இது சரியான அளவு உற்பத்தி,
இனி வெளியேற்றப்படலாம்" என்று தீர்மானித்தாலொழிய, வெளியேறு
வதற்கு இடம் இருக்கக் கூடாது. அதே போல, வட்டார அமைப்பிலே,
வட்டாரத்திற்குள்ள ஒரு பகுதியில் (சர்ப்ளஸ் ப்ரொடக்ஷன்) தேவைக்கு
மேற்பட்டு உற்பத்தி செய்யப்படுமானால், அந்தத் தேவைக்கு மேற்பட்டு
உற்பத்தி செய்கின்ற உணவுப் பொருளும், அதோடு இணைத்திருக்கிற
வட்டாரப் பகுதி முழுவதற்கும் நிறைவேற்றியதற்குப் பின்னால், தான்,
அதைவிட்டு வெளியேறக் கூடிய நிலைமை இருக்கவேண்டும். இந்த அர
சாங்கத்தின் திறமைக் குறைவினாலோ, திட்டம் இல்லாத காரணத்தா
லோ, தமிழ் நாட்டிலிருந்து நெல் - உணவுப் பொருள், இன்றியமையாத
உணவுத் தேவையானது, கேரள நாட்டுக்கு ஏற்றுமதியாகிவிடுகிறது, அங்
கேயிருந்து வெளியே போகிறது என்று குறையும் இருக்கிறது. அங்கே
யிருந்து வெளியே போகும்போது சோனல் சிஸ்டம் என்று அமைக்கப்
படும் வட்டாரத்தைவிட்டு வெளியேறுகிறது என்ற நிலைமை ஏற்பட்டால்
தமிழ் நாட்டில் உணவுத் தான்யங்களை நம்முடைய திறமையின்மையாலோ
அல்லது வேறு காரணத்தாலோ இழந்துவிடுகிறோம்.

அடுத்து நான் சொல்ல விரும்புவது, கள்ளக்கடத்தல் இந்த வட்டாரத்
தில் ஒருபுறம் இருக்க, உணவு விலை ஏறினால் இடையே உள்ள வியாபாரி
கள் அதிக லாபம் தேடலாம் என்ற காரணத்தினால், மிகப்பெரிய மிராசு
தார்களும், மிகப் பெரிய வியாபாரிகளும் உணவுப் பதுக்கல் செய்கிறார்கள்.
அப்படிப் பதுக்குவதைத் தண்டிப்பதற்கு அரசாங்கம் சட்டத்தைக் கையில்
வைத்துக்கொண்டிருக்கிறதே தவிர, பதுக்கலை கண்டுபிடித்து அங்கிருந்து
கொண்டு நடவடிக்கை எடுப்பதற்கு அரசாங்கத்தினிடம் கருவி இல்லை.
பதுக்கல் செய்கின்ற நினைப்பு ஏற்படாதபடியும், பதுக்கல் ஏற்படுதலை
கண்டுபிடிப்பதற்கே அவசியம் ஏற்படாதபடியும், உற்பத்தி செய்கின்ற
அளவிலே, இந்த அளவு நிலத்திற்கு இன்ன உற்பத்தி கிடைக்குமானால்,
அதில் 50 சதவிகிதம், 75 சதவிகிதம் அரசாங்கத்தினிடம் ஒப்படைக்க
வேண்டும் என்ற நிர்ணயம் உண்டாக்கப்படவேண்டும். இப்பொழுதே
உண்டாக்கலாம். ஏனென்று கேட்டால், மிகப் பெரிய முதலாளிகள் ஏராள
மான உணவுப் பொருள்களை வாங்கிப் பதுக்கும் முயற்சியில் ஈடுபடுகிறார்கள்,
அதுபோலவே மிக அதிகமாக உற்பத்தி செய்யும் பெரிய மிராசுதார்கள்
அதற்கு நல்ல விலை கிடைக்கின்றபோது விற்றுக் கொள்ளலாம் என்று
பதுக்கிவைக்கும் அவசியத்திற்கு ஆளாகிறார்கள். இந்த நிலம் அளவுக்கு
மேற்பட்ட நிலச் சொந்தக்காரர்கள் இந்த அளவு நெல் விளை, முக்கியமான
உணவுப் பொருள்களை அரசாங்கத்தினிடம் ஒப்படைக்கவேண்டுமென்ற
ஒரு ஏற்பாட்டைக் கொண்டுவரலாம்.

அடுத்து நான் சொல்லுவேன். இப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டதற்குக்
காரணம், இந்த நாட்டில் நில அளவானது ஒரு முறையாக இல்லை..
அதாவது உடமை உச்ச வரம்பு ஏற்படாததன் காரணத்தினால்

[Sri K. Anbazhagan] [7th November 1957

சில பெரியவர்களும் செல்வந்தர்களும் ஏராளமான நிலத்துக்குச் சொந்தக்காரர்கள். ஆகவே, அவர்கள் இந்த ஆண்டிலே வரவேண்டிய லாபத்தைப் பெருக்குவதற்கு எப்படி வழி என்பதைக் கவனித்துக் கொண்டிருக்கிறார்களே தவிர, உணவுப் பொருள்களை உற்பத்தி செய்வதிலே எந்த அளவு அக்கரை காட்டவேண்டுமென்ற உணர்ச்சி அவர்களுக்கு இல்லை. மற்றவர்களுக்கு மிகச் சிறிய அளவு நிலம் இருக்கிறது. அவர்கள் எவ்வளவுதான் பாடுபட்டாலும், உழைத்தாலும், அவர்களுக்கு ஒரு கலம், இரண்டு கலம் தான் அதிகமாகக் கிடைக்கிறது. அதனால் அவர்களுக்கு உழைப்பிலே அக்கரை குறைகின்றது. நிலத்தை எல்லா மக்களுக்கும் பங்கு போட்டு ஒரு ஆளுக்கு ஒரு ஏகர், 10 காணி என்று பிரித்துக் கொடுக்கும் முறையைவிட, நிலத்திற்கு உச்ச வரம்பு நிச்சயமாக ஏற்படுத்துவது நலம். ஒவ்வொருவருக்கும் எந்த அளவு நிலம் தங்களுக்குச் சொந்தமாக இருக்குமென்று சொன்னால், அதில் உணவுப் பொருள்களை தயாரிப்போமானால் நம்முடைய வாழ்க்கை உயர்கிறது என்ற நினைப்பு வரும் அளவுக்கு உச்ச வரம்பு கட்டப்படவேண்டும். அதுபோலவே, ஏழைகளாக இருப்பவர்களுக்கு நிலம் மிகச் சிறிய அளவில் இருக்கும் காரணத்தினாலே, அப்படிப்பட்ட சிறிய நிலம் உடையவர்களையெல்லாம் ஒன்று சேர்த்து, " கோவாபரேடிவ் ஸிஸ்டம் " கூட்டுறவு முறை ஏற்படுத்தி, ஏராளமான அளவிலே உணவு உற்பத்தி செய்வதற்கு தக்க வசதியான முறையை ஏற்படுத்தவேண்டும். அந்த முறையில் என்னுடைய நண்பர் திருவாளர் கோவிந்தசுவாமி சொல்லியதை நினைவூட்டுகிறேன். திருவாரூர் தியாகராஜருக்கு 1,000 வேலி நிலங்கள் இருக்கின்றன. தர்மபுரம் மடத்துக்கு 1,000 வேலி நிலங்கள் இருக்கின்றன. அப்படிப்பட்ட நிலங்களெல்லாம் அரசாங்கத்தினுடைய பொறுப்பிலே கண்காணிக்கப்பட்டு, அரசாங்கத்தார் அவைகள் "கோவாபரேடிவ் ஸிஸ்ட்ம்" மூலம் பயிர் செய்யப்படும் முறையை ஏற்படுத்தி, அதனால் உணவுப் பொருள்கள் அதிகமாக உற்பத்தி செய்து, மக்களுக்கு நன்மை விளைவித்து, மடாலயங்களில் நடைபெறுகின்ற தவறுகளை அதன்மூலம் குறைத்து, அவைகளுக்குத் தேவையான செலவுக் குறிய தொகையைக் கொடுப்பது என்ற முறை ஏற்படுத்தினால், உணவு உற்பத்தி பெருகுவதற்கு அது ஒரு வாய்ப்பாக இருக்கும். ஆலயங்களுக்குச் சொந்தமான பல்லாயிரம் ஏக்கர் நிலங்கள் தரிசாகவே கிடந்து வருகின்றன. குத்தகைக்காரர்களுக்கும், மடாலயங்களுக்கும் இடையே பெருத்த தகராரின் காரணமாக நிலங்கள் நல்ல முறையில் பயிர் செய்யப்படாமல், அவர்களிடையே விரோதம் காரணமாக, குத்தகைக்காரர்களுக்கு பல இடைஞ்சல்கள், தொல்லைகள் தந்து அந்த இரண்டுபேர்களும் நிலத்தை பாழ்படுத்தி விளைச்சலை கெடுத்து விடுவதால், இவைகளெல்லாம் சேர்ந்து உணவு பற்றுக்குறைக்கு துணை செய்துவிடுகின்றது.

நான் மற்றொரு கருத்தை குறிப்பிடுகிறேன். இன்றைய தினம் மிகப் பெரிய மிராசுதாரர்களாக இருப்பவர்களிலே சிலர் –இங்கே பேசிய காங்கிரஸ் நண்பர் ஒருவர் இதை எடுத்துக்காட்டினார் என்று நம்புகிறேன்–நெல்லைப் போன்ற உணவுப் பொருள்களை உற்பத்தி செய்வதை விட வியாபாரத்திற்கு பயன்படக்கூடிய கரும்பு, புகையிலை, அதிக லாபத்தை தரக்கூடிய இத்தகைய வேறு பயிர்களை விளைவிப்பதற்கு நெல் விளையும் நிலத்தை பயன்படுத்துகிறார்கள். இதை, என்னுடைய கட்சியைப் பொறுத்த வரையில், சில ஆண்டுகளுக்கு முன்னாலேயே கண்டித்து வருகிறோம். தஞ்சை ஜில்லாவில் ஒரு பெரிய மிராசுதாரர் ஏறத்தாழ 1,000 வேலி சொந்தக்காரர் சர்க்கரை ஆலையை ஏற்படுத்தினார். அவர் ஒரு சர்க்கரை ஆலையை ஏற்படுத்துவது, நாட்டில் சர்க்கரை ஆலைகள் ஏற்படுவது, வரவேற்கக்கூடியது என்ற கருத்து இருந்தாலும், தஞ்சை மாவட்டத்திலே நெல்விளையும் பகுதி நிலத்தை கரும்புபோன்ற வர்த்தகப் பொருள் உற்பத்திக்கு மாற்றிவிடுகின்ற காரணத்தினால், அதனால் ஏற்படக்கூடிய இன்னல் அந்த அளவுக்கு நெல் விளைச்சல் குறையும். இன்னொன்று, இதன் விளைவாக ஏழை மக்கள் நெல் விளைவித்துக்கொண்டிருக்கிறவர்கள் கரும்பு பயிரிட தூண்டப்படுகிறார்கள். பெரிய மிராசுதார்கள் நெல் விளையும் நிலத்தை கரும்புக்கு மாற்றிவிட்டதால், நம்முடைய நிலத்தையும் கேட்டால் அவர்களிடம் கொடுத்துவிடலாம், அதிலே லாபம் தான் வருகிறது என்று கருதும் நிலைமை வரும். மிகப் பெரிய மிராசுதார்கள் தங்கள் நிலத்தை கரும்பு பயிர் செய்வதற்கு மாற்றுவதால், பக்கத்திலுள்ள நெல் சாகுபடி செய்யும் நிலத்தில் கரும்பு விளைவிப்பதால், இந்த நிலத்தில் நெல் சரியாக விளையாது. இதையும் அவர்களோடு சேர்த்துத்தான் விட வேண்டும் என்று கருதி கரும்பு விவசாயத்துக்கு நெல் விளையும் நிலத்தையும் ஒதுக்கிவிடுவது ஒரு புறம். இப்படிப்பட்ட நிலைமையிலே நெல் விளைச்சல் பாதிக்கப்பட்டது எத்தனை ஏக்கர் என்று வேண்டுமானால் அமைச்சர் அவர்கள் புள்ளி விவரம் கொடுக்கலாம். எத்தனை நிலம் பாதிக்கப்பட்டது என்பதை விட, எந்த அளவுக்கு மக்களுடைய மனப்பான்மை பாதிக்கப்படுகிறது என்பதை கவனிக்கவேண்டும். நெல் விளைவித்து அந்த நெல்லை வீட்டில் கொண்டுவந்து கொட்டும் பொழுது, நெல் விளைவித்ததால் நமக்கு 150 ரூபாய் தான் வருமானம் கிடைத்தது, கரும்பு விளைவித்து 250 ரூபாய் வருமானம் கிடைக்கும் வாய்ப்பு நமக்கு இல்லையே என்று கண்ணீர் விடுகின்ற மனப்பான்மை உண்டாகிறது என்பதையும் அரசாங்கம் கவனிக்கவேண்டும். அதே நேரத்தில் சர்க்கரையே கூடாது, கரும்பையே உற்பத்தி செய்யக்கூடாது என்ற கருத்தல்ல நான்சொல்லுவது. தென் ஆற்காட்டைச் சுற்றியுள்ள புஞ்சை நிலப்பகுதியிலே, நெல் ஏராளமாக விளையாத பகுதியிலே, நெல்லுக்கு ஏற்ற இடமில்ல என்ற பகுதியிலே, தென் ஆற்காடு, வட ஆற்காடு நஞ்சை நிலத்திற்குப் பக்கத்திலுள்ள புஞ்சை நிலத்திலே, அங்கே வேண்டுமென்றால் இயந்திரம்வைத்து தண்ணிர் இறைத்து, நவீன முறையில் நிலத்தை பக்குவப்படுத்தி, த்க்க எருவைப் போட்டு, அங்கே கரும்பை விளைவித்தால் அதை யாரும் மறுக்கப் போவதில்லை. உண்மையிலேயே கூழுக்கு உப்பில்லை, ஏன், அரிசிக்கே வழி இல்லை என்றுள்ள நிலைமையில் பாலுக்கு சர்க்கரை தயாரிப்பதற்காக, கூழுக்குத் தேவையான நெல் விளையக்கூடிய இடத்தில் பாலுக்குத் தேவையான சர்க்கரைக்குத் தேவையான கரும்பை உற்பத்தி செய்தால், ஏழை மக்களுக்கு அரசாங்கம் தங்களைக் கவனிக்கவில்லை என்ற எண்ணமும் அதிருப்தியும் தான் ஏற்படும்.



7th November 1957] [Sri K. Anbazhagan]

அதற்கு அடுத்து சொல்லுவேன். இந்த நாட்டைப் பொறுத்தவரையிலே உணவுப் பற்றுக்குறையை நீக்கவேண்டுமானால் சில அடிப்படைத் திட்டங்களை நிறைவேற்ற வேண்டும். " கம்யூனிட்டி டெவலப்மெண்டு பிராஜக்ட்", "நாஷனல் எக்ஸ்டென்ஷன் ஸ்கீம்" எனற பெயரால் பல இடங்களில் கிணறுகள் வெட்டுவதற்கும், வேறு பல காரியங்கள் செய்வதற்கும் உதவிகள் செய்கிறார்கள் என்று சொன்னாலும், சில இடங்களிலே, கிணறு வெட்டுவது என்ற பெயரால் ஒரு ஆழமான குழியைத் தோண்டி அந்தக் குழியைக் காட்டி பணம் வாங்கிவிடும் நிலைமையிலேயே, எத்தனையோ இடங்களில் கிணறுகள் வெட்டப்பட்டிருக்கின்றன. இம்மாதிரி அதிகாரிகளை சிலமக்கள் ஏமாற்றுகிறார்கள். அதுபோல மக்களையும் அதிகாரிகள் ஏமாற்றுகிறார்கள். இந்த சூழ்நிலை இருக்குமேயானால், நாட்டில் நிரந்தரமான நன்மைகள் எப்படி விளையும் என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். அதே போல் குளங்கள், ஏரிகள், இவைகளையெல்லாம் சீரமைப்பதற்கு அரசாங்கம் திட்டமிட்டு செயலாற்றவேண்டும். பல இடங்களில் ஏரிகளின் கரைகளை பலப்படுத்துவதிலும், குளங்களை ஒழுங்குபடுத்துவதிலும் போதுமான அக்கரை அரசாங்க இலாகாவினால் காட்டப்படவில்லை. அதனாலே மழை பெய்தால் தண்ணீரை தேக்கிவைத்துக்கொள்ள முடியவில்லை. அதே நேரத்தில் பெய்கின்ற மழைத் தண்ணீர் வீணாகப் போவதைக் தடுக்க முடியவில்லை. தண்ணீர் வீணாகப் போவதை தடுக்க முடியாததுமட்டுமல்ல. கரைபுரண்டு ஓடுகின்ற தண்ணீர் நிலத்தைப் பாழ்படுத்தி உணவு உற்பத்திக்கும் கேடு விளைவிக்கின்றது. இந்த நிலைமையைத் தடுக்க வேண்டும். மிகப்பழங்காலத்லேயே தமிழர்கள், பழங்காலப் புலவர்கள் பொறுமையாகச் சொல்லியிருக்கிறார்கள்

"வரப்பு உயர நீர் உயரும்
நீர் உயர நெல் உயரும்
நெல் உயரக் குடி உயரும்
குடி உயரக் கோன் உயர்வான்"

இந்த அடிப்படையிலேயே அப்பொழுதிருந்த அரசாங்கத்தார், அப்பொழுதிருந்த மன்னர்கள் வரப்பிலே அதிக கவனம் செலுத்தினார்கள் என்று தெரிகிறது. வரப்பு உயர்வதிலே கவனம் செலுத்தாமல், வரப்புச் சண்டையிலே அதிக கவனம் செலுத்துவதன் காரணத்தினால் பல தீமைகள்

ஏற்படுகின்றன. வரப்பு உயரவேண்டுமானால் மக்களுக்குத் தேவையான அடிப்படைக் காரியங்களிலே அரசாங்கம் அதிக அக்கரை எடுத்துக்கொள்ள வேண்டும்.

மற்றொன்று நான் சொல்லுவேன். நமது நாட்டிலே போதுமான அளவு இயற்கை வள நிலை இல்லை. போதுமான மழை இல்லை. பெரிய ஆறுகள், ஜீவ நதிகள் இல்லை என்பது ஒன்று. இருக்கின்ற ஆறுகளில் வருகின்ற தண்ணீர் போதவில்லை என்பது மற்றொன்று. பாலாறு பாக மாகிவிட்டது இன்னொன்று. இப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டிருக்கின்ற காரணத்தினாலே தண்ணீர் கிடைக்கவில்லை என்ற நிலைமையிலே, சிறு சிறு அணைகள் எங்கெங்கே கட்டமுடியுமோ அங்கெல்லாம் அணைகள் கட்டவேண்டும். கீரியார் திட்டமானாலும் சரி, கடானா ஆறு திட்டமாக இருந்தாலும் சரி, குடவனாறு திட்டமாக இருந்தாலும் சரி, செலவழிக்கப்படும் தொகையினால் எத்தனை ஏக்கருக்குத் தண்ணீர் பாயும், எத்தனை டன் உணவு உற்பத்தி செய்யமுடியும், உணவு உற்பத்தி திட்டத்தை எவ்வளவு தூரம் நிறைவேற்றமுடியும் என்று பார்த்து, இது "இகனாமிக் யூனிட்", ஆகாது என்று திட்டத்தை அப்படியே கை விட்டுவிடும் முறை தவறான தாகும். ஒரு மனிதன் நல்ல உடல் நிலையில், உடல் கட்டோடு இருந்தால், அவனுக்கு ஒரு மாதத்திற்கு இவ்வளவுதான் செலவழிக்க முடியும் என்று நிர்ணயம் செய்யலாம். உடல் நிலை சரியாக இல்லாமல் நோய் வாய்ப்பட்டிருக்கும் நேரத்திலே, வாங்கவேண்டிய மருந்து 80 ரூபாயாக இருந்தாலும், இவனுக்கு 20 ரூபாய்க்கு மேல் செலவழிக்க முடியாது என்ற காரணத்தினால், அவனுக்கு இவ்வளவுதான், உரியது. இனி காலி, என்று தீர்மானம் செய்வது உண்மையிலேயே நல்ல நோக்கம் ஆகாது. அதேபோல், பற்றாக்குறை இருக்கின்ற காரணத்தினாலே, திட்டங்களுக்கு அதிக செலவு ஆனாலும், அந்தப் பொறுப்பை அரசாங்கம் ஏற்றுக்கொண்டு திட்டங்களை நிறைவேற்றவேண்டும். நோயாக இருக்கிற சமுதாயத்தில் அந்த நோயைப்போக்குவதற்கு அதிகம் செலவழிப்பது எவ்வளவு நியாயமானதோ அப்படி உணவு பற்றாக்குறை இருக்கிற நாட்டில் அந்தப் பற்றாக்குறையை நீக்கு வதற்கு சிறு சிறு நீர்த்திட்டங்கள் எந்த எந்த ஜில்லாவில் நிறைவேற்றப்பட வேண்டுமோ—ஒரு மடங்குக்கு மூன்று மடங்கு செலவு செய்வதானாலும் கூட—அவற்றை எல்லாம் நிறை வேற்றியாகவேண்டும். இப்படிப்பட்ட காரியங்களைச் செய்தால்தான் இன்றையதினம் இல்லாவிட்டாலும் இன்னும் சில காலத்திற்குப் பின்னாவது உண்மையில் நம் நாட்டைப் பொறுத்த வரையில் உணவுப் பற்றாக்குறை குறையும்.

அதை அடுத்து நான் ஒன்று சொல்வேன். உணவுப் பற்றாக்குறையைப் போக்குவதற்கு இயந்திர சாதனங்களைக்கொண்டு இந்த நாட்டில் உழவுத் தொழிலை நடத்துவது மிகுதியாக வளராத ஒரு காரணத்தினாலே ஒவ் வொரு ஜில்லாவிலும் குறிப்பாக புறம்போக்காக உள்ள நல்ல நிலங்களை எல்லாம் சர்க்காரே எடுத்துக்கொண்டு, இயந்திர சாதனங்களின் மூலம் பயிர்ச்செலவு செய்து காட்டவேண்டும். விஞ்ஞான அறிவு, ஆராய்ச்சி உடையவர்கள் சாதாரண நல்ல நிலங்களிலேயே நம்மால் பயிர் செய்ய முடியாத நிலையில் நாம் தவித்துக்கொண்டிருக்கும்போது—இந்த இடத்திலே பயிர் எப்படிச் செய்வது என நாம் வியக்கும் இடங்களிலே பயிர் செய்து வருகிறார்கள் என்பதைப் பார்க்கிறோம். நரன் உதாரணமாகச் சொல் வேன், ருஷிய நாட்டில் அங்குள்ள பனி படர்ந்த பகுதிகளில்கூட பயிர்ச்செலவு செய்கிறார்கள், பழ மரங்களைப் பயிரிடுகிறார்கள் என்பதை அறிகிறோம். நாம் அவ்வளவு தூரத்திற்கு விஞ்ஞான வளர்ச்சியைப் பெற்றிருக்கவில்லை. அந்தத் துறையில் அவர்களோடு போட்டிபோட நம்மால் முடியாது என்று சொன்னாலும்கூட நம்மிடத்திலுள்ள புறம் போக்கு நிலங்களை, மேட்டு நிலங்களை எல்லாம் சர்க்காரே மொத்தமாக எடுத்துக்கொண்டு, பரிக்ஷார்த்தமாகவாவது இயந்திர சாதனங்களைக் கொண்டு அவற்றைப் பயிர் செய்ய வேண்டுமென்பதாக நான் கேட்டுக் கொள்கிறேன். அவற்றில் பல விளைபொருள்களை உண்டாக்கிக் காட்ட வேண்டும். மக்களுக்குப் புது நம்பிக்கையை உண்டாக்கியாகவேண்டும். இன்றையதினம் இருக்கிற மக்கள் ஆண்டவனிடத்தில் நம்பிக்கையைப் போட்டுவிட்டு, "அவனன்றி ஓரணுவும் அசையாது", ஆனால் "என் கையில் உள்ள கலப்பை ஒன்றுதான் அசையும்" என்று இருக்கிறார்கள்.



அவர்கள் புது எழுச்சி பெறவில்லை. பிறநாடுகளைப் போல விவசாயத்தில் நவீன முறைகளை எல்லாம் கையாளுவதற்கு அவர்கள் தயாராக இல்லை. பழமை மனப்பான்மையை விட்டுவிட முன்வரவில்லை. அரசாங்கத்தார் பழைய மனப்பான்மையை அவர்கள் விட்டு புது எழுச்சியைக் கொள்வதற்கு முன்வரச் செய்யவேண்டும். ஆனால் பகுத்தறிவைப் புகுத்துவதற்கும் அவர்கள் முன் வரத்தயாராய் இல்லாமல் இருக்கிறார்கள்.

வானத்தில் பறக்கின்ற நவீன சந்திரனை வாய் பிளந்து பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் நம் தமிழ் மக்கள் என்றால், "இது ஏதடா ஒன்பது கிரணங்கள்தான் உண்டென்று கட்டம் போட்டு வைத்துக்கொண்டிருக் கிறோம். இன்னொன்றை எந்தக் கட்டத்தில் புகுத்துவது, பத்தாவது கட்டம் போடவேண்டுமா" என்கிற சிந்தனையில் உள்ளவர்களாக இருக்கிறார் களே தவிர பிற நாடுகளில் விஞ்ஞானம் அந்த அளவு வளர்ந்து இருக்கிற போது நம் மனப்பான்மையும் விஞ்ஞானத் துறையில் வளர்ந்து இருக் கிறதா என்று எண்ணிப் பார்ப்பவர்கள் இல்லை. விஞ்ஞானத் துறையில் நம் அறிவைச் செலுத்தினால், பகுத்தறிவு மனப்பான்மையை ஓங்கி வளரவிட்டால் இன்றைய தினம் இருக்கிற விவசாயம் நமக்குப் பற்றாக் குறையை நீக்கி உபரி தானியத்தையே அளிக்கும் என்பதை நாம் மறந்து விடக்கூடாது. அரசாங்கத்தில் இருக்கிற குறைகளைப் போக்கினால் அது மக்களுக்குப் புது எழுச்சியை உண்டாக்கப் பயன்படும். அப்படிப்பட்ட காலம் வரும் அளவாவது நியாய விலைக் கடைகளை பரவலாக அதிகம் வைத்தால் அந்த அளவாவது மக்கள் நிம்மதியாக இருப்பார்கள். ஆகவே நியாய விலைக் கடைகளை அதிகமாகத் திறக்கவேண்டும் என்பது ஒன்று, அடுத்தபடியாக விவசாயத்தில் புத்துணர்ச்சியை, விஞ்ஞான அறிவை அதிகம் உண்டாக்க வேண்டும் என்பது இரண்டு, தானிய உற்பத்தியாளருக்கு ஏற்ற விலை கிடைக்கச் செய்வது என்பது மூன்று, கள்ளக் கடத்தலைக் கட்டுப்படுத்தி, பதுக்கல் தன்மையை ஒழிப்பது நான்கு. இவற்றின் மூலமாக நாட்டு மக்கள் நலம்பெற்று வாழ அரசாங்கத்தார் நல்ல வழி வகுக்க வேண்டுமென்பதாகக் கேட்டுக்கொண்டு, அதற்கு இந்தத் தீர்மானம் பயன்படும், சர்க்காரும் பயன்படுத்துக் கொள்ளவேண்டுமே யல்லாது, எதிர்க் கட்சியினர் கொண்டுவந்துள்ள தீர்மானம் என்பதற்காகத் தட்டிக் கழித்துவிடக்கூடாது என்று சொல்லி என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

* **Sri P. S. CHINNADURAI** : மதிப்பிற்குரிய கனம் சபாநாயகர் அவர்களே, இந்த ராஜ்யத்தின் உணவு பற்றாக்குறை சம்பந்தமாகக் 11-54 a.m.
கொண்டுவரப்பட்ட தீர்மானம் சபை முன்பு விவாதத்தில் இருக்கிறது. அரசாங்கம் இவ்விஷயத்தில் தீவிரமாக நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்பதற்காக, அரசாங்கத்தின் கவனத்தை கவர்வதற்காக கொண்டுவரப்பட்டிருக்கிற தீர்மானம் இது. இந்தத் தீர்மானத்தைக் கட்சிக் கண்ணோட்டத்தோடு கவனிக்கமாட்டார்கள் அரசாங்கத்தினர் என்று நினைக் கிறேன்.

உண்மையில் நம்முடைய ராஜ்யம் உணவு விஷயத்தில் பற்றாக்குறை யாக இருக்கிறது. பற்றாக்குறை ராஜ்யம், உபரி ராஜ்யம் என்று கருதப் பட்ட பீஹார், உத்தரப் பிரதேசம் போன்ற இடங்களிலும் இன்றைக்கு நம்மைப் போலவே இந்த வேளையில் பற்றாக்குறை அதிகமாக இருப்பதாக செய்தி வந்துகொண்டிருக்கிறது என்றால் நம் ராஜ்யத்தைப் பொறுத்த வரையில் நாம் மிகுந்த ஜாக்கிரதையுடனும், கவனத்துடனும் இப்போதி லிருந்தே நடந்து கொண்டால்தான் நாளாவட்டத்தில் இந்தப் பற்றாக் குறை அதிகமாகி நம் ராஜ்ய மக்களுக்கு ஒரு பெரிய பஞ்சத்தை உண்டாக்கா மல் தவிர்க்க முடியும். நாளடைவில் பற்றாக்குறை வளர்ந்துவிடாமல் உணவுப் பற்றாக்குறையைச் சமாளிப்பதற்கு என்ன வழி என்பதை ஆலோசனை செய்து சர்க்காருக்கு உணர்த்துவதற்காகத்தான் இந்தத் தீர்மானம் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

இந்தத் தீர்மானத்தின்மீது பேசும்போது உணவு உற்பத்தியைப் பெருக்கு வதற்கு நிலப் பிரச்னை முழுவதையும் மிக விரிவாக அதன் உள் அடக்கி என்னால் எடுத்துச் சொல்ல முடியும். இன்றுள்ள சமூக அமைப்பில் நான் அந்த மாதிரியான நிலச் சீர்திருத்தப் பிரச்சனையைப்பற்றிப்

[Sri P. S. Chinnadurai] [7th November 1957

பேசப் போனால், அவ்வாறு பேசுவதற்கு முற்பட்டவுடன் அரசாங்கத்தினரும், அரசாங்கக் கட்சியைச் சேர்ந்தவர்களும் தவறான முறையில்—கண்ணோட்டத்தோடு—பார்த்து விடுவதற்கு ஏதுவாகப் போய்விடும் என்கிற காரணத்தினால் தான் அதைப்பற்றி பேச அஞ்சுகிறேன். இருந்தாலும் உணவுப் பிரச்சனையை இரண்டு விதமாகத் தீர்க்க முடியும். ஒன்று இன்றைக்குள்ள அடிப்படையான சமுதாய அமைப்பையே மாற்றக்கூடிய முறையில் நிலச்சீர்திருத்தங்களைக் கொண்டுவருவதன்மூலம் சாத்தியமாகும். அது இல்லை என்றால் இன்றைக்கு இருக்கும் முதலாளித்துவ முறையிலேயே இப்போது இருக்கிற நிலப் பிரச்சனையை அப்படியே வைத்துக் கொண்டு இதன்பேரில் நாம் எடுத்துக்கொள்கிற நடவடிக்கையின் மூலம் உணவுப் பற்றாக்குறையைத் தாற்காலிகமாகவாவது தீர்த்துகொள்ள முடியும் என்பதற்குச் சில யோசனைகளைச் சொல்கிறேன். அதிக உணவை உற்பத்தி செய்வதற்கு ஏற்கெனவேயுள்ள நிலத்திலே சரியானபடி விளைச்சலைச் செய்வதற்கு நாம் முற்பட வேண்டும். புதிதாக நிலத்தைச் சாகுபடிக்குக் கொண்டுவர வேண்டும் என்று சொல்வது ஒருபுறம் இருக்க, முப்போகம் என்று சொல்வார்களே, அதுமாதிரி ஏற்கனவே சாகுபடிக்கு வந்துவிட்ட நிலங்களில் மூன்று போகம் சாகுபடி செய்ய வழிவகுக்க வேண்டும்.

உணவு உற்பத்திக்கு மிகவும் இன்றியமையாதது தண்ணீர். தண்ணீர் சம்பந்தப்பட்ட வரையில் பெரிய நீர்ப்பாசனத் திட்டங்களைப் போட்டுக் கொண்டு வருகிறோம். பரம்பிக்குளம் திட்டம் என்பது இன்னும் அமுலுக்கு வராமல் இருக்கிற திட்டம், நாம் உத்தேசித்திருக்கும்படியான ஒரு திட்டம். இந்தத் திட்டம் வந்துவிடுமானால் கோயம்பத்தூர் ஜில்லாவில்—இப்போது பற்றாக்குறைப் பிரதேசங்கள் என்று சொல்லப்படுகிற, வறட்சிப் பிரதேசங்கள் என்று சொல்லப்படுகிற—தாராபுரம், உடுமலைப்பேட்டை, பல்லடம் ஆகிய தாலூக்காக்களுக்கு அது மிகவும் பயன்படும். இதனால் அந்தப் பிராந்தியங்களில் உள்ள நல்ல நிலங்கள் சாகுபடி செய்யப்படும். பொள்ளாச்சி தாலுக்காவிலும் பரம்பிக்குளத் திட்டம் பெரும் அளவுக்குப் பயன்படும். ஆனால் இந்த உத்தேச பரம்பிக்குளத் திட்டமானது எப்போது அமுலுக்கு வரும்? எப்போது நிறைவேற்றப்படும்? அதன் மூலமாக கோவை ஜில்லாவில் உள்ள வறட்சிப் பிரதேசங்கள் எல்லாம் பயன் பெறுமா என்று தெரியவில்லை. ஆனால் நிச்சயமாக இந்தத் திட்டம் அமுலுக்கு வரும் என்கிற நம்பிக்கை எனக்கு உண்டு. அது அமுலுக்கு வருகிற கட்டத்தில் கோவை ஜில்லா பூராவும் இருக்கிற வறட்சிப் பிரதேசங்களுக்கு எல்லாம் பயன்படக்கூடிய அளவில் அது வருமா என்கிற பிரச்னை எழுந்திருக்கிறது. பொள்ளாச்சி தாலுக்காவில் நஞ்சைப் பயிர் செய்வதற்கு தண்ணீரை உபயோகப்படுத்திவிட்டால் பல்லடம், தாராபுரம் தாலுக்காக்கள் அதனால் பயன்படமாட்டா என்ற கருத்து நிலவிவருகிறது. பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டையில் நஞ்சை வெள்ளாமை செய்யவில்லை என்றால், எல்லாப் பிரதேசத்திலும் புஞ்சை வெள்ளாமை நன்றாகச் செய்யமுடியும். ஆகவே உடுமலைப்பேட்டை, பொள்ளாச்சி தாலுக்காக்களில் நஞ்சை வெள்ளாமை செய்ய வசதிசெய்துவிட்டு, பல்லடம், தாராபுரம் தாலுக்காக்களுக்கு—இந்த உத்தேச பரம்பிக்குளத் திட்டம் அமுல் செய்யப்படும் காலத்தில்—இதனால் எவ்வித பயனும் உண்டாகாமல் செய்யப்போகிறார்களா, அல்லது எல்லாப் பிரதேசங்களும் வளம்பெறுவதற்கு நஞ்சை வெள்ளாமை எங்கும் நடக்கக்கூடாது, புஞ்சை வெள்ளாமைதான் செய்யப்படவேண்டும் எனச் செய்யப்போகிறார்களா என்பதை அரசாங்கத்தார் திட்டவட்டமாக அறிவிக்க வேண்டும்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கீழ் பவானி திட்டம் நிறைவேற்றப்பட்ட காலத்திலே ஒரு சிலர் தங்களுடைய சொந்த நன்மையை கருதி அதிகமான நஞ்சை நிலங்கள் பயன் அடையவேண்டுமென்று கூறியது கனம் அங்கத்தினர் அவர்களுக்கு தெரிந்து இருக்கும். இருந்தபோதிலும், அரசாங்கம் எந்த கொள்கையை கடைப் பிடித்தது என்பது கனம் அங்கத்தினர் உணருவார். ஆகையால், இதிலே ஐயம் கிளப்பவேண்டியது அவசியமில்லை என்று நான் சொல்லிக்கொள்கிறேன்.



7th November 1957]

*SRI P. S. CHINNADURAI : கனம் மந்திரி அவர்கள் கொடுத்த தகவலுக்கு நன்றி கூறுகிறேன். என்னுடைய வேண்டுகோள் என்னவென்றால் அந்த திட்டம் அமுலாகும்போது புஞ்சை வெள்ளாண்மைக்கு பயன்பட வேண்டும். அதன் மூலம் அதிக பிரதேசங்கள் உணவு உற்பத்தியின் கீழ் கொண்டுவரப்படவேண்டும் என்று மிகவும் தாழ்மையாக வேண்டிக்கொள்கிறேன். இதனையே தான் அப்பகுதியிலுள்ள மக்களும் விரும்புகிறார்கள். இவ்விதம் செய்தால் குறிப்பாக நான் பிரதிநிதித்துவம் வகிக்கும் பல்லடம் தொகுதிக்கு மிக்க நன்மை ஏற்படும். அப்பகுதியில் உணவு உற்பத்தியை பெருக்குவதற்கான ஒரு சூழ்நிலையும் ஏற்படும். இந்த பரம்பிக்குளத்திட்டத்தை புஞ்சை நிலங்களுக்கும் பயன்படும்படி செய்தால், பல்லடம் தொகுதியில் இருக்கும் ஏழை மக்களுக்கு, அதுவும் விவசாயத்தையே பெரும்பாலும் நம்பி வாழும் மக்களுக்கு பயன் தரும். ஆகையால் இதை கவனிக்கவேண்டுமென்று அரசாங்கத்தை கேட்டுக் கொள்கிறேன்.

பெரிய நீர்பாசனத் திட்டங்களைத் தவிர சிறிய நீர்பாசன திட்டங்களிலும் அரசாங்கம் அதிக கவனம் செலுத்த வேண்டுமென்று வேண்டிக்கொள்கிறேன். சிறிய நீர்பாசனத் திட்டம் என்று சொல்லும்போது, சாதாரணமாக சிறிய காட்டாறுகளைத் தடுத்து அணைக்கட்டுகளை கட்டுவது என்றும் குளங்களை வெட்டுவது என்றும் கால்வாய்கள் முதலியவைகளை விசாலமாக்குவது என்றும்தான் நினைக்கிறார்கள் என்றே கருதுகிறேன். நான் சொல்லக்கூடிய சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள் இவை மட்டும் அல்ல. சிறிய, சிறிய குட்டைகளை அமைக்கவேண்டும். நான் குறிப்பிடுவது குளம், ஏரி இவைகள் அல்ல. அரசாங்கம் இவ்விதமான சிறிய குட்டைகளை அமைக்க முன் வர வேண்டும். இதை ஒரு பரீட்சார்த்த ஏற்பாடாகவாவது அரசாங்கம் மேற்கொள்ளுவது நல்லது. இத்தகைய ஏற்பாட்டிற்கு என்னுடைய பல்லடம் தொகுதி மிகவும் பயன்படும் என்று சர்க்காருக்கு இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். முன்பு குட்டைகள் இருந்த இடங்கள், குட்டைத்தோட்டம், குட்டைக்காடுகள் என்ற ரீதியில் மாறி, குட்டைகளே இல்லாமல் போய்விட்டன. இத்தகைய நிலைமையை தவிர்த்து அத்தகைய நிலங்களை அரசாங்கமே விலை கொடுத்தேனும் வாங்கி சிறிய குட்டைகளை அமைத்துக்கொடுப்பதற்கு போதிய பணம் செலவழிக்க வேண்டும். பெரிய நீர்ப்பாசனத் திட்டங்களுக்கும், சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களுக்கும் லட்சக்கணக்கிலும் கோடிக் கணக்கிலும் பணம் ஒதுக்கப்பட்டு செலவழிக்கப்படுகிறது. ஆனால் சிறிய குட்டைகள் அமைத்துத் தரும் திட்டங்களில் கவனம் செலுத்தப்படாத காரணத்தால் என்னுடைய தொகுதியில் மட்டுமின்றி அடுத்துள்ள திருப்பூர் முதலிய பிரதேசங்களிலும், விவசாயத்திற்கு உபயோகப் படக்கூடிய தண்ணீர் வீணாகிக் கொண்டு வருகிறது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். இதனை அரசாங்கம் கவனிக்க வேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன். சமுதாய நலத் திட்டத்தின் கீழ் இந்த மாதிரி குட்டைகள் அமைக்கும் திட்டமும் இருப்பதாகச் சொல்லப்படலாம். ஆனால் இந்த மாதிரித் திட்டங்களுக்கு ஆகும் செலவில் பாதிப் பங்கை அப்பகுதி மக்கள் கொடுக்க வேண்டும் என்று சொல்லப்படுகிறது. இது சாத்தியமல்ல. அங்குள்ள ஜனங்கள் மிகுந்த கஷ்டத்தில் இருப்பதால் அந்தப் பாதிப் பணத்தைக் கொடுக்க முடியாது. ஆகையால் இந்த குட்டை வெட்டும் திட்டத்தை "நீர்ப்பாசனத் திட்டங்கள்" என்ற வரிசையில் சேர்த்துக் கொண்டு அரசாங்கமே முழுப் பணத்தையும் செல வழிக்கவேண்டும் என்றும் அப்படிச் செய்தால்தான் அந்தப் பகுதிகளில் நிச்சயமாக உணவு உற்பத்தியை அதிகரிக்க முடியும் என்றும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். பல்லடம் போன்ற தாலூகாக்களில் சுமார் 150 அடிக்கு கீழே கிணறு வெட்டி தண்ணீர் எடுத்து விவசாயத்திற்கு உபயோகப்படுத்துகிறார்கள். இந்த விபரம் கனம் அமைச்சரவர்களுக்கும் நன்றாய் தெரிந்திருக்கும் என்று நான் நம்புகிறேன். அங்கு கஷ்டப்படும் விவசாயிகளுக்கு ஊக்கம் கொடுக்கின்ற முறையிலே இந்தத் திட்டங்களை நிறைவேற்றினால் தான் நல்லது.

இதைத் தவிர இன்னும் ஒரு விஷயத்தை அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டுவர வேண்டியது என்னுடைய கடமை ஆகும். இப்போது விவசாயத்திற்கு மின்சாரம் பெரும் அளவில் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

[Sri P. S. Chinnadurai] [7th November 1957]

ஆனால் மின்சாரக் கட்டணமோ மிகவும் அதிகமாக இருக்கிறது. தஞ்சை, திருச்சி போன்ற ஜில்லாக்களை எடுத்துக்கொண்டால் அப்பகுதிகளில் உள்ள நிலங்களுக்கு அவைகள் சமீபம் செல்லும் வாய்க்கால்களிலிருந்து தண்ணீர் பாய்ச்சப்படுகிறது. ஆனால் எங்கள் தொகுதியில் உள்ள பகுதிகளில் 150 அடிக்கு மேல் வெட்டி தண்ணீரை ஒன்றிரண்டு மோட்டார்களை வைத்து மேலே கொண்டு வந்து நிலங்களுக்கு பாய்ச்ச வேண்டி யிருக்கிறது. அங்கு புஞ்சை வெள்ளாண்மை மட்டும்தான் இருப்பதாகச் சொல்ல முடியாது. சில பகுதிகளில் நஞ்சை வெள்ளாண்மையும் இருக்கிறது. திருச்சி, தஞ்சாவூர் போன்ற ஜில்லாக்களில் விளையக்கூடிய நெல்லுக்கும் கோவை ஜில்லாவில் விளையக்கூடிய நெல்லுக்கும் ஒரே விலையாக மார்க்கெட்டில் இருக்கிறது. வாய்க்கால் பாசனத்தின் மூலம் திருச்சி, தஞ்சாவூர் ஜில்லாக்களில் விளையும் நெல்லுக்கும், 150 அடி ஆழமுள்ள கிணறுகளிலிருந்து எடுக்கப்படும் தண்ணீரைக் கொண்டு விளையும் நெல்லுக்கும் ஒரே விலை இருப்பது சரியாகுமா ? வாய்க்கால் பாசனம் உள்ள இடங்களில் சாகுபடிச் செலவு குறைவாக யிருக்கிறது. ஆனால் கிணற்று பாசனமுள்ள இடங்களில் சாகுபடிச் செலவு அதிகமாயிருக்கிறது. ஆனால் இந்த இரண்டு இடங்களிலும் உற்பத்தியாகும் பொருள்களுக்கு ஒரே விலைதான். உற்பத்திச் செலவிலேயுள்ள இந்த சமத்துவமின்மையை அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன். திருச்சி, தஞ்சை போன்ற ஜில்லாக்களில் எவ்வளவு நிலவரி வசூலிக்கப்படுகிறதோ, அந்த அளவுக்கு மின்சார கட்டணத்தை மாற்றி அமைத்தாலும் பரவாயில்லை. ஆனால் இந்த மின்சார கட்டணம் நீர் வரியைக் காட்டிலும் பல மடங்கு அதிகமாக யிருக்கிறது.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : நீர்ப்பாசன வசதிகள் அந்தந்த பிரதேசங்களின் இயற்கை வளத்தை பொறுத்து இருக்கின்றன. மின்சார விகிதத்தை பொறுத்தமட்டில், மற்ற ராஜ்யங்களைவிட இந்த ராஜ்யத்தில் மின்சார கட்டணம் குறைந்து இருக்கிறது என்று விவசாயிகளே ஒத்துக்கொள்கிறார்கள்.

*SRI P. S. CHINNADURAI : கனம் மந்திரி அவர்கள் சொல்வதை நான் ஒப்புக்கொள்கிறேன். ஆனால் அதே நேரத்திலே, நம்முடைய ராஜ்யத்திலே தொழில்சாலைகள் உபயோகிக்கக்கூடிய மின்சார கட்டணத்தைவிட, விவசாயத்திற்கு உபயோகப்படுத்தப்படும் மின்சாரக் கட்டணம் மூன்று மடங்கு அதிகமாக யிருக்கிறது என்பதை அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன். நான் சொல்லுகிறேன் என்பதற்காக இதை புறக்கணிக்கக்கூடாது.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : தொழிற்சாலைகளுக்கும் விவசாயத்திற்கும் ஏதோ வித்தியாசமும் பாரபட்சமும் காட்டப்படுவதாக கனம் அங்கத்தினர் கூறுவதால், நான் இப்போது குறுக்கிட வேண்டி யிருக்கிறது. பெரிய தொழிற்சாலைகளுக்கு மொத்தமாக ஆயிரக் கணக்கான Unit மின்சாரம் supply செய்யப்படுகிறது. ஆனால் நான்கு, ஐந்து ஏக்கர் நிலத்திற்கு pump-set முதலிய இயந்திரங்களை அமைத்து அதற்கு வேண்டிய மின்சாரம் supply செய்யும்போது செலவு அதிகமாகத்தான் ஆகிறது. இந்த மின்சார கட்டணத்தை எவ்வளவு குறைக்க முடியுமோ அவ்வளவு குறைப்பதற்குத்தான் முயற்சி செய்யப்பட்டு வருகிறது.

*SRI P. S. CHINNADURAI : நான் பணிவுடன் கேட்டுக்கொள்வது எல்லாம், விவசாயிகளுக்கு அதிக ஊக்கமும் ஆக்கமும் அளிக்க வேண்டும் என்பதுதான். அப்போதுதான் அதிக உணவு உற்பத்திக்கு அது ஒரு சாதனமாக அமையக்கூடும். மின்சார கட்டணத்தை குறைத்தால், அதன் மூலமாக விவசாயிகளுக்கு கொஞ்சம் பணம் மிச்சப்படும். அந்தப் பணத்தைக் கொண்டு நல்ல உரங்களை வாங்குவதற்கு பயன்படுத்த முடியும். அதனால் உணவு உற்பத்தியையும் அதிகமாக்க முடியும். இதனை அரசாங்கம் செய்யும் என்று எதிர்பார்க்கிறேன். ஏதோ ஒரு காலத்தில் விவசாயிகளுக்கு மின்சாரத்தை பயன்படுத்திக் கொள்ள வசதி செய்து கொடுத்தபோது நிர்ணயித்த கட்டணங்களை இந்த



7th November 1957] [Sri P. S. Chinnadurai]

சர்க்கார் அப்படியே வைத்துக்கொண்டு இருக்க வேண்டும் என்பது இல்லை. பிரிட்டிஷார் ஆண்ட காலத்தில் தீர்மானிக்கப்பட்ட இந்த அநீதியான, சமத்துவமற்ற கட்டண முறையை மாற்றி அமைக்க வேண்டியதன் அவசியத்தை இந்த சர்க்காரின் கவனித்திற்கு கொண்டுவர வேண்டியது என்னுடைய கடமை. உண்மையிலே இந்த முக்கியமான வசதிகளை விவசாயிகளுக்கு செய்து கொடுப்பதற்கு தயங்கக்கூடாது. அதோடு ஒரே துறையிலே ஈடுபட்டிருக்கும் விவசாயிகளின் விஷயத்தில் உற்பத்தி செலவிலே இருக்கக்கூடிய தாரதம்மிய நிலைமையை நாம் போக்க வேண்டும். இந்த விஷயத்தில் அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும் என்று நான் மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொண்டு என் பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

SRI M. KALYANASUNDARAM : கனம் சபாநாயகர் அவர்களே, 12-10 p.m.
இந்தத் தீர்மானம் சட்டசபையில் இருக்கக்கூடிய எல்லாக் கட்சிகளுக்கும் பொதுவான லட்சியங்கள் கொண்டதாக அமைந்திருக்கிறது. இந்த லட்சியங்கள் அடையக்கூடிய முறைகளில் சர்க்கார் இதுவரை கையாண்டுவந்த முறைகள் வேண்டுமானால் குறித்து விளக்கி இருக்கலாமே தவிர இந்தத் தீர்மானத்தில் கொடுத்திருக்கக்கூடிய மூன்று நோக்கங்களில் எந்தவிதமான வித்தியாசமும் இருக்கமுடியாது. நம்முடைய தேசத்தில் நம்முடைய ராஜயத்தில் உணவு நெருக்கடி முற்றி வருகிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. இப்படி இருக்கும்போது பேசும்போது ஜாக்கிரதையாக பேசவேண்டும். ஜனங்களிடத்தில் பொறுப்போடு எதையும் பேசவேண்டும். நாட்டிலே பஞ்சம் ஏற்பட்டதைப் பயன்படுத்திக்கொண்டு சிலர் கொள்ளை லாபம் அடிக்கப்பார்க்கிறார்கள். அப்பேர்ப்பட்டவர்களை உதவி செய்யக்கூடிய முறையிலே நம்முடைய பேச்சுக்கள் இருக்கக்கூடாதென்று மந்திரி அவர்கள் சொல்லுவார்களேயானால் அதை ஒத்துக்கொள்ளவேண்டும். ஆனால் எப்படிப் பார்த்தாலும் இந்தக் குற்றம் செய்கிறவர்கள் மத்திய சர்க்கார் மந்திரிகள்தான் என்று சொல்ல வேண்டும். மத்திய சர்க்கார் கொடுக்கும் தகவல்கள் அவர்கள் பேசக்கூடிய பேச்சுக்களைப்பார்க்கும் போது நம்முடைய தேசம் ஒரு பெரிய நெருக்கடியை நோக்கிக்கொண்டு போகிறதோ என்று நாமே பயப்படக்கூடிய நிலைமையில் தான் இருக்கிறது. என்ன நோக்கத்தோடு பேசுகிறார்களோ தெரியவில்லை. இருந்தாலும் உணவு நிலைமையானது கொஞ்சம் கவலைக்கிடமாகத்தான் இருக்கிறது என்பதை நிச்சயமாக மந்திரி அவர்கள் ஒத்துக்கொள்வார்கள். இந்த சமயத்தில் உதவி சபாநாயகர் தலைமை வகித்தார்.

இந்தத் தீர்மானத்தில் இரண்டு நோக்கங்கள் இருக்கின்றன. நீண்டகால பரிகாரம் விவசாயத்தை எந்த முறையிலே அபிவிருத்தி செய்வது. விவசாயத்தில் ஈடுபட்டிருக்கும் விவசாயிகள் உற்சாகத்தை எப்படி பெருக்க வேண்டும். நம்முடைய ராஜ்யத்தில் உணவு உற்பத்தியை பெருக்கவேண்டும் என்பதற்கு யோசனை சொல்லவேண்டும். நீண்டகால திட்டங்களால் சர்க்கார் இப்பொழுது ஏற்பட்டிருக்கும் உணவு நெருக்கடியை எப்படி சமாளிக்க முடியும் ? உடனடியாக செய்யக்கூடிய திட்டங்கள், நீண்டகால திட்டங்களைப்பற்றி சர்க்காருக்கு நாம் புதிதாக சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. கடன் வசதியைப்பற்றி சென்ற ஐந்து வருஷகாலமாக இந்தச் சட்டசபையில் பலமுறை விவாதிக்கப்பட்டுவந்திருக்கிறது. விவாதிப்பது இருக்கட்டும் அரசாங்கம் அறிக்கையில் எவ்வளவோ திட்டங்களை வெளியிட்டிருக்கின்றன. ஆகவே இப்பொழுது இருக்கும் திட்டங்களையாவது சர்க்கார் உறுதியாக நடைமுறைக்கு கொண்டுவந்திருந்தால் நிலைமை மோசமாகி இருக்காது.

வருஷாவருஷம் உணவு நெருக்கடியைப்பற்றி பேசவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. விவசாயிகளுக்கு பலவிதமான சலுகைகள் அளிப்பதாகச் சொல்லுகிறார்கள். ஆனால் கொடுக்கக்கூடிய சலுகை அவர்களுக்கு போய்ச்சேறுகிறதா என்று கவனிக்க வேண்டும். விவசாயிகள் பொருள் உற்பத்திபெருக்குவதற்கு திட்டக்கமிஷன் வகுத்த திட்டவட்டமாகச் சொல்லியிருக்கிறார்கள். அதற்குவற்புறுத்தி வந்திருக்கிற ராஜ்ய சர்க்கார் நில்ச்சீர்திருத்தம் அமுலுக்கு கொண்டுவருவதற்கு தயங்கி இருக்கிறார்கள் என்பதை சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். நம்முடைய ராஜ்ய சர்க்கார் அந்தத் தயக்கத்தில் முன்னணியில் இருக்கிறது. விவசாயிகள் பலன் அளிக்கக்கூடியதிட்டத்தை விளக்குகிறார்கள். இரண்டு சட்டங்கள் இன்று நமது சர்க்கார் கொண்டுவந்திருக்கிறார்கள்: ஒன்று நியாயவார சட்டம், இரண்டாவது

[Sri M. Kalyanasundaram] [7th November 1957

விவசாயிகள் குத்தகைதாரர் பாதுகாப்புச்சட்டம். குத்தகைதாரர்களுக்கு பாதுகாப்புசட்டத்தில் இருக்கும் குறைபாடுகளால் பல குத்தகைதாரர்கள் நிலத்திலிருந்து அப்புறப்படுத்தப்பட்டிருக்கிறார்கள். சாகுபடி செய்வதற்கு பல நூற்றுக்கணக்கான ஏக்கர் நில உற்பத்தி செய்யகூடிய நிலைமையில் இருக்கிறது. காவேரி பாயும் பிரதேசத்தில் நிலம் தரிசாக ஒரு வருஷ காலமாக இருந்துவருகிறது. இந்த விவரத்தை கனம் அமைச்சர் அவர்கள் தெரிந்திருப்பார்கள் என்று நினைக்கிறேன். இதை பரிசீலனை செய்ய வேண்டியது அவசியம்.

ஜமீன்தாரி முறை இனாம்தாரி முறைகளை எடுத்துவிட்டு அந்தந்த இனாம் ரயத்துக்களுக்கு பட்டா செய்யவேண்டுமென்று முக்கியமான திட்டம் இருந்தது. அதைப் பிரகடனம் செய்தும் இருக்கிறார்கள். 12 கோடி ரூபாய் நஷ்டயீடாக கொடுக்கவேண்டுமென்றிருக்கிறது. அதைச் செய்ய முடியவில்லை. இரண்டு வருஷத்திற்கு ஒரு முறை இன்னும் ரயத்துக்களை அப்புறப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். குத்தகைதாரர் பாதுகாப்புச் சட்டம் வந்திருக்கிறதே தவிர, அவர்களுக்குத் தகுந்த பாதுகாப்பு அளிக்கப் படவில்லை. இங்கே 5 லட்சம் ஏக்கர் நிலம் இருக்கிறது. அவைகளை அந்த ரயத்துக்கள் கையிலே ஒப்படைக்கப்பட்டால், அந்த நிலங்களை அவர்களுக்குச் சொந்தமாக்கினால், கிணறு தோண்டி பயிரிட்டு நிச்சயமாக உணவு உற்பத்தியை பெருக்குவதற்கு அவர்கள் நல்ல முறையில் பயன்படுத்துவார்கள். நிச்சயமாக உணவு உற்பத்தியை பெருக்குவதற்கு சாத்தியம் ஏற்படும். நன்றாக சாகுபடி செய்வதற்கு வசதி ஏற்படும். இன்னும் 12 கோடி ரூபாய் நஷ்ட ஈடாக கொடுக்கப்படவில்லை. இந்தப் பிரச்னை 10 வருஷ காலமாக ஒத்திப்போடப்பட்டு வருகிறது. இப்படியே இந்த உணவுப் பிரச்னையில் எல்லாம் சர்க்கார் தயக்கம் காட்டிக்கொண்டேதான் வந்திருக்கிறது, அல்லது பயந்து பயந்து நடந்து வருகிறது என்றுதான் சொல்ல வேண்டும்.

உணவுப் பொருள் உற்பத்திச் செய்யும் பிரதேசத்தில்கூட, அதிக லாபம் தரக்கூடிய கரும்பு போன்றவைகளை உற்பத்திச் செய்கிறார்கள் விவசாயிகள் என்று சொல்லுகிறார்கள். இதில் ஓரளவு உண்மை இருக்கிறது. சர்க்கார் புறம்போக்கு நிலத்தை, இனாம் ரயத்து நிலங்களை சாகுபடி செய்திருந்தால் லாபமாக இருக்கும். உணவு பற்றாக்குறையும் ஏற்படாது. இதனால் சர்க்காரின் நீண்டகால திட்டத்திற்கு தயக்கம் ஏற்பட்டிருக்கிறது. உடனடியாக வினியோகிக்க வேண்டிய விளைபொருள்களை பாதுகாத்து கடைசியாக கொள்ளை லாபக்காரர்களிடத்தில் போய் சேருகிற அளவிற்கு விட்டுவிடுகிறார்கள். அவர்கள் உணவு நெருக்கடியான காலத்தில் பதுக்கி வைத்து, அந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ளுகிறார்கள். உணவுப்பொருளை இவர்கள் பதுக்காமல் நியாயமான விலைக்குக் கொடுக்க சர்க்கார் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும்.

நம்முடைய ராஜ்ய சர்க்காரும், மத்திய சர்க்காரும் இந்த உணவு விஷயத்தில் தயக்கம் காட்டிவருகிறார்கள் என்பதை எடுத்துச் சொல்ல வேண்டியிருக்கிறது. ரிசர்வ் பாங்க் கொடுத்திருக்கும் புள்ளி விவரங்களைப் பார்த்தால் மார்ச்சு 31ம்தேதி கையிருப்பு அரிசிக்காக மட்டும் முன் பணமாக கொடுத்திருக்கிற தொகை 23 கோடி ரூபாய் என்று புள்ளி விவரங்கள் குறிக்கிறது. நாட்டில் உணவு நெருக்கடி இருக்கும் சமயத்தில் அரிசி கையிருப்பை வைத்திருக்கக்கூடியவர்களுக்கு இவ்வளவு அதிகமான தொகை கொடுக்கவேண்டிய அவசியம் என்ன என்று கேட்கிறேன். இப்படி இருந்தால் இந்த உணவுப் பற்றாக்குறையை எப்படி சமாளிக்க முடியும்?

இந்த உணவு மண்டலம் ஏற்படுத்தியிருப்பதை நான் வரவேற்கிறேன். இந்த உணவு மண்டலத்தில் தென் பிராந்திய ராஜ்யங்கள் கூடி ஏற்கனவே யோசனை சொன்னார்கள். இதன் மூலமாக இந்த உணவு பிரச்னை சுமுகமாக பரஸ்பர அடிப்படையில் தீர்ப்பதற்கு உதவியாக இருக்கும் என்று நம்புகிறேன். இந்த மண்டல அமைப்பால், மற்ற தென்பிராந்திய ராஜ்யங்களுக்கும் பிரதிகூலமான முறையில் உணவுப் பிரசனை தீர்க்கப்பட வேண்டும். நம்முடைய ராஜ்யத்தில் இவ்வளவு மோசமான நிலைமை ஏற்பட்டாலும்கூட பற்றாக்குறை மூன்று லட்சத்திற்கு மேல் இருக்காது.



7th November 1957] [Sri M. Kalyanasundaram]

இதை நமது ராஜ்ய சர்க்கார் சமாளிக்க முடியவில்லை என்றால், மத்திய சர்க்காரிடமாவது கடன் கேட்டு வாங்கி, சர்க்கார் போட்ட திட்டத்தின் அடிப்படையில் வினியோக முறையிருந்தால் இப்போது சமாளிக்க முடியும்.

ஆகவே, குறைந்தபட்சம் இந்தப் பதுக்கல்காரர்களிடம் உணவு தானியம் போகாதபடி தடுக்க நடவடிக்கைகள் எடுத்தால் இந்த நிலைமை இன்னும் மோசமாகாமல் தடுக்க முடியும் என்பதற்காக சில யோசனைகள் சொல்ல விரும்புகிறேன். நம் ராஜ்யத்தின் உணவுப் பற்றாக்குறை இவ்வளவு பயங்கரமான நிலையில் ஏற்பட்டிருப்பதுடன், நம் நாட்டின் பற்றாக்குறையை போக்க முடியும் என்பதைப் பற்றி மந்திரியவர்களின் புள்ளிவிவரங்களில் இருந்தே தெரிந்து கொள்ளலாம். நம் நாட்டில் விளையும் உணவுப் பொருள்களை வியாபாரிகளும், மில் சொந்தக்காரர்களும், நிலப் பிரபுக்களும் பதுக்கி வைக்க இடம் கொடுக்காமல் அறுவடை காலத்திலேயே கொள்முதல் செய்ய ஒரு திட்டம் இருக்க வேண்டும். அதில், 10 ஏக்கருக்கு குறைவாகவுள்ள விவசாயிகளிடமிருந்து கட்டாயக் கொள்முதல் இருக்கக் கூடாது. பத்து ஏக்கருக்குமேல் நிலம் உள்ள நிலச்சுவாந்தாரர்களிடமிருந்தும், இன்னும் சேமித்து வைத்திருக்கக் கூடிய வியாபாரிகள் இருந்தால் அவர்களிடமிருந்தும், பெரிய வியாபாரிகளோ அல்லது முதலாளிகளோ யாராயிருந்தாலும், யார் ஸ்டாக் செய்து வைத்திருந்தாலும் அவர்களிடமிருந்து அவைகளை எடுக்க சர்க்காருக்கு அதிகாரம் இருக்கிறது, ஆனால் அதை உபயோகப்படுத்த வேண்டும் என்பதுதான் எனது கோரிக்கை. அதே சமயத்தில், அறுவடை காலத்தில் ஒரு கணிசமான அளவிற்கு, விவசாயிகளிடமிருந்து ஒரு நியாயமான விலை வைத்து கொள்முதல் செய்தால் விலைவாசி உயரும்போது சர்க்கார் ஸ்டாக்கில் அதைக் கொண்டு வந்து விற்பதால் விலையேற்றத்தை தடுக்க முடியும். உணவு நெருக்கடி ஏற்படும் என்ற பீதியும் மக்களிடம் ஏற்படாது. பெரிய வியாபாரிகளுக்கும் அது அச்சத்தைக் கொடுக்கும். அப்படிப்பட்ட ஒரு நடவடிக்கையை எடுக்க சர்க்கார் தவறுகிறது. அப்படிப்பட்ட நடவடிக்கையை இந்த ஆண்டிலாகட்டும், அல்லது கழிந்த ஐந்தாண்டு காலத்திலாகட்டும் அப்படிப் பட்ட நடவடிக்கையை சர்க்கார் எடுத்திருக்கிறார்களா? ஆனால் அப்படி உணவு நெருக்கடியைத் தீர்க்க சர்க்கார் போதிய நடவடிக்கை எடுக்கவில்லை. ஆனால் சர்க்கார் எதிர்திசையில்தான் நடவடிக்கைகள் எடுக்கிறார்கள். பாடுபடும் விவசாயி தனது உரிமைக்காக போராடும்போது அவர்கள் மீது தான் போலீஸை ஏவுகிறார்கள். ஆனால் உணவுதான்யங்களைப் பதுக்கி வைத்து அதிக லாபம் சம்பாதிக்க விரும்பும் வியாபாரிகளின் மீது, பதுக்கல் காரர்களின் மீது போலீஸை ஏவுகிறார்களா என்றால் இல்லை. ஆகவே, நான் சொல்வது என்னவென்றால், அப்படிப்பட்ட பதுக்கல்காரர்களின் மீது போலீஸ்-ஐ ஏவிவிட போலீஸ் அமைச்சர் தயங்கக் கூடாது என்று நான் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்: அது, தமிழ்நாட்டு வியாபாரியாயிருந்தாலும் சரி, அல்லது ஆந்திர வியாபாரியாய் இருந்தாலும் சரி. எனக்கு கிடைத்திருக்கும் விவரங்களில் இருந்து தெரிவது என்னவென்றால், நம் ராஜ்யத்தில் விளையக்கூடிய பொருள்களை நம்முடைய வியாபாரிகள் மட்டுமல்ல, இதர ராஜ்யங்களில் இருந்துகூட வியாபாரிகள் வந்து கொள்முதல் செய்து அதை பதுக்கி வைத்து நம் ராஜ்யத்திலேயே அதை திரும்பவும் அதிக விலைக்கு விற்கும் ஒரு துர்பாக்கியகரமான நிலையை நாம் பார்க்கிறோம். தமிழ் நாட்டிலிருந்து கேரள ராஜ்யத்திற்கு அதிக உணவுப் பொருள்கள் போகிறதால் உணவு நிலைமை மோசமாகி வருகிறது என்ற அபிப்பிராயம் மந்திரிகளுக்கே, இருக்கிறதோ என்னவோ தெரியாது. அதற்கு அரசியல் காரணம் இருந்தாலும் இருக்கலாம். எனக்கு அதைப் பற்றி கவலையில்லை, தனக்கு மிஞ்சிதான் தானமும் தர்மமும் என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். நம் நாட்டு மக்களுக்கு உணவு தான்யம் கொடுக்க வேண்டிய தீவிர நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். கேரள ராஜ்யம் வேறு தேசத்தில் இருக்கக் கூடிய ராஜ்யம் அல்ல. அங்குள்ளவர்களும் நம் மக்கள்தான். அவர்களிடம் உள்ளதை அவர்களும் பங்கு போட்டு எடுத்துக் கொள்வதற்குள்ள சுதந்திரமும், உரிமையும் உண்டு. அப்படித்தான் கேரளா பக்கம் செல்லும் தண்ணீரை தமிழ்நாடு பக்கம் விடவேண்டுமென்ற கோரிக்கையை நாம் வற்புறுத்திக் கொண்டிருக்கிறோம். அப்படி நாம் பரஸ்பரம் ஒற்றுமையோடு இருக்க வேண்டிய சமயத்தில் கேரளாவிற்கு அரிசி போவதினால்தான் உணவு நிலை

மோசமாகி வருகிறதிற்கு காரணம் என்ற அர்த்தத்தில் மந்திரியவர்கள் பேச வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். கன்னியாகுமரியில் அதிகம் அரிசி இருக்கலாம். அதைச் சென்னைக்குக் கொண்டு வருவது புத்திசாலித்தனமா இல்லை. நெல்லூரிலிருந்து அரிசியைக் கொண்டு வருவது புத்திசாலித்தனமா ? கன்னியாகுமரியில் விளைகிறதை திருநெல்வேலிக்கோ அல்லது திருவனந்தபுரத்திற்கோ கொண்டுபோகலாம். ஆந்திர பிரதேசம் ஒரு சர்ப்பிளஸ் பிரதேசமாகும். அப்படி சர்ப்பிளஸ்ஸாய் இருக்கக் கூடிய பிரதேசம் சென்னைக்கு அருகில் இருக்கிறது. அங்கிருந்து அரிசி இங்கு வரவில்லை என்று நேற்று மந்திரியவர்கள் கொடுத்த புள்ளிவிவரங்களில் இருந்து தெரிகிறது. இது மாத்திரமல்ல. இங்கு நெல்லை பதுக்கி வைக்கிறார்கள். அவர்களின் மேல் அமைச்சர் அவர்களுக்கு கோபமில்லை. ஆனால் கேரளத்திற்கு செல்லும் அரிசி மீதுதான் மந்திரியவர்களுக்கு கோபம் வருகிறது. (**The Hon. Sri M. Bhaktavatsalam**: கோபமில்லை.) இல்லை, அப்படி ஒரு அபிப்பிராயம் மக்களிடம் வர வேண்டுமென்று,அப்படி பேசினார்களோ என்று தெரியவில்லை. கேரளாவிற்கு நம் அரிசி போகிறது, ஆந்திராவிலிருந்து நமக்கு அரிசி வரவில்லை, அதனால்தான் நிலைமை மோசமாகி விட்டது என்று சொன்னார்கள். நான், ஆந்திரா சர்க்காரை குறை கூற மாட்டேன். மந்திரியவர்கள் என்ன நினைத்தாலும் நினைத்துக் கொள்ளட்டும். ஆந்திராவில் உள்ள வியாபாரிகளின் ஒழுக்கத்தைப் பற்றி அவர்களுக்கும் கட்டுப்பாடு கிடையாது. ஜனங்கள் எவ்வளவு கஷ்டப்பட்டாலும், அல்லது பட்டினி கிடந்தாலும் வியாபாரிகளுக்கு லாபம் கிடைத்தால் போதும், என்று வியாபாரிகள் கிராதகர்களாக இருந்து வரும் சூழ்நிலை இருக்கிறது. தமிழ் பேசும் வியாபாரிகளாய் இருக்கட்டும், அல்லது தெலுங்கு பேசும் வியாபாரிகளாய் இருக்கட்டும், அவர்கள் சொந்த லாபத்திற்காக வேண்டி, பாங்க் பண வசதி பெற்று அவர்கள் தானியத்தை இம்மாதிரி பதுக்கி வைத்து பொது ஜனங்களையும், சர்க்காரையும் ஏமாற்றும் முறையில் செய்யாமல் இருப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை சர்க்கார் எடுக்க வேண்டும். வியாபாரிகளிடம் உள்ள ஸ்டாக்கை எடுக்க சர்க்காருக்கு அதிகாரம் வேண்டும். அறுவடை காலத்தில் குறைந்தபட்ச விலை வைத்து கொள்முதல் செய்யவேண்டும். அப்பொழுதுதான் விவசாயிகள் இடையே ஒரு போட்டி ஏற்படாமல் பார்த்துக்கொள்ள முடியும். இதனால் விவசாயிகளுக்கு நியாயவிலை கிடைக்காது என்று கருத்திருமன் அவர்கள் கூறினார்கள். உணவு விலை ஏறக் கூடாது என்று சொல்வது அவர்களுக்கு எதிராகச் சொல்லும் யோசனை என்று அவர்கள் நினைக்கிறார்கள். விவசாயம் லாபகரமாக நடக்க, உணவு உற்பத்தியைப் பெறுக்கக் கூடிய முறையில் விவசாயிகளுக்கு நியாயமான வசதி செய்து கொடுக்கப்படவேண்டும். விலைவாசி மிக அதிகமாக உயரக் கூடாது. ஒரே பிரதேசத்தில் அறுவடை காலத்தில் மூட்டை 10, 12 ரூபாயாக விற்று நான்கு மாதங்கள் கழிந்த பிறகு 19, 29 ரூபாய் என்று சொல்லி, இவ்வளவு அதிகமாக வித்தியாசம் ஏற்படக்கூடிய முறையில் விலைவாசியில் ஏற்றத்தாழ்வு ஏற்படக் கூடாது. அதை தடுக்க வேண்டும். இதெல்லாம் ஆண்டவன் பார்த்துச் செய்யக் கூடிய காரியமல்ல. சர்க்காரே செய்ய முடியும், ஆனால் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டிய சமயத்தில் எடுக்கப்படாததால்தான் இப்படி ஏற்படுகிறது. விலை மிக குறைந்தால் விவசாயிகள் கஷ்டப்படவேண்டிவரும், ஆனால் அதை வாங்கி உபயோகிக்கும் மக்களுக்கு நல்லது. இல்லை, விலை ஏறிவிட்டால் அதை வாங்கி உபயோகிக்கும் மக்கள், நகரத்தில் தங்களுக்கு வரும் வெறும் வருமானத்தையே நம்பி வாழும் மக்கள் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே ஜனங்களுக்கு சாதகம் செய்யவேண்டுமானால் விவசாயிகள் கஷ்டப்படவேண்டி வரும், விவசாயிகளுக்கு சாதகம் செய்யவேண்டுமானால் ஜனங்கள் கஷ்டப்படவேண்டி வரும் என்ற விதத்தில் கொள்கை இருக்கக் கூடாது. கொள்முதல் செய்வதின் மூலம் அதிகம் சம்பாதிக்க வேண்டுமென்று நினைக்கிற வியாபாரிகளிடம் இருந்து மக்களை விடுவிக்க வேண்டும். பதுக்கல் முறையை கையாளக் கூடிய வியாபாரிகள் பொதுமக்களையும், விவசாயிகளையும் ஏமாற்றுகிறார்கள். அப்பேர்ப்பட்டவர்களின் கரத்திலிருந்து மக்களையும், விவசாயிகளையும் விடுவிக்க வேண்டும். சர்க்காரே கொள்முதல் செய்ய வேண்டும். அறுவடை காலத்திலும் சரி, மற்ற காலத்திலானாலும் சரி, 10 சத விகிதம் வேண்டுமானால் வித்தியாசம் இருக்கலாம். பெரிய ஏற்றதாழ்வு இல்லாத முறையில்





கொள்முதல் செய்யவேண்டும். இந்தக் தீர்மானம் எல்லோரும் ஏகோபித்து ஆதரிக்கவேண்டிய ஒரு தீர்மானம். கட்சி வித்தியாசம் இருக்கவேண்டிய அவசியமில்லை. மூன்று நோக்கங்களும் பொதுவான நோக்கங்கள் நான். "**Increase food production in the State**" நம்முடைய ராஜ்யத்தில் உணவுப் பொருள் உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்பது. அதில் காங்கிரஸானாலும், கம்யூனிஸ்டானாலும் மற்றவர்களானாலும் வித்தியாசம் இருக்க முடியாது. "**Stabilisation of prices at reasonable levels and for taking preventive measures against speculation**" "ரீஸனபில் லெவல்"—கருத்திருமன் அவர்கள் நியாயமான அளவில் இருக்கும்படி விலையை நிர்ணயம் செய்யவேண்டுமென்று சொன்னார்கள். அதைத்தான் பழனிசாமி அவர்களும் சொல்லியிருக்கிறார், தொழிலாளிக்ளுக்கு மட்டும் நியாயமாய் இருக்க வேண்டுமென்று அவர்கள் சொல்லவில்லை. பழனிசாமி அவர்கள் பேசும்போது கருத்திருமன் அவர்கள் இங்கு இல்லை. நியாயமாக இருக்கக்கூடிய முறையில் விலையை சம நிலைக்குக் கொண்டு வரவேண்டும். "**Stabilisation of prices at reasonable levels**" வியாபார சூதாட்டம் செய்யும் வியாபாரிகளுக்கு எதிராக தக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். இதிலும் அபிப்பிராய வித்தியாசம் இருக்க முடியாது. அடுத்தபடி, "பேர் ப்ரைஸ் ஷாப்ஸ்" திடீரென்று நியாய விலைக் கடைகளை மூடுவது சரியல்ல.

இப்போது சர்க்கார் பாதி கடைகளை மூடி விட்டார்கள். மத்திய சர்க்கார் கோட்டாவை பாதியாக குறைத்துவிட்டார்கள் என்று சொல்லுகிறார்கள். உண்மை அப்படியல்ல. இந்த அரசாங்கத்திற்கு நாலாயிரம் டன் கடனாக கொடுத்து வருகிறார்கள். மத்திய சர்க்காரின் உத்தரவை வைத்துக்கொண்டு திடீரென்று இம்மாதிரி நியாய விலை கடைகளை மூடி விட்டால் வியாபாரிகளுக்கு உற்சாகம்தான் ஏற்படும். ஆகவே இந்த மாதிரியான நிலைமை தீரும் வரையிலும் ஒரு உத்திரவாதம் இருக்கவேண்டும். இந்த அளவிற்கு நம்முடைய ராஜ்யத்திற்கு கண்டிப்பாக ஒதுக்கியாக வேண்டும். அதற்காக ராஜ்ய சர்க்கார் வற்புறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

**THE HON. SRI M. BHAKTAVATSALAM** : கனம் உதவி சபா நாயகர் அவர்களே, இந்த விவாதத்தை நான் வரவேற்கிறேன். இந்த விவாதம் நிலைமையை விளக்கிச் சொல்லுவதற்கு அரசாங்கத்திற்கு ஒரு சந்தர்ப்பத்தை அளிக்கிறது. விவாதமோ உணவுப் பிரச்னையைப்பற்றியது. எல்லாம் உணவுப் பிரச்னையிலேயே இருக்கிறது. "பசி வந்திட பத்தும் பறந்து போகும்" என்று சொல்வது போல் உணவு பிரச்னையானது மிகவும் முக்கியமானதாகும். உணவு பிரச்னையைப்பற்றி பல விஷயங்களை இங்கு குறிப்பிட்டார்கள். முதலில் தீர்மானத்தை பிரேரேபித்த கனம் அங்கத்தினர் அவர்கள் கனம் சபா நாயகர் அவர்கள் சொன்னது மாதிரி இந்த விஷயத்திற்கு அப்பாற்பட்ட பல விஷயங்களைப்பற்றியும் குறிப்பிட்டார்கள். நான் அதை குறை என்று சொல்லவில்லை. எல்லா விஷயங்களிலும் நமக்கு அக்கறை இருக்கிறது. ஆனால் எதிர் கட்சியில் இருக்கின்ற சிலர் இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்திக்கொண்டு அரசாங்கத்தை குறை சொல்ல வேண்டும் என்று அரசாங்கம் அதை செய்யவில்லை, இதை செய்யவில்லை, பல விஷயங்களில் தவறிவிட்டார்கள் என்றெல்லாம் பேசினார்கள். அதைப்பற்றியும் நான் குறை கூறவில்லை. அதுவும் அரசாங்கத்திற்கு இருக்கின்ற நிலைமையை எடுத்து விளக்குவதற்கு சந்தர்ப்பத்தை அளித்திருக்கின்றது. உணவு பிரச்னையை தீர்க்கும் வகையில்தான் விவசாய அபிவிருத்தி பிரச்னையும் இணைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் ஒன்று மட்டும் சொல்ல விரும்புகிறேன். விவசாய அபிவிருத்தியை பொறுத்தமட்டில் உணவு பிரச்னையை சமாளிப்பது என்றால் அது விவசாய அபிவிருத்தியை பொறுத்துதான் இருக்கிறது என்பதை நாம் கவனத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். நாட்டில் பொருளாதார நிலைமையை உயர்த்துவதற்கும் விவசாய அபிவிருத்தி அவசியமாக இருக்கிறது. உணவு தேவையை பூர்த்தி செய்வதற்கு மட்டுமல்லாமல் பொருளாதார நிலைமை உயருவதற்கும் விவசாய அபிவிருத்தியில் கண்ணோட்டம் செலுத்தியாக வேண்டியிருக்கிறது. கனம் எதிர்கட்சி தலைவர் அவர்கள் குறிப்பிட்டார்கள், 12-31 p.m.

உணவு பிரச்னை விஷயத்தில் அரசாங்கத்தின் கொள்கை என்ன ? ஸோனல் ஏற்பாடு செய்தபின் என்ன நிலைமையில் இருக்கிறது ? அதன் பின் உணவு நிலைமை சரியாகிவிட்டதா என்று கேட்டு அதற்கு விளக்கம் கேட்டார்கள். மற்ற அங்கத்தினர்களும் இதைப்பற்றி கேட்டார்கள். நான் முதலில் ஒன்று சொல்ல விரும்புகிறேன். மைசூர், சென்னை, கேரளம், ஆந்திரம் இந்த நான்கு ராஜ்யங்களும் சேர்ந்து இந்த உணவு பிரச்னையை சமாளிக்கும் விஷயத்தில் ஒரு ஸோன் என்று ஏற்பாடு செய்யப்பட்டது. இவ்விதம் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்றால் அதனுடைய அடிப்படையான கருத்து, முக்கியமான கருத்து, இந்த நான்கு பிராந்தியங்களின் எல்லைகளுக்கு அப்பால் வெளியே உணவுப் பொருட்கள் மத்திய அரசாங்கத்தின் உத்தரவின்றி ஏற்றுமதி செய்யக் கூடாது என்பதுதான் அடிப்படையானது. இதுதான் அடிப்படை யான நோக்கம். இதை செயவதற்கு காரணம் இதற்கு முன்பு இந்த நாடுகளிலிருந்து வெளி ராஜ்யங்களுக்கும் வடக்கு ராஜ்யங்களுக்கும் அதிக மாக உணவுப் பொருட்கள் ஏற்றுமதியாகி போய்க் கொண்டிருந்தது. இங்கேயே அதாவது இந்த நான்கு ராஜ்யங்களுக்குள்ளேயே போதாது என்றிருக்கும்போது அல்லது ஏறக்குறைய சரியாக இருக்கும்பொழுது அதிக விலை கிடைக்கிற காரணத்தால் வேறு இடங்களுக்கு எல்லாம் ஏராள மாக ஏற்றுமதியாகி கொண்டிருந்தது. அப்படி ஏற்றுமதியாகி கொண் டிருக்கும் பொழுது இந்த உணவுப் பொருட்கள் எல்லாம் கள்ளத்தனமாக வெளிநாடுகளுக்கும் போய்க் கொண்டிருக்கிறது என்ற புகார் சொல்லப் பட்டது. முதலில் நிலைமையை சமாளிப்பதற்கு இந்த ஸோன் நான்கு ராஜ்யங்களுக்கும் இருக்க வேண்டும் என்று மத்திய அரசாங்கம் கருதியது. அப்போதுங்கூட இந்த நான்கு ராஜ்யங்களுக்குள் இருந்த ஒரு சிலருக்கு அதிக விலை கிடைக்குமே என்று வாதாடினார்கள். அது ஏற்றுக்கொள்ள வில்லை. ஸோனலுக்கு அப்பால் செல்லக்கூடாது என்பதுதான் முக்கிய மான ஏற்பாடு. அது இன்றும் அனுசரிக்கப்பட்டு வருகிறது. மத்திய அரசாங்கத்தின் அனுமதியின் பேரில் இந்த ராஜ்யத்தின் தேவைக்கு பின்னால்தான் வெளியில் போக முடியும். இது வரையிலும் வெளியில் போக வில்லை. தீர்மானத்தை கொண்டு வந்த பழனிசாமி அவர்கள் சொன்னார்கள். இந்த ஸோனல் ஏற்பாடு வந்ததினால் என்ன பயன் ? விலை அதிகமாய் போய் விட்டதே என்று குறிப்பிட்டார்கள். நான் இதற்கு சொல்ல விரும்புவது என்ன வென்றால், இந்த ஸோன் ஜுலை மாதத் தில் ஏற்பட்டது. அப்போது இந்த ராஜ்யத்தில் சராசரி விலை மணங்குக்கு 18·77 ரூபாயாக இருந்தது. இப்போது நமது ராஜ்யத்தில் சரா சரி மணங்குக்கு விலை 18·50 ரூபாய்தான். ஆகவே ஸோன் வந்த பிறகு விலை அதிகமாக ஏறிவிட்டது என்று சொல்வதற்கில்லை. இருந்தாலும் இந்த விலை பாதகம் இல்லை என்று நான் சொல்லவில்லை. இந்த விலை அதிகம் என்றுதான் சொல்லுவேன். வாங்கும் சக்தியை நாம் பார்க்க வேண்டும். அந்த வாங்கும் சக்தியை எடுத்துக்கொண்டு பார்ப்போமானால் இந்த விலை அதிகம் என்பதுதான் அரசாங்கத்தின் கருத்து, என்னுடைய கருத்தும் அவ்விதம்தான். இந்த விலை இனியும் குறைய வேண்டும். இதன் விலை பதினான்கு ரூபாயாக குறைந்தால்கூட நான் வரவேற்பேன். ஆனால் அதற்கு மேலும் குறையக்கூடாது. அதற்கு மேலும் குறைந்தால் விவசாயிகள் பாதிக்கப்படுவார்கள். அவ்வாறு குறைந்தால் அதற்கான வேலைகளை சர்க்கார் செய்ய வேண்டும். அப்போது குறைந்த விலை இவ் வளவு என்று சர்க்கார் நிர்ணயித்து, அந்த தான்யங்களை வாங்கி விவசாயி கள் பாதிக்கக்கூடாத முறையில் ஏற்பாடுகள் செய்ய வேண்டும் என்கின்ற முடிவு இந்த அரசாங்கத்தினிடம் இருக்கிறது. ஆனால் ஏதோ விவசாயி களுக்கு லாபம் வருகிறது. இப்போதுள்ள விலை 18·50 என்பதே இருக் கட்டுமே, விவசாயிகளுக்கு எல்லா சாமான்களும் அதிக விலை கொடுத்து வாங்க வேண்டியிருக்கிறது. அவர்களுக்கு செலவு அதிகமாக இருக்கிறது என்று பல அங்கத்தினர்கள் சொன்னார்கள். நாம் வேறு ஒரு காரி யத்தை பார்க்க வேண்டும். இந்த நாட்டில் நிலத்தை வைத்துக்கொண் டிருக்கின்றவர்கள் குறைவு, நிலச் சொந்தக்காரர்கள் குறைவு, நிலம் இல்லாமல் வெளியிலிருந்து வாங்கி சாப்பிடுகின்றவர்கள்தான் அதிகம். அவர்களுடைய நிலைமையைத்தான் நாம் கவனிக்க வேண்டும். இதனால் விவசாயிகள் பாதிக்கப்படக்கூடாது. இன்றைக்கு உற்பத்தி அதிகரிக்கு



மானால் தானாகவே விலை குறையும். இவ்விதம் விலை குறைந்தால்
உற்பத்தி செய்கின்ற விவசாயிகளுக்கும் பாதகம் இல்லை என்று வரும்.
அந்த வகையில்தான் இன்று நாம் கவனம் செலுத்த வேண்டியவர்
களாக இருக்கிறோம். இவ்விதம் விலை அதிகமானால் ஏன் அதிகமாக
பதுக்கி வைக்கிறார்கள் ? விலை கூடுதலுக்கு காரணமாயிருக்கின்ற பெரிய
நில சுவான்தார்களை, பெரிய வியாபாரிகளை ஏன் பிடித்து வைக்க வில்லை,
ஏன் அவர்கள் பேரில் நடவடிக்கை எடுத்துக்கொள்வதில்லை என்று
கடைசியில் பேசின அங்கத்தினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இம்மாதிரி
பதுக்கி வைத்திருப்பவர்களை பாதுகாக்க வேண்டும் என்ற எண்ணம்
அரசாங்கத்திற்கு சிறிதளவும் இடையாது. மூன்று மாதங்களுக்கு முன்
ஒரு சட்டம் இயற்றப்பட்டது. இவ்விதம் யாராவது பதுக்கி வைத்திருக்கிறார்
கள் என்றால் அவர்களிடமிருந்து சர்க்கார் கட்டாயமாக ஒரு குறிப்பிட்ட
விலைக்கு வாங்கி கொள்வது என்று சட்டம் இயற்றப்பட்டிருக்கிறது. இந்த
சட்டத்தை நமது ராஜ்யத்திலும் பிரயோகிப்பதற்கான வேண்டிய ஏற்பாடு
கள் செய்யப்பட்டு வருகிறது. அந்த சட்டத்தின்படி நடவடிக்கை எடுத்துக்
கொள்வதற்கு இந்த அரசாங்கத்திற்கு மாத்திரமல்ல ; பல அதிகாரி
களுக்கும் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த சட்டத்தின்படி, இந்த
சட்டம் செப்டம்பர் மாதம் நிறைவேற்றப்பட்டது. இதில் இருக்கின்ற முறை
என்னவென்றால் தொடர்ந்தாற்போல் மூன்று மாதங்களாக இருக்கும்
விலையிலிருந்து மேலே போகுமானால் இந்த சட்டத்தை பிரயோகிக்க
வேண்டுமென்றிருக்கிறது. ஆகவே அவ்வாறு விலை அதிகப்படுமானால்
பொது மக்களுக்கு நிவாரணம் அளிக்கும் வகையில் அதற்காக இயற்றப்
பட்டதுதான் இந்த சட்டம். அந்த மாதிரி, இந்த ராஜ்யத்தைப் பொறுத்த
வரையில் அரிசியின் விலையை நாங்கள் அப்போதைக்கப்போது கவனித்துக்
கொண்டுதான் வருகிறோம். இதுவரையில், இங்கே அந்தச் சட்டத்தில்
குறிப்பிடப்பட்டுள்ள அளவிற்கு அவ்வளவு தூரம் உயரவில்லை.
'ஸோன்'-க்கு ஏற்பாடு செய்யப்பட்டபோது என்ன விலையில் அரிசி இருந்தது
என்பதையும் இப்போது என்ன விலையில் இருக்கிறது என்பதையும்
பார்க்க வேண்டும். விலை அதிகமாகலாம். விலை ஏறினால் அதைக்
குறைக்கத்தான் வேண்டும். இருந்தாலும் அப்போது இருந்த விலையைவிட
இப்போது விலை அதிகமாகவில்லை. இப்போது கொஞ்சம் விலை குறைந்தே
இருக்கிறது. இதில்தான் அரசாங்கத்தின் கஷ்டம் இருக்கிறது. அதாவது,
விலை உயரவில்லை என்பதால் நாம் அரிசியை வாங்கிக்கொள்ளலாம்
என்றால், எந்த விலைக்கு வாங்குவது ? இப்போதைய மார்க்கெட் விலைக்கு
வாங்க முடியாது. அப்படி இருந்தாலும் இன்னும் விலை உயரும். அதை
யும் பார்க்க வேண்டுமென்று அரசாங்கம் எண்ணுகிறது. குறுவை நெல்லை
வாங்கலாமா என்று அரசாங்கம் யோசித்தது. ஆனால், "குறுவையில்
அதிகம் கிடைக்காது. அதை அரசாங்கம் எடுத்துக்கொண்டால் அதன்
விலை அதிகமாகலாம். இப்போது எடுத்துக்கொள்ள வேண்டாம்" என்று
அரசாங்கம் தீர்மானித்தது. ஆனால், வருகின்ற சம்பா அறுவடையில்
உரிய தானியத்தை அரசாங்கம் வாங்கலாம் என்ற அடிப்படையில் இப்போது
ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. அவ்வாறு அரசாங்கம் வாங்குவது
என்றால், விலையை நிர்ணயித்து, யாரிடமிருந்தும்—பெரிய நிலச்சுவான்
தார்களாக இருந்தாலும் சரி, மார்க்கெட்டில் என்ன விலை இருந்தாலும்
சரி, அந்த விலைக்குத்தான் வாங்கும். அந்த ஏற்பாடு பழைய கன்ட்
ரோலை ஓரளவிற்குக் கொண்டுவருவதாகத்தான் இருக்கும். அப்படிப்பட்ட
கன்ட்ரோலைக் கொண்டுவந்தால் பல காரியங்களை நிறைவேற்றலாம்.
கன்ட்ரோல் வேண்டாம் என்று சபை அங்கத்தினர்கள் சொல்வதையும்
நாங்கள் கவனிக்கிறோம். கன்ட்ரோலைத் தவிர்க்க முடியாது என்ற சூழ்
நிலை ஏற்படும் வரையில் கன்ட்ரோலைக் கொண்டுவர வேண்டாம். கன்ட்
ரோல் இல்லாதபோது விவசாயிகளும் மற்றவர்களும் புகார்கள் கூறினார்கள்.
கன்ட்ரோலைத் தவிர்க்கக்கூடிய நிலையில் அதைக் கொண்டு வரவேண்டாம்
என்பது தான் நம் கருத்து. ஆகவே, கன்ட்ரோல் இல்லாத வகையில்
என்ன நடவடிக்கைகளை எடுக்க முடியுமோ அந்த நடவடிக்கைகளை அர
சாங்கம் எடுத்துத்தான் வருகிறது. கேரள ராஜ்யத்திற்கு நம்முடைய
ராஜ்யத்திலிருந்து அரிசி அதிகமாக ஏற்றுமதியாகிறது என்பது குறிப்
பிடப்பட்டபோது கடைசியாகப் பேசிய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவருக்கு
கொஞ்சம் சுறுக்கென்றிருந்தது. வேறு எந்த ராஜ்யத்தை யாவது குறிப்

[Sri M. Bhaktavatsalam] [7th November 1957

பிட்டிருந்தால் அவருக்கு அப்படித் தோன்றி யிருக்காது. ரொம்ப **touchy** யாக இருப்பது சில பேருக்கு சகஜம் தான். ஆனால் அவரை விட எனக்கு கேரள ராஜ்யத்தில் அக்கறை உண்டு. காரணம், இங்கே பரம்பிகுளம் தண்ணீர் வருகிறது என்பதால் அல்ல. எந்தக் கட்சியாக இருந்தாலும், யார் ஆளுவதாக இருந்தாலும், எந்த மக்களையும் எந்த அரசாங்கத்தையும் அவசியமில்லாமல் குறை கூறக் கூடாது. இப்போது கேரளாவைப் பற்றி குறைகூறுவதற்கு அவசியமில்லை என்று நான் சொல்வேன். கேரள அரசாங்கத்தைப் பற்றியோ, கேரள மக்களைப் பற்றியோ நான் குறை கூறவில்லை. ஆந்திர அரசாங்கத்தைப் பற்றியோ ஆந்திர மக்களைப்பற்றியோ நான் குறை கூறவில்லை. நான் குறை கூறுவதெல்லாம், வியாபாரிகளைப் பற்றித்தான். ஆனால், வியாபாரிகளைப்பற்றியும், பொதுவான கண்டனத் தீர்மானத்திற்கு அவசியமில்லை. வியாபாரிகள் சில சமயங்களில் 'ஸ்பெகுலேஷன்'-ல் இறங்குகிறார்கள். கேரள நாட்டிற்கு எவ்வளவு அரிசி வேண்டி யிருக்கும் என்று மதிப்பிட ஆரம்பிக்கிறார்கள். அந்த விஷயத்தை யெல்லாம் அரசாங்கம் செய்யும். தஞ்சாவூர் வியாபாரிகள், கேரள நாட்டில் வாங்கும் சக்தி அதிகமாக இருக்கிறதா என்று பார்க்கிறார்கள். சிதம்பரம், கடலூர் முதலிய இடங்களுக்கெல்லாம் சென்று அரிசியை வாங்கி லாபத்துக்கு விற்கிறார்கள். லாபம் சம்பாதிக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் வியாபாரிகள் பல காரியங்களைச் செய்கிறார்கள். இந்தக் காரியங்களைப் போட்டி போட்டுக்கொண்டு செய்கிறார்கள். இந்த நிலையில் அரிசிப் பற்றாக் குறைக்கு இந்த அரசாங்கத்தார் சமாதானம் கூறவேண்டுமானால் 'ராஜ்யத்தில் எவ்வளவு நெல் உற்பத்தி செய்யப்பட்டது' என்ற புள்ளி விவரத்தை கொடுக்காமல், வேறு என்ன சமாதானத்தைச் சொல்வது? நிலைமையை விளக்க வேண்டியது அரசாங்கத்தின் கடமை. நிலைமையைப் பற்றி சபைக்கு எடுத்துச் சொல்ல வேண்டியது என் கடமை. அந்த முறையில் பேசுகின்றேனே தவிர, கேரள மக்கள் மீதோ கேரள அரசாங்கத்தார் மீதோ நான் குறை கூறவில்லை. 'எல்லோரும் நன்றாகச் சாப்பிட வேண்டும்' என்று எண்ணுவது தமிழ் நாட்டின் பண்பு. 'நாம் சாப்பிட வேண்டும்; மற்றவர்கள் பட்டினி கிடக்க வேண்டும்' என்பது நம் பண்பு இல்லை என்று முதலில் சொல்லிக் கொள்கிறேன்.

சாதாரணமாக நம் ராஜ்யத்தில் அரிசிப் பற்றாக் குறை, வருஷத்தில் $1\frac{1}{2}$ லட்சம் டன் என்று முன்பே சொன்னேன். மழை தவறினாலோ அல்லது வேறு இடையூறுகள் ஏற்பட்டாலோ இந்தப் பற்றாக் குறை 3—4 லக்ஷம் டன்கள் கூட ஆகும். ஒன்றரை லக்ஷம் டன் பற்றாக் குறை இந்த ராஜ்யத்திலிருந்த போது ஆந்திராவிலிருந்து நமக்கு அரிசி வந்து கொண்டிருந்தது. அதே சமயத்தில் நம் ராஜ்யத்திலிருந்து கேரளாவிற்கு 50,000 டன் அரிசி போகும். இது சராசரியாக இருப்பதை நான் பார்த்தேன். சென்ற மூன்று ஆண்டுகளாக பற்றாக் குறை அப்படியே இருக்கிறது. கடந்த மூன்று வருஷங்களில் இங்கே சுமாராக மழை பெய்தது. இந்த வருஷம் வடகிழக்குப் பருவ மழை பொய்த்து விடுமோ என்று சந்தேகப்பட்டோம்; ஆனால் வடஆற்காடு, தென்னாற்காடு ஜில்லாக்களில் ஓரளவு பெய்திருக்கிறது; கார்த்திகை மாதத்திற்குள் போதிய அளவு மழை பெய்துவிடும் என்று எதிர் பார்க்கிறேன். இந்த ஆண்டு **normal year** ஆக இருக்கும் என்று எதிர்பார்க்கிறேன். 1954–55-ல், தஞ்சாவூரிலிருந்து கேரளாவிற்கு 113,000 டன் அரிசி ஏற்றுமதியானது; ஆந்திராவிலிருந்து சென்னைக்கு 92,000 டன் அரிசி வந்தது. 1955–56-ல், தஞ்சாவூரிலிருந்து கேரளாவிற்கு 198,000 டன் அரிசி ஏற்றுமதியானது; ஆந்திராவிலிருந்து சென்னைக்கு 34,000 டன் அரிசி வந்தது. 1956–57-ல் தஞ்சாவூரிலிருந்து கேரளாவிற்கு 249,000 டன் அரிசி ஏற்றுமதியானது; 33,000 டன் அரிசி ஆந்திராவிலிருந்து சென்னைக்கு வந்தது. ஆகவே, 1956–57-ம் வருஷத்தில் நம் ராஜ்யத்திலிருந்து $2\frac{1}{2}$ லக்ஷம் (2·49 லட்சம்) டன் அரிசி கேரளாவிற்குப் போயிருக்கிறது. நம் ராஜ்யத்திலிருந்து ஏற்றுமதியாகிறது என்றாலே ஒரு விசேஷம். மேலும், ஆந்திராவிலிருந்து நம் ராஜ்யத்திற்கு அரிசி வருகிற தென்றால் அதுவும் சந்தோஷமானது தான். சாதாரணமாக நமக்கு $1\frac{1}{2}$ லக்ஷம் டன் அரிசி பற்றாக் குறை; $2\frac{1}{2}$ லக்ஷம் டன் அரிசி சாதாரணமாக கேரளாவிற்குப் போய்க்கொண்டிருந்தது. நாம் பற்றாக் குறையை எப்படி சமாளிக்கிறோம்? இங்கே



7th November 1957] [Sri M. Bhaktavatsalam]

நெல் உற்பத்தி ஓரளவு பெருகித்தான் இருக்கிறது; அதை மறுக்க முடியாது. ஒரு கனம் அங்கத்தினர் கூறியபடி, உணவுப் பொருள் உற்பத்தி பெருகுவதுடன் மக்கள் உற்பத்தியும் பெருகி வருகிறது. மக்கள் உற்பத்தி பெருகுவதுடன் வாழ்க்கைத் தரமும் ஓரளவு உயருகிறது. ஆறு அவுன்ஸ் அல்லது 7 அவுன்ஸ் உட்கொள்ளப்பட்டு வந்தது போய், இப்போது மக்கள் 12 அவுன்ஸ் அரிசி உட்கொள்கிறார்கள் என்றுதான் கருதுகிறேன்; அவ்வாறு மதிப்பிடுகிறேன். மேலும், ராஜ்யத்தில் கஷ்டம் ஏற்பட்டபோது கொஞ்சம் கோதுமை சாப்பிட்டுப் பழகி யுள்ளவர்கள் கூட இப்போது 'அரிசியே சாப்பிடுவோம், அதுதான் **fashion**' என்று நினைக்கிறார்கள். அரிசி விஷயத்தில் வடநாடு, தென்னாடு என்று வேற்றுமை பாராட்ட வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். வடநாட்டார் கோதுமையைச் சாப்பிட்டு பலவான்களாக இருக்கிறார்கள். நாமும் கோதுமையைச் சாப்பிட்டு பலவான்களாக இருக்கலாம். அரிசியானது மில்லில் தீட்டப்பட்டு விடுவதால் அதிலுள்ள சத்தெல்லாம் போய்விடுகிறது. ஆகவே, ஓரளவாவது நாம் கோதுமை சாப்பிடவேண்டும். உணவிலும் மாறுதல் வேண்டும். நான் கர்னாடகம் நவீனம் என்று வித்தியாசம் பாராட்டுபவன். எல்லாவற்றிலும் புதுமை வேண்டும். புதுமையைத்தான் நான் விரும்புகிறேன். புதுமையை நாம் வரவேற்க வேண்டும். ஆகவே நம் உணவில் கோதுமையை கொஞ்சமாவது சேர்த்துக்கொள்ள வேண்டும்.

இனிமேல் உணவு பழக்கங்களை ஓரளவு மாற்றிக்கொள்வதற்கு வேண்டிய பழக்கம் மக்களுக்கு வேண்டும். இந்த பழக்கம் உடனடியாக வராது. அதை மாற்றிக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்துக்கொண்டு வந்தால் கூடிய சீக்கிரத்தில் மாற்றிக்கொள்ளலாம். நாங்கள் உற்பத்தியை பெருக்கிக் கொண்டு தான் வருகிறோம். நாங்கள் மதிப்பிட்ட வகையில் சென்ற ஐந்து வருஷத்தில் 100-க்கு 15 விகிதம். உற்பத்தியை பெருக்கி யிருக்கிறோம். அதுவும் போதாது. சமுதாய அபிவிருத்தி திட்டத்தின் மூலமாகவும் இன்னும் மற்ற அபிவிருத்தி திட்டங்களின் மூலமாகவும் இன்னும் அதிகமாக அதாவது 100-க்கு 20 சத விகிதம் பெருக்க வேண்டும் என்று திட்டம் போட்டிருக்கிறோம். அபிவிருத்தி திட்ட வேலைகள் நடைபெற்று வரும் இடங்களில் அதிகப்படியாக உணவை உற்பத்தி செய்வதற்கு வேண்டிய வழிவகைகளைச் செய்து கொண்டு வருகிறோம். அதிலேயே கவனமும் செலுத்திக்கொண்டு வருகிறோம். இப்பொழுது கணிசமான முறையில் உற்பத்தியும் பெருகிக்கொண்டுதான் வருகிறது. உற்பத்தி பெருகுவதினால் தேவையும் பெருகிக்கொண்டு வருகிறது. இந்த நான்கு ராஜ்யங்களிலும் ஒரு பக்கத்தில் அதிக பற்றாக்குறையும் இன்னொரு பக்கத்தில் குறைவான பற்றாக்குறையும் இருக்கிறது. இதை வைத்துக் கொண்டு வியாபாரிகள் "ஸ்பெகுலேஷன்" செய்கிறார்கள். அதன் காரணமாக அரிசிக்கு விலை அதிகமாகிறது. இதுதான் இப்பொழுது ஏற்பட்டிருக்கக் கூடிய நிலைமை. இப்பொழுதுள்ள நிலைமை மிகுந்த கவலையைக்கொடுக்கக் கூடிய நிலைமையில் இல்லை.

அதிகமாக உற்பத்தியைப் பெருக்க என்ன ஏற்பாடு செய்ய வேண்டும் என்பதைப்பற்றி எல்லோரும் சேர்ந்து அரசாங்கத்திற்கு தெரியப்படுத்த வேண்டியதாக இருக்கிறது. இதில் அரசாங்கமும் கவனம் செலுத்தவேண்டியதாக இருக்கிறது. இந்த விஷயத்தைப்பற்றி பேசும்போது இன்னொரு குறைபாடும் சொல்லப்பட்டது. நமக்கு உணவு தான்யங்கள் தான் வேண்டும் மற்ற பயிர்களை பயிரிடுகிறார்கள், அதாவது கமர்சியல் க்ராப்புகளை பயிரிடுகிறார்கள், அதிக ரொக்க வருமானம் கிடைக்க வேண்டும் என்பதற்காக அதைப் பயிரிடுகிறார்கள், அதை சர்க்கார் ஏன் அனுமதிக்க வேண்டும் என்று குறை கூறினார்கள். அதிலும் குறிப்பாக கனம் அங்கத்தினர் அன்பழகன் அவர்கள் இதைப்பற்றிக் குறிப்பிட்டார், அப்படி குறிப்பிடும் போது அதிகப்படியாக நஞ்சை நிலங்களில் ஏன் கரும்பை உற்பத்தி செய்வதற்கு அனுமதித்திருக்கிறீர்கள் என்றும் குற்றம் சாட்டினார். நீர்பாசன வசதியுள்ள இடங்களில் கரும்பை சாகுபடி செய்ய ஏன் அனுமதிக்கிறீர்கள் என்று சொல்லுகிறார். இதைப்பற்றி முதலில் நான் ஒன்றை சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அரிசி, மற்ற உணவு தான்யங்களை எடுத்துக்கொண்டு பார்த்தால் இதைப்பற்றி முன்பு ஒரு முறை இதைப்

[Sri M. Bhaktavatsalam] [7th November 1957

பற்றிய புள்ளி விவரங்களைக் கொடுத்திருக்கிறேன். கரும்பு சாகுபடி செய்வது ரொம்பவும் குறைவு என்று சொல்லியிருக்கிறேன். தஞ்சை ஜில்லாவை எடுத்துக்கொண்டால் 13 லட்சம் ஏக்கர் நிலத்தில் நெல் சாகுபடியாகிறது. கரும்பைப் பார்த்தால் பத்து ஆயிரம் ஏக்கர் நிலத்தில் சாகுபடியாகிறது. இது பிரமாதம் அல்ல. இது வேண்டாம் கூட என்று சொன்னால் அதை ஒத்துக்கொள்ள முடியாது. நமக்கு கரும்பு வேண்டியதாக இருக்கிறது. நாம் பருத்தியையும் பயிர் செய்ய வேண்டியதாக இருக்கிறது. ஏனென்றால் நமக்கு ஆடை வேண்டியதாக இருக்கிறது. நம்முடைய ஆடை உற்பத்தியைக் கண்டு இங்கிலாந்தில் கூட நம்மைக் கண்டு பயப்படக்கூடிய நிலைமை ஏற்பட்டது. அவர்களுடைய தொழிற்சாலைகளுடன் போட்டி போடக்கூடிய நிலைமை ஏற்பட்டது. இங்கிலாந்தில் பருத்தி உற்பத்தி கிடையாது. வெளி நாடுகளிலிருந்துதான் அவர்களுக்கு வரவேண்டியதாக இருந்தது. அதனால் தான் நமக்கு ஆடை வேண்டியதாக இருப்பதால் நாம் பருத்தியையும் உற்பத்தி செய்ய வேண்டியதாக இருக்கிறது. அது தான் நம்முடைய துணித்தொழிலினுடைய சிறப்புக்குக் காரணம். இன்னும் அதிகமாக நாம் பருத்தியை உற்பத்தி செய்ய வேண்டியதாக இருக்கிறது. அதைப் பெருக்குவதற்கும் திட்டமிட்டு அதை நிறைவேற்றிக் கொண்டு வருகிறோம். அதைப்போலவே நமக்கு புகையிலை வேண்டாமா ? அதையும் நாம் அந்நிய நாட்டிலிருந்து எதிர் பார்க்க வேண்டுமா ? நமக்கு மஞ்சள் வேண்டாமா ? அதையும் நாம் அந்நிய நாட்டிலிருந்து எதிர் பார்க்க வேண்டுமா ? இவைகளையெல்லாம் நாம் இங்கேயேதான் தயார் செய்ய வேண்டியதாக இருக்கிறது. இவைகளை நெல் பயிருடன் தான் நாம் தயாரிக்க வேண்டியதாக இருக்கிறது. அவையெல்லாம் சேர்ந்து அபிவிருத்தி அடையவேண்டு மானால் அதற்கு என்று தனியாக ஒதுக்க வேண்டியதாக இருக்கிறது. ஆகவே அது ஒரு ஜீவாதாரமான தொழில், மற்றும் நிலத்தில் ஒரே பயிரை இடுவதாக இருந்தால் அதனால் போதிய பலன் இருக்காது. விவசாயம் சரியான முறையில் அபிவிருத்தி அடையாது. ஆகவே தான் இதர பயிரையும் இடவேண்டும் என்று சொல்லுகிறோம். ஒருவருக்கு நாலைந்து ஏக்கர் நிலம் இருந்தாலும் அதில் ½ ஏக்கரா அல்லது ¼ ஏக்கரா கரும்பு பயிர் செய்கிறேன் என்று சொன்னால் அதற்கும் அனுமதிக்கிறோம். ஐந்து ஏக்கர் வைத்துக்கொண்டிருக்கிறவர் கூட கொஞ்சம் இடத்தில் இப்படிப்பட்ட வருமானம் வரக்கூடிய பயிரைச் செய்கிறோம் என்று சொன்னால் அதையும் சிபாரிசு செய்கிறோம். ஆகவே இப்பொழுது கரும்புக்கு அனுமதி கொடுத்திருப்பதைக் கண்டு யாரும் பயப்பட வேண்டாம். இதனால் உணவு உற்பத்தி பாதிக்காது. அப்படி பாதிக்கக் கூடிய அளவில் அரசாங்கம் அனுமதிக்காது. ஓரளவு பல பயிர்களை இடுவதற்கு வேண்டிய ஆதரவு அளிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

மற்றப்படி நீர்பாசன விஷயங்களைப்பற்றி எடுத்துச் சொன்னார்கள். பெரிய நீர்பாசனத்திற்கு வசதி எங்கே கிடைத்தாலும் அதை விட முடியாது. அதை முக்கியம் என்று கருதி அதை நடத்தி வருகிறோம். அதைப்போலவே சிறிய நீர்பாசன திட்டங்களிலும் அதிகப்படியான கவனத்தைச் செலுத்திக்கொண்டு வருகிறோம். அவைகளில் தாமதம் ஏற்படுகிறது என்று குறை கூறினார்கள். தாமதம் ஏற்படுகிறது என்று சொல்வது வாஸ்தவம் தான். பெரிய நீர்பாசனத்தை எடுத்துக் கொண்டு அதில் வீணாக பணத்தைச் செலவு செய்ய வேண்டும் என்று யாரும் சொல்ல மாட்டார்கள். அதை எடுத்து நடத்துவதாக இருந்தால் அதனால் எவ்வளவு பலன் கிடைக்கிறது, அதனால் யாராவது பாதிக்கப் படுகிறார்களா, செலவு செய்யப்படும் பணம் நல்ல முறையில் செலவு செய்யப்படுகிறதா என்பதையெல்லாம் ஆராய்ச்சி செய்த பிறகுதான் அந்த அபிவிருத்தி திட்டத்தை எடுத்து வேலை செய்கிறோம். இப்படிப்பட்ட பல விஷயங்களை ஆராய்ச்சி செய்த பிறகு தான் அவைகளை எடுத்து நடத்துகிறோம். இப்படி ஆராய்ச்சி செய்வதால் காலதாமதம் ஏற்படுகிறது. அதை ஒரு குறையென்று சொல்ல முடியாது. இப்படிப்பட்ட காலதாமதம் ஏற்படாமல் வேலைகளை எடுத்து நடத்தவும் முடியாது. இது தவிர்க்க முடியாத தாமதம் தான். கனம் அன்பழகன் அவர்கள் பேசும்போது இதில் எவ்வளவு பலன் வரும் என்ற கணக்கைப்பார்க்க வேண்டாம் என்று குறிப்பிட்டார். நீர்பாசனக் கொள்



7th November 1957] [Sri M. Bhaktavatsalam]

கையை இந்த காங்கிரஸ் அரசாங்கம் சென்ற பத்து வருஷகாலமாக கடைப்பிடித்து வருகிறது. அது முதற்கொண்டு இப்படிப்பட்ட கொள்கையைத் தான் அனுசரித்துக்கொண்டு வருகிறார்கள். முன்பு இருந்த ஆட்சியாளர்கள் வட்டி முதற்கொண்டு கணக்குப் போட்டு அப்படி வட்டிக்கு சரிக்கட்டுமா என்று பார்த்த பிறகு தான் அவர்கள் அந்த திட்டத்தை எடுத்து நடத்துவார்கள். அந்தக் கொள்கையை இந்த அரசாங்கம் கடைபிடிக்க வில்லை என்பதைத்தான் நான் சொல்லிக்கொள்ளுகிறேன். இப்படி அவர்கள் கணக்குப்பார்த்து பல திட்டங்களை கைவிட்டுவிட்டார்கள். அந்த திட்டங்களில் ஒன்று கீழ் பவானி திட்டம். அப்படி அவர்கள் கைவிட்ட திட்டங்களையெல்லாம் காங்கிரஸ் அரசாங்கம் எடுத்து நிறைவேற்றி வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். இவைகளை எடுத்து நிறைவேற்றும்போது அவைகள் எல்லாம் மக்களுடைய பணத்தைக்கொண்டு தான் நிறைவேற்றுகிறோம். அதனால் தான் அதற்கு ஏற்ற ஓரளவு பலன் இருக்கிறதா என்பதை ஆராய்ச்சி செய்து பார்க்க வேண்டியதாக இருக்கிறது. இப்படிப்பட்ட திட்டங்களை எடுத்து நடத்தினால் இரண்டு மூன்று ஏக்கர் வைத்துக்கொண்டிருக்கிறவர்களும்தான் பலன் அடைகிறார்கள், ஒரு செண்ட் கூட நிலம் இல்லாதவர்களும் தான் பலன் அடைகிறார்கள். இப்படிப்பட்ட திட்டங்களினால் ஊருக்கு க்ஷேமம் ஏற்படுகிறதேயொழிய ஒருவருக்கு மட்டும் அல்ல. ஆயிரம் ஏக்கர் நிலம் வைத்திருக்கிறவனுக்கும் செலவாகிறது, ஐயாயிரம் ஏக்கர் வைத்துக்கொண்டிருக்கக் கூடியவனுக்கும் தான் செலவாகிறது. வியாதியில் அடிபட்ட ஒருவனுக்கு தேகத்தில் அபிவிருத்தி செய்ய வேண்டும் என்று நினைத்து அவனுக்கு முதலில் டானிக் கொடுத்து அபிவிருத்தி செய்கிறோம். அவனுக்கு நல்ல ட்ரீட்மெண்ட் கொடுக்கிறோம். அப்படிக் கொடுத்து விட்டு அவனுக்கு அதிகம் சாப்பிடக் கொடுக்கவேண்டும் என்று நினைத்து அவனை மாதத்தில் ஆயிரம் ரூபாய்க்கு சாப்பிட வேண்டும் என்று சொன்னால் எப்படி சாப்பிட முடியும். அப்படி சாப்பிட்டு அவனால் வெளியேற முடியாது. ஆகவே இதை ஓரளவு பரிசீலனை செய்துதான் பார்க்க வேண்டியதாக இருக்கிறது.

நீர்பாசன விஷயமாக மற்றொன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். "Desilting Tanks" என்ற ஒரு புது முறையை கொண்டு வர உத்தேசித்திருக்கிறோம். இதற்கு முன்பு மராமத்து இஞ்சினியர்கள் இதை எடுத்துக் கொள்ள வில்லை. ஏரிகளில் அதற்கு வசதி இருக்கிறது. இப்பொழுது ஏரிகளில் அதிகப்படியான சில்ட் இருக்கிறது. அவைகளை எடுத்து கரையில் போட்டால் ஓரளவு கரை உயரும். அதனால் நீர்பாசனத்திற்கு அதிகப்படியான தண்ணீரைத் தேக்கிக் கொள்ளலாம். இப்படிப்பட்ட ஒரு எண்ணம் அரசாங்கத்தினிடம் இருக்கிறது. இதற்கு என்று இப்பொழுது பத்து லட்சம் ரூபாய் செலவிடப்பட வேண்டும் என்று ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதைப் பற்றி சீப் இஞ்சினியர் அவர்களைக் கேட்டிருக்கிறோம், இன்னும் எங்கேயெல்லாம் இந்த திட்டத்தைக்கொண்டு வரலாம் என்று. இதை பெரிய அளவில் நிறைவேற்ற வேண்டும் என்ற எண்ணம் அரசாங்கத்தினிடம் இருக்கிறது. இதற்கு மத்திய அரசாங்கமும் வேண்டிய அளவில் உதவி அளிக்கிறோம் என்று வாக்களித்திருக்கிறார்கள்.

இம்மாதிரியான திட்டங்களை பெருவாரியான முறையில் எடுத்துக் கொண்டு நடத்த வேண்டும் என்ற நிலையில் இன்று அரசாங்கம் கவனம் செலுத்திக்கொண்டிருக்கிறது. மற்றும் உணவு உற்பத்தியை பெருக்கும் வகையில் பல புதிய திட்டங்களை எடுத்து, அதிலும் விவசாய அபவிருத்தித் திட்டங்களை எல்லாம் எடுத்து இன்று உருவாக்கி, அவைகளை நிறைவேற்றிக் கொண்டு வருகிறோம்.

கனம் அன்பழகன் அவர்கள் தன்னுடைய பேச்சில் அடிக்கடி ஆண்டவனை இழுத்துப்பேசிக்கொண்டு வந்தார். எதை அவர் மனதில் வைத்துப் பேசினார் என்பது தெரியவில்லை. அனாவசியமாக பெருங்குடி மக்கள் மீது இதைச் சுமத்த வேண்டாம். அவர்கள் அதிகமாக ஆண்டவனை நினைப்பது இல்லை. நானும் எவ்வளவோ தரம் அவர்களுடன் பேசியிருக்கிறேன், சிறிய நிலச்சுவாந்தார்களுடனும் பேசியிருக்கிறேன், பெரிய நிலச்சுவாந்தார்களுடனும் பேசியிருக்கிறேன், அவர்கள் அதிகமாக ஆண்டவனைப்பற்றி நினைப்பதே இல்லை. புதிய முறைகளைப் பற்றியெல்லாம் பேசி

[Sri M. Bhaktavatsalam] [7th November 1957

யிருக்கிறேன். புதிய முறைகளையெல்லாம் அவர்கள் கேட்டுத் தெரிந்துகொண்டிருக்கிறார்கள். அவைகளையெல்லாம் அவர்கள் தயங்காமல் ஏற்றுக்கொண்டு அதை அனுசரித்து பயிர் செய்திருக்கிறார்கள். அதற்கு புள்ளிவிவரங்கள் கொடுக்க முடியும். ஜப்பானிய முறையையும் அனுசரித்து அவர்கள் உற்பத்தியில் வேலை செய்கிறார்கள். அப்படி உயர்த்தியிருப்பதாகவும் கணக்கிட்டுக் காட்டுகிறார்கள். "விவசாய இலாகா அதிகாரிகள் சொல்லக்கூடிய இந்த விவசாயத்தை நீங்களும் கற்றுக் கொள்ளுங்கள்" என்று சொன்னதன்பேரில் அவர்களும் சிந்திக்கிறார்கள். அவர்கள் புதிய முறைகளை ஏற்றுக்கொண்டு வருகிறார்கள். "அனுபவம் உடையவர்களாக இருக்கிறவர்கள் சொல்கிறார்கள், நீங்களும் கற்றுக்கொள்ளுங்கள்" என்று அவர்களிடம் சொல்கிறேன். அந்த முறையில் விவசாயிகள் தயங்காமல் பல திட்டங்களை ஏற்று நடத்திக்கொண்டு வருகிறார்கள். அவர்களுக்குரிய வசதிகளை அளிக்கவேண்டும் என்பதற்காக நல்ல விதை, நல்ல உரம் அளிக்கப்படுகின்றன. ரசாயன உரத்தின் விலையைப்பற்றிச் சொன்னார்கள். எவ்வளவு தூரம் ரசாயன உரத்தின் விலையைக் குறைக்கமுடியுமோ அந்த அளவுக்குக் குறைக்கிறோம். ஆனால், இன்று போதிய அளவு ரசாயன உரம் உற்பத்தி ஆகாத காரணத்தால் ரசாயன உரத்தின் தேவை அதிகமாகிறது. எங்கு பார்த்தாலும் ரசாயன உரம் வேண்டுமென்று கேட்கிறார்கள். அன்னிய நாட்டிலிருந்து இறக்குமதி ஆகிறது. இதை வைத்துக்கொண்டு விலை நிர்ணயிக்கிறோம். ஆனால், வேறு சில கம்பெனிகள் அதிக விலை போடுகிறார்களே என்று சொல்லப்படுகிறது. அதற்கும் ஒரு கட்டுப்பாடு வேண்டும். நான் கூட்டுறவு சங்கங்களை வற்புறுத்தி வருகிறேன், கேட்டுக்கொண்டு வருகிறேன். "உர விநியோகத்தை நீங்கள் ஏற்றுக்கொண்டு, அதிக லாபத்திற்கு இடம் இல்லாமல் நீங்கள் விவசாயிகளுக்கு விநியோகம் செய்யுங்கள்" என்று சொல்லிக்கொண்டு வருகிறோம். கூட்டுறவு சங்கங்கள் இந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்வார்கள் என்றுதான் நான் நம்புகிறேன்.

தழை உரமும் நல்ல சத்து அளிக்கக் கூடியதாக இருக்கிறது. உற்பத்தியை அதிகரிக்கக்கூடியதாக இருக்கிறது என்பதை அறிந்து தழை உரத்தை விவசாயிகள் அதிகமாக எடுத்துக்கொள்கிறார்கள். அதற்கு விதை வேண்டும். அது சம்பந்தமாக பெரிய வியாபாரம் நடக்கிறது. விதை கிடைப்பதில்லை. விதை சுலபமாகக் கிடைக்கவும் ஏற்பாடு செய்கிறோம்.

கம்போஸ்ட் உரம் விஷயத்திலும் விசேஷ் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. அதோடு, உற்பத்தி செய்யும் விவசாயிகளிடமிருந்து குறைந்த விலைக்கு இந்த உரத்தை வாங்குவதில் போட்டா போட்டியிருக்கிறது. வியாபாரிகள் போட்டா போட்டியைப் பயன்படுத்திக்கொண்டு வருகிறார்கள். அதைச் சமாளிக்க, குறைந்த விலைக்குக் கொடுக்க இடம் இல்லாமல் செய்வதற்கு, கிராமந்தரங்களில் விவசாயிகளுக்குக் கடன் வசதி; கூட்டுறவு சங்கங்கள் மூலம் அதிகமாக்கவேண்டுமென்பதில் விசேஷ கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

இந்த வகைகளிலே உற்பத்தியைப் பெருக்குவதற்கும், விவசாயிகளுக்குத் தாங்கள் ஈடுபட்டிருக்கும் தொழில் கட்டுப்படி ஆவதற்கும், பல வகைகளிலே இன்று கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. அதை விவசாயிகள் ஏற்றுக்கொண்டு பலன் அடைந்துகொண்டு வருகிறார்கள். ஆனால், " இது எல்லாம் சரி, நிலச் சீர்திருத்தம் சரியாக நடைபெறவில்லை, புதிதாகச் சட்டம் கொண்டுவரவில்லை" என்று கூறினார்கள். "இருக்கிற சட்டம் சரிவர நிறைவேற்றப்படவில்லை" என்றெல்லாம் கூறினார்கள். நிலச் சீர்திருத்தச் சட்டத்திலே அரசாங்கத்திற்கும் போதிய அக்கரை இருக்கிறது ; கவனம் செலுத்திக் கொண்டு வருகிறார்கள். பல சட்டங்களை நிறைவேற்றியிருக்கிறார்கள். எந்தச் சட்டம் நிறைவேற்றினாலும் அதில் சில குறைபாடுகள் தோன்றலாம். அவைகளை அகற்றுவதற்கும் அரசாங்கம் கவனம் செலுத்துவதற்குத் தயங்குவது இல்லை. மேற்கொண்டு நில வரம்பை ஏற்படுத்தக் கூடிய சட்டம் செய்வதிலும் சில சட்டபூர்வமான சங்கடங்கள் இருக்கின்றன. அவைகளை ஆராய்ந்து தான் செய்யவேண்டும்.



7th November 1957] [Sri M. Bhaktavatsalam]

கனம் அங்கத்தினர் கம்யூனிஸ்டுக் கட்சித் தலைவருக்கே தெரியும். கம்யூனிஸ்டு அரசாங்கமே வந்தவுடனே மறுநாள் அந்த மசோதா ஒன்றையும் கொண்டுவரவில்லை. அவர்களுக்குக் கூட கொஞ்சம் தயக்கம் இருக்கிறது. கொஞ்சம் தாமதம் ஆகிறது. நானும் ஒரு கருத்தை கனம் அங்கத்தினருக்குக் குறிப்பிட விரும்புகிறேன். சில கருத்துக்களை நானும் தெரிவிக்க விரும்புகிறேன். நம்முடைய அடிப்படையான லட்சியம் உற்பத்தியைப் பெருக்கவேண்டும் என்பது. அதன் மூலமாக பொருளாதார நிலை உயரவேண்டும் என்பது. 40-க்குப் பதிலாக 60 வருகிறது போதும் என்று குடியானவர்கள், விவசாயிகள், குத்தகைதாரர்கள் நினைத்தால்—இம்மாதிரி சட்டம் நிறைவேற்றுவதனால்—அத்தகைய மனப்பான்மையினால், அத்தகைய அலட்சியத்தினால் ஒன்றும் பலன் ஏற்படாது. பெரிய நிலச் சுவாந்தார்களானாலும், சிறு நிலச்சுவாந்தார்களானாலும், கட்சிக்காரர்களானாலும் உற்பத்தியைப் பெருக்கும் வகையிலே அவர்கள் கவனம் செலுத்தவேண்டும். அப்படிச் செலுத்தத் தவறுகிறார்கள் என்றால், அவர்களிடத்திலே அரசாங்கத்திற்கு அக்கறை இல்லை. எல்லோரும் செல்வ உற்பத்தியைப் பெருக்கவேண்டும். அதற்குரிய வகையிலே அரசாங்கம் எத்தகைய ஆதரவு அளிக்கவேண்டுமோ அத்தகைய ஆதரவு அளித்துக்கொண்டு வருகிறார்கள்.

உற்பத்தியைப் பெருக்குவதிலே என்ன தடைகள் இருந்தாலும், சட்டரீதியாக இருந்தாலும், வேறு வகையிலே இருந்தாலும், அந்தத் தடைகளை நீக்குவதில் அரசாங்கம் கவனம் செலுத்திக் கொண்டுதான் வருகிறார்கள்.

இன்னும் கனம் அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள், சிற்சில நீர்ப்பாசனங்களைப்பற்றி. தஞ்சை ஜில்லா பூராவும் ஜீவநதியாகிய காவிரி நதியின் தண்ணீர் பயன்படுத்தப்பட்டு வருகிறது. அங்கேயும் குறைபாடு இருக்கிறதென்பதைப்பற்றி சர்தார் வேதரத்னம் பிள்ளை அவர்கள் சொன்னார்கள். அது கவனத்திற்கு உரியது. எங்கே பலன் சுலபமாக வரக்கூடுமோ அங்கே முக்கியமாக கவனம் செலுத்தப்பட்டுதான் வருகிறது.

இன்னும் எனக்குப் பின்னால் வீற்றிருக்கிற வடாற்காட்டைச் சேர்ந்த கனம் அங்கத்தினர் பாலாறு சம்பந்தமாக குறை சொன்னார்கள். எந்த எந்த வகையிலே கவனம் செலுத்தக்கூடுமோ அந்தந்த வகையிலே கவனம் செலுத்துகிறோம். நான் எந்தப் பிரச்னையைப்பற்றியும் முற்றுப்புள்ளி வைக்கவில்லை. ஆனால் கறக்காத பசுவினிடத்தில் கறந்து கொண்டிருப்பதால் பயன் இல்லை. கறக்கக்கூடிய பசுவினிடம் கறக்க வேண்டுமே தவிர, வறண்ட பசுவினிடத்தில் கறக்க முயற்சிப்பது பசுவைக் கொடுமைப்படுத்துவதாகும்.

பாலாறு வறண்ட ஆறு. அதில் தண்ணீர் கிடைக்கச் செய்வதற்கு, அரசாங்கம் என்ன முயற்சி செய்யவேண்டுமோ அதைச் செய்யும். அந்த விஷயத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கவில்லை. கனம் அங்கத்தினர் பாலாற்றைப்பற்றி ரொம்ப உருக்கமாகப் பேசியபோது எனக்கு ஒன்று நினைவுக்கு வந்தது. நான் சில வருஷங்களுக்கு முன்பு ஒரு புராணக் கதை படித்தது ஞாபகத்திற்கு வந்தது. அந்தப் புத்தகத்தில் பாலாற்றின் வரலாறு எழுதப்பட்டிருந்தது. அது என்னவென்றால், வசிஷ்டர் காமதேனுவோடு அந்தப் பிராந்தியத்தில் நடமாடிக்கொண்டிருந்தாராம். கறுத்த மேகம் இரண்டு தினங்களுக்குமுன் பார்த்தோமே, அதைவிட அழகான மேகம் தவழ்ந்துகொண்டிருந்ததைப் பார்த்ததும் காமதேனுவுக்குக் காதல் ஏற்பட்டதாம். அந்தக் காதலைத் தவிர்க்கவேண்டுமென்று அந்த ரிஷி ஒரு தர்ப்பை புல்லைக் கிள்ளிப்போட்டு ஒரு கன்றை உண்டாக்கினாராம். அக் கன்றைப் பார்த்ததும் காமதேனுவுக்கு மனது மாறிப்போய், பொய்க் கன்றை நிஜக் கன்றாகக் நினைத்துக்கொண்டு, பாலைப் பெருக்கியதாம். அதுதான் பாலாறாக ஓடிற்று என்பது புராணக் கதை.

அந்தக் கதையைப் படித்துப் பார்த்ததும் சென்னை நகரில் செத்த கன்றின் உடலில் வைக்கோலை அடைத்து, அதைப் பசுவினிடத்தில் காட்டிப் பால் கறக்கும் காட்சி என் கண் முன் வந்தது. கனம் அங்கத்தினர்கள்

கூட கவனித்திருப்பார்கள். செத்த கன்றைக் காட்டிக் கறக்கும் பால் விஷத்தன்மை வாய்ந்தது, உடம்புக்கு நல்லது அல்ல என்று சொல்வார்கள். ஆயினும், போதுமான பால் கிடைக்காததால் நாம் பொய்க் கன்றைக் காட்டி கறக்கின்ற பாலையும் சாப்பிட்டுக்கொண்டுதான் வருகிறோம். அதைப்போல பாலாற்றில் தண்ணீர் வரும் விஷயத்திலும் நம்மால் ஆனதைப் பார்ப்போம். அதைப்பற்றி அதிகமாக, அதையே சொல்லிக்கொண்டிருப்பதால் பிரயோஜனம் இல்லை என்று தான் நான் சொல்கிறேன். (கனம் அங்கத்தினர் ஸ்ரீ எம். கல்யாணசுந்தரம் அவர்களின் குறுக்கீடு) கிருஷ்ணா-பெண்ணையாறு திட்டம் பெரிய விஷயம். வேறு ராஜ்யங்களோடு கலந்து பேச வேண்டிய விஷயம். எந்த எந்த வகையில் கவனம் செலுத்த வேண்டுமோ அதில் அரசாங்கம் தயங்காது.

விலையைப்பற்றி நான் குறிப்பிட்டேன். விலையை இன்னும் குறைக்கத்தான் வேண்டும். ஒரு அளவுக்கு மேல் விலை குறைந்தால் இதைப்பற்றி விவசாயிகள் கவலைப்படக்கூடும். இது விஷயத்தில் அரசாங்கம் தகுந்த நடவடிக்கை எடுத்துக்கொள்ளும்.

கடைசியாக, நியாய விலைக் கடைகளைப்பற்றிச் சொல்லி என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன். நியாய விலைக் கடைகளை வைப்பதன் நோக்கம் விலையைக் குறைப்பதற்காக அல்ல. விலை குறைக்கப்படும் என்று எதிர்பார்ப்பதற்கில்லை. அதிக விலைக்கு அரிசியை வாங்கி நியாய விலைக் கடைகளின் மூலம் ஏழைகளாக இருப்பவர்களுக்கு குறைந்த விலைக்கு கிடைக்கச் செய்யவேண்டும் என்பது முக்கியமான நோக்கம். நகரப் பிராந்தியங்களில் தொழிலாளர் வசிக்கும் பகுதிகளிலும் நியாய விலைக் கடைகள் திறக்கப்படுகின்றன. ஆனால், சில சமயங்களில் அறுவடையாய் விட்டால் ஏறக்குறைய நியாய விலைக் கடைகளை எதிர்பார்க்காமலேயே அரிசித் தேவையைப் பெற்றுக்கொள்ளுகிறார்கள். நியாய விலைக் கடைகள் திறக்கப்படவேண்டுமென்று இந்தத் தீர்மானத்தை பிரேரேபித்த கனம் அங்கத்தினர் அவர்கள் நியாய விலைக் கடைகளில் நாற்றம் எடுக்கும் அரிசி விற்கப்படுகிறது என்று சொன்னார்கள். நியாய விலைக் கடைகளில் நாற்றம் எடுத்த அரிசி விற்கப்படுகிறது என்று சொன்னால், அத்தகைய கடைகள் திறக்கப்படவேண்டுமென்று கனம் அங்கத்தினர் அவர்கள் கோரியிருக்கமாட்டார்கள். ஆகவே, அப்படிக் கெட்டுப்போன அரிசி நியாய விலைக் கடைகளில் கொடுக்கப்படுவது இல்லை. சில இடங்களில் அங்கே போய் வாங்குவது இல்லை. நான் இரண்டு மூன்று மாதங்களுக்கு முன்னால் சுற்றுப்பிரயாணம செய்தபோது இக் கடைகளைப் பார்ப்பது உண்டு. ஒரு மாதமாகத்தான் நான் வெளியே போகவில்லை. விசாரித்ததில், நியாய விலைக் கடைகளில் விற்கும் அரிசி மார்க்கெட் விலையைவிடக் குறைவாக இருப்பதாகத் தெரிகிறது. நிலைமை மாறிக் கொண்டிருக்கிறது. இப்பொழுது எங்கே வாங்குகிறது ? அதிகமாக நாம் இறக்குமதி செய்ய முடியாது என்று சொன்னார்கள். இன்னும் வேறு ராஜ்யங்களிலேயும் வரட்சி அதிகமாய் போய்விட்டது. இதையெல்லாம் சமாளிக்கவேண்டும். அதிலெல்லாம் மத்திய அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டுமானால், நமக்கு எவ்வளவு வேண்டுமோ அவ்வளவு தான் வாங்கிக்கொள்ளலாம். நியாயவிலைக் கடைகள் இல்லாமலே சமாளிக்க முடியுமா என்பதை யோசிக்கவேண்டும். நம்மைப் பொறுத்த வரையிலும் படிப்படியாக குறைக்க வேண்டும். எங்கேயாவது ஒரு இடத்தில் வேண்டுமென்றால், அவசியமிருந்தால் அங்கே வைக்கலாம். ஆனால் நியாய விலைக் கடைகளை அப்படியே குறைக்காமல் வைத்துக்கொள்ளவேண்டுமென்ற கோரிக்கையை ஏற்றுக்கொள்ள முடியாது. ஆகவே இந்த உணவு பிரச்னையை தீர்க்கும் வகையிலும், உணவு உற்பத்தியை பெருக்கும் வகையிலும், விவசாயத்தை அபிவிருத்தி செய்யும் வகையிலும் குறுகிய காலத்திட்டம், நீண்ட கால திட்டம் முதலிய பல்வேறு திட்டங்களில் கவனம் செலுத்திக்கொண்டு வருகிறோம்.

கடைசியிலே பேசிய கனம் அங்கத்தினர் திரு கலியாணசுந்தரம் அவர்கள் தங்கள் கட்சி சார்பாக—கட்சி சார்பாக என்று சொல்லவில்லை—அவர்களுடைய கட்சியைச் சேர்ந்த அங்கத்தினர் பிரேரேபித்த தீர்மானம் ஒன்றும் ஆட்சிபிக்கக்கூடியது அல்ல என்று சொன்னார். அதில்





இருக்கும் கருத்துகளை பொதுவாக ஒன்றும் ஆட்சேபிக்கவில்லை. ஆனால் நியாயவிலைக் கடைகளை அப்படியே குறைக்காமல் வைத்துக்கொள்ள வேண்டுமென்பதை ஒப்புக்கொள்ள முடியாது. அதுமட்டுமல்ல. இந்தத் தீர்மானத்தின் பேரில் அங்கத்தினர்களுடைய விவாதத்தை நான் வரவேற்கிறேன் என்று முன்பே சொன்னேன். ஆனால் ஏதோ தீர்மானத்தை வியாஜமாக வைத்துக்கொண்டு அரசாங்கத்தைப் பற்றி இதைச் செய்யவில்லை, அதைச் செய்யவில்லை என்று குறை சொல்லி பேசினார்கள். எல்லோரும் பேசியாகிவிட்டது. நானும் அரசாங்கத்தினுடைய யோசனைகளை தெரிவித்துவிட்டேன். ஆகையால் இந்தத் தீர்மானத்தை வோட்டுக்கு விடவேண்டுமென்று அங்கத்தினர் அவர்கள் வற்புறுத்தமாட்டார்கள் என்று நினைக்கிறேன். அப்படி வோட்டுக்கு விட்டுத்தான் ஆகவேண்டுமென்றால், அதை அரசாங்கம் எதிர்க்கத்தான் வேண்டியிருக்கும். எதிர்ப்பது என்றால் அதில் கண்டுள்ள கருத்துக்களையெல்லாம் எதிர்க்கிறோம் என்று அர்த்தமல்ல, அரசாங்கம் வேண்டிய நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது, அதற்காக தீர்மானம் வேண்டாம் என்ற முறையில்தான் சொல்லுகிறேன்.

**SRI K. ANBAZHAGAN:** அமைச்சர் அவர்கள் பேசும்போது தமிழ் நாட்டிலிருந்து ஏறத்தாழ சென்ற ஆண்டிலே $2\frac{1}{2}$ லட்சம் டன் அரிசி கேரளாவுக்குப் போயிருப்பதாகத் தெரிவித்தார்கள். கேரளம் இந்த வட்டாரத்தின் எல்லைப் பகுதியில் இருப்பதால் அங்கிருந்து அரிசி இந்த வட்டாரத்தையும் தாண்டி வெளியே போகிறது என்று சொல்லப்படுகிறது. அப்படி வெளியேற்றப்படுகின்ற நிலைமை இல்லாமல் தடுப்பதற்கு இந்த வட்டாரம் (Zonal system) என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது ? அதேபோல் வட ஆற்காடுக்கு தரப்படுகின்ற உரமானது வட ஆற்காடைத் தாண்டி ஆந்திரப் பகுதிக்கு போய் விடுவதாக ஒரு கனம் உறுப்பினர் தெரிவித்தார். தமிழ் நாட்டிற்கு கிடைக்கவேண்டிய எரு வெளியேற்றப்படாமல் தடுப்பதற்கு "Zonal system" என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள் ? உணவு பற்றாக்குறையை தடுக்க தமிழ் நாடு ஏதேனும் தனியாக நடவடிக்கை எடுக்குமா ?

**THE HON. SRI M. BHAKTAVATSALAM:** ஸோனுக்கு வெளியே ஒன்றும் போகவில்லை. இந்த "ஸோனைச்" சேர்ந்த ராஜ்யங்களுக்குள்ளேயே தான் இருக்கிறது. ஆந்திர ராஜ்யத்தில் அப்படியே வைத்திருக்கிறார்கள். அவர்களுக்கு அதிக விலை கிடைக்கவேண்டுமென்ற எண்ணம், ஆசை. ஆகவே அவர்களிடமே அப்படியே வைத்திருக்கிறார்கள். வெளியே ஒரு இடத்திற்கும் போய்விடவில்லை. நமக்கு $1\frac{1}{2}$ லட்சம் டன் பற்றாக்குறை இருக்கிறது. அதை யாரிடம் கேட்டு வாங்குகிறது ? ஆதலால் நாம் தனியாக இயங்குவது நமக்கே நல்லது அல்ல.

உரம் எங்கேயோ வட ஆற்காடுக்கு வெளியில் போய்விடுகிறது என்று சொன்னார்கள். எத்தனையோ வகை திருட்டுத்தனம் நடக்கிறது. அதை கூடியவரை தடுக்க முயற்சி செய்கிறோம். நாம் எல்லோரும் சேர்ந்து தடுக்கவேண்டும். ஒருகனம் அங்கத்தினர் கூட்டுறவு சங்கத்தைச் சேர்ந்தவர் உர விநியோகம் நன்றாக நடக்கிறது என்று சொன்னார். ஆந்திர நாட்டிலிருந்து வரும் உரம் செங்கல்பட்டு ஜில்லாவில் ஒரு விலைக்கு விற்கப்படுகிறது என்று சொன்னார்கள். குறைந்த விலைக்குக்கூட விற்கப்படுகிறது என்று சொன்னார்கள். இதையெல்லாம் எவ்வளவு தூரம் தடுக்கமுடியுமோ அவ்வளவு தூரம் தடுத்துக்கொண்டுதான் இருக்கிறோம்.

**SRI N. K. PALANISAMI:** இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்ததன் நோக்கம் இருக்கக்கூடிய நெருக்கடியை சர்க்கார் உணரவேண்டுமென்பதும், அதற்கு சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்பதை தெரிந்துகொள்ளுவதும்தான். கனம் மந்திரி பதிலில் நான் அதிகம் எதிர்பார்த்தேன். ஆனால் பொதுவாக அவர்கள் மழுப்பிவிட்டார்கள். சர்க்கார் எதைச் செய்யவேண்டுமோ அதையெல்லாம் செய்திருக்கிறார்கள் என்று பொதுவாக சொல்லிவிட்டார். **Buffer stock** "பப்பர் ஸ்டாக்" பற்றி அவர்கள் ஒன்றுமே சொல்லவில்லை. அப்படி ஸ்டாக் இருந்தால்தான் விலை ஏறாது. எந்த இடத்தில் எப்பொழுது விலை

[Sri N. K. Palanisami] [7th November 1957

ஏறுகிறதோ, அப்பொழுது உடனடியாக சர்க்கார் நேரடியாக விற்பனை செய்தால் உடனே விலை குறையும். இதைப்பற்றி மந்திரி அவர்கள் ஒன்றும் சொல்லவில்லை.

அடுத்தபடியாக, ஒரு அணு, இரண்டு அணு ஒரு படிக்கு விலை ஏறினுல் ஒரு பெரிய நெருக்கடி ஏற்படுகிறது. அதற்கு எச்சரிக்கையாக மந்திரி அவர்கள் எந்த நடவடிக்கை எடுத்ததாகவும் சொல்லவில்லை. கள்ள மார்கட்காரர்கள் இதற்காக தானியத்தை பதுக்கி வைக்கிருர்கள். இதைத் தடுப்பதற்கு நம் சர்க்கார் நடவடிக்கை எடுக்கவேண்டும். இன்றையதினம் சென்னை அரசாங்கத்தார் இதுவரையில் விலை இறங்குவதற்கு எந்த நடவடிக்கையும் எடுத்ததாகக் காணும். அதேமாதிரி நிதி அமைச்சர் அவர்கள் பட்ஜெட் விவாதத்தின்போது வேண்டிய இடங்களில் "சீப் கிரைன் ஷாப்" திறப்பதாகச் சொன்னுர்கள். அப்படிச் சொல்லி நான்கு மாதங்களுக்குப் பிறகு இந்தக் கடைகளை மூடவேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. சாதாரணமாக நம்மைப் போன்றவர்கள் விலை கொடுத்து வாங்கிவிடலாம். ஏழை எளிய மக்கள் எப்படி அதிக விலை கொடுத்து வாங்க முடியும்? குறிப்பாக கைத்தறி நெசவாளர்கள், மற்ற ஏழைத் தொழிலாளிகள் இருக்கக்கூடிய இடங்களில் நிவாரணக் கடைகள் திறக்கவேண்டுமென்று கனம் மந்திரி அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். இதையெல்லாம் அவர்கள் கவனித்து செய்வார்கள் என்று நம்பிக் கொண்டு இந்தத் தீர்மானத்தை வற்புறுத்தவில்லை.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ஒரு விஷயத்தைச் சொல்ல மறந்துவிட்டேன். மன்னிக்கவேண்டும். அசோக் மேத்தாவை தலைவராகக் கொண்ட ஒரு கமிட்டி விலை நிர்ணயத்தைப்பற்றி விசாரிப்பதற்காக நியமிக்கப்பட்டிருக்கிறது. அந்த விலை நிர்ணய கமிட்டி எல்லா இடங்களையும் சுற்றிப்பார்த்து சீக்கிரத்தில் ஒரு அறிக்கை வெளியிடப்போகிருர்கள். அந்த அறிக்கையிலே நாம் ஏற்றுக்கொள்ளக்கூடிய நல்ல யோசனைகள் இருக்கும் என்று எதிர்பார்க்கிறோம். முக்கியமான ஒரு யோசனை என்னிடம் இருக்கிறது. நாம் அரிசியை எல்லாம் "ப்ரொக்யூர்" செய்யும் வகையிலே வாங்க முடியாது என்றாலும், வாங்குகிறவர்களுக்கு ஒரு லைசென்ஸிங் ஸிஸ்டம் வைக்கலாம். அரிசியை வாங்குகிறவர்களை, அதில் வியாபாரம் செய்பவர்களை ஓரளவு கட்டுப்பாடு செய்யலாம் என்ற யோசனையை, அசோக் மேத்தா கமிட்டியின் அறிக்கை வெளிவந்தபிற்பாடு ஆலோசிக்கலாம். பிறகு வேறு என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளலாமோ அவ்வாறும் செய்யலாம். நான் என்ன பதில் சொன்னாலும் இந்தத் தீர்மானத்தை பிரேபித்த அங்கத்தினருக்கு திருப்தி அளிக்காது. திருப்தி இல்லாவிட்டாலும் நான் சொல்லவேண்டியதையெல்லாம் சொல்லியாகிவிட்டது. பெருந்தன்மையுடன் அங்கத்தினர் அவர்கள் தன்னுடைய தீர்மானத்தை வற்புறுத்தவில்லை என்று சொன்னதற்கு என்னுடைய பாராட்டுதலை தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

DEPUTY SPEAKER : Does the hon. Member, Sri Palanisami, withdraw his resolution?

SRI M. KALYANASUNDARAM : He is not withdrawing. He is only not pressing.

DEPUTY SPEAKER : That means that he is withdrawing. I want to know the sense of the House, whether he has leave to withdraw the resolution. I hope hon. Members have no objection.

HON. MEMBERS : No objection.

The resolution was by leave withdrawn.

DEPUTY SPEAKER : The House will now rise for lunch and meet again at 3 p.m.

The House then rose for lunch.



7th November 1957]

## (After lunch—3 p.m )

### VIII.—DISCUSSION ON THE REPORT OF THE LEGISLATURE COMMITTEE ON THE WHITE PAPER ON EDUCATION—*cont.*

MR. SPEAKER : We shall now continue the discussion on the Report of the Legislature Committee on the White Paper on Education. Mrs. Suares.

* SRIMATHI A. SUARES : Mr. Speaker, I commend the White Paper on Education which the Government have prepared. As one connected with Education for many years, I fully realise the amount of thought, labour and time that would have been spent in preparing this voluminous report. There has been great need to integrate the course of elementary education. With the change in the set-up of University Education, the necessity for the revision of the secondary education course has been precipitated. The Legislature Committee has made many useful suggestions for the revision of the original scheme. With the *via media* now proposed there will be a workable scheme and the ten-year plan, when implemented, will certainly bring in a new era in elementary and secondary education.

I wish to draw the attention of the House to a few points in the draft syllabus and the Report. In the draft syllabus for Standard under Home Science, which is a diversified course of studies for girls, there are two topics which I feel should be omitted. These are Sex Education and Family Planning. Under the New Regulations, the girls in Standard XI will be between the ages 15 and 16. They are still too young to be taught matters on Family Planning and Sex Education. Opinion is divided on the question of Family Planning. It is not only a few sections of Christians but many others also who do not subscribe to family-planning for religious reasons mostly. The Government have accepted this fact and in the case of doctors and nurses who claim exemption on religious grounds, they are exempted from participating in work connected with family planning. Home Science is taught in the college classes also. If girls in college take up Home Science, they are older and maturer and are in a position to think and decide for themselves. But in the high school stage, great harm can be done to the immature mind. Certainly, no educationist will take chances in such a serious matter. I, therefore, suggest that these two topics be deleted from the Home Science syllabus.

According to the new scheme, the age of admission to college will be 16½ years. This is one year more than the age of admission according to the present rules. I say one year, not two years, though the age of admission to college is 14½ years at present. The new syllabus saves one year of studies. According to the old rules, eleven years are set apart for the high school course, two years for the Intermediate and two years for the B.A.—a total of fifteen

years. In the new course, eleven years will be set apart for the higher secondary course and three years for the degree course, which will be in all fourteen years. Since there is an increase of one year in age, I suggest that a proviso be embodied leaving a margin of three months in the operation of the age rule. If a student completes $16\frac{1}{2}$ years within three months after the starting of the degree course, he may be admitted at the beginning of the term. Otherwise, he will be idle for a whole year and will be seventeen years and three months on admission the following year which I consider a high age. According to the new scheme for the integrated course in elementary education, the course will last for seven years. English is to be introduced in Standard V. There will still be many primary schools in small villages with Standards I to V only. If English is to be introduced in Standard V in elementary primary schools it will be of no use, if the pupils have no intention of proceeding to the higher elementary school or to the higher secondary school. There will be the difficulty of securing competent teachers to teach English in primary schools. When the reorganised scheme is finalised and the draft syllabuses are approved by the Government, the Anglo-Indian schools will also have to consider a revision of their syllabuses in order to conform to the higher standard that will be required for admission to the three-year degree courses without going through the pre-University course. The State Board for Anglo-Indian Education will probably consider this matter in due course.

3-10 p.m. * **SRIMATHI A. S. PONNAMMAL:** கனம் சபாநாயகர் அவர்களே, இன்று நம் நிதியமைச்சர் அவர்கள் கொண்டுவந்துள்ள இந்த வெள்ளை அறிக்கையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். இதற்கு நான், எல்லா ஏழைக் குழந்தைகளுக்கும், லேபர் ஸ்கூல், ஹரிஜன வெல்பெயர் டிப்பார்ட்மெண்ட் மூலம் நடத்தப்படுகிற பள்ளிக்கூடங்களில் படிக்கிற ஏழைக் குழந்தைகளுக்கு, ஹரிஜன குழந்தைகளுக்கு பகல் உணவு அளித்து வந்தார்கள். இப்பொழுது அதை மாற்றி எல்லாக் குழந்தைகளுக்கும் பகல் உணவு அளிக்க சட்டம் கொண்டுவந்ததை நான் பாராட்டுகிறேன். அதோடு நன்றியும் செலுத்த கடமைப்பட்டிருக்கிறேன். எல்லாக் குழந்தைகளுக்கும் பகல் உணவு அளிக்கப்படவில்லையே என்று வருத்தப்பட்டுக்கொண்டிருந்தவர்களில் நானும் ஒருத்தி. அடுத்தபடியாக, கட்டாய கல்வி. அதையும் நான் வரவேற்கிறேன். இப்பொழுது கிராமங்களை எடுத்துக்கொண்டால், குறிப்பாக ஏழை குழந்தைகள்; ஹரிஜன குழந்தைகள் பள்ளிக்கூடத்திற்குச் செல்லமுடியாத நிலையில் இருக்கிறார்கள். நாம் ஒரு சில உதவிகள் கொடுக்கிறோம். அதோடு ஒரு சில பள்ளிக்கூடங்களில் புத்தகங்களும், சிலேட்டும் கொடுத்து உதவுகிறார்கள். அப்படி கொடுத்தும் அவர்கள் பள்ளிக்குச் செல்லமுடியாத நிலையில் இருக்கிறார்கள். அவர்கள், துணிக்காக கஷ்டப்படுகிறார்கள். கல்விக்காக நாம் கோடிக்கணக்கில் ரூபாய் கொடுக்கிறோம். அதிலிருந்து ஏழை குழந்தைகளுக்கு; ஹரிஜன குழந்தைகளுக்கு ஆண்டுக்கு ஒரு முறையாவது கட்ட துணி வாங்கிக்கொடுக்க அரசாங்கம் ஏற்பாடு செய்தால் அதைப்பற்றி நான் மிகவும் பாராட்டுவேன். அடுத்தபடியாக, தொழில் கல்வி. இன்று தொழில் கல்வி பலயிடங்களிலும் நிறுவப்பட்டிருந்த போதிலும் ஈ.எஸ்.எல்.ஸி., எஸ்.எஸ்.எல்.ஸி., வரை படித்த மாணவ மாணவிகள் "டிரெயினிங் ஸ்கூல்"-ல் இடம் கிடைக்காமல் கஷ்டப்படுகிறார்கள். எனது தொகுதியை எடுத்துக்கொண்டால், அங்கு ஏராளமான ஆண்களும், பெண்களும் ஈ.எஸ்.எல்.ஸி. படித்து விட்டு நாலைந்து வருடங்களாக போதனுமொழி பள்ளிகளில் இடம் கிடைக்காமல்



கஷ்டப்படுகிறார்கள். அதோடு என்னையும் விடாமல் எனக்கு தொந்தரவு கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அவர்களை தொழில் கல்வியிலாவது சேர்த்து அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த ஒரு வழிவகை செய்தால் அது, நான் மிகவும் வரவேற்கத்தக்க ஒரு விஷயமாயிருக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன். எங்கெங்கு கிராமங்களில் 300-க்கு குறையாத ஜனத்தொகையிருக்கிறதோ அங்கெல்லாம் பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்தி அங்கிருக்கக்கூடிய குழந்தைகளுக்குபடிக்க வழிவகை செய்தால் இன்னும் நன்றாக இருக்கும் என்று நினைக்கிறேன். அடுத்தபடியாக, பெண் கல்வி. இன்று பெண் கல்வியை எடுத்துக்கொண்டால், குறிப்பாக ஒரு குறிப்பிட்ட வயது வரைக்குந்தான் அவர்கள் ஆண்களோடு சேர்ந்து படிக்க வேண்டும். அதற்குப்பின் உயர்நிலைப் பள்ளிக்குப் போனவுடன் அவர்கள் பெண்கள் பள்ளிக்கூடத்தில்தான் படிக்கவேண்டும். அதற்கு நம் அரசாங்கம் தகுந்த முறையில் நடவடிக்கை எடுத்துக்கொண்டு ஒவ்வொரு பகுதிக்கும் பெண்கள் ஹைஸ்கூல் ஏற்படுத்தவேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளுகிறேன். ஏனென்றால், இன்று எனது தொகுதியில் ஐந்து ஆண்கள் பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. நானும் ஒரு பெண் அங்கத்தினராய் இருக்கிறபடியால் என்னிடம் பெண்கள் வந்து துன்பப்படுவதோடு கூட, அவர்கள் அந்தப் பள்ளிகளில் படிக்க மிகவும் கூச்சப்பட்டு, அவஸ்தைப் பட்டு, பயந்துகொண்டிருக்கிறார்கள். என்பதையும் என்னிடம் கூறினார்கள். எனவே, தயவுசெய்து எப்படியாகிலும் என்னுடைய தொகுதியில் பெண்கள் பள்ளிக்கூடம் ஒன்று ஏற்படுத்துவதற்கு கனம் நிதி அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்யவேண்டுமென்று இங்கு படிக்கின்ற நூற்றுக் கணக்கான மாணவிகள் சார்பாக கேட்டுக்கொள்கிறேன். இந்த சந்தர்ப்பத்தை அளித்த கனம் சபாநாயகர் அவர்களுக்கு என் நன்றியை தெரிவித்துக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

* **SRI W. P. A. R. CHANDRASEKHARAN:** கனம் சபாநாயகர் அவர்களே, இந்தக் கல்வி சம்பந்தமான வெள்ளை அறிக்கையின் மீது சட்ட மன்ற கமிட்டியார் வெளியிட்ட அறிக்கையை கனம் நிதி மந்திரி அவர் சமர்ப்பித்திருப்பதை நான் முழு மனதுடன் ஆதரித்து சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். அதாவது இப்போது நம்முடைய நிலைமை என்னவென்றால் கல்வியை பெரிய அளவில் விஸ்தரிக்க வேண்டிய நிலைமையில் இருக்கிறோம். அதே சமயத்தில் தரத்தை உயர்த்த வேண்டிய நிலையிலும் இருக்கிறோம். ஆனால் ஆரம்ப கல்வியை விஸ்தரிக்க வேண்டியதின் அவசியத்தை யாரும் மறுக்க முடியாது. இம்மாதிரி ஆரம்ப கல்வியை விஸ்தரித்துக்கொண்டு அதற்கப்புறம் கல்வியின் தரத்தை உயர்த்த வேண்டும், என்ற கனம் அமைச்சர் அவர்களுடைய கருத்தை நாம் வரவேற்க வேண்டியதாக இருக்கிறது. பொதுவாக இப்போது இருக்கும் வெள்ளை அறிக்கையில் முக்கியமான பிரச்னை, கல்வி சம்பந்தமாக 11 வருடங்கள் செலவழிக்கப்படுவதை, அதாவது பள்ளிக்கூடங்களில் 11 வருடங்கள் செலவழிக்கப்படுவதை, இப்போது நாம் கல்லூரியில் படிக்கிற படிப்பில் மூன்று வருடம் டிகிரி கோர்ஸாக ஆக்கி, ஒரு வருடம் (ப்ரி யூனிவர்ஸிட்டி) **pre-university** படிப்பு என்று ஆக்கி அதை எவ்வாறு யாரை நடத்துவதற்கு ஏற்பாடு செய்யலாம் என்கிற பிரச்சனையில், நான் கூறிக்கொள்ள ஆசைப்படுவது என்னவென்றால், ஆரம்பக்கல்வி ஐந்து வருடம் செக்கண்டரி கல்வி மூன்று வருடம், உயர் நிலை கல்வி மூன்று வருடம் என்றிருப்பதை கலைக்காமலும் உலைக்காமலும் கீழே கிண்டர்கார்டன் என்ற வகுப்பை ஏற்படுத்தி அதில் ஆரம்பக் கல்வியைப் அதில் கொண்டு வரமுடியுமா என்பதை ஆலோசித்துப் பார்த்து அதை அனுசரிப்பதின் நன்மை ஏற்படும் என்று தெரிந்தால் கிண்டர் கார்டர் வகுப்பை ஏற்படுத்தி விட்டு அதிலிருந்து ஆரம்பிக்கப்படுமானால் ஆறாவது பாரம் படித்து முடிக்கும் பொழுது (ப்ரி யூனிவர்ஸிடி) **pre-university** கோர்ஸை படித்து முடிக்க கூடிய மாணவனின் நிலையை அடைய முடியும். கிண்டர்கார்டன் வகுப்பினால் சாத்தியமில்லை என்றிருக்குமானால் ஆரம்பக்கல்விக்கு இருக்கும் ஐந்து வருடத்திற்கு பதிலாக நான்கு வருடங்களாக மாற்றிவிட்டு அவர்களுக்கு எந்த வழியில் இந்த படிப்பை அளிக்க முடியும் என்பதை பார்க்க வேண்டும். அந்த நிலையில் நான் கூறிக்கொள்ளுவது என்னவென்றால் கேரள சர்க்கார்

[Sri W. P. A. R. Chandrasekharan] [7th November 1957

இந்த வகுப்பு பாடங்களை கற்றுக் கொடுப்பதற்கு பள்ளிக்கூட நேரத்தை
பாதி நேரம் என்று ஆக்கி அவர்கள் வெற்றி கண்டிருக்கிறார்கள். அம்
மாதிரி இருக்கும் ஐந்து நிலைகளை அவர்கள் இரண்டரை வருடங்களுக்கு
சொல்லிக் கொடுத்திருப்பதை பார்க்கும்பொழுது, நாமும் ஐந்து வருடங்கள்
என்றிருப்பதை நான்கு வருடங்கள் என்று ஆக்கிக் கொண்டால் பழைய
படி **Secondary and Higher Education**-க்குமாக **7** வருடங்கள் ஆகிறது. கல்
லூரி நிலைகளை எடுத்துப் பார்த்தால் ப்ரி யூனிவர்ஸிட்டியில் **(pre-university)**
-யில் கிடைக்கிற படிப்பை ஹைஸ்கூல் படிப்பிலேயே பெற வேண்டும்.
இவ்விதமாக இதையும் சேர்த்து ஆரம்ப கல்வி நிலையில் இருக்கிற ஐந்து
நிலைகளை நான்கு வருடங்களுக்குள் ஏற்படுத்துவது சாத்தியம் என்று
தெரிந்தால் அதை அனுசரிக்கலாம். அந்த மாதிரி பிரி யூனிவர்ஸிடி
**(pre-university)** நிலையை வகுக்க வேண்டும், என்று கேட்டுக்
கொள்கிறேன். மொழி சம்பந்தமாக பிரதேச மொழி, ஹிந்தி மொழி
அல்லது வேறு ஒரு இந்திய மொழி, ஆங்கிலம் அல்லது உலக மொழி
களுள் ஒரு மொழி என்று மூன்று மொழிகளுக்கும் முக்கியத்துவம்
அளிக்கப்பட்டிருக்கிறது. இது வரவேற்கத்தக்க யோசனை. அதை அனு
சரிப்பதின் மூலம் எந்தெந்த கோணங்களிலிருந்து எந்தெந்த நிலையில்
பார்த்தாலும் அதில் காணப்படுகிற குறைபாடுகளை நீக்குவதற்கு இது ஒரு
வழி தேடி கொடுக்கிறது என்பதை கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.
வேறு மொழியைக் கற்பித்து கொடுக்கும்பொழுது அதை ஆரம்ப தசையிலே
ஆரம்பிக்கவேண்டும். "இளமையிற் கல்" என்ற பழமொழிக்கேற்ப
ஆரம்பத்திலே படித்தால்தான் மாணவ மாணவிகள் சீக்கிரமாக படிக்க
முடியும். ஜப்பானியர் பர்மாவை ஆக்கிரமித்திருந்தபோது ஜப்பானிய
மொழியை போதனு மொழியாக வைக்க வேண்டுமென்று தீர்மாணித்து கல்வி
நிலையங்களில் இதை கொண்டு வந்த பொழுது அந்த மொழியை அங்கிருந்த
ஆசிரியர்களைவிட அங்கிருந்த மாணவர்கள்தான் சிறந்த முறையில் கற்றார்
கள் என்பதை சொல்லிக்கொள்கிறேன். ஆகவே தாய் பாஷையைத்
தவிர வேறு பாஷையை கற்கவேண்டும் என்ற நிலை ஏற்படும்பொழுது
கீழிலிருந்து ஆரம்பிப்பதுதான் நல்லது என்று நான் கூறிக்கொள்கிறேன்.
அடுத்தபடியாக "புக்ஸ் பப்ளிக்கேஷன்" சம்பந்தமாக சர்க்காரே ஏற்று
நடத்துவதால் பல தவறுகளை நீக்க முடியும் என்று சொல்லப்பட்டது.
இவ்விதம் இருப்பதை விட சர்க்கார் ஓரளவு பங்கு கொண்டு, நல்ல கண்
காணிப்பும் இருக்கின்ற ஸிண்டிகேட்டோ அல்லது கார்ப்பரேஷனோ ஏற்
படுத்தி அதன் மூலம் இந்த புத்தகங்களை வெளியிடுவதுதான் நல்லது
என்று நான் நம்புகிறேன். இவ்விதம் சர்க்கார் ஏற்றுக்கொள்ளாமல்
இருந்தால், சர்க்காரினுடைய போக்குப்படிதான் புத்தகங்கள் அமைந்
திருக்கும் , பின்னால் ஏற்படக்கூடிய குற்றச்சாட்டிலிருந்து விலகியதாகும்
அதோடு நமக்கு இப்போது இருக்கும் வேலைகளுக்கிடையே இந்த புத்தகங்
களை வெளியிடக்கூடிய வேலையும் ஏற்றுக்கொள்ளுவது உசிதமல்ல என்று
தான் நான் கருதுகிறேன். ஆகவே ஸிண்டிகேட் அல்லது கார்ப்பரேஷன்
நிறுவி அதிலே சர்க்கார் தங்களுடைய கண்காணிப்பை வைத்து, அதில்
சர்க்கார் ஓரளவு பங்கு கொண்டு நடத்தினால் நன்றாக இருக்கும் என்று
நினைக்கிறேன். இன்றைக்கு தனிப்பட்ட புத்தக கடைகளில் **100**-க்கு **40**
சத விகிதம் கமிஷன் கொடுக்கப்படுகிறது. ஆகையால் பாடுபடும் அல்லது
கிராமத்திற்கும் போதிய ஊதியம் மட்டும் (or) லாபம் என்று வழி
முறை வகுத்து நடத்தினால், புத்தகங்களின் விலையைக் கணிசமாகக்
குறைக்கலாம். அதே நேரத்தில் புத்தகம் எழுதுபவர்களையும் ஊக்குவிக்க
வும் இப்போது எழுதி கொண்டிருப்பவர்களுக்கு சரியான வழியில் இடம்
அளிக்கவும் சந்தர்ப்பம் ஏற்படலாம் என்பது என் அபிப்பிராயம். ஆகவே,
இந்த ஸிண்டிகேட் அல்லது கார்ப்ரேஷன் அமைத்து அதன் மூலம் நல்ல
நிலையில் புத்தகங்கள் வெளியிட்டு வருவது நல்லதாக இருக்கும் என்பது
என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம் என்பதை கூறிக்கொள்ள
ஆசைப்படுகிறேன்.

மேலும், இப்போது முன்னேறியிருக்கும் ஜில்லாக்களில் பிற்பட்ட பிராந்
தியங்கள்—பிரதேசங்கள்—இருக்கின்றன ; அதாவது, பிற்பட்ட தாலூகாக்
களோ பிற்பட்ட பகுதிகளோ இருக்கின்றன. அவைகளுக்கு பிற்பட்ட



7th November 1957] [Sri W. P. A. R. Chandrasekharan]

ஜில்லாக்களில் உள்ள பிற்பட்ட தாலூகாக்களுக்கு அளிக்கப்படும் அதே
முக்கியத்துவத்தை அளித்து, அந்த இடங்களில் ஆரம்பக் கல்வியை விஸ்
தரிக்க வேண்டும்.

கல்வியின் தரத்தை உயர்த்துவதற்கு நான் ஒரு யோசனை சொல்ல
விரும்புகிறேன். ஆரம்ப, மத்திய, உயர்தரக் கல்வி நிலைகளில், ஆங்காங்கு,
முக்கியமாக கிராமாந்திரங்களில் மாதிரிப் பள்ளிகளை (மாடல் ஸ்கூல்ஸ்)
நிறுவி, அவைகளை சர்க்கார் அதிகாரிகளின் நேரடிக் கண்காணிப்பில் விட்டு
சரியாக இயங்கச் செய்யலாம். இதைச் செய்தால் மற்றப் பள்ளிக்கூடங்கள்
அவைகளைப் பார்த்து, அவைகளிலுள்ள நடைமுறைகளையும் வழிவகைகளை
யும், பின்பற்றுவார்கள். இதன் விளைவாக கல்வியின் தரம் உயரும்.
இந்த யோசனையை சர்க்கார் நிறைவேற்றும்போது இன்னொரு காரியத்
தையும் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதாவது, மாதி
ரிப் பள்ளிக்கூடத்திற்குச் சமமாக யார் யார் நல்ல நிலையில் பள்ளிக்கூடங்
களை நிர்வகித்து வருகிறார்களோ, அவர்களுடைய அந்தப் பள்ளிக்கூடங்
களை 'ரெகக்னைஸ்ட் ஸ்கூல்' என்று சொல்வதை விட்டுவிட்டு 'அப்ரூவ்ட்
ஸ்கூல்ஸ்' என்று அழைக்கலாம். அந்தப் பள்ளிக்கூடங்களை அம்மாதிரி
அழைத்து அவைகளை நன்றாக நடத்துபவர்களுக்கு ஊக்க மளிக்க வேண்
டும் ; இதைச் செய்தால், சர்க்காரே நல்ல பள்ளிக்கூடங்களை அதிகமாக
நிறுவாவிட்டாலும், பூரண நிலையை அடைந்த பள்ளிக்கூடங்கள் நிறைய
ஏற்படுவதற்கான சூழ்நிலை ஏற்படும். அவைகளை 'அப்ரூவ்ட் ஸ்கூல்ஸ்'
என்று அழைத்தால், அவைகள் பூரண நிலையை அடைந்த பள்ளிக்கூடங்
கள் என்று கருதப்படுவதற்கும் இடம் இருக்கும். 'மாடல் ஸ்கூல்ஸ்'
'அப்ரூவ்ட் ஸ்கூல்ஸ்' என்ற முறையைக் கொண்டு வருவது பற்றி சர்க்கார்
யோசிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொரு யோசனை சொல்ல விரும்புகிறேன். தேச மக்களின்
நலன்கள் எல்லாவற்றையும் கவனிப்பதற்கு சர்க்கார் இருக்கிறதென்றாலும்
பள்ளிப் பிள்ளைகளின் விஷயத்தில் பெற்றோர்களுக்கு மிகுந்த அக்கறை
யும் நேரடியான தொடர்பும் இருப்பதால், பெற்றோர்களுடைய கருத்துக்
களையும் அரசாங்கம் அவ்வவ்போது அறியவேண்டும். ஆகவே, எந்த
ஊர்களில் பள்ளிக்கூடம் இருந்தாலும், அந்த ஊர்களிலெல்லாம் பெற்
றோர்கள் சங்கம் அமைக்கப்பட்டு, அவர்களுடைய யோசனைகள் கேட்கப்பட
வேண்டும் ; அவர்களுடைய யோசனைகளை சம்பந்தப்பட்ட அதிகாரிகளோ
அல்லது உபாத்தியாயர்களோ அல்லது மானேஜ்மெண்டார்களோ கேட்டு
அவைகளின்படி நடந்தால் கல்வி நிலை இன்னும் சிறப்பாக உயரும் என்று
கூறிக்கொள்கிறேன். கல்விபற்றிய வெள்ளை அறிக்கை மீது சட்டமன்றக்
கமிட்டியார் வெளியிட்டுள்ள அறிக்கையைப் பூரணமாக ஆதரித்துக்கொண்டு
என்னுடைய வார்த்தையை முடித்துக்கொள்கிறேன்.

**Sri M. D. RAMASAMI** : கனம் தலைவர் அவர்களே, மிகுந்த சிரத்தை
யோடு தயாரிக்கப்பட்டுள்ள, பல நல்ல அம்சங்களைக் கொண்ட சட்ட மன்றக்
கமிட்டியாரின் அறிக்கையை நான் முழுமனதுடன் வரவேற்கிறேன்.
அதைப்பற்றி இரண்டொரு வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன்.

பதினொரு வருஷப் பள்ளிப்படிப்பு ஏற்பாட்டில் கடைசி மூன்று வரு
ஷங்களில் தொழில் கல்வி சொல்லிக் கொடுக்கும் 'டைவெர்ஸிபைட்
கோர்ஸ்' என்ற திட்டம் இப்பொழுது சில காலமாக நடைமுறையில் இருந்து
வருகிறது. இதைப் பற்றி சொல்லும்போது, இந்தக் கல்வியின் தரம்,
'பாலிடெக்னிக்' படிப்பில் முதல் ஆண்டு முடிவிற்குள் ஒரு மாணவன்
பெறும் தகுதியின் அளவிற்கு இருக்கவேண்டுமென்று சட்டமன்றக்
கமிட்டியார் சொல்லியிருக்கிறார்கள். ஆயினும், ஹைஸ்கூல் படிப்பை
முடித்து வெளியே செல்லும், 'டைவெர்ஸிபைட் எஞ்சினீரிங் கோர்ஸ்'
படித்த மாணவனுக்கு 'பாலிடெக்னிக் கோர்ஸ்'-ல் சலுகை காட்டப்படுமா
என்பது பற்றி இங்கே விளக்கப்படவில்லை. ஹைஸ்கூலில் இந்தப் பாடத்
தைப் படித்துத் தேறியவர்களுக்கு பிற்காலத்தில் இந்தக் கல்வியைப்
பயிலப்போகும் இடங்களில் அனுகூலம் இருக்க வேண்டுமென்பது என்
அபிப்பிராயம். ஆகவே, அந்தமாதிரி 'டைவெர்ஸிபைட் எஞ்சினீரிங்

கோர்ஸ்' ஐப் படித்துத் தேறிய மாணவர்களுக்கு 'பாலிடெக்னிக்' படிப்
பில் இரண்டாவது வகுப்பில் சேர்த்துக்கொள்வதற்கு வகை செய்ய
வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன். ஹைஸ்கூலில் இந்தப் பாட
த்தைப் படிக்கும் மாணவர்களுக்கு அது பிற்காலப் படிப்புக்கு மிகவும்
அனுகூலமாக இருக்கும்படி செய்யவேண்டும்.

ஹிந்தியைப்பற்றிச் சொல்லும்போது நான்கு வருடங்கள் ஹிந்தி படித்
தால் போதும் என்று அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. சிறு வயதில்
ஹிந்தியைப் படிக்க ஆரம்பித்தால் நல்ல பலன் ஏற்படுகிறது என்பதை நான்
அனுபவத்தின் மூலம் அறிந்தேன். எனக்கு முன்பு பேசிய கனம்
நண்பர், இளம் வயதில் அன்னிய பாஷையைப் படிப்பதில் நல்ல வெற்றி
ஏற்படுகிறது என்று சொன்னார். ஐந்தாவது வகுப்பிலிருந்தோ அதற்கு
முன்பிருந்தோ ஹிந்தியைப் பிள்ளைகள் படித்து வந்தால் நல்ல பலன்
பெறுகிறார்கள். ஆகவே, இந்த சிபாரிசை மாற்ற முடியுமானால், ஆறு
வருஷப் படிப்பாகவே ஹிந்தி இருப்பது நல்லது என்பதால், அதற்கேற்ற
வாறு மாற்றவேண்டும் என்று அபிப்பிராயப்படுகிறேன்.

கட்டாயக் கல்வி சம்பந்தமாகச் சொல்லும்போது, பொருளாதாரத்
துறையில் மிகவும் பிற்பட்டுள்ள குடும்பங்களுக்கு விதிவிலக்கு அளிக்க
வேண்டும் என்று அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது; பிள்ளைகளைப்
பள்ளிக்கு அனுப்ப முடியாத அளவிற்கு அவர்களுடைய பொருளாதார
நிலை இருந்தால் அவர்களுக்கு மன்னிப்பு அளிக்கலாம் என்று ஒரு விதி
இருக்கிறது. சர்க்கார் உத்தேசிக்கும் பிரகாரம் உணவு கொடுக்கும் திட்டம்
அமலுக்கு வருமானால், அப்போதும் பிள்ளைகளுக்கு மன்னிப்புக்கொடுக்க
வேண்டியது அவசியம்தானா என்பதையும் கவனிக்கவேண்டும்.

எலிமெண்டரி கல்வி விஷயத்தில், அவ்வவ்போது கல்வித் திட்டத்தில்
மாறுதல்கள் ஏற்படும்போது அவைகளுக்குத் தகுந்தாற்போல் தங்களை
மாற்றிக்கொள்ளும் சக்தியில்லாதவர்களாக எலிமெண்டரிப் பள்ளி உபாத்
தியாயர்கள் இருப்பதால், அவர்களுக்கு 'ரெப்ரெஷர் கோர்ஸ்' தேவை
என்று கருதப்படும் காலத்தில் அதை அவர்களுக்குக் கொடுப்பதற்கு வகை
செய்ய வேண்டுமென்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம்.

ராஜ்யம் முழுவதும், எலிமெண்டரிப் பாடசாலை உபாத்தியாயர்கள்,
தங்களுக்குச் சம்பளமும் மற்ற வசதிகளும் போதாது என்று சொல்வதை
சர்க்காரின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இந்தப் பிரச்
னையைத் தீர்ப்பது சர்க்காரின் நிதி நிலைமையைப் பொறுத்ததாக இருந்
தாலும், இதை சர்க்கார் முக்கியமாக கவனத்தில் கொள்ள வேண்டும்
என்று சொல்லிக் கொள்கிறேன். அதோடு, எலிமெண்டரிப் பாடசாலை
உபாத்தியாயர்களுக்கு வீட்டு வாடகை அலவன்ஸ் கொடுக்க வேண்டும்
என்ற கோரிக்கை ரொம்ப நாட்களாக இருந்துவருகிறது. இதையும்
சர்க்கார் கவனிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய பேச்சை
முடித்துக்கொள்கிறேன்.

* SRIMATHI RAJATHI KUNJITHAPATHAM: கனம் சபைத் தலைவர்
அவர்களே, நமது கல்வி அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கும்
வெள்ளை அறிக்கைபற்றிய அறிக்கையை ஆதரித்து ஒரு சில வார்த்
தைகள் சொல்ல விரும்புகிறேன். நமது தமிழ் நாடு தானத்தில் சிறந்த
நாடு, அன்ன தானத்தில் சிறந்த நாடு.

"அன்னசத்திரம் ஆயிரம் கட்டல்
ஆலயம் பதினாயிரம் நாட்டல்
. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .
. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .
அன்னயாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக் கெழுத்தறிவித்தல்."

என்ற பழைய பண்பாட்டைக் கொண்ட தமிழ் நாட்டில், ஏழை எளியவர்
களாக இருக்கும் மக்களுக்கு—பசியால் வாடி வதங்கிப் பண்டாரங்களாகத்
திரிந்து அன்னக்காவடிகளைச் சுமந்து வருபவர்களுக்கு—இரவில் பசியாற்



றும் தர்மம் இன்னும் இருப்பதைப் பார்க்கிறோம். அவ்விதமான பண்
பாட்டைக் கொண்ட இந்த நாட்டில், குழந்தைகள் பசியாலும் வறுமை
யாலும் வாட்டப்படும் காரணத்தால் அவர்கள் பள்ளிக்குச் செல்லவேண்
டாம் என்ற அசிரத்தை அவர்களுக்கோ அவர்களுடைய பெற்றோர்
களுக்கோ ஏற்பட்டுவிடக்கூடாது என்ற நோக்கத்துடன் கனம் கல்வி அமைச்
சர் அவர்களும் கல்வி இலாகா டிரக்டர் அவர்களும் சேர்ந்து எடுத்துக்
கொண்ட சிரத்தையின் விளைவாக, ராஜ்யத்தில் பல பள்ளிகளில் மத்தி
யான உணவு கொடுக்கப்பட்டு வந்ததைக் பல பள்ளிகளில் பார்க்கிறோம்.
ஆனால், பல இடங்களில் மத்தியான உணவு கொடுக்கும் விஷயத்தில்
ஆரம்ப விழாக்களைத் தொடர்ந்தே அடைப்பு விழாக்களும் இருந்ததைக்
கண்கூடாகக் கண்டதால் தான் மத்தியான உணவு கொடுப்பதற்கு ஆகும்
செலவிற்கு சர்க்கார் உதவித்தொகை கொடுக்க முன் வந்திருக்கிறார்கள்
என்பதை அறிய சந்தோஷப் படுகிறேன். சர்க்கார் உதவித் தொகை கொடுப்
பது வரவேற்கத்தக்கது. 'பசி வந்திடப் பத்தும் பறந்துபோம்' என்பார்
கள். நான் ஒரு யோசனை கூற விரும்புகிறேன். நம் நாடு மடாதிபதிகள்
நிறைந்த நாடு, தானம் நிறைந்த நாடு; பெருமாள் சத்திரங்களை ஆதரி
ரித்து அவைகளில் எத்தனையோ பேருக்குச் சாதம் போட்ட நாடு. எங்கள்
திருநெல்வேலி ஜில்லாவில் திருவானமாமலை, திருக்குறங்குடி முதலிய
இடங்களில் ஜீயர்கள் இருக்கிறார்கள். தஞ்சாவூர் ஜில்லாவில் கூட எத்
தனையோ மடாதிபதிகள் இருக்கிறார்கள். இந்த மடங்களைச் சேர்ந்த நிலங்
களின் வருமானத்தை மடாதிபதிகள் வீண் படாடோபங்களிலும் அனுவசிய
மான வழிகளிலும் செலவிட்டுக் கொண்டிருப்பதை பொதுமக்கள் பார்த்
துக் கொண்டிருக்க முடியாது.

இந்த விதமான ஒரு குறையைத் தீர்த்து வைக்க வேண்டும். பள்ளிக்
கூட மாணவர்களுக்கு மத்தியான உணவு கொடுக்கப்படவேண்டும். தர்மத்
திற்கு என்று குறிக்கப்பட்டுள்ள செல்வங்களை எடுத்து பள்ளி மாணவர்
களுக்கு மத்தியான உணவு மூலமாகக் கொடுக்க வேண்டும். இதை ஒரு
அம்சமாகக் கொண்டு வந்தால் அது மிகவும் வரவேற்கத்தக்கதாக இருக்
கும்.

கட்டாயக் கல்வியை அமுலுக்குக் கொண்டு வரவேண்டும் என்று கூறப்
பட்டிருக்கிறது. அதையும் நாம் வரவேற்க வேண்டியதாக இருக்கிறது.
சுதந்தரம் பெற்ற பிறகு நாம் எல்லோருக்கும் வோட்டுரிமையைக்
கொடுத்திருக்கிறோம். காணி நிலம் இல்லாதவர்களுக்கும் கணக்கற்ற
நிலம் வைத்திருப்பவர்களுக்கும் ஒரே மாதிரியாக வோட்டுரிமையை நாம்
இப்பொழுது கொடுத்திருக்கிறோம். அப்படிப்பட்ட ஒரு உரிமையை நாம்
சட்டத்தின் மூலமாகக் கொண்டு வந்திருக்கிறோம். வயது வந்தவர்களுக்கும்
வோட்டுரிமையைக் கொடுத்திருக்கிறோம். படிப்பு இல்லாதவர்களுக்
கும் வோட்டுரிமையைக் கொடுத்திருக்கிறோம். புல் பூண்டுகளுக்கும்
வோட்டு, கதிர் அறிவாளுக்கும் வோட்டு, ஆலமரத்திற்கும் வோட்டு, உழும்
மாடு முதல் உதய சூரியனுக்கும் வோட்டு, மனிதனுக்கு வோட்டு என்று
முடியாத அறிவீனத்திலிருக்கிறோம். இதை மனதில் வைத்துக்
கொள்ள வேண்டும். அதை உணர்ந்து நமது கல்வி அமைச்சர் அவர்கள்
கட்டாயக் கல்வி முறையைக் கொண்டு வந்திருப்பதைக் கண்டு வரவேற்க
வேண்டியதாக இருக்கிறது. அது வரவேற்கத்தக்க அம்சம். இப்படிப்
பட்ட வோட்டுரிமையையும், இப்படிப்பட்ட கட்டாயக் கல்வி முறையையும்
கொண்டு வந்துள்ள பொருப்பாளிகளையும் கல்வி அமைச்சர் அவர்களையும்
அவருடைய வாரிசையும் நாட்டிலுள்ள மக்கள் வாழையடி வாழையாக
வாழ்த்துவார்கள். அவர்கள் புகழப்படுவார்கள் என்பதையும் தெரிவித்துக்
கொள்ளுகிறேன்.

குழந்தைகளுக்கு மூன்று பாஷைகள் கற்றுக்கொடுக்கப்பட வேண்டும்
என்று சொல்லப்படுகிறது. இதுவும் ஒரு வரவேற்கத்தக்க அம்சமாக இருந்
தாலும் இதைப்பற்றி ஒரு சிலர் குறையும் கூறுகிறார்கள். மேல் நாடு
களைப் பார்த்தால் அங்கு குழந்தைப் பருவத்திலேயே குழந்தைகளுக்கு
மூன்று பாஷைகளைக் கற்றுக்கொடுப்பது தெரியும். அவர்களைவிட நாம்
எந்த விதத்தில் கீழ்ப்பட்டவர்களாய் இருக்கிறோம் என்று கேட்

கிறேன். மேல் நாட்டில் குழந்தைப் பருவத்தில் மூன்று பாஷைகள்
கற்றுக்கொடுக்கப்பட வேண்டும் என்று உணர்ந்து தான் அப்படி வைத்
திருக்கிறார்கள். எந்த முறையில் அவர்களைவிட நாம் கீழ்ப்பட்டவர்கள்
என்பதைப் பார்க்க வேண்டும். அப்படிப் பார்க்கும்போது நாம் அறிவை
அகலப்படுத்துகிறோமேயொழிய அதை நாம் ஆழப்படுத்தவில்லை. அந்தக்
குறைபாடு நம்மிடத்தில் இருக்கிறது. இப்பொழுது நம் மாணவர்களுடைய
அறிவுத் திரணைப் பார்க்க வேண்டும். செயற்கை சந்திரனைப் பார்க்க
விரும்புகிறார்கள், அதைப்பற்றி விரல் விட்டு பேசுகிறார்கள். செயற்கை
சந்திரனைப்பார்ப்பதோடு சினிமா நட்சத்திரங்களையும் பார்க்கிறார்கள். ஒவ்
வொரு சினிமா நட்சத்திரத்தினுடைய கார் நம்பர் என்ன என்று சப்தத்
தைக்கேட்டுக் கூட சொல்லக் கூடிய அளவில் நம்முடைய மாணவர்க
ளுடைய அறிவுத் திரன் வளர்ச்சி அடைந்திருக்கிறது. இன்னும் எவ்வ
ளவோ முறையில் அவர்களுடைய அறிவுத் திரன் வளர்ந்து வந்து
கொண்டிருக்கிறது. "**Knows something in everything**" என்ற அள
வில் இருக்கிறது. இன்றைய நிலைமையில் பத்தாவது வரையில் படித்த
மாணவனுக்கு ஆங்கிலத்தில் நன்றாக எழுத முடிய வில்லை. அப்படிப்பட்ட
ஒரு அவல நிலையில் அவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் என்ன எழுதுகி
றார்கள் என்பதைப் பார்க்கும்போது அது தெரியும் "**I have wroted**" என்று
எழுதுகிறார்கள் பத்தாவது படித்த ஒரு மாணவன் அவல நிலையில் " சப்
ஜெக்ட்," " வர்ப் " இல்லாமல் எழுதுகிறான். இப்படி எழுதக்கூடியவன் பாஸ்
செய்து என்ன பயன். மற்றும் "**I went to go to school**" என்று எழுதுகி
றான். இப்படிப்பட்ட கல்வியைத்தான் நாம் இப்பொழுது சொல்லிக்கொடுக்கி
றோம். அப்படி இருந்தும் தமிழ் நாட்டிற்கு மதிப்பு எங்கும் இருக்கிறது. தமிழ்
நாட்டின் சரக்கு எங்கும் மதிப்பு இருக்கிறது. வட நாட்டிலும் இருக்கிறது.
வட நாட்டிலுள்ள டால்மியா, டாட்டா, பிர்லா முதலியவர்களிடமும் தமிழ்
நாட்டுச் சரக்குத்தான் இருக்கிறது. தமிழ் நாட்டுச் சரக்கு இல்லாமல்
இவர்களால் இருக்க முடியாது. அதனால் தான் நம்முடைய கல்வியை
அகலப்படுத்தாமல் ஆழப்படுத்த வேண்டும் என்று சொல்லுகிறேன்.
ஆகவே இப்பொழுது கொண்டு வரப்பட்டிருக்கிற கல்வித் திட்டம் அறிவுத்
திரனை ஓரளவு ஆழப்படுத்துவதாகத்தான் இருக்கிறது. அந்த முறையில்
இந்தக் கல்வித் திட்டத்தை வரவேற்கத்தக்கதாக இருக்கிறது. ஆகவே
இதை வரவேற்காமல் இருக்க முடியாது.

அடுத்தபடியாக ஆசிரியர்களுடைய சம்பளத்தைப்பற்றி ஒரு வார்த்தை
சொல்லாமல் இருக்க முடியவில்லை. ஆசிரியர்களைப்பற்றி சொல்லும்போது
அவர்கள் எதிர் காலத்தின் பிரஜைகளுடைய அறிவுத் திரனை வளர்ப்வர்கள்
என்றும், சமுதாயத்தை வளர்க்கக்கூடியவர்கள் என்றும் புகழ்ந்து பேசப்ப
டுகிறது. எதிர்கால பிரஜைகளின் அறிவை வளர்க்கிறார்கள், அறிவைத்
திரட்டுகிறார்கள் என்றும் சொல்லி புகழ்ந்து பேசுகிறார்கள். அப்படிப் பேசி
வந்தும் அவர்களுடைய நன்மையைக் கருதியவர்களாக இல்லை. ஆசிரிய
ர்களுடைய வாழ்க்கையை கவனித்தால் அவர்களுடைய வாழ்க்கை மிகவும்
மோசமாக இருப்பதைப் பார்க்கலாம். அவர்களுடைய வாழ்க்கையை உயர்தி
னால் அரசாங்கத்தை ஆசிரியர்கள் வாழ்த்துவார்கள். அவர்களுடைய
நிலைமை என்ன என்பதை நாம் அறிந்துகொள்ளவேண்டும். ஆசிரியர்
களைப் பார்த்தால் அவர்கள் தரித்திர நாராயணர்களாகத்தான் காட்சி
அளிக்கிறார்கள். மற்றும் அவர்கள் பொத்தல்கள் உடைய சட்டையையும்,
போட்டுக்கொண்டு பள்ளிக்கூடத்தில் காட்சி அளிக்கிறார்கள். ஆனால் அவர்
கள் வீட்டுக்கு வந்தால் குசேலருக்கு இருந்த குழந்தைகளைப்போல் அவ்
வளவு குழந்தைகள் அவர்களுக்கு இருக்கின்றன. இப்படிப்பட்ட அவல
நிலைமையில் அவர்கள் தங்களுடைய வாழ்க்கையை நடத்திக்கொண்டு
வருகிறார்கள். இப்படிப்பட்டவர்களுடைய சம்பளம் என்ன வென்றால்
மாதத்திற்கு 34 ரூபாய். இதைக் கேட்டால் மிகவும் வெட்கப்பட
வேண்டியதாக இருக்கிறது. கேட்டால் அவர்கள் ஒரு **Unskilled
labourer** என்று சொல்லுகிறார்கள். ஆனால் சித்தாள்கல் எவ்வ
ளவு சம்பாதிக்கிறார்கள் என்பதையும் நாம் பார்க்கவேண்டும். அவர்
களுக்கு நாள் ஒன்றுக்கு $1\frac{1}{4}$ ரூபாய் சம்பளம் கொடுக்கப்படுகிறது. ஆனால்
ஆசிரியர்களுக்கு, எதிர் கால ப்ரஜைகளை வளர்ப்பவர்களுக்கு மாதச்



சம்பளம் ரூபாய் 34. சித்தாள்களுக்குக் கிடைக்கக்கூடிய சம்பளம்
கூட ஆசிரியர்களுக்குக் கிடைக்கவில்லை. கேட்டால் மனம் சங்கடப்படக்
கூடியதாக இருக்கிறது.

அதோடுகூட ப்ரைவேட் மானேஜ்மெண்ட் பள்ளிக்கூடங்களிலுள்ள
ஆசிரியர்களைப் பற்றியும் கொஞ்சம் சொல்லாமல் இருக்க முடியாது.
ப்ரைவேட் மானேஜ்மெண்டில் நடக்கக்கூடிய பள்ளிக்கூடங்களில் **Convent**
போன்ற பள்ளிகளில் நியமிக்கப்படும் ஆசிரியர்களுடைய நிலைமை மிகவும்
மோசமாக இருக்கிறது. அங்கு ஆசிரியர்களை வேலைக்கு அமர்த்
திக்கொள்ளும் போது அவர்களுக்கு எந்த விதமான நிரந்தரமும் இல்லா
மல் இருக்கிறது. ஏதோ தங்களுடைய மதத்தைச் சேர்ந்த ஆள்கள்
கிடைக்கும் வரையில் தான் இவர்களை வேலையில் வைத்துக்கொள்ளுகிறார்கள்.
அவர்களைச் சேர்ந்தவர்கள் கிடைத்தவுடன், ஆசிரியர்களுக்கு பத்து அல்லது
பதினைந்து வருஷம் சர்வீஸ் ஆனாலும் அவர்களை திடீரென்று வேலையை
விட்டு நிறுத்தி விடுகிறார்கள். அதன் பிறகு அவர்கள் வேறு இடங்களில்
வேலை தேடிக்கொள்ள வேண்டியதாக இருக்கிறது. இந்த நிலைமையில்
இருக்கிறார்கள், மானேஜ்மெண்டால் நடத்தப்படும் பள்ளிக்கூடங்களில்
வேலை செய்யும் ஆசிரியர்கள். மற்றும் ப்ரைவேட் மானேஜ்மெண்டில்
வேலை செய்யும் ஆசிரியர்களுக்கு மாதச் சம்பளம் 34 ரூபாயாக இருந்தா
லும் அவர்களுடைய கைக்குக் கிடைப்பது ரூபாய் 20 அல்லது 25 தான்.
ஆனால் எழுதி வாங்கிக்கொள்வதோ ரூபாய் 35 அல்லது 40 என்று
வாங்கிக்கொள்ளுகிறார்கள். இந்த அவல நிலையைப் போக்க வேண்டும்.
இதைப் போக்காவிட்டால் நாம் ஆசிரியர்களுக்கு நன்மையைச் செய்தவர்
களாக ஆக மாட்டோம். இந்த நிலைமையைப் போக்குவதற்கு, அவர்கள்
தங்களுடைய பள்ளிக்கூடத்திற்கு விண்ணப்பம் போட்டுக்கொள்ளும்போது
அதாவது கண்ட்ரிபூஷன் வேண்டும் என்று கேட்கும்போது ஆசிரியர்களை
நினைத்தபடி போகச்சொல்லாமல் இருக்க வேண்டும் என்று அவர்களிட
மிருந்து எழுதி வாங்கிக்கொள்ளவேண்டும். அப்படி எழுதிக்கொடுத்தால்
தான் அவர்களுக்கு கன்ட்ரிபூஷன் கொடுக்க வேண்டும் என்ற ஒரு முடி
வுக்கு வரவேண்டும். அப்படி அவர்களிடத்திலிருந்து ஒரு உறுதி வாங்கிக்
கொண்டு கொடுத்தால் அது ரொம்பவும் வரவேற்கத்தக்கதாக இருக்கும்
என்பதைச் சொல்லிக்கொண்டு என்னுடைய உரையை இத்துடன் முடித்துக்
கொள்ளுகிறேன்."

**Sri M. S. SELVARAJAN**: கனம் சபாநாயகர் அவர்களே, கல்வி
சம்பந்தமான வெள்ளை அறிக்கை, அதைத் தொடர்ந்து வந்துள்ள
கமிட்டியினர் முடிவு, அபிப்பிராயங்கள் அதன் பேரில் கொடுத்த கனம்
மந்திரி அவர்களுடைய விளக்கம் மிகவும் ப்ரத்யட்சமான நிலையை உணர்த்
தக்கூடியது என்பது என்னுடைய அபிப்பிராயம். அரசியல் அமைப்பின்
படி கல்வியைக் கற்றுக்கொடுப்பதற்கு இது ஒரு நல்ல ஆரம்பம். அதற்கு
இது ஒரு அளவு கோலாக இருக்கிறது என்பதை நாம் எல்லோரும் எடுத்
துக்கொள்ளவேண்டும். அரசியல் அமைப்பின்படி கல்வி வளருவதற்கும்
சமுதாயம் வளருவதற்கும் இந்த முறை ஏற்றதாக இருக்கிறது. அதற்கு
வேண்டிய இடம் இதில் அமைக்கப்பட்டிருக்கிறது. எல்லோராலும் ஒப்
புக்கொள்ளக்கூடிய அடிப்படையில் இது அமைந்திருக்கிறது. வரட்டு வேத
வேதாந்தம் சொல்லிக்கொண்டுப்போவதில் எந்த விதமான ப்ரயோசன
மும் ஏற்படப்போவதில்லை. நமது நாட்டின் அரசியல் அமைப்பு அப்போதைக்
கப்போது வளரும் கருத்துக்களுக்கு வளையக் கூடியது. பிரத்தியக்ஷக்கண்
ணோட்டத்துடன் அரசியலமைப்பை மாற்றிக் கொள்வதில் தவறில்லை.
சிலதேசங்களிலுள்ள ரிஜிட் **(Rigid)** கான்ஸ்டிடியூஷனால் ஏற்
படும் தீமைகளைப் பார்க்கிறோம். இப்பொழுது நாட்டில் அரசியல்
அமைப்பின்படி உயர்ந்த அளவில் கல்வி அமைப்பு அமைத்து அதன்படி
கல்வி தரப்படப்போகிறது என்று நான் நினைக்கிறேன். சில காலத்
திற்கு முதற்கொண்டே என் குழந்தைப் பருவம் முதற்கொண்டே ஆரம்ப
பள்ளிக்கூட படிப்புக்கும் நடுத்தரப் பள்ளிப் படிப்புக்கும் உயர்தரப்
பள்ளிப் படிப்புக்கும் வித்தியாசமும் உணரப்பட்டு வந்தது. அதன் பிறகு இந்த
நாட்டிற்கு ஏற்ற படிப்பு அமையாமல் வெறும் ஏட்டுப்படிப்பாக இருந்து
உத்யோகம் வாங்கக்கூடிய படிப்பாக அமைந்தது. ஏட்டுப் படிப்பு

வீட்டுக்கும் நாட்டுக்கும் உதவாததாக இருந்தது. அதை அடுத்து கல்லூரிப் படிப்பு. உத்தேச அமைப்புப்படி ஆரம்பக் கல்வி ஏழு வருஷம் படிக்க வேண்டும். அதையும் கடந்து ஒருவாறு மேலே போனால் எட்டாவது வகுப்பு படித்து விட்டால் ஒரு முடிவுக்கு வரலாம். அப்பொழுது தொழில் கல்விக்கு போவதா சாதாரணக் கல்வி போதுமானதா என்பதை முடிவு செய்ய வேண்டியதாகும். அப்பொழுது பெற்றோர்கள் குழந்தைகள் இதை யோசிக்க வேண்டிய சந்தர்ப்பம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்பொழுது அப்படி எட்டு வகுப்பு படிக்க வேண்டும் என்று இருந்ததை மாற்றி ஏழு வருஷம் என்று அமைத்து அதன்மேல் கல்லூரியில் நான்கு வருஷங்கள் என்று இருந்ததை இப்பொழுது மூன்று வருஷங்கள் என்று மாற்றி இருப்பது ரொம்பவும் வரவேற்கத்தக்க விஷயம். இந்த ராஜ்யத்தின் குழந்தைகளின் திறமையில் நம்பிக்கைவைத்து ஆரம்ப உயர் நிலைக் கல்விக்கு 11 வருடக் காலக்கெடு அமைத்து இந்த மாறுதலைச் செய்ததற்காக நமது ராஜ்ய கல்வி மந்திரி அவர்களையும் அந்த இலாகாவைச் சார்ந்தவர்களையும் நல்ல காரியம் செய்திருக்கிறார்கள் என்று ராஜ்யத்திலுள்ள மக்கள் எதிர் கால சந்ததியர் போற்றுவார்கள். இப்படிப்பட்ட கொள்கை மிகவும் பொருத்தமானது, தற்காலத்திற்கு ஒப்புக்கொள்ளக்கூடிய வகையில் அமைக்கப்பட்டிருக்கிறது.

அடுத்தபடியாக அந்தந்த வட்டார மொழியே அதாவது தாய் மொழியே போதனா மொழியாக இருக்க வேண்டும் என்று சொல்வதும் ஒரு வரவேற்கத்தக்க அம்சமாகும். தாய் மொழிக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருப்பதற்கு ஆதரவு அளிக்கிறார்கள். அதுவும் ஒரு நல்ல காரியம் என்றே கருதுகிறார்கள். அதையும் ஆரம்பக் கல்வி முதற்கொண்டு கல்லூரிக் கல்வி படிப்பு வரையில் தாய் மொழியிலேயே கற்றுக்கொடுக்க வேண்டும் என்று செய்வதும் மிகவும் வரவேற்கத்தக்க ஒரு அம்சம்.

இந்தத் தேசத்தில் நடமாடுகிற இந்தி போன்ற பல்வேறு மொழிகளிலும் சிரத்தை வேண்டியது அவசியம் தான். பொது மொழி இந்தத் தேசத்திற்கு ஒன்று வேண்டும் என்பதிலும் எந்த விதமான மாற்று அபிப்பிராயமும் இருப்பதற்கில்லை. இன்று இல்லாவிட்டாலும் என்றாவது அந்த நிலை வந்துதான் ஆகவேண்டும். இன்று இந்த ராஜியத்தவர்கள் தமிழர்கள், அறிவிலே எவ்வளவு மேம்பட்டவர்களாக இருந்தாலும் சரி, எவ்வளவு திறம்பட நிர்வாகத்தை நடத்தத் கூடிய சக்தியுடையவர்களாக இருந்தாலும் சரி, இந்த ராஜியத்தவர்கள் மற்ற ராஜியத்தவர்களுக்கு இனியும் எந்தவிதத்திலும் பின்தங்கமாட்டார்கள் என்ற நிலைமையை உண்டாக்கவேண்டுமானால், நாமும் அதற்குக் தகுந்தபடி நம்மை அமைத்துக்கொள்வதோடு, எதிர்கால சந்ததியையும் அமைப்பதற்கு வழி வகுக்க வேண்டிய பொறுப்பு இருக்கிறது. அதை உணர்ந்து தான் இந்திக்கும், மற்றும் இந்தத் தேசத்திலுள்ள பிற மொழிகளுக்கும் உரித்தான இடம் கொடுக்கப்பட்டிருப்பதாக நான் கருதுகிறேன். இந்தி இலகுவாகக் கற்றுக் கொண்டுவிடக்கூடிய ஒரு மொழி.

அதேபோல ஆங்கிலம் உலகப் பொதுமொழியாக இருந்துவருகிறது. இந்த தேசத்தில் ஒரு சாரார் ஆங்கிலோ இந்தியர் என்ற பெயரில் இருப்பவர்கள்—ஆங்கிலத்தைத் தாய்மொழியாகக் கொண்டிருப்பவர்களாக் அமர்ந்திருப்பதினாலும், ஆங்கிலத்தை நம் தேச மொழியாகவே கூட கருதி, அதற்கும் உரித்தான இடம் கொடுக்கவேண்டுமென்று கருத்துக் கொண்டு தான் கற்பதன் கஷ்டத்தைக் கருதி ஐந்தாவது வகுப்பிலிருந்து 11-வது வகுப்பு வரையிலும் அதற்கு இடம் தந்திருக்கிறார் நமது அமைச்சர் என்று நான் கருதுகிறேன். அதே நிலையிலே ஒப்பிட்டுப் பார்த்தாலும் 8-வது வகுப்பிலிருந்து இந்தி மொழியை இலகுவாகக் ஒரு குழந்தை கற்றுத் தெரிந்துகொள்ள முடியும். எல்லாவித இலக்கண இலக்கியங்களையும் உணர்ந்து கொள்ளக்கூடிய பருவத்திலுள்ள, குழந்தைகள் 8-வது வகுப்பில் இந்தியை ஆரம்பிக்கிறபோது இலகுவாகத் தெரிந்துகொள்ள முடியும் என்ற நல்ல கருத்து கொண்டு தான் 8-வது வகுப்பிலிருந்து இந்தியைத் துவக்கினால் போதும் என்று கருதி நிர்ணயித்திருக்கிறார்கள் என்று நான் கருதுகிறேன்.



" கல்லூரியில் போதனா மொழி சர்ச்சைக்குரியது " என்று சொன்னார்கள். என்றாலும், தன்னுடைய உறுதியான தன்மையைக் காட்டினார்கள். கமிட்டியினருடைய முடிவும் என் தமிழே போதனா மொழி ஆகக் கூடாது ? என்று கேட்கத் தகுந்த முறையிலே அமைந்திருக்கிறதென்பதை நான் பார்க்கிறேன். 11-வது வகுப்புக்கு மேல் ஏதேனும் கல்லூரியில் சேர்ந்து படிக்கக் கூடியவர்கள் கல்லூரிக்குப் போய் ஆங்கில அறிவை விருத்தி செய்வதற்கு யாரும் போவதில்லை. 11-வது வகுப்புகளுக்குள்ளேயே அவர்கள் பாஷையை விருத்தி செய்துகொள்வதாகும். விஷயத்தைத் தெரிந்து கொள்வதற்குத்தான் கல்லூரிக்குப் போகிறார்கள். எந்தப் பாஷையின் மூலமாக அணுகினால், நாம் இலகுவாக விஷயங்களைத் தெரிந்துகொள்ள முடியுமோ அந்த பாஷையின் மூலமாகத்தான் அணுகவேண்டும். அந்த முறையில், நமக்குப் பழக்கமாகியுள்ள எந்தப் பாஷையின் மூலமாக நுணுக்கமான எல்லா விஷயங்களையும் தெரிந்துகொள்வதற்கு முடியுமோ அந்த பாஷையின் மூலமாகத்தான் தெரிந்துகொள்ளவேண்டும். கல்லூரியிலே தமிழ் ஆட்சிமொழி ஆகவேண்டுமென்று நிதி அமைச்சரும் அரசாங்கமும் உறுதியாக இருப்பது தெரிந்த விஷயம். ஆங்கில அறிவை வளர்ப்பதற்கு 5 முதல் 11 வகுப்பு வரையிலுள்ள காலம் போதாது என்றாலும், அடிப்படை அறிவைக்கொண்டு, மேலும் லைப்ரரி மூலமாக அறிவை நல்ல விதமாக விருத்தி செய்துகொள்ள முடியும். பலகாரத்தை ருசித்துப் சாப்பிட்டு அதன் தன்மையை உணர்ந்துகொள்ளலாம். பலகாரத்தை அப்படியே விழுங்கிவிட்டு, பிறகு, அதனுடைய தன்மையையும், சுவையையும் தெரிந்து கொள்வதும் உண்டு. இந்தச் சின்ன உதாரணத்தை மனதிலே நினைத்துக்கொண்டால் புரிந்துகொள்ள முடியும். கல்லூரியில் தமிழ் வழங்குவதிலே அடிப்படையான முடிவு இன்னும் உறுதியாக ஏற்படவில்லை என்று நான் கருதுகிறேன். தைரியமாக தமிழை போதனா மொழியாக்கலாம்.

பள்ளிக்கூடத்தில் இருக்கும் பரீட்சைகளைப்பற்றி சரிவர இங்கே குறிப்பிடவில்லை என்று நான் கருதுகிறேன். 7-வது வகுப்பை அடுத்து பொருத்தமான இடத்திலே பொதுப் பரீட்சை இருக்கும். அது தகுந்த இடம் தான் என்று நாம் கொள்ளவேண்டும். இன்னும் சில அடிப்படையான விஷயங்களிலே அரசியல் அமைப்பில் கண்டுள்ள காலத்திற்கு ஏற்றவாறு நாம் கருத்துக்கொள்ளக்கூடிய திட்டங்களைப்பற்றி நிறைவேற்றுவது எப்படி என்று பார்க்கிறபோது, இரண்டே இரண்டு தான் வழி என்று நாம் பிரத்தியட்ச கண்கொண்டு பார்த்துப் புரிந்து கொள்ள முடியும்.

ஒன்று, ஆசிரியர்க்கு மாணவர் விகிதத்தை அதிகப்படுத்துவது, அல்லது அதற்குத் தகுந்தபடி அதிகப் பணம் செலவு செய்வது, அதே நிலையில் தான் பணம் செலவு செய்வது கஷ்டம் என்று கருதி " ஷிப்ட் முறை " எல்லோருடைய மனதையும் உறுத்தக்கூடிய மற்றொன்று தான். ஒவ்வொருவரும் அரசாங்க அமைச்சர் குறிப்பிட்டபடி, அவர்கள் சூசகமாகத் தெரிவித்தார்களோ என்று நான் கருதுகிறேன். தெளிவாகக்கூட, அதைப் பரிசீலனை செய்யக்கூடிய அளவுக்குகூட மனம் இல்லாமல், இந்த ஷிப்ட் முறையில் உள்ள தாரதம்மியத்தை, சரியா தப்பா என்று ஆராயக்கூடிய முறையில் கூட, கமிட்டியினர் முடிவில்லை. அவர்கள் அபிப்பிராயங்களைப் பரிசீலனை செய்து, இதை நீங்கள் பரிசீலனை செய்யலாம் என்று அந்த கமிட்டியினர் நமக்கு சிபார்சைக் கொடுத்திருந்தால் நலமாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

ஒரு ஆசிரியரிடத்தில் 40 பிள்ளைகளை ஒப்படைக்கலாம் என்று வெள்ளையறிக்கையில் குறிப்பிடப்படுகிறது. ஏற்கெனவே ஜில்லா போர்டுகள் நடத்தும் பள்ளிகளில்கூட 35 மாணவர்களுக்கு ஒரு உபாத்தியாயர் என்று விதிக்கப்பட்டிருக்கிறது. நாற்பதுக்கு அதிகமான குழந்தைகளை ஒரு ஆசிரியரின் கரத்தில் ஒப்படைப்பது என்றால், அது எந்த அளவு கல்வியின் தரத்தை உயர்த்துவதாக அமைய முடியும் ? என்பதை எண்ணிப் பார்க்கத் தோன்றுகிறது. இதை எண்ணிப் பார்க்க அரசாங்கம் தவறுது. ஷிப்ட் முறை இருந்தால், அதிலே என்ன கோளாறு இருக்கிறது ? யாரிடத்திலிருந்து வந்தாலும், என்ன தவறு இருக்கிறதென்று சபையும் அரசாங்கமும்

உட்கார்ந்து பரிபூரணமாக ஆராய்ந்து, தவறு இருந்தால் விட்டுவிட்டு, தவறு இல்லையென்றால் கொள்ளுவதில் தவறு இல்லை. ஆசிரியர்களை உபயோகப்படுத்திக்கொண்டால் எல்லாக் காரியத்தையும் சரி செய்துவிடலாம். குறுகிய ஒரே பாதை என்று எண்ணாது மற்றும் இருக்கும் பாதைகளை அடைக்காமல், அதையும் பரிசீலனை செய்யவேண்டுமென்று கோருகிறேன்.

ஆசிரியர்களுடைய நிலைமையை எண்ணிப் பார்க்கிறபோது, ஏழை எளிய குழந்தைகள் எந்தத் தரப்பினராக இருந்தாலும், எந்த ஜாதியினராக இருந்தாலும், பாடசாலையில் வந்து இலவச உணவு கொள்ளுவதற்கு வழி வகை செய்வதற்கு அரசாங்கம் முன்வந்திருக்கிறது. அரசாங்கம் செலவு செய்ததால் மாத்திரம் இந்தக் காரியம் ராஜ்யத்திலே நடைபெறுவதாக யாரும் எண்ண வேண்டியதில்லை என்று நான் நினைக்கிறேன்.

இருபத்து நான்கு ரூபாய் ஒரு குழந்தைக்கு செலவு செய்யக்கூடியதை ஐந்து ரூபாய் உயர்த்தினால் குழந்தையின் தேகத் தரத்தையும், கல்வித் தரத்தையும் உயர்த்துவதற்கு முடியும் என்று எண்ணுகிறோம். குழந்தையொன்றுக்கு இரண்டணா வீதம் தினமும் பாடசாலையில் உணவு அளிப்பது என்ற முறையில் 200 நாட்களுக்கு 25 ரூபாய் குழந்தையொன்றுக்குச் செலவாகக்கூடிய நிலைமை ஏற்படுமானால், இன்றல்ல, என்றும் அந்த நிலைமையிலே எல்லாக் குழந்தைகளுக்கும் பரிபூரணமாக திருப்திகரமான ஆகாரம் அரசாங்கமே கொடுக்கக்கூடிய முறையை உண்டுபண்ணுவது முடியாது.

ஆகவே, மூன்று கோடி ஜனங்கள் இருக்கும் இந்த ராஜ்யத்தில் நபர் ஒருவர் மூன்று ரூபாய் வீதம் செலவு செய்வதாக இருக்குமானால், இந்த ராஜ்யத்தில் கல்வித் துறையிலே எந்த அளவு உயர்த்துவதற்கு முடியும் என்று முயற்சிக்கிறோம். அந்த நிலையில் ரூ. 2–5–0 ஆசிரியர்களுக்கும் மற்ற எல்லா விதமான நிர்வாகங்களுக்கும் செலவாகிறது என்றால், 11 அணா இலவச உணவுக்காக என் கொடுக்கக்கூடாது என்று திட்டம் வகுக்கப்படுவதாக நான் நினைக்கிறேன். என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம்—இன்றிருக்கும் நிலைமையில் ஒவ்வொரு உணவு விடுதியிலும் கிராம ஜனங்களிடத்திலே நம்பிக்கை வைத்துத்தான் இந்த நல்ல காரியம் நடந்திருக்கிறது. திருநெல்வேலியில் எவ்வளவு உயர்ந்த அளவுக்கு இதற்குரிய "ரெஸ்பான்ஸ்" இருந்திருக்கிறது என்று தெரியும். கிராம ஜனங்களிடத்திலே நம்பிக்கை வைத்து, முற்றிலும் கிராம ஜனங்களுடைய ஏற்பாடு, இது தர்மத்தின் அடிப்படையில் உள்ளது என்று சொல்லக்கூடிய அளவுக்கு இன்று நடத்துகின்ற காரியம் நிலையாக நடப்பதற்கு, கிராம தானம், பூமி தானம், பூமிதான ரிஷியினிடமிருந்துகூட இதற்கான நிலம் கொள்ள முடியும். வருமான வரி சலுகை போன்று காட்டி, இதுபோன்ற வகைகளை நிரந்தர ஏற்பாடு செய்து, நில தானம், நிதி தானம் பெற்று நிரந்தர ஏற்பாடு மூலமாக அந்தப் பொறுப்பை கிராம ஜனங்களிடத்தில் முற்றிலும் கொடுத்தால் நாம் அதற்கு செலவு செய்யக்கூடிய பணத்தை வைத்து ஆசிரியர் தரத்தை உயர்த்துவதற்கு வசதி ஆகும்.

ஒரு குறைபாடு. மத்திய சர்க்காரிலிருந்து இந்த ராஜ்யத்திற்கு இப்படி ஆசிரியர்களுக்கு கிராம கிராமமாக வீட்டு வசதி செய்வதற்காக ஒதுக்கிய பங்குத் தொகையை இந்த ராஜ்யம் பயன்படுத்தவில்லை. இனிமேலாவது பயன்படுத்தும் என்று நான் நம்புகிறேன். ஆசிரியர்களுக்கு வீட்டு வசதி செய்வதற்குக்கூட, கிராம ஜனங்களிடமிருந்து எல்லா கிராமங்களிலும் இலவசமாக நிலம் வாங்கிக்கொள்ளக்கூடிய நிலைமை உண்டுபண்ணமுடியும். சிலவில் கிராம ஜனங்களிடமிருந்து கால் பங்குச் செலவைக் கேட்டால் தாராளமாக கொடுத்துவிடுவார்கள். ஆசிரியர்களை வீட்டுவசதியுடன் கிராம மக்களே அமர்த்திக்கொள்ளக்கூடிய நிலைமையை கிராமம் கிராமமாகப் ஏற்படுத்திவிட முடியும். ஆசிரியர்களுடைய நிலைமையை உயர்த்த எந்த அளவுக்கு இன்னும் கவர்ச்சியைக் கொடுத்து நல்ல காரியத்தையெல்லாம் இந்தத் தேசத்தில் நிறைவேற்ற முடியுமோ அதையெல்லாம் கவனிக்க வேண்டுமென்பது என்னுடைய தாழ்மையான கருத்து.



ஒன்றைப் பார்க்கிறேன். முதியோர் கல்விக்காக . . . (இத் தருணத்தில் மிஸ்டர் ஸ்பீக்கர் மணியை அடித்து, அடுத்த கனம் அங்கத்தினரைப் பேச அழைத்தார்).

*Sri A. V. P. ASAITHAMBI : அவைத் தலைவர் அவர்களே, கல்வியினுடைய அவசியத்தைப்பற்றி உலகத்திலேயுள்ள மற்ற நாடுகளிலே இருக்கிறவர்கள் சொல்லியிருப்பதைவிட அண்மையிலே நமது நாட்டிலே தோன்றியுள்ள பேரறிஞர்கள் எல்லாம் அதனுடைய அவசியத்தைப்பற்றி மாத்திரம் அல்ல, அவசரத்தைப்பற்றியும் அழகாக கவிதை மூலமாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதை எனக்கு முன்பு பேசிய தோழியர் இராஜாத்தி அவர்கள் அழகுபட நம்மிடத்திலே எடுத்துச் சொன்னார்கள். 3-49 p.m.

" ..அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம்பதி னாயிரம் நாட்டல்
பின்ன ருள்ள தருமங்கள் யாவும்
பெயர்வி ளங்கி யொளிர நிறுத்தல்,
அன்ன யாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக் கெழுத்தறி வித்தல் "

என்று பாரதியார் அவர்கள் பாடியதைக் குறிப்பிட்டார்கள், அந்தக் கவிதை மூலமாக நான் என்ன உணர்கின்றேன் என்று சொன்னால், அன்ன சத்திரம் ஆயிரம் கட்டி எவ்வளவு தான் சாப்பாடு போட்டாலும், மறுபடியும் பசிக்கிறதே என்று கேட்கக்கூடியவர்கள் இருப்பார்கள். ஆலயங்கள் 10,000 கட்டி ஆண்டவனை ஆங்காங்கு நிறுத்திவைத்தாலும், மேலும் சில குறைகளைச் சொல்லி நிறைவு கேட்க ஆண்டவனிடம் வந்து நிற்பார்கள். ஆனால், ஒரு ஏழைக்கு எழுத்து அறிவைக் கொடுத்து அதன் மூலம் அவனுக்கு போதிய அறிவை கொடுத்துவிட்டோம் என்று சொன்னால், அவனவன் கால்களால் நடந்து வாழ்ந்துகொள்ளக்கூடிய நிலைமையைப் பெறமுடியும் என்ற அவசியத்தையும்; அத்தகைய நிலைமை இந்த நாட்டில் இல்லை, எனவே அதை அவசரப்படுத்த வேண்டும் என்ற தன்மையையும் கருதி அண்மையிலே தோன்றி மறைந்த தேசீய கவி பாடியிருக்கவேண்டும். இதனுடைய அவசியத்திற்கு உள்பட்டு நமது அரசியல் சட்டத்திலே பத்து ஆண்டுகளுக்குள்ளாக இந்த நாட்டிலே அனைவரும் எழுதப்படிக்க கற்றுக் கொள்ளவேண்டுமென்ற அளவுக்கு சர்க்கார் ஏற்பாடு செய்யவேண்டுமென்று கண்டிருக்கிறது. ஆனால், நாட்டினுடைய நிதி நிலைமை இடம் கொடுக்காத காரணத்தினாலும், இடம் கொடுக்கக்கூடிய நிலைமையிலே இந்த நாட்டு அரசியல் அமைப்பு இல்லாததினால், அதாவது இங்கு இருக்கின்ற பணமெல்லாம் வடநாட்டு சர்க்காருக்கு போகின்ற காரணத்தினாலே, நமக்கு இந்த துரதிர்ஷ்டமான நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பதை குறிப்பிட ஆசைப்படுகிறேன்.

உலகத்திலே கல்வி பயிலாத மக்கள் 50 சத விகிதம் என்று நம்முடைய கல்வி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அந்த 50 சத விகிதத்திலே துரதிர்ஷ்டவசமாக நம்முடைய இந்திய உப கண்டத்திலே அதிகம் பேர் இருக்கிறார்கள். இந்தியாவினுடைய கல்வியின்மையைப் பற்றி எடுத்துச் சொல்லவேண்டுமென்று சொன்னால், இங்கேயிருக்கின்ற ஒவ்வொரு "லெவேடரியிலும்" ரயில் பெட்டியிலும் போய் பார்த்தால்தான் தெரியும். ஆண்கள், பெண்கள் என்று படம் போட்டு காட்டக்கூடிய அளவுக்கு தற்குறி தன்மை இந்த நாட்டிலே இருக்கிறது. படம் போட்டு வைத்தும் கூட பெண்கள் வண்டியில் ஆண்கள் ஏறுவதைப் பார்க்கிறோம். அந்த அளவுக்கு மோசமான நிலைமை நம் நாட்டிலே இருந்துவருகிறது. இந்த நிலைமையை கூடியவரையிலே மாற்றி அமைத்து, நல்ல அளவுக்கு கல்வியை தரமாகக் கொண்டுவருவதற்கு நம்முடைய கல்வி அமைச்சர் அவர்கள் இந்த வெள்ளை அறிக்கையில் பல திட்டங்களை கொண்டுவந்திருப்பதற்கு நான் அவர்களை பாராட்டுகின்றேன். அவைகளை வரவேற்கிறேன். அவருடைய கல்வித் திட்டத்தை அடிக்கடி மந்திரிகள் மாற்றி அமைத்து மக்களுடைய கல்வியை கெடுத்துவிடாமல் இருக்க ஒரு சட்ட ஏற்பாடாக செய்து

விடலாம் என்றும், அப்படிச் செய்தால் இந்தச் சபையிலேயே பின்னால் யாரும் எதையும் செய்யக்கூடிய நிலைமை வரும் என்று அவர்கள் குறிப்பிட்டார்கள். அதை நான் வரவேற்கிறேன். அது மாத்திரமல்ல. மற்றொன்றும் அவர்கள் குறிப்பிட்டார்கள். இந்த ராஜ்யத்திலே கல்வியின் தராதரம் ஓர் இடத்திற்கும் மற்றொரு இடத்திற்கும் மாறுபட்டதாக இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். சேலம் மாவட்டத்திலும், கோயம்புத்தூர் மாவட்டத்திலும் கல்வி மோசமாக இருப்பதாக குறிப்பிட்டார்கள். ஒரே ராஜ்யத்தின் கீழ் ஒரே பகுதியிலே மாறுபட்ட தராதரம் இருப்பதற்குக் காரணம், அவர்கள் குறிப்பிட்டபடி இந்த நாட்டிலே கல்வியில் அடிக்கடி ஏற்படுகின்ற மாறுதலும், பாடதிட்டமானது ஒரேமாதிரியாக இல்லாததும் தான் என்று நான் கருதுகிறேன். அம்மாதிரியான நிலைமையை நாம் பார்க்கிறோம். அதோடு மாத்திரமல்லாமல் கல்வி அமைச்சர் அவர்கள் இன்னொன்று குறிப்பிட்டார்கள். அதாவது பாடபுத்தகங்களை தனிப்பட்டவர்கள் வெளியிடுவதை விட அரசாங்கமே அதை மேற்கொண்டு வெளியிட உத்தேசிப்பதாகச் சொன்னார்கள். அப்படிச் செய்தால் புத்தகங்களை அரசாங்கம் மக்களுக்கு குறைந்த விலைக்கு கொடுக்கமுடியும். அரசாங்கம் இதிலே இன்னொன்று கவனிக்கவேண்டும். இப்பொழுது பாடதிட்டமானது திருநெல்வேலி மாவட்ட ஆரம்பப் பள்ளியில் ஒரு மாதிரியாகவும், கோயம்புத்தூர் மாவட்டத்தில் ஒரு மாதிரியாகவும், சென்னையிலே ஒரு மாதிரியாகவும் இருக்கிறது. எஸ்.எஸ்.எல்.ஸி. தவிர இதர புத்தகங்களெல்லாம் மாறுபட்ட முறையில் இருக்கிற காரணத்தினால் தான் கல்வியினுடைய தராதரம் மாறுபட்டு இருக்கிறது. எந்தப் பகுதியில் இருந்தாலும் சரி, எஸ்.எஸ்.எல்.ஸி. புத்தகத்தைப் போல ஒரேமாதிரியான முறையில் புத்தகங்கள் இருக்கவேண்டும். ஆனால் இம்மாதிரியான நிலைமை வருமானால் பல ஆசிரியர்களுக்கு எழுதக்கூடிய வாய்ப்பு இல்லாமல் போய்விடும் என்று பயப்படுகிறார்கள். இது சம்பந்தமாக எழுதுகிறவர்கள் புத்தகங்களையெல்லாம் வாங்கி, சிறந்த முறையில் இருக்கும்படி ஒரு புத்தகத்தை திரட்டி சர்க்கார் அதனை வெளியிடலாம். கன்யாகுமரியிலும் சென்னையிலும் ஒரே பாடபுத்தகம் தான் இருக்கவேண்டும். அந்த நிலைமை இருக்குமானால், அதிகாரிகளை ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு மாற்றினால் கூட, "அய்யோ என் பிள்ளை இங்கு படிக்கிறானே" என்று சொல்லக்கூடிய நிலைமைகூட வராது. அந்த அளவுக்கு பாடதிட்டத்தை செய்துவிட்டோம் என்று சொன்னால், கல்வியினுடைய தராதரம் மாறுபட்டு இருக்க நியாயமில்லை. அப்படியிருந்தது என்று சொன்னால் திட்டத்தில் கோளாறு இல்லை, ஆசிரியர்களுடைய கோளாராகத்தான் இருக்க முடியும்.

THE HON. SRI C. SUBRAMANIAM : நான் தராதரத்தைப் பற்றி குறிப்பிடவில்லை. படித்தவர்களுடைய எண்ணிக்கையைப் பற்றி குறிப்பிட்டேன். அப்படி படித்தவர்கள் மிகக் குறைவாக இருக்கக்கூடிய பகுதி கோயமுத்தூர், சேலம் என்று குறிப்பிட்டேன், படிப்பினுடைய தராதரத்தைப் பற்றி குறிப்பிடவில்லை.

SRI A. V. P. ASAITHAMBI : படிப்பினுடைய தராதரம் ஒரே மாதிரி இல்லை என்று சொன்ன கருத்திலே தான் நான் பேசினேன். இருந்தபோதிலும், சென்னை மாகாணம் பூராவும் ஒரே மாதிரியான தரம், எந்த இடத்திலும் ஒரே மாதிரியான படிப்பு இருந்தால்தான், எந்த ஆசிரியர்கள் எங்கே போனாலும் அதற்கு வசதியாக இருக்கும், அது நன்மையாக இருக்கும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். அந்த மாதிரியான முறையில் சென்னை ராஜ்யம் பூராவும் ஒரே மாதிரியான புத்தகங்களை சர்க்கார் வெளியிடுவார்களானால், அந்தப் புத்தகங்களை மிகக் குறைந்த விலைக்கு விற்கமுடியும். அதுமாத்திரமல்ல. கொஞ்சம் அதிகமான விலைக்கு விற்றாலும்கூட, ஓரளவு அதிகப் பணம் கிடைக்கும். அம்மாதிரி கிடைக்கின்ற பணத்தை கல்வி முன்னேற்றத்திற்கு தேவைப்படுகின்ற பற்றாக்குறை பணத்திற்கு ஈடு செய்ய முடியும்.

குறிப்பிட்ட வருஷங்களுக்குள்ளாக நாம் போதிய அளவு கல்வியைக் கொடுக்க முடியவில்லை என்பதற்குக் காரணம் போதிய நிதி இல்லை. அதற்காக போதிய அளவு கட்டிடங்கள், ஆசிரியர்கள் இவைகளையெல்லாம்



இல்லை என்று சொல்லப்படுகிறது. இந்த இடத்திலே சர்க்கார் ஒரு நல்ல முறையை கவனிக்கவேண்டுமென்று நான் பணிவுடன் கேட்டுக்கொள்ளுகிறேன். பழைய காலத்தில் நம்முடைய பள்ளிக்கூடங்களெல்லாம் சாவடிகளிலும் ஆலயங்களிலும்தான நடத்தப்பட்டன. கட்டிடங்கள் இல்லாத கவலையை அடியோடு விட்டுவிட்டு, எல்லா கிராமங்களிலும் சாவடி இல்லாவிட்டாலும் ஒரு சாவடி ஏற்படுத்திக்கொள்ளலாம். அதற்கு அதிக செலவு ஏற்படப்போவதில்லை. அந்த மாதிரியான இடங்களில் பள்ளிக்கூடங்களை ஏற்படுத்தலாம். அங்கு ஆலயங்கள் இருக்குமானால் ஆலயங்களிலே பகல் நேரத்திலே பள்ளிக்கூடங்களை நடத்தலாம். இம்மாதிரி செய்தால் பள்ளிக்கூடங்கள் வைப்பதற்கு கட்டிடம் இல்லை என்ற குறையை சர்க்கார் நிச்சயமாக நீக்கிக்கொள்ள முடியும். நம்முடைய நாட்டைப் பொறுத்தவரையில் "கோயில் இல்லா ஊரிலே குடி இருக்கவேண்டாம்" என்று எழுதிவைத்திருக்கிறார்கள். அதனால் அநேகமாக எல்லா இடங்களிலும் கோவில்கள் இருக்கின்றன. ஆலயங்களை கைப்பற்றி—கைப்பற்ற வேண்டிய அவசியமில்லை—அங்கே மத்தியான வேளையில் பள்ளிக்கூடங்களை நடத்தலாம். அப்படிச் செய்தால் ஆசிரியர்களுக்கு என்ன செய்வது என்று கேட்கலாம். அதற்கு சர்க்கார் ஓராசிரியர் பள்ளிகளை ஏற்படுத்தியிருந்தார்கள். அதை நாம் நிச்சயமாக நீடிக்கலாம். ஆரம்பப் பள்ளிகளில் சொல்லிக்கொடுப்பதற்கு பெரிய படிப்பு, பெரிய பயிற்சி தேவையில்லை. நமது நாட்டில் மூன்றாவது பாரம் முதல் எஸ்.எஸ்.எல்.ஸி. வரை தேறினவர்கள், தேறாதவர்கள் இவர்களை இந்தத் துறையில் தக்க மாதிரியான பயிற்சி கொடுக்கக்கூடிய அளவுக்கு பழக்கினால், இந்தத் திட்டம் வெற்றிகரமாக நடைபெறும். ஆனால் சர்க்கார் துரதிர்ஷ்டவசமாக 53 ஓராசிரியர்களுக்கு இரண்டு வருஷ பயிற்சி தேவை என்று சொல்லி, ரூ. 60 சம்பளம் வாங்கக்கூடியவர்களுக்கு பயிற்சி காலத்தில் ரூ. 18 சம்பளம் கொடுத்துக்கொண்டு வருகிறார்கள். 1953-ல் வேலைக்கு சேர்ந்து இதுவரையிலும் இயற்கையாகவே பயிற்சி பெற்ற ஓராசிரியர்களுக்கு இன்னும் இரண்டு வருஷ பயிற்சி தேவைதானா என்பது பெரிய ஆராய்ச்சிக்குறிய விஷயம்தான். ஆனால் ஒரு விஷயத்தை கவனிக்கவேண்டும். ஆரம்பப்பள்ளி ஆசிரியர்களுக்கு இவ்வளவு பெரிய பயிற்சி தேவையா என்பதுதான் அது. ஆரம்பப் பள்ளிகளின் நோக்கம் இந்த நாட்டில் இருக்கக்கூடிய எல்லோரும் எழுதப் படிக்க தெரிந்துகொள்ளவேண்டுமென்பதுதான். எல்லோருக்கும் கையெழுத்து போடத் தெரியும் என்ற முறையிலே இருக்கவேண்டுமென்று சொனால், அந்த ஆசிரியர்களுக்கு பெரிய பயிற்சி தேவையில்லை. வேண்டுமானால் கோடை விடுமுறை நாளில இரண்டு மாத காலத்தை அவர்களுக்கு ஒதுக்கி குறுகிய கால பயிற்சி கொடுத்து அவர்களை திறமையாக்க முடியும். பழையகாலத்து திண்ணைப் பள்ளிக்கூட ஆசிரியர்கள் எந்த "டிரெயினிங் ஸ்கூலிலும்" படித்தவர்கள் அல்ல. அம்மாதிரி முறையிலே குறுகிய கால பயிற்சி கொடுத்து நிறைய ஓராசிரியர்களை வேலைக்கு அமர்த்திக் கொண்டு, அதிக மக்களுக்கு கல்வி கொடுக்க சர்க்கார் முன்வரவேண்டும்.

ஆனால் ராஜாத்தி அவர்கள் சொல்லியது போல் இந்த கல்விக்கு போதிய பணம் இல்லையே என்ற கவலையைப் போக்க அவர்கள் மாவட்டத்தில் இருக்கிற சில மடங்கள், தஞ்சாவூரில் இருக்கிற மடங்கள், ஆலயங்கள் பற்றி குறிப்பிட்டார்கள் ; அறநிலைய பாதுகாப்பு மசோதா நிறைவேற்றப்படும்போது சர்க்கார் அறிக்கைப்படி இந்த நாட்டில் பெரிய மடங்களும், சிறிய ஆலயங்களும் உட்பட சுமார் ஒரு லட்சத்திற்கு கணக்கு கொடுத்து அந்த ஆலயங்களுக்கும், மடங்களுக்கும் சொந்தமாக எட்டு லட்சம் ஏக்கர் நிலம் இருப்பதாகவும், மூன்று கோடி ரூபாய் வருஷத்திற்கு வருமானம் வருவதாகவும் கணக்கு கொடுத்திருக்கிறார்கள். ஆனால், இவ்வளவும் எந்தமுறையில் பயன்படுத்தப்படுகிறது எனபது ஒரு பக்கம் இருந்தாலும் கூட, அந்தத் தொகையிலிருந்து கல்விக்காக ஒரு பெரும்பகுதியை எடுத்துக் கொள்வதை யாரும் ஆட்சேபிக்க முடியாது. இந்த நாட்டில் கல்வி வேண்டாம் என்று யாரும் சொல்லாமட்டார்கள். நாம் கொடுக்கிற பணம்தான் அது. அதை கல்விக்காக பயன்படுத்துவதற்கு சட்டபூர்வமான நடவடிக்கை எடுக்கவேண்டும். அந்தளவில் இந்த நாட்டில் கூடிய விரைவில் எல்லோ 4-4 p.m.
ருக்கும் எழுதப் படிக்கத் தெரியும என்ற நிலையை ஏற்படுத்திக் கொடுக்க

[Sri A. V. P. Asaithambi] [7th November 1957

வேண்டிய ஒரு திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்
கிறேன். அந்தத் திட்டத்தை எடுத்திருக்கிற மந்திரியவர்களை பாராட்டி
வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

SRIMATHI P. K. R. LASHMIKANTHAM : கனம் சட்டமன்ற
தலைவர் அவர்களே, இன்று கனம் நிதியமைச்சர் அவர்களால்
கொண்டு வரப்பட்ட, 1956-ம் வருஷத்தில் ஏற்படுத்தப்பட்ட இந்த வெள்ளை
அறிக்கையின் மீது நான் இரண்டொரு வார்த்தைகள் கூற விரும்புகிறேன்.
அதை நான் மனமுவந்து வரவேறகிறேன். இந்த வெள்ளை அறிக்கை
வெளியிடப்பட்ட பிறகு அதற்கு ஒரு 40 கமிட்டிகள் அமைத்து இந்த
கமிட்டிகளின் அனுபவபூர்வமான அறிவுகளையும் புத்திகூர்மையான அனுப
வங்களையும் வைத்துக்கொண்டு பல திட்டங்களை இன்று உறுவாக்குவதாய்
இருக்கின்றது. அந்தத் திட்டங்கள் மூலமாக இன்று கல்வி சம்பந்தமாக
சட்டங்கள் கொண்டுவர வேண்டுமென்ற ஒரு யோசனையும் இருப்பதைக்
கண்டு நான் மிகவும் மகிழ்வுறுகின்றேன். காரணம், எனக்கு முன் பேசிய
வர்கள் அது குறித்து தெளிவாக எடுத்துரைத்தார்கள். கல்வி சம்பந்த
மாக பல மாறுதல்கள் அடிக்கடி ஏற்படுவதால் கல்வி ஸ்தாபனங்களில்
பல குழப்பங்கள் ஏற்பட்டு அதன் மூலமாக பல கல்வி சம்பந்தமான தரங்
கள் குறைந்து போகிறது. ஆகவே, இதற்கு என்று ஒரு சட்டம் ஏற்படுத்த
வேண்டுமென்று சொன்னது, மிகவும் வரவேற்கத் தக்க ஒரு அம்சமாக
இருக்கிறது. இரண்டாவதாக, கட்டாயக் கல்வியை கொண்டு வருவதற்
காக ஏற்பாடு செய்திருக்கப்பட்டிருப்பது மிகவும் வரவேற்கத்தக்கது. அப்
படிப்பட்ட கட்டாயக் கல்வி இருந்தால்தான் இன்று நம் நாட்டிலுள்ள கல்வி
யின்மையைப் போக்க முடியும் என்பது மிகவும் திண்ணம். அடுத்த
படியாக, தனியார் நடத்தும் ஹை ஸ்கூல்களில் அதனுடைய கணக்குகளை
தணிக்கை செய்வதற்கும் பல ஆடிட்டர்கள் வேண்டியிருப்பதால் அதைப்
பற்றியும் சில வார்த்தைகள் நமது நிதியமைச்சர் அவர்கள் அவர்களின்
பிரசங்கத்தில் கூறினார்கள். அதாவது, ஹை ஸ்கூல்களில் வருகிற வரு
மானத்தை சர்க்காரிடம் கொடுத்துவிடவேண்டும். அந்த ஹை ஸ்கூல்
ஆசிரியர்களுடைய சம்பளப் பொறுப்பு பூராவும் சர்க்கார் ஏற்றுக் கொள்
ளும். மேலும் அதனுடைய வருமானத்தில் இருந்து 15 சத விகிதம்
அந்த ஹை ஸ்கூல் சம்பந்தமான செலவுகளுக்கு அந்த ஸ்தாபனத்திற்கு
தரப்படும் என்ற ஒரு விஷயத்தையும் நிதியமைச்சர் அவர்கள் குறிப்பிட்
டார்கள். இது உண்மையாக வரவேற்கத்தக்கதுதான் என்றுதான் நான்
நினைக்கிறேன். அதன் மூலமாக பல கஷ்டங்களையும் தீர்ப்பதோடு, பணச்
சிக்கனத்தையும் ஏற்படுத்தமுடியும் என்பது எனது நம்பிக்கை ஆனால்
ஒன்று நான் சொல்ல ஆசைப்படுகிறேன். அதன் மூலமாக தனியார்
நடத்தும் ஹை ஸ்கூல்களுக்கு எந்த விதமான கஷ்டமும் ஏற்படுத்தும்
படியான முறையில் இருக்கக் கூடாது அந்தத் திட்டம் என்பதுதான் எனது
ஆசை. நம் இன்றைய கல்வித்திட்டத்திலே எல்லா ஏழை மாணவர்
களுக்கும், எஸ்.எஸ்.எல்.சி. வரைக்கும் இலவசமாகவே கல்வி கற்றுக்
கொடுக்க ஆசைப்படுகிற சர்க்கார். எனினும் நிதி குறைவால் அந்தச்
சட்டத்தை அமுலுக்கு கொண்டு வர முடியவில்லை என்று நமது
நிதியமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள், இப்பொழுது இருக்கிற நிலையில்
நான ஒன்றுகூற வேண்டுமென்று விரும்புகிறேன். பிற்பட்ட வகுப்பி
னருக்கு இப்பொழுது 3-வது பாரம் வரையில்தான் இலவசக் கல்வி
கொடுக்கப்பட்டு வருகிறது. 3-வது பாரத்திற்குப் பிறகு சம்பளம் வாங்கப்
படுகிறது. நம் நாட்டிலே விவசாயிக்கு அடுத்தபடியாக மிகவும் கஷ்டப்
படும் ஜனங்கள் கைத்தறித் தொழிலில் ஈடுபட்டவர்கள்தான் என்பதை
நாம் நன்கு அறிவோம். ஆகவே அந்த கைத்தறித் தொழிலில் ஈடு
பட்டிருப்பவர்களின் குழந்தைகளுக்கு எஸ்.எஸ்.எல்.சி. வரையில், முழு
வதுமே அவர்களுக்கு இலவசமாக படிப்பு சொல்லிக் கொடுக்க
சர்க்கார் சட்டம் செய்ய வேண்டுமென்று நான் சர்க்காரைக் கேட்டுக்
கொள்கிறேன். காரணம் 3-வது பாரம் வரை இவர்கள் சம்பளமின்று
படித்துக் கொள்ள முடிகிறது. பிறகு படிக்க ஆசைப் பட்டாலும்
அவர்களால் சம்பளம் கொடுத்து படிக்க முடிவதில்லை. எனவே, அவர்
களுக்கும் ஒரு தனியாக சலுகை கொடுத்து, இப்பொழுது என்.ஜி.ஓ.-க்களின்



7th November 1957] [Srimathi P. K. R. Lakshmikantham]

குழந்தைகளுக்கு எப்படி தனியாக சலுகை கொடுக்கப் படுகிறதோ அப்படி
யே இந்த கைத்தறித் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கும் தனியான
சலுகை கொடுத்துதவ நிதியமைச்சர் அவர்கள் முன்வருவார்கள் என்று
நம்புகிறேன். அடுத்தபடியாக, ஆங்கில பாஷையின் தரம் மிகக் குறைந்
திருக்கிறது என்பதை நம் ராஜாத்தி அம்மையார் அவர்கள் குறிப்பிட்டார்
கள். ஆகையினால் ஆங்கில பாஷையின் தரம் உயரவேண்டுமென்பது
எல்லோருடையவும் கருத்தாக இருப்பதால் அந்த ஆங்கில பாஷையானது
ஐந்தாவது வகுப்பிலேயே ஆரம்பிக்கப்பட்டால் என்ன தவறுதல் ஏற்
படும் என்று சிந்தித்திப் பார்த்து அதை ஐந்தாவது வகுப்பிலேயே படிக்க
ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். அடுத்த
படியாக, ஆறு வருஷத்திற்குப் பிறகுதான் குழந்தைகளை பள்ளிக்கூடத்
தில் சேர்க்கலாம் என்ற ஒரு சட்டம் முன்பு இருந்தது. இப்பொழுது, ஐந்து
வயது முடிந்ததும் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பலாம் என்று இந்த அறிக்
கையில் நாம் காண்கிறோம். ஆனால், பெண்களை நான்கு வயது முடிந்த
தும் ஐந்து வயதிலே பள்ளிக்கூடத்திற்கு அனுப்பலாம் என்று சட்டம்
இருந்தால் பாதகமில்லை. காரணம், 15 வயதானவுடன் 16 வயதிற்குள்
பெண்கள் கல்யாணம் செய்யப்பட்டு விடுகிறார்கள். ஆகவே அவர்கள்
அதிக வயது சென்ற பிறகு பள்ளிக்குச் சென்றால், அவர்களுக்கு எஸ்.எஸ்.
எல்.சி. முடிப்பதற்குள் கல்யாணம் ஆகி விடுகிறது. ஆகவே பெண்கள்
சம்பந்தப்பட்ட வரையில் இந்த வயது குறைவாயிருந்தால் நன்றாயிருக்கும்
என்று நினைக்கிறேன். மேலும் மத்தியான உணவு சம்பந்தமாக ஏற்பாடு
செய்திருக்கும் இந்த ஒரு ஏற்பாடு மிக உயர்ந்த தரமான ஏற்பாடாகும்.
அதிக இடங்களில் சென்று பார்த்தால், பல ஏழைக் குழந்தைகள் உண
வின்றியே படித்து வருகிறார்கள் என்பது நமக்கு புலனாகிறது. ஆங்காங்கு
பல பெரியோர்கள் அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்திருந்தாலும்
பலயிடங்களிலும் இது இன்னும் நிவர்த்திக்கப் படவில்லை. ஆகவே, சர்க
காரே முன்வந்து இந்த யோசனையை கொண்டுவந்து, அதை ஒரு சட்ட
மாகக் கொண்டுவந்து அதன்மூலம் ஏழை மாணவி மாணவர்களுக்கு
சாப்பாடு தரக் கூடிய ஒரு உதவி செய்வதற்கு நாம் நன்றிசெலுத்த கட
மைப் பட்டிருக்கிறோம். அதற்கு மேலாக, இந்த வெள்ளை அறிக்கையில்,
ஹை ஸ்கூல்களின் முன்னேற்றத்தை ஒரு சில ஹை ஸ்கூல்களை நடத்தும்
நிர்வாகஸ்தர்கள் குறுக்கிட்டுத் தடுக்கிறார்கள் என்பதற்காக உபாத்தியாயர்
களுக்கும் உபாத்தியாயினிகளுக்கும் பல அதிகாரங்கள் கொடுக்கப்பட்டிருப்
பதை நான் மனமாற வரவேற்கிறேன். அடுத்தபடியாக, பல ஆசிரியப்
பயிற்சி பள்ளிக்கூடங்கள் கிரிஸ்துவர்களால் நடத்தப்பட்டு வருகின்றன.
அந்த பள்ளிக்கூடங்களில் நம் ஹிந்துக்களுக்கு இடம் கிடைப்பதில்லை.
அவர்கள் பச்சையாகவே சொல்கிறார்கள். கிருஸ்தவருக்கு இடம் கொடுத்
தது போக காலியிருந்தால் உங்களுக்கும் கொடுக்கப்படும் என்று பச்சையா
கவே சொல்கிறார்கள். அந்த பயிற்சிப் பள்ளிக்கூடங்கள் சர்க்காரின் ஆத
ரவைப் பெற்றுத்தான் நடக்கிறது. அந்த பயிற்சி நிலையங்களில் அந்தந்த
ஊர்களின் ஹை ஸ்கூலிலுள்ள மாணவர்களுக்கு குறிப்பிட்ட எண்ணிக்கை
யை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று ஒரு சட்டம் இயற்றினாலும் பாதகம்
இல்லை என்று நினைக்கிறேன். அப்படி சிலயிடங்களில் எனக்கு அனு
பவம் இருக்கிறதை வைத்துக் கொண்டுதான் நான் இந்த விஷயத்தை
இங்கு தெரிவித்துக் கொள்கிறேன். இந்த விதமாக வெள்ளை அறிக்கை
யின் மூலமாக நம் நாட்டில் உயர்ந்த தகுதி வாய்ந்த சட்டம் வரவிருக்
கிறது வரவேற்கத்தக்கது என்று சொல்லிக் கொண்டு எனது பேச்சை
முடித்துக் கொள்கிறேன்.

* SRI S. LAZAR : Mr. Speaker, Sir, I rise to welcome in general the White Paper on Education as modified by the report of the Legislature Committee. Sir, I am one with all hon. Members who spoke on the floor of this House and said that as far as possible there should be some permanancy in the matter of education or the educational system. But, however, all must be agreed on the fact that there had been sufficient necessity and enough circumstances 4-10 p.m.

for totally re-modelling the system of education that is now obtaining in our country, more so in our State. Sir, the reasons pointed out by the White Paper on Education as well as the members of the Legislature Committee in making a change in the Educational system so far as I am able to understand, seem to be three-fold: No. 1 is that there is too much of illiteracy in this country; No. 2 is that the standard of education has gone very low and No. 3 is that there must be a change to suit the changing circumstances. Sir, sufficient safeguards have been made in the White Paper on Education as modified by the report of the Legislature Committee. So far as the first reason is concerned, I am afraid, that sufficient safeguards have not been made. Sir, it has been said in Article 45 of the Constitution, that all children below a certain age must be compulsorily put in the schools. Sir, this demand, this anxiety, on the part of the people to eradicate illiteracy has been there for a very long time in our country. I may say that as early as 1904 or 1905 there had been demands from the then Indian Members in the Legislature that compulsory education at least in the primary stage must be introduced throughout the country. Sir, great men like Gokhale had even brought private Bill on this matter; but he could not pilot them successfully. Even at later stages, we find great men like Mahatma Gandhi laying emphasis on this aspect of the question. Sir, not only Mahatma Gandhi, but even other great men like Tilak, Vithalbai Patel and others were very particular about eradication of illiteracy. This agitation, as it were, continued even after the attainment of Independence and I should think it reached its climax in the year 1947 when the Indian Constitution was framed. Sir, though this agitation and efforts on the part of the public and their leaders had been there for such a long time, we have not been able to achieve our aim all these years. While analysing the reasons for the failure in this field of education, viz., eradication of illiteracy in our country, we will only find that so far as the pre-Independence days were concerned, the main reason was the lack of initiative and interest on the part of the then Government. But after the attainment of Independence, we find that though there was lot of enthusiasm, though there was lot of interest, on the part of the various Governments—the one great stumbling block was the paucity of funds. It was only want of sufficient funds for implementing this very important measure that stood in the way of eradicating illiteracy in our country. It was said on the floor of the House that our Hon. the Minister proposed to introduce a legislation for this purpose. I may remind this House that similar legislations and Resolutions were enacted and passed in the various Assemblies and Municipalities, respectively, in the year 1920, 1921, and so on. But they were not able to achieve their aim. As I said the main reason had been want of sufficient funds for implementing this very big programme. I should at this moment point out what exactly was done by other countries on similar occasions. Sir, countries like France, Russia, England and the United States of America, had allotted a very big amount for implementing such programmes. I am sure, a



similar attempt can be made on the part of our Government also. They did not stop there. They went to the extent of collecting an educational cess. I am sure, Sir, judging from the various speeches that were made on the floor of this House, that sufficient co-operation would be forthcoming from the public. Other suggestions have been given by the various Commissions appointed for this purpose in our country; namely, industrial education cess to be collected from the various big industries and industrial concerns in our country. Sir, yet another very ideal suggestion has been given, namely, to encourage private philanthropists by way of granting an income-tax rebate or some such remission. Then the public will be encouraged to come forward and make large donations for the purpose of implementing this most important programme of the nation. Sir, apart from this, very important item of finances, one or two other matters also have got to be considered if our programme has got to be implemented successfully; we have only to remember at this moment that in England the professions of Teachers and Police are made attractive and therefore we find that men from big families, men of high status and high qualifications and intelligence come to these professions. These are the two professions which require men of ability men of integrity and men of intelligence and also men who would be prepared to sacrifice anything. Considering this aspect of the question, it is absolutely necessary that the status of teachers in our country also must be raised by offering them higher pay.

Yet another very important factor to be remembered at this moment is that so far as primary education is concerned, as it is done in England, they must be entrusted to women who are supposed to be the best Friends, philosophers and guides for young children.

Coming to the second aspect of the question, namely, that by eradicating illiteracy, we should not be carried away by the thought that we have given real education to the people. For, it requires something more than eradicating illiteracy, if we really want our people to be well-educated. Education has been defined by various people, but time does not permit me to make mention of all those definitions. However, suffice it to say that our future generations, our future citizens must be men of character and men of personality. They must be able to devote their attention to the welfare of our country and they must be made to take interests in and safeguard the independence that we attained at such heavy price. Sir, if such real education is to be given, various other things also have got to be taken into consideration. I am only sorry to find that they have not been made mention of in the White Paper on Education or in the report of the Legislature Committee. I am only referring to the discipline that has got to be exercised amongst our young men and women. I am also referring to . .

MR. SPEAKER: The hon. Member is taking more time. He must not make reference to any fresh idea. I would like to wait till he finishes this idea, and not start something new.

SRI S. LAZAR : Sir, I was going to say that equal importance must be given for religious instruction and moral instruction, if really our future generation is to be of high character. We must therefore lay emphasis that religious and moral instruction must be given at every stage of our educational pattern.

MR. SPEAKER : The hon. Member's time is over. Mr. Doraiswamy Reddiar.

4-22 p.m. * SRI B. DORAISAMI REDDIAR : கனம் சபாநாயகர் அவர்களே, கல்விபற்றிய வெள்ளை அறிக்கை மீது சட்டமன்றக் கமிட்டியார் கொடுத்த அறிக்கையின் மீது பல கனம் அங்கத்தினர்கள் ரொம்பவும் விரிவாகவும் ஆதாரங்களுடனும் பேசினார்கள். தக்க உதாரணங்களைக் கொடுத்து எந்த எந்த வகையில் நிதி வசூலிக்கவேண்டும் என்பதைப்பற்றியும் எந்த முறையில் மாணவர்களுக்கு போதிக்க வேண்டும் என்பதைப்பற்றியும் நிதி மந்திரி அவர்கள் விரிவாகப் பேசினார்கள். அவர் மணிக் கணக்கில் பேசியதற்குக் காரணம், அவர்கள் அடிப்படையான படிப்பு முறையில் படித்தவர்கள் என்று கருதுகிறேன், அதனால்தான் அவர்கள் திறம்படப் பேசினார்கள் என்று நினைக்கிறேன். இப்போதுள்ள படிப்பு முறை பலவிதத்தில் பிற்போக்கு நிலையை அடைந்திருக்கிறது என்று குறிப்பிட்டு எனக்குத் தெரிந்த சில விஷயங்களைச் சொல்ல விரும்புகிறேன். அதிர்ஷ்டவசமாக, நமக்கு சுதந்திரம் கிடைத்தவுடன், "தமிழ் மொழியே போதும், அன்னிய பாஷை வேண்டாம்" என்ற மனப்பான்மையைக் கொண்டோம். எல்லாப் பாடங்களும் தமிழிலேயே நடத்தப்படவேண்டும் என்றோம். ஆகவே, இப்போது பட்டப் படிப்புப் படித்தவர்கள் கூட ஆங்கிலத்தில் பேச சக்தியற்றவர்களாக இருக்கிறார்கள் என்பது என் கருத்து. வெளிநாட்டாருடைய பாஷை போனால் போகட்டும். தாய்நாட்டு பாஷையிலாவது மாணவர்கள் நல்ல தேர்ச்சிபெற்றிருக்கிறார்களா என்று பார்த்தால், அதுவும் இல்லை. இவர்கள் தாய்பாஷையிலும் அதைவிட மோசமாக இருக்கிறார்கள். காரணம் அந்தக்காலத்தில் ஒருவன் கொன்றைவேந்தன் படித்திருந்தான் என்றாலே அவனுக்கு தமிழில் நல்ல பாண்டித்தியம் இருக்கும் என்று கருதப்பட்டது. இன்றைக்குள்ள படிப்பு முறை மாணவர்கள் வெகுகாலம் வரையிலும் படம் பார்த்துப் படிக்கிறார்கள். 1-வது பாரம் படிக்கும் மாணவர்களுக்குக் கூட தமிழை எழுத்துக்கூட்டாமல் வாசிக்கத் தெரிவதில்லை. 1-வது, 2-வது பாரம் படிக்கும் பிள்ளைகள் கூட தமிழை எழுத்துக் கூட்டித்தான் படிக்கிறார்கள். ஹை ஸ்கூலில் 1, 2, 3-வது பாரம் படிக்கும் மாணவனுக்குக்கூட அரிச்சுவடியில் இருக்கும் அத்தனை எழுத்துகளும் படிக்கத்தெரியாது. ஆகவே, இப்போது இங்கே ஆங்கிலமும் போய் விட்டது, தமிழும் போய்விட்டது. இப்போது நம்மிடம் அகப்பட்டுக்கொண்டு திண்டாடிக்கொண்டிருப்பது ஹிந்தி அது இப்போது ரொம்பவும் கஷ்டப்படுகிறது. ஒருவர் ஹிந்தி வேண்டுமென்கிறார். மற்றொருவர் ஹிந்தி வேண்டாம் என்கிறார். ஒருவர் ஹிந்தியை இஷ்டப்பாடமாக வைத்துக் கொள்ளலாம் என்கிறார். "இஷ்டப்பாடம்" என்றால் மாணவன் ஏன் படிக்கிறான்?

மேலும், பள்ளி நாட்கள் 180-ஆக இருப்பது 200-ஆக அதிகமாகக்கூடும் என்று கனம் அமைச்சர் அவர்கள் கூறினார்கள். இப்போது பள்ளிகளில் 60 நாட்கள் கூட படிப்பு கிடையாது. பள்ளியில் நெசவு உபாத்தியாயர், தச்சு உபாத்தியாயர் முதலிய உபாத்தியாயர்கள் இருக்கிறார்கள். நெசவு உபாத்தியாயர் பள்ளியில் இருப்பார், ஆனால், நெசவுப் பாடத்திற்கு வேண்டிய நாடாவோ கயிறோ இருக்காது. தச்சுவேலை சொல்லிக்கொடுக்கும் உபாத்தியாயர் பள்ளியில் இருப்பார், ஆனால், ஒரு முருங்கை மரம் கூட அங்கே இருக்காது. ஒரு பள்ளிக்கூடத்தில் இப்படிப்பட்ட நிலைமையைப் பார்த்துவிட்டு நான் இந்த நெசவு உபாத்தியாயருக்கும் தச்சு உபாத்தியாயருக்கும் என்ன வேலை என்று கேட்டேன். அங்கிருந்தவர்கள், அவர்கள் ஹெட் மாஸ்டருக்கு உதவியாக இருப்பார்கள் என்று பதில் சொன்னார்கள். இந்த நிலையில், பள்ளியில் படிப்பு நேரம் 5-மணி நேரம் என்று சொல்கிறோம்;



ஆனால் பையன் 2-மணி நேரம் படிப்பதற்குக் கூட பள்ளியில் வசதி இல்லை. மேலும், ஹை ஸ்கூல்களில் படங்கள் **visual education** மூலம் பாடம் சொல்லிக் கொடுக்கிறார்களாம். சிலநாட்களுக்கு முன்பு ஆரணியிலுள்ள ஹை ஸ்கூலுக்குச் சென்றிருந்தேன். அங்கே மாணவர்களுக்கு படத்தை (**film**) மூலம் காட்டிக்கொண்டிருந்தார்கள். அவர்கள் முற்போக்கான முறையில் பாடம் சொல்லிக்கொடுக்கிறார்களாம். அவர்களிடம் "நீங்கள் இங்கே படத்தைக் காண்பிப்பதற்கு முன்பு பிள்ளைகள் சினிமாவிற்குப் போய் படம் பார்த்துவிடுகிறார்களே" என்று சொன்னேன். இன்றைக்கு படிப்பு அந்த நிலையில் இருக்கிறது. நாங்கள் என்ன செய்வது, உங்கள் உத்திரவு என்று பதில் சொன்னார்கள். இப்போது எஸ்.எஸ்.எல்.ஸி. படித்தவர்களுக்கு சரியாக விண்ணப்பம் எழுதக்கூடத் தெரிவதில்லை. கல்விக்காக ஏதோ நிதி திரட்டலாம் என்று சொல்லப்படுகிறது. இதெல்லாம் முற்போக்கான காரியங்கள்தான் ஆனால், உருப்படியான படிப்பு எதுவும் இப்போது இல்லை என்பது என் கருத்து. இத்துடன் என் சிற்றுரையை முடித்துக்கொள்கிறேன்.

* SRIMATHI KOLANDAI AMMAL : கனம் சபாநாயகர் அவர்களே, நமது கனம் கல்வி அமைச்சர் அவர்கள் சமர்பித்துள்ள அறிக்கையை ஆதரிப்பதுடன் ஒரு சில விஷயங்களை சொல்ல விரும்புகிறேன். "நம் நாட்டில் பிறந்திருக்கும் ஆண்-பெண் இருபாலருக்கும் கல்வியறிவு மிக இன்றியமையாதது. இதில், சிறப்பாக தாய்மொழியின் மூலம் போதிக்கப்படும் கல்வி தான்—தேசீய அடிப்படையில் வளரும் கல்விதான்— இன்றைய சமுதாயத்தில் வரவேற்கத் தகுந்தது" என்ற அடிப்படையில் இந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. இது மிகவும் போற்றத்தகுந்ததும் வரவேற்கத்தகுந்ததும் ஆகும். நம் ஆட்சிமொழி தமிழ்மொழியாக மாறியது போல் தமிழ் ஆசிரியர்களின் நிலையும் உயரவேண்டும் என்பதுதான் என்போன்றவர்களுடைய கருத்து ஆகும். 4-29 p.m.

ஆங்கிலேயர் ஆட்சி காலத்தில் ஆங்கில மொழி போதனா மொழியாக போதிக்கப்பட்டு வந்தது. அப்போது தமிழ் போதிக்கப்பட்டும் வந்தது. அப்படி தமிழ் போதித்து வந்த வித்துவான்களுக்கு கொடுக்கப்பட்ட சம்பளம் ரொம்பவும் குறைவாக இருந்தது. ஆங்கிலம் கற்றுக்கொடுக்கக் கூடிய ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்பட்ட சம்பளத்திற்கும் தமிழ் கற்றுக் கொடுத்து வந்த ஆசிரியர்களுக்கும் அடிப்படை சம்பளத்திலேயே வித்யாசம் இருந்தது. ஆனால் இன்றைக்கு தமிழ்மொழி ஆட்சிமொழியாக மாறி தமிழ்மொழியிலேயே போதிக்கப்பட வேண்டும் என்ற திட்டத்தையும் கொண்டுவந்திருக்கிறோம். தமிழ்மொழியை தேசீய மொழியாக ஆக்கப்படுகிற நேரத்தில் தமிழ் ஆசிரியர்களுடைய நிலை இருந்த இடத்திலேயேதான் இருக்கிறது. இதை என்னால் சுட்டிக்காட்டாமல் இருக்க முடியாது. அதைப் போலவே பல்கலைக் கழகத்தை எடுத்துக் கொண்டால் அங்கே தமிழ் எம். ஏ. ஆசிரியர்களுக்கும், தமிழ் பி.ஓ.எல். படித்த ஆசிரியர்களுக்கும், வித்வான் பட்டம் பெற்ற தமிழ் ஆசிரியர்களுக்கும் அடிப்படை சம்பளத்தில் வித்தியாசம் இருக்கிறது. ஆங்கிலத்தில் திறமை வாய்ந்தவர்களும் தமிழில் எம். ஏ. பட்டம் பெற்று திறமை வாய்ந்தவர்களும் ஒரேமாதிரியாக இருக்கும் போது தமிழ் ஆசிரியர்களுக்கு மட்டும் சம்பள அடிப்படையில் வித்யாசம் இருக்கவேண்டிய காரணம் என்ன என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. தமிழ் ஆசிரியரும் பத்து மணி நேரம் தான் வேலை செய்ய வேண்டும், ஆங்கில ஆசிரியரும் பத்து மணி நேரம் தான் வேலை செய்ய வேண்டும். பி. ஓ. எல். படித்தவர்களும் தான் பத்து மணி நேரம் வேலை செய்ய வேண்டியதாக இருக்கிறது. இப்படிப்பட்ட நிலைமையில் அவர்களிடத்தில் சம்பளத்தில் மாறுபாடு இருக்க வேண்டிய அவசியம் என்ன என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. இப்படிப்பட்ட வேறுபாடு இருக்கிறது என்பதை கல்வி இலாகா மறுக்காமல் ஒத்துக்கொள்ள வேண்டும். இந்த விஷயத்திலும் கொஞ்சம் கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

கல்லூரிகளில் க்ரேட் 1 என்றும் க்ரேட் 2 என்றும் வைத்திருக்கிறார்கள். மற்ற டிபார்ட்மெண்டில் இருக்கிறதோ இல்லையோ, தமிழ் டிபார்ட்மெண்டில் அப்படிப்பட்ட வேறுபாடுகள் இருக்கின்றன. க்ரேட் 1 ஆசிரியர்

[Srimathi Kolandai Ammal] [7th November 1957

களுடைய அடிப்படைச் சம்பளம் ரூ. 150. க்ரேட் 2-ல் இருக்கக்கூடிய ஆசிரியருடைய சம்பளம், அவர் வித்வானாக இருந்தாலும் அவருக்கு கொடுக்கப்படும் சம்பளம் ரூ. 85 தான். இந்த இரண்டு பேர்களுக்கும் திறமையில் எந்த வித்தியாசமும் கிடையாது. அப்படிப்பட்ட நிலைமையில் அவர்களுடைய சம்பளத்தில் வித்யாசம் இருக்கவேண்டிய அவசியம் இல்லை. ஒன்று அவர்களுக்கு திறமை இல்லை என்று வேண்டுமானாலும் சொல்லிவிடலாம். திறமை இருக்கிறது என்று சொல்லிவிட்டு அவர்களுக்கு சமபளததில் வித்யாசம இருக்கவேண்டியது அவசியம் இல்லை எனபது எனனுடைய அபிப்பிராயம. இரண்டு பேர்களும்தான் எட்டு மணி அல்லது பத்து மணி நேரம் வேலை செய்கிறார்கள். ஆகவே அவர்களுடைய அடிப்படை சம்பளத்தில் பாரபட்சமாக இருப்பது சரியல்ல என்பதை வலியுறுத்த விரும்புகிறேன்.

சில கல்லூரிகளில் தமிழ் போதிக்கக்கூடிய ஆசிரியர்கள் பீ.ஏ. வகுப்பில் ஐந்தாவது க்ரூப்புக்கு தமிழ் படித்தவர்களாக இருக்கிறார்கள். அவர்களால இலக்கியமும இலக்கணமும் சொல்லிக்கொடுகக வேண்டியதாக இருக்கிறது. இதையும அரசாங்கம் உணர்ந்து அதற்கு ஆவன செய்யவேண்டும்.

அடுத்தபடியாக ப்ரி யூனிவர்சிட்டி மாணவர்களுக்கு இப்பொழுது வைக்கப்பட்டிருக்கிற தமிழ் பாடம் மிகவும் குறைவாக இருக்கிறது என்பது என்னுடைய கருத்து. நான் ஒரு ஆசிரியை என்ற முறையில் இதை எடுததுச் சொல்ல வேண்டியதாக இருக்கிறது. என்னைக் கேட்டால் நம்முடைய மாணவர்களுக்குத் தமிழ் ஆர்வம் இருப்பதால் இன்னும் கொஞ்சம் அதிகமாக ஆகக வேண்டியதாக இருககறது. இப்பொழுது இரண்டு மூன்று சங்க நூல்களில் சில வைத்துருக்கிறார்கள். அத்துடன் அவர்களுடைய பாடம் நின்றுவிடுகிறது. அந்த பாடங்களை ஜூன் மாதம் ஆரம்பித்தால் ஜனவரி மாதத்துடன் முடிந்துவிடுகிறது. அதற்கு மேல் அவர்களுக்கு பாடம் இல்லாமல் போய்விடுகிறது. ஆகவே இன்னும் அதிகப்படியாக ப்ரி யூனிவர்சிட்டிக்கு தமிழ் பாடங்கள் சேர்க்கப்பட வேண்டும் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். முன்பு இதற்குக் குறைவாக இருநததை வைத்துக்கொண்டு இப்பொழுதும் அதேபோல் வைக்கப்பட்டிருககிறது என்று நினைக்கிறேன். இதற்கு முன்னதாக யூனிவர்சிட்டியில் ஆங்கிலம் போதனு மொழியாக இருந்தது. அப்பொழுது தமிழுககு இரண்டாவது இடம் கொடுக்கப்பட்டிருந்தது. இப்பொழுது தமிழ ஆட்சிமொழியாக வநது விட்டபடியாலும் தமிழ் போதனுமொழியாக வரப்போவதாலும் மாணவர்களுக்கு இப்பொழுது தமிழில் நல்ல ஆர்வம் ஏற்பட்டிருப்பதாலும், மாணவர்கள தமிழை மிகுந்த அளவில் புரிந்துக் கொள்ளக கூடிய நிலைமையில் இருப்பதாலும் ப்ரி யூனிவர்சிட்டியில் இன்னும் அதிகப்படியான தமிழ் பாடத்தை புகுததவேண்டும் என்பது என்னுடைய அபிப்பிராயம். ஆகவே இன்னும் அதிகப்படியான பாடத்தைச் சேர்க்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தப்படியாக ஆங்கிலம் தெரிந்த தமிழ் ஆசிரியர்கள் இருந்தால் அவர்களுக்கு குறைந்தது 40 அல்லது 50 வயதானாலும் அவர்களுக்கு திறமை இருந்தாலும் அவர்களை தலைமை ஆசிரியர்களாக நியமிப்பது இல்லை. அப்படிக் கொடுக்க கல்வி இலாகா சட்டத்தில் இடம் கொடுக்காமல் இருப்பது வருந்தத்தக்கதாக இருக்கிறது. அப்படிப்பட்ட நிலைமை இல்லாமல் ஆங்கிலம தெரிந்த தமிழ ஆசிரியர்கள் இருந்தால் அவர்களும் வயது முதிர்நதவர்களாக இருந்தால் அவர்களையும் தலைமை ஆசிரியர்களாக நியமிக்கும் முறையை ஏறறுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதற்கு சட்டம் இடம் கொடுக்காமல் இருந்தால் அந்தச் சட்டத்தையும் மாற்றி அமைத்துககொள்ள வேண்டும் எனறும் கேட்டுக் கொள்கிறேன்.

அதற்கு அடுத்தபடியாக குழந்தைகளை ஐந்து வயதுக்கு மேல்தான் வகுப்புகளில் சேர்த்துக்கொள்ளப்படும் என்று வெள்ளை அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது. இதைச் சொல்லும்போது சகோதரி லட்சுமிகாந்தம் அவர்கள் சொன்ன காரணத்தை நான் குறிப்பிடப்போவது இல்லை. கலியாணமாகி பெண்கள் படிப்பை நிறுத்திக்கொள்ள வேண்டுமென்ற காரணத்தால் அதற்குளாகவே அவர்கள் தங்களுடைய படிப்பை முடித்துக்கொள்ள வேண்டும் என்பதற்காக அவர்களுக்கு ஐந்து வயது என்று வைக்காமல் அதற்குக் குறைவாக வைக்கவேண்டும் என்ற காரணத்தை நான் சொல்லவில்லை. நான் குறிப்பிடுவது என்னவென்றால்: ஆண்களைவிட பெண்களுக்குத்தான் உடல் வளர்ப்பு அதிகமாக இருக்கிறது. சீக்கிரமாகத் பெண்களுடைய உடல்தான் நன்றாக வளருகிறது என்றும்; ஆண்களைவிட பெண்கள்தான் படிப்பில் அதிகப்படியான ஆர்வம் காட்டுகிறார்கள் என்றும் சொல்லப்படுகிறது. அதை ஞாபகத்தில் வைத்துக் கொண்டு நான்கு வயதிலேயே அவர்களை பள்ளிக்கூடங்களில் சேர்த்துக் கொள்ளவேண்டும் என்று சொல்லுகிறேன். அப்படி நான்கு வயதில் சேர்ந்துக்கொண்டால் அவர்களுக்கு வயது 15 ஆகும்போது அவர்கள் எஸ்.எஸ்.எல்.சி. பாஸ் பெறுவதற்கு சௌகர்யமாக இருக்கும். அதற்கு மேல் கல்லூரி படிப்புக்குப் போகிறவர்கள் போகலாம். ஆகவே ஐந்து வயது என்ற நிர்ணயம் செய்வதை நான்கு வயது என்று குறைத்துக் கொள்ளலாம் என்று தோன்றுகிறது. தற்காலத்தில் குழந்தைகளுக்கு அதிகப்படியான திறமை ஏற்படுகிறது என்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது என்பதையும் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். பதினைந்து வயதிலேயே அவர்கள் கல்லூரிப் படிப்புக்கு லாயக்குள்ளவர்களாக ஆவார்கள். ஞாபக சக்தியும் அவர்களுக்கு அதிகமாக இருக்கிறது.

அடுத்தபடியாக, ஆரம்ப பாடசாலைகளில் தொழில் கல்வி ஆசிரியர்களை நியமிக்கிறார்கள். அவர்களுடைய நிலைமை ரொம்பவும் வருந்தத்தக்கதாக இருக்கிறது. இப்படிப்பட்ட அவல நிலையில் பல்வேறு வட்டாரங்களிலிருந்து அறியவருகிறது. அப்படிப்பட்ட தொழில் கல்வி ஆசிரியர்களுக்கு குறைநதபட்ச சம்பளம் 40 முதல் 45 ரூபாய் வரையிலாவது உயரவேண்டும்தான். இப்படித்தான் அவர்களுக்கு சம்பளம் கொடுக்கப்பட வேண்டும் என்று உறுதி செய்துகொண்டால் அவர்கள் மூலமாக தொழில் கல்வி எவ்விதம் அபிவிருத்தி அடையமுடியும் என்பதை யோசித்துப் பார்க்கவேண்டும். தொழில் கல்வி விருத்தி அடைவதற்கு வேண்டிய அளவில் அவர்களுக்கு இப்பொழுது ஊதியம் கொடுக்கப்படவில்லை, சம்பள உயர்வு கொடுக்கப்படவில்லை. அவர்களுக்கு இப்பொழுது கொடுக்கப்படும் சம்பளத்தை வைத்துக்கொண்டு அவர்களால் எப்படி தங்களுடைய குடும்பங்களைக் காப்பாற்றமுடியும். அவர்களுடைய குடும்பங்களில், நிலைமையைப் பார்த்தால் ரொம்பவும் பரிதாபகரமாக இருக்கிறது. ஆகவே அவர்களுடைய நிலையை போதிய அளவு உயர்த்தவேண்டும் என்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

வேலையில்லா திண்டாட்டத்தைப் போக்கவேண்டும் என்பதற்காக, ஓராசிரியர் பள்ளிக்கூடங்களை அமைத்தார்கள். அப்பொழுது பயிற்சி பெற்ற ஆசிரியர்களாக இருந்தாலும் அவர்கள் மீண்டும் இரண்டு வருஷ பயிற்சி பெறவேண்டும் என்று சொன்னார்கள். அப்பொழுது அவர்களுக்கு ஸ்டைபெண்ட் 18 ரூபாய் கொடுக்கப்பட்டது. அந்த முறையை ஏற்றுக் கொள்ளக்கூடாது என்றும் அவர்களுக்கு அதிகப்படியாக பயிற்சி பெறவேண்டிய அவசியம் இல்லை என்று பல்வேறு விண்ணப்பங்கள் அரசாங்கத்திற்கு வந்தன. பற்றாக்குறை இருந்ததால்தான் அப்படி நியமித்தார்கள். இதை வைத்துக்கொண்டு அவர்களால் தங்களுடைய வாழ்க்கையை நடத்துவது என்பது முடியாமல் இருக்கிறது. ஆகவே, அவர்களுக்கு ஒரு வருஷ பயிற்சி இருந்தால் போதும் என்றோ அல்லது அவர்களுக்கு ஸ்டைபெண்ட் 40 ரூபாய் கொடுக்க வேண்டும் என்றோ ஒரு திட்டத்தை அமைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அவர்கள் தங்களுடைய வாழ்க்கையை அமைதியான முறையில் நடத்திக்கொள்ள வேண்டும் என்பதையும் ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

நம்முடைய படிப்புத் தரம் மிகவும் வீழ்ந்து விட்டது என்று ஒரு சாரரால் கருதப்படுகிறது. அதில் எப்படிப்பட்ட குறைபாடுகள் இருந்தாலும் பழையகாலத்தில் சங்க காலத்தில் படித்து பட்டம் பெற்றவர்கள் எவ்வளவோ பேர்கள் இருந்தார்கள். அப்படி பல்வேறு துறை

களில் அவர்கள் பணியாற்றி வந்தார்கள். அவர்களுக்கு எந்தவிதத்திலும் அரசாங்கம் உதவி செய்ததாகவே இருக்கிறது. பரந்த மனப்பான்மையுடன் அவர்கள் பல்வேறு ஸ்தாபனங்களில் ஊதியம் இல்லாமல் பணியாற்றிக்கொண்டு வந்தார்கள். அப்படி பட்டம் பெற்றவர்கள் எவ்வளவோ பேர்கள் இருந்தார்கள். அவர்கள் நல்ல தகுதியுள்ளவர்களாகவும் இருந்தார்கள். அவர்கள் ஆராய்ச்சி துறைக்கு உதவக்கூடியவர்களாக இருக்கவேண்டும் என்பதை ஞாபகப்படுத்துகிறேன்.

நம்முடைய தமிழ் ஆட்சிமொழியாக ஆகக்கூடிய இந்த நேரத்திலே பல்கலைக் கழகத்திலும் கல்லூரிகளிலும் தமிழே போதனாமொழியாக அமைப்பதற்கு அரசாங்கம் வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்வதுடன் ஆசிரியர்கள் பிற மக்களுக்கு வேலை செய்கிற அந்த வீதாச்சாரத்தில் அவர்களுக்கு வீடுகளை அமைத்துக்கொடுப்பதற்கு அரசாங்கம் முன் வரவேண்டும் அல்லது அவர்கள் எந்த இடத்தில் வேலை செய்கிறார்களோ அந்த இடங்களில் அவர்களுக்கு வீடுகள் அமைத்துக்கொடுப்பது அந்தந்த மானேஜ்மெண்ட்டின் அரசாங்கத்தின் பொறுப்பாக இருக்கவேண்டும் என்பதையும் ஞாபகப்படுத்துகிறேன். எந்த முறையிலும் அவர்கள் சாதாரண தொழிலாளர்களைவிட அதிகப்படியான வேலையைத்தான் செய்து வருகிறார்கள். ஒரு சாதாரணக் தொழிலாளிக்குக்கூட ஒரு நாளைய வருமானம் $3\frac{1}{4}$ ரூபாயாக இருக்கும்போது அவர்களுக்கு மட்டும் ஏன் குறைவான சம்பளம் கொடுக்கப்படுகிறது என்பதையும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். சாதாரண தொழிலாளர்களுடைய நிலைமையைப் பொருத்து அவர்களுக்கு இந்த அரசாங்கம் பல்வேறு சட்டங்களை இயற்றுகிறார்கள். அப்படி ஆசிரியர்களுடைய நிலைமையை உயர்த்துவதற்கு எந்தவிதமான சட்டத்தையும் போடுவதாக இல்லை. அவர்கள் குடியிருப்பதற்கு வீடுகள் அமைத்துக் கொடுப்பதுடன் அவர்களுடைய வாழ்க்கைத்தரத்தையும் உயர்த்திக் கொடுக்கவேண்டும் என்பதைக்கூறிக்கொண்டு ப்ரி யூனிவர்சிட்டி மாணவர்களுக்கும் தமிழ்க் கல்வி திட்டத்தை அமுல் நடத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இந்த **Pre-University** மாணவர்களுடைய தமிழ்க் கல்வித் திட்டத்தையும் ஓரளவு அதிகப்படுத்த நான் மிகவும் விரும்புகிறேன். காரணம் ஜனவரி முதலே பாடத் திட்டம் முடிவாகிறது, ஆசிரியர்களுக்கு வேலை இல்லாமலிருக்கிறது என்பதையும் ஞாபகப்படுத்திக் கொண்டு என்னுடைய சிற்றுரையை முடித்துக்கொள்கிறேன்.

(Deputy Speaker in the Chair.)

**Sri A. R. SUBBIAH MUDALIAR:** உப தலைவர் அவர்களே, வெள்ளை அறிக்கையில் பலவிதமான நன்மைகள் கூறப்பட்டிருக்கின்றன.. இருந்தாலும் கிராமப் பகுதியிலிருந்து வரும் என் போன்றவர்களுக்குத தோன்றும் சில குறைபாடுகளைத் தெரியப்படுத்த விரும்புகிறேன்.

மானேஜ்மெண்ட் பள்ளிகளைப்பற்றி சொல்லும்போது, 8-வது பக்கத்தில் ஆராய்ச்சியில் இருப்பதாகக் கண்டிருக்கிறது. அனேகமாக கிராமப் பகுதிகளிலே மானேஜ்மெண்ட் மேற்பார்வையில் உயர்தர ஆரம்பப் பள்ளிகள் இருந்துகொண்டிருக்கின்றன. ஆனால், அதில் ஒரு குறைபாடு என்னவென்றால், அதை வைத்து நடத்தக்கூடியவர்கள் அதை ஒரு வியாபாரமாக (பிஸினெஸ்) நடத்துகிறார்கள். ஒரு குடும்பத்தில் தகப்பன் பெயருக்கு ஒரு பள்ளிக்கூடம், அதற்கடுத்தாற்போல் மனைவி பெயருக்கு ஒரு பள்ளிக்கூடம், சகோதரி பேருக்கு ஒரு பள்ளிக்கூடம் என்று வைத்துக் கொண்டு, கல்வியைப் புகட்டுவதற்கு, கல்வியை விருத்தி பண்ணுவதற்கு இல்லாமல், அதை ஒரு வியாபார ஸ்தலமாக வைத்துக்கொண்டிருக்கிறார்கள். கல்வித் தணிக்கை அதிகாரிகளுக்கு இவைகள் தெரிந்திருந்தும், சட்டரீதியாக ஒன்றும் செய்ய முடியாததால் அதை இப்படியே வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அதனால் என்ன ஏற்படுகிறதென்றால், கல்வி புகட்டுவதற்குப் பதிலாக வரும்படியையே ஒரு குறிக்கோளாக வைத்துக்கொண்டு, எவ்வளவு தூரம் கல்வித் தரத்தைக் குறைக்க வேண்டுமோ அவ்வளவு தூரம் குறைத்துக்கொண்டிருக்கிறார்கள். இரண்டு பள்ளிக்கூடங்கள் இரண்டு குக்கிராமங்களில் வைத்துக்கொண்டு, ஒன்று தன் பேரிலும் இன்னொன்று மனைவி பேரிலும் வைத்துக்கொண்டு இரு பள்ளிக்கூடங்களையும் ஒருவர் சைக்கிளில் போய் மேற்பார்வை பார்க்கக்கூடிய நிலைமையில் நடந்துகொண்டிருக்கிறது. இந்த நிலையைப் போக்குவதற்கு தெளிவான ஒரு சட்டத்தின் மூலமாகவோ அல்லது விதியின் மூலமாகவோ ஏதாவது வழி செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.





அதற்கடுத்தாற்போல், தணிக்கை அதிகாரிகள். அவர்கள் எஸ்.எஸ்.எல்.ஸி.க்குக் குறைவாகப் படித்தவர்களாக சில இடங்களில் இருக்கிறார்கள். ஹையர் கிரேட் தேறின பிறகு, 2, 3 வருஷங்கள் பள்ளியில் அனுபோகம் ஏற்பட்ட பிறகு, தணிக்கை அதிகாரிகள் என்று நியமனம் செய்யப்படுகிறார்கள். அவர்களே, ஹைய்ர் எலிமெண்டரி ஸ்கூலுக்குப் போகும்போது, தரம் குறைகிறது. ஹையர் கிரேட் தேறின பிறகு, மூன்று வருஷம் கல்வி ஸ்தாபனங்களில் வேலை பார்த்தால் போதும் என்ற காரணத்தை வைத்துகொண்டு தணிக்கை அதிகாரி என்று நியமனம் பண்ணுவது மூலமாக தணிக்கை சரியாக நடப்பதில்லை. குறைந்தது கிராஜுவேட்டாக இருக்கக்கூடியவர்களைத் தணிக்கை அதிகாரிகளாகப் போடுவது நலம்.

குழந்தைகள் லைப்ரரி மிக முக்கியமாகும். ஒவ்வொரு தாலுகா சென்டரிலாவது ரெவினியு பிர்காவிலாவது குழந்தைகள் லைப்ரரி ஒன்று இருக்கும்படி கண்டிப்பாக வழி செய்யவேண்டும். அப்பொழுதுதான் பிள்ளைகளுக்குப் படிக்கக்கூடிய பழக்கம் ஏற்படும். அதைச் செய்யவேண்டுமென்று நான் கேட்டுகொள்கிறேன்.

கிராமாந்திரங்களில் உள்ள பிள்ளைகள் சினிமாவுக்குப் போகக்கூடிய ஒரு கெட்ட பழக்கம் இருந்துகொண்டிருக்கிறது. ஒரு சினிமாவுக்குப் போய்விட்டுவரக்கூடிய நிலைமை ஏற்பட்டவுடன் அதில் நடக்கக்கூடிய கெட்ட போக்குதான் பிள்ளைகளுக்கு மனதில் படுகிறது. ஆகவே கிராமாந்திர ஆரம்பப் பள்ளிக்கூடங்களில் ரிலிஜியன், மாரல் வகுப்புகள் கண்டிப்பாக வைக்கவேண்டும். இவை இரண்டும் கிராமப் பள்ளிகளில் மிக மிக முக்கியம். மாரல், ரிலிஜியன், இன்டெலிஜன்ஸ் " டெஸ்ட்" இருந்தாலும் நல்லது. பள்ளிகூடப் பிள்ளைகள் கெட்டுப்போவதற்குக் காரணம், சினிமாவுக்குப் போகக்கூடிய தப்பான மனப்போக்கு வளருவது தான். அந்த வாய்ப்பு ஏற்படாமல், அவர்களுக்கு மாரல் ஸ்டடி கட்டாயமாக வைத்துவிட்டால் அனேக விதத்தில் நன்மை ஏற்படும்.

மத ஸ்தாபனங்கள் நடத்தும் கல்வி ஸ்தானங்களுக்குப் போனால், உதாரணமாக கிருஸ்துவர்கள் நடத்தும் பள்ளிக்கூடங்களுக்குப் போனால், முக்கியமாக அங்கே சொல்லிக் கொடுப்பது " ப்ரேயர் " சாப்பிடும்போது ப்ரேயர், படிக்கும்போது ப்ரேயர், படுக்கும்போது ப்ரேயர், பள்ளிக்கூடத்திற்குப் போகும்போது ப்ரேயர், வீட்டை விட்டு வெளியே போகும்போது ப்ரேயர் இல்லாமல் போகமாட்டார்கள். இதனால் அவர்களுக்குச் சிறு வயதிலேயே கடவுள் பக்தி ஏற்படுகிறது. அதை நாம் ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும் புகட்டுவது ரொம்ப முக்கியம்.

மத்தியான வேளைகளில் பள்ளிக்கூடங்களில் பிள்ளைகளுக்கு உணவு அளிக்கும் திட்டத்தைப் பற்றிச் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய கல்வி இலாகா டைரக்டர் அவர்கள் ஆரபித்தது ரொம்ப நல்ல முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. சில பள்ளிக்கூடங்களில் தனிப்பட்டவர்களே செய்கிறார்கள். சில இடங்களில் கூட்டுறவாகவும் செய்கிறார்கள். நடந்து கொண்டு இருக்கும் இடங்களுக்கு அதன்மூலம் அதிக முதல் சலுகை கொடுங்கள். பிள்ளைகளுக்கு பகல் உணவு கொடுப்பதற்கு வாய்ப்பு ஏற்படலாம்.

இந்தி வேண்டுமா, வேண்டாமா என்ற பெரிய பிரச்னை இருக்கிறது. கல்வி மந்திரி அவர்கள் கொஞ்சம் அழுத்தமாகச் சொன்னார்கள். தென்னாட்டில் இருந்து டில்லி போனால் எந்த டிபார்ட்மெண்டுக்குப் போனாலும் நம் தமிழ்நாட்டுச் சகோதரர்கள் தான் இருக்கிறார்கள். அப்படி இருக்கக் கூடிய நிலைமையில் நாம் முன்னேறியிருக்கும்போது இந்தியைக் கண்டிப்பாக படிக்க வேண்டியது அவசியம். இந்தி படிக்காவிட்டால் வட நாட்டுக்குப் போக முடியாது. இப்பொழுது வடநாடு தென்னாடு என்று அவதூறாகப் பேசி என்ன பிரயோசனம். தமிழ் நாடு தான் எல்லா விதத்தி

னும் முன்னேற்றகரமான நிலைமையில் இருந்து கொண்டிருக்கிறது. ஆகையால், அரசாங்கத்தார் வெள்ளை அறிக்கையில் சொன்னபடி இந்தியைக் கட்டாயமாக வைத்துத்தான் தீரவேண்டும். இந்தி இருந்தால்தான் நாம் முன்னேற முடியும். தமிழ்நாட்டில் பலவிதமான கஷ்டங்கள், இருப்பதோடு சுபீட்சம் இல்லாத நாடாகவும் இருக்கிறது. இயற்கை வசதியற்ற நாடாக இருக்கிறது. ஆனால் நம்முடைய கல்வித் தரம் எந்த விதத்திலும் முன்னேற்றமாக இருக்கும்போது அதை நல்ல நிலைமையில் கொண்டு வரவேண்டும். இந்தி கட்டாயமாக அமுல் நடத்துவது அவசியம். வட நாடு தென்னாடு என்று சாதாரணமாகப் பேசக்கூடியவர்களுக்காக அதைக் கொஞ்சம் யோசனை செய்யவேண்டுமென்று நினைத்து இந்தியைக் கம்பல்சரியாக இல்லாமல் செய்துவிடக்கூடாது.

ஆங்கிலம் ஒரு முக்கியமான மொழியாகும். வெள்ளை அறிக்கையில் சொன்னபடி 5-வது வகுப்பிலிருந்து கட்டாயமாக இருக்கவேண்டும். இந்தியும் ஆங்கிலமும், தாய்மொழியாகிய தமிழும் கட்டாயமாக எஸ்.எஸ்.எல்.ஸி. வரை வைத்திருப்பது ரொம்பப் பொருத்தம். இம் மூன்று மொழிகளையும் ஒரு குறைவும் இல்லாமல் அமுல் நடத்தினால்தான் தமிழ் நாட்டவர்களுக்குப் பிரயோஜனப்பட்டதாகும்.

ஆங்கிலம் இன்டர்நாஷனல் லாங்க்வேஜ் ஆகையால் அதை எடுக்கக்கூடாது. அதுவும் இருந்தால்தான் நாம் முன்னேற முடியும். மேற்படிப்புக்கு வாய்ப்பும் ஏற்படும்.

பப்ளிகேஷன்களை நாஷனலைஸ் பண்ணுவது முக்கியம். திரு. ஆசைத்தம்பி அவர்கள் சொன்னபடி எல்லாவற்றையும் ஒரே ஸ்டாண்டர்டில் வைப்பதில் பிரயோஜனம் இல்லை. ஆங்கிலம், கணக்கு, ஸயன்ஸ் இவைகள் பொது ஸப்ஜெட்டுகளாக இருக்கலாம். பூகோளம், சரித்திரம் அந்தந்த ஜில்லாவுக்குப் பொருத்தமாக அமைவது நல்லது.

நர்சரி பள்ளிக்கூடங்கள் ரொம்ப முக்கியம். கிராமாந்திரங்களிலும் சரி, சென்னை போன்ற பெரிய நகரங்களிலும் சரி, பிள்ளைகள் வீட்டில் பொழுது போகாமல் தெருக்களில் சுற்றுவதால் தங்களை வம்பு பேசி, நடவடிக்கையைக் கெடுத்துக்கொண்டிருக்கிறார்கள். எந்த எந்த இடங்களில் நர்சரி பள்ளிக்கூடங்கள் வைக்க முடியுமோ, அங்கெல்லாம் நர்சரி பள்ளிக்கூடங்கள் வைத்தால் பிள்ளைகளுக்கு நல்ல பழக்கம் ஏற்பட உதவிகரமாக இருக்கும்.

தனிப்பட்ட மானேஜ்மென்டில் அம்மாதிரி வைப்பதற்குத் தயாராயிருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் ஒரு உதவி கொடுத்து, நர்சரி பள்ளிக்கூடம் வைப்பது அவசியம் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அத்துடன் சில புத்தகங்கள் மோசமான முறையில் பப்ளிஷ் பண்ணுகிறார்கள். அதையும் சட்ட ரீதியாக தடை செய்வது முக்கியம். கீழ்த்தரமான புத்தகங்களை சட்ட ரீதியாகத் தடை செய்வது முக்கியம்.

வெள்ளை அறிக்கையில் கண்ட மற்ற விஷயங்களை எல்லாம் எல்லோரும் பேசியிருக்கிறார்கள். அவைகளைப்பற்றி நான் அதிகம் சொல்லத் தேவையில்லை. கல்வி அதிகாரி அதை ஒவ்வொரு இடத்திற்கும் போய், நடைமுறையில் இருக்கும் கஷ்டங்களைத் தெரிந்து, அதற்குத் தகுந்தபடி வகுத்திருக்கிறார்கள். கமிட்டியும் அப்படி நடந்திருக்கிறது. கல்வி மந்திரி அவர்கள் இதைப்பற்றி ஒவ்வொரு பக்கமும் ஆழ்ந்து கவனித்து அதன்பின் அச்சடித்ததாக தெரிகிறது. வெள்ளை அறிக்கையானது தமிழ்நாட்டுக்கு ஒரு பொக்கிஷம். அம்மாதிரி ஒரு பொக்கிஷத்தை உண்டாக்கிய கல்வி மந்திரி அவர்களுக்கும் கல்வி அதிகாரிகளுக்கும் என்னுடைய வந்தனத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

**Sri P. U. SHANMUGAM:** சட்ட மன்றத் துணைத் தலைவர் அவர்களே, கல்வியைப்பற்றி கல்வி அமைச்சர் சமர்ப்பித்திருக்கும் வெள்ளை அறிக்கையின் மீது பல நண்பர்கள் கருத்துரையாற்றினார்கள். வெள்ளை அறிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களையும், திருத்தங்களையும் தெரிவித்தால், வெள்ளை அறிக்கையை திருத்தக்கூடிய தகுதி நாம் பெற்றுவிட்டோம் என்ற பொருளல்ல. இப்படி இருக்கக்கூடிய என் கருத்துக்களை



எடுத்துச் சொல்லி, இதைச் செய்யலாமா, இந்த யோசனையை கேட்டுக் கொள்ளக்கூடாதா என்ற வேண்டுகோளோடு இந்த சொற்பொழிவை துவக்குகின்றேன்.

சாதாரணமாக, மருத்துவத் துறையில் தனது தொழிலில் கவனக்குறைவு இருந்தால், மருந்தை தவறுதலாகக் கொடுத்துவிட்டால், இறப்பவன் ஒரு நோயாளி. ஆனால், நாம் நமது வேலையைச் சரிவர செய்யாவிட்டால், சரிவர இந்தத் திருத்தத்தைச் செய்ய தவறிவிட்டோமானால், அதனால் பாதிக்கப்படப் போவது ஒரு தனி மனிதன் அல்ல. வருங்கால சமுதாயமே பாதிக்கப்படும் என்பதை மனதிலே வைத்துக்கொண்டு, இந்தத் திருத்தம் எப்படியிருந்தால் சிறப்பாக அமையும் என்று ஆய்ந்து ஆராய்ந்து முடிவு கட்ட வேண்டிய வர்களாக இருக்கிறோம். கல்வி அமைச்சர் இதை ஒட்டி இரண்டு மணி நேரம் சிறப்பான சொற்பொழிவு ஆற்றினார். அந்தச் சிறப்பு சொற்பொழிவில் அவர் குறிப்பிட்டதில் முக்கியமாக ஒன்று என் நெஞ்சைக் கவர்ந்தது. அதுதான் மொழிப் பிரச்னை. மொழிப் பிரச்னையைப்பற்றி பேசும்பொழுது சொன்னார்கள். எல்லாக் கட்சித் தலைவர்களும் ஒன்று கூடி உட்கார்ந்து அதற்கு முடிவு காணலாம் என்ற தைரியமான வார்த்தையைக் குறிப்பிட்டார்கள். நான் அதைக் கேட்டவுடன் மகிழ்ந்தேன். இருப்பினும் வெள்ளை அறிக்கையைப் படித்துப் பார்க்கும் பொழுது ஒரு மாணவன் மூன்று மொழிகளைப் படிக்க வேண்டுமென்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. மூன்றில் ஒன்று தமிழ் பிரதேச மொழி. மற்றொன்று ஹிந்தி அல்லது வேறு ஒரு மொழி. அதை அடுத்து ஆங்கிலம். ஆகிய இந்த மூன்று மொழிகளும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இரண்டாவதாகச் சொல்லப்பட்டிருக்கிற ஹிந்தியை அல்லது வேறு ஒரு மொழியை எடுத்துக் கொள்ளும் மாணவர்கள் **Academic Course 11**-வது வகுப்புப் பரீக்ஷயிலே கட்டாயமாகத் தேரவேண்டும், இல்லாவிட்டால் தேர்வு பெற்றதாக முடிவு நேராது என்கின்ற வகையிலே வெள்ளை அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஹிந்தியைக் கட்டாயபடுத்தவோ என்னவோ, ஹிந்தி அல்லது வேறு ஒரு மொழி என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அமைச்சர் அவர்கள் சொல்லலாம். ஹிந்தி அல்லது வேறு ஒரு மொழி என்றுதானே குறிப்பிடப்பட்டிருக்கிறது, அதில் என்ன குறை இருக்கிறது என கேட்கக்கூடும். பொதுவாக நமது நாட்டில் ஹிந்திக்கே அதிகமான ஆசிரியர்கள் கிடைக்கக்கூடும். மற்ற மொழிகளுக்கு ஆசிரியர்கள் கிடைக்க மாட்டார்கள். அதுவும் கல்வித் துறையில் மாணவர்களுக்கு பாடசாலைகளில் போதுமான இடம் கிடைப்பதில்லை. எப்படியோ மாணவர்களைக் கொண்டு போய் பாடசாலைகளில் சேர்க்கின்ற நிர்ப்பந்தத்தில் இருக்கின்ற பெற்றோர்கள் ஹிந்தியிலேதான் வாத்தியார் இருக்கிறார்களா, தெலுங்கு ஆசிரியர் இல்லையா, மலையாள ஆசிரியர் இல்லையா என்று நிர்ப்பந்தப்படுத்தி கேட்க மாட்டார்கள். ஆகவே, ஹிந்தி மறைமுகமாக கட்டாயப்படுத்தப்படுகிறது. அது வேறு ஒரு ரூபத்தில் நுழைகிறது. ஹிந்தி கட்டாய பாடமாகத் தேவையில்லை. இப்பொழுது இருக்கிற மாதிரியே ஹிந்தியை படித்தவர்கள் படிக்கலாம் என்று விட்டு விட்டிருக்கலாம். ஆனால் அதை கட்டாயமாக இன்னொரு முறையில் புகுத்துவது குறித்து நெஞ்சம் சற்று வலிக்கிறது. எனக்கு முன் பேசிய அம்மையார் அவர்கள் தமிழ் ஆசிரியர்களைப்பற்றி, அவர்களின் அவல நிலைமையைப்பற்றி சிறப்பாகக் கூறி ஏறக்குறைய அவர் வருத்தத்தை முழுவதுமே தெரிவித்துக் கொண்டார்கள். தமிழ் ஆசிரியர்களைப்பற்றி குறிப்பிட்ட அவ்வம்மையார், தமிழுக்கு ஏற்பட்டிருக்கிற நிலைமையை குறிப்பிடுவார்கள், தமிழ் நாட்டிற்கு வருகின்ற புதுமொழி பற்றி குறிப்பிடுவார்கள் என்று எதிர் பார்த்தேன். ஆனால் குறிப்பிடவில்லை. தமிழ் ஆசிரியர்களுக்கு எந்த அவல நிலைமை ஏற்பட்டிருக்கிறதோ அதைவிட அவல நிலைமை தமிழ் நாட்டின் தாய்மொழிக்கு ஏற்படுமோ என்று அஞ்சத்தக்க வகையில் ஹிந்தி நுழைகின்றது. ஹிந்தி நுழைவினால், தமிழ் கெடுமா, கெடாதா என்ற பிரச்னை வேறு. ஹிந்தி நுழைவு எவ்வளவு அபாயகரமானது என்று இங்குள்ள பலர் வெளிப்படையாகச் சொல்லாவிட்டாலும்கூட நெஞ்சார நினைத்துக் கொள்ளுவார்கள், மனதார ஒத்துக்கொள்ளுவார்கள் என்று எண்ணுகிறேன். ஹிந்தியை இப்படி மறைமுகமாக புகுத்தாது நேரடியாக படித்துத்தான் தீர வேண்டு

[Sri P. U. Shanmugham] [7th November 1957

மென்று வெள்ளை அறிக்கையில் குறிப்பிட்டிருந்தால், வெள்ளை அறிக்கையைத் தயாரித்தவர்களை வீரர்கள் என்று சொல்லுவேன். ஹிந்தியே கூடாது என்று அவர்கள் சொல்லியிருப்பார்களேயானால், தமிழ்த்தாய் மானத்தைக் காக்க வந்த தீரர்கள் என்று பாராட்டலாம். ஹிந்தி அல்லது வேறு ஒரு மொழி என்று மறைமுகமாகச் சொல்லி ஹிந்தியைக் கட்டாயமாக புகுத்துவதைப் பார்க்கும்பொழுதுதான், அவர்கள் வீரர்கள் என்றும் சொல்ல முடியவில்லை, தமிழ்த் தாயைக் காப்பாற்ற வந்த உத்தம பிள்ளைகள் என்றும் சொல்ல முடியவில்லை. வருத்தத்தோடு நெஞ்சம் நோகுகிறது என்று குறிப்பிடுகிறேன்.

ஹிந்தி மொழியைப்பற்றி ஆறுதலாகக் குறிப்பிட்டார்கள். சகலக் கட்சித் தலைவர்களும் ஒன்று கூடி உட்கார்ந்து எல்லோரும் ஒன்றுபட்ட மொழி முகாம் அமைப்போம் என்று சொன்னதாகக் கேள்விப்படுகின்றேன். அப்படி அமைச்சர் அவர்கள் உள்ளபடியே நல்ல எண்ணத்தோடு சொல்லுகிறார்கள் என்றால் நான் அதைப் பாராட்டுகிறேன், வரவேற்கிறேன். நல்ல காரியங்களில் இறங்கும்படி பணிவுடன் கேட்டுக்கொள்ளுகிறேன். எனது கருத்து யாது என்றால், ஹிந்தியை புகுத்துகின்ற நேரத்தில், ஹிந்தியைப் படித்த மாணவர்கள் ஹிந்திப் பரீக்ஷையில் தேறவில்லையென்றால், முழுவதுமே பரீக்ஷையில் தேறாத நிலைமையை மாற்றி, ஹிந்தியைப் படிக்கிறவர்கள் படிக்கலாம், கட்டாயமாக 11-வது வகுப்பு பரீக்ஷையில் அதில் தேற வேண்டும் என்று சட்ட மில்லை என்றாவது அந்த சட்டத்தின் பிடியை சிறிது தளர்த்த வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். அப்படிக்கூட செய்ய மனமில்லை என்றால், கடைசியிலே அறிக்கையிலே 20-வது **para**-வில் ஒரு சிலருடைய யோசனைகள் குறிப்பிடப் பட்டிருக்கின்றன. அவர்கள் கொடுக்கின்ற யோசனைகளை அமைச்சர் அவர்கள் அப்படியே ஏற்றுக்கொண்டு தமிழுக்கு இருக்கிற மானத்தைக் காப்பாற்ற வேண்டுமென்று பணிவுடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

'There have been suggestions from various quarters that under Part II Language study, the language under Part I should not be excluded as one of the alternatives, but provision should be made for its study intensively under that part also.'

இரண்டாவதாகக் கொடுக்கப்படுகின்ற ஹிந்தி அல்லது வேறு ஒரு மொழி என்பதில், மற்றொரு மொழியிலே பிரதேச மொழி அல்லது வேறு மொழி என்று எடுத்துக்கொள்ளக் கூடாது, பிரதேச மொழியையும் அந்தப் பிரிவின்கீழ் தீவிரமாகப் படிக்கலாம் என்ற திருத்தத்தை தயவு செய்து ஏற்றுக்கொண்டால், வெள்ளை அறிக்கையில் மொழிப் பிரச்னையைப்பற்றி சர்ச்சை எழுவதற்கு அவசியமிராது என்று நான் சொல்லுகிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்தார்கள் இம்மாதிரி கூறுகிறார்கள் என்ற பொருளல்ல. என்னைச் சார்ந்த நண்பர்களும் இம்மாதிரி பேசுகிறார்கள். நாங்கள் சார்ந்திருக்கிற கட்சியின் ஏகபோக குரலாகச் சொல்லுகிறோம் என்ற பொருள் கிடையாது. என்னுடைய சொந்தக் கருத்து இது என்று எடுத்துக்கொண்டாலும், இதை நாடு வரவேற்கும் என்று நம்புகிறேன். ஹிந்தி அல்லது இன்னொரு தேசீய மொழியைக் கற்க வேண்டும் என்று சொல்லும்பொழுது, பிரதேச மொழியைக் கற்றுக்கொள்ளலாம் என்று சொல்லக்கூடிய அளவுக்கு இதை மாற்றி அமைக்கக்கூடிய மன தாராளமும் பெருந்தன்மையும் அமைச்சர் குழுவுக்கு ஏற்பட வேண்டும், ஏற்படும் என்று நம்புகிறேன்.

அடுத்து, இரண்டு யூனிட், அதாவது 11 ஆண்டு படிப்பை பிரித்து முதல் யூனிட் ஏழு ஆண்டு காலமாகவும், இரண்டாவது யூனிட் நான்கு ஆண்டு காலமாகவும் பிரித்து வைக்கிறார்கள். எனக்கு எழுந்த சிறு சந்தேகத்தைச் சொல்லுகிறேன். அமைச்சர் அவர்கள் திருப்பி பதில் உரை சொல்லும்பொழுது விளக்குவார் என்று எதிர்பார்க்கிறேன். இப்பொழுது எலிமெண்டரி பாடசாலைகளில் ஐந்தாவது வகுப்பு வரையில் ஹையர் கிரேடு ஆசிரியர்கள் பணியாற்றுவதைப் பார்க்கிறோம். சில இடங்களில் செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் தலைமை ஆசிரியர்களாக இருக்கலாம்.



7th November 1957] [Sri P. U. Shanmugham]

இப்பொழுது இருக்கக்கூடிய 6-வது, 7-வது **standard**-ல் செகண்டரி கிரேடு **trained teacher** இருக்க வேண்டுமென்று ஒரு நிர்ப்பந்தம் இப்பொழுது இருந்துகொண்டு வருகிறது. இரண்டையும் கொண்டு வந்து சேர்த்து ஏழு வகுப்புகளை ஒரு யூனிட் ஆக்கும்பொழுது, மேல் இரண்டு வகுப்புகளுக்கும் யார் ஆசிரியர்களாக பணியாற்றப் போகிறார்கள் என்று சொல்லப்படவில்லை. இரண்டு **standard**-களை எலிமெண்டரி பாடசாலையோடு கொண்டு வந்து சேர்க்கிறார்கள். உயர்தர ஆரம்ப பாடசாலைகளைப்பற்றி ஒன்றும் தெரியவில்லை. ஆரம்பப் பள்ளிக் கட்டிடத்திலே போதிய இட வசதி இல்லாதபோது அதை உயர்தர பாடசாலையாக்கி விடுவதால் இட நெருக்கடி அதிகமாகும் என்று தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன். என்னுடைய அபிப்பிராயத்தைச் சொல்லுகிறேன். ஏற்றுக்கொள்ளுவார்களோ, இல்லையோ, எனது கருத்தைச் சொல்லுகிறேன், இரண்டு யூனிட்டுகளாக பிரிப்பதற்கு பதிலாக, அதை ஏன் மூன்று யூனிட்டுகளாக பிரிக்கக் கூடாது என்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகிறேன். முதல் ஐந்து வகுப்புகள் ஒரு யூனிட் அடுத்த மூன்று வகுப்புகள் ஒரு யூனிட், அடுத்து மூன்று வகுப்புகள் ஒரு யூனிட் என்று பிரித்தால் இட நெருக்கடியை சமாளிக்க முடியாதா என்பதை தயவு செய்து யோசித்து அதை ஏற்றுக் கொள்ள இயலுமானால், இந்தத் திருத்தத்தை ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்.

கடைசியாக, கல்வித் திட்டத்தில் போடப்படுகின்ற உத்தரவுகள் அனைத்தும், சென்னை மாநிலத்தில் இருக்கிற அத்தனை பாடசாலைகளையும் கல்லூரிகளையும் ஒரே அளவில் பாதிக்கக்கூடியதாக இருக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நேற்றைய தினம் அமைச்சர் அவர்கள் பேசும் பொழுது குறிப்பிட்டார்கள் ஆசிரியர்களுக்கு 12 ரூபாய் அதிகம் கொடுத்திருப்பதாக. வேலூர் வெங்கடேசுவரா உயர்தர பாடசாலையில் இன்னும் 12 ரூபாய் சம்பள உயர்வு ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்படவில்லை. கேட்டால் அவர்கள் என்ன சொல்லுகிறார்கள் என்றால், தாங்கள் சென்னை மாகாண சர்க்கார் உத்தரவிற்குப் பணிய வேண்டியதில்லை. ஆந்திர மாகாண சர்க்கார் உத்திரவுக்குத்தான் பணிய வேண்டுமென்று சொல்லுகிறார்கள். அந்த ஆசிரியர்களுக்கும் உடனடியாக இந்த சம்பள உயர்வை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஹிந்தியைப் பொறுத்த மட்டில் அமைச்சர் குழு நான் சொன்ன யோசனைகளை ஆராய்ந்து ஒரு நல்ல முடிவுக்கு வரவேண்டும். கடைசியாக ஹிந்தியை கட்டாயமாக புகுத்தி தமிழகத்திலே ஒரு எரிமலையை ஏற்படுத்தி வீணாக பழிச் சொல்லை இந்த அமைச்சர் குழு ஏற்றுக்கொள்ளவேண்டாம் என்று கேட்டுக்கொண்டு, என்னுடைய சிற்றுரையை முடித்துக்கொள்கிறேன்.

SRIMATHI HEMALATHA DEVI : மதிப்பிற்குரிய துணைத்தலைவர் அவர்களே,

" கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லாதவர் "

என்று வள்ளுவர் வகுத்துச் சொன்ன வாக்கின்படி நம் நாட்டில் எல்லா மக்களும், தங்களுக்கு இருக்கும் கண்களை கண்களாகவே பாவிக்க வேண்டும். தங்கள் கண்களை புண்ணாக பாவித்து, படிக்காது வீணாக தங்கள் வாழ்நாளை பாழாக்கக் கூடாது என்றளவில் ஏழைக் குடும்பத்தினருக்கும் பிற்பட்ட இனத்தவருக்கும், தியாகிகளுக்கும், மற்றும் எல்லா குடும்பத்தினருக்கும், ஆக நாட்டில் உள்ள அத்தனை பேர்களுக்கும் கண்களுக்கு ஒப்பாக மதிக்கப்படும் கல்வியில் தேர்ச்சி பெற்று வாழ வழிவகை செய்து கொடுக்க அரசாங்கம் பல சட்டங்களையும், பல திட்டங்களையும் வகுத்திருப்பதை குறித்து மகிழ்ச்சியடைகிறோம், வரவேற்கிறோம். அதே முறையில் புத்தகங்கள் அச்சிடுவதற்கு அரசாங்கமே முயற்சி எடுத்துக்கொண்டிருப்பதை நான் வரவேற்கிறேன். ஜில்லா போர்டிலும், ஸ்தல ஸ்தாபனங்களிலும் பள்ளிக்கூட பாடப் புத்தகங்களை தேர்ந்தெடுக்கும் கல்வி நிரந்தரக் கமிட்டி குழுவினரிடம் தனியார் நடத்தும் கம்பனிகள் ஸ்பெஸிமன் புக்

[Srimathi Hemalatha Devi] [7th November 1957

கொடுப்பார்கள். அந்த ஸ்பெஸிமன் புக் நல்ல வர்ண படங்களும், நல்ல காகிதத்தில் அச்சிடப்பட்டுமிருக்கும். ஆனால் பிறகு அந்த புஸ்தகத்தை தேர்ந்தெடுத்த பிறகு அந்தப் புத்தகங்களில் வர்ணப் படங்களும் இருக்காது, தாள்களும் மோசமான நிலையில் இருக்கும். அம்மாதிரி நடவாத வகையில், புத்தகங்களை அரசாங்கமே அச்சிட முன் வந்திருப்பது வரவேற்கத்தக்கது. அதோடு கூட, முதல் படிவத்தில் இருந்து ஆங்கிலமும், ஹிந்தியும் ஆரம்பிக்கிறார்கள். அது, மாணவ மாணவிகளுக்கு பெரிய சுமையாயிருக்கிறது. மாணவ மாணவிகளுக்கு மட்டுமல்ல. எனக்கு முன் பேசிய அங்கத்தினர் ஷண்முகம் அவர்கள் கூட அறிவித்தார்கள். ஹிந்தி என்று சொல்லும்போது ஒரு பெரிய சுமையாக அதைக் கருதுகிறார்கள். ஆனால் 6,000 மைலுக்கு அப்பாலுள்ள தேசத்தின் பாஷையாகிய ஆங்கிலத்தை படித்து பட்டங்கள் பெற்று பட்டாதாரிகளாக விளங்கி வருகிறோம். அப்பொழுது ஆங்கிலம் வேண்டாமென்று கூறுவதற்கு என்ன தடை இருந்தது ? அப்பொழுது நாம் அடிமையாய் இருந்ததாலோ என்னமோ ஆங்கிலத்தை படிக்க ஒப்புக்கொண்டு படித்தோம். நம் பிரதேச மொழியாகிய தமிழ், தமிழ் நாட்டிற்குள் பயன்படுமே தவிர, கேரளத்திற்குச் சென்றால் தமிழ் பயன் படாது, ஆந்தரத்திற்குச் சென்றால் தமிழ் அங்கு செல்லாது, மைசூருக்குச் சென்றால் அங்கு கன்னடம் தான் இருக்கிறது, அங்கும் தமிழ் பயன் படாது. ஆகவே, இந்தியாவிலே பெரும்பான்மையோர் பேசும் பாஷையாகிய ஹிந்தியை நம் தேசீய பாஷையாக ஏற்றுக்கொள்வதில் ஏன் தயங்க வேண்டும் என்று நான் கேட்கிறேன். அதோடுகூட, நாம் ஹிந்தி படிக்க முடியாதெனக் கூறி முட்டாள் பட்டம் கட்டிக்கொள்ளத் தயாராயிருக்கிறோமா என்று கேட்கிறேன். எத்தனை பாஷையானால் என்ன ? அவைகளை படிக்க நமக்கு புத்தியில்லை என்று சொல்வதற்கு வெட்கமில்லையா என்று கேட்கிறேன். தமிழ் நாட்டில் இருப்பவர்கள் அறிவாளிகள். ஏன் ஹிந்தி படிப்பதை ஒரு சுமையாக நாம் கருதவேண்டும். ஆகவே, மூன்று அல்லது நான்காவது வகுப்பில் இருந்து ஹிந்தியையும், ஆங்கிலத்தையும் படிக்க ஏற்பாடு செய்ய வேண்டும். அப்படியானால் முதல் படிவம் வரும்போது மாணவ மாணவிகள் ஓரளவு அப்பாஷைகளை நன்கு புரிந்து கொண்டு, வாக்கியங்கள் அமைக்கும் அளவில் தேர்ச்சி பெறுவார்கள். உயர்நிலை பள்ளிப் படிப்பைப் பூர்த்தி செய்யும்போது தமிழில் மட்டுமல்லாது ஓரளவு இவ்விருபாஷைகளிலும் நல்ல முறையில் தேர்ச்சி அடைந்து விளங்குவார்கள் என்று தெரிவித்துக் கொள்கிறேன். கல்லூரிகளில் விஞ்ஞானம், தொழில் நுட்பக் கல்வி பாடங்களை எல்லாம் பிரதேச மொழியில், அதாவது தமிழில் நடத்த வேண்டுமென்பதற்கு அரசாங்கம் முன் வந்திருப்பதை நான் பாராட்டுகிறேன். தமிழில் அந்தப் பாடப் புத்தகங்களை அச்சிட்டு வெளியிடும்போது, தற்போது நடைமுறையில் இருக்கும் ஆங்கில பதங்களையும் குறிப்பிட்டு அதற்கு சரியான தமிழ் பதத்தையும் அதற்கடுத்து குறிப்பிட்டால் நாளடைவில் தமிழ் பதம் மனதில் பதிந்து விடும். பின் சில வருஷங்களில் ஆங்கிலப் பதங்கள் மறைந்து போய் அந்தயிடத்தில் தமிழ் பதங்களை எளிதில், உபயோகித்துக் கொள்ள அது ஓரளவு ஏதுவாயிருக்கும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். மேலும் கல்லூரி படிப்பு முடிவதற்குள் தமிழ் மொழியில் தேர்ச்சி பெறுவது மட்டுமல்லாது ஆங்கிலம், ஹிந்தி ஆகிய இம் மூன்று மொழிகளிலும் தேர்ச்சி பெற முடியும். அப்படி நாம் ஹிந்தியில் நல்ல தேர்ச்சி அடையும்போது அரசாங்க பாஷையாக ஹிந்தியையே வைப்பதற்கு யாரும் மறுக்க மாட்டார்கள் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன். அடுத்தபடியாக நம் மாகாணத்தில் ஒவ்வொரு ஜில்லாவிலும் பெண்களுக்கு என்று தனி கல்லூரி அமைக்க வேண்டும். அமைப்பதுதான் நல்லது என்று தெரிவித்துக் கொள்கிறேன். பெண்களுக்கு என்று தனி கல்லூரி இல்லாத ஜில்லாக்களில் இருக்கும் பெண்கள் கல்லூரி படிப்பு படிக்க தடை ஏற்படுகிறது. ஆண்களோடு சேர்ந்து படிப்பதற்கு பெண்கள் அச்சப்படுகிறார்கள். அது ஒரு புறமிருக்க, பொருளாதாரம் இல்லாத காரணத்தால் வேறொரு ஜில்லாவிற்குச் சென்று படிக்க முடியாத நிலையில் இருக்கிறார்கள், அவர்கள். படிக்க வேண்டுமென்ற ஆர்வம் இருக்கிறது பெண்களுக்கு. ஆனால் வசதியில்லாத காரணத்தால் கல்லூரி படிப்பு படிக்க முடியாது, உயர்நிலைப்



7th November 1957] [Srimathi Hemalatha Devi]

பள்ளிப் படிப்போடு அவர்கள் நின்றுவிட வேண்டியிருக்கிறது. ஆகவே, ஒவ்வொரு ஜில்லாவிலும் பெண்களுக்கு தனிக் கல்லூரி அமைத்தால் தான் ஆண்களோடு பெண்களும் நல்ல முறையில் படித்து முன்னேற முடியும். ஆண்கள் மட்டும் இம்மூன்று பாஷைகளும் படித்து தேர்ச்சி அடையும்போது அப்படி பெண்களும் ஏன் அடையக்கூடாது. "ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாக வாழ்வோம் இந்த நாட்டிலே" என்று பாரதியார் கூறியிருக்கிறபடி ஆண்களும், பெண்களும் இம்மூன்று பாஷைகளிலும் தேர்ச்சி பெற்று விளங்கவேண்டும். அதற்கு வேண்டிய ஏற்பாடுகளை அரசாங்கம் செய்து கொடுக்க வேண்டும். குறிப்பாக, சேலத்தில் இப்பொழுது பெண்களுக்கு தனி கல்லூரி அமைக்க வேண்டுமென்று திருவாளர் ராமானுஜம் செட்டியார் அவர்கள் ஒன்றரை லட்சம் ரூபாய் கொடுத்து உதவியுள்ளார். அதோடு ஜில்லா போர்டும் சிறந்த வகையில் ஒரு லட்சம் ரூபாய் கொடுப்பதாகவும் மேலும் பல பிரமுகர்கள் நிதி தானம் அளிப்பதாகவும் உள்ளனர். ஆகவே, எங்கள் சேலத்தில் பெண்களுக்கு என்று ஒரு தனி கல்லூரி அமைக்க ஆவன செய்வதற்கு எவ்வளவு துரிதமாக காரியங்கள் செய்ய முடியுமோ அவைகளை, கல்வி இலாகாவைச் சார்ந்தவர்களும், நமது கல்வி அமைச்சர் அவர்களும் செய்வார்கள் என்று நான் நம்புகிறேன். அதோடு, நமது கல்வி அமைச்சர் அவர்கள் கூறியபோது சேலம், கோயம்புத்தூர் ஜில்லாக்கள்தான் கல்வியில் பிற்போக்கான நிலைமையில் உள்ளது என்று தெளிவு படத்தெரிவித்தார்கள். எனவே சேலம் ஜில்லாவில், குறிப்பாக தர்மபுரித்தாலுகாதான் மிகவும் பிற்போக்கான நிலையில் உள்ளது. குறிப்பாக எனது தொகுதியைச் சேர்ந்த பாப்பாரப்பட்டி என்ற இடத்தில் தியாகி சுப்பிரமண்ய சிவா அவர்களின் ஞாபகார்த்தமாக அரசாங்கம் பேசிக் ட்ரெயினிங் ஸ்கூல் ஆரம்பிக்க போகிறார்கள். அதை பேசிக் ட்ரெயினிங் ஸ்கூல் ஆக ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் வேண்டிய உதவி அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு கல்வி அமைச்சர் கொண்டு வந்த கல்வி வெள்ளை அறிக்கையை ஆதரித்து எனது பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

SRIMATHI KAMALAMBUJAMMAL : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கனம் நிதி அமைச்சர் அவர்கள் இந்த சபை முன்னால் சமர்ப்பித்திருக்கின்ற வெள்ளை அறிக்கையை நன்றாக அலசி ஆராய்ந்து பார்த்து, தயிரை கடைந்து வெண்ணெய் எடுத்து உருண்டையாக திரட்டி வைப்பது போல இந்த அறிக்கையை நன்றாக அலசி ஆராய்ந்து பரிசீலனை செய்து பார்த்தபிறகு இங்கு வைக்கப்பட்டிருக்கிறது. யாரும் குறைபாடு சொல்லுவதற்கு வகையின்றி இந்த அறிக்கை இடம் பெற்றிருக்கிறது. இந்த அறிக்கையில் கட்டாய படிப்பு என்பது முக்கியமான இடம் பெற்றிருக்கிறது. இது என்னுடைய வெகு நாளைய கனவு. அந்த கனவு இந்த 1960-வது ஆண்டிலாவது நினைவாகின்றதை பார்த்து யான் பெரு மகிழ்ச்சியடைகின்றேன். மேல் நாடுகளில் 16 வயதிற்குட்பட்ட ஆண் பெண் அனைவரும் கட்டாயமாக படித்தாக வேண்டும் என்று இருக்கிறது. இல்லையென்றால் அந்த பிள்ளைகளின் பெற்றோர்களுக்கு பைன் (fine) போடுவது மேல் நாடுகளில் இருந்து வருகிறது. மேற்கத்திய நாடுகளில் இந்த விதமான முறை கையாண்டதின் காரணமாகத்தான் 16 வயதிற்குட்பட்ட படிக்காதவர்களை அந்த நாட்டில் பார்க்க முடியாத நிலைமை இருக்கிறது. அதை உணர்ந்து நம் நாட்டினரும் மற்ற நாடுகளை போல் முன்னுக்கு வரவேண்டும் என்று எண்ணி இந்த கட்டாய படிப்பை இங்கு கொண்டு வந்ததைப் பற்றி கனம் அமைச்சர் அவர்களை பாராட்டுகின்றேன். இந்த கட்டாய படிப்பில் ஒன்றிலிருந்து 5-வது வகுப்பு வரையிலும் கட்டாய படிப்பு கொடுக்க வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதில் சில பிள்ளைகளுக்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டிருப்பதாக சொன்னார்கள். விதிவிலக்கு என்று சொல்லும்பொழுது பெற்றோர்களோடு சேர்ந்து வேலை செய்யும் பிள்ளைகளுக்கு விதிவிலக்கு அளிக்க வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். நான் இதில் குறிப்பிட விரும்புவது என்னவென்றால், பெற்றோர்களோடு பகல் வேலைக்கு போயிருந்தாலும் இரவில் வந்த பிறகு அந்த ஊரில் 20, 30 பிள்ளைகள் சேருவார்கள் என்றால் அவர்களுக்கென்று ஒரு ஆசிரியரை நியமித்து இரவிலாவது அவர்களுக்கு கற்று

[Srimathi Kamalambujammal] [7th November 1957

கொடுப்பதற்கு வசதி செய்தால் நலமாக இருக்கும். அப்படி ஏற்பாடு செய்வதினால் முதியோர் கல்வி திட்டத்தையும் பூர்த்தி செய்யக்கூடிய நிலைமையில் இருக்கும் என்பதை சொல்லிக்கொள்கிறேன். அடுத்தபடியாக மத்தியான உணவு கொடுக்கக்கூடிய ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதினால் அதிக பிள்ளைகள் படிப்பதற்கு வருவார்கள் என்பது நிச்சயம். இவ்வாறு பிள்ளைகளின் எண்ணிக்கை அதிகமாக வந்தால் ஆசிரியர்களின் எண்ணிக்கையும் அதிகமாகி வரும். அப்போது ஆசிரியர்களும் கூடுதலாக தேவைப்படும். அப்போது ஆசிரியர்களை பயிற்சி செய்யக்கூடிய இடங்களில் அதிகமான பேர்களை படிக்க அனுமதிக்கப்பட வேண்டும். அவ்விதம் அனுமதிக்கப்பட்டால்தான் ஆசிரியர்கள் இல்லை என்ற குறைபாடு நீங்கும். ஆகவே இதற்கென்று இருக்கும் ட்ரெயினிங் காலேஜில் அதிக இடம் ஆசிரியர்களுக்கு ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதிலும் நம்முடைய பள்ளிக்கூடங்கள் நடத்துவதற்கு கோயில்களை உபயோகிக்கலாம் என்று சொல்லப்பட்டது. முன் காலத்தில் இவ்விதம் நடத்தினதாகவும் சொன்னார்கள். அந்த காலத்தில் பெரிய பிரகாரங்கள், நூற்றுக்கால் மண்டபங்கள், ஆயிரங்கால் மண்டபங்கள் அதிகமாக இருந்தது. முன்னால் இவைகளை கட்டுவதற்கு அரசர்கள் இருந்தார்கள். இப்போது அவ்விதம் கட்டக்கூடிய கோயில்கள் இல்லை. அம்மாதிரிக் கோயில்களை கட்டுவதற்கு இந்த காலத்தில் சேரனும் இல்லை, சோழனும் இல்லை, பாண்டியனும் இல்லை. அவர்கள் கட்டியிருந்த கோயில்கள் எல்லாம் முன் காலத்தில் விரிவாக இருந்ததினால் அக்காலங்களில் பள்ளிக்கூடங்கள் நடத்த முடிந்தது. இப்போது இந்த விஞ்ஞான காலத்தில் பள்ளிக்கூடங்களை சிறந்த முறையில் கட்டுகிறார்கள். இப்போது இருக்கிற கோயில்களை எல்லாம் எடுத்துப் பார்த்தால் பள்ளிக்கூடங்களில் இருக்கும் ஒரு அறைக்குத்தான் வரும். ஆகவே கோவிலில் நம்பிக்கை இல்லாத ஆசைத்தம்பி அவர்கள் போன்றவர்கள் கோவில்களில் பள்ளிகூடங்களை நடத்த வேண்டும் என்று சொல்லுவது இந்த காலத்திற்கு ஒவ்வாது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். அடுத்ததாக இப்போது எஸ்.எஸ்.எல்.ஸி. வரை படித்து முடிந்த பிறகு ப்ரி யூனிவர்ஸிட்டி (Pre-University) கோர்ஸ் என்ற படிப்பை ஏற்படுத்தி இருக்கிறார்கள். இதில் இப்போது இருக்கின்ற பாட திட்டங்களை மாற்றியமைத்தாலும் இந்த எஸ்.எஸ்.எல்.ஸி. பரிட்சையிலும் ப்ரி-யூனிவர்ஸிட்டியிலும் (Pre-University) பப்ளிக் எக்ஸாமினேஷன் தனித் தனியே எழுத வேண்டியிருக்கிறது. இதை மாற்றி எஸ்.எஸ்.எல்.ஸி.-க்கும் ப்ரி-யூனிவர்ஸிட்டி (Pre-University)-க்கும் சேர்த்து ஒரே பரிட்சையாக வைத்தால் நல்லது என்று நினைக்கிறேன். ஏனென்றால் இரண்டு தடவையாக பரிட்சை எழுத வேண்டியிருக்கிறது. இரண்டு தடவை பணம் செலவு செய்ய வேண்டியிருக்கிறது. ஆகவே எஸ்.எஸ்.எல்.ஸி.-யில் இருக்கும் பரீட்சையை எடுத்து விடுவார்களானால் இது மாணவர்களுக்கு உகந்ததாக இருக்கும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். அடுத்ததாக இப்போது இருக்கும் பள்ளிக்கூடங்களில் தொழிற் கல்வியை புகுத்த வேண்டியது மிக அவசியம். இவ்விதமான தொழிற்கல்வி இல்லாததினால் மாணவர்கள் உயர்நிலைப்பள்ளிப் படிப்பு முடிந்ததும் பேனா முனையில்தான் வாழ வேண்டும் என்ற நிலை ஏற்படுகிறது. நமக்கு ஜீவாதாரமாக இருக்கக்கூடிய தொழிற்கல்வியை நம் மாணவர்கள் பெற வேண்டும். அதாவது 8-வது படிப்பு அடைந்ததும் கல்லூரிக்கு போக வேண்டுமென்றிருக்கும் நேரத்தில் தொழிற் கல்வியை மாணவர்கள் பெற்றிருக்க வேண்டும். அப்படி பெற்றிருந்தால் எழுதும் வேலையை விட்டு விட்டு வேறு ஏதாவது தொழிலுக்கு போக முடியும். இதனால் நம் நாட்டில் தொழில் நிலையங்கள் அதிகமாக ஏற்படுவதற்கும் இது ஒரு சிறந்த வழியாக இருக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். அடுத்ததாக போதனா மொழியாக ஆங்கிலத்தை வைப்பதா, அல்லது ஹிந்தியை வைப்பதா, தமிழை வைப்பதா என்கின்ற பிரச்னை இருந்து கொண்டுவருகிறது. இப்போது இதில் முதலாவதாக தமிழ் மொழி அல்லது பிரதேச மொழியை வைத்திருக்கிறார்கள். அடுத்ததாக ஹிந்தி அல்லது வேறு ஒரு இந்திய மொழி, மூன்றாவதாக ஆங்கிலம் அல்லது உலக மொழிகளில் ஒன்று என்று வைத்திருக்கிறார்கள். பிரதேச மொழியை முதலாவதாக வைத்திருப்பதால் படிக்கின்றவர்களுக்கு எளிதாக புரிந்து



7th November 1957] [Srimathi Kamalambujammal]

கொள்ள முடியும். அது வரவேற்கத்தக்கது தான். இந்த சமயத்திலாவது தாய் மொழிக்கு இடம் கொடுக்கப்பட்டிருப்பதை பார்த்து மகிழ்ச்சியடைகின்றேன். இரண்டாவதாக ஹிந்தி மொழியைப்பற்றி சொல்லப்பட்டிருக்கிறது. ஹிந்தி படிப்பதானால் எந்தவித குறைவும் கிடையாது. நாக்பூர்-க்கு அப்புறம் தாண்டி விட்டால் ஹிந்தி மொழி தெரியாவிட்டால் மிக மிக கஷ்டம். ஹிந்தியை படிப்பதினால் தாய் மொழியினுடைய தரமோ அல்லது நம்முடைய தரமோ குறைந்துவிட போவதில்லை. இன்று ஹிந்தியை எதிர்க்கின்ற கட்சியைச் சேர்ந்த நம்முடைய நண்பர் அன்பழகன் அவர்களுக்கு ஹிந்தி நன்றாகத் தெரியும். இன்று அவர் ஹிந்தி படித்ததினால் அவர்களுடைய தரம் குறைந்து விட்டதா ? அல்லது அவர்களுடைய புத்தி குறைந்து விட்டதா என்று நான் கேட்கிறேன். எதிர்க்கின்றவர்கள் ஹிந்தியை கற்றுக்கொண்டு மற்ற மக்களை மாத்திரம் ஹிந்தியை படிக்க வேண்டாம் என்று சொல்லுவதில் என்ன அர்த்தம் இருக்கிறது என்று கேட்கிறேன். இது வெறும் எதிர்ப்பு பிரச்சாரத்திற்கே உதவுமே தவிர வேறு ஒன்றிற்கும் இல்லை என்று தான் நான் கருதுகிறேன். மனிதன் எத்தனையோ பாஷைகளில் தகுதி உடையவர்களாக இருக்க வேண்டியது தான். இதனால் யாருடைய தரமும் குறைந்து விட போவதில்லை. மேலும் இப்போது எய்டட் ஸ்கூல்ஸ் (Aided Schools) சம்பந்தப்பட்ட வரையில் இந்த பள்ளிக்கூடங்களை புதிய திட்டத்தில் கொண்டு வரும் பொழுது பஞ்சாயத் யூனியனிலிருந்து மான்யங்கள் கொடுக்கப்படும் என்று சொல்லப்பட்டது. அந்த ஆலோசனை நல்லதல்ல என்பது தான் என் அபிப்பிராயம். தனியாக இப்போது கொடுத்து கொண்டிருப்பது போல் கொடுப்பதுதான் நல்லது என்று எனக்கு தோன்றுகிறது. அதோடு எய்டட் ஸ்கூல்ஸில் (Aided Schools) இருக்கும் ஆசிரியர்களின் சர்வீஸை கணக்கில் சேர்க்காமல் விடப்படுகிறது. சர்க்கார் பள்ளிக்கூடங்களில் வேலை பார்க்கும் ஆசிரியர்களோடு இவர்களும் சேர்ந்து படித்தவர்கள், அதே பயிற்சியை பெற்றவர்கள். தனிப்பட்ட பள்ளிக்கூடங்களில் வேலை பார்க்கிறார்கள் என்ற காரணத்தின் பேரில் அவர்களுடைய சர்வீஸை எடுத்துக்கொள்ளப்படுவதில்லை. இப்படிப்பட்ட நிலைமை மாற வேண்டும். தனிப்பட்ட பள்ளிக்கூடங்களில் இருக்கும் ஆசிரியர்களுடைய சர்வீஸையும் கணக்கில் எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதற்கு சர்க்கார் என்ன முடிவு எடுக்கப்போகிறது என்பதை கனம் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும் போது தெரிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு இவ்வாறு நல்ல முறையில் ஒரு திட்டத்தை கொண்டு வந்து இந்த சபையில் சமர்ப்பித்ததற்காக கனம் அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

SRI N. MARUDACHALAM : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கல்வி பற்றிய இந்த அறிக்கை காலத்திற்கேற்ப முற்போக்கான முறையில் அமைந்திருக்கிறது என்று நான் கூறுவேன். இதில் சில திருத்தங்கள் செய்தால் மிக நன்றாக இருக்கும். அதாவது, 1-வது வகுப்பிலிருந்து 6-வது வகுப்பு வரையில் ஒரு மாணவன் படிக்கிறான் என்று வைத்துக்கொள்வோம். அந்த மாணவன் 5-வது வகுப்பில் பரீட்சையில் தேறினால் ஆறாவது வகுப்பிலும் ஒரு பரீட்சை எழுத வேண்டியிருக்கிறது. அந்தப் பரீட்சையில் அவன் தவறிவிட்டால் மறுபடி 6-வது வகுப்பிலும் சேர்க்கப்படுவதில்லை, 5-வது வகுப்பிலும் சேர்க்கப்படுவதில்லை. இந்த நிலையில் 6-வது வகுப்பில் பரீட்சையில் தவறிய பல மாணவர்களின் பள்ளி வாழ்க்கையே முடிவடைகிறது. ஆகவே 5-வது வகுப்புப் பரீட்சை கூடாது. மாணவனுக்கு 5-வது வகுப்பில் பரீட்சை வைக்காமல் 6-வது வகுப்பில் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

இரண்டாவதாக, ஆதாரக் கல்வி போதனை எப்படி இருக்கிறது என்று சில இடங்களில் பார்த்தேன். இப்போது ஆதாரக் கல்வியில் கற்றுக்கொடுக்கும் முறை தவறானதாக இருக்கிறது. காலையில் மாணவர்கள் பஞ்சு எடுக்கிறார்கள், தக்கிளியில் நூல் நூற்கிறார்கள். இரண்டு வருஷங்கள் ஆனாலும் மாணவர்களுக்கு இரண்டு எழுத்துக்கூடத் தெரிவதில்லை. ஆகையால் 5-ம் வகுப்பிற்கு மேல் ஆதாரக் கல்வியை அளித்தால் நன்றாக

இருக்கும். அப்படிச் சொல்லிக்கொடுத்தால் தான் மாணவர்கள் ஆதாரக் கல்வியை நன்றாகப் பயிலமுடியும் ; அவர்கள் தொழில்களைக் கற்றுக்கொள்ளவும் முடியும்.

ஹரிஜனப் பிள்ளைகளுக்கு "ஸ்காலர்ஷிப்" கொடுக்கப்படுகிறது. பல இடங்களில் பலருக்கு இது கிடைப்பதில்லை. ஹரிஜன மாணவர்கள், உபகாரச் சம்பளத்தைப் பெறுவதற்கு முதலில் கிராம மணியக்காரரிடமும் பிறகு தாசில்தாரிடமும் விண்ணப்பத்தில் கையெழுத்து வாங்கவேண்டும். இவர்களிடமிருந்து கையெழுத்தை வாங்கி தலைமை ஆசிரியரிடம் விண்ணப்பத்தை சமர்ப்பித்தாலும் பலருக்கு உபகாரச் சம்பளம் கிடைப்பதில்லை. ஒரு சிலருக்குத்தான் உபகாரச் சம்பளம் கிடைக்கிறது. ஆகவே எல்லோருக்கும் உபகாரச்சம்பளம் கிடைக்கச் செய்யும் வகையில் உத்தரவிடுமாறு சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறேன்.

கிராமங்களில் பல குழந்தைகள் படிக்க முடிவதில்லை. அவர்களை பெற்றோர்கள், தானியம் கூலியாகக் கிடைக்கிறது என்பதால் எங்கேயாவது மாடு மேய்க்க அனுப்பி விடுகிறார்கள். வாழ்க்கைத் தரம் குறைவாக இருப்பதால் அவர்கள் இப்படிச் செய்கிறார்கள். இதைத் தவிர்ப்பதற்காக பள்ளிக்கூடங்களில் மத்தியானச் சாப்பாடு போடுவதாக சர்க்கார் சொல்கிறார்கள். இதைச் செய்வதுடன் மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் இரண்டு ஜதை உடை கொடுத்தால் நன்றாக இருக்கும். அப்படிச் செய்தால் பெற்றோர்களும் பிள்ளைகளை ஊக்கத்துடன் பள்ளிக்கு அனுப்புவார்கள். இதை கனம் நிதி அமைச்சர் அவர்கள் செய்வார்கள் என்று நம்புகிறேன்.

ஒரு உபாத்தியாயரிடம் எத்தனை மாணவர்கள் ஒப்படைக்கப்படலாம் என்பதைப்பற்றிக் கூற விரும்புகிறேன். ஒரு உபாத்தியாயர் 25—30 பிள்ளைகளை சமாளிப்பதே கஷ்டமானது. ஒருவருக்கு ஆரம்பத்தில் 2—3, குழந்தைகள் இருந்தால் அவைகளை சமாதானப்படுத்துவதே அவருக்குக் கஷ்டமாக இருக்கும். அப்படி இருக்கும்போது ஆரம்பப் பள்ளிக்கூடத்தில் ஒரு உபாத்தியாயரிடம் 30 குழந்தைகள் இருந்தால் அவைகளை சமாதானப்படுத்துவதற்கே 2-மணி நேரம் பிடிக்கும். அதற்கு மேல், பாடம் சொல்லிக்கொடுப்பது மிகவும் கஷ்டமானது. ஆகவே மாணவர்களின் எண்ணிக்கையை எவ்வளவு குறைவாக நிர்ணயிக்க முடியுமோ அவ்வளவு குறைவாக நிர்ணயிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சில இடங்களில் உபாத்தியாயர்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட்டிருக்கின்றன. உபாத்தியாயர்களுக்கு உள்ள வீட்டு அலவன்ஸ் ரூ. 7 ; அவர்களிடமிருந்து கட்டிக்கொடுக்கப்பட்டுள்ள வீடுகளில் குடியிருப்பதற்காக வாங்கப்படும் வாடகை ரூ. 15. சர்க்கார் வாடகை வாங்குவது ரூ. 15-ம் அலவன்ஸ் கொடுப்பது ரூ. 7-மாக இருக்கக்கூடாது. ஆகவே எவ்வளவு அலவன்ஸ் கொடுக்கப்படுகிறதோ அவ்வளவே வாடகையாகக் கொடுக்கப்படுவதற்கான உத்தரவை சர்க்கார் போட வேண்டும். உபாத்தியாயர்களின் நிலை இப்படி இருந்தால் அவர்கள் எப்படி மாணவர்களுக்கு நன்றாகப் பாடம் சொல்லிக்கொடுக்க முடியும் ? அவர்களுக்கு ஊக்கமளிக்க வேண்டும். ஆரம்பப்பள்ளி உபாத்தியாயர்களின் சம்பளம் இப்போது மிக மிகக் குறைவாக இருக்கிறது. அவர்களுடைய சம்பளம் ரூ. 25 அல்லது ரூ. 30. குறைந்தபட்ச சம்பளம் ரூ. 50-ஆக இருந்தால்தான் உபாத்தியாயர்கள் ஊக்கமாகவும் உற்சாகமாகவும் பாடம் சொல்லிக் கொடுப்பார்கள். கல்வி சம்பந்தமாகச் சட்டமியற்றும்போது உபாத்தியாயர்களின் சம்பளத்தையும் சர்க்கார் கணக்கில் எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

DEPUTY SPEAKER : The House will now adjourn and meet again tomorrow at 9 a.m.

The House then adjourned.

## IX.—PAPER LAID ON THE TABLE OF THE HOUSE.

**B**

20. *Balance Sheet of Radio and Electricals, Limited, Madras.*



## APPENDIX

[Vide answer to starred question No. 110-A asked by Sri V. K. Kothandaraman at the meeting of the Legislative Assembly held on 7th November 1957, page 365 supra.]

### *Silk Industry in the State—Development.*

(*a*) The Central Silk Board, Bangalore, serves as a channel for the release of imported silk in the State. The State Government have no information regarding the quantity of raw silk imported. It has been ascertained from the office of the Central Silk Board at Madras that during the period from January to June, 1957 a quantity of 1,057 lb. of imported silk, valued at Rs. 36,350, has been sold in the Madras State through their office. It is presumed that all the quantity so released would have been consumed in the State. The quantity of imported silk actually used in Madras State is likely to be more, as some of the silk merchants purchase silk from Bangalore and other silk merchants to whom imported silk would have been supplied direct by the Central Silk Board.

(*b*) After the reorganization of States, Madras State lost her chief sericultural area in Kollegal taluk which merged with Mysore State. At present sericultural activities in the State are confined to Hosur in Salem district, Coonoor in the Nilgiris district and Talavadi in Gobichettipalayam taluk of Coimbatore district, where there are nearly 1,500 acres under mulberry owned by about 1,500 agricultural families for silkworm breeding.

In order to have an extensive acreage under mulberry for cocoon production with the ultimate object of establishing a silk factory at Hosur, the industry has been extended to the following areas where conditions are favourable for sericulture industry :—

1. Vepponapalli and Royakottah in Krishnagiri taluk, Salem district.
2. Palacode in Dharmapuri taluk, Salem district.
3. Kundah-Kottagiri in Coonoor taluk, Nilgiris district.
4. Masanagudi in Gudalur taluk, Niligiris district.
5. Gudiyatham in North Arcot district.

It is proposed to introduce sericulture at Tenkasi in Tirunelveli district and Yercaud in Salem district. In Tenkasi the proposal is to have a Demonstration Silk Farm. The object of the scheme is to enable the poor agriculturists of that area to understand the technique of mulberry cultivation and silkworm rearing so that they can practice sericulture during off-seasons.

The scheme for the establishment of a Reeling Unit at Hosur has been included under the Second Five-Year Plan and the scheme had been forwarded to the Central Silk Board for sanction of financial assistance. When the scheme is implemented the position of

[7th November 1957

the silk industry in the State will be enhanced as the silkworm breeders will find a ready and remunerative market for their cocoons in the Reeling Unit.

In order to encourage the silk industry among the poor agriculturists, the Government grant a loan of Rs. 50 per acre under mulberry. Every acre of land newly brought under mulberry cultivation is exempted from assessment for a period of three years. Mulberry seed cuttings are also supplied free of cost to the intending cultivators. The cultivators are also supplied with mulberry manure mixture for cost price. Pump-sets are hired to the sericulturists at a nominal rate. It is proposed to establish a cross breeding grainage at Berikai with a view to supply disease-free silkworm eggs to the rearers.

In order to educate the children of sericulturists about the silk industry, a scheme for the introductoin of sericulture in three elementary schools in Salem district has been sanctioned. The scheme is already under implementation in one school. Two more schools have been selected and it is proposed to implement the scheme in the two additional schools during this year.

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

## Friday, 8th November 1957.

The House met in the Assembly Chamber, Fort St. George, at nine of the clock, Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

### I.—QUESTIONS AND ANSWERS.

### SHORT NOTICE QUESTIONS.

*Salem Co-operative Marketing Society.*

110-D *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Industries be pleased to state with reference to the answer given to Question No. 308 answered on 27th July 1957 whether the Board of Management of the Salem Co-operative Marketing Society, Limited, has been superseded and if so, from when?

THE HON. SRI R. VENKATARAMAN : No, Sir.

SRI M. P. SUBRAMANIAM : ஸார், இந்த சேலம் கூட்டுறவு விற்பனை சங்க விஷயம் ஏறக்குறைய மூன்று வருஷங்களுக்கு முன்பு 80,000 ரூபாய் மோசம் செய்துவிட்டதாகப் புகார் செய்யப்பட்டு, 15 மாதங்களுக்கு முன்பு அந்த சங்கத்தின் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

MR. SPEAKER : I am sorry the hon. Member is not listening to me. I have said that in asking a question, no statement should be made but only a question should be put. He may put a question when I give him another chance.

SRI M. KALYANASUNDARAM : ஸார், 1957-ம் ஆண்டு ஜூலை 27 தேதி கலைத்துவிட உத்தரவு போட்டிருப்பதாகச் சொன்னார்கள். அதன்படி இன்னும் நடவடிக்கை எடுக்காமலிருப்பதற்கு விசேஷ காரணங்கள் ஏதேனும் இருக்கிறதா ? அவை யாவை ?

THE HON. SRI R. VENKATARAMAN : ஸார், 1957-ம் ஆண்டு ஜூலை 27 தேதி நான் கலைக்கப்பட்டுவிடுமென்று உத்திரவு போட்டதாகச் சொல்லவில்லை. I read the answer which was given on that date. " The enquiry has not yet been completed. But on the basis of the interim report of the Enquiry Officer, notice for supersession of the committee of the society has been issued to the directors of the society under section 43 of the Madras Co-operative Societies Act.

SRI M. P. SUBRAMANIAM : ஸார், இந்த சேலம் கூட்டுறவு விற்பனை சங்க விஷயம் 15 மாதங்களுக்கு மேலாக ஆகியும் ஒன்றும் நடவடிக்கை எடுக்கப்படாமல் இருப்பது மந்திரி அவர்களுக்குத் தெரியுமா ? அந்த சொஸைடியின் மேல் என்னென்ன புகார்கள் இருக்கின்றன என்று மந்திரி அவர்கள் விவரங்களை இப்போது கொடுப்பார்களா ?

THE HON. SRI R. VENKATARAMAN : சொஸைடியின் தலைவர், காரியதரிசி, இவர்கள் சரியான முறையில் சட்டப்படி இந்த மார்க்கெடிங் சொஸைடியை நடத்தவில்லை என்று புகார் வந்தது. அது நீண்ட காலமாகப் பரிசீலனையிலிருப்பது வாஸ்தவம்தான். காரணம், தர்மபுரி,

திண்டுக்கல், தஞ்சாவூர், நாகப்பட்டிணம், மதராஸ் முதலிய இடங்களில் விசாரணை செய்து ரிப்போர்ட் வரவேண்டியிருப்பதால் தாமதம் ஏற்படு கிறது.

SRI M. KALYANASUNDARAM : விசாரணை முடிவதற்கு மூன்று வருஷ காலம் போதாது என்று அமைச்சர் அவர்கள் கருதியபோதிலும், நோட்டிஸ் கொடுத்து மூன்று மாத காலம் ஆகிறது. ஏன் இன்னும் உத்தரவு பிறப்பிக்கவில்லை ?

THE HON. SRI R. VENKATARAMAN : சட்டப்படி நோட்டீஸ் கொடுத்தவுடன் அவர்கள் எதற்காக ஸூபர்ஸீட் செய்யக்கூடாது என்பதற்குக் காரணம் காட்டுவார்கள். அதைப் பரிசீலனை செய்து தான் ஸூபர்ஸீட் செய்யலாமா, கூடாதா என்று உத்திரவு போடமுடியும். நோட்டீஸ் கொடுத்தவுடனே, தகுந்த காரணம் காட்டுவதை யோசிக்காமல் ஸூபர்ஸீட் செய்ய முடியாது.

SRI A. V. P. ASAITHAMBI : விருதுநகர் நேஷனல் கோவாபரேரேடிவ் ஸ்டோர்ஸ் பேரில் எவ்வளவு........................

MR. SPEAKER : சேலம் பற்றித் தான் இந்தக் கேள்வி. இதில் விருதுநகரைப் பற்றி எப்படிக் கேட்பது ?

SRI A. V. P. ASAITHAMBI : இதுவும் கோவாபரேடிவ் ஸ்டோர்ஸைப் பற்றித் தான்.

MR. SPEAKER : I rule it out of order.

### *Registration of Practitioners of Integrated Medicine.*

110-E *Q.*—SRI C. MUTHIAH PILLAI (on behalf of Sri D. Subramania Rajakumar) : Will the Hon. the Minister for Revenue be pleased to state the reasons for not giving effect to the Madras Registration of Practitioners of Integrated Medicine Act, 1956, till now?

THE HON. SRI M. A. MANICKAVELU : The proposals for the constitution of a new Board of Integrated Medicine and for the framing of rules under sections 3 and 15 respectively of the Registration of Practitioners of Integrated Medicine Act, 1956, have been received from the Director of Medical Services and are under examination. The Act will be implemented immediately after the rules are framed and the Board is constituted.

110-F *Q.*—SRI C. MUTHIAH PILLAI : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether the Government have framed rules and regulations to implement the Madras Registration of Practitioners of Integrated Medicine Act No. XXVII of 1956; and

(*b*) the number of G.C.I.M. doctors that have been appointed as Health Officers and as District Medical Officers?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) The matter is under examination.

(*b*) Nil.

SRI R. SRINIVASA IYER : Is there any proposal before the Government to appoint G.C.I.M's to Government hospitals where there are vacancies and where there are no doctors?



THE HON. SRI M. A. MANICKAVELU : As rules stand at present, I am afraid, they cannot be appointed. At least in the primary centres they cannot be appointed. We are trying to see whether they can be appointed to other dispensaries.

SRI C. MUTHIAH PILLAI : சபாநாயகர் அவர்களே, ஜி.ஸி.ஐ.எம். காலேஜ் டீன், பிரின்ஸ்பால் அந்தப் படிப்பில் உயர்ந்தவர்களைப் போடவேண்டுமென்று அந்தக் காலேஜ் மாணவர்கள் கேட்டிருந்தும், எம்.பி.,பி.எஸ்.-ஐப் போட்டிருப்பதால் அவர்களுக்கு அக்கரையில்லையென்பதை எடுத்துக்காட்டியிருக்கிறார்களா ? இதிலே அக்கரையுள்ளவர்களை ஏன் போடவில்லையென்று கேட்கிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : நான் கேட்கப்பட்டிருந்த கேள்விக்குத் தகவல்களைத் தயாரித்தேன். கனம் அங்கத்தினர் இப்போது கேட்கும் கேள்விக்கு வேண்டிய தகவல்கள் என்னிடம் இல்லை.

SRI M. KALYANASUNDARAM : பப்ளிக் ஹெல்த் டிபார்ட்மெண்டில் இருக்கக்கூடிய ஹெல்த் ஆபீஸர்கள் ஸ்தானங்களுக்கு இந்த காலேஜில் படித்த மாணவர்கள் நியமிக்கப்படுவார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : I have said that it cannot be done; as rules stand at present, they cannot be appointed as District Medical Officers or District Health Officers.

SRI K. VINAYAKAM : Is the Hon. Minister aware of the fact that the former Minister for Health, Sri A. B. Shetty, while piloting the Bill for registration of these doctors assured this House that they would be appointed as House Surgeons in the Madras City Hospitals? If so, have the Government taken any action on this assurance?

THE HON. SRI M. A. MANICKAVELU : I think they undergo training as House Surgeons in certain Hospitals in the City of Madras.

SRI N. K. PALANISAMI : வருஷா வருஷம் ஏற்கெனவே இண்டெகிரேடெட் மெடிஸினுக்குப் பதிலாக அலோபதிக் மெடிகல் பிராக்டிஸை அதிகமாகச் சொல்லிக் கொடுத்துக்கொண்டு வருகிறார்கள். அப்படியிருக்கும்போது அலோபதிக் ஆஸ்பத்திரியில் அவர்களைச் சேர்க்க ஏன் சர்க்கார் மறுக்கிறார்கள் ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இப்போது இரண்டு அலோபதி ஒரு இந்தியன் என்று இருக்கிறது. முன்பை விட அதிகமாக இருக்கிறது. அநேக இடங்களில் இவர்களை ஏன் நியமிக்கக்கூடாது என்ற பிரச்னை இருக்கிறது. எம்.பி., பி.எஸ். போடவேண்டுமென்று விதிகள் வைத்திருக்கிறோம். எது வேண்டுமென்று பார்த்துத்தான் செய்யவேண்டும்.

SRI C. MUTHIAH PILLAI : பொதுவாக பிரைமரி ஹெல்த் ஸெண்டர்கள் அமைச்சர்களால் திறக்கப்பட்டும் டாக்டர்களில்லாமல் இருக்கிறது. அவைகளில் ஜி.ஸி.ஐ.எம்.-களைப் போட அரசாங்கம் உடனடியாக ஏற்பாடு செய்யுமா என்று கேட்கிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : இந்த பிரைமரி ஸெண்டர்களை நடத்துவதிலே வெளி நாட்டு உதவி இருக்கிறது. அவர்கள் இந்த மாதிரி ஜி.ஸி.ஐ.எம்.-களைப் போடுவதற்கு ஆட்சேபனை செய்கிறார்கள். மெடிகல் கவுன்ஸிலும் ஆட்சேபனை செய்கிறது. இந்த அரசாங்கம் இதைப்பற்றி யோசனை செய்துகொண்டிருக்கிறது.

[8th November 1957

SRI A. VEDARATHNAM PILLAI : பிரைமரி ஸெண்டர்களில் வேறு டாக்டர்கள் இல்லாமல் கம்பௌண்டர்கள் நடத்திவரும் ஆஸ்பத்திரிகளுக்கு இந்த டாக்டர்களைப் போடுவதில் என்ன தவறு இருக்கிறது ?

THE HON. SRI M. A. MANICKAVELU : கம்பௌண்டர்கள் நடத்துவது, பழைய பிரிஸ்கிருப்ஷனைப் பார்த்து மருந்து கொடுப்பதுதான். டாக்டர் வேலை செய்யமாட்டார்கள். வைத்தியர்கள் இல்லாத ஆஸ்பத்திரிகளில் இவர்களைப் போடுவதைப் பற்றி யோசனை செய்து வருகிறோம். பிற்பாடு பார்க்கவேண்டும்.

## STARRED QUESTIONS.

### *Official Language.*

* 111 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Chief Minister be pleased to state whether this Government was consulted by the Central Government during 1957, regarding the official language to be used and the place of Hindi in the Madras State?

THE HON. SRI C. SUBRAMANIAM : No, Sir.

SRI N. K. PALANISAMI : மொழிக் கமிஷன் ராஜ்யங்களுடைய சட்ட இலாகாவில் உள்ள ஸ்டாசுடரி ஆர்டர்கள் முதலியவைகள் ஹிந்தி மொழியிலேயே இருக்கவேண்டுமென்று சிபாரிசு செய்திருக்கிறார்களா ? இதை நம் சர்க்கார் ஏற்றுக் கொள்கிறார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : நான் இந்த அறிக்கையை சரியாகப் பார்க்கவில்லை. கனம் அங்கத்தினர் சொல்வது சரியா இல்லையா என்று எனக்குத் தெரியாது. இந்த மொழிக் கமிஷன் அறிக்கையைப் பரிசீலிக்க பார்லிமெண்டு கமிட்டி நியமிக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் பரிசீலனை செய்தபிறகு, அவர்கள் சிபாரிசு செய்வதைக் கேட்ட பிறகு உத்திரவு பிறக்கப்படவேண்டும். அதற்குப் பிறகுதான் அமுல் நடத்துவதெல்லாம் ஏற்படப்போகிறது.

9-10 a.m. SRI A. V. P. ASAITHAMBI : ஹிந்தியை பரிபூரணமாக தேசீய மொழியாக்கும் கால வரம்பை ஒத்திப்போடும்படி மத்திய அரசாங்கத்தை இந்த அரசாங்கம் வற்புறுத்துமா அல்லது ஏற்கெனவே வற்புறுத்தியிருக்கிறார்களா என்பதை அறிய விருபுகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : வற்புறுத்தி இருக்கிறோம். இன்னும் அவசியமானால் இன்னும் வற்புறுத்துவோம்.

SRI K. VINAYAKAM : Sir, are the Government aware of the fact that there is a large and considerable amount of opinion in South India for the retention of English as the official language for 20 or 25 years more?

MR. SPEAKER : The main qustion is about Hindi.

SRI K. VINAYAKAM : It is about official language, Sir.

THE HON. SRI C. SUBRAMANIAM : Yes, Sir. I have seen, particularly representations made to the Prime Minister by certain eminent persons here.

SRI S. B. ADITYAN : Sir, have this Government informed the Central Government that the offices of the Central Government located in Madras State should transact their business in Tamil and not in Hindi?



8th November 1957]

THE HON. SRI C. SUBRAMANIAM : No, Sir. That question does not arise. For, that question will arise only when the official language is changed over to Hindi. Whether it should be changed over to Hindi and when it should be so changed are all under consideration. If we now make a recommendation that Tamil should be used in this State, it would mean we agree to their transaction of business in Hindi in other places.

SRI A. VEDARATNAM PILLAI : இந்தியாவிலுள்ள மற்ற எல்லா ராஜயங்களிலும் ஹிந்தியை தங்களுடைய தேசீய மொழியாகத்தான் இருக்க வேண்டும் என்று அதை ஏற்றுக்கொண்டு அதை கட்டாயப் பாடமாக ஆக்கி இருக்கும்போது நம்முடைய சென்னை மாத்திரம் தனித்து நின்று இருந்தால் நமக்கு மத்திய அரசாங்கத்தினிடம் செல்வாக்குக் குறைந்து விடும் என்றும் அதனால் பல கஷ்டங்களுக்கு நாம் உள்ளாக வேண்டியதாக இருக்கும் என்பதை இந்த அரசாங்கம் உணர்ந்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : எல்லா ராஜ்யங்களிலும் ஹந்தியை தேசீய மொழியாக ஏற்றுக்கொண்டுருப்பதாக எனக்குத தகவல் இல்லை. அது மிகவும் சிக்கலான பிரச்னை என்று பலர் நினைக்கிறார்கள். ஆகவே இதில் விருப்பு வெறுப்பு இல்லாமல் யோசனை செய்து ஒரு முடிவுக்கு வரவேண்டியதாக இருக்கிறது என்பதை வலியுறுத்த விரும்புகிறேன்.

SRI M. P. SUBRAMANIAM : ஹிந்தியை ஆட்சி மொழியாக்குவது பற்றி பெரிய கருத்து மாறுபாடுகள் இருக்கின்றன. ஆகவே அதை உத்தேசித்து இந்தப் பிராந்தியத்திலுள்ள சகல கட்சி தலைவர்களையும் மற்ற சமூக தலைவர்களையும் கூப்பிட்டு ஒரு இறுதியான முடிவுக்கு உடனடியாக வருவதற்கு இந்த அரசாங்கம் ஒரு ஏற்பாடு செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : அதைப்பற்றி என்ன செய்ய வேண்டும் எது செய்ய வேண்டும் என்பதைப்பற்றி என்னுடைய யோசனையை முன்பே கூறியிருக்கிறேன். கூடிய சீக்கிரத்தில் இங்கே சட்டசபையிலுள்ள தலைவர்களை கூப்பிட்டு ஆலோசனை செய்து அதற்குமேல் என்ன செய்யலாம் என்பதைப் பற்றி யோசனை செய்யவேண்டும் என்று யோசித்துக்கொண்டிருக்கிறோம்.

### *Sri Ranganathaswami Devasthanam, Srirangam.*

* 112 *Q.*—SRI S. B. ADITYAN : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the number of persons employed under different categories in the office of Sri Ranganathaswami Devasthanam at Srirangam;

(*b*) their scales of pay; and

(*c*) the total income of the Devasthanam for the year 1956–57?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) to (*c*) The particulars have been called for from the Commissioner, Hindu Religious and Charitable Endowments and his report is awaited.

SRI S. B. ADITYAN : Sir, is there any proposal to make the pay scales of the servants of this and other temples equal to the pay scales of servants of the State Government?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I do not think there is any such proposal.

[8th November 1957

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : Sir, this question has not been answered. I want to know whether it would be answered after information is received from the Commissioner?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I thought of furnishing the particulars when received, to the hon. Member (Sri Adityan). If it is the desire, I shall place it on the table of the House.

*Appointment of Stock-verifiers.*

* 113 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Finance be pleased to state whether the Government have considered the suggestion made by the Public Accounts Committee for introducing a separate squad of stock-verifiers under the control of Finance Department for the verification of stores held by the various departments?

THE HON. SRI C. SUBRAMANIAM : The suggestion is under active consideration.

*Cultivable waste lands in Coimbatore district.*

* 114 *Q.*—SRI P. G. MANICKAM : Will the Hon. the Minister for Revenue be pleased to state the extent of cultivable waste lands in Coimbatore district, talukwar ?

THE HON. SRI M. A. MANICKAVELU : The extent of waste lands available for assignment in the Coimbatore district is as follows :—

| *Taluk.* | *Extent.* ACS. |
|---|---|
| (1) Avanashi .. .. .. .. | 1,828 |
| (2) Bhavani .. .. .. .. | 9,086 |
| (3) Coimbatore .. .. .. | 48 |
| (4) Dharapuram .. .. .. | 632 |
| (5) Erode .. .. .. .. | 235 |
| (6) Gobichettipalayam .. .. | 26,165 |
| (7) Pollachi .. .. .. .. | 891 |
| (8) Palladam .. .. .. .. | 616 |
| (9) Udumalpet .. .. .. | 869 |

SRI P. G. MANICKAM : சாகுபடிக்கு லாயக்குள்ளதாக இருக்கக்கூடிய நிலங்களை விலைமதிக்கக்கூடிய நிலங்களாக சர்க்கார் கருதாமல் அவைகளை ஏழை விவசாயிகளுக்கும் ஹரிஜனங்களுக்கும் இலவசமாகக் கொடுத்து அதற்கு பட்டா செய்துகொடுக்க முயற்சிப்பார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : அதைப்பற்றி முயற்சி எடுத்துக்கொண்டுதான் வருகிறோம்.

SRI N. K. PALANISAMI : கோபி தாலூகா சத்தியமங்கலத்தில் 60 ஆயிரம் எக்கர் நிலம் ரிசர்வ் பாரஸ்டுடன் புறம்போக்கு நிலமாக இருக்கிறது. முட்டாணம் என்ற இடத்தில் 4,500 எக்கர் பூமி இருக்கிறது. அவைகளை ஹரிஜனங்களுக்கு பிரித்து கொடுக்க சர்க்காரிடம் யோசனை இருக்கிறதா ?



8th November 1957]

THE HON. SRI M. A. MANICKAVELU : ரிசர்வ் பாரஸ்ட்டில் இருப்பதைத் தவிர மற்றதைக் கொடுக்க ஆட்சேபணை இல்லை. கொடுப்பதற்கு நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டு தான் வருகிறோம். கனம் அங்கத்தினருக்குக்கூட தெரியும் சமீபத்தில் சேலத்தில் பல ஆயிரம் ஏக்கர் நிலம் கொடுத்திருப்பது.

SRI M. JAGANNATHAN : கோயம்புத்தூர் ஜில்லாவிலுள்ள விவசாயத்திற்கு லாயக்குள்ள நிலங்களையெல்லாம் அங்குள்ள ஏழை மக்களுக்கும் ஹரிஜனங்களுக்கும் விநியோகம் செய்ய சர்க்கார் முயற்சி எடுத்துக்கொண்டிருப்பதாக கனம் அமைச்சர் சொன்னார். அந்த முயற்சி எவ்வளவு தூரம் பயன் அளித்தது என்பதை அரசாங்கம் தெரிவிக்குமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இதற்கு தனி கேள்வி போட்டால் புள்ளி விவரங்களை தயாரித்துச் சொல்லுகிறேன்.

SRI M. K. SOMASUNDARAM : எவ்வளவு காலத்திற்குள் நிலங்களைப் பிரித்து ஹரிஜனங்களுக்கு பட்டா செய்து கொடுக்கப்படும்என்பதை தெரிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : ஹரிஜனங்களுக்கு மாத்திரம் அல்ல நிலம் இல்லாத எல்லா ஏழைகளுக்கும் நான் கொடுக்கப்படும். எவ்வளவு காலம் ஆகும் என்று திட்டமாகச சொல்ல முடியாது. எவ்வளவு சீக்கிரத்தில் செய்யமுடியுமோ அவ்வளவு சீக்கிரத்தில் அதைச் செய்ய முடியும்.

SRI S. LAZAR : Sir, will anybody be benefited if these lands are assigned to them?

THE HON. SRI M. A. MANICKAVELU : It depends upon the person and the mentality of the person who gets them.

SRI P. G. MANICKAM : விவசாயத்திற்கு லாயக்கான தரிசு நிலங்களை அங்குள்ள ஏழை மக்களும் ஹரிஜனங்களும் உழுது வருகிறார்கள். அந்த நிலங்களை அவர்களுக்கே பட்டாசெய்து கொடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கையை இந்த அரசாங்கம் தீவிரமாக எடுத்துக்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : இம்மாதிரியான நிலங்களைத் தான் சிவோஜிமா கல்ட்டிவேஷன் என்று சொல்வது. அப்படிக் கொடுக்கத் தான் ஏற்பாடு செய்து கொண்டு வரப்படுகிறது.

*Rest-houses and sanatoria for workers.*

* 115 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether any representation was made on 17th July 1957 by the Tamil Nad Trade Union Congress to build rest-houses and sanatoria at places like Coonoor, Kodaikanal and Mahabalipuram to enable the workers to enjoy rest during convalescent period and to spend the leave taken for the purpose of recouping their health; and

(*b*) if so, the action taken thereon?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Yes, Sir.

(*b*) Government examined the suggestions and found them impracticable for the present.

[8th November 1957

## *Manimuthar Dam.*

* 116 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Public Works be pleased to state the area in acres to be irrigated in Nanguneri taluk of Tirunelveli district from the Manimuthar Dam?

THE HON. SRI P. KAKKAN : About 10,500 acres.

SRI N. K. PALANISAMI : நாங்குநேரி தாலூகாவில் அப்படி பாசன வசதி கொடுத்தது பத்தாயிரம் ஏக்கர் நிலம் நஞ்சை சாகுபடிக்கு என்று நினைக்கிறேன். அப்படி பூராவையும் நஞ்சைக்கு ஒதுக்காமல் புஞ்சைக்கு ஒதுக்கினால்—அதற்கு அங்கு சாத்தியக்கூறுகள் இருப்பதால்—அந்த தாலூகா பூராவையும் பயிரிடமுடியும் அல்லவா ? அதற்கான யோசனைச் செய்வார்களா ?

THE HON. SRI P. KAKKAN : அந்த திட்டத்தை வகுக்கும் போது அதை எப்படி மாற்றலாம் என்று தான் திட்டம் வகுக்கப்பட்டது. அந்த முறையில் தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதை இப்பொழுது மாற்றமுடியாது.

SRI S. B. ADITYAN : இது வரையிலும் நாங்குநேரி தாலூகாவிற்கு தண்ணீர் திறந்து விடப்படவில்லை என்பது கனம் மந்திரிக்குத் தெரியுமா ? தண்ணீர் திறந்து விடப்படவேண்டும் என்றால் 80 அடித் தண்ணீர் வந்தபிறகுதான் தண்ணீர் விடப்படும் என்று சொல்லப்பட்டது. தாம்பரபரணியில் தண்ணீர் விடப்பட்டு வருவதால் ஒரு நாளும் 80 அடி தண்ணீர் வராது, தண்ணீரும் விடப்படமாட்டாது என்பது கனம் மந்திரி அவர்களுக்குத் தெரியுமா ?

THE HON. SRI P. KAKKAN : தண்ணீர் இருந்தால் தான் தண்ணீர் விடப்படும் என்று சொல்லப்பட்டது. தண்ணீர் இல்லாவிட்டால் தண்ணீர் விடப்படும் என்று ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

SRI M. S. SELVARAJAN : உத்தேச மணிமுத்தார் திட்டப்படி தாம்பரபரணி பாசனத்திலுள்ள 80 ஆயிரம் ஏக்கருக்கு தண்ணீர் சப்ளை செய்த பிறகு தான் மற்றவைகளுக்கு தண்ணீர் சப்ளை செய்யப்படும் என்பதுதானே சர்க்காருடைய கருத்து என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI P. KAKKAN : ஏற்கெனவே தண்ணீர் போய்க் கொண்டிருக்கக்கூடிய 79 ஆயிரம் ஏக்கருக்கு தண்ணீர் பாய்ந்த பிறகுதான் பாக்கி 17 ஆயிரம் ஏக்கருக்கு தண்ணீர் விட வேண்டும் என்ற ஏற்பாடு. அதில் புதியதாக புஞ்சையிலிருந்து நஞ்சையாக்கப்பட்டது மூவாயிரம் ஏக்கர். இவைகளுக்கு விட்டபிறகு மற்றவைகளுக்கு விடுவதாக உத்தேசம்.

## *State Electricity Board.*

* 117 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Electricity be pleased to State—

(*a*) the functions of the State Electricity Board constituted in the State recently under the Electricity (Supply) Act, 1948 (Central Act LIV of 1948);

(*b*) the nature of Government control over it.

(*c*) the authority competent to effect purchases of spare parts and other machinery required for the Electricity department; and

(*d*) the extent of Government responsibility in these matters?



8th November 1957]

THE HON. SRI V. RAMIAH : (*a*) The main function of the Madras State Electricity Board will be the promotion of the co-ordinated development of the generation, supply and distribution of electricity within the State in the most efficient and economical manner with particular reference to such development in areas not for the time being served or adequately served by any licensee.

(*b*) The State Government have overall policy control over the Electricity Board.

(*c*) The Madras State Electricity Board and the Officers authorized in this behalf by the Board.

(*d*) Nil.

SRI K. SATTANATHA KARAYALAR : கன்யாகுமரி வட்டாரத்திலும், செங்கோட்டை வட்டாரத்திலும் ஏற்கெனவே இருக்கக்கூடிய மின்சார விநியோக முறையைச் சர்க்கார் ஏற்றெடுப்பது என்ன நிலையில் இருக்கிறது ?

THE HON. SRI V. RAMAIAH : I want a separate question for that.

SRI S. PAKKIRISAMI PILLAI : மின்சார போர்டு அமைத்த பிற்பாடு மின்சார கம்பெனியில் வேலை செய்யும் நிர்வாகிகள் தங்களுடைய பொறுப்பை அந்தப் போர்டின் மேல் சாட்டிவிட்டு, பொறுப்பற்றவர்களாக இப்பொழுது இருந்துகொண்டிருக்கிறார்கள். அடிக்கடி சென்னையிலே மின்சார சப்ளை மிகவும் மோசமாக ஆய்விட்டிருக்கிறது, இரவு நேரங்களிலே அடிக்கடி நின்று விடுகிறது என்பது மந்திரியாருக்குத் தெரியுமா ? அதன் பேரில் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் ?

THE HON. SRI V. RAMAIAH : சென்னையிலே மின்சாரக் கம்பெனி இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. மின்சார போர்டு அமைத்ததன் முக்கிய நோக்கம் வேலை திறம்பட, நல்ல முறையில் நடைபெறவேண்டும் என்பதற்காகத் தான். தனிப்பட்ட "கம்ப்ளெயிண்ட்" இருந்தால் போர்டுக்கு நேரிடையாகவோ அல்லது என் மூலமாகவோ தெரிவிக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

MR. SPEAKER : I want to tell the House in this connexion that I have received replies to a number of questions about the Electricity Board from the Department. I will give one example of the reply that the Government have sent :

The question should not have been admitted in view of the instructions issued in the U.O. Note, as the points raised in the question are fully within the purview of the Electricity Board. The State Government have no jurisdiction in the matter. In the circumstances, the Legislative Assembly Department may be requested to request the Member to withdraw the question. In another place I have been asked to tell that the Government control over this Board is nil. The implication is that the question should not have been admitted, as the Government has no control over the Board and that therefore this House cannot ask a question on that. I shall examine the question and give my ruling to-morrow. I am fairly satisfied that, if this House has got the right to vote money, it has also got the right to ask questions. I differ from

[8th November 1957

the note put up by the Department. In view of the imputation contained in this reply, I think I should bring it to the notice of the Minister. Does the Minister want to make any statement now?

THE HON. SRI V. RAMAIAH : In reply to this particular question, I have made it clear that the State Government have overall policy control over the Electricity Board. The detailed working of the Board is not within our purview.

MR. SPEAKER : I shall give my ruling to-morrow. We shall leave it to the Government to see what they will do in the matter.

SRI S. B. ADITYAN : On a point of order, Sir.

MR. SPEAKER : Point of order on what I said?

SRI S. B. ADITYAN : On the communication received from the Board challenging the ruling given by the Speaker. A question of privilege also is involved in this matter.

MR. SPEAKER : If, after the Speaker gives a ruling, anybody challenges that ruling, then it becomes a matter of privilege. I shall give my ruling to-morrow. If that is challenged, then it is open to Mr. Adityan to raise the question of privilege.

*Amendments to the Hindu Religious and Charitable Endowments Act, 1951.*

* 118 *Q.*—SRI A. R. SUBBIAH MUDALIAR : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether there is any proposal to amend the existing Hindu Religious and Charitable Endowments Act, 1951; and

(*b*) if so, when the necessary legislation will be introduced in the Assembly?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes, Sir.

(*b*) The comprehensive draft amendments to the Hindu Religious and Charitable Endowments Act, 1951 are being finalised in consultation with the Commissioner, Hindu Religious and Charitable Endowments (Administration) Department. It is hoped to push through the legislation during the next session of the Legislature.

SRI K. VINAYAKAM : Many temples in the City of Madras own plenty of house-sites. At the present moment, they are governed by the Rent Control Act. Will the Government think of the feasibility of bringing in suitable legislation covering house-sites owned by the temples so that the tenants may be given a long lease or the right to purchase from the temple authorities?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : If the hon. Member will put before me a specific proposal, I shall have it examined.



8th November 1957]

SRI A. R. SUBBIAH MUDALIAR : மடம், கோயில் இவைகளில் "ஸர்ப்ளஸ் பண்டு" இருப்பதால் அதை கல்வி ஸ்தாபனங்களுக்கோ நண்பகல் உணவுக்கோ உதவி செய்வதற்கு சர்க்கார் அந்தச் சட்டத்தில் ஏதாவது திருத்தம் கொண்டுவர உத்தேசித்திருக்கிறதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : சட்டத்திலே உள்ள பல பிரிவுகளைத் திருத்துவதற்கு சீக்கிரத்திலே ஒரு மசோதா வரும் என்று சொன்னேன். அந்த மசோதா இந்தச் சபைமுன் விவாதத்திற்கு வரும் போது, இந்த விஷயத்தைப்பற்றியும் அப்பொழுது பேசலாம். அரசாங்கத்தினுடைய கருத்தையும் அப்பொழுது தெரிவிக்கக் கூடும்.

(கனம் அங்கத்தினர் ஸ்ரீ என். கே. பழனிசாமி எழுந்தார்.)

MR. SPEAKER : கனம் அமைச்சர் அவர்கள், "மசோதா கொண்டு வரப் போகிறோம், அந்த நேரத்தில் கேட்கலாம்" என்று சொன்னார்கள். ஆகவே, என்ன கேள்வி கேட்கப் போகிறீர்கள் ? அடுத்த கேள்விக்குப் போகலாம்.

*Rural water-supply schemes.*

* 119 *Q.*—SRI P. G. MANICKAM : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) the amount allotted for rural water-supply schemes in the Coimbatore district in 1956–57 and 1957–58;

(*b*) the amount spent in 1956–57 and 1957–58 so far; and

(*c*) the number of schemes to be taken up during 1957–58?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) Rs. 3·75 lakhs and Rs. 4 lakhs respectively.

(*b*) Rs. 3·06 lakhs in 1956–57 and Rs. 25,549 from 1st April 1957 to 31st August 1957.

(*c*) 388.

SRI P. G. MANICKAM : சபாநாயகர் அவர்களே, குடி தண்ணீர் சப்ளை செய்யப்படவேண்டுமென்று அனுப்பப்பட்ட விண்ணப்பங்களில் எத்தனை விண்ணப்பங்களை சர்க்கார் அங்கீகரித்தார்கள், என்ன வேலை செய்யப்படுகிறது என்ற விவரத்தை ஜில்லா ப்ளானிங் போர்டு கூட்டத்திலும், அபிவிருத்திக் கமிட்டிக் கூட்டத்திலும் அறிவிப்பதற்காக சர்க்கார் ஒரு உத்தரவு வெளியிடுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : விஸ்தாரமான தகவல்கள் இப்பொழுது சொல்வதற்கில்லை. 1956–57-ம் ஆண்டில் கிராமப்புறக் குடி தண்ணீர்த் திட்டங்களுக்காக கோயமுத்தூர் ஜில்லாவிற்கு ஒதுக்கப்பட்ட தொகை 3·75 லட்ச ரூபாய் என்றும், அதே ஆண்டில் செலவழிக்கப்பட்ட தொகை ரூ. 3·06 லட்சம் என்றும் நான் சற்று முன்னால் தெரிவித்தேன். இந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் வரைக்கும் ரூ. 25,549 செலவாயிருக்கிறது. மற்ற மாதங்களில் வேலை அதிகப்படியாக நடந்து, இந்த ஆண்டு அனேகமாக அந்தத் தொகை பூராவும் செலவழிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

SRI P. G. MANICKAM : என்னுடைய கேள்வியிலே நான் குறிப்பிட்டது இப்படிப்பட்ட விண்ணப்பங்களிலே எத்தனை வேலைகள் நடைபெற்றிருக்கின்றன ? எடுத்துக்கொண்ட விண்ணப்பங்கள் எத்தனை ? அதற்காக நடைபெறும் முறைகளை ஜில்லா ப்ளானிங் போர்டு கூட்டத்திலும், அபிவிருத்திக் கமிட்டிக் கூட்டத்திலும் தெரிவிக்கும்படியாக சர்க்கார் ஒரு உத்தரவு இடுவார்களா என்று கேட்டிருந்தேன். அதற்கு கவர்ன்மெண்டார் என்ன பதில் சொல்கிறார்கள் ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இந்த ஆண்டிலே 388 திட்டங்கள் எடுத்துக்கொள்ளப்படும். இதையெல்லாம் அந்தப் ப்ளானிங் கமிட்டியிலே அவர்கள் சர்ச்சை செய்கின்றார்கள். ஆகையால், கனம் அங்கத்தினர் என்ன கேட்கிறார் என்பது எனக்கு நன்றாக, சரியாகப் புரியவில்லை.

SRI A. V. P. ASAITHAMBI : எண்ணற்ற கிராமங்களில் குடி தண்ணீர் வசதி இல்லாத நிலைமை இருப்பதை நீக்குவதற்கு தாலூகாவாரியாக எந்த எந்த கிராமங்களில் கிணறுகள் இல்லை என்று சர்வே எடுத்து, உருப்படியான திட்டம் போட்டு, உடனடியாகக் கிணறுகள் வெட்டுவதற்கு அரசாங்கம் முன் வருமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : கனம் அங்கத்தினர் புதுக் கேள்வி கேட்கிறார். இருந்தாலும் பதில் சொல்கிறேன். பொதுவாக, இம்மாதிரி குடி தண்ணீர் வசதிக்காக இரண்டு மூன்று திட்டங்கள் இருக்கின்றன. ரூரல் வாட்டர் சப்ளை ஸ்கீம், நேஷனல் வாட்டர் சப்ளை ஸ்கீம், லோகல் டெவலப்மெண்ட் ஒர்க்ஸ், இந்த வகையிலே அனேக இடங்களில் கிணறுகள் வெட்டப்பட்டிருக்கின்றன. கனம் அங்கத்தினர் இராமனாதபுரம் ஜில்லாவை விட்டு மற்ற ஜில்லாக்களுக்குப் போயிருக்கிறாரோ என்னவோ, மற்ற இடங்களில் போய்ப் பார்த்தால் சின்னச் சின்ன கிராமங்களிலேயும் பாதுகாக்கப்பட்ட குடி தண்ணீருக்கு ஏராளமான வசதி செய்யப்பட்டிருப்பதைக் காணலாம்.

SRI N. R. THYAGARAJAN : தலைவர் அவர்களே, சானிடரி என்ஜினீர் (ரூரல் வாட்டர் சப்ளை) ஆபீசிலே சென்ற இரண்டு மூன்று வருஷங்களில் இத்தகைய குடி தண்ணீர் வசதித் திட்டங்கள் நூற்றுக்கணக்காக வந்திருந்தும், சின்னஞ் சிறு தவறுகளுக்காக மீண்டும் மீண்டும் திருப்பி அனுப்பப் பட்டு, ஆபீசிலேயே இருக்கிறது என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? சின்னத் தவறுகளை அவர்களே திருத்தி, அந்தத் திட்டங்களையெல்லாம் எடுத்து நிறைவேற்றுவதற்கு வேண்டிய முயற்சி செய்யவேண்டுமென்று அரசாங்கம் உத்தரவிடுவார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இத்தனை திட்டங்களைப் பரிசீலனை செய்யும்போது சில திட்டங்கள் ஆபீசிலேயே தான் இருக்கும். கொஞ்சங் கொஞ்சமாகத் தான் வரும். ஒரே தடவையாக ஆபீசைவிட்டு வர முடியாது.

SRI P. S. CHINNADURAI : கனம் சபாநாயகர் அவர்களே, உத்தேசிக்கப்பட்டிருக்கிற திட்டங்களிலே தொழிலாளர் பிராந்தியங்களிலே குடி தண்ணீர் வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று திட்டங்களும் சேர்ந்திருக்கின்றனவா ? தொழிலாளர் பிராந்தியங்களின் முக்கியத்தை உத்தேசித்து அந்தப் பிராந்தியங்களின் திட்டங்களுக்கு முதலிடம் கொடுப்பதற்கு அரசாங்கம் முன்வருமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இம்மாதிரி குடி தண்ணீர் வசதி செய்வதிலே தொழிலாளர் பிராந்தியங்களும் உட்பட்டுத்தான் வரும். தனியாக அவர்களுக்குச் சலுகை காட்டவேண்டுமென்றால், அந்தந்த பாக்டரி முதலாளிகள் ஏதோ செய்வதாகவும் எனக்குத் தெரிகிறது.

SRI K. B. S. MANI : இந்த குடித்தண்ணீர் திட்டம் இல்லாததினால் அதிகமாக பாதிக்கப்படக்கூடிய கடற்கரை ஓரங்களில் இருக்கும் மீன் பிடிப்பவர்களுக்கு புதிதாக ஏதாவது ஒரு திட்டம் அமுல் நடத்தி, அதற்கு முக்கியத்துவம், முதல் இடம் கொடுக்க சர்க்கார் முன்வருமா ? அப்படிச் செய்திருந்தால் அதற்காக என்ன செய்திருக்கிறார்கள் ?

THE HON. SRI M. A. MANICKAVELU : கடலோரத்தில் இருப்பவர்களுக்கு தனியாக திட்டம் இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால் ஆற்று ஓரத்தில் வசிப்பவர்களுக்கு ஒரு திட்டம் இருக்கிறது. ஏனென்றால் ஆற்று ஓரத்தில் வசிக்கும் கிராம மக்கள் காலரா போன்ற தொத்து வியாதியால் பாதிக்கப்படுகிறார்கள், அந்தப் பகுதியிலே தொத்து வியாதி அதிகமாக





பரவுகிறது. அதற்காக மத்திய அரசாங்கம் அதிகப் பணம் கொடுத்து குடி தண்ணீர் திட்டத்தை துரிதமாகச் செய்யவேண்டுமென்று ஒரு திட்டம் இருக்கிறது.

SRI K. P. PALANISAMI : குடித்தண்ணீர் திட்டம் இல்லாததால் அதிகமாக பாதிக்கப்படும் ஹரிஜனங்கள் வசிக்கும் இடத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து, குடிதண்ணீர் வசதி செய்து கொடுக்க சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : ஹரிஜனங்களுக்காக ஹரிஜனக் கிராமங்களிலே கிணறு வெட்டி குடித்தண்ணீர் வசதி செய்யப்பட்டு வருகிறது.

SRI C. MUTHIAH PILLAI : " பியூரிடி ஸர்டிபிகேட் " வாங்குவதால் தான் அதிக தாமதம் ஏற்படுகின்றது என்பதை உணர்ந்து, கிராமப்புறங்களிலே ஸானிடரி இன்ஸ்பெக்டர் ஸர்டிபிகேட் கொடுத்து விட்டால் இம்மாதிரி அதிக தாமதம் ஏற்படாது என்று பலகாலமாக விண்ணப்பித்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. அதற்கு அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்குமா என்பதை ஆணித்தரமாகக் கேட்கிறேன். (சிரிப்பு.)

THE HON. SRI M. A. MANICKAVELU : நானும் ஆணித்தரமாக பதில் சொல்லுகிறேன் (சிரிப்பு). குடித்தண்ணீர் பரிசுத்தமாக இருக்க வேண்டுமென்பதற்காக கிண்டிக்கு அனுப்பி பரிசீலனை செய்து பார்த்து அங்கீகரிப்பதுதான் நல்லது என்பதை தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

*Industrial Housing Scheme.*

*120 *Q*.—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the amount allotted by the Centre for the Industrial Housing Scheme for the current year; and

(*b*) how it is proposed to be spent?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Rs. 16·50 lakhs.

(*b*) The amount will be spent on the schemes for the construction of tenements at Vellanur in Tiruchirappalli district, Sivakasi in Ramanathapuram district and Peelamedu in Coimbatore district. A number of other schemes are under the consideration of the Government and may be taken up for implementation during the current year.

SRI M. KALYANASUNDARAM : இந்த மான்யத் தொகையின் மூலம் கட்டப்படும் வீடுகள் முதலாளிகளுக்குச் சொந்தமா ? அல்லது தொழிலாளிகளுக்குச் சொந்தமா?

THE HON. SRI R. VENKATARAMAN : இவைகளெல்லாம் சர்க்காருக்குச் சொந்தமாக இருக்கும்.

SRI N. K. PALANISAMI : இதற்கு ஏற்கனவே மில் முதலாளி ஒரு பகுதி கொடுக்கவேண்டும், தொழிலாளி ஒரு பகுதி கொடுக்க வேண்டுமென்று இருக்கிறது. தொழிலாளி முன்பணமாக அந்தப் பணத்தைக் கொடுத்தால் அவர்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுப்பதற்கு சர்க்கார் உதவி புரிவார்களா ?

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, this a subsidized industrial scheme wherein the employers donate some land. The Government themselves build these tenements. So, there is no question of contribution by parties.

[8th November 1957

SRI S. LAZAR : வெள்ளனூர் திட்டத்தைப் பற்றி மந்திரி அறிவித்தார்கள். அந்த வீடுகள் எந்தத் தொழிலாளர்களுக்கு கட்டப்பட்டது என்பதைத் தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : அங்கு ஒரு சர்க்கரை தொழிற்சாலை வைத்திருக்கிறார்கள். அந்தத் தொழிலாளர்களுக்காக இவைகள் கட்டப்பட்டன.

SRI A. GOVINDASAMY : இந்தத் திட்டத்தின் கீழ் நெல்லிக்குப்பம் ஆலையிலே வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : நெல்லிக்குப்பம் ஆலை முதலாளிகள் நிலம் கொடுப்பதற்கு முன்வரவில்லை. அதனால் இந்தத் திட்டம் இங்கே அமுல் நடக்கவில்லை.

MR. SPEAKER : Questions are over.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

## II.—ANNOUNCEMENT BY THE HON. SPEAKER *RE*.

### QUOTATION FROM THE BOOK ' MR. SPEAKER, SIR ' BY C. CAWTHORNE.

MR. SPEAKER : The other day the hon. Member Sri K. Vinayakam, for whom I have the greatest respect, quoted the example of Sir Winston Churchill asking a question of 270 words. I have the greatest respect for Winston Churchill too. I would like to read the extract from the book ' MR. SPEAKER, SIR ' by C. Cawthorne which, I believe, the hon. Member has quoted from. This question was not put during question time. The extract is this :

" As well as being a master of the prepared phrase, he is a master of the art of framing an extempore sentence, which he found, in Opposition, a very useful accomplishment at that moment in the day at the end of questions when Ministers make statements. This is the time when Winston himself announced the German surrender; when the Fuel Minister announced the import of coal for the first time. The rule is that subsequent discussion must be by way of question and answer. Speeches are ruled out. Mr. Churchill is the only living person who can frame a sentence of two hundred words! He would rise and begin, ' May I ask the Minister . . .' and then would follow a brilliantly phrased, though quite unpremeditated, ' question ' which somehow embodied Winston's personal views on the step which had been announced, his party's views, his views on the Minister announcing it, on the wretched nature of the Government itself—and anything else which he saw fit to include.

His opponents invariably grew restive as the question grew longer and longer—but Winston would beam at them and say, ' I couch all this, of course, in the *Interrogatory* vein ! ' and go merrily on his way.



8th November 1957] [Mr. Speaker]

Once without thinking, he began a comment on a Government statement with the words ' I am very pleased . . .' Then he remembered the rules. With a chuckle, he stopped and began again amid a gale of laughter, ' Am I not very pleased . . .? ' "

## III.—GOVERNMENT BILL.

### THE MADRAS VILLAGE PANCHAYATS (AMENDMENT) BILL, 1957.

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, (1957-ம் ஆண்டு 16-ம் நம்பர் உள்ள சட்ட சபை மசோதாவாகிய) சென்னை 1957-ம் வருஷத்திய கிராமப் பஞ்சாயத்துகள் (திருத்த) மசோதாவைப் பற்றிய ஆய்வுக் கமிட்டி அறிக்கை[*] யைச் சமர்ப்பிக்கிறேன்.

## IV.—GOVERNMENT MOTION.

### REPORT OF THE LEGISLATURE COMMITTEE ON THE WHITE PAPER ON EDUCATION—*cont*.

MR. SPEAKER : To-day we have got four hours for discussion. I am told the Hon. the Leader of the House will require one and a half hours for his reply. The Hon. the Leader of the Opposition wants half an hour. If he is satisfied with twenty minutes, I shall be the happiest person. I propose to give twenty minutes to the Leader of the Communist Party and twenty minutes either to the Leader or the Deputy Leader of the D.M.K. Party, and ten minutes each to the Socialist and Praja Socialist Parties. This means I will have one hour to allot to other Members. I am compelled to allot only five minutes to each Member. I hope hon. Members will co-operate with me. If only six Members wish to speak, then I can give ten minutes to each. Otherwise only five minutes can be given to each Member. The discussion has been going on for two days and there may be repetition. I hope hon. Members will be satisfied with five minutes.

Sri A. Nesamony will now speak.

* SRI A. NESAMONY : Mr. Speaker, Sir, this White Paper 9-36 a.m.
on Education that has been presented to us is a very valuable document both from the point of the issues that have been raised in the report and from the point of the information that has been supplied to us to appreciate the issues that are involved in the settlement of the educational policy of the State. I come from an area where compulsory and free education has been in vogue for a pretty long time with a shift system. It was long before we attained Independence that this system was introduced in Travancore by one of our eminent Dewans. This went on right till we came up to the fifth standard, when it was discovered that the content and quality of the instruction that was imparted was far below the standard and so it was resolved on public agitation that the shift system in the fifth standard must be given up. We are continuing to agitate that the shift system must be scrapped altogether, because it does not serve

[*] Printed as Appendix on pages 525–532 infra.

[Sri A. Nesamony] [8th November 1957

the purpose for which it was intended. There has been a lot of wastage and stagnation at every stage. In the White Paper the pupil-teacher ratio is fixed as 1 to 40. I may point out that there are classes where the pupil-teacher ratio is 1 to 68. There are classes for which there are no teachers at the present moment. Nobody has paid any attention to this to see that teachers are appointed to these classes. The administration has become so unwieldy that the department that is supposed to be in charge of this area does not find time perhaps to look into all these things, inspect the schools and see how they work. Now that the shift system is not to be introduced according to the White Paper in the rest of the Madras State I hope in the near future the existing shift system in the Kanyakumari district will be abolished and the pupil-teacher ratio of 1 to 40 will be introduced very soon.

This, I know would involve additional expenditure because more teachers will have to be sanctioned to the existing schools. But I believe that with the public co-operation these difficulties could be surmounted. In this connection I may say that when the Primary Education Act was passed in the Travancore-Cochin State, the first thing that was done to finance it was the introduction of a basic tax. That tax has been enhanced from time to time and it is now three pies per cent. The Kerala Government have converted it into 2 nP. I wonder whether this Government could try to introduce that system of basic tax to augment the resources and get over the financial implication involved in the implementation of the scheme. In addition to this they have the agricultural income-tax and the super-tax. These might perhaps be advantageously adopted in this State also to find the wherewithal for subsidising this scheme.

Sir, we are now trying to engender in the children a respect for human personality. But the system that obtains at the present moment does not engender that respect for human personality. The Headmaster and the teachers who are looked upon as their 'Guru' are made to look like and behave like bond salves before the inspecting officers. The respect due to them is not given to them by the inspecting officers. I say that is so not only in the Education Department but in other departments also. The superior officers seems still to think that they form part of the bureaucratic steel frame. Even after the dawn of independence, they do not think they are the servants of the people. Unless that kind of mentality, the mentality that they are servants of the people, comes over the inspectorate and the inspecting departments, I believe our main objective of engendering respect for human personality in our children would be lost sight of.

Now, Sir, we are thinking of bifurcating the different courses of studies at the secondary school stage. Just before integration the schools at Marthandam and Nagercoil had bifurcated courses of studies one with the agricutural bias and the other with engineering bias. The equipment bought by the Nagercoil school is rotting in the stores because the Government have not made necessary arrangements for imparting the bifurcated course of instruction in



8th November 1957] [Sri A. Nesamony]

the school. Now that the diversified courses are to be introduced according to the White Paper, I believe opportunities will be available for the starting of these courses in those institutions.

In this connexion I should like to refer to one important point. Whether the students who have been turned out of such institutions can find employment in the State and whether the courses are related to the employment potential in the State, these matters do not seem to have attracted the attention of the framers of the scheme or the advisers who framed the report. This aspect should also be considered when final recommendations are made on the report.

Thank you, Sir.

* SRI M. ALAGIRISAMY : கனம் சபாநாயகர் அவர்களே, பொதுவாக சர்க்கார் சமர்ப்பித்திருக்கிற வெள்ளை அறிக்கையை ஆதரிக்கும் முறையிலே ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். பொதுவாக நாட்டிலே இருக்கக் கூடிய கல்வி முறையைப்பற்றி நாம் பேசும் போது நாட்டிலே உள்ள ஆரம்பக் கல்வி, உயர் நிலைக் கல்வி, கல்லூரிக் கல்வி முறைகள் சேர்ந்தார்போல் பார்த்தால்தான் சரியான முடிவிற்கு வருவதற்கு சாதகமாக இருக்கும் என்று நினைக்கிறேன். இந்த மூன்று வித கல்வி முறையைப் பார்த்தாலே, முதலிடம் கல்லூரி படிப்பிற்கும், இரண்டாவது இடம் உயர்நிலைப் பள்ளிக்கும், மூன்ருவது இடம் ஆரம்பக் கல்விக்கும் கொடுக்கப்படுகிறது. இந்தக் கல்லூரி படிப்பு சம்பந்தப்பட்ட மட்டில், யூனிவர்சிடி கட்டடங்கள் இவ்வாறு இருக்க வேண்டும், அங்கு இருக்கும் - புரபசர்கள் க்வாலிபிகேஷன் இவ்வாறு இருக்க வேண்டும் என்பதைப்பற்றி நிபந்தனை இருக்கிறது. இரண்டாவதாக உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களின் சம்பளம் எந்த அளவில் இருக்க வேண்டும் என்ற நிபந்தனைகள் வகுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் இந்த ஆரம்பக் கல்வி மூன்ருவது இடம் பெற்றிருக்கிறது. சில இடங்களில் என் பெரும்பாலான இடங்களில் இந்த ஆரம்பக் கல்வி பள்ளிக்கூடங்களுக்கு போதுமான பாதுகாப்பு அளிக்கப்படாமல் நல்ல நிலைமையில் இல்லை. கட்டடங்கள் கூட மிகவும் மோசமான நிலைமையில் இருக்கிறது. முதலிடம் இந்த ஆரம்பக் கல்விக்குத்தான் கொடுக்க வேண்டும். இரண்டாவது இடம் உயர் நிலைப் பள்ளிகளுக்குக் கொடுக்க வேண்டும். மூன்ருவது இடம் யூனிவர்சிடி கல்விக்குக் கொடுக்க வேண்டும். 9–58 a.m.

நம்முடைய நாட்டில் இந்த கல்வி முறையானது மிகவும் பிற்போக்கான நிலைமையில் இருக்கிறது. நமது நாட்டில் ஏராளமான கிராமங்கள் இருக்கின்றன. பொதுவாக கிராமங்களில் மிகவும் மோசமான நிலைமை இருக்கிறது.

அடுத்தபடியாக இந்த பியூபில்-டீச்சர் ரேஷியோ 40 பிள்ளைகளைக் கொண்ட ஒரு பள்ளிக்கு ஒரு வாத்தியார் இருக்க வேண்டியிருக்கிறது. இன்னும் 75 பிள்ளைகள் இருக்கக்கூடிய பள்ளிக்கும் ஒரு வாத்தியார்தான் இருப்பார். இதில் என்னுடைய கருத்து என்னவென்ருல் இந்த : பியூபில்-டீச்சர் ரேஷியோ இருப்பதற்குப் பதிலாக டீச்சர்-கிளாஸ் ரேஷியோதான் இருக்க வேண்டும் என்பது. உதாரணமாக 40 பிள்ளைகள் படிக்கக்கூடிய ஒரு ஆரம்பப் பள்ளியில் 5 வகுப்புகள் இருக்கலாம். இந்த வகுப்புக்களை கணக்கிட்டு 40 பிள்ளைகளுக்கு இரண்டு வாத்தியார்களையாவது போடலாம் என்று சொல்ல விரும்புகிறேன். குறைந்த பட்சம் 1 : $1\frac{1}{2}$ டீச்சர் வகுப்பு ரேஷியோவில் இருக்க வேண்டும் என்பதுதான் என் கருத்து. இம்மாதிரி இருந்தால் ஆரம்பப் பள்ளிக்கூடங்கள் (ப்ராக்ரஸ்) முன்னேறும் என்று சொல்ல விரும்புகிறேன்.

நமது சட்ட மன்றத்தில் எடுத்திருக்கக்கூடிய முடிவை இந்த யூனிவர்சிடிக்காரர்கள் ஒப்புக்கொள்ளவில்லை. யூனிவர்சிடி [illegible] வைத்துக்கொண்டு அவர்கள் நிர்வாகத்தை நடத்திக்கொண்டுவருகிருர்கள்.

நாம் கல்லூரியில் தமிழை புகுத்த **வேண்டும் எ**ன்று சொல்வதை அவர்கள் எதிர்க்கிறார்கள். அந்த நிர்வாகஸ்தர்களின் போக்கைப் பார்க்கும்போது இந்த யூனிவர்சிடி ஆக்டை அமெண்ட் செய்தாலொழிய அவர்கள் செவி சாய்க்க மாட்டார்கள் என்பது என்னுடைய திடமான நம்பிக்கை.

9-50 a.m. யூனிவர்சிட்டிக்காரர்களுக்கு நான் ஒரு யோசனை சொல்லிக் கொள்வேன் இச்சந்தர்ப்பத்தில். எல்லா பாடங்களையும் தமிழில் சொல்லிக்கொடுப்பதற்கு முதல் படியாக சரித்திரத்தையும், எக்கனாமிக்ஸ், பொருளாதாரத்தையும் உடனடியாக தமிழில் போதிக்க வேண்டிய ஏற்பாடுகள் செய்ய வேண்டும் என்று அவர்களுக்கு என் யோசனையை சொல்லிக்கொள்கிறேன். அடுத்தபடியாக, உபாத்தியாயர்களை தயார் செய்யும் டிரெயினிங் ஸ்கூல் இருக்கிறதே, ஹையர் கிரேட் என்று வைத்திருக்கிறோமே, அதை உடனடியாக எடுத்து விட வேண்டும். 8-வது ஸ்டான்ட்டேர்ட் பாஸ் பண்ணுகிறவர்கள் ஹையர் கிரேடில் சேர வாய்ப்பு இருக்கிறது. அவர்களின் தரம் மிகக் கீழான நிலையில் இருக்கிறது. ஆகவே, குறைந்த பட்சம் எஸ்.எஸ்.எல்.ஸி. பாஸ் பண்ணியவர்களைதான் உபாத்தியாயர் டிரெயினிங்குக்கு லாயக்குள்ளவர்களாக நாம் செய்யவேண்டும். ஆகவே, ஹையர் கிரேடை உடனடியாக எடுத்து விடுவது நல்லது. இதில் ஒரு விதி விலக்கு வேண்டுமானால் இருக்கலாம். பெண்களுக்கு மட்டும் இன்னும் வருகிற 10 வருஷத்திற்கு ஹையர் கிரேட் இருக்க வேண்டுமென்ற ஒரு விதி விலக்கைக் கொடுக்கலாம் என்று சொல்லிக்கொண்டு இத்துடன் என் பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

9-51 a.m. * **Sri T. THIRUMALAIMUTHU VEERASAKKAYA THIRUVENKATASAMI NAICKER** : கனம் சபாநாயகர் அவர்களே கனம் கல்வியமைச்சர் அவர்கள் சபை முன் சமர்ப்பித்துள்ள வெள்ளை அறிக்கையின் மீது சில விஷயங்கள் குறிப்பிட விரும்புகிறேன். ஆசிரியர்-மாணவர் விகிதம், 40 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் வீதம், நிதி நிலை காரணமாக, நிதி பற்றாக்குறை காரணமாக அனுசரிக்க வேண்டுமென்று வெள்ளை அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது. 40 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்பது, இப்பொழுது உள்ள நிலைமையில் அநேகம் பள்ளிக்கூடங்களில் 90, 95 பிள்ளைகள் இருக்கும் நேரத்தில்கூட இரண்டு ஆசிரியர்கள் இருந்து வருகிறார்கள். நமது கல்வித் தரத்தை உயர்த்த வேண்டுமென்று விரும்புகிற இந்த நேரத்தில் அதிகப்படியான ஆசிரியர்களைப் போட்டு குழைந்தைகளுக்கு கல்வி கற்பித்தால்தான் கல்வியின் தரம் உயர ஏதுவாயிருக்கும் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். கட்டாயக் கல்விக்காக ஒரு 10 வருஷத் திட்டம் ஒன்றைப் பற்றி இந்த வெள்ளை அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது. கட்டாயக் கல்வி என்பது, ஆரம்பப் பள்ளியில் சேர்ந்த எல்லோரும் ஐந்தாம் வகுப்பு வரை அவசியம் கட்டாயக் கல்வி கற்றாகவேண்டும் என்ற முறையில்தான் சொல்லப்பட்டிருக்கிறதேயொழிய கல்வி கற்கும் வயது வந்த ஒவ்வொரு மாணவ மாணவிக்கும் கட்டாயம் இலவசமாக படிப்புச் சொல்லித் தருவதற்கான வழி வகைகளை செய்யவில்லை. அது, அதிகமான செலவை உண்டு பண்ணுவதாய் இருந்தாலும்கூட நம் அரசியல் அமைப்புச் சட்டத்தில் சொல்லியுள்ளபடி 14 வயது 'வரை கட்டாய இலவசக் கல்வி போதிக்கப்பட வேண்டும் என்ற கொள்கையை நாம் கடைப்பிடிக்க வேண்டும். அடுத்தபடியாக நான் குறிப்பிட விரும்புவது என்னவென்றால், ஆரம்பப் பள்ளிகள் இனிமேல் ஏழாவது வகுப்பு வரை நடைபெறப் போவதாக அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது. ஐந்தாவது வகுப்பிலிருந்து ஏழாவது வகுப்பு வரை நம் தேச சரித்திரத்தை பரவலான முறையில், மாணவர்கள் நம் தேச சரித்திரத்தை நன்கு புரிந்துகொள்ளும் வகையில் போதிக்க வேண்டுமென்றும், எட்டாவது வகுப்பிலிருந்து 11-வது வகுப்புவரை நம் தேசத்தின் உண்மையான சரித்திரத்தை நல்ல முறையில் மாணக்கர்கள் விரிவாகக் கற்று 11-வது வகுப்பு முடிந்து வெளியே வரும் மாணக்கர்கள் நம் தேசத்தின் சரித்திரத்தை நல்ல முறையில் பூர்ணமாக உணர்ந்தவர்களாக வெளி வருவதற்கு வேண்டியதைச் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். அடுத்தபடியாக, ஆரம்பப் பள்ளிகளில் படிக்கும் ஏழை



மாணவர்களுக்கு பகல் உணவு இலவசமாக அளிக்கப்பட போவதாக அறிக்கையில் கூறப்படுகிறது. இது ஒரு நல்ல அம்சமே. இதனால் பெரும்பாலான ஏழைக் குழந்தைகள் பள்ளிக்குச் செல்ல ஒரு வாய்ப்பு அளிக்கிறது. அதே சந்தர்ப்பத்தில் பள்ளிக்கு வருவதால் மட்டும் அவர்கள் கல்வி அறிவு பெற்று விட முடியாது. அவர்களுக்கு வேண்டிய புத்தகங்கள் கொடுக்கப்பட வேண்டும். கிராமங்களில் வறுமை காரணமாக, பெரும்பாலான குழந்தைகள் புத்தகம் இல்லாத காரணத்தால் பள்ளிக்கூடங்களுக்குப் போக முடியாத நிலையில் இருக்கிறார்கள். ஆகவே, அரசாங்கம் ஏழைக் குழந்தைகளுக்கு இலவசமாக புத்தகங்கள் வழங்குவது, அவர்கள் பள்ளிக்கு வரும் பயனை, அதாவது கல்வி அறிவைப் பெற, நல்ல முறையில் கற்றுக்கொள்ள ஏதுவாயிருக்கும். ஐந்தாம் வகுப்பு வரை கட்டாயக் கல்வி போதிப்பதை நான் வரவேற்கிறேன். அதேசமயத்தில், ஆசிரியர்கள் இன்று மிகவும் மோசமான நிலையில் இருக்கிறார்கள். ஒரு சில மாதங்களுக்கு முன்பு, மூன்று, நான்கு மாதங்களுக்கு முன்பு, அரசாங்கம் ஒரு சிறு சம்பள உயர்வு கொடுத்திருக்கிறது என்றாலும், அது அவர்களின் நிலை உயர்வதற்கான வழியாகவில்லை. கிராமங்களில் உள்ள ஆசிரியர்கள் தங்குவதற்கு வசதியில்லாத ஒரு நிலை இன்று இருக்கிறது. அவர்கள் வாங்குகிற மிகக் குறைந்த சம்பளத்தில் ஒரு பகுதியை வீட்டிற்கு வாடகையாக தாங்கள் குடியிருக்க கொடுத்துவிடுகிறார்கள் என்றால் மீதம் உள்ள குறைச்சலான பணத்தைக் கொண்டு அவர்கள் எப்படி வாழ்க்கை நடத்த முடியும் என்பதை நன்கு ஆலோசித்து ஆசிரியர்களுக்கு தகுந்த முறையில் அவர்கள் நல்லபடியாக வாழ்க்கை நடத்துவதற்கான விதத்தில் அவர்களின் சம்பளத்தை உயர்த்த வழிவகை காணுமாறு கல்வி அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். எட்டாவது வகுப்பிலிருந்து 11-வது வகுப்பு வரை இரண்டாவது மொழியாக நம் இந்திய பாஷைகளில் ஒன்றை கற்க வேண்டுமென்று அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதை நான் வரவேற்கிறேன். சிறுவர்கள் ஐந்தாவது வகுப்பு முதல் ஏழாவது வகுப்பு வரை அதை கற்பதோ அவ்வளவு விரும்பத்தக்கதல்ல. அறிக்கையில் உள்ளபடி வொர்க்கிங் அவர்ஸ் அதிகமாகக் கிடைக்கக்கூடிய 8-வதிலிருந்து 11-வது வகுப்பு வரை அவர்கள் ஹிந்தியோ அல்லது வேறு இந்திய மொழியையோ கற்பதற்கு நல்ல வாய்ப்பு அளிக்கும். அப்பொழுது அவர்கள் தகுந்த முறையில் அறிவு பெறுவதற்கு வாய்ப்பு இருக்குமென்று சொல்லிக் கொண்டு உரையை முடித்துக் கொள்கிறேன்.

**Sri K. P. PALANISWAMI** : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த அவைக்கு கனம் நிதியமைச்சர் அவர்கள் காலத்திற்கேற்றவாறு கல்வித் திட்டத்தை அமைத்து இந்த வெள்ளை அறிக்கையிலே கொண்டு வந்த விஷயங்களை ஆதரித்து நான் ஒரு சில வார்த்தைகள் கூற முன் வந்துள்ளேன். இந்த நாட்டிலுள்ள மக்கள் எல்லோரும் கல்வி கற்க வேண்டும். அநேகம் பேருக்கு கையெழுத்துகூட போடத் தெரியாத நிலையில்தான் இன்று நம் நாடு இருக்கிறது. கையெழுத்து போடு என்று சொன்னால் வண்டி எங்கே என்று கேட்கிறார்கள் ; வண்டியில் உள்ள கீலை எடுத்து விரலில் புரட்டி கையெழுத்திட அப்படிக் கேட்கிறார்கள். அப்படிப்பட்ட பிற்போக்கான நிலையில் நம் நாடு இருக்கும்போது, இந்தக் கட்டாயக் கல்வி திட்டத்தை கொண்டு வந்திருக்கிறார்கள் நமது சர்க்கார். அதை நான் மகிழ்ச்சியுடன் வரவேற்கிறேன். ஏழைகளுக்கு இலவசக் கல்வி அளிக்கலாம் என்று கூறப்பட்டிருக்கிறது. ஏழை மக்களுக்கும், ஹரிஜன குழந்தைகளுக்கும் இந்தக் கட்டாயக் கல்வி குறைந்தது எஸ்.எஸ்.எல்.ஸி. வரையாவது இருக்க வேண்டுமென்று நான் விரும்புகிறேன். ஏனென்றால், ஒரு நாட்டின் மேன்மையை, அதன் மேம்பாட்டை, அதன் கண்யத்தை கல்வி மூலமாகத்தான் கணக்கிட முடியும். ஆகவே, இதை நல்ல முறையில் கவனித்து அரசாங்கம் வேண்டியதைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதோடுகூட, இந்தத் திட்டத்திலே, இலவச உணவு அளிப்பதோடுகூட, ஒருவர் 100 ரூபாய் மாதச் சம்பளம் வாங்கினால்,

அவ்ருக்கு வருஷம் ஒன்றுக்கு 1,200 ரூபாய் வருமானம் இருக்கிறது. அப்படிப்பட்ட ஒருவருக்கு நாலைந்து குழந்தைகள் என்று வைத்துக் கொள்ளலாம். அவரின் குழந்தைகளுக்கு சம்பளம் கட்ட வேண்டும், படிப்பதற்கு. ஆனால் ஒருவருக்கு மாதம் 99 ரூபாய் எட்டணா சம்பளம் இருந்து அவருக்கு ஒரு குழந்தையிருந்தாலும் அக் குழந்தையின் படிப்பிற்கு சம்பளம் கட்ட வேண்டியதில்லை. ஆகவே அதைப்பற்றி பரிசீலனை செய்து ஐந்தாறு குழந்தைகள் உள்ள ஒருவர் 100 ரூபாய் சம்பளம் வாங்கினால், அவர் சம்பளம் கொடுக்க வேண்டும், ஒரு குழந்தையுள்ள ரூ. 99–8 அணா வாங்குபவர் சம்பளம் கட்ட வேண்டாமா என்பதைப்பற்றியெல்லாம் ஆலோசித்து வேண்டிய திருத்தம் கொண்டு வருவார் அமைச்சர் அவர்கள் என்று நினைக்கிறேன்.

அதோடுகூட கல்விக்கு முக்யத்துவம் அளிக்கப்பட்டிருக்கின்றது. கல்வியை மாத்திரம் அளித்து விட்டால் போதாது. அதை வைத்துக்கொண்டு ஒரு பெரிய உத்தியோகத்திற்கு ஒன்றும் போக முடியாது. இதனால் வேலையில்லா திண்டாட்டம் அதிகமாகும். தொழில்கல்வி அதிகமாக இருந்தால் வேலையில்லா திண்டாட்டம் அதிகமாக இருக்காது. இப்போது ஹைஸ்கூல் படிப்பில் தொழில்கல்வியை புகுத்தியிருக்கிறார்கள். தொழிற்கல்வி இப்போது இருப்பது போல் இருந்தால் போதாது. அயல் நாடுகளில் கற்றுக்கொடுப்பது போல் இண்டஸ்ட்ரீஸ் சம்பந்தமான தொழிற்கல்வி கற்றுக்கொடுக்க வேண்டும். இவ்விதமான கல்வி இருந்தால் எல்லா விதமான தொழிற்கல்வியையும் தெரிந்துகொள்ள முடியும். பிளாக்ஸ்மிதி, கார்பெண்டரி, மோல்டிங் போன்ற தொழிலை தெரிந்துகொள்வதற்கு வேண்டிய படிப்பு இருக்க வேண்டும். இவ்விதமாக எல்லோருக்கும் தொழிற் கல்வியை பழக்குவதற்கு சர்க்கார் முயற்சி எடுத்தால் நாட்டில் இருக்கின்ற வேலையில்லா திண்டாட்டத்தை தீர்ப்பதோடு வாழ்க்கைக்கு பயன்படக்கூடிய அளவிலும் இது அமையும் என்பதை வலியுறுத்தி சொல்லிக்கொள்கிறேன். இது தவிர, மத்தியான உணவு இப்போது எல்லோருக்கும் இலவசமாக கொடுக்கப்படுவதினால் பள்ளிக்கூடங்களுக்கு அதிகமான பிள்ளைகள் வருவார்கள். அதோடு எல்லோருக்கும் சம சந்தர்ப்பம் அளிக்கப்பட்டு வருவதால் ஒரு சமதர்ம சமுதாயம் அமைப்பதற்கு இது ஒரு வழியாக இருக்கும். அதோடு சமுதாயத்தில் இருக்கின்ற ஏற்றத் தாழ்வை போக்குவதற்கும் ஒரு வழியாக இருக்கும் என்பதை தெரிவித்துக்கொண்டு இதை வரவேற்றுக் கொள்கிறேன். அதே நேரத்தில் கோயம்பத்தூர் போன்ற இடங்களில் தொழில் பிரதேசங்கள் அதிகமாக இருப்பதினால் அங்கு இருக்கின்ற தொழிலாளர்களுக்கு பகல் நேரங்களில் படிப்பதற்கு வாய்ப்பு இல்லாமல் போய்விடுகிறது. ஆகவே, இரவு நேரங்களில் அவர்களுக்கு கல்வியை அளிக்க ஏற்பாடு செய்ய வேண்டும். அதே மாதிரி இருக்கின்ற எல்லா தொழிலாளர்களுக்கும் கல்வி அளிப்பதற்கு கல்வி திட்டத்தில் ஒரு வாய்ப்பு கொடுத்தால் அது அவர்களை பாதுகாப்பதோடு அவர்களுக்கு கல்வி அளித்ததாகவும் இருக்கும். ஆகவே அதற்கும் ஒரு வசதி செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என்னுடைய சிற்றுரையை முடித்துக் கொள்கிறேன்.

10–20 a.m. * SRI A. GOVINDASAMY : தலைவர் அவர்களே, இந்த வெள்ளை அறிக்கையை விவாதித்து ஒரு சட்டமாக இயற்றாமல் இதை ஆலோசித்து இன்னும் ஓராண்டு கழித்து இதை பரீட்சார்த்தமாக பார்த்துவிட்டு அதன் பின்னால் இதை சட்டமாக்க வேண்டும் என்ற கருத்தை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். இது குறித்து நமது மதிப்பிற்குரிய ராஜாஜி அவர்களுடைய கருத்தையும் கல்வி மந்திரி அவர்களின் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன். கல்வியினுடைய தரம் உயர்ந்தால் மாத்திரம் போதாது, ஆசிரியர்களின் நிலையும் உயர வேண்டும் என்கின்ற கருத்து எல்லோராலும் பேசப்பட்டது. நானும் அதை வலியுறுத்திக் கூறிக்கொள்கிறேன். ஆசிரியர்களுடைய சம்பளம் உயர வேண்டும், அவர்களுடைய வாழ்க்கைத்தரத்தை உயர்த்த வேண்டுமென்றுள்ள அவர்களுடைய நெடுநாளைய கோரிக்கை அரசாங்கத்தினிடம் வைக்கப்பட்டிருக்கிறது. 1956-ம் வருஷம் நவம்பர் மாதத்தில் ஆசிரியர்களுக்கு



5 ரூபாய் "ஸ்பெஷல் அடிஷனல் பே" தனிக்கூட்டு சம்பளம் என்று கொடுத்தார்கள். அதன் பின் எலெக்ஷன் வந்த நேரத்தில் 1957 மார்ச் மாதத்திலிருந்து என்.ஜி.ஓ-க்களுக்கு 12 ரூபாய் பஞ்சப் படியை உயர்த்தினார்கள். அதேநேரத்தில் ஆசிரியர்களுக்கு இந்த 12 ரூபாய் உயர்த்தப்படவில்லை. அவர்களுக்கு 7 ரூபாய் தான் உயர்த்தினார்கள். ஏன் என்று கேட்டால் அவர்களுக்கு ஏற்கனவே 5 ரூபாய் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே இப்போது 12 ரூபாய் சரியாகிவிட்டது என்று கணக்காக்கி விட்டார்கள். இதனால் ஆசிரியர்கள் மிகவும் அதிருப்தி அடைந்திருக்கிறார்கள் என்பதை கல்வி மந்திரி அவர்களின் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன். 1953-ம் ஆண்டின் பின்னால் வேலைக்கு அமர்த்தப்பட்ட ஆசிரியர்களுக்கு மாத்திரம்தான் இந்த சம்பள உயர்வு அனுமதிக்கப்பட்டது. இது நியாயமாகாது. இந்த தனிக்கூட்டு சம்பளத்தை ஆசிரியர்களில் பாகுபாடு காட்டாமல் எல்லோருக்கும் கொடுக்கப்பட வேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்கிறேன். பொதுவாக ஹைஸ்கூலில் எல்.டி. அல்லது பி.டி. ஆசிரியர்கள் வைப்பதில்லை. அவர்களுக்கு இன்று கொடுக்கப்படுகிற சம்பளம் 85 ரூபாய். இந்த குறைந்த சம்பளத்திற்கு அவர்கள் வேலைக்கு வர மறுக்கின்றனர். ஆகவே எல்.டி. ஆசிரியர்களுடைய சம்பளத்தை குறைந்தது 150 ரூபாய் என்றாவது உயர்த்தினால் அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை காப்பாற்றிக் கொள்ள முடியும். ஆகவே இவர்களுடைய சம்பளத்தை உயர்த்த வேண்டும் என்று கனம் மந்திரி அவர்களிடம் கேட்டுக் கொள்கிறேன். பொதுவாக உயர் நிலை பள்ளிகளில் இன்றைக்கு விஞ்ஞான எல்.டி. அல்லது கணக்கில் எல்.டி. படித்தவர்களோ கிடையாது. இது தவிர இன்னும் பல பள்ளிக்கூடங்களில் லாபரட்டரி இல்லாத நிலையில் இருந்து கொண்டிருக்கிறது. இதனால் அங்கு படிக்கின்ற மாணவர்கள் கணக்கிலும் விஞ்ஞானத்திலும் தேறாத நிலைமை ஏற்படுகிறது. ஜில்லா போர்டு நிர்வாகத்தில் நடக்கும் பல பள்ளிக்கூடங்களிலும் எல்.டி. ஆசிரியர்களோ பி.டி. ஆசிரியர்களோ இல்லாத நிலையில் தான் நடக்கிறது. இதனால் போதுமான அளவு மாணவர்கள் தேறாமல் இருந்து வருகிறார்கள். அடுத்தபடியாக தமிழ் வித்வான், புலவர் இவர்களுடைய காரியத்தில் மூன்று விதங்களாக வைத்திருக்கிறார்கள். எஸ்.எஸ்.எல்.ஸி. படித்து வித்வான் பரிக்ஷையில் தேறி பயிற்சியும் பெற்றால் எல்.டி. கிரேட், அதாவது 85 ரூபாய் கொடுக்க வேண்டும் என்று திட்டம் இருக்கிறது. ஆனால் கண்டிப்பாக தரப்பட வேண்டும் என்ற உத்திரவாதம் அளிக்கப்படாத காரணத்தால் சிலர் இந்த சம்பளம் வாங்காமல் இருந்து வருகிறார்கள். வித்வான் படித்துவிட்டு ட்ரெயினிங் மாத்திரம் பாஸ் செய்திருந்தால் செகண்டரி கிரேட் சம்பளம் 45 ரூபாய் கொடுத்து வந்தார்கள். அதில் ஆசிரியர் பயிற்சி தேறாத வித்வான் பட்டம் உள்ளவர்களுக்கு 40 ரூபாய் என்று மூன்று விதமாக கொடுக்கப்பட்டு வந்தது. இந்த பாகுபாட்டை மாதவ மேனன் அவர்கள் கல்வி மந்திரியாக இருந்தபொழுது கொண்டு வந்தார்கள். அதன்பின் அவனாசிலிங்கம் செட்டியார் அவர்கள் கல்வி மந்திரியாக இருந்த நேரத்தில் 60 ரூபாய் அடிப்படை சம்பளம் என்ற முறையில் கொண்டு வந்தார்கள். ஆகவே இவ்விதமான வேறுபாடான நிலையில் இருக்கும் இவர்களுடைய சம்பளத்தை அவர்களுடைய வாழ்க்கை தரத்திற்கு ஏற்றவாறு தங்களுடைய ஆட்சி காலத்திலாவது இதற்கு ஒரு பரிகாரம் உண்டாக்கி இவர்களுடைய சம்பளத்தை உயர்த்த வேண்டுமென்று கனம் கல்வி மந்திரி அவர்களை கேட்டுக்கொள்கிறேன். சமீபத்தில்கூட இதற்கு ஒரு பரிகாரம் உண்டாக்க வேண்டும் என்று சிதம்பரநாதன் செட்டியார் அவர்கள், மயிலை சிவமுத்து அவர்கள் இவர்கள் போய் முதல் மந்திரியை கண்டபோது அவர் தன்னுடைய வழக்கமான "பார்க்கலாம்" என்ற பதிலை கூறினாராம். இவ்வாறு பார்க்கலாம் என்ற அளவோடு நிற்காமல் இதில் அதிக கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு ஓராசிரியர் விஷயமாக இப்பொழுது அவர்களுக்கு 18 ரூபாய் கொடுத்துக்கொண்டு இருக்கிறார்கள். இந்த சம்பளத்தை குறைந்தது 45 ரூபாய் என்றாவது ஆக்க வேண்டும். அவர்களுடைய டிரெயினிங் காலத்தையும் குறைக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

[8th November 1957

***SRI V. SANKARAN** : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த சட்டசபை கமிட்டி சிபார்சு செய்திருக்கிற இந்த முக்கியமான அறிக்கையை சட்டசபை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இதில் பல நல்ல அம்சங்கள் இருக்கின்றன. உதாரணமாக செகண்டரி படிப்புக்கு 2,700 மணி நேரம் இருந்ததை இப்பொழுது 4,000 மணி நேரம் ஆக்கியிருக்கிறார்கள். அதோடு 3 வருடம் என்று இருந்ததை இப்பொழுது 4 வருடங்களாக மாற்றி அமைத்திருக்கிறார்கள். அக்கேடமிக் கோர்ஸ் படிப்பில் நல்ல பாண்டித்யம் ஏற்படவேண்டுமென்று கருதி அதனுடைய தரத்தை உயர்த்துவதற்கு வேண்டிய பல அம்சங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. அதோடு டெக்னிக்கல் படிப்பு சம்பந்தமாகவும் பல அம்சங்கள் இருக்கின்றன. " ப்ரி யுனிவர்ஸிடி " படிப்பு முடிந்ததும் பி.எ., பி.எஸ்.ஸி. படிப்பில் நேரடியாக சேர்ந்து படிப்பதற்கும் அதில் தேர்ச்சி பெறுவதற்கும் வேண்டிய நல்ல அம்சங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. செகண்டரி படிப்பு முடிந்தவுடன் நல்ல பயிற்சியும் பாண்டித்தியமும் அடைந்திருக்கவேண்டும் என்கின்ற முறையில் பல அம்சங்கள் சொல்லப்பட்டிருக்கிறது. நாற்பது சத விகிதம் வேஸ்டேஜ் இருந்ததை மாற்றி " கம்பல்ஸரி " யாக படிப்பு கொடுக்கவேண்டும் என்று விதி செய்து 12 சத விகிதத்திற்குள் கொண்டுவர ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கிறது. எலிமெண்டரி கிளாஸ்களில் " ப்ரீ மீல்ஸ் " இலவச உணவு கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஆசிரியர்களுக்கும் சிறந்த வழிகள் சொல்லப்பட்டிருக்கிறது. அதோடு ஸ்தல ஸ்தாபனங்களின் சிக்கனத்தையும் கல்வியின் தரத்தையும் உயர்த்துவதற்கும் வழி வகை செய்யப்பட்டிருக்கிறது. இரண்டு முக்கிய அம்சங்களைக் குறிப்பிட்டு சொல்ல விரும்புகிறேன். இந்த அறிக்கையில் **Teacher : Children ratio 1 : 40** ஆக இருப்பதை குறிக்க குடும்பக் கட்டுப்பாடு அவசியம் என்பதை எடுத்துக் காட்டினார்கள். மேல் நாடுகளில் எல்லாம் 12-ல் ஒரு பங்குதான் குழந்தைகள் இருக்கிறது. நம் நாட்டில் 8-ல் ஒரு பங்கு குழந்தைகள் இருக்கிறது. இவ்விதம் குழந்தைகள் ஏராளமாக நம் நாட்டில் இருக்கிறது. ஆகவே இந்த திட்டங்கள் எல்லாம் கொண்டு வரவேண்டுமென்றால் நம் நாட்டில் குடும்பக் கட்டுப்பாடு திட்டம் வரவேண்டியது மிக அவசியம் என்று அவர்கள் குறிப்பிட்டு இருப்பதைக் கவனிக்கவேண்டும். அதைப் பற்றியும் குறிப்பிடப்பட்டு இருக்கிறது. அதுவும் ஒரு நல்ல அம்சமாக இருக்கிறது. சட்ட மன்றக் கமிட்டியார் இன்னொரு விஷயம் சொல்லியிருக்கிறார்கள். வருஷத்தில், 5-வது வகுப்பு வரையுள்ள மாணவர் ஒவ்வொருவருக்கும் ரூ. 1–14–0 வீதம் செலவிடப்படுகிறது. ரூபாய் 3 செலவிடப்படலாம் என்று கமிட்டியார் சிபார்சு செய்திருக்கிறார்கள். இதை நிறைவேற்றும்போது வரிகள் விதிக்க வேண்டியிருக்கும். கமிட்டியாரின் இந்த சிபார்சை எல்லோரும் ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். இதை நிறைவேற்றும்போது ஸ்தல ஸ்தாபனங்களின் மீதுள்ள வரிகளை சற்று உயர்த்த வேண்டிவரும். அப்படி உயர்த்தப்பட்டால், காலணா உயர்த்தினால் கூட கடுமையான எதிர்ப்புத் தெரிவிக்கும் போக்குடன் இல்லாமல், வரி உயர்வை ஆதரிக்கவேண்டுமென்று எதிர்க்கட்சிகளைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, மொழிகளை எடுத்துக்கொண்டால், மக்கள் ஹிந்தியைக் கட்டாயமாக எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சொல்லாமல், அவர்களாகவே அதன் அவசியத்தை உணர்ந்து, ஹிந்தியை எடுத்துக்கொள்ளும் வகையில் சிபார்சு இருப்பது மிகவும் வரவேற்கத்தக்கது. ஒரே ஒரு சிறிய குறை இருக்கிறது. அது சமஸ்கிருதத்தைப் பற்றியது. மேல் நாட்டில் லத்தீன் மொழியை ஆதி மொழி என்று போற்றிவருகிறார்கள். அது போல, ஆதி மொழியாக சமஸ்கிருதத்தைப் பயில வேண்டுமென்று ஒரு சாரார் விரும்புகிறார்கள். அறிக்கையில் சமஸ்கிருதம் படிக்க விரும்புகிறவர்கள் அதைப் படிப்பதற்கான வகை செய்யப்படவில்லை. அறிக்கையின்படி ஹிந்தி அல்லது சமஸ்கிருதம் எடுத்துக்கொள்ளவேண்டும். இப்போது சமஸ்கிருதம் ஹிந்திப் பிரிவில் சேர்க்கப்படாமல் சொல்லிக் கொடுக்கப்படுகிறது. இந்த சௌகரியத்தை நீடிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.



8th November 1957] [Sri V. Sankaran]

கட்டாயக் கல்வி முறை பற்றிய சிபார்சில் ஒரு **Lacuna** இருக்கிறது. முதல் வருஷத்தில், ஏற்கனவே சேர்க்கப்பட்ட குழந்தைகள் எல்லாம் கட்டாயமாக வைத்துக்கொள்ளப்பட வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. இரண்டாம் வருஷத்தில் 6 லிருந்து 7 வரை ஆறு வருஷங்கள் பூர்த்தியாகியுள்ள குழந்தைகளைமட்டும் கட்டாயமாகச் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்றும். காரணம், மூன்றாவது வருஷத்தில் 6—7 வயதுள்ள குழந்தைகளைக் கட்டாயப்படுத்த வேண்டுமென்றும், அதே முறையில், 1-வது வகுப்பில் பின் வருஷங்களிலும் சேர்க்கப்பட கட்டாயமின்றி சேர்த்துக்கொள்ளவேண்டுமென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே, முதல் வருஷத்திலேயே 6-வருஷங்களைப் பூர்த்தி செய்துள்ளதும், அதற்கு மேலே வயதான குழந்தைகள், எப்போதும் பள்ளியில் கட்டாயமாக சேர்க்கமுடியாது போய்விடும்.

**MR. SPEAKER :** நீங்கள் இத்துடன் நிறுத்திக்கொள்ளுங்கள். வேறு பிரச்னைக்குப் போக வேண்டாம்.

10-12 a.m.

***SRI A. P. C. VEERABAHU :** கனம் சபாநாயகர் அவர்களே, கட்டாய கல்வியைப் புகுத்தவேண்டுமென்று அரசியல் சட்டத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கும் நோக்கத்தை, இருக்கும் குறைவான நிதி வசதிகளைக் கொண்டு நிறைவேற்றுவதற்கான சிபார்சுகளைக் கொண்ட அறிக்கையை நான் வரவேற்கிறேன். ஹிந்தியை தேசீய மொழியாக 1960-ம் வருஷத்திலேயே கொண்டுவருவதற்கு உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. ஹிந்தியை நாட்டின் பொது மொழியாக வைக்கலாம் என்ற யோசனைக்கு நாட்டில் பெருவாரியான மக்கள் ஆதரவு தந்துள்ளதன் காரணமாக அதை பள்ளிப் படிப்பில் போதிப்பதற்கு அறிக்கையில் சிபார்சு செய்யப்பட்டிருக்கிறது. புதிய 8-வது வகுப்பிலிருந்து 11-வது வகுப்பு வரையில் ஹிந்தி கட்டாய பாடப் பிரிவில் போதிக்கப்பட வேண்டுமென்றும், புதிய 6-வது, 7-வது வகுப்புகளில் அதை போதிக்க வேண்டாமென்றும் அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. இது **Compressed Course** ஆக இருக்கிறது. 6-வது 7-வது வகுப்புகளிலும் மாணவர்கள் ஹிந்தி படித்தால் அதில் நல்ல தேர்ச்சியைப் பெறுவார்கள். ஆகவே 6-வது 7-வது வகுப்புகளிலும் மாணவர்கள் ஹிந்தி படிப்பதற்கான வாய்ப்பை ஏற்படுத்தவேண்டும். கட்டாய பாடப் பிரிவில் ஹிந்தியை 6-வது வகுப்பிலிருந்து 11-வது வகுப்புவரை போதிக்கவேண்டும்.

அறிக்கையில் கணக்கிற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை. மொழிகளுக்குத்தான் அறிக்கையில முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது. நாட்டில் விஞ்ஞான வளர்ச்சி ஏற்பட வேண்டுமானால் நாட்டு மக்களுக்கு கணக்கு அறிவு மிகவும் வேண்டும். கணக்கு பரவும் அளவை பொறுத்துத்தான் விஞ்ஞான அறிவின் அளவு இருக்கிறது என்பது விஞ்ஞான நிபுணர்கள் எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட உண்மை. அமெரிக்கா தேசத்தில் மக்களிடையே கணக்கு அறிவு குறைவாக இருப்பதால் அவர்களுடைய விஞ்ஞான அறிவுக்கும் அந்த நாட்டில் விஞ்ஞான வளர்ச்சிக்கும் பாதகம் ஏற்படும் என்று இரண்டு மூன்று வருஷங்களுக்கு முன் அமெரிக்க தேசத்து நிபுணர்கள் அபிப்பிராயம் தெரிவித்தனர். அவர்கள் அப்படி அபிப்பிராயப்பட்டது உண்மை என்பது, அமெரிக்காவிற்கும் ரஷியாவிற்கும் ஏற்பட்ட ' ஸாடலைட் போட்டியில் இப்போது ' அமெரிக்கா தோற்றுவிட்டது என்பதிலிருந்து கூடத் தெரிகிறது. ஆகவே நாம் கணக்கிற்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டும். அல்ஜீப்ரா, ஜியாமெட்ரி என்ற இரண்டு கணிதங்களையும் கூட 10-வது 11-வது வகுப்புகளின் பாடத் திட்டங்களில் சேர்க்கவேண்டும் என்று சொல்லிக்கொள்ளுகிறேன்.

கல்லூரி செல்லுவதற்கு முன்புள்ள பள்ளிப் படிப்பு 1961–62-க்குப் பிறகு 11-வருஷ ' கோர்ஸ் ' ஆக இருக்கவேண்டுமென்று அறிக்கை கூறுகிறது. அது வரையில் இது 12 வருஷப் படிப்பாகவே இருக்கும். மேலும் 8-வது வருஷப் படிப்பு ' அன்னெஸஸரி அப்பெண்டேஜ் ' என்று நான் சொல்வேன். 1962-ம் வருஷத்திற்குள்ளேயே 8-வது வகுப்பை எடுத்துவிட முயற்சிக்கவேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன்

மேலும், ' ப்ரீ ப்ரொபெஷனல் ' கோர்ஸை எடுத்துவிட்டு, அதை தொழில் கல்லூரிப் படிப்பில் சேர்த்துவிடவேண்டும். இப்போதே, ' ஹையர் செகண்டரி கோர்ஸ் ' -ல் தொழில் கல்வியை 2,200 மாணவர்கள்தான் பயிலுகிறார்கள். என்றும் மற்றப் பாடங்களைப் படிப்பவர்களின் எண்ணிக்கை 25,000 ஆக இருக்கிறது என்றும் சொல்லப்படுகிறது. ஆகவே தொழில் கல்வி பயிலுவதற்குப் போதிய மாணவர்கள் வராதிருக்கும் நிலையில், ' ப்ரீ ப்ரொபஷனல் கோர்ஸ்'ஐ எடுத்துவிட வேண்டாம் என்றும், அதை 11 வருஷப் படிப்புடன் இணைப்பது கூடாது என்றும் சொல்லிக்கொள்ளுகிறேன். 1962–வது வருஷத்திற்குள் தொழில் பள்ளிகளில் எல்லா சாதனங்களையும் வசதிகளையும் ஏற்படுத்திவிட்டு, அதற்குப் பிறகு தொழில் கல்வியை ' இன்டெக்ரேடட் கோர்ஸ் ' ஆக ஆக்கிவிட வேண்டுமென்று சொல்லிக்கொள்ளுகிறேன்.

வயது வரம்பைப் பற்றி ஒன்று சொல்ல விரும்புகிறேன். ' ப்ரைவேட் ஸ்டடி 'க்கும் வயது வரம்பு நிர்ணயிக்கப்பட வேண்டும். கல்லூரிப் படிப்புக்கு குறைந்த பட்சம் வயது 14 என்று இங்கே நிர்ணயிக்கப்பட்டிருந்தாலும் இங்கே பள்ளியில் சேராமல் தனியாகப் படித்த மாணவர்கள் பிற ராஜ்யத்திலுள்ள யூனிவர்ஸிடியில் சேர்ந்துவிடுகிறார்கள். பிற ராஜ்ய யூனிவர்ஸிடிகளில் 13 வயது மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளுகிறார்கள். ஆகவே எல்லா யூனிவர்ஸிடிகளிலும் குறைந்த பட்சம் 14–வயது வந்துள்ள மாணவர்களைத்தான் சேர்த்துக்கொள்ளவேண்டுமென்று அகில-இந்திய ரீதியில் ஒரு விதி நிர்ணயிக்கப்பட வேண்டும். இதற்கு முயற்சிக்க வேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, ' ப்ரைவேட் ஏஜென்ஸிஸ் '-ஸைப் பற்றி பல விஷயங்கள் கூறப்பட்டிருக்கின்றன. ஏற்கனவே உபாத்தியாயர்களுக்காகக் கொடுக்கப்படும் பணத்தை, ' ப்ரைவேட் ஏஜென்ஸிஸ் ' துர்விநியோகப்படுத்துகின்றன என்று சொல்லப்படுகிறது. அதற்காகப் ' ப்ரைவேட் ஏஜென்ஸிஸ் '-ஐத் தள்ளிவிடுவதற்கில்லை. திருநெல்வேலியில் பெரும்பாலான பள்ளிகள் ' ப்ரைவேட் ஏஜென்ஸி '-யால்தான் நடத்தப்படுகின்றன. ' ப்ரைவேட் ஏஜென்ஸிஸ் 'க்கு ஊக்கம் கொடுக்காவிட்டாலும், அவர்களுக்கு பள்ளி நிர்வாகத்திற்கான நிதிக்கு சர்க்கார் உதவி அளிக்க வேண்டும். அவர்களுக்கு தகுந்த நிதி உதவியளிப்பதற்கான வகையில் ' கிராண்ட்-இன்-எய்ட் கோட் ' ஐ சர்க்கார் திருத்தியமைக்க வேண்டுமென்று சொல்லிக்கொள்ளுகிறேன்.

10–18 a.m. * SRI P. VEDAMANICKAM : கனம் சபாநாயகர் அவர்களே, சட்டமன்றக் கமிட்டியாரின் கல்வியின் வெள்ளை அறிக்கையை வரவேற்று சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். இந்த நாட்டில் படித்துள்ள மக்கள் 16 சத விகிதம் என்று புள்ளி விவரம் கூறுகிறது. இந்த நாட்டில் வகுப்பு வெறியும் ஜாதி துவேஷமும் போகவேண்டுமானால் குறைந்த அளவாவது மக்கள படிக்க வேண்டும். பதினான்கு வயது வரை பிள்ளைகளுக்குக் கட்டாயக்கல்வி கொடுக்கவேண்டுமென்று சிபார்சு செய்யப்பட்டிருப்பதை வரவேற்கிறேன். எண்பது சத விகித பிள்ளைகளாவது படிக்கவேண்டுமென்று வெள்ளை அறிக்கை கூறுகிறது. கட்டாயக் கல்வி சம்பந்தமான சிபார்சில், குடும்ப ஏழ்மை நிலைகள் காரணமாக படிக்க முடியாத பிள்ளைகளுக்கு விதிவிலக்கு அளிப்பதற்கு பஞ்சாயத்தார் சிபார்சு செய்யலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இது ஏற்றுக்கொள்ளப்பட்டால், மிகவும் இடைஞ்சலாக ஆகிவிடும். ஹரிஜனப் பிள்ளைகளும. பிற்பட்ட வகுப்புப் பிள்ளைகளும் பள்ளிக்குப் போக விரும்புவதில்லை. பஞ்சாயத்தார் சிபார்சு இருக்குமானால் பலர் பள்ளிக்குச் செல்லாமலே இருந்துவிடுவார்கள். ஆகவே இந்த சிபார்சை ஏற்றுக்கொள்ளக்கூடாது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, ஆசிரியர்கள் சம்பளம் போதாமையால் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அவர்களுடைய சம்பளத்தை சீக்கிரம் உயர்த்தியே தீர வேண்டும் என்று சொல்லிக்கொள்ளுகிறேன்.



மேலும், ஒரு உபாத்தியாயர் 40 பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுக்க வேண்டுமென்று அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. இது அமுலுக்கு வந்தால் பள்ளி நிர்வாகம் சீரழியும். ஒரு ஆசிரியர் 40 பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுக்கமுடியாது என்பதை நான் அனுபவத்தின் மூலம் சொல்லுகிறேன். நான் 12 ஆண்டுகள் தலைமை ஆசிரியனாக இருந்தேன். ஒரு ஆசிரியர் 30 பிள்ளைகள் கொண்ட வகுப்பைக் கூட நடத்த முடியாது. இருந்தாலும், 40 மாணவர்கள் என்ற அளவை 30 என்றாவது குறைக்க வேண்டும் என்று சொல்லிக்கொள்ளுகிறேன்.

மேலும் இப்பொழுது டெப்யுடி இன்ஸ்பெக்டர்கள் குறைவாக இருக்கிறார்கள். ஒவ்வொரு டெப்யுடி இன்ஸ்பெக்டரின் பிராந்தியத்திலும் சுமார் 70–80 பள்ளிகள் இருக்கின்றன. ஒரு டெப்யுடி இன்ஸ்பெக்டர் 70—80 பள்ளிகளுக்கு வருஷத்தில் ஒரு இன்ஸ்பெக்ஷன், இரண்டு விஸிட்ஸ் கூட கொடுக்க முடியாது. சர்க்கார் ரூ. 12 கோடி கல்விக்காக செலவு செய்தாலும் நிர்வாகம் நன்றாக இல்லாவிட்டால் பள்ளி நிர்வாகம் மோசமாகிவிடும். ஆகவே தாலுகா வட்டங்களில் அனேக டெப்யுடி இன்ஸ்பெக்டர்களை நியமித்து பள்ளி நிர்வாகத்தைச் சீர்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஒரு கிராமத்தில் போதிய பிள்ளைகள் இருப்பின் அந்த கிராமத்தில் ஒரு பள்ளியை அமைப்பது அவசியமாக இருக்கிறது. தற்போது 500 ஜனத்தொகைகள் இருந்தால் அங்கு ஒரு பள்ளிக்கூடத்தை அமைக்கப் போவதாகச் சொல்லுகிறார்கள். சில இடங்களில் ஏறக்குறைய 300 ஜனத்தொகை இருக்கலாம். அந்த இடங்களில் உள்ள பிள்ளைகளை ஒரு மைலுக்குள் மற்ற இடத்தில் அமைத்துள்ள பள்ளிக்குச் செல்லவேண்டுமென்று சொன்னால் அவர்களால் போக முடியாமல் இருக்கலாம். அவர்கள் போகக்கூடிய இடங்களில் ஆறுகள், வாய்க்கால்கள் குறுக்கே இருக்கலாம். அல்லது போதிய வண்டி வசதி இல்லாமல் இருக்கலாம். ஆகவே ஆறுகள் அல்லது ஏரிகள் இருக்கக்கூடிய இடங்களில் அந்தந்த கிராமங்களிலேயே சுமார் 300 பிள்ளைகள் இருந்தாலும் அவர்களுக்கு என்று தனியாகப் பள்ளிக்கூடத்தை அமைத்துக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அங்குள்ள குழந்தைகளுக்கு பக்கங்களில் அமைக்கப்பட்டிருக்கும் பள்ளிக்கூடங்களுக்குப் போவதற்குக் கஷ்டமாக இருக்கும். ஆகவே அவசியம் ஏற்பட்டால் அந்தந்த இடங்களில் தனியான பள்ளிக்கூடங்களை அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இன்றைக்கு கல்வி இலாகாவால் நடத்தப்பட்டுவரும் அநாதை உணவு விடுதிகளில் மாதம் எட்டு ரூபாய் ஸ்டைபண்டு கொடுக்கப்பட்டு வருகிறது. அது மிகவும் குறைவாக இருக்கிறது. இன்றைக்குப் பார்த்தால் ஹரிஜன இலாகாவை நடத்தும் ஹாஸ்டலில் உள்ள மாணவர்களுக்கு குறைந்த பட்சம் 15 ரூபாய் கொடுக்கப்படுகிறது. இன்றைய நிலையில் மாணவர்கள் எட்டு ரூபாயில் தங்களுடைய உணவைப் பெற்றுக்கொள்ள முடியாது. அதிகப்படுத்தினால் நிர்வாகத்தை நடத்த முடியாது என்று சொல்லாமல் அநாதை உணவு விடுதிகளுக்குக் கொடுக்கப்படும் கிராண்டை உயர்த்துமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

விருத்தாசலம் ஜில்லா போர்டு உயர்நிலைப் பள்ளிக்கூடத்தில் ஏறக்குறைய இருபது வருஷங்களாகத் தச்சு வேலை சொல்லிக் கொடுத்துக் கொண்டு வந்தார்கள். அதன் மூலம் சுமார் 1,400 பிள்ளைகள் தச்சு வேலைகள் கற்றுக்கொண்டு வந்தார்கள். எந்தக் காரணத்தினாலோ அந்த தச்சு வேலையை வேறு பள்ளிக்கு மாற்றிவிட்டார்கள். இதைப் பற்றி பல தடவை அங்குள்ள பிரமுகர்களும் எம். எல். ஏக்களும் அரசாங்கத்திற்குத் தெரியப்படுத்தியும் இதுவரையிலும் எந்த விதமான நடவடிக்கையும் எடுத்துக்கொள்ளவில்லை. ஆகவே தச்சு வேலையை அப்பள்ளியில் மீண்டும் ஆரம்பிக்க தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்ளுகிறேன்.

[8th November 1957

* **Sri K. R. VISWANATHAN** : கனம் தலைவர் அவர்களே, வெள்ளை அறிக்கையின் மீது சட்டசபை குழு கொண்டுவந்துள்ள சிபார்சின் பேரில் சில வார்த்தைகளைக் கூற விரும்புகிறேன். கமிட்டியின் சிபார்சுகள் பொது மக்களையும், பொது மக்களின் பிரதிநிதிகளையும் கலந்து யோசித்து முடிவு எடுக்கப்பட்டிருப்பதால் இதை நான் ஆதரிக்கிறேன், வரவேற்கிறேன்.

இனி கல்விச் சீரமைப்பு சட்ட மூலமாக நிறுவப்பட்டால்தான் பின்னரும் கல்வி முறையமைப்பு மாற்றி அமைக்க வேண்டுமானால் சட்டசபையைக் கலந்துதான் செய்யவேண்டிய அவசியம் ஏற்படும் என்று கூறப்பட்டது. இப்படிக் கல்வி மந்திரி அவர்கள் கூறி ஜனநாயக முறையைப் பின்பற்றுவதை நான் மிகவும் பாராட்டுகிறேன்.

கட்டாய இலவசக் கல்வி நாட்டின் முன்னேற்றத்திற்கு மிகவும் இன்றியமையாதது. அரசியல் நிர்ணய சட்டத்தில் எல்லா குழந்தைகளும் 14 வயது வரைக்கும் அல்லது எட்டாவது வகுப்பு வரைக்கும் கட்டாயமாகப் படிக்க வைக்க வேண்டும் என்ற முறையில் இலவசக் கட்டாயக் கல்வியைக்கொண்டு வரவேண்டும் என்றும் ஒரு முடிவு செய்து சிபார்சு செய்திருந்தது. ஆனால் இந்தக் கல்விக் குழுவானது ஐந்தாவது வகுப்பு வரையில்தான் கல்வி கொடுக்க முடியும். அதாவது பத்தாவது வயது வரையிலும், இலவசக் கட்டாயக் கல்வி கொடுக்க முடியும் என்று சிபார்சு செய்திருக்கிறது. இன்னும் அரசியல் சட்டத்தில் சொல்லியபடி 1960-ம் வருஷத்திற்குள் செய்யமுடியாது என்றும் 1965-66-க்குள் முடிந்தால் செய்ய முடியும் என்றும் சொல்லியிருக்கிறார்கள். இதற்கு பணக் குறைவுதான் காரணம் என்று சொல்லப்படுகிறது.

இந்த சமயத்தில் ஒன்று நினைவுபடுத்த விரும்புகின்றேன். "சீர்திருந்திய ஆரம்பக் கல்வித் திட்டம்" என்று 1953-ம் வருஷத்தில் ஒரு திட்டம் கொண்டு வரப்பட்டது. அதற்கு பெருத்த எதிர்ப்பு இருந்தது. அந்தக் கல்வித் திட்டம் குழி தோண்டி புதைக்கப்பட்டது. அதற்கு எதிர்ப்பு இருந்ததால் இப்பொழுது இந்தக்குழு இந்த அறிக்கையை சிபார்சு செய்திருக்கிறது. அந்தக் கல்வி திட்டமானது தோல்வி அடைந்ததற்கு முக்கியமான இரண்டு மூன்று காரணங்கள் இருந்தன. முதல் காரணம் அது எதேச்சாதிகார முறையில் கொண்டுவரப்பட்டது. பொது மக்களுடைய பிரதிநிதிகளைக் கலந்துகொண்டு அந்த திட்டம் கொண்டுவரப்படவில்லை.

அடுத்தபடியாக, மாணவர்கள் காலையிலோ அல்லது மாலையிலோ ஒரு வேளைமட்டும் பள்ளியில் இருந்தால் போதும். முழு நேரம் பள்ளிக்கூடத்தில் இருக்க வேண்டியதில்லை. அது மாத்திரம் அல்ல, மாணவர்கள் அத்துடன் ஒரு தொழிலையும் கற்றுக்கொள்ள வேண்டும் என்றும் திட்டமிடப்பட்டிருந்தது. அப்படி தொழிலைக் கற்றுக்கொள்ளும்போது வீட்டிலேயே கற்றுக்கொள்ளவேண்டும் என்றும் பெற்றோர்கள் எந்தத் தொழிலைச் செய்துகொண்டு வருகிறார்களோ, அந்தத் தொழிலையே கற்றுக்கொள்ள வேண்டும் என்றும் சொல்லப்பட்டது. அதனால் அதற்குப் பெருத்த எதிர்ப்பு ஏற்பட்டது. ஆனால் இப்பொழுது ஏற்பட்டிருக்கக்கூடிய திட்டமானது ஓரளவு ஜனநாயக அடிப்படையில் கொண்டுவரப்பட்டிருக்கிறது. மறுபடியும் பழைய திருந்திய ஆரம்பக் கல்வித் திட்டத்தை (Modified Scheme of Elementary Education)நன்றாக ஆராய்ந்து பார்த்து இதில் இன்னும் மாறுதல் செய்யவேண்டியிருந்தால் அதைச் செய்துகொண்டு வர வேண்டும் என்றும் யோசனை சொல்லுகிறேன். சில மாறுதல்களைச் செய்து இந்தத் திட்டத்தைக் கொண்டுவந்தால் எந்த விதமான எதிர்ப்பும் இல்லாமல் இருக்கும் என்பதை இந்த அரசாங்கத்திற்கு நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

முக்கியமாக ஒரு கல்விச் சீரமைப்பைக் கொண்டு வந்தால் முதலில் எதிர்க் கட்சியில் இருக்கக்கூடியவர்களைக் கலந்துகொண்டு என்ன என்ன திட்டங்கள் செய்யலாம் என்று முடிவுசெய்ய வேண்டும். அதற்கு ஆட்சேபனைகள் இருந்தால் அதை ஏற்றுக்கொள்ளக் கூடுமானால் ஏற்றுக்கொண்டும் இல்லாவிட்டால் அதற்கு சமாதானம் கூறி அதை அவர்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய அளவில் திட்டத்தை வகுக்கவேண்டும். அத்துடன் பொது



8th November 1957] [Sri K. R. Viswanathan]

மக்களின் ஆதரவையும் பெறுவதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். அதன்மேல் நாம் கொண்டுவரக்கூடிய திட்டத்தை எல்லோரும் மனப்பூர்வமாக ஆதரிக்கக் கூடிய வகையில் கொண்டுவர வேண்டும். இப்பொழுது நாட்டில் இருக்கக் கூடிய பள்ளி வயது மக்களில் ஆயிரத்திற்குப் பத்துப் பேர்கள்தான் பள்ளிக்குப் போகிறார்கள். பாக்கி 990 பேர்கள் பள்ளிக்குப் போகவில்லை. அந்த நிலையில் இருக்கிறது நம்முடைய நாடு. அவர்களுக்கும் படிக்க வசதி செய்து கொடுக்கவேண்டும். நாம் போடும் திட்டத்தை அவர்கள் ஏற்றுக்கொள்ளும் வகையில் போடவேண்டும். எதிர்ப்பு இருந்தால் அவர்களிடம் திட்டத்தை விளக்கிக் காட்டி அவர்கள் அதை ஏற்றுக்கொள்ளும்படிச் செய்ய வேண்டும். அப்படிச் செய்தால் அவர்கள் நாம் கொண்டுவரும் திட்டத்தை மறுக்க மாட்டார்கள். ஆகவே எதிர்க்கட்சியில் இருக்கக்கூடிய தலைவர்களையும் கலந்து கொண்டு ஒரு முடிவுக்கு வரவேண்டும்.

பள்ளிக்கூட நேரத்தை இரண்டு நேரமாக வைத்துக்கொண்டாலும் ஒவ்வொரு நேரத்தின் கால அளவைப் பாதியளவுக்குக் குறைத்துக்கொண்டால் இரண்டு பங்கு மாணவர்கட்கு கல்வி வசதி கொடுக்கமுடியும். அது எப்படி இருந்தாலும் இன்றைக்கு பள்ளிக்கூடத்தில் இருக்கும் மாணவர்களுடைய விகிதாச்சாரம் ஒரு ஆசிரியருக்கு 40 என்று உயர்த்தப்பட்டிருக்கிறது. அப்படிப் பார்த்தாலும் ஆயிரம் மாணவர்களில் பத்து முதல் இருபது வரை பேர்கள்தான் பள்ளிக்குச் செல்லுவதாகச் சொல்லப்படுகிறது. இன்றைக்கு ஜெர்மனி, இங்கிலாந்து இந்த தேசங்களை எடுத்துக்கொண்டால் அங்கே ஆசிரியர் ஒருவருக்கு 60 மாணவர்கள் அதற்கு மேலும் இருந்து வருகிறார்கள். அந்த அளவில் ஏன் நாமும் ஒரு ஆசிரியருக்கு 50 முதல் 60 வரையில் இருக்க வேண்டும் என்று திட்டம் செய்யக்கூடாது. பஞ்சாயத்து லோகல் போர்டு பள்ளிக்கூடங்களில் இதைப் பரீட்சை செய்து பார்க்கலாம் என்றும் அதன் பிறகு ஏற்றுக்கொள்ளலாம் என்றும் சொல்லப்படுகிறது. எப்படிப் பார்த்தாலும் பஞ்சாயத்து, லோகல் போர்டு பள்ளிகளில் இந்தப் பரீட்சை செய்து பார்க்கப் போவதில்லை. அதனால் சர்க்காரே இந்த ஆசிரியர்-மாணவர்களின் விகிதாச்சாரத்தை அதிகப்படுத்தி ஒரு ஆசிரியருக்கு 50 மாணவர்கள் இருக்கவேண்டும் என்று முடிவு செய்யவேண்டும். அப்பொழுதுதான் கட்டாய இலவசக் கல்வித் திட்டத்தை எளிதில் விரைவில் நடைமுறைக்குக் கொண்டுவர முடியும் என்று கூற விரும்புகின்றேன்.

* **Sri K. SATTANATHA KARAYALAR** : கனம் சபாநாயகர் அவர் 10·30 a.m.
களே, இந்த வெள்ளை அறிக்கை ஒட்டு மொத்தத்திலே வரவேற்கக்கூடியதாகும். இது ஒரு அளவு "பிலேடெட்" என்று கூடச் சொல்லலாம். நீண்ட நாட்களுக்கு முன்பாகவே இப்படி ஒரு முற்போக்கான சீர்திருத்தம் செய்திருக்கவேண்டுவது மிக மிக அவசியமாக இருந்தது. மூன்று கோடி மக்கள் வாழும் தமிழகத்தில் நாம் சுமார் ஒன்பது கோடி ரூபாய் கல்விக்காகச் செலவிடுகிறோம். வருவாயிலே ஐந்திலொரு பங்கு செலவிடுகிறோம். ஆனால் ஒன்றரை கோடி ஜனத்தொகையுள்ள மலையாளப் பகுதியில் பதினொரு கோடி ரூபாய்க்கு அதிகமாக, அதாவது வருவாயில் மூன்றிலொரு பங்கு கல்வி இனத்திலே செலவு செய்கிறார்கள். இதைப் பார்க்கும்போது, கல்வியிலே மலையாளிகள் மிக முன்னேற்றம் அடைந்திருந்தும் மேலும் செலவு செய்யும் தொகையைப் பார்த்தாவது நாம் இன்னும் திட்டங்களை வகுத்து அவைகளுக்கு அதிகமாகச் செலவு செய்ய வேண்டும் என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்வது நன்மை பயக்கும்.

இந்தத் திட்டங்களையெல்லாம் அதிக துரிதப்படுத்தி, கூடிய சீக்கிரத்திலே ஒரு மசோதா கொண்டுவந்து சட்டமாக்குவது நல்லது. அடுத்த கல்வி வருஷத்திற்குள்ளாவது நாம் இந்தச் சட்டத்தை அமுலுக்குக் கொண்டுவரவேண்டும். இப்பொழுது வைத்திருக்கும் வெள்ளை அறிக்கையின் அடிப்படையில் முதன் முதலாக முதல் கட்டத்திலே புதிய பாட முறைகளைப் புகுத்தி, 11 ஆண்டு வரை பாடம் நடத்த வேண்டுவதாக இருக்கும். பதினொரு ஆண்டு வரை காலதாமதப்படுத்துவது சரியாக இருக்குமா என்பது பற்றி சிந்திக்கவேண்டும்.

[Sri K. Sattanatha Karayalar] [8th November 1957]

ஏழாவது எட்டாவது படிவத்திலிருந்தும் புதிய பாட முறையைக் கொண்டுவரக்கூடாதென்பதைப் பரிசீலனை செய்வதும் நன்மை பயக்கக் கூடியதே. ஏழாவதில் பரீட்சை வைத்து, திறமை பெற்ற மாணவர்களுக்குப் புதிய கல்வி முறைப் பாடத்தைப் புகுத்துவது நன்மை பயக்காதா, அப்படிச் செய்தால் பதினாறு ஆண்டுகளில் நாம் செய்து முடிக்க வேண்டுமென்று நினைக்கும் சீர்திருத்தத்தை ஐந்து அல்லது ஆறு ஆண்டுகளில் செய்து முடிக்க முடியாதா என்பதை கவனிக்கவேண்டும்.

புதிய பாட முறையிலே 1 முதல் 11-வது வகுப்பு வரையில் பிரதேச மொழியாகிய தமிழிலே இருக்கும். ஐந்து முதல் 11 வகுப்பு வரையில் ஆங்கிலத்திலும், 8 முதல் 11 வகுப்பு வரையில் இந்தி அல்லது வேறு ஒரு இந்திய பாஷையிலும் இருக்கும் என்று மொழியைப் பொறுத்தவரையில் சிபார்சு இருக்கிறது. ஆனால், யதார்த்தத்தில் இந்தியை மறைமுகமாக கொண்டுவருவதற்குச் சாதகமாக இருக்காதா என்று ஐயுறவேண்டியிருக்கிறது. ஐந்து முதல் 11 வகுப்பு வரையில் ஆங்கிலம் அல்லது வேறு ஒரு வெளிநாட்டு மொழி என்று சொல்லும்போது யதார்த்தத்தில் ஆங்கிலம் தான் நடைமுறையில் இருக்கும். எட்டு முதல் 11 வகுப்பு வரையில் இந்தி அல்லது வேறு ஒரு இந்திய மொழி என்று சொல்லும்போது, அந்த வகுப்புகளிலே இந்திய மொழிகளாகிய மலையாளமோ, தெலுங்கோ குஜராத்தியோ, படிப்பதற்கு நடைமுறையிலே வகுப்புக்கள் இருக்க முடியாது. ஏனெனில் அதற்கு வேண்டிய உபாத்தியாயர்கள் நாம் அமைத்துக்கொள்ள முடியாது. இந்தி உபாத்தியாயர்கள்தான் அதிகம் இருப்பார்கள். அதனால் நடைமுறையில் இந்திதான் வரும் என்று நான் நினைக்கிறேன். பாட முறையில் மூன்று மொழிகளைப் பிள்ளைகளின் மனதில், தலையில் புகுத்துவது அதிகமான. பளுவாக இருக்காதா என்று நினைத்துப் பார்க்கவேண்டும்.

மாணவர்-உபாத்தியாயர் ரேஷியோ நிர்ணயம் செய்யும்போது, 40 பிள்ளைகளுக்கு ஒரு உபாத்தியாயர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இது நடைமுறையில் பிள்ளைகளின் தரத்தை கீழே தாழ்த்துவதாக முடியும். எழுபத்து ஒன்பது மாணவர்கள் ஒரு வகுப்பில் இருந்தாலும் அந்த வகுப்புக்கு ஒரு உபாத்தியாயர் இருக்கக்கூடும். அதிலும். ஒரு வகுப்புக்கு ஒரு உபாத்தியாயர் என்று சொன்னால் நல்லதாக இருக்கும். தற்போது நாலைந்து வகுப்புக்கு ஒரு உபாத்தியாயர் இருக்கிறார். மாணவர்-உபாத்தியாயர் ரேஷியோ வைத்துப் பார்த்தால் நான்கு வகுப்புக்களுக்கும் ஒரே உபாத்தியாயர் இருந்து நடத்தவேண்டுமென்ற நிலைமை ஏற்பட்டால் அஷ்டாவதானம், சதாவதானம் செய்யக்கூடிய நிலைமைதான் எடுக்கவேண்டியிருக்கும். ஒவ்வொரு வகுப்புக்கு என்று மாணவர் உபாத்தியாயர் ரேஷியோ இருப்பது நல்லதாக இருக்கும். 30-க்கு அதிகம் ஒரு வகுப்பில் மாணவர்கள் இருப்பது சரியாக இருக்காது. அதற்கு மேல் மாணவர்கள் இருந்தால், இரண்டு வகுப்புக்களாகப் பிரிக்க வேண்டுமென்று திட்டவட்டமான விதி இருக்கவேண்டும்.

உபாத்தியாயர் நிலைமையைப் பார்த்தால், அவர்கள் சம்பளத்திலே, பல்வேறு ஏற்றத் தாழ்வுகள் இருக்கின்றன. அவை மாற்றப்படவேண்டும். உபாத்தியாயர்களைத் தெரிந்தெடுக்கக்கூடிய முறையிலே தற்சமயம் இருக்கும் முறை மாறவேண்டும். பப்ளிக் சர்விஸ் கமிஷன் கையில் அந்த அதிகாரத்தைக் கொடுக்கவேண்டும். தெரிந்தெடுக்கப்பட்டவர்களுக்கு நிரந்தர உத்தியோகம் கிடைக்கும் என்ற உறுதி இருக்கவேண்டும். எத்தனை உபாத்தியாயர்கள் தேவையாகுமோ அத்தனை உபாத்தியாயர்கள் தேர்ந்தெடுத்து அதன் பிறகு அவர்களுக்கு பயிற்சி (ட்ரெய்னிங்) கொடுக்க வேண்டும். இப்படிப் பயிற்சி பெற்ற உபாத்தியாயர்கள் வேலை இல்லாமல் இருக்கக்கூடாது. அந்த முறையிலே இருந்தால் ஒட்டு மொத்தமாக எத்தனை உபாத்தியாயர்கள் நாட்டுக்குத் தேவையோ அதற்குத் தகுந்த முறையில் வருஷா வருஷம் தெரிந்தெடுப்பதற்கு முடியும். கன்யாகுமாரி, செங்கோட்டை பகுதிகளில் பப்ளிக் சர்விஸ் கமிஷனால் தேர்ந்தெடுக்கப்பட்ட உபாத்தியாயர்கள் வேலை இன்றி கஷ்டப்பட்டு, அவல நிலையில் இருக்கிறார்கள். ஓராசிரியர் நிலைமையைப்பற்றி எனக்கு முன் பேசிய மெம்பர்கள்



8th November 1957] [Sri K. Sattanatha Karayalar]

குறிப்பிட்டார்கள். இவர்களுடைய நிலைமை நல்ல முறையிலே சர்க்கார் பரிசீலிப்பது நன்மையாக இருக்கும். இவர்களுக்குத் திரும்ப பயிற்சி கொடுக்கவேண்டுமானால், பயிற்சி அடையும்போது 18 ரூபாய் கிடைக்கும். எழுபத்தைந்து ரூபாய் சம்பளம் வாங்கிக்கொண்டிருந்தவர்கள் 18 ரூபாய் கிராண்டு வாங்கக்கூடிய நிலைமையில் இருக்கிறார்கள். கன்யாகுமரி உபாத்தியாயர்களைப் பொறுத்தவரையில் அவர்களுக்கு அதுவும் இல்லை. ரூ. 18-ம் கூட இல்லாத முறையில் அவர்களுக்கு எந்த விதமான கிராண்டும் இல்லாத முறையில் அவர்கள் வேலை செய்ய வேண்டியிருக்கிறது. இதையெல்லாம் நல்ல முறையில் கவனித்து வெள்ளை அறிக்கையை அதிசீக்கிரமாகச் சட்டமாக்கிக்கொண்டு வருவார்கள் என்ற நன்னம்பிக்கையோடு என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

Sri K. ANBAZHAGAN : சட்ட மன்றத் தலைவர் அவர்களே, இந்த நாட்டினுடைய இன்றியமையாத ஒரு கடமையான கல்வித் துறையைக் குறித்து பல சீர்திருத்தங்களை நிறைவேற்றவேண்டும் என்ற நல்ல எண்ணத்தோடு பல ஆண்டு காலமாக முயற்சித்து ஒரு வெள்ளை அறிக்கையை இந்த அரசாங்கம் இப்பொழுது சட்ட மன்றத்திற்கு அளித்திருப்பதற்காகப் பாராட்டைத் தெரிவித்துக்கொள்கின்றேன். 10–35 a.m.

இன்று வழங்கப்பட்டிருக்கிற வெள்ளை அறிக்கை, பெயரளவிலேகூட எனக்கு ஒரு திருத்தம் தோன்றுகிறது. White paper என்று ஆங்கிலத்தில் வழங்குவதை தமிழிலே வெள்ளை அறிக்கை என்று குறிப்பிடுவது "idiomatic usage" என்று சொல்லப்படுகிற முறையிலே பொருந்துவதாகாது. வெள்ளை அறிக்கை என்றால் அறியாமையைக் காட்டுகிற அறிக்கை என்ற கருத்து அதில் அடங்கியிருக்கிறது என்று குறிப்பிட விரும்புகிறேன். இங்கு வழங்கப்பட்டிருக்கிற அறிக்கையை 'முதல் அறிக்கை' அல்லது 'பச்சை அறிக்கை'—பச்சைத் தமிழர்கள் என்று நண்பர்கள் குறிப்பிடுகிறார்களே அந்த முறையில்—என்று குறிப்பிடலாம். முதல் அறிக்கை அல்லது பச்சை அறிக்கை என்று குறிப்பிடுவது நல்லது என்ற எண்ணத்தையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இத்தகைய நல்ல திருத்தங்களை சட்ட மன்றத்தில் பேசிக்கொண்டிருக்கிற நேரத்தில், சட்ட மன்றம் இதை விவாதிப்பதற்கு அதிக உரிமை பெற்றிருக்கிறதே தவிர, இந்த நாள் வரை விவாதிக்கிற முடிவுகள் அரசாங்கத்தாரால் ஏற்றுக்கொள்ளப்படும் என்று கருதியோ அல்லது அதற்கான தக்க சூழ்நிலை இருப்பதாகவோ நான் உணரவில்லை. ஏனென்று கேட்டால், ஒரு வடிவத்தில் வைத்து, இந்த வடிவத்தை நிறைவேற்றப் போகிறோம் என்ற நிலைமையிலே இன்று வழங்கியிருக்கிறார்கள். உண்மையாகவே திருத்தத்தை நிறைவேற்றவேண்டும், ஏதேனும் புதிதாக வந்திருப்பவர்களுக்குத் தகுதி இருக்குமானால் இந்த வெள்ளை அறிக்கையை இப்பொழுதுதான் சட்ட மன்றம்—புதிதாக அமைந்திருக்கிற சட்ட மன்றம் என்று காரணத்தால், தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் முழு பிரதிநிதித்துவ உரிமையோடு அவர்களுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்லி திருத்துவதற்கு மறுபடியும் ஒரு செலெக்ட் கமிட்டியோ அல்லது ஸ்டாண்டிங் கமிட்டியோ—கல்வித் துறையைப்பற்றி ஆலோசிப்பதற்கு, அரசாங்கம் நியமிக்க முன்வந்திருந்தால் திருத்தங்கள் நிறைவேறும் என்ற கருத்தை நான் தெரிவிக்கின்றேன்.

அமைச்சர் அவர்கள், இதையே ஒரு சட்டமாக ஆக்குவதற்கு கருதுவதாகவும், அதற்கான காரணங்களைச் சொல்லும்போது பல பேர் புது அமைச்சர்கள் வரும்போது தங்கள் தங்களுடைய திறமையைக் காட்டுவார்கள், கட்சி தன்னைப் பலப்படுத்திக்கொள்ள நல்ல முறையில் உருவாக்குகிறோம் என்ற தவறான நினைப்பிலே பல்வேறு திருத்தங்கள் செய்ய முன்வருவார்கள், அதனால் கல்வித் துறைக் குழப்பம் வரும். அப்படி ஏற்படாமல் நான் ஒரு சட்டம் செய்துவிடலாம் என்று கருதுகிறேன் என்ற கருத்தைத் தெரிவித்தார்கள்.

[Sri K. Anbazhagan] [8th November 1957

என்னைப் பொறுத்தவரையில், இப்பொழுது வந்திருக்கிற ஒரு திட்டமானது நிரந்தரமான நன்மை பயக்கும் என்ற முழு நம்பிக்கையை எப்படி நாம் பெறமுடியும் ? அந்த முழு நம்பிக்கையைப் பெறமுடியாத போது, இதைச் சட்டமாக ஆக்குகிறோம் என்றால், இதிலே தவறுகள் ஏராளமாக வருகிறபோது எளிதாகத் திருத்திக்கொள்ள முடியாத நிலைமைதான் ஏற்பட்டு, அரசியல் கட்சிகள் தங்கள் தங்கள் பலத்தைக் காட்டிக் கொள்ளக்கூடிய நிலைமை ஏற்படுமானால், பெரும் தவறுகள் ஏற்படும். சட்டமாக்குவதாகச் சொல்வது, நல்ல அளவுக்கு இதை அனுபவப்பூர்வமாகப் பார்த்து, பயிற்சியிலே பார்த்து, இன்றைய தினம் இருக்கும் அமைச்சர் ஐந்து ஆண்டுகள் நிச்சயமாக இருப்பார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது, ஆகவே, மூன்று, நான்கு ஆண்டு பயிற்சியிலே பார்த்து, குற்றங்குறை இல்லை என்று கருதுவோமானால், அப்பொழுது வேண்டுமானால் ஒரு அடிப்படைச் சட்டத்தை **Basic Law** என்ற அளவுக்குச் சட்டம் கொண்டுவரலாமே தவிர, கடைசி வரையிலும் எல்லை வைத்து சட்டம் கொண்டுவருவது நல்லதும் அல்ல, தேவையும் அல்ல. ஆளும் கட்சியினர் தக்க பலம் உள்ளவர்கள் என்ற காரணத்தால் ஒரு ' கன்வென்ஷன் !' ஏற்படுத்திக்கொள்ளவேண்டும். பொதுவாகவே, கல்வித் துறையில் அடிக்கடி அமைச்சர் தலையிடுவதில்லை,—தலையிடுவது நிர்வாகத்தைப் பொருத்து இருக்கலாமே தவிர, அதிலுள்ள பாடத் திட்டத்தைக்குறித்தோ அமைப்பு முறையைக் குறித்தோ அடிக்கடி நாங்கள் தலையிடமாட்டோம் என்று இப்பொழுது உள்ள கல்வி அமைச்சர் நிர்ணயம் செய்து, வருகிற அமைச்சர்கள் பின்பற்றுமாறு ஒரு கன்வென்ஷன் ஏற்படுத்துவது நல்லதே தவிர, சட்டத்தை ஏற்படுத்துவது அவ்வளவு நல்லதல்ல.

மற்றொரு கருத்து சொல்வேன். மிகப் பெரிய மேதைகள்கூடி இந்தியாவின் அரசியல் சட்டத்தை அல்லும் பகலும் முயற்சி செய்து திருத்தித் தந்தார்கள், உருவாக்குகிறார்கள். என்றாலும் தேவைப்படாத பிரிவுகளைக் கான்ஸ்டிட்யூஷனிலே அமைத்த காரணத்தால் 14 வயது வரை கட்டாயக் கல்வி ஏற்படவேண்டுமென்று கான்ஸ்டிட்யூஷனிலே இருந்தும் அதை உண்மையாகவே மதிப்பவர்கள்கூட நிறைவேற்ற முடியாத நிலைமையை அவர்கள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். கான்ஸ்டிட்யூஷன் மாறா விட்டாலும்கூட, நிலைமை கான்ஸ்டிட்யூஷனை மாற்றுகிற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, அவ்வப்போது விரிவான சட்டம் கல்வித் துறையைப் பொறுத்தவரை நல்லதல்ல. மேலும், கல்வித்துறை ஜனநாயகத்திலே பயன்படவேண்டுமானால், கல்வியிலே நிபுணர்களாக இருப்பவர்கள் சற்று அதிக உரிமை பெற்ற அந்த நிபுணர் கருத்துக்கு ஒத்துவராவிட்டால் தங்களுடைய கருத்தை மாற்றுவது மூலமாக பல்கலைக் கழகத் துணைவேந்தர்களாக இருக்கும் சிலருக்கு ஆங்கிலத்தில் இருக்கும் ஆசை தமிழிலே வர வேண்டும். அப்படி வராது போகின்ற நிலைமை இருக்குமானால் மக்களிடத்தில் இருக்கும் உணர்ச்சியை எடுத்துக்காட்டி, சட்ட மன்றம் ஆலோசனை கூறி, அதன் மூலமாக நிபுணர்கள் மூலமாக தக்க விதமாகத் திருத்தங்கள் கொண்டுவரவேண்டுமென்று வற்புறுத்த விரும்புகிறேன்.

சட்டமாக உருவாக்கிக்கொள்வது கல்வித் திட்டத்தை அரசியலுக்கு அடகு வைப்பதுபோல் ஆகிவிடும். இதேபோல், முன்னால் கூடிய இந்தச் சபையில் இதே சட்ட சபையில் கல்வி அமைச்சராக இருப்பவர் அப்பொழுது ஒரு திருத்தம் கொண்டுவந்தார்கள். கொண்டுவந்தபோது சட்டமாக்காமல் இருந்தால் தமிழ் நாடு தப்பியது என்று நம்புகிறேன். சட்டமாகியிருந்தால், பிடிவாதம் அதிகமாக தமிழ் நாட்டுக்குத் தீமை அதிகமாகி கட்சி மாறுபாடுகள் வளர்ந்திருக்கக்கூடும். ஆகவே, அந்த அடிப்படையிலே அனுபவம் பெற்ற பின்னர், தேவைப்படுகிற அளவுக்கு அடிப்படைச் சட்டத்தை நிறைவேற்றலாமே தவிர, ஒரேயடியாக சட்டம் தேவை இல்லை. என்பதையும் இன்றையதினம் கல்வித் திட்டத்தைக் குறித்து திருத்தங்கள் செய்கிறபோது சட்ட மன்றத்தின் பிரதிநிதிகள் ஓரளவு அதில் கலந்து தீர்மானிக்கக்கூடிய வாய்ப்பு பெறும்படி கல்வி அமைச்சர் அவர்கள், பொருளாதார முக்கியத்துவத்துக்கும், மற்ற எல்லாவற்றிக்கும் தலையாக இருக்கிற காரணத்தால், நாம் மாறி வருகிற ஒரு சமுதாயத்தின் பிரதிநிதியாக இருக்கும் காரணத்தால், கல்வித் திட்டத்தை மாற்றியமைக்க வேண்டிய நினைப்பு பலருக்கு ஏற்படுகிற காரணத்தால் ஒரு ஸ்டாண்டிங் கமிட்டி என்று பெயரில், " நிலையான கல்விக் குழுவை " அமைச்சர்வர்கள் ஏற்படுத்திக்கொள்வது—சட்ட மன்றப் பிரதிநிதிகள் துணைகொண்டு, மேல் சபையின் பிரதிநிதிகள் துணைகொண்டு—நல்லது என்று நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.



8th November 1957] [Sri K. Anbazhagan]

அடுத்தாற்போல், இந்த அளவுக்கு கல்வித் துறையிலே சீர்திருத்தம் செய்யும் நேரத்திலே, முதல் மூன்று வகுப்பு பிள்ளைகளுக்கு புத்தகங்கள் நல்ல முறையில், எளிய முறையில் கிடைக்கவேண்டுமென்ற நல்ல எண்ணத்தோடு அரசாங்கம் அவைகளை தாஙகளே வெளியிடக்கூடுமா என்று முயற்சிப்போம், அல்லது அதற்காக ஒரு கார்பரேஷன் நியமிப்பதற்கு முயற்சிப்போம் என்று தெரிவித்தார்கள். அதுபற்றி நான் ஒன்று சொல்லுவேன். அரசாங்கம் இத்தகைய பொறுப்பை ஏற்றுக்கொள்ளுவது இன்றைய தினம் நம்முடைய அரசாங்கத்திற்கு ஏற்றது அல்ல என்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். நிபுணர்கள் மிகுதியாக கல்வித் துறையிலே நமக்குக் கிடைத்தால்தான் நல்ல புத்தகங்களை உருவாக்க முடியும். இந்த நாட்டில் நிபுணர்களுக்கே பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது. ஆரம்பக் கல்விபற்றி திட்டவட்டமாக ஆராய்ச்சி இந்த நாட்டிலே இன்னும் நல்ல முறையிலே நடைபெறவில்லை. மேல்நாட்டு நிபுணர்கள் அந்த நாட்டுப் பிள்ளைகளின் கல்வியின் தரத்தை எளிமையாகவும், அழகாகவும், தெளிவாகவும் அமைத்திருப்பதுபோல், இந்த நாட்டில் இன்னும் தோற்றுவிக்க முடியவில்லை. நிபுணர்களுக்கு பஞ்சம் இருக்கின்ற நாட்டில் ஆசிரியர்கள் மாணவர்களுக்கு தங்களுடைய கருத்துகளை புத்தக வடிவிலே எடுத்துச் சொல்லுகிற பஞ்சம் இருக்கும் ஒரு நாட்டில், அரசாங்கம் இதை மேற்கொண்டுவிடுமானால், ' டோடலிடேரியன் கவரன்மெண்டு ', அதாவது ஜெர்மன், ரஷ்ய நாடுகளில் எதேசாதிகார மனப்பான்மையுடன் ஆட்சியாளர்கள் கல்வியை தங்களுடைய கைக்கு முன்னால் வைத்துக் கொண்டிருப்பதைப் போன்ற ஒரு சூழ்நிலை இங்கே உருவாகலாம்.' இன்றைய தினம் இருக்கும் கல்வி அமைச்சர் பரந்த மனப்பான்மையுடன் இருக்கலாம். நாளையதினம் வரப்போகும் கல்வி அமைச்சர் எப்படி இருப்பாரோ தெரியாது. ஆகையினால் தனிப்பட்டவர்கள் புத்தகங்கள் வெளியிடும் உரிமையில் எந்தக் காரணத்தை முன்னிட்டும் அரசாங்கம் குறுக்கிடவே கூடாது என்று நான் கருதுகிறேன். அதனால் தனிபட்ட முதலாளிகளுக்கு இடம் தருவதை நான் விரும்புகிறேன் என்பது அல்ல. புத்தகங்கள் வெளியிடப்படும் பொழுது புத்தகங்களிலே உள்ள கருத்துக்களை புத்தகப் பரிசீலனைக் குழு நன்றாக ஆராய்ந்து, இவை இவைதான் ஒப்புக்கொள்ளக்கூடிய கருத்துக்கள், இவை இவை ஒப்புக்கொள்ளக்கூடாத கருத்துக்கள் என்று முடிவு செய்வதைப்போல, குறைந்த விலையை தீர்மானம் செய்து, அந்த விலைகளிலே கிடைக்கின்ற புத்தகங்களைக்கூட ஒரு ஆண்டுக்கு 12 அல்லது 24 புத்தகங்கள் என்று நிர்ணயித்து, ஒரு ஜில்லாவுக்கு இரண்டு புத்தகம், இந்தெந்த வகுப்புக்கு இந்தெந்த இரண்டு புத்தகங்களைத்தான் பாடமாக வைத்துக்கொள்ளவேண்டுமென்று நிர்ணயித்துவிட்டால், போட்டியை ஒரு கணிசமான அளவுக்கு முறைப்படுத்தி, ஒழுங்குபடுத்தி, நல்ல புத்தகங்கள் வெளி வருவதற்கு வாய்ப்பு அளிக்கலாம். நாற்பது புத்தகங்கள் பரிசீலனைக்கு வந்தால் 24 சிறந்த புத்தகங்களை எடுத்துகொண்டு, 16 புத்தகங்களை கைவிட்டுவிடுவார்கள் என்ற நிலைமை இருந்தால், அவரவர் போட்டி போட்டுக்கொண்டு சிறந்த முறையில் புத்தகங்களை எழுதி, சிறந்த முறையில் அச்சிட்டு, தக்க விலையில். தருவதற்கு ஏற்பாடு செய்வார்கள். அதற்கு மேல் பள்ளிக்கூடங்களில் கூட்டுறவு சங்கங்கள் உறுவாக்குவதற்கு ஒரு வாய்ப்பு அளிக்கவேண்டுமானால், அத்தகைய நிலயங்கள் மூலமாகத் தான் புத்தகங்கள் விற்கப்பட வேண்டுமே தவிர தனிப்பட்டவர்கள் அவைகளை விற்கக்கூடாது என்ற ஏற்பாட்டைச் செய்யவேண்டும். இந்த முறையிலே லாபத்தை குறைக்கலாமே தவிர, புத்தகத்தை வெளியிடும் முறையிலே தக்க கவனம் செலுத்தலாமே தவிர, நல்லதோர் குழுவைக் கொண்டு புத்தகங்களை கண்காணிக்கலாமே தவிர, இந்தப் பொறுப்பை அரசாங்கம் ஏற்றுக்கொண்டால்

[Sri K. Anbazhagan] [8th November 1957

அரசாங்கத்திற்குக் குறைதான் வளரும் என்பதைதான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இப்பொழுது அரசாங்கம் வெளியிடுகிற ஈ.எஸ்.எல்.ஸி. புத்தகங்களிலே இரண்டு பக்கங்களுக்கு 4 எழுத்து தவறுகள் எடுத்துக்காட்ட முடியும். அதேபோல்தான் பல்கலைக் கழகம் வெளியிடும் எஸ்.எஸ்.எல்.ஸி. புத்தகங்களிலும் எழுத்துப் பிழைகள் இருக்கின்றன. ஆகவே, அரசாங்கத்தார் ஆரம்பக் கல்வித் துறையிலேயே தங்கள் கடமையை நிறைவேற்ற ஆரம்பித்தால் அரசாங்கத்தினுடைய ஆரம்பக் கல்வியே பூஜ்யமாகிவிடும் என்ற நிலைமை ஏற்படும் என்ற காரணத்தினால், அடிப்படைத் திட்டத்திலேயே அரசாங்கம் கைவைக்கவேண்டாம் என்று கேட்டுக்கொள்ளுகிறேன், கண்காணிப்பு திட்டத்தைக் கைக்கொள்ளவேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகிறேன்.

மூன்றாவதாக, இன்றைய தினம் கல்வித் துறையிலே இருக்கின்ற பெரிய பிரச்னை மொழியை எப்படி கற்றுக் கொடுப்பது, சொல்லித் தருவது என்பது. ஹிந்தி படிக்கும்படி எந்த முறையிலே செய்வது, கெஞ்சிக் கேட்பதா, மிஞ்சிச் சொல்லுவதா என்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஹிந்தி படிக்கச் செய்ய வேண்டுமென்ற அக்கரையிலே இந்த நாட்டு அரசாங்கம் பங்கு எடுத்துக் கொள்ளக் கூடாது என்று நான் எண்ணுகிறேன். ஹிந்தியை வெறுப்பவன் என்ற காரணத்தினால் அல்ல. மூன்று மொழிகளை தமிழ் நாட்டுப் பிள்ளைகள் கற்கவேண்டுமென்று சொல்லுவதை தவறு என்று கண்டிக்கவேண்டுமென்பதற்காகத் தான். ஹிந்தியை வெறுப்பது அரசியல் அடிப்படையில் அல்ல. ஹிந்தி கூடாது என்று சொல்லுவது ஹிந்தியின் செல்வாக்கு தமிழை தாழ்த்திவிடும் என்ற எண்ணத்தினால்தான். Hindi or any other Indian language என்ற குறிப்பிலே, இரண்டாவது மொழியாக ஹிந்தி இடம் பெற்ற போதிலும், Hindi or any other Indian language என்று குறிப்பிட்டிருக்கிற காரணத்தினாலே, முதல் மொழி இல்லாத பிற மொழி என்ற காரணத்தினாலே அந்த நேரத்திலும் தாய் மொழி படிக்கும் வாய்ப்பு கெட்டு, வேறு எந்த மொழியையும் படிக்கவேண்டிய மனப்பான்மை சமஸ்கிருத பற்றுடைய பெரியவர்களுக்குக் கூட ஏற்படாத காரணத்தினால், ஹிந்தியைப் படிக்கவேண்டுமென்ற அந்த மனப்பான்மை ஏற்படுகின்ற காரணத்தினால், ஹிந்தி புகுத்தப்படுகிறது என்பதை குறிப்பிடுகிறேன். இது அரசாங்கத்தின் கடமை தானே என்று அமைச்சர் அவர்கள் கேட்கலாம். இந்த நாட்டுப் பிள்ளைகள், பிறநாடுகளில் மூன்று மொழிகளை படிப்பதைப் போல ஏன் படிக்கக்கூடாது என்று நிபுணர்கள் சிலர் சர்ச்சையை எழுப்பலாம். ஆனால் அரசாங்கத்தினுடைய கடமை ஹிந்தியைப் புகுத்துவதாயிருந்தாலும், தமிழை அடிப்படையாக வைத்து எண்ணிப்பார்த்தால் தவறு புலனாகும். பிற நாடுகளில் மூன்று மொழி படிக்கின்ற பிள்ளைகள் தனித்தனியாக எழுத்துக்களை (alphabets) படிக்காமல், அடிப்படை எழுத்துக்களை, மூல எழுத்துக்களை படித்துவிட்டு, இரண்டு, மூன்று மொழிகளை படிக்கிறார்கள். அந்த மொழிகளுக்கிடையே ஒலி (Phonetic) ஒற்றுமை இருக்கிறது. அதனாலே படிப்பது எளிது. மூன்றாவதாக அந்த மொழிகளுக்கு மிக வளர்ந்த இலக்கணம் (Grammar) இல்லாமல் இருப்பதால், அடிப்படையில் ஒலி ஒற்றுமையுடன் கூடிய மூல எழுத்துக்களை படித்துவிட்டு, மூன்று மொழிகளை படிக்கக்கூடிய வாய்ப்பை அவர்கள் பெற்றிருக்கிறார்கள். நான்காவதாக ஒரு மொழியை படிப்பது என்று சொன்னாலும் கூட, சாதாரணமாக அந்த மொழியின் கருத்துக்களை தெரிந்து கொள்ளுவதற்கு படிக்கிறார்கள். நம் நாட்டில் எந்த மொழிப் படிப்பை எடுத்துக்கொண்டாலும் சரி, ஆங்கிலத்தை எடுத்துக் கொண்டாலும் சரி, அதில் பூரணத்துவம் பெறவேண்டுமென்று கருதுவதைப் போல அவர்கள் கருதாத காரணத்தினாலே மூன்று மொழி சுலபமாக படிக்கிறார்கள். "Working knowledge" அதாவது ஒரு மொழியிலே ஏதேனும் சில கருத்துக்கள் வழங்குமானால், அந்தக் கருத்துக்களை புரிந்துகொள்ளுவதற்கு அந்த நாடுகளிலே அந்த மொழியை படிக்கிறார்கள். இந்த நாட்டில் பிற மொழி படிக்கவேண்டுமென்றால், ராமசாமி முதலியாரைப்போல மிக அழகாக பேசவேண்டும். ஸர் ஸி. பி.



8th November 1957] [Sri K. Anbazhagan]

ராமசுவாமி அய்யரைப் போல பேசவேண்டுமென்ற நினைப்பு மனப்பான்மை வளர்ந்துகொண்டிருக்கிறது. அது பிற நாடுகளில் பெரும்பாலும் கிடையாது.

தமிழ் மொழியினுடைய அளவையும், தரத்தையும் எண்ணிப் பார்த்தால், தமிழ் மொழி படிப்பது இரண்டு மொழிகள் படிப்பதற்கு சமம். இந்த நாட்டில் இதற்கு முன்னாலே "Classical Language" புராதன மொழி சமஸ்கிருதம் படித்தால்தான் பழங்கால நாகரீகங்களைத் தெரிந்துகொள்ள முடியும் என்ற தவறான மனப்பான்மை புகுத்தப்பட்டு கல்வித் துறையிலே அது இடம் பெற்றிருந்தது. தமிழைப் பொறுத்த வரையிலே நான் சொல்லுவேன், நவநாகரீக மொழியிலும் ஒன்று அது. புராதன மொழியிலும் ஒன்று அது. மிகப் பழங்காலத்து பண்பாடு, சிறந்த இலக்கியங்கள் தமிழில் இல்லை, வட மொழியில்தான் இருக்கின்றன என்ற கருத்தை, தமிழ் பண்பாட்டை உணர்ந்தவர்கள், தமிழ் வரலாற்றை உணர்ந்தவர்கள், தமிழ் மொழியை அறிந்தவர்கள் தவறாகவும் ஒப்புக்கொள்ளமாட்டார்கள். எப்படி "Classical Language" என்றால் ஸமஸ்கிருதம் என்று கருதும் மனப்பான்மை புகுத்தப்படுகிறதோ அது போன்று இந்தியாவுக்கு ஒரு மொழி என்றால், ஹிந்தி படிக்கவேண்டும் என்ற கருத்தும், "International Language" என்றால் ஆங்கிலத்தைப் படிக்கவேண்டும் என்ற நியாயமான கருத்தும், இவைகளெல்லாம் சேர்ந்து தமிழைப் படிக்கவேண்டுமென்ற ஒரு பெரிய பாரத்தை உண்டாக்குகிறது. ஆகவேதான் நான் கேட்டுக்கொள்ளுகிறேன், தமிழ் பிள்ளைகள் மூன்று மொழி படிக்கவேண்டுமென்று நிலைமை அடியோடு இருக்கக்கூடாது. அரசியல் கருத்து வைத்துக்கொண்டு பார்க்காமல் ஹிந்தியை நல்ல எண்ணத்தோடு படிக்கலாம், அது ஜனநாயகப் பண்பாட்டிற்கு உகந்ததாக இருக்கும் என்று சொல்லலாம். பெரிய படித்தவர் ஒரு தலைவர் வியாபாரத்திக்காக படிக்கலாம் என்று சொல்லியிருக்கிறார். அப்படி வியாபாரத்துக்காக படித்தாலும் சரி, எந்த எண்ணத்தோடு படித்தாலும் சரி, அதன் மொத்தமான விளைவு ஹிந்தியை புகுத்துவதற்குச் சாதகமாகத்தான் இருக்குமே தவிர, நம் நாட்டு மக்களுக்கு நாட்டு மொழிக்கு சாதகமாகாது.

நேற்றைய தினம் ஒரு அம்மையார் பேசும்பொழுது அன்பழகன் ஹிந்தி படித்துவிட்டு ஹிந்தியை எதிர்க்கிறார் என்ற கருத்தை தெரிவித்தார். அவர் என்னை இவ்வளவு பெரிய மனிதராக ஆக்கியதற்காக என் நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். நான் சிறு பிள்ளையாக இருக்கும்பொழுது 1934, 1935, 1936 ஆகிய மூன்று ஆண்டுகளில் நான் ஹிந்தி படித்தேன். நான் படித்த பள்ளிக்கூடத்தில் மட்டும் அப்பொழுது தேசீய இயக்கம் உணர்ச்சி மிகுதியாக இருந்த காரணத்தினாலே, என்னுடைய தந்தை தேசீய இயக்கத் தலைவராக இருந்த காரணத்தினாலே, அப்பொழுது ஹிந்தி படித்தேன். ஹிந்தி படித்து 100-க்கு 60 எண்ணும் பெற்றேன். ஆங்கிலத்திலே அதனால் கொஞ்சம் எண் குறைவு கூட ஏற்பட்டது. என்னுடைய ஆசிரியர்கள் ஹிந்தியிலே நான் ஆர்வம் காட்டியதற்காக தக்க மதிப்பு அளித்தார்கள். அப்பொழுது என்னுடைய வயது 13. 33 வயதில் இப்பொழுது ஹிந்தியில் அச்சடிக்கப்பட்டிருக்கின்ற "கார்டை" பார்த்தபொழுது, என்ன எழுதியிருக்கிறது என்று தடவி தடவிப் பார்த்தேன், எனக்குத் தெரியவில்லை, ஹிந்தி படித்து 20 ஆண்டுகளுக்குப் பின்னர். நான் ஒரு கல்லூரியில் 13 ஆண்டுகள் ஆசிரியராக இருந்தேன். பல்கலைக் கழகத்தில் படித்தேன். ஹிந்தியைப் பயன்படுத்த வேண்டிய அவசியம் எனக்கு ஏற்படவில்லை. தமிழ் மக்களோடு நான் கலந்து வாழ்ந்த காரணத்தினால், அவர்களோடு உராய்ந்து வாழ்ந்த காரணத்தினால், ஹிந்தியைப் படிக்கவேண்டிய அவசியமே ஏற்படவில்லை, அது நினைவிலும் நிற்கவில்லை, அது பின்னாலும் பயன்படவில்லை. அது போலவே ஒரு மொழி வாழ்க்கையில் கலந்ததாக இருந்தால் தான் அது பயன்படும். அப்படி வாழ்க்கையிலே கலக்காத மொழியை பள்ளிப் பிள்ளையாக இருக்கும்பொழுது கற்றால், அது எதிர்காலத்தில் பயன்படாது. அப்படி ஒரு மொழி தேவைப்படுமானால், தேவைப்பட்ட கட்டத்திலே அதைப் படிக்கலாம் என்ற கருத்தினை தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

மற்றொன்று சொல்லுகிறேன். இந்த நாட்டு இளைஞர்களைப்பற்றியும், மாணவர்களைப்பற்றியும் ஆராய்ச்சி பூர்வமான கருத்து ஐந்து வயது முதல் பதினைந்து வயது வரையில் அறிவு ஏராளமாக வளருகிறது என்பது தான். இதை ஸி. பி. ராமசுவாமி அய்யர் அவர்கள் தெரிவித்திருக்கிறார். ஐந்து வயதிலிருந்து பதினைந்து வயது வரை அறிவு வளரும்பொழுது, மூன்று மொழி படிக்கவேண்டுமென்றால், அது அறிவு வளர்ச்சியைத் தடுத்துவிடும். அறிவு வளர்ச்சி பல மொழிப் படிப்புக்கு உதவாது. பல மரம் கண்ட தச்சன் எந்த மரத்தையும் வெட்டுவதில்லை என்ற பழமொழியைப் போல, அறிவு வளர்ச்சி ஏற்படும்பொழுது மூன்று மொழி படித்தால் எந்த மொழியிலும் கவனம் செலுத்தமுடியாது நிலைமை ஏற்படும். ஆகவே, தமிழ் மொழியை இரண்டாவது துறையில் படிக்கக்கூடிய வாய்ப்பு ஏற்படக்கூடிய முறையில், " any other Indian language " என்று இருப்பதை **" any other Indian language including the regional language "** என்ற கருத்தில் இந்தத் திருத்தம் இருக்கவேண்டுமென்று நான் விரும்புகிறேன். அதற்கு அடுத்தபடியாக நான் தெரிவிப்பேன், இந்த நாட்டில் நல்ல கல்வி அறிவை வளர்ப்பதற்கு, அதிலும் கட்டாயக் கல்வியை வளர்ப்பதற்கு 14 வயது வரையில் கட்டாயக் கல்வியைப் போதிக்கவேண்டுமென்று நமது அரசியல் அமைப்பில் கூறிய போதிலும் நாம் அதை நிறைவேற்ற முடியாத நிலைமையில் இருக்கிறோம் என்ற கருத்தை பணம் இல்லை என்கிற காரணத்தைக் காட்டி அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். உண்மையாக பதினான்கு வயது வரையில் கட்டாயக் கல்வி போதிக்கும் திட்டத்தை நம்மால் நிறைவேற்ற முடியாவிட்டாலும், ஒவ்வொரு கட்டமாக நிறைவேற்றுவதற்கு நாம் இன்றைக்கே வழி வகுத்தால் பதினான்கு வயதுக்குள் கட்டாயக் கல்வியைப் போதிக்க இன்றைக்கே எட்டு வயது மாணவர்களுக்கு எல்லாம் கல்வி அளிக்க ஏற்பாடு இருக்கவேண்டும். இன்றைய தினம் இருக்கக்கூடிய கல்வி அமைப்பிலே உள்ள பல திண்டாட்டங்களை நான்காவது வகுப்பு வரையில் உள்ள ஒரு ஆரம்பப் பள்ளியில் படித்த மாணவன் எட்டாவது வகுப்பு வரையில் இருக்கும் பள்ளியில் சேர வேண்டுமென்றால் அவன் படித்துவிட்ட வகுப்புக்கு மேல் வகுப்பில் அவன் பரீட்சை வைத்து சேர்த்துக் கொண்டாலும் சேர்த்துக் கொள்ளப்படுவான், இல்லாவிட்டாலும் இல்லை ; எட்டாவது வகுப்பு வரையிலும் இருக்கும் ஹையர் எலிமெண்டரி பள்ளியில் படித்து முடித்தவன் உயர் நிலைப் பள்ளியில் சேரவேண்டுமென்றால் அவன் படித்துவிட்ட வகுப்புக்கு மேல் வகுப்பில் அவன் பரீட்சை வைத்து சேர்த்துக் கொண்டாலும் சேர்த்துக் கொள்ளப்படுவான், இல்லாவிட்டாலும் இல்லை என்று இப்படியாக இருக்கிற பல்வேறு வேலைகளை, திண்டாட்டங்களை எல்லாம் ஒழுங்குபடுத்துகின்ற முறையை சர்க்கார் வகுத்திருப்பதற்குப் பாராட்டுகிறேன். ஆனால் இப்படி ஒழுங்குபடுத்துகின்ற ஒரு முறையில் கிராமத்திற்கு ஒரு பள்ளிக்கூடம் தேவை என்று ஒப்புக்கொள்ளப்படுகிறபோது ஒவ்வொரு கிராமத்திலும் ஐந்தாவது வகுப்பு வரையில் ஒரு பள்ளிக்கூடத்தை நிறுவுவதற்கு அரசாங்கம் யோசிக்கவேண்டும். குறைந்தது ஐந்தாவது வகுப்பு வரையில் ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு பள்ளிக்கூடம் ஏற்படுத்துவதற்கும், அதற்குப் பின்னால் ஐந்தாறு கிராமங்களுக்கு ஒன்று நடுநாயகமான இடத்தில் எட்டாவது வகுப்பு வரையில் படிப்பதற்கு வசதியுள்ள ஒரு பள்ளிக்கூடத்தையும், அதற்குப் பிறகு பத்து கிராமங்களுக்கு ஒன்று நடுநாயகமான இடத்தில், இந்த கிராமங்கள் எல்லாவற்றுக்கும் மத்தியில் உயர்நிலைப் பள்ளி ஒன்றையும் ஏற்படுத்துவதற்கு வழிவகைகள் செய்தால் எல்லா மாணவர்களும், பத்து வயதுக்கு உள்ளாக இருக்கிறவர்கள் ஒரு மைல் தூரத்திற்குள்ளேயே சென்று படிப்பதற்கும், 13 வயது வரையில் மூன்று மைல்களுக்கு அதிகப்படாமல் போய்ப் படித்து வருவதற்கும், 16 வயதுக்கு மேல் ஐந்து மைல்கள் ஆனாலும் நடந்து போய்ப் படித்து வருவதற்கான ஒரு வாய்ப்பை ஏற்படுத்தினவர்களாக ஆவோம். ஆகையால் சர்க்காருடைய நோக்கம், செயல் முறை ஒவ்வொரு கிராமத்திற்கும் ஐந்தாவது வகுப்பு வரையில் ஒரு பள்ளிக்கூடத்தை ஏற்படுத்துவதாகவும், இம்மாதிரியான ஐந்து கிராமங்களைச் சேர்த்து அவற்றுக்கு நடுவில் எட்டாவது வகுப்பு வரையில் இருக்கும் ஒரு பள்ளிக்கூடத்தை ஏற்படுத்துவதாகவும், இம்மாதிரியான ஒரு ஐந்தாறு பள்ளிக்கூடங்களுக்கு நடுவில் எல்லாருக்கும் நடுவாக உள்ள ஒரு இடத்தில் உயர்நிலைப் பள்ளி



ஒன்றை ஏற்படுத்துவதாகவும் இருக்கவேண்டும் என்பது என் கோரிக்கை. அப்படி ஏற்படுத்தினால் ஒரு வட்டாரத்திலுள்ள எல்லா மாணவர்களுக்கும் வசதியாகப் படிப்பதற்கு முடியும். யாரும் பள்ளிக்கூடம் ரொம்ப தூரத்தில் இருக்கிறது, அதனால் படிக்க முடியவில்லை எனக் குறைப்பட்டுக் கொள்ளாத நிலைமையை உண்டாக்கி விட முடியும்.

அடுத்தபடியாக டைவர்சிஃபைட் கோர்ஸ் என்பதாகக் கொண்டு வந்திருக்கிறார்கள். தொழில் துறைக் கல்வி 9, 10, 11-வது வகுப்புகளில் மூன்றாண்டுக்கு ஏற்படுத்துவது நல்லதாக இருக்கலாம். எட்டாவது வகுப்பு வரையில் மற்ற துறையில் பயிற்சி அளிப்பது தான் ஓரளவு பொறுத்தமாக இருக்கக்கூடும்.

அதுமட்டுமல்ல, எட்டாவது வகுப்பு முடிவில் தனிப் பட்சை என்று இருந்ததின் தரத்தை இன்றைய தினம் ஓரளவு உயர்த்தியிருக்கிறார்கள். பாராட்டுகிறேன். தரத்தை உயர்த்தும் இடத்தில் பரீட்சை வைக்க முன் வந்தால் அந்த இடத்துப் பரீட்சையை எழுதிவிட்டு சர்டிபிகேட் வாங்கி விட்டு நின்றால் போதும் எனப் பலர் நின்று, வேறு துறைகளில் புகுந்துவிடக்கூடும். இது அவர்களுக்கு இடம் தருவதாய் இருக்கும்.

இவற்றோடு பேசிக் எஜுகேஷனை, ஆதாரக் கல்வியை ஒன்றுபடுத்தும் திட்டம் போட்டிருக்கிறார்கள். இன்னும்கூட ஆதாரக் கல்வி என்றால் என்ன என்பதை அரசாங்கம் தெளிவுபடுத்தவில்லை என்கிற கருத்து எனக்கு இருக்கிறது. மௌலானா அபுல்கலாம் ஆசாத் மத்திய சர்க்காரின் கல்வி அமைச்சர் பேசுகின்றபோது " பேசிக் எஜுகேஷன் என்பது ஒரு தொழிலை கற்றுக் கொடுக்கிற படிப்பு இல்லை. ஒரு தொழில் மூலமாகக் கல்வியைக் கற்றுக் கொடுக்கிற திட்டம் " எனச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் ஒரு தொழில் மூலம் கல்வியைக் கற்றுக் கொடுக்கிற திட்டமாக அது எந்த இடத்திலும் இல்லை. ஆனால் ஒரு தொழிலைக் கற்றுக் கொடுக்கிற திட்டமாக ஒரு சில இடங்களிலாவது இருந்து கொண்டிருக்கிறது. அந்தத் திட்டமும் செம்மையாக நடைபெறவில்லை. ஆதாரக் கல்வியைப் போதிக்கின்ற ஆசிரியர்களுக்கே பேசிக் எஜுகேஷன் பயிற்சி கொடுக்கிறபோது தக்களி சுற்றவும், தோட்ட வேலை செய்யவும் தான் சொல்லிக் கொடுப்பதாகச் சொல்லி இருக்கிறார்கள். அந்த அளவு அது குறைபாடு உடையதாய் இருந்தால் இந்த ஆதாரக் கல்வித் திட்டம் பயனளிக்குமா என்று கேட்டுக் கொள்கிறேன்.

இவற்றைப் பற்றியெல்லாம் விரிவாகப் பேச நேரம் இல்லை. ஆரம்ப ஆசிரியர்களுடைய குறை தீர்க்கப்படவில்லை. ஓராசிரியர் பள்ளியில் பணியாற்றுகிறவர் களுடைய குறைகளும் இன்னும் தீர்க்கப்படவில்லை. முன்பு அதைப்பற்றி கேட்டபோது விரைவிலேயே அந்தக் குறை தீர்க்கப்படும் என்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அமைச்சர் அவர்கள் சொன்னார், சொன்னார் என்று நாங்களும் நம்பி நம்பித்தான் இருந்து கொண்டிருக்கிறோம். அது எப்போது நிவர்த்தி செய்யப்படும் என்ற நிலைமை தெரியாது இருக்க, 18 ரூபாய் சம்பளம் வாங்கிக் கொண்டு வீட்டில், திண்ணியை கொடுத்துவிட்டு பள்ளிக்கும் போகும் நிலைமைதான் நீடித்துக் கொண்டிருக்கிறது. வேலைக்கு வைத்துக் கொள்ளும்போதே அவர்களுக்குச் சொல்லப்பட்டது, " உங்களுடைய வேலை இல்லாத் திண்டாட்டத்தை ஒழிப்பதற்காகத்தான் உங்களை இந்த ஓராசிரியர் பள்ளியில் நியமிக்கிறோம் " என்பதாக. வேலையில்லாத் திண்டாட்டத்தை நீக்குவதாகச் சொல்லி—புதியதொரு திண்டாட்டத்தைச் சோறு இல்லாத் திண்டாட்டத்தை அவர்களிடையே உண்டாக்கியிருக்கிறார்கள். இப்படி ஆரம்பப் பள்ளி ஆசிரியர்கள் எல்லாம் திண்டாடுகிற நிலைமை நாட்டில் இருந்து கொண்டிருந்தால் எப்படி இந்தக் கல்வித் திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்ற முடியும் ? ஆங்கிலத்தில் சொல்வார்களே **" Vicious circle "**, கேட்டுச் சுழல் என்பதாக, அந்தக் கேட்டுச் சுழலில் தான் இன்றைக்கு நாம் சிக்கிச் சுழன்று சுழன்று கொண்டு இருக்கிறோம். இத்தனை அறியாமை நாட்டில் இருக்கிறதே என்று கேட்டால் " மக்கள் படிக்கவில்லை. நூற்றுக்கு 80 பேர்கள் தற்குறிகள் " என்று பதில். இதற்கு என்ன செய்வது என்றால் " எல்லோரும் படிக்க வேண்டும் " என்று பதில். எல்லோருக்கும்

படிப்பதற்கு என்ன வழி என்றால் "கல்வித் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும்" என்று பதில். கல்வித் திட்டத்தை நிறைவேற்றுவதுதானே என்றால் "பணம் இல்லை" என்று முடிந்துவிடுகிறது. பணம் இல்லாத காரணத்தால் கல்வித் திட்டத்தை நிறைவேற்ற முடியவில்லை. கல்வித் திட்டத்தை நிறைவேற்ற முடியாத காரணத்தால் எல்லோரும் படிக்க வழி இல்லை. படிக்க வழியில்லாத காரணத்தால் நாட்டில் 80 சத விகித தற்குறிகள்தான் இருக்கிறார்கள். அதனால் என்ன ஆகிறது? மக்கள் ஜனநாயகப் பண்பைப் பெறவில்லை. ஜனநாயக ஆட்சி இன்றைய தினம் தடுமாறுகிறது. இந்தக் கேட்டுச் சுழலிலேயே திரும்பத் திரும்பச் சுற்றி வந்து கொண்டிருக்கிறோம். இதிலிருந்து வெளியில் போவதற்கு ஏதேனும் ஒரு வழியைக் கண்டு பிடித்தாகவேண்டும். பணம் இல்லை என்றால் பணத்தைத் திரட்டியாகவேண்டும். பணம் இல்லை என்று சொல்லி பொறுப்பைப் புறக்கணித்து, தட்டிக் கழித்து இருக்க முடியாது. இந்தச் சர்க்கார் மத்திய சர்க்காரோடு இணக்கமான ஒன்றாதலால் அதற்குரிய திட்டங்களை வகுத்து, இந்தச் சர்க்காரின் கருத்தை அங்கே வலியுறுத்தி, மத்திய சர்க்காரின் உதவியைப் பெற்றாவது நிறைவேற்றியாகவேண்டும். இல்லை என்றால் மத்திய சர்க்காரின் கீழ் இருப்பதற்கே லாயக்கில்லை.

கல்வித் துறைக்குப் பிரமாதமான திட்டங்களை எல்லாம் போட்டுவிட்டு, 1,100 கோடி ரூபாய் செலவழிக்கப் போவதாக ஆசைக் காட்டி விட்டு, 350 கோடிக்கு இன்று வந்து அது நிற்க, அதிலும் ஒவ்வொரு ராஜ்யத்திற்கும் ஒரு சிறு பங்குதான் கொடுக்கப்படும் என்று அவர்கள் சொன்னால், கல்வித் திட்டத்தை நிறைவேற்ற அதனால் முடியவில்லை என்றால் தன்னுடைய மதிப்பை உயர்த்திக்கொள்வதற்காகவாவது மத்திய சர்க்காருக்கு ஒரு வழி காட்டும் படியாக இவர்கள் நடந்து கொள்ள வேண்டும். அப்படி இல்லாததனால் தான் இன்றைக்கு கல்வித் திட்டத்தை வைத்துக்கொண்டு தடுமாறுகிற நிலைமையில் நாம் இருக்கிறோம். பல்கலைக் கழகத்திலும் இந்த நிலைமை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. கீழே இருந்து வருகின்ற மாணவர்களுக்கு ஏற்ப கல்லூரிப் படிப்பை அமைப்பதற்குப் பதிலாக—வண்டிக்கு முன் மாட்டைக் கொண்டுவந்து கட்ட முடியவில்லை—மாடு மேய்ந்து கொண்டிருக்கும் இடத்திற்கே வண்டியை இழுத்துக்கொண்டு போ என்கிற நிலைமையில்—கல்லூரிப் படிப்பை மாறுதல் செய்து, ப்ரீ யூனிவர்ஸிடி கோர்ஸை ஏற்படுத்தி அங்கிருந்து கீழே உயர்நிலை பள்ளிப் படிப்பைச் சீர்திருத்த வேண்டிய நிலைமை உண்டாகிவிட்டது. இதைப்பற்றிய குறைபாடுகளை எல்லாம் இங்கே எடுத்துச் சொல்ல நேரம் இல்லை என்றாலும், இதைப்பற்றி பொறுக்குக் கமிட்டி விவாதிக்கப் போவதில்லை என்றாலும்—ஸ்டாண்டிங் கமிட்டி அமைத்து அதன் மூலம் இந்தக் குறைகளை எல்லாம் எடுத்துச் சொல்வதற்கு எங்களுக்கு ஒரு வாய்ப்பை அரசாங்கத்தார் அளிப்பார்கள் என்கிற நம்பிக்கையில் என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

10-38 a.m. **SRI T. S. RAMASWAMY PILLAI :** கனம் மன்றத் தலைவர் அவர்களே, கல்விச் சீர்திருத்தம் பற்றி—ஆரம்பக் கல்வி முதல் கல்லூரிப் படிப்பு வரையில்—நம்முடைய ராஜ்யத்திலே என்ன என்ன மாறுதல்களைச் செய்யவேண்டும் என்கிற விவாதத்திலேயே—சர்ச்சையிலேயே நாம் அதிகமாகக் காலத்தை—துர்விநியோகம் செய்து வருகிறோம் என்று சொல்ல வரவில்லை—செலவழித்துவிட்டோம் என்று கருதுபவர்களில் நானும் ஒருவன்.

1950-ம் வருஷம் முதல் பத்து வருஷங்களுக்குள்ளாக அரசியல் அமைப்பு 45-வது ஷரத்துப் பிரகாரம் எல்லாக் குழந்தைகளுக்கும் பதினான்கு வயது முடிவதற்குள்ளாக கட்டாய இலவசக் கல்வியைக் கொடுத்தாக வேண்டும் என்கிற மகத்தான பொறுப்பை நாம் ஏற்றுக்கொண்டோம். அந்தப் பொறுப்பை எப்படி நிறைவேற்றுவது என்கிற அளவில்தான் நம்முடைய யோசனைகள், கருத்துக்கள் எல்லாம் இருக்கவேண்டும்.

அகில-இந்திய பிளானிங் போர்டின் அபிப்பிராயம் எப்படி இருந்த போதிலும் என்போன்றவர்கள் எந்த அளவில் நினைக்கிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்த வெள்ளை அறிக்கையிலும், சட்டசபைப்





பொறுக்குக் கமிட்டி அறிக்கையிலும் பார்க்கும்போது அவர்கள் 1950-ம் ஆண்டு முதல் 1956-ம் ஆண்டு வரையிலும் நிலவி வந்த—ஒரு புது உண்மையைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். அதாவது குழந்தைகளுக்கு ஐந்தாவது வரையில் படிக்க வசதி அளிப்பதில் அதிகமாகச் செலவாகிவிடுகிறது. ஒன்று செலவைக் குறைக்கவேண்டும். அல்லது மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் உள்ள ரேஷியோவை அதிகரிக்கவேண்டும். இது இல்லாமல் வேறு வழி கிடையாது எனத் தெரிகிறது. ஆனால் ஒரு குறிப்பிட்ட சமாசாரத்தைக் கூறவில்லை. எனக்கு முன்னால் பேசியவர்களும் குறிப்பிட்டார்கள். நாம் அரசியலுக்கு அடிமைப்படாமல் கல்வியின் தரத்தை உயர்த்துவதற்குப் பாடுபட்டால் நல்லது என்பதாக. ஆகவே இது சம்பந்தமாக இதர நாடுகளில் என்ன நடக்கிறது என்பதையும் பார்க்கவேண்டும். நம்மைப்போலவே அவர்களுக்கு வருமானம். நம்மைப் போலவேதான் அவர்களும் மத்திய அரசாங்கத்திற்குக் கட்டுப்பட்டிருக்கிறார்கள்.

இந்தக் கல்வி அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறபடி :

**"In relation to the general average of all States in India, this State has advanced 31 per cent further. But Travancore-Cochin and Bombay rank higher than this State. Travancore-Cochin stands head and shoulders above all other States."** என்று ஒத்துக்கொள்கிறார்கள். அதே நேரத்திலே கன்யாகுமரியிலே இருக்கக்கூடிய நிலைமையைப் பார்க்கப்போனால், அங்கே ஒரு துர்ப்பாக்கியமான நிலைமைதான் நிலவுகிறது என்று சொல்ல விரும்புகிறேன். திருவாங்கூர்-கொச்சியில் படித்தவர்கள் 86 சத விகிதம் இருக்கிறார்கள். இங்கே குறிப்பாக ஒரு மாணவன் படிப்பதற்கு ஐந்வாவது வகுப்பிற்கு 24 ரூபாய் செலவாகிறது. அதே சமயத்தில் அங்கே 10, 13 ரூபாய் செலவாகிறது. திருவாங்கூர்-கொச்சியில் எட்டில் ஒரு பங்குதான் ஒரு மாணவனுக்கு செலவழிக்கிறோம். இங்கேயும் அதேமாதிரி செலவைப் பார்த்துக்கொண்டு மாணவர்களை பன்மடங்கு அதிகரித்திருக்கிறார்கள் என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம்.

1951-ம் வருஷத்தில் ஆரம்பிக்கப்பட்ட இதே புதிய முறையை 1951-ம் வருஷத்திலேயே அமுலுக்குக் கொண்டுவந்து ஆரம்பித்திருந்தால் இந்த நேரத்தில் லட்சக்கணக்கான மாணவர்கள் கல்வி அறிவு பெற்றிருப்பார்கள். அதாவது இரண்டாவது வகுப்பிலே ஆறு லட்சம் பேரும், மூன்றுவது வகுப்பிலே ஐந்து லட்சம் பேரும், நான்காவது வகுப்பிலே நான்கு லட்சம் பேரும் படித்திருப்பார்கள். உண்மையிலே இந்தத் திட்டம் 1951-ம் வருஷத்திலே கொண்டுவரப்பட்டிருந்தால், கட்டாயம் பத்து லட்சம் பேர் கல்வி அறிவு பெற்றிருப்பார்கள் என்பதில் சந்தேகம் இல்லை. இப்பொழுதுள்ள சிபார்சுப்படி ஒரு ஆண்டிற்கு ஏழு லட்சம் வீதம் 37 லட்சம் மாணவர்கள் பயின்றிருப்பார்கள். இங்கே இதைச் செய்யாதது வியப்பாகவே இருக்கிறது. இதுமாதிரி எத்தனையோ தகராறுகள் இருப்பதாக இப்பொழுது கொடுக்கப்பட்டிருக்கும் வெள்ளை அறிக்கையிலிருந்து தெரிகிறது.

**"Travancore-Cochin is outstanding among all States not only because of its progress in enrolment, but also because its average expenditure on each pupil is so much smaller. The amount spent in this State on educating one pupil in Secondary School suffices to educate two in Travancore-Cochin. The amount spent in this State on educating one pupil in elementary school almost suffices to educate three in that State. We understand that, quite recently, there has been a substantial increase in the pay of teachers in Travancore-Cochin. So, the annual cost per pupil must have increased correspondingly. Even so, the annual cost per pupil is likely to be smaller."**

[Sri T. S. Ramaswamy Pillai] [8th November 1957

இங்கே ஒரு காரணம் கூறுகிறார்கள். வாத்தியார்களின் சம்பளம் மிகக்குறைவு என்று சொல்லப்படுகிறது. அப்படியல்ல. எலிமெண்டரி வாத்தியாருக்கு 40 முதல் 80 வரையில் கொடுக்கிறார்கள். குறைந்தபட்சம் 50 ரூபாயாகிலும் கொடுக்கப்பட்டுவருகிறது. ஆனால் சென்னையிலே 30 முதல் 45 வரையில் கொடுக்கிறார்கள். இதிலிருந்து வித்தியாசம் இருக்கிறது என்பது நன்றாகத் தெரியும். அங்கு கன்யாகுமரி ஜில்லாவில் நேரிலே வந்து பார்த்தால் தெரியும்—நகரத்திலே எல்லா பள்ளிக்கூடத்தில் நான் சென்று பார்த்திருக்கிறேன். சட்டசபை தோழர்களுடன் சென்று பார்த்தேன். எப்படித்தான் இந்தப் பள்ளிக்கூடம் நடக்கிறதோ தெரியவில்லை. சின்ன கட்டிடத்தில் குழந்தைகளை அடைத்து வைத்திருக்கிறார்கள். அதே நேரத்தில் திருவாங்கூர்-கொச்சி ராஜ்யத்தில் அழகான கட்டிடங்களும் வசதியான இடங்களும் இருக்கின்றன. ஹரிஜனங்களுக்கும், ஷெட்யூல்ட் வகுப்பினருக்கும் இதை விட்டிருக்கிறார்கள். இதிலிருந்து அவர்களின் கல்விக் கொள்கை எப்படியிருக்கிறது என்பதைச் சொல்ல முடியும். அந்த ராஜ்யம் கம்யூனிஸ்ட்காரர்கள் நடத்துகிறார்கள் என்பதற்காக அல்ல. இன்னும் சொல்லப்போனால் அரசியல் கலப்படம் என்றுகூட சொல்லுவார்கள்.

இங்கே ஆசிரியர்களுக்கு இரண்டு ஆண்டுகள் ட்ரெயினிங் கொடுக்கிறார்கள். ஆனால் அங்கே ஒரு ஆண்டுதான் ட்ரெயினிங் கொடுக்கிறார்கள். ஆனால் இந்த ஒரு ஆண்டு ட்ரெயினிங் கொடுப்பதால் தரம் ஒன்றும் குறைந்துவிடுவதாகத் தெரியவில்லை.

இந்த ஷிப்ட் முறை கேரள ராஜ்யத்தில் இருக்கும்பொழுது ஏற்படுத்தப்பட்டிருந்தது. கேரள ராஜ்யத்தில் இந்த ஷிப்ட் முறை கையாளப்பட்டு வந்ததால்தான், அங்கே 86 சத விகிதம் படித்தவர்களாக இருக்கிறார்கள். 45-வது ஷரத்தைப் பார்க்கிறோம். ஒரு அளவிற்கு அதில் கூறி இருக்கிறபடி நிச்சயமாக செய்யமுடியும் என்று நம்புகிறேன். ஸ்ரீ சர் ஸி. பி. ராமசாமி அய்யர் இருக்கும்பொழுதுதான் இந்த ஷிப்ட் முறையை கொண்டு வந்தார்கள். ஆனால் இங்கு குலதர்ம கல்வி, வருணாசிரமக்கல்வி என்றெல்லாம் சொல்லுகிறார்களே அந்த மாதிரியெல்லாம் அங்கே சொல்லவில்லை, இதை அங்கு புகுத்தப்பட்டது.

நம்முடைய என்ரோல்மென்ட் ரேட் இப்போழுது 78 விகிதம். ஆனால் நமக்கு இருக்கவேண்டியது 48 விகிதம் அதிகமாக இருக்கவேண்டும்.

**" The gap between the actual enrolment rate and full enrolment rate in this State is 47·6 in Standards I to V and 54·1 in Standards VI to VIII. Between 1953-54 and 1954-55, the enrolment rate increased by 2·9 in Standards I to V. If this rate of progress takes place in future years (and funds can be provided at a steadily increasing rate—not a safe assumption)—it will take another 16 years to reach full enrolment in the first five years of school."**

இப்பொழுது படிக்கவேண்டியவர்கள் 75 பேர்கள்தான் வருகிறார்கள். இன்னும் 47 பேர்கள் பள்ளிக்கூடத்திற்கு வரவேண்டியவர்கள் வராதிருக்கிறார்கள். அவர்கள் வரவேண்டும். அப்படி வருவதற்கு 1953–54, 1954–55-ம் வருஷத்தைப் பார்க்கும்போது இரண்டு சத விகிதம்தான் அதிகம் வருகிறார்கள். ஆகவே, 16 வருஷம் என்று சொல்கிறார்கள். இந்த ரேட்டை வைத்து எதற்காக பார்க்கவேண்டும் ? கட்டாயக் கல்வித் திட்டம் கொண்டு வருவதாக இருந்தால் நிச்சயமாக கொண்டுவரட்டும். இதை விட அதனால் அதிகரிக்க முடியும். அப்படியானால் 47 பேர்களே வந்து விடுவார்கள். ஆகவே, ஐந்து வருஷத்திற்குள்ளாக பள்ளிக்கூடத்திற்குச் செல்லவேண்டிய மாணவர்கள் நிச்சயமாக வர முடியும். இதே நேரத்தில், திருவிதாங்கூர்-கொச்சியிலே பள்ளிக்கூடத்திற்குச் செல்லக்கூடியவர்கள், 137 மாணவர்களாக இருந்தால், 137 மாணவர்களும் பள்ளிக்குச் செல்கிறார்கள். எதற்காகச் செல்கிறார்கள் அங்கே. இங்கு ஏன் செல்லாமல் இருக்க வேண்டும். ஏனென்றால், கட்டாயக் கல்வி முறை அங்கு அன்றே வந்துவிட்டது. இங்கு எட்டாவதுவரை மாத்திரந்தான் இலவசக் கல்வி. அங்கு



8th November 1957] [Sri T. S. Ramaswamy Pillai]

ஒன்பது, பத்தாவது வகுப்புவரை இலவசக் கல்வி. அடுத்த வருடம் ஸ்கூல் பைனல் வரை இலவசக் கல்வி வரும் அளவிற்கு இருக்கிறது. ஆகவே, இதையெல்லாம் பரிசீலனை செய்து பார்த்து கல்விக்கு முதல் இடம் கொடுத்து நாம் சீர்திருத்தம் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**"The significance of the comparison between India and Western countries should be noted. If the relative proportion of children of school-age to the total population was as small as in the countries of Western Europe, the actual enrolment rate in the first five years of school already reached in the current year (1956–57) would be adequate."**

இங்கு, பள்ளிக்கூடம் செல்லும் வயதுடைய மாணவர்களின் எண்ணிக்கை, 1,000-க்கு இவ்வளவு என்ற விகிதம், வேறுள்ள நாடுகளைவிட இங்கு அதிகமாக இருக்கிறது. அதுமாத்திரமல்ல. நம்முடைய "ஆவரேஜ் எக்ஸ்பெக்டேஷன் ஆப் லைப்", வேறுள்ள தேசங்களை ஒப்பிட்டுப் பார்க்கும்போது இங்கு குறைவாயிருக்கிறது என்று மந்திரியவர்கள் கூறுகிறார்கள். திருவிதாங்கூர்-கொச்சியில் ஜனத்தொகையும் அதிகம். ஜனத்தொகை வளர்ச்சி இங்கு 1,000-க்கு 12 ; திருவிதாங்கூர்-கொச்சியில் 1,000-க்கு 23. எனினும் அதைத் தாக்குச் செய்யும் அளவு கல்வித் திட்டத்தை வகுத்திருக்கிறார்கள். பின் ஏன் நாமும் அப்படிச் செய்யக் கூடாது. லட்சோப லட்சம் குழந்தைகள் இன்று நம் நாட்டில் கல்வி அறிவற்று இருக்கக் கூடிய நிலையில், இதை அரசியல் கண்ணோட்டத்துடன் பார்க்காது அதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டும். நம் ராஜ்யத்தில் ஒரு பகுதியான கன்னியாகுமரி ஜில்லாவில் இன்று ஷிப்ட் ஸிஸ்டம் நடந்து கொண்டிருக்கிறது. அங்கு குலதர்ம கல்வியோ, அல்லது வேறுவிதமான வகையிலோ அங்கு ஒன்றுமில்லை. அங்கு மதபோதனையோ, வர்ணாசிரமமோ, அல்லது அதுபோன்று வேறு எந்த விதமான கொள்கையும் புகுத்தப்படவில்லை. அங்குள்ள தரம் குறைந்ததாக எனக்குத் தோன்றவில்லை. சென்ற நாலைந்து வருடத்திற்குள், அகில இந்திய பரீட்சைகளாகிய ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., ஐ.எப்.எஸ்., ஐ.ஆர்.எஸ். போன்ற பரீட்சைகளில் பாஸ் செய்கிறவர்களைப் பொறுத்தமட்டில், திருவிதாங்கூர்-கொச்சி ராஜ்யம் எந்த ராஜ்யத்தையும் விட தாழ்ந்த தரத்தில் இல்லை. அதுமாத்திரமல்ல. திருவிதாங்கூர்-கொச்சி பல்கலைக் கழகத்தின் தரம் நம்முடைய ராஜ்யத்தின் பல்கலைக்கழகத்தின் தரத்தைவிடக் குறைந்ததல்ல என்று நிபுணர்கள் ஒத்துக்கொள்கிறார்கள். வேறுவித அரசியல் கண்ணோட்டம் இல்லை என்றால், இந்த ஷிப்ட் முறையை தவிர வேறு வழியில்லை. நம் நாட்டில் மட்டும் இல்லாது வேறு நாடுகளிலும்கூட இதைப்பற்றி யோசனை செய்து கொண்டிருக்கும்போது நாம் நிச்சயமாக இதைப் பரிசீலனை செய்து பார்த்து, இது தவிர வேறு வழி இல்லாத நிலையில், ஷிப்ட் ஸிஸ்டத்தைப் புகுத்தி, நம் நாட்டில் லட்சோபலட்ச குழந்தைகள் இன்று கல்வி இல்லாமல் இருக்கும்போது அவர்களுக்கு கல்வி புகட்டவேண்டிய நடவடிக்கைகள் தீவிரமாக எடுத்துக்கொள்ளப்படவேண்டும் என்று நான் எனது சொந்த சார்பில் கேட்டுக்கொள்கிறேன், கட்சியின் சார்பில் என்று சொல்ல முடியாது.

* Sri S. PAKKIRISAMI PILLAI : தலைவர் அவர்களே, இந்த 11-17 a.m.
வெள்ளை அறிக்கையின் மூலம், கல்விப் பாதையில் உள்ள பல்வேறு விஷயங்களைப்பற்றி தெளிவாக எடுத்துச் சொல்லக்கூடிய அளவில் நம் நாட்டிலுள்ள அறிஞர்கள் அத்தனை பேரும் ஒன்றுகூடி ஒரு உருவான வழியில் இதன் மூலம் தங்கள் கருத்துக்களை அறிவித்திருக்கிறார்கள். அதைக் கண்டு அத்தனை பேரும் மகிழ்ச்சி அடைகிறோம். அதுமாதிரி, உதவி செய்த பேரறிஞர்களுக்கு நாம் நன்றி செலுத்த கடமைப்பட்டிருக்கிறோம். இது, ஒரு புதிய சகாப்தத்தை தமிழ் நாட்டில் உண்டாக்கியிருக்கிறது. இந்த ஒரு நிலைமையில் நம் நாட்டில் உள்ள பிற பகுதிகளில் இருப்பவர்களும் இதைப் பின்பற்றுவார்கள் என்ற நினைப்பும் நமக்கு இருக்கிறது. இந்த யோசனைகள் தவிர வேறு உருவான யோசனைகள் சொல்ல இப்பொழுது யாருக்கும் எண்ணமில்லை. ஆனால் இதை அமுலாக்கு

வதற்குண்டான காலவரையை குறிப்பிட்டுப் பார்க்கும்போது நமக்கு மிகுந்த ஏமாற்றத்தைக் கொடுக்கிறது. 1965–66-ம் வருஷம் வரையிலே, தமிழ்நாட்டில் உள்ள எல்லாக் குழந்தைகளும் ஐந்தாம் வகுப்பைப் படிக்கும் அளவிற்கு ஒரு வசதியளிக்க முடியும் என்கிறார் நமது நிதியமைச்சர் அவர்கள். அவ்வளவு காலம் ஆகவேண்டுமா ? மற்ற இடங்களில் வெகு துரிதமாக செய்திருக்கிறார்களே, சீனாவில் எப்படிச் செய்திருக்கிறார்கள், மற்ற நாடுகளில் எப்படி செய்திருக்கிறார்கள் என்ற கேள்விகள் எல்லாம் நம் மனதில் ஒரு சந்தேகத்தை எழுப்பியிருக்கிறது. ஆகவே' அப்படித் துரிதப்படுத்துவதற்கு, எவ்வளவுக்கெவ்வளவு முயற்சி எடுத்துக் கொண்டு அதைத் துரிதப்படுத்த முடியுமோ அந்த வழியில் நடவடிக்கை ஏன் எடுக்கவில்லை, ஏ ன்அப்படி எடுக்க மனம் வரவில்லை என்று நான் இச்சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன். ஐந்தாவது வகுப்பு வரைக்கும் 1965–66 ஆகவேண்டுமென்று சொன்னால், 11 வகுப்பு வரை வருவதற்கு இன்னொரு பத்து வருஷமாவது ஆகும். இன்னொரு பத்து வருஷம் என்று சொன்னால் ஒரு தலைமுறையாகும். ஆகவே, நம் தலைமுறையில் தமிழ்நாடு மக்கள், படித்தமக்கள் என்று சொல்லக்கூடிய நிலைமையில் இருக்காது என்பதுதான் அர்த்தம். சமீபத்தில் நம்முடைய நண்பர்கள் பலர் சொன்னது மாதிரி கன்னியாகுமரி போன்ற பிரதேசங்கள் எந்த வழியில் மேன்மையடைந்திருக்கிறது என்பதை நான் ஒரு உதாரண வழியாக சொல்ல ஆசைப்படுகிறேன். அந்த பகுதியில் சமீபத்தில் நாங்கள் போய் பார்த்தபொழுது மிஞ்சிறை என்ற இடத்தை போய் பார்த்தோம். சீதையை முன் சிறைவைத்த இடம் என்று அந்த இடத்தை சொல்லுகிறார்கள். அங்கே காட்டேஜ் இண்டஸ்ட்ரீஸ் என்ற ஒரு பகுதியை திறந்து வைத்திருக்கிறார்கள். அதன் கீழ் இருக்கின்ற பிள்ளைகள் ஆடு வளர்ப்பது எப்படி, மாடு வளர்ப்பது எப்படி, கோழி வளர்ப்பது எப்படி என்பதைப் பற்றி கற்றுக்கொண்டு வருகிறார்கள். அவர்களோடு நாங்கள் பேசிக்கொண்டிருந்த பொழுது அவர்களுடைய படிப்பு என்ன என்பதை பற்றி கேட்டேன். அவர்கள் பத்தாவது வரை படித்து பாஸ் செய்துவிட்டு இருப்பதாக சொன்னார்கள். இவ்விதம் பத்தாவது வரை படித்துவிட்டு மாடு வளர்ப்பது எப்படி என்று கற்றுக்கொள்வதற்காக அங்கு வந்திருக்கிறார்கள். இந்த மாதிரி இதை பார்க்கும்பொழுது அந்த நிலைமையை ஏன் இதர நம்முடைய தமிழ் பகுதியில் வைக்கக்கூடாது என்கின்ற சந்தேகம் வெகுவாக கிளம்புகிறது. நம்முடைய தேசீய வளர்ச்சி திட்டங்களில் தமிழ்நாட்டவர் முன்னேறி வரும்போது அவர்கள்தான் முன்னணியில் நிற்பார்கள். இதர பகுதி மக்கள் பின்தங்க நேரிடும். ஆகவே அபிவிருத்தியான வழியில் வெகு துரிதமாக எந்தெந்த அளவுக்கு பணத்தை அதிகமாக செலவு செய்ய முடியுமோ அந்த அளவுக்கு பணத்தை ஒதுக்கி எந்த அளவுக்கு விஸ்தரிக்கவேண்டுமோ அந்த அளவுக்கு ஆக்கித்தான் தீரவேண்டும். அதுவரை அரசாங்கம் தான் பொறுப்பு எடுத்துக்கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். சாதாரணமாக மற்ற நாடுகளில் வருஷ கடைசியில் பட்ஜெட் வரும்போது எந்த தலைப்பில் பணம் செலவு செய்யவில்லையென்றாலும் அந்த தொகை பணத்தை எல்லாம் கல்விக்கே ஒதுக்கிவிடக்கூடிய ஒரு நியதி அங்கு இருக்கிறது. அந்த மாதிரி ஒரு நியதியை தமிழ் நாட்டில் ஏற்படுத்திக்கொண்டால் நமக்கு வேண்டிய கல்வி திட்டங்களை வகுப்பதற்கும் துரிதமாக நிறைவேற்றுவதற்கும் வழியுண்டாகும். இன்னொன்று தேசீய அபிவிருத்தி திட்டத்தின் கீழ் பொது மக்களுடைய பணத்தை பெற்று கிராம பள்ளிக்கூடங்களை நிறுவிக்கொண்டு வருகிறார்கள். அந்த மாதிரியான நிலைமையில் நமது டாக்டர் சௌந்திரம் ராமசந்திரன் அவர்கள் நிறைய வேலைசெய்து இருக்கிறார்கள். அதே மாதிரி கோவையிலும் ஒரு பகுதியில் வேலை செய்திருக்கிறார்கள். வெறும் கிராம பள்ளிக்கூடங்கள் மாத்திரம் அதிகம் இருந்தால் போதாது. உயர் நிலை பள்ளிக்கூடங்கள் நாட்டில் அதிகமாக இருக்கவேண்டும். பொது மக்கள் உயர்நிலை பள்ளிக்கூடங்களை கட்டுவதற்கு தயாராக இருக்கிறார்கள். இருந்தாலும் அரசாங்கம் போதுமான ஒத்துழைப்பு அளித்தால் நாட்டிலுள்ள எல்லோருக்கும் உயர்தர படிப்பு ஏற்படுவதற்கு வசதி ஏற்படும் என்பதை இந்த சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்கிறேன். அதோடு கூட சென்னையில் இன்னும் அநேக உயர்நிலை பள்ளிக்கூடங்கள் மிக அவசியமாக



வேண்டியிருக்கிறது. இப்போது போதுமான அளவு உயர்நிலை பள்ளிக்கூடங்கள் இல்லை. வருஷ ஆரம்பத்தில் பிள்ளைகள் எல்லாம் பள்ளிக்கூடங்களில் இடம் கிடைக்காமல் அவதிப்படும்படியான நிலைமையை பார்க்கும்பொழுது இன்னும் ஏன் அதிக உயர்நிலை பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்தக் கூடாது என்று தோன்றுகிறது. இதற்காக என்ன முயற்சி அரசாங்கம் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள் ? ஏன் இந்த நிலைமையை உண்டாக்கிவிட வேண்டும். கார்ப்பரேஷன் அதிகாரிகளை கேட்டால் எங்களிடம் உயர்தர படிப்பு சொல்லிக்கொடுக்க வேண்டியதிட்டங்கள் ஒன்றும் கிடையாது. ஆரம்ப பள்ளிக்கூடங்கள் கட்டுவதற்குதான் எங்களிடம் பணம் இருக்கிறது என்று அவர்களும் தட்டிக்கழித்து விடுகிறார்கள். இதற்கு பொது மக்கள் மத்தியில் கிளர்ச்சி ஏற்படவில்லை. அந்த மாதிரி எழுச்சி மக்களிடையே ஏற்படுவதற்கும் பொது அரசாங்கம் பிரச்சாரம் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இன்னொன்று. சோஷியலிஸ மனப்பான்மையில் சமுதாயத்தை வளர்க்கவேண்டும் என்று நாம் சொல்லும்போது ஒரு பகுதி மாத்திரம் கல்வியில் அபிவிருத்தி அடைந்தால் போதாது. பிற்பட்ட பகுதியில் அதிக சிரத்தை எடுத்து வேலை செய்யவேண்டும். எவ்விதம் மற்ற காரியங்களில் பிற்பட்ட மக்களுக்கு எந்தவிதத்தில் சலுகை அளிக்கப்படுகிறதோ அந்த மாதிரி கல்வி நிலையங்களும் பிற்பட்ட பகுதிகளில் அதிகமாக ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் முன்வரவேண்டும். கிராம பள்ளிக்கூடங்களில் இலவச உணவுக்கு வசதி செய்திருப்பதாக சொன்னார்கள். இது மாத்திரம் போதாது. இவைகள் ஏழை குழந்தைகளுக்கு சௌகரியமாக இருந்தாலும்கூட அவர்களுக்கு உடை இலவசமாக அளிக்கவேண்டும். பாட புஸ்தகங்களும் இலவசமாக கொடுக்கவேண்டும். இவைகள் இல்லாவிட்டால் அந்த குழந்தைகள் சுத்தமாக இருக்க முடியாது. மேலும் இந்த வெள்ளை அறிக்கையில் இருக்கும்படியான திட்டங்களை சட்டமாக்க வேண்டும் என்று சொன்னார் நிதி அமைச்சர். அவர்களின் அபிப்பிராயத்தை நான் ஏற்றுக்கொள்வதற்கு தயாராக இல்லை. ராஜாஜி அவர்கள் சொன்னது மாதிரி சட்டம் ஒன்றை உண்டாக்கிவிட்டு அதிலே திட்டத்தை போட்டு பூட்டி வைப்பதில் பிரயோஜனம் கிடையாது. இன்னும் விரிவாக மக்கள் மத்தியில் அபிப்பிராயங்கள் கிளம்பலாம். அந்த யோசனைகளையெல்லாம் ஏற்றுக்கொள்ள அரசாங்கம் தயாராக இருக்கவேண்டும் என்றும், இந்த மாதிரியான சட்டங்களை உண்டாக்கி அரசாங்க அதிகாரிகளிடத்தில் விட்டுவிடக்கூடாது என்று அவர்கள் எச்சரித்து இருக்கிறார்கள். ஆகவே இதை உடனடியாகவே சட்டமாக்கக்கூடாது என்பதைதான் என்னுடைய யோசனை. கடைசியாக நம்முடைய லட்சியத்தில் எல்லா பிள்ளைகளும் அவர்கள் படித்து வெளியே போய் வேலை செய்வதற்கு அல்லது ஜீவனத்தை நடத்துவதற்கு சம்பாதித்து கொள்வதற்கு தகுதியாயிருக்கிற வயது வரையிலும் தமிழ்நாட்டில் இருக்கிற பிள்ளைகளை பராமரிக்கிற நிலையும் ஏற்படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கடைசியாக ஒரே ஒரு வேண்டுகோள். பிளானிங் கமிஷன் திட்டத்தின் கீழ் ஓராசிரியர் பள்ளிக்கூடங்களை வைத்து படிப்பு சொல்லிக் கொடுத்து வந்தார்கள். இப்போது அந்த S.S.L.C. படித்த ஆசிரியர்களை ட்ரெயினிங்குக்கு போகவேண்டுமென்று சொல்லுகிறார்கள். அவர்களுக்கு 18 ரூபாய் ஸ்டைபெண்டாக கொடுத்து இரண்டு வருஷம் ட்ரெயினிங் பாஸ் பண்ணவேண்டுமென்று சொல்லுகிறார்கள். இந்த இரண்டு வருஷத்தில் அவர்கள் குடும்ப பராமரிப்பு பொறுப்பை ஏற்றுக்கொண்டிருப்பவர்கள் எப்படி சமாளிப்பார்கள் என்பதை பரிசீலனை செய்து இதை மாற்றிக் கொடுக்கும்படியான வசதியை செய்துகொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய வார்த்தையை முடித்துக்கொள்கிறேன்.

*SRI P. S. CHINNADURAI : மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, சோஷியலிஸ தத்துவத்தை வாழ்க்கைத் தத்துவமாக அனுபவிக்க வேண்டுமென்று துடித்துக்கொண்டிருக்கிற மக்களுடைய தாகத்தை தணிக்கின்ற முறையில் இந்த சட்டசபை முன்பு சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்ற கல்வித்திட்டம் பற்றிச் சிபாரிசு செய்யும் இந்த அறிக்கை இல்லை என்பதை குறிப்பிட விரும்புகிறேன். சோஷியலிஸ சமுதாயத்தை நம்முடைய வாழ்நாளிலேயே கண்டு விட வேண்டும் என்று வைராக்கியம் கொண்டிருக்கின்ற

நாம் நமது கல்வித் திட்டத்தை அதற்கேற்றவாறு மாற்றி யமைக்கவேண்டுமென்று ஏற்கெனவே ஒரு தடவை சபை முன்பாக குறிப்பிட்டிருக்கிறேன். அதை மீண்டும் இங்கு எடுத்துச்சொல்ல விரும்புகிறேன். சமதர்மம் என்பது சமுதாயத்தில் மலர்ச்சியுற வேண்டுமானால் முதலில் அது மக்களின் இதயத்தில் மலர்ச்சியுற வேண்டுமென்பதை நாம் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். அவ்வாறு சமதர்ம எண்ணங்கள் மலர்ச்சியுறுவதற்கு மனிதனின் இதயம், குறிப்பாக இந்தியப் பிரஜையின் இதயம், ஏற்ற இடம் என்பதில் எனக்குப் பூரண நம்பிக்கை இருக்கிறது. மக்களின் உள்ளங்களில் மொட்டாக இருக்கும் சமதர்மத்தை மலரச் செய்யும் முறையில் நம் கல்வித் திட்டங்கள் அமையவேண்டுமென்பதுதான் என் ஆலோசனை ஆகும். சபை முன்பு சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் சிபாரிசுகள் அதற்குரிய முறையில் இருந்திருக்குமானால், நான் பெரிதும் மகிழ்ச்சி யடைந்திருப்பேன். நான் பிரஜா ஸோஷலிஸ்ட் கட்சியின் சார்பில் இங்கே அங்கம் வகித்தபோதிலும், ஆட்சியாளர்களின் சோஷலிஸ சித்தாந்த நம்பிக்கையில் எனக்கு நம்பிக்கை ஏற்படச்செய்வதற்கு ஏதுவாக கல்வித் திட்டம் அமைந்திருக்கலாம். ஆனால் அறிக்கையிலுள்ள கல்வித் திட்டம் அவ்வாறு இல்லை. இதற்குக் காரணம் என்ன என்று நான் யூகிக்கும்போது, பொதுவாக கல்வித் துறையை நிர்வகிப்பவர்கள் நான் கனம் அமைச்சர்களை பற்றிச் சொல்லவில்லை.—முதலாளித்துவ எண்ணங்களில் தோய்ந்திருக்கிறார்கள் என்பதை என்னால் சொல்லாமல் இருக்க முடியவில்லை. முதலாளித்துவ எண்ணங்களில் தோய்ந்தவர்கள் நிர்வாகத்தில் நிபுணர்களாக இருப்பதனால், அவர்களுடைய சிந்தனையில் உருவாகும் கல்வித் திட்டம் எதுவும், முதலாளித்துவக் கல்வித் திட்டத்தை அனுசரித்ததாகவோ, முதலாளித்துவ கல்வித் திட்டதை அனுசரித்துச் சென்று ஒருசில மாறுதல்களை இங்குமங்கும் செய்வதாகவோ இருக்குமேயன்றி, ஸோஷலிஸ லட்சியத்தை நோக்கி மக்களை உந்திச்செல்லக்கூடியதாகவோ மக்கள் மனதில் ஸோஷலிஸ எண்ணங்கள் உதயமாகுமாறு செய்வதாகவோ அமையாது என்று சொல்லிக்கொள்கிறேன். கல்வித் துறையில் தாங்கள் நிபுணர்கள் என்று சிலர் நினைத்துக்கொண்டிருக்கிறார்கள் ; கல்வித் துறையில் தாங்கள்தான் "அதாரிடி" என்ற நினைவில் அவர்கள் செயல்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் செய்வது தான் நியாயம் என்று அரசியல்வாதிகளும், மக்கள் மத்தியில் ஓரளவிற்குச் செல்வாக்குள்ளவர்களும்கூட, நினைக்கிறார்கள். அவர்கள் நினைப்பது சரியல்ல என்று நான் சொல்லித்தான் ஆகவேண்டும். இன்றையதினம் கல்வித் துறையிலுள்ளவர்கள் நிபுணர்களாகவும் திறமையுள்ளவர்களாகவும் இருக்கலாம். ஆனால் அவர்கள், நாம் ஏற்றுக்கொண்டிருக்கும் லட்சியத்திற்கேற்ற ஒரு கல்வித் திட்டத்தை அவர்களால் சமர்ப்பிக்க இயலாது என்பதைக் காட்டியிருக்கிறார்கள். இப்போது இங்கே கொடுக்கப்பட்டிருக்கும் சிபாரிசுகளை நோக்கும்போது, நாம் ஏற்றுக்கொண்ட லட்சியத்திற்கேற்ற சிபாரிசுகள் கொடுக்கப்படவில்லை என்பதை நான் சுட்டிக்காட்டியாகவேண்டும். ஆகவே, முதன் முதலில், கல்வித் துறையை நிர்வகிப்பவர்கள் நம் லட்சியத்தில் நம்பிக்கையுள்ளவர்களாக இருக்கவேண்டும். அப்படி இல்லாவிட்டால் நம் கல்வித் திட்டங்களால் மாணவர்களை நல்ல மனிதர்களாகத் தயாரிப்பதற்கு இயலாது.

கல்வித்துறை சம்பந்தமாக நான் பல விஷயங்களைக் குறிப்பிடவேண்டும். எனக்கு அனுமதிக்கப்படும் நேரத்தில் அவைகள் எல்லாவற்றையும் நான் சொல்ல முடியும் என்று எனக்குத் தோன்றவில்லை. சுமார் மூன்று மணி நேர அவகாசமாவது எனக்குக் கொடுக்கப்பட்டால் அவைகள் எல்லாவற்றையும் நான் சொல்ல முடியும். போதிய அவகாசம் இல்லாததால் அவைகளை நான் இப்போது சுருக்கமாகச் சொல்ல விரும்புகிறேன்.

முதன்மையாக, ஆசிரியர்கள் கல்வித் துறையில் மிகவும் முக்கியமானவர்கள். "ஆசிரியர்கள் எந்த அளவிற்கு திறனுடையவர்களாக இருக்கிறார்களோ அந்த அளவிற்கு மாணவர்கள் தேர்ச்சி பெறுவார்கள் ; எந்த அளவிற்கு ஆசிரியர்களின் சிந்தனையில் சமதர்ம எண்ணங்கள் வளர்ச்சியுறுகின்றனவோ அந்த அளவிற்கு அவைகள் மாணவர்களின் உள்ளங்களிலும் பிரதிபலிக்கும். " என்பது நான் சொல்லாமலே சர்க்காருக்குத் தெரியும். ஆகவே ஆசிரியர்கள் விஷயத்தில் மிகுந்த கவனம் செலுத்தவேண்டும். ஆசிரியர்கள் சமதர்ம எண்ணம் கொண்டவர்களாக ஆவதற்குரிய பயிற்சி அவர்களுக்கு இனிமேலாவது அளிக்கப்படவேண்டும். ஆசிரியர்கள்கூட உண்மையிலேயே உழைப்பாளிகள்தான். சாதாரண ஆலைத் தொழிலாளியின் சம்பளத்தைவிடக் குறைவான சம்பளத்தை வாங்கிக்கொண்டு பெரிய சேவையை செய்யும் ஆசிரியர்கள் உண்மையிலேயே சமதர்மப் பற்றுள்ளவர்கள் ஆவார்கள். அவர்கள் உள்ளங்களில் சமதர்ம எண்ணங்கள் சுலபமாக வித்தூன்றி வளர முடியும். ஆசிரியர்களுக்கு சர்க்கார் சகல வசதிகளையும் செய்து கொடுக்கவேண்டும். நாட்டில் ஆசிரியர்கள் அதிகரித்தாலொழிய, நாம் விரும்பும், எல்லோருக்கும் கல்வியளிக்கவேண்டுமென்ற திட்டத்தை பூரணமாக நிறைவேற்ற முடியாது. "கல்விச்சாலைகளை விஸ்தரிக்க ஆசிரியர்கள் போதவில்லை. வைத்தியசாலைகளை விஸ்தரிக்க டாக்டர்கள் போதவில்லை" என்ற நிலைமையை இப்போது நாம் அடிக்கடி பார்க்கிறோம் ; கேள்விப்படுகிறோம். ஆசிரியர்கள் பற்றாக்குறையைப் போக்குவதற்காகத்தான் அரசாங்கத்தார் ஓராசிரியர் பள்ளிகளை ஏற்படுத்தி எஸ்.எஸ்.எல்.ஸி. படித்தவர்களை ஓராசிரியர்களாக நியமித்தார்கள். அவர்களை நியமித்த சில ஆண்டுகளுக்குப் பின்னர், அவர்களை பயற்சிக்கு அனுப்பவேண்டுமென்று அரசாங்கம் நினைக்கிறது. அவர்கள் பயிற்சிக்குச் செல்லவேண்டுமென்ற நிலைமை இப்போது ஏன் ஏற்பட்டது என்பது எனக்குப் புரியவில்லை. பயிற்சி இல்லாமலே அவர்கள் மிகுந்த திறமையுடன் பணியாற்றியிருக்கிறார்கள் என்று கல்வி இலாகா அதிகாரிகளே அரசாங்கத்திற்குக் குறிப்புகள் அனுப்பியிருக்கிறார்கள் என்பதை இப்போது அரசாங்கத்தின் கவனத்திற்குக்கொண்டுவர விரும்புகிறேன். அவர்களை பயிற்சிக்கு அனுப்பினால்கூட அவர்களுக்கு ஓராண்டு காலம் பயிற்சி கொடுத்தால் போதுமானது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அண்மையில், ஆந்திர ராஜ்யத்திலும் மிக அருகாமையிலுள்ள கர்நாடக ராஜ்யத்திலும் அவர்களுக்கு பயிற்சிக் காலம் 9 மாதம் என்று நிர்ணயித்திருக்கிறார்கள் என்பதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். ஓராசிரியர்களுக்கு ஓராண்டு காலப் பயிற்சி போதுமானது. அவர்கள் ஏற்கெனவே அடைந்திருக்கும் அனுபவம் அவர்களுக்குப் பெரிதும் துணையாக இருக்கும் என்பதையும் சொல்ல விரும்புகிறேன்.



அடுத்தபடியாக, பாடத்திட்டங்களைப்பற்றி சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். இதுசம்பந்தமாகவும் நான் ஒரு முக்கியமான விஷயம் சொல்ல விரும்புகிறேன். முதல் மூன்று வகுப்புகளுக்கு வேண்டிய பாடப் புத்தகங்களைத் தாங்களே தயாரிப்பதற்கு இப்போது அரசாங்கத்தார் திட்டமிட்டிருக்கிறார்கள். இதனைக் குறித்துக்கூட இந்தச் சபையில் கருத்து வேற்றுமைகள் இருந்தன. உண்மையிலேயே கல்வி அபிவிருத்தி அடைய வேண்டுமென்றால், பாடப்புத்தகங்களை ஒழுங்குபடுத்துவதற்கு அரசாங்கம் முயலவேண்டியது மிகவும் அவசியம். ஆகவே, அரசாங்கத்தார் எடுத்துக்கொண்டிருக்கும் இந்த முதல் முயற்சி மிகவும் வரவேற்கத்தக்கது என்பது என் அபிப்பிராயம். தனிப்பட்டோரிடத்தில் பாடப்புத்தகங்களைத் தயாரிக்கும் பொறுப்பபை ஒப்படைத்தால் நாம் விரும்புகின்ற கருத்துக்கள் கொண்ட பாடப்புத்தகங்கள் ஒருபோதும் வராது. ஆகவே, அரசாங்கத்தின் மூலம் பாடப்புத்தகங்கள் ஒழுங்குபடுத்துவதுதான் சிறந்தது. முதல் மூன்று வகுப்புகளுக்கான பாடப்புத்தகங்களைத் தயாரிக்கும் காரியம் நிறைவேற்றப்பட்ட பிறகு அடுத்த மூன்று வகுப்புகளுக்கும் வேண்டிய பாட புத்தகங்களைத் தயாரிப்பதற்கு அரசாங்கம் முன் வரவேண்டுமென்று குறிப்பிட விரும்புகிறேன். பாடப்புத்தகங்கள் மூலமாகவே சமதர்ம எண்ணங்களை உண்டாக்கவேண்டும். அதற்குரிய முறையில் பாடப்புத்தகங்கள் தயாரிக்கப்படவேண்டுமென்று நான் குறிப்பாகச் சொல்ல விரும்புகிறேன். இதை நான் விவரித்துக்கூற முடியும். அதற்கு நேரமில்லாததால் இதை கனம் அமைச்சர் அவர்களே ஊகித்துக்கொள்ளட்டும் என்று விட்டுவிடுகிறேன்.

அடுத்தபடியாக, நாட்டின் பொதுமொழி எதுவாக இருக்கவேண்டுமென்பது மிகவும் முக்கியமானது. நம் ராஜ்யத்தைப் பொறுத்தவரையில் கட்டாயமாகத் தமிழ்தான் பொது மொழியாக இருக்கவேண்டுமென்று

நாம் தீர்மானித்துக்கொண்டிருக்கிறோம். அதற்கு அடுத்த ஸ்தானத்தை ஆங்கிலத்திற்குக் கொடுத்திருக்கிறோம். மூன்றாவது ஸ்தானத்தைத்தான் ஹிந்திக்குக் கொடுக்கிறோம். "ஹிந்தி அல்லது I-ம் பாகத்தில் சேர்க்கப்பட்டிராத வேறு யாதொரு இந்திய மொழி" என்று அறிக்கையில் II-வது பிரிவில் X-வது தலைப்பின் கீழ் III-வது பாகத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. நான் இந்த சிபாரிசை ஏற்க இயலாதவனாக இருக்கிறேன். தமிழ் மொழியைப் பொறுத்தவரையில் யாருக்குமே கருத்து வேறுபாடு இருக்க முடியாது. ஆனால், ஹிந்தியைப் பொறுத்தவரையில், தமிழுக்கு எந்த அளவு முக்கியத்துவம் கொடுக்கிறோமோ அந்த அளவு முக்கியத்துவம் ஹிந்திக்கும் கொடுக்கவேண்டுமென்ற எண்ணமும் துணிவும் கனம் கல்வி அமைச்சர் அவர்களுக்கு வராதது ஏனோ, தெரியவில்லை. "நம் நாடு" என்று நினைக்கும்போது காஷ்மீர் எல்லையைத்தான் நான் நினைக்முடிகிறதே யொழிய வேறு எந்த எல்லையையும் என்னால் நினைக்க முடியவில்லை. அதேபோல் "நம் சமுதாயம்" என்று சொல்லும்போது நான் இந்திய சமுதாயத்தைத்தான் சிந்தித்துப்பார்க்க முடிகிறதேயொழிய வேறு எந்த சமுதாயத்தையும் என்னால் சிந்தித்துப்பார்க்க முடியவில்லை. "முதல் ஸ்தானம், இந்திய சமுதாயத்திற்கு; முதல் ஸ்தானம், இந்திய நாட்டிற்கு—காஷ்மீரத்தை வடக்கெல்லையாகக்கொண்டுள்ள இந்திய நாட்டிற்கு" என்ற முறையில் சிந்தித்தால், தனி அந்தஸ்து பெற்ற ஒரு பொதுமொழி,—தேசியமொழி,—நம் நாட்டிற்கு இருக்க வேண்டுமா, வேண்டாமா? இந்த விஷயத்தை வேற்றுமை மனப்பான்மையுடன் இல்லாமல் ஒற்றுமை மனப்பான்மையுடன் சிந்திக்கவேண்டும். அரசியல் ரீதியாகக் கருத்து வேற்றுமைகள் வரலாம்; வரத்தான் செய்யும். ஆனால் அதை சமாளிக்க வேண்டிய கடமையும் பொறுப்பும் அரசாங்கத்திற்கு இருக்கிறதா இல்லையா என்பதைப் பார்க்கவேண்டும்.

சீன மொழியில் இருக்கக்கூடிய இலக்கியங்கள் சிறந்தவையா என்பதில் சர்ச்சை இருக்கலாம். ஆனால், சபாநாயகர் அவர்களே, தாங்கள் சீன நாட்டில் சென்று பார்த்தால் அங்கே எங்கு பார்த்தாலும் ஒவ்வொரு யந்திரங்களின் நுட்பமான பாகங்களுக்கும், சைன மொழி பதங்களையே உபயோகப்படுத்திக்கொண்டு வருகிறார்கள் என்பதைக் காண்பீர்கள். இன்னும் அதனை வளப்படுத்த முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். சைனவில் சைன மொழியே தேசிய மொழியாக இருக்க வேண்டும் என்றும் அதற்கு வேண்டிய நடவடிக்கையையும் எடுத்துக்கொண்டு வருகிறார்கள். இங்கேயுள்ள அரசாங்கமும் அதைப்போலவே என் நடவடிக்கை எடுத்துக் கொள்ளக்கூடாது? நம்முடைய நாட்டிற்கும் ஒரு பொது மொழி அவசியமாக இருக்கிறது. அப்படி மொழி பொதுவாக இருப்பதற்கு ஹிந்தியை என் ஆதரிப்பதற்கு தயக்கம் ஏற்படுகிறது என்று கேட்கிறேன். ஹிந்தியை ஏற்பதற்கு தயக்கம் இருப்பதற்கு அவசியமே இல்லை. இந்தியாவிலுள்ள சகல ராஜ்ய மக்களும் ஏற்றுக்கொள்ளக் கூடிய மொழியாகிய பொது மொழியைத்தான் நாமும் ஏற்றுக்கொள்ள வேண்டும். அதுதான் என்னுடைய கருத்து. எதிர் காலத்தில் இது ஒரு முக்கியமான பிரச்னையாக இருக்கும். தமிழ் நாட்டில் உள்ள மாணவ மாணவியர் ஹிந்தி படிக்க வேண்டியது அவசியம். கேரள ராஜ்யம் ஆங்கிலத்தில் நம்மை முந்திக் கொண்டிருக்கிறது. பம்பாய் ராஜ்யம் கல்வித் துறையில் இரண்டாவது ஸ்தானத்தை வகிக்கிறது. நாம் மூன்றாவதாக இருக்கிறோம். எதிர் காலத்தில் கேரளத்திற்கும் தமிழ் நாட்டிற்கும் போட்டி—நல்லதற்கான போட்டி—ஏற்பட்டால் தமிழ் நாடு பின் தங்கிவிடக்கூடாது. ஆகவே இந்தியாவில் ஒரு பொது மொழி இருக்க வேண்டும் என்றால் அது ஹிந்தியாகவே இருக்க முடியும் என்பதும், அதை நாம் ஏற்க வேண்டும் என்பதும் என்னுடைய அபிப்பிராயம். அதை ஏற்பதற்குத் தயங்கினோமானால், அல்லது தவறுவோமானால், நமது எதிர்கால சந்ததியார்களுக்குப் பெருத்த கேட்டை விளைத்தவர்களாவோம். அதை ஏற்றுக்கொண்டால் நிச்சயமாக பிற்காலத்தில் தமிழ் நாடு மற்ற ராஜ்யங்களைவிட முன் நிற்க முடியும். இல்லாவிட்டால் பின்னால் போய்க்கொண்டிருக்க வேண்டியதுதான். இது விஷயமாக ஒரு திட்டவட்டமான துணிவு கொள்ளவேண்டும் என்று நான் அரசாங்கத்திற்குச் சொல்லுகிறேன். ஆளுகிற கட்சியினர் அரசியலில் செல்வாக்குப்





பெறவேண்டும் என்ற காரணத்தினால் தயக்கம் காட்டக்கூடாது: ஆகவே திட்டவட்டமாக ஒரு துணிவுக்கு அரசாங்கம் வரவேண்டும். ஹிந்திக்கு உரிய முக்கியத்துவம் அளிக்காமல் இருப்பதை நாம் காண்கிறோம். அரசியல் காரணமாக பல பலவீனங்கள் இருந்தாலும் துணிச்சலாக இதை ஏற்றுக்கொள்ளவேண்டும்.. அதற்கு [illegible] வடிக்கைகளையும் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று [illegible] என்னுடைய வார்த்தைகளை இத்துடன் முடித்துக்கொள்ளுகிறேன்.

SRI M. KALYANASUNDARAM : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த 11-44 a.m. விவாதம் எனக்குப் புதிது அல்ல. ஏனென்றால் இதன் அடிப்படை விஷயங்களையெல்லாம் இதற்கு முந்தி சட்டசபையிலேயே வந்து விவாதிக்கப்பட்ட பிறகு ஒரு கமிட்டி அமைத்து அவர்கள் அறிவித்திருக்கக்கூடிய யோசனைகளைதான் இப்பொழுது நாம் விவாதிக்கிறோம். நாம் [illegible]திப்பதின் நோக்கம் ஆரம்பத்தில் கனம் நிதி மந்திரி அவர்கள் கூறியதுபோல் எந்த வகையில் இதை சட்டம் [illegible] இயற்றி கல்வியைப் [illegible] கட்டுப்பாடுகள் இடம் பெற வேண்டும் என்பதற்காகத்தான் [illegible]கிறோம் என்று சொன்னார். அம்மாதிரி ஒரு அடிப்படை சட்டத்தின் அவசியம் உண்டா என்ற பிரச்னையை இப்பொழுது சபையிலிருந்து கிளப்பப்பட்டிருக்கிறது. அதைப்போலவே வெளியிலேயும் கிளப்பி இருக்கிறார்கள். இவைகள் எல்லாம் அவரவர்கள் தங்களுடைய மனோபாவத்திலிருந்து வருவதுதான் என்று நினைக்கிறேன். இத்தகைய அடிப்படையான சட்டம் இல்லாத காரணத்தினால் தான் பதினேழாம்நூற்றாண்டு மனப்பான்மையுள்ள முதல் மந்திரியும் கல்வி மந்திரியும் வந்து விட்டால் கல்வியின் கதி என்ன ஆகும் என்பதை நாம் சில வருடங்களுக்கு முன்பு பார்த்தோம். ஆரம்பக் கல்வி எந்த அடிப்படையில் மாற்ற முயற்சி நடந்தது என்பதும் ஒரு அடிப்படை சட்டம் இல்லாத காரணத்தால் ஒரு மந்திரி அவர் விரும்புகிற மாதிரி கல்வி திட்டத்தை மாற்றி அமைக்கலாம் என்ற நிலைமை ஏற்பட்டதும் நமக்குத் தெரியும். அப்பேற்பட்ட ஆபத்து இப்போழுது ஏற்படக்கூடாது. அந்த அடிப்படையில் ஒரு சட்டம் இருக்க வேண்டியது அவசியமாக இருக்கிறது. அதை உணர்ந்து சென்ற சட்டசபையில் பல அங்கத்தினர்கள் ஒரு அடிப்படை சட்டம் வேண்டும் என்று கூறினார்கள். அந்தக் கோரிக்கையின் விளைவாகவே இந்த வெள்ளை அறிக்கை வந்து அதன் விவாதம் நடைபெற்று வருகிறது. இது ஒரு மந்திரியின் விருப்பம் மட்டும் அல்ல. அவருடைய சொந்த அபிப்பிராயமும் அல்ல. அவருடைய சொந்தக் கருத்துக்கள் இந்த திட்டத்தில் இடம் பெறவில்லை என்பது என்னுடைய அபிப்பிராயம். ஆகவே ஒரு அடிப்படையான சட்டம் வரவேண்டியது அவசியம் என்பதை நானும் வற்புறுத்திக் கூற விரும்புகிறேன். வெளியில் இருக்கக் கூடிய கிளர்ச்சியின் காரணமாக இந்த விஷயத்தை விட்டு விடக்கூடாது என்பது என்னுடைய அபிப்பிராயம். கிளர்ச்சி பிரமாதமாக இருக்கும் என்று நான் நினைக்கவில்லை. ஆரம்பக் கல்வியை உருவாக்குவதில் அடிப்படை சட்டம் கொண்டு வரும் முயற்சியை நான் ஆதரிக்கிறேன்.

அதே சமயத்தில் சட்டம் இயற்றுவதனால் மட்டும் நம்முடைய கல்விப் பிரச்னையைத் தீர்த்துவிட்டதாக நாம் திருப்தி அடைய முடியாது. இந்த சட்டத்தை எந்த அடிப்படையில் நிறைவேற்றப்போகிறோம் என்பதைப் பொருத்துதான் இந்த சட்டம் உபயோகமானதாக இருக்கும். இருக்கும் குறைபாடுகளை நிவர்த்தி செய்தால்தான் இந்த சட்டம் உபயோகமாக இருக்கும். குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்குத்தான் இந்த சபையில் சந்தர்ப்பம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதன்படியேதான் நம் முன்னால் அடிப்படையான நோக்கங்களை வைக்கப்பட்டிருக்கிறது. சிலவற்றை என் கட்சியின் சார்பாக தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இது விஷயத்தில் நிதி மந்திரியாகவும் அதே சமயத்தில் கல்வி மந்திரியாகவும் இருக்கக் கூடியவருக்கு பல சங்கடங்கள் ஏற்படலாம். நிதி மந்திரி என்ற வகையில் அவர் நிதியைக்கொடுக்க கொஞ்சம் தயங்கலாம். ஆனால் கல்வி விஷயத்தில் அவர் முக்கியமாக கொடுக்க வேண்டியதாக இருக்கிறது. அப்படிப்

[Sri M. Kalyanasundaram] [8th November 1957

பட்ட கஷ்டங்களுக்கு இடம் கொடுக்காமல் கல்வி விஷயத்தில் கல்வியைப் பற்றி பேசக்கூடிய சமயத்தில் அவர் நிதி மந்திரி என்பதை மறந்து பேச வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

சட்டம் இயற்றி விட்டால் மட்டும் போதாது. சட்டத்தில் கொடுக்கக் கூடிய உரிமை, குழந்தைகளுக்கு எடுத்துச் சொல்லக்கூடிய ஆசிரியர்களுடைய தரம் உயராமல் இருக்கிறது. சட்டத்தை ஏற்படுத்தக் கூடிய காலத்தில் ஆசிரியர்களுடைய சம்பளத்தின் மூலம் அவர்களுக்கு ஏதாவது பலன் கிடைக்கிறதா என்பதையும் அவர் உணர வேண்டும். பணச் செலவை மட்டும் கவனத்தில் வைத்துக்கொண்டு ஆசிரியர்களுடைய தரத்தை உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்காவிட்டால் நாம் கோரிய பலன் ஏற்படாது. இப்பொழுது ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்படும் சம்பளம் மிகக் குறைவு ஆசிரியர்களுடைய தரம் உயரவில்லை என்று நம்முடைய பிரதம மந்திரி கூட சொல்லி இருக்கிறார், வேறு யாரும் சொல்ல வேண்டியதில்லை. வேறு யாராவது சொல்லியிருந்தால் அதைப் பற்றி அக்கரை எடுத்துக் கொள்ளாமல் இருக்கலாம். அதனால் ஆசிரியர்களுடைய தரத்தை உயர்த்த வேண்டியது அவசியமாக இருக்கிறது. அவர்களுக்கு சமீபத்தில் மற்ற சிப்பந்திகளுக்குக் கொடுத்ததுபோல் பனிரெண்டு ரூபாய் கொடுக்கப்பட்டிருக்கிறது. அப்படிக் கொடுக்கும்போது பஞ்சப்படியாகவும் ஸ்பெஷல் "பே" யாகவும் கொடுத்திருக்கிறார்கள். அப்படிக் கொடுத்திருப்பதில் சர்வீஸ் அதிகமாக உடையவர்களுக்கு இந்தப் பலன் கிடைக்காமல் இருக்கிறது. அதனால் அவர்களிடத்தில் ஒரு அதிருப்தி ஏற்பட்டிருக்கிறது. அதாவது சர்வீஸ் அடைந்தவர்களிடத்தில் ஒரு அதிருப்தி ஏற்பட்டிருக்கிறது. பனிரெண்டு ரூபாய் கொடுக்கப்பட்டிருந்தும் அவரவர்களுடைய சர்வீசுக்குத் தக்கபடி இந்த ஐந்து ரூபாய் சம்பளத்தை உயர்த்திக்கொடுத்திருக்கிறார்கள். இந்தக் குறைகளை எல்லாம் சட்டம் இல்லாமல் சர்க்கார் பரிசீலனை செய்து மனக்கசப்புக்கு இடம் கொடுக்காமல் இந்தப் பிரச்னையை சுலபமாக தீர்த்து விடலாம். அதனால் அதிகப்படியான பணச்செலவும் ஏற்படாது என்பது என்னுடைய அபிப்பிராயம்.

நம்முடைய ஆசிரியர்களுக்கு குறைந்த பட்ச வாழ்க்கை நடத்துவதற்குப் போதுமான சம்பளமாவது கொடுக்கப்பட வேண்டியது அவசியம். ரூ. 100 சம்பளம் என்பது பெரிய விஷயமல்ல. ஆசிரியர்களுடைய வாழ்க்கை கேவலமாக இருந்து, அவர்கள் படக்கூடிய கஷ்டத்தை பார்க்கும்போது, அப்படி மனம் உடைந்திருக்கும் அந்த உபாத்தியாயர்களிடம் சிறு வயதுள்ள குழந்தைகள் சிக்கினால், அக்குழந்தைகளுக்கு எப்படி உற்சாகம் ஏற்படும்? ஆசிரியர்களுடைய வாழ்க்கைநிலை உயர்த்துவதற்கு தீவிர நடவடிக்கை எடுக்கவேண்டியது அவசியம்.

சமீபத்தில் ஓராசிரியர் பள்ளிகளை அவசர அவசரமாக அமைத்தார்கள். அவைகளுக்கு நியமிக்கப்பட்ட ஆசிரியர்கள் தாங்கள் விரும்பக்கூடிய சமயத்தில் பயிற்சிக்கு அனுப்பப்படுவது இல்லை. அவர்கள் விரும்பாத சமயத்தில் அனுப்பப்படுகிறார்கள். ஐந்து வருஷ சர்வீஸ் ஆன ஆசிரியர்கள் கூட இரண்டு வருஷப் பயிற்சி பெறவேண்டுமென்று அனுப்பப்படுகிறார்கள். அந்தப் பயிற்சிக் காலத்தில் அவர்களுக்குக் கிடைக்கக்கூடியது மாதமொன்றுக்கு 18 ரூபாய். இதனால் பெரிய அதிருப்தி ஏற்பட்டிருக்கிறது. பயிற்சிக் காலம் இரண்டு வருஷம் இருக்கவேண்டுமா என்பதை ஆலோசிக்கவேண்டும். அப்படிப் பயிற்சிக் காலம் இரண்டு வருஷமாக இருப்பதால் அரசாங்கத்திற்குப் பணச் செலவு அதிகமாக ஏற்படுகிறது என்பதையும் கவனிக்கவேண்டும். பயிற்சிக் காலத்தை எதற்காக இரண்டு வருஷம் என்று வைத்திருக்கவேண்டும்? எஸ். எஸ். எல். ஸி. படித்தவர்களைத்தான் ஆசிரியர்களாக எடுப்பது என்ற கொள்கை இனி வரக்கூடிய காலத்திலாவது வற்புறுத்தப்படவேண்டும். எஸ். எஸ். எல். ஸி.க்குக் குறைந்த படிப்பு உள்ளவர்கள் வேறு வேலைக்கு வேண்டுமானால் போகட்டும். ஆனால், இனி தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் எஸ். எஸ். எல். ஸி.க்கு மேல் தேறினவர்களாகவும், செகண்டரி கிரேட் பயிற்சி பெற்றவர்களாகவும் இருக்க வேண்டும். அந்த வகையில் முடிவு எடுக்கவேண்டும். அப்படி ஒரு முடிவு எடுத்தால்தான் தரம் உயர்ந்த



8th November 1957] [Sri M. Kalyanasundaram]

ஆசிரியர்கள் கிடைக்கமுடியும். அப்படிப்பட்டவர்களுக்கு இரண்டு வருஷப் பயிற்சி அவசியம் இல்லை. ஒரு வருஷப் பயிற்சி போதும். ஆசிரியராக இருக்கிறவர்கள் எஸ். எஸ். எல். ஸிக்கு அதிகமாகப் படித்தவர்கள்தான் இருக்கவேண்டும். அப்பேர்ப்பட்டவர்களுக்கு இரண்டு வருஷத்திற்கு பயிற்சி அவசியம் இல்லை. இரண்டு வருஷப் பயிற்சி அளித்துவிட்டால், ஆசிரியர்களுடைய 30 வருஷ சர்வீஸ் காலத்தில் வேறு பயிற்சியே அவர்களுக்கு அவசியம் இல்லை என்று மந்திரி அவர்கள் சொல்லமாட்டார்கள் என்று நான் நினைக்கிறேன். இரண்டு வருஷப் பயிற்சியை ஒரு வருஷமாகக் குறைத்து, வேண்டுமானால் பத்து வருஷங்களுக்கு ஒரு முறை ஆசிரியர்களுக்கு "ரெப்ரஷர் கோர்ஸ்" அடிக்கடி கொடுப்பதற்கு அவசியம் இருக்கிறது. கிராமத்தில் இருக்கும் ஆசிரியர்களுடைய அறியாமையைப் பார்க்கிறபோது, அவர்களைக் குறை சொல்லமாட்டேன். நம்முடைய கல்வி முறைகளைப் பற்றித்தான் குறை சொல்ல வேண்டியிருக்கிறது என்று நான் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

பயிற்சிக் காலத்தை எல்லா ஆசிரியர்களுக்கும் குறைக்கவேண்டும். ஒரு ஆசிரியருக்குப் பயிற்சிக் காலத்தைக் குறைப்பது, மற்ற ஆசிரியர்களுக்குக் குறைப்பதில்லை என்ற நிலை இருக்கக்கூடாது. அத்தோடு பயிற்சி பெற்ற காலமும் அவர்களுடைய சர்வீஸோடு சேர்த்துக்கொள்ளப்படவேண்டும் என்று நான் எடுத்துக் கூற விரும்புகிறேன்.

ஆசிரியர்களுடைய குறைகள் நீங்குவது ஒரு புறம். இன்னொரு முக்கியமான குறை—ஒரு ஆசிரியர் எத்தனை குழந்தைகளுக்குச் சொல்லிக் கொடுக்கவேண்டும் என்பது. இந்தச் சிபார்சில் கண்டுள்ளபடி நடைமுறைக்கு வருமானால், குழந்தைகளின் கல்வித் தரம் மிகவும் பாதிக்கப்படும் என்பது என்னுடைய அபிப்பிராயம். ஒரு ஆசிரியர் 40 குழந்தைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கவேண்டும் என்று சிபார்சு செய்திருக்கிறார்கள். இரண்டாவது ஆசிரியர் நியமிக்கப்பட வேண்டுமானால் 79 குழந்தைகள் ஆகும் வரைக்கும் காத்திருப்பார்கள். ஒரு ஆசிரியர் 79 குழந்தைகள் வரையில் கவனிக்கவேண்டும், அதுவும் 1-வது வகுப்பிலிருந்து 5-வது வகுப்பு வரை, என்பது சிறு குழந்தைகளுக்கு கல்வி புகட்டுவது மிகவும் பாதிக்கப்படும். ஐந்தாவது வகுப்பு வரையிலும் குழந்தைகளின் எண்ணிக்கை 25 என்றாவது குறைக்கப்படவேண்டும். வேண்டுமானால் படிப்படியாக அதற்குப் பிறகு அதை உயர்த்திக்கொண்டு போகலாமேயொழிய, சிறு குழந்தைகளைக் கவனிக்கக்கூடிய ஆசிரியர்களை இவ்வளவு அதிகமான எண்ணிக்கையுள்ள குழந்தையைக் கவனிக்கச் சொல்வது சரியாகாது. கல்வித் தரத்தை அது மிகவும் பாதிக்கும் என்று நான் வலியுறுத்தி எடுத்து காட்ட விரும்புகிறேன்.

கல்வி முறையை எடுத்துக்கொண்டால், ஆதாரக் கல்விமுறை, சாதாரணக் கல்வி முறை என்று இரண்டு முறைகள் இருக்கின்றன. ஆதாரக் கல்வி முறை லட்சியத்தின் அடிப்படையில் கல்வித் திட்டம் அமைந்திருக்கிறதா என்பது ஒரு விஷயம். ஆனால், நீண்ட காலமாக ஆதாரக் கல்வி முறையையும் ஆதாரக் கல்வி முறையல்லாத பழைய முறையையும்—அதாவது பேஸிக் அண்டு நான்-பேஸிக் ஸிஸ்டம்—ஆகிய இரண்டையும் ஒன்று சேர்க்கப் போவதாகச் சொல்லுகிறார்கள். இப்படி ஒன்றுசேர்க்கவேண்டுமென்று சொல்கிறார்களே தவிர, அதற்கு ஒரு கால வரையறை நிர்ணயித்து, அதற்குள் இரண்டையும் ஒன்றாக இணைக்கும் திட்டம் கொண்டு வரவில்லை. ஆதாரக் கல்வி முறை என்ற பேரால் சில குறிப்பிட்ட தொழில்கள் மூலமாகத்தான் கல்வி புகட்டுவது என்று இருக்கக்கூடாது, என்று முந்திய சட்டசபையில் இதைப் பற்றிப் பேசக் கூடிய சமயத்தில் கல்வி அமைச்சர் தெளிவுபடுத்தியிருக்கிறார். ஆதாரக் கல்வி முறை என்றால் குருட்டுத் தனமாக ஒரு தொழிலின் மூலமாக கல்வி புகட்டவேண்டுமென்ற எண்ணம் அல்ல. தொழில் மனோபாவம், விஞ்ஞான மனோபாவம் குழந்தைகளுக்கு வளர வேண்டுமென்ற கண்ணோட்டம் சர்க்காருக்கு இருக்கிறது என்று அவர் உறுதி மொழி கொடுத்திருக்கிறார். அதே கொள்கைதான் இப்பொழுது

சர்க்காருக்கு ஆதாரக் கல்வி முறையைப்பற்றி இருக்கிறது என்று நம்புகிறேன். சீக்கிரம் இணைக்கவேண்டும் என்று நான் வலியிறுத்திக் கூற விரும்புகிறேன்.

ஆசிரியர்களுக்குள்ளே இந்த வித்தியாசம் இருக்கிறது. ஆதாரக் கல்வி பயிற்சிக்குச் சென்று திரும்பி வரும் ஆசிரியர்கள் உற்சாகத்தோடு இப்பொழுது திரும்பி வருவது இல்லை. இஷ்டப்படாத வேலையைச் சொல்கிறார்கள், வழக்கமான வேலையைச் செய்யச் சொல்கிறார்கள், அதனால் ஒரு பலனும் ஏற்படவில்லை என்ற குறை இருக்கிறது. அதை மந்திரி அவர்கள் மனதில் வைக்கவேண்டும் என்று எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

இதற்கெல்லாம் மேலாக, ரிப்போர்ட்டிலே மிகவும் சர்ச்சைக்குக் காரணமாக இருக்கக்கூடியது மொழிப் பிரச்னை. எந்த எந்த மொழிக்கு எந்த எந்த ஸ்தானம் அளிக்கவேண்டும் என்று நிர்ணயிப்பதில் நமக்கு ஒரு சங்கடம் இருக்கிறது. மொழிக் கமிஷனுடைய அறிக்கை விவாதிக்கப்பட்டு, அது சம்பந்தமாக நம்முடைய ஜனாதிபதி என்ன முடிவு எடுக்கப்போகிறார் என்று தெரிந்தால் திட்டவட்டமாக நாம் பேசமுடியும். அப்படி இல்லாத சமயத்தில் எந்த அபாயம் வரக்கூடும் என்பதற்காகத்தான் நாம் யோசனை சொல்லக்கூடிய முறையில்தான் நம்முடைய யோசனைகள் இருக்க முடியும். அதில் முக்கியமாக கல்லூரியில் போதனாமொழி எதுவாக இருக்கப்போகிறது என்பதைப் பொறுத்துத்தான் ஆரம்பக் கல்விக்கு என்ன அங்கம் கொடுக்க முடியும் என்று யூகிக்க முடியும். கல்லூரியில் நிச்சயமாக தாய் மொழி மூலமாகத்தான்—ரீஜினல் லாங்க்வேஜ்—என்பதற்குத் தாய்மொழி என்ற வார்த்தையை உபயோகப்படுத்துகிறேன். எந்த உயர்தரப்படிப்பாக இருந்தாலும், விஞ்ஞானம், தொழில் நுட்ப படிப்பு எதுவாக இருந்தாலும், தாய்மொழியிலே சொல்லிக்கொடுக்கப்படும் என்ற கொள்கைக்கு சர்க்கார் திட்டவட்டமாக வந்துவிட்டால் மற்ற முடிவுகள் எடுப்பது சுலபமாக முடியும். அதில் தயக்கம் இருக்கும் வரை நாம் மற்ற விஷயங்களிலே சுலபமாக முடிவு எடுப்பது கஷ்டம்தான்.

நம்முடைய கல்வித் திட்டத்திலே தமிழுக்குரிய இடம் கொடுத்திருப்பதாக நான் ஏற்றுக்கொள்கிறேன். சர்க்காருக்கு இருக்கும் அதிகாரத்தை உபயோகப்படுத்தி எந்த எந்த இடங்களில் இடம் இருக்கிறதோ அங்கெல்லாம் தமிழ் இருக்கும், அதுதான் சர்க்காருடைய கொள்கை என்று நான் உணருகிறேன். அதற்குரிய சட்டங்கள் ஏற்கெனவே இங்கு இயற்றப்பட்டிருக்கின்றன. நம்முடைய ராஜ்ய சர்க்கார் சம்பந்தப்பட்ட வரை ஆட்சிமொழி தமிழாக இருக்கும், படிப்படியாக வளர்ந்துவரும் என்ற நம்பிக்கை ஊட்டக்கூடிய முறையில் சில நடவடிக்கைகள் எடுத்திருப்பதை நான் வரவேற்கிறேன். இருந்தபோதிலும், கல்லூரிகளில் ஆங்கிலம் இன்னும் நீண்ட காலத்திற்கு இருக்கும் என்ற அபாயம் இருக்குமானால், இதனால் முரண்பாடு ஏற்படும். எஸ். எஸ். எல். ஸி. வரை தமிழில் எல்லாப் பாடங்களையும் படித்துவிட்டு திடீரென்று அங்கு எல்லாப் பாடங்களையும் ஆங்கிலத்தின் மூலமாகக் கற்கவேண்டுமென்ற நிலைமை ஏற்படும்போது நம்முடைய கல்வியின் தரத்திற்கே ஆபத்தை உண்டாக்கும் என்ற காரணத்தால், ஆங்கிலத்திற்குப் பதிலாக தமிழையே கல்லூரியில் போதனாமொழி ஆக்கவேண்டியது, அதுவும் துரிதமாக வரவேண்டியது அவசியம். அதன் பிறகுதான் இந்திக்கு என்ன இடம் கொடுக்க முடியும் என்பதை யோசிக்கவேண்டும். இப்பொழுது பல சந்தேகங்கள் ஏற்படுகின்றன. தமிழுக்கு முதல் இடம் கொடுத்துவிட்டபோதிலும், இந்தியோ அல்லது வேறொரு இந்திய மொழியோ இரண்டாவது இடம் பெற்று, மூன்றாவது இடம் ஆங்கிலம் அல்லது இந்திய மொழி அல்லாத வேறொரு மொழிக்குக் கொடுத்து, இப்படியாக மூன்று ஸ்தானங்கள் கொடுக்கப்படுகின்றன. இதனால் நடைமுறையில் என்ன ஆகும் என்பதை நண்பர் சின்னதுரை அவர்கள் பேசியபோது எடுத்துச் சொன்னார்கள். மந்திரி அவர்கள் தைரியம் இல்லாமல், நம்முடைய தேச ஒற்றுமையை எடுத்துக் காட்டி, இந்தியும் இருக்கவேண்டுமென்று நான் வற்புறுத்தினேனா? என்று கேட்டார்கள். அப்படி நான் நினைக்கவில்லை. மந்திரி அவர்களுக்கு அதுதான் மனதில் இருக்கும். ஆனால், காலத்திற்கும் இடத்திற்கும் ஏற்ப, இந்தி கூடவே





கூடாது என்று சொல்லாமல், இந்தி அல்லது வேறு ஏதாவது ஒரு இந்திய மொழி என்று சொல்லியிருக்கிறார்கள். வேறு ஒரு இந்திய மொழி என்றால் எந்த மொழியைச் சொல்லிக் கொடுக்கப்போகிறார்கள்? ஐந்து லட்சம் குழந்தைகள் படிக்கும் நம் ராஜ்யத்தில், 4 லட்சம் குழந்தைகள் இப்பொழுது இந்தி படித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்திக்கு இருக்கவேண்டிய இடத்தை ஏற்கெனவேயே கொடுத்து விட்டார்கள். ஏற்கெனவே இருக்கக்கூடிய விஷயத்தைத்தான் இந்த அறிக்கையிலும் குறிப்பிட்டிருக்கிறார்களே தவிர, வேறு விஷயம் அல்ல. இந்திக்கு எதிராக நடக்கும் கிளர்ச்சிக்குப் பயந்து, அதை எப்படி சொல்லலாம் என்று யோசித்து, நாசூக்காக "ஹிந்தி அல்லது வேறொரு இந்திய மொழி" என்று சொல்லியிருக்கிறாரே தவிர, இந்தியின் முக்கியத்துவத்தைக் குறைத்துவிட்டதாக நான் நினைக்கவில்லை. இந்தியை எதிர்ப்பவர்களைப் பார்த்து. . . .

The Hon. Sri C. SUBRAMANIAM : என்னுடைய "கருத்து" என்று கனம் அங்கத்தினர் வலியுறுத்துவதற்குப் பதிலாக, "கமிட்டி சொல்லியிருக்கிற கருத்து" என்று அவர் சொல்லவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

Sri M. KALYANASUNDARAM : ஆகையினாலே ஹிந்தி எதிர்ப்பாளர்களுக்கு பயந்து ஹிந்தி அல்லது வேறு ஒரு மொழி என்று மந்திரி அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். எத்தனை பள்ளிக்கூடங்களில் மாணவர்கள் தெலுங்கு கற்றுக்கொள்கிறார்கள், மலையாளம் கற்றுக்கொள்ளுகிறார்கள், அல்லது பெங்காலி கற்றுக் கொள்கிறார்கள்? நமது பள்ளிக்கூடங்களிலெல்லாம் ஹிந்தியைத்தான் சொல்லிக்கொடுக்கக்கூடிய நிலைமை ஏற்படும். அதே போல் "ஆங்கிலத்தை மட்டும் நான் சொல்லவில்லை, ஆங்கிலம் அல்லது வேறு ஒரு மொழி என்று சொல்லி, கல்யாணசுந்தரம் வேண்டுமானால் ரஷ்ய மொழியைக் கற்றுக்கொள்ளலாம் என்று குறிப்பாகச் சொன்னார். எனக்கு ரஷ்ய மொழியில் ஒன்றும் மோகம் இல்லை. ரஷ்ய மொழியாக இருந்தாலும் சரி, ஆங்கிலமாக இருந்தாலும் சரி, சீன மொழியாக இருந்தாலும் சரி, எந்த மொழி தேசத்தின் முன்னேற்றத்திற்கு உபயோககரமாக இருக்கிறதோ அதைக் கற்றுக்கொள்ளவேண்டும். அதை ஒரு அரசியல் "பாயிண்டாக" எடுத்து, அரசியல் "டிபேடிங் பாயிண்டாக" எடுத்து வெற்றி பெறுவதிலே பிரயோசனமில்லை. ஆங்கில மொழிக்கு நாம் விரோதிகள் அல்ல. ஆங்கிலம் இருக்கக்கூடாது என்று நான் சொல்லவில்லை. ஆங்கிலத்தைப் பற்றி ஒரு சிலர் வற்புறுத்தி சொல்லுவதற்கும், ஹிந்தியை ஒரு சாரார் எதிர்ப்பதற்கும் ஒன்றுக்கு ஒன்று தொடர்பு இருக்கிறது என்பது என்னுடைய அபிப்பிராயம். தமிழ் நாட்டில் மாணவர்கள் படிப்பது உத்தியோகத்திற்காகத்தான் என்ற நிலைமை மாறாத காரணத்தினால், ஹிந்தியைப் படித்தால்தான் உத்தியோகம் என்ற நிலைமை ஏற்பட்டுவிட்டால் என்ன செய்வது என்று அஞ்சித்தான் ஹிந்திக்கு எதிர்ப்பு இருக்கிறது, தமிழ் நாட்டிலே. ஹிந்தி எதிர்ப்பினால்தான் சிலருக்கு ஆங்கில பக்தி ஏற்படுகிறது. அதனால் ஆங்கிலத்தை ஆதரிப்பவர்களெல்லாம் ஹிந்தியை எதிர்க்கிறார்கள் என்று சொல்ல முடியாது. அவர்கள் ஆங்கில மோகத்தை அவர்கள் ஆயஸு வரையிலும் மாற்றமுடியாது. ஆங்கிலத்தில் மோகம் கொண்டவர்கள் அறிவு வளர்ச்சி ஆங்கிலத்தினால்தான் ஏற்படும், அறிவு வளர்ச்சி தங்கள் ஏகபோக உரிமையாக இருக்கவேண்டும் என்ற மனப்பான்மையுடன் கல்லூரிகளில் மட்டுமல்லாமல் ஆட்சி மொழியும் ஆங்கிலமாக இருக்கவேண்டும், மத்திய சர்க்கார் இன்னும் மற்ற ராஜ்யங்கள் தேசம் பூராவும் ஆங்கிலமே ஆட்சி மொழியாக இருக்கவேண்டுமென்று சொன்னால் ஆச்சரியப்படுவதற்கு இல்லை. ஆனால் அந்தக் கூற்றுக்கு நாட்டில் ஒரு போதும் ஆதரவு இருக்காது. ஹிந்தி புகுத்தப்படும் முறையைப் பற்றி பயம் இல்லை. அதில் நம்முடைய சர்க்கார் ஜாக்கிரதையாக இருக்கும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. ஏனென்றால் ஹிந்தி புகுத்துவதை அவர்கள் எதிர்ப்பதாக இருந்தாலும், இல்லாவிட்டாலும் எப்படியும் தேர்தலில் மக்களிடம் வோட்டுக்குப் போகவேண்டும், நம்முடைய நிதி அமைச்சர் புத்திசாலி, அது விஷயத்திலே கவனமாக

[Sri M. Kalyanasundaram] [8th November 1957

இருப்பார் என்பது என்னுடைய அபிப்பிராயம். எதிர்க்கட்சியின் கிளர்ச்சிக்கு இடம் கொடுக்ககூடாது என்பதற்காக அவர் ஹிந்தி அல்லது வேறு ஒரு மொழி என்று குறிப்பிட்டிருக்கிறார். எதிர்க்கட்சி, சர்க்கார் கட்சி என்ற வித்தியாசம் இல்லாமல் ஹிந்தி புகுத்துவதன் முறையைப் பற்றி நாம் உஷாராக இருக்கவேண்டுமென்பது என்னுடைய அபிப்பிராயம். ஹிந்தியைப் படிக்கக்கூடாது, போதிக்கக்கூடாது என்று நான் சொல்லவில்லை. தமிழுக்கு முதல் இடம் கொடுத்துவிட்டு, ஹிந்தியைப் படித்தால் நமது தேசிய ஒற்றுமைக்கு நல்லது என்று சொல்வார்களேயானால் அதற்கு எதிர்ப்பு இருக்க முடியாது. ஆனால், ஹிந்தியைப் படித்தால்தான் ராஜ்ய சர்க்காரிலும் மத்திய சர்க்காரிலும் உத்தியோகம் கிடைக்கும் என்ற முறையை அடியோடு எதிர்ப்போம். ஹிந்தி மொழி ஒன்று மட்டும் தேசிய மொழி இல்லை. பதினன்கு மொழிகள் சேர்ந்து தேசிய மொழி என்று அரசியல் சட்டம் திட்ட வட்டமாக கூறியிருக்கிறது. அப்படியிருக்கும்போது ஹிந்தி மொழியை மட்டும் ஏன் ஆட்சி மொழியாக அவசரப்பட்டு திணிக்க முயற்சி செய்யவேண்டும்? தபால் கார்டுகள்கூட ஹிந்தியிலே அச்சடித்திருப்பதைக் காணும்பொழுது ஹிந்தி தெரியாத மக்களிடையே ஹிந்தியைப் பற்றி கவலையும் பயமும் ஏற்படுவது சகஜம். மத்திய சர்க்கார் ஹிந்தி மொழியை எப்படியாவது ஆங்கிலத்திற்குப் பதிலாக தேசம் பூராவும் புகுதத வேண்டுமென்று முயறசி செய்தால் அது தேசத்தின் ஒற்றுமைக்கே விரோதம் வளர்க்கக்கூடும். தமிழ் நாட்டில் மட்டும் ஹிந்திக்கு எதிர்ப்பு இருக்கிறது என்பதில்லை. வடநாட்டிலும் குஜராத்தி, மஹராஷ்டிரம், பஞ்சாப், வங்காளம் போன்ற மொழி பேசுகிறவர்கள் ஹிந்தி புகுத்துவதை எதிர்த்துக் கிளர்ச்சி செய்திருப்பதை மத்திய சர்க்கார் உணரும். அதற்குப் பிறகும் மத்திய சர்க்கார் தங்களுடைய கொள்கையை மாற்றிக்கொள்ள வில்லையென்றால் ஹிந்தி சம்பந்தப்பட்ட வரையில் அவர்கள் கொள்கை மக்களால் முறியடிக்கப்படும். தமிழ் நாட்டில் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் எல்லோரும் இது விஷயத்தில் ஒன்றுபட்டு நிற்கவேண்டு மென்பது என்னுடைய அபிப்பிராயம்.

அதே சமயத்தில் ஹிந்தியை இரண்டாம் மொழியாக வைத்திருந்தாலும் அதற்கு பரீக்ஷை வைத்து அதில் தேறவேண்டும் என்று கட்டாயம் இருக்கக் கூடாது. ஏழாவது வகுப்பிலே தமிழ், ஹிந்தி, ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளையும் படிப்பது கஷ்டமாக இருக்கும் என்று சிலர் அபிப்பிராயப் பட்டார்கள். ஆனால் மூன்று மொழிகள் படிப்பது கஷ்டமாக இருக்கும் என்று நான் நினைக்கவில்லை. நாகரீகத்தில் சிறந்த நாடுகளில் தாய்மொழியுடன், அந்தத் தேசத்திலே இருக்கக்கூடிய இன்னொரு மொழி, பொதுவாக உலகத்திலே முக்கியத்துவம் வாய்ந்த மற்றொரு மொழி ஆகிய மூன்று மொழிகளையும் கற்றுக்கொள்கிறார்கள். முதலாளித்துவ நாடுகளாக இருந்தாலும் சரி, சோஷலிஸ்டு நாடுகளாக இருந்தாலும் சரி, அங்கே மாணவர்கள் 3 மொழிகள் படிக்கிறார்கள். தாய் மொழியைத் தவிர இதர மொழிகளை அறிவு வளர்ச்சிக்காக கற்றுக்கொள்ளுகிறார்களே தவிர, வேறு நோக்கத்தோடு அல்ல. அம்மாதிரி அறிவு வளர்ச்சிக்காக இதர மொழிகளைக் கற்றுக்கொள்ளலாம், வேறு நிர்ப்பந்தம் கிடையாது என்ற நிலைமை நம் நாட்டிலும் ஏற்படுமேயானால் ஹிந்தியையும் ஆங்கிலத்தையும் மக்கள் ஆர்வத்தோடு கற்றுக்கொள்வார்கள். அப்படியில்லாமல், ஹிந்தி படித்தால்தான் 'உத்தியோகம் என்ற முறையில் ஹிந்தி புகுத்தப்படகூடாது. எஸ். எஸ். எல். ஸி. பரீக்ஷையில் ஹிந்தியில் மார்க் வாங்கித் தேறவேண்டுமென்ற கட்டாயம் கூடாது. ஹிந்தியில் பரீக்ஷையே கூடாது. மார்க்கே கூடாது. பின்னல் மாணவர்கள் கல்லூரிக்குப் போகும்பொழுதோ அல்லது மத்திய சர்க்கார் வேலைக்குப் போகும்பொழுதோ, வேண்டுமானல் அவர்களுக்கு ஹிந்தியில் போதுமான பயிற்சி இருக்கிறதா என்பதைத் தெரிந்துகொள்வதற்கு விசேஷ பரீக்ஷை வைக்கலாம். எஸ். எஸ். எல். ஸி. வரையிலும் தமிழுக்குக் கொடுக்கக்கூடிய முக்கியத்துவம் சிறிதும் மாறுபடக்கூடாது. ஹிந்தி அல்லது ஆங்கிலம் அல்லது மற்ற மொழி என்பதில் தமிழுக்குக் கொடுக்கக்கூடிய முக்கியத்துவம் சிறிதும் மட்டுப்படக்கூடாது என்பது என்னுடைய யோசனை. இதன் மூலம் ஹிந்திக்கும் தமிழுக்கும், ஆங்கிலத்திற்கும் ஹிந்திக்கும் உள்ள தகராறை



8th November 1957] [Sri M. Kalyanasundaram]

தீர்க்க முடியும். உண்மையிலேயே அரசாங்கத்திற்கு தமிழை வளர்ப்பதில் நடைமுறையில் ஆர்வம் இருக்குமானல், முதலிலே ஆங்கில ஆசிரியர்களுக்கும் தமிழ் ஆசிரியர்களுக்கும் உள்ள வித்தியாசத்தை நடைமுறையில் ஒழித்துக் கட்டவேண்டும் என்று கேட்டுக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

THE HON. SRI C. SUBRAMANIAM : கனம் சபாநாயகர் 12-7 p.m.
அவர்களே, இந்த மூன்று நாட்களாக கல்வித் திட்டத்தைப் பற்றி நல்ல முறையிலே விவாதம் நடந்தது. இந்த விவாதத்தில் சபையின் முன் இருக்கும் திட்டத்திற்கு பெரும் அளவில் ஆதரவு கொடுத்ததற்காக அங்கத்தினர்கள் எல்லோருக்கும் என்னுடைய நன்றியையும், நன்றியுடன் பாராட்டுதலையும் தெரிவித்துக்கொள்கிறேன். பெரிய அளவில் என்று குறிப்பிட்டுச் சொன்னேன். ஏனென்றால், சில மாறுபட்ட யோசனைகளும் சொல்லப்பட்டன. பொதுவான கருத்தைப் பொறுத்த வரையில், நான் விவாதத்தைக் கேட்டவரையில், அதைப் புரிந்துகொண்ட வரையில், அடிப்படை வேற்றுமைகள் இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. கருத்துகளை நிறைவேற்றுவதிலே சில மாற்று யோசனைகள் இருக்கின்றன என்பது பற்றி சிலர் குறிப்பிட்டார்கள். நான் அந்த யோசனைகளை ஆலோசனை செய்து பார்க்கவேண்டுமென்ற முறையிலே அவைகளைப் பற்றி சொல்லி நிறுத்திக்கொள்கிறேன்.

இத்தனை பேர்கள் பேசியதில், சின்னதுரை அவர்கள் தனிப்பட்ட முறையிலே அடிப்படையிலேயே இந்தத் திட்டத்தைதான் ஏற்றுக் கொள்ள முடியாதது பற்றி குறிப்பிட்டார்கள். அவர்களுக்கு நான் சொல்லிக்கொள்ள விரும்புவது என்னவென்றால், அவர்கள் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களோ அந்தக் கட்சிக்கு இதற்கு முன்பு தலைவராக இருந்த டாக்டர் கே. பி. மேனன் அவர்கள் இந்தத் திட்டத்தை பரிசீலனை செய்து பார்த்து முடிவு செய்ததிலே பங்கு கொண்டிருந்தார்கள் என்பது தான். கையெழுத்து போடுகிற காலத்தில் வேண்டுமானல் அவர்கள் வேறு ஒரு ராஜ்யத்திற்கு சென்று விட்டார்களே, தவிர, இந்தத் திட்டத்தை அலசிப் பார்க்கும்போது அவர்கள் முழு மனதுடன் இந்தத் திட்டத்தை ஏற்றுக்கொண்டார்கள் என்ற செய்தியை மட்டும் அவர்களுக்கு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஒவ்வொரு நாளும் இந்தக் கமிட்டி கூடி அதைப் பற்றி விவாதம் செய்ததெல்லாம் அச்சடிக்கப்பட்டிருக்கிறது. அதிலிருந்து நான் சொல்லக்கூடியது சரியாக இருக்கிறதா, இல்லையா என்பதை முதலிலேயே பார்த்துக்கொண்டேன். ஆகையால் அவர்களுடைய ஆதரவு கிடைக்கக்கூடாத ஒரு திட்டம் என்று தெரிவித்துக் கொள்கிறேன். அவரைத் தவிர—அவர் கட்சியைச் சேர்ந்திருக்கிறவர்கள் மாறுபட்ட அபிப்பிராயம் கொண்டிருக்கிறார்கள் என்றால் நான் ஆச்சரியப் படவில்லை. அதில் இருக்கின்றவர்கள் எல்லாம் அதை விட்டு துறவறம் பூணவேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறபோது அந்தக் கட்சியில் இருந்து பார்த்தால் வேறு விதமாகத்தான் இருக்கும் என்று எனக்குத் தெரியும். சின்னதுரை அவர்கள் இந்தச் சபையிலே பேசாமல்—வேறு ஒரு பெரிய சபையிலே—சாதாரண மனிதர்கள் இல்லாத சபையிலே சர்வோதயம், சோஷலிஸம், சமதர்மம் என வெறும் கோஷம் இட்டுக்கொண்டிருப்பவர்களின் மத்தியில் அங்கம் வகித்து பேசியிருப்பார்கள் என்றால் உயர்ந்த பாராட்டுதலைப் பெற்றிருப்பார். நம்மைப்போன்ற சாதாரண மக்களிடத்திலே இப்படிப் பேசும் நிலைமை அவர்களுக்கு கொடுத்தது பரிதாபத்திற்குரியதாக இருக்கிறது. சாதாரண மனிதர்களுடைய மத்தியிலே இருக்கிற நான்—அதனால்தான் அவர்கள் சொன்ன கருத்துக்கு பதில் சொல்ல முடியாத நிலைமையில் இருக்கிறேன் எனச் சொல்லிக்கொள்கிறேன். அவரை விட்டு விட்டு மற்றவர்கள் பெருவாரியாக இந்தக் கல்வித் திட்டத்தின் அடிப்படைக் கருத்துக்களை ஒப்புகொண்டிருக்கிறார்கள் என்பது எனக்குச் சந்தோஷம்தான். இந்தத் திட்டத்திலுள்ள பல அடிப்படையான கருத்துக்களை நான் பிரிவு பிரிவாக எடுத்துச் சொன்னேன். அதன் மேல் பல அங்கத்தினர்கள் அபிப்பிராயம் தெரிவித்திருக்கிறார்கள். அதற்கு சில வார்த்தைகள் பதில் சொல்ல விரும்புகிறேன்.

[Sri C. Subramaniam] [8th November 1957

முதன் முதலிலே செக்ஷன் மூன்றாவது பிரிவை எடுத்து நாம் பார்க்கும் போது 12-வது தலைப்பின் கீழ் கொடுத்திருக்கக்கூடிய விஷயங்களைப் பற்றி ஒன்றிலிருந்து ஒன்பது வரைக்கும் ஏகமனதாக அபிப்பிராயம் சபையில் நிலவி இருக்கிறது என்று நான்? கொள்ளவேண்டியிருக்கிறது. அதுவும் முக்கியமாக ஒன்பதாவது பிரிவில் ஒரு வேளை உணவு கொடுக்கவேண்டுமென்பதை எல்லோரும் உற்சாகமாக வரவேற்றார்கள். கல்வியை பரப்புவதற்கு—அடிப்படையாக இருக்கக்கூடியது நம் நாட்டில் வறுமை ஆதலால்—பிற்பகல் ஒரு வேளையாவது உணவு கொடுக்கவேண்டுமென்பதை எல்லோரும் வற்புறுத்தியதை நான் மிகவும் சந்தோஷத்தோடு வரவேற்கிறேன்.

ஒரு உபாத்தியாயருக்கு எத்தனை மாணவர்கள் இருக்கவேண்டுமென்பதைப்பற்றியும் பெருவாரியான ஒற்றுமை இருந்தது. அது ஒருபுறம் இருந்தாலும், அந்த எண்ணிக்கையைப்பற்றியும் உபாத்தியாயர்களுக்கு சம்பளம் பற்றியும் பேசும்போது சிலர் மாறுபட்ட கருத்துக்களைத் தெரிவித்தார்கள். இந்தச் சபை எப்படி முடிவு செய்வதாய் இருந்தாலும் அதை நாம் ஏற்றுக்கொள்ளத் தயாராய் இருக்கிறோம். நாம் செய்கின்ற முடிவுகளுக்கு ஏற்றபடி நிதி வசதியையும் நாம் செய்து தரவேண்டியவர்களாக இருக்கிறோம் என்பதை மறந்து ஒன்றும் சொல்லக்கூடாது. நான் கல்வி அமைச்சராகவும், நிதி அமைச்சராகவும் இருப்பதைப்பற்றி ஸ்ரீ கல்யாணசுந்தரம் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆனால் கல்வி அமைச்சர் என்னும்போது நிதி அமைச்சர் என்பதை மறந்து, நிதி அமைச்சர் என்னும்போது கல்வி அமைச்சர் என்பதை மறந்து பணியாற்றுவது என்று போனால் அது பொருந்தாது என்று சொல்ல விரும்புகிறேன். அப்படி நாம் ஆதியில் நினைத்துக்கொண்டிருந்த ஒரு காரணத்தினால்தான் பல விஷயங்களை பல திட்டங்களை வகுத்து அதை நிறைவேற்ற முடியாத சங்கடத்தில் இருக்கிறோம் என்று சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு இது இரண்டையும் சேர்த்துப் பார்ப்பதே அவசியமாக இருக்கிறதென்று தெரிவிக்க விரும்புகிறேன்.

திட்டத்தை நன்றாகத் தீட்டிவிட்டு வாயளவில் பேசிக்கொண்டிருப்பது என்றாலும், மக்களிடத்திலே சொல்லிக்கொண்டிருப்பது என்றாலும்—நிதியைப்பற்றி கவனிக்கவேண்டியதே இல்லை என்கிற விஷயத்தில் நான் பரிபூரணமாக ஒப்புக்கொள்கிறேன். ஆனால் அது பயன் அளிக்காது.

இப்போது இருக்கிற நிலைமையில் எல்லாக் குழந்தைகளுக்கும் படிப்பு சொல்லிக்கொடுக்கவேண்டுமென்கிற நிலைமையில் நாம் எல்லாவற்றையும் யோசிக்கவேண்டியதாய் இருக்கிறது. இருக்கக்கூடிய நிலைமையை நன்றாக உணர்ந்துதான் ஒரு ஆசிரியருக்கு 40 மாணவர்கள் இருக்கவேண்டுமென்று வைத்திருக்கிறோம். மற்ற நாடுகளில் இருக்கக்கூடிய அனுபவத்தை எடுத்துக்கொண்டு பார்க்கும்போது இதில் ஒன்றும் தவறு இல்லை. பல இடங்களில் இந்த மாதிரியாகத்தான் துரிதமாக ஆரம்பப் படிப்புச் சொல்லிக் கொடுக்க ஒரு ஆசிரியருக்கு 50, 60 மாணவர்கள் என்று வைத்திருக்கிறார்கள். நெருக்கடியைச் சமாளித்த பிறகு, படிப்படியாகக் குறைத்துக்கொண்டிருக்கிறார்கள். நம் நாட்டில் ஒரு ஆசிரியருக்கு நாற்பது மாணவர்கள் என்று இருப்பது ஒரு குறை என்றால் அதை நான் ஒப்புக்கொள்கிறேன். ஆனால் 20 மாணவர்கள்தான் இருக்கவேண்டுமென்று செய்தால் இப்போது இருக்கக்கூடிய உபாத்தியாயர்களுக்கு ஆகும் செலவைப்போல் இன்னும் ஒரு மடங்கு அதிகமாகச் செலவு ஆகும். அதற்கு வேண்டிய நிதியை நாம் வைத்துக்கொள்ள வேண்டும். இதை மனதில் வைத்துக்கொண்டே எந்த ஒரு முடிவையும் எடுத்தாகவேண்டும். நிதியைப்பற்றிப் பேசும்போது ஒரு விஷயத்தை சபை முன்பு சமர்ப்பிக்க விரும்புகிறேன். அதுவும் முக்கியமாகக் குறிப்பிட்டார்கள். மத்திய சர்க்கார் ஆயிரத்து நூறு கோடி ஆரம்பத்தில் கல்வித் திட்டங்களுக்காக ஒதுக்கினார்கள் என்றும், அப்புறம் அதை 350 கோடியாகச் செய்தார்கள் என்றும், அதையும் ஒவ்வொரு ராஜ்யத்திற்கும் கொஞ்சம் கொஞ்சமாகப் பகிர்ந்து அளித்தால், நாம் அந்தப் பணத்தைக் கொண்டு என்ன செய்வது? நம்முடைய திட்டத்தை பூர்த்தி செய்யக்



8th November 1957] [Sri C. Subramaniam]

கூடிய அளவு மத்திய சர்க்கார் உதவி செய்யவில்லை என்றால் அந்த மத்திய சர்க்காரில் எதற்காக இருந்துகொண்டிருக்கவேண்டும் என்கிற கருத்துடன் பேசினார்கள். இன்றைக்கு நாம் ஏற்றுக்கொண்டிருக்கிற பணி என்ன என்பதை யோசித்துப் பார்க்கவேண்டும்.

நாட்டிலே பல்வேறு துறைகளிலே—விவசாயத்தில்—சுகாதாரத்தில் தொழில் வளர்ச்சியில்—பலபல திட்டங்களை நாம் உருவாக்கிக் கொண்டிருக்கிறோம். ஏதோ ஒரு துறையில் மட்டும் நாம் அதிகமான வளர்ச்சியை அடைந்துவிட்டோம் என்றால் அதனால் சமுதாயத்தின் பொது வாழ்க்கை வளம் பெற்றுவிடாது, சமுதாயத்தில் இருக்கும்படியான எல்லாப் பிரச்னைகளையும் தீர்த்துவிட்டோம் என்று ஆகிவிடாது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

ஸ்ரீ டி. எஸ். ராமசாமி பிள்ளை அவர்கள் திருவாங்கூர்-கொச்சியை சுட்டிக் காட்டினார்கள். அதே திருவாங்கூர்-கொச்சியைத்தான் நானும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அவர்கள் எவ்வளவு தூரம் முன்னேறியிருக்கிறார்கள்? படிக்காத மக்களே அந்நாட்டில் கிடையாது. இருந்தாலும் அந்நாட்டு மக்களுடைய வாழ்க்கைப் பிரச்னை தீர்ந்து விட்டதா? மற்ற இடங்களில் இருப்பதைவிட வாழ்க்கைப் பிரச்னை அங்கே தான் கஷ்டமாக இருக்கிறது, சிக்கலானதாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். திருவாங்கூர்-கொச்சியில் இருக்கும்படியான இந்த நிலைமையை உணராது தான் கல்வியைப்பற்றி மட்டும் அவர்கள் பேசினார்கள். வெறும் கல்வித் துறையில் மட்டும் முன்னேற்றம் இருந்தால் போதாது. உடம்பு வளர்ச்சி என்று சொல்கிறபோது மூளை வளர்ச்சி மாத்திரம் இருந்தால் போதாது—பண்பு—இருதய வளர்ச்சி மட்டும் இருந்தால் போதாது—உடல், உள்ளம், அறிவு எல்லாம் வளர்ச்சி பெறுவது தான்—உடம்பு முழுவதும் வளர்ச்சி ஏற்படுவது தான் உண்மையான வளர்ச்சியாகும். அப்படியே ஒரு நாட்டு சமுதாய வளர்ச்சி என்று எடுத்துக்கொண்டாலும் ஒரு துறையில் மட்டும் அது எத்தனை தான் அதிகமான வளர்ச்சியைப் பெற்றாலும்கூட அந்த சமுதாயத்தில் இருக்கும்படியான மற்ற பிரச்னைகள்—கஷ்டங்கள்—தீர்ந்துவிடாது. அதிகச் செல்வம் ஒருவனுக்கு இருந்து படிப்பு அறிவு இல்லாமல் போய்விடுமானால் அதனாலேயே அவனுக்குச் சில கஷ்டங்கள், பிரச்னைகள் இருந்துகொண்டிருக்கின்றன. அப்படியே அதிகமாகப் படித்துவிட்டு ஒருவன் ஒரு வேளைச் சாப்பாட்டுக்குக்கூட வழியில்லாமல் இருந்தால் இன்னும் அதிகமான பிரச்னைகள் அவனுக்கு ஏற்பட்டுவிடுகின்றன என்பதை நாம் அறிகிறோம். ஆகவே அந்த உண்மையை நாம் மறந்து அவர்கள் 1,100 கோடி ஒதுக்கினார்கள், 350 கோடியாகக் குறைத்துவிட்டார்களே என்றால் அவர்களுக்குக் கல்வி அபிவிருத்தியில் அக்கறை இல்லை என்பது அல்ல சமுதாய வளர்ச்சி நல்ல முறையில் எல்லாத் துறையிலும் ஏற்படவேண்டும் என்கிற கொள்கைதான் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. கல்வித் துறையில் நாம் பல அபிவிருத்திகளைச் செய்யவேண்டுமென்று சொல்கிறபோது, இதர துறைகளிலும் நாம் பல அபிவிருத்திகளைச் செய்யவேண்டிய பொறுப்பு உடையவர்கள் என்பதை மறந்துவிடக்கூடாது.

கல்வியைப்பற்றிப் பேசும்போது "கல்வி இல்லாவிட்டால் ஒன்றும் இல்லை. எல்லாப் பணத்தையும் கல்விக்கே செலவழிக்கவேண்டும்" என்று பேசுவது, விவசாயத்தைப் பற்றிப் பேசும்போது "விவசாயம் தான் மிகவும் அவசியம். பசி வந்திடப் பத்தும் பறந்துபோம். உணவு உற்பத்தியை அதிகப்படுத்த எல்லாப் பணத்தையும் செலவழிக்கவேண்டும்" என்று பேசுவது. "தொழில் இல்லாமல் ஜனங்களுடைய வாழ்க்கைத் தரம் ஒரு நாளும் உயராது" என்பதாக தொழில்பற்றிப் பேசும்போது எல்லாப் பணத்தையும் தொழிலுக்கே செலவிடவேண்டும் என்று பேசுவது. இப்படி அவ்வப்போது எந்த விஷயத்தைப்பற்றி பேசுகிறோமோ அதை உயர்த்தி, வலியுறுத்திப் பேசுவது என்றால்—பொதுவாக எல்லா அங்கத்தினர்களும் அப்படிப் பேசி வருகின்ற காரணத்தினாலே—நம்முடைய கொள்கை என்ன? எல்லாத் துறைகளிலும் நாம் வளர்ச்சிபெற வேண்டுமென்றால் எல்லா இனங்களுக்கும் நியாயமான முறையில் பணம்

[Sri C. Subramaniam] [8th November 1957

ஒதுக்கவேண்டாமா என்பதைச் சிந்திக்கவேண்டும். புலவர்களைப்பற்றிப் பேசும்போது இப்படித்தான் அவர்கள் ஒன்றை ஒரேயடியாக உயர்த்திப் பேசுவார்கள், இல்லாவிட்டால் ஒரேயடியாக இறக்கிவிடுவார்கள் என்று சொல்வார்கள். (ஸ்ரீ எம். கல்யாணசுந்தரம்—அதற்கு உயர்வு நவிற்சி அணி என்று பெயர்.) அதற்கு இவர் உயர்வு நவிற்சி அணி என்கிறார்கள். (சிரிப்பு). இப்படிப் பேசினால் அது அலங்காரமாகத்தான் இருக்கும். சாத்தியமான ஒரு யோசனையாக அமையாது.

மற்றவர்கள் ஒரு சிலருக்கு அபிப்பிராய பேதம் இருக்குமேயானால் அதற்கு அவர்கள் மாற்று யோசனை சொல்லலாம். எப்படி நிதி திரட்ட முடியும் என்பதை சொல்லலாம். இன்றைக்கு யோசனை சொல்வது மட்டும் அல்ல. பூராவும் துறைகளை எடுத்துக்கொண்டு எப்படி மாற்றி அமைக்கவேண்டும் என்பதை யோசித்துப் பார்த்து சொல்லவேண்டுமே தவிர, திட்டத்திற்கு மாத்திரம் யோசனை சொன்னால் போதாது. ஆசிரியர்களுக்கு போதுமான சம்பளம் கிடைக்கவில்லை என்று ஸ்ரீ கல்யாணசுந்தரம் அவர்கள் சொன்னார்கள். போதுமான சம்பளம் கொடுத்துவிட்டோம் என்று நானும் சொல்லவில்லை என்று இருந்தாலும் இருக்கக்கூடிய நிலைமையில் எதைச் செய்ய முடியும் என்பதைத்தான் யோசிக்கவேண்டும். இன்றைக்கு ஒரு பெரிய மாறுதல் ஏற்பட்டிருக்கிறது என்பதை எல்லோரும் உணர்வார்கள் ஆசிரியர்கள் ஏதோ ஒதுக்கப்பட்ட பகுதியினர் என்ற முறையிலே அவர்கள் வாழ்ந்து வந்த காலம் ஒன்று இருந்தது. ஆனால் இன்றைக்கு அவ்வாறு இல்லை. ஆசிரியர்கள் சமுதாயத்திலே ஒரு முக்கியமான பணியை செய்யக்கூடியவர்களாய் இருக்கிறார்கள் என்ற உணர்ச்சி மக்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. ஏன் இன்றைக்கு தனிப்பட்ட முறையிலேகூட ஆசிரியர்களாக உத்தியோகம் செய்யக்கூடியவர்களுக்கு பென்ஷன் கொடுக்கவேண்டும் என்ற முறையை முடிவு செய்திருக்கிறோம். வேறு எந்தத் துறையிலே அவ்வாறு வேலை செய்யக்கூடியவர்களுக்கும் பென்ஷன் கொடுப்பதில்லை. ஆனால் ஆசிரியர்களுக்கு சர்க்கார் பள்ளிக்கூடங்கள் ஆனாலும் சரி, ஸ்தல ஸ்தாபனப் பள்ளிக்கூடங்களானாலும் சரி, ஆசிரியர்களுக்கு பென்ஷன் வசதி செய்து தந்துள்ளோம். அவர்கள் செய்யக்கூடிய பணி எவ்வளவு முக்கியமானது என்பதை ஒப்புக்கொண்டுதான் செய்திருக்கிறோம். அதே சமயத்தில் இன்றைக்கு சம்பள உயர்வு கட்டாயம் கொடுக்கவேண்டும் என்று பேசிக்கொண்டிருந்தோம். ஐந்து, ஆறு வருஷங்களிலே எத்தனையோ தடவை நிதி நிலைமை கஷ்டமாக இருந்தபோதிலும்கூட தேர்தல் வருவதற்கு முன்பு இந்த ஆசிரியர்களின் சம்பளம் எவ்வளவு இருந்தது என்று சற்று சிந்தித்துப் பார்க்கவேண்டும். இப்பொழுது அவர்கள் வாங்கிய சம்பளத்தையும் இப்பொழுது அவர்கள் வாங்கக்கூடிய சம்பளத்தையும் சீர்தூக்கிப் பார்த்தால் இப்பொழுது அவர்களுக்கு எவ்வளவு உயர்வு கிடைத்திருக்கிறது என்பது புலனாகும். இரண்டு மூன்று வருஷங்களாக ஐந்து ரூபாய், பத்து ரூபாயாக கொடுக்கப்பட்டு வந்தது எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்டது. இப்பொழுது இருக்கும் நிலைமையில் எவ்வளவு செலவு செய்ய முடியும், எவ்வளவு செலவாகும் என்று கணக்குப் போட்டிருந்தோம். ஐந்து வருஷத்திலே சம்பள உயர்வுக்கு ஒரு கோடி 88 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆரம்பப் பள்ளிகளில் வேலை செய்யக்கூடிய ஆசிரியர்களுக்கு இன்னும் அதிக சம்பளம் கிடைப்பதற்கு வழியில்லை. இப்பொழுது ஆசிரியர்களுக்கு 12 ரூபாய் உயர்வு கொடுக்கப்பட்டிருக்கிறது. ஏதோ சிக்கல் இருப்பதைப்பற்றி சொன்னார்கள். இந்தக் கணக்குப்படி பார்த்தால் 547 லட்ச ரூபாய் செலவழிக்கப்பட்டு 12 ரூபாயாக அவர்களுக்கு உயர்வு கொடுக்கப்பட்டிருக்கிறது. இதன் காரணமாக இன்றைக்கு 5 வருஷத்திலே ஒரு கோடி 88 லட்சத்திற்கு அதிகமாக 534 லட்சம் செலவழிக்கப்பட்டிருக்கிறது. இதன் பிரகாரம் மூன்று பங்கு இந்த ஆரம்ப ஆசிரியர்களுக்கு சம்பள உயர்வு கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

உயர்நிலைப் பள்ளியிலே இருப்பவர்களுக்கு ஐந்து வருஷத்திற்கு முன் 32 லட்சம் ரூபாய் கொடுக்கவேண்டும் என்று நிதி ஒதுக்கியிருந்தோம். இன்றைக்கு செய்திருக்கக்கூடிய திட்டத்தின் கீழ் 66 லட்சம் சம்பள உயர்வு



8th November 1957] [Sri C. Subramaniam]

கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் இப்பொழுதிருக்கும் நிலைமையில் இன்னும் அதிக நிதி கொடுக்க முடியுமா என்பதை யோசித்துப் பார்க்கும்படி கனம் அங்கத்தினர் அவர்களை அடிபணிந்து கேட்டுக்கொள்கிறேன். இந்தச் சம்பள உயர்வைப்பற்றி சொல்லும்போது ஏதோ தேர்தலுக்காகத்தான் ஆசிரியர்களுக்கு சம்பள உயர்வு கொடுத்ததாகச் சொன்னார்கள். மேலும் சம்பள உயர்வு கொடுக்கவேண்டும் என்று பேசுகிறார்கள். இப்பொழுது இருக்கும் நிதி நிலைமையிலே இது சாத்தியமா என்று இங்கிருக்கும் அங்கத்தினர்கள் என்ற முறையிலே சமுதாயத்தின் பிரதிநிதியாக வீற்றிருக்கிறோம் என்ற முறையிலே இதற்கு மேல் நிதியை எங்கிருந்து திரட்டுவது என்று பார்த்து அதற்கான யோசனையை சொல்லவேண்டும் என்று மிகவும் வற்புறுத்திக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

**Sri M. KALYANASUNDARAM** : கனம் மந்திரி அவர்களுடைய பேச்சிலே ஒத்துக்கொண்டு ஆசிரியர்களுக்கு போதுமான சம்பளம் கொடுக்கவேண்டும் என்று நாங்கள் ஒப்புக்கொண்டதுதானே என்று வருத்தப்படுகிறேன் என்று சொன்னார்கள். பிரதம மந்திரிகூட இதைக் கண்டித்துப் பேசி இருக்கிறார்கள். நாங்கள் பேசும்பொழுது ஏதோ அரசியல் நோக்கம் கற்பிக்கிறார்கள் என்று கூறுகிறார்கள். ஆரம்ப ஆசிரியர்களுக்கு கொடுக்கும் சம்பளத்தை நேரடியாக கொடுப்பதற்கு. . . .

**The Hon. Sri C. SUBRAMANIAM** : இது தனியாக கவனிக்கவேண்டிய விஷயம். ஆகவே இன்றைக்கு யோசித்துப்பார்க்கும்பொழுது ஆசிரியர்களுக்கு கொடுக்கும் சம்பளம் மட்டுமா ? இன்னும் அரசாங்கத்தில் வேலை செய்யும் எத்தனையோ பேர்கள் 30, 40 சம்பளத்திலேயே தங்கள் வாழ்க்கையை நடத்தவேண்டியவர்களாய் இருக்கிறார்கள். நம்முடைய சமுதாயத்தில் எத்தனையோ பேர் ஒரு நாள் சாப்பாட்டிற்குக்கூட கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இதையெல்லாம் பார்க்கும்பொழுது இந்தப் பிரச்னையை ஏன் உடனடியாக தீர்க்கவில்லை என்றால் அதற்கும்தான் அரசாங்கம் முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறது. இன்றைக்கு இருக்கக்கூடிய பாதையில் பல கஷ்டங்கள் இருக்கின்றன. அதை அனுசரித்து நடக்கவேண்டியதாய் இருக்கிறது. இதை தவிர்க்க ஓரளவு சகித்துக்கொண்டிருப்பதுதான் நல்லது என்று தோன்றுகிறது. ஆசிரியர்களும் மனிதர்கள்தானே. நம் சமுதாயத்தில் ஏற்பட்டிருக்கக்கூடிய பிரச்னைகளைப்பற்றி அவர்களுக்கும் தெரியும், ஆசிரியர்கள் மனதிலே திருப்தி ஏற்பட்டிருக்கிறது. இதனால்தான் அவர்களுக்கு உற்சாகம் ஏற்பட்டிருக்கிறது. இது எல்லோராலும் வரவேற்கக்கூடியது. இந்த ஆர்வத்தையும் உற்சாகத்தையும் குறைப்பதற்கு வேறு எந்தவிதமான நோக்கங்களையும் கற்பிக்க வேண்டாம். அத்தகைய பேச்சுகளும், பிரசாரங்களும் வேண்டியதில்லை என்று நான் சொல்ல விரும்புகிறேன். பனிரெண்டாவது பிரிவிலே உள்ள **Pupil teacher ratio** நிலைமை என்ன? 65, 66 பேர்கள் கொண்ட 5 வகுப்புகள் வரலாம் என்று சொன்னார்கள். ஏன் இன்னும் அதிகமாக செய்யக்கூடாது என்று திருவாங்கூர் கொச்சியை காண்பித்து பேசினார்கள். இது இன்று நேற்று நடந்தது அல்ல. சென்ற 15 வருஷ காலமாக தொடர்ந்து நடந்து வந்த காரணத்தால் அங்கே கல்வி முக்கியத்துவம் ஏற்பட்டிருக்கிறது. மற்ற துறைகளிலே முன்னேற்றம் இருந்தாலும், இல்லாவிட்டாலும் இந்த கல்வி துறையிலே அங்கே முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே நம் ராஜ்யத்தில் இன்றைக்கே தீர்ந்துவிடக்கூடிய பிரச்னை அல்ல இது என்று நம் மனதிலே கொள்ளவேண்டும். இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதிலே சமுதாயத்திலே இருக்கக்கூடிய கஷ்டங்கள், சிக்கல்களை வைத்துக்கொண்டு அதற்கான ஒரு திட்டத்தை கமிட்டியில் ஏகமனதாக சிபார்சு செய்திருக்கிறது.

மூன்றாவது செக்ஷனில் சில மாறுபட்ட யோசனைகள் சொல்லப்பட்டாலும்கூட குழுவினர் இதை நன்றாக ஆராய்ந்து பார்த்து எந்த விதமாக செய்தால் இதை நடைமுறையில் கொண்டுவர முடியும் என்று சிபார்சு செய்திருக்கிறார்கள். இது வெறும் காகித திட்டம் என்ற முறையிலே சிபார்சு செய்யவில்லை. செக்ஷன் இரண்டை எடுத்துக்கொள்வோம். இதில் இருக்கக்கூடியதை எல்லோரும் வரவேற்கிறார்கள். பன்னிரண்டு

[Sri C. Subramaniam] [8th November 1957

பகுதிகளாக பிரித்து இருப்பதிலே இதில் அபிப்பிராயபேதம் இருப்பதாக தெரியவில்லை. சில **details**—களில் மாறுபட்ட கருத்துக்கள் இருந்தாலும்கூட அடிப்படையான கருத்தை ஒப்புக்கொண்டுதான் இருக்கிறார்கள். இந்த அடிப்படையிலே சட்டம் செய்வதைப்பற்றியும் ஸ்ரீ கல்யாணசுந்தரம் அவர்கள் சொன்னபடி இந்த சபையிலே மாறுப்பட்ட கருத்தும் தெரிவித்தார்கள். இந்த அடிப்படையிலே சட்டங்கள் கொண்டுவரப்போகிறோம் என்பதைப் பூராவும் நான் என்னுடைய பேச்சில் தெரிவிக்காத போதிலும் எல்லாவற்றையும் சேர்த்து ஒரு சட்டமாக்கப் போகிறோம். இன்றைக்கு பாட திட்டத்திற்கு கமிட்டிகள் நியமிக்கப்பட்டு பாட திட்டங்கள் வகுத்து கொண்டிருக்கிறார்கள். இதைத்தான் பாடதிட்டங்கள் மாற்றமுடியாது **Syllabus** எல்லாம் மாற்றக்கூடாது என்று சட்டம் வரப்போகிறது என்று அடிப்படையிலே ஸ்ரீ ராஜாஜி அவர்கள் இதற்கு எதிர்ப்பு தெரிவித்திருக்கிறார் என்பதை பத்திரிகையில் படித்தேன்.

இங்கிருக்கக் கூடிய அங்கத்தினர்களிடம் நான் தாழ்மையாக தெரிவித்துக் கொள்வது என்னவென்றால், இதில் இருக்கக் கூடிய இந்த இரண்டாவது பகுதியில் இருக்கக்கூடிய இந்த ஆறாவது தலைப்பின் கீழ், ந்யூ ஸிலபஸின் கீழ் என்ன சொல்லியிருக்கிறது என்று பார்த்தால் இந்தத் தப்பர்த்தத்திற்கே இடம் இருந்திருக்காது. இந்த அறிக்கையை எல்லாம் ராஜாஜி அவர்கள் படிக்க வேண்டுமென்று எதிர்பார்த்தால் அது தவறு என்பதை உணர்கிறேன். ஆறாவது தலைப்பின் கீழ் என்ன சொல்லியிருக்கிறது. இந்த பாடதிட்டத்தைப் பொறுத்த வரையில், இது நிபுணர்கள் செய்ய வேண்டிய காரியம். நாம் இதில் ஒன்றும் செய்வதிற்கில்லை. எப்படி எப்படி கல்வி அமைய வேண்டும், இந்தத் தகுதியை மக்கள் அடைய வேண்டும் என்ற அளவிற்குத்தான் நாம் முடிவு செய்ய முடியுமேயொழிய ஒவ்வொரு வருஷமும் என்னென்ன பாட திட்டங்கள் இருக்க வேண்டும் என்பதைப் பற்றி முடிவு செய்யவேண்டிய பொறுப்பு, அதை ஒரு தனிப்பட்ட நிபுணர்கள் அடங்கிய குழுதான் முடிவு செய்ய வேண்டும். பாட திட்டங்கள் எப்படி எப்படி இருக்க வேண்டும் என்பது பற்றி சட்டம் இயற்ற வெண்டும் என்பதல்ல என்கருத்து. நான் மந்திரியாக இருக்கிற காரணத்தால், இந்த பாடதிட்டம் தவறு என்று நினைத்தால் வேண்டுமானால் உடனே அதை ஒரு உத்தரவு போட்டு மாற்றி விடலாம். இல்லை டைரக்டர் வேண்டுமானால் அவர்களுக்கு அதிகாரம் உள்ளதை வைத்துக் கொண்டு அதை மாற்றி விடலாம். இல்லை, வேறொருவர் வந்து குறுக்கிட்டு வேண்டுமானாலும் அதை மாற்றி விடலாம். ஆகவே, பாடதிட்டம் என்று சொன்னால் இந்தத் பாடதிட்டத்திற்குள்ள பொறுப்பு யாருக்கு இருக்க வேண்டும் என்ற முறையில், அதற்கு மந்திரிகள் பொறுப்பல்ல, சட்ட சபை கூட பொறுப்பல்ல. பாட திட்டங்கள் குறித்து முடிவு செய்ய ஒரு நிபுணர் கமிட்டி இருக்க வேண்டும். நிபுணர்கள் அடங்கிய கமிட்டிதான் மாறுதல்கள் அவசியமா, மாறுதல்கள் செய்யவேண்டுமா என்று ஒவ்வொரு வருஷமும் பரிசீலனை செய்து பார்த்து மாற்றம் வேண்டுமா வேண்டாமா என்று முடிவு செய்ய வேண்டியவர்கள், நிபுணர்கள், ஆசிரியர்கள், அனுபவம் பெற்றவர்கள் அடங்கிய குழுதான் அவைகளைப் பற்றி முடிவு செய்ய வேண்டுமே தவிர நம் இஷ்டம் போல் செய்யக் கூடாது. பாடதிட்டங்கள் பொறுத்த வரையில் 1-வது வகுப்பிற்கு இன்ன பாட திட்டம் இருக்கவேண்டும், இரண்டாவது வகுப்பிற்க்கு இன்ன பாட திட்டம் இருக்கவேண்டும் என்று சொல்லி 1-வது பாடதிட்டத்திற்கு எவ்வளவு வோட்டு, 2-வதற்கு எவ்வளவு வோட்டு என்று கணக்குப் போட்டு, ஒன்றாவதை ஏற்றுக் கொள்வதா இரண்டாவதை ஏற்றுக் கொள்வதா என்று வோட்டு எண்ணிப் பார்த்து செய்ய வேண்டிய காரியம் அல்ல, இது. ஆகவே அதை பற்றி முடிவு செய்ய நிபுணர்கள் அடங்கிய குழு ஏற்படுத்தி சட்ட அடிப்படையில் அதை ஒப்புக் கொள்ள வேண்டுமென்று முறையில் சட்டம் அமைக்கலாமேயொழிய வேறு விதத்தில் இருக்கக் கூடாது. ஆகவே, இன்றைக்கு ஏற்படக் கூடிய சட்டம் என்னவென்றால், அடிப்படையாக இந்தக் கல்வித் திட்டம் எப்படி அமைய வேண்டும். 11 வருஷம்தான் பள்ளிக்கூடங்களில் கால அளவு இருக்க வேண்டும். நம்மில் வேறொருவர் வந்து ஆந்திராவில் 12 வருஷ



8th November 1957] [Sri C. Subramaniam]

மாக இது இருக்கிறது, ஆகவே, அதை 12 வருஷமாக்க வேண்டுமென்று தனிப்பட உத்தரவு போடக் கூடாது. 4 வருஷம் செகண்டரி பள்ளிக்கூட படிப்பு இருக்கவேண்டுமென்று முடிவு செய்திருக்கிறோம். இதை மூன்று வருஷம், என்றோ அல்லது ஐந்து வருஷம் என்றோ அவரவர்கள் இஷ்டம் போல் மாற்றம் செய்து விடக் கூடாது. அதேபோல் இந்தப் பிரிவு எப்பொழுது ஏற்பட வேண்டும், எட்டிலா, ஒன்பதிலா அல்லது பத்திலா என்பவைகளைப் பற்றி தீர்மானம் செய்ய வேண்டும். "**Frame work**" காக சட்டம் நாம் இன்றைக்கு செய்கிறோம். நிபுணர்கள் செய்ய வேண்டிய காரியங்களிற்கு நிபுணர் கமிட்டி இருக்கிறது. அந்தக் கமிட்டியின் முடிவை நாம் சர்க்கார் ஒத்துக் கொள்ள வேண்டும் என்ற முறையில் சட்டம் செய்யவேண்டும். ஆகவே, இன்றைய சட்டம் வளர்ச்சியைத் தடுப்பதற்காக அல்ல. எல்லோரும் ஒப்புக் கொள்ள கூடிய முறையில் வளர்ச்சி ஏற்படவேண்டும். அனுபவம் உள்ளவர்கள், ஆசிரியர்கள், நிபுணர்கள், இவர்கள் காட்டும் முறையில் வளர்ச்சி அடைய வேண்டும் என்ற வழியை வகுப்பதற்கு சட்டமே தவிர வளர்ச்சியை தடை செய்வதற்கல்ல இந்தச் சட்டம். ஆகவே, இதைப் பொறுத்த வரையிலே இன்றைக்கு பேசிய முதல் பேச்சிலே இந்த அறிக்கையில் இல்லாத விஷயங்களைப் பற்றி பேசினேன் என்றாலும் அவைகள் மூலமாக இதிலுள்ள முடிவுகளுக்கு விளக்கம் காணவேண்டியிருப்பதால் சில விஷயங்களைப் பற்றி பேச வேண்டியிருந்தது. ஆகவே நாம் சட்டம் வகுக்க வேண்டியது இந்த அடிப்படையில். இந்த அடிப்படை என்று சொல்லும்போது அடிப்படையான கருத்தை வைத்துக்கொண்டு இந்த நிபுணர் கமிட்டி எப்படி அமையவேண்டும் என்ற முறையில் சட்டம் வேண்டும். உபாத்தியாயர்களின் பேரில் நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கிறது. யார் அதை எடுப்பது. கேஸ் சுப்ரீம் கோர்ட் வரை போகிறது. அந்தத் தீர்ப்பு வந்த பிறகும் தனிப்பட்ட நிர்வாகம் ஒரு திருத்தம் செய்து அவருக்கு நோட்டீஸ் கொடுத்து அனுப்பி விடுகிறார்கள். ஆகவே, அதற்கான டிரிப்யூனல்ஸ் அமைக்க வேண்டுமென்ற அடிப்படையில்தான் சட்டம் இயற்றப் படுகிறதேயொழிய கல்வி வளர்ச்சியை தடை செய்வதற்கல்ல. அடிப்படையாக இருக்கக்கக் கூடிய சில காரியங்களைப் பற்றி ஒரு முடிவிற்கு வரவேண்டும், அது, இந்த சட்டசபை முடிவு செய்ய வேண்டிய காரியம் என்பதையும் வலியுறுத்திக் கூறப்பட்டிருக்கிறது. அவைகளைப் பற்றித்தான் நாம் இன்று முடிவு செய்கிறோம். அடுத்தபடியாக, பெருவாரியாக அபிப்பிராயபேதம் ஏற்பட்டது, இந்த மொழி விஷயத்தில். அதில் ஆச்சரியப்படுவதற்கில்லை. இந்த அளவிலேதானே இருந்தது என்பது பற்றி மகிழ்ச்சியடைகிறேன். இதை விட ஆவேசமும், உணர்ச்சி வேகமும் வந்து விடவில்லையே என்று சொன்னால் அது தமிழர்களின் நிதான பண்பாட்டை மறுபடியும் வலியுறுத்திக் காட்டுகிறது என்று சொல்லிக் கொள்கிறேன். மொழிப் பிரச்னையைப் பற்றி பேசும்போது எல்லாவற்றையும் சேர்த்து ஒரேயடியாக குழப்பிக் கொள்ளக் கூடாது. எந்தெந்த அடிப்படையில் மொழிப் பிரச்னை எழுகிறது என்று பார்க்கவேண்டும். என்னைப் பொறுத்தவரையில் அதை ஆறு பாகங்களாக பிரித்துக் கொள்ளலாம்:

(1) பள்ளிக்கூடங்களில் போதனமொழி.

(2) பள்ளிக்கூடங்களில் பாடங்களாக எந்தெந்த மொழிகள் அமைய வேண்டும் என்பதைப் பற்றியாகும்.

(3) கல்லூரிகளில் போதனமொழி.

(4) கல்லூரிகளில் மொழிகள் பாடமாக அமையக் கூடிய விதம்.

(5) நம்மைப் பொறுத்தவரையில் நம் ராஜ்யத்தின் அரசாங்க நிர்வாகம், அரசாங்க அலுவல்கள் எந்த மொழியில் நடைபெறவேண்டும் என்பதைப் பற்றியதாகும். அதாவது, சட்டசபை, கோர்ட் போன்ற இடங்களில், மத்திய சர்க்காரின் நிர்வாகத்தில் இருக்கக் கூடிய பார்லிமெண்ட், அங்கிருக்கும் நிர்வாக பாஷை, சுப்ரீம் கோர்ட்போன்ற இடங்களில் என்னென்ன மொழிகள் இருக்கவேண்டும் என்பதைப் பற்றியதாகும்.

[Sri C. Subramaniam] [8th November 1957

(6) நாம் ஒரு ராஜ்யத்திற்கு ஒரு ராஜ்யம், அரசியல் ஒரு புற மிருக்க, அரசியல் ஒரு பக்கத்து வாழ்க்கைதான், ஒரு ராஜ்யத்திற்கும் இன்னொரு ராஜ்யத்திற்கும் உள்ள தொடர்பு. இந்த ஆறு அடிப்படையில் எடுத்துப் பார்த்தால் நம் மனதை குழப்பிக் கொள்ள இதில் அவசியம் இருக்க வேண்டியதில்லை என்பதுதான் எனது தாழ்மையான அபிப்பிராயம். அதைத்தான் நான் மறுபடியும் கொஞ்சம் வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன். முதல் ஐந்தைப் பொறுத்தவரையில் நாம் ஒரு முடிவான கருத்து கொண்டிருக்கிறோம். அதற்கேற்ப இன்று சட்டங்கள் நிறைவேற்ற அதற்கான முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. பள்ளிக்கூடங்களில் தாய்மொழிதான், தாய்மொழி என்று நான் சொல்வது பிரதேச மொழியையாகும், போதனமொழியாக இருக்கவேண்டும். பாடங்கள், நாம் இன்று செய்திருக்கக் கூடிய சிபார்சுகளின் அடிப்படையில் ஆங்கிலம் ஐந்தாவது வகுப்பில் ஆரம்பித்து **11**-வது வகுப்பு வரை சொல்லிக் கொடுக்க வேண்டும். ஹிந்தி எட்டாவது வகுப்பில் ஆரம்பிக்கப்பட்டு **11**-வது வகுப்பு வரை சொல்லிக்கொடுக்கப் பட வேண்டும். அது எப்படி இருக்கவேண்டும் என்பதைப் பற்றி பின்னால் குறிப்பிடுகிறேன். போதன மொழி தமிழ் மொழியாக இருக்கவேண்டும்.

கல்லூரிகளில் இன்றைக்கு போதன மொழியாக எது இருக்க வேண்டும் என்பதைபற்றி ஒவ்வொருவரும் ஒவ்வொருவிதமான கருத்தை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். நாம் ஒரு கருத்தை வைத்துக்கொண்டிருக்கிறோம். சர்வகலாசாலையில் உள்ளவர்கள் வேறு ஒரு கருத்தை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். இருந்தாலும் இதற்கு ஒரு முடிவு காண வேண்டியது அவசியம். இதில் எந்தவிதமான முடிவு வரும் என்பதில் என்னை பொறுத்தவரையில் எனக்கு சந்தேகமே இல்லை. இதில் எவ்வளவு சீக்கிரம் ஒரு முடிவுக்கு வருகிறோமோ அந்த அளவில் இந்த பிரச்னையில் இருக்கின்ற கஷ்டங்களை தீர்த்து வைக்கலாம் என்பது தான் என்னுடைய அபிப்பிராயம். அதே மாதிரி கல்லூரிகளில் தமிழ் மொழி, இன்றைக்கு ஆங்கிலம் எவ்விதம் தனி மொழியாக (லிட்டரேச்சர் ஆனர்ஸ்) இருக்கிறதோ அதே மாதிரி தமிழ் மொழியிலும் பாண்டித்தியம் பெறக் கூடிய அளவிற்கு தமிழ் பாடம் இருக்கவேண்டும் என்பதில் யாருக்கும் அபிப்பிராயபேதம் இருக்கமுடியாது. அதே போன்று தான் மற்ற மொழிகளுக்கும் வசதி செய்து கொடுக்கவேண்டும் என்பதில் யாருக்கும் அபிப்பிராய வித்தியாசம் இருக்கமுடியாது. நம்முடைய நிர்வாகத்தை பொறுத்த வரையில் நிர்வாக மொழி தாய் மொழியாகவே இருக்க வேண்டும் என்று முடிவு செய்து அதற்கென்று சட்டம் கொண்டு வந்து அதை நிறைவேற்றுவதற்கான முயற்சிகளும் செய்து வருகின்றோம். அந்த முயற்சி வெற்றியடைவதையும் நாம் கண்டு வருகிறோம். சட்டசபையில் நடக்கின்ற நிகழ்ச்சிகளை பார்க்கும்போதே இதை நன்றாக புரிந்து கொள்ள முடியும். இப்போது முக்கியமாக சர்ச்சை செய்யக்கூடிய விஷயம் மத்திய அரசாங்கத்தில் என்ன மொழி இருக்கவேண்டும் என்பதைப்பற்றித்தான். எந்த அடிப்படையில் மொழி கமிஷன் தன்னுடைய அறிக்கையை சமர்ப்பித்திருக்கிறது என்பதைப்பற்றி நாம் இப்போது கவனிக்கவேண்டிய அவசிய மில்லை. அந்த அறிக்கையை நாம் ஒப்புக்கொள்வதா இல்லையா என்பதை நாம் இன்னும் முடிவு செய்யவில்லை. மத்திய அரசாங்கத்திலும் இதைப்பற்றி இன்னும் ஒரு முடிவு எடுக்கப்படவில்லை. அங்கிருக்கின்ற அமைச்சர்களிலும் ஒவ்வொருவரும் ஒவ்வொருவிதமான அபிப்பிராயத்தை சொல்லுகிறார்கள். இதை பரிசீலிப்பதற்காக ஒரு பார்லிமெண்டரி கமிட்டியும் ஏற்படுத்தியிருக்கிறார்கள். அந்த பார்லிமெண்ட் கமிட்டிக்கு நம்முடைய அபிப்பிராயத்தை தெரிவிக்கக்கூடிய உரிமை நமக்கு இருக்கிறது. ஆகையினால் இது ஒரு முடிவு பெறாத விஷயமாகவே இருக்கிறது. அதிலே இருக்கக்கூடிய பல சங்கடங்களையும் நாம் உணர்ந்திருக்கிறோம். ஹிந்தி தான் ஆட்சி மொழியாக இருக்கவேண்டும் என்று சொல்லிவிட்டால் நமக்கு இருக்கக்கூடிய கஷ்டங்களை நாம் யோசித்துப்பார்க்க வேண்டும். கஷ்டம் யாருக்கு வந்தாலும் சரி அல்லது எந்த நாட்டுக்கு அல்லது எந்த பகுதிக்கு வந்தாலும் சரி அது நம்மையும் பாதித்துத்தான் தீரும். அதற்கு அடுத்தபடியாக 6-வதாக இருப்பதை நாம் கவனமாக பார்க்க



8th November 1957] [Sri C. Subramaniam]

வேண்டும். முன்பு சொன்ன விஷயத்தையும் இதையும் சேர்த்து பார்க்க வேண்டாம். இதில் கட்சி என்கின்ற நிலைமையை ஒதுக்கி வைத்துவிட்டு இங்கே இருக்கக்கூடிய மக்கள் எல்லோரும் ஒருவருக்கொருவர் தொடர்பு கொள்வதற்கு ஒரு மொழி அவசியம் என்பதை நாம் பார்க்க வேண்டும். தனி தமிழ்நாடாக இருந்தாலும் சரி, அல்லது இந்தியாவுடன் இணைந்த நாடாக இருந்தாலும் சரி எவ்விதம் இருந்தாலும் சரி நாம் தனித்து வாழ முடியாது என்பது நிச்சயம். தனித்து வாழலாம் என்று இருந்த காலம் போய்விட்டது. நண்பர் அன்பழகன் அவர்கள் பேசும்பொழுது நீங்கள் வேண்டுமானால் மற்றவர்களுடன் பழகலாம், நாங்கள் பழகப்போவதில்லை என்று சொன்னார்கள். மற்றவர்களோடு நாம் பழகித்தான் ஆக வேண்டும். இன்று இருக்கக்கூடிய உலக நிலை இவ்விதம் தான் இருக்கிறது. ஆயிரம் வருஷங்களுக்கு முன்னால் போனால் தான் தனியாக வாழ முடியும், என்னுடைய வீட்டிலேயே என்னுடைய கிராமத்திலேயே உட்கார்ந்து கொள்வேன், என்னுடைய சிறிய பகுதியிலேயே நான் உட் கார்ந்து கொள்வேன் என்று சொல்லுவது புத்திசாலித்தனமாகவும் தகுதியாகவும் இருக்கலாம். ஆனால் இன்றைக்கு வேறு. ஒருவரோடு பழகிகொள்வதில்லை என்று சொல்லுவதில் பெருமை அடைகின்றோம் என்று நினைத்தால் அது அவ்விதம் சொல்லுகின்றவர்கள் இருக்கின்ற நிலைமையை உணராமல் தான் சொல்லுகின்றார்களோ என்று சந்தேகப்பட வேண்டியிருக்கிறது. ஆகவே இந்த அரசியல் ஒருபுறம் இருக்கட்டும். தமிழ்நாடு இந்தியாவுடன் சேராமல் தனித்து வாழ முடியாது என்பது தான் என்னுடைய கருத்து. இந்தியாவுடன் சேராமல், அண்டையில் இருக்கிறவர்களுடன் சேராமல் எங்கோ இருக்கின்றவர்களிடம் தொடர்பு வைத்திருக்கலாம் என்று சொல்லுவது பொருத்தமல்ல. தமிழ் மக்கள் மலையாளத்திற்கு போகவேண்டும், தமிழ் மக்கள் ஆந்திரத்திற்கு போகவேண்டியிருக்கும், மைசூருக்குப் போக வேண்டியிருக்கும், அதே மாதிரிதான் வட நாட்டிலுள்ள ராஜயங்களுக்கு போக வேண்டியிருக்கும். இப்படி போகும் பொழுது நாம் அவர்களோடு எந்த மொழியில் பேசிக்கொள்வது, அவர்களை எந்த மொழியில் பேசி ஒரு காரியத்தை புரிய வைப்பது என்கின்ற காரியத்தை நாம் ஆலோசித்துப் பார்க்க வேண்டும். அவர்கள் எல்லாம் தமிழ் கற்று கொள்ளட்டும், அல்லது தமிழ் உலக மொழியாக வரவேண்டும் என்று சொல்வது சரியல்ல, அது குண்டு சட்டியில் குதிரை ஓட்டுவதைப்போலத்தான் இருக்கும். விரிவான வாழ்க்கை நடத்திக்கொள்வதற்கு, விரிவான ஒரு நிலைமையை ஏற்படுத்திக் கொள்வதற்கு இதனால் முடியாது. மற்ற இடங்களில் என்ன செய்கிறார்கள் என்பதை யோசித்து பார்த்து அந்த அடிப்படையிலே தான் நாம் முடிவு செய்யவேண்டும். இந்தியாவிலுள்ள எல்லா பகுதியிலுள்ளவர்களும் இதில் ஒரு மொழியை யோசித்துப்பார்த்து முடிவு எடுக்க வேண்டியதாயிருக்கிறது. மலையாளம் மாத்திரம் தெரிந்தால் கேரளத்திற்கு போவதோடு நின்று விடும், அதே மாதிரிதான் தெலுங்கு மாத்திரம் தெரிந்தால் ஆந்திரத்திற்கு மாத்திரம் போவதோடு நின்று விடும். அதே மாதிரிதான் கன்னடம் மாத்திரம் தெரிந்தால் மைசூருக்கு போவதோடு நின்று விடும். ஆகவே ஒரு திராவிட மொழியை மாத்திரம் படித்து வைத்துக்கொண்டாலும் கூட அது ஒரு பகுதிக்கு மாத்திரம் தான் உபயோகப்படுமே தவிர எல்லா பகுதிகளுக்கும் உபயோகப்படாது. ஆகவே இதில் அரசியலை ஒருபுறம் ஒதுக்கிவைத்துவிடவேண்டும். மக்களிடையே ஒரு இணைப்பு ஏற்படுவதற்கு, ஒரு தொடர்பை ஏற்படுத்துவதற்கு எல்லோரும் புரிந்து கொள்ளக்கூடிய ஒரு மொழி இருந்தால் தான் எல்லா இடங்களுக்கும் செல்ல முடியும், எலலா இடங்களோடும் தொடர்பு வைத்துக்கொள்ள முடியும். இவ்விதம் இருந்தால் தான் வளம் பெற முடியும். . .

**Sri K. ANBAZHAGAN:** பாயிண்ட் ஆப் இன்பர்மேஷன், தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் குறிப்பிடுவதில் நான் கூறியதாக சொல்லப் படும் கருத்துகள் தவறுதலாக இருக்கிறது என்ற காரணத்தால் நான் அதற்கு விளக்கம் கூற விரும்புகிறேன். அதாவது நான் படித்த ஹிந்தி மறந்து போனதற்கு காரணம் அதை வேறு ஆட்களோடு பேசுவதற்கு

அவசியம் ஏற்படாத காரணத்தால் நான் மறந்து போனேன் என்று தான் நான் குறிப்பிட்டேன். மற்றொரு விளக்கம் தேவை என கருதுகிறேன், அதாவது ஹிந்தி மொழி மட்டும் தெரிந்தால் கன்னடத்திற்கோ, அல்லது, வங்காளத்திற்கோ, அல்லது ஆந்திராவுக்கோ, அல்லது மராட்டியத்திற்கோ போக முடியாது, ஹிந்தியை தெரிந்திருக்கின்ற 13 கோடி மக்களை தவிர மற்றவர்கள் ஹிந்தி மொழியை வைத்துக்கொண்டு மாத்திரம் பிழைக்க முடியுமா என்பதை அமைச்சர் அவர்கள் விளக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

**The Hon. Sri C. SUBRAMANIAM :** அதைப்பற்றி கொஞ்சம் சிந்தனையை செலுத்தி பார்க்கவேண்டும். நானும் அதைத்தான் குறிப்பிட்டேன் ஒரு மொழி மாத்திரம் தெரிந்து விட்டால் மற்ற எல்லா இடங்களிலும் போய் தொடர்பு வைத்துக்கொள்ள முடியாது. இதை இப்பொழுதாவது நண்பர் அன்பழகன் அவர்கள் உணருகின்றார் என்று நினைத்து மகிழ்ச்சி யடைகின்றேன். ஆகவே அரசியலை ஒரு பக்கம் வைத்துக் விட்டு ஆலோசித்து பார்த்தால் ஒரு பொது மொழி அவசியம் என்பதை நாம் எல்லோரும் ஒப்புக்கொள்ள முடியும். இன்றைக்கு ஐரோப்பாவை எடுத்துக் கொள்ளுங்கள். அங்கு பல்வேறு மொழிகள் பேசப்படுகின்றன. நான் பல நாட்டு தலைவர்களையும் கண்டு பேசினேன். ஒருவருக்கொருவர் பழகி கொள்வது எப்படி என்பதையும் பார்த்தேன். இதற்கு முன்பு எல்லாம் பிரஞ்சு மொழி எல்லோருக்கும் தெரிந்திருந்தது. அன்றைக்கு அதை வைத்துக்கொண்டு எல்லோருக்கும் வாழ்க்கை நடத்தலாம் என்ற நிலை இருந்தது. இப்போது பிரஞ்சுக்கு இருந்த முக்கியத்துவம் குறைந்து விட்டது. ஆதலால் எல்லா நாட்டுக்கும் ஆங்கிலம் இருந்தால் பழகி கொள்ள முடியும் என்ற நிலை ஏற்பட்டு, இன்றைக்கு அந்த நாடுகளில் ஆங்கிலம் கட்டாயமாக சொல்லிக் கொடுக்கப் பட்டு வருகிறது. இன்றைக்கு இருக்கக்கூடிய முறையில் தனித்து வாழ முடியாது. பெருவாரியான மக்கள் ஒருவருக்கொருவர் பழகி கொள்ள வேண்டியிருக்கிறது, தொடர்பு வைத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. இன்றைக்கு ஆங்கிலத்தை வைத்துக்கொண்டு தான் ஐரோப்பா முழுவதும் தொடர்பு வைத்துக் கொண்டிருக்கிறார்கள். நான் வாதத்திற்கு வேண்டுமானால் ஒப்புக்கொள்கிறேன். ஏதோ நிதி அமைச்சர் ஒப்புக்கொண்டு விட்டார் என்று பத்திரிகையில் வந்து விடும். இன்றைக்கு ஆங்கில மொழி தெரிந்திருக்கா விட்டால் நாம் அந்நிய நாடுகளுடன் தொடர்பு வைத்துக்கொள்ள முடியாத நிலைமையில் இருக்கிறோம். இவ்விதமில்லையானால் நாம் குறுகிய மனோபாவத்தோடும், தமிழ் நாட்டில் வளர்ச்சி ஏற்படாமலும், ஏதோ இருக்கின்ற இன்ஜினியர்களை வைத்துக்கொண்டு கிணற்றுத்தவளைகளாகத்தான் இருக்கமுடியும். ஆங்கிலத்தை மாத்திரம் ஒரு பகுதியில் ஒப்புக்கொண்டு விட்டால் அதை நாம் ஒப்புக்கொள்ள முடியாது. இன்றைக்கு பொது மொழி எது இருக்கவேண்டும் என்று நிச்சயிப்பது எல்லோரும் சேர்ந்து என்ன மொழியை வைத்துக்கொள்ளலாம் என்று முடிவு கட்டி விட்டால் அதை பொதுமொழியாக வைத்துவிடலாம். எந்த மொழி நாட்டின் பொது மொழியாக இருக்க வேண்டு மென்பதை எல்லோரும் சேர்ந்து முடிவு செய்ய வேண்டும். நாட்டிற்கு ஒரு பொது மொழி வேண்டும் என்பதை எல்லோரும் ஒத்துக்கொண்டால் அதுவே இப்போது போதுமான்து. பொது மொழி ஆங்கிலமாக இருக்கவேண்டுமா அல்லது ஹிந்தியாக இருக்கவேண்டுமா என்பதைப் பற்றியெல்லாம் எல்லோரும் சேர்ந்து முடிவு செய்யவேண்டும். சுலபமான மொழியை பொது மொழியாக ஆக்க வேண்டும் என்ற அடிப்படையிலும் அதை முடிவு செய்யலாம். ஆனால் நாட்டிற்கு ஒரு பொது மொழி வேண்டு மென்பதை இப்போது நாம் ஒத்துக் கொள்ளவேண்டும். அதற்குப் பிறகு, எந்த மொழி பொது மொழியாக இருக்க வேண்டு மென்பதை சூழ்நிலைகளுக்கேற்ப முடிவு செய்யவேண்டும் என்பதையும் இப்போது நாம் ஒத்துக் கொள்ளவேண்டும்.

மொழியைப்பற்றி பேசும்போது, உலகத்தைப் பற்றிப் பேசியவர்கள் நாட்டை மறந்து விட்டார்கள், நாட்டைப் பற்றிப் பேசியவர்கள் உலகத்தை மறந்து விட்டார்கள் என்பது என் தாழ்மையான அபிப்பிராயம். ஆந்திராவிலும், கேரளத்திலும், மைசூரிலும் ஹிந்தி கட்டாயமாக இருக்கிற தென்று கனம் அங்கத்தினர் ஸ்ரீ ஏ. வேதரத்னம் பிள்ளை கூறினார். இந்த விஷயத்தில் நாம் தனித்து முடிவு செய்வதற்கில்லை. ஏதோ ஒரு பாஷையைத் திணிக்கப்பார்க்கிறார்களே என்ற அரசியல் மனோபாவத்தை விட்டு விட்டு, நாடு முன்னேறுவதற்கும் நாட்டு மக்கள் நன்றாக வாழ்க்கை நடத்துவதற்கும் ஒரு பொது மொழி அவசியம் என்பதை நாம் உணர்ந்தால் இந்தப் பிரச்னைக்கு நாம் சுலபமாக முடிவுகாணலாம். அந்த உணர்ச்சியுடன் இந்தப் பிரச்னையை அணுகினால் வெகு சீக்கிரத்தில் நல்ல முடிவிற்கு வரலாம் என்று எனக்குத் தோன்றுகிறது.



இந்தப் பிரச்னை சம்பந்தமாக நான் ஒரு விஷயத்தை உணர்கிறேன். மற்ற இடங்களில் ஏற்படும் வெறியின் காரணமாகவும் இந்தப் பிரச்னை கஷ்டமானதாகிவிடுகிறது. மற்றவர்கள் மொழி வெறியுடன் பிரச்னையை அணுகியபோது என்ன எதிர்ப்புகள் ஏற்பட்டனவோ அதே எதிர்ப்புகள் இங்கேயும் ஏற்படுகின்றன என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இந்த விஷயத்தில், முக்கியமாக, ஹிந்தி தான் பொது மொழியாக இருக்கவேண்டு மென்று விரும்பும் ஹிந்தி மொழி வெறியர்கள் இந்த உண்மையை உணரவேண்டுமென்பதை நான் இங்கே வலியுறுத்துவது மட்டுமல்லாமல் மத்திய சட்ட சபையில் இருந்த போது அங்கேயும் வலியுறுத்தி வந்திருக்கிறேன். இந்தப் பிரச்னை மொழி வெறியால் தீர்க்கப்படக் கூடியது அல்ல. இது உணர்ச்சியாலும் தீர்க்கப்படக் கூடியது அல்ல. எது நாட்டின் பொது மொழியாக இருக்க வேண்டுமென்பதை சூழ்நிலைகளுக்கேற்ப தீர்மானிக்க வேண்டும்.

கல்வி விஷயத்தில், மொழி சம்பந்தமாக நாங்கள், நல்ல முடிவிற்கு வந்திருக்கிறோம். மாணவர்கள் 3 மொழிகளைப் படிக்கும் பாரத்தைத் தாங்க முடியுமா என்று சில கனம் அங்கத்தினர்கள் கேட்டார்கள். அது சம்பந்தமாக உள்ள சில சிறு கஷ்டங்களைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். மூன்று மொழிகளும் வெவ்வேறு எழுத்துக்களைக் கொண்டவையாக இருக்கின்றன என்று குறிப்பிடப்பட்டது. இந்தக் கஷ்டங்களை மனதில் கொண்டு நாம் பிரச்னைக்குத் தீர்வுகாணக் கூடாது. இன்றுள்ள சூழ்நிலையில் பிரச்னைக்கு எப்படித் தீர்வுகாண வேண்டு மென்ற அடிப்படையில் ஒரு முடிவிற்கு வந்து, அந்த முடிவை அமலுக்குக் கொண்டு வரும்போது இடைக்காலத்தில் சிறிது கஷ்டம் ஏற்பட்டாலும் அந்தக் கஷ்டத்தை நாம் சமாளிக்கத்தான் வேண்டும். அதை சமாளிக்கும் சக்தி இருந்தால் தான் வாழ்க்கையில் முன்னேற முடியும். கஷ்டத்தை ஒதுக்கிவிட்டு சுலபமாக முன்னேறினால் இப்போதிருக்கும் நிலைமையைவிட மோசமான நிலைமைக்கு பின்னோக்கிப் போய்விடுவோமோ என்று எனக்குத் தோன்றுகிறது.

இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். நம்மிடையே பலருக்கு நம் அறிவையும் சக்தியையும் பற்றியே சந்தேகம் இருக்கிறது, அல்லது, அந்த சந்தேகம் இல்லாவிட்டாலும் கூட அரசியல் கருத்துக்களின் காரணமாக சந்தேகப்படும் கருத்துக்களை உண்டாக்கிக்கொள்கிறோம். நம் குழந்தைகள் மூன்று மொழிகளைப் பயில முடியாது என்று சொல்வது ஒரு புறம் இருக்கட்டும். எந்த மொழியையும் கற்றுக்கொள்ளும் சக்தி தென்னிந்தியர்களுக்கு, முக்கியமாக தமிழ் நாட்டு மக்களுக்கு, இருக்கிறது என்பதை உலகத்திலுள்ளவர்கள் எல்லோரும் ஒப்புக்கொள்கிறார்கள். அப்படியிருக்கும்போது, சாதாரணமான ஹிந்தி மொழியைக் கற்றுக்கொள்வதற்கு நம் குழந்தைகளால் முடியாது என்று சொல்பவர்கள்—அரசியல் நோக்கத்துடன் அவ்வாறு சொன்னால் நான் புரிந்து கொள்வேன்—நம் குழந்தைகளின் சக்தியை அறியாதவர்கள் என்று சொல்லிக்கொள்கிறேன்.

இன்னொன்று சொல்ல விரும்புகிறேன். ஹிந்தி வந்தால் தமிழ் மறைந்து விடுமோ என்றும், தமிழுக்கு இருக்கும் மதிப்புப் போய் விடுமோ என்றும் சிலர் பயப்படுகிறார்கள். தன்னம்பிக்கை இல்லாதவர்கள்தான் அப்படிப் பேசுவார்கள் என்று சொல்ல விரும்புகிறேன். இது சம்பந்தமாக இன்றைய நிலைமையில் எனக்கு எந்த விதமான பயமும்

[Sri C. Subramaniam] [8th November 1957

இல்லை. தமிழின் மேன்மை நிலையையும், அதன் மதிப்பையும், அதன் முற்போக்கான நிலையையும் எந்த மொழியும் பாதிக்க முடியாது. இன்னொரு மொழி கற்பதனால் தமிழ் அழிந்துவிடும் என்று நினைக்கும் தமிழர்களும் வேறு மொழி வந்து விட்டாலே தமிழ் அழிந்துவிடும் என்று நினைக்கும் தமிழர்களும் நல்ல தமிழர்கள் அல்ல, தமிழ் உணர்ச்சி உள்ள தமிழர்கள் அல்ல. தங்கள் மொழியின் மீதுள்ள பக்தியிலேயே நம்பிக்கையில்லாதவர்கள்தான் இப்படி எண்ணுவார்கள்; தங்கள் சக்தியில் நம்பிக்கையில்லாதவர்கள்தான் இப்படி எண்ணுவார்கள். இங்கே யாரும் அப்படி நினைக்கவில்லை என்பது எனக்குத் தெரியும். இங்குள்ளவர்களுக்கு அரசியல் நோக்கம் காரணமாக இந்த சந்தேகம் ஏற்படுகிறதே தவிர நம்பிக்கைக் குறைவினால் சந்தேகம் ஏற்படவில்லை என்பதை நான் அறிவேன். "ஹிந்தி படிக்கவே கூடாது; அது தமிழை பாதித்துவிடும்" என்று சொல்வதை நான் ஏற்றுக்கொள்ளத் தயாராயில்லை. இதே அபிப்பிராயம்தான் பல கனம் அங்கத்தினர்களுக்கு இருக்கும் என்று நினைக்கிறேன்.

இது ஒரு புறம் இருக்க, ஹிந்தி படிக்க வேண்டுமென்று தீர்மானித்து விட்டால் அதை எந்த வகுப்புகளில் சொல்லிக் கொடுக்க வேண்டும் என்பதைப் பற்றிய பிரச்னை எழுகிறது. ஸ்ரீ கல்யாணசுந்தரம் "ஹிந்தியைப் பாடமாக வைக்கலாம். ஆனால் அதைப் பரீக்ஷைக்குக் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டாம். மாணவர்கள் ஹிந்திப் பாடத்தில் தேற வேண்டும் என்று விதிக்க வேண்டாம்" என்று சொன்னார். இன்றைக்கு மாணவர்கள் தங்கள் முழுப் பொறுப்பை உணர்ந்து, பரீக்ஷைக்கு இருந்தாலும் இல்லாவிட்டாலும் எல்லாப் பாடங்களையும் படித்துத் தேர்ச்சி பெறுகிறார்கள் என்ற நிலைமை இருந்தால் நாம் வைக்கும் எல்லாப் பாடங்களுக்குமே பரீக்ஷை வேண்டாமென்று தீர்மானித்து விடலாம். பரீக்ஷை வைத்தால்தான் மாணவர்கள் படிக்கிறார்கள். "ஹிந்திப் பாடத்தை வையுங்கள். ஆனால் அதைப் பரிக்ஷைக்கு வைக்க வேண்டாம். ஹிந்திப் பண்டிதர்களையும் வைத்து விடுங்கள். ஆகக்கூடிய செலவையும் செய்யுங்கள். ஹிந்திப் பாடத்திற்கு நேரத்தையும் ஒதுக்கி விடுங்கள். கட்டாயமின்றி மாணவர்கள் அதைப் படிக்கட்டும்" என்று சொல்லுகிறபடி செய்தால், பணமும் சக்தியும் நேரமும் விரயமாகும் என்று சொல்லிக் கொள்கிறேன். இது அனுபவத்தில் தெரிந்த உண்மை. எந்தக் கட்டத்திலும் பரிக்ஷை என்று வைத்தால்தான் மாணவர்கள் பாடத்தைப் படிக்கிறார்கள். ஆனால், "ஹிந்தியைக் கட்டாய பாடமாக வைக்கவேண்டும். ஆனால் ஆரம்பத்தில், அதில் மற்றப் பாடங்களில் போல 35-40 சதவிகிதம் மார்க்குகள் வாங்கினால்தான் பரீக்ஷையில் தேர்வு கொடுக்கப்படும் என்று நிர்ணயிக்கக்கூடாது. ஆரம்பத்தில் ஹிந்திப் பாடத்தில் பரீக்ஷையில் தேறுவதற்கு 20-25 சதவிகிதம் மார்க்குகள் வாங்கினால் போதும் என்று நிர்ணயிக்க வேண்டும்" என்று வேண்டுமானால் சொல்லலாம். இந்த விஷயத்தில் எப்படியும் ஒரு ஆரம்பம் செய்தாக வேண்டும். ஹிந்தியைப் படிப்பதற்கான சூழ்நிலையை உண்டாக்க வேண்டும். "வேறு எந்த மொழியை வேண்டுமானாலும் கற்போம். ஹிந்தி மொழி மட்டும் தமிழர்கள் பக்கத்தில் வரக்கூடாது" என்று யாராவது அபிப்பிராயப்பட்டு அதே முடிவிற்கு சபை வந்தால், நானும் அந்த முடிவை ஒத்துக் கொள்வேன்; எனக்கு அது நியாயமில்லாத முடிவாக இருந்தாலும், சபை அவ்வாறு முடிவு செய்தால் அதை நான் ஒத்துக்கொள்கிறேன். ஆனால் "ஹிந்தியைக் கற்கமாட்டேன். இங்கேயேதான் வாழ்க்கை நடத்தப்போகிறேன். வெளியே போகப்போவதில்லை" என்று சொல்வது சரியல்ல. அப்படிச் சொல்வது "எதையோ அடிப்பேன், ஆனால் எனக்குத் தீங்கு ஏற்படக்கூடாது" என்ற அர்த்தத்தில் சொல்லப்படும் பழமொழிக்கு ஏற்றதாகத்தான் இருக்கிறது என்று சொல்வேன்.

**(Deputy Speaker in the Chair.)**

ஹிந்தியை எந்த அளவில் குறைக்க வேண்டும் என்று சொன்னார்கள். இப்பொழுது இருப்பதற்கு ஆட்சேபணைகள் சொல்லப்பட்டது. அதை எவ்வாறு பக்குவமாக அமைக்க வேண்டும் என்று சொல்லுகிறார்கள். என்னைப் பொருத்த மட்டில் இது சம்பந்தமாக ஒரு திட்டம் வகுக்க வேண்டியது



8th November 1957] [Sri C. Subramaniam]

அவசியமாக இருக்கிறது. இப்பொழுதுள்ள சூழ்நிலையில் அதை அமைக்க வேண்டியதாக இருக்கிறது. எது நியாயம் எது நியாயம் இல்லை என்பதைப் பார்த்து ஒரு முடிவுக்கு வர வேண்டியதாக இருக்கிறது. இதற்கு குழப்பம் செய்ய வேண்டிய அவசியம் இல்லை. எவ்வளவு நல்ல திட்டமாக இருந்தாலும் அதை நிறைவேற்றி வைக்கும்போது எவ்வித ஆட்சேபணையும் இல்லாமலும்தான் அதை நிறைவேற்றி வைக்கப்பட வேண்டும். அதனால் எல்லாரும் உட்கார்ந்து நாட்டுக்கு எது நல்லது என்று தோன்றுகிறதோ அதைச் செய்ய வேண்டுமென்ற ஒரு முடிவுக்கு வரவேண்டும். மக்களுடைய வாழ்க்கைக்கு எது அவசியம் என்ற முறையில் எல்லோரும் ஒன்று சேர்ந்து ஒரு முடிவுக்கு வரவேண்டும். நம் நாட்டின் மக்கள் முன்னேற்றப்பாதையில் செல்வதற்கு முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும். மாணவர்களைப் பொருத்த வரையில் அவர்களை வெகு சுலபமாக தட்டி எழுப்பி விடலாம். இளைஞர்களிடத்திலுள்ள உணர்ச்சியை தட்டி எழுப்பிவிட முடியும். இதைக் கொண்டு வரும்போது மாணவர்களுக்கு கல்வியில் பெரிய பளுவைக் கொண்டு வருவதாகச் சொல்லப்படுகிறது. இப்போழுது இருப்பது பெரியது என்று சொன்னால் அதை ஒப்புக் கொள்ள முடியாது. இப்படிப்பட்ட பளு கொஞ்சம் நாளைக்குத்தான் இருக்கும். பிறபட்டு அது சௌகரியாமாகிவிடும். நெல்லிக்காயை தின்னால் முதலில் கசப்பாகத்தானிருக்கும், பின்னடி அது இனிக்கும். அதைப் போலவே தான் கல்வியும். முதலில் கொஞ்சம் கஷ்டமாகத்தானிருக்கும் பின்னடி அது எவ்வளவோ சௌகர்யமானதாக இருக்கும். ஆகவே இப்பொழுது அவர்களை சாப்பிட வேண்டும் என்று சொன்னால் பின்னால் முன்னேற்றமடைய முடியும். கசக்கும் கல்வியைப் பயில இப்பொழுது ஏற்றுக்கொண்டால் பின்னடி கல்வியில் முன்னேற்றமடைய சௌகர்யமாக இருக்கும். ஆகவே மாணவர்களிடையே விரும்பத்தகாத கருத்தைச் செலுத்தாமல் நல்ல முறையில் செலுத்தி அந்த அடிப்படையில் ஒரு முடிவு செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

என்னைப் பொருத்த வரையில் இப்பொழுது ஏற்றுக்கொண்டிருக்கக் கூடிய முடிவை ஏற்றுக் கொள்ள வேண்டியதுதான் நல்லது என்று தோன்றுகிறது. எந்த முறையில் முடிவு செய்ய வேண்டுமோ அந்த முறையில் முடிவு செய்யப்பட்டிருக்கிறது. வேறு விதமாக முடிவு செய்ய முடியாது. இதில் கருத்து ஒற்றுமை ஏற்படாவிட்டால்தான் மாறுதல் செய்ய முடியும். ஆகவே இப்பொழுது இருக்கக்கூடிய திட்டத்தையே அங்கத்தினர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

SRI K. ANBAZHAGAN: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பேசும்போது "**Hindi or any other Indian language**" என்ற தலைப்பின் கீழுள்ள பகுதியைப்பற்றி விளக்கி அதைத்தான் ஒப்புக்கொள்ள வேண்டிய நிலைமை இருக்கும் என்று கூறினார். இந்த அவையிலும் அதைப் பற்றிய கருத்தை எடுத்துச் சொன்னபோது அந்தப் பகுதியில் ஹிந்தி அல்லது வேறு ஏதாவது இந்திய மொழி என்று குறிப்பிடும்போது ஹிந்தியைத்தான் படிக்க வேண்டிய நிலைமை, இயற்கை சூழ் நிலை ஏற்படுத்தப் படுகிறது. அதனால் ஹிந்தி தேவையில்லை என்று நினைக்கிற மாணவர்கள், பெற்றோர்கள், ஹிந்தி படிக்க வேண்டிய அவசியம் இல்லை என்று நினைக்கிறார்கள். ஆனால் தாய் மொழியை அங்கே திறம்பட படித்துக் கொள்வதற்கு வாய்ப்பாக "**any other Indian language**" என்று இருப்பதற்கு பதிலாக "**including the regional language**" என்று மாற்றப்பட வேண்டும் என்று கேட்கப்பட்டது. தாய் மொழியைப் படிக்க வேண்டும் என்று கேட்கிறவர்களுக்கு அந்த உரிமையை அளிப்பதற்கு அரசாங்கம் தடை செய்வதற்குக் காரணம் என்ன என்பது எனக்குத் தெரியவில்லை. வேண்டுமானால் ஹிந்திதான் தேவை என்று நினைப்பவர்கள் படித்துக் கொள்ளலாமே தவிர, ஹிந்தியை பற்றி நிச்சயமான ஒரு திட்டம் ஏற்படாத நேரத்தில் அதுதான் பொது மொழியாக இருக்க வேண்டும் என்று அமைச்சர் தைர்யமாக சொல்ல முடியாத நேரத்தில்

ஹிந்தி கட்டாயமாக படிக்க வேண்டுமென்று இப்பொழுது திடீரென்று சொல்வது நியாயமா? முறையா? அதுதான் அரசாங்கத்தினுடைய நோக்கமா என்பதை அறிய விரும்புகிறேன்.

Sri N. K. PALANISAMI நின்றார்.

**DEPUTY SPEAKER : This is not question hour. The hon. Member should not interrupt the Hon. Minister. If he wants to raise any point of clarification, he can do so at the end.**

THE HON. SRI C. SUBRAMANIAM : இன்றைக்கு இருக்கக் கூடிய நிலைமையில் நான் இந்த சபைக்கு சமர்ப்பித்துக்கொள்வது என்னவென்றால் இந்தத் தீர்ப்புக்குப் பின்னால் மாற்றம் செய்ய வேண்டுமென்றாலும் அதைப்பற்றி ஆலோசனை செய்யலாம். ஆகவே இப்பொழுது சட்டசபை கமிட்டி ஒரு முடிவு செய்திருப்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று மிகவும் வலியுறுத்த விரும்புகிறேன். இதைப்பற்றி நல்ல முறையில் ஆராய்ந்து முடிவு செய்ய வேண்டும். எல்லோரும் சேர்ந்து நல்ல முறையில் ஒரு முடிவு செய்ய வேண்டும் என்பதுதான் அரசாங்கத்தின் கருத்து. அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை வேண்டும். கனம் அங்கத்தினர் அன்பழகன் அவர்கள் இதைப்பற்றி ஒரு யோசனை கூறினார். அதாவது இது கல்வி விஷயமாக இருப்பதால் இதில் ஒரு நல்ல முடிவு செய்வதற்கு எல்லா கட்சித் தலைவர்களும் அடங்கிய ஒரு ஸ்டாண்டிங் கமிட்டியை அமைத்து அவர்களுடைய ஆதரவைப் பெற்று அபிப்பிராயங்களை அறிந்து அதன் பிறகு வேண்டிய மாறுதல்களை செய்து ஒரு முடிவுக்கு வரலாம் என்று அபிப்பிராயப்பட்டார். அதை நான் ஏற்றுக்கொள்ளுகிறேன். ஆகவே ஒரு கமிட்டியை அமைத்து அவர்களுடைய கருத்துக்களைத் தெரிந்து கொண்டு எல்லா விஷயங்களையும் அலசிப் பார்த்து நல்ல முறையில் ஒரு முடிவுக்கு வரலாம். நான் விரும்புவதெல்லாம் "ஏதோ எங்களுக்கு அதிகப்படியான வோட்டுக்கள் இருக்கின்றன அதை வைத்துக்கொண்டு இதை நிறைவேற்றி விடலாம்" என்றபடி இல்லாமல் எல்லோரும் ஒப்புக்கொள்ளக்கூடிய முடிவை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்பதுதான் எங்களுடைய அபிப்பிராயம். எவ்வித குழப்பமும் இல்லாமல் எல்லோரும் ஏகமனதாக ஒப்புக்கொண்டு ஒரு முடிவுக்கு வரவேண்டும் என்பதுதான் என்னுடைய எண்ணம். கல்வி முன்னேற்றம் அடைய வேண்டும் என்ற காரணத்தால்தான் எல்லோருடைய ஒத்துழைப்பையும் பெற்று இதைக் கொண்டு வரவேண்டும் என்றுதான் நினைத்துக்கொண்டிருக்கிறோம். ஒரு பக்கத்தில் மட்டும் கருத்துக்களை சொல்லிவிட்டார்கள் மற்றவர்கள் அதற்கு தயாராக இல்லை என்ற அடிப்படையில் இல்லாமல் குழப்பம் இல்லாது கல்வி முன்னேற்றம் அடைய வேண்டும் என்ற அடிப்படையில் இந்த காரியத்தைச் செய்யவேண்டும். இந்த முடிவுக்கு வந்தது இந்த அரசாங்கம் இல்லை என்பதையும், இந்த முடிவுக்கு வந்தது சட்டசபையின் அங்கத்தினர்கள் கொண்ட ஒரு கமிட்டிதான் என்பதையும் கனம் அங்கத்தினர்கள் தெரிந்து கொள்ளவேண்டும். ஆகவே என்னுடைய விருப்பம் எல்லாம் எல்லா கட்சிகளும் சேர்ந்து ஒரு "ப்ராக்டிகல் டெசிஷனுக்கு" வரவேண்டும் என்பதுதான். இந்த ஆலோசனை கமிட்டி ஒரு மாறுதல் செய்யவேண்டும் என்று சொன்னாலும் அதையும் ஒப்புக்கொள்ள தயாராக இருக்கிறோம், ஆனால் இது ஒரு சட்டசபையின் கமிட்டியின் முடிவாக இருப்பதால் இதை அப்படியே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதுதான் என்னுடைய விருப்பம். இப்பொழுதுள்ள நடைமுறைக்கு இதை ஒப்புக்கொள்ளவேண்டும். அந்த முறையில் ஒவ்வொருவரும் இதற்கு ஒத்துழைக்கவேண்டும். கல்வித்தரம் முன்னேற்றமடைவதற்கு எல்லோருடைய ஒத்துழைப்பும் ஒற்றுமையும் கொடுக்கவேண்டும் என்று மிகவும் வற்புறுத்திக்கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக பாட திட்டங்களை அமைத்திருப்பதில் சில குறைகளை எடுத்துச் சொன்னார்கள். அதில் முக்கியமாக குடும்பக்கட்டுப்பாடு "Sex Education" இவைகளைப் பற்றியெல்லாம் இதில் கூறப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். இவைகள் எல்லாம் நிபுணர்கள் அலசிப்





பார்த்து ஒரு முடிவுக்கு வர வேண்டிய விஷயம். கல்வி நிபுணர்கள் அடிப்படையில் சில விஷயங்கள் நமக்குக் கூடாது என்கின்ற அபிப்பிராயம் இருக்கலாம். அதை எந்த அளவுக்குப் போட்டிருக்கிறார்கள் என்பது கவனிக்கவேண்டிய விஷயம். அதை அவர்கள் கவனித்து வேண்டிய மாறுதல்களைச் செய்வார்கள் என்று நினைக்கிறேன். மற்றவர்களும் இதில் ஆலோசனை கொடுத்தால் அந்த மாறுதல்களையும் செய்ய முயற்சிக்கிறேன்.

இன்னொரு முக்கியமான விஷயத்தையும் குறிப்பிட்டார்கள். பாடப் புத்தகங்கள் வெளியிடுவது பற்றி கனம் அன்பழகன் ஒரு குறை சொன்னார். புத்தகங்களை வெளியிடுவதில் தனிப்பட்டவர்களை ஒதுக்கிவிட்டார்கள் என்று குறை கூறினார். தனிப்பட்டவர்கள் புத்தகங்களை வெளியிடுவது என்பது திட்டத்தில் இல்லை. இன்றைக்கு சர்க்கார் உத்யோகஸ்தர்கள்தான் புத்தகங்களை எழுதவேண்டும் என்பது இல்லை. சர்க்கார் உத்யோகஸ்தர்கள்தான் புத்தகங்களை எழுதவேண்டும் என்ற முடிவும் செய்யவில்லை. பாடப் புத்தகங்களை தேர்ந்தெடுப்பதற்கு ஒரு நிபுணர்கள் அடங்கிய கமிட்டியை நியமிக்கப்போகிறார்கள். அந்தக் கமிட்டியிடம் புத்தகங்களை அனுப்பினால் அவர்கள் எது நல்ல புத்தகம் என்று கருதுகிறார்களோ அதை தேர்ந்தெடுப்பார்கள். அந்தக் கமிட்டியில் உத்யோகஸ்தர்களும் இருப்பார்கள் தனிப்பட்டவர்களும் இருப்பார்கள். ஆனால் அந்த புத்தகங்களை அச்சிடுவதைத்தான் அரசாங்கம் எடுத்துக்கொண்டிருக்கிறது. தனிப்பட்டவர்கள் புத்தகங்கள் எழுதுவதை தடை செய்யவில்லை. தனிப்பட்டவர்களிலும் புத்தகங்கள் எழுதக் கூடிய வாய்ப்பு இருக்கலாம். அதை எந்த விதத்திலும் தடை செய்யவில்லை. தனிப்பட்டவர்கள் எழுதக்கூடிய புத்தங்களுக்கு தக்கபடி ஊதியம் கிடைப்பதில்லை. அவர்களுக்கு நல்ல முறையில் ஊதியம் கிடைப்பதில்லை. அப்படி அவர்கள் நல்ல புத்தகங்களை எழுதுவதில் குந்தகம் ஏற்படாமல் இருப்பதற்காகத்தான் அச்சிட்டு வெளியிடுவதை அரசாங்கம் எடுத்துக்கொள்ளுகிறது. இன்றைக்கு சர்க்காரோ அல்லது மந்திரிகளோ அல்லது டி.பி.ஐ.யோ புத்தகங்களை எழுதப்போவதில்லை. இப்பொழுது புத்தகங்களை எழுதுகிறவர்கள் இருக்கிறார்கள். மற்றவர்களும் அதில் பங்கு எடுத்துக்கொள்ளவேண்டும். சர்க்காரும் அதில் பங்கெடுத்துக் கொள்ளவேண்டும் என்பதற்காகத்தான் அவைகளை அச்சிட்டு வெளியிடக் கூடிய வேலையை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். சர்க்கார் அச்சிட்டால் நல்ல முறையில் பிழைகள் இல்லாமல் அச்சிடலாம் என்றுதான் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள்.

சர்க்காரிலேயே திறமையாக வேலை செய்யக்கூடியவர்கள் இருக்கிறார்கள். அப்படி அந்தத் திறமையிலே நம்பிக்கை இல்லையென்றாலுங்கூட, தனிப்பட்டவர்களைக்கொண்டு அதற்கும் ஒரு குழுவாக நியமித்து, அதை அவர்கள் நடத்த வேண்டியது என்ற முறையிலே நடத்துவதற்கும் ஏற்பாடு செய்ய முடியும். ஆகையால், குற்றங்குறை இல்லாமல் பார்த்துக் கொள்ளவேண்டியது நம்முடைய கடமை. அந்த முறையிலே புத்தகங்களை வெளியிட நாம் பரீட்சார்த்தமாக முதல் மூன்று வகுப்புகளுக்கும் எடுத்துக்கொண்டு, அதை அனுபவத்தை அடிப்படையாக வைத்துக்கொண்டு, நாம் இன்னும் எந்த முறையிலே இதை விரிவுப்படுத்தவேண்டுமென்று முடிவு செய்ய முடியும். இப்பொழுது அதற்கென்று ஒரு கமிட்டி ஏற்படுத்தி, அந்த அனுபவத்தை வைத்துக்கொண்டு, அந்தக்கமிட்டி முன்னால் வைத்து, சர்ச்சை செய்து, அமைப்பு எந்த விதத்தில், எப்படி இருக்கவேண்டும் என்று யோசித்து, புத்தக வெளியீட்டுக் குழு என்ற முறையில் இருக்கவேண்டுமென்பது உத்தேசம். அவசரமாக இருக்கும் காரணத்தால் முதல் மூன்று வகுப்புகளுக்குரிய பாடப் புத்தகங்களை வெளியிட இருக்கிறோம். ஆசிரியர்கள் எழுதும் புத்தகங்களில் நல்லதைத் தேர்ந்தெடுத்துத்தான் அச்சிடப் போகிறோம் என்று தெரிவித்துக்கொள்கிறேன். நான் கடைசியாக கனம் அங்கத்தினர்களை மிகவும் வற்புறுத்தி தாழ்மையோடு கேட்டுக்கொள்வது, நம்மிடையே சில கருத்துக்களிலே மாறுபாடு இருந்தாலுங்கூட, சில சமயங்களிலே வளைந்து கொடுக்கவேண்டிய அவசியம் ஏற்படுகிறது......வாழ்க்கையிலே ஏற்படக்கூடிய சூழ்நிலை காரணமாக. வாழ்க்கையிலே முன்னேற்றம் அடையவேண்டும் என்பதற்காக சில கருத்துக்கள் அவசியம் என்று கருதினாலுங்கூட, கொஞ்ச காலத்திற்

[Sri C. Subramaniam] [8th November 1957

காவது அதை ஒதுக்கி வைத்து, மற்றவர்களுக்கு இடம் கொடுக்க வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. அந்த நிலைமையில் இன்றைக்கு அதைத்தான் நான் முதலிலே குறிப்பிட்டேன். நம்முடைய நாட்டின் முன்னேற்றத்திற்கு, மக்களுடைய முன்னேற்றத்திற்கு, அதிலும் முக்கியமாக மாணவர்கள், குழந்தைகள் அவர்களுடைய முன்னேற்றத்தைப் பொருத்து, அவர்களுடைய தகுதியைப் பொருத்து, திறமையைப் பொருத்து நம்முடைய பிற்காலம் அமையப்போகிறது. அதில் குழப்பமான நிலைமையை ஏற்படுத்தினால் யாரும் முன்னேற முடியாது. அந்தக் குழப்பம் இருக்கிற அளவுக்கு மாணவர்களிடையே இன்னும் நாலைந்து மடங்கு குழப்பம் அவர்களுடைய மனதிலே வளர்ந்துவிடும். ஆகையால், ஒன்றுபட்ட சக்தியாக இயங்குவது மிகவும் அவசியம் என்பதைத் திரும்பத் திரும்ப வற்புறுத்த விரும்புகிறேன். அப்பேர்ப்பட்ட மனப்பான்மையுடனே இந்தக் கமிட்டி இந்தப் பிரச்னையை அணுகிய காரணத்தால்தான் பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்கள் உட்பட்ட கமிட்டியாக இது இருந்தாலுங்கூட, ஒன்றுபட்ட முடிவுக்கு வரமுடிந்தது. எல்லோரும் முழுக் கருத்து உடன்பாடு ஏற்பட்ட முடிவு என்று நான் சொல்வதற்குத் தயாராயில்லை. இப்பொழுதிருக்கும் நிலைமையிலே, நாட்டின் முன்னேற்றத்திற்காக, நம்முடைய கருத்துக்களை ஒருபுறம் ஒதுக்கி வைத்துவிட்டு, எது நல்லது என்பதை முடிவு செய்யவேண்டும் என்ற அந்த அடிப்படையிலே ஏற்பட்ட திட்டம். அப்படி எல்லோரும் நல்ல எண்ணத்தோடு ஏற்படுத்தியிருக்கும் இந்தத் திட்டத்தை நாம் இன்றைக்கு இருக்கும் நிலைமையிலே ஏற்றுக் கொண்டு, இன்னும் இதற்குமேல் இதிலே சில மாறுதல்கள் செய்ய வேண்டுமானால் போகப்போக செய்து கொள்ளக் கூடிய வாய்ப்பு இருக்கிறது என்ற முறையிலே இந்த சட்டசபைக் கமிட்டியினுடைய அறிக்கையை நீங்கள் எல்லோரும் ஏற்றுக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். எதிர் கட்சித் தலைவர் அவர்கள் இதற்குத் திருத்தம் கொடுத்திருப்பது மிகவும் மகிழ்ச்சிக்குரியது. எல்லாத் திட்டங்களுக்கும் இம்மாதிரி முடிவுகள் வர முடியுமானால் உண்மையிலேயே நம்முடைய நாடு முன்னேற்றப் பாதையை நோக்கிச் செல்வதற்கு வாய்ப்பு ஏற்படும் என்பதில் எனக்குச் சந்தேகம் இல்லை. அது தான் என்னுடைய ஆசையும் கூட. வெவ்வேறு கட்சி என்ற அடிப்படையில் நாம் உட்கார்ந்திருந்தாலும் கூட, நாம் எல்லோரும் ஒரு நோக்கம்—நாடு முன்னேறவேண்டும், மக்கள் முன்னேற வேண்டும், மக்கள் நன்றாக வாழவேண்டும்—கொண்டிருக்கிறோம். நோக்கம் எல்லோருக்கும் ஒன்றாகத்தான் இருக்க முடியும். ஆனால், அந்த நோக்கத்தை அடைவதற்கு, ஒவ்வொருவரும் ஒவ்வொரு வழியில் சென்றால் அடையலாம் என்று எண்ணக்கூடும். இந்த வழியில் சென்றால் அந்த முன்னேற்றம் ஏற்படும், சுபீட்சம் ஏற்படும் என்று நாம் நினைக்கிறோம். இன்னொருவர் வேறு விதமாக நினைக்கிறார்கள். ஆகையால், லட்சியத்தைப்பொறுத்தவரை யாருக்கும் கருத்து வேறுபாடு இருக்க முடியாது. ஆகையால், அப்பேர்ப்பட்ட லட்சியங்களை நிறைவேற்றுவதற்கு நாமெல்லோரும் ஒன்றுபட்ட சக்தியாக இயங்கவேண்டுமென்ற அடிப்படையிலே, அதிலும் முக்கியமாக கல்வித் துறையிலே இயங்கவேண்டிய அவசியத்தை எல்லோரும் உணர்ந்து, இன்றைக்கு ஏகோபித்த ஆதரவைக் கொடுக்க வேண்டுமென்று மறுபடியும் அடிபணிந்து கேட்டுக்கொண்டு, இவ்வளவு நல்ல முறையிலே இந்த விவாதத்தை நடத்திய உங்கள் எல்லோருக்கும் நன்றியையும் மனமார்ந்த வணக்கத்தையும் தெரிவித்து என்னுடைய உரையை முடித்துக்கொள்கின்றேன்.

SRI N. K. PALANISAMI : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, **On a point of clarification Sir** மொழிக் கமிஷன் சிபாரிசுப்படி, ஹிந்தி பேசப்படுகிற பிரதேசத்தில் வேறு மொழிகள் பயில வேண்டியதில்லை என்று இருக்க தமிழ்நாட்டில் மட்டும் மூன்று மொழிகள் பயிலவேண்டியிருக்கிறது என்று தவறான அபிப்பிராயம் ஜனங்கள் மத்தியில் இருக்கிறது. அதன் காரணமாகத்தான் ஹிந்தி மொழியின் பேரில் ஒரு அருவருப்பு இருக்கிறது. ஆகவேதான் ஹிந்தியில் பரீட்சை வேண்டியதில்லை, மற்ற இரண்டு ஸப்ஜெக்டுகளில் மட்டும் பரிட்சை வைத்தால் போதும் என்று நாங்கள் சொல்கிறோம்.



8th November 1957]

THE HON. SRI C. SUBRAMANIAM : நான் மொழிக் கமிஷனுடைய அறிக்கையை ஒத்துக்கொள்ளவில்லை. ஆகையால், அந்த விஷயமே இதில் எழுவதில்லை.

DEPUTY SPEAKER : I shall now put the amendment of Sri V. K. Ramaswamy Mudaliar to the vote of the House. The question is :

"*Add* the following at the end :

'and on such consideration this Assembly gives its general concurrence to the recommendations made by the Committee.' "

The amendment was put and carried.

DEPUTY SPEAKER : I shall now put the original motion, as amended, to vote. The question is—

"That the Report of the Legislature Committee on the White Paper on Education be taken into consideration and on such consideration this Assembly gives its general concurrence to the recommendations made by the Committee."

The motion as amended was put and carried.

DEPUTY SPEAKER : The House will now adjourn and meet again to-morrow at 9 a.m. 1-15 p.m

The House then adjourned.

### V.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

68. *Notification issued with G.O. No. 1165, L.A., dated 31st July 1957, amending rules 5 and 6 of the rules relating to house-tax framed under the Village Panchayats Act, 1950.*

*Notifications under the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1948.*

69. *Notification under section 1 (5) omitting the entry "265. Kilapidariseri" under Ramanathapuram district in the schedule to the Notification No. 280, dated 1st September 1951—G.O. No. 3218, Revenue, dated 12th August 1957.*

70. *Notification issued with G.O. No. 3445, Revenue, dated 31st August 1957, under section 1 (4) appointing the 26th day of September 1957, as the date on which the sections of the above Act other than 1, 2, 4, 5, 7, 8, 58-A, 62, 67 and 68 shall come into force in the inam estates specified in the schedule to this notification.*

71. *Notification issued with G.O. No. 1647, Revenue, dated 16th April 1957, amending the rules issued under sections 30 and 34 of the Act.*

72. *Notification issued with Memorandum No. 109784-J/56-4, dated 5th July 1957, under section 1 (5) omitting the entry "25. Navithan Usilangulam" against the entry "Sivaganga Estate" issued with Revenue Department Notification No. 2227, dated 22nd August 1949.*

[8th November 1957

73. *Notification issued with G.O. Ms. No. 3239, Revenue, dated 13th August 1957, under section 1 (5) omitting entry " 125. Akkinampattu Block B " and amending entries Nos. 124, 168 and 330 of the schedule to the Notification No. 5618, Revenue, dated 9th December 1950, under Chingleput district.*

74. *Notification issued with G.O. No. 2174, Revenue, dated 28th May 1957, omitting the entry " 425. Melaparuthiyur " under the heading " Zamin Manamadurai taluk " in the schedule to the notification of the Revenue Department, No. 2227, dated 22nd August 1949.*

75. *Notification issued with G.O. Ms. No. 3672, Revenue, dated 18th September 1957, under section 1 (4) appointing the 17th October 1957, as the date on which the provisions of the Act other than sections 1, 2, 4, 5, 7, 8, 58-A, 62, 67 and 68 shall come into force in Kottakadu Block B Zamin Estate, Chingleput district.*

76. *Notification issued with G.O. Ms. No. 3671, Revenue, dated 18th September 1957, under section 1 (4) appointing the 17th October 1957, as the date on which the provisions of the Act other than sections 1, 2, 4, 5, 7, 8, 58-A, 62, 67 and 68 shall come into force in Kunnakudi Inam Estate of Tiruppattur taluk, Ramanathapuram district.*

77. *Notification issued with Memorandum No. 62703-J/57-3, Revenue, dated 3rd September 1957, under section 1 (5) omitting entry " 324. Pavunthankaranai " and " 325. Onambakkam " in the schedule issued with Notification No. 5618, Revenue, dated 9th December 1950.*

78. *Report of the Select Committee on the Madras Village Panchayats (Amendment) Bill, 1957 (L.A. Bill No. 16 of 1957).*



8th November 1957]

## APPENDIX.

[Vide item III on page 471 supra.]

## THE MADRAS VILLAGE PANCHAYATS (AMENDMENT) BILL, 1957 (L.A. BILL No. 16 OF 1957).

### COMPOSITION OF THE SELECT COMMITTEE.

***Chairman.***

1 The Hon. Sri C. SUBRAMANIAM.

***Members.***

2 The Hon. Srimathi LOURDHAMMAL SIMON.
3 Sri S. M. ANNAMALAI.
4 Sri D. S. AUTHIMOOLAM.
5 Sri P. S. CHINNADURAI.
6 Sri M. KALYANASUNDARAM.
7 Sri P. G. KARUTHIRUMAN.
8 Srimathi KAMALAMBUJA AMMAL.
9 Sri V. A. MUTHAIYA.
10 Sri K. N. PALANISWAMI GOUNDER.
11 Sri M. D. RAMASWAMI.
12 Sri T. V. SANNASI.
13 Sri T. SIVAGNANAM PILLAI.
14 Sri K. VASUDEVAN.
15 Sri K. VINAYAKAM.

***Secretariat.***

Sri T. HANUMANTHAPPA (*Secretary*).
Sri G. M. ALAGARSWAMY (*Assistant Secretary*).

[8th November 1957

REPORT OF THE SELECT COMMITTEE ON THE MADRAS VILLAGE PANCHAYATS (AMENDMENT) BILL, 1957 (L.A. BILL NO. 16 OF 1957).

To

The Honourable The LEGISLATIVE ASSEMBLY,
MADRAS.

The Select Committee appointed to consider the Madras Village Panchayats (Amendment) Bill, 1957 (L.A. Bill No. 16 of 1957), has the honour to make the following report.

2. The Bill was published in English in an extraordinary issue of the *Fort St. George Gazette*, Part IV-A, dated the 22nd October 1957, and in Tamil in the *Fort St. George Gazette*, dated the 30th October 1957.

3. The Committee was appointed by a resolution of the Assembly, dated the 2nd November 1957.

4. The Committee met in the Committee Room, Legislators' Hostel (Old), Government Estate, Mount Road, Madras, on the 5th November 1957 for the consideration of the Bill.

5. The Committee has subjected the clauses of the Bill to a careful scrutiny and as a result of such scrutiny has made certain changes in them.

*Clause* 3.

Clause (*b*) of the proposed sub-section (2) of section 3 of the principal Act provides that the Inspector may, by notification, exclude from a village any specified area declared by the Government as an industrial, labour or instittuional colony or as a health resort. The Committee feels that the notification should be issued by the Government and that the draft of such a notification shall be placed before the Assembly and shall be subject to such modifications whether by way of repeal or amendment, as the Assembly may make. The proposed sub-section has been amended accordingly and the different clauses have been re-arranged suitably.

*New clause after clause* 9.

The Committee also feels that in accordance with the recommendation of the Committee on Subordinate Legislation the provisions delegating legislative powers should be amended to make them uniform with other Acts. A new clause has accordingly been added amending section 113 of the Principal Act.

6. The Committee decided that the Bill need not be republished.

7. A copy of the Bill as approved by the Committee is annexed.

8. Dissenting minutes given by some Members are appended.

FORT ST. GEORGE,
MADRAS,
*6th November 1957.*

C. SUBRAMANIAM,
*Chairman.*



8th November 1957]

ANNEXURE.

NOTE.—*The changes made are side-lined or under-lined.*

L.A. BILL NO. 16 OF 1957.

*A Bill further to amend the Madras Village Panchayats Act,* 1950.

WHEREAS it is expedient further to amend the Madras Village Panchayats Act, 1950 (Madras Act X of 1950), for the purposes hereinafter appearing;

BE it enacted in the Eighth Year of the Republic of India as follows :—

1. *Short title and commencement.*—(1) This Act may be called the Madras Village Panchayats (Amendment) Act, 1957.

(2) It shall come into force on such date as the State Government may, by notification, appoint.

2. *Amendment of section* 2, *Madras Act X of* 1950.—In clause (22) of section 2 of the Madras Village Panchayats Act, 1950 (Madras Act X of 1950) (hereinafter referred to as the principal Act), the words " and includes a hamlet in existence at the commencement of this Act and notified by the Inspector to be a revenue village for the purposes of this Act " shall be omitted.

3. *Amendment of section* 3, *Madras Act X of* 1950.—For sub-sections (1) and (2) of section 3 of the principal Act, the following sub-sections shall be substituted, namely : —

" (1) The Inspector shall, as soon as may be after the commencement of this Act, by notification, declare every local area comprising a revenue village or villages or any portion or portions thereof to be a village for the purposes of this Act and specify the name of such village :

Provided that no area shall be declared to be a village unless it has a population of not less than five hundred.

(2) (*a*) The Inspector may, by notification, exclude from a village any local area comprised therein, provided that the population of the village, after such exclusion, is not less than five hundred.

(*b*) In regard to any area excluded under clause (*a*), the Inspector shall by notification under sub-section (1) declare it to be a village if it has a population of not less than five hundred or if its population is less than five hundred include it in any contiguous village under clause (*c*) (i).

(*c*) The Inspector may, by notification,—

(i) include in a village any local area in the vicinity thereof; or

(ii) cancel a notification issued under sub-section (1); or

(iii) alter the name of any village specified under sub-section (1).

[8th November 1957

(2-A) (*a*) The Government may, by notification, exclude from a village any specified area which is an industrial, labour or institutional colony or a health resort:

Provided that before issuing such notification a draft of the same shall be placed before the Legislative Assembly and such draft shall be subject to such modifications as the Assembly may make within fourteen days of the date on which the draft was so placed and if the Assembly disapproves of the issue of such notification it shall not be issued.

(*b*) In regard to any area excluded under clause (*a*), the Government may, if authorized in that behalf by a resolution of the Legislative Assembly, by notification, constitute a village committee.

(*c*) A notification issued by the Government in pursuance of such resolution may direct that any functions vested in a panchayat by or under this Act shall be transferred to and performed by the village committee and shall provide for—

(1) the total number of members of the village committee;

(2) the persons who shall be members of the village committee or the manner in which they shall be appointed;

(3) the person who shall be the Chairman of the village committee or the manner in which he shall be elected or appointed;

(4) the term of office of members and Chairman;

(5) the restrictions and conditions subject to which the village committee may perform its functions; and

(6) the procedure of the village committee.

(*d*) The Government may, by notification, direct that any of the provisions of the Madras District Municipalities Act, 1920 (Madras Act V of 1920), or of any rules made thereunder or of any other enactment for the time being in force elsewhere in the State of Madras, but not in the area excluded under clause (*a*), shall apply to that area to such extent and subject to such modifications, additions and restrictions as may be specified in the notification.

(*e*) Before issuing a notification under clause (*a*) or under clause (*b*) of sub-section (2) read with sub-section (1) or under clause (*c*) of sub-section (2) the Inspector shall give the panchayat or panchayats which will be affected by the issue of such notification a reasonable opportunity for showing cause against the proposal and shall consider the explaantions and objects, if any, of such panchayat or panchayats ".

4. *Amendment of section* 6, *Madras Act X of* 1950.—In sub-section (1) of section 6 of the principal Act, the words, " exclusive of its president " shall be omitted.

5. *Amendment of section* 10, *Madras Act X of* 1950.—In sub-section (1) of section 10 of the principal Act, for the words " three years ", the words " five years " shall be substituted.



8th November 1957]

6. *Substitution of new sections for sections* 21 *and* 22, *Madras Act X of* 1950.—For sections 21 and 22 of the principal Act, the following sections shall be substituted, namely :—

" 21. *Election of president and vice-president.*—The president and vice-president shall be elected by the panchayat from among its members in accordance with such procedure as may be prescribed.

22. Procedure when no president or vice-president is elected.—If at an election held under section 21, no president or vice-president is elected, a fresh election shall be held for electing the president or vice-president as the case may be."

7. *Amendment of section* 36, *Madras Act X of* 1950.—In section 36 of the principal Act, the brackets and words " (other than the president) " shall be omitted.

8. *Amendment of section* 48, *Madras Act X of* 1950.—In section 48 of the principal Act—

(i) sub-section (2) shall be omitted;

(ii) in sub-section (4), for the words " as well as its vice-president ", the words " as well as its president and vice-president " shall be substituted;

(iii) for sub-section (5) the following sub-section shall be substituted, namely :—

" (5) During the interval, if any, between the dissolution and the reconstitution of a panchayat or during the period of its supersession, as the case may be, the Inspector may appoint a person to exercise the powers and discharge the duties of the panchayat and of its president including where the president is also the executive authority, his powers and duties as such until the reconstitution of the panchayat. Any person other than the executive-officer who is so appointed may, if the Inspector so directs, receive payment for his services from the panchayat.";

(iv) in sub-section (6), the words " other than the president " shall be omitted.

9. *Amendment of section* 112, *Madras Act X of* 1950.—In sub-section (2) of section 112 of the principal Act, clause (xi) shall be omitted.

10. *Amendment of section* 113, *Madras Act X of* 1950.—In section 113 of the principal Act, after sub-section (3), the following sub-section shall be added, namely :—

" (4) All rules made and all notifications issued under this Act shall, as soon as possible after they are made, be placed on the table of both the Houses of Legislature and shall be subject to such modifications by way of amendments or repeal as the Legislative Assembly may make within fourteen days on which the House actually sits either in the same session or in more than one session."

[8th November 1957

11. *Amendment of section* 122, *Madras Act X of* 1950.—In section 122 of the principal Act—

(i) in sub-section (2), the words " and of the president " and the words " and the president " shall be omitted.

(ii) in sub-section (3), the words " and of the president " shall be omitted.

T. HANUMANTHAPPA,
*Secretary.*

FORT ST. GEORGE,
MADRAS-9,
*6th November* 1957.

APPENDIX.

## DISSENTING MINUTES.

### I

(1) This Bill seeks to amend the Madras Panchayats Act, 1950. The changes sought for are fundamental. There is no need to amend the Act so fundamentally and so urgently, when the proposals for the reorganization of the Panchayats are on the anvil.

(2) Only recently the Assembly discussed the White Paper containing proposals for reorganization and the future set up of the Local Administration as a whole, including Village Panchayats. A committee of the Legislature has been set up to assist the Minister for Local Administration, for finalising the conclusions. I, therefore, feel that there is no need to rush through a piecemeal legislation at this stage. Elections to the Panchayats could be held in accordance with the existing laws for the present.

(3) One of the changes, which this Bill seeks to make, is about the method of electing the Presidents of the Panchayats. According to the Panchayat Act of 1950, the President of the Panchayat should be elected by the entire voters in the whole of the Panchayat. This provision is now sought to be changed, so that the Presidents of the Panchayats shall be elected by the members of a Panchayat from among themselves. This is a retrograde step, to put it mildly. The system of electing the Presidents directly by the voters has been working well, and has received widest support. This system had a healthy influence against casteism and other kinds of evil influence, as the President has to rely on the support of the entire population, without caste or creed. This system is very vital, for the realisation of the directive principle contained in Article 40 of the Constitution of India, *viz*., the Panchayats should function as the units of self-government.

Any change of this system into one of electing the Presidents of the Panchayats, by the members from among themselves, would weaken the authority of the Panchayat, as it would throw open the post of the President to intrigues of all sorts. So, I am strongly opposed to this change.



8th November 1957]

(4) The second important change, that this Bill seeks to make, is to extend the term of office of the Panchayat Board Members from three to five years. This change, according to me could be supported only in case secret ballot is ensured in the elections to the Panchayats, and the system of direct election for the posts of the Presidents is adhered to. Otherwise the extension of the term to five years would be injurious to the effective functioning of the Panchayats.

(5) The other changes sought to be made, although appear to be very minor, are important. There is no need to vest powers in the hands of the Inspector of Local Boards to bifurcate a village, or to exclude the housing colonies from the adjacent panchayats. Such exclusions, would curtail the resources of the panchayats concerned and would even endanger the efficient functioning. Since the majority of the Select Committee support this change, I would suggest the following modifications :—

(*a*) All notifications of exclusion should be issued by the Government and should take effect only after they are placed on the table of the Assembly with such modifications as the Assembly would make.

(*b*) Provision should be made for the constitution of the colony committees, by means of secret ballot.

(*c*) Such colony committees should be governed by the Panchayats Act, for supervision and administration.

(6) For the reasons stated above, I would strongly urge that the consideration of this Bill be deferred until final decisions are made on the proposals made in the White Paper on Local Administration.

M. KALYANASUNDARAM.

MADRAS,
*6th November* 1957.

### II

Clause (*b*) of the proposed sub-section (2) of section 3 of the principal Act seeks to bring in capitalistic ideas detrimental to the fundamental principles of Local Self-Governmnet which is the foundation of the Socialistic Society. Exclusion of Industrial and Labour Colonies, etc., is to deprive a section of the people of this State of the rights and benefits guaranteed to them under the principal Act. The distinction sought to be made is without any difference. It is difficult to understand why a section of people living in a village should be treated separately.

Clause (*e*) of the proposed sub-section (2) of section 3 of the principal Act with its proviso is a consequence of clause (*b*) of the new sub-section (2). This tends to create altogether a different kind of Area Committee other than a statutory panchayat in and close to the panchayat village. The constitution, scope and functions of these proposed committees have no relation to that of the panchayat. This is unwarranted besides being undemocratic. Clause (*f*) of the proposed sub-section (2) is also unnecessary.

*Clause* 5.

This amendment seeks to extend the term of an elected panchayat from ' three ' to ' five ' years. It takes away a right of the people, namely, the frequency of chances to elect their representatives from time to time. The amendment is a step backward in our onward march and also most undemocratic.

*Clause* 6.

This amendment provides for the much-hated system of indirect election of the President.

Clauses 4, 7, 8, 9 and 10 are consequential to the above clauses 5 and 6.

As one wedded to democratic principles and aiming at a Socialist Society, I cannot agree to the abovementioned undemocratic and capitalistic changes envisaged, under the proposed Bill.

P. S. CHINNADURAI.

MADRAS.
6*th November* 1957.

III

Provision of direct election to the Presidentship will alone help poor public spirited persons of popularity to be elected as the presidents of panchayats. Provision of indirect election will open the gates for unfair practices at the panchayats level. Hence I beg to differ from the majority view.

S. M. ANNAMALAI.

MADRAS,
6*th November* 1957.

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

**Saturday, 9th November 1957.**

The House met in the Assembly Chamber, Fort St. George, at nine of the clock, Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

## I.—QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS.

*Allegations against a Sub-Inspector of Police*

* 121 *Q*.—SRI K. R. VISWANATHAN : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether the Inspector-General of Police has received any complaint, dated 24th June 1957, against the Sub-Inspector of Police, Sendurai, and some constables regarding their high-handed action in ill-treating the complainants within the four walls of the Police Station; and

(*b*) if so, the action taken thereon?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Copy of petition, dated nil, from Sri Govinda Padayachi and five others of Maruthur village, Udayarpalayam taluk, Tiruchirappalli district, which was addressed to the District Superintendent of Police, Tiruchirappalli, was received by the Inspector-General of Police on 25th June 1957.

(*b*) On enquiry, it was found that the allegations were not substantiated and were obviously false.

SRI K. R. VISWANATHAN : இந்தப் புகார் என்னவென்றால், கிராமத்திற்குள் போலீஸ்காரர்கள் புகுந்து ஏதோ அவர்கள் மேல் வருத்தம் இருந்த காரணத்தினால் குடிக்கப் பழக்கம் இல்லாதவர்களை போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துக்கொண்டு போய், அங்கு உள்ளே அவர்களை இருத்திக்கொண்டு, அவர்கள் கைகால்களை கட்டிப்போட்டு, பலவந்தமாக குடிக்கச் செய்து பிறகு டாக்டரிடம் அழைத்துக்கொண்டு போய் சர்டிபிகேட் வாங்கி கேஸ் போடுவதற்கு ஏற்பாடு செய்தார்களா ?

MR. SPEAKER : கனம் அங்கத்தினர் கேட்ட கேள்விக்கு அரசாங்கம் அதை விசாரித்து அது சரி அல்ல என்று சொன்ன பிற்பாடு, அங்கத்தினர் திரும்பியும் அதை வற்புறுத்தி என்ன பிரயோசனம் ? என்ன மாதிரி விசாரணை நடந்தது என்பது பற்றி வேண்டுமானால் கேள்வி கேட்கலாம்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : மனுதாரர்கள் பேரில் மதுவிலக்கு சட்டப்படி கேஸ் போடப்பட்டு அது கோர்ட்டில் விசாரணையில் இருக்கிறது. அதனால் அதுபற்றி விவரங்கள் சொல்லுவது கூட " ஸப் ஜுடிஸ் " என்று சமர்ப்பித்துக் கொள்ளுகிறேன்.

(Sri M. Kalyanasundaram rose.)

[9th November 1957

MR. SPEAKER : "ஸப் ஜுடிஸ்" என்று சொன்ன பிற்பாடு நீங்கள் என்ன கேள்வி கேட்கப்போகிறீர்கள் ? பொதுக் கேள்வி வேண்டுமென்றால் கேட்கலாம்.

SRI M. KALYANASUNDARAM : இந்த மனுவில் எந்த விதமான புகார் இருந்தது ? அதை விசாரித்த அதிகாரி யார் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இந்த மனுவில் உள்ள புகார் குடிக்காதவர்களை குடித்ததாகச் சொன்னார்கள் என்பது தான். இவர்கள் குடித்தார்கள் என்று குற்றம் சாட்டப்பட்டு, அந்தக் கேஸ் கோர்ட்டில் விசாரணையில் இருக்கிறது. அதற்கு முன்பு இந்தப் புகாரை டி.எஸ்.பி. அவர்கள் விசாரித்து, அதில் ஆதாரம் இல்லை என்று அவர்கள் சொன்னதைத்தான் இங்கு குறிப்பிட்டேன்.

SRI N. K. PALANISAMI : புதிய மதுவிலக்கு "பாலிஸிக்குப்" பிறகு இன்றைய தினம் குடிக்காதவர்களை, பலவந்தமாக போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துக்கொண்டுபோய் குடிக்கச் சொல்லி மதுவிலக்கு கேஸ் போடுகிறார்கள். . . . .

MR. SPEAKER : The hon. Member is not in order in giving information. He must put a question.

SRI N. K. PALANISAMI : இம்மாதிரி முறைகளை தவிர்ப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இந்த முறை கையாளப் படுகிறது என்று நான் ஒப்புக்கொள்ளாதபோது, அதைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பது என்பது எழவில்லை. ஒருக்காலும் நான் இந்த முறை கையாளப்படுகிறது என்பதை ஒத்துக்கொள்ள முடியாது.

MR. SPEAKER : கனம் நிதி அமைச்சர் ஊரில் இல்லாததால், கேள்வி 122 திங்கள் கிழமையன்று எடுத்துக்கொள்ளப்படும்.

*Appointment of sub-postmasters as stamp-vendors*

* 123 *Q.*—SRI K. R. VISWANATHAN : Will the Hon. the Minister for Revenue be pleased to state with reference to the answer given to question No. 68, on 6th July 1957, whether the Government have taken any decision in the matter of appointment of sub-postmasters as stamp-vendors?

THE HON. SRI M. A. MANICKAVELU : The High Court has been consulted in the matter.

A decision will be reached on receipt of its reply.

*Sulphur-producing plant*

* 124 *Q.*—SRI K. R. VISWANATHAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there was a proposal to start a sulphuric acid and sulphur-producing plant at Ariyalur; and

(*b*) if so, the reason for the delay in starting the plant?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) No, Sir.

(*b*) Does not arise.



9th November 1957]

*Development of Tuticorin into a major port*

* 125 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Public Works be pleased to state the present stage of the proposal to develop Tuticorin into a major port?

THE HON. SRI P. KAKKAN : The development of Tuticorin into a major harbour is closely related to the Sethusamudram Project. A final decision on the proposal to develop Tuticorin is therefore dependent on the decision of the Government of India on the Sethusamudram Project.

SRI K. SATTANATHA KARAYALAR : சேதுசமுத்திர அணை இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டிருக்கிறதா ? அது எந்த அடிப்படையில் செய்யப்படவேண்டும் என்று இந்த சர்க்கார் சிபார்சு செய்திருக்கிறது ?

THE HON. SRI P. KAKKAN : இந்த சேதுசமுத்திர அணை இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்படவேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். ஆனால் அது சேர்க்கப்படவில்லை.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : Can the Minister tell us the conditions under which minor ports are converted into major ports ?

THE HON. SRI P. KAKKAN : இருக்கிற மைனர் போர்ட்டுகளெல்லாம் பரிசீலனை செய்யப்பட்டு, தூத்துக்குடிக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து அதைப் பரிசீலனை செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

SRI A. VEDARATNAM PILLAI : வேறு எந்தெந்த மைனர் போர்ட்டுகளை மேஜர் போர்ட்டுகளாக மாற்றுவதற்கு சர்க்கார் ஆலோசனை கூறியிருக்கிறார்கள் என்பதை அறிவிக்க முடியுமா ?

THE HON. SRI P. KAKKAN : முக்கியமாக ஐந்து துறைமுகங்களை பரிசீலனை செய்யச் சொல்லியிருக்கிறார்கள். தூத்துக்குடி, நாகப்பட்டிணம், மால்பே, காக்கிநாடா முதலியன அவைகள்.

SRI T. K. SUBBIAH : தூத்துக்குடிக்கு சமீபத்தில் இருக்கும் கோவில்பட்டி தாலூகாவிலுள்ள தமிழ் நாட்டிலே கருப்புப்பெட்டி ஏற்றுமதிக்கு முக்கியத்துவம் வாய்ந்த வேம்பார் என்ற இடத்தை மைனர் போர்ட்டில் சேர்த்திருக்கிறார்களா ?

THE HON. SRI P. KAKKAN : அதைப்பற்றி தனி கேள்வி கேட்டால் பதில் சொல்லுகிறேன்.

SRI A. R. SUBBIAH MUDALIAR : மைனர் போர்ட்டுகளில் புதுச்சேரி, நாகப்பட்டிணம் இவைகள் இடம் பெற்றிருக்கின்றனவா ?

THE HON. SRI P. KAKKAN : அதுபற்றி தனியாக கேள்வி கேட்க வேண்டும்.

SRI K. RAMACHANDRAN : சேதுசமுத்திரத்திற்கும் தூத்துக்குடி துறைமுகத்தை அபிவிருத்தி செய்வதற்கும் என்ன சம்பந்தம் ? சேது சமுத்திரத்தைப் பொறுத்தவரையில் எவ்வளவுக்கு எஸ்டிமேட் தயாரித்திருக்கிறார்கள். அதைப் பொறுத்தவரையில் மத்திய சர்க்கார் எவ்வளவு காலமாக முடிவு எடுப்பதில் தாமதம் செய்து கொண்டிருக்கிறார்கள். அது குறித்து சென்னை சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் ?

[9th November 1957

THE HON. SRI P. KAKKAN : சேதுசமுத்திர அணை தூத்துக்குடி ஹார்பருடன் பிணைக்கப்பட்டிருக்கிறது. ஸிலோன் ஹார்பர் இருப்பது போல இதுவும் இருக்கிறது. இது இரண்டும் பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது. மத்திய கவர்ன்மெண்டார் ஒரு முடிவு எடுத்த பிற்பாடு இந்தத் திட்டம் நிறைவேற்றப்படும்.

SRI A. GOVINDASAMY : தென் ஆற்காடு மாவட்டத்தில் நெய்வேலி திட்டம் அமுலில் இருக்கிற நிலையில் கடலூரைத் துறைமுகமாக்குவதற்கு சர்க்கார் யோசிக்குமா ?

THE HON. SRI P. KAKKAN : கனம் அங்கத்தினர் தனி கேள்வி கேட்டால் அது பற்றி பரிசீலிக்கப்படும்.

SRI M. P. SUBRAMANIAM : சென்னையைப் போன்ற பெரிய துறைமுகத்திலுள்ள வேலை பளுவை குறைப்பதற்காக தூத்துக்குடி துறைமுகத்தை அபிவிருத்தி செய்வதற்கு மத்திய சர்க்காரிடம் வற்புறுத்தி இந்தத் திட்டத்தை ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்துக்கொள்ளுவதற்கு அரசாங்கம் முயற்சி எடுத்துக்கொள்ளுமா ?

THE HON. SRI P. KAKKAN : தூத்துக்குடி ஹார்பருக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து ஏற்கனவே 1920-ம் ஆண்டிலிருந்து அது பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது. அதற்கு விரைவாக ஏற்பாடு செய்ய வேண்டுமென்று மத்திய சர்க்காரிடம் ஹார்பர் போர்டிடம் எடுத்துச்சொல்லி அவர்கள் அங்கிருந்து வந்து பரிசீலனை செய்திருக்கிறார்கள். அதற்கு வெகு சீக்கிரம் முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்று சென்னை அரசாங்கம் கேட்டுக்கொண்டிருக்கிறது.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR: My previous question was not answered properly by the Hon. Minister. I will put it in a different form. What is the difference between minor ports and major ports?

THE HON. SRI P. KAKKAN : பெரிய துறைமுகம் பெரிய துறைமுகம். சிறிய துறைமுகம் சிறிய துறைமுகம்.

SRI M. KALYANASUNDARAM : தூத்துக்குடியை அபிவிருத்தி செய்வது சேதுசமுத்திரத்தோடு இணைக்கப்பட்டிருக்கிறது என்று மந்திரி அவர்கள் அறிவித்தார்கள். அதற்கு அப்பாற்பட்ட நாகப்பட்டிணத்தை தனியாக பரிசீலனை செய்து அதை இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்க நடவடிக்கை எடுப்பார்களா ?

THE HON. SRI P. KAKKAN : இப்பொழுது ஐந்து முக்கியமான போர்ட்டுகள் முக்கியமாக பரிசீலனை செய்யப்பட்டிருக்கின்றன. தூத்துக்குடி சேதுசமுத்திர திட்டத்திற்கு முதலில் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதில் மத்திய சர்க்கார் முடிவு தெரிந்துதான் இதர துறைமுகங்களைப்பற்றி பரிசீலனை செய்யலாம்.

9-10 a.m. SRI M. S. SELVARAJAN : கனம் சபாநாயகர் அவர்களே, சமீபத்தில் பெரிய துறைமுகங்களை எல்லாம் சுற்றிப் பார்ப்பதற்காக சுற்றுப் பிரயாணம் செய்து கொண்டிருக்கிற கமிட்டியினர் கொச்சிக்குப் போக இருக்கிறார்கள். அவர்களைத் தூத்துக்குடிக்கு வந்து பரிசீலனை செய்வதற்காக இந்த அரசாங்கம் அழைக்குமா ?

THE HON. SRI P. KAKKAN : நிச்சயமாக நாம் தூத்துக்குடிக்கு முக்கியத்துவம் கொடுத்திருக்கும்போது அவர்கள் வராமல் எப்படிப் போவார்கள் ?

SRI M. JAGANNATHAN : சிறிய துறைமுகங்களை எல்லாம் பெரிய துறைமுகங்களாக மாற்றுவதற்கு மத்திய சர்க்கார் நிதி உதவி செய்கிறார்களா ? உதவி செய்கிறார்கள் என்றால் எவ்வளவு உதவி செய்கிறார்கள் என்று சொல்ல முடியுமா ?

THE HON. SRI P. KAKKAN : தனிக் கேள்வி கொடுக்கவேண்டும்.



9th November 1957]

SRI T. T. DANIEL : Sir, may I know from the Hon. Minister whether our Government will consider the feasibility of converting minor ports in Kanyakumari district into major ports ?

THE HON. SRI P. KAKKAN : அங்கே இருக்கிற சிறிய துறைமுகங்களையும் பரிசீலனை செய்யலாம்.

SRI S. LAZAR : சென்னை தவிர, இதர மைனர் துறைமுகங்களை எல்லாம் அபிவிருத்தி செய்ய வேண்டுமென்ற உடன் அவசியம் ஏற்பட்டிருக்கிறதா ? அல்லது இன்னும் சிறிது காலம் பொறுத்திருக்கலாமா ?

THE HON. SRI P. KAKKAN : எந்த எந்தச் சிறிய துறைமுகங்களை உடனடியாக அபிவிருத்தி செய்ய வேண்டுமோ அந்த அந்தச் சிறிய துறைமுகங்களை எல்லாம் அபிவிருத்தி செய்ய ஏற்பாடு செய்யப்படுகிறது.

SRI K. SATTANATHA KARAYALAR : ராஜ்ய புனர் அமைப்பில் துறைமுகங்களின் அபிவிருத்திக்காக என்று கன்னியாக்குமாரி வட்டாரத்தைச் சேர்ந்த பகுதிக்கு தனியாகப் பணம் கொடுக்கபட்டிருக்கிறதா ? அப்படியானால் அந்தப் பகுதியை அப்படியே அந்த வட்டாரத் துறைமுக அபிவிருத்திக்கு செலவு செய்ய உத்தேசமா ?

THE HON. SRI P. KAKKAN : இதற்கும் தனிக் கேள்வி போட வேண்டும்.

### *Bus permits*

* 126 *Q.*—SRI K. R. VISWANATHAN : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) whether the Government have received any representation, dated 12th August 1957, from certain lorry owners of Arcot. North Arcot district, regarding the issue of new bus permits; and

(*b*) if so, the action taken thereon?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) Yes, Sir.

(*b*) It is under the consideration of the Government.

SRI M. S. SELVARAJAN : Sir, in issuing these bus permits, will any special consideration be shown to the repatriates from overseas?

THE HON. SRI V. RAMAIAH : In issuing these bus permits, under the rules as they stand, I do not think it possible for new-comers to come in. But the question of issuing permits to repatriates from Ceylon can be considered.

*SRI M. KALYANASUNDARAM : கனம் அங்கத்தினர் கேட்ட கேள்வியும், அமைச்சர் அதற்கு அளித்த பதிலும் எங்களுக்கு எல்லாம் ஒன்றும் புரியாததாக இருக்கிறது. அந்தக் கடிதத்தில் அவர்கள் என்ன விவரம் கொடுத்திருக்கிறார்கள் ? அதன் பேரில் சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்தார்கள் என்பதை விளக்க வேண்டுமென்று கோருகிறேன்.

THE HON. SRI V. RAMAIAH : அவர்கள் என்னிடத்தில் கொடுத்த மகஜரில் அநேக பிரச்சனைகள் இருந்தன. முக்கியமான ஒரு பிரச்சனை லாரி நடத்துகின்றவர்களுக்கும் பஸ் பர்மிட் போலக் கொடுக்க வேண்டும் என்பது. அதையும் சர்க்கார் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது என்று சொன்னேன்.

[9th November 1957

SRI M. P. SUBRAMANIAM : அமைச்சர் அவர்கள் இனிப் புதிதாக வருபவர்களுக்குப் பஸ் பர்மிட் வழங்கப்படமாட்டாது என்று சொன்னார்கள். அப்படியானால் புதிதாக பஸ் தொழிலை நடத்த யாரையும் அனுமதிக்கமாட்டார்கள் என்று அர்த்தமா ? இதர தொழில்களுக்கு எல்லாம் புதிதாக ஆரம்பிக்க வசதி இருக்கும்போது பஸ் தொழிலில் மட்டும் ஏன் அந்த வசதி மறுக்கப்பட வேண்டும் ?

THE HON. SRI V. RAMAIAH : புதிதாக வருகிறவர்களுக்குக் கிடைக்காது என்று நான் சொல்லவில்லை. ஒரு பஸ், இரண்டு பஸ் வைத்துக் கொண்டிருக்கிறவர்கள் அந்தத் தொழில் நன்றாக நடைபெற வேண்டுமானால் குறைந்தது 5 பஸ்களாவது வைத்துக் கொள்ளவேண்டும் என்பதாகத்தான் ஒரு டைரெக்ஷன் கொடுத்து இருக்கிறோம். புதிதாக அந்தத் தொழிலை நடத்த இனி யாரும் வரமுடியாது என்கிறபடி உத்திரவு போடவில்லை.

SRI M. C. MUTHUKUMARASWAMY : ஹரிஜனங்களில் யாராவது பஸ் நடத்த வேண்டும் என்பதற்கு விண்ணப்பம் போட்டிருக்கிறார்களா ? இல்லையானாலும்கூட பொருளாதார நிலைமையில் மிகவும் பிற்போக்காக உள்ள அவர்களிடையே ஒரு கூட்டுறவு ஸ்தாபனம் மூலமோ, அல்லது சர்க்காரே அவர்களுக்கு பண உதவி செய்தோ அந்தத் தொழிலை அவர்களும் நடத்த அனுமதிக்கப்படுவார்களா ?

THE HON. SRI V. RAMAIAH : சில ஹரிஜனங்களிடத்திலிருந்தும் விண்ணப்பம் வந்திருக்கிறது. பஸ் நடத்த வேண்டுமென்றால் போதுமான மூலதனம் வேண்டும். அதற்குத் தகுந்தாற்போல் கூட்டுறவு சங்கங்களை அமைத்துக்கொண்டு, அதன் வாயிலாக பஸ் தொழிலை நடத்த அவர்கள் முன் வந்தால் சர்க்கார் அதையும் கவனிக்கும்.

SRI A. R. SUBBIAH MUDALIAR : பஸ் பர்மிட்டு கொடுப்பதில் ஒரு ஜில்லாவிற்கு ஒன்று இல்லாமல், அந்த ஜில்லாவிற்கும் அப் பாற்பட்டுக் கொடுப்பார்களா ?

MR. SPEAKER : ஒரு தனிப்பட்ட ஜில்லாவைப் பற்றிய கேள்வியில் இந்தக் கேள்வி எப்படி வரும் ? அமைச்சர் பதில் அளிப்பதானால் எனக்கு ஆட்சேபனை இல்லை.

THE HON. SRI V. RAMAIAH : இப்போது ஒரு ஜில்லாவிற்கு அப் பாற்பட்டும் பர்மிட் கொடுப்பதில் தடை இல்லை. கொடுத்துக்கொண்டு வருகிறோம்.

*Executive Officers, Hindu Religious and Charitable Endowments Department*

* 127 Q.—SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) the number of Executive Officers serving under the Hindu Religious and Charitable Endowments (Administration) Department; and

(b) the number belonging to the Backward Communities and Scheduled Castes?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) 366.

| | |
|---|---|
| (b) Number of Executive Officers belonging to Backward Classes. | 73 |
| Number of Executive Officers belonging to Scheduled Castes. | 3 |



9th November 1957]

SRI K. SATTANATHA KARAYALAR : எக்சிக்யூடிவ் ஆபீசர்கள் நியமனத்தில் மூன்று பேர்களைத்தான் ஹரிஜன சமூகத்தில் இருந்து எடுத்திருப்பதாகக் குறிப்பிட்டார்கள். அதற்குத் தகுந்த யோக்கியதாம்சங்கள் உடையவர்கள் அதிகமாக வாராத காரணத்தினால்தான் மூன்று பேர்களை எடுத்திருக்கிறார்களா ? அல்லது ஹரிஜனங்களை எக்சிக்யூடிவ் ஆபீசர்களாக நியமிக்கக்கூடாது என்ற வெறுப்பின் காரணத்தினால் அப்படிச் செய்து விட்டார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ஹரிஜனங்களை எக்சிக்யூடிவ் ஆபீசர்களாக போடக்கூடாது என்ற காரணம் இருந்தால், இந்த மூன்று பேர்களையும் நாங்கள் போட்டிருக்கமாட்டோம் என்பது கனம் அங்கத்தினர் அவர்களுக்குத் தெரியாதது அல்ல. இந்த நிர்வாக அதிகாரிகள் நியமன விஷயத்தில் ஏற்கனவே இந்தச் சட்டம் வருவதற்கு முன்பு, அரசாங்கத்தின் ஒரு இலாகாவாக மாற்றப்படுவதற்கு முன்பு, நிர்வாக அதிகாரிகள் இருந்து கொண்டிருந்தார்கள். சட்டம் வந்த பிறகும் நிர்வாக அதிகாரிகளை அரசாங்க ஊழியாகளாகக் கருதுவது இல்லை. இருந்தாலும் தாழ்த்தப்பட்ட சமூகத்தினருக்கு ரிசர்வேஷன் செய்யப்பட்டுதான் வருகிறது. ஆனால் புதிதாக நிர்வாக அதிகாரிகளை நியமிப்பதில் ஐந்தில் இரண்டு பங்கு டைரெக்ட் ரெக்ரூட் செய்வது என்றும், மூன்று பங்கு கோயில் சிப்பந்திகளில் கீழே இருப்பவர்களையே ப்ரமோஷன் செய்வது என்றும் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது. நிர்வாக அதிகாரிகளைப் பொறுக்கும் விஷயத்தில் மற்ற வகுப்பு பொறுத்துச் செய்யவேண்டும் என்றும், தகுதியும் கவனிக்கப்பட்டுத்தான் வருகிறது என்றும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

SRI K. R. VISWANATHAN : சர்க்கார் இந்தக் கோயில் நிர்வாக அதிகாரிகளை—கோயில் வருவாய் நல்ல வழியில் செலவழிக்கப்படுகிறதா, தப்பான வழியில் கோயில் நிர்வாகம் போகாமல் இருக்கிறதா என்பதைப் பார்த்துக்கொள்ள நியமிக்கிறார்கள். ஆனால் பலவிடங்களில் சர்க்கார் என்ன நோக்கத்துடன் அவர்களை நியமித்திருக்கிறார்களோ, அந்த நோக்கத்தை பூர்த்தி செய்யும் வழியில் அவர்கள் நடந்துகொள்ளவில்லை. தர்மகர்த்தாக்களிடம் இருக்கும் அச்சம் காரணமாகவோ, அல்லது சுய நலங் காரணமாகவோ அல்லது அவர்களுக்குக் கொடுக்கப்படும் சம்பளக் குறைவு காரணமாகவோ சரியாக நடப்பது இல்லை. ஆகையால் நிர்வாக அதிகாரிகளை சர்க்கார் நியமிக்கும் போதே, அவர்களுக்கு சரியான ஊதியத்தையும் கொடுத்து, அவர்கள் தர்மகர்த்தாக்களின் தயவை நாடி இல்லாமல் இருக்கும்படியாக, தங்கள் பொறுப்பை நேர்மையாக நிறைவேற்றக்கூடியவர்களாகப் பார்த்து நியமனம் செய்ய முன் வருவார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : நிர்வாக அதிகாரிகளை நியமிக்கும் விஷயம் முனிசிபல் கமிஷனர்களை நியமிப்பது போலத்தான். சண்டையும் அங்குள்ளவர்களோடு போட்டுக்கொள்ளக்கூடாது. சிநேகமும் பாராட்டிக்கொண்டு கடமையை விட்டுவிடக்கூடாது. இது கவனிக்கப்பட்டு வருகிறது. குறிப்பிட்ட எந்த அதிகாரியின் மீதாவது குற்றம் இருந்து புகார் செய்யப்பட்டால் அதன் பேரில் நடவடிக்கை எடுக்கப்படும்.

SRI P. S. CHINNADURAI : கனம் சபாநாயகர் அவர்களே, ஹிந்துமத பரிபாலன இலாகாவின் நிர்வாக அதிகாரிகள், அவர்கள் வேலை செய்கின்ற கோயிலின் புனிதத் தன்மைக்கும், பக்திச் சூழ்நிலைக்கும் ஏற்றபடி நடந்து கொள்ளவும், அதற்கு ஏற்ப உடை அணியவேண்டுமென்றும் சர்க்கார் விதி செய்திருக்கிறார்களா ? இல்லையென்றால் அப்படி ஏற்பாடு செய்ய அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : உடை அணிவதைப்பற்றி ஒன்றும் இல்லை. விதி அதற்காக ஏற்படுத்தும் உத்தேசமும் இல்லை. கோயிலின் புனிதத் தன்மைக்கு ஏற்ப நடந்துகொள்ள வேண்டும் என்பது மட்டும் வற்புறுத்தப்படவேண்டிய விஷயம். வற்புறுத்தப்பட்டும் வருகிறது.

SRI P. G. MANICKAM : மூன்று ஹரிஜன அதிகாரிகள்தான் இருக்கிறார்கள் என்று இப்போது மந்திரி அவர்கள் தெரிவித்தார்கள். இனிமேலாவது கால் பாகம் ஹரிஜன மக்களுக்காகவே ஒதுக்கி அவர்களை நியமிப்பதற்கு அரசாங்கத்தார் ஏற்பாடு செய்வார்களா ?

[9th November 1957

THE HON. SRI M. BHAKTAVATSALAM : தகுதி உடைய அபேக்ஷகர்கள் கிடைத்தால் அதிகமான ஹரிஜனங்களை நியமிக்க சர்க்கார் ஏற்பாடு செய்வார்கள்.

SRI M. JAGANNATHAN : In view of the fact that the appointment of Harijans as executive officers in Hindu temples will largely remove untouchability in our State, will the Government consider the desirability of appointing a number of Harijan candidates as executive officers, especially when that post does not require special and technical knowledge ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I do not accept that the mere appointment of more executive officers would conduce to the removal of untouchability, but still, Sir, I would certainly look into the matter and see how many more executive officers can be appointed to these posts. It is not merely technical fitness or equipment (that is not necessary), but there are other aptitudes that have also to be looked into before we select the personnel for the posts of executive officers irrespective of the fact to whatever community they may belong.

9-20 a.m. SRI V. K. RAMASWAMY MUDALIYAR : Is it a fact that many of them are atheists?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I have no idea, Sir. I do not know about their aptitudes. But, I do presume that those who are appointed as executive officers for temples should have some faith in the temples.

SRI A. GOVINDASAMY : இந்த எக்சிகூடிவ் ஆபீசர்கள் மத நம்பிக்கை உள்ளவர்களாக நியமிக்கப்படுகிறார்கள் என்று கனம் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் மத நம்பிக்கையுள்ள கனம் அமைச்சர் அவர்கள் மத நம்பிக்கை உடையவர்களாக இருந்தும் நெற்றியில் மதச்சின்னம் அணியாததற்குக் காரணம் என்ன என்று தெரிவிப்பார்களா ?

MR. SPEAKER : This does not arise out of the main question. If, however, the Hon. Minister wants to answer it, I have no objection.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கனம் அங்கத்தினர் அவர்களுக்கு மதத்தின் மீது கொஞ்சம் மூட நம்பிக்கை இருப்பதாகத் தெரிகிறது. நெற்றியில் சின்னம் அணிந்திருந்தால்தான் ஒருவன் மத நம்பிக்கை உடையவன் என்று சொல்லிவிடமுடியாது என்று நான் அவர்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

SRI V. SANKARAN : இந்த அதிகாரிகளை தேர்ந்தெடுக்கும்போது அவர்களுக்கு தெய்வத்தின் மீதும், மதத்தின் மீதும் தங்களுக்கு நம்பிக்கை இருக்கிறதென்று உறுதி எடுத்துக்கொள்வதற்கு ஒரு நியதியை அரசாங்கம் ஏற்படுத்துவார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அவர்கள் உறுதி எடுத்தால் மட்டும் பயன் இல்லை. அதை நிறைவேற்றுவதுதான் கஷ்டம். கனம் அங்கத்தினர் சொன்ன யோசனையை பரிசீலித்துத்தான் அதிகாரிகளை நியமிப்பார்கள்.



9th November 1957]

SRI C. NATARAJA UDAYAR : இந்த மாதிரி எக்சிகூடிவ் அதிகாரிகளை நியமிப்பதற்கு என்ன கட்டுதிட்டங்கள் வைத்திருக்கிறார்கள் ? ஹரிஜனங்களுக்கு அதிகமான பிரதிநிதித்துவம் கொடுப்பதற்கு ஏதாவது கட்டுதிட்டம் இருக்கிறதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இந்த அதிகாரிகளைத் தேர்ந்தெடுப்பதில் கட்டுதிட்டங்கள் எல்லாவற்றையும் பார்த்துத்தான் தேர்ந்தெடுக்கிறார்கள். ஆனால் இதில் வகுப்பு வித்தியாசம் ஒன்றும் காட்டப்படுவதில்லை.

*State Warehousing Corporation*

* 128 *Q*.—SRI N. K. PALANISAMI (on behalf of Sri S. B. Adityan) : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there is any proposal to set up a State Warehousing Corporation; and

(*b*) if so, the details regarding—

(i) the financial resources of the Corporation;

(ii) the amount of Central aid; and

(iii) the work of the Corporation?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Yes, Sir.

(*b*) (i) The Financial resources of the Corporation will consist of—

(1) the share capital;

(2) proceeds from the members by way of rent for storage of produce;

(3) bonds and debentures carrying interest issued by the Corporation; and

(4) borrowings from the Reserve Bank, the State Bank, the State Government and the Central Warehousing Corporation and the National Co-operative Development and Ware-housing Board.

(ii) The State Warehousing Corporation is proposed to be started with a share capital of Rs. 20 lakhs in the first instance. The Central Warehousing Corporation is expected to contribute Rs. 10 lakhs towards the share capital of the Corporation and the Central Government is expected to give a loan of Rs. 5 lakhs to enable the State Government to contribute their share capital of Rs. 10 lakhs.

(iii) The work of the Corporation will be—

(1) to acquire and build godowns and warehouses;

(2) to run warehouses for storage of agricultural produce, seeds, manures, fertilizers and agricultural implements;

(3) to subscribe to the share capital of Co-operative Societies engaged in the storage of warehousing of agricultural produce;

[9th November 1957

(4) to arrange facilities for the transport of agricultural produce to and from warehouses;

(5) to act as an agent of the Central Warehousing Corporation or of the Government for the purpose of the purchase, sale, storage and distribution of agricultural produce, seeds, manures, fertilizers and agricultural implements; and

(6) to carry out such other functions as may be prescribed by the rules made under the Agricultural Produce (Development and Warehousing) Corporation Act, 1956.

**Sri N. K. PALANISAMI :** இதைப்பற்றி சர்க்கார் ஐந்து வருஷமாக சொல்லிக்கொண்டிருக்கிறார்களே தவிர நடைமுறையில் கொண்டுவருவதற்கு எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

**The Hon. Sri R. VENKATARAMAN :** ஐந்து வருஷம் என்று சொல்லியிருக்கவே முடியாது. **1956**-ம் வருஷத்திலேதான் இந்த ஆக்ட் பாஸ் செய்யப்பட்டது.

**Sri K. S. SUBRAMANIA GOUNDER :** ஸ்டேட் வேர் ஹவுசிங் கார்பொரேஷன் எந்தெந்த இடங்களில் **godown** அமைப்பதற்கு திட்டமிட்டிருக்கிறார்கள் என்று கனம் அமைச்சர் அவர்கள் சொல்லுவார்களா ?

**The Hon. Sri R. VENKATARAMAN :** சென்னை ராஜ்யத்தில் ஒரு ஸ்டேட் வேர் ஹவுசிங் கார்பொரேஷன் ஆரம்பிக்கப் போகிறார்கள். அதற்கு சர்க்கார் சிறு சிறு கோவாப்பரேடிவ் சொசைடிகளை ஏற்படுத்துவதற்கு யோசனை செய்யும்.

**Sri N. K. PALANISAMI :** இந்த கார்பொரேஷனை ஆரம்பிப்பதற்கு ஏதாவது நடவடிக்கை எடுத்துக்கொண்டார்களா ?

**The Hon. Sri R. VENKATARAMAN :** நான் ஏற்கனவே சொன்னது போல் இருபது லட்சம் முதலீடு வைத்து இந்த கார்பொரேஷனை ஆரம்பிக்கப் போகிறார்கள். இதில் பத்து லட்சம் சென்ட்ரல் வேர் ஹவுசிங் கார்பொரேஷன் கொடுப்பதாக இருக்கிறது. அதோடு மத்திய அரசாங்கம் ஐந்து லட்ச ரூபாயும், ஐந்து லட்ச ரூபாய் ராஜ்ய அரசாங்கமும் கொடுப்பதாக இருக்கிறது.

**Sri K. S. SUBRAMANIA GOUNDER :** எந்தெந்த இடங்களில் கோடவுன்களை ஏற்படுத்த சர்க்கார் திட்டமிட்டிருக்கிறார்கள்.

**The Hon. Sri R. VENKATARAMAN :** இந்த கோடவுன்களை அங்கே வைப்பதென்று இன்னும் யோசனை செய்யவில்லை.

**Sri M. MUTHUKUMARASWAMY :** மாயவரத்திலே கூறை நாட்டிலே நெய்யப்படும் ஆடைகள் மிகவும் உயர்ந்தது. பழைய காலத்திலிருந்தே நல்ல பெயர் பெற்றிருக்கிறது. ஆகவே அதுபோன்ற இடங்களில் சர்க்கார் கோவாப்பரேடிவ் சொசைடிகளை அமைபதற்கு ஏற்பாடு செய்வார்களா ?

**The Hon. Sri R. VENKATARAMAN :** இந்த கார்பொரேஷன் விவசாயப் பொருள்களைப்பற்றியது.

**Sri M. KALYANASUNDARAM :** வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் விவசாயப் பொருள்களை இந்த ஸ்டேட் வேர் ஹவுசிங் கார்பொரேஷன் மூலம் ஏற்றுமதி செய்வார்களா ?

**The Hon. Sri R. VENKATARAMAN :** இந்தக் கார்பொரேஷனின் முக்கியமான நோக்கம் என்னவென்றால் விவசாயப் பொருள்கள் உற்பத்தி செய்வதை உடனடியாக குறைந்த விலைக்கு வாங்கி நஷ்டத்திற்கு



9th November 1957]

விற்று விடுகிறார்கள். இதைத் தடுப்பதற்கு சர்க்கார் இவைகளை நல்ல விலையிலே விற்பதற்கு இந்த கார்பொரேஷன் அமைக்கப்பட்டிருக்கிறது. வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கான திட்டம் என்றும் இல்லை.

*Weavers' Co-operative Societies*

* 129 *Q.*—**Sri N. K. PALANISAMI :** Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether it is a fact that the rebates given to the Weavers' Co-operative Societies have been reduced; and

(*b*) if so, the reason thereof?

**The Hon. Sri R. VENKATARAMAN :** (*a*) & (*b*) Yes. The Government of India have decided that the rate of rebate on the wholesale and retail sales of handloom cloth by co-operatives should be reduced from 9 np. to 6 np. in the rupee with effect from 1st December 1957. They have not informed this Government of the reasons for the reduction in the rate.

**Sri N. K. PALANISAMI :** கனம் மந்திரி அவர்கள் சொன்ன பதிலில் மத்திய சர்க்கார் ரிபேட்டைக் குறைத்திருப்பதாகச் சொன்னார்கள். இம்மாதிரி ரிபேட் குறைந்திருப்பதினாலே கைத்தறி விற்பனை குறைந்திருக்கிறது. இதனால் எல்லா சொசைடிகளிலும் கைத்தறி தேக்கம் ஏற்பட்டிருக்கிறது.

**Mr. SPEAKER : The hon. Member is making a speech. If he persists in doing like this, I won't call him again. Let him please put it in the form of a question.**

**Sri N. K. PALANISAMI :** ஆகவே மேலும் தேக்கம் ஏற்படாமல் இருப்பதற்கு சர்க்கார் நடவடிக்கை எடுப்பார்களா ?

**The Hon. Sri R. VENKATARAMAN :** இந்த ரிபேட் குறைவதனால் தான் விலைவாசிகளும் குறையும் என்று சர்க்காருக்கு நன்றாகத் தெரியும். இது ஒரு அகில இந்திய நியதிப்படி குறைத்திருக்கிறார்கள். ராஜ்ய சர்க்கார் இதைக் குறைக்க எந்த விதமான சிபார்சும் செய்யவில்லை. இம்மாதிரி செய்வதனால் பல கஷ்டங்கள் இருக்கின்றன என்று அகில இந்திய ஹாண்ட்லூம் போர்டில் அவர்களுடைய பிரதிநிதிகள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

**Sri M. K. MARIAPPAN :** தீபாவளி பண்டிகைபோதுகூட உயர்ந்த ரக துணிக்கு ரிபேட் அளித்தும் கூட விற்பனை ஆகவில்லை என்று தெரியுமா ?

**The Hon. Sri R. VENKATARAMAN :** உயர்ந்த ரகத் துணிகள் கூட விற்பனையாகாமல் தேங்கி கிடக்கிறது.

**Sri N. K. PALANISAMI :** ஹாண்ட்லூம் வீவர்கள் சொசைடியிலிருப்பவர்களின் வாழ்க்கை இந்த ரிபேட்டைப் பொறுத்துத்தான் இருக்கிறது. ஆகவே இந்த ரிபேட்டை அதிகப்படுத்த ராஜ்ய அரசாங்கம் மத்திய அரசாங்கத்தை வலியுறுத்துவார்களா ?

**The Hon. Sri R. VENKATARAMAN :** அவ்வாறு யோசனை செய்து கொண்டிருக்கிறோம்.

**Sri S. LAZAR :** இம்மாதிரி ரிபேட் கொடுப்பதனால் எவ்வளவு முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. இந்த ரிபேட் எவ்வளவு காலத்திற்குக் கொடுக்கப்படும்.

[9th November 1957

THE HON. SRI R. VENKATARAMAN : இந்த ரிபேட் கொடுப்பதன் மூலம் வியாபாரம் அதிகரிக்கும் என்ற நோக்கத்தோடுதான் கொடுக்கிறோம். வியாபாரம் அதிகரித்தால் மாகாணத்திலுள்ள நெசவாளர்களின் வாழ்க்கைத் தரம் உயரும். அதனால் இந்த ரிபேட் கொடுப்பதற்கு எவ்வளவு காலம் நீடிக்க வேண்டுமோ அவ்வளவு காலம் நீடிக்கும்.

SRIMATHI P. K. R. LAKSHMIKANTHAM : இப்பொழுது ரிபேட் குறைக்கப்பட்ட காரணத்தால் இந்த கோவாப்ரேடிவ் சொசைடியில் சேராத 75 சத கைத்தறி நெசவாளர்க்கு சர்க்கார் ஆரம்பிக்கப்போகும் ஆலையிலே நூல் தருவதற்கு அரசாங்கம் முன்வருமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : தனி கேள்வி போடவேண்டும்.

9-30 p.m. SRI K. R. NALLASIVAM : ரிபேட் எந்தளவிற்கு குறைக்கப்பட்டதோ அந்த அளவிற்கு இப்போது பல கூட்டுறவு சங்கங்களிலும் ஜவுளி தேங்கிக் கிடப்பதால் அவர்கள் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே மாகாண சர்க்கார் பொறுப்பு எடுத்துக்கொண்டு பழைய அளவிற்கு தொகையை கொடுக்க அரசாங்கம் முயற்சி எடுக்குமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : மாகாண சர்க்காரிடம் அவ்வளவு பணமில்லை. செஸ் நிதியிலிருந்து வருகிற தொகையை ஏன் அவர்கள் ரிபேட்டாகக் கொடுக்கக் கூடாது என்பதை நிர்ணயமாகச் சொல்லி அதை நாம் ஏற்றுக் கொண்டால் பிறகு யோசித்து செய்து கொள்ளலாம்.

SRI M. P. SUBRAMANIAM : ஒரு ரூபாய்க்கு 9 காசிலிருந்து 6 காசாக குறைத்ததற்குக் காரணம் என்னவென்று மத்திய சர்க்கார் தெரிவிக்கவில்லை என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். இதுபற்றி சென்னை சர்க்காரிடம் கலக்காமல் இந்த ஏகோபித்த முடிவு செய்த மத்திய அரசாங்கத்தின் போக்கை நம் அரசாங்கம் கண்டித்ததா ? கண்டிக்கவில்லை என்றால் இனிமேலாவது கண்டிக்குமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : கண்டிப்பதால் ரிபேட் வரப் போவதில்லை. நம் மாகாண சர்க்கார், இதனால் கைத்தறி நெசவாளர்கள் பாதிக்கப்படுவார்கள் என்று நாம் எழுதுவதின் மூலம் நம் பிரச்னை அவர்களுக்கு நன்கு விளங்கும்.

SRI T. T. DANIEL : **May I know from the Hon. Minister, whether the Central Government has arrived at this decision after ascertaining the wishes of the State Government or not ?**

THE HON. SRI R. VENKATARAMAN : **No, Sir.**

SRI M. K. MARIAPPAN : ரிபேட் தொகையை ஆறு பைசாவாக குறைப்பதாய் இருந்தும், செஸ் நிதியிலிருந்து வரும் இப் பணத்தை கைத்தறி நெசவாளர்களுக்குத்தான் செலவழிக்கிறார்களா ?

THE HON. SRI R. VENKATARAMAN : குறைத்த பிறகு உள்ள பணத்தை கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு செலவழிப்பது தான் அபிப்பிராயம்.

SRI K. SATTANATHA KARAYALAR : இந்த ரிபேட்டைக் குறைத்ததற்கு மத்திய சர்க்கார் கொடுத்த காரணம் என்ன ?

THE HON. SRI R. VENKATARAMAN : காரணம் சொல்லவில்லை.

SRI V. SANKARAN : ரிபேட் வேண்டுமென்று கூட்டுறவு சங்கத்தில் சேராத மற்ற மாஸ்டர்களும், தனிப்பட்ட முறையில் விண்ணப்பித்துக் கொண்டிருக்கிறார்களா ? அதைப்பற்றிய சர்க்காரின் கொள்கையும், முடிவும் என்ன ?



9th November 1957]

THE HON. SRI R. VENKATARAMAN : சென்னை ராஜ்யத்தைப் பொருத்தவரையில் கூட்டுறவு சங்கத்தில் சேராத கைத்தறி நெசவாளர்களுக்கும் கூட ஓரளவு செஸ் நிதியிலிருந்து சலுகைகள் காட்ட வேண்டுமென்று நம்முடைய பிரதிநிதி ஹாண்ட்லூம் போர்டில் ஒவ்வொரு முறையும் விவாதித்திருக்கிறார்கள். அதை, அகில இந்திய ஹாண்ட்லூம் போர்ட் ஏற்றுக்கொள்ளவில்லை. மத்திய சர்க்காரும் அதை ஏற்றுக் கொள்ளவில்லை.

SRI N. K PALANISAMI : இன்று ரிபேட்டாக சொஸைட்டிகளுக்குக் கொடுத்து வருகிற பணம் மூன்று மாத காலமாகியும் இன்னும் அவர்களுக்கு போய் சேராத காரணம் என்ன ?

THE HON. SRI R. VENKATARAMAN: சாதாரணமாக ரிபேட் கிடைப்பதற்கு இரண்டு, மூன்று மாதம் காலதாமதமாகும். காரணம் என்னவென்றால், கணக்குகள் எல்லாம் போட்டு அகில இந்திய போர்டிற்கு அனுப்ப வேண்டியிருக்கிறது.

*Handloom Cess Fund*

* 130 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the total amount received by the Government in 1957 out of the Handloom Cess Fund ; and

(*b*) the manner in which this amount was distributed to weavers?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Loans and grants from the Cess Fund for the Development of Handloom Industry are sanctioned with reference to the financial year and not the calendar year. During the financial year 1956–57, a sum of Rs. 228 lakhs was received by this Government. During 1957–58 up to 31st August 1957, a sum of Rs. 37·36 lakhs has been received.

(*b*) The amounts sanctioned from the Cess Fund are not distributed direct to weavers. Weavers who become members of the Weavers' Co-operative Societies, are only eligible to get financial aid in the share of loan or grant, as the case may be, from the Cess Fund towards the share capital, working capital, purchase of improved applicances, etc. The nature and extent of the assistance to the weavers from the Cess Fund are regulated by the general principles laid down by the All-India Handloom Board for this purpose.

SRI N. K. PALANISAMI : மத்திய சர்க்காரிலிருந்து நமக்கு கிடைக்கவேண்டிய நியாயமான பங்கு என்ன ? அது ஏன் ப்ரியாக கொடுக்கப்படவில்லை ?

THE HON. SRI R. VENKATARAMAN : **1956–57**-ம் வருஷத்திற்கு நமக்கு கிடைக்கவேண்டிய பங்கு கிடைத்து விட்டது, 2 கோடி 78 லட்சம் ரூபாய்.

SRI M. KALYANASUNDARAM : **1956–57**-ல் கிடைத்த 2 கோடி 78 லட்சம் ரூபாய் பூராவும் செலவழிக்கப்பட்டுவிட்டாதா, செலவழிக்கப்படாவிட்டால் மீதம் இருந்தால் எவ்வளவு இருக்கிறது ?

THE HON. SRI R. VENKATARAMAN : பூராவும் செலவழிக்கப் பட்டுவிட்டது. மீதம் ஒன்றுமில்லை.

[9th November 1957

SRI K. VINAYAKAM : Sir, if loans and grants are given only to the weavers that come under the co-operative organization from the Cess Fund, what is the fate of those who have not registered themselves under any co-operative society?

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I explained in reply to a supplementary question to the last question, that so far as the Madras Government are concerned, they have tried their utmost to see that the benefits of the Cess Fund are extended even to the weavers not incorporated in the co-operatives societies. But the policy of the Central Government in this regard is different and they have refused to accept it.

THE HON. SRI M. A. MANICKAVELU : நெசவாளர்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து பாவு தோய்ப்பு வேலை செய்யும்போது அவர்களுக்கு இடம் தேவையாய் இருக்கிறது. அதற்காக அவர்கள் அநேக விண்ணப்பங்களை சர்க்காருக்கு அனுப்பியிருக்கிறார்கள். ஆகவே அந்த இடங்களை, செஸ் நிதி பணத்திலிருந்து இலவசமாக வாங்கிக் கொடுக்க கவர்ன்மெண்ட்டார் ஒழுங்கு செய்வார்களா ?

THE HON. SRI R. VENKATARAMAN : இந்த செஸ் நிதியிலிருந்து வீடுகள் கட்டுவதற்குத்தான் உதவி அளிக்கப்படுகிறது. மற்ற விதத்தில் அவர்களுக்கு உதவ வேண்டுமென்று சொன்னால் அதை சர்க்கார் பரிசீலனை செய்யும்.

SRI K. RAMACHANDRAN : இந்த செஸ் நிதியிலிருந்து ஒரு தறிக்கு எவ்வளவு தொகை கடனாகக் கொடுக்கப்படுகிறது. அது, நூல் தறத்திற்கு தகுந்தாற்போல் வித்தியாசப்படுத்திக் கொடுக்கப்பட முடியுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : தறி ஒன்றுக்கு 200 ரூபாய் தான், மாக்ஸிமம் லிமிட், கொடுக்க முடியும். தறியைப் பொறுத்து எவ்வளவு கொடுக்கவேண்டுமென்ற நிர்ணயம் செய்யப்படும்.

SRI M. KALYANASUNDARAM : 1957–58-க்கு ஒதுக்கப்பட்டிருக்கும் தொகை அல்லது இதுவரை அனுமதித்திருக்கும் தொகை மிக குறைவாயிருக்கிறது. இந்த வருஷம் எவ்வளவு வரும் என்று எதிர் பார்க்கப்படுகிறது ? இவ்வளவு குறைவாயிருப்பதற்குக் காரணமென்ன ?

THE HON. SRI R. VENKATARAMAN : நான் இந்த பதில் தயாரித்த பிறகு, அதாவது 37 லட்சத்தி 36 ஆயிரம் ரூபாய் வந்திருக்கிறது என்று சொன்ன பிறகு அதற்கு மேற்கொண்டு 35 லட்சம் ரூபாய் வந்திருக்கிறது. நமக்கு வரவேண்டிய தொகையைப்பற்றி இப்பொழுது கணக்குப் போட்டு சொல்லமுடியாது. நமக்கு வரவேண்டிய தொகை எல்லாம் வந்து விடும். ஏனெனில் சென்ற வருஷம் வந்திருக்கிறது என்பதையொட்டிச் சொல் கிறேன்.

SRI N. K. PALANISAMI : இந்த செஸ் நிதியிலிருந்து நெசவாளர் களுக்கு ப்ராவிடண்ட் பண்ட் கொடுக்க முடியுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : இப்பொழுது செஸ் நிதி யிலிருந்து வீடுகள் கட்டுவது, அவர்களின் தறிகளை இன்னும் உயர்ந்த ரக மாகச் செய்வது போன்ற அலுவல்களில் பணம் செலவழித்துக்கொண் டிருக்கிறோம். வருகிற தொகையில் பாதி ரிபேட்டாக கொடுத்துவிடுவதால் வேறு சலுகைகள் விஸ்தரிக்க இடமில்லை.

SRIMATHI KAMALAMBUJAMMAL : இந்த கூட்டுறவு சொஸை டிகளில் அங்கத்தினர்களாக சேருவதற்கு குறைந்தபட்சம் இவ்வளவு தறி உள்ளவர்கள்தான் சேரலாம் என்ற நியதி இருக்கிறதா ?



9th November 1957]

THE HON. SRI R. VENKATARAMAN : அப்படி ஒன்றுமில்லை. ஒரு தறி இருக்கிறவரும் கூட்டுறவு சொஸைட்டியில் சேரலாம். தறியே இல்லாதவர்கள்கூட அதில் சேர அவர்களுக்கு தறி வாங்க கடன் வசதி கொடுக்கிறோம்.

SRI K. R. NALLASIVAM : இந்த செஸ் நிதியிலிருந்து கடனாகவும், மான்யமாகவும் இப்பொழுது கூட்டுறவு சங்கங்களில் இருப்பவர்களுக்கு கொடுப்பதாகச் சொல்கிறார்கள். ஏராளமான நெசவாளர்கள் இன்னும் கூட்டுறவு சங்கங்களின் கீழ் கொண்டுவரப்படவில்லை. புதிய கூட்டுறவு சங்கங்கள் ஏற்படுத்த இந்தத் தொகையிலிருந்து ஏதாவது செலவழிக்கப்படுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : கூட்டுறவு சொஸைட்டிகளில் அதிகமாக அங்கத்தினர்களைச் சேர்க்கவேண்டும் என்பதுதான் இந்த நிதி விநியோகத்தின் நோக்கம். அவ்வாறு சேருவதற்கு இப்பொழுது தடை இருப்பதாக எனக்கு தகவலேயில்லை.

SRI K. VINAYAKAM : Have the Government got in their possession the number of those weavers, who are not registered under any co-operative society? If so, how does it compare with the number of weavers, who have been brought under the co-operative movement? Is there any idea of compelling them to register themselves in a society so that they can get the benefit of the Cess Fund, even though they refuse to do so voluntarily, for which an Act has already been passed in this House?

THE HON. SRI R. VENKATARAMAN : The number of looms in the State is 500,000 and the number of looms under the co-operative organization is 1·9 lakhs. I am sure that weavers who appreciate the idea of coming under the co-operative organization will voluntarily join it. There is no need to enforce any compulsion.

SRIMATHI T. N. ANANDANAYAKI : அமைச்சர் அவர்கள் கொடுத்த பதிலிலிருந்து ஐந்து லட்சம் லூம்களில் இரண்டு லட்சம் கிட்டத்தட்ட கூட்டுறவு சங்கங்களின் அடிப்படையில் வந்திருக்கிறார்கள். இன்னும் மூன்று லட்சம் பேர் வராமல் செஸ் பண்டின் நன்மையைப் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே அந்த மூன்று லட்சம் பேர்களும் இதன் அடிப்படையில் வர, சர்க்கார் விளம்பரம் செய்து இதில் இத்தனை நன்மை கள் இருக்கின்றன, ஏன் இதில் வரவில்லை, என்று அவர்களை கூட்டுறவு சங்கத்தின் அடிப்படையில் கொண்டு வர ஏதாவது ஏற்பாடு செய்வார் களா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN: இந்த மூன்று லட்சம் தறி கள் கூட்டுறவு இயக்கத்தில் வராததற்கு பல காரணங்கள் சொல்லப்படுகிறது. ஒன்று, மாஸ்டர் வீவெர்ஸன் சொந்தக்காரர்கள் கூலித்தறிகள் வைத்து நடத்துவதால் அவர்கள் ஏதோ சொந்த முறையில் அப்படியிருக்க வேண்டு மென்று விரும்புகிறார்கள். இரண்டாவதாக, மாஸ்டர் வீவெர்ஸ் அவர் களுக்கு கடன் வசதி கொடுத்து உதவுவதால் இதுவே தேவலை என்று அவர்கள் நினைக்கிறார்கள். ஆகவே எந்தவிதமான கட்டாயமும் செய்வது சரியல்ல. இதன் நன்மையை உணர்ந்து அவர்களே வந்து சேர்ந்துவிடு வார்கள். கடந்த வருஷமே சுமார் 1 லட்சத்தி 90 ஆயிரம் வரை இப் பொழுது கூட்டுறவு இயக்கத்தில் உயர்ந்திருப்பதால், இன்னும் அதிகமாக கூட்டுறவு இயக்கத்தில் சேருவார்கள் என்று எதிர்பார்க்கலாம்.

SRI K. RAMACHANDRAN: ஸார், கூட்டுறவு இயக்கத்தில் தறி 9-40
களை சேர்க்கவேண்டும் என்கின்ற இயக்கம் நடத்தி வந்தாலும் கூட்டுற a.m.
வில் சேர்ந்த தறிகளிலே பாதிக்கு மேற்பட்ட தறிகள் வேலையில்லாமல் இருக்கின்றன என்கின்ற புகார் சர்க்காருக்குத் தெரியுமா ?

[9th November 1957

The Hon. Sri R. VENKATARAMAN : ஓரளவு பணம் பற்றுக் குறையினால் வேலையில்லாமல் இருக்கிறது என்பது உண்மைதான். இருப்பினும் பெரிய பகுதிகள் தறிகள் வேலையில்லாமல் இருக்கின்றன என்ற புகார் சர்க்காரிடத்தில் இல்லை.

**Sri T. T. DANIEL : Sir, may I know from the Hon. Minister whether the Cess Fund, which ought to have been distributed to the weavers of Kanyakumari district on 1st November 1956 by the erstwhile T.C. Government was handed over to our Government and if so whether it has been distributed to the weavers ?**

**The Hon. Sri R. VENKATARAMAN: I would like the hon. Member to put a separate question, Sir.**

Sri M. P. SUBRAMANIAM : கைத்தறி நெசவாளர்கள் கூட்டுறவு சங்கத்தில் பதிவு செய்து கொள்வதற்கு ஜில்லா கூட்டுறவு மத்திய பாங்க் அனுமதி கொடுத்தால்தான் சேர்த்துக் கொள்ளப்படும் என்று டெப்யூடி ரெஜிஸ்டிரார் சொல்லுவது உண்மையா ? இவ்விதம் மத்திய பாங்கின் விருப்பு வெறுப்புகளால் பல கூட்டுறவு சங்கங்கள் பதிவு செய்யப் படாமல் இருப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

The Hon. Sri R. VENKATARAMAN : என்னிடத்தில் அந்த தகவல் இல்லை. கனம் மெம்பர் அவர்கள் இதைப்பற்றி தகவல் கொடுத்தால் டெப்யூடி ரெஜிஸ்டிராரிடத்தில் கொடுத்து விசாரிக்க சொல்லுகிறேன்.

Sri N. K. PALANISAMI : ஸார், நெசவாளர்களுக்கு கடன் கொடுப்பது அர்பன் பாங்குகளின் மூலம் சரியாக கொடுக்கப்படவில்லை என்பது மந்திரி அவர்களுக்கு தெரியுமா ?

The Hon. Sri R. VENKATARAMAN : சென்ட்ரல் பாங்க் மூலம் சரியாக கொடுக்கப்பட்டு வருகிறது என்று தெரிகிறது.

**Mr. SPEAKER : Questions are over.**

**[*Note*.—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]**

## II.—(1) RULING *RE* ANSWERING OF QUESTIONS RELATING TO THE STATE ELECTRICITY BOARD.

Mr. SPEAKER : A question has been answered yesterday about the functions of the State Electricity Board and the extent of Government responsibility in regard to the purchase of spare parts and other machinery required for the Electricity Department.

The Government have stated that the main function of the Madras State Electricity Board will be the promotion of the co-ordinated development of the generation, supply and distribution of electricity within the State in the most efficient and economical manner with particular reference to such development in areas not for the time being served or adequately served by any licensee and that the Government have got over-all policy control over the Electricity Board and that they have got no responsibility in regard to the purchase of spare parts or other machinery required for the Electricity Department made by the Electricity Board and the Officers authorized in this behalf by the Board.



9th November 1957] [Mr. Speaker]

This gives rise to the question as to how far the Government will be responsible to the Legislature in such matters.

Under Rule 30 of the Madras Assembly Rules, a question must relate to public affairs with which the Minister to whom it is addressed is officially connected or to a matter of administration over which he is officially responsible. Ministers are not, therefore, answerable to the Legislature for matters not under their control or direction or which the Legislature has delegated to other bodies. But in all such undertakings, the finances are provided by the public exchequer and in this view, the Legislature is entitled to know not only about the finances but everything relating to the management and administration of such undertakings. But this does not mean that when there is a separate statute and statutory authority for doing that specific work, detailed questions of every type should be allowed. It would therefore be a wholesome principle not to interfere with the autonomy of such authorities and questions will be justified, if there is something to be urged or to be known. Asking questions cannot be construed as interfering with the autonomy of these authorities.

The difficult question, as the Speaker of the Lok Sabha said on April 8th, 1950, in a similar situation in Delhi, is " the question of maintaining the balance between the authority of this House and the freedom or internal autonomy of the institutions which have been granted that autonomy. I do not mean to maintain the proposition that this House cannot interfere with certain details. It has got the right. Then, for the purpose of exercising their jurisdiction we must have the balance as to how far we should interfere with the autonomy of these bodies. That is the principal point to be borne in mind.

There was a full-dress debate on the Parliamentary control of Public Corporation, in the Lok Sabha on the 10th and 11th of December 1953, and the Hon. Minister for Finance said, in the course of his reply, " No limit, we find, exists in practice over the absolute right of Parliament to ask questions and to elicit information." The eligibility of questions in regard to the Electricity Board will, therefore, depend upon the nature of the statute and the powers that the Minister has got under the statute.

Under section 61 of the Act, the Board submits to the State Government a statement in the prescribed form of the estimated capital and revenue receipts and expenditure for the ensuing year and the State Government shall cause it to be laid on the table of both Chambers of the Legislature. The statement shall be open to discussion therein, but shall not be subject to vote. If the Budget comes before the Legislature, it cannot be maintained that no questions can be put about this Board. The question also arises as to how a Member can criticise or know anything about the Board unless he puts questions and gets information required for the purpose of debate. There are some Members who know some details or something about the business and if they find that

[Mr. Speaker] [9th November 1957

obviously something is going wrong in the day-to-day administration, they may put questions and it would be wrong to disallow such questions on the ground that there should be no interference with the autonomy of these undertakings.

In Bombay, questions on matters within the jurisdiction of the Board regarding supply of electricity to any particular part, revision of rates of electricity and other matters relating thereto are admitted on the ground that the Members of the Board are appointed by the Government and that the Government are in a way responsible for the affairs of the Board.

In West Bengal also, questions relating to the Electricity Board on matters like the administration of the Board, rate of consumption of electricity, etc., have been admitted.

The right of interpellation is a very important right and one of the means by which Members can get information or ventilate grievances on behalf of their constituencies about the nationalised industries. I, therefore, feel that such questions are admissible, though they relate to matters pertaining to the day-to-day administration of the Electricity Board, if the matters are of sufficient public importance. It is, however, left to the Minister to answer them or not. As per rules, I cannot compel him to answer. I am also told that in the Lok Sabha not only questions are allowed, but even half-hour debates are allowed on matters pertaining to Corporations, which are formed under the auspices of the Government. I, therefore, feel that these questions are admissible and that, in all fairness, the Government will answer them.

## III.—PRESENTATION OF THE SIXTH REPORT OF THE COMMITTEE ON ESTIMATES.

SRI K. R. VISWANATHAN: I, the Chairman of the Committee on Estimates, having been authorized by the Committee to submit the Report on its behalf, present the Sixth Report of the Committee on Estimates on the Public Works Department (Buildings). [a]

## IV.—GOVERNMENT BILL.

### THE MADRAS VILLAGE PANCHAYATS (AMENDMENT) BILL, 1957 (L.A. BILL NO. 16 OF 1957).

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Sir, I move—

"That the Madras Village Panchayats (Amendment) Bill, 1957 (L.A. Bill No. 16 of 1957), as amended by the Select Committee, be taken into consideration."

[a] Laid on the table of the House.



9th November 1957] [Sri M. Bhaktavatsalam]

கனம் சபாநாயகர் அவர்களே, இந்த பொறுக்கு கமிட்டியின் சிபாரிசுகளைப் பற்றி அந்த கமிட்டியில் தலைமை வகித்த நிதி அமைச்சர் அவர்கள் இந்த சபையின் முன்பு சமர்ப்பித்தார்கள். அதை கனம் அங்கத்தினர்கள் பார்த்திருப்பார்கள். இந்த மசோதா பிரேரேபிக்கப்பட்ட பிறகு பொறுக்கு கமிட்டியில் இரண்டு முக்கிய மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன என்பதையும் கனம் அங்கத்தினர்கள் கவனித்திருப்பார்கள். ஒன்று பஞ்சாயத்து பகுதியிலிருந்து பிரித்து அதை தனியாக அமைப்பது என்பது. முன்பு இவ்வாறு செய்வதற்கு இன்ஸ்பெக்டர் நோட்டிபிகேஷன் வெளியிடக்கூடிய ஒரு நிலை இருந்தது. இப்போது பிரிப்பது என்று இருந்தால் அரசாங்கம்தான் அதை தெரிவிக்கவேண்டும். அப்படி பிரிப்பதற்கு முன்னால் சபைக்கு முன்பு அந்த யோசனையை கொண்டு வந்த பிறகு, இந்த சபை அதைப்பற்றி ஏதாவது முடிவு எடுத்து மாறுதல் செய்து அதன்படி பிரிப்பது என்பது இதில் ஏற்பட்டிருக்கின்ற முக்கியமான மாறுதல். அப்படிப் பிரிக்கப்பட்ட பிறகுதான், பிரிக்கப்பட்ட பிராந்தியத்திற்கு கமிட்டி அமைக்கப்படும் என்பது ஒரு மாறுதல். அந்தக் கமிட்டியை அமைக்கும் விஷயமாகவும் முன்பே மசோதாவில் விதிகள் இருந்தன. அந்த விதிகளில் மாறுதல்கள் செய்யப்பட்டிருக்கின்றன. அதாவது, இந்தச் சட்டத்தின் கீழ் செய்யப்படும் விதிகள் கெஜட்டில் பிரசுரிக்கப்பட்டால் போதும் என்ற விதி முன்பு இருந்தது; அதற்கு மாறாக, அந்த விதிகள் இந்த சபை முன் வைக்கப்பட்டு, சபை அந்த விதிகளில் தான் செய்ய விரும்பும் மாறுதல்களைச் செய்யலாம்—சபை கவனித்த பிறகுதான் அந்த விதிகள் அமலுக்கு வரும்—என்பதுதான் பொறுக்குக் கமிட்டியில் செய்யப்பட்ட இன்னொரு முக்கிய மாறுதல் ஆகும். இந்த இரண்டும் முக்கிய மாறுதல்கள் ஆகும். மற்ற மாறுதல்கள் ஏற்கெனவே மசோதாவில் இருந்தவைதான்.

அந்தப் பிரிவுகளைப்பற்றி, பொறுக்குக் கமிட்டியிலிருந்து கனம் அங்கத்தினர்களில் ஒரு சிலர் தங்களுடைய மாறுபட்ட அபிப்பிராயங்களைத் தெரிவித்திருக்கிறார்கள். அந்த மாறுபட்ட அபிப்பிராயங்களைக் கொண்ட அறிக்கையும் பொறுக்குக் கமிட்டியின் அறிக்கையுடன் சேர்த்து சபையில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. அவைகளில், ஒரு சில கனம் அங்கத்தினர்களுக்கு இருக்கும் ஒரு முக்கியமான மாறுபட்ட அபிப்பிராயம், பஞ்சாயத்து போர்டு தலைவர் தேர்தலைப்பற்றியது ஆகும்; மற்றொரு மாறுபட்ட அபிப்பிராயம், பஞ்சாயத்து போர்டு தேர்தலில் ஓட்டளிக்கும் முறையைப் பற்றியது ஆகும். இது சம்பந்தமாக, பொறுக்குக் கமிட்டியில் தலைமை வகித்த கனம் நிதி அமைச்சர் அவர்கள் "வேறு கட்சிகளிலுள்ள ஒரு சில கனம் அங்கத்தினர்களுக்கு இருக்கும் மாறுபட்ட அபிப்பிராயத்தை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். அதை அரசாங்கம் அறிந்த பிறகு, அது ஏதேனும் மாறுதல் செய்வதாயிருந்தால் அப்போது பார்த்துக் கொள்ளலாம்" என்று பொறுக்குக் கமிட்டியில் தெரிவித்தார்கள். அப்படியே, ஒரு சில கனம் அங்கத்தினர்களின் மாறுபட்ட அபிப்பிராயங்கள் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. அவை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டபோது, பஞ்சாயத்து போர்டு தலைவர் தேர்தலைக் குறித்து தன் அபிப்பிராயத்தை மாற்றிக்கொள்வதற்கு அரசாங்கம் தயாராக இல்லை. அதாவது, பஞ்சாயத்து போர்டு தலைவரை மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பஞ்சாயத்து போர்டு அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்கவேண்டும் என்ற தன் அபிப்பிராயத்தை அரசாங்கம் மாற்றிக் கொள்ளத் தயாராக இல்லை. ஆனால், வோட்டு முறை சம்பந்தமாக தன் அபிப்பிராயத்தை அரசாங்கம் மாற்றிக்கொண்டது. அதாவது, ரகசிய வோட்டு முறை இரண்டாவது வகுப்புப் பஞ்சாயத்துக்களுக்கும் இருந்தால் நல்லது என்ற அபிப்பிராயம் அரசாங்கத்திடம் தெரிவிக்கப்பட்டபோது, அதற்கு அரசாங்கம் ஒத்துக்கொண்டது. அதன்படி இரண்டாவது வகுப்புப் பஞ்சாயத்துக்களிலும் ரகசிய வோட்டு முறையைக் கொண்டு வருவதற்கு சட்டத்தில் மாறுதல் செய்யவேண்டிய அவசியம் இல்லை. அதற்கு விதிகளில்தான் மாறுதல் செய்யவேண்டும். விதிகளை அவ்வாறே மாற்றிவிடலாம். ஆனால், அப்படி எல்லா பஞ்சாயத்துக்களிலும்

[Sri M. Bhaktavatsalam] [9th November 1957

ரகசிய வோட்டு முறையை அனுஷ்டிக்கவேண்டுமென்றால் கொஞ்சம் பணம் அதிகம் செலவாகும். அப்படி பணம் அதிகம் செலவானால் பாதகமில்லை என்பது அரசாங்கத்தின் அபிப்பிராயம். அவ்வாறு தான் சபையின் அபிப்பிராயமும் இருக்குமென்று நினைக்கிறேன். வரவிருக்கும் பஞ்சாயத்துத் தேர்தல்களை அவ்வாறு நடத்துவதற்கு ஒன்றிரண்டு மாதங்கள் தாமதமாகும். அது ஒரு நீண்ட தாமதமல்ல. எல்லா பஞ்சாயத்துத் தேர்தல்களையும் ரகசிய வோட்டு முறையில் நடத்தவேண்டுமென்பது அரசாங்கத்தின் கருத்து. அந்த முறையில் விதிகள் மாற்றப்படும் என்று இந்த சமயத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இரண்டாவது, பொதுப்படையாக மாறுபட்ட அபிப்பிராயத்தைத் தெரிவித்திருக்கும் கனம் அங்கத்தினர்கள் ஒரு அடிப்படையான கருத்தையும் தெரிவித்திருக்கிறார்கள். "தலைவர் தேர்தல் முறையில் ஒரு பெரிய மாறுதலையும், மற்ற மாறுதல்களையும் சட்டத்தில் செய்வதற்கு இப்போது என்ன அவசரம்? இவைகளை பின்னர் கவனிக்கலாமே! பொதுவாக ஸ்தலஸ்தாபன நிர்வாக சம்பந்தமான விஷயங்களைப் பரிசீலனை செய்து யோசனைகள் கூறுவதற்கு கூட்டுக் கமிட்டி போடப்பட்டிருக்கிறது. அவர்கள் இதைப்பற்றியும் அபிப்பிராயம் சொல்லட்டும்" என்ற அடிப்படையான கருத்தை இவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். இதுகுறித்து நான் சொல்ல விரும்புவது: "கூட்டுக் கமிட்டி பரிசீலனை செய்யும்போது அது எல்லா விஷயங்களையும் பரிசீலனை செய்யட்டும். அதற்கு ஒரு தடையாக இருக்கும் வகையில் இப்போது இந்த சபை எதையும் செய்யவேண்டுமென்று நான் சொல்லவில்லை. ஆனால் இப்போது இந்தத் திருத்தங்களைச் செய்யவேண்டிய அவசியம் இருக்கிறது. அதற்கான காரணங்களைச் சொல்கிறேன். பஞ்சாயத்து போர்டு தேர்தல்கள் ஒரு ஆண்டுக்கு முன்பிருந்தே தள்ளிப் போடப்பட்டிருக்கின்றன. அப்படி தள்ளிப் போடப்பட்டது எங்களிலேயே சிலருக்குப் பிடிக்கவில்லை; தேர்தல்களை அப்போதே நடத்தவேண்டுமென்று கருதினோம். ஆகவே ஒரு வருஷத்திற்கு மேலாக பழைய பஞ்சாயத்துக்கள் நீடித்து நடந்துவருகின்றன. பஞ்சாயத்துத் தேர்தல்களை மீண்டும தள்ளிப்போடக்கூடாது என்பது அரசாங்கத்தின் அபிப்பிராயம். ஆகவே பஞ்சாயத்துத் தேர்தல்களை கூடிய சீக்கிரம் நடத்தவேண்டும். அப்படி அவைகளை நடத்தும்போது, பஞ்சாயத்துத் தேர்தல் முறை, பஞ்சாயத்து தலைவர் தேர்தல் முறை முதலியவை மிகவும் முக்கியமானவை. தேர்தல்களைப் பழைய முறையில் நடத்துவது சரியல்ல என்று கருதினோம். ஆகவே பஞ்சாயத்துச் சட்டத்தை தகுந்த முறையில் திருத்தி, அதன்படி தேர்தல்களை நடத்தவேண்டுமென்று கருதியதால், கூட்டுக் கமிட்டி பரிசீலித்து யோசனை கொடுக்கும் வரையிலும் பொறுத்துக்கொண்டிராமல் இந்தத் திருத்தங்களை இப்போது செய்ய விரும்புகிறோம். இன்னும் சில முக்கியமான திருத்தங்கள் இருக்கின்றன; அவைகள் பின்னர் வரலாம். இந்தத் திருத்தங்களை, நான் கூறிய காரணங்களின்படி, இப்போதே செய்யவேண்டிய அவசியம் இருப்பதால் இப்போது கொண்டுவருகிறோம். ஆகவே வரப்போகிற பஞ்சாயத்துத் தேர்தல்களையொட்டித் தான் இந்தத் திருத்தங்கள் இப்பொது இங்கே கொண்டுவரப்பட்டிருக்கின்றன.

முக்கியமாக, இப்போது பஞ்சாயத்து போர்டு தலைவர் தேர்தலைப்பற்றித் தான் ஒரு சில கனம் அங்கத்தினர்களுக்கு—குறிப்பாக எதிர்கட்சியைச் சேர்ந்த கனம் அங்கத்தினர்களுக்கு—பலத்த அபிப்பிராய பேதம் இருக்கிறது. அது அவர்கள் சமர்ப்பித்துள்ள மாற்று அபிப்பிராய அறிக்கையிலும் வலியுறுத்தப்பட்டிருக்கிறது. அவர்கள் "பஞ்சாயத்து போர்டு தலைவர் தேர்தல் விஷயத்தில், இப்போது அமலில் இருக்கும் தேர்தல் முறை தான்—அதாவது, பஞ்சாயத்துப் பிரதேசத்திலுள்ள ஜனங்கள் நேரடியாக பஞ்சாயத்துத் தலைவரைத் தேர்ந்தெடுக்கும் முறை தான்—ஜனநாயகத்திற்கு உகந்த முறை. அரசாங்கத்தார் திருத்தத்தில் கொண்டுவரும் தலைவர் தேர்தல் முறை ஜனநாயகத்திற்கும் அரசியல் சட்டத்தின் 40-வது ஷரத்திற்கும் முரண்பட்டது. இந்தத் திருத்தத்தை அரசாங்கம் ஏன் வற்புறுத்தவேண்டும்?" என்று தங்கள் மாறுபட்ட அபிப்பிராய அறிக்கையில் கூறியிருக்கிறார்கள். முதலில் நான் அரசியல் சட்டத்தின் 40-வது ஷரத்தை வாசிக்கிறேன்.



9th November 1957] [Sri M. Bhaktavatsalam]

"The State shall take steps to organise village panchayats and endow them with such powers and authority as may be necessary to enable them to function as units of Self-Government."

என்று அரசியல் சட்டத்தின் 40-வது ஷரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. "**Units of self-Government**"-ஆக பஞ்சாயத்துக்களை சர்க்கார் **organise**-பண்ணவேண்டுமென்றும், அவைகளுக்கு அந்த வகையில் அதிகாரங்கள் கொடுக்கவேண்டுமென்றும் அரசியல் சட்டத்தின் 40-வது ஷரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த ஷரத்தை யொட்டிய வகையில்தான் நாங்கள் கொண்டுவரும் திருத்தங்கள் இருக்கின்றன என்று நான் கூறுவேன். இப்போது அமலிலிருக்கும் பஞ்சாயத்துத் தலைவர் தேர்தல் முறை அரசியல் சட்டத்தின் 40-வது ஷரத்திற்கு உகந்ததல்ல என்றும் நான் கூறத் தயாராயிருக்கிறேன். இப்போதுள்ள முறைப்படி பஞ்சாயத்து போர்டு தலைவரை பஞ்சாயத்து எல்லையிலுள்ள வாக்காளர்கள் தேர்ந்தெடுக்கவேண்டும். அது தவிர பஞ்சாயத்து போர்டு அங்கத்தினர்களும் வார்டு வாரியாகத் தேர்ந்தெடுக்கப்படவேண்டும். "எல்லோரும் சேர்ந்து தான் பஞ்சாயத்து" என்பதை கனம் அங்கத்தினர்கள் ஒப்புக்கொள்வார்கள். "தலைவர் மட்டும் பஞ்சாயத்து" என்று இருந்தால், அது ஒருவாறு ஜனநாயகத்திற்கு முரண்பட்டதல்ல என்று கருதி அதை நானும் ஒப்புக்கொள்வேன். "மக்கள் ஒருவரை பஞ்சாயத்துத் தலைவராகத் தேர்ந்தெடுப்பது. அவர் மக்களின் நம்பிக்கையைப் பெற்றவராக, ஜனநாயக முறையில், அங்கே ஆளுவது—அந்த நிர்வாகத்தை அவர் நடத்துவது" என்பதில் ஜனநாயகத்திற்கு முரண்பட்டது எதுவும் இல்லை; அது சிறந்த ஜனநாயகம் தான்; ஆனால் அது பஞ்சாயத்து அல்ல. பஞ்சாயத்து என்று கூறும்போது அதில் பலர் இருக்கவேண்டும். அதில் என்ன சொல்லியிருக்கிறது? பஞ்சாயத்துகள் கிராமத்தில் அமைக்கப்படவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. பஞ்சாயத்து என்று ஏன் வருகிறது. பஞ்சாயத்து என்ற வார்த்தை சிலருக்கு பிடிக்காமலிருக்கலாம். அது வேறு விஷயம். எப்படியோ, இங்கு பஞ்சாயத்து என்று போட்டிருக்கிறார்கள். பஞ்சாயத்து என்றால் 5 பேர், 10 பேர், சில பேர்கள் சேர்ந்து ஆட்சி செய்வது. ஒருவர் ஆள்வது அல்ல. டிக்டேடர் அல்ல. ஒரு பிரஸிடெண்ட் ஆள்வது அல்ல. நாலு பேர் சேர்ந்து ஆள்வது. அதுதான் பஞ்சாயத்து என்று பேர். இப்போது அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுக்கிறோம். தலைவரையும் தேர்ந்தெடுக்கிறோம். அங்கத்தினர்களெல்லாம் ஒரு அபிப்பிராயத்தைக் கொண்டிருக்கிறார்கள். தலைவருக்கு ஒரு அபிப்பிராயம். அம்மாதிரியான சிக்கல்கள் இப்போது இல்லாமலில்லை. சில இடங்களில் நடைபெற்றிருக்கிறது. சில இடங்களில் தகராறு இல்லாமலும் இருக்கிறது. இப்போது யார் பேச்சைக் கேட்பது? இப்படி ஒரு அபிப்பிராய பேதம் வரும்போது யார் பேச்சைக் கேட்டது. எல்லா மக்களாலும் தேர்ந்தைடுக்கப்பட்டவர் அங்கத்தினரின் பேச்சைக் கேட்பதா? அங்கத்தினர்களுக்கு உட்படுவதா? அப்படிக் கேட்பதென்றால் அவரைத் தேர்ந்தெடுத்த எல்லா மக்களுக்கும் என்ன கௌரவம்? என்ன மரியாதை? இல்லை, எல்லா மக்களாலும் தேர்ந்தெடுக்கப்பட்ட அவருக்குத் தான் என்ன கௌரவம்? எல்லோரும் சேர்ந்து தேர்ந்தெடுத்தால் அவர் இஷ்டம்போல் பஞ்சாயத்து ஆட்சி நடத்தவேண்டும். அப்படிச் செய்வது 40-வது ஆர்டிகிளுக்கு விரோதமாகும். இதை அங்கத்தினர்கள் சற்று கவனிக்கவேண்டுமென்று கூறுகிறேன்.

ஆகவே, பஞ்சாயத்துகளுக்குகந்த முறை, அங்கத்தினர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு, அந்தப் பஞ்சாயத்தின் தலைவர் அங்கத்தினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர் ஒரு சர்வாதிகாரியாகாமல், தலைவருடன் பஞ்சாயத்து அங்கத்தினர்களெல்லாம் சேர்ந்து ஆட்சி புரிவது; அதுதான் பஞ்சாயத்து ஆட்சி. அதுதான் அரசியல் அமைப்புச் சட்டத்தின் 40-வது ஆர்டிகிளில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

[Sri M. Bhaktavatsalam] [9th November 1957

கனம் எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுடைய தொகுதி உத்திரமேரூர் தொகுதி. இதை எல்லோரும் கேள்விப்பட்டிருப்பார்கள். அந்த உத்திரமேரூரில் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே பஞ்சாயத்து ஏற்பட்டிருக்கிறது. இன்றையதினம் இதைப்பற்றி கோயில்களிலுள்ள கல்வெட்டுகளில் பார்க்கலாம். அந்தக் கல்வெட்டுகள் தமிழ் மொழியில்தான் இருக்கிறது. இன்றும் பார்க்கலாம். பலருக்குப் புரியும். சிலருக்குப் புரியாது என்பதற்காக ஆர்கெயலாஜிகல் டிபார்ட்மெண்டார் அதைப் பிரசுரித்திருக்கிறார்கள். ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இப்படி நடந்திருக்கிறது. அங்கு பஞ்சாயத்து ஆட்சி நடந்திருக்கிறது. அந்த பஞ்சாயத்து அங்கத்தினர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். அதுவும் இரகசிய ஓட்டு முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். பல அங்கத்தினர்களிருந்தார்கள். அதில் பெண்களுக்கு ஸ்தானம் ஒதுக்கப்பட்டு, பெண்கள் பொறுப்பான ஸ்தானங்களுக்கு அமர்த்தப்பட்டிருந்தார்கள். அதோடு மாத்திரமல்ல. பல ஸ்டாண்டிங் கமிட்டிகள் இருந்திருக்கின்றன. ஒவ்வொரு விஷயத்திற்கும் ஒரு ஸ்டாண்டிங் கமிட்டி. இவ்வளவும் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு. இதை ஒரு மாடலாக வைத்துக்கொள்கிறோம். பழையவைகளை அப்படியே எடுத்துக்கொள்ளவேண்டுமென்று நான் சொல்லவில்லை. நான் சொல்வதெல்லாம், பழமையில் புதுமை இருக்கிறதென்பதைத்தான். அவ்வாறு பஞசாயத்து நடைபெறவேண்டும். இவ்வாறு உகந்த முறையில் தலைவரைத் தேர்ந்தெடுக்கும் முறையை மாற்றி, பஞ்சாயத்து அங்கத்தினர்களே தலைவரைத் தேர்ந்தெடுக்கவேண்டுமென்று நாங்கள் கொண்டு வந்து, அதை ஸெலெக்ட் கமிட்டி ஏற்றுக்கொண்டு, அதில் மாறுபட்ட அபிப்பிராயங்களை உடையவர்கள் ஜனநாயகத்தின் பேரால் ஏற்றுக்கொள்ள முடியாமலிருப்பதாக இன்றையதினம் தெரிவித்திருக்கிறார்கள். இப்போது ஜனநாயகத்திற்குகந்த முறையில்தான் மாற்றியிருக்கிறோமென்று இந்த சமயத்தில் நான் சொல்ல விரும்புகிறேன்.

ஒரு கிராமத்திலிருந்து, ஒரு பஞ்சாயத்து எல்லையிலிருந்து, ஒரு பகுதியை ஏன் பிரிக்கவேண்டும் ? அப்படிப் பிரிப்பதே தவறு என்று சொல்லுகிறார்கள். ஏதோ ஒரு தொழிற்சாலை நகரம், அல்லது சுகாதார நிலையம், மாதிரி இருக்கக்கூடிய இடங்களைப் பிரிப்பதே தவறு என்கிறார்கள். ஏன் பிரிக்கவேண்டும் ? அப்படிப் பிரிப்பதால் அந்தப் பஞ்சாயத்தின் வருமானம் போகிறது. அதிலும், இது ஜனநாயகத்திற்கு முரணானது என்று சொல்கிறார்கள். ஒரு பஞ்சாயத்து எல்லையிலிருந்து ஒரு இடம் பிரிக்கப்பட்டால் ஜனநாயகம் பறிபோய்விடாது. ஸ்தல ஸ்தாபன நிர்வாகம் அந்தந்தப் பிராந்திய மக்களின் தேவைகளை கவனிக்கவேண்டும். பிரத்தியேகமாக கவனிக்கவேண்டிய பிராந்தியங்களும் இருக்கின்றன. இப்போது மேட்டூர் டவுன்ஷிப் இருக்கிறது. மேட்டூர் அணைக்கட்டு கட்டப்பட்டதன் காரணத்தால் ஏற்பட்ட ஒரு நகரம். மேட்டூர் அணையில் அங்கு பல தொழிற்சாலைகள் ஏற்பட்டன. சாதாரணமாக மேட்டூர் பஞ்சாயத்து இதை கவனிக்கவேண்டியது. ஆனால் இதற்கு விசேஷ கவனம் செலுத்தப்படவேண்டுமென்று மேட்டூர் டவுன்ஷிப் ஆக்ட் இந்த சபையினால் நிறைவேற்றப்பட்டு நடத்தப்பட்டு வருகிறது. அதே போல பவானிசாகர் புதிதாக அமைக்கப்பட்ட ஒரு நகரம். பவானி அணைக்கட்டின் காரணமாக ஏற்பட்ட ஒரு நகரம். அதற்குத் தனியாக சட்டம் செய்யவேண்டுமென்று இந்த சபையால் செய்யப்பட்டது. அதே மாதிரி குத்தாலம் ஒரு சுகாதார நிலையம். ஒரு சிறந்த நிலையம். போதுமான அளவு சுகாதாரம் முதலிய வகைகளிலெல்லாம் கவனிக்கப்படவேண்டுமென்றும், இதையெல்லாம் பஞ்சாயத்து மூலம் நிறைவேற்ற முடியாதென்றும் இந்த சபையினால் ஒரு சட்டம், குத்தாலம் டவுன்ஷிப் ஆக்ட் நிறைவேற்றப்பட்டது. இந்த மசோதாவில் ஒவ்வொரு பிராந்தியத்திற்கும் தனியாக சட்டம் செய்வதைத் தவிர்ப்பதற்கு வகை செய்யப்பட்டிருக்கிறது. அதுவும் இந்த சபையின் ஆதரவோடு, இந்த சபையின் அபிப்பிராயத்திற்கிணங்க, இந்த சபையின் அபிப்பிராயத்தை ஏற்றுக்கொண்டு செய்யப்படுகிறது. ஒரு குறை சொல்லப்படுகிறது ; அதாவது இதனால் பஞ்சாயத்தின் வருமானம் குறைகிறது என்று. இப்போது பெருந்துரை இருக்கிறது. அங்கு ஒரு ஸானடோரியம் இருக்கிறது. ஸானடோரியத்தில் அதிகாரிகளிருக்கிறார்கள். தொழிலாளர்



9th November 1957] [Sri M. Bhaktavatsalam]

களிருக்கிறார்கள். அதனால் நிறைய வருமானம் வருகிறது. புரொபெஷன் டாக்ஸ் முதலியவைகளால் வருமானம் வருகிறது. அது ஒரு பிராந்தியத்தின் ஓர் பகுதி. அந்தப் பஞ்சாயத்து ஒரு பெரிய பிராந்தியம். அந்தப் பிராந்தியத்தில் ஒரு பகுதி. இந்தப் பிராந்தியத்திலிருந்து வரும் பணத்தை மற்ற பிராந்தியங்களில் செலவு செய்யலாமென்று சொல்வது சரியல்ல. அந்தப் பிராந்தியத்தின் அபிவிருத்திக்காக அந்தப் பிராந்தியத்தின் வருமானம் செலவு செய்யப்படவேண்டும். சம்பந்தப்பட்ட மக்களுக்குச் செலவு செய்யப்பட்டவேண்டும். பஞ்சாயத்தில் ஒரு பகுதி மக்களுக்கு செல்வாக்கு இருந்து, மற்ற இடத்தில் இல்லை என்றால் அந்தப் பணத்தை அந்த இடத்திலேயே செலவு செய்துகொள்வார்கள். அப்படியில்லாமல் அந்தந்தப் பிராந்தியத்திற்குப் பயன்படவேண்டும். ஒரு பஞ்சாயத்தின் வருமானம் குறித்து கவனம் செலுத்தலாம். சர்க்காரும் அதில் கவனம் செலுத்தத்தான் செய்யும். அவ்வாறு பிரிக்கப்பட்டால் அப்படிப் பிரிக்கப்பட்ட இடத்திலும் ஸ்தல ஸ்தாபன நிர்வாகம் நடத்தப்படும். கிடைக்கக்கூடிய வருமானம் அந்தப் பிராந்தியத்தின் வளர்ச்சிக்காக, அந்தப் பிராந்திய்த்தின் அபிவிருத்திக்காகப் பெரிதும் பயன்படவேண்டுமென்பதுதான் அடிப்படையான கருத்து.

மற்றொன்று பஞ்சாயத்துக்களின் காலத்தை 3 ஆண்டுகளிலிருந்து 5 ஆண்டுகளாக மாற்றுவது. இப்போது இருப்பதை இந்த மசோதாவில் மாற்றி அமைத்து, அதை பொறுக்குக் கமிட்டியும் ஒப்புக்கொண்டிருக்கிறது. மூன்று ஆண்டுகளாக இருந்ததை ஐந்து ஆண்டுகளாக அதிகப்படுத்தியிருப்பது. முனிஸிபல் தேர்தல்கள், மற்ற தேர்தல்களெல்லாம் வேறு விஷயம். பஞ்சாயத்துத் தேர்தல் வருகிறது. சட்டசபை, பார்லிமெண்டு தேர்தல்கள் வருகின்றன. பஞ்சாயத்து தேர்தலை 3 ஆண்டுகளுக்கு ஒரு முறை வைத்தால் அனாவசியமான செலவையும மக்களுக்குத் த்யக்கத்தையும் ஏற்படுத்தக்கூடும். ஆகையால் பஞ்சாயத்து அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டரல் ஐந்து ஆண்டுகள் இருக்கலாம் என்பதுதான் கருத்து அதுதான் இந்த மசோதாவில் இருக்கிறது. ஸெலெக்ட் கமிட்டியும் ஒப்புக்கொண்டிருக்கிறது. கல்யாணசுந்திரம், மாற்று அறிக்கையில், 5 ஆண்டுகளென்றிருப்பதை ஒப்புக்கொள்ளக்கூடும், ஆனால் இரண்டு நிபந்தனைகளுக்குட்பட்டு என்று சொல்லியிருக்கிறார். ஒன்று இரகசிய வோட்டு முறை. மற்றொன்று தலைவர் தேர்தல். இதில் ஒன்றை ஏற்றுக்கொண்டிருக்கிறோம். தலைவர் தேர்தலைப்பற்றியவரை ஒப்புக்கொள்ள இயலவில்லை. பஞ்சாயத்துக்களைப் பொறுத்தமட்டில் 5 ஆண்டுகளிருப்பதே நலமென்பதுதான் அரசாங்கத்தின் அபிப்பிராயம். அதுவேதான் இந்த மன்றத்தின் அபிப்பிராயமாகவும் இருக்குமென்று நம்புகிறேன். இந்த வார்த்தைகளுடன் நான் பிரேரேபித்த இந்த மசோதாவை அங்கத்தினர்கள் ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

MR. SPEAKER : கனம் மந்திரி அவர்கள் கொண்டு வந்த பிரேரணை சபையின் முன்பு விவாதத்திற்கு வைக்கப்பட்டிருக்கிறது.

SRI M. KALYANASUNDARAM : There is an amendment to this given notice of by Sri Kothandaraman.

SRI A. NESAMONY : Sir, I rise on a point of order. The motion of this House which committed the Bill for consideration by the Select Committee did not authorize it to amend any section of the parent Act. The Committee was only to consider the amending Bill. Now the Select Committee has reported that section 113 of the Panchayats Act should be amended. I submit it is beyond the competence of the Select Committee to have recommended that amendment. It is a question of procedure and a matter affecting the privilege of the House. So, I request a ruling from the Chair whether under Rule 104 of the Assembly Rules, this report is in order.

[9th November 1957

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I would like to submit that, apart from the Select Committee considering this question, it is certainly open to this House to consider and accept the salutary amendment if the House is of that view. This point was raised before the Select Committee. In any case, it is certainly open to this House to consider the amendment.

MR. SPEAKER : I shall consider the point of order raised by Sri Nesamony and the explanation given by the Hon. Minister and give my ruling in a few minutes. Meanwhile, the House may go on with the general discussion. I presume that we can discuss the Bill for an hour and a half and then take it up clause by clause.

* SRI P. S. CHINNADURAI : மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, கிராம பஞ்சாயத்து திருத்த மசோதா சம்பந்தப்பட்ட சட்டசபை ஆய்வுக் குழுவின் அறிக்கை இப்பொழுது சபையின் முன்பு சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. ஆய்வுக் குழுவுக்குச் சென்ற பின்னர் திருத்த மசோதா ஜனநாயக பூர்வமான உரிய மாறுதல்கள் செய்யப்படுவதற்கு சந்தர்ப்பம் இருக்கும் என்று எதிர்பார்த்தவர்களில் நானும் ஒருவன். ஆனால் நான் ஏமாற்றமே அடைந்தேன் என்று இந்த நேரத்தில் குறி பிட விரும்புகிறேன். இந்த திருத்த மசோதா வானது எவ்வாறு ஜனநாயகத்துக்குப் பொருத்தமானது எனறு நினைப்பூட்ட கனம் அமைச்சர் அவர்கள் மிகவும் பிரயாசை எடுத்துக்கொண்டிருக்கிறார். அவருடைய பிரயாசையை பாராட்ட வேண்டியதுதான். ஆனால் அவர் சபையில் முன்பாக சமர்ப்பித்துள்ள வாதங்கள் ஆதாரப் பொருத்தமானவையாக இல்லை. அது உண்மையிலேயே அவருடைய ஜனநாயக தத்துவத்தை பலப்படுத்துவதாக இல்லை என்பதனை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

**(Temporary Chairman Sri K. Ramachandran in the Chair.)**

இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் 40-வது ஷரத்தின்படி பஞ்சாயத்துக்களை அமைக்கக்கூடிய ஒரு ஷரத்து சேர்க்கப்பட்டிருக்கிறது. இந்த 40 ஆவது ஷரத்துக்கு முரணாக இவ்வாறு திருத்தம் செய்யப்பட்டிருக்கிறது என்று எடுத்துக்காட்டினால் அதை மறுத்து கனம் அமைச்சர் அவர்கள் இல்லை என்றும் அது ஜனநாயகக்துக்கு உட்பட்டது என்றும் குறிப்பிட்டார். ஆகவே என்னுடைய அபிப்பிராயத்தை இதில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்த திருத்த மசோதாவில் சில பஞ்சாயத்துக்களிலுள்ள பகுதிகளையோ சில குறிப்பிட்ட தொழிற்சாலைப் பகுதிகளையோ நீக்கி விடுவதற்கு விதி விலக்குச் செய்வதற்கான அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது. இதுவரை இல்லாத ஒரு முறையை, அரசியல் அமைப்புக்கு எதிரான ஒரு முறையை, அமைத்து அதன்படி பஞ்சாயத்துக்களை அமைக்க வேண்டும் என்றும், சுய ஆட்சியை வெற்றிகரமாக நடத்துவதற்கு அதுதான் சிறந்த ஏற்பாடு என்றும் இம்முறை கொண்டுவரப்பட்டிருக்கிறது. அரசியல் அமைப்பின் 40 ஆவது ஷரத்து எந்தப் பகுதியையும் பஞ்சாயத்து பகுதியிலிருந்து விலக்கவேண்டும் என்று சொல்லவில்லை. ஆகவே இது ஏற்கெனவேயுள்ள 1950-ம் ஆண்டு ஏற்படுத்திய கிராம பஞ்சாயத்து சட்டத்துக்குப் புறம்பானதும் முரணானதும் ஆகும். அப்படிப்பட்ட ஒரு திருத்தம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. நம்முடைய அரசியல் அமைப்பு சட்டத்தின் 40-வது ஷரத்துக்கு இந்தத் திருத்தம் விரோதமானதாகும். அப்படி இந்த திருத்தம் இருக்கிறது என்பதை நான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன். சில குறிப்பிட்ட பகுதிகளை பிரித்துவைக்க வேண்டும் என்று கூறுவது எந்த வகையில் ஜனநாயகத்துக்கு பொருத்தம் என்பதை இனி நாம் கவனிப்போம்.

பஞ்ராயத்து ஏரியாக்கள் என்பது ஏற்கெனவே ரெவினியூ கிராமங்களின் பாகமாக அமைக்கப்பட்டிருக்கிறது. இனிமேல் எவ்வாறு அமைக்கப் போகிறோம் ? திருத்தப்படுவதற்கு முன்பாகவே இதை ரெவினியூ கிராமத்துக்கு ஒரு பகுதியாகவோ அல்லது தனித்தனியாக 500 ஜனங்களுக்கு



9th November 1957] [Sri P. S. Chinnadurai]

என்று ஏற்படுத்தி, குறிப்பிட்ட பஞ்சாயத்துப் பகுதியிலிருந்து இன்னும் ஒரு சிறிய பகுதியை நீக்கி தொழிலாளர்கள் வசிக்கக்கூடிய காலனி என்று அமைத்து வைக்கவேண்டும் என்று சொல்வது பஞ்சாயத்து சட்டத்திற்கு ஒத்ததாக இருக்குமா என்று நாம் கவனிக்க வேண்டாமா ? இப்படி ஒரு தனிப்பட்ட பகுதியை பிரித்து வைத்து பஞ்சாயத்து தொழிற்சாலை காலனி என்று அமைத்து அவர்களுக்கு ஒரு தனி பிரிவை அமைப்பது எவ்வாறு ஜனநாயகத்துக்குப் பொருந்தும். இப்படி தொழிற்சாலை பகுதிகளில் வாழும் மக்களுக்கும் பஞ்சாயத்து வசதியைக் கொடுக்காமல் அவர்களை ஏன் இப்படி நடத்தவேண்டும் என்று எனக்குப் புரியவில்லை. ஒருக்கால் முதலாளிகள் அவ்வாறு விரும்பலாம். இப்படி தொழிலாளர் காலனி மக்களைப் பிரித்து வைத்தால் முதலாளிகளுக்கு வசதி செய்து கொடுப்பது போல் ஆகும் அல்லவா ? இப்படி பகுதிகளைப் பிரிப்பதால் முதலாளிகள் விரும்புவதைச் செய்து கொடுப்பதாக ஆகிறது. இந்த அரசாங்கம் முதலாளிகளுக்கு ஆதரவு கொடுக்கிறது என்று சொல்வதற்கு இடம் ஏற்படுகிறது. ஆகவே முதலாளிகளுக்கு வசதி செய்யும் பொருட்டு இதைச் செய்வதைக்கண்டு ஆச்சரியப்பட வேண்டியதாக இருக்கிறது. இப்படிப்பட்ட திருத்தம் அவசியம்தானா ? முதலாளிகளை திருப்தி பண்ணுவதற்கு என்று கொண்டுவரப்படும் சட்டம் அவசியம்தானா ? இப்படிப்பட்ட திருத்தம் கொண்டுவருவதற்கு ஏதாவது வற்புறுத்தல் இருக்கவேண்டும் என்பதைச் சுட்டிக்கர்ட்ட விரும்புகிறேன். இந்த நேரத்தில் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன்.

கோவை ஜில்லாவில் மதுக்கரை பகுதியில் (மதுக்கரை எனது தொகுதியில் உள்ளது.) ஒரு பஞ்சாயத்து அமைக்க வேண்டும் என்று மூன்று வருஷங்களுக்கு முன்னால் அங்குள்ள மக்கள் கோரினார்கள். அதன் பிறகு அங்கு பஞ்சாயத்தை அமைப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. மறுநாள் தேர்தல் நடத்தி நிர்ணயம் செய்யவேண்டும் என்று ஏற்பாடு செய்யப்பட்டது. அந்தத் தேர்தலுக்கு முன்னதாக அங்கேயுள்ள முதலாளிகள் இந்தத் தேர்தலை நடத்த விடாமல் ஏதோ அமைதிக்கு பங்கம் வரும் போல் இருக்கிறது என்று ஆட்சேபனை சொல்லி அதன் பேரில் பஞ்சாயத்து தேர்தல் நிறுத்திவைக்கப்பட்டது. பிறகு பஞ்சாயத்து தேர்தல் நடைபெறவில்லை. மறுமுறையும் தேர்தலை நடத்தவேண்டும் என்று நிர்ணயம் செய்தார்கள். அப்பொழுது முதலாளிகள் வேறுவிதமான ஆட்சேபணையைக் கிளப்பினார்கள். மதுக்கரை சிமெண்ட் பாக்டரி காலனியை பஞ்சாயத்துப் பகுதியில் சேர்க்கக்கூடாது என்று அங்குள்ள முதலாளிகள் கூறினார்கள். ஏற்கெனவேயுள்ள 1950-வது பஞ்சாயத்து சட்டத்தில் இதற்கு வசதி இல்லை. அந்த வசதி இல்லாத காரணத்தால் அங்கு பஞ்சாயத்து தேர்தல் நடைபெறாமல் நிறுத்தி வைக்கப்பட்டது. முதலாளிகளுடைய கோரிக்கையை நிறைவேற்றி வைப்பதற்கு 1950-வது வருஷத்திய சட்டத்தில் இடம் இல்லாத காரணத்தால் அந்த இடத்தில் பதினைந்தாயிரம் மக்கள் வாழ்கிற ஒரு பகுதி பஞ்சாயத்து பகுதி இல்லை என்று தடை செய்யப்பட்டிருந்தது. அதை உத்தேசித்துத்தான், அந்த தொழிலாளர் காலனியை பிரித்துவைக்கவேண்டும் என்பதற்காகத்தான், இப்படிப்பட்ட திருத்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது. இந்த மசோதா ஒருவாறு நிறைவேறினால் மதுக்கரை பஞ்சாயத்துக்கு தேர்தல் நடைபெறலாம். ஆனால் தொழிற்சாலை பகுதிகளில் தேர்தல் நடைபெறாது. இவ்வாறு ஒரு முதலாளியை திருப்தி பண்ணுவதற்காக, அவர்களுடைய கோரிக்கையை நிறைவேற்றுவதற்காக, ராஜ்யம் பூராவிலும் உள்ள பகுதிகளுக்கு இந்த திருத்த சட்டத்தைக் கொண்டுவருகிறார்கள். இது சரியானது அல்ல. நான் அடிக்கடி இந்த சட்டசபையில் ஸோஷலிசம் என்று சொல்லிக் கொண்டு வருவதைப்பற்றி கனம் அமைச்சர் அவர்களுக்குக் கோபம் வருகிறது. ஆனால் அப்படி கோபப்படுவதில் பிரயோசனம் இல்லை. இங்கே பேசப்படுவதில் மக்கள் திருப்தி அடைந்துவிடமாட்டார்கள். இங்கே செய்யப்படும் தீர்மானங்களில்தான் மக்கள் திருப்தி அடைவார்கள். வெறும் பேச்சினால் மட்டும் மக்கள் திருப்தி அடைந்து விடமாட்டார்கள் என்பதை மட்டும் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

[Sri P. S. Chinnadurai] [9th November 1957

இந்தத் திருத்த மசோதாவைப்பற்றி மக்கள் என்ன நினைப்பார்கள் ? தொழிலாளர்கள் காலனி என்பதை ஒதுக்கிவைத்து, பஞ்சாயத்துச் சட்டத்திலேயுள்ள சலுகை கிடைக்காத நிலைமை உண்டாக்கப்படுகிறது. இந்தத் திருத்தத்தை நிறைவேற்றி அமுல் நடத்தினால் அந்தப் பகுதி மக்கள் மாத்திரம் அன்றி தொழிலாளர்கள் காலனிகளில் வசிக்கும் மக்களும் என்ன நினைப்பார்கள் அரசாங்கத்தைப்பற்றி ? சோஷலிச பாதையில் செல்கிற அரசாங்கம் என்றா ? முதலாளிகளுக்கு ஆதரவு கொடுத்து அவர்கள் பாதையில் சென்று கொண்டிருக்கிற அரசாங்கம் என்றா ? அரசாங்கமே இதைத் தீர்மானித்துக்கொள்ளட்டும் என்று இந்த நேரத்தில் குறிப்பிடுகிறேன்.

அரசியல் சட்டத்தின் 40-வது பிரிவுக்கு விரோதமானது இந்தத் திருத்தம். விலேஜ் கமிட்டிகள் ஏற்படுத்துவது என்பதை நான் குறிப்பிடுகிறேன். இதை மிகவும் நுணுக்கமாக ஆராய்ந்து பார்க்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன். விலேஜ் கமிட்டி அமைப்பது பஞ்சாயத்து ஆகாது. பஞ்சாயத்து அமைக்கப்பட வேண்டுமென்று இருக்கிறதே தவிர, தனியாக ஏரியா கமிட்டி என்று அரசியல் சட்டத்திலே இல்லை. அதற்கு முரணான திருத்தம் அவசியம்தானா என்று நான் கேட்கிறேன்.

பஞ்சாயத்துத் தலைவர் தேர்தல் இப்பொழுது இருக்கிற முறை, மக்களே தலைவரைத் தேர்ந்தெடுப்பது. இனி வர இருக்கிற முறை அங்கத்தினர்கள் பார்த்து தலைவரைத் தேர்ந்தெடுப்பது. இதிலே எது நல்லது ? மக்களே பார்த்து தலைவரைத் தேர்தெடுக்கிற முறைதான் சரியானது. அதுதான் பூரண ஜனநாயகத்திற்கு வழி செய்வதாகும் என்று நான் கருதுகிறேன். அதுவே ஜனநாயகம் அல்ல. அங்கத்தினர்களே தேர்ந்தெடுப்பதும் ஜனநாயகம்தான் என்று கனம் அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார். நான் குறிப்பிட விரும்புவது எல்லாம் அவர்கள் குறிப்பிடுகிற ஜனநாயகத்திற்கும் நான் குறிப்பிடுகிற ஜனநாயகத்திற்கும் வித்தியாசம் இருக்கிறது. அவர்கள் குறிப்பிடுகிற ஜனநாயக அம்சத்தைக் காட்டிலும் நான் குறிப்பிடுகிற ஜனநாயக அம்சத்தில் ஒரு விரிவு இருக்கிறது. அதிக ஜனநாயக பூர்வமானது என்று மாத்திரம் நான் சொல்கிறேன். எது வேண்டும் நமக்கு ? குறுகிய ஜனநாயகமா ? விரிவான ஜனநாயகமா? விரிந்த ஜனநாயக ஏற்பாட்டிலேயிருந்து குறுகிய ஜனநாயக முறைக்குச் செல்லவேண்டுமென்ற எண்ணம் நமக்கு ஏற்படுவது ஏன் ? அது நமது விரிந்த மனோபாவத்தைக் காட்டுமா ? ஆகவே, தலைவர் தேர்தலைப் பொறுத்தவரை, அங்கத்தினர்கள் தலைவரைத் தேர்ந்தெடுக்கும் முறை தவறானது. மக்களே தேர்ந்தெடுக்கும் முறைதான் சரியானது என்று நான் குறிப்பிட விரும்புகிறேன்.

மக்களே பார்த்து தலைவரைத் தேர்ந்தெடுப்பதால் அங்கத்தினர்களுக்கு மதிப்பு இருக்காது என்ற ஐயம் இங்கே சொல்லப்படுகிறது. அந்த ஐயத்திற்கு அவசியம் இல்லை. அங்கத்தினர்கள் தான் அங்கே எதையும் முடிவு செய்கிறார்கள். அவர்கள் விரும்புகிற மாதிரிதான் பஞ்சாயத்துச் செயல்கள் நடைபெறுகின்றன. ஆகவே, அங்கத்தினர்களுக்கு மதிப்பு அவர்கள் செயல் பூர்வமாகவே அங்கே கொடுக்கப்படுகிறது. ஏன் தலைவரை மக்களே தேர்ந்தெடுக்கவேண்டுமென்று சொல்கிறோம் என்றால், மக்களே பார்த்து அந்தக் கிராமத்தின் சிறந்த ஒரு மனிதனைத் தலைவராக தேர்ந்தெடுப்பதற்கு இருக்கக்கூடிய நேரடியான அதிகாரம் அவர்களுக்கு இருக்கவேண்டுமென்ற ஒரே ஒரு காரணத்தால்தான். ஆகவே, இன்னும் அதிகமாக விளக்க விரும்பவில்லை. கனம் அமைச்சர் அவர்களுக்கு இது தெரியாத ஒன்று அல்ல. தெரிந்த ஒன்றுதான். தெரிந்த ஒரு விஷயமாக இருந்தும், ஏதனாலோ அவர்கள் வேறு ஒருவிதமான குறுகலான பாதையைக் கடைப்பிடிக்க முற்படுகிறார்கள். முன்னுக்குப் போவதற்குப் பதிலாக பின்னுக்குப் போக யத்தனிக்கிறார் என்று நான் சொல்வேன்.

அடுத்தபடியாக பஞ்சாயத்து ஆயுள் காலத்தை மூன்று ஆண்டுகளிலிருந்து ஐந்து ஆண்டுகளாக்கும் விஷயம். நான் ஏற்கெனவே இந்தச் சபையிலே குறிப்பிட்டிருக்கிறேன். மக்களுடைய சராசரி ஆயுள் காலம் குறைவாக இருக்கிற நம்முடைய நாட்டைப் போன்ற நாட்டிலே, அடிக்கடி மக்கள் தங்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதற்குரிய ஒரு சந்தர்ப்பம்



9th November 1957] [Sri P. S. Chinnadurai]

அதிகமாக இருக்கவேண்டும். மக்கள் சராசரி ஆயுள் காலம் அதிகமாக இருக்கிற நாடுகளிலே கூட பிரதிநிதிகளுக்குரிய தேர்தல்கள் நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறுகிறது. மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை பஞ்சாயத்துத் தேர்தல் நடைபெறுவது அடிக்கடி தேர்தல் நடைபெறுவதாக இருக்குமென்று சுட்டிக்காட்டப்படுகிறது. அது சரியானதல்ல. நேற்றையதினம் இங்கு நடைபெற்ற விவாதத்தின்போது கனம் சர்க்கார் கட்சித் தலைவர் அவர்கள்கூட ஒப்புக்கொண்டார்கள், இந்தியாவிலே மக்களுடைய சராசரி ஆயுள்காலம் குறைவானது என்று; இப்படிப்பட்ட நாட்டிலே பள்ளிக்குச் செல்கிற பிள்ளைகளுடைய ஆரம்ப வயது ஐந்து என்று நிர்ணயிப்பது அவசியம் என்று. இப்படி வைத்துப் பார்ப்போமானால், அடிக்கடி தங்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதற்குரிய அதிகாரம் மக்களுக்கு ஏற்கெனவே இருந்துவருகிறது. ஏற்கெனவே இருந்து வருகிற ஒரு அதிகாரத்தை நாம் எடுத்துக்கொள்வதா அல்லது அந்த அதிகாரத்தைக் கொஞ்சம் குறைத்து வைப்பது சரியானதா என்று தீர்மானிக்கவேண்டும். இது சரியானதல்ல என்பது கனம் அமைச்சருக்குத் தெரிந்ததுதான். மனதிலே இருக்கிறது. மனதார ஒப்புக்கொள்வார்கள். ஆனால், ஏதனாலோ தெரியவில்லை. ஐந்தாண்டுகளுக்கு நீடிக்கவேண்டுமென்று விரும்புகிறார். ஆகையால், இந்த உத்தேச திருத்தமானது உண்மையிலேயே ஜனநாயகத்திற்கு விரோதமானது என்றுதான் நான் குறிப்பிட விரும்புகிறேன். ஐந்து ஆண்டுகளுக்கு இதனை அதிகரிக்க வேண்டிய நிலை எந்த நாட்டிலும் ஒருபொழுதும் ஏற்படவில்லை. இவ்வாறு ஏற்படுவதானது மக்களுடைய உரிமையைப் பெரிதும் பாதிக்கும் என்று வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன். ஆகவே, உத்தேசிக்கப்படுகிற இந்தத் திருத்தங்களைக் கைவிடுமாறு சர்க்காரைக் கேட்டுக்கொண்டு என்னுடைய வார்த்தையை முடித்துக்கொள்கிறேன்.

*SRI K. PONNIAN : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மசோதாவை ஆதரித்து ஒருசில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். தலைவர், அங்கத்தினர்களால்தான் தேர்ந்தெடுக்கப்படவேண்டும், பொதுஜனங்களால் தேர்ந்தெடுக்கப்படக்கூடாதென்ற திருத்தத்தை நான் ஆதரிக்கிறேன். காரணம் என்னவென்றால், தலைவர் பொதுஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவுடன் அவர்கள் சர்வாதிகாரியாய் இருந்து அந்தப் பஞ்சாயத்தின் நன்மைகளையே கவனிப்பது இல்லை. அங்கத்தினர்கள் என்ன சொன்னாலும், அவர்கள் தனிப்பட்ட போக்கில் போகிறார்களே தவிர, அங்கத்தினர்களுடைய இஷ்டத்திற்கு ஒருபொழுதும் கட்டுப்பட்டுப் போவதாகத் தெரியவில்லை. வால்பாறை பஞ்சாயத்து போர்டிலே எந்த அங்கத்தினர்கள் என்ன சொன்னாலும், தங்களுடைய குறைகளை எந்த வழியிலே எடுத்துச் சொன்னாலும் பஞ்சாயத்துத் தலைவர் அவர்கள் அந்த விஷயத்தைக் கவனிப்பதே இல்லை. அவர் தொழிற்சங்கத் தலைவராக இருக்கிறார். தொழிற்சங்கத்தை வளர்ப்பதற்குப் பஞ்சாயத்து போர்டை உபயோகப்படுத்திக்கொள்கிறார். 10-25 a.m.

அடுத்தபடியாக, பஞ்சாயத்து போர்டு நிதியிலிருந்து ஏழை மாணவர்களுக்கு உணவு போடப்படுகிறது. இது விஷயத்தில் தனக்கு வேண்டிய நபரின் குழந்தைகளுக்கு உணவைப் போட்டு அதன் மூலமாக தன்னுடைய செல்வாக்கைப் பெருக்கிக்கொள்கிறார். இதை அங்கத்தினர்கள் தெரிவித்தால் தலைவர் கவனிப்பதே கிடையாது. இது சர்வாதிகாரப் போக்காக இருக்கிறதே தவிர ஜனநாயகப் போக்குக்கு ஏற்றதாகத் இல்லை.

வால்பாறை பஞ்சாயத்து போர்டுக்கு என்று இடமே கிடையாது. பத்து, பதினைந்து ஏக்கரா கொண்ட இடம்தான் வால்பாறை பஞ்சாயத்து போர்டுக்கு உள்ளது. தொழில் பிராந்தியம், 50 எஸ்டேட்டுகள் இருக்கின்றன. அந்தப் பகுதியில் பஞ்சாயத்துக்குச் சொந்தமாக நிலங்களை ஆர்ஜிதம் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பஞ்சாயத்து போர்டு அங்கத்தினர்கள் என்ன தீர்மானத்தைக் கொண்டு வந்தாலும் பஞ்சாயத்து போர்டு தலைவர் அதை நிராகரித்துவிட்டு தன் இஷ்டப்படி காரியங்களை நடத்திக்கொண்டு போகிறார்.

பஞ்சாயத்து போர்டு தேர்தலை மூன்று வருஷத்திலிருந்து ஐந்து வருஷங்களுக்குத் தள்ளிப் போட்டிருப்பது ஒருவிதமான நன்மை என்றே நான் கருதுகிறேன். தேர்தல் நடந்து ஒருசில வருஷங்கள் வரையில் பஞ்சாயத்து போர்டில் தாராளமாக நடவடிக்கைகள் எடுத்துச் செய்யவே முடிவதில்லை. மூன்று வருஷங்களில் உருப்படியான காரியங்கள் செய்ய முடிவது இல்லை. மூன்று வருஷத்திற்குமேல் இரண்டொரு வருஷம் அதிகமாகயிருந்தால், ஸ்தல ஸ்தாபனங்கள் நன்றாக வேலையைக் கற்றுக் கொண்டு, பொதுமக்களுக்குத் சேவை செய்வார்கள். அதன் பிரகாரம் ஐந்து வருஷமாக போட்டிருப்பதை நான் வரவேற்கிறேன்.

பஞ்சாயத்து போர்டில் பள்ளிக்கூடங்கள் வைத்து நடத்தும்போது, பஞ்சாயத்து போர்டுகள் நடத்தும் பள்ளிகளுக்கென்று ஒரு மேற்பார்வை கல்வி அதிகாரி இருக்கவேண்டும். என்னுடைய பிராந்தியத்தில் 40, 50 பள்ளிக்கூடங்கள் பஞ்சாயத்தால் நடத்தப்பட்டிருந்தும், அவைகளை பஞ்சாயத்து அதிகாரிதான் கவனிக்கிறாரே தவிர, சர்க்காரால் நியமிக்கப்படும் கல்வி அதிகாரிகள் யாரும் கவனிப்பதில்லை. ஆகவே, பஞ்சாயத்து போர்டிலேயே கண்காணிக்கும் உத்தியோகஸ்தரைப் போடவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

10-30 a.m. * **SRI R. SWAMINATHA MERKONDAR**: உதவித்தலைவர் அவர்களே, பஞ்சாயத்து திருத்த மசோதா மீது எனது அனுபவ விஷயங்கள் சிலவற்றைச் சொல்ல ஆசைப்படுகிறேன். **1950**-ம் ஆண்டுக்கு முன் இருந்த நிலைமை என்ன, பிறகு ஏற்பட்ட நிலைமை என்ன என்பதை என்னுடைய தாலூகா தொகுதியைப் பொறுத்தவரை சொல்ல விரும்புகிறேன். வல்லம் பஞ்சாயத்து போர்டில் ஏற்கெனவே மெம்பர்களைக்கொண்டு தேர்ந்தெடுத்த காலத்தில் மிகச் சிறந்த முறையில் ஆட்சி நடந்தது. இப்போது மக்களைக்கொண்டு தேர்ந்தெடுக்கும் காலத்தில், சர்வாதிகார ரீதியில் தலைவர் இறங்கியதன் பிறகு அவருக்கும் மெம்பர்களுக்கும், அவருக்கும் **Executive Officer**-க்கும் ஒற்றுமை கிடையாது. இந்த நிர்வாகம் தலைவராலேயே செய்யப்பட்டதால் இந்தமாதிரியான சர்வாதிகார ஆட்சி ஏற்படுகிறது என்பதைக் கண்கூடாகக் காண்கிறேன்.

அடுத்தபடியாக, இந்த 5 ஆண்டு காலத்தை 3 ஆண்டுகளாகக் குறைக்கவேண்டுமென்று அங்கத்தினர்கள் கூறுகிறார்கள். சட்டசபையை 5 ஆண்டுக்கு வைத்துக்கொண்டு ஸ்தல ஸ்தாபனங்களை மூன்று ஆண்டாக வைத்துக்கொள்வதன் அவசியம் என்ன ? ஐந்தாண்டுகளுக்கு இருந்தால் தான் ஒரு திட்டத்தைப் பூர்த்தியாகச் செய்யமுடியும். மூன்றாண்டுக்கு மட்டுமிருந்தால் ஒரு நன்மையும் பயக்காது என்பது என் தாழ்மையான அபிப்பிராயம். தற்போது கிராமங்களில் உள்ள குளங்களை **Revenue department**-ல் எடுத்துக்கொண்டு அதிலிருந்து வருமானத்தை அவர்களே எடுத்துக்கொள்கிறார்கள். அதை மாற்றி பஞ்சாயத்து தான் குளங்களின் வருமானத்தை அடையவேண்டுமென்று செய்யக் கோருகிறேன்.

சில பிற்போக்கான, நிதி வசதிக் குறைவான பஞ்சாயத்துக் கிராமங்கள் பிற்போக்காகத்தான் இருக்க முடியும் என்பது என் தாழ்மையான கருத்து. நிதி நிலைமை காரணமாக ஜில்லா போர்டு நிர்வாகம் இருந்த காலத்தில் கூட பிற்பட்ட பகுதிகள் பிற்பட்டவையாகவே இருந்தன. அதற்குப் பொருளாதாரம் தான் காரணம். ஆகையால் பஞ்சாயத்துக் கிராமங்களுக்கு தலைமை அதிகாரம் உள்ள யூனியனிடமிருந்து நிதி வசதி அடைய ஒரு சந்தர்ப்பம் கிடைத்தால்தான் பிற்பட்ட பகுதிகள் முற்போக்கு அடைய முடியும் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

ஒரு கனம் அங்கத்தினர் சொன்னார், பஞ்சாயத்து மெம்பர்களை விலைக்கு வாங்கி விடுகிறார்கள் என்று. அவ்வளவு கேவலமாக கிராமத்திலுள்ள பஞ்சாயத்து போர்டு மெம்பர்கள் இருக்கமாட்டார்கள் என்றும் நான் சொல்ல விரும்புகிறேன். இக்காலத்தில் பணத்தைக் கொடுத்து ஓட்டை வாங்குவது என்ற மனப்பான்மைகொண்டவர்களே அவர்களிடம் ஏமாற்றம் அடைவார்கள் என்பது என் கருத்து ; தேர்தலிலே



கண்ட உண்மை, ஜனநாயக உணர்ச்சியுள்ள காலத்திலே, ஜனங்களின் ஓட்டை வாங்கலாம் என்று நினைத்தால் அது நம்முடைய முறையில்லாத நடத்தையைத்தான் குறிக்கும் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அன்னியர் ஆட்சி வரும் காலத்திற்கு முன்பே பஞ்சாயத்து நிர்வாகம் இருந்தது நம் நாட்டில். நிர்வாகம் நேர்மையாக நடந்தது. சில முக்கியமான சந்தர்ப்பங்களில், கொலை கேசுகள் ஏற்பட்டாலும், பஞ்சாயத்தார்கள் நல்ல முறையிலே முடிவு செய்தார்கள் என்ற பெருமை நமக்கு இருந்தது. அப்படிப்பட்ட பெருமை தரக்கூடிய நிர்வாகம் அது. அப்படிப்பட்ட ஸ்தாபனங்களை ஐந்து வருஷங்களாவது வைத்திருந்தால் தான் நன்கு ஆலோசித்து திட்டங்களை வகுக்கமுடியும் என்று சொல்லிக் கொண்டு எனது உரையை முடித்துக்கொள்கிறேன்.

* **SRI M. P. SUBRAMANIAM** : தலைவர் அவர்களே, இப்பொழுது நம் முன் வைக்கப்பட்டிருக்கும் பஞ்சாயத்து திருத்த மசோதாவை கொஞ்சகாலத்திற்கு ஒத்தி வைக்கவேண்டுமென்று தெரிவித்தார்கள். அமைச்சர் அவர்கள் வருகிற பஞ்சாயத்து தேர்தல் காலத்திற்குள்ளாகவே இது சட்டமாக்கப்படவேண்டும் என்பதற்கான காரணத்தைக் காட்டினார்கள். நாங்கள் ஒத்திவைக்கவேண்டுமென்றதற்குக் காரணம், சர்க்கார் விடுத்துள்ள ஸ்தல ஸ்தாபனம்பற்றிய வெள்ளை அறிக்கையின் மீது நடந்த விவாதத்தின் போது அங்கத்தினர்கள் பல கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். அவைகளையெல்லாம் ஒன்றாக வைத்து, ஸ்தல ஸ்தாபனங்களுக்கு ஒரு உருவம் கொடுத்து, எப்படி அமைக்கவேண்டும் என்பதைத் தீர்மானித்துதான் பஞ்சாயத்து அதிகாரம், முதலியவைகளை அமைக்கவேண்டும். ஏற்கெனவே உள்ள முறையை பெரியதொரு மாற்றம் செய்ய சர்க்கார் வெள்ளை அறிக்கை சமர்ப்பித்து இருக்கிறார்கள். அதில் கண்டபடி முதலில் பஞ்சாயத்து, அதற்கு மேல் ஒரு அமைப்பு, அதற்கு மேல் ஒரு அமைப்பு என்று மூன்று நான்கு அமைப்புகள் ஒன்றுக்கொன்று தொடர்பு கொண்டு அதிகாரங்கள் பங்கிட்டு செவ்வனே அடைய வேண்டுமென்கிற நேரத்திலே, அவைகளை மனக்கண் முன் வைத்து அமைக்கவேண்டுமே தவிர, பஞ்சாயத்தை மாத்திரம் தனியாக கொண்டு வருவது உகந்தது அல்ல. சற்று தள்ளிப் போடுங்கள் என்று சொல்லுகிறோம். பஞ்சாயத்துத் தேர்தல்களை இப்பொழுது அல்ல, இரண்டு ஆண்டு காலமாக ஒத்திப் போட்டு இருக்கிறார்கள் என்பது அமைச்சருக்குத் தெரியும். முன்பே மசோதாவைக் கொண்டுவந்திருக்க முடியும். வெள்ளை அறிக்கையை சில மாதங்களுக்கு முன்பே கொண்டுவந்திருந்தால், அங்கத்தினர்கள் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்து இந்த ஸ்தல ஸ்தாபனங்களுக்கு ஒரு முழு உருவம் கொடுத்து அமைத்திருக்கலாம். அப்படிச் செய்யப்படாதது அரசாங்கத்தின் தவறு என்று குறைப்படுகிறேன்.

அடுத்தபடியாக இரண்டாந்தர பஞ்சாயத்து வோட்டு முறையை பற்றியது. அது இரகசியமாக இருக்கவேண்டுமென்று சர்க்காரே உணர்ந்திருப்பதைக் கண்டு மகிழ்ச்சியடைகிறேன். ஆனால் தனிப்பட்ட பஞ்சாயத்துக்களுக்கு தேர்தல் முறையை ரூல்கள் மூலமாக செய்ய முடியும் என்று அமைச்சர் கூறியதை பொதுவாக ரூல்கள் மூலமாக இருக்கலாமே ஒழிய குறிப்பிட்ட பஞ்சாயத்துக்களுக்கு அவசியம் என்று கருதினால் அங்குமட்டும் இரகசிய முறை என்று இருக்கக்கூடாது. எல்லாப் பஞ்சாயத்துக்கும் இரகசிய முறை பொதுவானது என்று ரூல் போடவேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

மூன்றாவதாக தலைவர் தேர்தலைப் பற்றியது. **1950**-க்குப் பிறகு மக்களால் தேர்ந்தெடுக்கப்போகிறோம் என்று விதி மாற்றப்பட்டு இருக்கிறது. **1950**-க்கு முன்பு இருந்த நிலையை நாம் அடையவேண்டும் என்பது தான் மசோதாவின் குறிக்கோள். அதிலே இருக்கும் ஜனநாயகத் தன்மை அதிகமா குறைவா என்பதல்ல இப்பொழுது இருக்கும் பிரச்னை. அதைப்பற்றி விவாதம் நடந்து விட்டது. ஆனால் நடை முறையிலே எது மக்களுக்கு, நாட்டுக்கு நல்லது என்பதுதான் நம் மனக்கண் முன்

வைத்துக்கொள்ள வேண்டியது. வெள்ளையறிக்கையிலே தேர்தல் முறையில் மாற்றம் வேண்டுமென்று கூறும்போது, கிராமப்பகுதிகளிலே மக்களே தேர்ந்தெடுப்பதாய் இருந்தால் கட்சிப் பிளவுகள் அதிகமாவதற்கும், பிளவுகள் இல்லாத இடங்களில் புதிதாக பிளவுகள் ஏற்படவும் ஏதுவாக இருக்கிறது என்ற காரணத்தினால், அதை மாற்ற வேண்டுமென்று கூறியிருக்கிறார்கள். இப்பொழுது மக்களாலேயே தேர்ந்தெடுக்கும் முறை கட்சிப் பிளவுகளை உண்டு பண்ண பயன்படுத்தப்படுகிறது என்று அமைச்சர் அவர்கள் கூறவில்லை. மெம்பர்களால் தலைவர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்றால், தலைவராக வர விரும்பும் ஒவ்வொருவரும் எவ்வளவோ முயற்சி செய்யவேண்டிவரும். தலைவராக வர விரும்புவோர் பத்து பேர் பத்து வார்டுகளில் நின்றால், போட்டி மிகப் பலமாக இருக்கும். பிளவு சக்திகள் அதிகமாகும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். பிளவு சக்திகளை உண்டுபண்ணுவது புதிதாகக் கொண்டுவரப்படும் இந்த முறைதான்.

அடுத்தபடியாக, மறைமுகத் தேர்தலில் உருப்பினர்களை தேர்ந்தெடுப்பது என்ற முறையில் என்ன விளைவுகள் ஏற்படும் என்பதை சற்று மனக் கண் முன் வைத்துக்கொள்ளவேண்டும். நகராண்மைக் கழக தலைவர் தேர்தல்களைப் பாருங்கள். ஒவ்வொரு தேர்தலில் தலைவராக வரக்கூடியவர்கள் ரூ. 50, 60, 70 ஆயிரம் செலவு செய்து வரவேண்டியிருக்கிறது. இன்னும் சொல்லப்போனால், கட்சி நிலை 15, 17 ஆக இருந்தால் தலைவர் தேர்தல் நேரத்தில் இந்த மிகுதியான அங்கத்தினர்கள் எந்தப் பக்கம் சென்று விடுவார்களோ என்று அவர்களுக்கு படக் படக் என்று அடித்துக்கொள்ளும். அதற்காக என்ன செய்கிறார்கள்? ரூ. 100, 200, தீபாவளி, பொங்கல் முதலியவைகளுக்குக் கேட்டால் கொடுத்துத்தான் தீரவேண்டும். பிரயோசனமில்லாத நிலத்தை வைத்துக் கொண்டு கூட ரூ. 5,000, ரூ. 6,000 கடன் கொடுக்கிறார்கள். தலைவர் பதவியைக் கைப்பற்ற போட்டி போடவேண்டுமென்றால் இந்த நிலைமை தான் ஏற்படுகிறது. ஜனநாயக முறையில் நடக்கும் முனிசிபாலிடி தேர்தல் நிலை இதுதான். இந்த மறைமுகத் தேர்தல் இருந்தால் ஏழை மக்கள், பணம் செலவு செய்ய முடியாதவர்கள் தலைவர்களாக வர முடியாது என்பதை தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட காரணத்தினால் உறுப்பினர்களுக்குப் பொறுப்பு இல்லை என்பதல்ல. தலைவர் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டாலும், தலைவரிடம் நம்பிக்கை இல்லை என்றால், அவரை நீக்க இந்த சட்டத்திலேயே ஒரு திருத்தம் செய்யலாம். உறுப்பினருள் 3-ல் 2-பங்கோ, 4-ல் 3-பங்கோ தலைவரை மாற்றியமைக்க வேண்டுமென்றால் தலைவர் மீது நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டு வர இப்போது இருக்கும் சட்டத்தை திருத்தியமைக்கலாம். 1950-வது சட்டத்தைத் அமுலாக்க வேண்டும் என்பது முக்கியமான பிரச்னை என்பதை தெரிவித்து கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இந்த பஞ்சாயத்துக்களுக்கு ஆயுட்காலம் ஐந்து ஆண்டு என்று நிர்ணயித்திருக்கிறார்கள். சட்டசபைக்கு ஐந்தாண்டு, பாராளுமன்றத்திற்கு ஐந்து ஆண்டு, எதற்கெடுத்தாலும் ஐந்தாண்டு, ஐந்தாண்டு திட்டத்தை நிறை வேற்றுகிறோம், எதற்கும் மனதிற்கு முன்னால் வருவது ஐந்தாண்டு என்ற காரணத்திற்காக ஐந்தாண்டு காலவரை வைப்பது அவசியமில்லை என்பதை அமைச்சர் அவர்களுக்கு வலியுறுத்த விரும்புகிறேன். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு ஸ்தாபனத்திற்கு ஒரு காலவரை குறிப்பிட வேண்டுமென்றால், அந்த ஸ்தாபனம் செய்யக்கூடிய வேலையைப் பொறுத்து அதை நிர்ணயிக்க வேண்டும். சட்ட சபைகளில் விவாதங்கள் நடத்தி திட்டங்களை நிறைவேற்றுவதற்கு கொஞ்சம் காலம் பிடிக்கும், அவர்கள் எல்லாவற்றையும் விவாதித்து நல்ல சட்ட திட்டங்களை நிறைவேற்றுவதற்கு வாய்ப்பு கொடுக்க வேண்டும், அப்பொழுதுதான் அவர்கள் ஒரு காரியத்தை எடுத்து முடிக்கலாம் என்பதற்காக ஐந்தாண்டு காலவரை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. பஞ்சாயத்துக்களுக்கு ஐந்து ஆண்டுகள்



நீடிக்கக்கூடிய எந்த வேலையும் நிச்சயமாக இல்லை. அவர்களுக்கு தங்கள் காரியங்களைச் செய்வதற்கு அவ்வளவு காலம் வேண்டியதில்லை என்பதை கிராமப்புறத்திலிருந்து வந்த நாம் நிச்சயமாக அறிவோம். ஜனநாயகத்தில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு மக்களை மறந்து விடக்கூடிய மனப்பான்மை நம்மிடையே பெரும்பாலோரிடத்தில் இருக்கிறது. அவ்வளவுக்கு நாம் இன்னும் பக்குவப்படவில்லை. 'ரைட் ஆப் ரீகாலும்' நமது அரசியல் சட்டத்திலே கொடுக்கப்படவில்லை. ஆகையால் கூடுமானவரையில் சீக்கிரமாகவே மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் மறுபடியும் தேர்தலில் நின்று மக்களின் நம்பிக்கையை பெறுவதற்கு ஒரு வாய்ப்பு இருக்க வேண்டும். ஆதலால் இந்த பஞ்சாயத்துக்களுக்கு ஐந்து ஆண்டு காலவரையறை என்பதை மாற்றி மூன்று ஆண்டுகளாக திருத்த வேண்டும். அப்படி காலவரை மூன்று ஆண்டு இருப்பதில் ஒன்றும் தவறு வந்து விடாது. தேர்தலை அடிக்கடி நடத்தினால் செலவாகும் என்று அரசியலார் சொல்லலாம். ஜனநாயக அரசியல் அமைப்பில் நாம் செயல்பட வேண்டுமானால், செலவைப்பற்றி கவலைப்படக்கூடாது. அப்படிச் செலவாகிறதென்றால் ஒரு தனி மனிதரைப் போட்டு ஏதேச்சதிகாரமாக நிர்வாகத்தை நடத்திவிடலாமே? அப்பொழுது சட்டசபை உறுப்பினர்களும் தேவையில்லை. பாராளுமன்ற உறுப்பினர்களும் தேவையில்லை. இந்தக் கருத்தை நீட்டிக்கொண்டே போனால் சட்டசபை காலவரையை ஏன் பத்து ஆண்டுகளாக அதிகரிக்கக்கூடாது? இந்தக் கருத்தை வைத்துக் கொண்டு ஐம்பது ஆண்டுகளுக்குக் கூட காலவரையை நீடித்துக்கொண்டே போகலாம். அந்த முறை தவறு. இந்த பஞ்சாயத்துக்களுக்கு ஐந்தாண்டு காலம் அவசியமில்லை என்பதை அமைச்சர் அவர்கள் உணர்ந்து அதை மூன்று ஆண்டு காலமாக திருத்துவார்கள் என்று நம்புகிறேன்.

கடைசியாக, தொழிலாளர்கள் பகுதிக்கு பஞ்சாயத்து சட்டத்திலிருந்து விலக்களிக்க வேண்டுமென்று சொல்லுகிறார்கள். இதற்கு எடுத்துக்காட்டாக கடந்த சட்ட சபையிலே மூன்று இடங்களை குறிப்பிட்டார்கள். அதாவது: குற்றாலம், கீழ் பவானி, மேட்டூர் டவுன்சிப் ஆகிய மூன்று இடங்கள். இவைகள் பஞ்சாயத்து சட்டத்துக்குள்ளாக்கப்பட வேண்டிய அவசியமில்லை என்று குறிப்பிட்டார்கள். இந்த முறை தவறு. நிரந்தரமாக அரசாங்கம் அதிகாரத்தை எடுத்துக்கொள்ளக்கூடாது. அவசியம் ஏற்பட்டால் பின்பு சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்றி அந்த இடங்களுக்கு ஒரு கமிட்டி ஏற்படுத்தி, அந்தக் கமிட்டிக்கு பஞ்சாயத்து அதிகாரங்களைக் கொடுக்கலாம் என்று கொண்டுவரலாம். அப்படி தொழிலாளர்கள் பகுதிகளில் பஞ்சாயத்துகள் அமைக்காததற்கு காரணம், அந்தப் பிராந்தியங்களில் திறமையாகவும் விரைவிலேயும் முன்னேற்றங்கள் செய்ய பஞ்சாயத்தால் இயலாதெனக் கூறலாம். பஞ்சாயத்து மெம்பர்களும் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுபவர்கள்தான். சட்டசபை மெம்பர்களும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்தான். பஞ்சாயத்து மெம்பர்களிடம் நம்பிக்கை வைக்கமுடியாதபோது, அதேபோல் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டசபை மெம்பர்களிடம் எப்படி நம்பிக்கை வைக்க முடியும்? ஆகவே தொழிலாளர் பகுதிகளிலும் பஞ்சாயத்துகளை ஏற்படுத்தவேண்டும். வேண்டுமானால் அவசியமிருந்தால் குறிப்பிட்ட பஞ்சாயத்துகளுக்கு முனிசிபல் அதிகாரங்களை வழங்குவதற்கு, அதிக அதிகாரங்களை கொடுப்பதற்கு சட்டம் கொண்டுவரலாம். இன்னும் பார்க்கப்போனால் தொழிலாளர்கள் பகுதியில் இருக்கும் பஞ்சாயத்துகள்தான் மற்ற பஞ்சாயத்துகளை விட நன்றாக இயங்கும். அங்குள்ள தொழிலாளர்கள் கட்டுப்பாடுடன் நடந்து கொள்ளுவார்கள். அவர்களாலே நேரடியாக தேர்ந்தெடுக்கப்பட்ட மெம்பர்களைக் கொண்ட பஞ்சாயத்து நிச்சயமாக நன்றாக நடக்கும். அவர்கள் அந்தப் பிராந்தியங்களுக்குத் தேவையான எந்தவிதமான காரியத்தையும் செய்யக்கூடும். ஆகவே, நிச்சயமாக, **industrial, labour or institutional colony** என்று சொல்லி அங்கே பஞ்சாயத்துகளை ஏற்படுத்தாமல் இருக்கக் கூடாது. அங்கு பஞ்சாயத்துகள் அமைக்கப்படவேண்டும். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்ட சபை மெம்பர்களிடம் நம்பிக்கை வைக்கும்பொழுது, ஏன் அதே மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பஞ்சாயத்து மெம்பர்களிடம்

நம்பிக்கை வைக்கக்கூடாது ? ஆகையால் நான் சொன்ன திருத்தங்களை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று வற்புறுத்திக் கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

10–40 a.m. * **SRIMATHI KAMALAMBUJAMMAL** : கனம் சபாநாயகர் அவர்களே, இப்பொழுது நடைபெறுகின்ற விவாதத்தில், பஞ்சாயத்து தலைவர் தேர்ந்தெடுக்கப்படும் முறையைப்பற்றியும், பஞ்சாயத்து ஆயுள் காலத்தைப் பற்றியும் அநேக அபிப்பிராய பேதங்கள் இருப்பதாக தெரிகிறது. பஞ்சாயத்து தலைவரை வார்டு வார்டாக தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்கள் மூலமாகத் தான் தேர்ந்தெடுக்க வேண்டுமென்று நான் மிகவும் வற்புறுத்துகிறேன். பஞ்சாயத்து தலைவரை தனியாக தேர்ந்தெடுத்து விட்டால் அவர் தன் இச்சைபடி தனக்கு சர்வாதிகாரம் இருப்பதாக நினைத்து நடந்து கொள்ளுவார். வார்டு வார்டாக தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்கள் மூலமாக தலைவர் தேர்ந்தெடுக்கப்படுவாரேயானால், அவர் மற்ற அங்கத்தினர்களுடைய அபிப்பிராயத்தைக் கேட்டு பஞ்சாயத்தை நல்ல முறையிலே நிர்வாகம் செய்வதற்குரிய பொறுப்பு உள்ளவராக இருப்பார். அவர் அங்கத்தினர்கள் மூலம் தேர்ந்தெடுக்கப்படாவிட்டால், அங்கத்தினர்களை உதாசீனம் செய்து, தானும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர், மற்ற அங்கத்தினர்களும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் என்று நினைத்து தனித்து எதேச்சாதிகாரமாக ஆட்சி செலுத்த முடியும். அதுவும் அல்லாமல், அங்கத்தினர்களை ஒரு பக்கம் ஒதுக்கிவிட்டு, பஞ்சாயத்து தலைவரும் பஞ்சாயத்து ஆபீஸரும் இருவரும்கூட சேர்ந்து, தலைவர் பஞ்சாயத்து ஆபீஸரை வசப்படுத்திக் கொண்டு தங்கள் இஷ்டம்போல் காரியங்களைச் செய்வதற்கு பெரிய சாதகத்தை ஏற்படுத்திக் கொடுக்கும் என்பதில் சந்தேகம் இல்லை. பஞ்சாயத்து தலைவர் தனியாக தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்றால், வார்டு வார்டாக அங்கத்தினர்களை தேர்ந்தெடுக்க வேண்டியதில்லை. தலைவர் தனியாக தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு, அவரே தனக்கு வேண்டிய அங்கத்தினர்களைக் கொண்ட ஒரு ஆலோசனை கமிட்டியை நியமித்துக் கொண்டு நிர்வாகத்தை நடத்திவிடலாம். தலைவருக்கு தனியாக ஒரு தேர்தல், அங்கத்தினர்களுக்கு தனியாக ஒரு தேர்தல் நடத்த வேண்டியதில்லை. கனம் சுப்பிரமணியம் அவர்கள் அங்கத்தினர்கள் நம்பிக்கை யில்லா தீர்மானம் கொண்டு வரலாம் என்று குறிப்பிட்டார்கள். தலைவரை தேர்ந்தெடுக்க உரிமையில்லாத அங்கத்தினர்கள் எப்படி அவர் மீது நம்பிக்கையில்லா தீர்மானத்தைக் கொண்டுவர முடியும் ? மக்களால் தலைவர் தேர்ந்தெடுக்கப்பட்டால் சிறந்த மனிதராக இருப்பார் என்று சொன்னார்கள். அப்படிப்பட்ட ஒரு சிறந்த மனிதர் ஏதாவது ஒரு வார்டிலே குடியிருக்கத்தான் வேண்டும். அங்கே ஒரு தனிப்பட்ட ஆளாக இருக்க முடியாது. சிறந்த மனிதர் ஏதாவது ஒரு வார்டில் நின்று தேர்வு பெற்று வந்தால், அவரைச் கட்டாயமாக சிறந்த மனிதர் என்று மற்ற வார்டிலிருந்து தேர்வு பெற்று வந்த அங்கத்தினர்கள் தலைவராகத் தேர்ந்தெடுப்பார்கள். சிறந்த மனிதர் என்றால் ஊரிலுள்ள எல்லோருக்குமே சிறந்த மனிதராகத்தான் இருப்பார். அவர் அந்த ஊரிலிருந்து வரக்கூடிய அங்கத்தினர்களுக்கும் சிறந்த மனிதராகத்தான் இருப்பார். ஆகவே வார்டு வார்டாக தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்கள் மூலம் தலைவர் தேர்ந்தெடுக்கப்படுவதால் எந்தவிதமான தவறும் ஏற்பட்டு விடாது என்பதை நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

'இண்டஸ்டிரியல்' ஏரியாவை தனியாக ஒதுக்கிவைக்கக்கூடாது, அவைகளையும் பஞ்சாயத்துக்குள் சேர்க்க வேண்டுமென்று சொல்லப்படுகிறது. அவைகளையும் பஞ்சாயத்துக்குள் சேர்த்தால் சிறு பஞ்சாயத்துகளை சமாளிப்பது மிகவும் கஷ்டமாகிவிடும். இண்டஸ்டிரியல் ஏரியா தனியாக இருந்து, அங்கு பஞ்சாயத்து ஏற்படுவது போல, ஒரு கமிட்டி ஏற்படுத்தி பஞ்சாயத்துக்களுக்கு என்னென்ன உரிமைகள் கொடுக்கப்படுமோ, அம்மாதிரி அந்தப் பிராந்தியத்தில் எல்லா வசதிகளையும் செய்து கொடுப்பதற்கு போதுமான அதிகாரம் அந்தக் கமிட்டிக்குக் கொடுக்கப்படும். ஆகவே, இந்த முறையில் யாதொரு தவறும் ஏற்பட்டுவிடாது, இது ஜனநாயகத்திற்கு முரண்பட்டதுமல்ல என்று நான் சொல்லிக் கொள்ளுகிறேன்.





தேர்தலை ஏன் உடனே நடத்த வேண்டும், இந்த விவாதத்திற்குப் பிறகு ஏன் தேர்தலை எடுத்துக் கொள்ளக்கூடாது என்று சில அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள். தேர்தலில் இருக்கக்கூடிய ஒரு முறையை மாற்றி அமைக்கிறோமே தவிர, மற்றபடி எந்த விஷயமும் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை. தேர்தல் இப்பொழுது ஒரு வருஷ காலமாக தள்ளிப்போடப்பட்டிருக்கிறது. சமீபத்தில் ஜில்லா போர்டுகள் காலம் கடந்து விட்டது. அப்படியிருக்கும்பொழுது ஸ்தல ஸ்தாபனங்களை கூட நிர்வாகம் செய்வதற்கு இல்லாமல், அங்கத்தினர்களுடைய பதவி காலம் கடந்து விட்டது. அப்படியிருக்கும்பொழுது ஸ்தல ஸ்தாபனங்களை நிர்வகிப்பதற்கு பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்படவேண்டியது அவசியம். ஆகையால் தேர்தல்கள் உடனடியாக நடத்தப்பட வேண்டும் என்பதுதான் என்னுடைய அபிப்பிராயமும் கூட.

பதவி காலத்தை மூன்று ஆண்டுகளிலிருந்து ஐந்தாண்டுகளாக உயர்த்த திருத்தம் கொண்டு வந்திருப்பது மிகவும் பொருத்தமானது. ஏனென்றால் மூன்று வருஷ காலத்திற்குள்ளே எந்த பஞ்சாயத்தும் தனது நிர்வாகத்தை திறம்பட நடத்த முடியாது. ஐந்து வருஷ காலமாவது இருந்தால்தான் ஏதோ ஒரு காரியத்தை எடுத்துக் கொண்டு அதைச் செய்து முடிக்காமல் ஒரு காரியத்தை ஒரு முடிவான நிலைமைக்குக் கொண்டுவர ஐந்து ஆண்டுகள் பிடிக்கும். மேலும் நாம் ஐந்தாண்டுத் திட்டங்கள் வகுத்து நடத்திக்கொண்டுவருகிறோம் என்பதையும் அங்கத்தினர்களுக்கு ஞாபகப்படுத்துகிறேன். பஞ்சாயத்து தலைவர், வார்டு வார்டாக தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் மூலமாகத்தான் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும், பதவி காலம் ஐந்து வருஷங்களாக உயர்த்தப்பட வேண்டும் என்று வற்புறுத்திக் கொண்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

**SRIMATHI T. N. ANANDANAYAKI** : கனம் சபாநாயகர் அவர்களே, 10–50 a.m.
இந்தப் பஞ்சாயத்து திருத்த மசோதாவை பொறுக்குக் கமிட்டிக்கு அனுப்பி அதிலே ஒரு சில திருத்தங்களையும் கொடுத்து சபையின் முன்னாலே கொண்டுவரப்பட்டுள்ளது. பஞ்சாயத்து மசோதாவிலே முக்கியமான சில திருத்தங்கள் எந்த அடிப்படையிலே காணப்படுகின்றன என்பதை எனக்கு முன்னாலே பேசிய கனம் அங்கத்தினர்கள் எடுத்துக் காட்டினார்கள். தலைவரை நேரடியாக தேர்ந்தெடுப்பதா அல்லது மறைமுகமாக தேர்ந்தெடுப்பதா என்ற பிரச்னை எதிர்க்கட்சிக்கும் ஆளும் கட்சிக்கும் இடையே மிகத் தீவிரமாக விவாதிக்கப்படுகிறது. எதிர்க் கட்சியில் சிலர் அது ஜனநாயகத்திற்கே புறம்பானது, கிராமத்தில் இருக்கும் மக்கள் யாரை விரும்புகிறார்களோ அவர்களை தேர்ந்தெடுக்கக்கூடிய உரிமை அவர்களுக்கு இருக்க வேண்டும், அப்படி அவர் தேர்ந்தெடுக்கப்பட்டால்தான் ஜனநாயக பிரதிநிதியாக இருக்க முடியும் என்ற ஜனநாயகக் கொள்கையின் அடிப்படையில் தீவிரமாக போராடுகிறார்கள். ஆனால் உண்மை ஜனநாயகத்தினுடைய வேலைத் திறத்தை அவர்கள் மறந்துவிட்டார்கள் என்று நான் வருத்தப்படுகிறேன். ஜனநாயக தத்துவப்படி தலைவரை நேரிடையாகத் தேர்ந்தெடுப்பது வரவேற்கத்தக்கது. அதை யாரும் இல்லை என்று சொல்லவில்லை. ஆனால் ஜனநாயக ஆட்சியிலே "ரூல்ஸ் ஆப் தி மெஜாரிடி" என்பார்களே, அப்படி பஞ்சாயத்துத் தலைவரோடு பஞ்சாயத்து அங்கத்தினர்கள் ஒத்துப்போகக்கூடிய சூழ்நிலையை சிருஷ்டித்தால்தான் ஜனநாயக ரீதியாக எல்லாக் காரியங்களும் செம்மையாக நடைபெற முடியும். தலைவருக்கும், அங்கத்தினர்களுக்கும் தொடர்பு இல்லாமல் செய்துவிட்டால் தலைவர் தன் விருப்பப்படி எந்தக் காரியத்தையும் நடத்த முடியாது. ஜனநாயக முறைப்படி எல்லாக் காரியங்களும் நடைபெறுவதற்கு தலைவருக்கும், அங்கத்தினர்களுக்கும் ஒரு தொடர்பு, ஒரு ஒழுங்கு அவசியம் என்பதை எதிர்க்கட்சிக்காரர்கள் மறந்துவிட்டார்கள். தலைவரை நேரிடையாகத் தேர்ந்தெடுப்பது என்றால் என்ன பூசல் விளையும் என யோசிக்க வேண்டும். நேரிடையாகத் தேர்ந்தெடுக்கப்படுகிற தலைவர், மக்களுடைய விருப்பத்திற்கு ஆளானவர்களாக இருக்கலாம், மக்களிடத்திலே நல்ல செல்வாக்கு உடையவராக இருக்கலாம், சிறப்பான பண்புகள் எல்லாம் உடையவராக இருக்கலாம், நல்லவர் என்று பொதுவாக எல்லோராலும்

பாராட்டிப் போற்றக்கூடியவராக இருக்கலாம். இருந்த போதிலும் கூட அவர் ஒரு கட்சியின் நோக்கத்தோடு தேர்ந்தெடுக்கப்பட்டவராகவோ அல்லது, நல்லவர், செல்வாக்கு படைத்தவர் என்கிற ஒரு காரணத்தினாலே எல்லா ஜனங்களினாலும் தேர்ந்தெடுக்கப்பட்டவராகவோ இருந்து, அங்கத்தினர்கள் வேறு ஒரு கட்சியின் நோக்கத்தோடு தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாக இருந்துவிட்டால் அந்த பஞ்சாயத்து போர்டு தலைவருக்கும், அங்கத்தினர்களுக்கும் ஒவ்வொரு கூட்டத்திலும் ஒரு போராட்டம் நடக்குமே தவிர காரியம் ஒன்று கூட வெற்றிகரமாக நடக்காது. இப்போது பல பஞ்சாயத்துகள் படுகிற பாட்டில் இருந்து அது நமக்கு நன்றாகத் தெரிகிறது. தலைவர் ஒரு கட்சி. அங்கத்தினர்கள் மற்றொரு கட்சி. அவ்வளவுதான். தலைவர் சொல்வதை அங்கத்தினர்கள் கைதூக்கி ஆதரித்தால்தான் ஒரு காரியத்தைத் தலைவர் செய்ய முடியும். அப்படியே அங்கத்தினர்கள் சொல்கின்ற காரியத்தை தலைவர் ஆதரித்தால்தான் செய்ய முடியும். முடிவில் ஒரு காரியமும் நடைபெறாது. ஆகையினாலே பஞ்சாயத்துத் தலைவர் நேரிடையாகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்குப் பதிலாக, தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்களில் பெரும்பாலோரின் ஆதரவைப் பெற்று தேர்ந்தெடுக்கப்பட்டவராக இருந்தால் இந்தத் தலைவரின் கருத்துக்களை ஆதரிக்கக்கூடியவர்கள் சபையில் பெரும்பாலோராக இருப்பார்கள். அவர்களுடைய ஆதரவைக் கொண்டு பல காரியங்களை மக்களுக்குத் தலைவர் செய்யமுடியும். இல்லாவிட்டால் தலைவர் வேண்டும் என்பதை அங்கத்தினர்கள் வேண்டாம் என்பார்கள். அங்கத்தினர் வேண்டும் என்பதை தலைவர் வேண்டாம் என்பார். முடிவில் பஞ்சாயத்து போர்டின் நடைமுறை செயல்திறன்தான் பாதிக்கப்படும். இதை உணர்ந்துதான் அரசாங்கத்தார் பஞ்சாயத்து போர்டு அங்கத்தினர்களால் தலைவர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்று சொல்லி இருக்கிறார்கள். அதிகப்படியான அங்கத்தினர்களின் ஆதரவைப் பெற்று ஒரு தலைவர் தேர்ந்தெடுக்கப்படும்போது, அந்த அதிகப்படியானவர்களின் ஆதரவோடு பல காரியங்களை நல்ல முறையில் செய்ய முடியும் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. இந்த நடைமுறை தத்துவத்தை, ஜனநாயகத் தத்துவத்தை, எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் புரிந்து கொண்டார்கள் என்றால் இதை எதிர்க்கவே மாட்டார்கள் எனக் கருதுகிறேன்.

அடுத்தபடியாக வரும்போது இந்த மசோதாவின் செக்ஷன் மூன்று, சப்-கிளாஸ் 2-ல்

**" The Inspector may, by notification, exclude from a village any local area comprised therein, provided that the population of the village, after such exclusion, is not less than five hundred."**

இன்ஸ்பெக்டர் அவர்கள் 500 மக்களுக்குக் குறைவில்லாத ஒரு பிராந்தியத்தை பிரித்துவிடலாம். வில்லேஜ் கமிட்டியைப் போடலாம். 500க்கு மேலாக இருந்தால் அதையும் பஞ்சாயத்திற்கு வைக்கலாம் என்கிற அதிகாரத்தைக் கொடுத்திருக்கிறது.

இப்படி இன்ஸ்பெக்டர் கையில் முழு அதிகாரத்தையும் கொடுத்திருப்பது பல தொல்லையை உண்டாக்கும். அது நல்லது அல்ல என்று எண்ணுகிறேன். அதை அரசாங்கம் தன்னுடைய மேற்பார்வையில் செய்தால் அந்த சம்பளம் வாங்குகிற அதிகாரி தன் அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்ய முடியாமல் இருக்கும். ஆகவே

**" The Inspector may, by notification,"**—என்பதை

**" The Inspector may, by notification, and with the approval of the Government . . ."**

என்று மாற்றி அமைக்கவேண்டும்.

இப்படி அரசாங்கமே ஒரு திருத்தம் செய்துவிட்டால் நன்றாக இருக்குமென்று நான் கருதுகிறேன். சம்பளம் வாங்கிக்கொண்டிருக்கிற அதிகாரிக்கு கிராமத்தில் இருக்கும்படியான நிலைமை, எப்படிப் பிரிப்பது என்பது தெரியாது. அதை அரசாங்கத்தின் அனுமதியுடன் செய்யவேண்டும்



என்று செய்தால் நன்றாக இருக்கும். அதை என் பொறுக்குக் கமிட்டியினர் மறந்துவிட்டார்கள் என்பது தெரியவில்லை. இப்போதாவது அதைத் திருத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேமாதிரியாக இண்டஸ்டிரியல் காலனி, ஹெல்த் ரிசார்ட் இதைப் பிரிக்கும் அதிகாரத்தையும் இன்ஸ்பெக்டர் அவர்களுக்கே கொடுத்திருக்கிறார்கள். குற்றாலம் டவுன்ஷிப் ஆக்ட் கொண்டு வந்தோம். இந்த மாதிரியான நிலைமை ஏற்படாதிருக்க அவர்களுக்கே சற்று அதிகமான அதிகாரத்தைக் கொடுத்துவிட்டால் துரிதமாக அவர்கள் பல சீர்திருத்தங்களை, வசதிகளை அங்கே செய்துவிட முடியும். அவற்றை தனியாகவே பிரித்துவிடுவதில் தவறு கிடையாது என்று நினைக்கிறேன். எப்படி கன்டோன்மெண்டு பஞ்சாயத்துகள் என்று மிலிட்டரியில் வைத்து இருக்கிறார்களோ அப்படி இந்தப் பகுதிகளுக்குத் தனியாக வைத்துவிடவேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக இப்போது இருக்கும் சட்டத்தின் 48-வது ஷரத்து 5-வது பிரிவுக்கு

**" During the interval, if any, between the dissolution and the reconstitution of a panchayat or during the period of its supersession, as the case may be, the Inspector may appoint a person to exercise the powers and discharge the duties of the panchayat and of its president including where the president is also the executive authority, his powers and duties as such until the reconstitution of the panchayat. Any person other than the executive officer who is so appointed may, if the Inspector so directs, receive payment for his services from the panchayat "**

என்று திருத்தம் கொண்டு வருகிறார்கள். அதாவது பஞ்சாயத்து சரியான முறையில் நடக்கவில்லை என்றால் அந்த பஞ்சாயத்தையே கலைத்துவிட்டு. திரும்பத் தேர்தலை நடத்த சர்க்காருக்கு அதிகாரம் உண்டு. அப்படிக் கலைத்துவிட்டு, புதிதாகத் தேர்தலை நடத்த பஞ்சாயத்து அமைக்கும் காலம் வரைக்கும் இடையில் உள்ள காலத்தில்

" The Inspector may appoint a person to exercise the powers and discharge the duties . . ."

என்று சொல்கிறார்கள். இது அளவுக்கு மீறி இன்ஸ்பெக்டருக்கு அதிகாரத்தைக் கொடுப்பதாக இருக்கிறது. இது ஜனநாயக தத்துவத்திற்கே புறம்பானதாக இருக்கும். அதோடு அவர் நியமனம் செய்கிற நபர் **"a person"** என்று இருப்பது ஆங்கிலத்தில் " வேக் " என்று சொல்வார்களே அப்படி இருக்கிறது.

" Any person other than the executive officer who is so appointed may, if the Inspector so directs, receive payment of his services from the panchayat."

என்று அதற்குப் பிறகும் ஒரு வாக்கியம் இருக்கிறது. எக்சிக்யூடிவ் ஆபீசர் இல்லாத ஒரு நபரை அவர் போடுவதற்கு அனுமதி இருக்கிறது. அப்படிப் போடுகிற நபர் பஞ்சாயத்திடம் இருந்து, இன்ஸ்பெக்டரின் அனுமதியுடன் சம்பளம் பெறலாம் என்று இருக்கிறது. **"a person"** என்று பொதுவாக விட்டுவிடுவதைவிட **"a non-official"** என்று உத்தியோகப்பற்றற்ற நபர் ஒருவரையே, இருக்கக்கூடிய பஞ்சாயத்தில் உள்ளவர் யாராவது நன்றாக நடந்து கொள்வார் என்று தெரிந்தாலும் நியமிக்கலாம்—யாராக இருந்தாலும் நான் அபிஷியலாக இருக்கும்படியானவரைத்தான் நியமிக்கலாம் எனச் சட்டத்திலேயே தெளிவாகச் செய்துவிடவேண்டும். இல்லையென்றால் இன்ஸ்பெக்டர் தன்னிஷ்டம்போல் நியமிக்கிற **"a person"** என்ற ஒரு நிலைமையில் புதிதாகப் பல அரசியல் குழப்பங்கள் வந்துவிடுமோ என்று அஞ்சுகிறேன். இன்ஸ்பெக்டர் அரசாங்க சிப்பந்தி. அவருக்கும் இந்த நியமனத்தால் தொல்லை உண்டாக்கூடாது. அவரும் அதி

[Srimathi T. N. Anandanayaki] [9th November 1957

காரம் இருக்கிறது என்ற காரணத்தினால் அரசியல் குழப்பத்தை உண்டாக்கும்படியாக நடந்துவிடக்கூடாது. ஆகவே அவருக்குக் கொடுக்கக்கூடிய அதிகாரத்தை நாம் வரையறைசெய்துவிடுவது தான் நல்லது என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன். இப்படிப்பட்ட சிறு திருத்தங்களை எல்லாம் சர்க்கார் செய்தால் அதில் உள்ள பல குறைபாடுகளை நீக்கிவிடலாம். இந்த மாற்றங்களை எல்லாம் அரசாங்கம் சிந்தித்துப் பார்த்து, முடிந்தால் சேர்த்துக்கொள்வார்கள் என்கிற நம்பிக்கையுடன் முடித்துக் கொள்கிறேன்.

*SRI K. SATTANATHA KARAYALAR : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த கிராம பஞ்சாயத்துத் திருத்த மசோதாவில் குறிப்பாக மூன்று விஷயங்கள் இருக்கின்றன. ஒன்று பஞ்சாயத்து தேர்தலை மூன்று ஆண்டுகளுக்குப் பதிலாக ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை நடத்துவது. இரண்டாவது, தலைவரை நேரிடையாகத் தேர்ந்தெடுப்பதற்குப் பதிலாக மறைமுகமாக அங்கத்தினர்களினாலேயே தேர்ந்தெடுக்கச் செய்வது, மூன்றாவது பஞ்சாயத்துக்குள் இருக்கும் சில பகுதிகளுக்கு விதிவிலக்கு அளிப்பது. இவை மூன்றுதான் இந்தத் திருத்த மசோதாவில் பிரதானமானது.

இதிலே தேர்தலை மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை நடத்துவதற்குப் பதிலாக ஐந்து வருஷங்களுக்கு ஒரு முறை நடத்தவேண்டும் என்று சொல்வதற்குக் காரணம், தேர்தல் அடிக்கடி நடப்பதனால் கிராமங்களில் பல்வேறு சச்சரவுகள் உண்டாகின்றன என்பதுதான். இது சரியல்ல. கிராம மக்களை பொறுத்தவரையில் அடிக்கடி தேர்தல் வருவதை—மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை தேர்தல் நடப்பது என்பதை அதிகமாக வரவேற்பார்கள். சட்டசபைக்கே அப்படி இருந்தாலும் அதை வரவேற்பார்கள். மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை தேர்தல் என்பது மிக குறுகிய காலம் என்று கூறப்பட்டது. அப்படி அடிக்கடி தேர்தல் வருவதனாலே கிராம மக்களிடத்தில் அரசியல் விழிப்பு ஏற்படும் என்பதைத் தவிர அவர்களுக்கிடையே சாதி, அரசியல் சண்டைகள் வளருகின்றன என்பது நியாயமாகாது.

அடுத்தபடியாக தலைவர் தேர்தல் நேரடியாக தேர்ந்தெடுப்பது ஜனநாயகத்திற்கு உகந்ததல்ல என்று கூறப்பட்டது. இது ஓரளவு சர்வாதிகாரம் ஆகும் என்று கனம் மந்திரி அவர்கள் பிரசங்கத்தில் ஒரு தொனிப்பு இருக்கிறது. ஆனால் இந்த விஷயம் அப்படி இல்லை. தலைவர் தேர்தல் நேரடியாக இருந்தால் அந்த வட்டாரத்தில் உள்ள எல்லா மக்களும் ஓட்டெடுப்பில் கலந்து கொள்வதற்கு சாத்தியமாக இருக்கும். அதனால் பொது மக்களுடைய அன்பிற்கு பாத்திரம் ஆனவர்தான் தலைமை பதவிக்கு வரமுடியும். அப்படி இல்லாமல் அங்கத்தினர்களால் தலைவர் தேர்ந்தெடுக்கப்படவேண்டுமானால், இன்று நாட்டில் இருக்கும் நிலைமையில் அது அவ்வளவு சரியாக இருக்க முடியாது என்றுதான் சொல்ல முடியும்.

சாதாரணமாக ஒரு வார்டை எடுத்துக்கொண்டால் அங்கே பிராம்மணர்கள் இருந்தால் அவர்களிலிருந்து ஒருவரை தேர்ந்தெடுப்பார்களே தவிர மற்ற இனத்தாருக்கு ஓட்டளிக்கமாட்டார்கள். அதே மாதிரியாக ஒரு வார்டில் தேவர்கள் அதிகமாக இருந்தால், அங்கே தேவரைத் தான் தேர்ந்தெடுப்பார்கள். ஹரிஜனங்கள் அதிகமாக இருக்கும் வார்டிலும் அதேமாதிரியாகத்தான் ஹரிஜனனையே தேர்ந்தெடுப்பார்கள் என்பதில் சந்தேகம் இல்லை. நடைமுறையில் இவ்வாறு நடைபெறுவதை நாம் பார்க்கிறோம். எந்தக் கட்சியாக இருந்தபோதிலும் ஒரு அளவு ஜாதி அடிப்படையில்தான் தேர்தலுக்கு ஆள் நிறுத்துகிறார்கள் என்பது விளங்குகிறது. ஆனால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படும் தலைவர் இந்த ஜாதி அடிப்படையில் போட்டியிட முடியாது. ஜாதி அடிப்படையிலே மறைமுக தேர்தல் மூலம் வந்தவரை அங்குள்ள எல்லா மக்களுக்கும் தலைவராக கருதமுடியாது. ஆகவே தலைவரை நேரடியாகத் தேர்ந்தெடுப்பதற்கு வழிவகை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

சில சமயங்களில் தலைவருக்கும் அங்கத்தினருக்கும் அபிப்பிராய பேதம் ஏற்படலாம் என்று குறிப்பிடப்பட்டது. ஆனால் எந்த எந்த விஷயத்திலே சாதாரணமாக அபிப்பிராய பேதம் எழுகிறது என சொல்லப்படவில்லை.



9th November 1957] [Sri K. Sattanatha Karalayar]

சில விஷயத்தில் அபிப்பிராய பேதம் ஏற்படலாம், அதாவது குடிதண்ணீர் குழாய் எந்த இடத்தில் வைப்பது, சந்தை எந்த இடத்தில் வைக்க வேண்டும் என்பதுபற்றி அபிப்பிராயபேதம் இருக்கலாமே தவிர மற்ற விஷயங்களில் அபிப்பிராய பேதம் ஏற்படுவதற்கு வழியே இல்லை. இது மாதிரி அபிப்பிராய வித்தியாசம் வரும்போது ஒரு தலைவர் அங்கத்தினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தால், அவர் இதுபோன்ற காரியங்களில் எந்த வார்டிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டாரோ அந்த வார்டு மக்களுக்கு நன்மை செய்யவேண்டும் என்ற கண்ணோட்டத்துடன் வேலை செய்வாரே ஒழிய அந்தப் பஞ்சாயத்திலுள்ள எல்லா மக்களுக்கும் நன்மை செய்ய வேண்டும் என்ற நோக்கத்தோடு வேலை செய்யமாட்டார். ஆகவே பஞ்சாயத்து மக்களுக்கு பொதுவில் நன்மை செய்யக்கூடிய ஒருவரைத்தான் தேர்ந்தெடுக்கவேண்டும் என்பதை நாம் காண்கிறோம்.

பஞ்சாயத்துள்ள சில இடங்கள் இந்த மசோதாவிலிருந்து விதி விலக்கு கொடுக்கப்பட்டிருக்கின்றன: அப்படி விதிவிலக்கு அளிக்கப்பட்ட இடங்களில் தனியாக ஒரு கமிட்டியை அமைப்பது என்றும் மசோதாவில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதுமாதிரி விதிவிலக்கு அளிக்கப்பட்டு குற்றாலத்தில் டவுன்ஷிப் கமிட்டி ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. குற்றாலத்தை தனியாக பிரித்து அதை ஒரு கமிட்டிக்கு விட்டால் நிர்வாகம் நன்றாக நடைபெறும் என்று எதிர்பார்க்கப்பட்டது. அதற்காக என்று பணம் ஒதுக்கி அது அகில இந்திய ரீதியில் முக்கியத்வம் உள்ள இடம் என்று ஒரு சட்டம் கொண்டுவந்தார்கள். ஆனால் நடைமுறையில் என்ன நடக்கிறது? அங்கு எதிர்பார்த்த அளவிற்கு காரியம் ஒன்றும் நடைபெறவில்லை. 25 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டு அதற்கு ஒரு திட்டமும் தயாரிக்கப்பட்டிருக்கிறது. அப்படி கமிட்டி அமைத்து கிட்டத்தட்டத் $1\frac{1}{2}$ வருஷம் ஆகியும் நல்ல முறையில் அது வேலை செய்யாமல் பல்வேறு சிக்கல்கள் தோன்றி இருக்கின்றன. இது வரை சுமார் 30 ஆயிரம் ரூபாய்தான் அபிவிருத்திக்காக செலவிடப்பட்டிருக்கிறது. சமீப காலத்தில் குற்றாலத்திற்கு சென்ற அங்கத்தினர்கள் ஒரு விஷயத்தை பார்த்திருக்கலாம். அங்கு அருவிக்கு போகும் பாதையில் மின்சார விளக்கு அமைக்க பணம் ஒதுக்கப்பட்டிருந்தும், அதற்கான நடவடிக்கை இன்னும் எடுக்கப்படவில்லை. இந்தக் குறையை நிறைவேற்றவேண்டுமென்று பஞ்சாயத்து இருந்த காலத்திலிருந்தே சர்க்காருக்கு எழுதிக்கொண்டே இருக்கிறோம். ஆனால் இன்னும் நடைபெறவில்லை. இதற்கு இலாகாவிற்கு இலாகா இணைப்பு சரியாக இல்லாததுதான் காரணம். ஒரு சில இடங்களுக்கு விதிவிலக்கு கொடுக்கப்பட்டால் அந்த இடத்தில் நல்ல முறையில் பரிபாலனம் செய்வதற்கு ஒரு மெஷினரி ஏற்படுத்தினால் தான் அங்குள்ள சிக்கல்களை நிவர்த்திக்கலாம். சில தினங்களுக்கு முன் வெள்ளை அறிக்கைமீது சாங்கோபாங்கமாக ஒரு நீண்ட விவாதம் நடந்திருக்கிறது. ஸ்தல ஸ்தாபனத்தை சீரமைக்க ஒரு கமிட்டி அமைக்கப்பட்டிருக்கிறது. அப்படி இருக்க இந்த மசோதாவை அரசாங்கம் அவசர அவசரமாக கொண்டுவருவதற்கு அவசியமே இல்லை. ஸ்தல ஸ்தாபன மந்திரி அவர்களுக்கு ஆலோசனை கூறுவதற்கு உள்ள குழுவின் யோசனையைக்கேட்டு இந்த விஷயத்தை முடிவு செய்வதில் தவறு ஒன்றும் இல்லை என்று சுட்டிக்காட்டி என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்ளுகிறேன்.

## II.—(2) RULING *RE* CHANGES MADE BY THE SELECT COMMITTEE IN A SECTION NOT BEING AMENDED BY AN AMENDING BILL.

MR. SPEAKER : I am now giving my ruling on the point of order raised by the hon. Member Sri A. Nesamony. The point raised by the hon. Member is that Section 113 of the Village Panchayats Act is not one of the sections that is being amended by the Village Panchayats Amendment Bill and hence the select committee has traversed beyond the scope of the Bill in making certain amendments to Section 113 of the parent Act.

[Mr. Speaker] [9th November 1957

Clause 9 of the Bill amends Section 112 of the parent Act. Section 112 confers powers on the Government to make rules for the purpose of carrying out the purposes of the Village Panchayats Act. Section 113 provides that the breach of any rules made under this Act is punishable and also provides, that rules made under Clause (3) of section 113, that all rules made under this Act shall be published in the *Fort St. George Gazette*. There is no provision to place the rules on the table of the House. It may also be recalled now that the Subordinate Legislation Committee in its First Report has recommended to the Government that all statutes embodying provision to place all the rules, notifications, etc., issued under the delegated powers to the Government be placed on the table of the House, and should be subject to such modifications as the House may make within a particular period. This recommendation of the Subordinate Legislation Committee has been accepted by the Government and wherever amending Bills are brought and wherever such provisions to lay the rules are not found in the Acts they are being amended in accordance with the recommendations made by the Subordinate Legislation Committee. Section 112 of the Village Panchayat Act provides for the making of the rules and section 113 of the Act provides for penalties for the breach of the rules. Sections 112 and 113 are allied sections and hence an amendment to Section 113 to the effect that all the rules made under this Act should be placed on the table of the House cannot be held to be entirely outside the scope of the Bill as introduced in the Assembly, though I admit that the hon. Member Sri A. Nesamony has some justification to raise this point of order.

Hence I rule that the Select Committee is in order to make an amendment to Section 113 of the Act also.

## IV.—GOVERNMENT BILL—*cont.*

## THE MADRAS VILLAGE PANCHAYATS (AMENDMENT) BILL, 1957 (L.A. BILL No. 16 OF 1957)—*cont.*

**SRI SAMI SAHAJANANDA:** கனம் சபாநாயகர் அவர்களே, சர்க்கார் ஏற்கனவே நீதியையும் நிர்வாகத்தையும் தனித்தனியாக பிரித்திருக்கிறார்கள். ஆனால் பஞ்சாயத்து போர்டில் நீதியையும் நிர்வாகத்தையும் ஒன்றாக சேர்த்திருக்கிறார்கள். ஆகவே பஞ்சாயத்து போர்டுகளிலே அதன் தலைவர்களின் இஷ்டப்பிரகாரம்தான் நீதி நிர்மாணிக்கப்படுகிறது.

உதாரணமாக பண்ணைப்பட்டி கிராமத்திலே ஒரு பையன் காலேஜிலே படித்திருந்தான். எலெக்ஷன் காலத்தில் அவன் காங்கிரசுக்காக வேலை செய்திருந்தான். அதனால் அங்கிருக்கும் கம்யூனிஸ்ட்காரர்கள் அவன் மீது ஒரு கேஸ் போட்டு இரவு 11 மணிக்கு சம்மன் கொடுத்து போலீஸ் முன் ஆஜராக வேண்டியிருந்தது. அப்படி இருந்தும் பஞ்சாயத்து கோர்ட்டு நீதி வழங்கவில்லை, சாதாரணமாக அங்கே பொதுமக்களுக்கு போதுமான கல்வி வரவில்லை. அதனால்தான் சரியானபடி நீதி வழங்க முடியவில்லை. அதேமாதிரியாக சிதம்பரம் தாலூக்காவிலே ஒரு கிராமத்து பஞ்சாயத்து போர்டில் இருக்கும் தலைவர் பஞ்சாயத்து ஆபீசரை தன் கைக்குள் வைத்துக்கொண்டு தன் இஷ்டப்படி நீதி வழங்கிக்கொண்டு வருகிறார்கள்.



9th November 1957] [Sri Sami Sahajananda]

ஆகவே பஞ்சாயத்திற்கு நீதி வழங்கும் அதிகாரம் இருக்கக்கூடாது. மூன்று வருஷத்திற்கு மேல் பஞ்சாயத்து போர்டின் ஆயுளை நீடிப்பது அவ்வளவு நல்லதல்ல. முன்பு கிராமங்களில் கை தூக்கி எலெக்ஷன் நடந்தது. இந்த ஐந்து வருஷம் என்பது மூன்று வருஷமாக இருக்க வேண்டும் என்றுதான் நான் அபிப்பிராயப்படுகிறேன். மேலும், சில இடங்களில் ஹரிஜனங்கள் வாயில்லாப் பூச்சிகளாக இருக்கிறார்கள். சேரிகளில்தான் மெஜாரிட்டி ஜனங்கள் இருக்கிறார்கள். ஆனால், கிராமங்களில் மைனாரிட்டியினராய் இருப்பவர்கள்தான் அதிகாரத்தை கையில் வைத்துக்கொண்டு அம்மக்களுக்கு வேண்டிய நன்மை செய்வதில்லை. ஆகவே, பஞ்சாயத்து போர்டுகளை சரியானபடி கண்காணிக்க வேண்டியது மிகவும் அவசியம். ஆகையினால், இந்த பஞ்சாயத்து போர்டின் ஆயுள் மூன்று வருஷங்களுக்கு மேல் நீடிக்க வேண்டியதில்லை என்றும் நீதியை அவர்கள் கையில் ஒப்படைக்கக்கூடாதென்றும் சொல்லிக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

**SRI V. K. KOTHANDARAMAN :** தலைவர் அவர்களே, கிராமப் பஞ்சாயத்து மசோதாவின் பேரில் பல அங்கத்தினர்கள் பல அபிப்பிராயங்களைச் சொல்லியிருக்கிறார்கள். தேர்தல் முறையைப் பற்றியும், தலைவரை தேர்ந்தெடுக்கக் கூடிய முறையைப் பற்றியும் பஞ்சாயத்திற்கு இருக்க வேண்டிய அதிகாரங்களைப் பற்றியும், இதுபோன்று பலவித அபிப்பிராயங்களை சொல்லியிருந்தபோதிலும் இப்பொழுது அது செலக்ட் கமிட்டிக்கு விடப்பட்டு, அதில் விவாதம் செய்யப்பட்டு ஏற்கனவே கனம் அமைச்சரவர்கள் எந்த ஒரு அபிப்பிராயத்தைக் கொண்டிருந்தார்களோ அந்த அபிப்பிராயத்தை நிறைவேற்றக்கூடிய தன்மையில் தான் செலக்ட் கமிட்டியிலும் கூட முடிவு எடுத்து இங்கு கொண்டுவந்திருக்கிறார்கள் என்றுதான் நினைக்க வேண்டியிருக்கிறது. இதை ஏன் நான் குறிப்பிடுகிறேன் என்றால், ஆரம்பத்திலே, இந்த மசோதாவிலே, வோட்டு முறை மறைமுகமாக இருக்கக் கூடிய ஒரு முறையை கொண்டு வந்து விடுவதின் மூலமாக எதிர்கட்சியில் இருக்கக்கூடியவர்கள் பலவித அபிப்பிராயங்களை சொல்லலாம், அதிலிருந்து ஒரு அபிப்பிராயத்தை அவர்களுக்கு விட்டுக் கொடுப்பது போல் இதை நிறைவேற்றினோம், எடுத்துக் கொண்டோம் என்று சொல்வதற்காகத்தான் இது ஒன்றை மட்டும் செலக்ட் கமிட்டிக்கு விட்டு அதை மட்டிலும் ஏற்றுக்கொண்டு மற்றவைகளை நிராகரிக்கக் கூடிய நிலைமையில் வந்திருக்கிறது என்பதை நாம் பார்க்கிறோம். இன்று பல பஞ்சாயத்து போர்டுகள் எந்தளவு, எந்த முறையில் இன்று நடைபெற்று வருகிறது என்று பார்ப்போம். வோட்டர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்களால் தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட போதிலும், தலைவர்கள் சர்வாதிகாரப் போக்கில்தான் இன்று நடந்துகொண்டு வருகிறார்கள். அதைப் பற்றி குறிப்பாக பலர் பலவித அபிப்பிராயங்களைச் சொல்லியிருக்கிறார்கள். அதை, எதிர்கட்சியில் இருக்கக் கூடியவர்கள் மட்டுமல்ல, ஆளும் கட்சியைச் சார்ந்தவர்களும் தெட்டத் தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். விளாத்திக்குளத்தில், அங்குள்ள பஞ்சாயத்து போர்ட் தலைவர்கள் ஆயிரக் கணக்கான ரூபாய் கையாண்டிருக்கிறார். அதைப் பற்றி அங்குள்ள அங்கத்தினர்களும் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அந்த கிராமத்தில் உள்ள மக்களும் அதற்காக கிளர்ச்சி செய்திருக்கிறார்கள். அப்படி இருந்த போதிலும், அக்கிராமத்தில் இருக்கக்கூடிய மக்கள் பேரிலும், அங்கத்தினர்கள் பேரிலும் நடவடிக்கை எடுக்கக்கூடிய தன்மையில்தான் இருந்து வந்திருக்கிறதேயொழிய அதற்குப் பதிலாக ஆயிரக்கணக்கில் ரூபாயைக் கையாண்ட அந்த பஞ்சாயத்து போர்ட் பிரிசிடெண்ட்மேல் எந்தவிதமான நடவடிக்கையும் எடுத்ததாகத் தெரியவில்லை. வருஷக்கணக்கில் அந்த நிலை ஏற்பட்டும் இன்றைக்கும் அவர் தலைவராகத்தான் இருந்து கொண்டிருக்கிறார்கள். அந்த பஞ்சாயத்து போர்ட் தலைவர் ஒரு காங்கிரஸ்காரர் என்ற ஒரு காரணத்திற்காக வேண்டி இந்த நிலை நீடித்துக் கொண்டு வரப்படுகிறது என்று அங்குள்ளவர்கள் சொல்கிறார்கள். அது, பலமுறை இந்த சட்டசபையில் ஞாபகத்திற்கு கொண்டு வரப்பட்டிருக்கிறது. அதிகாரிகளின் ஞாபகத்திற்கும் கொண்டுவரப் பட்டுள்ளது. இப்படி நேரடியாக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவரே இந்த நிலையில் இருக்கிறார் 11-12 a.m.

என்றால், இப்பொழுது மறைமுக வோட்டு முறை வந்தபோதிலும்கூட ஐந்து அங்கத்தினர்களிலிருந்து ஆறு அல்லது ஏழு அங்கத்தினர்களுக்கு மேல் போக முடியாது என்ற ஒரு நிலையிருக்கிறது. அப்படி ஏழு மெம்பர்கள் இருக்கிறார்கள் என்று சொன்னால், நான்கு பேர்களை ரொம்ப சுலபமாக 50 அல்லது 100 ரூபாய் கொடுத்து 200 அல்லது 300 ரூபாய் செலவு செய்து தலைவராக வந்து விடுகிறார் என்று சொன்னால் ஐந்து வருஷகாலம் கல்லுப்பிள்ளையார் மாதிரி என்னை யாராலும் அசைக்க முடியாது, நான் சொல்வதைத்தான் நீங்கள் கேட்க வேண்டும் என்று ஒரு சர்வாதிகாரம் நடத்துவதற்காகத்தான், இன்று மறைமுக வோட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டு இருந்த போதிலும் அங்கத்தினர்கள் மூலம் இன்று தலைவரைத் தேர்ந்தெடுக்க சந்தர்ப்பம் இருந்தபோதிலும் தவறு செய்யக் கூடிய தலைவரை அந்த ஸ்தானத்தில் இருந்து நீக்குவதற்காக வேண்டி அவர் பேரில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வருவதற்கான ஒரு சந்தர்ப்பமாவது இதன்படி இருக்கிறதா என்று பார்த்தால் இதுவும் இல்லை என்று தான் பார்க்கிறோம். ஆகவே இதுபோன்று ஒரு நிலை இருக்குமானால் இன்றைக்கு இருப்பதை விட மிகவும் மோசமான ஒரு நிலைக்குத்தான் கொண்டு போகக் கூடிய அளவு நிலை ஏற்படும். இதற்காக பல உதாரணங்களை எடுத்து காட்டினார்கள் அமைச்சர் அவர்கள். அதற்கு நான் சொல்லுகிறேன் 1888-ம் ஆண்டிலே வெள்ளையன் ஆட்சியிலே எந்தமாதிரியான சட்டங்களை இயற்றினார்களோ அதே அடிப்படையில் தான் இன்றைக்கும் சட்டங்கள் இருக்கின்றதேயொழிய அவன் போட்ட கோட்டை தாண்ட முடியாத ஒரு நிலைதான் இன்று இருக்கிறது. அடிப்படை மாறுதல்கள் ஏதாவது ஏற்படுத்தப்பட்டிருக்கிறதா என்றால் இல்லை என்றுதான் சொல்லமுடியும். ஆயிரம் வருஷத்திற்கு முந்தி உள்ளதை, கல்களில் செதுக்கப்பட்டுள்ளதையும், கல் வெட்டுகள் மூலம் உள்ளதையும் உதாரணமாகக் காட்டி ஆயிரம் வருஷங்களுக்கு முன்பே இப்படித்தான் இருந்தது, ஆகவே இதுதான் நல்லது என்ற தன்மையில், அது பிரதிபலிக்கக் கூடிய தன்மையில்தான் இருக்கிறதேயொழிய, நாம் இருபதாம் நூற்றாண்டில் இருக்கிறோமா அல்லது 9-வது நூற்றாண்டில் இருக்கிறோமா என்று நினைக்கக்கூடிய முறையில் தான் இன்றைய நிலை இருக்கிறது. ஆகவே, இன்று விஞ்ஞானம் வளரக் கூடிய இந்தக் காலத்தில், பகுத்தறிவு வளரக் கூடிய இந்தக் காலத்தில் நாம் முன்னேறிச் செல்வதற்குப் பதில் ஆயிரம் ஆண்டுகள் முன் நடந்ததை உதாரணமாகக் காட்டி இது தான் சரி என்று சொல்லக் கூடிய நிலைமையில் இருந்தால் அது ஜனநாயகத்திற்கு நேர் விரோதமாக . இருக்கக்கூடிய நிலைமையாகும் என்பதைத் தான் நான் எடுத்துக் கூற விரும்புகிறேன். ஆகவே மறைமுக வோட்டு முறை ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தபோதிலும், இன்று தலைவர்கள் தவறு செய்கிறார்கள் என்றால் அவர்களை அந்த ஸ்தானத்தில் இருந்து அகற்றக் கூடிய நிலைமையில் நிலை இல்லை. ஆகவே, இன்று தவறு செய்யக் கூடிய தலைவரை அப்பதவியிலிருந்து அகற்றுவதற்கு வேண்டிய விதத்தில் ஒரு சட்டம் கொண்டு வர வேண்டும். அந்த நிலை இருக்குமானால் தலைவர்கள் அங்கத்தினர்களின் ஆலோசனையைப் பெற்று, அவர்களின் உதவியையும் பெற்று நல்ல முறையில் இயங்கக் கூடிய அளவிற்கு நாம் பஞ்சாயத்து போர்டுகளுக்கு ஒரு சந்தர்ப்பத்தைக் கொடுப்பது போலாகும். ஆகவே, பஞ்சாயத்துகளுக்கு பரிபூர்ண அதிகாரம் ஓரளவில் கொடுத்தாகவேண்டும். அதிகாரிகளை நியமித்து அதிகாரிகளிடம் அதிகாரங்களைக் கொடுத்துவிட்டால் பஞ்சாயத்து போர்ட் தலைவரும், அங்கத்தினர்களும் ஆயுத பூஜை காலத்தில் வைக்கப்படும் கொலுவில் உள்ள கொலு பொம்மைகள் மாதிரி இவர்களையும் உட்காரவைப்பது போலாகும். பொருளாதாரம் மிக மோசமாயிருக்கும் இச்சந்தர்ப்பத்தில் அடிக்கடி அதிகாரிகளைப் பார்ப்பதோ, அல்லது சென்னைக்கு வந்து மந்திரிகளைப் பேட்டி காண்பதோ அல்லது அந்தந்த ஜில்லாவிலுள்ள அதிகாரிகளை பேட்டி காணக்கூடிய அளவில் தான் இந்த சந்தர்ப்பம் இருக்க முடியும். பஞ்சாயத்து உருப்படியாக நடக்க முடியாது, என்று தெரிவித்துக் கொண்டு மறைமுக வோட்டு முறை மாத்திரம் இருந்தால் போதாது, தவறு செய்யும் தலைவரை பதவியில் இருந்து அகற்றுவதற்குள்ள ஒரு நிலைமை இருக்க வேண்டுமென்று தெரிவித்துக் கொண்டு, அங்கத்தினர்களை நேரடியாக மக்கள் தேர்ந்தெடுக்கும் முறைதான் சரி



யானது என்றும் சொல்லிக்கொண்டு, பஞ்சாயத்துகளுக்கு பரிபூர்ண அதிகாரம் கொடுக்கவேண்டுமென்றும் சொல்லிக்கொண்டு எனது பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

SRI A. S. DURAISWAMI REDDIAR : கனம் சபா நாயகர் அவர்களே, இந்த பஞ்சாயத்து மசோதாவில் அங்கத்தினர்களை நேரடியாக தேர்ந்தெடுப்பதா அல்லது பஞ்சாயத்து போர்டு அங்கத்தினர்களால் தேர்ந்தெடுப்பதா என்பதுதான் முக்கியமான விஷயம். இதற்கு முந்தி நேரடியாக தேர்ந்தெடுக்கப்படவேண்டும் என்று இந்த காங்கிரஸ் சர்க்காரால்தான் சொல்லப்பட்டது, அதே காங்கிரஸ் சர்க்காரால்தான் இப்போது பஞ்சாயத்து போர்டு அங்கத்தினர்களால் தேர்ந்தெடுக்கப்படவேண்டும் என்று சொல்லப்படுகிறது. இதில் எந்தவிதமாக இருந்தபோதிலும் சர்க்காருக்கு இதனால் யாதொரு பாதகமும் இல்லை, சாதகமும் இல்லை. சர்க்கார் இதுவரையிலும் அவர்களுடைய நேரிடையாக அனுபவத்தின் பேரிலும், அதிகாரிகளுடைய ரிப்போர்ட்டின் பேரிலும் தெரிந்துகொண்ட அனுபவத்தின் பேரிலும் இந்த முறை சரியாக இல்லை என்று நினைத்துதான் இந்த திருத்தத்தைத் கொண்டு வந்திருக்கிறார்கள். இந்த பஞ்சாயத்து சம்பந்தமாக எனக்கு நேரடியாகத் தெரிந்த அனுபவத்தில் காரியங்களைப்பற்றி சொல்ல ஆசைப்படுகிறேன். நான் பஞ்சாயத்து போர்டு நிர்வாகம் செய்து வரும் கிராமத்தில் அதிலும் மேஜர் பஞ்சாயத்தில்தான் நான் இருந்து வருகிறேன். அங்குள்ள பஞ்சாயத்து போர்டில் அநேக வருஷகாலமாக ஒரு ஆள் தான் தலைவராக இருந்து வருகிறார்கள். அந்த தலைவரைப் பற்றி அந்த கிராமத்திலும் நல்ல அபிப்பிராயம் இல்லை. தேர்தல் நடக்கும்போதே அந்த கிராமத்தில் அவரை எதிர்த்த அங்கத்தினர்களை எல்லா வார்டுகளிலும் நிறுத்தினார். அப்போதும் அவரையே திரும்பவும் தலைவராகத் தேர்ந்தெடுத்தார்கள். நேர் எதிரிடையான அங்கத்தினர்களும் இருந்து வந்தார்கள். சாதாரணமாக பஞ்சாயத்து போர்டில் பிரஸிடென்டே அஜண்டாவைக் கொண்டுவந்து கூட்டத்தை நடத்துவது வழக்கமாக இருந்தது. இவ்விதம் எந்த விஷயம் வந்தாலும் அதற்கு ஸாங்க்ஷன் செய்யக்கூடாது என்ற தோரணையில் அங்கு நடந்து வருகிறது. இவ்விதமாக அந்த பஞ்சாயத்து இதே ரீதியில் தான் 20 வருஷகாலமாக நடந்து வருகிறது. அங்கு பஞ்சாயத்து தலைவராக இருப்பவரிடம் அங்குள்ள கிராமத்தாருக்கும் மிகுந்த பயம். அவரை எதிர்த்து யாரும் நிற்பதில்லை. இந்த நிலைமையில்தான் தலைவராக வருகிறாரே தவிர, வேறு ஒருவிதமான செல்வாக்கும் கிடையாது. அங்கு எந்த விஷயம் வந்தாலும் ஸாங்க்ஷன் செய்வது கிடையாது. பஞ்சாயத்துபோர்டு தலைவருக்கும், பஞ்சாயத்து போர்டு அங்கத்தினர்களுக்கும் தகராறு இருந்து கொண்டே வருகிறது. அங்குள்ள எக்ஸிக்யூட்டிவ் ஆபீஸர் எப்பொழுதும் பஞ்சாயத்து தலைவரின் பக்கத்தில்தான் இருந்து வருகிறார்கள். பஞ்சாயத்து தலைவருடைய தயவு எக்ஸியூட்டிவ் ஆபீஸருக்கு இருக்கவேண்டும். இவ்விதமாக இருந்து வருகிறது. இதல்லாமல் அங்கு ஏதாவது எல். டி. ஓ. க்களில் இருந்து ஏதாவது வேலை வந்தால் அந்த கிராண்ட்டை வாங்கி பஞ்சாயத்து தலைவரே கட்டிடங்களை கட்டிவிடுகிறார். அவைகளைத் திறப்பதற்கு அப்போதுள்ளவர்கள் வரவில்லை. கழிந்த மந்திரி சபை இருந்தபோது கட்டப்பட்ட கட்டிடத்தை இப்போது மந்திரி சபையார் திறந்து வைத்தார்கள். இவ்விதமாக பஞ்சாயத்து போர்டு அங்கத்தினர்களுக்கு பல கஷ்டங்கள் இருந்து வருகின்றன. பஞ்சாயத்து போர்டு தலைவராக வருவதற்கு எலக்ஷன் நடந்தால் ஒரு அங்கத்தினரை மெஜாரிட்டியாக பலம் இருக்கக்கூடிய ஒருவரை நிறுத்தி வைக்கிறார்கள். எதிராகவும் இரண்டு மூன்று பேர்களையும் நிறுத்தி வைக்கிறார்கள். நம்பிக்கை கூடுதலாக இருப்பவர்களை மாத்திரம் அதற்கான அங்கத்தினர்கள் ஆதரிக்கிறார்கள். அங்கத்தினர்கள் நம்பிக்கைக்கு தகுந்தவாறு தலைவரைத் தேர்ந்தெடுத்தால் நிர்வாகம் (smooth) சுமுகமாக நடக்கும். ஆலந்தூர் பஞ்சாயத்து போர்டில்தான் இவ்விதமாக தகராறுகள் நடக்கிறது என்று நினைத்திருந்தேன். ஆனால் அநேக பஞ்சாயத்து போர்டுகளிலும் தலைவருக்கும் அங்கத்தினர்களுக்கும் தகராறுகள் இருந்து வருவதாக கேள்விப்படுகிறேன். ஆகவே பஞ்சாயத்து போர்டு அங்கத்தினர்களுக்கு பணம் கொடுத்து மாற்றிவிடுவார்கள் என்று சொல்லப்பட்டது. அவ்விதம் அங்கத்தினர்களுக்கு கொடுக்க வேண்டுமென்றால் ஆயிரக்

[Sri A. S. Duraiswami Reddiar] [9th November 1957

கணக்கில் கொடுக்கவேண்டும். அவ்விதம் பார்த்தாலும் வோட்டர்களுக்கு எட்டு அணு வீதம் கொடுத்தாலே மாற்றிவிடலாம். ஆகவே பஞ்சாயத்து போர்டு மெம்பர்களால் தேர்ந்தெடுத்தால்தான் நிர்வாகம் நல்லதாக நடக்கும் என்பது என்னுடைய அபிப்பிராயம். ஆகவே இந்த விதத்தில் கொண்டுவந்திருக்கும் திருத்தத்தை நான் ஆதரிக்கிறேன். இரண்டாவதாக பஞ்சாயத்து போர்டுகளில் கை தூக்கி வோட்டுப் போடக்கூடிய ஒரு தகராறு இருந்துவருகிறது. இதை மாற்ற வேண்டும் என்று அரசாங்கமும் ஓரளவு ஒத்துக்கொண்டார்கள். இதை விதிகளில் மாற்றம் செய்யவேண்டும் என்று சொன்னார்கள். இதை விதிகளில் மாற்றம் செய்தால் மாத்திரம் போதாது. லோக்கல் போர்டு சட்டத்தில் கொண்டு வரவேண்டும். அவ்விதம் கொண்டு வராமல் விதிகளில் மாத்திரம் இருந்தால் சில கிராமங்களில் கை தூக்கி வோட்டுப் போடக்கூடிய முறை இருக்கலாம் என்று வந்துவிடும். இதனால் சில கெட்ட நடவடிக்கை உள்ளவர்களுக்குத்தான் அல்லது பலாத்காரம் உடையவர்களுக்குத்தான் அங்கு செல்வாக்கு ஏற்படும். ஆகவே ரகசிய வோட்டு முறை இருக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய அபிப்பிராயம்; ஆகவே இந்த முறையைச் சட்டத்தில் சேர்க்க வேண்டும் என்பதுதான் என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம் என்பதைச் சொல்லிக்கொண்டு முடித்துக்கொள்ளுகிறேன்.

11-26 a.m. **Sri K. RAMACHANDRAN** : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த பஞ்சாயத்து பில்லைப் பொறுத்தவரையிலும் இதை பொறுக்கு கமிட்டிக்கு அனுப்பி திரும்பி வந்த பிறகாவது இந்த முக்கியமான பிரச்னை, அதாவது நேரடியாக ஜனங்களே பிரஸிடண்ட்டை தேர்ந்தெடுக்க வேண்டுமென்கின்ற முறை வந்துவிடும் என்று எதிர்பார்த்தோம். ஆனால் அரசாங்கம் இந்த விஷயத்தில் அசையவில்லை என்ற ஒரு நிலைமைதான் இப்பொழுது தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதில் ஒரு விஷயம், அதாவது ரகசிய வோட்டு முறை வேண்டும் என்பதை அரசாங்கம் ஒப்புக்கொண்டுவிட்டது பாராட்டுதற்குரியது. அந்த காரணத்தால் ஜனங்களே நேரடியாக தேர்ந்தெடுத்தால் கட்சி பிரதி கட்சிகள் உண்டாகும் என்றும், அதற்கு இடமில்லாதவாறு செய்வதற்காகத்தான் இவ்விதம் செய்யப்பட்டிருக்கிறது என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் எந்தக் கட்சியிலுமில்லாத சிலரால் பல நன்மைகளை அடைய முடியும், கட்சிப் பிரதி கட்சிகளுக்கு அப்பாற்பட்டுக்கூட சில நபர்கள் பொதுமக்களுக்கு அல்லது அந்தந்த கிராமங்களுக்கு நன்மை செய்யக்கூடியவர்களாக இருக்கிறார்கள் என்பதை நாம் பார்க்கிறோம். அவர்கள் எந்தக் கட்சியிலும் சேராதவர்களாக இருக்கலாம். அப்படிப்பட்டவர்களுடைய சேவை இந்த கிராமத்திற்கு வேண்டுமானால் அவர்கள் நேரடியாக எலக்ஷன் இருந்தால்தான் வர முடியும். ஆகவே திறமை படைத்தவர்கள் இம்மாதிரி பதவிகளில் வரவேண்டுமானால் டயரக்ட் எலக்ஷன் வேண்டியிருக்கிறது. திறமை படைத்தவர்களை ஒதுக்கக்கூடிய இந்த இண்டயரக்ட் எலக்ஷன் முறை வரவேற்கத் தக்கதாயில்லை. 1950-ம் ஆக்ட்டுக்கு முன்னாலும் அங்கத்தினர்கள் தேர்ந்தெடுத்து வந்தார்கள். அதன் பின்னால் இப்போது ஐந்தாறு வருடங்களாக ஜனங்கள் தேர்ந்தெடுத்து வந்தார்கள். அப்போது எல்லாம் அதனுடைய முறையில் கஷ்டங்கள் ஏற்பட்டன என்று சொல்வதற்கில்லை. ஆகவே மறுபடியும் பழைய முறையில் போவதில் ஏதோ அடிப்படையான கருத்து இருக்கிறது என்றுதான் நான் சொல்லுவேன். ஏனென்றால், அவசியமில்லாத இந்த பிரச்னையில் இந்த அரசாங்கம் இவ்வளவு ஆணித்தரமாக ஆத்திரமாக நிற்பது ஏன் என்றுதான் நான் நினைக்கிறேன். இந்த ரகசிய முறையில் பொது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டால்தான் நல்ல திட்டங்களை எல்லாம் நல்ல முறையில் அமுல் செய்ய வசதியாக இருக்கும் என்று சொல்லிக்கொள்ளுகிறேன். இதிலே நேரடியாக தேர்தல் வந்துவிடுமானால் பொதுமக்களிடையே தேர்தலிலுள்ள லஞ்ச ஊழல்களையும், ஜாதி வெறி தாண்டவமாடுவதும் இல்லாமல் போகும். அதோடு நல்ல முறையில் தலைவர் வருவதற்கும் உதவியாக இருக்கும். இதை வற்புறுத்தும்பொழுது இண்டயரக்ட் எலக்ஷனை வற்புறுத்தும்பொழுது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவருகின்ற முறையை இந்த பொறுக்கு கமிட்டி



9th November 1957] [Sri K. Ramachandran]

கொண்டு வருவார்கள் என்று நினைத்தோம். அதையும் காணவில்லை. நேரடியாக எடுத்து பார்த்தோமானால் பஞ்சாயத்து மெம்பர்கள் பொது மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். அவர்களால் பஞ்சாயத்து தலைவர் தேர்ந்தெடுக்கப்படுகிறார். அவ்விதம் தேர்ந்தெடுத்தபிறகு ஐந்து வருஷத்திற்கு நாம் அவரை ஒன்றும் செய்யமுடியாது. அவர் ஏதாவது தவறு செய்தாலும் கூட அவரை வெளியேற்ற இவர்களுக்கு அதிகாரம் கிடையாது. அதேசமயத்தில் ஐ.எல்.பி. நீக்கலாம். சர்க்காருக்கு நேரடியாக கீழே இருக்கிறது ஐ.எல்.பி. சட்டத்தைப் பார்த்தால், சர்க்கார், ஐ.எல்.பி., அதன்பின் பஞ்சாயத்து தலைவர், அதன்பின் மெம்பர்கள், என்கின்ற முறையை பார்த்தால் ஜனநாயகத்தை அமல் செய்யமுடியாத நிலையில் இருக்கிறது. பஞ்சாயத்து முறையைப்பற்றி சொன்னார்கள். பஞ்சாயத்துகளில் என்ன இருந்தது. பல ரிக்கார்டுகளை நான் பார்த்திருக்கிறேன். யார் எந்த பார்ட்டியாக இருந்தாலும் அங்கு செல்வாக்குடன் இருப்பவர்களை பஞ்சாயத்து தலைவர்களாக தேர்ந்தெடுத்திருப்பதை பார்த்திருக்கிறேன். ஒரு சிலர் ஒரே முறையில் தங்கள் கருத்துகளை சொன்னார்கள். ஏதோ போட்டியை தவிர்ப்பதற்காக நேரடியாக தேர்ந்தெடுப்பதை மாற்றுகிறோம் என்று சொல்லுகிறார்கள். ஆனால் அவ்விதம் முன்னால் எல்லாம் இல்லாமல் நேரடியாக தேர்ந்தெடுக்கக்கூடிய முறை இருந்திருக்கிறது. அதை கனம் மந்திரி அவர்களுக்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அந்த முறையிலும்—பஞ்சாயத்து முறைக்கு சரியான முறையா இது என்று பார்த்தாலும்—கண்டிப்பாக பஞ்சாயத்து போர்டு தலைவர் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவராக இருக்கவேண்டும் என்பதை வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன். பஞ்சாயத்து போர்டு தலைவரை ஜனங்கள் தேர்ந்தெடுப்பதால் ஒரு ஆபத்தும் வரப்போவதில்லை. நாம் ஜனநாயகத்திற்குக் கட்டுப்பட்டுத்தான் அந்த ஸ்தாபனத்தை நடத்தப்போகிறோம். தலைவர் ஒருவர் மட்டும் பஞ்சாயத்து போர்டை நடத்த முடியாது என்பது ரொம்பவும் வெளிப்படையாகத் தெரிந்த உண்மை. எல்லா அங்கத்தினர்களும்—கூடியவரை மெஜாரிட்டி அங்கத்தினர்கள்—தலைவரை ஆதரித்து வந்தால்தான் அவர் பஞ்சாயத்து போர்டை நடத்த முடியும். ஆகையால், பஞ்சாயத்து போர்டு தலைவரை மக்கள் தேர்ந்தெடுப்பதில் ஏதோ ஆபத்து இருக்கிறதென்பதை அரசாங்கம் வலிய வலிய எடுத்துச்சொன்னாலும் அதை நம்புவதற்கில்லை. இந்தக் காரணங்களால் பஞ்சாயத்து போர்டு தலைவரை மக்கள் நேரடியாகத் தேர்ந்தெடுக்க வேண்டும். அப்படி இல்லாமல் தலைவர் மறைமுகத் தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்றால், அவர் தலைவராக இருக்கவேண்டாம் என்று மற்ற அங்கத்தினர்கள் கருதும் சமயத்தில் அவரைக் குறித்து நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவருவதற்காவது மசோதாவில் வகை செய்ய வேண்டுமென்று சொல்லிக்கொண்டு என் பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

**Sri M. KALYANASUNDARAM** : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மசோதாவின் ஒவ்வொரு ஷரத்தையும் எதிர்க்க வேண்டிய நிலையில் நான் இருக்கிறேன் என்பதை முதலில் தெரிவித்துக் கொள்கிறேன். முக்கியமாக, நம் பஞ்சாயத்துச் சட்டத்தில் பஞ்சாயத்துத் தலைவரை நேரடியாக ஜனங்களே தேர்ந்தெடுப்பது என்ற ஒரு நல்ல அம்சம் இருக்கிறது. அதை இப்போது அரசாங்கத்தார் மாற்ற விரும்புகிறார்கள்; வெகு அவசரமாகவும் மாற்றுகிறார்கள்; பொறுக்குக் கமிட்டியிலும் அதற்கு முன்பும் நாங்கள் ஆட்சேபணைகளை எடுத்துச் சொன்ன போதிலும் "ஆலோசிக்கிறோம்" என்று அந்த சமயத்தில் வாக்குறுதி கொடுத்துவிட்டு, இப்போது ஆலோசனைக்குப் பிறகு என்ன காரணத்தினாலோ கொஞ்சம் கூட விட்டுக்கொடுக்க முடியாது என்று மந்திரிசபையின் சார்பில் கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். இதற்கு மேல், எதிர்க் கட்சிக்கு வேறு வழியில்லை. ஆகவே இப்போது இந்த மசோதாவைப் பூராவும் எதிர்க்கவேண்டிய நிர்ப்பந்தத்தில் நாங்கள் இருக்கிறோம். 11-30 a.m.

கனம் போலீஸ் அமைச்சர் அவர்கள் காலையில் பேசும்போது ஜனநாயகத்தைப் பற்றி சில புதிய கருத்துக்களை சபை முன் வைத்தார்கள். அப்போது, தேர்தல் மூலம் சர்வாதிகாரம் ஏற்படும் என்றும், தேர்தல்

[Sri M. Kalyanasundaram] [9th November 1957

சுமுகமாகப் போவதுதான் ஜனநாயகத்தின் மேன்மை என்றும் கூறி நமக்கு அவர் சில பாடங்கள் சொல்லிக்கொடுத்தார். அவருடைய அந்த அபிப்பிராயம், ஜனநாயகத்தைப்பற்றி அவர் கொண்டிருக்கும் மனோபாவத்தின் விளைவு ஆகும். தேர்தல், ஜனநாயகம் முதலியவைகள் எல்லாம், தாங்கள் சட்டசபைக்கு வந்து மந்திரிகளாகிவிட்ட பிறகு, தங்களுடைய பிரசங்கங்களை நிகழ்த்துவதற்கும் அவைகள் பத்திரிகைகளில் பிரமாதமாக வருவதற்கும் ஏற்பட்டவை என்று கருதும் சிலர், ஜனநாயகம் என்பதை உணர்வது ரொம்பக் கஷ்டமானது. நான் நினைப்பது: "ஜனநாயகம் என்பது, ஜனங்கள் உற்சாகமாக தேர்தல் காரியத்தில் பங்கெடுத்துக்கொள்வது மட்டுமல்ல. தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதி தன்னைச் தேர்ந்தெடுத்த ஸ்தாபனம், தேர்ந்தெடுத்த மக்கள் ஆகியவர்களிடம் விஸ்வாசத்துடனும் பற்றுதலுடனும் இருந்து அவர்கள் கொடுக்கும் வேலைத் திட்டங்களை அவர் நிறைவேற்றும் சூழ்நிலை இருக்கும்படி செய்ய வேண்டுமென்பதுதான் ஜனநாயகத்தின் முக்கிய அம்சம்." அப்படிப் பார்த்தால், பஞ்சாயத்து சட்டம் முன்னால் போகிறதா அல்லது பின்னால் போகிறதா என்பதை கனம் மந்திரி அவர்கள் கூட தெரிந்துகொள்ள முடியும். அப்படிப் பார்த்தால், மசோதாவில் குறிப்பிட்டுள்ள தலைவர் தேர்தல் முறை ஜனங்களை உற்சாகப்படுத்துமா? அது ஜனங்களை ஒருக்காலும் உற்சாகப்படுத்தாது. ஜனங்களால் தலைவர் தேர்ந்தெடுக்கப்பட்டால், அந்தத் தலைவரின் நிர்வாக நடவடிக்கைகளில் ஜனங்களின் லட்சியம் பிரதிபலிக்கும். அந்த நிலையில் அவருடைய நடவடிக்கைகளுக்கு ஜனங்கள் அதிகமாக ஆதரவு கொடுப்பார்கள். அப்படிப்பட்ட பஞ்சாயத்து ஜீவனுள்ளதாகவும், மக்களின் எண்ணத்தைப் பிரதிபலிப்பதாகவும் இருக்கும். ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பஞ்சாயத்து போர்டு அங்கத்தினர்கள் தலைவரைத் தேர்ந்தெடுத்தால், உண்மையில் ஜனங்களின் எண்ணத்தைப் பிரதிபலிப்பவர்கள் தலைவராக வரமுடியாது; தலைவராக வருபவர் ஜனங்களிடம் செல்வாக்கை இழந்தவராக இருப்பார்; செல்வாக்கை இழந்த அப்படிப்பட்ட தலைவர் ஐந்து வருஷ காலம் பதவியிலிருப்பது விரும்பத்தக்கது அல்ல; ஜனங்களிடையே நம்பிக்கையையும் செல்வாக்கையும் இழந்த அவர் ஐந்து வருஷ காலம் பதவியில் இருந்தால், அவர் ஜனங்கள் மீது உட்கார்ந்துக்கொண்டிருப்பவராகவே இருப்பார். ஏதோ பஞ்சாயத்து போர்டு நடக்கிறது என்ற கேள்விக்கிடமாகத்தான் அது இருக்கும். இந்த தேர்தல் முறை ஜனநாயகத்துக்கு விரோதமானது. தேர்தல் முறையில் ரகசிய வோட்டு முறையை அரசாங்கத்தார் ஒப்புக்கொண்டுள்ளபோதிலும், அவர்கள் கொண்டுவர விரும்பும் இந்த மறைமுகத் தேர்தல் முறை ஜனநாயகத்திற்கு விரோதமானது ஆகும். இந்த முறை கிராமத்தில் ஒற்றுமையைக் கெடுக்கக்கூடியது என்பதை கனம் மந்திரி அவர்களுக்கு எடுத்துச்சொல்ல விரும்புகிறேன். சில தினங்களுக்கு முன்பு ஜாதி வித்தியாச எண்ணங்களைக் களைய வேண்டுமென்று கனம் மந்திரி அவர்கள் சொன்னார்கள். நாட்டிலுள்ள நிகழ்ச்சிகளும் அதைத்தான் எடுத்துக்காட்டுகின்றன. கிராமத்திலுள்ள பொதுமக்கள் தலைவரைத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்ற முறை இருந்தால்தான், தலைவராக வரக்கூடியவர் கிராமத்திலுள்ள ஒவ்வொரு பிரஜையிடமும் செல்வார், வோட்டுக் கேட்பதற்காக. அந்த நிலையில் ஜாதி வித்தியாச எண்ணங்கள் குறையும்; மக்களிடையே ஒற்றுமை ஏற்படும். பஞ்சாயத்து சபையைச் சேர்ந்த அங்கத்தினர்கள் பஞ்சாயத்துத் தலைவரைத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்ற முறை இருந்தால், தலைவராக வரக்கூடியவர் எல்லா ஜனங்களிடமும் வோட்டுக் கேட்பதற்குச் செல்லமாட்டார். அந்த நிலையில் "எல்லா மக்களும் தன் மக்கள்" என்ற எண்ணம் தலைவருக்கு ஏற்படாது. ஆகவே இப்போதுள்ள நேரடித் தேர்தல் முறையை எடுப்பது தவறு. நேரடித் தேர்தல் முறையை நீக்கி மறைமுகத் தேர்தல் முறையைக் கொண்டு வருவதை "பஞ்சாயத்து ஜனநாயகம்" என்ற முறையில் செய்கிறேன் என்று கனம் மந்திரி அவர்கள் சொல்வதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. "இப்போதுள்ள முறை எங்களுக்குச் சங்கடமாக இருக்கிறது; ஆகவே இந்த முறையைக் கொண்டுவருகிறோம்" என்று சர்க்கார் சொன்னால் அதை நான் புரிந்துகொள்ள முடியும். இதற்கு முன்பு, "ரோட் ட்ரான்ஸ்போர்ட் அதாரிடி" போன்ற ஸ்தாபனங்களில் உத்தியோகப்



9th November 1957] [Sri M. Kalyanasundaram]

பற்றற்றவர்கள் இருக்கவேண்டுமென்று நாங்கள் சொன்னபோது, அது சர்க்காருக்கு சங்கடமாக இருந்தது. பஞ்சாயத்துத் தலைவர் தேர்தல் மறைமுக முறையில் இருப்பது பஞ்சாயத்துஜனநாயகம் என்றும், இந்தக் கருத்தை ஆயிரம் வருஷங்களுக்கு முன்பு செதுக்கப்பட்ட கல்வெட்டிலிருந்து எடுத்து சபையில் சமர்ப்பிக்கிறேன் என்றும் கனம் மந்திரி அவர்கள் சொல்வதை என்னால் ஒப்புக்கொள்ள முடியவில்லை. இது ஜனநாயகம் அல்ல; ஜனநாயகத்தின் பெயரால் இது இப்போது செய்யப்படுகிறது.

மேலும், பஞ்சாயத்து போர்டு அங்கத்தினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பஞ்சாயத்து போர்டு தலைவர் பஞ்சாயத்து சபையின் நம்பிக்கைக்கு பாத்திரமற்றவராக ஆகிவிட்டால், அப்போது அவரை பதவியிலிருந்து சபை அங்கத்தினர்கள் நீக்குவதற்காவது மசோதாவில் சர்க்கார் வகை செய்திருக்கிறார்களா? அதுவும் இல்லை. தவிரவும், தலைவரின் பதவிக் காலத்தை ஐந்து வருஷங்களாகவும் அதிகரித்திருக்கிறார்கள்.

மசோதாவில், பஞ்சாயத்து போர்டு தலைவர் தேர்தலை மறைமுக முறைக்கு கொண்டுவருகிறார்கள்; மறைமுகமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர் பஞ்சாயத்து சபையின் நம்பிக்கையை இழந்த காலத்தில் அவரை பதவியிலிருந்து நீக்குவதற்கு சபை அங்கத்தினர்களுக்கு அதிகாரம் கொடுக்கப்படவில்லை; தலைவரின் பதவிக்காலத்தை ஐந்து வருஷங்களாகவும் அதிகரித்திருக்கிறார்கள். பஞ்சாயத்து போர்டு தலைவரை பதவியிலிருந்து நீக்குவதற்கு ஓர் அதிகாரிக்கு மட்டும் அதிகாரம் உண்டு; "இன்ஸ்பெக்டர் ஆப் லோகல் போர்ட்ஸ்"-க்கு மட்டும் அந்த அதிகாரம் உண்டு. இதுதான் "ஜனநாயகம்; சிறந்த பஞ்சாயத்து ஜனநாயகம்," என்றும், இதை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றும் சொன்னால், எப்படி இதை ஏற்றுக்கொள்வது என்று எங்களுக்குத் தெரியவில்லை. ஆகையால். இந்த மசோதாவை எங்கள் கட்சியின் சார்பில் அடியோடு எதிர்க்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொண்டு என் பேச்சை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

*SRI V. K. RAMASWAMY MUDALIYAR: கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மசோதா சம்மந்தமாக, ஆரம்பத்தில் என்னுடைய அபிப்பிராயங்களை பூராவும் சொல்லியிருக்கிறேன். இப்போது இரண்டொரு விஷயங்களை மட்டும் சொல்லிவிட்டு என் பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன். முதன் முதலாக, பஞ்சாயத்து போர்டு தலைவரை பஞ்சாயத்து போர்டு அங்கத்தினர்கள்தான் தேர்ந்தெடுக்க வேண்டுமென்று நான் சொன்னேன். இப்போதும் அதே அபிப்பிராயத்தைத்தான் சொல்ல விரும்புகிறேன். காரணம், தலைவரை ஜனங்கள் தேர்ந்தெடுக்கும் முறையிலும் சில கஷ்டங்கள் இருக்கின்றன. ஆகையால் பஞ்சாயத்து தலைவர் மறைமுக முறையில் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்றுதான் இப்போதும் நான் அபிப்பிராயப்படுகிறேன். ஆனால், அம்மாதிரித் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவரைக் குறித்து அவசியமானபோது பஞ்சாயத்து போர்டு அங்கத்தினர்கள் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவருவதற்கு மசோதாவில் வகை செய்யப்பட வேண்டும். அப்படி இல்லாவிட்டால் அந்த நிர்வாகம் ஒரு சர்வாதிகாரமாகத்தான் இருக்கும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்காக ஷரத்து மசோதாவில் இருக்க வேண்டியது அவசியம். தங்களுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவருவது போன்ற நடவடிக்கைகள் எடுக்கப்படாது என்ற எண்ணத்தில் பல பஞ்சாயத்து போர்டு தலைவர்கள் நிர்வாகத்தை சரிவர நடத்தமாட்டார்கள் என்பது என் தாழ்மையான அபிப்பிராயம். ஆகையால், கண்டிப்பாக நம்பிக்கையில்லாத் தீர்மானம் சம்மந்தமான "க்லாஸ்"-ஐ மசோதாவில் புகுத்த வேண்டுமென்றுதான் நான் சொல்கிறேன்.

சர்க்கார் கட்சியைச் சேர்ந்தவர்கள்கூட இம்மாதிரியான ஒரு திருத்தத்தைக் கொடுத்திருக்கிறார்கள். அதிலிருந்து என்ன தெரிகிறது என்றால் அவர்களுடைய கட்சியில்கூட அப்படிப்பட்ட அபிப்பிராயம் இருக்கிறது என்று தெரிகிறது. அதைக்கண்டு நான் சந்தோஷப்படுகிறேன். அதனால் சர்க்கார் இதை எப்படியாவது அங்கீகாரம் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்ளு

[Sri V. K. Ramaswami Mudaliyar] [9th November 1957

கிறேன். இம்மாதிரியான ஒரு சந்தர்ப்பத்தை அவர்கள் கொடுக்காவிட்டால் நாங்கள் எதையும் எதிர்க்கும்படியாக நேரிடும் என்பதை இந்த சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்ளுகிறேன். நாங்கள் மறைமுகத்தேர்தல் வேண்டும் என்று கேட்டுக்கொண்டோம். அது அவசியம் என்று கருதி அதை சர்க்கார் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். அந்த முறையைக்கண்டிப்பாக அமுலுக்குக் கொண்டுவரவேண்டும் என்பதையும் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். அதைப்பற்றியும் சந்தோஷம். ஐந்து வருஷங்களுக்கு ஒரு முறை தேர்தல் கூடாது என்று நான் ஏற்கெனவே சொல்லி இருக்கிறேன். அப்படி இல்லாமல் மூன்று வருஷங்களுக்கு ஒரு முறை இருக்கவேண்டும் என்று சொன்னேன். அப்படி இருந்தால்தான் தலைவர்களுக்கு ஒரு அச்சமும் பயமும் இருக்கும். அப்பொழுது தான் அவர்கள் நல்ல முறையில் வேலை செய்வார்கள். அவர்களுடைய வேலைகள் சரிவர நடைபெறுவதற்கு சந்தர்ப்பம் ஏற்படும். தொடர்ந்தார்போல் அவர்கள் இருந்தால் பஞ்சாயத்து தலைவர்கள் சரியானபடி பணியாற்ற மாட்டார்கள் என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். இதையும் சர்க்கார் அங்கீகரிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு மூன்று வருஷங்களுக்கு ஒரு முறை தேர்தல் நடத்தும்படியான ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டு என்னுடைய பேச்சை இத்துடன் முடித்துக்கொள்ளுகிறேன்.

11-40 a.m. * **THE HON. SRI M. BHAKTAVATSALAM** :கனம் சபாநாயகர் அவர்களே, கனம் அங்கத்தினர்கள் இந்த விவாதத்தில் கலந்து கொண்டு தங்களுடைய கருத்துக்கள் பலவற்றை வெளியிட்டதற்கு நான் அவர்களை பாராட்டுகிறேன். அப்படி கருத்துக்களை வெளியிடும்போது அரசாங்கத்தின் அபிப்பிராயத்தையும் விளக்கிக் கூறினார்கள். அவர்கள் சொன்னதையே மீண்டும் மீண்டும் வற்புறுத்தி விவாதித்தார்கள். தலைவரை நேரடியாக பஞ்சாயத்து வோட்டர்கள் எல்லோரும் சேர்ந்து தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். அதுதான் ஜனநாயக முறை, அதில் தான் ஜனநாயகம் இருக்கிறது, மற்ற முறை ஜனநாயகத்துக்கு முரண்பாடானது என்பதைப் பற்றி குறிப்பிட்டார்கள். ஜனநாயகம் என்ற வார்த்தைகள் வெகு சுலபமாக அடிக்கடி கூறப்படுகின்றன. ஜனநாயகம், சோஷலிஸம், முதலாளித்துவம் முதலிய வார்த்தைகள் இப்பொழுது அடிக்கடி இங்கே கையாளப்படுகிறது. ஆட்சியாளர்களுக்கு ஜனநாயகம் தெரியாது என்றும் அவர்கள் பத்தாம் பசலியைச் சேர்ந்தவர்கள் என்றும் சொல்லப்படுகிறது. இப்படியெல்லாம் சொல்வது சுலபம் தான். நான் ஏதோ உத்தரமேரூரைப்பற்றி சொன்னபோது பத்தாம் பாலி பேச்சாக இருக்கிறது என்று சொல்லப்பட்டது. அதைப்பற்றி நான் எதற்காகச் சொன்னேன் என்பதைப்பற்றிகூட புரிந்து கொள்ளாமல் இங்கே பேசப்படுகிறது. பத்தாம் பசலி முறையில் பேசுவதாகச் சொல்வது மிகவும் சுலபம். கம்யூனிஸ்டு கட்சித் தலைவர் பேசிய காலத்தில் ஜனநாயகத்தைப் பற்றிப் பேசினார். ஜனநாயகம் என்ன என்பதைப்பற்றி பாடம் கற்றுக்கொள்ள நான் தயாராக இருக்கிறேன். அதில் எனக்கு பரிபூரண நம்பிக்கை இருக்கிறது. அவருடைய கட்சியில் அவர்களுடைய தலைவர்களை எப்படி தேர்ந்தெடுக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன். அல்லது ரஷ்யாவில் அவர்களுடைய தலைவர்களை எப்படி தேர்ந்தெடுக்கிறார்கள், அல்லது ஆளும் கட்சியை எப்படி தேர்ந்தெடுக்கிறார்கள். அதுவும் ஜனநாயக முறைதான். ஓரளவு இங்கிலாந்திலும் ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக்கிறார்கள். அங்கேயெல்லாம் எப்படி தேர்ந்தெடுக்கிறார்கள் என்பதைப்பற்றி அவருக்கு நன்றாகத் தெரிந்திருக்கும். அவர் அதை நேரில் பார்த்திருக்கலாம். அவர் அப்படி பார்க்காவிட்டாலும் டெலிவிஷன் மூலமாக பார்த்திருக்கலாம். அப்படி அவர் பார்த்திருப்பதால் அவரிடமிருந்து தெரிந்துகொள்ளவேண்டும். அவர் எப்படியெல்லாம் அவருடைய டெலிவிஷன் மூலமாக தெரிந்துகொண்டிருக்கிறார் என்பதை அவரிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டும். எங்களுக்கு கொஞ்சம் ஜனநாயகத்தைப்பற்றி தெரியும். பூராவும் தெரிந்துவிட்டதாக நாங்கள் கருதவில்லை. இன்னும் கற்றுக்கொள்ள தயாராக இருக்கிறோம். ஜனநாயக நம்பிக்கையில் எனக்கு குறைவில்லை என்பதை மட்டும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.



9th November 1957] [Sri M. Bhaktavatsalam]

தலைவர்கள் தேர்தல் முன்னுக்குப் போகவேண்டும் பின்னுக்குப் போகக்கூடாது என்று சொன்னார்கள். பின்னுக்குப் போவதை ஏற்றுக்கொள்ளக்கூடாது என்றும் சொன்னார்கள். முன்னுக்குத்தான் போக வேண்டும் என்று சொன்னார்கள். முன்னுக்குப் போய்விட்டு மறுபடியும் பின்னுக்குப் போய், அவ்வாறு முன்னுக்கும் பின்னுக்கும் போவது என்பது கூடாது என்றுதான் நான் சொல்லுகிறேன். அதற்கு நாம் பின்னுக்குப் போவதே நல்லது. ஒரு பக்கத்தில் தலைவரை நேரடியாக தேர்ந்தெடுத்து விட்டு இன்னொரு பக்கத்தில் அங்கத்தினர்கள் மூலமாக தேர்ந்தெடுக்கவேண்டும் என்று சொல்வது சரியாக இல்லை. அதனால்தான் பின்னுக்குப் போவது நல்லது என்று சொல்லுகிறோம். ஒரு பக்கத்தில் அங்கத்தினர்கள் தலைவர்களை தேர்ந்தெடுக்கவேண்டும் என்று சொல்லிவிட்டு மற்றொரு பக்கத்தில் வாக்காளர்கள் தேர்ந்தெடுக்கவேண்டும் என்று சொல்வது சரியல்ல. இது எப்படி இருக்கிறது என்றால் ஒரு ஜட்கா வண்டி முன்னுக்கும் பின்னுக்கும் போவது போல் இருக்கிறது. அந்த நிலைமை ஏற்படக்கூடாது என்பதுதான் எங்களுடைய கவலை.

தலைவர்களை ஒரு சில வார்டுகளிலிருந்து தேர்ந்தெடுத்துவிட்டு அந்த தலைவரே சில அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுக்கவேண்டும் என்று சொல்வதும் ஜனநாயகம்தான். அவரே அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுத்து அவரே ஆலோசகராக இருந்து அதிகாரத்தை நடத்துவதாக இருந்தால் அது வேறு விஷயம். அதுவும் ஜனநாயகம் இல்லை என்று சொல்ல முடியாது. அது பஞ்சாயத்து ஆட்சி அல்ல. தனி ஒரு மனிதர் தேர்ந்தெடுக்கப்பட்டு ஆட்சிபுரிவது என்பது பஞ்சாயத்து ஆட்சி என்று சொல்லமுடியாது. பல மக்களால் பல பிராந்தியங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு வந்த அங்கத்தினர்கள் நடத்தும் ஆட்சிக்குத்தான் பஞ்சாயத்து ஆட்சி என்று சொல்வது. ஆகையினால் எதையோ மனதில் வைத்துக்கொண்டு குழப்பத்தை ஏற்படுத்தக் கூடாது என்பதை தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர் தவறுகளையும் செய்திருக்கிறார்கள். அது எந்தக் கட்சியிலும் இருக்கிறது. எனக்குத் தெரியும் ஒரு காங்கிரஸ் அல்லாதார் எல்லா வாக்காளர்களாலும் தேர்ந்தெடுக்கப்பட்டவர் ஒரு சில இடங்களில் தவறுதல்கள் செய்திருக்கிறார். அப்படி நடைபெற்றும் வருகின்றன. இத்தகைய புகார்கள் வருகின்றன. அது எனக்கு நன்றாகத் தெரியும். நேரடியாக தேர்ந்தெடுக்கப்பட்டாலும் அவர்களும் தவறுகள் செய்வது உண்டு. ஆனால் தவறுகள் நடந்தால் அதற்கு நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள சட்டத்தில் இடம் வைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இன்னொரு அபிப்பிராயமும் தெரிவிக்கப்பட்டது. அது இந்த மசோதாவில் இல்லை. அதாவது நம்பிக்கை இல்லா தீர்மானம் கொண்டு வரலாம் என்று வைக்கப்பட்டால் போதும் என்று சொன்னார்கள். அதைப்பற்றி நாங்கள் அனுபவத்தில் பார்த்திருக்கிறோம். நம்பிக்கை இல்லாத் தீர்மானம் என்று ஒன்றை வைத்துவிட்டால் நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டு வருவதிலேயே காலம் கழிந்து போய்விடும். அப்படிப்பட்ட ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்து வோட்டுகள் சேகரிப்பதிலேயே காலம் கழிந்துபோய்விடும். ஜனநாயக முறைப்படி ஒரு மெஜாரிட்டி இருக்க வேண்டும் என்றும் ஐந்தில் மூன்று பங்கு தீர்மானம் செய்தால் போதும் என்றும் செல்லப்படுகிறது. அப்படி ஐந்தில் மூன்று பங்கு இருக்க வேண்டும் என்ற விதி இருக்கவேண்டும் என்றும் சொல்லப்படுகிறது. அப்படி ஐந்தில் மூன்று பங்கு நம்பிக்கை இல்லை என்று சொல்லி விட்டால் நீக்கிவிடலாம் என்று சொல்லுகிறார்கள். அது சரியல்ல. எல்லோரும்தான் சொல்லவேண்டும். முனிசிபாலிடியைப்பற்றி சொல்ல வேண்டியதில்லை, அது வேறு விஷயம். நமக்கு கிராம பஞ்சாயத்துக்கள் நல்ல முறையில் நடைபெறவேண்டும். கிராமங்களிலுள்ள கட்சிகளை மாற்றி அமைக்கவேண்டும். அதற்கு பஞ்சாயத்து துணைபுரியவேண்டும். அந்த நோக்கத்துடன் தான் இதில் ஈடுபட்டிருக்கிறோம். அதனால் தான் நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டு வருவதற்கு இடம் கொடுக்கவில்லை. அது இல்லாமல் இருப்பது நல்லது என்று அரசாங்கம் கருதுகிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு தலைவரிடம் நம்பிக்கை இல்லையென்றால் அவரை

நீக்குவதற்கு வேறு எவ்வளவோ வழி இருக்கிறது. பட்ஜெட்டை நிறைவேற்றாமல் தள்ளி விடலாம். இன்னும் மோசமான நிலைமை ஏற்பட்டால் அதை அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தி அவர் மூலமாக தலைவரை நீக்குவதற்கு இதில் இடம் இருக்கிறது. அதுபோதும் என்பது அரசாங்கத்தினுடைய கருத்து. ஆகவே நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வருவதற்கு விதி இருக்கவேண்டும் என்பது அவசியம் இல்லை. அது வேண்டாம் என்று தான் நான் சொல்லுகிறேன்.

இரண்டாவதாக, ஒரு பஞ்சாயத்துப் பகுதியிலிருந்து தொழிற் பகுதிகள் பிரிக்கப்படுவதைப்பற்றி கனம் அங்கத்தினர் சின்னதுரை அவர்கள் குறிப்பிட்டார்கள். அதிலே ஏதோ தொழிலாளர் முதலாளிகள் பிரச்னையைப் பற்றி குறிப்பிட்டார்கள். அந்தப் பிராந்தியத்தில் வசிக்கும் தொழிலாளர் நன்மையை ஒட்டி—தொழிலாளர் தலைவர் நன்மை வேறு—அந்தப் பிராந்தியத்தில் கிடைக்கும் வருமானம் அந்தப் பிராந்தியத்திலேயே செலவிடப்படவேண்டும் என்பதுதான் திட்டம். முதலாளிகளும் தொழிலாளிகளுக்கு எவ்வளவு வசதியைச் செய்துகொடுப்பதற்கு முடியுமோ அவ்வளவு வசதிகளையும் அபிவிருத்திகளையும் செய்வதற்கு வழி செய்யப்படும். பஞ்சாயத்து மூலமாக நடைபெறுவன நடைபெறக்கூடும். தொழில் அதிபர்கள் யாராயிருந்தாலும் சரி, கூட்டுறவு முறையில் நடைபெறுவதாய் இருந்தாலும் சரி, அவர்களைக் கொண்டு எவ்வளவு அபிவிருத்தி செய்யவேண்டுமோ அவ்வளவு செய்யவேண்டும். சில பஞ்சாயத்துக்களில் தொந்தரவு இருக்கலாம். இருந்தாலும் அவர்களைக் கொண்டு எவ்வளவு வேண்டுமோ அவ்வளவு செய்யலாம். கிடைக்கும் வருமானம் அங்குள்ள மக்களுக்குத்தான், தொழிலாளர் பகுதியாக இருந்தால் தொழிலாளர்களுக்குத்தான். அவர்களுக்கு முற்றிலும் பயன்படலாம். அந்த நோக்கத்துடன் தான் இதைத் தனியாகப் பிரிப்பது. தொழிலாளர் பகுதி மட்டும் இம்மாதிரி பிரிக்கப்படுவது அல்ல, சானிடோரியம் பகுதிகளும் பிரிக்கப்படுகின்றன, பஞ்சாயத்து எல்லையிலிருந்து. இதனால், ஜனநாயகம் ஒன்றும் கெட்டுப் போகவில்லை. அங்கேயும் ஒரு ஸ்தல ஸ்தாபன நிர்வாகம் நடைபெறுகிறதே தவிர, அரசாங்கமே நேராக அதிகாரிகளை நியமித்து நிர்வகிப்பது என்ற வகையிலே அல்ல.

பஞ்சாயத்துக்களுக்கு நீதி நிர்வாகம் இருப்பதைப்பற்றி கனம் அங்கத்தினர் சாமி சகஜானந்தா குறிப்பிட்டார்கள். அதிலே இரண்டு அபிப்பிராயங்கள் இருக்கின்றன. அந்தந்தப் பிராந்தியத்திற்கு ஏற்றவாறு, அங்கங்கே நடக்கும் நடைமுறைக்கு ஏற்றவாறு, சில இடங்களில் பஞ்சாயத்துக் கோர்ட்டு இருப்பது சௌகரியமாக இருக்கலாம். சில இடங்களில் அசௌகரியமாக இருக்கலாம். சில இடங்களில் பிடிக்காமல் இருக்கலாம். ஸ்தல ஸ்தாபனங்களின் கையில் நீதி நிர்வாகம் சேர்க்கக்கூடாது என்பது என்னுடைய சொந்த அபிப்பிராயம். அரசாங்கம் ஜாயிண்ட் கமிட்டி போட்டிருக்கிறது. பொதுவாக, ஸ்தல ஸ்தாபன நிர்வாகத்தைப்பற்றி கனம் அங்கத்தினர் தன்னுடைய அபிப்பிராயத்தைத் தெரிவித்த பிறகு, அரசாங்கம் நன்கு பரிசீலனை செய்து, நீதி விஷயத்தை அடியோடு பஞ்சாயத்திலிருந்து அகற்றிவிடலாம் என்பது பொதுவான அபிப்பிராயமாக இருந்தால் அந்த அம்சத்தை அரசாங்கம் நிச்சயமாக யோசிக்கும்.

பஞ்சாயத்து போர்டு அங்கத்தினர்களின் பதவிக் காலம் மூன்று வருஷங்கள் இருக்க வேண்டுமா, ஐந்து வருஷங்கள் இருக்கவேண்டுமா என்பதைப்பற்றி பேசினார்கள். ஒரு அங்கத்தினர் அவர்கள், சொன்னார்கள்—தேர்தலுக்கு நிற்கிறவர்களுக்கு வேண்டுமானால், கஷ்டம் இருக்கலாம், ஆனால் மக்களைப் பொறுத்தவரையில் தேர்தல் சீக்கிரம் சீக்கிரம் வருவதை வரவேற்பார்கள் என்று நானும் கவனித்திருக்கிறேன். கூர்ந்து கவனித்திருக்கிறேன். தேர்தலுக்கு நிற்கிறவர்களுக்கு கொண்டாட்டமாக இருக்கிறது என்றுகூடச் சொல்லலாம். அதிலும் தேர்தலில் பண்பட்டவர்கள். ஆனால், மக்களுக்குத் தொல்லையாகத் தான் இருக்கிறது. தேர்தல் வந்துவிட்டதே என்று கவலைப்படுகிறார்கள். ஏனென்றால் தேர்தலில் எத்தனை தொல்லை மக்களுக்கு? மக்கள் தான் அதிகமாக பாதிக்





கப்படுகிறார்கள். மொத்தத்திலே கிராமப் பஞ்சாயத்து நிர்வாகம் சீராக நடைபெறவேண்டுமானால், தேர்தல் ஐந்து வருஷங்களுக்கொருமுறை இருப்பது நல்லது. ஐந்து வருஷங்களுக்கு, ஒரு முறை தேர்தல் இருப்பதைவிட மூன்று வருஷங்களுக்கு ஒரு முறை தேர்தல் நடத்துவது அதிக ஜனநாயகத் தன்மை வாய்ந்தது இல்லையா என்று ஒரு அங்கத்தினர் குறிப்பிட்டார். அப்படியானால் வருஷத்திற்கொரு முறை தேர்தல் நடத்தினால் அதிக ஜனநாயகத் தன்மை வாய்ந்ததாக ஆய்விடுமா? ஆகவே, தேர்தலைப் பொறுத்தவரையில் இதற்கு ஒரு வரம்பு இருக்கவேண்டும். ஐந்து வருஷம் சரியாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். அந்த வகையிலே மூன்று வருஷங்கள் என்று இருப்பதை ஐந்து வருஷங்களாக நீடிக்கவேண்டும் என்ற ஒரு திருத்தம் இதிலே வந்திருக்கிறது.

டவுன்ஷிப் ஏற்பட்டதிலே என்ன நடந்து விட்டது என்று கனம் அங்கத்தினர் கரையாளர் அவர்கள் சொன்னார்கள். குற்றாலத்தைப்பற்றி குறிப்பிட்டார்கள். அங்கே நானும் கவனித்திருக்கிறேன். முன்பு சாதாரண பஞ்சாயத்தாக இருந்த காலத்தில் இருந்ததைவிட டவுன்ஷிப் வந்த பிற்பாடு எவ்வளவோ அதிக அபிவிருத்தி ஏற்பட்டிருக்கிறது. அதற்குமேல் செய்வதற்கு பணம் வேண்டும். பஞ்சாயத்தாக இருந்தால் மட்டும் அதிகப் பணம் வந்து விடாது. பஞ்சாயத்தாக இருப்பதைவிட டவுன்ஷிப்பாக இருப்பதினால் வசதி அதிகமாகியிருக்கிறது. துரிதமாக அபிவிருத்தி செய்ய முடியும் என்பதற்கு குற்றாலம் டவுன்ஷிப் ஒரு எடுத்துக்காட்டாக விளங்கும் என்று கவனிப்பவர்களுக்குத் தெரியும்.

ரகசியகமாக வோட்டு போடுவதைப்பற்றி அரசாங்கம் யோசனைசெய்து அந்த அபிப்பிராயத்தை ஏற்றுக்கொண்டுவிட்டது. விதிகளிலே எவ்வாறு மாறுதல் ஏற்படும் என்று சொன்னேன். ஸ்ரீ எம். பி சுப்ரமண்யம் அவர்கள் குறிப்பிட்டார்கள். அப்படி விதியை மாற்றுவதென்றால், ஒவ்வொரு பஞ்சாயத்துக்கும் தனித்தனியாக விதி இல்லை. எல்லாப் பஞ்சாயத்துக்களுக்கும் ஒரே விதி தான். அப்படிச் செய்வதுதான் பொருத்தமே தவிர குறிப்பிட்ட பஞ்சாயத்துக்கென்று தனித்தனி விதி இல்லை. இப்பொழுது அரசாங்கத்தினுடைய அபிப்பிராயம் விதியிலே தான் வோட்டு முறை இருக்கிறது. சட்டத்தை மாற்றவேண்டிய அவசியம் இல்லை.. சட்டத்தில் புதிதாக பிரிவு கொண்டுவரவேண்டிய அவசியம் இல்லை. .பொதுவான இந்த அபிப்பிராயத்தை அரசாங்கம் ஏற்றுக்கொள்கிறது. கனம் அங்கத்தினர்கள் எல்லோரும், ஏகமனதாக, ரகசிய வோட்டு முறை வேண்டுமென்று பொதுவாகக் கூறினதை நான் வரவேற்கிறேன். பகிரங்கமாக வோட்டு கொடுப்பது இன்னும் அதிக ஜனநாயக முறைக்கு உகந்ததாக இருக்கலாம்.

பஞ்சாயத்து போர்டு தலைவரை மக்களே நேரிடையாகத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்றும், அங்கத்தினர்கள் தலைவரைத் தேர்ந்தெடுத்தால் அங்கத்தினர்களைத் தம் பக்கம் சேர்க்க தலைவர் முயற்சி செய்துவிடுவார் என்றும் சொல்லப்பட்டது. அதுதான் உயர்ந்த கொள்கை, சீரிய நவீன கொள்கை, அதுதான் உண்மையான ஜனநாயகம் என்று சொல்லப்பட்டது. நான் சொல்கிறேன்—அப்படியானால் ரகசியத் தேர்தல் முறைப்படி வார்டு வார்டாகத் தான் தேர்தல் நடத்த முடியும். அந்த அளவுக்கு இது குறைவுதான். அவர்களுடைய கண்ணோட்டப்படி கொஞ்சம் ஜனநாயகக் குறைவுதான். ரகசிய வோட்டு முறை நல்லது என்று கனம் அங்கத்தினர்கள் எல்லோரும் உணர்வார்கள். ரகசிய வோட்டு முறையில் வார்டு வார்டாகத்தான் செய்யவேண்டும். ரகசிய வோட்டு முறையிலே உள்ள சௌகரியத்தை உணர்ந்து அரசாங்கமும் அந்த அபிப்பிராயத்தை ஏற்றுக்கொள்கிறது. அரசாங்கத்தினுடைய அபிப்பிராயமும் அதுதான்.

இது தான் பதிலளிக்கும் வகையிலே நான் முக்கியமாகக் குறிப்பிட விரும்பியது. மற்றப்படி இன்னும் திருத்தங்கள் பிரேரேபிக்கப்படும் போது அப்பொழுது மேலும் ஏதாவது சொல்லவேண்டியிருந்தால் சொல்கிறேன். இத்தோடு என்னுடைய வார்த்தையை முடித்துக்கொள்கிறேன்.

[9th November 1957

MR. SPEAKER: The question is—

'That the Madras Village Panchayats (Amendment) Bill, 1957 (L.A. Bill No. 16 of 1957), as amended by the Select Committee be taken into consideration.'

The Motion was put and carried and the Bill was taken into consideration.

Clause 2 was put and carried.

*Clause* 3.

MR. SPEAKER: The Motion is—

'That Clause 3 do stand part of the Bill.'

1. SRI N. K. PALANISAMI: Sir, I move—

To the proposed new sub-section (1) of section 3 of the Principal Act *add* the following as proviso two.

"provided further that if by such declaration of any area as a village, the area within the limits of the Panchayat is affected, the concurrence of that Panchayat shall be obtained previously."

The amendment was duly seconded.

2. SRI V. SANKARAN: Sir, I move—

After clause (*c*) of the proposed sub-section (2) of section 3 of the principal Act, *add* the following—

"(*d*) Before issuing a notification under clause (a) or under clause (*b*) read with sub-section (1) or under clause (*c*), the Inspector shall give the panchayat or panchayats which will be affected by the issue of such notification a reasonable opportunity for showing cause against the proposal and shall consider the explanations and objections, if any, of such panchayat or panchayats."

The amendment was duly seconded.

3 SRI M. KALYANASUNDARAM: Sir, I move—

At the end of the proposed sub-section (2) of section 3 of the principal Act, *add* the following proviso, viz.—

"Provided that any person or persons residing in the areas affected by the notifications issued under sub-sections (1) and (2), may appeal to the Government within ninety days against such notifications, and the orders of the Government thereon shall be final."

SRI N. K. PALANISAMI: Sir, I second it.



9th November 1957]

4. SRI M. KALYANASUNDARAM: Sir, I move—

*For* clause (*b*) of the proposed sub-section (2-*A*) of section 3 of the principal Act, *substitute* the following—

"In regard to any area excluded under clause (*a*), having a population of more than 500, the Government shall by notification constitute a Colony Committee."

SRI N. K. PALANISAMI: Sir, I second it.

5. SRI M. KALYANASUNDARAM: Sir, I move—

In the proposed sub-section (2-*A*) of section 3 of the principal Act *for* the words "village committee" wherever they occur *substitute* the words "Colony Committee".

SRI N. K. PALANISAMI: Sir, I second it.

6. SRI M. KALYANASUNDARAM: Sir, I move—

In clause (*c*) of the proposed sub-section (2-A) of section 3 of the principal Act *delete* the words "in pursuance of such resolution".

SRI N. K. PALANISAMI: Sir, I second it.

SRI M. JAGANNATHAN: On a point of order, Sir. Is it necessary that the seconder should know the implications of the amendment or should he mechanically second it?

MR. SPEAKER: It is presumed that the seconder knows the implications of the amendment.

7. SRI M. KALYANASUNDARAM: Sir, I move—

In item (2) of clause (*c*) of the proposed sub-section (2-A) of section 3 of the principal Act *for* the word "appointed" *substitute* the word "elected".

SRI N. K. PALANISAMI: Sir, I second it.

8. SRI V. SANKARAN: Sir, I move—

*Delete* clause (*e*) of the proposed sub-section (2-*A*) of section 3 of the principal Act.

SRI K. VINAYAKAM: Sir, I second it.

9. SRI M. P. SUBRAMANIAM: Sir, I move—

*Delete* the proposed sub-section (2-*A*) of section 3 of the principal Act.

SRI A. GOVINDASAMY: Sir, I second it.

[9th November 1957

10. SRI A. GOVINDASAMY: Sir, I move—

'In item (2) of clause (c) of the proposed sub-section (2-A) of the principal Act *for* the word "appointed" *substitute* the word "elected".'

SRI M. P. SUBRAMANIAM: Sir, I second it.

MR. SPEAKER: Now clause 3 and the amendments are before the House for discussion.

SRI N. K. PALANISAMI: ஒரு பஞ்சாயத்தில் ஒரு பகுதியை எடுத்துக்கொள்வதற்கு **Inspector** சரியான காரணங்கள் சொல்லி அதை செய்வார்கள் என்று ஏற்கனவே அமைச்சர் அவர்கள் ஒப்புக்கொண்டார்கள். உண்மையாக அதை அந்தப் பகுதி மக்கள் ஒத்துக்கொண்டிருக்கிறார்களா இல்லையா, ஒப்புக்கொள்ளவில்லை என்றால் **Inspector** அதன்படி நடப்பாரா இல்லையா என்பதற்கு உத்தரவாதம் இல்லை. நியாயமான காரணம் என்று பஞ்சாயத்துபோர்டு ஒத்துக்கொண்டால் அம்மாதிரி செய்யலாம். பஞ்சாயத்து போர்டு அனுமதி கொடுக்க மறுத்தால் என்ன ஆவது? ஆகவே என் திருத்தம் அவசியம். அதை ஒத்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Would you permit me, Sir, to reply then and there, as there are a number of amendments? As soon as a Member, who moves his amendment, explains his amendment, you may permit me to offer the Government's remarks.

MR. SPEAKER: The Hon. Minister may take my suggestion. If the Hon. Minister is going to reply as soon as the mover of the amendment speaks, it may deprive the other Members of their chance to speak. All the Members may speak and then I will put the amendments to vote clause by clause. Every Member can speak on the various amendments.

*SRI M. P. SUBRAMANIAM: நான் கொடுத்திருக்கும் திருத்தம் உட்பிரிவுகள் 2 (a), (b), (c) இவைகள் நீக்கப்படவேண்டுமென்பது. தொழில் பகுதிகளை சட்டத்தின் கீழ் இல்லாமல் தனியாக அமைக்கவேண்டுமென்பது சர்க்கார் கோரிக்கை. இது ஜனநாயகத்துக்கு உகந்தது அல்ல. அப்பகுதிகளும் சட்டத்தின் கீழ் அமையவேண்டுமென்பது என் திருத்தத்தின் கருத்து. அமைச்சர் அவர்கள் மக்கள் நன்மைக்கே இந்த கமிட்டிகள் அமைக்கிறோம் என்றார்கள். மக்களின் நன்மைக்கு மட்டுமல்ல பஞ்சாயத்து ஏற்படுவது. அது மக்களாலேயே நடைபெறவேண்டும் என்பதுதான் நோக்கம்.

"**Government for the people and by the people also. It is not only for the people**" மக்களுக்காக மட்டும் நடைபெறவேண்டும் என்பதல்ல மக்களாலேயே நடைபெறவேண்டுமென்பதுதான். மக்களுக்காக நடைபெறவேண்டுமென்றால், அமைச்சரைவிட ஒரு I.C.S. அதிகாரியே போதுமானது. வேறு அதிகாரியை வைத்து திறமையாக நடத்தலாம். ஜனநாயகம் என்று, மக்களாலேயே இருக்கவேண்டுமென்பது எல்லோருடைய விருப்பம். அமைச்சர் இந்தக் கருத்தில் மாறுபட்டு இருக்கமாட்டார்கள் என்று கருதுகிறேன். இதில் சங்கடங்கள் எழலாம். சில குறைபாடுகளுக்கு ஆளாகலாம். முன்னேற்றங்கள் தடைபடலாம். அந்தத் தடை, சற்று விரிவாக்கிப்பார்த்தால், இங்கேயே இருக்கிறது. ஒரு சட்டம் வரவேண்டுமென்றால், 14 நாட்களுக்கு முன்பே பிரசுரிக்கவேண்டும், பிறகு



9th November 1957] [Sri M. P. Subramaniam]

சட்டசபைக்கு வரவேண்டும், பிறகு செலக்டு கமிட்டிக்குப்போய், 5—10 நாட்கள் விவாதம் நடைபெறவேண்டும். இதிலெல்லாம் காலதாமதம் ஏற்படுகிறது. ஆகையால் சர்வாதிகார ஆட்சியானால் ஒருநாளுக்குள்ளேயே இதையெல்லாம் செய்து முடிக்கலாம் என்று சொல்லலாம். சர்வாதிகார ஆட்சி என்றவுடனேயே மக்களுக்கு விரோதமாகப் போக வேண்டுமென்பதில்லை. சர்வாதிகார ஆட்சியால் மக்களுக்கு நன்மையும் ஏற்படலாம் தீமையும் ஏற்படலாம். என் நன்மையே ஏற்படக்கூடாது? சர்வாதிகார ஆட்சிமுறை இரண்டு விதம். அதிகாரிகளுள் இருந்து அதிகாரம் செலுத்தத் தேவை இருக்கலாம். ஆனால் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் ஆட்சியே சிறந்தது. அதுதான் நம் பண்பாட்டிற்கும் சரி, ஜனநாயகத்துக்கும் சரி, மிகவும் உகந்தது. ஆகவே அதிகாரத்தை மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுக்குக் கொடுப்பதில் தவறு இல்லை. அதிகமான அதிகாரம் வேண்டுமென்றால் நான் கூறியதுபோல் இப்போது இருக்கும் சட்டத்திலோ, வேறு சட்டத்திலோ வழி வகை செய்து கொள்ளலாம்.

கடைசியாக, அவசியப்படும் நேரத்தில் கீழ் பவானி, குற்றாலம் இவைகளுக்கு சட்டம் கொண்டு வந்தது போலவாவது அவ்வப்போது அவசியம் நேர்ந்தால் சட்டசபை தெரிந்து கொள்ளும் வகையில் சட்டம் கொண்டு வரவேண்டும். இப்போது இருக்கும் வகையில் செய்தால் சட்டசபைமுன் வராமலே போகலாம். அல்லது விதிகள் போட்டபிறகு வரலாம். ஆகையால், இவைகளெல்லாம் முன்பே சட்ட சபைக்கு வர வழி வகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

SRI M. KALYANASUNDARAM: என் முதல் இரண்டு திருத்தங்களும் **Inspector**-க்குக் கொடுக்கப்படும் அதிகாரம் சம்பந்தப்பட்டது. அவர் நினைத்தால் ஒரு ரெவின்யூ கிராமத்தையே இரண்டு மூன்று கூறுகப் பிரிக்கலாம். அப்படிப் பிரித்த பகுதியை தங்களுக்கு எது உசிதம் என்று தோன்றுகிறதோ அந்த அடிப்படையில் பக்கத்துப் பஞ்சாயத்தோடு சேர்க்கலாம். நான் கொடுத்திருக்கும் **Proviso**-வை ஏற்றுக்கொண்டால் பாதிக்கப்பட்ட ஜனங்கள் மூன்று மாத காலத்திற்குள் **Inspector**-ஆல் பிறப்பிக்கப்பட்ட உத்திரவின் மீது சர்க்காரிடத்தில் அப்பீல் செய்துகொள்ள சந்தர்ப்பம் கொடுக்கும். **Inspector** என்ன உத்திரவிடுகிறாரோ அதுவே உறுதியானது என்பது இப்பொழுது இருக்கும் சட்டத்தின் அர்த்தம். அப்படி இருக்கக் கூடாது என்பதுதான் என் திருத்தத்தின் கருத்து. அதில் சர்க்காருக்கு ஆட்சேபணை இருக்க முடியாது. அப்பீல் செய்ய மக்களுக்கு உரிமை வேண்டும். ஆதலால்,

**'Provided that any person or persons residing in the areas affected by the notifications issued under sub-sections (1) and (2), may appeal to the Government within ninety days against such notifications, and the orders of the Government thereon shall be final.'**

இந்த திருத்தத்தை ஒத்துக்கொள்ள ஆட்சேபணை இருக்காது என்று நம்புகிறேன்.

இன்னொன்று, **Labour Colony** ஐப் பிரிப்பது பற்றியது. அவைகளைப் பிரிப்பது நல்லதல்ல. அவர்களுக்கு அதிகமான வசதிகள் ஏற்படுகின்றன. அதனால் பிரிந்திருக்கலாம் என்று அமைச்சர் கூறினார்கள். பிரமாதமான வசதிகள், பஞ்சாயத்துக்கள் செய்ய முடியாத வசதிகள் செய்யப்பட்ட **Labour Colony** களை நான் இதுவரைப் பார்த்ததில்லை. **Railway Colony** ஒன்று தவிர, முதலாளிகளாலோ, தனிப்பட்டவர்களாலோ கட்டப்பட்ட காலனிகளில் பஞ்சாயத்துக்களால் கொடுக்க முடியாத அளவுக்கு சலுகைகளோ வசதிகளோ கிடைப்பதாக என்னால் ஒப்புக்கொள்ள முடியவில்லை. இந்த சந்தர்ப்பத்தில் டௌன்ஷிப் தனியாக இருப்பதைக் குறிப்பிட்டார்கள். மேட்டூர், குற்றாலம், பவானி போன்ற இடங்களுக்கு **Township Act** கொண்டு வந்தது ஒரு விதம்.

[Sri M. Kalyanasundaram] [9th November 1957

ஆனால் ஒரே பஞ்சாயத்தின் கீழ் இருக்கக் கூடிய **Labour Colony** ஐப் பிரிக்க வேண்டும் என்பதை ஆட்சேபிக்கிறோம். மெஜாரிடி பலம் அவர்களுக்கு இருக்கிறது. **Select Committee** யிலும் அதைக் காட்டிவிட்டார்கள். அதை வைத்துக்கொண்டு இந்த சட்டத்தையே இப்படியே நிறைவேற்றப்போகிறோம் என்று செய்தாலும் செய்யட்டும். ஆனால் இதில் இருக்கும் குறைபாட்டை மட்டும் எடுத்துக்காட்ட விரும்புகிறேன். 500-க்கு மேற்பட்ட ஜனத் தொகை உள்ள காலனியில் ஒரு காலனி கமிட்டி வேண்டும். அது தேர்தல் மூலமாக அமையவேண்டும். இப்பொழுது **" persons who shall be members of the Village Committee or the manner in which they shall be appointed "** என்று இருக்கிறது. அது முதலாளியாலா, கலெக்டராலா, அல்லது பஞ்சாயத்து ஆபீஸராலா ? அவர்களால் **appoint** பண்ணக்கூடிய **Committee** எப்படி இருக்கும் ? இது நியாயமானது என்று சொல்லலாம். ஆனால் இவை ஜனநாயக அடிப்படையில் இருக்க வேண்டுமானால் தேர்தல் மூலமாக இவைகள் உருவாக வேண்டுமென்று சட்டத்திலேயே இருக்கவேண்டும். விசேஷ திருத்தத்தின் மூலம் செய்வது சரியல்ல. காலனி கமிட்டிகளை மில் முதலாளிகளோ தனிப்பட்ட சொந்தக்காரர்களோ அமைக்க அதிகாரம் இருக்கக் கூடாது. ஆகவே என் திருத்தத்தை ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

12-10 p.m. SRI V. SANKARAN : Mr. Speaker, Sir, the amendments that I have suggested are of a very formal nature and I am sure the Government will have no hesitation in accepting them. My two amendments are to the effect that clause (*e*) of sub-section (2-*A*) should be deleted and that the provisions contained therein should be taken and linked with sub-section (2) of Clause 3 as clause (*d*). Clause (*e*) of sub-section (2-*A*) reads as follows :—

" (*e*) Before issuing a notification under clause (*a*) or under clause (*b*) of sub-section (2) read with sub-section (1) or under clause (*c*) of sub-section (2), the Inspector shall give the panchayat or panchayats which will be affected by the issue of such a notification a reasonable opportunity for showing cause against the proposal and shall consider the explanations and objections, if any, of such panchayat or panchayats."

So the above sub-clause deals with what the Inspector has to do or what steps he has to take before issuing a notification excluding any specified area from a village.

SRI T. S. RAMASWAMY PILLAI : On a point of order, Sir. This amendment is not before the House. It was not properly moved and seconded.

MR. SPEAKER : I allowed it as a special case. It has been duly seconded.

SRI V. SANKARAN : So my point is that these provisions have nothing to do or have any connection with sub-section (2-*A*). On the other hand, they will have reference only to sub-section (2). Therefore, my submission is that in the natural order of things and sequence, this provision has to be linked with sub-section (2) as clause (*d*) and that in consequence, clause (*e*) of sub-section (2-*A*) may be deleted. This amendment is a formal one and I hope the Government will accept my amendments.



9th November 1957]

* SRI A. GOVINDASAMY : நியமித்தல் என்ற வார்த்தைக்குப் பதிலாக தேர்ந்தெடுக்கப்படவேண்டும் என்ற வார்த்தையைப் போடவேண்டும் என்று கனம் கலியாணசுந்தரம் அவர்கள் வலியுறுத்தினார்கள். அதே கருத்தைத்தான் நான் மீண்டும் வலியுறுத்துகிறேன். நியமனம் என்ற நிலைமை வரும்பொழுது, அவர்களுக்கு இஷ்டப்பட்டவர்களை, சர்க்காருக்கு சாதகமாக உள்ள கட்சியினரை நியமிக்கக்கூடிய நிலைமை ஏற்படும் என்ற காரணத்தினால், தேர்தல் முறை அவசியம் என்ற காரணத்தினால் " தேர்ந்தெடுக்கப்பட்ட " " எலெக்ட் " என்ற வார்தையைப் போடவேண்டுமென்று நான் வலியுறுத்துகிறேன். 12·20 p.m

